பத்துப் பாட்டு மூலமும்

மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
பரிசோதித்து எழுதிய பலவகைக் குறிப்புக்களுடன் பதிப்பித்தது

TNSDA
06611

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
சென்னை-90
197[illegible]

உ

கணபதி துணை

பத்துப் பாட்டு மூலமும்

மதுரையாசிரியர் பாரத்துவாசி
நச்சினார்க்கினியர் உரையும்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்

பரிசோதித்து எழுதிய பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

திருவான்மியூர், சென்னை-41

1974

முதற் பதிப்பு	1889
இரண்டாம் பதிப்பு	1918
மூன்றாம் பதிப்பு	1931
நான்காம் பதிப்பு	1950
ஐந்தாம் பதிப்பு	1956
ஆறாம் பதிப்பு	1961
ஏழாம் பதிப்பு	1974

6611

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு

நண்பர்கள் அச்சகம்,
சென்னை-18

இப்புத்தகத்தில் அடங்கியவை

பக்கம்

1. இப்பதிப்பில் வந்துள்ள நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி ... iv
2. அடிக்குறிப்பில் காட்டியுள்ள நூற்பெயர்கள் ... vi
3. பிழையும் திருத்தமும் ... viii
4. மூன்ரும் பதிப்பின் முகவுரை ... x
5. பாடினோர் வரலாறு ... xxxii
(1) இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர், (2) இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர், (3) கடியலூர் உருத்திரங் கண்ணனர், (4) கபிலர், (5) காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனர் மகனர் நப்பூதனர், (6) மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர், (7) மாங்குடி மருதனர், (8) முடத்தாமக் கண்ணியார்.
6. பாடப்பட்டோர் வரலாறு
(1) ஆரியவரசன் பிரகத்தன், (2) ஒய்மானட்டு நல்லியக்கோடன், (3) குமரவேள், (4) சோழன் கரிகாற் பெருவளத்தான், (5) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், (6) தொண்டைமான் இளந்திரையன், (7) நன்னன்.
7. நச்சினர்க்கினியர் வரலாறு ... iix
8. பத்துப் பாட்டு மூலமும் நச்சினர்க்கினியர் உரையும் ... 1-664
(1) திருமுருகாற்றுப்படை ... 1
(2) பொருநராற்றுப்படை ... 83
(3) சிறுப்பாணற்றுப்படை ... 129
(4) பெரும்பாணற்றுப்படை ... 179
(5) முல்லைப்பாட்டு ... 263
(6) மதுரைக்காஞ்சி ... 288
(7) நெடுநல்வாடை ... 434
(8) குறிஞ்சிப் பாட்டு ... 466
(9) பட்டினப் பாலை ... 513
(10) மலைபடுகடாம் ... 564
9. அரும்பதம் முதலியவற்றின் அகராதி ... 655-839
10. இடம் விளங்காத மேற்கோள்களின் முதற்குறிப்பகராதி 840

இப்பதிப்பில் வந்துள்ள நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு
அடிக் — அடிக்குறிப்பு
அடியார்-அடியார்க்குநல்லாருரை
அரிச்சந்திரஅரிச்சந்திரபுராணம்
அருணசல - அருணசலபுராணம்
அருபத — அரும்பதவுரை
அறநெறிச் - அறநெறிச்சாரம்
ஆசார - ஆசாரக்கோவை
ஆனந்தவண்டு-ஆனந்தருத்திரே
சர் வண்டு விடுதூது [ணம்
ஆனைக்கா-திருவானைக்காப் புரா
இ. கொ-இலக்கணக்கொத்துரை
இலிங்க — இலிங்க புராணம்
இ. வி - இலக்கண விளக்கவுரை
இளம் - இளம்பூரணருரை
இறை -இறையனுரகப் பொரு
ளுரை
ஈங்கோய் - ஈங்கோய்மலையெழு
பது
உத்தர - உத்தர ராமாயணம்
ஐங், ஐங்குறு - ஐங்குறுநூறு
ஐந. ஐம் - ஐந்திணையைம்பது
ஒ - ஒத்த பகுதி
கண்டனலங்- கண்டனலங்காரம்
கந்த - கந்த புராணம்
கந்தரலங் — கந்தரலங்காரம்
கம்ப - கம்பராமாயணம்
கல் - கல்லாடம்
கலித் - கலித்தொகை
கலிங்க — கலிங்கத்துப் பரணி
களவழி — களவழி நாற்பது
காசி - காசி காண்டம்
காசி - காசிக் கலம்பகம்
காஞ்சிப் - காஞ்சிப் புராணம்
கார் - கார் நாற்பது
காரைக் - காரைக் காலம்மையார்
குலோத். உலா - குலோத்துங்க
சோழனுலா
குலோத.பிள்ளை - குலோத்துங்க
சோழன் பிள்ளைத் தமிழ்
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
கூர்ம - கூர்ம புராணம்

கோயின் மூத்த - கோயின்மூத்த
திருப்பதிகம்
சிதம்பர - சிதம்பர புராணம்
சிலப் - சிலப்பதிகாரம்
சிவ. போ — சிவஞானபோதம்
சிறுபஞ்ச - சிறுபஞ்ச மூலம்
சிறுபாண் -சிறுபாணாற்றுப்படை
சீகாழித் - சீகாழித்தலபுராணம்
சீகாளத்தி-சீகாளத்திப்புராணம்
சீவக - சீவக சிந்தாமணி
சூ - சூத்திரம்
சூடாமணி - சூடாமணி நிகண்டு
சூளா - சூளாமணி
செருக்களத் - செருக்களத்து
அலகை வகுப்பு
சே - சேனாவரையருரை
சோணசைல - சோணசைலமாலை
ஞான - ஞானாமிர்தம்
தக்க — தக்கயாகப் பரணி
தகடூர் - தகடூர் யாத்திரை
தஞ்சை - தஞ்சை வாணன்
கோவை
தண்டி - தண்டியலங்காரம்
தணிகை, தணிகைப் - திருத்
தணிகைப் புராணம்
தமிழ்நா - தமிழ் நாவலர் சரிதை
தமிழ்நெறி-தமிழ் நெறிவிளக்கம்
தமிழ்விடு — தமிழ் விடுதூது
தனிப - தனிப்பாடல்
திணைமா, திணைமாலை - திணை
மாலை நூற்றைம்பது
திணைமொழி- திணைமொழியைம்
திரி - திரிகடுகம் [பது
திருக்காளத்திப் - திருக்காளத்
திப் புராணம்
திருக்குற் - திருக்குற்றாலப்
புராணம்
திருச்சிற - திருச் சிற்றம்பலக்
கோவையார்
திருநாகைக் -திருநாகைக் காரோ
திருப-திருப்புகழ் [ணப்புராணம்
திருவரங்கக, திருவரங்கக்கலம்-
திருவரங்கக்கலம்பகம்

நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

திருவரங்கத்தந் - திருவரங்கத்தந்தாதி
திருவள்ளுவ - திருவள்ளுவமாலை
திருவா - திருவாசகம்
திருவாய் திருவாய்மொழி
திருவாரூர் மும் - திருவாரூர் மும்மணிக்கோவை
திருவால - திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்
திருவாலங்காட்டு மூத்த - திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
திருவானைக்காப் - திருவானைக்காப் புராணம்
திருவிடை மும் - திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
திருவிளை - திருவிளையாடற் புராணம்
திவ் - திவ்யப்பிரபந்தம்
திவா - திவாகரம்
தெய்வச் - தெய்வச் சிலையாருரை
தே - தேவாரம்
தொல் - தொல்காப்பியம்
ந - நச்சினார்க்கினியர் உரை
நம்பி - நம்பியகப் பொருள்
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
நன். மயிலை - நன்னூல் மயிலைநாதருரை
நன். வி - நன்னூல் விருத்தியுரை
நாற் - நாற்கவிராச நம்பியகப் பொருள்
நீதி நெறி - நீதிநெறி விளக்கம்
நீல - நீலகேசி
நூற் றெட்டுத் - நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி
நெடு, நெடுநல் - நெடுநல்வாடை
ப - பக்கம்
பஞ்சாக்கர பஞ்சாக்கரதேசிகரந்தாதி
பட்டினப் - பட்டினப்பாலை
பதிற் - பதிற்றுப் பத்து
பதினோராந் - பதினோராந் திருமுறை
பரி - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகருரை
பழ - பழமொழி
பாகவத - பாகவதம்
பாண்டிக் - பாண்டிக்கோவை
பிங், பிங்கல - பிங்கலந்தை
பி-ம் - பிரதிபேதம்
பிரபு - பிரபுலிங்கலீலை
பிரமோத் - பிரமோத்தரகாண்டம்
பிரயோக - பிரயோகவிவேகம்
பு. வெ - புறப்பொருள்வெண்பாமாலை
புறநா - புறநானூறு
பெரிய - பெரியபுராணம்
பெருங் பெருங்கதை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பெரும்பொருள் - பெரும்பொருள் விளக்கம்
பேர் - பேராசிரியர் உரை
பொருகளத் - பொருகளத்தலகை வகுப்பு
பொருந - பொருநராற்றுப்படை
பொன்வண்ணத் - பொன் வண்ணத்தந்தாதி
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக் காஞ்சி
மயிலேறு - மயிலேறும் பெருமாள் பிள்ளையுரை
மலைபடு - மலைபடுகடாம்
மாறன் - மாறனலங்காரம்
மு - முற்றும் ஒத்தது
முத் - முத்தொள்ளாயிரம்
முத்துக்குமார - முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்
முது - முதுமொழிக்காஞ்சி
முருகு - திருமுருகாற்றுப்படை
முல்லை - முல்லைப்பாட்டு
மெய்க் - மெய்க்கீர்த்தி
மேற் - மேற்கோள் [யுரை
யா. கா - யாப்பருங்கலக் காரிகை
யா. வி - யாப்பருங்கல விருத்தியுரை
வளையா - வளையாபதி
வாட்போக்கிக் - வாட்போக்கிக் கலம்பகம்
வாயு - வாயுசங்கிதை
விக்கிரம - விக்கிரமசோழனுலா
விநாயக - விநாயகபுராணம்
வி. பா, வில்லி. பா - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
வீர, வீரசோ - வீரசோழியம்

அடிக்குறிப்பிற் காட்டியுள்ள நூற்பெயர்கள்

அகநானூறு, அரிச்சந்திர புராணம், அருணாசல புராணம், அழகரந்தாதி, அறநெறிச்சாரம், ஆசாரக்கோவை, ஆசிரியமாலை, ஆளுடைய பிள்ளையார் கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, இராசராச சோழனுலா, இரண்டாம் இராசராசன் மெய்க்கீர்த்தி, இரண்டாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி, இலக்கணக் கொத்து, உரை, இலக்கண விளக்கவுரை, இலிங்கபுராணம், இறையனாரகப் பொருள், இன்னா நாற்பது, இனியது நாற்பது, ஈங்கோய்மலையெழுபது, உண்மை விளக்கம், உத்தரராமாயணம், ஏலாதி, ஐங்குறுநூறு, ஐந்திணை ஐம்பது, ஒரு பழைய இலக்கண நூல், ஔவையார் பாட்டு, கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது, கண்டனலங்காரம், கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கபிலர் சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, கம்பராமாயணம், கல்லாடம், கலிங்கத்துப் பரணி, கலித்தொகை, களவழி நாற்பது, காசிக் கலம்பகம், காசிகாண்டம், காஞ்சிப்புராணம், கார் நாற்பது, காரைக்காலம்மையார் கோயில் மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், கிளவித் தெளிவு, கிளவிமாலை, கிளவி விளக்கம், குசேலோபாக்கியானம், குமாரஸம்பவம், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்க சோழனுலா, குறுந்தொகை, கூர்மபுராணம், சித்தராரூடம், சிதம்பர புராணம், சிலப்பதிகாரம், சிவஞான சித்தியார், சிவஞானபோதம், சிறுபஞ்சமூலம், சீகாழித்தல புராணம், சீகாளத்திப்புராணம், சீவகசிந்தாமணி, சூடாமணி நிகண்டு, சூளாமணி, சொக்கநாதருலா, சோணசைலமாலை, ஞானாமிர்தம், தக்கயாகப் பரணி, தகடூர் யாத்திரை, தஞ்சைவாணன் கோவை, தண்டியலங்காரம், தமிழ் நாவலர் சரிதை, தமிழ் நெறி விளக்கம், தமிழ்விடு தூது, தனிப்பாடல், திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, திரிகடுகம், திருக்காளத்திநாதருலா, திருக்காளத்திப் புராணம், திருக்குற்றாலத் தலபுராணம், திருக்குறள், திருக்கைலாயஞானவுலா, திருச்சிற்றம்பலக்கோவையார், திருத்தணிகைப் புராணம், திருத்தணிகை யாற்றுப்படை, திருநாகைக் காரோணம், திருநாகைக்காரோணப் புராணம், திருப்புகழ், திருப்பெருந்துறைப் புராணம், திருமுகப் பாசுரம், திருவகுப்பு, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கக் கோவை, திருவரங்கத்தந்தாதி, திருவருணைக் கலம்பகம், திருவள்ளுவமாலை, திருவாசகம், திருவாப்பனூர்ப் புராணம், திருவாரூர்க்கோவை, திருவாரூர் மும்மணிக் கோவை, திருவாரூருலா, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவானைக்காப் புராணம் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவிளையாடற் புராணம், திருவெங்கைக் கோவை, திருவெங்கையுலா, திருவேங்கடமாலை, திருவையாற்றுப் புராணம், திருவொற்றியூரொருபாவொருபஃது, திவ்யப்பிரபந்தம், திவாகரம், தேவாரம், தொல்காப்பியம், ஷை உரைகள், நல்வழி, நளவெண்பா, நற்றிணை

நன்னூல், ஷை உரைகள், நாலடியார் நாற்கவிராச நம்பி அகப்பொருள், நான்மணிக்கடிகை, நீதிநெறி விளக்கம், நீலகேசி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, நைடதம், பஞ்சாக்கர தேசிகரந்தாதி, பதிற்றுப்பத்து, பராந்தகதேவர் மெய்க்கீர்த்தி, பரிபாடல், பல்சந்த மாலை, பழமொழி, பாகவதம், பாண்டிக் கோவை, பிங்கல நிகண்டு, பிரபுலிங்க லீலை, பிரமோத்தரகாண்டம், பிரயோகவிவேகம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெரிய புராணம், பெருங்கதை, பெரும்பொருள் விளக்கம், பொருளியல், பொன்வண்ணத் தந்தாதி, மணிமேகலை, மாறனலங்காரவுரை, முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ், முத்தொள்ளாயிரம், முதுமொழிக்காஞ்சி, மூதுரை, யாப்பருங்கலக்காரிகை உரை, யாப்பருங்கல விருத்தி, வங்கர்கோவை, வளையாபதி, வனச விடு தூது, வாட்போக்கிக் கலம்பகம், வாயு சங்கிதை, விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தி, விக்கிரமசோழனுலா, விநாயக புராணம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம், விறலிவிடு தூது, வீரசோழியம், வீரராசேந்திரதேவர் மெய்க்கீர்த்தி, வெண்பாப் பாட்டியல், வேள்விக்குடி சாஸனம்.

மூன்றும் பதிப்பின் முகவுரை

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருத்தாண்டகம்

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

அண்டர்க ளுறுகண் விண்டிட முந்நீர்
அலைகடல் குடித்தும் மலைநிலை மழுத்தியும்
தென்றிசை யுயர்ந்த நொய்ம்மை போக
அப்பணி சடையாற் கொப்பவீற் றிருந்தும்
பன்னு வலர்புகழ் தென்னு டாண்ட
இராவணன் றனையவ ணிராவணம் போக்கியும்
இலங்குறு பொதியில் விலங்கல்வாழ் பெருந்தவத்
தகத்தியன் புரந்தருண் மகத்துவ மிகுந்த
அமிழ்தினிற் சிறந்த தமிழெனு மடந்தை
கந்தரத் தணிமணிக் கலனர சென்ன
உத்தமர் புகழுமிப் பத்துப் பாட்டும்

பாண்டிவள நாட்டில் மதுரையம்பதியில் ஸ்ரீ அங்கயற்கண் அம்மையோடு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் அருளிய சங்கப் பலகையில் அக் கடவுளோடு ஒப்ப வீற்றிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்களாகிய நக்கீரனார் முதலிய எண்மரால் இயற்றப்பெற்ற திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடா மென்னும் *பத்துமாகும்; "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை, பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய, கோல

---

* பத்துப் பாட்டின் இலக்கணமாக, இரண்டு சூத்திரங்கள்

நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப், பாலை கடாத்தொடும் பத்து'' என்பதனால் இப்பெயர்களும் இவற்றின் முறையும் விளங்கும். இவை, மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் இயற்றிய உரையைப் பெற்றுள்ளன. அவ்வுரையினால் அதற்கு முன்பும் இவற்றிற்கு வேறுரை இருந்ததென்று தெரிகிறது.

இவற்றை இயற்றிய நல்லிசைப் புலவர்களின் பெயர்களும் பாட்டுடைத் தலைவர்களின் பெயர்களும் ஒவ்வொரு பாட்டின் இறுதியில் உள்ள பழைய வாக்கியங்களால் புலப்படும். இவர்களின் வரலாற்றை இம் முகவுரையின் பின்னே காண்க. திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை யென்னும் இரண்டையும் இயற்றிய ஆசிரியர் நக்கீரர். பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை யென்னும் இரண்டையும் இயற்றியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை யென்னும் இரண்டும் கரிகாலனையும், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை யென்னும் இரண்டும் நெடுஞ்செழியனையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை. இவற்றைத் தொகுத்தோரும் சங்கப் புலவர்களே; இது மலைபடுகடாத்தில், ''தீயி னன்ன வொண்செங் காந்தள்'' (145) என்பதன் உரையில் நச்சினார்க்கினியர், 'இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காது கோத்ததற்குக் காரணம் ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உருமையானென் றுணர்க' என்று எழுதியுள்ள பகுதியால் விளங்கும்.

இவை, ''ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து, சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல், ஒருபது பாட்டும்'' (நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப்பாயிரம்) என்று பாராட்டப் பெற்றுள்ளன. * பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கு மென்பதில் இவற்றை முன் வைத்து உரையாசிரியர்களும் பிறரும் எண்ணும் முறையே இவற்றின் அருமை பெருமையைப் புலப்படுத்தும்.

இவை † பாட்டெனவும் ‡ பாவெனவும் வழங்கும்.

இவற்றுள், அகத்திணைக்குரியன முல்லை, குறிஞ்சி, பட்டினப் பாலை யென்பன. ஏனையவை புறத்திணைக்குரியன. அவற்றுள் ஆற்றுப்படைகளாக உள்ளவை ஐந்து.

பன்னிரு பாட்டியலில் காணப்படுகின்றன. இவ் விலக்கணம் பத்துப் பாட்டைக் கண்டு பிற்காலத்தில் ஓராசிரியரால் கூறப்பட்டதாகத் தெரிகிறது; வேறு வகையான பத்துப் பாட்டுக்களின்மையும் இதனை வலியுறுத்தும்.

* ''பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க'' (தொல். செய். சூ. 50, பேர்.); ''மூத்தோர்கள், பாடி யருள்பத்துப் பாட்டுமெட் டுத்தொகையுங், கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும்'' (தமிழ்விடு. 55-6.)

† தொல். செய். சூ. 50, பேர். ‡ சீகாளத்தி. நக்கீரர் 15.

ஆற்றுப்படை யென்பது கூத்தர் முதலியவர்களில் ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர் வந்த இரவலர்களுக்கு அறிவுறுத்தி அவரும் அவன்பாற் சென்று தாம் பெற்றவற்றையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு—வழி, படை—படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனம்கூறுதற்கு உரியோராயினும் கூத்தர் முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியவர்களுக்குக் கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள் செய்தல் மரபு. தொல்காப்பியப் புறத்திணையியலில் 36ஆம் சூத்திரத்திலுள்ள, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" என்பது இதற்கு விதி; 'ஆடல் மாந்தரும் பாடற் பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலாரும், தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்' என்பது இதன் பொருள். இங்ஙனம் இயற்றப்பெற்றவைகள் கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை யென வழங்கும். பத்துப் பாட்டிலன்றி, பதிற்றுப் பத்து, புறநானூறு புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் தனிப் பாடல்களிலும் இவ்வாற்றுப்படைகள் காணப்படுகின்றன. புலவராற்றுப்படை, திருத்தணிகையாற்றுப்படை, திருப்பாணாற்றுப்படை முதலியன பெருங் கவிஞர்களால் பிற்காலத்தில் இயற்றப் பெற்ற ஆற்றுப்படை நூல்களாகும்.

இந்தப் பத்துப் பாட்டினுள் :—

1. திருமுருகாற்றுப்படை : இது புலவராற்றுப்படையெனவும் முருகெனவும் வழங்கும். இது 317 அடிகளுள்ள ஆசிரியப்பாவால் அமைந்தது; பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்ட பிரபந்தங்களின் வரிசையில் சேர்க்கப்பெற்றுள்ளது. முருகக் கடவுளுடைய திருவருளைப் பெற விரும்புவோர் இதனை நியமமாக அன்புடன் * பாராயணம் பண்ணுதல் நலமென்றும் இது கண்கூடென்றும் பெரியோர் கூறுவர்.

"வளவாய்மை சொற்ப்ரபந்த முளகீர னுக்குகந்து, மலர்வாயி லக்கணங்க ளியல்போதி, அடிமோனை சொற்கிணங்க வுலகாமுவப்ப வென்று னருளா லளிக்குகந்த பெரியோனே",

"நக்கீர ரோதிய வளமை சேர்தமி ழுக்காக நீடிய கரவோனே",

"கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு கீரரிசை கேட்ட க்ருபை வேளே" (திருப்புகழ்).

---

* "நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத, தற்கோல நாடோறுஞ் சாற்றினல் - முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித், தானினைத்த வெல்லாந் தரும்".

"நக்கீரர் சொற்றிக்கித்ததே" (கந்தரந்தாதி)
என அருணகிரிநாதராலும்,
"இன்னன......பாவுள், மன்னுற வந்து நிற்கு முருகாற்றுப்படை மொழிந்தான்" (சீகாளத்திப் புராணம்)
எனச் சிவப்பிரகாச சுவாமிகளாலும்,

"தவிராத வெவ்வினை தவிர்க்குமுருகாறுந் தரித்தாரெழுத்தோதலாம்" (செய்யூர்ப் பிள்ளைத் தமிழ்)
என அந்தகக்கவி வீரராகவ முதலியாராலும் இந்நூல் பாராட்டப் பெற்றிருத்தல் காண்க.

ஒரு மலைக்குகையில் முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு சேர்த்துண்ணக் கருதித் தம்மையும் அக் குகையில் அடைத்துவிட்டு உண்ணுதற்கு நீராடப்போன ஒரு கொடிய பூதத்தை வெல்லக் கருதிய நக்கீரனார் முருகக் கடவுளைக் குறித்து இந்நூலைப் பாடி அப் பூதத்தினின்றும் விடுதலை பெற்றன ரென்பர். இவ் வரலாற்றைப்பற்றிய செய்திகள் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருப்பரங்குன்றப் புராணம், சீகாளத்திப் புராணம் முதலியவற்றில் சிலசில வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. முருகக் கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய திருவிளையாடல் ஒவ்வோராண்டும் திருப்பரங்குன்றத்திலே பங்குனி மாதத்தில் நடக்கும் திருவிழாவில் நான்காந் திருநாளில் நடைபெற்று வருகின்றது.

முருகாற்றுப்படை என்னுந் தொடர்மொழிக்கு, "வீடுபெறுதற்குச் சமைந்தாரொருவர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது" என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

ஏனை ஆற்றுப்படைகளுக்கும் இதற்கும் வேறுபாடுகள் உண்டு: அவற்றிற் சில வருமாறு:

பிற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்படுபவர்களது பெயரோடு சார்த்தி வழங்கப்படும்; இது பாட்டுடைத் தலைவன் பெயரோடு சார்ந்து வழங்கும். பிறவற்றிற் காணப்படுவனவாகிய, ஆற்றுப்படுத்தப்படுவானை விளித்தலும், அவனது நிலையை விரித்தலும், ஆற்றுப்படுத்துவான் தனது பழைய நிலை, பரிசில் பெற்ற முறையென்பவற்றைக் கூறுதலும் இதில் விளக்கப்படாமல் உய்த்துணர வைக்கப்பெற்றிருக்கின்றன.

இது, முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம் முதலாகிய ஆறு படைவீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியில், முருகக் கடவுளுடைய திருவுருவச் சிறப்பும், அவர் அணியும் மாலை விசேடங்களும், சூரரமகளிர் செயல்களும், முருகக் கடவுள் சூரனைச் சங்காரஞ் செய்த விறலும், மதுரையின் பெருமையும், திருப்பரங்குன்றத்

தின் இயற்கைவளனும் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் முருகவேள் அடியார்க்கு அருள்புரிய எழுந்தருளும் யானையினது இயல்பும், அவருடைய ஆறு திருமுகங்களின் செயல்களும், அவற்றிற்கேற்பப் பன்னிரண்டு திருக்கரங்கள் ஆற்றுவனவும், திருச்சீரலைவாயில் அவர் எழுந்தருளுவதும் சொல்லப்பட்டுள்ளன. மூன்றாம் பகுதியால் அவரை வழிபடும் முனிவர்களுடைய ஒழுக்கமும், தேவருடன் அவரைத் தரிசிக்க வரும் மகளிர் இயல்புகளும், திருமால் முதலியவர்களைப்பற்றிய செய்திகளும் அறியலாகும். நான்காவது பகுதியில் அந்தணர் இயல்பும், அவர்கள் அவரை வழிபடும் முறைமையும் கூறப்பட்டுள்ளன. ஐந்தாவது பகுதியில் குன்றக் குரவையின் நிகழ்ச்சி, அவரைச் சேவிக்கும் மகளிர் பாடும் மகளிர் ஆடும் மகளிர் ஆகிய இவர்களின் இயல்பு, அவருடைய அணி ஆடை செயல் முதலிய சிறப்புக்கள் ஆகிய இச் செய்திகளைக் காணலாம். ஆறாவது பகுதி அவர் எழுந்தருளியுள்ள இடங்களையும், தேவராட்டி அவரை ஆற்றுப்படுத்தும் முறையையும், அவரைத் துதிக்கும் முறையையும், அவர்பாற் சென்று அருள் பெறும் வழியையும், அவருடைய தொண்டர்களின் நல்லியல்புகளையும், அவர் அருள்புரியும் விதத்தையும், பழமுதிர் சோலையிலுள்ள அருவியின் சிறப்பையும் விரித்துக் கூறும்.

இதனால், முருகக் கடவுளுக்குரிய காந்தள் வெண்கடம்பு வெட்சியென்னும் மலர்களும், கோழி மயிலென்னும் கொடிகளும், தகர் மயில் யானை யென்னும் ஊர்திகளும், அவரை அறுவர் வளர்த்தது, குன்றங் கொன்றது, சூர்முதல் தடிந்தது முதலிய திருவிளையாடல்களும் உணரப்படுகின்றன.

2. பொருநர் ஆற்றுப்படை: இது 248 அடிகளை உடையது; வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப் பாவாலாகியது; பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்றானொரு பொருநன் இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய கரிகாற் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அக் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. பொருநர் ஏர்க்களம் பாடுவோர் போர்க்களம் பாடுவோர் பரணி பாடுவோரெனப் பலர். அவருள் * இதிற் கூறப்படுபவன் போர்க்களம் பாடும் பொருநன்; இப்பொருநன் தடாரிப் பறை கொட்டுபவன்; இப் பாட்டில், "கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி..........ஒன்றியான் பெட்டா வளவையின்" (70-73) என வருதல் காண்க.

---

* "இவன் போர்க்களம் பாடும் பொருநனாதலாலும், கூத்தரில் இவனிற் சிறந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனம் கூறினார்" (பொருந. 56 - 7, ந.) பொருநர் - மற்றொருவர்போல வேடங் கொள்வோர்; தன். சூ. 208, சங்கர.

இதனுள், பொருநர்கள் விழாவிற் கூடித் தங்கள் இசைத்திறனைக் காட்டி அவ்விழா முடிந்தபின் வேற்றாரை நோக்கிச் செல்லும் இயல்பினரென்பதும், பாலையாழின் வருணனையும், பாலைப் பண்ணை வாசிப்பதனால் ஆறலைகள்வர் தங்கள் கொடுஞ்செயலை மறந்து அன்புடையராவாரென்பதும், விறலியுடைய * கேசாதி பாதவருணனையும், கரிகாற் பெருவளத்தான் எளியாரையும் விரும்பி அவரை உபசரிக்கும் இயல்பும், உணவின் வேறுபாடுகளும், பரிசிலர்க்கு உபகாரிகள் தேர் யானை முதலியவற்றைக் கொடுக்கும் வழக்கமும், பொருநர் பொற்றாமரை பெறுதலும், விறலியர் பொன்னரிமாலைகள் பெறுதலும், கரிகாற் பெருவளத்தான் இளமையில † வெண்ணிப் பறந்தலையிற் போர் செய்து சேரபாண்டியர்களை வென்றமையும், திணைமயக்கமும், காவிரியின் பெருமையும் கூறப்பட்டுள்ளன.

3. சிறுபாணாற்றுப்படை: இது 269 அடிகளுள்ள ஆசிரியப் பாவால் அமைந்தது; பரிசில் பெறக் கருதிய பாணனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் ஓய்மானாட்டு நல்லியக் கோடனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அந் நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. பாணர் - பாடுவோர்; அவர் இசைப்பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப்பாணருமெனப் பலராவர். இதிற் கூறப்படுபவன் யாழ்ப்பாணன். யாழ்ப்பாணர் சிறுபாணர் பெரும்பாணரென இருவகைப்படுவர். இவ்விருவரையும் ஆற்றுப்படுத்தின காரணம்பற்றி இப்பாட்டும் இதற்கடுத்த பாட்டும் முறையே சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படையெனப் பெயர்பெற்றன; பாட்டின் அடி அளவுபற்றி இப்பெயர் பெற்றன என்றும் கொள்ளலாம்.

இச்சிறுபாணாற்றுப்படையில், "இன்குரற் சீறியாழ் இடவயிற் றழீஇ" (35) என்றும், பெரும்பாணாற்றுப்படையில், "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" (462) என்றும் வரும் அடிகள் இவ்விருவகைப் பாணர்களுக்கும் உள்ள வேறுபாடு யாழால் வந்ததாகக் கருத இடம் தருகின்றன.

இந்நூலை, "சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை" என்பர் தக்கயாகப் பரணி உரையாசிரியர்.

விறலியின் கேசாதிபாதம் கூறும் முகத்தால் அவள் உறுப்புக்களுக்கேற்ற உவமைகளும், வஞ்சி கொற்கை மதுரை உறந்தையென்னும் தமிழ் நாட்டு முடிமன்னர்களுடைய இராசதானிகளின் பெருமைகளும், உமணர்களுடைய செயல்களும், ஏழு வள்ளல்களின்

* "இங்ஙனம் சீறடியுங் கூட்டி எண்ணுங்கால் தலைமுதல் அடியீறின்றாகக் கூறிற்றாம்" பொருந. 47, ந.

† இது தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளது; தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று; இப்பொழுது கோவிலுண்ணியென்று வழங்கப்படும்.

அருஞ்செயல்களும், நல்லியக்கோடனது வீரமும், பாணனுடைய வறுமை நிலையும், நெய்தல்நில இயல்பும், அதனைச் சார்ந்த எயிற் பட்டினத்தில் உள்ள நுளையர் வாழ்க்கை முறையும், முல்லைநில இயல்பும், அதைச் சார்ந்த * வேலூரிலுள்ள எயிற்றியர் விருந்து பேணும் தன்மையும், மருதநில இயல்பும், அதனைச் சார்ந்த ஆமூரி லுள்ள உழவர் மகளிர் ஒழுகலாறும், அவர் விருந்தினரைப் பேணும் திறமும், நல்லியக்கோடனுடைய நற்குணங்களும் வீரச் செயல் களும் வள்ளன்மையும், யாழின் வருணனையும், நல்லியக்கோடனைப் புகழும் முறையும், அவன் பாணனை உபசரித்துப் பரிசில் நல்கும் அருமையும் இதற் காணப்படுகின்றன.

4. பெரும்பாணாற்றுப்படை: இது 500 அடிகளை உடைய ஆசிரியப் பாவாலாகியது; பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றானொருவன் காஞ்சிமா நகரத்தில் செங் கோல் செலுத்திக்கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரைய னிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அவ் விளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.

பெரும்பாணரென்பார் பாணருள் ஒருவகையினர். இப்பாட்டுள், "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" (462) என வருதலால் இப்பாணர்க் குரியது பேரியாழென்று தெரிகிறது. இவ்வகையினர் பண்டைக் காலத்தில் மதுரையிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் இருந்தனரென்று, "அழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்" (மதுரைக்காஞ்சி, 342), "அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கை யும்" (சிலப். 5 : 37) என்பவற்றால் தெரியவருகின்றது; "பெரும் பாண் காவல் பூண்டென" (நற். 40 : 3) என்ற செய்யுளிலும் பெரும் பாணென்னும்பெயர் வந்துள்ளது; அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரைத் † திருத்தொண் டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பியும், பெரியபுராணத்தில் பலவிடங்களில் தொண்டர்சீர் பரவுவாரும் பெரும்பாணரென்று கூறியிருத்தல் அவரும் இவ்வகையினரெனக் கருதஇடந்தருகின்றது.

---

* உப்பு வேலூர்.

† "நினையொப் பருந்திரு நீலகண் டப்பெரும் பாணனை" (திருத் தொண்டர் திருவந். 83); "நீடுசீர்த்திரு நீலகண்டப் பெரும்பாணர்", "திருநீல கண்டத்துப் பெரும்பாணர்", "பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையா ரெதிர்கொள்ள", "பிள்ளையா ரருள்பெற்ற பெரும் பெரும்பாணர்", "அருட்பெரும் பாணனாரை", "மன்பெரும் பாண னாரு மாமறை பாடவல்லார், முன்பிருந்தியாழிற் கூடன் முதலவரைப் பாடு கின்றார்" "நல்ல விசையாழ்ப் பெரும்பாணர்க், கானபடியாற் சிறப்பருளி", "பெரும்பாணர் மலர்த்தாள் வணங்கி" (பெரிய. திரு நீலநக்க. 24, திருஞான. 131 - 2, 138, திருநீலகண்ட. 3 - 4, 11 - 2,)

'பெரும்பாணராவார் குழலர் பாணர் முதலிய பெரிய இசைக்காரர்' என்பர் அடியார்க்கு நல்லார்.

பாணாறு எனவும் இப்பாட்டு வழங்கப்பெறும். யாழின் வருணனை, இளந்திரையன் நாட்டில் அவன் செங்கோல் முறையால் வழிப் போவாருக்கு விலங்குகள் முதலியவை துன்பம் செய்யாமை, உப்பு வாணிகர் இயல்பு, கவர்த்த வழிகளைக் காப்பவர் தன்மை, எயிற்றியர் செயல், கானவர் தொழில், எயினர் அரண்களின் நிலை, வீரக்குடிமகள் இயல்பு, மறவர் வீரம், இடையர் குடியிருப்பின் தோற்றம், ஆய்மகள் செயல், இடையர் தன்மை, உழவர் குடியிருப்பின் அமைப்பு, உழவார் செய்கை, மருத நிலத்தின் நிகழ்ச்சி, வலைஞர் குடியிருப்பின் இயல், அந்தணர் ஒழுக்கமுறை, அந்தணச் சாது மகள் ஊறுகறி அமைக் கும் முறை, நீர்ப்பெயற்றென்னும் ஊரின் பெருமை, பரதர் தெரு வில் நிகழ்வன, பட்டினத்தின் சிறப்பு, கலங்கரை விளக்கத்தின் மாண்பு, திருவெஃகாவில் திருமால் பள்ளிகொண்டருளியிருத்தல், காஞ்சி நகரின் சிறப்பு, இளந்திரையனுடைய வீரம் கொடை முதலியவற்றின் பெருமை, பேய்கள் வனதுர்க்கைக்குத் தம் பசிப் பிணியைக் கூறும் மரபு, பாணர் இளந்திரையனாற் பொற்றாமரை பெறுதல், விறலியர் அவனாற் பொன்மாலை பெறுதல், அவன் பரிசிலரை உபசரிக்கும் முறை, அவன் மலையில் யானை குரங்கு முதலியன முனிவர்க்கு ஏவல் புரிதல் முதலியன இப்பாட்டால் அறியப்படும் செய்திகள்.

ஐந்திணைகளைப்பற்றிய வருணனைகளும், அவ்வத்திணையிலுள்ள பலவகைச் சாதியார் இயல்புகளும், அவர்கள் தத்தமக்கேற்றவாறு விருந்தினர்களை ஆதரிக்கும் முறையும், அந்தணர் முதலியோர் அன்போடு விருந்தூட்டும் தன்மையும் இப்பாட்டில் மிக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன.

5. முல்லைப் பாட்டு: இது 103 அடிகளை உடைய ஆசிரியப் பாவால் அமைந்தது; தலைமகன் போர் செய்தற்குப் பிரியக் கருதிய தனைக் குறிப்பால் உணர்ந்து ஆற்றாளாய தலைவியது வாட்டத்தைக் கண்டு அவன் வற்புறுத்திச் செல்லவும் அவள் உடம்படாததை அறிந்த பெருமுது பெண்டிர், 'அவன் வினைமுடித்து வருதல் உண்மை; நீ வருத்தம் நீங்குக' எனக் கூற, அதுகேட்டு அவள் பின் உளதாம் இல்வாழ்க்கைப் பயனை நினைந்து ஆற்றியிருந்தவழி, தலைவன் அக்காலத்தே போர் முடித்து வந்ததனைக் கண்டு தோழி முதலியோர் தம்முட் கூறியதாகக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. முல்லையென்பது இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்துவரும் துணையும் ஆற்றியிருவென்று கணவன்

கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கையென்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இந்நூல்* முல்லையெனவும் வழங்கும். இப்பாட்டினால், பெருமுதுபெண்டிர் விரிச்சி பார்க்கும் வழக்கமும், பாசறையின் அமைப்பும், பாகர் யானைப் பேச்சான வடமொழிச் சொற்களைக் கூறி யானைகளுக்குக் கவளமருத்தும் வழக்கமும், பாசறையிலுள்ள பள்ளியறையின் இயல்பும், அங்கே நிகழும் நிகழ்ச்சிகளும், வீரமங்கையர் நாழிகை சொல்வார் மெய்காப்பாளர் என்பவர்களுடைய செயல்களும், தலைவன் பகைவரால் துன்புற்ற தன் படைகளின் வருத்தத்தை நினைந்து வருந்தும் அன்பின் திறனும், தலைவி தலைவனைக் காணாது துயருறுவதும், கார் காலத்திற் காட்டுவழியில் தோன்றும் காட்சிகளும் அறியப்படுகின்றன.

6. மதுரைக் காஞ்சி: இது 782 அடிகளை உடையது; முதலிலும் இடையே சில சில இடத்தும் வஞ்சியடிகள் வந்த ஆசிரியப் பாவாலாயது; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் பலவகை நிலையாமையைச் செவியறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் பாடியது.

மதுரைக் காஞ்சியென்ற தொடரை மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிப்பர். காஞ்சித்திணையென்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறும் குறிப்பினது. இப்பாட்டின்கண், "கொன்னொன்று கிளக்குவ லடுபோரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்" (207-8) என்பவற்றால் வீடு பேறாகிய நிமித்தத்தையும், "அன்றோ நின்னொடு முன்னிலை யெவனோ" (206), "திரையிடு மணலினும் பலரே யுரைசெல, மலர்தலை யுலக மாண்டு கழிந்தோரே" (236 – 7) என்பது முதலியவற்றால் பல்வேறு நிலையாமையையும் ஆசிரியர் புலப்படுத்தியிருத்தல் காண்க.

பெரும்பான்மை வஞ்சியடிகளால் அமைந்திருத்தலின் இதனை வஞ்சிப்பாவின் தலையளவிற்கெல்லையாகக் காட்டினர்† நச்சினார்க்கினியர். இந்நூலின் பெருமை, "பெருகு வளமதுரைக் காஞ்சி" என்பதனால் அறியப்படும்.

இதன் முற்பகுதியில் செங்கோலரசருடைய நாட்டிற் கோள்கள் பிறழாது வழங்குதல் முதலிய நன்னிகழ்ச்சிகள் உண்டாகுமென்பது கூறப்பட்டுள்ளது.

நெடுஞ்செழியன் பகைவர்கள்மேற் படையெடுத்துச் சேறலும், அவர்கள் அரணங்களையும் காவல் மரங்களையும் அழித்தமையும், தன் ஏவல் கேட்பார்க்கு அருளிக் கேளாதவரை அழித்து அவர் நாடுகளைப் பாழாக்கிய முறைகளும், தலையாலங்கானத்துப் போர் செய்து

---

* தக்க. 54. உரை. † தொல். செய். சூ. 157, உரை.

சேர சோழர்களையும் ஐந்து குறுநில மன்னர்களையும் வென்ற செய்தியும், சாலியூர் முதுவெள்ளிலை முதலிய ஊர்களைக் கைக்கொண்டதும், பரதவரை அடிப்படுத்தியதும், பகைவரை வென்று கொணர்ந்த பொருள்களை நட்டோருக்கும் புலவர் முதலியோருக்கும் தனக்கெனப் பாதுகாவாமல் வழங்கும் வண்மையும், பிறரைப் பணியாப் பெருவிறலும், முந்தையோர் அடிவழிப் பிழையா மூதறிவும், பொய் தவிர்ந்து வாய்மைமொழியும் பொறப்பும், கொடுத்துப் புகழ் கொள்ளும் கொள்கையும், பிற அருங்குணங்களும் இந்நூலில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்பகுதிகள் புறப் பொருட்டுறைகளுக்குரிய சிறந்த இலக்கியங்களாக விளங்குகின்றன. இது நச்சினார்க்கினியர் தம் உரையில் அங்கங்கே துறைகளை விளக்கிச் செல்வதனுல் அறியப்படும்.

போர் புரிந்து பகைவரை வெல்வதையே கருதித் தன் வாழ்நாளிற் பெரும்பகுதியைக் கழித்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தப் புகுந்த ஆசிரியர் முதற்கண்ணே தம் கருத்தைப் புலப்படுத்தாமல் அவன் முன்னோருடைய நல்லியல்புகளையும் அவனுடைய கொடை, வீரம், நற்குணம் முதலியவற்றையும் எடுத்துப் பாராட்டிப் புகழ்ந்து, பின்பு தம் கருத்தைக் குறிப்பாகச் சில அடிகளாலே புலப்படுத்திப் பின்னர் மதுரையின் பெருவளத்தைப் பரக்கக் கூறியிருத்தல் அவரது * உலகியலறிவையும் மன்னவர்களிடத்து ஒழுகும் முறையையும் புலப்படுத்துகின்றது.

பாண்டி நாட்டைப் புகழும் முகத்தால் அஃது ஐந்திணை வளங்களையும் உடையதென்பதும், அத்திணைகளில் ஒவ்வொன்றிலும் காணப்படும் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் மலிந்த ஓசை வகைகளும் முதல் கரு உரிப்பொருள்களின் அமைதி பெற மிகச் செவ்வனே கூறப்பட்டுள்ளன.

மதுரையின் பெருமையைக் கூறுகையில் முதலில் வையையாறு மதில் அகழி முதலியவற்றின் பெருமையும், அந்நகரின் நாளங்காடியின் வருணனையும், பின் அல்லங்காடியின் வருணனையும் காணப்படுகின்றன.

நாளங்காடி வருணனையில் பண்டம் விற்பார், விழாவெடுப்பார், வெற்றியைப் புலப்படுத்துவார் முதலியோர்கள் எடுத்த பலவகைக் கொடிகளும் பிறவும் கூறப்படுகின்றன.

---

* சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவனை நோக்கி நன்னெறியறிவுறுத்தப் புகுந்த மாடலமறையவனார் முதலில் அவனை வாழ்த்தி, அவனுடைய முன்னோர் பெருமை முதலியவற்றைக் கூறிப் பின்பு தாம் குறித்த நீதிகளை உலகியலபறிந்து சொல்லும் முறையைப் புலப்படுத்தும், "மன்னவன் மன்னே" (28 : 112) என்பது முதலிய அடிகள் இங்கே கருதற்குரியன.

அல்லங்காடி வருணனையில், அந்தணர் இருக்கை முதலியவற்றின் அமைப்பும், காவிதிமாக்கள் அறங்கூறவையத்தார் முதலியோர் இயல்பும், பல்வகைப்பண்டம் விற்பாரைப் பற்றியசெய்திகளும் விளக்கப்பட்டிருக்கின்றன.

பின்னர், மதுரையிலுள்ளார் மாலைமுதல் நாட்காலை வரையிற் பொழுதுபோக்கும் முறை மிக விரிவாகக் கூறப்படுகின்றது. மாலைக் காலத்தில் மங்கையர் ஒழுக்கமும், பரத்தையர் இயல்பும், கருவுயிர்த்தவர் நீராடுதல் முதலிய செயலும், இராக்காலத்தில் கள்வர் செயலும், காவலர் காக்கும் திறனும், விடியற்காலத்தில் அந்தணர் முதலியோர் வேதமோதுதல் முதலியனவும் கூறப்படுகின்றன.

இப்பாட்டில் இடையிடையே சொல்லப்பட்ட நெடுஞ்செழியன் முன்னோர்களாகிய பாண்டியர் மூவர். அவர்கள், முந்நீர் வடிம்பலம்ப நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, *நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பார்.

மதுரையிற் கொண்டாடப்படுவனவாகக் கூறும் முறையிலும் உவமை கூறும் முறையிலும் திருப்பரங்குன்ற விழா, மதுரைக் கோயில்களில் நடைபெறும் விழா, அந்தி விழா, ஏழுநாள் நடைபெறும் விழா, திருவோண நாள் விழா, நன்னன் பிறந்தநாள் விழா, என்பன சொல்லப்படுகின்றன.

இதில் கூறப்பட்ட ஊர்கள் : அழும்பில், மோகூர், மதுரை, சாலியூர், முதுவெள்ளிலை, கொற்கை, தலையாலங்கானம்.

முடிமன்னர் முதலியோர் : சேர சோழர், மானவிறல்வேள், நன்னன், பழையன், மாறன், ஐம்பெருவேளிர், நான்மொழிக் கோசர்.

இறுதியில் நெடுஞ்செழியன் நாட்காலையில் வீரர்களுக்கும் பாணர் முதலியவர்களுக்கும் களிறு முதலியவற்றை வழங்கும் நிகழ்ச்சியைக் கூறும் பகுதியில் வீரர்கள் ஆற்றிய பலவகை வீரச் செயல்கள் கூறப்படுகின்றன.

7. நெடுநல் வாடை : இது 188 அடிகளை உடைய ஆசிரியப்பா; பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ்வருத்தம் தீரும்படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாகவென்று கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக, அவனை நக்கீரனார் பாடியது.

இப்பெயர் நெடிதாகிய நல்வாடையென விரிக்கப்படும். தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஒரூழி போல நெடிதாகிய வாடையாய், அரசன் போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின் அவனுக்கு நல்லதாகிய வாடையாயினமையின் நெடு நல் வாடை யெனப்பட்டது. "கூதிர்ப் பானாள்" (12), "கூதிர் நின்றன்றாற் போதே" (72) என்பவற்றால்

* "நிலந்தரு திருவி னெடியோன்" என்பதற்குத் திருமாலெனப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

வாடைக்குரிய கூதிர்க் காலமும், "வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கி" (173) என்பதனுல் வாடையும், "புலம்பொடு வதியு நலங் கிள ரரிவைக், கின்னு வரும்படர் தீர" (166 - 7) என்பதனுல் தலைவி யின் நிலையும், "சிலரொடு திரிதரும் வேந்தன், பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" (187-8) என்பதனுல் அரசன் பாசறையில் இருப்பதும், "இன்னே முடிகதில் லம்ம" (168) என்பதனுல் கொற்ற வையைப் பரவுதலும் விளங்குகின்றன.

இஃது அகப்பொருட்கேற்ற செய்திகளைத் தன்பாற் கொண் டுள்ளதேனும், "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (176) எனப் பாண்டியனது அடையாளப் பூவாகிய வேம்பைக் கூறினமை யின் அகத்திணையின்பாற் படாது புறத்திணையாயிற்று. இதனை வாகைத்திணையுட் கூறிய கூதிர்ப்பாசறை யென்னும் துறையுள் அடக்குவர் நச்சினுர்க்கினியர். வாகைத்திணை வெற்றியைக் குறிப்பது. இங்கே, போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாகிய கூதிர்க்காலத்து அப்போகத்தில் விருப்பின்றிப் பகைப்புலத்துப் போந்திருப்பதனுல் பாண்டியன் காமத்திடத்து வெற்றியை எய்தின காரணம் பற்றி வாகையாயிற்றென்பர்.

இதில், கூதிர்க்காலத்தில் மக்களும் விலங்கு பறவைகள் முதலிய னவும் குளிரால் வருந்தியிருக்கும் நிலை முன்னர்க் கூறப்படுகின்றது. பின்பு தலைவியின் நிலையைக் கூறப்புக்க ஆசிரியர், தலைவி வதியும் அரண்மனையின் அமைப்பையும் அதன் வாயில் முதலியவற்றின் அழ கையும், தலைவி பள்ளிகொள்ளும் பாண்டிற் கட்டிலின் கைத் தொழில் நலத்தையும், அதில் இட்டுவைத்துள்ள பாயலின் அமைப் பையும் கூறித் தலைவி அரசன் பிரிவினுல் வருந்தும் நிலையை அவளது பண்டைய நிலையொடு மாறுபடச் சுட்டி விரிக்கின்ருர். இதனுல் தலைவியின் கற்புநிலையும் அவளுற்ற துயர்மிகுதியும் விளங்குகின்றன. அவளது வருத்தம் தீர மகளிரும் செவிலியரும் ஆற்றும் செயல்கள் பின்பு சொல்லப்படுகின்றன. இறுதிப் பகுதியில், அரசன் புண்பட்ட வீரர்கள்பால் அன்பு பூண்டு நடுயாமமென்று பாராளுகி மழை பெய் தலையும் கருதாமல் சென்று முகமலர்ந்து அவர்களைக் கண்டு ஆற்று விக்கும் செய்தி கூறப்படுகின்றது. இதனுல் அரசனுடைய எளிமை யும், செய்ந்நன்றியறிவும், வீரர்களது பெருமையும் புலப்படு கின்றன.

இடையிடையே கூறப்படும் செய்திகளால், பூ மலர்வதனுற் பொழுதை அறியும் வழக்கமும், மகளிர் மாலைக்காலத்தைக் கொண் டாடும் செயலும், மணவகுக்கும் முறையும், வேலுக்கு அடையாளப் பூவை அணியும் மரபும் அறியப்படுகின்றன.

8. குறிஞ்சிப் பட்டு : இது 261 அடிகளை உடைய ஆசிரியப் பாவால் அமைந்தது. *காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகித் தலைவன் வரும் வழியிலுள்ள ஊறஞ்சும் காலத்துத் தலைவி பாங்கிக்கு அறத் தொடு, நின்றுளாக பாங்கி † எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத் தல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவியென்னும் ஆறும் கூறிச் செவிலிக்கு அறத்தொடு நின்ற வழிக் கூறும் கூற்றாக ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச்சுவையை அறிவுறுத்தற் பொருட் டுக் கபிலர் பாடியது.

குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய ஒழுக்கம். இதன்கண் இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறப்படுதலின் இஃது இப்பெயர் பெற்றது.

இப் பாட்டு ‡ பெருங்குறிஞ்சி யெனவும் வழங்கப் பெறும். இதில் பிற திணைக்குரிய முதலும் கருவும் மயங்கி வந்தனவேனும் உரிப் பொருட் சிறப்புப்பற்றி இது குறிஞ்சி யென்னும் பெயர் பெற்றது.

இதனுள் தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்றற்குக் காரண மாகிய சிறைகாவல், "காவலர் கடுகினும்" (240) என்பது முதலிய அடிகளாலும், தலைவனுக்கு வரும் ஊறஞ்சுதல், "அளைச்செறி யுழு வையும்" (252) என்பது முதலிய அடிகளாலும், தலைவி பாங்கிக்கு அறத்தொடு நின்றது, "முத்தினு மணியினும்" (13) என்பது முத லியவற்றாலும் விளங்கும்.

இப்பாட்டு, களவொழுக்கத்தினைப் புலப்படுத்தி நிற்பது. கள வுக் காலத்து நிகழ்வனவற்றில் பெரும்பான்மையான செய்திகள் இதில் முறையே கூறப்பட்டுள்ளன. இஃது இத்தன்மையதாதலை, "தேற்ற, மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற், குறையாக் குறிஞ்சிக் குணம்" (குறிஞ்சிப் பாட்டு, இறுதிவெண்பா) என்னும் செய்யுள் புலப்படுத்தும். ஐந்தாம் மணம் - காந்தருவம்; அதனிற் குறையாது ஒப்பதாவது களவு.

இதனுள் தலைவிக்கு விரகத்தால் உண்டாகிய வேறுபாடுகளும், தலைவனுடைய தோற்றத்தின் இயலும், தலைவியின் மேற்சென்று அச்சுறுத்திய தனது நாயைத் தலைவன் காத்தவாறும், களிறுதரு புணர்ச்சி புனறரு புணர்ச்சி முதலிய துறையமைதிகளும், மாலைக் காலத்திற் பறவைகளும் விலங்கினமும் மக்களும் செய்யும் செயல்களும் கூறப்பட்டுள்ளன.

தலைவி தோழியுடன் நீராடிப் பல பூக்களைப் பறித்துப் பாறை யிற் குவித்தாளென்ற செய்தியைக் கூறுகையில் 99 மலர்களின் பெயர்கள் சொல்லப்படுகின்றன.

தலைவி நாய்க்கு அஞ்சுகையில் தலைவன் காத்த செய்தியைக் கூறுமிடத்து, "மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்,

* இறை, சூ. 29. † தொல். பொருளியல், சூ. 13.
‡ பரி. 19 : 77, பரிமேல்; தொல். அகத். சூ. 19, ந.

தாகாண் விடையி னணிபெற வந்து" எனத் தலைவனுக்கு விடையை உவமையாகச் சொல்லிய ஆசிரியர் அதற்கேற்ப, தலைவியை அவளது ஊரளவும் கொணர்ந்து விட்டதைக் கூறுகையில், "துணைபுணரேற்றி னெம்மொடு வந்து" என அவ்வுவமையையே பின்னும் சுவை பெறக் கூறியிருத்தல் அறிந்து இன்புறத் தக்கது. இதில், தலைவனது மலைவளம் கூறும் பகுதி உள்ளுறை யுவமப் பொருளமைய அமைந்துள்ளது.

தலைவன் தலைவியை வஞ்சினங் கூறித் தேற்றியதாகக் காணப்படும் பகுதியால், வரைந்துகொண்டு விருந்து புறந்தந்து இல்லறம் நிகழ்த்தும் முறையும், தலைவன் மலைமிசைக் கடவுளை வாழ்த்தி வஞ்சினங்கூறும் தன்மையும், நீர் குடித்தலாகிய சூளுறவும் அறியப் படுகின்றன.

இது குறிஞ்சிப் பாட்டாதலின், அகத்திணைக்குரிய கடவுளாகிய முருகனைப்பற்றிய செய்திகளை, "சுடர்ப்பூட் சேஎய், ஒன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின் மின்", "நெடுவே ளணங்குறு மகளிர்", "பிறங்குமலை மீமிசைக் கடவுள் வாழ்த்தி" என ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

ஓரரசனுக்கு இது கூறப்பட்டதாதலின் அவனுக்கேற்ப, தோழியின் நிலையை, "இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர் போல" என விளக்கியும், நாய்களுக்கு உவமை கூறுகையில், "முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற், பகைபுறங் கண்ட பல்வேல் இளைஞரின்" எனச் சொல்லியும், மாலைக்காலம் பல வகை நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டு வருதலை, "சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத், துனைஇய மாலை துன்னுதல் காணூஉ" என உவமைகொண்டு அறிவித்தும் அரசர்களையும் வீரர்களையும் பற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்தாண்டமை பாராட்டற்பாலதாம்.

9. பட்டினப்பாலை: இது 301 அடிகளை உடையது; பெரும்பான்மையும் வஞ்சியடிகளால் அமைந்து ஆசிரியவடிகளால் இறுவது; வேற்று நாட்டிற்குச் செல்லத்தொடங்கிய தலைவன் தனது நெஞ்சை, நோக்கி, 'தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று செலவழுங்கிக் கூறும் கூற்றாகச் சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.

*வஞ்சி நெடும்பாட்டெனவும் இது வழங்கப்பெறும். இப்பாட்டைப் பாடியதற்காக உருத்திரங்கண்ணனார் பதினாறு நூறாயிரம் பொன் கரிகாற் பெருவளவனாற் பரிசு பெற்றனரென்பது, "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன், பத்தொ டாறு நூ றாயிரம்பெறப், பண்டுபட்டினப் பாலை கொண்டதும்" (கலிங்க. இராச. 21) என்பதனால் அறியப்படுகின்றது; "பாடிய பாக்கொண்டு பண்டு

* யா. வி, செய். சூ. 37; யா. கா. ஒழிபு. சூ. 4; இ. வி. சூ. 745, உரை.

பதிறு, கோடி பசும்பொன் கொடுத்தோனும்'' (சங்கர சோழனுலா, 10), "பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு, கோடிபொன் கொண்டதூசின் கொற்றமே" (தமிழ்விடு. 193) என்பவற்றால் அத்தொகை பதினாறுகோடி பொன்னெனக் கூறுவாரும் உளரென்று தெரிகின்றது.

இப்பாட்டை வஞ்சிப்பாவின் இடையளவிற்கு எல்லையாகக் காட்டுவர் * நச்சினார்க்கினியர்.

பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணைப்பாட்டாதலின் இஃது இப்பெயர் பெற்றது; பாலை-பிரிதலும் பிரிதல் நிமித்தமும். இதில் வேற்று நாட்டிற்குத் தலைவன் பிரியும் காலத்துத் தானுறும் இடும்பையினால் அவன் செலவு தவிர்ந்து நெஞ்சொடு கூறினமை, "முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும், வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய, வாரேன் வாழிய நெஞ்சே...திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய, வேலினும் வெய்ய கானமவன், கோலினுந் தண்ணிய தடமென் றோளே" என்னும் அடிகளாற் புலப்படும். அவளை ஆற்றுவித்துப் பின்பு பிரிதல் கருதியே வாரேனென்றான். இது, "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" (தொல். கற்பு. சூ. 44) என்னும் இலக்கணத்தாற் பெறப்படும். "முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே" (தொல். அகத். சூ. 3) என்பதன் உரையில் உள்ள, 'முதலிற் கருவும் கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும்' என்பதற் கிணங்க இதில் உரிப்பொருளே சிறந்து வந்தது.

இப்பாட்டில் முதலில் சோழநாட்டின் பெருமையும் பின்பு காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும் அதன்பின் கரிகாற் பெருவளத்தான் வீரச்செயல்களும் உறையூரை அவன் வளப்படுத்தினமையும் கூறப்படுகின்றன.

முதலில், பஞ்சகாலத்தின் காரணங்களும், இயல்புகளும், காவிரியின் சிறப்பும், சோழநாட்டுக் குடிவளமும், † இருகாமத் திணையேரி, அறச்சாலை, தவப்பள்ளி, துர்க்கையின் கோயில் முதலியவற்றின் இயல்புகளும், பின்பு பரதவர் பகலிலும் இரவிலும் பொழுதுபோக்கும் முறையைக் கூறும் பகுதியில் பரதவர் குடில்களின் தோற்றமும், அவர்கள் சுறாக்கொம்பை நட்டு வருணனை வழிபடும் மரபும், உவாக்காலத்தில் மீன் வேட்டைக்குச் செல்லாத

* தொல். செய். சூ. 157

† இவ்வேரிகள் சோமகுண்டம் சூரியகுண்டமென வழங்கப் பெற்று வந்தன; இவ்விரண்டும் திருவெண்காட்டிலுள்ள சோம தீர்த்தமும் சூரிய தீர்த்தமுமாமென்று சில பெரியோர் கூறுவர். முற்காலத்தில் திருவெண்காடு காவிரிப்பூம்பட்டினத்தின் எல்லைக்குள் அடங்கியிருந்ததாகத் தெரிவதால் இது சரியெனவே தோற்றுகின்றது.

வழக்காமும், தீவினை நீங்கக் கடலாடும் இயல்பும், கடலிற் சென்ற பரதவர் கரையிலுள்ள வீடுகளில் ஏற்றிய விளக்குக்களை எண்ணும் செயலும் காணப்படுகின்றன.

பரதவர் தெருவைப்பற்றிய செய்திகள் பின்பு கூறப்படுகின்றன. இப்பகுதியால், காவிரிப்பூம்பட்டினத்தில் கடல்வாணிகம் நிகழ்ந்து வந்ததென்பதும், ஏற்றுமதி இறக்குமதியாகும் பண்டங்களில் சோழனுடைய அடையாளமாகிய புலிப்பொறியைப் பொறித்து வந்தனரென்பதும், அவற்றிற்குச் சுங்கம் வாங்கி வந்தார்களென் பதும், அச்சுங்கப் பொருளைத் தொகுப்பார் அரசன் மாட்டு அன்புடையராகித் தம் கடமையைக் குறைவின்றி நிறைவேற்றி வந்தனரென்பதும் அறியப்படுகின்றன. இவ்வாறு கப்பல் வியாபாரம் நடந்தமையால் பல நாட்டிற்கும் சோழநாட்டுப் பொருள்கள் சென்றனவென்பதும், ஈழம் காழகம் முதலிய நாடுகளி லிருந்து பல பொருள்கள் சோழநாட்டிற்கு வந்தனவென்பதும் தெரிகின்றன.

அப்பால் காவிரிப்பூம்பட்டினத்து ஆவணத்தின் வளம் கூறப் படுகிறது. இப்பகுதியில், கோயில்களில் எடுத்த கொடியும், பண்டங்களை விற்றற்குத் தூக்கிய கொடியும், கற்றறிந்த ஆசிரி யர்கள் வாதுகருதிக் கட்டிய கொடியும், கள்ளுக்கடையில் உள்ள கொடியும் சொல்லப்படுகின்றன.

பிறகு இமயம், குடகு, தென்கடல், மேல்கடல், கங்கை, காவிரி, ஈழம், காழகம் முதலிய இடங்களிலிருந்து வந்த பொருள்கள் கூறப் படுகின்றன. அதன் பின்பு வணிகர் இயல்பு சொல்லப்படுகின்றது. அவர்கள் கொலை களவு முதலிய குற்றங்களைப் பிறரிடமிருந்து நீக்கும் செயலையும், தேவர் பசு அந்தணர் முதலியோரை வழிபட்டு வந்ததையும், அவர்களது நடுவு நிலைமையையும், வாணிக முறை யையும் இப்பகுதி விளக்குகின்றது.

பின்னர், கரிகாலன் இளமையில் சிறையில் இருந்தமையும், அச்சிறையினின்றும் நீங்கி அரசுரிமையை எய்தினமையும், பகைவர் நாட்டைப் பாழ்படுத்திய முறையும், ஒளியர் அருவாளர் வடவர் குடவர் பொதுவர் இருங்கோவேள் முதலிய சிற்றரசர்களையும் பாண்டியரையும் வென்றமையும், உறையூரை விரிவுற அமைத்து அதிற் பல குடிகளை நிலைநிறுத்தி மதில் வாயில்கள்முதலியன அமைத் தமையும் சொல்லப்படுகின்றன.

கரிகாலனால் பாழ்பட்ட பகைவர் நாடுகளைப்பற்றிக் கூறும் பகுதியில் அந்நாட்டின் பழைய நிலை மிக அழகாகவும் பாழாயினபின் அடைந்த நிலை இரக்கத்தை உண்டாக்கும் முறையிலும் விளக்கப் பட்டிருக்கின்றன.

10. மலைபடுகடாம் : இது, 583 அடிகளை உடைய ஆசிரியப் பாவாலாகியது; பரிசில் பெறவரும் கூத்தனொருவனைப் பரிசில் பெற்ற ஒருவன் செங்கண்மாத்து வேள் நன்னன்சேய் நன்னனிடத்தே

ஆற்றுப்படுத்தியதாக அந் நன்னனை இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இது கூத்தராற்றுப் படையெனவும் வழங்கும்; கூத்தர் - ஆடல் மாக்கள். இவர்களுக் குச் சாதிவரையறை இலது. இவர்கள் எண்வகைச் சுவையும் மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் புலப்பட ஆடுவோர். "கலம்பெறு கண்ணுளரொக்கற் றலைவ" (50) என்ற விளியினால் இது கூத்தரை ஆற்றுப்படுத்தியதென்பது அறியப்படும்.

"அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த; மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப" (347 - 8) என்ற அடிகளால் மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்த வதனால் இப்பாட்டு மலைபடுகடாமென்று பெயர் பெற்றது. கடாமென் பது ஆகுபெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று. இவ் வாறு ஒரு பாட்டிலுள்ள பொருட் சிறப்புடைய தொடரால் அப் பாட்டின் பெயரைக் குறித்தலுண்டென்பது பதிற்றுப்பத்தினாலும் உணரப்படுகின்றது.

பரந்த மொழியால் அடி நிமிர்ந்து வந்த கோலென்னும் வனப் பிற்கு இப்பாட்டு உதாரணமாக இளம்பூரணராலும், ஆசிரியப்பாவின் தலையளவிற்கு எல்லையாக நச்சினார்க்கினியராலும் எடுத்துக்காட்டப் பெற்றிருக்கின்றது.

இதில், பலவகை இசைக் கருவிகளின் பெயர்களும், யாழின் வருணனையும், மலைச் சாரலின் வளமும், அச்சாரலில் வாழும் குறவர் களும் காடுகாக்கும் வேடர்களும் வருவோரை விருந்தூட்டி உபசரிக் கும் இயல்பும், மலைப்பக்கத்தில் நிகழும் பலவகை ஓசைகளைப்பற்றிய செய்திகளும், கோவலரும் நாடு காக்கும் வேடரும் உழவர்களும் தம் பால் வருவோரை உபசரிக்கும் திறமும், நன்னனது ஊரின் பெருமை யும், அவன் அரண்மனை வாயிலில் அவனது காட்சியைக் கருதி நிற் பார் கொண்டுவந்த கையுறை வகைகளும், அவனைப் புகழும் முறை யும், அவன் தன்பால் வந்த கூத்தர் விறலியர் முதலியோருக்குப் பரி சில் நல்கி விடுக்கும் வண்மையும் கூறப்படுகின்றன.

இடையிடையே அவ்வவ்விடங்களிலுள்ளார் தத்தமக்கேற்ற வாறு உதவும் உணவு வகைகளும், இடை வழியில் வழிச் செல்வார்க்கு நிகழும் இடையூறுகளும், அவற்றை நீக்கிக்கொண்டு செல்லும் உபாயமும் மிக விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

நன்னனுக்குரிய நவிரமலையில் உள்ள காரியுண்டிக் கடவுளது கோயிலைப்பற்றிய செய்திகளும் சேயாற்றின் பெருமையும் இதிற் காணப்படும். "குன்றுசூழிருக்கை நாடுகிழ வோனே" (583) என் பதனால் நன்னனுடைய ஊர்அமைந்துள்ள பல்குன்றக் கோட்டம் சொல்லப்பட்டிருக்கிறது.

வரகின் கவைக்கதிருக்கு வாதியின் கையை உவமை கூறி யிருத்தலும், குறமகளிர் தம் கணவர் புண்ணுற்படும் வருத்தத்தைப் பாட்டுப் பாடித் தணித்தலும், யானையைக் கந்திற் பிணிக்கும் பாகர்

யானைப் பேச்சான சில வடசொற்களைப் பயிற்றும் வழக்கமும், வழிக்கு அடையாளமாகக் கவர்த்த வழிகளின் தொடக்கத்தில் புல்லை முடிந்து வைத்தலும், கற்புக்குக் கொடியுண்மையும், பாணருக்குப் பொற்றாமரைப் பூவையும் விறலியருக்கு இழைகளையும் உபகாரிகள் அளித்தலும் பிறவுமாகிய செய்திகள் இதனால் அறிதற்பாலன.

இன்ன இன்ன செய்திகளைக் கூறுவேன் கேளெனத் தொகுத்துச் சுட்டிப் பின்பு விரிக்கும் முறை இவ்வாற்றுப்படையில் மட்டும் காணப்படுகின்றது.

கூத்தனை ஆற்றுப்படுத்துகையில், இன்ன இடங்களில் இன்ன இன்ன செயல்களைச் செய்கவெனக் குறிப்பிடுகையில். "நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடி" (359) எனவும், "எருதெறி களமரோதையொடு நல்யாழ், மருதம் பண்ணி யசையினிர் கழிமின்" (469 – 70) எனவும் அவ்வத்திணைக்கேற்ற பண்களைப் பாடுமாறு சொல்லப்படுதல் அறிந்து மகிழத் தக்கது.

ஆங்காங்கு ஆசிரியர் பலவகை உவமைகளைக் கூறிப் பொருளை விளக்கிச் செல்கின்றார். அவற்றுள், கூத்தருக்குத் தக்கபடி, "விரலூன்று படுக ணாகுளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கம்" (140-41) எனவும், "சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சு கொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே" (143-4) எனவும், "கானப்பலவின் முழவுமருள் பெரும்பழம்" (511) எனவும், "வரா அற், றுடிக்க ணன்ன குறையொடு" (457–8) எனவும், ஆகுளி முழவு துடியென்னும் இசைக் கருவிகளையும், "கோளி யாலத்துக், கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்" (268-9) எனவும், "அருவி நுகரும் வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந், தெரியிமிழ் கொண்ட நும் மியம்போ லின்னிசை" (294-6) எனவும் இசைக் கருவிகளின் ஓசையையும், நுகர் பொருள்கள் ஒன்றையொன்றொவ்வா இனிமையுடையன வென்பதைப் புலப்படுத்துவாராய், "நல்லியாழ்ப், பண்ணுப் பெயர்த்தன்ன காவும் பள்ளியும்" (450-51) என அவற்றிற்கு ஒன்றையொன்றொவ்வா இனிமையையுடையனவாகிய பண்களையும், "கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்" (236-7) எனக் கூத்தர் பிள்ளைகளையும், நன்னன் மலையில் உள்ள ஆரவாரத்தையும் பிறவற்றையும் கூறியபின்பு அம்மலையைச் சிறப்பிப்பாராய், "முழவுத் துயி லறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே" (350-51) எனக் கூத்தர்கள் தொக்குத் தம் வன்மையைக் காட்டும் விழாவையும் உவமையாக எடுத்தாண்டிருத்தல் ஆசிரியருடைய பேரறிவாற்றலைப் புலப்படுத்திப் படிப்போரை இன்புறுத்துகின்றது.

சீவக சிந்தாமணியை யான் முதல்முறை பதிப்பித்து வந்த பொழுது நச்சினார்க்கினியர், தம் உரையிற் காட்டும் மேற்கோள்

களுக்குப் பின் அவற்றின் இடத்தை உணர்த்தாமல், 'என்றூர் பிறரும்' என எழுதிச் செல்லுவதையறிந்து அவற்றிற்குரிய ஆகரங்களைத் தெரிந்துகொள்ள நினைந்து பழைய ஏட்டுச் சுவடிகளைப் படித்துப் பார்த்து வந்தேன். திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவானும் என்னுடைய தமிழாசிரியருமான திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஏட்டுச்சுவடிகளுள் ஒன்றிற் பொருநராற்றுப்படையென்ற பெயர் இருத்தலையறிந்து அதனை எடுத்துப் படித்து வருகையில் சில பகுதிகள் சீவகசிந்தாமணி உரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றனவாக இருந்தன. அதனால் ஊக்கம் கொண்டு மேலும் படித்து வருகையில், மதுரைக் காஞ்சி வரையில் அப் பிரதியிலிருந்தமையின் பல மேற்கோட் பகுதிகள் அவற்றில் காணப் பட்டன. "முருகு பொருநாறு" என்னும் பழைய வெண்பாவிற் கூறப்பெற்ற நூற்பெயர்களிற் சிலவும் அவற்றின் முறையும் அமைந் திருந்தமை கண்டு அவை பத்துப்பாட்டைச் சார்ந்தன வென்றறிந் தேன். நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப்பாயிரத்துள்ள, "சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல், ஒருபது பாட்டும்" என்னும் பகுதியினால், பத்துப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் உரையுண்டென் பதை முன்பே அறிந்திருந்தேனாதலின் அப்பிரதியிலுள்ளது அவருரை யென்று தெரிந்துகொண்டேன்.

அதன் பிறகு, பத்துப்பாட்டுக்களை நச்சினார்க்கினியர் உரையுடன் ஆராய்ந்து வெளியிட வேண்டுமென்னும் எண்ணத்தால் பார்த்திவ வருடம் (1885) முதல் ஏட்டுப்பிரதிகளைத் தேடி வந்தேன். இயற் றமிழாசிரியர் திருத்தணிகை ஸ்ரீ விசாகப்பெருமாளையரவர்களுடைய மருகர், வேலூர் ஸ்ரீ குமாரசாமி ஐயரென்பவர் ஒரு பிரதி தந்தார். அதில் பொருநராற்றுப்படை முதல் மலைபடுகடாம் இறுதியாக உள்ள பாட்டுக்கள் ஒன்பதும் இருந்தன. பிள்ளையவர்கள் பிரதியிலும் அப் பிரதியிலும் உள்ள பாட்டுக்களுள் ஒன்றிற்கேனும் மூலம் கிடைக்க வில்லை. பாராயண நூலாக இருந்தமையால், திருமுருகாற்றுப்படை மட்டும் பல இடங்களில் காணப்பட்டது. ஆதலின், முற்கூறிய இரண்டு பிரதிகளிலும் உரைக்கு முன்னம் சிறிது சிறிது ஒரு மொழியும் தொடர்மொழியுமாக அமைந்திருந்த மூல பதங்களையே இணைத்து எனது சிற்றறிவிற்கு எட்டியமட்டும் அடிவரையறை செய்து அவ்வொன்பது பாட்டையும் எழுதிக்கொண்டேன்; உரை யாசிரியர்களால் இவற்றிலிருந்து பழைய இலக்கிய இலக்கண உரை களில் மேற்கோளாக எழுதப்பட்டவற்றுள் கிடைத்த சில பகுதிகள் இவற்றின் மூலங்களை இணைக்குங்காலத்துப் பேருதவியாக இருந்தன. இவ்வாறு உரையிலிருந்து மூலங்களைக் கண்டுபிடித்துத் தொகுத்தது அளவிறந்த துன்பத்தை உண்டாக்கிவிட்டது.

பின்பு கிடைத்த பிரதிகளுள் ஆறுமுக மங்கலத்துப் பிரதியில் திருமுருகாற்றுப்படை மூலமும் பொருநராற்றுப்படை மூலமும்

சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியில் பெரும்பாணாற்றுப்படை மூலமும் முல்லைப்பாட்டு மூலமும் இருப்பக் கண்டு அவற்றோடு நான் எழுதி வைத்திருந்த மூலங்களை ஒப்பு நோக்கிக்கொண்டேன். ஷை. புத்தகசாலைப் பிரதியில், "முருகாறு பொருநாறு சிறுபா ணாறு முல்லைபெரும் பாணாறு மதுரைக் காஞ்சி, பரிதாய பொருடமூவா நெடுநல் வாடை பட்டினப்பாலை குறிஞ்சி மலைக டாமும். மருவாரும் பொழில்புடைசூழ் களந்தை மூதூர் வரு சிவப்ப பூபனருள் வேல பூபன், உரையோடு மெழுதினனு தலினு லன்னு னேங்குபெருஞ் செல்வமிசை யுற்று வாழி" என்னும் பாட லொன்று எழுதப்பட்டிருந்தது. குறிஞ்சிப் பாட்டில் 64-ஆம் அடிக்குமேற் சில அடிகள் விட்டுப்போனதுபோல் தோற்றியது. தருமபுரமடத்திலிருந்து கிடைத்த ஒற்றையேடுகளுள் ஒன்றில் அப் பகுதி இருப்பதைக் கண்டு அதனைச் சேர்த்துக்கொண்டேன். இப் பிரதிகளுள் ஒன்றிலேனும் சிறிய தொடர்கள் சிலவற்றிற்கு உரை கிடைக்கவில்லை.

பத்துப்பாட்டு மூலமும் உரையும் 1889-ஆம் வருடத்தில் முதற் பதிப்பாக வெளியிடப் பெற்றன.

அப்பதிப்பிற்கு உதவியாக இருந்த ஏட்டுப் பிரதிகள்:

1.	திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்	பிரதி ...	1
2.	தருமபுர ஆதீனத்துப் புத்தகசாலைப்	,, ...	1
3.	வேலூர் ஸ்ரீ குமாரசாமி ஐயர் அவர்கள்	,, ...	1
4.	ஆறுமுகமங்கலம் ஸ்ரீ குமாரசாமி பிள்ளைஅவர்கள்	,, ...	1
5.	திருநெல்வேலி ஸ்ரீ கவிராஜ நெல்லையப்ப பிள்ளை அவர்களும் அவர்களுடைய தம்பி ஸ்ரீ கவிராஜ ஈசுவரமூர்த்திப் பிள்ளையவர்களும் உதவிய	,, ...	1
6.	திருநெல்வேலியைச் சார்ந்த வண்ணாரப்பேட்டை ஸ்ரீ திருப்பாற்கடனாத கவிராயர் அவர்கள்	,, ...	1
7.	ஆழ்வார் திருநகரி ஸ்ரீ தேவர்பிரான் கவிராயரவர்கள்	,, ...	1
8.	பொள்ளாச்சி வித்வான் ஸ்ரீ சிவன்பிள்ளை அவர்கள்	,, ...	1
9.	ஸ்ரீ திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை அவர்கள்	,, ...	1
10.	ஸ்ரீ ம. வி. கனகசபைப் பிள்ளை அவர்கள்	,, ...	1
11.	சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப்	,, ...	1

இவற்றுள் உரைமட்டும் இருந்த பூர்த்தியான பிரதிகள், 3, 4, 6 - என்ற எண்களுள்ளவைகளே.

பின்பு, 1918-ஆம் ஸ்ரீ இரண்டாவது பதிப்பு வெளியிடப் பட்டது. அப்பதிப்பிற்கு உதவியாகக் களக்காடு ஸ்ரீ சாமிநாத தேசிகரவர்களால் ஒரு கையெழுத்து மூலப் பிரதியும், சில உரைப் பிரதிகளும் கிடைத்தன; அவற்றாலும் நாளடைவில் செய்துவந்த ஆராய்ச்சிகளாலும் பத்துப்பாட்டின் மூலமும் உரையும் சில சில திருத்தங்களை அடைந்தன.

உரையாசிரியர்களால் இப்பாட்டுக்களிலிருந்து மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டிருக்கும் பகுதிகளையும் இடங்களையும் ஞாபகத்துக்கு வந்த அளவு விளக்கியும், திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் வேறுரையொன்று கிடைத்தமையால் அதில் காணப்பட்ட விசேடமான வேறுபாடுள்ள பகுதிகளையும் பாடபேதங்களையும் அதனுரையில் அங்கங்கே கீழ்க் குறிப்பாகப் புலப்படுத்தியும், மூலத்திற்குரிய அடியெண்களை உரைப் பகுதியில் உரிய இடங்களில் அமைத்தும், உரையிலுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருளும் விளக்கமும் எழுதியும், உரையில் சொற்களின் முதலிறுதிகள் தோன்றப் பிரித்துக்காட்டியதன்றி மையீற்றுப் பண்புப் பெயர்களுள் நிச்சயமாகத் தெரிந்த முதனிலையைப் புலப்படுத்தியும், பழைய நூல்களைப் போலவே பழைய உரைநடைகளும் சிறந்து பயன்படுவன வாதலின் உரைநடையிற் கண்ட சொற்கள் முதலியவற்றைத் தொகுத்து அகராதியாக அமைத்து விளங்காத சொற்களுட் பெரும்பாலனவற்றிற்குப் பொருளெழுதிச் சேர்த்தும், பாடினோர் பாடப்பட்டோர் உரையாசிரியர் வரலாறுகளைத் தெரிந்த அளவு எழுதியும் அவ்வக் காலங்களில் சென்னைச் சருவகலாசங்கத்தார் பி. ஏ. பரீக்ஷைக்கு இப்பாட்டுக்களில் ஒவ்வொன்றைப் பாடமாக வைத்த பொழுது பதிப்பித்தவற்றிற்கு எழுதிய குறிப்புக்களைச் சேர்த்தும் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பெற்றது.

முதலிரண்டு பதிப்புக்களைப்பற்றிய பிற செய்திகளை அவ்வப் பதிப்புப் புத்தகங்களின் முகவுரைகளால் அறிந்துகொள்ளலாம்; இங்கே விரிவஞ்சி அவை விடுக்கப்பட்டன.

இப்பொழுது இது மூன்றும் முறையாகப் பதிப்பிக்கலாயிற்று. பின்னர்ச் செய்துவந்த ஆராய்ச்சியால் மூலமும் உரையும் அடைந்த திருத்தங்கள் சில.

வேறு நூல்களிலிருந்து மூலத்துக்கு நேரான ஒப்புமைப்பகுதிகளும், நச்சினார்க்கினியரும் பிறரும் எழுதிய உரைகளிலிருந்து உரைகளை ஒத்த பகுதிகளும் இப்பதிப்பில் முன்னைய பதிப்பினிலும் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளன. அவ்வகையில் புதியனவாகக் காட்டப்பட்ட சில பழைய நூல்கள்: பழைய இலக்கண நூலொன்று, கண்டனலங்காரம், களவித் தெளிவு, களவிமாலை, களவி விளக்கம், தமிழ்நெறி விளக்கம், பல்சந்த மாலை, பாண்டிக் கோவை, பொருளியல், வங்கர்கோவை.

இரண்டாவது பதிப்பில் இருந்த மூன்றுவித அகராதிகளும் சில பயன் கருதி ஒரே அகராதியாகத் தொகுத்து இப்பதிப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவ்வகராதியில் இந்நூலிற் காணப்படும் உவமைகள், அருஞ் செய்திகள் முதலியவற்றிற் பல நூதனமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாவது பதிப்பைக் காட்டிலும் இப்பகுதியில் ஏறக்குறைய 300 பக்கங்கள் அதிகமாக இருப்பதனாலேயே இதிற் பல புதிய விஷயங்கள் சேர்க்கப் பெற்றுள்ளனவென்பதை அறிஞர்கள் அறிந்துகொள்வார்கள். அவை ஆராய்ச்சியாளர்களுக்கு மிகப் பயன்படுமென்பதை நான் எடுத்துச் சொல்வது மிகையாகும்.

என்னுடைய தமிழ்நூற் பரிசோதனை விஷயத்திலும் பதிப்பு விஷயத்திலும் அவ்வப்போது வேண்டிய பொருளுதவி செய்து ஆதரித்து வரும் திருவாவடுதுறை யாதீனத்துத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களையும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமிகளவர்களையும், ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானாதிபதிகளாகிய கௌரவம் பொருந்திய மகாராஜராஜஸ்ரீ ஷண்முக ராஜேச்வர நாகநாத சேதுபதி மகாராஜா அவர்களையும், கொழும்பு நகரத்து ஸ்ரீமான் டாக்டர் கு. ஸ்ரீகாந்த முதலியாரவர்களையும், பெரும்பன்றியூர் ஸ்ரீமான் ஏ. எம். பெரியசாமி முத்தைய உடையாரவர்களையும் ஒரு பொழுதும் மறவேன். அவர்களுடைய உதவிகள் அவ்வப்போது எனக்கு மிக்க ஊக்கத்தை அளித்துவருகின்றன.

என்னுடைய இளைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேசையர் தாம் பத்துப்பாட்டைப் படித்து வருங்காலத்தில் செய்து வைத்திருந்த சில குறிப்புக்களை இப்பதிப்பிற்கு உபயோகமாகும்படி கொடுத்தார்.

இப்பதிப்பு ஆராயப்பெற்று வந்த காலத்தும் அச்சிடப்பெற்று வந்த காலத்தும் உடனிருந்து குறிப்பெழுதுதல், ஒப்புநோக்குதல், பிரதி செய்தல் முதலிய உதவிகளைப் புரிந்து வந்தவர்கள் சிகந்தராபாத மாபூப் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் சு. கோதண்டராமையரும், சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாத ஐயரும் ஆவர். இவர்களுள் ஜகந்நாத ஐயர் இதற்காக எடுத்துக்கொண்ட உழைப்பும் செய்த வேலையும் மிக அதிகம். இவர்களுக்கு விசேஷமான பயனை அளிக்கும்படி தமிழ்த் தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

பல தமிழ் அபிமானிகள் விரும்பியபடி இப்பத்துப்பாட்டின் மூலத்தைமட்டும் இன்றியமையாத ஆராய்ச்சிக்குறிப்பு அரும்பத அகராதியுடன் தனிப்புத்தகமாக வெளியிட்டிருக்கிறேன். முன்பு

யான் பதிப்பித்துள்ள மற்றப் பழைய நூல்களையும் இங்ஙனமே வெளியிடக் கருதியிருக்கிறேன்.

சில மாதங்களுக்கு முன்னமேயே இப்பதிப்பு வெளிவந்திருக்க வேண்டும். திடீரென்று எனக்கு நேர்ந்த தேக அசௌக்கியத்தால் தாமதித்து வெளியிடலாயிற்று.

இப்புத்தகத்தை அச்சிடும் விஷயத்தில் கேஸரி அச்சுக்கூடத்தார் செய்த உதவி மிகப் பாராட்டத்தக்கது.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

இதுபோலவே யான் செய்யக் கருதிய பிறநூற் பதிப்புக்களையும் நிறைவேற்றுவிக்கும் வண்ணம் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைச் சிந்திக்கின்றேன்.

" பாடுகின்ற பனுவலோர்கள், தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில், ஆடுகின்ற வழகனே."

" சிந்தையன்பு சேரவே, நைந்துநின்னை நாடினேன்
வந்துவந்து ளின்பமே, தந்திரங்கு தாணுவே."

(தாயுமானவர் பாடல்)

சங்கப்புலவர் வணக்கம்

" தடவரை முனிவ னீன்ற தமிழ்க்கொழுங் குழவி தன்னைப்
படர்வெயி லுமிழுஞ் சங்கப் பலகையாந் தொட்டி லேற்றி
நடைவர வளர்த்து ஞால நனந்தலை மறுகில் விட்ட
மடனறு புலமை யோரை மனத்தியா னினைத்து மன்றே."

(சீகாளத்திப் புராணம்)

"தியாகராஜ விலாசம்"
திருவேட்டீசுவரன் பேட்டை
19—8—31

இங்ஙனம்
வே. சாமிநாதையர்

பதிப்பாளர் குறிப்பு

இந்த ஏழாம் பதிப்பு ஆறும் பதிப்பின் மறு பதிப்பாகவே வெளியிடப் பெறுகிறது. இதுவரையில் தியாகராஜ விலாச வெளியீடாக இருந்த இதனை டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய வெளியீடாகப் பதிப்பித்துக்கொள்ள அன்புடன் இசைந்த ஸ்ரீ. க. சுப்பிரமணியன் (ஐயரவர்களின் பேரர்) அவர்களுக்கு நூல் நிலையத்தாரின் நன்றியறிவு உரியது.

இந்த நூல்நிலையப் பதிப்புகளுக்கு உதவும் நோக்கத்துடன் தேவி கல்வி அறநிலையத் தலைவர் திரு அழ. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் வழங்கிய நன்கொடை ரூபாய் ஐயாயிரமும் இந்தப் பதிப்பு வெளியிடப் பயன்படுத்தப் பெற்றது. தேவி கல்வி அறநிலையத்தாருக்கு நூல்நிலையத்தாரின் நன்றியறிவு உரித்தாகும்.

திருவான்மியூர்
சென்னை-41
25-5-1974 } டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையத்தார்.

பாடினோர் வரலாறு

1. இடைக்கழிநாட்டு நல்லூர் நந்தத்தனூர் : இவர் பத்துப் பாட்டுள், சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர். இவருடைய நாடாகிய இடைக்கழிநாடென்பது சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு சிறு நாடு; இக்காலத்து இந்நாடு இப்பெயராலேயே வழங்கப் பெறுகின்றது. இஃது உப்பங்கழிகளுக்கு இடையே இருத்தலின், இப்பெயர் பெற்றது போலும்: இதிலுள்ள ஊர்கள் பலவற்றுள் நல்லூரென்று ஒரூர் இருக்கின்றது; அதுவே இந்நூலாசிரியருடைய ஊராக இருத்தலவேண்டும். இவருடைய காலத்துப் புலவர் நலலியக் கோடனைப் பாடிய புறத்திணை நன்னாகனாராவார். இவர் காலத்துப் பிரபுக்கள் இப்பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடனும், புறத்திணை நன்னாகனாராற் பாடப்பெற்ற ஒய்மானல்லியாதனும், ஒய்மான்வில்லியாதனும், கரும்பனூர் கிழாருமம. தத்தனென்பது இவரது இயற்பெயரென்றும் கலவி மேமபாடுபற்றி நத்தத்தனெ ரென்ற பெயர் இவருக்குப பிற்காலத்தில் வழங்கலாயிற்றென்றும தோற்றுகின்றது; 'ந' எனபது சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச் சொல; நககீரா, நப்பாலத்தா, நப்பூதனர், நசசெள்ளையார் முதலிய பெயர்களாலும் இது விளங்கும. நததத்தனெரென ஒரு புலவர் பெயர் புறநானூற்றில் 218-ஆம பாட்டின் ஆசிரியர்பெயரின் பாட பேதமாகக காணப்படுகின்றது. அநத நததததனெனபவரும், திருவள்ளுவமாலையிலுள்ள "ஆயிரதது மூநநூறறு முப்பது" எனனும் முதலையுடைய வெண்பாவை யியறறிய நதததததரென்ப வரும,நததததமென்னும் இலக்கண நூலை இயறறிய நதததததரென்ப வரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவிலலை.

இவரால இயறறப்பெற்ற சிறுபாணாற்றுப்படையினுல், இவர் ஐந்திணையையும் சிறப்பிததுப பாடுதலில வல்லவரென்பதும், பண களைப்பற்றிய நுண்ணறிவுடையவரென்பதும புலப்படுகின்றன. "திறவாக் கண்ண சாயசெவிக் குருளை" (130) என்பது முதலிய அடிகளில வறுமை நிலையை நன்கு விளக்கிக் கூறியுள்ளார். தாம் தொண்டை நாட்டினரே யாயினும மதுரைச் சங்கததே தமிழாயநது கண கூடாகச் சங்கத்தின் நிலையை அறிநத நல்லிசைப புலவராதலின அமமதுரையை, "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை" எனச சிறப்பிததிருக்கின்றூர.

2. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனூர் : இவர் மலைபடுகடாமென்னும் பாட்டை இயற்றியவர். இரணிய முட்டமென்பது மதுரையைச் சார்நத யானைமலை முதலிய இடங் களைத் தன்பாற் கொணடதாகிய ஒரு சிறிய நாடென்பர். இவர் பெருமையும் பிறவும் மலைபடுகடாத்தின 145-ஆம் அடியின் விசேட வுரையால விளங்கும். இவர் சாதியால அந்தணர்; இதனை 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகன், கடியலூர் உருத்திரங் கண்ணனென்பன அந்தணாக

குரியன' (தொல். மரபு. சூ. 74, பேர்.) என்பதனால் அறிக. இந் நூலன்றி நற்றிணையில் இரண்டு (44, 139) செய்யுட்களும் இவர் செய்தனவாகத் தெரிகின்றன. கௌசிகனாரென்று ஒரு நல்லிசைப் புலவர் பெயர் பழைய நூல்களில் காணப்படுகின்றது; அவரும் இவரும் ஒருவரோ, வேறோ தெரியவில்லை.

இவர் பாடியவற்றுள், ஆகுளி, எல்லரி, குழல், குறும்பரந் தூம்பு, சிறுபறை, சீறியாழ், தட்டை, தண்ணுமை, துடி, தூம்பு, பன்றிப்பறை, பாண்டில், பேரியாழ், முழவென்னும் இசைக்கருவி களைப்பற்றிய செய்திகளும், குறிஞ்சி, படுமலை, மருதமென்னும் பண்களைப்பற்றிய செய்திகளும், யாழ்வருணனையும், காட்டுவழி யிடையே செல்லுகையில் இசைக் கருவிகளுக்கு நேரும் இடையூறு களும், அவற்றை நீக்கிக்கொள்ளும் உபாயங்களும் காணப்படுதலின், இவர் இசைக் கருவிகளைப்பற்றியும் பண்களைப்பற்றியும் நன் கறிந்தவரென்பது பெறப்படும். "திருமழை தலைஇய விருணிற விசும்பின், விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத், திண் வார் விசித்த முழவு" (மலைபடு. 1-3), "மழையெதிர் படுகண் முழ வுக ணிகுப்ப!" (மலைபடு. 532) என முழவின் ஒலிக்கு மேகத்தின் முழக்கத்தை மலைபடுகடாத்தில் உவமை கூறியதை ஒட்டி, "எழிலி... முழவின் மண்ணார் கண்ணி னிம்மென விமிரூஉ" (நற். 139) என மழை முழக்கத்திற்கு முழவின் ஒலியை இவர் உவமித்திருத்தல் அறியத்தக்கது.

3. கடியலூர் உருத்திரங்கண்ணனார் : இவர் பெரும்பாணாற்றுப் படையையும், *பட்டினப்பாலையையும் இயற்றிய ஆசிரியர். இவ ருடைய ஊராகிய கடியலூரென்பது இன்ன நாட்டிலுள்ளதென்று தெரியவில்லை. ஐயந்தீர் தற்பொருட்டுத் தந்தையின் பெயரைப் புதல்வனுடைய பெயர்க்கு விசேடணமாக்கி வழங்குதல் மரபாக இருத்தலாலும், உருத்திரங்கண்ணனாரென்னும் பெயர்த்தொகையை உருத்திரனாருடைய புதல்வராகிய கண்ணனாரென விரித்தற்கு இட முண்டாதலாலும் 'உருத்திரனார்' என்பவர் இவருடைய தந்தையா ராகக் கருதப்படுகிறார். உருத்திரனாரென்னும் பெயரொன்று குறுந் தொகையில், "புறவுப்புறத்தன்ன" என்னும் 274-ஆம் செய்யுள் இயற்றியவர் பெயராகக் காணப்படுகின்றது. "ஊரும் பெயரும்" (தொல். மரபு. பேர்.) என்னும் சூத்திரத்தின் விசேடவுரையால் இவர் அந்தணராகக் கருதப்படுகிறார். பெரும்பாணாற்றுப்படையில் அந்தணர் மனையையும் அந்தண மகளிர் கற்பினையும் அவர்கள் விருந்து பேணும் முறையையும் விளங்கக் கூறியுள்ள பகுதியும், கேள்வியந்தண ரருங்கட னிறுத்த வேள்வித் தூணத்தைப் பற்றிக் கூறுவதும் இங்கே அறிதற்குரியன. "இருநிலங் கடந்த திருமறு

---

* "வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்ட தொன்றும், அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப் பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று, நெறி யால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே." (திருவெள்ளறைச் சாசனப் பாடல்)

மார்பின், முந்நீர் வண்ணன்'' எனத் திருமாலேயும், ''காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப், பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங் கண்'' என அவர் பாம்பணையிற் கண்வளர்ந்தருளும் திருவெஃகாவை யும், ''நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டு'' என அவரது திருவுந்திக் கமலத்தையும் பாராட்டிக் கூறியிருத்தலின் இவர் திருமாலிடத்து அன்புடையவரென்று சொல்லுவதற்கு இடமுண்டு. இந்த இரண்டு பாட்டுக்களும், எட்டுத் தொகையுட் குறுந்தொகைக் கண்ணதாகிய, ''நெடுநீராம்பல்'' என்னும் 352-ஆம் செய்யுளும், அகநானூற்றின் கண்ணதாகிய, ''வயங்குமணி பொருத'' என்னும் 167-ஆம் செய்யு ளும் இவரால் இயற்றப்பெற்றவை யென்று இப்பொழுது தெரிகின் றன. பெரும்பாணாற்றுப்படைத் தலைவனாகிய தொண்டைமானிளந் திரையனும், பட்டினப்பாலையின் தலைவனாகிய சோழன் கரிகாற் பெருவளத்தானும் இவரை ஆதரித்தவர்கள். சோழன் கரிகாற் பெருவளத்தான் பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்து பதினறு நூறாயிரம் பொன் இவருக்குப் பரிசளித்தானென்று தெரிகிறது.

இவர் பல சாதியார்களுடைய ஒழுக்கங்களையும் அவர்கள் இருக்கும் குடியிருப்பினையும் மிகச் சுவைபடத் தெரிவிக்கும் ஆற்ற லுடையவர். பெரும்பாணாற்றுப்படையில் உமணர், எயினர், எயிற் றியர், ஆயர், ஆய்ச்சியர், உழவர், வலைஞர், அந்தண மகளிர் முதலி யோரைப்பற்றியும். பட்டினப்பாலையிற் பரதவர், வணிகர் முதலி யோரைப்பற்றியும் கூறும் பகுதிகள் இக்கருத்தைப் புலப்படுத்தும். நீர்ப்பெயறென்னும் ஊருக்கு அருகுள்ள பட்டினம், காவிரிப்பூம் பட்டினமென்னும் இரண்டு கடற்றுறை நகர்களைப்பற்றிக் கூறுவன வற்றுட் பல பகுதிகள் ஒன்றிய கருத்துள்ளன : கப்பல்கள் குதிரை களையும் வடநாட்டுப் பொருள்களையும் கொண்டு வந்தனவென்பதும், பண்டசாலைகளைக் காவலாளர் காத்து வந்தனரென்பதும், அப் பண்டசாலைகளின் முற்றங்களில் மேழகக்கிடாயும் நாயும் திரிந்தன வென்பதும், பரதவர் தெருவிலுள்ள மாடங்களில் அழகிய மகளிர் இருந்து விளையாடினரென்பதும், அத்தெருவிற் கட்கடைகள் இருந் தனவென்பதும், அவற்றின் முற்றத்தில் மலர்கள் தூவப்பட்டிருந் தனவென்பதும், பலரும் செல்லும் வாயிலும் கள் விற்பதைத் தெரி விக்கும் கொடியும் அவற்றில் அமைந்து இருந்தன வென்பதும், மாடங்களில் ஏற்றப்பட்ட விளக்குக்கள் கலங்களிற் செல்வார்க்கு அடையாளமாக இருந்தனவென்பதும் பெரும்பாணாற்றுப் படையி லும் பட்டினப்பாலையிலும் காணப்படுகின்றன. பாழ்பட்ட நாடு களைப்பற்றி இவர் கூறும்பகுதி படிப்போர்க்குக் கழிபேரிரக்கத்தை உண்டாக்கும். ''மலைந்தார் மீதள மன்றம் பாழ்பட'' (பெரும்பாண். 423) எனச் சுருக்கிக் கூறிய இவர் பட்டினப்பாலையில், ''பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்து'' (255) என்பது முதலிய அடிகளால் விரித்துக் கூறுகின்றார். மெழுகப்பட்டதும் கடவுள் இருப்பதுமாகிய இடம் பாழாயிருத்தல், கட்டிடங்களை யானைகள் உராய்ந்து பாழ்

படுத்தினமை, எயினர் கொள்ளையிடுவதனால் ஊர்கவினழிந்திருத்தல் ஆகிய செய்திகள் பட்டினப்பாலையிலும் இவர் இயற்றிய அகநானூற்றுச் செய்யுளிலும் காணப்படுகின்றன. பெரும்பாணாற்றுப்படையிற் காணப்படுகின்ற, பலாமரத்தைப் பறவைத் தொகுதிகள் விரும்புகின்றனவென்ற செய்தி குறுந்தொகையில், "கொடுமென் சினைய கூருகிர்ப் பறவை, அகலிலைப் பலவின் சாரன் முன்னிப், பகலுறை முதுமரம் புலம்பப் போகும்" என்ற அடிகளில் அமைந்திருக்கின்றது. பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கும் முறையும், சாத்து, சிறுவர் உருட்டும் தேர் என்பவற்றைப்பற்றிய செய்திகளும், அரசனுக்குச் சிங்கத்தை உவமை கூறுதலும் இவர் செய்யுட்களில் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுகின்றன. மகளிர் பொற்குழையைப் பாராட்டாமையாகிய செய்தியால் செல்வப்பெருக்கத்தைப் புலப்படுத்தி யிருக்கின்றனர். பட்டினப்பாலையும் அகநானூற்றுச் செய்யுளும் தலைமகன் செலவழுங்கிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளன.

சில சொற்றொடர்கள் இவருடைய செய்யுட்களில் இரண்டிடங்களில் வந்திருத்தலைக் காணலாம்; "அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை" (பெரும்பாண். 293-4) என்பதும், "முருகமர்பூ முரண்கிடக்கை, வரியணிசுடர் வான் பொய்கை" (பட்டினப். 37-8) என்ற பகுதிகளும் ஒரு சாரொத்திருத்தலையும், "கொடிவரிக் குருளை" (பெரும்பாண். 449, பட்டினப் 221), "பகல்விளையாடிப், பெறற்கருந் தொல்சீர்த் துறக்கமேய்க்கும், பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை" (பெரும்பாண். 387 - 9, பட்டினப். 103 – 5) என்ற பகுதிகள் இரண்டிடங்களில் சிறிதும் வேற்றுமையின்றி வந்துள்ளமையையும் காண்க.

4. கபிலர் : இவர் குறிஞ்சிப்பாட்டை இயற்றிய ஆசிரியர். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர்; இது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள, "நீதிமா மதூக நீழனெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனார் பிறந்த மூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும், வேதநா யகனூர் வாழும் வியன்திரு வாத வூரால்" (27 : 3) என்னும் திருவிருத்தத்தால் வெளியாகின்றது.

இவர் அந்தண வருணத்தவர்; "யானே, பரிசிலன் மன்னு மந்தணன்", "யானே, தந்தை தோழ னிவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே" புறநா. 200-201) என இவர் தம்மைக் கூறிக்கொள்வதனாலும், "புலனழுக் கற்ற வந்தணாளன்" (புறநா. 126) என மாறோகத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக் கூறுவதாலும் இதனை அறியலாம்.

இவர் வேள்பாரியினுடைய உயிர் நண்பரும் அவனுடைய அவைக்களத்துப் புலவருமாக இருந்து அவனை மகிழ்வித்து வந்தார்; இடையிடையே முள்ளூருக்குரியவனும் வள்ளலுமாகிய மலையமான்

திருமுடிக்காரியைக் கண்டு அவனது பெருவண்மையைச் சிறப்பித்தனர்; வையாவிக்கோப் பெரும்பேகனென்னும் வள்ளல் தன் மனைவியாகிய கண்ணகி யென்பவளைத் துறந்திருந்தானாதலின் அவள் காரணமாக அவனைப் பாடினார்.

பாரியின் மகளிர் மணம்பெறும் பருவம் அடைந்த காலத்தில் தமிழ் நாட்டு மூவேந்தர்களுள் ஒவ்வொருவரும் அம்மகளிரை மணஞ் செய்துகொள்ள விரும்பி வேள் பாரிக்கு அக்கருத்தை அறிவித்தார்களாக, அவன் அவ்வாறு கொடுக்க மறுத்தனன். மறுக்கவே, மூவேந்தரும் அவனது பறம்பு மலையைச் சூழ்ந்துகொண்டு போர் செய்தனர். அக்காலத்து இவர் அவர்களை நோக்கி, "பாரியது பறம்புமலை கைக்கொள்வதற்கு எளியதென்றும் பாரி எளிதில் வெல்லப்படுவானென்றும் எண்ணன்மின். அவனுடைய மலை இன்றியமையாத பொருள்களை ஈவது. நெடுங்காலம் நீவிர் இக்குன்றை முற்றியிருப்பினும் இங்கே உண்டாகும் நெல், பழம், கிழங்கு, தேன் முதலியனவும் உங்களால் அறிதற்கரியனவாகிய சுனைகளில் உள்ள நீரும் எங்களுக்குப் போதியனவாதலின் யாதோர் இடையூறும் வாராது. அவனுடைய பறம்புநாடு முந்நூறு ஊர்களை உடையது. அவற்றையெல்லாம் பரிசிலர் பெற்றனர், எஞ்சியிருப்பது இக்குன்று ஒன்றே, யானும் பாரியும் இருக்கின்றோம். நீவிர் இக்குன்றையேனும் எம்மையேனும் கொள்ள நினைப்பின் பாரியைப் பாடிக்கொண்டு பரிசிலராக வரிற் கொள்ளலாம்" எனப் பாடினர். அம்மூவரும் பலநாள் உள்ளே உணவுப் பொருள் வாராதபடி பறம்பை முற்றியிருந்தனர். அப்பொழுது கபிலர் சில கிளிகளையும் குருவிகளையும் பழக்கி அவற்றைக் காலையில் வெளியே பறக்கவிட்டுப் பல விளைபுலங்களிற் சென்று நெற்கதிர்களைக் கொண்டு மாலையில் வரும்படி செய்வார். இச் செய்தி நக்கீரர் பாட்டாலும் ஔவையார் பாட்டாலும் (அகநா. 78, 303) புலப்படுகின்றது. பின்பு, பறம்புமலையைப் பகைவர்கள் கைக்கொண்டார்கள்; பாரியும் உயிர் நீத்தான். அப்பொழுது இவர், அவன் மகளிரைத் தக்காருக்கு மணம் புரிவிக்க வேண்டுமென்றெண்ணி உடனழைத்துச் சென்றார். செல்லுங்காலையிற் பாரியின் பிரிவாற்றாமையால் மிக வருந்தி, அவனுடைய நற்குணங்களையும் கொடைத் திறத்தினையும் செங்கோற் செவ்வியினையும் நினைந்து நினைந்து இரங்கி, அவனது பறம்பு மலையின் பழைய வளத்தையும் பின்பு பகைவர்களால் அழுங்கிழந்ததையும் பறம்புநாட்டின் வளத்தையும் எண்ணி நெஞ்சுருகிப் பல செய்யுட்களைப் பாடினர். மணல் நிறைந்த இடமொன்றில் நடந்து போகையில பாரிமகளிர் அங்கே சென்ற உமணர் உப்புவண்டிகளை நோக்கிக்கொண்டிருந்தபொழுது "தமது மலையைச் சூழ்ந்த அரசர்களுடைய குதிரை முதலியவற்றை மலைமேல் நின்று எண்ணிய இவர்கள் உப்பு வண்டிகளை ஈந்திலை நிறைந்த குப்பையில் நின்று எண்ணும்படியாயிற்றே" எனச் சொல்லி வருந்தினார். பின்னர், பாரிமகளிரை அந்தணர்பால் ஒப்பித்து மலைநாட்டிற்குப் போய்ச் செல்வக் கடுங்கோ வாழியாதனை அடைந்து, நீ பாரிபால் உள்ள குணங்களை

உடையாயென்பதை அறிந்தே உன்னைப் பார்க்க வந்தேன்" எனக் கூறி அவன் செய்த வேள்வி, அவனது கொடை, வென்றி முதலிய வற்றைப் பாராட்டிப் பத்துச் செய்யுட்களைப் பாடி அவன் வலிந்து தந்த பரிசிலைப் பெற்றனர். அப்பரிசில்: "சிறுபுறமென நூறாயிரம் காணங்கொடுத்து நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ" (பதிற். ஏழாம் பத்தின் பதிகம்) என்பதனால் விளங்கும். பின்பு பாரிமகளிரோடு விச்சிக்கோவென்னும் குறுநில மன்னனிடம் சென்று அவரை மணந்து கொள்ளுமாறு வேண்டினர். அவன் மறுக்க, எவ்வி யென்னும் மன்னனுடைய வழிந்தோன்றலும் புலி கடிமால் மரபில் உள்ளவனுமாகிய இருங்கோவேளென்பானிடம் சென்று பாரி மகளிரைக் கொள்ளுமாறு அவனை மிகவும் வேண்டினர். அவனும் மறுத்தானாக, புலவர்களை இகழ்வதனால் உண்டாகும் துன்பத்தை அவனுக்கு ஒரு சரித்திர வாயிலாக அறிவுறுத்தி ஒரு செய்யுள் கூறினார். பின்னர், அம்மகளிரை மீண்டும் அந்தணரிடத்தே விட்டு விட்டு, பாரியினது பிரிவை ஆற்றவொண்ணாராய் வடக்கிருந்தனர். அப்பொழுது, "வளம்பொருந்திய நாட்டையுடைய பாரியே, பெரிய வண்மையையுடையாய்! நீ பல யாண்டுகள் என்னோடு பொருந்தி நட்பினனாக ஒழுகினை; பல உதவிகளைச் செய்தாய். எனினும் அந்நட்பிற்கு மாறாக இவ்வுலகத்தில் என்னை விட்டுவிட்டு நீ தனித்துச் சென்றனை. நீ முன்பு ஒழுகியதும் உதவியதும் மனத் தொடு பொருந்தியவையல்ல போலும்! என்னை அக்காலத்து வெறுத்திருந்தாய் போலும்! இல்லையெனின் என்னைப் பிரிய உளக்கு மனம் வருமோ? அவ்வாறு நினக்கும் பொருந்தினை னல்லேனெனினும் இப்பிறப்பில் நீயும் நானும் அளவளாவி மகிழ்ந் திருந்தவாறு மறுபிறப்பிலும் இடைவிடாது நின்னோடு வாழ்தலை விதிகூட்டுவதாக" எனக் கரைந்து புலம்பினார். *திருக்கோவலூர்ச் சாசனமொன்றால் இவர் பாரிமகளிரை மலையனுக்கீந்து பெண்ணை யாற்றங்கரையில் வளர்த்த கனலில் புகுந்தனரென்று தெரிகின்றது. அவ்விடத்திலே 'கபிலக்கல்' என்று ஒரு கல் இருப்பதாகவும் அச்சாசனம் கூறும்.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்கே இக்குறிஞ்சிப் பாட்டை இவர் இயற்றினர்.

பழைய இலக்கணவுரைகளில், 'கபில பரணர்' என்று வழங்குகிற தொகைநிலைத் தொடராலும், தொகை நூல்களிலும் பிறவற்றிலும் பல விடங்களில் இவரது பாட்டிற்குப் பின் பரணர் பாட்டு அமைந்திருப்பதனாலும் பரணரென்பவருக்கும், திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் வந்துள்ள, "பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காடனென்போன்" (20 : 1) என்னும்

* இந்தச் சாசனம், ஸ்ரீ. து. அ. கோபிநாத ராவ் அவர்களால் செந்தமிழ், தொகுதி, 4, 232-ஆம் பக்கம் முதலியவற்றில் வெளியிடப் பட்டிருக்கிறது.

திருவிருத்தத்தால் இடைக்காடனாருக்குச் சிறந்த நட்பினராக இருந்தாரென்று இவர் எண்ணப்படுகிறார். வீரசோழியம், தொகைப்படலம், 6-ஆம் கலித்துறை உரையால் பரணருடன் இவர் வாதுசெய்தனரென்பது வெளியாகின்றது. இவர் வேறு, தொல்கபிலர் வேறு.

இவர் அருளிச்செய்தனவாக 279-பாடல்கள் இப்பொழுது தெரிகின்றன. அவற்றுள் அகவற்பாக்கள், 208; நற். 20, குறுந். 29, ஐங். 100, பதிற். 10, அகநா. 17, புறநா. 30, குறிஞ்சி. 1, "நெட்டிலையிருப்பை" என்பது, 1; வெண்பாக்கள், 42: திருவள்ளுவமாலையிலுள்ள "தினையளவு" என்பது, 1; இன்னாநாற்பது, 41; கலிப்பா, 29.

மேற்கூறிய பாடல்களில் குறிஞ்சித் திணையைச் சார்ந்தன, 91; முல்லை, 1; பாலை; 1; மருதம், 1; நெய்தல், 3.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கென்னும் முத்தொகுதி நூல்களிலும் இவருடைய பாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெருமையை விளக்குகின்றது.

11-ஆம் திருமுறையிலுள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி யென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் இயற்றிய கபிலதேவ நாயனாரென்பவர் இவரேயென்பது சில பெரியோர் கொள்கை; "ஏனையந் தாதி சொன்னவன் கபிலன்" (திருவால. 20: 11) எனச் சிவபெருமான் கட்டளையிட்டருளியதாகக் கூறப் பட்டிருத்தலும் காண்க. இப்பிரபந்தங்கள் இவரியற்றியன வென்பது ஆராய்ந்து நிச்சயித்தற்குரியது.

"முதலிற் கூறுஞ் சினையறி கிளவி" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணரும் சேனாவரையரும் எழுதியவுரையால், கபிலரால் செய்யப்பெற்றதான கபிலமென்று ஒரு நூல் இருந்ததாகத் தெரிகிறது; அஃது இப்பொழுது கிடைக்கவில்லை.

பன்னிரு பாட்டியலில் இவர் பெயரால் வழங்கும் சில சூத்திரங்களும் தனிப்பாடல்களில் வழங்கும் வெண்பாவும் அகவலும் பிற்காலத்தவர்களால் இயற்றப்பெற்றனவென்பது சிலர் கொள்கை.

இவரைப் பாராட்டிக் கூறினவர்கள் நக்கீரனார், பெருங்குன்றூர் கிழார், பொருந்திலிளங்கீரனார், மாறோகத்து நப்பசலையார் என்பார். நக்கீரனார் இவரை, "உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய் மொழிக் கபிலன்" (அகநா. 78) எனப் புகழ்ந்து இவர் கிளியினால் நெற்கதிர் தொகுத்த விரகைக் குறிப்பித்துள்ளார்; அன்றியும் அவர் ஒருவனைச் சாவப்பாடிய அங்கதப்பாட்டுள், "முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி, பரணர் கபிலரும் வாழி" (தொல். செய். சூ. 179, பேர். மேற்.) என அகத்தியரோடு பரணரையும் இவரையும் ஒருங்கு வாழ்த்தி இவருடைய பெருமையைப் புலப்படுத்தியிருக்கிறார். பெருங்குன்றூர்கிழார், "உவலை கூராக் கவலையி னெஞ்சின், நனவிற் பாடிய நல்லிசைக், கபிலன் பெற்ற வூரினும் பலவே' (பதிற். 85) என்றும், பொருந்திலிளங்கீரனார், "செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க்

கபிலன்" (புறநா. 53) என்றும், மாறோகத்து நப்பசலையார் "புலனழுக் கற்ற வந்த ணாளன், இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்" (புறநா. 126) என்றும், "பொய்யா நாவிற் கபிலன்" (புறநா. 174) என்றும் வியந்து பாடியுள்ளார்கள். இவற்றால் இவருடைய பெரும்புகழும், வாய் மையும், பாடும் திறமையும், கல்வி கேள்வியின் மிகுதியும், அகத் தூய்மையும் விளங்குகின்றன. இவரே, "எஞ்சிக் கூறேன்" (பதிற். 61) எனச் செல்வக்கடுங்கோ வாழியாதனை நோக்கிக் கூறுதல் இவருடைய வாய்மை நலத்தைப் புலப்படுத்தும்.

இவராற் பாடப்பட்டோர்: அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், நள்ளி, பாண்டியன், மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள் பாரி, வையாவிக் கோப் பெரும்பேகன், மலையன்.

அயிரைமலை, கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர்மலை, பறம்பு நாடு, கிடங்கில், கொடுமணம், பந்தர், மதுரை, முள்ளூர்க்கானம், வாரணவாசி யென்பவை இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின் அவைகள் இவர் காலத்தில் விளக்கமுற்றிருந்தனவென்றும் அவற்றுட் பல இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன.

இவருடைய செய்யுட்களில், சிவபெருமான், திருமால், பல தேவர், பிரமன், முருகக்கடவுளென்பவர்களுடைய துதிகள் வந்திருக்கின்றன; அதனால் இவர் சமயக் கோட்பாட்டிற் பாரதம் பாடிய பெருந்தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

இவருடைய செய்யுட்கள் மிக்க இனிமையை யுடையன. பழைய உரைகளில் மேற்கோளாகக் காட்டப்படும், 'கபிலரது பாட்டு' என்னும் தொடர்மொழியே இதனை வலியுறுத்தும்.

குறிஞ்சித்திணையைப் பாடுதலில் இவர் மிக்க ஆற்றலுடையவர். அந்நிலத்தின் இயற்கைச்செவ்வியும், அந்நிலத்தினர் ஒழுகலாறும், அத்திணைக்குரிய ஒழுக்கத்தின் பலவகைத் துறைகளும் இவருடைய செய்யுட்களில் இன்சுவையுடன் இலங்குவதைக் காணலாம். கொடைச் சிறப்பு, நட்பின் நயம், செய்ந்நன்றியறிதல் முதலிய உயர் குணங்களை இவர் பல வகையிற் பாராட்டியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

குறிஞ்சிப்பாட்டிலும் இவருடைய பிற செய்யுட்களிலும் பல பகுதிகள் ஒப்புமைப்பட அமைந்துள்ளன:

"அன்னாய் வாழிவேண் டன்னை" என இப்பாட்டைத் தொடங்கி யதுபோலவே ஐங்குறுநூற்றில் அன்னாய் வாழிப்பத்து முழுவதும் முதலடியில் இத்தொடர்மொழியே அமைக்கப்பட்டிருக்கின்றது. தலைவியினது நோயின் காரணத்தை அறிவதற்காகச் செவிலி கடவுளைப் பேணுதல் முதலியவற்றை இயற்றியதாக இதிற் கூறியதற்கேற்ப, "அன்னையும் பொருளுகுத் தலமரும்" (அகநா. 292), "கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி, அறியா வேலன் வெறியெனக் கூறும், அதுமனங் கொள்குவை யனையிவள், புதுமலர்

மழைக்கண் புலம்பிய நோய்க்கே" (ஐங்குறு. 243) என்று பாடிய பகுதிகள் அறிதற்கரியன. இத்தகைய செய்திகளை விளங்க உணர்த்தி, ஐங்குறுநூற்றில் 'வெறிப்பத்து' என்னும் பத்துச் செய்யுட்களைத் தனியே பாடியுள்ளார். தலைவியின் நோய்க் காரணத்தை அறியாத செவிலி வருந்தும் முறை இங்கே கூறியவாறே, "அறியாமையின் வெறியென மயங்கி, அன்னையு மருந்தய ருழந்தனள்" (ஐங். 242) என்று பிறரிடத்தும் காணப்படுகின்றது. தலைவியின் தோள்கள் காமநோயால் நெகிழ்ந்த தன்மையைப் பலவிடங்களிற் கூறுவார். தலைவி தன் நோயின் காரணத்தை மறைத்தனளென்று இங்கே உள்ள செய்தியை இன்னும் நயம்பட, "தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை, என்னையு மறைத்தாளென் றேழி... கூறநோய் சிறப்பவு நீசெய்த வருளின்மை, சேரியு மறைத்தாளென் றேழி..... நோயட வருந்தியு நீசெய்த வருளின்மை, ஆயமு மறைத்தாளென் றேழி" (கலித். 44) என்றமைத்தமை காண்க. போர் செய்யும் இரண்டு வேந்தர்க்கு இடையே சந்து செய்விப் போரைத் தோழிக்கு உவமையாக ஈண்டுக் கூறியவர், மலையிலிருந்து வரும் அருவிக்கு உவமையாக அதனை எடுத்தாண்டுள்ளார் (கலித். 46). தோழி, தாய்க்கும் தலைவியின் துயருக்கும் அஞ்சும் இருவகையான அச்சத்தை இங்கே கூறியவாறே வேறுவிதமான இரண்டு அச்சங்களைப் பிறிதோரிடத்திற் சொல்லியிருக்கின்றனர்; அது வருமாறு: "குன்ற நாடன், உடுக்குந் தழைதந் தனனே யாமஃ, துடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற், கேளுடைக் கேடஞ் சுதுமே" (நற். 359). தினைக்கதிர்க்கு யானையின் துதிக்கையை உவமை கூறுவர். மூங்கிலை நெல்லோடு யானை உண்ணுமென்ற செய்தி கலித்தொகையில், "வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகல், மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி" என்ற விடத்தும் கூறப்பட்டுள்ளது. தலைவி இதணமேறிக் கிளிகளைத் தழல் தட்டை முதலிய கருவிகளைக்கொண்டு கடிதல் இவருடைய செய்யுட்கள் பலவற்றிற் காணப்படுகின்றது; அவற்றுள், "வேங்கைப், பாவமை யிதண மேறிப் பாசினம், வணர்குரற் சிறுதினை கடிய" (நற். 333), "சுடுபுன மருங்கிற் கலித்த வேனற், படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே" (குறுந். 291), "குறமகள்,.....தட்டையின், ஐவனச் சிறுகிளி கடியு நாட" (ஐங்குறு. 285) என்பன குறிப்பிடத் தக்கவை. தலைவி கிளியோப்பிச் சுனைப் பூவைப் பறித்துத் தழைதொடுத்திருந்தாளென்று இங்குக் கூறியதோடு, "சுனைப்பூக் குற்றுத் தொடலைதைஇப், புனக்கிளி கடியும் பூங்கட் பேதை" (குறுந் 142) என்பதை ஒப்பிடுக. "மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்" என மலர்களை வகைப்படுத்தியவர், "கொடியவுங் கோட்டவும்" (கலித். 54) எனப் பிறிதோரிடத்தில் வகுத்துள்ளார். தலைவி அசோக மரத்தடியில் இருந்த காலத் தலைவன் வந்தானென்று இங்கே புனைந்தவர், "செயலைத் தோன்றுநற், நற்றூர் மார்பன்" (நற். 376) எனக் கூறுதல் காண்க. தலைவன் பலவித மலராலாகிய கண்ணியோடும் சந்தனம் பூசிய மார்பையுடையவனாக வில்லையும்

அம்பையும் ஏந்திக் கச்சு கழல் முதலியவற்றை அணிந்து நாயோடு வந்தானென இங்கே சொல்லப்படுகின்றது. அவன் கண்ணியுடனும் வில்லுடனும் வந்தமையை, "குல்லை குளவி கூதளங் குவளை, இல்ல மொடு மிடைந்த வீர்ந்தண் கண்ணியன், சுற்றமை வில்லன்" (நற். 376) என்றும், "தொடைமாண்ட, கண்ணியன் வில்லன் வரும்" (கலித். 37) என்றும், கண்ணியையும் சந்தனத்தையும் அணிந்து வந்தமையை, "தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை" (கலித், 52) என்றும், வில்லும் அம்பும் ஏந்தி வந்தமையை, "உருவ வல்வில் பற்றி யம்புதெரிந்து" (அகநா. 82) என்றும், சந்தனம் பூசி வந்தமையை, "ஆர நாறு மார்பினை" (குறுந். 198), "ஆரமார்பினை" (கலித். 52) என்றும், கச்சும் கழலும் அணிந்து வந்தமையை, "பாசி சூழ்ந்த பெருங்கழற், றண்பனி வைகிய வரிக்கச் சினனே" (ஐங்குறு. 206) என்றும், நாயொடு வருதலை, "வயநாய் பிற்படப், பகல்வரின்" (அகநா. 118) என்றும் புலப்படுத்தியிருக்கின்றார். இதன்பாலுள்ள வெண்போழ்க் கண்ணியென்ற தொடர், பதிற்றுப்பத்திலும் (67) ஒருகாழென்பது கலித்தொகையிலும் (54) வந்துள்ளன. தலைவன், "இறந்த கெடுதியு முடையேன்" என்று சொன்னதாக இங்கே கூறியவர், அக்கெடுதியுள் ஒன்றாகிய யானையை அவன் வினவியதாக, "ஒருவன், வயமானடித் தேர்வான் போல" (கலித். 37), "செருச்செய் யானை சென்னெறி வினைய்" (அகநா. 82) என்றார். இங்கே, ஏனலிலுள்ள தினையைத் தின்ற யானையை வேடன் கணையினால் துரத்தினானென்றவர், அச் செய்தியைச் சிறிது வேறுபடுத்தி, பிடியோடு மேய்ந்த யானையைக் கானவன் கவணால் எறிந்தனனெனவும் (கலித். 41) மேயவரும் யானையின் வரவை ஒற்றியறிந்து கவண்கல்லை வீசினானெனவும் (அகநா. 292) கூறி, அக் கவண்கல் "இறுவரை வேங்கையி னொள்வீ சிதறி, ஆசினி மென்பழ மளிந்தவை யுதிராத் தேன்செ யிறாஅ றுளைபடப் போகி நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக், குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப், பலவின் பழத்துட் டங்கும்" எனவும், "உடுவுறு கணையிற் போகிச் சாரல், வேங்கை விரியிணர் சிதறித் தேன்சிதையூஉப், பலவின் பழத்துட் டங்கும்" எனவும் நயம்படக் கிளந்தனர். யானையின் முழக்கத்திற்கு உரு மேற்றின் முழக்கத்தை உவமை கூறியதுபோல நற்றிணையிலும் உவமித்துள்ளார் (65, 353). மையல் வேழமென்று இங்கே கூறியவர், "மையல் யானையின் மருட்டலு மருட்டினன்" (கலித். 54) என வேறிடத்தும் கூறியுள்ளமை காண்க. தலைவி அருவி நீராடுகையில் நீரோடு சென்றாளாகத் தலைவன் சென்று எடுத்துக் காத்தானென்று இங்கே காணப்படும் செய்தி "காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்த

* பல இலக்குக்களை ஒரே சமயத்தில் துளைத்துச் செல்லும் அம்பை எய்வதற்குரிய வல்வில்லின் இயல்பு இங்கே நினைவிற்கு வருகிறது.

தனே டொழுகலால், நீணைக நறுந்தண்டார் தயங்கப் பாய்ந் தருளினுற், பூணைக முறத்தநீஇப் போதந்தான்'' (39) எனக் கலிப் பாட்டில் இவராற் சுவையுறச் சொல்லப்பட்டிருக்கிறது. பாறை நெடுஞ்சுனையிலே வீழ்ந்த பல பழங்களில் உண்டான தேனை நீரென்று கருதி உண்ட மயில் தளர்ந்து நின்றதாக இங்கே உணர்த் தியவர், அதனைச் சிறிது வேறுபடுத்தி அந்நகைய தேனை உண்ட ஒரு மந்தி மயங்கிக் கண்படை கொண்டதாக அமைத்து, ''கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை, ஊழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த, சாரற் பலவின் சுளையொ டூழ்படு, பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல், அறியா துண்ட கடுவ னயலது, கறிவளர் சாந்த மேறல்செல் லாது, நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்'' (அகநா. 2) என்று புனைந்தமை அறிந்து மகிழ்வதற்குரியதாகும். முருகக் கடவுளைத் தொழுது தலைவன் சூளுரைத்தானென்று இங்கே கூறியதுபோலவே பலவிடங்களிற் பலவகையாகச் சூளைப்பற்றிய செய்திகளை அமைத்துள்ளார். ஆம்பலந்தீங்குழலை, ''இயவர், தீங்குழ லாம்பலி னினிய விமிரும்'' (ஐங்குறு. 215) என்றவிடத்து உவமையாக அமைத்துள்ளார். மேகக் கூட்டங்களுக்கு யானைப் படைகளையும் பறவைகளின் தொகுதிக்கு அரசர்களுடைய படை களையும் பிற இடங்களில் உவமை கூறிய இவர், இங்கே மேகங்கள் மலையைச் சூழவும் புள்ளினம் தத்தம் இடங்களிற் சேர்ந்து ஒலிப்பவும் வரும் மாலைக்கு, சினையிய வேந்தன் செல்சமத்தை உவமை கூறுதல் மிக ஏற்புடையதாகும். தலைவனை அன்றையன்ன விருப்போடென்றும் வருபவனுக உணர்த்தியதை, ''அன்றை யன்ன நட்பினன்'' (குறுந். 385) எனவும் உணர்த்துவர். தலைவியின் அழுங் கண்களுக்கு நீரெறிமலரை உவமை கூறும் இவரது இயல்பு, ''அதுபுலந் தழுத கண்ணே சாரற், குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை, வண்டு பயில் பல்லிதழ்க் கலைஇத், தண்டுளிக் கேற்ற மலர் போன் றனவே'' (குறுந். 291) என்றும், ''நின்சுனைக், கனைபெய னீலம்போற் கண்பனி யுகுபவால்'' (கலித். 48) என்றும், ''மலி பெயற் கலித்த மாரிப் பித்திகத்து...பெயலேர் மணமுகைச், செவ் வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கண்'' (அகநா. 42) என்றும் வரும் பகுதிகளாலும் அறியப்படுகின்றது. தலைவி நலஞ்செலச் சாய்ந்த செய்தியை, ''மணிமருண் மேனி யாய்நலந் தொலைய'' (அகநா. 278) என்று வேற்றுருவத்திற் கூறுதல் காண்க. கங்குலில் தலைவன் வருதலையஞ்சித் தலைவி கலுழ்தலை, ''உரவுமழை பொழிந்த பானாட் கங்குற், றனியை வந்த வாறுநினைந் தல்கலும், பனியொடு கலுழுமிவள் கண்ணே'' (அகநா. 182) எனச் சுருக்கிக் கூறியதனை இப்பாட்டில் மிக விரித்துரைத்திருத்தல் அறிதற்குரியது. தலைவன் வரும்வழி யிடையில் உள்ள அஞ்சத்தக்க விலங்குகளாக இங்கே கூறியவற்றுள், அளைச்செறியுழுவையின் தன்மையை, ''இருண் மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி, வரிவயங் கிரும்புலி வழங்கு நர்ப் பார்க்கும்'' (அகநா. 218) எனவும், முதலையின் தன்மையை ''கான்யாற்றுக் கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி,

மராஅ யானை மதந்தப வொற்றி, உராஅ வீர்க்கும்" (அகநா. 18) எனவும் விளக்கியுள்ளார். இங்கே கூறப்பட்ட விலங்குகள் முதலிய வற்றுட் பல, "கான மானதர் யானையும் வழங்கும், வான மீமிசை யுருமுரனி யுரறும், அரவும் புலியு மஞ்சுதக வுடைய" (அகநா. 318) என்ற விடத்தும் இவராற் கூறப்பட்டுள்ளன. வழியிடத்து உள்ளனவாகக் கூறப்படும் இவ்விலங்கு முதலியன அஞ்சத்தக்கன வென்பதனை, "கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா, நெடுங்கி யரவுறையு மில்லின்னா வின்னா, கடும்புலி வாழு மதர்" (இன்னா. 31) எனப் பிறவாற்றாலும் புலப்படுத்தியிருத்தல் காண்க.

இவர் இன்னா நாற்பதின் கடவுள் வாழ்த்தில், "முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னா" எனத் தொடங்கினமையும், புலியின் உருவத்தை யொப்பப் பூத்த வேங்கையைக் குத்திய யானை அம்மரத் திற்குள் தன் கொம்பு அகப்பட்டுக்கொள்ள அதனைப் பெயர்க்க மாட்டாது வருந்தும் நிலைக்கு இறைவன் வீற்றிருந்தருளும் கைலையை எடுக்கப் புகுந்த இராவணன் அகப்பட்டுக்கொண்டதை உவமை கூறுமுகத்தால், "அமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன், உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக" (கலித். 38) எனக் கூறியதும், பாரி புல்லியோரையும் பேணியீவா னென்பதனை உவமை முகத்தால் புலப்படுத்த நினைந்தவர், "குவியிணர்ப், புல்லிலை யெருக்க மாயினு முடையவை, கடவுள் பேணே மென்னா" (புறநா. 106) என்று சிவபெருமானை நினைந்து குறிப்பாற் கூறினமையும் கபிலர் சிவபெரு மான் பால் வைத்த அன்பைப் புலப்படுத்தும். "சக்கரத்தானை மறப் பின்னா" (இன்னா. 1) என்று திருமாலை வணங்கியவர் "மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" (நற். 32) என்று அவரை மலையோடு உவமித்துக் கூறியுள்ளார். அவ்வாறு உவமித்தவர் அம்மலையோடு ஒன்றியுள்ள வெள்ளிய அருவிக்கு அம்மாயோனொடு கலந்து உலாவும் பலதேவரை, "வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி" (நற். 32) என்று உவமித்திருத்தல் இயைபுடையதாக விளங்குகின்றது. பிரமனையும், "பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா" (இன்னா. 1) என்று துதித்திருக்கின்றார். இவை இவரது சமநிலையைப் புலப்படுத்தும். குறிஞ்சித்திணையைப் பாடுவதிற் சிறந்த இவர் அந்நிலத்தின் கடவுளாகிய முருகவேளைப் பற்றிய செய்திகளைப் பல விடங்களிற் புலப்படுத்தியுள்ளாரெனல் மிகை. இவர் முருகக்கடவுளை, "இன்னா, சத்தியான் றொழா தார்க்கு" (இன்னா. 1) என வணங்கி, சுடர்ப்பூட் சேஎய், நெடுவேள், பிறங்குமலை மீமிசைக் கடவுள், கறிவளர் சிலம்பிற் கடவுள் எனச் சிறப்பித்து, "முருகுறழ் முன்பு" (நற். 225) என அவரது வீரத்தைப் புலப்படுத்தி, "கறங்குவெள் ளருவி பிறங்கு மலைக் கவாஅற், றேங்கமழ் திணை வேங்கை சூடித், தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டி ரொடு விரைஇ, மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத், தியன் முருகு" (அகநா. 118) எனக் குன்றவாணர் அவருக்கு விழாவெடுக்கும்

முறையையும், "மன்ற வேங்கை மலர்சில கொண்டு, மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி" (ஐங்குறு. 259) என அவரை வழுத்தும் முறையையும் காட்டி, "குன்றக் குறவன் கடவுட் பேணி, இரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்" (ஐங்குறு. 257) என அவரை வழிபடுவதாற் பெறும் பயனைக் குறிப்பித்துச் செல்லும் நீர்மை அறிந்து போற்றற்குரியது. இவர் செய்யுட்களில் வரையரமகளிர், பிறவகை அரமகளிர், மராஅத்த கடவுள் முதலிய தெய்வங்களைப் பற்றிய செய்திகளும் காணப்படும்.

கண்ணபிரான் மல்லரை மறஞ்சாய்த்த செய்தியும், வீமன் துரியோதனனைக் குறங்கறுத்த செய்தியும் இவரால் எடுத்தாளப் பட்டுள்ளன.

அந்தணராகிய இவர், நெய்பெய் தீயின்முன் மணத்தலையும், அந்தணர் அந்திக்காலத்திற் செய்யவேண்டுவனவற்றைச் செய்தலையும், குதிரையின் குடுமிக்கு உவமையாக அந்தணச்சிறுவனது குடுமித் தலையையும், அறநூலறிவு வேள்வி முடித்தல் முதலிய அந்தணர் தகுதிகளையும், "அந்தண ரில்லிருந் தூணின்னா" (இன்னா. 2) என்பதனால் அவர் ஊண் சுவையைப் பெரிதெனக் கருதாரென்பதனையும், அவர் வீட்டிற் கோழியும் நாயும் புகாவென் பதனையும், வேதம் அவருக்கு இன்றியமையாத தென்பதனையும் புலப்படுத்தியிருக்கின்றமை உணர்தற்குரியது.

பெருவள்ளலாகிய பாரியோடிருந்து வாழ்ந்து அவனது வண்மை நலத்தைக் கண்டு மகிழ்ந்த இவர், கொடைத்திறத்தைப் பாடும் முறை மிகச் செவ்விதாக அமைந்துள்ளது. பாரியை, 'புல்லியோரென்று பாராது யாருக்கும் ஈவான்; விறலியரும் பாணரும் என்ன வேண்டினும் வழங்குவான்; அவனுடைய ஊர்களெல்லாம் பரிசிலர் பெற்றாரெனினும் தன்னையே பரிசிலாக உதவுவான்; நிழலில்லாத இடத்திலுள்ள தனி மரத்தைப்போல அவன் யாருக்கும் பயன் படுபவன்' என்றும், மலையமான் திருமுடிக்காரியை, 'உரிய எல்லா வற்றையும் அந்தணர் பரிசிலர் முதலியோர்க்கு அளித்து விட்டமை யால் அவனுக்குரியது அவன் மனைவியின் தோளொன்றே: அவன் இயல்பாகவே கணக்கற்ற தேர்களைப் பலவாகக் கொடுப்பவன்; பரிசிலர் புறப்படுகையில் தீயநிமித்தங்கள் உண்டானாலும் அவன்பாற் சென்றால் பரிசில் பெறுவது ஒருதலை' என்றும், நள்ளியை, "இரப் போர்க், கிழையணி நெடுந்தேர் களிறொ டென்றும், மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க், கழறொடித் தடக்கைக் கலிமா னள்ளி" (அகநா. 238) என்றும், செல்வக் கடுங்கோ வாழியாதனை, 'அந்தண ருக்கு நீரோடு தானப்பொருள்களைக் கொடுக்கும்பொழுது சொரிந்த தாரை நீர்ப்பெருக்கத்தால் அவனது மாளிகையின் முற்றம் சேறு பட்டது; அவன், 'நம்மைப் பரிசிலர்கள் காணவேண்டுவதில்லை; நம் மாளிகைப் புறத்து நீயிர் காணினும் கொடுமின்' என்று தன் படை வீரர்களுக்குக் கூறுந்தன்மையன்; பாணர் புரவலன்; பரிசிலர் வெறுக்கை; களிற்றையும் நெல்லையும் வரையறையின்றித் தருபவன்; பாணருக்கு முத்தத்தையும் நல்ல ஆபரணங்களையும் வழங்குபவன்

என்றும், தென்னவனை, "பொழிபெயல் வண்மையான்" (கலித். 57 என்றும் சிறப்பித்துப் பாடியிருக்கும் பகுதிகளிலும், இல்லையென்று வந்தாரது குறையை நீக்க முடியாவிடின் உயிரை நீத்தல் வள்ளியோர் செயலென்பதை, "இன்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றாக்கால், தன்மெய் துறப்பான் மலை", "ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலின், சாதலுங் கூடுமா மற்று" (கலித். 43, 61) என்று புலப் படுத்திய அடிகளிலும் கொடையைப் பாராட்டும் இவரது நற்புலமை விளங்குகின்றது.

பாரியோடு உயிர் நண்பராக இருந்து நட்பின் இயல்பை நன்கறிந்த இவர், "புரைய மன்ற புரையோர் கேண்மை", "பெரியோர், நாடி நட்பி னல்லது, நட்டு நாடார்" (நற். 1, 33), "நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே" (பதிற். 63), "நட்டார்க்குத் தோற்றலை நாணாதோன்" (கலித். 43), "பிரிவின்றியைந்த துவரா நட்பின், இருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (அகநா. 12) என நட்பினைப்பற்றிய செய்திகளை அறிவித்திருத்தல் அவரது அனு பவத்தினின்றெழுந்ததென்றே கூறலாம்.

தலைவியின் உயிர் சிறிது, காமம் பெரிதென்பதைப் பலாவின் சிறு கொம்பிற் பெரிய பழம் தூங்குவதை உவமித்து விளக்கி யிருத்தல், காமம் கடலினும் பெரிதென்றல், காமம் முதிர்ந்தால் உயிர்க்கு அழிவு நேருமென்றல் முதலியன காமத்தைப்பற்றி இவர் கூறுவனவாகும்.

இவர், தலைவன் தலைவியரிடையே உள்ள அன்பின் வகையைப் புலப்படுத்தும் இடங்கள் பல: 'தலைவன் இனியனாதலின் அவன் செய்வன யாவும் இனியனவே; அவன் செய்யும் இன்னாமை தேவ லோகத்திற் பெறும் இன்பத்தினும் உயர்ந்தது' என்றும், 'தாய் வீட்டில் இருந்து உண்ணும் தேனோடு கலந்த பாலைக்காட்டிலும் தழைக்குவியலுக்கு அருகே உள்ளதும் மானுண்டு எஞ்சியதுமாகிய நீரை அவனது அருகேயிருந்து பருகுதல் இனியது' என்றும் தலைவி கூறுவதாக அமைத்த பகுதிகள் இன்பத்தை விளைவிப்பனவாகும். கற்பினையுடைய மகளிரை, "காமா கடவுளு மாளுங் கற்பிற்...... சேயிழை" (பதிற். 65), "அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையள்" (கலித். 39) என்பர்.

குறவர்கள் யானைக்கொம்பை விற்று உணவுப் பொருள்களைப் பெறுதலும், வீரர்கள் அக்கொம்பை விற்றுக் கள்ளை வாங்குதலும், கணவனை இழந்த மகளிர் பஞ்சினைப் பன்னி நூற்றலும், மகளிர் தைந்நீராடுதலும், அவர் விளையாட்டிற் பிள்ளையை வளர்த்து வேறொருத்தி வளர்த்த பெண்ணைக் கொள்ளுதற்குச் சிறுசோறு சமைத்து ஆயத்திற்கு இட்டு மகிழ்தலும், தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நாட்களைச் சுவரில விரலாலெழுதி எண்ணி யிருத்தலும், மகளிர் உரலிற் பொருள்களை இடிக்கும்பொழுது வள்ளைப் பாட்டைப் பாடுதலும், ஒருவன் தானே வலிய இராக்கத மணமுறைபற்றி ஒருத்தியைக் கொள்ளுதலும், நீர் குடித்தும் மெய்தொட்டும் சூளுறவு கூறுதலும், யானையை நீருண்ண

விடுகையில் அதனால் வருந்துன்பத்தைத் தடுக்க அதன் வரவை அறிவிக்கும்பொருட்டுப் பறையறைதலும் பிறவுமாகிய செய்திகள் இவர் காட்டிய அக்கால வழக்கங்கள்.

தலைவனுக்கு வண்டு, நண்டின் கண்ணிற்கு நொச்சியரும்பு, மழைக்குப் பஞ்சின் பனுவலும் அவரைப் பூவும், இற்றிமரத்தின் வேருக்கு அருவி, வயலைக் கொடிக்கு நெய்யோடு கலந்த உழுந்து மாவை நூற்ற உருவம், மலைமிசைச் சிறுநெறிக்கு யானைக்கயிற்றுப் புறம், மூங்கிலின் கணுவிலுள்ள பாளைக்கு மான்செவி, வாழைக் குலைக்குப் புலியின் அடி முதலிய உவமைகள் இவருடைய செய்யுட்களிற் காணப்படுகின்றன.

அருவியின் ஒலியால் குறிஞ்சி நிலத்தாரும் யானையும் தூங்குதலும், குரங்கு மயிலின் முட்டையைப் பாறையில் உருட்டுதலும், அது மலையில் வளர்ந்த இற்றியின் வேரைப் பிடித்துக்கொண்டு மேல் ஏறுதலும், தன் கன்று பால்குடித்துக்கொண்டே யிருப்பப் பிடி தினையை யுண்ணுதலும் ஆகியவற்றைப் போன்ற இயற்கைக் காட்சிகளைக் கூறும் பகுதிகள் இவருடைய செய்யுட்களை அழகுபடுத்தி விளங்குகின்றன. அகநானூற்றில், ஆடும் மயிலுக்கு விறலியை உவமை கூறப் புகுந்தவர், காட்டில் வளர்ந்த மூங்கிலிலே உள்ள துளைகளிற் காற்றுப்புகுந்து புறப்படுதலா லுண்டாகும் இன்னொலி குழலோசையாகவும், அருவியின் ஓசை முழவொலியாகவும், மான்களின் குரல் பெருவங்கியத்தின் இசையாகவும், வண்டின் முரற்சி யாழொலியாகவும், மந்திகள் அவையிலிருந்து கூத்துக் காண்பாராகவும் மயில் ஆடுகின்றதென்று நயம்பெறப் புனைந்த புலமைத்திறம் ஆய்ந்தறிந்து இன்புறத்தக்கது.

இவர் பாக்களிற் சில சில இடங்களில் நகைச்சுவை ததும்பும் பகுதிகளும் அமைந்துள்ளன: ஆண்குரங்கு மரத்திற் பாய்கையில் விழுந்துவிட அந்தத் தப்பு அம்மரத்தின் கொம்பினதாகக் கூறப்பட்டதை ஓரிடத்தில் உவமை கூறுவதும், அவரையை நிறையத் தின்ற மந்தி பல பண்டங்களை விற்பார்களது பையைப்போலத் தோன்றுமென்பதும், குரங்கு பிரம்பின் கோலைக்கொண்டு மழைக் கொப்புளத்தைப் புடைத்தல், நறைக் கொடிகொண்டு மேகங்களைப் புடைக்க முயலுதல் என்பவற்றைச் சொல்லுவதுமாகிய பகுதிகளில் அவற்றின் இயல்பை நகைச்சுவைபட விளக்குதல் காண்க. இன்னும், பரணிலுள்ள வேடனது நெருப்புக்குப் பயந்து சென்ற யானை வானமீன்களின் ஒளியைக் கண்டவிடத்தும் அஞ்சியதென்றும், துறுகல்லை யானை பிடியென எண்ணி மயங்கித் தழுவியதென்றும், புலியைத் தாக்கிய வருத்தத்தோடு தூங்கிய யானை நனவிற் செய்த செயல் மனத்தில் அழுந்தியிருந்தமையின் கனவிலும் அவ்வாறு கண்டு உடனே வெருவியெழுந்து புதிதாக மலர்ந்த வேங்கை மரமொன்றைத் தன்னாற் கடியப்பட்ட புலியென்று மயங்கிக் குத்திச் சிதைத்துச் சினந் தணிந்தபின் அது மரமென்றும் புலியன்றென்றும் உணர்ந்து நாணிற்றென்றும், தினைப்புனத்திற் பெண்புலி போன்றமைத்த உருவத்தினைக் கண்டு மயங்கி ஆண்புலி தழுவிச்சென்றது என்றும் புனைந்த காட்சிகளும், கலித்தொகையிற் கூறியுள்ள முதுபார்ப்பானது பெருங்

கூத்தும், "கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்று", "கடித் தமைந்த பாக்கினுட் கற்படுத லின்று" என நீதிகளைக் கூறும் இன்னாநாற்பதிற் காணப்படுதலும் இவர் நகைச்சுவையைப் பல்லாற்று னும் புலப்படுத்தும் இயல்புடையவரென்பதைத் தெரிவிக்கும்.

இவரது புலமை நலங்கள் இன்னும் எடுத்தெழுதப் புகின் மிக விரியுமாதலின் அஞ்சி இதனோடு நிறுத்தப்பெற்றன.

5. காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப் பூதனார்: இவர், முல்லைப்பாட்டை இயற்றிய ஆசிரியர்; இவருடைய இயற்பெயர் பூதனாரென்பது. 'ந' சிறப்பைப் புலப்படுத்துவது. நற்றிணை, 29-ஆம் செய்யுளை இயற்றிய பூதனார் இவரேபோலும். இவருடைய ஊர் காவிரிப்பூம் பட்டினமென்றும் இவருடைய தந்தையார் பெயர் பொன் வாணிகனாரென்றும் வணிக குலத்தின ரென்றும் பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் தெரிய வருகின்றது. எட்டுத் தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக ஒன்றும் காணப்படவில்லை. காவிரிப்பூம் பட்டினத்திற் சதுக்கத்துப் பூதம் முதலிய பூதங்கள் மிக்க சிறப்புடையனவாகவும் பலரால் வழி படத்தக்கனவாகவும் இருந்து வந்தமையின் அவற்றுள் ஒன்றை நினைந்து பூதனென்னும் பெயர் இவருக்கு இடப்பட்டது போலும்.

பாசறையைப்பற்றி விரிவாக முல்லைப் பாட்டிற் கூறி யிருத்தலால் இவர் நல்ல வீரம் பொருந்திய அரசர்களோடு பழகியவ ரென்று தோற்றுகின்றது.

6. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்: இவரது இயற் பெயர் கீரனாரென்பது; 'ந' சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச் சொல். திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் இவர் இயற்றியவை. இவற்றையன்றி நற்றிணையில் ஏழு செய்யுட்களும், குறுந்தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும், பதினோராந் திருமுறையில் திருமுருகாற்றுப் படையை யன்றி ஒன்பது பிரபந்தங்களும் இவர் இயற்றியனவாகக் காணப்படுகின்றன; வேறு சில தனிப் பாடல்களும் இவர் பெயரால் வழங்கும். இவர் இயற்றிய நாலடி நாற்பதென்னும் நூலொன்றுண் டென்றும் அஃது அவிநயர் யாப்புக்கு அங்கமாக உள்ள யாப்பிலக் கண நூலென்றும் யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றால் தெரி கின்றது. இவர் பெயர் நக்கீரர், நக்கீரனார், நக்கீர தேவ நாயனார், மதுரை நக்கீரரெனவும் காணப்படுகின்றது. இவர் பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் இவரது ஊர் மதுரையென்றும் இவருடைய தந்தையார் ஒரு கணக்காயர் (உபாத்தியாயர்) என்றும் தெரிகின்றது. மதுரைக் கணக்காயனாரென்று பெயருள்ள ஒரு நல்லிசைப் புலவர்தாம் இவர் தந்தையாரெனத் தோற்றுகின்றது. இவருடைய புதல்வர் கொற்றனாரென்பவர்: கீரங்கொற்றனாரெனவும் வழங்கப் பெறுவர். இறையனாரகப் பொருளுக்கு முதலில் நல்லுரை கண்டு அதனைத் தம்புதல்வராகிய கொற்றனாருக்குக் கூறினாரென்றும்

இறையனாரகப் பொருளுரை கூறும். இவர் அந்தண வருணத்தின ரென்று கூறப்படுவார்; வடமொழியிலும் நல்ல பயிற்சியை யுடையவர், "கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு கீரர்" (திருப்புகழ்) என்றதனால் அருணகிரிநாதரும் இவரை அந்தணராகவே கருதினா ரென்பது பெறப்படுகின்றது. திருக்காளத்தி ஞானப் பூங்கோதை யம்மைமீது இவர் இயற்றிய வடமொழித் தோத்திர மொன்றும் வடமொழி நிகண்டொன்றும் தஞ்சை அரண்மனைப் புத்தக சாலையி லுள்ளதென்று கூறுவர்.

இவர், மதுரைப் பட்டி மண்டபம் புகுந்து வடமொழியே சிறப் புடையதென்றும் தென்மொழி இழிந்ததென்றும் கூறிய குயக் கொண்டானென்பவனை இறக்கப் பாடி, பின்பு சிலர் வேண்ட அவனைப் பிழைக்கவும் பாடினார். சிவபெருமான், தருமியென்னும் ஓர் அந்தணன் பொருட்டுப் பாடிக் கொடுத்த, "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுள் சம்பந்தமாக இவருக்கும் அக்கட வுளுக்கும் வாதம் நிகழ்ந்ததென்றும், அவ்வாதத்தில் இவர் வரம் பிகந்து பேசினமையின் அக்கடவுளுடைய சினத்திற்கு ஆளாகி நோயுற்றாரென்றும், பின்பு இவர் அவரைப் பணிந்து இரபபக் கைலை கண்டால் நோய் தீருமென்று அவர் கட்டளையிட்டருள இவர் கைலையை நோக்கிச் சென்றாரென்றும், செல்லும் வழியில் திருப்பரங் குன்றத்தில் ஒரு பூதத்தாற் குகையொன்றில் அடைக்கப்பட்டுத் திருமுருகாற்றுப்படை பாடி முருகக் கடவுளால் மீட்கப்பட்டா ரென்றும், பின்பு திருக்காளத்தி சென்று பொன்முகரி யாற்றில் நீராடுகையிற் கைலைத் தரிசனம் பெற்று நோய் நீங்கிக் கைலைபாதி காளத்திபாதியந்தாதி யென்னும் நூலைப் பாடினாரென்றும் உள்ள சில செய்திகள் இவருடைய வரலாறாகத் திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம் முதலியவற்றிற் காணப்படுகின்றன. சிவபெருமான் சினங் கொண்டபொழுது அதனைத் தணிக்கக் கோபப்பிரசாதம் என்னும் பிரபந்தம் இவராற் பாடப்பட்டதென்பர்.

மதுரை மேலைமாசி வீதியின் மேல்சிறகில் நக்கீரர் கோயிலென்று ஒரு கோயில் பெரிதாக வுள்ளது; அது சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும்; அதில் இவருடைய திருவுருவமுள்ளது. பின்னும், இவருடைய திருவுருவம் திருப்பரங்குன்றததில் ஸ்ரீ முத்துக்குமார சாமியின் பக்கத்தே அமைக்கப் பெற்றுள்ளது; திருவிழாக் காலத்தில் புறப்பாடுண்டு. இவர் ஈங்கோய்மலையெழுபது என்னும் நூல் இயற்றியதுபற்றிய செய்தி, முன் காலத்தில இருந்த அரசரொருவர் திருவீங்கோய் மலைக் கோயிலில் இவருடைய திருவுருவத்தைப் பிரதிட்டிப்பித்துப் பூசை முதலியன நடைபெற்று வருமபடி நிபந்தம் அமைத்திருந்தாரென்று அததலத்துச் சிலாசாசன மொன்றால் தெரிய வருகின்றது. நக்கீரராற் பிரதிட்டிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சிவலிங்கப் பெருமான் திருவுருவம் திருக்காளத்தயில உண்டு; அதற்கு நக்கீர நாதர் அல்லது நக்கீரலிங்க மென்பது திருநாமம்.

இவர் செய்யுட்களில் வந்த தெய்வங்கள் : இந்திரன, இல்லுறை

தெய்வம், சிவபிரான், திருமால், பலதேவர், பிரமன், வரையர மகளிர் முதலியோர்.

உபகாரிகள் : அருமன், எவ்வி, கிள்ளிவளவன், குட்டுவன், கோசர், கோதை மார்பன், சோழன், தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தழும்பன், தித்தன், திதியன், திரையன், பசும்பூட் பாண்டியன், பழையன் மாறன், பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன், முசுண்டை, வடுகர் பெருமகன் எருமை, வழுதி, வன்னி, வானவரம்பன்.

புலவர்கள் : அகத்தியர், கபிலர், தூங்கல், பரணர்.

ஊர்கள் முதலியன: ஆலங்கானம், இடையாறு, உறையூர், ஊணூர், கருவூர், காவிரிப்பூம் பட்டினம், திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம், திருமருதந்துறை, திருவாவினன்குடி, திருவேரகம், தொண்டி, பவத்திரி, பழமுதிர்சோலை, பெருங்குளம், மதுரை, மருங்கூர்ப் பட்டினம், முசிறி, மூதில், வேங்கடம்.

ஆறுகள் : அயிரியாறு, ஆன்பொருநை, காவிரி, வையை.

இவர் பாடிய திருமுருகாற்றுப்படையிலும் நெடுநல்வாடையிலும் உள்ள ஒத்த பகுதிகள் :

முருகு.		நெடுநல்.
38. வென்றடு விறற் கொடி	:	87. "வென்றெழு கொடி"
70–71. திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்துக்......கூடல்	:	89-90. "திருநிலை பெற்ற தீது தீர் சிறப்பின்......திருநகர்"
228. நெய்யோ டையவி யப்பி	:	86. "ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை"
238. நளிமலைச் சிலம்பு	:	100. "நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்"

திருமுருகாற்றுப்படையிலும் இவரியற்றிய பிற செய்யுட்களிலும் உள்ள ஒத்த பகுதிகள் :

முருகு.

24. திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்: "தேங்கமழ் திருநுதற் றிலகந் தைஇயும்" அகநா. 389.

35-7. இளமுலை...... விரிமலர் வேங்கை நுண்டா தப்பிக் காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெரியா: "பல்லித ழெதிர் மலர் கிள்ளி வேறுபட, நல்லிள வனமுலை யல்லியொ டப்பியும்" அகநா. 389.

71. மாடமலி மறுகிற் கூடல்: "மாடமலி மறுகிற் கூட லாங்கண்" அகநா. 346.

104. ஆரந்தாழ்ந்த வம்பகட்டு மார்பு: "நெடுவேண் மார் பிலாரம்" அகநா. 120.

122. *பல்பொறி மஞ்ஞை வெல்கொடி; "மணிமயி லுயரிய மாறு வென்றி"* புறநா. 56.

150-51. *பாம்புபடப் புடைக்கும்........புள்ளணி நீள்கொடிச் செல்வன் : "விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்"* புறநா. 56.

151-4. *வெள்ளேறு, வலவயி னுயரிய......செல்வன் : "ஏற்று வலனுயரிய......மணிமிடற் றோனும்"* புறநா. 56.

247. *ஓடாப்பூட்கைப் பிணிமுகம் : "பிணிமுக வூர்தி யொண் செய்யோ னும்"* புறநா. 56.

நெடுநல்வாடையிலும் பிற செய்யுட்களிலும் காணப்படும் ஒப்புமைப் பகுதிகள் :

நெடுநல்.

9. *மந்திகூர : "கூரற் கொக்கு"* அகநா. 346.

15-8. *கொக்கின் மென்பறைத் தொகுதி.....கவரக் கயலற லெதிர : "கொக்கின் குறும்பறைச் சேவல், வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்து...கடுநீர் நோக்கிப் பைப்பயப், பார்வ லிருக்கும்"* அகநா. 346.

51. *வடவர் தந்த வான்கேழ் வட்டம் :* மு. அகநா. 340.

88-90. *குன்றுகுயின் றன்ன......திருநகர் : "வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்"* அகநா. 93.

89-90. *திருநிலைபெற்ற......திருநகர் : "திருவுடை வியனகர்"* நற். 258.

101. *யவனர் :* புறநா. 36.

161. *செல்வனொடு நிலைஇய வுரோகிணி : "மதிநிறைந் தறுமீன் சேரும்"* அகநா. 141.

173. *வடந்தைத் தண்வளி : "தண்ணென வாடை தூக்கும்"* அகநா. 78.

மாங்குடி மருதனூர்: *இவர் மதுரைக் காஞ்சியை இயற்றியவர். மாங்குடி கிழாரென்னும் நல்லிசைப் புலவரொருவர் இயற்றிய செய்யுட்கள் கருத்திலும் சொல்லமைதியிலும் இவருடையனவற்றை ஒத்து இருப்பதால் அவரும் இவரும் ஒருவரெனக் கருதப்படுகிறார். கிழாரென்னும் மரபுப் பெயரால் இவர் வேளாண் மரபினரென்பது பெறப்படும். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அவைக்களத்து நல்லிசைப் புலவர்களின் தலைவராக வீற்றிருந்தவர். அவனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தி இவர் பாடிய மதுரைக் காஞ்சியின் பெருஞ்சிறப்பை அறிந்தயாவரும் இவரைக் காஞ்சிப் புலவன், மதுரைக் காஞ்சிப் புலவன் என்னும் பெயர்களால் வழங்கி வந்தனரென்று தெரிகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு இவர்பாலுள்ள நன்மதிப்பு, "ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி,* மாங்குடி மருதன் றலைவ னாக, உலகமொடு

நிலைஇய பலர்புகழ்சிறப்பிற், புலவர் பாடாது|வரைகவென் னிலவரை" (புறநா. 72) என்று அவன் கூறிய வஞ்சினத்தால் விளங்கும். "மழுவா ணெடியோன் றலைவனாக...பெரியோர்" என்று கூறுவதால் இவர் சிவபெருமான்பாற் சிறந்த அன்புடையா ரென்பது அறியப் படும்; "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுள்" என்பதன் உரையில், 'கூற்றுவனை யுதைத்த கடவுளென்று இறைவனுக்கு' என்று மறுக்கும் வாயிலால் நச்சினார்க்கினியர் வெளியிடும் பொருள் இக்கருத்துக்குத் துணையாக அமைகின்றது. வாட்டாற்று எழினியாத னென்பானை இவர் பாடியுள்ளார். இவர் பாடியனவாக இப்பொழுது கிடைக்கும் செய்யுட்கள் 14; மதுரைக். 1, நற். 2, குறுந். 3, அகநா. 1, புறநா. 6, திருவள்ளுவ. 1. இவற்றுள் நற்றிணை 123-ஆம் செய்யுள் காஞ்சிப் புலவனென்னும் பெயரோடும், குறுந்தொகை 173-ஆம் செய்யுளும், அகநானூறு 89-ஆம் செய்யுளும் மதுரைக்காஞ்சிப்புலவனென்னும் பெயரோடும் வழங்குகின்றமையின் அவை மதுரைக்காஞ்சிக்குப் பின்னர் இவரால் இயற்றப்பெற்றனவென்று தோற்றுகின்றது.

இவர் செய்யுட்களில் மதுரைக் காஞ்சியை யொழிந்த ஏனைய வற்றில் வேள் எவ்வியினது மிழலைக் கூற்றமும் வேளிரது முத்தூற்றுக் கூற்றமும் குன்றூரும் கூறப்படுகின்றன.

காஞ்சித்திணையில் இவரால் இயற்றப் பெற்றுள்ள மதுரைக் காஞ்சியோடு சொற்பொருளொப்புமை யுடையதும் பொருண் மொழிக் காஞ்சித்துறை அமைந்ததுமாகிய ஒரு செய்யுள் புறநானூற்றில் உண்டு. மதுரைக் காஞ்சி பெரும்பாலும் வஞ்சியடிகளாக இருத்தல் போலவே புறநானூற்றிலுள்ள 24, 26, 396-ஆம் செய்யுட்களும் இருக்கின்றன.

போர்க்களத்தில் தலைகளை அடுப்பாகவும் குருதியை உலையாகவும் தோளைத்துடுப்பாகவும்கொண்டு பேய்கள் அடுதல் இப்பாட்டிற்கூறப் பட்டிருத்தல், "முடித்தலை யடுப்பாகப், புனற்குருதியுலைக்கொளீஇத் தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வலசி", "பொருந்தாத் தெவ்வரிருந் தலையடுப்பின்...மாமறி பிண்டம் வாலுவ னேந்த" (புறநா. 26, 372) எனக் கூறியவற்றின் விரியாக அமைந்துள்ளது. "அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, வடுதிறலுயர் புகழ்வேந்தே" (மதுரைக். 128-30) என்ற அடிகளிலும், "அரசுபட வமருழக்கி, உரைசெல முரசுவெளவி...அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறநா. 26) என்பதிலும், சொற்பொருளொப்புமை மிக்கு விளங்குதல் காண்க. அடுகளம் வேட்டதை இங்கே பிற செய்திகளோடு கலந்து கூறியவர் தனியாக அதனைச் சிறப்பித்து மறக்கள வேள்வித் துறைச் செய்யுளொன்று (புறநா. 372) பாடியுள்ளது அறிதற் குரியது. நெடுஞ்செழியனை வாழ்த்துவார் வளர்பிறைபோல அவ

ன்து கொற்றம் சிறக்கவென்றும் தேய்பிறைபோல அவன் தெவ்வ ராக்கம் கெடுகவென்றும் இங்கே உரைத்தவர், "நின்று நிலையியர் நின் னுண்மீ னில்லாது, படாஅச் செலீயர்நின் பகைவர்மீனே" (புறநா. 24) என வாழ்த்துதல் இவருடைய கருத்தொப்புமையை உணர்த்துகின்றது. வாழ்க்கை நிலையாமையைப் புலப்படுத்த நினைத்த இவர், நற்செயலைச் செய்யாமல் வீணே வாழ்நாள் போக்கி மாண்டவர் பலரென்பதனை இங்கே கூறினார்; இவ்வாறே புறநானூற்றில், "மலர்தலை யுலகத்துத் தோன்றிப், பலர்செலச் செல்லாது நின்று விளிந் தோரே" (124) என்றனர். இங்கே கூறிய, "விளைந்த கழனி, வன்கை வினைஞ ரரிப்பறை" என்பதனை, "விளைகழனி யரிப்பறை" (புறநா. 396) எனச் சுருக்கிச் சொல்லியிருப்பதும், "மறவர், வாள் வலம் புணர்ந்தநின்றுள் வலம்வாழ்த்த" என்றவர், "வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த" (புறநா. 24) என்பதும் இப்பாட்டின் இறுதியில், "இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும், மகிழ்ந்தினி துறைமதி பெரும" என வாழ்த்தியவர், "ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந், தாங்கினி தொழுகுமதி பெரும" (புறநா. 24) என்பதும், கணைக்கு மழை, களிற்றுக்கு நாவாய், பலர் நடுவிலுள்ள அரசனுக்கு நாண்மீனுக்கிடையிலுள்ள சந்திரன் என்று இங்கே கூறப்பட்ட உவமைகளையும், கோசரையும் பிறவிடங்களிலும் சொல்லியிருத்தலும் இவர் தாம் நினைந்த கருத்துக்களையும் சொற்றொடர்களையும் பல இடங்களில் அமைத்து உறுதிப்படுத்திப் பாடும் இயல்புடையரென்பதனைப் புலப்படுத்துகின்றன.

இவர் பாடிய அகத்திணைச் செய்யுட்களில், இல்லறம் நடத்தும் மகளொருத்தி விருந்தினரை உண்பிக்கும் பொருட்டு உணவு சமைக்கும் இயல்பும், மடன்மாவின் இலக்கணங்களும், வேடர்கள் தாம் கொள்ளையிட்டுப் பெற்ற பொருள்களைப் பாறையின் மேல் வைத்துப் பங்கிட்டுக்கொள்ளும் செயலும் நயம்படக் கூறப்பெற்றுள்ள.

8. முடத்தாமக் கண்ணியார் : பொருநராற்றுப்படையை இயற்றியவர் இவர். "இயற்பெயர் முன்னர்" (தொல். சொல். இடை. சூ. 22. சே. ந.) என்னும் சூத்திர உரையில் ஆர் விகுதி பன்மையொடு முடிதற்கு முடத்தாமக் கண்ணியார் வந்தாரென்பது உதாரணமாகக் காட்டப்பெற்றிருத்தலால் இவர் பெயர் முடத்தாமக் கண்ணியென்று தெரிகின்றது. இப்பெயர் உறுப்பால் வந்ததென்றும், இவர் பெண்பாலாரென்றும் கூறுவாரும் உளர். ஆர் விகுதி பெற்ற பல பெயர்கள் இருப்ப இவர் பெயரை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியது இவரது சிறப்பைப் புலப்படுத்தும்.

பாடப்பட்டோர் வரலாறு

1. ஆரிய அரசன் பிரகத்தன்: இவன் பத்துப் பாட்டினுள் எட்டாவதாகிய குறிஞ்சிப்பாட்டைக் கேட்டுத் தமிழ்ச் சுவையை யறிந்து இன்புற்றவன், கபிலர் காலத்தவன். இவனைப்பற்றி இப்பொழுது வேறு யாதொன்றும் விளங்கவில்லை. குறுந்தொகையில், "அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை" (184) என்னும் செய்யுளை இயற்றியவன் பெயர் ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தனென்று தெரிகின்றது. சிலப்பதிகாரத்தில் ஆரிய மன்னரென்னும் ஒருவகை யரசர் கூறப்படுகின்றனர்; இவன் அவருள் ஒருவனோ வேறோ தெரியவில்லை.

2. ஒய்மானாட்டு நல்லியக்கோடன்: இவன் பத்துப்பாட்டினுள் மூன்றாவதாகிய சிறுபாணாற்றுப் படைத்தலைவன்; இவன் காலத்தில் இவனைப் போன்ற பெருங்கொடையாளிகள் யாரும் இலர்; பேகன் முதலிய ஏழு வள்ளல்களுக்கும் இவன் காலத்தால் பிந்தியவன்; இவை முறையே இப்பாட்டிலுள்ள, "வஞ்சியும் வறிதே", "மதுரையும் வறிதே", "உறந்தையும் வறிதே" என்பவற்றாலும் 84-ஆம் அடி முதலியவற்றாலும் விளங்கும். புறநானூற்றில், "ஓரை யாயம்" என்னும் 176-ஆம் செய்யுளைப் பெற்றவன்; இவன் ஒய்மான் நல்லியக்கோடனெனவும் வழங்கப் பெறுவன்; இதனை மேற்கூறிய புறப்பாட்டின் பின்னுள்ள வாக்கியத்தால் அறிக. இவன் பரம்பரையில் ஒய்மானல்லியாதன் ஒய்மான் வில்லியாதனென்ற இரண்டு உபகாரிகள் இருந்து விளங்கினார்களென்று புறநானூற்றால் தெரிகின்றது. இவன் காலத்து நல்லிசைப் புலவர்கள் நல்லூர் நத்தத்தனாரும், மேற்கூறிய, "ஓரையாயம்" என்னும் பாடலை இயற்றிய புறத்திணை நன்னாகனா ரென்பவரும் ஆவர். இவனுடைய தாகச் சொல்லப்பட்ட கிடங்கிலென்னும் ஊர் இப்பொழுது திண்டிவனத்தைச் சார்ந்துள்ளது; கிடங்காலெனவும் வழங்கும். திண்டிவனத்திலுள்ள திண்டீசுவரமென்னும் சிவபெருமான் திருக்கோயில் இக்கிடங்கிலில் இருந்ததாகச் சாசனங்களால் தெரிய வருதலின் இப்பொழுது திண்டிவனமென்று வழங்கும் பெரிய ஊரும் அதனைச் சார்ந்த இடங்களும் சேர்ந்த பெரியதொரு நகரமாகக் கிடங்கில் இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. இவ்வூர், காவிதிக் கீரங் கண்ணனார், காவிதிப் பெருங்கொற்றனார், குலபதி நக்கண்ணனாரென்னும் மூன்று நல்லிசைப் புலவர்களுக்குரிய இடமாகத் தெரிகின்றது. யாப்பருங்கல விருத்தியின் மேற்கோளாகிய, "கிடங்கிற் கிடங்கில்" என்னும் வெண்பாவில் வந்துள்ள கிடங்கிலென்னும் ஊர் இதுவே. இதிற் சிதைந்த அகழியும் இடிந்த கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன. இவனுடைய ஊர்களுள் ஒன்றாகிய மாவிலங்கை யென்பது, புனனாட்டுக்கு வடக்குள்ள அருவா நாடு, அருவாவடதலை நாடென்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்; அவ்வூர் புறநானூற்றாலும் இவனதென்று

தெரிகின்றது. இவனுடைய மற்ற ஊர்களுள் எயிற்பட்டினம், வேலூர், ஆமூரென்பவை தொண்டை நாட்டிலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் மூன்று கோட்டங்களுக்குத் தலைநகரங்களாக உள்ளவை; வேலூர் உப்பு வேலூரென்று இக்காலத்து வழங்குகின்றதென்பர். சிறுபாணாற்றுப்படை, 172-3–ஆம் அடிகளுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய விசேடவுரையால் இவன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகக் கடவுளை வழிபட்டானெனவும் அப்பொழுது அக்கடவுள் கனவில் எழுந்தருளி இவ்வூரிலுள்ள ஒரு கேணியிற் பூக்க பூவைப் பறித்துப் பகைவர்பால் விடுக்குமாறு கட்டளை யிட்டருளினாரெனவும் அவ்வாறே இவன் அப்பூவைப் பறித்து அதனையே வேலாகக் கொண்டு பகைவரை வென்றானெனவும் இக்காரணத்தால் இது வேலூரெனப் பெயர் பெற்றதெனவும் அறியப்படுகின்றது. "உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்" (சிறுபாண். 122) என்றதனால், இவன் ஓவியர் குடியில் பிறந்தவனென்று எண்ணப்படுகின்றான். ஓவியர்குடி நாகர் வகுப்பினுள் ஒரு பிரிவென்பர்.

3. குமரவேள்: இவருடைய பெருமைகள் பல நூல்களாலும் விளங்கத் தெரிந்தவையே. திருமுருகாற்றுப்படையிற் கூறப்பெற்ற இவருடைய படைவீடுகள், திருப்புகழ் முதலியவற்றிலும், அவற்றுள் திருப்பரங்குன்றம், மதுரைக் காஞ்சியிலும், பரிபாடலிலும், "ஒன்னா தார்க் கடந்தடூஉ மூரவுநீர் மாகொன்ற, வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விருப்பார்கொல்" எனக் (27) கலித்தொகையிலும், "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன் றண்பரங் குன்றத், தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை, இன்றீம் பைஞ்சுனை", "கூடற் குடாஅது, பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய, வொடியா விழவி னெடியோன் குன்றத்து, வண்டுபட நீடிய குண்டுசுனை" என (59, 149) அகநானூற்றிலும், திருச்சீரலைவாய் (செந்தில்) "திருமணி விளக்கி னலைவாய்ச், செருமிகு சேஎயொ டுற்ற சூளே" (அகநா. 266), "வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை" (புறநா. 55), "சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று, மேரகமு நீங்கா விறைவன்" (சிலப். குன்றக். 8), "நஞ்செந்தின் மேய, வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்" (தே. மறைக்காடு) எனப் புறநானூறு முதலியவற்றிலும் பாராட்டப் பெற்றிருத்தல் காண்க. இங்கே காட்டிய சிலப்பதிகாரச் செய்யுளில் ஏரகமும் கூறப் பெற்றுள்ளது. பழமுதிர் சோலையில் முருகக் கடவுளின் தலம் இருந்ததென்பதை, "புண்ணிய சரவணம்" (சிலப். 11 : 94) என்னும் பொய்கையின் பெயரும், அஃது அப்பெயருடன் இக்காலத்தும் அங்கேயிருத்தலும் புலப்படுத்தும்.

திருப்பரங்குன்றம் முதலிய ஆறு படைவீடுகளும் திருமுருகாற்றுப்படையிற் கூறிய முறைப்படியே கந்தரந்தாதியின் முதற்

செய்யுளிலும் கந்தபுராணக் கடவுள் வாழ்த்திலும் பிறவற்றிலும் அமைந்துள்ளன. அலைவாயை நாமனூரலைவாயென்றும், திருவேரகத்தை மலைநாட்டிலுள்ளதொரு திருப்பதியென்றும் கூறுவர், நச்சினார்க்கினியர்; திருவேரகம் சுவாமிமலையென்பது அருணகிரியார் முதலியோர் கொள்கை. திருவாவினன்குடி, சித்தன்வாழ்வென்றும் வழங்கப்படுமென்று தெரிகிறது.

4. சோழன் கரிகாற் பெருவளத்தான்: இவன், இப்பாட்டுக்களுள், பொருநராற்றுப்படைக்கும் பட்டினப்பாலைக்கும் தலைவன்; சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் புதல்வன்; நாங்கூர் வேளிடை மகட்கொண்டோன்; இவற்றைப் பொருநராற்றுப்படை, 130-ஆம் அடியாலும், தொல்காப்பியத்துள்ள அகத்திணையியல், 30-ஆம் சூத்திரம் நச்சினார்க்கினியருரையாலும் உணர்க. தம்முள் மாறுபட்டு வந்து தன்னை இளையனென்றிகழ்ந்த முதியோர் பொருட்டுத் தான் முதியன் போல் வந்து அவர்கள் வழக்கைத் தீர்த்தானென்றும், தான் கருவூரில் இருக்கையில் கழுமலமென்னும் ஊரிலிருந்த யானையாற் கொண்டுவரப்பட்டு அரசாட்சிக்கு உரியனாயினனென்றும், இளமையில் நெருப்பாற் சுடப்பட்டு உயிர் பிழைத்தானென்றும், இரும்பிடர்த் தலையாரை அம்மானாக உடையவனென்றும் பழமொழி 21, 62, 105-ஆம் வெண்பாக்களாலும் அவற்றின் உரைகளாலும் மணிமேகலையாலும் விளங்குகின்றன.

பட்டினப்பாலையைக் கேட்டுக் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு இவன் பதினறு நூறாயிரம் பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப் பரணி, இராசாபாரம்பரியம் 21-ஆம் செய்யுளால் விளங்குகின்றது.

வெண்ணியென்னும் ஊர்ப்புறத்தேயுள்ள போர்க்களத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போர் செய்து அவனை வென்றான்; அவனோடு அக்களத்தில் ஒரு பாண்டியனையும் இவன் வென்றானென்று பொருநராற்றுப்படையால் விளங்குகின்றது. இவன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தானென்பதும், ஒரு காலத்தில் இமயமலை வரையிற் சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றானென்பதும் சிலப்பதிகாரம், அதனுரை, கலிங்கத்துப்பரணி, பெரிய புராணம், காஞ்சிப் புராணம் முதலியவற்றால் தெரிகின்றன. இவன் உறையூரைத் தனது இராசதானியாகத் தேர்ந்தெடுத்து அதனை வளம்படுத்தினன். இவன் வீரருட் சிறந்த வீரன். இவன் பெயர் சோழன் கரிகால் வளவனெனவும் கரிகாலனெனவும் கரிகாலெனவும் வழங்கும். இவனைப் பாடியவர்கள் கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார்; இவருள் இவன் இறந்த பின்பும் இருந்தோர் கருங்குழலாதனார்.

5. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்: இவன், மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் பெற்றோன்; இளமைப் பருவத்தில் * தலையாலங்கானத்திற் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையோடு போர்

* தலையாலங்கானம் - தலையாலங்காடு; சோழநாட்டுச் சிவஸ்தலங்களுள் ஒன்று.

செய்து அவனைச் சிறைப்படுத்தியதன்றிச் சோழன் திதியன் எழினி எருமையூரன் இருங்கோவேண்மான் பொருநன் என்பவரையும் வென்றான்; வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக்கொண்டான்; மறக்கள வேள்வியும் அறக்களவேள்வியும் செய்தான்; "நகுதக் கனரே" (புறநா. 72) என்னும் செய்யுளை இயற்றியவனாதலால், இவன் நல்லிசைப் புலவர் வரிசையில் விளங்கியவனென்றும் தெரிகின்றது. புலவர்களிடத்து மிக்க அன்புள்ளவன்; மாங்குடி மருதனார் முதலிய நல்லிசைப் புலவர்கள் பலரை ஆதரித்தோன்; உத்தம குணங்கள் பலவும் உடையோன். இவன் பெருமைகள் விரிப்பிற் பெருகும். இவன் பெயர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும், நெடுஞ்செழியனெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்கள் குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக்குன்றூர் கிழார்.

6. தொண்டைமான் இளந்திரையன்: இவன் நான்காம் பாட்டாகிய பெரும்பாணாற்றுப்படைக்குத் தலைவன்; இவனுடைய பிறப்பின் வரலாறு இப்புத்தகம் 214-ஆம் பக்கத்தால் அறியலாகும்; அதில் நாககன்னியென்றது மணிமேகலை 24-ஆம் காதையின் 57-ஆம் அடியிற் கூறப்பெற்ற பீலிவளையையென்றும் அதற்குத் தக்க ஆதாரம் சாசனத்திலும் நூல்களிலுமுள்ளதென்றும் சொல்லுகின்றனர்; முடியுடை மன்னர் மூவரொடு சேர்த்து எண்ணப்படும் பெருமைவாய்ந்தவனேனும், "வில்லும் வேலும்" என்னும் (தொல். மரபு. சூ. 83) சூத்திரவுரையில், 'மன்பெறு மரபி னேனோரெனப் படுவார், அரசு பெறுமரபிற் குறுநில மன்னரெனக் கொள்க, அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப்படும்' எனப் பேராசிரியர் எழுதியிருத்தலால் இவனைக் குறுநில மன்னனாகப் பண்டையோர் கொண்டிருந்தனரென்று தெரிகின்றது. இப் பெயர் இளந்திரையனெனவும் திரையனெனவும் திரையனெனவும் நூல்களில் வழங்கும். இவனியற்றிய பாடல்களாக நற்றிணையில் மூன்றும் புறநானூற்றில் ஒன்றும் காணப்படுதலால், இவன் நல்லிசைப் புலவர் வரிசையிற் சேர்ந்த பெருமை வாய்ந்தவனென்றும் தெரிகின்றது. இளந்திரையமென ஒரு நூல் இவனாற் செய்விக்கப்பெற்றதென்று இறையனாரகப் பொருளுரை, நன்னூல் மயிலைநாதருரை முதலியன தெரிவிக்கின்றன; நன்னூல் மயிலைநாதருரையில், (ப. 245) திரையனூரென்பதற்குத் திரையனாற் செய்யப்பட்ட ஊர், திரையனது ஊர் என்று பொருள் செய்திருத்தலின், இப்பெயருள்ள ஊரொன்று பண்டைக் காலத்தில் இவனால் நிருமிக்கப் பெற்றதென்று தெரிகிறது.

> "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
> இனமழை தவழு மேற்றரு நெடுங்கோட்
> டோங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்"
>
> (அகநானூறு, 213)

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிசிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த குடை"

"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது (?) தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது"

"ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாம்
தோழி துணையாத் துயர்தீரும் - வாழி
நறுமாலை தாராய் திரையவோ வென்னும்
செறுமாலை சென்றடைந்த போது"

(பழைய மேற்கோள்)

என்பவற்றால் இவன் பரம்பரையோருடைய பெருமை புலப்படும்.

7. நன்னன்: பத்தாவதாகிய மலைபடுகடாத்தின் தலைவனாகிய இவன் வரலாற்றை அறிவதற்கு அந்நூலும் அதன் இறுதியிலுள்ள பழைய வாக்கியமும், அகநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகியவற்றின் சில பகுதிகளுமே யன்றி வேறு கருவி கிடைத்திலது. இவன் வேளிர் குலத்தைச் சேர்ந்தவன்; பிற நூல்களில் நன்னன் வேண்மானெனக் கூறப் பெறுபவன் இவனே (அகநா. 97); வேண்மான் - வேளிர் தலைவன். இவன் தந்தையின் பெயரும் நன்னனென்பது.

இவனுடைய ஆட்சிக்குட்பட்ட பெரும் பிரிவான இடம் பல்குன்றக் கோட்டம்; நகர் செங்கண்மா (மலைபடுகடாத்தின் இறுதி வாக்கியத்தைப் பார்க்க); மலை நவிரமலை; ஆறு சேயாறு.

பல்குன்றக் கோட்டமென்பது தொண்டைநாட்டின் பெரும்பிரிவாகிய 24-கோட்டங்களுள் ஒன்று. பல குன்றங்களைத் தன்பாற் பெற்றிருத்தலின் இக்கோட்டம் இப்பெயர் பெற்றது. கோட்டமென்பது நாட்டின் பெரும்பிரிவிற்குச் சங்கேதமாக வழங்கி வருகின்றது. 'பல்குன்றக் கோட்டத்துச் சிலைநாட்டுத் திருவேங்கடம்' என்னும் சிலாசாசன வாக்கியத்தால், திருவேங்கடமலை (திருப்பதி) யும் பல்குன்றக் கோட்டத்துள்ளதென்று தெரிகிறது; "குன்றுகுழிருக்கை நாடுகிழ வோனே" (மலைபடு. 583) என்பது இதனை வலியுறுத்தும்.

செங்கண்மா என்னும் ஊர் திருவண்ணாமலைக்கு மேற்றிசையில் உள்ளது; இது செங்கண்மாவெனவும், செங்கமா, செங்கம் எனவும் இக்காலத்து வழங்கும். இந்நகரில், பண்டைக் காலத்தில் அகழி, கோட்டை, பெரிய வீதி, கடைத்தெரு, குறுந்தெரு, சிங்காதன மமைந்த இராசசபை, நாளோலக்கம், அரிய காவல்களையும் நன்னனைப் பார்த்தற்குப் பலரும் தத்தமக்குரிய காணிக்கைகளைக்

கொணர்ந்து வைத்துக் காத்திருக்கும் முன்றிலையுமுடைய கோபுர வாசல் முதலியவற்றையுடைய அரண்மனை, அயலூரிலிருந்து வருபவர்கள் கவலையின்றித் தங்குவதற்குரிய பொதுவிடமாகிய மன்று ஆகிய இவைகள் இருந்தனவென்று அந்நூல் தெரிவிக்கின்றது.

நவிரமலை: இது மிக்க வளத்தையும் புகழையும் உடையது; இதில், 'காரியுண்டிக்கடவுள்' (83) என்று திருநாமம் பெற்ற சிவபெருமானுடைய திருக்கோயிலுண்டு; சேனைகளை அமைத்து நன்னன் அக்கோயிலைப் பரிபாலித்து வந்தனன் (226-30); இம்மலை இக்காலத்தில் திரிசூலகிரி, பர்வதமலை என வழங்கப்படுகின்றது. சிவபெருமானுக்கு இங்கே இக்காலத்து வழங்கும் திருநாமமும் ஸ்ரீகாளகண்டேசுவரரென்பது. இம்மலை திருவண்ணாமலையின் வாயுதிக்கில் உள்ளது; ஆதாரம், அக்கோயிற் சாசனமும், திரிசூல கிரிப்புராணமும். இதனால் நன்னனைச் சைவசமயாபிமானியென்று நினைத்தற்கிடமுண்டு.

சேயாறு: இது, "காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு", "கடு வரற் கலுழிக் கட்கின் சேயாறு" (476, 555) என அந்நூலுள்ளே பாராட்டிக் கூறப்படும்; இக்காலத்துச் சண்முகநதியென வழங்கும் நதி இதுவே (அருணாசல புராணம், திரிசூலகிரிப் புராணம்.)

நன்னன் மேன்மையை யுடையவன்; மிக்க கொடையாளி; பிறருடைய குற்றங்களை உள்ளடக்கிக் குணங்களையே பாராட்டி அவர்களை மேம்படுத்தும் சிறந்த சுற்றத்தையுடையவன்; பொய்யா வாய்மையினன்; மிக்க வீரன்; ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்பவன்; ஐம்பொறிகளையும் வென்றவன்.

மானவிறல் வேள், செருச்செய்முன்பிற் குருசில், திருந்து வேலண்ணல், செருமிக்குப் புகலுந் திருவார்மார்பன், தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை ஓம்பா வள்ளல், வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித் திண்டேர் நன்னன், வெல் போர்ச் சேஎய்ப் பெருவிறல், குன்றா நல்லிசைச் சென்றோரும்பல் என அந்நூலுட் பாராட்டப்பெற்றிருத்தலின் இவனுடைய மேம்பாடுகள் புலனாகின்றன.

நன்னன் மனைவி கற்பிற் சிறந்தவள்; கற்பிற்கு அறிகுறியாகக் கொடியைப் பெற்றவள் (424)

"பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட், சேரி விழவி னார்ப் பெழுந் தாங்கு" (மதுரைக். 618-9) என்பதனால், நன்னனென்னும் ஒருவனுடைய பிறந்தநாட் கொண்டாட்டம் பண்டைக்காலத்தில் நடைபெற்று வந்ததாகத் தெரிகின்றது.

இவன் காலத்துப் புலவர் பரணர், பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார், மாங்குடி மருதனார், மாமூலனார் முதலியோர்.

நச்சினார்க்கினியர் வரலாறு

* உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள்

வெண்பா

† பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்-சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

தொல்காப் பியத்திற் றெருகுத்த பொருளனைத்தும்
எல்லார்க்கு மொப்ப வினிதுரைத்தான்-சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு.

ஆசிரியப்பா

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுண்ணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்
நாற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
எழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்றும்
இழுக்கற வாய்ந்த வழுக்கின்றேல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றும்
கலையி னிறைந்த கதிர்மதி யென்றும்
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்
உரையிடை யிட்ட காண்டிகை யுரைத்தும்
ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டு முணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட வுரைத்தும்
ஒலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்கும்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்

---

* இந்தச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் நான்கும் பண்டைக் காலத்தனவே.

† இந்த வெண்பா, திருவாவடுதுறை யாதீன மடத்துப் புத்தக சாலையிலுள்ள ஒரு பழைய திருக்குறட் பரிமேலழகருரைப் புத்தகத் திறுதியில், ''நற்றிணை நல்ல'', ''முருகுபொருநாறு'', ''நாலடிநான் மணி'' என்னும் வெண்பாக்கள் மூன்றனோடும் எழுதப்பட்டிருந்தது.

குள்ளுறை யுவமமு மேனை யுவமமும்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
உள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்
இருவினை கடியு மருவியம் பொதியிலின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.

ஆசிரிய விருத்தம்

பச்சைமா லனைய மேகம் பெளவநீர் பருகிக் கான்ற
எச்சிலைற் றிசையு மூண் றுமமிழ்தெனை வெழுநா வெச்சில்
மெச்சிநா ளுைம் விண்ணோர் மிசைகுவர் வேத போதன்
நச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

பாண்டி மண்டல சதகம்

கரைபெற்ற தோர்பஞ்ச லட்சண மானதொல் காப்பியமும்
தரைமுற்றும் போற்றிய சிந்தா மணியுந் தமிழ்ச்சங்கத்தின்
நிரைபெற் றுயர்பத்துப் பாட்டும் விளங்க நிசவுரையை
வரைநச்சி னார்க்கினி யன்னையன் பாண்டிய மண்டலமே.

பத்துப்பாட்டின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க் கினியர், பாண்டிவள நாட்டுள்ள மதுராபுரியில் பிராமணவருணத்தில் பாரத்துவாச கோத்திரத்தில் பிறந்தவர். தமிழ் மொழியிலுள்ள பலவகையான நூல்களிலெல்லாம் மிக்க பயிற்சியுள்ளவர்; சைவ சமயத்தினர்; இவர் இன்னராதல், உரைச் சிறப்புப் பாயிர அகவலின் 47-ஆம் அடி முதலியவற்றால் விளங்கும். சிவதலங்களுட் சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும் பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத் தொருமொழிக்கும் உதாரணமாக, "ஓரெழுத்தொரு மொழி" (தொல். மொழிமரபு. சூ. 12) என்னுஞ் சூத்திரத்து விசேட வுரையிற் காட்டியிருத்தலாலும், சைவ சமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் திருவுலாப் புறம் முதலியவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கியவிலக்கணப் பொருள்களுக்கும் தத்துவப் பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற் கோள் கொண்ட சில இடங்களில் எழுதியுள்ள விசேட வுரைகளா லும், சீவக சிந்தாமணி 362, 1141-ஆம் செய்யுட்களுக்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், மற்றும் சிலவற்றாலும் இவர் சைவசமயியாதல் வெளியாகும். இவருடைய பெயர், சிவபெருமானுடைய திருநாம மாகவே எண்ணப்படுகின்றது:

"கச்சைசே ரரவர் போலுங் கறையணி மிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்
இச்சையான் மலர்க ளூவி யிரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர் போலு நாகவீச் சுரவ னாரே"

(திருநா. திருநாகேச்சுரம், தே.)

"பச்சிலை பழம்பூ தேனும் பறித்திட்டுப் பத்தி செய்வோர்க்
கெச்சமி லிருமைப் பேறு மளித்தரு ளிறைவா போற்றி
முச்சக முதலே போற்றி மூலச்சுவட் டணியாய் போற்றி
நச்சினார்க் கினியாய் போற்றி யெனத்துதி நவிலுங் காலை"
(காஞ்சிப்புராணம், சத்தான. 11)

இவர் இப்பத்துப் பாட்டிற்கன்றித் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் சீவகசிந்தாமணிக்கும் குறுந்தொகையிற் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரை செய்தருளினர்; இன்னும் சில நூல்களுக்கு இவர் உரையியற்றின ரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை.

இவர் பதசாரம் எழுதுதல் மிகப் பாராட்டற்பாலது.

இவர் பழைய செய்யுட்களையேனும் அவற்றின் கருத்தையேனும் உரைநடையாக எழுதுவதுண்டு.

மேற்கோளாக எடுத்துக்காட்டும் நூலின் பெயரையாவது நூலாசிரியரின் பெயரையாவது எடுத்துக்கூறுதல் பெரும்பாலும் இவருக்குப் பழக்கம் இன்று.

வெளிப்படையாகக் கூறப்படாமலிருந்தும் சில சில குறிப்பைக் கொண்டு ஊகித்தறிந்து இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன செய்தி நிகழ்ந்தன என்று சீவக சிந்தாமணியில் அவ்வவ்விடத்துக் கதை நிகழ்ந்த காலத்தை விளக்கிக்கொண்டே போவர்; (21, 413, 498, 590, 851, 1564, 2029, 2033, 2106, 2706-ஆம் கவிகளின் உரைகளைப் பார்க்க)

"அறுவர்தந் நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறுன நீக்கி—மறுவரவின்
மாசா ரியனுய் மறுதலைச்சொன் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு" (ஏலாதி, 76)

என்றபடி நூலின் சமயத்தையும் நூலாசிரியருடைய கொள்கையையும் அவர் கருத்தையும் அறியவேண்டிய அளவு உழைத்தறிந்து அவற்றிற்கேற்பவே உரையெழுதுதல் இவருக்கு இயல்பு; இவருடைய உரை விகற்பங்கள் இன்னும் பலவகை.

பொருநராற்றுப்படை 141, 143, 159-ஆம் அடிகளுக்கும், சிறுபாணாற்றுப்படை 9-11, 28-30, 140-43-ஆம் அடிகளுக்கும், பெரும்பாணாற்றுப்படை 183-ஆம் அடிக்கும், மதுரைக்காஞ்சி 468, 764-5-ஆம் அடிகளுக்கும் எழுதியுள்ள விசேட இலக்கணக் குறிப்பாலும், கலித்தொகை 39, 127-ஆம் கவிகளின் விசேடவுரையாலும், சீவக சிந்தாமணி 72, 892, 893, 1913, 2690-ஆம் செய்யுட்களின் விசேட வுரைகளாலும் தொல்காப்பியத்திற்கே முதலில் இவர் உரை யியற்றினரென்று தெரிகின்றது.

இவர் சீவகசிந்தாமணிக்கு முதல்முறை ஒருரையெழுதி, அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த சைன வித்துவான்கள் சிலருக்குக் காட்ட, மற்றைப் பகுதிகள்போலத் தங்கள் சமயக் கொள்கைகள் முறையே அறிந்து எழுதப்படவில்லையென்று கூறி அவர்கள் அவ்வுரையை அங்கீகரிக்கவில்லையென்றும் அப்பால் இவர் ஆருகத நூல்கள் பலவற்றையும் அறிந்தோரிடம் முறையே கேட்டறிந்து நலமுற ஆராய்ந்து இரண்டாம் முறை உரையெழுதி அவர்களுக்குக் காட்ட அவர்கள் உற்றுநோக்கி மகிழ்ந்து பாராட்டி அதனை அங்கீகரித்தார்களென்றும் சைனர்களுள்ளும் ஏனையோருள்ளும் கன்ன பரம்பரையில் ஒரு வரலாறு வழங்குகின்றது.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் அவற்றின் உரைகளிலிருந்தும் பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி விளக்கிப் போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியினும் பயிற்சியுள்ளவராகச் சொல்லுவதுடன் பலவகையான கலைகளிலும் பயிற்சியுள்ளவரென்று சொல்லுதற்கு இடமுண்டு.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், ஆளவந்த பிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின் அவர்களுக்கும், திருமுருகாற்றுப்படையுரையில் பரிமேலழகர் கொள்கையை மறுத்திருத்தலின் அவருக்கும் இவர் பிற்காலத்தவரென்று தெரிகின்றது.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் இவரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மேற்கோளமைந்த நூற்பெயர்கள் முதலியவற்றுள் இதுகாறும் விளங்கியவை வருமாறு :—

அகத்தியம்
அகநானூறு
அணியியல்
அவிநயம்
5 அறநெறிச்சாரம்
ஆசாரக்கோவை
ஆசிரியமாலை
இராமாயண வெண்பா
இறையனாரகப்பொருள்
10 ஏலாதி
ஐங்குறுநூறு
ஐந்திணையெழுபது
ஐந்திணையைம்பது
ஔவையார் பாடல்
15 கடகண்டு
கலித்தொகை
களவழி நாற்பது
காக்கைபாடினியம்
கார் நாற்பது
20 காரைக்காற்பேயார் பாடல்
குணநாற்பது
குறிஞ்சிப் பாட்டு
குறுந்தொகை
கூத்த நூல்
25 கைந்நிலை
கொன்றைவேந்தன்
சிலப்பதிகாரம்
சிறுகாக்கைபாடினியம்
சிறுகுரீஇயுரை
30 சிறுபஞ்சமூலம்
சிறுபாணாற்றுப்படை
சினேந்திரமாலை
சீவகசிந்தாமணி
சூளாமணி

35 தகடூர் யாத்திரை
தந்திரவாக்கியம்
திணைமாலை நூற்றைம்பது
திணைமொழியைம்பது
திரிகடுகம்
40 திருக்குறள்
திருச்சிற்றம்பலக் கோவை
திருப்பாட்டு [யார்
திருமுருகாற்றுப்படை
திருவாசகம்
45 திருவாய்மொழி
திருவுலாப்புறம்
தொல்காப்பியம்
நற்றிணை நானூறு
நாடகநூல்
50 நாலடியார்
நெடுநல்வாடை
பட்டினப்பாலை
பதிற்றுப்பத்து
பரிபாடல்
55 பல்காப்பியம்
பல்காயம்
பழமொழி
பன்னிருபடலம்
பாரத வெண்பா
60 புறநானூறு [மாலை
புறப்பொருள் வெண்பா
பூதத்தாரவையடக்கு
பூதபுராணம்
பெருங்கதை
65 பெரும்பாணாற்றுப்படை
பெரும்பொருள் விளக்கம்
பொய்கையார் முதலாயி
னோர் செய்த அந்தாதி
பொருநராற்றுப்படை
மணிமேகலை
70 மதுரைக் காஞ்சி
மலைபடுகடாம்
மாபுராணம்
முத்தொள்ளாயிரம்
முதுமொழிக் காஞ்சி
75 முல்லைப்பாட்டு
மூதுரை
மோதிரப்பாட்டு
யாப்பருங்கலம்
யாழ்நூல்
80 வலசக்கடம்
வசைக்கூத்து
வளையாபதி
விளக்கத்தார் கூத்து

அமிழ்தினும் இனிய தமிழ்மடவரல்செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமை பெருமைகள் விரிவஞ்சி எழுதாமல் இவ்வளவோடே நிறுத்தப்பெற்றன; பிற வரலாறுகளைச் சீவக சிந்தாமணியின் மூன்றும் பதிப்பு முதலியவற்றிற் காண்க.

ஆசிரிய விருத்தம்

எவனுல வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

உ
கணபதி துணை

பத்துப் பாட்டு

நச்சினார்க்கினியர் உரை

முதலாவது

திருமுருகாற்றுப்படை

திருப்பரங்குன்றம்

உலக முவப்ப வலனேர்பு திரிதரு

(குறிப்புரை)

1. நூல்களின் முதலில் மங்கலமொழிகளுள் உலகமென்பதைத் தனித்தேனும் அடைமொழியுடன் சேர்த்தேனும் அமைத்தலும் அதன் பரியாயமொழிகளை அவ்வாறே அமைத்தலும் மரபு. அவற்றுட் சில வருமாறு:—"உலகந் திரியா" (மணி. 1 : 1); "உலக மூன்றும்" (வளையா. கட.); "உலகெலா முணர்ந்து" (பெரிய. கட. 1); "உலகம் யாவையும்" (கம்ப. கட. 1.) இவற்றில், உலகமென்பது தனித்து வந்தது.

"நனந்தலை யுலகம்" (முல்லை. 1); "ஆர்கலி யுலகத்து" (முது. 1 : 1); "மூவா முதலா வுலகம்" (சீவக. 1); "அலையார்ந்த கட லுலகம்" (ஆளுடைய. கலம். 1); "மலர்தலை யுலகத்து" (நாற். 1); "நீடாழி யுலகத்து" (வில்லி. கட. 1). இவற்றில், உலகமென்பது அடையடுத்து வந்தது.

"வையகம் பனிப்ப" (நெடு. 1); "பார்மண் டலத்தினில்" (ஆளுடைய. திருவந். 1). இவற்றில், உலகமென்பதன் பரியாயமொழி கள் தனித்து வந்தன.

"மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை" (சிறுபாண். 1); "மாநிலஞ் சேவடி யாக" (நற். கட. 1); "கண்ணகன் ஞாலம்"

பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்

(திரி. 1); "இருநிலமடந்தை" (திருவொற்றியூரொருபா. 1) இங்கே பரியாய மொழிகள் அடையடுத்து வந்தன.

வலனேர்பு திரிதரு: "நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு" (பட்டினப். 67.)

இந்த அடி, ஆசிரியத்துட் பிற தளை விரவி வந்ததற்கும் (தொல். செய். சூ. 28, பேர்.), தாஅ வண்ணத்திற்கும் (தொல்.செய். சூ. 26¹, பேர்.), சீர் வகை இணை மோனைக்கும் (தொல். செய். சூ. 92, ந.) மேற்கோள்.

"அது வடமொழியன்று; ஈண்டு உலகமென்றது உயிர்க்கிழவனை; உலகமுவப்ப' என்றதுபோல" (சீவக. 1, ந.); ' "உலகமுவப்ப வலனேர்புதிரிதரு"..........என்பனபோல, "புகழ்தரு" ஒருசொல்' (தஞ்சை. 407, உரை.)

2. ஞாயிறு புகழப்படுதல்: "முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி, ஏமுற விளங்கிய சுடர்" (நற். 283 : 6 - 7), "தயங்கு திரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி, வயங்குகதிர் விரிந்த வுருவுகெழு மண்டிலம்" (அகநா. 263 : 1 - 2), "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும், காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு, மேரு வலந்திரிதலான்", "உலகுதொழு மண்டிலம்" (சிலப். 1 : 4 - 6, 14 : 4), "பேராழி யுலகனைத்தும் பிறந்தகலி யிருணீங்க, ஓராழி தனை நடத்து மொண்சுடரைப் பரவுதுமே" (கலிங்க. 7); "ரவிவாழி", "அகலிடந்தொழுந் துவாதசாதித்தர்" (தக்க. 9, 354), "பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதை" (சிவ. போ. சிறப்பு.), "இகன்மைந்தன், றனைய ளித்திமற் றென்னினு மிருநிலந் தாடொழத் தக்கோனே" (வி. பா. சம்பவச். 35.)

இவ்வடி முருகன் செந்நிற முடையோன் என்பதற்கும் (சிலப். 1 : 36 - 9, அடியார். பக். 39), வினையுவமத்தின்கண்ணும் (தொல். உவம. சூ. 12, இளம்.), உருவுவமத்தின் கண்ணும் (தொல். உவம. சூ. 16, பேர்.) ஆங்கென்பது வருமென்பதற்கும், 'ஆங்கு' உவம உருபென் பதற்கும் (தஞ்சை. 283, உரை) மேற்கோள். 'ஆங்கு' என்பது வினை யெச்சமென்று பொருள்படும்படி இவ்வடியை எடுத்துக் காட்டுவர்; இ. கொ. சூ. 86, உரை.

1 - 2. சூரியன் உவமை: புறநா. 4 : 15 - 6. இவ்வடிகள் ஈரசைச் சீர்களுக்கு மேற்கோள்; தொல். செய். சூ. 12, பேர்.

3. சேண்விளங் கவிரொளி: முருகு. 19.

4. நோன்றாள்: "வன்றாளினிணை" (திவ். பெருமாள். 9:1.)

செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்

---

5. *செறுநர்த் தேய்த்த:* "*செறுநர்த் தேய்த்து*" (முருகு. 99); "*படியோர்த் தேய்த்த*" (மலைபடு. 423; பதிற். 79 : 6.)

செல்லுறழ் தடக்கை: "*நல்லமர்க் கடந்தநின் செல்லுறழ் தடக்கை*" (பதிற். 52: 10.)

இவ்வடி கட்டளைப் பொழிப்பு மோனைக்கும் (தொல். செய். சூ. 92, ந.). *உறழென்பது வினையுவமத்திற்கும்* (தொல். உவம. சூ. 12, இளம்.), *பயனிலை யுவமத்திற்கும்* (தொல். உவம. சூ. 14, பேர்.) *உரிய உவமவுருபா மென்பதற்கும் மேற்கோள்.*

6. "*செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ*" (புறநா. 3 : 6.)

மறுவில் கற்பு: "*செயிர்தீர் காட்சிக் கற்பு*" (தொல். கள. சூ. 22 : 2); "*தீதிலா வடமீனின் றிறம்*" (சிலப். 1 : 27.)

5 - 6. "*படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை, நெடுவேள்*" (அகநா. 22 : 5 - 6.)

1 - 6. *செய்யுளுறுப்பாகிய நோக்கின் வகை மூன்றனுள் இடையிட்டு நோக்கும் நோக்கிற்கு இவ்வடிகள் மேற்கோள்; 'உலகம்...... கணவனென்ற வழி, ஒளியென்பது அதன் அயற்கிடந்ததனை நோக்காது கணவனை நோக்குதலின், இடையிட்டு நோக்கிற்று'* (தொல். செய். சூ: 98, இளம்.)

7. *கமஞ்சூன் மாமழை:* "*முழங்குகடன் முகந்த கமஞ்சூன் மாமழை*" (நற். 347 : 1); "*கமஞ்சூன் மாமழை கார்பயந் திறுத்தென*" (அகநா: 134 : 2.)

"*கமநிறைந் தியலும்*" என்பதற்கு இது மேற்கோள்; தொல். உரி. சூ. 57, இளம். சே. ந.; இ - வி. சூ. 290, உரை.

8. *வாள்போழ் விசும்பு:* "*வாள்போழ் வானத்து வயங்குகதிர் சிதறி*" (நாற். சூ. 147, மேற்.); "*விண்ணம் போழும் வாள்*" (பாகவதம், 1. 8 : 13.)

வள்ளுறை: "*மைப்பனை யனைய நுந்தம் வள்ளுறை சிதறி*" (திருவால. 12 : 6.)

8 - 9. *வள்ளுறை......தலைஇய......கானம்:* "*நுண்ணுறை யழிதுளி தலைஇய*" (குறுந். 35 : 4). "*துளிதலைத் தலைஇய சாரல்*" (அகநா. 132 : 9.)

திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கையுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்

---

10. *இருள்படப் பொதுளிய.* சிலப். 26 : 108.

"பராரை - பருவரை; செய்யுள் முடிவு "பராரை மராஅத்து' எனவும், வழக்கு முடிவு பருவரை யெனவும் முடியும்" (தக்க. 156, உரை); *பராரை, மராத்தென்பன பரிய அரை மராவத்தென்பவற்றின் திரிபுகள்;* இ. கொ. சூ. 125, உரை.

9 - 10. *"தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று, முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமும்"* (கலித். 101 , 1 - 2)

11. *மராஅத் துருள்பூ: "உருள்பூங் கடம்பின் பெருவாயில்"* (பதிற். 4-ஆம் பத்தின் பதிகம்), *"உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே", "உருளிணர்க் கடம்பி னொன்றுபடு கமழ்தார்", "உரு ளிணர்க்கடம்பினெடுவேட்கு"*(பரி. 5 : 81 ; 21 : 11, 50), *"உருளிணர்க் கடம்பினெடுந்தார்க் கண்ணியன்"* (கல்.), *"உருள்பசுந் தாரவன்"* (காசி. 1: 25 : 10), *"உருள்பசுந்தா ரிளங்குமரன்"* (காசி. 32 : 1)

கார்காலத்திற்குரியது கடம்பென்பதும் அது முருகற்குரிய தென்பதும்: "கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி....முருகே" (நற். 34 : 8 - 11), *"கார்நறுங் கடம்பின் .....தெரியற், சூர்நவை முருகன்"* (புறநா. 23 : 3 - 4), *"கார்க்கடப்பந் தாரெங் கடவுள்"* (சிலப். 24-பாட்டுமடை, *"நேரிழை"*), *"காரலர் கடம்பன்"* (மணி. 4 : 49)

13. *"கிண்கிணி கவைஇய தெய்வச் சிற்றடிக் கமலப் போது"* (பாகவதம், 10. 1 : 46)

15. *"'வெண்டுகில்' என்றும், 'கோபத்தன்ன தோயாப் பூந் துகில்' என்றுங் கூறலின், துகில் வெண்மை செம்மை இரண்டிற்கும் பொது"; "என்றது, அரத்தந் தோயாமல் அரத்த நிறத்தை இயல் பாகக் கொண்ட துகிலாயிற்று; 'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' போல இத்துகிலும் இவர்க்குள்ள தென்றார்"* (சீவக. 34, 2685, ந.) *"குன்றி யேய்க்கு முடுக்கை"* (குறுந். 1)

16. *"பல்காசு நிரைத்த கோடேந் தல்குல்"* (அகநா. 75: 19), *"பல்காசு நிரைஇய வல்குல்"* (பெருங். 1. 40 : 99)

17. *வனப்பென்பது பல உறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் அழகென்பர்;* தொ. செய். 235. பேர். ந.

நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிணர் அட்டிக்

---

18. *பொலம்புனை யவிரிழை :* "*பொலம்புனை யவிரிழை கலங் கலம் புனன்மணி*" (பரி. 16 : 6)

இழை - இழைக்கப்பெற்ற அணி. தேவர்களும் செயற்கையணி களை அணிவரென்பது இங்கே உணரற்பாலது. "*பணிகள் செய்வார் மயன் முதலியோர்; ' நாவலொடு... ....இழை ' என்றார் பிறரும்*" (சீவக. 2811, ந.) *பெயரிய வென்பது பெயரடியாகப் பிறந்த வினை;* இ. கொ. சூ. 68, உரை, மேற்.

21. *செங்கால் வெட்சி :* "*செங்கால் வெட்சியு நரந்தமு நாகமும்*" (மணி. 3 : 161 - 2)

23. *தெய்வவுத்தி :* '*தெய்வவுத்தி யென்னும் பூண்*' (கலித். 96 : 13 , ந.)

தெய்வவுத்தியும் வலம்புரியும் கூந்தலில் அணியப்படுதல் : "*தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி.........மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து*" (சிலப். 6 : 106 - 8)

24. *மு.* "*திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்*" (நற். 62 : 6), "*தேங்கமழ் திருநுதற் றிலகந் தைஇயும்*" (அகநா. 389 : 3,) *தேங்கமழ் திருநுதல் :* "*தேமூ ரொண்ணுதல்*" (குறுந். 22 : 5)

25. *மகரப்பகுவாய் :* "*எறிமகர வலய மணிதிகழ் நுதலியர்*" (பரி. 10 : 77) ; "*பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை*" (கலித். 54 : 6)

26. "*இலக்கணமெல்லாம் முற்றச்செய்த குழல் என்றது திருமுருகாற்றுப்படையில், 'துவர முடித்த துகளறு முச்சி' என்பதற்கு முற்ற முடித்த வுச்சியெனப் பொருள்கொண்டவா றுணர்க*" (தஞ்சை. 7, உரை)

28. *மருதினொள்ளிணர்:* "*தேங்கமழ் மருதிணர்*" (முருகு. 34)

26 - 8. "*செருகல் - செருகுதல் ; ' துவர.........மருதின்*

கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெரியாக்

எனத் திருமுருகாற்றுப்படையுட் செரீஇ யென்பதற்குச் செருகியென உரை கூறியவாறு கண்டுகொள்க" (தஞ்சை. 42, உரை.)

29. "இலைக்கழு நீர்க்கணுஞ் சிவப்பிற் கேழ்த்தவே" (சீவக. 1016); 'கண்ணும் நீர்க்கீழருப்பினது சிவப்பினுஞ் சிவந்தன' (சீவக. 1016, ந.)

30. இணைப்புறு பிணையல்: "இணைத்த கோதை" (முருகு. 200)

31. காதில் அசோகந் தளிரைச் செருகல்: "செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்" (முருகு. 207), "சாய்குழைப் பிண்டித் தளிர்காதிற் றையினள்", "கடிமலர்ப் பிண்டிதன் காதிற் செரீஇ" (பரி. 11 : 95, 12 : 88)

36. வேங்கைத்தாதை அணிதல்: "புலியுரு மருளப் பூத்த பூந் துணர் வேங்கை யொள்வீப், பலபறித் துகுத்த தாது பைந்தொடி மகளிர் நீட்ட, அலர்கரத் தேந்தி யம்பொற் சுணங்கெனும் வேங்கை யோடும், குலவவெங்களபக் கொங்கைக் குவட்டின்மேற் செறியப் பெய்தும்" (காஞ்சிப். திருக்கண். 256)

34 - 5. நகிலிற்குக் கோங்கரும்பு: "யாணர்க் கோங்கி னவிர் முகை யெள்ளிப், பூணகத் தொடுங்கிய வெம்முலை" (சிறுபாண். 25 - 6), "முலையேர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்" (குறுந். 254 : 2), "முதிர்கோங்கின் முகையென.........பெருத்தநின் னிளமுலை" (கலித். 56: 23 - 4), "கோங்குமுகைத் தன்ன குவிமுலை" (அகநா. 240 : 11), "கோங்கின், முகைவனப் பெய்திய விளமுலை" (புறநா. 336 : 9 – 10)

37. தளிர்களை அப்புதல்: "பொரிப்பூப் புன்கி னெழிற்றகை யொண்முறி, சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி" (நற். 9 : 5 - 6)

35 - 7. சூளா. சுயம்வர. 79.

24 - 37. "தேங்கமழ் திருநுதல் திலகந் தைஇயும், பல்லிதழ் மெதிர்மலர் கிள்ளி வேறுபட, நல்லிள வளமுலை யல்லியொ டப்பியும்" (அகநா. 389 : 3 – 5)

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்

---

38 *வென்றடு விறல் : "வென்றடு விறற்களம்"* (முருகு. 55) *கோழிக்கொடி* : முருகு. 219.

38 - 9. *கொடியை வாழ்த்தல் : "கொடிபாடித் தேர்பாடி" (முத்.), "பாம்புண் பறவைக் கொடிபோல வோங்குக......கொடி"* (பு.வெ. 227)

12 – 41. *சூரரமகளிர்க்கு உரியவை.*

43. *சுடர்ப்பூங் காந்தள் : "தீயி னன்ன வொண்செங் காந்தள்"* (மலைபடு. 145) *என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.*

இவ்வடி பெருமையிற் சிறப்பிற்றிராக் குறிப்பின் வந்த உவமத்திற்கு மேற்கோள்; தொல். உவம. சூ. 10, பேர்.

42 - 3. *மந்தியு மறியா.........காந்தள் : "கலைகை யற்ற காண்பி னெடுவரை"* (மலைபடு. 315), *"மந்தியு மறியா மரம்பயி லொரு சிறைக், குன்றக வெற்பன்"* (நற். 194 : 7), *"கடுவனு மறியாக் காடிறந் தோளே"* (ஐங். 374 : 4), *"மந்தியு மறியா மரம்பயி லிறும்பி, னொண்செங் காந்த ளவிழ்ந்த வாங்கண்", "உயர்வரை மருங்கிற் காந்தளஞ் சோலைக், குரங்கறி வாரா மரம்பயி லிறும்பில்"* (அகநா. 92 : 8 – 9, 368 : 8 - 9)

45. *"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு"* (பரி. 5 : 1); *"பாருடைப் பனிக்கடல்"* (சீவக. 274); *"பார்முதிர் பனிக்கடல்"* (பாகவதம், 3. கருத்தமன். 50)

46. *"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்"* (அகநா. 59: 10)

45 - 6. *"வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற, பைம்பூட் சேஎய்"* (பெரும்பாண். 457 - 8)

"தடிதல் - வெட்டுதல்; 'சூர்முதல்......நெடுவேல்' என்பதனு ணர்க" (கஞ்சை. 405, *உரை)*

கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்

---

49. *கழல்கட் கூகை : "கழல்கட் கூகை குழறுகுரற் பாணி"* (பதிற். 22 : 36)

49 – 60. *போர்க்கள வருணனை.*

50 - 51. " *மோடேந் தரிவை.........சார்ந்தோர் துட்கெனும் பேஎ யுருவம்*" (பெருங். 2. 8 : 106 - 10)

53. *கண்டொட்டுண்ட : "கண்டொட் டுண்டு"* (மணி. 6 : 125)

56. " *கொள்ளிவாய்ப்பேய் சூழ்ந்து, துணங்கையிட் டோடி யாடித் தழலு ளெரியும் பிணத்தை வாங்கித் தான்றடிதின்று* " (காரைக். திருவாலங்காட்டு. 7). *துணங்கை :* கலித். 70 : 14.

58. *அறுவேறு வகையின் : 'அறு' என்னும் முதனிலைத் தனிவினை அற்று எனப் பொருள்பட்டு வினையெச்ச மாயிற்றென்பதற்கு மேற்கோள்;* இ - கொ. சூ. 66, உரை; நன். வி. சூ. 351.

57 - 61. "*ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச், சூர் கொன்ற செவ்வேலான்*" (கலித். 93 - 25 : 6), "*ஈருருவத் தொரு பெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்*" (தொல். செய். 152, பேர். ந. மேற். "*செஞ்சுடர்*")

59 - 61. "*கூடார் மெலியக் கொலைவே னினைந்தான் – அவர் வருந்தும்படி வேல் நினைந்தான் என்றது முருகனை ; 'அவுணர்......... சேஎய்' என்றூர்*" (சீவக, 2328, ந.)

45 - 61. "*மாக்கடன் முன்னி, அணங்குடை யவுண ரேமம் புணர்க்கும், சூருடை முழுமுத றடிந்த பேரிசைக், கடுஞ்சின விறல் வேள்*" (பதிற். 11 : 3 – 6); *கடுஞ்சூர் மாமுத றடிந்த றுத்தவே, லடுபோ ராள*", "*நீர்நிரந் தேற்ற நிலந்தாங் கழுவத்துச், சூர்நிரந்து*

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி

சுற்றிய மாதபுத்த வேலோய்" (பரி. 9: 70 - 71, 18: 3 - 4); "உரவுநீர் மாகொன்ற வென்வேலான்", "மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர், வேல்வல்லான்" (கலித். 27:15-6, 104:13-4); "உரவுநீர் மாகொன்ற வேல்", "பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட், சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே" (சிலப். குன்றக். பாட்டுமடை, 'உரையினி'); "அகறிரைப் பரப்பிற் சடையசைந் தலையாது, கீழிணர் நின்ற மேற்பகை மாவின், ஒருட லிரண்டு கூறுபட விடுத்த......அமையா வென்றி யரத்தநெடு வேலோய்", "கட்டுடைச் சூருடல் காமங் கொண்டு, பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு, மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேல்", "கடன்மாக் கொன்ற தீம்படர் நெடுவேல்", "கருங்கடல் குடித்தலிற் பெருந்தழற் கொழுந்து, மாவுயிர் வௌவலிற் றீவிழிக் கூற்றும்.........ஆகிய மணிவேற் சேவலங் கொடியோன்", "மணிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த, களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற், பணிப்பகை யூர்தி", "மாவெனக் கவிழ்ந்த மறிகட லொன்றும், கடுங்கனற் பூழி படும்படி நோக்கிய, தாரையெட் டுடைய கூரிலை நெடுவேற், காற்படைக் கொடியினன்", "மேல்கடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு, நெடுங்கடற் பரப்பு மடுந்தொழி லரக்கரு, மென்னுளத் திருளு மிடைபுகுந் துடைத்த, மந்திரத் திருவேன் மறங்கெழு மயிலோன்", "நீர்மாக் கொன்ற சேயோன்", "பெருங்கள விணர்தந் தலைகீழ்க் குலவிய, விடமாக் கொன்ற நெடுவேற் குளவன்" (கல்.); "கருங்கடலுண் மாத்தடிந்தான்" (பு. வெ. 103)

62. செம்மலுள்ளம்: "செம்ம லுள்ளமொடு செல்குவிராயின்" (சிறுபாண். 145), "செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு" (குறுந். 270: 5; 275: 5), "அருந்தொழின் முடித்த செம்ம லுள்ளமொடு" (அகநா. 184: 5)

63. 'புலம்புரிந்துறையும்' என்பதும் பாடம்.

65. 'இன்னிசை' என்பதும் பாடம்.

67. "ஆரெயில் கொளக்கொள, நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி" (மதுரைக். 367-8); "வென்றெழு கொடியொடு" (நெடுநல். 87); "மலைநீர், வென்றெழு கொடியிற் றோன்றும்"

வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்

(மலைபடு. 581 - 2); "வான்றோய் வெல்கொடி" (பதிற். 69 : 1); 'வென்றுவென் றெடுத்த கொடிதான் நுடங்குமதில்' (சிலப். 15 ; 217, அடியார்.)

68. மதில்மேற்பந்தும் பாவையும் நாற்றல் : "பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலு, மொன்றிவை பலவுஞ் சென்றுசென் றெறியு, முந்தை மகளிரை யியற்றி" (தொல். புறத்திணை. சூ. 12, ந. மேற்.), "பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும் பலவுஞ்சென் றெறிகிற்கு, முந்தை மாதரை யியற்றுபு பின்றைமொய்ப் பகழிவா யிலிற்றூக்கி', (தணிகை. சீபரிபூரண. 58); "பகைவரைப் பாவை மாறெனத் தெரிப்பப் பந்தொடு பாவைக டூங்கித், தகைசிறி தறியா வாயில்சா ஞஞ்சிற் றடப்பெரு நொச்சியும்,' (திருநாகைக். திருநகரப். 90)

வரிப்புனைபந்து : "வரியணி பந்தும்" (நற். 305 : 1), "வரிப்பந்து கொண்டொளித்தாய்" (பு. வெ. 238)

வரியென்னும் முதனிலைத் தனிவினை வரிந்தென்று வினையெச்சப் பொருள்பட்டு வந்தது; வரிப்புனை பந்து, வரிந்து புனைந்த பந்தென வருதல்பற்றித் தொகைவிரியென இரண்டே யென்பர்; இ. கொ. சூ. 66, 84, உரை ; நன். வி. சூ. 351.

69. போரரு வாயில் : "புலாஅ லம்பிற் போரருங் கடிமிளை" (புறநா. 181 : 5)

70. திருவீற்றிருந்த தீதுதீர் : "திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்" (நெடுநல். 89); மு. "திருவீற் றிருந்த திருநகர் வரைப்பின்" (பெருங். 1. 40 : 232)

71. "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" (மதுரைக். 429); "மாடமலி மறுகிற் கூட லாங்கண்" (அகநா. 346 : 20); "மாட மறுகின் மருவி மறுகுறக், கூடல் விழையுந் தகைத்து", "நான்மாடக் கூட னகர்" (பரி. 20 : 25 - 6, "உலகமொரு"); "மதிமலி புரிசை மாடக் கூடற் பதி" (திருமுகப்பாசுரம்); "கொடிமாடக் கூடல்" (சிலப். குன்றக். பாட்டுமடை : 24)

73. இது வல்லிசை வண்ணத்திற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 217, பேர்; யா. வி; யா. கா. ஒழிபு. சூ. 8, உரை.

71 - 3. "முருகாற்றுப்படையுள், 'மாடமலி.....துஞ்சி' என்ற வழி, ஒருமுகத்தாற் பாண்டியனையும் இதனுட் சார்த்தியவாறு காண்க" (தொல். புறத். சூ. 27, இளம்.)

கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண் போன் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று

திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்

நகரோடு திசைசுட்டிக் குன்றத்தைக் குறித்தல்: "கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது, நெடும்பெருங் குன்றத்து" (அகநா. 4:14-5)

75. "கண்போ னெய்தல்", "கழிசேர் மருங்கிற் கணைக்கா னீடிக், கண்போற் பூத்தமை கண்டு நுண்பல, சிறுபா சடைய நெய்தல் குறுமோ" (நற். 8:8, 27:9-12); "பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்......கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந். 9:4-6); "கண்போ னெய்தல்" (ஐங். 151:3); "மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பேதா......பல்லிதழ் மலருண்கண்" (கலித். 45:9-11); "நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலம், கண்ணென மலர்ந்த சுனையும்", "இருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்" (அகநா. 38:10-11, 170:4); "கண்ணவிழ் நெய்தலும்" (சிலப். 14:77); "கண்ணின் மலரக் கருநீலம்". "குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணோ" (பு. வெ. 205, 290)

76. "அஞ்சிறை வண்டி னரியின மொய்ப்ப" (ஐங். 489)

73-6. "முட்டாள சுடர்த்தாமரை, கட்கமழு நறுநெய்தல், வள்ளித ழவிழ்நீலம்......வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை" (மதுரைக். 249-53)

77. "குன்றமர்ந்து" (பரி. 17:29)

71-7. கூடற்குடவயிற் பரங்குன்று: "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சினமிகு முருகன் றண்பரங் குன்றத்து" (அகநா. 59:10-11); "கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது, பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய, ஒடியா விழவி னெடியோன் குன்றத்து, வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து" (அகநா. 149:14-7)

80. படுமணியிரட்டு மருங்கு: "படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தா, ணெடுநல் யானை", "ஒளிதிக ழோடை பொலிய மருங்கிற், படுமணி யிரட்ட வேறி", "தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத, லாடியல் யானை" (புறநா. 72:3-4, 161:18-9, 165:6-7)

81. மு. "கூற்றத் தன்ன மாற்றரு முன்பின்" (புறநா. 362:7).

கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்

---

82. *காற்றுச் செலவுக்கு:* முருகு. 170; "காலகிளர்ந் தன்ன வூர்தி" (பதிற். "இருங்கண்யானை"); "வளியி னியன்மிகுந் தேருங் களிறும்" (கலித் : 50 : 15); "நீல யானை...கால்கிளர்ந்து" (மணி. 19 : 20 - 22); "காலிற் கடியது" (பெருங். 1. 42: 226); "காற்றன்றேற், கடுமை யென்னும்......மத்தயானை" (கம்ப. அதிகாயன். 216)

81 - 2. "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" (பதிற். 11 : 6); "ஊர்ந்ததை, எரிபுரை யோடை யிடையிமைக்குஞ் சென்னிப், பொருசமங் கடந்த புகழ்சால் வேழம்" (பரி. 21 : 1 - 2); "காற்றி னிமிர்ந்த செலவிற்றுய்க் - கூற்றுங், குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே...களிறு" (முத்.); "காற்றெனக் கடுங்கட் கூற்றென... தோன்றிய தடலருங் கடாக்களிறு", "காற்றெனக் கடலெனக் கருவரை யுருமெனக், கூற்றெனக் குஞ்சரங் கொண்டுபுக் கானரோ" (சீவக. 973, 1837); "பாகன், காற்றெ னத்தெறு கனலெனக் கனைகட லென்னக், கூற்ற மென்னமேற் றாண்டினன் குவலயா பீடம்" (பாகவதம், 10. 17 : 14)

. 83 - 4. *ஐவகை யுருவின்முடி:* "உவமை நீங்கிய வைவகைத் தாயவேற் றுருவின், மவுலி" (கந்த. முதனாட்பானு. 252)

85. *உறழ்:* வினைப்பா லுவமம்; தொல். உவம. சூ. 12, பேர். மேற்.

89. *தாவில் கொள்கை:* முருகு. 175. மு. "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" (குறள். 266), "என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்" (கம்ப. அயோத்தி, மந்திர. 15.)

91. *மாயிருண் ஞாலம்:* "இருள்தருமா ஞாலம்" (திவ்.)

மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே
ஆங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்

---

95. "மரபுளி வழாஅ வந்தணர் - முறைமையின் வழுவாத அந்தணரென ஐந்தாவது விரிதலானும்" (தொல். இடை. சூ. 2, ந.)

95 - 6. மந்திரவிதியின் மரபுளி வழாஅ வந்தணர் : "மந்திர விதியி னந்த ணாளன்" (பெருங். 3 . 6 : 42)

99 - 100. பகைவரை வென்று களவேள்வி வேட்டல் : "அரசு பட வமருழக்கி.........களம்வேட்ட, அடுதிறலுயர் புகழ்வேந்தே" (மதுரைக். 128-30); "அரைசுபட வமருழக்கி......அடுகளம் வேட்ட வடுபோர்ச்செழிய", "புலவுக்களம் பொலிய வேட்டோய்" (புறநா. 26 : 6-11, 372 : 12); "பாண்டியன் சோழற் காய்ந்து, பெருங்கள வேள்வி செய்த பீடுடைக் காட்டு நாட்டு" (திருவால. 44 : 54); களவேள்வி யென்பது வாகைத் திணையுள் ஒரு துறைக்குப் பெயர்; "அடுதிற லணங்கார, விடுதிறலான் களம்வேட்டன்று" (பு. வெ. 160) என்பது அதன் இலக்கணம்.

104. மு. புறநா. 59 : 1, 152 : 10; "தாழார மார்பினன்" (பு. வெ. 43)

104 - 5. மார்பிற், செம்பொறி வாங்கிய மொய்ம்பில் : "பொறி யுடை மார்ப" (பெருங். 5. 2 ; 8); "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்" (சீவக. 1706); "செவ்வரை யாகத்தான்" (சீகாளத்திப். நக்கீர. 33)

106. வண்புகழ் : "வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந் தென" (முருகு. 285); வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (தொல். செய். சூ. 79); "வண்புகழ் பாரி காரி" (திருப்புகழ்)

104 - 6. "மார்பிடை வரியு மூன்றுள" என்பதற்கு இவ்வடி மேற்கோள்; சீவக. 1462, ந.

விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கப், பன்னிரு கையும் பாற்பட வியற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்

வசிந்து வாங்கென்பது ஆசிரியவுரிச்சீராகிய நிரைபு நேர்புக்கு உதாரணம்; தொல். செய். சூ. 13, பேர் ந.

111. ஐயிரு வட்டம் : "கையொடு வானிடைச் செல்வ கணிப்பி, லையிரு வட்டம்" (கந்த. சூரபன்மன்வதை. 123)

114. "தொடியணி தோளன்" (முருகு. 211), "கழறொடிச் சேய்" (குறுந். 1 : 3)

115. "பாடின் படுமணி யூடுறுத் திரங்க" (பெருங். 1. 38 : 153); "பாடின் படுமணி யார்த்திடும்" (கந்த. திருவிளை. 12)

116. நீனிற விசும்பு : பெரும்பாண். 135; மதுரைக். 581 : பட்டினப். 67; "இருணிற விசும்பில்" (மலைபடு. 1)

118. இனைத்தென அறிந்த சினைக்கிளவி வினைகொண்டு முடியுமிடத்து உம்மை பெறுமென்பதற்கு இது மேற்கோள்; தொல். கிளவி. சூ. 33, சே. ந.; "பன்னிரு.........இயற்றி யென்புழியும், தொகுதிப் பெயர் வினையோடு தொடராது கையென்பதனோடு ஒட்டி நிற்றலின், வினைப்படுதொகுதி யன்றாகலான், உம்மை வேண்டா பிறவெனின், அங்ஙனம் ஒட்டி நின்றதாயினும், நான்மறை முதல்வர், ஐந்தலைநாக மென்பன போலாது, இருசொல்லும் ஒருபொருண்மேல் வருதலிற் கையென்பதனோடு ஒட்டி யியைந்த இயற்றியென்னும் வினை தொகுதிப் பெயரோடும் இயைந்ததாம்; அதனால் அது வினைப்படு தொகுதியாமாகலின், உம்மை வேண்டுமென்க" (இ. வி. சூ. 315, உரை)

90 – 118. கந்தர் கலிவெண்பா, 42 – 53 கண்ணிகளிற் கூறப்பட்டுள்ள முருகக் கடவுளின் திருமுகங்கள், திருக்கரங்கள் இவற்றின் செயல்கள் பெரும்பாலும் இவ்வடிகளைத் தழுவியே விளக்கப்பட்டிருக்கின்றன.

வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று

---

120. *வயிரும் வளையும் இணைத்துச் சொல்லப்படுதல்* : "*வயிரும் வளையு மார்ப்ப*" (முல்லை. 92); "*வளைநரல வயிரார்ப்ப*" (மதுரைக். 185); "*பயிர்வளை யரவமொடு வயிரெடுத் தூதி*" (பெருங். 1. 38: 4); "*சங்குங் கருங்கோடும்......ஆர்ப்ப*", "*வளைகள் வயிரியம்பும் வாட்டானை வேந்தே*" (பு. வெ. 24, 207)

121. *உருமிடி முரசம்* : "*முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு, நிரைசெல னிவப்பிற் கொண்மூ*" (குறிஞ்சிப். 49-50); "*விண்ணதிர் இமிழிசை கடுப்பப்பண்ணமைத்துத் திண்வார் விசித்த முழவு*", "*மழையெதிர் படுகண் முழவுகண் ணிகுப்ப*" (மலைபடு. 2 - 3, 532); "*இன்னிசை முரசி னிரங்கி...சென்மழை தழுவ*" (நற். 197 : 10-12); "*கடிப்பிகு முரசின் முழங்கி*" (குறுந். 270:3); "*படுமழை முரசி னிரங்கி*" (புறநா. 350: 4); "*இடிமுர சியம்ப*", "*முரசதிர் பவை போன் முழங்கிடி பயிற்றி*"; (பரி. 4 : 19, 22 : 4); "*இடியுமிழ் முரசம்*" (அகநா. 354 : 2, சீவக. 2900); "*உருமி னிடிமுர சார்ப்ப*" (முத்.) "*கோல மார்முர சிடியுமிழ் தழங்கென முழங்க*" (சீவக. 2392); "*இடியார் பணைதுவைப்ப*" (பு. வெ. 121); "*முழங்கின முகிலென முரசமே*" (தக்க. 530)

முருகனுக்கு மயிற்கொடியு முரியது : "*மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி*" (பரி. 17 : 48), "*பல்பொறி மஞ்ஞை வெல் கொடி யுயரிய*" (அகநா. 149 : 15), "*மணிமயி லுயரிய மாறா வென்றிப், பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்*" (புறநா. 56 : 7-8). '*தேவசேனாபதியுடைய கொடிகளாகிய மயில்கள்*', '*பிள்ளையாருடைய துவசவாகனமான தோகை மயில்கள்*' (தக்க. 23, 114, உரை)

"*முருகக் கடவுளின் கொடி கோழிக் கொடியன்றோ வெனின் அவர் மயிற் கொடியையு முடையார்; 'பல்பொறி...அகவ' திருமுருகாற்றுப் படை; மற்றும் புராணங்களிற் கண்டுகொள்க*" (தக்க. 23, உரை)

124. "*உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்*" (மணி. 1 : 1)

125. "*வரைவயிறு கிழித்த நிழறிகழ் நெடுவேற், றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்*" (தொல். களவியல், சூ. 23, மேற். "*பையுண் மாலை*"); "*திருமணி விளக்கி னலைவாய்ச், செருமிகு சேஎய்*" (அகநா. 266 : 20-21); "*வெண்டலைப் புணரி யலைக்குஞ்*

திருவாவினன்குடி

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானின்
உரிவை தைஇய வூன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதும்
கற்ரேு ரறியா வறிவினர் கற்ரேர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்

செந்தில், நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை" (புறநா. 55-18-9); "சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்று, மேரகமு நீங்கா விறைவன்" (சிலப். குன்றக்.); "நஞ்செந்தின் மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்" (தே. மறைக்காடு.)

127. புரையென்பது மரபுபற்றி வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உவம. சூ. 17, இளம்.

128. "மாசற விளங்கிய யாக்கையர்" (மதுரைக். 456)

130. "உயர்நிலைகற் றென்பியக்கங் கண்டும் புறந்தரார்" (நீதி நெறி. 87); சிதம்பர மும்மணிக்கோவை, 2 : 41.

138. "புகைவிரிந் தன்ன பொங்குதுகில்" (புறநா. 398 : 20); "ஆவி யன்ன பூந்துகில்", "ஆவி யந்துகி லாரமார்ந் தார்களே", "பாலா ராவிப் பைந்துகில்" (சீவக. 67, 873, 1094); "ஆவி நுண்டுகில் யாப்புறுத் தாயினும்", "ஆவி நுண்டுகில் யாப்புறுத்து", "ஆவி நுண்டுகி லணிநலம்" (பெருங். 1. 36 : 64, 165; 1. 40 : 228); "கரியவன் வெண்டுகில் கவர்தல் காட்டுவான், விரிமலர்ப் பசுந் தொடை வேனின் மன்னவன், பொருகணை முகத்தெழு புகைமு கந்துற, நிரைவளைச் செங்கர நீட்டு வார்சிலர்" (பாகவதம். கோவியரை மணந்த. 55)

140-41. "குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பு" (மலைபடு. 23.)

மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்

143–4. ''தேமா மேனிச் சில்வளை யாயம்'' (சிறுபாண். 176); ''நறுவடிப், பைங்கண் மாஅந் தந்தளி ரன்ன, நன்மா மேனி'' (குறுந். 331 : 5–7); ''கழிகவி னிளமாவின் றளிரன்னாய்'' (கலித். 57 : 13); ''மாந்தளிரே மாமேனி'' (சீவக. 652)

145. பசலைக்குப் பொன் : ''பொன்னிற் பசந்து'', ''பொற்சுணங் கேர்வர மாமுலை'' (பாண்டிக்கோவை); ''நின்மேனி, பொன்னிற் பசந்து புலம்புவதென்'' (கிளவித்தெளிவு).

கடுக்குமென்பது உருவுவமத்தின்கண் வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உவம. சூ. 16, இளம். பேர்; இ.வி.சூ. 642, உரை.

148. கடுவொடு ஒடுங்கிய எயிறு : புறநா. 17 : 38.

151. புள்ளணி நீள்கொடி : ''புள்ளணி நீள்கொடிப் புணர்நிலை தோன்றும்'' (சிலப். 11 :136); ''மண்ணுறு திருமணி புரையு மேனி, விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்'' (புறநா. 56 ; 5–6)

150–51. ''பூவைப்பூ மேனியான், பாம்புண் பறவைக் கொடி'' (பு. வெ. 227)

151–2. வெள்ளேறு வலவயி னுயரிய : ''ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த, சீர்கெழு கொடியு மவ்வே றென்ப'', ''ஏற்று வல னுயரிய'' (புறநா. 1 : 3–4; 56 : 1); ''அரசப் பெருங்கொடி யொருவலத் துயரி'' (பெருங். 3. 19 : 196)

153–4. ''உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக், கண்ண ணங் கவிரொளிக் கடவுள்'' (பெருங். 1. 53 : 15–6; 5. 4 : 51-2); ''எண்ணார் மும்மதி லெய்த விமையா முக்கண்........பிஞ்ஞகனே'' (தே. திருக்கள்ளில், 3); ''இமையாத முக்கண் மூவரிற் பெற்றவர்'' (திருச்சிற். 14)

நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்

" 'இமையா......................செல்வனும்' (திருமுருகாற்றுப்படை) "இமைத்தகண் விழித்ததுபோல விழிக்க வெனச் சொல்லியது: விழித்தலாவது பிரச்சுவலித்தல்" (நக்க. 334, உரை)

164–5. "நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டின்" (பெரும்பாண். 403-4)

167. நால்வே றியற்கைப் பதினொரு மூவர்: "நாலெண் டேவரு நயந்துநிற் பாடுவோர்" (பரி. 3 : 28)

167–8. "நால்வகைத் தேவரு மூவறு கணங்களும்" (சிலப். 5 : 176)

169. "மீன்பூத் தன்ன வான்கலம்" (பெரும்பாண். 477)

170-71. வளியிடைத் தீயெழுந்தன்ன திறல்: "கான்முளை, யெரி நிகழ்ந் தன்ன நிறையருஞ் சீற்றம்" (பதிற். "இருங்கண்"); "வளித் தலைஇய தீயும்" (புறநா. 2 : 4)

173. உருமிடித்தன்ன குரலினர்: "இடியன்ன பெருங்குரலாள்" (தகடூர்.)

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்

திருவேரகம்

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று

---

175. "தாவில் கொள்கைத் தந்தொழில்" (முருகு. 89)

177. "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல். புறத். 20); "ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்தல், ஈத லேற்றலென் றாறுபுரிந் தொழுகும், அறம்புரி யந்தணர்" (பதிற். 24 : 6-8)

181–2. "அந்தண ரருங்கட னிறுக்கு, முத்தீ", "ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர், முத்தீ" (புறநா. 2 : 22–3, 367 : 12–3)

179-82. "ஒன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர், முத்தீச் செல் வத்து நான்மறை முற்றி, ஐம்பெரு வேள்வியுஞ் செய்தொழி லோம்பு, அறுதொழி லந்தணர்" (சிலப். 23 : 67-70)

183. "ஒன்பது போலவர் மார்பினி னூலிழை" (தே. திருநா.)

181-4. "புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை, முந்நூன் மார்பின் முத்தீச் செல்வத், திருபிறப் பாளர்" (சிலப். 25 : 126-8)

185. "அட்டா னானே குட்டுவன், உச்சிக் கூப்பிய கையின ரென் றாற் போல்வன கடைச் சங்கத்திற்கு ஆயின சொற்கள் இக்காலத் திற்கு ஆகாவாயின" (தொல். செய். சூ. 80, ந.) வினைக்குறிப்பு முற்று வினையெச்சமாயிற்றென்பதற்கு இவ்வடி மேற்கோள்; நன். வி. சூ. 351.

186-7. "நாவியன் மந்திர நடுங்கா தோதி" (மணி. 23 : 52)

குன்றுதொருடல்

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்கால்

---

192. "வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்" (பட்டினப். 85)

191-2. "குல்லை குளவி கூதளங் குவளை" (நற். 376 : 5); "கூதளங் கவினிய குளவி முன்றில்," "நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய" (புறநா. 168 : 12, 380 : 7)

193. "நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்" (அகநா. 26 : 14)

195. "வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்", "திருந்தமை விளைந்த தேக்க டேறல்" (மலைபடு. 171, 522); "தூம்பகம் பழுநிய தீம்பிழி" (பதிற். 18 : 21); "நெடுங்க ணூடமைப் பழுநிக் கடுந்திறற், பாப்புக்கடுப் பன்ன தோப்பி", "அம்பணை விளைந்த தேக்கட் டேறல்' (அகநா. 348 : 6-7, 368 : 14)

194-7. கட்குடித்துக் குரவை யயர்தல் : "அறுங்குறும் பெறிந்த கானவ ருவகை, திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென, நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு, மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென, வான்றோய் மீமிசை யயருங் குரவை" (மலைபடு. 318-22); "பெருமலை, வாங்கமைப் பழுநிய நறவுண்டு, வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே" (நற். 276 : 8-10); "குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள், வாங்கமைப் பழுநிய தேறன் மகிழ்ந்து, வேங்கை நீழற் குரவை யயரும்" (புறநா. 129 : 1-3)

196-7. "தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ, மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்து" (அகநா. 118 : 3–4); "தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்" (சிலப். 24 : 16)

197-8. பெருங். 1 : 35 : 183.

198-200. "தண்கயத் தமன்ற வொண்பூங் குவளை, யரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி, பின்னுப்புறந் தாழக் கொன்னே சூட்டி" (அகநா. 180 : 5-7); "கூருகிர் விடுத்ததோர் கோல மாலை" (சீவக. 1466)

குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்கு றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

---

199. "குண்டுசுனைக் குவளையொடு" (நற்.ந். 59 : 2)

"குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி, நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ யென்பன, பூத்தபூவான் இயன்ற கண்ணி, நூலாத நூலான் இயன்ற கலிங்கமென ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படுபொருண்மேல் நின்றன" (தொல். வினை. சூ. 37, ந.); இவ்வடி, பெயரெச்சம், செய்வதாதி அறுபொருட் பெயரன்றிப் பிறபெயர் எஞ்ச நின்றதற்கு மேற்கோள்; (நன். வி. சூ. 340); "நுண்டுகில், குண்டு... கண்ணி என்றாற் போல ஒற்றுமை நயம்பற்றி, நுண்ணிய நூலாற் செய்த துகிலென்று கொள்க" (தஞ்சை. 217, உரை)

200. "இணைப்புறு பிணையல்" (முருகு. 30)

202. "செங்கான் மராஅத்து" (நற். 148 : 5, ஐங். 381 : 2). வாலிணர் : "மராஅத்து வாஅன் மெல்லிணர்" (அகநா. 127: 13); "மராஅத்து......வலஞ்சுரி வாலிணர்" (ஐங். 383 : 2–3)

203. "சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை" (அகநா. 131 : 4)

201–4. "பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குல்" (நற். 8 : 2); "தண்ணறும் பிடவமும் தவழ்கொடித் தளவமும், வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையு, மன்னவை பிறவும் பன்மலர் துதையத், தழையுங் கோதையு மிழையு மென்றிவை, தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளை யாடு, மடமொழி யாயத்தவர்" (கலி.ந். 102 : 2–7); "அம்பூந் தொடலை யணித்தழை யல்குல், செம்பொறிச் சிலம்பி னிளையோள்" (புறநா. 341 : 2–3); "அந்தழை யல்குலும்" (பு. வெ. 123)

205. மயில் கண்டன்ன மடநடை: "மடநடை மஞ்ஞை" (முருகு. 310); "பீலி மஞ்ஞையி னியலி" (பெரும்பாண். 331); "நன்மா மயிலின் மென்மெல வியலி" (மதுரைக். 608); "அணிமயி லன்ன வசைநடைக் கொடிச்சியை" (ஐங். 258 : 2); "மணிமயிற் றெழில்" (பரி. "வானூரெழிலி", 62); "வருநல மயிலன மடநடை மலைமகள்" (தே. இடைமருது.); "மயிலெனப் பேர்ந்து" (திருச்சிற். 224); "நடைமயிலே" (பிரயோக. 42)

"மயில் .....மகளிர்", "கண்டன்ன" (இ. கொ. சூ. 86, 117, மேற்.)

செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு

---

206. *"பவழத் தன்ன மேனித் திகழொளிக், குன்றி யேய்க்கு முடுக்கை.....சேவலங் கொடியோன்"* (குறுந். கடவுள். 2-5); *"உடையு மொலியலுஞ் செய்யை......உருவு முருவத்தீ யொத்தி"* (பரி. 19 : 97-9); *"குன்றியுங் கோபமு மொன்றிய வுடுக்கை"* (தொல். உவம. சூ. 11, பேர். மேற்.); *"குன்றி கோபங் கொடிவிடு பவளம், ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்"* (தொல். சொல். இடை. 42, சே. மேற்.); *"வென்றிச் செவ்வேள்"* (சிலப். 25: 25)

207. முருகு. 31-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க; *"ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ"* (குறிஞ்சிப். 119)

208. *"கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன்"* (அகநா. 76 : 7)

209. *"வல்லானென்னும் வினைக்குறிப்புமுற்று வினையெச்சமாய் நின்றது; என்னை? திருமுருகாற்றுப்படையுள், குழலன் கோட்டன் குறும்பல்லியத்த னென்பதற்குக் குழலை யூதிக் கோட்டைக் குறித்துப் பல்லியத்தை ஒலிப்பித்தென முற்றுவினையை எச்சமாக நச்சினார்க்கினியர் கூறியவுரையிற் கண்டுகொள்க"* (தஞ்சை. 8, உரை.)

211. நெடியன்: *"உருகெழு நெடுவேள்"* (முருகு. 273); *"கடம்பமர் நெடுவேள்"* (பெரும்பாண். 75); *"நெடியாய்"* (பரி. 19 : 84); *"நெடுவேட் பேண", "வெறிகமழ் நெடுவேள்", "நெடுவேண் மார்பி னாரம் போல", "காடுகெழு நெடுவேள்"* (அகநா. 22 : 6, 98 : 27, 120: 1,382. 5); *"நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை"* (புறநா. 55 : 19). தொடியணி தோளன் : *"கழறொடிச் சேஎய்"* (குறுந். 1:3)

210-11. *"சேவலங் கொடியோன் காப்ப"* (குறுந். கடவுள். 5);

"சேவற் கொடியன் தொடியணி தோளன்......எனத் தொடர் மொழியீற்றின் விகுதி பொருந்தியது" (இ. கொ. 117, உரை)

212. *"நரம்பின் முரலு நயம்வரு முரற்சி, விறலியர்"* (மதுரைக். 217-8); *"நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின்குரல் விறலியர்"* (மலைபடு. 535-6); *"நரம்பார்த் தன்ன தீங்கிள

குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்

வியளே'' (ஐங். 185: 4); ''இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி ஞளோ, நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந் தார்'' (சீவக. 658)

215. உறழென்பது மெய்யுவம வுருபாய் வருமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உவம. சூ. 15, இளம். பேர்.

214 - 6. ''மைந்த, ரெல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து'' (புறநா. 24: 9)

217. ''குன்றுதொறு...பண்பேயெனத் தொறுவென்பது தான் சார்ந்த மொழிப்பொருட்குப் பன்மையும் இடமாதலும் உணர்த்தி நிற்கும்'' (தொல். இடை. சூ. 48, சே. ந.; இ - வி. சூ. 289, உரை). 'தொறு' என்னும் இடைச்சொல் வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; நன். சூ. 420, மயிலை.

208 - 17. ''முருகாற்றுப்படையுள், கச்சினன் கழலினன்... பண்பே யென்புழி வந்த வினையெச்ச வினைக்குறிப்பு முற்றுக்கள் ஆக்கம் பெற்றுப் பொருளுணர்த்துங்கால், கச்சைக் கட்டிக் கழலை யணிந்து கண்ணியைச் சூடிக் குழலையூதிக் கோட்டைக் குறித்துப் பல்லியங்களை யெழுப்பித் தகரைப் பின்னிட்டு மயிலையேறிக் கொடியையுயர்த்து வளர்ந்து தோளிலே தொடியையணிந்து துகிலை யுடுத்து ஏந்தித் தழீஇத் தலைக்கை கொடுத்து ஆடலும் அவற்கு நிலைநின்ற பண்பெனச் செய்தெனெச்சப் பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க'' (தொல். எச்ச. சூ. 63, ந.)

218. ''மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇ'' (குறுந். 263: 1); ''உருவச் செந்தினை குருதியொடு தூஉய்'' (அகநா. 22: 10)

219. வாரணக்கொடி : முருகு. 38, 227. கோழியை வாரணமென்றற்கு இவ்வடி மேற்கோள்: தொல். மரபு. சூ. 68, உரை.

வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்துக்

---

222. *"சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி"* (முருகு. 283); *"வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்"* (குறுந். 53: 3); *வேலன் வெறியயர் வியன்களம்"* (அகநா. 98: 18 - 9); *"வெறியயர் வெங்களத்து வேன்மகன்"* (நாலடி. இளமை. 6); *"வேலனூர் வந்து வெறியாடும் வெங்களத்து"* (சிலப். குன்றக்.)

வேலன் ஆடுதல் சிறுபான்மை புறத்திற்குங் கோடற்கு இவ்வடி மேற்கோள்; தொல். புறத். சூ. 5, ந.

224. *"ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும், கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவு, மவ்வவை மேய வேறுவேறு பெயரோய், எவ் வயினோயுநீயே"* (பரி. 4: 67 – 70); *"பெருவேண் மறைந்து பெரும்புன லாடும்"* (பெருங். 1. 42: 56). *"துறைமிசை - நீர்த்துறையில்; நீர்த் துறையில் நின் திருவடியைச் சூளுறு மவரென்க; யாறுங் குளனு மென்று ராகலின்"* (சிலப். குன்ற. அரும்பத.)

225. கடம்பு முருகக்கடவுளுக்கு இடம்: *"கடம்பமர் நெடுவேள்"* (பெரும்பாண். 75); *"கடம்பமர்ந்து"*, *"கடம்பம ரணிநிலை"* (பரி. 19: 2, 104); *"செல்வக் கடம்பமர்ந்தான்"* (ஐந். ஐம். 1); *"செவ்வேள்... மராஅத்தண் சாயை நின்றணங்கும்"* (தஞ்சை. 132); *"கடம்பமர் மன்றற் றெருங்கற் கந்தனைச் சிந்தை செய்வாம்"* (திருவால. கடவுள். 18); *"கடம்பமர் காளை"* (கந்த. வள்ளியம்மை. 69)

224 – 5. *"துறையு மாலமுந் தொல்வலி மராஅமு, முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர்"* (கலித். 101: 13 - 4)

226. மன்றமும் பொதியிலும்: *"மாதவ ரிடங்களு மன்றமும் பொதியிலும்"* (மணி. 20: 30); *"மன்றும் பொதியிலு மாமயில்சேர்"* (தஞ்சை. 34)

225 - 6. *"மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்"* (மணி. 28: 59; பதிற். 35: 8, உரை)

228. நெய்யோ டையவி யப்பி: *"ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை"* (நெடுநல். 86); *"நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ்"* (நற். 370: 3); *"ஐயவி யப்பிய நெய்யணி முச்சி"* (மணி. 3: 134)

குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்

---

229. "குடந்தம் பட்டுச் சூழ்போந்து குழைந்து வழுத்தி" (கூர்ம. தக்கன் வேள்வி. 52)

233. "குருதிச் செந்தினை பரப்பி" (முருகு. 242)

232 - 3. "மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி" (பெரும் பாண். 143); "விடையும் வீழ்மின்" (புறநா. 262: 1)

234. "பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிரீஇ" "அறிதல் வேண்டுமெனப் பல்பிரப் பிரீஇ" (அகநா. 98: 9, 242: 9); "பரந் தெலாப் பிரப்பும் வைத்து" (சீவக. 369); "அவ்வகற் கொண்ட வவியும் பிரப்பும்" (பெருங். 1. 34: 186)

233 - 4. "சில்பலி யரிசியும்" (மணி. 6: 95)

232 - 4. "பலிகொடுத் துருவச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகநா. 22: 9 - 10); "கொழுவி டைக்கறை விராவிய பலிக்குறை நிரப்பி, வழுவில் பல்பிரப் பிரீஇவெறி யாட்டயர் மன்றத்து" (நளிகை. நாடு. 46)

239. நறும்புகை யெடுத்து: "நறையி னறும்புகை நனியமர்ந் தோயே" (பரி. 14: 20). மு. "குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்" (சிலப். குன்றக்.); "ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர் தூய்க், கொய்யாக் குறிஞ்சி பலபாடி" (பு. வெ. 79)

ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே
ஆண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்

---

245. ''வெறியயர் வியன்களம் பொலிய வேத்தி'' (அகநா. 242: 11). ஆடுகளம்: ''அணங்குறு மகளி ராடுகளங் கடுப்ப'' (குறிஞ்சிப். 175); ''யானுமோ ராடுகள மகளே'' (குறுந். 31: 4)

236 - 45. ''களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி, வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத், துருவச் செந்தினை குருதியொடு தூஉய் முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்'' (அகநா. 22: 8 - 11)

246. ''கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்'' (சிலப். 24 : 17)

247. ஓடாப் பூட்கை: ''ஓடாப் பூட்கை யுறந்தையும் வறிதே'' (சிறுபாண். 83). பிணிமுகம்-முருகக்கடவுளின் ஊர்தியாகிய யானை: ''சேயுயர் பிணிமுக மூர்ந்து'', ''பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ'' (பரி. 5: 2, 17: 49); ''பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்'' (புறநா. 56:8); ''பிணிமுக மேற்கொண்டு'' (சிலப்.24. ''உரையினி''); ''பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய, மூவிரு திருமுகத் தொருவே லவற்கு'' (கல். 7, மயிலேறும். மேற்.). யானையை வாழ்த்துதல்: ''கடம்புங் களிறும் பாடி'' (தொல். பொருளியல், சூ. 16, ந. மேற்.) ஓடாப்பூட்கை : நன். சூ. 166, மயிலை. மேற்.

246 - 7. ''ததும்புசீ ரின்னியங் கறங்கக் கைதொழு, துருகெழு சிறப்பின் முருகு மனைத்தரீஇக், கடம்புங் களிறும் பாடி'' (அகநா. 138: 9 - 11)

248. வேண்டுநர் வேண்டியாங் கெய்தல்: ''வேண்டிய வேண்டியாங் கெய்தலால்'' (குறள். 265); ''வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்'', ''மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே'' (தே. மறைசை, ஐயாறு.)

249. ''திசைநாறிய குன்றமர்ந் தாண்டாண்டு'' (பரி. 17: 29); ''ஆண்டாண் டுறைகுவர்'' (கலித். 36: 21)

250. (பி - ம்.) 'ஆங்காங் காயினு மாக'

251. ''முகனமர்ந் தின்சொல னாகி'' (குறள். 92) (பி - ம்.) 'முக மலர்ந்தேத்தி'

கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள

---

253 - 5. *''கடவு ளொருமீன் சாலினி யொழிய, வறுவர் மற்றை யோரும்......நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனைப், பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்''* (பரி. 5 : 44 - 9); *''சரவணப்பூம் பள்ளி யறைத் தாய்மா ரறுவர், திருமுலைப்பா லுண்டான்''* (சிலப். 24: ''உரையினி'')

256. ஆல்கெழு கடவுட் புதல்வ: *''ஆலமர் செல்வற் கமர்ந் தனன் கொடுப்ப''* (சிறுபாண். 97); *''ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல்'', ''ஆலமர் செல்வ னணிசான் மகன்''*; (கலித். 81: 7, 83: 14); *''ஆலமர் கடவு ளன்னநின் செல்வம்''*; (புறநா. 198: 9); *''ஆலமர் செல்வன் புதல்வன்''* (சிலப். குன்றக்.); *''ஆலமர் செல்வன் மகன்''* (மணி. 3: 144)

257. *மலைமகண் மகனே: ''மலைமகண் மகனே''* (சிலப். குன்றக்.); *''மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே யென்றற் றொடக் கத்தன காரணக் குறி ஆக்கந் தொடர்ந்தன''* (நன். வி. சூ. 275)

258. *கொற்றவை சிறுவ: ''சேய்பயந்த மாமோட்டுத் துணங்கை யஞ் செல்விக்கு''* (பெரும்பாண். 458 - 9)

259. *பழையோள்: ''தொல்லை நாயகி''* (தக்க. 120)

261. *நூலறி புலவ: ''நூலறி புலவரை நோக்க''* (சிலப். 25: 116) *புலவ: ''பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே'', ''புலமை யோய்''* (முருகு. 268, 280); *''சங்கத் தமிழின் றலைமைப் புலவா''* (முத்துக் குமார. தாலப்.)

262. *பொருவிறல் மள்ள: ''பொருமறையார் கழல்வீரர் வீரன்''* (சிவஞானசித். முருகக்.)

அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி

266. "குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே", "குருகு பெயர்க்குன்றங் கொன்றான்" (சிலப். 24); "குருகுபெயர்க் குன்றங் கொன்றோன்" (மணி. 5 : 13); "மலையைக் கொல்லுமென்றது, மலை பண்டு பிராணனுடையவாய்ப் பறந்து திரிந்தமையின்; 'குன்றம்...... ......கொற்றத்து' இது திருமுருகாற்றுப்படை" (நக்க. 170, உரை)

267. "விண்பொரு நெடுவரைப் பரிதியின்" (முருகு. 299); "விண்குத்து நீள்வரை வெற்ப" (நாலடி. 226)

குறிஞ்சிக்கிழவ : "குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே" (கந்தரலங்காரம், 5)

269. பெரும்பெயர் : "பெரும்பெய ரியவுள்" (முருகு. 274); "தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி" (பெரும்பாண். 460); "பெரும்பெயர் முருக" (பரி. 5 : 50); "செல்வன் பெரும்பெய ரேத்தி" (அகநா. 98 : 18) "பெரும்பெயர் வேந்தன்" (பு. வெ.); "பெரும்பெயர்ப் பிரமன்" (சிலப். 207); "பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு" (சிவஞான போதம், சிறப்பு.); பெரும்பெயரே பெயராக வந்த, வொருவாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே" (பஞ்சாக்கர. 5)

271. அலந்து, இடுக்கண் பட்டென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தஞ்சை. 352, உரை.

272. "மண்டமர் பலகடந்து" (கலிங். 1 : 8)

273. நெடுவேள் : 211-ஆம் அடிக் குறிப்பைப் பார்க்க.

275. "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன்" (அகநா. 59 : 10-11) சூர்மருங்கறுத்த : "மன்மருங்கறுத்த மழுவா

போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி

ணெடியோன்'' (மணி. 22 : 25); ''மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போல்'' (தொல். புறத். சூ. 13, ந. உரை. மேற்)

279-80. நின்னொடு புரையுந ரில்லாப் புலமையோய்; ''நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்'' (தே. தனித்திருத்தாண்டகம்); ''மற்றாருந் தன்னொப்பா ரில்லாதான் காண்'' (தே. திருவாரூர்); ''தனக்குவமை யில்லாதான்'' (குறள். 7)

281. ''நீசில மொழியா வளவை'' (சிறுபாண். 235)

282. கூளியர் : புறநா. 23 : 5.

283. ''சாறயர் களத்தின் வீறுபெறத் தோன்றி'' (சிலப். 6 : 162) (பி - ம்) 'வேறுபெறத் தோன்றி'

282-3. ''சாறுகொண்ட களம்போல, வேறுவேறு பொலிவு தோன்ற'' (புறநா. 22 : 16–7)

284. ''முதுவா யிரவல'' (சிறுபாண். 40); ''செல்லு முதுவா யிரவல'' (ப.நிற். 66 : 3); ''முதுவா யிரவல'' (புறநா. 48 : 7)

285. ''வந்தேன் பெரும வாழிய நெடிதென'' (பெரும்பாண். 461)

290. ''பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன், மூவா விளநலங் காட்டி'' (சிலப். 9 : 34–5)

289-90. ''அறுமுகமில்லை; அணிமயில் இல்லை யென்று சொல்லுவார்களென்று வேறு காட்டினாள்; தலைமகள் கடம்புசூடி உடம்பிடி யேந்தித் தன்னைக் குமரனென்று பிறர் கருத வந்த காரணம், 'பண்டை......காட்டி' என்றாராதலால்'' (சிலப். குன்றக். அரும்பத.)

அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு

---

292. *அன்புடை நன்மொழி : ''ஈர நன்மொழி'', ''ஆர்வ நன் மொழி''* (சிறுபாண். 93. 99); *''இன்சொலா லீர மளைஇ......சொல்''* (குறள், 91); *''அன்புட னளைஇய வருண்மொழி''* (மணி. 5 : 63)

294. (பி - ம்.) 'ஒரு நீயாக'

294-5. *இவ்வடிகள், ''இன்மை யுரைத்தாற் கதுநிறைக்க லாற்றுக்காற், றன்மெய் துறப்பான் மலை'' என்பதற்கு* மேற்கோள்; கலித். 43, ந.

63–295. *''முருகாற்றுப்படையுள், புலம் பிரிந்துறையும் சேவடி யெனக் கந்தழிகூறி, நின்னெஞ்சத்து இன்னசை வாய்ப்பப் பெறுதி யெனவும் கூறி, அவனுறையு மிடங்களுங் கூறி, ஆண்டுச் சென்றால் அவன் விழுமிய பெறலரும் பரிசில் நல்குமெனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப்படை யென்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க. இனி, முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை ஆற்றுப் படுத்ததென்பது பொருளாகக் கொள்க''* (தொல். புறத். சூ. 36, ந.)

296. *அருவிக்குத் துகில் : ''அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவி''* (குறிஞ்சிப். 55); *''அறுவைத், தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத், தண்பல விழிதரு மருவி''* (புறநா. 154 : 10. 12); *''மாநில மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி, மானில மால்வரை நாடகேள்''* (திணைமா. 6); *''நதிதோறுந் துகில்புரை நறுநீரிற் றேய்வன''* (கம்ப. வனம்புகு. 11); *''பௌவநீ ராடைத் தரணிமான் மார்பிற் பயிலுமுத் தரியமும் போன்று......தெய்வமா நதிநீர் பரக்கும்''* (வி. பா. சிறப்பு. 8).

297. *ஆர முழுமுதல் : ''வாழை முழுமுதல்''* (முருகு. 307)

298. *''பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக், கல்பொரு திரங் குங் கதழ்வீ ழருவி''* (குறுந். 134 : 4-5)

விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம முலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்

300. அலர்தல் - பரத்தலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தஞ்சை. 269, உரை.

299 - 300. இருளுக்குப் பருதி : மலைபடு. 238-9.

304-5. ''யானை முத்துடை மருப்பின்'' (மலைபடு. 517-8)

309. ''கறிக்கருந்துணருகுப்ப'' (திருவிளை. நாடு. 35)

310. முருகு. 205-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க.

312-3. ''இரும்பனஞ் செறும்பி னன்ன பரூஉமயிர்ச், சிறுகட் பன்றி'' (அகநா. 277 : 7-8); ''பனஞ்செறும் பன்ன பன்மயிர் முன்கை'' (பெருங். 2. 8 : 107); ''பெண்ணைவன் செறும்பிற் பிறங்கிச் செறி, வண்ண வன்மயிர்'' (கம்ப. கங்கை. 33); ''இரும்பனை வெளிற்றின் புன்சா யெனமலி மயிரி ளுக்கைக், கரும்பெருங் கரடி'' (விநாயக. நாடு. 26)

315. சிலைத்தல் இசைப்பொருளை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 62, பேர். சே. ந; இ. வி. சூ. 285, உரை.

316. ''இழுமென்று வந்தீங் கிழியு மலையருவி'' (சிலப். குன்றக்.); ''இழுமெ னோசையி னிழிதரு மருவி'' (ஆனைக்கா. நாடு. 14); ''வெள்ளருவி யிழுமெ னோசையும்'' (தணிகை. நாடு. 46)

292-316. தொல். இடை. சூ. 27, ந. மேற்.

பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

317. மலைகிழவோனே : "ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே" (பெரும்பாண். 500); "நிலைபெறு தணிகை மலைகிழ வோனே" (தணிகையாறு. 417)

தொல். பெயர். சூ. 11, கல். மேற். பெயரிடத்து னகர வீற்றய லகரம் ஓகாரமா மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; இ. வி. சூ. 326. உரை; நன். வி. சூ. 353.

இதன் பொருள்

திருப்பரங்குன்றம்

1. உலகமென்பது முதற் கணவன் (6)[1] என்னுந் துணையும் ஒரு தொடர்.

உலகம் உவப்ப-சீவான்மாக்கள் உவப்ப.

உலகமென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்குமேனும் ஈண்டு உவப்ப வென்றதனன், மண்ணிடத்து வாழும் சீவான்மாக்களை உணர்த்திற்று.

[வலனேர்பு திரிதரு :] ஏர்பு வலன் திரிதரு - எழுந்து[2] மகா மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்.

2. பலர் புகழ் ஞாயிறு - எல்லாச் சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை.

கடற் கண்டாங்கு - கடலிடத்தே கண்டாற்போல.

இது வினையெச்சவுவமம்; [3] "விரவியும் வரூஉ மரபின வென்ப" என்பதனல் தொழிலுவமமும் வண்ணவுவமமும் பற்றிவந்தது; என்னை? ஞாயிறு இருளைக் கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலிற் றொழிலுவமமும், தன்னைக் கட்புலனல் நோக்குவார்க்குக் [4] கடலிற் பசுமையும் ஞாயிற்றின்

---

[1] ( )இந்த நக வளைவுக்குட்பட்ட எண்ணும், இப்படியே பின்னர் ஆங்காங்குப் பதிப்பிக்கப்படும் எண்களும் தத்தம் முன்புள்ள மொழிகளையேனும், அம்மொழிகளைப் பொருளாகப் பெற்ற மொழிகளையேனு முடைய மூலத்தின் வரியைப் புலப்படுத்தும்.

[2] "ஞாயிறு போற்றுதும்......மேருவலந் திரிதலான்" (சிலப். மங்கல.) [3] தொல்காப்பியம், உவமவியல், சூ. 2.

[4] "மாக்கட னிவந்தெழுதரு, செஞ்ஞா யிற்றுக் கவினை" (புறநா. 4 : 15–16); "உததியிடை கடவுமர கதவருண குலதுரக வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள், உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்" (திருவகுப்பு. சீபாத.)

போல மயிலிற் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க.

3. [ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி:]

[1] ஓ அற இமைக்கும் அவிர் ஒளி - இருவகையிந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேற் சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்ப்பதற்குக் காரணமாகும், விளங்குகின்ற ஒளி.

ஓ என்பது ஓரெழுத்தொருமொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டினையும் குவித்தல்; அது,[2] "நுதல திமையா நாட்டம்" என்பதனால் உணர்க.

சேண் விளங்கு ஒளி - கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்களெல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற ஒளியினையும்,

உவப்ப எழுந்து திரியும் (1) ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு (2) அவிர்கின்ற ஒளி (3) யெனத் தொழிலுவமம் கொள்ளுங்கால் வினை முடிக்க. உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்குச் சேண் விளங்கொளியென வண்ணவுவமம் கொள்ளுங்கால் வினை முடிக்க.

4. உறுநர் தாங்கிய[3] மதன் உடை நோன் தாள் - தன்னைச் சேர்ந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய, அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய தாளினையும்,

5. செறுநர் தேய்த்த [4]செல் உறழ் தட கை - அழித்தற்குரியாரை அழித்த இடியை மாறுபட்ட பெருமையினையுடைய கையினையும் உடைய,

6. மறு இல் கற்பின் வாள் நுதல் கணவன் -[5] மறக்கற்பில்லாத

---

[1] ஓவற - ஒழிவற. இமைக்கும் - விட்டு விளங்கும். அவிர்தல் - பாடஞ் செய்தல் (வேறுரை).

[2] அகநா. கடவுள்.4. [3] மதனுடை - அழகுடைய (வேறுரை).

[4] செல் உறழ் - மேகத்தை ஒத்த (வேறுரை).

[5] மறக்கற்பு அறக்கற்பு; மறக்கற்பு சீரிய கற்பென்றும் கொடுங் கற்பென்றும், அறக்கற்பு ஆறிய கற்பென்றும் அருட்கற்பென்றும் வழங்கப்பெறும்; 'வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வயானையார்' (முருகு. 175, ந.); "ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை, வண்டார் கூந்த லொண்டொடி கணவ" (பதிற். 90: 49 - 50); 'வீரபத்தினி மறக்கற்புடையாள்; கோப்பெருந்தேவி அறக்கற்புடையாள்; ஆக ஆறிய கற்பும் சீறிய கற்புமெனக் கற்பு இருவகை' (சிலப். பதிகம், 38 - 54, அடியார்.); "கொந்தளக மலர்சரியக் கூப்பிடுவாள் கொடுங்கற்பும்" (வி. பா. சூதுபோர். 253)

[1] அறக்கற்பினையும் ஒளிபொருந்திய நுதலினையுமுடைய இந்திரன் மகள் தெய்வயானையார் கணவன்;

இப்பெயரை முற்கூறினர், படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற.

[2] மறுவில் கற்பின் வாணுதல் கணவனென்பது ஈண்டு முருகனென்னும் துணையாய் நின்றது.

ஒளியினையும் (3) தாளினையும் (4) கையினையும் (5) உடைய கணவனென முடிக்க.

7. கார்கோளென்பது முதல் மார்பினன் (11) என்னுந்துணையும் ஒரு தொடர்.

கார்கோள் முகந்த கம சூல் மா மழை - கடலிலே முகந்த தறுலுண்டாகிய நிறைவினை யுடைத்தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை,

கார் முகக்கப்படுதலின் கடல் கார்கோளென்று பெயர் பெற்றது; ஆகுபெயர்.

8. [3]வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி - திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச் சிதறி,

வாள்: ஆகுபெயர்.

9. தலைப்பெயல் [4]தலைஇய தண் நறு கானத்து - கார்காலத்து முதற்பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து,

10. இருள் பட [5]பொதுளிய பராரை மராஅத்து - இருட்சியுண்டாகத் தழைத்த பரிய அடியினையுடைய [6]செங்கடம்பினது,

பராரை: பண்புத்தொகைச் சந்தி முடிபு வேற்றுமை யென்றுணர்க.

11. [7]உருள் பூ தண் தார் புரளும் மார்பினன் - தேருருள் போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலையசையும் மார்பினை யுடையவன்;

---

[1] (பி - ம்.) அருட்கற்பு.

[2] 'கொடியோள் கணவன்...இது நன்னனென்னும் பொருட்டாய் நின்றது' (மலைபடு. 424, ந.) என்றது இங்கே அறியத்தக்கது.

[3] வாள் போழ் - திங்களும் ஞாயிறும் அளவிடப்பட்டாற்போன்ற (வேறுரை). [4]தலைஇய - தழைத்த (வேறுரை).

[5] பொதுளிய - நெருங்கிய (வேறுரை).

[6] (பி - ம்.) வெண்கடம்பினது.

[7] உருள்பூ - தேருருள் போன்ற வட்டப்பூ (வேறுரை).

உருள்பூ உவமத்தொகையாகலின் உருள்பூ உருட்பூவென உறழ்ச்சி முடிபெய்தும்; இனி உருண்டபூ உருளும்பூவென வினைத் தொகையுமாம்.

மழை சிதறித் தலைஇய கானத்து மராஅத்துத் தார் புரளும் மார்பினனென முடிக்க.

இது [1] போகத்திற்குரிய தார்; இதனை முற்கூறினார், வாணுதல் கணவன் (6) என்றதனை நோக்கி.

12. மால்வரை என்பதுமுதற் சென்னியன் (44) என்னுந் துணையும் ஒரு தொடர்.

மால் வரை நிவந்த சேண் உயர்வெற்பில் - பெருமையையுடைய மூங்கில் வளர்ந்த தேவருலகளவாகச் செல்லவுயர்ந்த மலையில், [2]வரை கணுயுடைமையின் வரையாயிற்று; இஃது ஆகுபெயர்; [3] "பெரிய வரைவயிரங் கொண்டு" என்றார் பிறரும்; இனித் திருமால் போலும் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம்; "மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்" (நற். 32: 1) என்றார் பிறரும்.

13. கிண்கிணி [4]கவைஇய ஒள் செஞ்சீறடி - சிறு சதங்கை சூழ்ந்த ஒள்ளிதாகிய சிவந்த சிறிய அடியிணையும்,

13. கணை கால் - திரண்ட காலிணையும்,

வாங்கிய நுசுப்பின் - வளைந்து நுடங்கிய இடையிணையும்,

பணை தோள் - பெருமையையுடைய தோளிணையும்,

மூங்கில்போலும் தோளென்றுமாம்.

15. கோபத்து அன்ன தோயா [5]பூ துகில் - இந்திர கோபத்தை யொத்த நிறம்பிடியாத இயல்பான சிவப்பாகிய பூத்தொழிலினை யுடைய துகிலினையும்,

---

[1] "மாலை மார்ப" என்றதில் மாலையென்பது இன்பத்திற்குரிய மாலையென்பர்; முருகு. 261, ந.

[2] "வரை, கண்களை யுடைமையான் ஆகுபெயரான் மூங்கிற்குப் பெயராயிற்று. வரை மலையாகாதோவெனின்......'மால்...வெற்பில்' எனக் கூறியதனான் உணர்க" (தஞ்சை. 49, உரை)

[3] "அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே, பெரிய வரைவயிரங் கொண்டு - தெரியிற், கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார், பெரிய வரைவயிரங் கொண்டு" (யா. வி. சூ. 60 மேற்.)

[4] கவைஇய - கட்டிய (வேறுரை).

[5] இவ்வாறே பூங்கலிங்கமென்பதற்குப் பூத்தொழிலையுடைய கலிங்கமென்று பொருளெழுதுவர் (கலித். 56; 11, ந.) பூத்தொழிலை யுடைய துகில்: சிலப். 14: 86 - 97, அடியார். "சித்திரப்படாம்" சிலப். 7: 1.

தெய்வத்தின் ஆணையால் தானே சிவந்திருத்தலின், தோயாத் துகிலென்றார்.

16. பல் காசு நிரைத்த சில் காழ் அல்குல் - பல மணிகள் கோத்த ஏழு வடமாகிய [1] மேகலையையணிந்த அல்குலினையும்,

அஃது, [2] "எண்கோவை காஞ்சி யெழுகோவை மேகலை - பண் கொள் கலாபம் பதினாறு - கண்கொள், பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு, விரிசிகை யென்றுணரற் பாற்று" [3] என்பதனாலுணர்க.

17. கை புனைந்து இயற்றா கவின் பெறு [4] வனப்பின் - ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப் பெறுகின்ற அழகினையும்,

என்றது, மானிட மகளிர்க்குத் [5] தாயர் பலரும் கைசெய்து பிறப்பிக்கும் அழகன்றி இவர் தெய்வத்தன்மையான் இயல்பாகப் பெற்ற அழகினையுடைய ரென்றவாறு.

18. [6] நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை - [7] சாம்பூநதமென்று நாவலோடடுத்துப் பெயர்பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூணினையும்,

பொலம்: "பொன்னென் கிளவி" (தொல். புள்ளி மயங்கியல், சூ. 61) என்பதனான் முடிக்க.

19. சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனி - சேய் நிலத்தைக் கடந்து விளங்குகின்ற குற்றந்தீர்ந்த நிறத்தினையுமுடைய சூரர மகளிர் (41) என்க.

---

[1] "பல்காழ்" (பொருந. 39) என்பதற்கும் மேகலையென்றே பொருளெழுதுவர்.

[2] "எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை, பண்கொள் கலாபமிரு பத்தொன்று - கண்கொள், பருமம் பதினன்கு முப்பத் திரண்டு, விரிசிகை யென்றுணரற் பாற்று" எனவும் பாடம்.

[3] இந்தச் செய்யுளின் பொருண்முறை திவாகரம், பிங்கலம், சூடாமணி என்பவற்றிலும், இதன் பாடபேதச் செய்யுளின் பொருண் முறை, "எண்ணிரண்டிரட்டி" (திருவிளை. திருமண. 158) என்னும் செய்யுளிலும் காணப்படுகின்றன.

[4] வனப்பு - இளமைநிறம் (வேறுரை).

[5] ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலுறுத்துவாள், நொடிபயிற்று வாள், கைத்தாயெனத் தாயர் ஐவராதலின், 'தாயர் பலரும்' என்றார் (சீவக. 363, ந.) இவரை, "அடியோர் பாங்கு" என்பர்; சிலப். 16: 85, அடியார்.

[6] நாவற்பழத்துச் சாறுபட்டுப் பேதமான பொன்னால் (வேறுரை).

[7] "பொன்னுக்குச் சாம்புநதம்" (திருவள்ளுவ. 36).

20. துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி - ஆயத்தார் நன்றென்று ஆராய்ந்த கடையொத்த நெய்ப்பினையுடைய மயிரிலே,

21-2 [செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு, பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளி:] செங்கால் வெட்சி சிறு இதழ் இடை பைந்தாள் குவளை தூ இதழ் கிள்ளி இடுபு - சிவந்த காலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை [1] விடுபூவாகத் தூவி அதற்கு நடுவே பசுத்த தண்டினையுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளியிட்டு,

23. தெய்வ உத்தியொடு[2] வலம்புரி வயின் வைத்து - [3]சீதேவி யென்னும் தலைக்கோலத்துடனே வலம்புரி வடிவாகச் செய்த தலைக் கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து,

24-5. [4]திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல் மகரம் பகுவாய் தாழ மண்ணுறுத்து - திலகமிட்ட மணநாறுகின்ற அழகினையுடைய நெற்றியின் கண்ணே சுறாவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலம் தங்கப்பண்ணி,

மகரப்பகுவாய்: ஆகுபெயர். மண்ணுறுத்தலை, "ஆவுதி மண்ணி" (மதுரைக். 494) என்றாற்போலக் கொள்க. இனி மண்ணுறுத்துத் துவர முடித்தவென மேலே கூட்டி, கழுவி முடித்தவென்றுமாம்.

26-7. துவர முடித்த துகள் அறும் முச்சி பெரு தண் சண்பகம் செரீஇ - வேண்டுவன கூட்டி முற்ற முடித்த குற்றம் அறுகின்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகி,

27-8. கரு தகடு[5] உளை பூ மருதின் ஒள் இணர் அட்டி - கரிய புறவிதழினையும் மேலில் துய்யினையுமுடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்களை அதன்மேலே இட்டு,

இது[6] முதலாகிய பொருட்கேற்ற அடையடுத்து நின்றது.

23-30. கிளை கவின்று எழுதரு கீழ்நீர் செவ்வரும்பு இணைப்பு உறு பிணையல் வளைஇ - பச்சென்ற அரும்புகளினின்றும் மேலே

---

[1]விடுபூ - கட்டாத பூ; பூக்கள் விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ வென மூவகைப்படுமென்பர்; சிலப். 5:14, அடியார்.

[2]வலம்புரி-வலம்புரிச் சங்கின்ற முத்தின் மாலை; நந்தியாவட்டப்பூ (வேறுரை).

[3]"செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்ப" (தண்டி. 33, மேற்.)

[4]பொட்டு ஊன்றின (வேறுரை).

[5]உளைப்பூ-விரிந்த பூ (வேறுரை). "உளைப்பூ மருதத்து" (ஐங்.7).

[6]முதலென்றது மருத மரத்தை; அடையென்றது உளைப்பூ வென்றதனை.

போந்து அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பைக் கட்டுதலுறுகின்ற மாலையை வளைய வைத்து,

கவினென்னும் பண்படியாகக் கவின்றென்னுந்தொழில் பிறந்தது. கீழ்நீர்: நீர்க்கீழென்னும் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ.

அது மிகச் சிவத்தலின் ஒப்பனைக்குக் கொள்வர்.

30-32. [துணைத்தக, வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர் நுண்பூ ணாகந் திளைப்ப:] வள் காது துணை தக நிறைந்த பிண்டி ஒள் தளிர் நுண்பூண் ஆகம் திளைப்ப - வளவிய காதிலே தம்மில் ஒத்தற்குப் பொருந்த இட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளிய தளிர் நுண்ணிய பூணையுடைய மார்பிடத்தே அசையாநிற்க,

32-5. திண் காழ் நறு குறடு உரிஞ்சிய பூ கேழ் தேய்வை தேகமழ் மருது இணர் கடுப்ப கோங்கின் குவி முகிழ் இளமுலை கொட்டி - திண்ணிய வயிரத்தையுடைய நறிய சந்தனத்தை யுரைத்த பொலிவினையுடைய நிறத்தை யுடைத்தாகிய குழம்பை மணநாறுகின்ற மருதம் பூவை அப்பினாலொப்பக் கோங்கினது குவிந்த அரும்பையொத்த இளமுலையிலே அப்பி,

மருதிணர் நிறத்திற்கு உவமம்.

35-6. விரி மலர் வேங்கை நுண் தாது அப்பி - அவ்வீரம் புலர்வதற்கு முன்னே விரிந்த மலரையுடைய வேங்கைப்பூவினது நுண்ணிய தாதையும் அதன்மேலே அப்பி,

36-7. [காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா:] வெள்ளில் குறுமுறி கிள்ளுபு காண்வர [1]தெறியா - விளவினது சிறிய தளிரைக் கிள்ளி அழகுவர ஒருவர்மேல் ஒருவர் தெறித்துத் தப்பாமற் பட்டபொழுது,

38-9. [கோழி யோங்கிய வென்றடு விறற் கொடி, வாழிய பெரிதென் றேத்தி:] வென்று அடு விறல் கோழி ஓங்கிய கொடி பெரிது வாழிய என்று ஏத்தி - வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வெற்றியையுடைய கோழிமேலாய் நின்ற கொடி நெடுங்காலம் வாழ்வதாக வென்று வாழ்த்தி,

39-41. [பலருடன், சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச் சூரரமகளி ராடுஞ் சோலை] சூர் அரமகளிர் [2]பலருடன் சீர் திகழ் சிலம்பு அகம் சிலம்ப பாடி ஆடும் சோலை - கொடுமையையுடைய தெய்வமகளிர் பலருங் கூடிச் சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் ஆரவாரிக்கப் பாடி ஆடும் சோலையினையுடைய,

---

[1]பிள்ளையார் சீபாதங்களை உள்ளித்தெறித்து (வேறுரை).

[2](பி-ம்.) 'பலவுடன்'; பலவுடன் - பல தோத்திரங்களினாலே (வேறுரை).

42. [1]மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து – மரமேறுதற் றொழிலிற் சிறப்பையுடைய மந்திகளும் மரங்களின் நீட்டத்தால் ஏறியறியாத மரம் நெருங்கின பக்கமலையிடத்து நின்ற,

உம்மை : சிறப்பும்மை.

43 - 4. சுரும்பும் மூசா சுடர் பூ காந்தள் பெரு தண் [2]கண்ணி மிலைந்த சென்னியன் - தான் விரும்புதலிற் சுரும்பினமும் மொய்யாத நெருப்புப்போலும் பூவினையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச் சூடிய திருமுடியையுடையவன்;

அடியினையும் (13) காலினையும் நுசுப்பினையும் தோளினையும் (14) துகிலினையும் (15) அல்குலினையும் (16) வனப்பினையும் (17) இழை யினையும் (18) மேனியினையும் (19) உடைய சூரரமகளிர் (41) பலருங் கூடி (39) இடையிட்டு (21) வைத்துத் (23) தாழப்பண்ணிச் (25) செரீஇ (27) இணரட்டி (28) வளைஇத் (30) திளையாசிறக்கக் (32) கொட்டி (35) அப்பித் (36) தெறித்து (37) ஏத்திப் (39) பாடி (40) ஆடுஞ்சோலையையுடைய (41) வெற்பில் (12) அடுக்கத்துக் (42) காந்தட் கண்ணி மிலைந்த சென்னியனென முடிக்க.

இதனை [3]அடையாளப்பூக் கூறினர். இது, "வெறியாட் டயர்ந்த காந்தளும்" (தொல். புறத். சூ. 5) என்பதனாலுணர்க.

"அகன்றபொருள் கிடப்பினு மணுகிய நிலையினும், இயன்று பொருண் முடியத் தந்தன ருணர்த்தல், மாட்டெனமொழிப பாட்டி யல் வழக்கின்" (தொல். செய். சூ. 211) என்னும் [4]மாட்டிலக்கணத் தான் இப் பாட்டுக்கள் பத்தும் செய்தார்களாதலின் இவ்வாறே மாட்டி முடித்தல் யாண்டும் வருமென்றுணர்க,

45. பார் என்பதுமுதற் சேய் (61) என்னுந்துணையும் ஒரு தொடர்.

பார் முதிர் பனி கடல் கலங்க உள் புக்கு – பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் தன் நிலை குலையும்படி உள்ளே சென்று,

---

[1]மந்தி - அருக்கன் (வேறுரை).

[2]கண்ணி - சூடும்பூவென்றும் வழங்கும்; சீவக. 208, ந.

[3] அடையாளப்பூ - ஒருவர்க்கே உரிய பூ. கொன்றைமாலையைச் சிவபெருமானுடைய அடையாளப்பூவென்பர்; சீவக. 208, ந.

[4] "அகன்றுவந்த மாட்டு முருகாற்றுப்படை முதலியவற்றுட் காண்க: மொழிமாற்றுவது கேட்டோர் கூட்டியுணருமாற்றான் ஈர டிக்கண்ணே வருவதென்றும், மாட்டென்னுமுறுப்பாவது இரண் டிறந்த பலவடிக்கண்ணும் பல செய்யுட்டொடரின் கண்ணும் அகன் றும் அணுகியும் வருமென்று முணர்க" (தொல். எச்ச. சூ. 13, ந.)

பார் - பாறை; மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.

46. சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல் - சூரபன்மா வாகிய தலைவனைக் கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே,

47. உலறிய கதுப்பின் - காய்ந்த மயிரினையும்,

பிறழ் பல் - நிரை ஒவ்வாத பல்லினையும்,

பேழ் வாய் - பெருமையையுடைய வாயினையும்,

48. சுழல் விழி பசு கண் - கோபத்தாற் சுழலும் விழியை யுடைய பசிய கண்ணினையும்,

[1] சூர்த்த நோக்கின் - கொடுமைசெய்த பார்வையினையும்,

49 - 50. [2] கழல் கண் கூகையொடு கடு பாம்பு தூங்க பெருமுலை அலைக்கும் காதின் - பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே கடிய பாம்பு தூங்குகையினாலே பெரிய முலையை வருத்துகின்ற காதினையும்,

பிணர் மோட்டு - சருச்சரையையுடைய பெரிய உடலினையும்,

மோடு - வயிறுமாம்.

51. உரு கெழு செலவின் - கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையும் உடைய,

அஞ்சுவரு பேய்மகள் - கண்டார்க்கு அச்சம் தோன்றுகிற பேயாகிய மகள்,

52 - 3. குருதி ஆடிய கூர் உகிர் கொடு விரல் கண் தொட்டு உண்ட கழி முடை கரு தலை - உதிரத்தையளைந்த கூரிய உகிரினை யுடைய கொடிய விரலாலே கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட மிக்க முடை நாற்றத்தையுடைய கரிய தலையை,

இனி, தொட்டென்பதனை வினையெச்சமாக்காது தொழிற்பெய ராக்கிக் கண் தோண்டுதலுண்டவென்று கூறுதலுமாம்.

54. ஒள் தொடி தட கையின் ஏந்தி - ஒள்ளிய தொடியினை யுடைய பெருமையையுடைய கையிலே எடுத்து,

54 - 5. வெருவர வென்று அடு விறல்களம் பாடி - அவுணர்க்கு அச்சந்தோன்ற வஞ்சியாது எதிர்நின்று கொல்கின்ற வெற்றிக்களத் தைப் பாடி,

தோள் பெயரா - தோளை அசைத்து.

56. நிணம் தின் வாயள் - நிணத்தைத் தின்கின்ற வாயினை உடையளாய்,

---

[1] சூர்த்தம் - நடுக்கம் (வேறுரை).

[2] கழல்கண் - கழன்று விழுவதுபோலும் கண். கடும்பாம்பு - கோபத்தையுடைய பாம்பு (வேறுரை).

வாயள் : வினையெச்சமுற்று.

[1] துணங்கை தூங்க - துணங்கைக் கூத்தாட.

[2] "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்."

கதுப்பு (47) முதலியவற்றையுடைய பேய்மகள் (51) தலையை (53) ஏந்தி (54) வாயளாய்ப் (56) பாடித் (55) தூங்கவென முடிக்க.

57. [3] இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை - மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய [4] இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்,

58. அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி - ஆறாகிய வேறு பட்ட கூற்றாலே அச்சந்தோன்ற மிக்குச் சென்று,

என்றதனுன், [5]இறைவன் உமையை வதுவை செய்துகொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவனும் அதற்கு உடம்பட்டு அது தப்பாளுகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அரிதாகையினலே இறைவன் கூறுகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம் மனைவியர் கையிற் கொடுப்ப அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையிற் [6]பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறு கூறுகி வளர்கின்ற காலத்து

---

[1] சிங்கிக் கூத்து (வேறுரை).

[2] "முடக்கிய விருகை பழுப்புடை யொற்றத், துடக்கிய நடையது துணங்கை யாகும்" (திவா. பிங்கல.) எனவும் பாடம்.

[3] இரு பேர் உரு - சூரனென்றும் பதுமனென்றும் இரண்டு பேரையுடைய வடிவம் (வேறுரை).

[4] இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய உடலென்றது, குதிரை முகமும் மக்களுடலுங்கொண்ட சூரபன்மாவின் உடலத்தை; "ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச் சூர்" (கலித். 93 : 25-6) என்பதற்கு, 'கெடாத விரதத்தாலே முகம் குதிரை முகமும் உடல் மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மா' என்றெழுதிய நச்சினர்க்கினியர் உரையும், "சூரொடும்பொர வஞ்சி சூடிய பிள்ளை யார்படை தொட்டநாள், ஈருடம்பு மிசைந்திரண்டுதி ரப்பரப்பு மிறைத்தனம்" (தக்க.231) என்பதனுரையில் அதனுரையாசிரியர் எழுதிய, 'சூரபன்மாவான...அசுரசேனுபதி பட்டுவிழ அவனுடைய குதிரையும் அசுரனுமான இரண்டு வடிவும்' என்ற பகுதியும் இங்கே கருதத்தக்கன.

[5] 254, 255-ஆம் அடிகளின் விசேடவுரையிலும் இக்கதை எழுதப் பட்டுள்ளது. [6] "பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்" (பரி. 5 : 49)

இந்திரன் தான் இருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய அவ்வாறு வடிவும் ஒன்ருய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ் வடிவம் ஆருகிய வேறுபட்ட கூற்றுலே மண்டிச் சென்றதென்று புராணங் கூறிற்று. இதனை, "பாயிரும் பனிக்கடல்" (5) என்னும் பரிபாடற்பட்டாறுணர்க. இவ்வாறன்றி [1] வேறு வேறு புராணங் கூறுவாருமுளர்.

இனி அவனுடல் அற்று வேறுவேரும் வகையாலென்றுமாம்.

59. அவுணர் நல் வலம் அடங்க - அவனை யொழிந்த அவுணருடைய நல்லவெற்றி இல்லையாம்படி,

அடங்க என்றது, "கணனடங்க" (சிறுபஞ்ச. 31) என்ருற் போலக் கொள்க.

59 - 60. [2] கவிழ் இணர் மா முதல் தடிந்த - கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின,

என்றது, அவுணரெல்லாரும் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்த தொரு மாவை வெட்டினு னென்றவாறு.

மறு இல் கொற்றத்து - குற்றமில்லாத வெற்றியினையும்,

61. எய்யா நல் இசை - [3] ஒருவரானும் அளந்தறியவொண்ணுத நல்ல புகழினையுமுடைய,

செ வேல் சேஎய் - செய்ய வேலையுடைய சேய்,

எக்காலமும் போர் செய்தலிற் செவ்வேலென்ருர்; '[4]செய்யவ னென்பது சேஎயென விகாரத்தால் நீண்டதென்றுமாம்,

கடல் கலங்க உள் புக்குச் (45) சூர் முதலின் (46) ஒரு பேரி யாக்கை (57) அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டிச்சென்று (58) பேய்மகள் (51) துணங்கை தூங்கும்படியாக (56) அச்சூர் முதல் தடிந்த வேலானே (46) பின்னும் அவுணர் நல்வலமடங்க (59) மாமுதல் தடிந்த கொற்றத்தினையும் (60) நல்லிசையினையு முடைய சேயென முடிக்க.

கணவன் (6) மார்பினன் (11) சென்னியனுகிய (44) சேயென்பன ஒரு பொருள் குறித்த வேறு பெயராய் நின்றன.

---

[1] வேறு வேறு புராணமென்றது கந்தபுராணம், குமாரஸம்பவம் முதலியவற்றிற் கூறப்படும் செய்திகளை.

[2] மாயையினுலே கீழ்நோக்கிப் பூத்த மாவாய் நிற்குஞ் சூரபன் மனை முதலோடே தடிந்த (வேறுரை); பதிற். 11 : 4-5, உரை.

[3] "நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்" (முருகு. 278)

[4] செய்யவன் – சிவந்தவன்; "செய்யன்" (முருகு. 206)

62 - 3. [சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்:]

[1] புலம் பிரிந்து உறையும் அடி – மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் திருவடி,

திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது, "தென்னன் பெருந் துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி" (திருவா. திருவம் மானை, 6) [2]என்பதனானும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானு முணர்க.

சேவடி படரும் நலம் புரி கொள்கை செம்மல் உள்ளமொடு - அத்திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தின கோட்பாட்டானே தலைமை யினையுடைத்தாகிய உள்ளத்தோடே,

64. செலவு நீ நயந்தனை ஆயின் - செல்லுஞ் செலவை நீ விரும் பியே விட்டாயாயின்,

64 - 6. [பலவுடன், நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, இன்னே பெறுதிநீ முன்னிய வினையே :] நீ முன்னிய வினை பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப இன்னே பெறுதி- நீ முற்பிறப்பிற் கருதிச் செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க்கு உரியனவாகக் கூறிய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத் திலுண்டாகிய இனிய வீடு பேற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை;

67. செரு புகன்று எடுத்த சேண் உயர் நெடு கொடி - போரை வென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்றுயர்ந்த நெடிய கொடிக்கு அருகே,

68. வரி புனை பந்தொடு பாவை தூங்க - நூலால் வரிந்து புனை யப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியே விடும்படி,

என்றது : [3] பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடு தற்குத் தூக்கின வென்றவாறு.

---

[1] தேசத்தை விட்டு (வேறுரை).

[2] முருகவேளுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடின்மையின் இங்கே திருவாசகத்தை யெடுத்துக் காட்டினார்; 100 - 102- ஆம் அடி களின் உரைக்கும் இஃது ஒக்கும்; "ஆதலி னமது சக்தி யறுமுக னவனும் யாமும், பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான், ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும், போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்" (கந்த. திருவிளை. 19) என்பது இங்கே அறியத்தக்கது.

[3] "செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்......புரிசை" (பதிற். 53 : 6 - 9) என்பதற்கு, 'சிலம்பும் தழையும் புரிசைக்கண்

69. பொருநர் தேய்த்த போர் அரு வாயில் - பொருவாரை இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த்தொழில் அரிதாகிய வாயிலினையும்,

70. திரு [1] வீற்றிருந்த தீது தீர் நியமத்து - திருமகள் வருத்த மின்றியிருந்த குற்றந்தீர்ந்த அங்காடித் தெருவினையும்,

71. மாடம் மலி மறுகில் கூடல் குடவயின் - மாடங்கள் மிக்க ஏனைத் தெருக்களையுமுடைய மதுரையின் மேற்றிசையிடத்து,

அம் சிறை வண்டின் அரி கணம் (76) - அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள்,

72. இரு சேறு அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த-கரிய சேற்றினையுடைய அகன்ற வயலிலே முறுக்கு நெகிழ்ந்து பின்பு தாதும் அல்லியும் தோன்ற மலர்ந்த,

73. முள் தாள் தாமரை துஞ்சி - முள்ளையுடைத்தாகிய தாளை யுடைய தாமரைப்பூவிலே இராப்பொழுது துயில்கொண்டு,

73 – 4. வைகறை கள் கமழ் நெய்தல் ஊதி - விடியற்காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற்பூவை யூதி,

எல் பட - ஞாயிறு தோன்றின காலத்தே,

75 - 7. [கண்போன் மலர்ந்த காமரு சுனைமலர், அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும், குன்றமர்ந் துறைதலு முரியன் :]

அஞ்சிறைவண்டி னரிக்கணமென்பது முன்னே கூட்டிற்று.

கண் போல் மலர்ந்த காமரு சுனை மலர் ஒலிக்கும் குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - கண்ணையொக்க விரிந்த [2] விருப்பமருவின

தங்கினவென்றது, 'ஈண்டுப் பொருவீருளீரேல் நும்காலிற் கழலினை யும் அரையிற் போர்க்குரிய உடையினையும் ஒழித்து, இச் சிலம்பினை யும் தழையினையும் அணிமினென, அவரைப் பெண்பாலாக இகழ்ந்த வாறென்க' என்றெழுதிய விசேடவுரை இங்கே ஒப்பு நோக்கற் பாலது.

[1] வீற்றிருந்த வென்பதற்கு இங்கே கூறியவாறே சீவகசிந்தா மணியிலும் பொருளெழுதுவர்.

[2] "காமரு தும்பி" (சிறுபாண். 77), "காமருருவின்" (மதுரைக். 422) என்பவற்றில், 'காமரு' என்பதற்கு இங்கே எழுதியவாறே விருப்பம் மருவினவென்றே பொருளெழுதுவர்; "காமரு நோக்கினை" (கலித். 80 : 14) என்பதில், 'காமரு' என்பதற்கு விருப்ப மருவுகின்ற வென்றெழுதிய பொருளும், "காமர்: கடைக்குறைந்து நின்றது; மருவும் : ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு மவ்வீறு சந்தியாற் கெட்டது" என்ற இலக்கணக் குறிப்பும் இங்கே பயன்படுவனவாம். "காமம் வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்பதாயிற்று" என்பார் அடியார்க்கு நல்லார் சிலப். 4 : 40.

சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்கும் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந் திருத்தலும் உரியன்;

உம்மை : எதிரது தழீஇய எச்சவும்மை.

கூடற்குடவயிற் (71) குன்று; வண்டின் அரிக்கணம் (76) துஞ்சி (73) ஊதி (74) ஒலிக்குங் (76) குன்று.

அதாஅன்று - அதுவன்றி,

அதாஅன்றென அகரமிட்டெழுதுக; இதனை "அன்றுவரு காலை" (தொல். உயிர்மயங். சூ. 56) என்பதனானும், "இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி" (தொல். உயிர்மயங். சூ. 35) என்பதனுள், "தொன்றியன் மருங்கின்" என்பதனானும் முடிக்க.

திருச்சீரலைவாய்

78. வைந்நுதி யென்பதுமுதல் அலைவாய்ச் சேறல் (125) என்னுந் துணையும் ஒரு தொடர்.

வை நுதி பொருத வடு ஆழ் வரி நுதல் - கூர்மையுடைத்தாகிய தோட்டி வெட்டின வடுவழுத்தின புகரையுடைய மத்தகத்தே,

வைந்நுதி : ஆகுபெயர்.

79. வாடா மாலை ஓடையொடு துயல்வர - பொன்னரிமாலை பட்டத்தோடே கிடந்து அசைய,

80. [1]படும் மணி இரட்டும் மருங்கின் - தாழ்கின்ற மணி மாறி யொலிக்கின்ற பக்கத்தினையும்,

கடு நடை - கடிய நடையினையும்,

81. கூற்றத்து அன்ன மாற்ற அரு மொய்ம்பின் - கூற்றுவனை யொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையுமுடைய,

82. கால் கிளர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு - ஓடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றை யேறி,

மருங்கு (80) முதலியவற்றையுடைய வேழத்தை நுதலிலே மாலை பட்டத்தோடே யசைய ஏறியென முடிக்க.

83 - 4. ஐ வேறு உருவின் செய்வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி-ஐந்தாகிய வேறுபட்ட வடிவினை யுடைய முடிக்குச் செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடி யோடே கூடி விளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடு மிகும் அழகினை யுடைய மணி,

ஐவேறுருவு : [2] "தாம முகுடம் பதுமங் கிம்புரி, கோடக மிவை முடிக் கைவே றுருவே."

---

[1] ஓசைமணி (வேறுரை).

[2] "தாம முகுடம் பதுமங் கோடகங், கிம்புரி முடியுறுப் பைந் தெனக் கிளப்பர்" (திவாகரம்); "கோடகங் கிம்புரி முகுடந் தாமம், பதும முடியுறுப் பிவையைந் தாகும்" (பிங். 1169)

85. மின் உறழ் இமைப்பின் சென்னி பொற்ப - மின்னோடே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவு பெற,

86. நகை தாழ்பு துயல்வரூஉம் வகை அமை பொலங்குழை - ஒளி தங்கி அசையும் தொழிற்கூறமைந்த பொன்னாற் செய்த மரக்குழை,

87 - 8. சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ அகலா மீனின் அவிர்வன இமைப்ப - சேய்நிலத்தே சென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய மதியைச் சூழ்ந்து நீங்காத மீன்கள் போல விளங்குவனவாய் ஒளியைக் கால,

மீன் - உரோகிணி முதலியன; வியாழமும் வெள்ளியுமாம்.

89. தா இல் கொள்கை தம் தொழில் முடிமார் - வருத்தமில்லாத விரதங்களையுடைய தவத்தொழிலை முடிப்பாருடைய,

90. மனன் நேர்பு எழுதரு [1]வாள் நிறம் முகன் - மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளியையுடைய நிறத்தையுடைய முகங்களிலே,

பொற்ப (85) இமைப்ப (88) எழுதரு முகனென்க.

முகனென்றது ஆறற்கும் பொது.

91 - 2. [மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொருமுகம்:] ஒருமுகம் மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்க பல்கதிர் விரிந்தன்று - ஒருமுகம் பெருமையையுடைத்தாகிய இருட்சியையுடைய உலகம் குற்றமின்றாய் விளங்கும்படி பல கிரணங்களையும் தோற்றுவித்தது;

ஒரு முகமென்று முன்னே கூட்டிப் பொருள் கொள்க.

92 - 4. ஒருமுகம் [2]ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி காதலின் உவந்து வரம் கொடுத்தன்று - ஒருமுகம் தன்மேல் அன்பு செய்தவர்கள் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனிதாக நடந்து அவர்மேற் சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுத்தது;

94 - 6. ஒருமுகம் மந்திர விதியின் [3]மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி ஓர்க்கும் - ஒருமுகம் மந்திரத்தையுடைய வேதத்திற் கூறிய முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்கு வாராதபடி நினையாநிற்கும்;

---

[1]ஒளிவிடுகின்ற ஆறு திருமுகங்களையுடையவன்; அந்தத் திருமுகங்களினுடைய படிவஞ்சொல்லின் (வேறுரை).

[2]ஏழையர் இரந்து துதிக்க (வேறுரை).

[3] மரபுளி : உளி, மூன்றுருவதன் பொருள்படுவதோரிடைச்சொல். அந்தணர் - அழகிய தட்பத்தினையுடையார். ஓர்க்கும் - திருவுள்ளத்து அடைக்கும் (வேறுரை).

[1]அந்தத்தை அணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே நோக்குவாரென்றவாறு.

96 - 8. [ஒருமுக மெஞ்சிய பொருள்களை [2]யேமுற நாடித், திங்கள் போலத் திசைவிளக் கும்மே :] ஒரு முகம் எஞ்சிய பொருள்களை நாடி ஏம் உற திங்கள் போல திசை விளக்கும் - ஒருமுகம் ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களிலுமுள்ள பொருள்களை ஆராய்ந்து இருடிகள் ஏமமுறும்படி உணர்த்தித் திங்கள் போலத் திசைகளெல்லாம் விளக்குவிக்கும்;

ஏமம் - இரட்சை. [3]கலைநிறைதலின் திங்கள் உவமையாயிற்று.

98 – 100. [ஒருமுகம், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக் கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே:] ஒரு முகம் செல் சமம் முருக்கி கறுவுகொள் நெஞ்சமொடு செறுநர் தேய்த்து [4]களம் வேட்டன்று - ஒருமுகம் திருவுள்ளத்துச் செல்கின்ற நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டுமென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர் முதலியோரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வியை வேட்டது;

சமம் - நடுவு நிலைமை; அதனைக் கெடுத்தலாவது, தேவரையும் அசுரரையும் ஒப்பக் கருதாது தேவரைக் காத்து அசுரரையழித்தல்.

100 - 102. [ஒருமுகங் குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், [5]மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே :]

ஒரு முகம் குறவர் மடமகள் [6]கொடிபோல் நுசுப்பின் வள்ளியொடு நகை அமர்ந்தன்று - ஒரு முகம் குறவருடைய மடப்பத்தையுடைய மகளாகிய வல்லி போலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று;

---

[1] "அந்தணர் - வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார்" (மதுரைக். 474, ந.); "அந்தத்தை யணவுவார் அந்தணர்; என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு" (கலித். கட. 3, ந.)

[2]ஏமுற நாடி-இரக்கைபொருந்த ஆராய்ந்து; ஏமம் கடைக்குறைபட்டது (வேறுரை)

[3] "கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு ஈண்டு மதி உவமையாயிற்று" (சிறுபாண். 220, ந.); "நாடோறும் நிறைந்தமதி உலகறியக் கலை நிரம்பினமை தோற்றுவித்தலின், உவமையாம்" (சீவக. 454, ந.)

[4] போர்க்களத்தை விரும்பாநிற்கும் (வேறுரை).

[5] கற்பின் வரலாற்றினையுடைய வள்ளி நாய்ச்சியார் (வேறுரை).

[6] வல்லிசாதக்கொடி (வேறுரை).

மடவரல் நகையெனக் கூட்டித் தனக்கு ஓரறியாமை தோன்றுந் தன்மையுடைத்தாகிய நகையென்று கூறுக.

அவளொடு [1]நகையமர்தலின் அறியாமை கூறினர். காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கை நடத்தற் கென்றுணர்க. அது, "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" (திருவா. திருச்சாழல், 9) என்பதனுள், "பெண்பா லுகந்தில னேற்பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்பதனானுணர்க.

விரிந்தன்று (92) கொடுத்தன்று (94) வேட்டன்று (100) நகையமர்ந்தன்று (102) ஓர்க்கும் (96) விளக்கும் (98) என்பன முற்றுச் சொல்.

102 - 3. [ஆங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்:]

அ மூவிரு முகனும் - அவ்வாறுமுகமும்,

ஆங்கு முறை நவின்று ஒழுகலின் - அத்தொழில்களிடத்துச் செய்யும் முறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே அம்முகங்களுக்குப் பொருந்த,

104 - 6. [ஆரந் தாழ்ந்த வம்பகட்டு [2]மார்பிற், செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு, வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்:]

ஆரம் தாழ்ந்த அம் பகடு மார்பின் செம்பொறி வாங்கிய தோள் - பொன்னாற் செய்த ஆரந்தங்கிய அழகையுடைத்தாகிய பெருமையையுடைய மார்பிற் கிடக்கின்ற உத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்று வரியினையும் தன்னிடத்தே வந்து விழும்படி வாங்கிக் கொண்ட தோள்,

வாங்கிய வென்றார், அவ்வரி தோளளவும் வந்து கிடந்தமை தோன்ற; "வரையகன் மார்பிடை வரியு மூன்றுள" (சீவக. 1462) என்றார் பிறரும்.

மொய்ம்பின் வண்புகழ் நிறைந்து - தம்முடைய வலியினாலே பெரிய புகழ் நிறையப்பட்டு,

சுடர் விடுபு வசிந்து வாங்கு தோள் - சுடரையுடைய படைக்கலங்களை யெறிந்து பகைவர்மார்பைப் பிளந்து அவற்றை வாங்கு தோள்,

சுடரையுடைய படைக்கலங்களைச் சுடரென்றார்; அஃது ஆகு பெயர்.

---

[1](பி- ம்.) 'நகையமர்தல் இன்றியமையாமை'

[2]மார்பிலே சீதேவியைக் கைக்கொண்ட வலியினையுடைய, ஒளிவிட்டு வளவிய புகழ் நிறைந்து வளர்ந்து நீண்டுநிமிர்ந்த தோள்கள் (வேறுரை).

நிமிர் தோள் – பெருகு தோள்,

நிறைந்து நிமிர் தோளென்க.

வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாதலின், செய்வதன் தொழிற்கும் செய்விப்பதன் தொழிற்கும் பொது. அசுரர் முதலியோரை அழிக்குங்காலத்துப் பன்னிரு கையினும் படைக்கலமேந்துவனென்று உணர்க; அஃது அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி (58) என்றதனுன் உணர்க.

வசிந்தென்பதற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்தல் [1]இறைவனுதலிற் பொருந்தாது.

இனி மொய்ம்பினையுடைத்தாய் ஒளி விட்டு நிறைந்து வளைய வேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிரும் தோளென்றும் உரைப்பர். இதற்கு வசிந்தென்பதனைத் தொடியொடு கொட்ப (114) மணியிரட்ட (115) என மேலே கூட்டுக.

இனி, அவை போர் செய்யாக் காலத்து இங்ஙனம் இருக்குமென்று அவற்றின் இயல்பு கூறுகின்றார்.

அத்தோள்களில் ஒரு கை யென்க.

107. [விண்செலன் மரபி னையர்க் கேந்திய தொருகை:] ஒரு கை [2]விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது - ஒரு கை எக்காலமும் ஆகாயத்தே இயங்குதல் முறைமையினையுடைய தெய்வ இருடிகளுக்குப் பாதுகாவலாக எடுத்தது;

108. [உக்கஞ் சேர்த்திய தொருகை:] ஒரு கை உக்கம் சேர்த்தியது - ஏந்திய கைக்கு இணைந்த கை மருங்கிலே வைத்தது;

என்றது - ஞாயிற்றின் வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தலாற்றாவென்று கருதித் [3]தமதருளினுற் சுடரொடு திரிந்து அவ்வெம்மையைப் பொறுக்கின்ற முனிவரைப் பாதுகாக்கவே உலகத்தைத் தாங்கிக் காத்ததாயிற்று. இதனுனே இக்கை மாயிருண்ஞால மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத்திற்கு (91–2) ஏற்ற தொழில் செய்ததாயிற்று. இது, "நிலமிசை வாழ்ந ரலமர றீரத், தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக், காலுண வாகச் சுடரொடு

---

[1] இங்கே இவ்வாறு கூறியது, "வாண்மிகு வயமொய்ம்பின்" (பரி. 9: 57) என்பதற்குப் பரிமேலழகர், 'வாட்டழும்பு நெருங்கிய வெற்றிமொய்ம்பினையுடைய முருகன்' என்றெழுதிய உரையைக் கருதிப் போலும்.

[2] ஆகாயத்திலே இயக்கத்தை முறைமையாகவுடைய தேவர்க்கு (வேறுரை).

[3] "சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்" (சிலப். வேட்டுவ. 18)

கொட்கும், அவிர்சடை முனிவரு மருள" (புறநா. 43: 1-4) என்ற புறப்பாட்டானுணர்க.

மனமும் முகமும் கையும் ஒரு தொழிலைச் செய்தலின், ஏனைக் கை தொழிலின்றி மருங்கிலே கிடந்தது.

109-10. [நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை, அங்குசங் கடாவ வொருகை :] ஒரு கை அங்குசம் கடாவ ஒரு கை நலம்பெறு [1]கலிங்கத்து குறங்கின்மிசை அசைஇயது - ஒரு கை தோட்டியைச் செலுத்தாநிற்க மற்றைக் கை செம்மை நிறம் பெற்ற ஆடையையுடைத்தாகிய துடையின் மேலே கிடந்தது;

இஃது யானையேறுவார்க்கு இயல்பென்று கூறினர். தன்னை வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல் வந்து அருள் செய்தல் இயல்பாகலின், இக்கைகள் காதலினுவந்து வரங்கொடுத்த முகத்திற்கு (94) ஏற்றவாறுணர்க.

110-11. இரு கை [2]ஐ இரு வட்டமொடு எஃகு [3]வலம் திரிப்ப - இரண்டு கைகள் வியப்பையும் கருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற,

இதனானே, [4]அசுரர்வந்து வேள்வியைக் கெடாமல் அவரை ஓட்டுதற்கு இவற்றைச் சுழற்றுதலின் வேள்வி ஓர்க்குமுகத்திற்கு (96) இக்கைகள் ஏற்றவாறுணர்க.

111-3. ஒரு கை [5]மார்பொடு விளங்க ஒரு கை [6]தாரொடு பொலிய - முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்த பொருளை உணர்த்தும் காலத்து ஒரு கை மார்போடே விளங்காநிற்க, ஒரு கை மார்பின்மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற,

என்றது: இறைவன் மோனமுத்திரையத்தனாய்த் தானேயிருந்து காட்ட [1]ஊமைத்தசும்புள் நீர் நிறைந்தாற்போல ஆனந்த

---

[1] புடைவை (வேறுரை).

[2] ஐந்தாகிய பெருத்த பரிசை; பத்துத் திருமுகத்தினையுடைய கேடகமெனினுமமையும் (வேறுரை). [3]வெற்றிபெறச் சுழற்ற (வேறுரை).

[4] "அந்தண்மறை வேள்வி காவற்கார" (திருப்.); "அறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி னழலு மூள, மறங்குலவு வேலெடுத்த குமரவேள்" (திருவிளை. கடவுள்.)

[5] மார்பினிடத்தே மௌன மந்திரத்தைப் பேணாநிற்க (வேறுரை).

[6] தார் - மார்பிலுள்ள மாலை; "வண்ண மார்பிற் றருங் கொன்றை" (புறநா. கடவுள்.)

[7] ஊமைத்தசும்பு - வாயில்லாத குடம்; "குவிவா யமையாக் குட நிறை நீர்,.......துரியமு மிறந்த தூயோன் றாய்மை, யருளினன்" (ஞானமிர்தம். 47)

மய்மான ஒளி மாணாக்கர்க்கு நிறைதலின், அதற்குரிய மோனமுத் திரை கூறிற்று; "தன்னை யுன்னி யென்னை யாக்கிய போழ்தே யானவ னுயினேன்" (கலித். 43, ந. மேற்.) என்பதனானுணர்க.

இக்கைகள் எஞ்சிய பொருள்களை விளக்கு முகத்திற்கு (97 - 8) ஏற்றவாறுணர்க.

113 - 5. [ஒருகை, கீழ்வீழ் [1]தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட;] ஒரு கை தொடியொடு மீமிசை கொட்ப கீழ்வீழ் ஒரு கை பாடு இன் படு மணி இரட்ட - ஒரு கை தொடியொடு மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை கொடுப்பக் கீழே வீழ்ந்த மற்றைக் கை ஓசையினிதாகிய ஒலிக்கின்ற மணியை மாறி யொலிக்கப்பண்ண,

இக்கை களவேள்வி வேட்கின்ற முகத்திற்கு (99 – 100)ஏற்றவா றுணர்க.

115-7. ஒரு கை நீல் நிற விசும்பின் மலி துளி பொழிய ஒரு கை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட - ஒரு கை நீல நிறத்தையுடைய மேகத்தாலே மிக்க மழையைப் பெய்வியாநிற்க, ஒரு கை தெய்வ மகளிர்க்கு மணமாலையைச் சூட்ட,

என்றது: வள்ளியொடு நகையமர்ந்த முகம் (100-102) உலகிற்கு இல்வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின், [2]அவ் வில்வாழ்க்கைநிகழ்த்து தற்கு மழையைப் பெய்வித்தது ஒரு கை; ஒரு கை இல்வாழ்க்கை நிகழ்த்தற்பொருட்டு மணமாலையைச் சூட்டிற்றென்றவாறு.

117 - 8. [3]ஆங்கு அ பன்னிரு கையும் பால் பட இயற்றி - அப் படியே அந்தப் பன்னிரண்டு கையும் முகத்தின் பகுதியிலே படும்படி தொழில் செய்து.

முகங்களில் ஒரு முகம் ஓர்க்கும் (96) ஒரு முகம் விளக்கும் (98) ஒரு முகம் வேட்டன்று (100) ஒரு முகம் அமர்ந்தன்று (102) ஒரு முகம் விரிந்தன்று (92) ஒரு முகம் கொடுத்தன்று (94) அம்மூவிரு முகனும் அத் தொழில்களிடத்துச் செய்யும் முறைமைகளைப் பயின்று நடத் துகையினாலே (103) அம்முகங்களுக்குப் பொருந்தத் தோள்களில் (106) இரு கை (110) திரிப்ப (111) ஒரு கை விளங்க (112) ஒரு கை பொலிய (113) ஒரு கை கொட்ப (114) ஒரு கை இரட்ட (115) ஒரு கை பொழிய (116) ஒரு கை சூட்ட (117) ஒரு கை ஐயர்க்கேந்தியது (107) ஒரு கை உக்கஞ் சேர்த்தியது (108) ஒரு கை கடாவ (110) ஒரு கை

[1] பார வளையோடே (வேறுரை).

[2] "நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும், வானின் றமையா தொழுக்கு" (குறள், 20)

[3]ஆங்கு - ஆக (வேறுரை).

அசைந்தது (109); அப்படியே பன்னிரு கையும் முகத்தின் பகுதியிலே படும்படி தொழில் செய்தென இச்சொன் முடிபுக்கேற்பக் கைகளை யும் முகங்களையும் [1]மாட்டாக முடிக்க.

திரிப்பவென்பது முதலிய நிகழ்காலச் செயவெனெச்சங்கள் ஏந்தி யது சேர்த்தியதென முற்றுவினை கொண்டு முடிந்தன.

119. அந்தரம் பல்லியம் கறங்க-ஆகாயத்தினது துந்துபி ஒலிப்ப,

119-20. திண் [2]காழ் வயிர் எழுந்து இசைப்ப - திண்ணிய வயி ரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப,

வால் வளை ஞரல - வெள்ளிய சங்கு முழங்க,

121. உரம் தலை கொண்ட உரும் இடி முரசமொடு - வலியைத் தன்னிடத்தே கொண்ட உருமேற்றினது இடிப்புப்போலும் ஓசையையுடைய முரசுடனே,

122. பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ - பல பீலியை யுடைய மயில் அவனுணையினாலே [3]வென்றெடுத்த கொடியிலே யிருந்து ஒலியாநிற்க,

பொறி: ஆகுபெயர்.

123. விசும்பு ஆறாக - ஆகாயமே வழியாக,

விரை செலல் முன்னி - விரைந்த செலவினை மேற்கொண்டு,

124. [உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர் :] ஓங்கு உலகம் புகழ்ந்த உயர் [4]விழுச்சீர் - நன்மையோங்கும் நன்மக்கள் புகழ்ந்த உயரும் சீரினையுடைய புகழினையுடைய,

125. அலைவாய் [5]சேறலும் நிலைஇய பண்பு - நாமனூரலைவா யென்னும் திருப்பதியேற எழுந்தருளுதலும் அவற்கு நிலைபெற்ற குணம்;

குன்றமர்ந்துறைதலுமுரியன்; அதாஅன்று (77) வேழமேல் கொண்டு (82) இயற்றிக் (118) கறங்க (119) இசைப்ப ஞரல (120) அகவ (122) முன்னி (123) அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பென முடிக்க.

அதாஅன்று - அதுவன்றி,

திருவாவினன்குடி

126. சீரை தைஇயவென்பதுமுதல் முனிவர் முற்புக (137) என்னுந் துணையும் ஒரு தொடர்.

---

[1] மாட்டு : 43 - 4-ஆம் அடிகளின் விசேடவுரையைப் பார்க்க.
[2] கரிய கொம்பு (வேறுரை).
[3] "செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி" (முருகு. 67)
[4] விழுமிய அழகு (வேறுரை) [5]சேறல் - செறிதல்(வேறுரை).

சீரை [1] தைஇய உடுக்கையர் - மரவுரியை உடையாகச் செய்த உடையினையுடையர்,

இதற்குக் [2]கற்றோய்த்தல் முதலியன செய்த உடுக்கைய ரென்பாரு முளர்.

126-7. சீரோடு வலம்புரி புரையும் வால் [3]நரை முடியினர் - அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச்சங்கினை யொக்கும் வெள்ளிய நரைமுடியினை யுடையர்,

128. மாசு அற இமைக்கும் உருவினர் - [4]எக்காலத்தும் நீராடு தலின் அழுக்கற விளங்கும் வடிவினை யுடையர்,

128-30. மானின் உரிவை தைஇய ஊன் கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் - கிருட்டிணசினம் போர்த்த விரதங் களால் விட்ட பட்டினியால் தசை கெடுகின்ற மார்பினெலும்புகள் கோவை தோன்றி உலவும் உடம்பினையுடையர்,

தைஇய மார்பென்க.

130-31. நன் பகல் பல உடன் கழிந்த உண்டியர் - எப் பொருளும் நுகர்தற்கு நன்றாகிய பகற்பொழுதுகள் பலவும் சேரக் கழிந்த உணவினையுடையர்,

இது மாதோபவாசம் கூறிற்று.

131-2. இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர் - மாறுபாட் டோடே நெடுங்காலம் நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தினையுடையர்,

பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம்.

132-3. [யாவதும், கற்றோ ரறியா வறிவினர் :] [5]கற்றோர் யாவதும் அறியா அறிவினர் - பலவற்றையும் கற்றோர் சிறிதும் அறியப்படாத இயல்பான அறிவினையுடையர்,

133-4. கற்றோர்க்கு தாம் வரம்பு ஆகிய தலைமையர் - பலவற் றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையையுடையர்,

என்றது கல்வியைக் கரைகண்டா ரென்றவாறு.

134-5. காமமொடு கடு சினம் கடிந்த [6]காட்சியர் - ஆசை யோடே கடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையர்,

---

[1] தைத்த (வேறுரை).

[2] கற்றோய்த்தல் - காவிக்கல்லைக் கரைத்த நீரில் தோய்த்தல்.

[3] நரைக்கொண்டையினை யுடையார் (வேறுரை).

[4] "நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇ" (பு. வெ. 168)

[5] யாவதும் கற்றோர் - எவ்வகைப்பட்ட பொருளினையும் கற்று வல்லுநர் (வேறுரை). [6]தோற்றத்தினை யுடையார் (வேறுரை).

[1] கோபத்தின் பின்னுகச் சிறிது பொழுது நிற்பது சினம்.

135 - 6. இடும்பை யாவதும் அறியா இயல்பினர் – [2] தவத்தான் மெய்வருத்தம் உளவேனும் மனத்தான் வருத்தம் சிறிதும் அறியப் படாத இயல்பினையுடையர்,

மே வர - திருவுள்ளம் பொருந்துதல் வர,

137. [3] துனி இல் காட்சி முனிவர் முன் புக - ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்ல அறிவினையுடைய முனிவர் முன்னே செல்ல,

உடுக்கையர் (126) முடியினர் (127) உருவினர் (128) யாக்கையர் (130) உண்டியர் (131) மனத்தினர் (132) அறிவினர் (133) தலைமை யர் (134) காட்சியர் (135) இயல்பினராகிய (136) முனிவர் (137) மேவர (136) முற்புக (137) வென முடிக்க.

138. புகைமுகந்தன்ன என்பதுமுதல் மேவலர் (142) என்னுந் துணையும் பாடுவாரைக் கூறிற்று.

[4] புகை முகந்தன்ன மாசு இல் தூ உடை - புகையை முகந்தா லொத்த தெய்வத்தன்மையால் அழுக்கேருத தூய உடையினையும்,

139. [5] முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து - முகை வாய் நெகிழ்ந்த மாலை சூழ்ந்த மார்பினையும்,

கட்டுதலிற் றகையென்ருர், மாலையை; ஆகுபெயர்.

140 - 41. செவி நேர்பு வைத்த செய்வு உறு திவவின் நல் யாழ் நவின்ற - [6] எஃகுச் செவியாலே சுருதியையளந்து நரம்பைக் கட்டின சுற்றுதலுறும் வார்க்கட்டினையுடைய நன்ருகிய யாழின் இசையிலே பயின்ற,

141 - 2. நயன் உடை நெஞ்சின் [7] மென்மொழி மேவலர் இன் நரம்பு உளர – ஈரமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லிய வார்த்தை சொல்லுதலைப் பொருந்திய கந்தருவர் இனிய நரம்பை வாசிக்க,

நவின்ற நயனென்க.

---

[1] "கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்" என்பர் பின்; சிறுபாண். 210, உரை.

[2] "இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக், கையாருக் கொள்ளாதா மேல்" (குறள். 627). [3] துயரமில்லாத தோற்றம் (வேறுரை),

[4] புகையைக் கையாலே முகந்தாற் போன்று நொய்யவாய (வேறுரை).

[5] மொட்டுப்பூக் கிண்கிணிவாய்க் கொண்ட பக்குவத்திலே கட்டின மாலை சூழ்ந்த மார்பினையும் (வேறுரை).

[6] எஃகுச் செவி - மூவகைச் செவியிலும் தலையான கூரிய செவி; "எஃகுநுண் செவிகள் வீழ" (சீவக. 2718); "எஃகுச் செவித் தேவர்கள்" (தக்க. 610, உரை.)

[7] மெத்தென்ற சொற்சேர்ந்தோராகிய வித்தியாதரர் (வேறுரை).

143. நோயின்றென்பதுமுதல் மகளிர் (147) என்னுந் துணையும் பாடும் மகளிரைக் கூறிற்று.

நோய் இன்று இயன்ற யாக்கையர் - மக்களுக்குரிய நோய் இல்லையாக நிருமித்த உடம்பினை யுடையராய்,

143-4. மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மாவினது விளங்குகின்ற தளிரையொக்கும் நிறத்தினையுடையராய்,

144-5. அவிர்தொறும் பொன் உரை கடுக்கும் திதலையர் - விளங்குந்தோறும் பொன்னுரை விளங்கினாற்போலும் துத்தியினை யுடையராய்,

145-7. இன் நகை [1]பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல் [2]மாசு இல் மகளிரொடு - கட்கினிய ஒளியினையுடைய பதினெண் கோவையாகிய [3]மேகலை யணிந்த தாழவேண்டியவிடம் தாழ்ந்து உயரவேண்டிய விடம் உயர்ந்த அல்குலையுடைய குற்றமில்லாத கந்தருவ மகளிரோடே,

மறு இன்றி விளங்க - குற்றமின்றாய் விளங்காநிற்க,

உடையினையும் (138) ஆகத்தினையுமுடைய (139) மென்மொழி மேவலர் (142) யாக்கை (143) முதலியவற்றையுடையராய், மாசில்லாத மகளிரோடே மறுவின்று விளங்க (147) இன்னரம்புளர (142) வென முடிக்க.

148. [4]கடுவொடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிறு - நஞ்சுடனே உறைக்குள்ளே கிடந்த துளையினையுடைய வெள்ளிய எயிற்றினையும்,

மிடற்றினஞ்சு தன்னிடத்தே தோன்றுதலின், 'கடுவொடு' என்றார். [5]எயிறு: காளி, காளாத்திரி, யமன், யமதூதியென நான்காம்.

149. அழலென உயிர்க்கும் அஞ்சு வரு கடு திறல் - நெருப்பென் னும்படி நெட்டுயிர்ப்புக் கொள்ளும் கண்டார்க்கு அச்சந் தோன்றும் கடிய வலியினையுமுடைய,

150. பாம்பு பட புடைக்கும் - பாம்பு படும்படி அடிக்கும்,

---

[1] அரைப்பட்டிகை (வேறுரை).

[2] தெய்வக் குறத்திகளோடே (வேறுரை).

[3] மேகலை யென்பது காஞ்சி முதல் விரிசிகை யீறாக உள்ளவற்றிற் குப் பொதுப்பெயர் (பரி. 10: 11, பரிமேல்.); "எண்கோவையாகிய மேகலை" (கலித். 56: 9-12, ந.)

[4] ஒடொடுங்கிய - ஒடுங்கி ஓடப்பட்ட (வேறுரை).

[5] இப்பற்களின் இயல்பு, சித்தராரூடம், சிந்தாமணி முதலிய வற்றிற் கூறப்பட்டுள்ளது; 'காளி காளாத்திரி தூதி யமதூதி' என்பர்; தக்க. 155, உரை.

150-51. *பல் வரி கொடு சிறை புள் அணி நீள் கொடி செல்வனும்* — பல வரியினையுடைத்தாகிய வளைந்த சிறகினையுடைய கருடனை யணிந்த நீண்ட கொடியினையுடைய திருமாலும்,

151-4. *[வெள்ளேறு, வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள், உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண், மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்:]*

[1] *வலம் வயின் வெள் ஏறு உயரிய செல்வன்* - வெற்றிக்களத்தே வெள்ளிய ஏற்றினை வெற்றிக்கொடியாக எடுத்த உருத்திரன்,

உமை அமர்ந்து விளங்கும் செல்வன் - இறைவி ஒரு பாகத்தே பொருந்தி விளங்கும் செல்வன்,

பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழ்கின்ற சிக்கென்ற தோளினையும்,

இமையா முக்கண் செல்வன் - இதழ் குவியாத மூன்று கண்ணினையுமுடைய செல்வன்,

மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும் - முப்புரத்தை யெரித்த மாறுபாடு மிக்க செல்வனும்,

155. *நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து* - நூற்றைப் பத்தாக அடுக்கிய கண்ணினையும்,

என்றது ஆயிரங்கண்ணென்றவாறு.

155-6. *நூறு பல் வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து* - நூறென்னும் எண்ணுகிய பல வேள்விகளை வேட்டுமுடித்ததனாற் பெற்ற பகைவரை வென்றுகொல்கின்ற வெற்றியினையும்,

157. *[ஈரிரண் டேந்திய மருப்பின்:] ஏந்திய இரு இரண்டு மருப்பின்* - தலைகள் ஏந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும்,

எழில் நடை - அழகினையுடைய நடையினையும்,

158. *தாழ் பெரு [2] தட கை* - [3] நிலத்தே கிடக்கின்ற பெரிய வளைவினையுடைய கையினையுமுடைய,

158-9. *உயர்த்த யானை எருத்தம் ஏறிய திரு கிளர் செல்வனும்* - எல்லாராலும் உயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையின் புறக்கழுத்திலே ஏறிய திருமகள் விளங்கும் இந்திரனும்,

உயர்ந்த: உயர்த்தவென விகாரமுமாம்.

நாட்டத்தினையும் (155) கொற்றத்தினையுமுடைய (156) செல்வனென்க.

---

[1] வலவயின் உயரிய - வெற்றியினால் ஏறிய (வேறுரை).

[2] "தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்" (தொல். உரி. சூ. 23)

[3] "சீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கை" (சிறுபாண். 19); "இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்தி" (குறிஞ்சிப். 163)

மருப்பு (157) முதலியவற்றையுடைய யானை (158) யென்க.

160 - 61. நால் பெரு தெய்வத்து நல் நகர் நிலைஇய உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கை - நான்காகிய பெரிய தெய்வத்தை யுடைய நன்றாகிய ஊர்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒரு தொழிலையே விரும்பிய கோட்பாட்டையுடைய செல்வன் (151) என முன்னே கூட்டித் திருமாலுக்கு அடையாக்குக.

[1]நாற்பெருந் தெய்வமான : இந்திரன், யமன், வருணன், [2]சோம னென்னும் தெய்வங்கள்.

162. பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக - பலரும் புகழ்கின்ற அயன் அரி அரனென்னும் மூவரும் தத்தமக்குரிய தொழில்களை முன்புபோல நிகழ்த்தித் தலைவராக வேண்டி,

என்றது : பிள்ளையார் அயனைச் சபித்தலின், அயன் படைத்தற் றொழிலைத் தவிரவே ஏனையிருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற் றொழிலும் இன்றாமாகலின் மூவரும் தத்தமக்குரிய தொழில்களைப் பெற்றுத் தலைவராக வென்றார்.

163 - 5. [[3]ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றித், [4] தாமரை பயந்த தாவி லூழி, நான்முக வொருவற் சுட்டி :]

ஞாலம் தன்னில் தோன்றி[5] ஏம் உறு நான்முக ஒருவன் சுட்டி - பிள்ளையார் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி மயக்கமுறு கின்ற நான்கு முகத்தையுடைய அயனைப் பழைய நிலையிலே நிறுத்தக் கருதி,

தாமரை பயந்த ஊழி தா இல் ஒருவன் - திருமாலுடைய திருவுந்தித் தாமரை பெற்ற ஊழிகடோறும் தன் படைத்தற் றொழிலில் வருத்தமில்லாத ஒருவன் (165),

---

[1] நாற்பெருந் தெய்வம் - அந்தணர் தெய்வம், அரையர் தெய்வம், வைசியர் தெய்வம், சூத்திரர் தெய்வம் என்பதைச் சிலப்பதிகாரத்து (அழற்படுகாதையிற்)கண்டுகொள்க (வேறுரை).

[2] சோமன் - குபேரன்.

[3] ஏமுறு ஞாலம் - ஐயம் மிக உடைத்தாய பூமி (வேறுரை).

[4]தாமரை பயந்த தாவி லூழி நான்முகவொருவற் சுட்டி தோன்றி- தாமரைப்பூவின் கட்டோன்றிக் கேடில்லாத காலத்தினையுடைய நான் முகனாகிய அயனுக்காக முன் சொன்ன மூவரும் பூமியின்கண் வந்து தோன்றி; அது, பிள்ளையார் அயனைச் சிறையிடுகையில் அவர் எழுந் தருளியிருக்கும் திருவாவினன்குடியிற் சென்று அயனை விடுவிக்கப் பூமியின்கண் வந்ததெனக் கொள்க (வேறுரை).

[5] "ஏமுறு கடுந்திண்டேர் - பகைவர் மயக்கமுறுதற்குக் காரண மான கடிய திண்ணிய தேர்" (கலித். 27 : 25, ந.)

இனித் தாமரையென்னும் எண்ணைத் தந்த அழிவில்லாத ஊழிக் காலத்தையுடைய அயனுமாம்.

பயந்த ஒருவனென்க.

சாபமென்றது: பிள்ளையார் அசுரரை அழித்துத் தேவரைக் காத்தற்கு இந்திரன் மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்த விடத்தே, பிள்ளையார் தம் கையில் வேலை நோக்கி, ''நமக்கு எல்லாந் தந்தது இவ் வேல்'' என்ன, அருகிருந்த அயன், ''இவ் வேலிற்கு இந் நிலை என்னால் வந்ததன்றோ?'' என்றானாக ''நம் கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சக்தியுண்டோ?'' என்று கோபித்து, ''இங்ஙனம் கூறிய நீ மண்ணிடைச் செல்வாய்'' என்ற சாபத்தை.

[1] காண் வர - அழகு தோன்ற,

166. [2]பகலில் தோன்றும் இகல் இல் காட்சி - ஒரு பொருள் பலவாமாறு பகுத்துக் காண்டற்கண் வேறுபடத் தோன்றும் தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய,

167. [3] நால் வேறு இயற்கை பதினொரு மூவரோடு - நான்காகிய வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்து மூவரும்,

என்றது: ஆதித்தன், உருத்திரன், வசு, மருத்துவனென்னும் ஓரோவோர் பொருள்கள் பலவாகப் பகுக்குங்கால் பன்னிருவர் பதினொருவர் எண்மர் இருவராகப் பகுக்க, நான்கு கூறாய் முப்பத்துமூவராயினாரென்றவாறு; பதினொருவராகிய மூவரென்க; அவர் ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாம்.

ஒடு : எண்ணொடு.

168. [4]ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர் - பதினெண் வகையாகிய உயர்ந்த நிலையைப் பெற்றவரும்,

என்றது பதினெண்கணங்களை. அவர் தேவரும், அசுரரும், தைத்தியரும், கருடரும், கின்னரரும், கிம்புருடரும் இயக்கரும், விஞ்சையரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், பூதரும், பைசாச கணமும், தாரா கணமும், நாகரும், ஆகாயவாசி

---

[1]காண்வர - காட்சி பெற (வேறுரை).

[2] பகலாகிய அருக்கனைப் போலத் தோன்றாநின்ற (வேறுரை).

[3] நால் வேறு இயற்கை – சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் (வேறுரை).

[4] பதினெண் பூமியின் மிக்க பதங்களைப் பெற்றுடையர் (வேறுரை).

களும், போக பூமியோருமென இவர்: இதற்குப் 'பிறவாறும் உரைப்பர்.

பெறீஇயர் : தொழிற் பெயர்.

169. மீன் பூத்தன்ன தோன்றலர் - உடுக்கள் பொலிவுபெற்றுத் தோன்றிறுலொத்த தோற்றத்தை யுடையராய்,

169-70. மீன் சேர்பு வளி கிளர்ந்தன்ன செலவினர் - மீன்கள் உலாவுகின்ற இடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தாலொத்தசெலவினை யுடையராய்,

170-71. வளி இடை தீ எழுந்தன்ன திறலினர் - காற்றிடத்தே நெருப்பெழுந்தாலொத்த வலியினையுடையராய்,

171-2. தீ பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புப் பிறக்க உருமேறு இடித்தாற் போன்ற குரலினையுடையராய்,

இவை வினையெச்சமுற்று.

172-3. [விழுமிய, உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்:] தம் விழுமிய பெறு முறை குறை உறு மருங்கில் கொண்மார் - [2]தம்முடைய சீரிய படைத்தல் காத்தல் அழித்தலென்னும் தொழில்களைப் பண்டுபோலப் பெறுமுறைமையினைக் குறை வேண்டி நின்று பெறும் கூற்றாலே முடித்துக்கோடற்கு,

174. அந்தரம் கொட்பினர் - ஆகாயத்தே சுழற்சியினையுடையராய்,

[வந்துடன் காண:] உடன் வந்து காண - சேர வந்து காணும் படியாக,

175. தா இல் கொள்கை மடந்தையொடு - வருத்தமில்லாத [3] அருட் கற்பினையுடைய தெய்வயானையாருடன்,

---

[1]புறநானூறு, கடவுள் வாழ்த்து உரையில் பதினெண் கணங்களை இங்குக் கூறப்பட்டவற்றிற்குப் பெரும்பாலும் ஒப்பவே விரிப்பர்; "கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர், பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும், உரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம், பரகதியோர் சித்தர் பலர்", "காந்தருவர் தாரகைகள் காணுப் பசாசகணம், ஏந்துபுகழ் மேய விராக்கதரோ - டாய்ந்ததிறற், போகா வியல்புடைய போகபூமி யோருடனே, யாகாச வாசிகளா வார்" (சிலப். 5; 176-8, அடியார். மேற்.); பிங்கலந்தை முதலிய நிகண்டுகளில் இவ்வாறே கூறப்பெற்றிருக்கின்றன. "பேயும் பூதமும் பாம்பு மீறாகிய பதினெண்கணம்" (தொல். பொருள். சூ. 256) என்று பேராசிரியரும், "பதினெண்கணங்களாவன தேவகணம் பிதிரர்கணம் முதலியன" (136) என்று தக்கயாகப் பரணி உரையாசிரியரும் எழுதுவர்.

[2]162-ஆம் அடியின் உரையைப் பார்க்க.

[3] 6-ஆம் அடி உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

175-6. [சின்னாள், ஆவி னன்குடி யசைதலு முரியன் :] ஆவி னன்குடி சின்னாள் அசைதலும் உரியன் - ஆவினன்குடி யென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலு முரியன்;

பலர்புகழ் மூவரும் தலைவராக வேண்டி (162) அதற்குக் குறை பாடுண்டாக்கின நான்முகனொருவனைக் கருதி(165)ஒன்று புரிகொள்கைப் (161) புள்ளணி நீள்கொடிச் செல்வனும் (151) முரண்மிகு செல்வனும் (154) யானையெருத்த மேறிய செல்வனும் (159) முப்பத்து மூவரும் (167) பதினெண்கணங்களும் (168) தோன்றலர் (169) செலவினர் (170) திறலினர் (171) குரலினர் (172) கொட்பினராய் உடன்வந்து (174) தம் (173) விழுமிய (172) பெறுமுறை குறையுறுமருங்கின் முடித்துக் கோடற்கு (173) மென்மொழி மேவலர் இன்னரம்புளர (142) முனிவர் (137) மேவர (136) முற்புகக் (137) காணத் (174) தான் ஆவினன் குடியிலே காண்வர (165) அசைதலு முரியனென முடிக்க.

கந்தருவர் பாட்டால் (141-2) முனிவு தீர்ப்பார்.

முனிவர் தம்மை மறுமைபற்றி முன்னே சென்றூர்.

இனிச் சித்தன்வாழ்வென்று சொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன்குடி யென்று பெயர்பெற்றதென்றுமாம். அது, "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ், வில்லந் தொருமூன் றெரியுடைத்து -நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின், ஞட்டுடைத்து நல்ல தமிழ்" என்று ஔவையார் கூறியதனுள் உணர்க; [1]சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்,

அதா அன்று - அதுவன்றி,

திருவேரகம்

177. இரு மூன்று எய்திய [2]இயல்பினின் வழாஅது - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னும் ஆறுகிய நன்மை பொருந்திய இலக்கணத்தில் வழுவாமல்,

வழாது, வழாமல், வழுவாமலெனத் திரிக்க.

178. இருவர் சுட்டிய பல்வேறு தொல் குடி - தாயும் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்று மதித்த பல வாய் வேறுபட்ட பழைய குடியிற் பிறந்த இருபிறப்பாளர் (182),

குடி : [3]குண்டினர், காசிபர் என்றாற் போல்வன.

---

[1] இது முருகக்கடவுள் ஆயிரநாமத்துள் ஒன்று.

[2] இயல்பினின் - ஒழுக்கத்தினின்: அது வைதிக ஆசாரம் (வேறுரை).

[3] (பி - ம்.) 'குண்டலர்'

179-80. *[அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண், டாறினிற் கழிப்பிய:]* அறுநான்கு இரட்டி ஆண்டு நல் இளமை ஆறினில் கழிப்பிய - இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதம் கூறிய நெறியிலே போக்கிய இருபிறப்பாளர் (182).

இவர்[1]பிரமசரியங் காத்த அந்தணர்.

அறன் நவில் கொள்கை-அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையும்,

181. மூன்று வகை குறித்த [2]முத்தீ செல்வத்து-நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய [3]மூன்று வகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தனையுமுடைய,

182. இருபிறப்பாளர்-உபநயனத்துக்கு முன்பு ஒரு பிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையுமுடைய அந்தணர்,

[4]பொழுது அறிந்து நுவல-தாங்கள் வழிபடுங்காலமறிந்து தோத்திரங்களைக் கூற,

183. ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்-மூந்நூல் கொண்டு முப்புரியாக்குதலின், ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தே கொண்ட ஒரு புரி மூன்றாகிய நுண்ணிய பூணுநூலையும்,

ஞாணினையும் (183) கொள்கையினையும் (180) செல்வத்தினையுமுடைய (181) இருபிறப்பாளர் (182) என்க.

184. புலரா காழகம் புலர உடீஇ-நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்து புலர உடுத்து,

என்றது, ஈரத்துடனே யிருந்து வழிபடுதல் கூறிற்று.

185. உச்சி கூப்பிய கையினர் தன் புகழ்ந்து-தலைமேலே வைத்த கையினையுடையராய்த் தன்னைத் துதித்து,

---

[1] "நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங்காத்தான்" (தொல். களவு. சூ. 1, உரை; இறை. சூ. 1, உரை).

[2] முத்தீ: மூன்றாவன: ஒன்று வேதத்தை வழங்கவும், ஒன்று தேவர்கட்குத் தட்சிணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை ரட்சை பண்ணவும் இவ்வாறாய முத்தீ (வேறுரை).

[3] இவற்றுட் பின்னைய இரண்டன் வகையும் இக்காலத்து வழங்குவனவற்றிற்கு வேறுபட்டிருத்தலின், இம்மூன்று வகையும் சாகாபேதமாக இருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர்.

[4] உதயகாலத்தும் மத்தியான்ன காலத்தும் அத்தமன காலத்தும் தாபனம் அநுட்டானம் பூசையாகிய மூன்று தொழிலையும் முயன்று செய்ய (வேறுரை).

186. ஆறு எழுத்து அடக்கிய அருமறை கேள்வி - ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய, [1]மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை,

அது, [2]"நமோ குமாராய" என்பதாம்.

187. நா இயல் மருங்கில் நவில பாடி - நாப் புடைபெயரும் அளவிலே பயில உச்சரித்து,

188. விரை உறு நறு மலர் ஏந்தி - மணமிக்க நறிய பூவை எடுத்து,

188–9. பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் - பெரிது மகிழ்ந்து ஏரகமென்கின்ற ஊரிலே இருத்தலும் உரியன்;

இருபிறப்பாளர் (182) புலரவுடீஇத் (184) தற்புகழ்ந்து (185) நறுமலரேந்திக் (188) கூப்பிய கையராய் (185) நவிலப் பாடிப் (187) பொழுதறிந்து நுவல (182) அதற்குப் பெரிது மகிழ்ந்து (188) ஏரகத் துறைதலும் உரியனென முடிக்க.

[3]ஏரகம் - மலைநாட்டகத் தொரு திருப்பதி.

அதாஅன்று - அதுவன்றி,

குன்றுதொருடல்

190. 'பைங்கொடி – பச்சிலைக் கொடியாலே.

எல்லாவற்றினும் பசுத்திருத்தலிற் பச்சிலையென்று பெயர் பெற்றது; பச்சிலை யென்னுது சினைவினை முதன்மேலேற்றிப் பைங்கொடி யென்றார்.

நறை காய் – நறுநாற்றத்தையுடைய காயை,

அது சாதிக்காய்.

---

[1]"ஐதுரைத்து" (முருகு. 228) என்பதற்கு, 'தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றுமல் உச்சரித்து' என்றெழுதிய உரை இங்கே கருதத்தக்கது.

([2]பி–ம்.) 'நமக்குமாராய'

[3]இதனைச் சோழ நாட்டிலுள்ள சுவாமிமலை யென்னும் தலமென்று கொள்வர் அருணகிரிநாதர் முதலியோர்; "காவிரி யாற்றுக்கு ளேவரு, வளமைச் சோழநன் ஞட்டுக்கு ளேரக, நகரிற் சீர்பெறு மோட்சத்தை யேதரு பெருமாளே", "யாவு மலைகொண்டு கைத்த காவிரி புறம்புசுற்று மேரகமமர்ந்த பச்சை மயில்வீரா" (திருப்புகழ்); "சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும், ஏரகமு நீங்கா விறைவன்" (சிலப். குன்றக்.) என்பதன் உரையினுல் ஏரகம் சுவாமிமலையினும் வேருன ஒரு தலமென்று அரும்பதவுரையாசிரியர் கருதுவதாகத் தெரிகின்றது.

[1]"பைங்கொடிப்படலை-பச்சிலை மாலை" (சிலப். 25:44, அரும்பத.)

இடை இடுபு - நடுவே யிட்டு,
வேலன் - படிமத்தான்,
191. அம் பொதி புட்டில் - அழகினையுடைத்தாகிய பொதிதலை யுடைய தக்கோலமென்னும் முதலின் காய்,
அது புட்டில் போறலிற் புட்டிலென்றார்.
விரைஇ - கலந்து,
[1]குளவியொடு - காட்டு மல்லிகையுடனே,
192. [2]வெள் கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண் டாளியையும் கட்டின கண்ணியை யுடையனாய்,
193. நறு சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பின் - நறிய சந்தனத் தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பினையுடைய வேலன் (190),
வேலன் பைங்கொடியாலே (190) புட்டில் விரைஇ (191) நறைக் காய் இடையிடுபு (190) குளவியொடு (191) கூதாளத்தையும் கட்டிய கண்ணியனாய் (192).
கண்ணியன் : வினையெச்ச வினைக்குறிப்பு முற்று.
194. கொடு தொழில் வல் வில் கொலைஇய கானவர் - [3]கொடிய தொழிலையுடைய வலிய வில்லாற் கொல்லுதலைச் செய்த குறவர்,
'குலைஇய' என்ற பாடத்திற்கு வில்லை வளைத்த கானவரென்க; எனவே கோறல் பெற்றாம்.
195. [4]நீடு அமை விளைந்த தேன் கள் தேறல் - நெடுகின மூங்கி லிலேயிருந்து முற்றின தேனாற் செய்த கட்டெளிவை,
196. குன்றகம் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்துச் சிறிய ஊரிலே இருக்கின்ற சுற்றத்தோடே உண்டு மகிழ்ந்து,
197. தொண்டகம் சிறு பறை குரவை அயர - அங்கிலத்துக் குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற்குக் குரவையாட,
கானவர் தேறலை மகிழ்ந்து குரவையாட வென்க.
198-9. [விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற், குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி :]
விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறு கான் கண்ணி - விரலது அலைப்பாலே [5]வலிய அலர்த்த அலர்ந்த பூவாகலின் வேறுபடுகின்ற நறிய மணத்தினையுடைய தலையிற் சூடும் மாலையினையும்,

---

[1] தாளிப்பூவோடு (வேறுரை).
[2] வெள்ளைக் கூதாளப் பூவையும் (வேறுரை).
[3] "கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ணர்" (ஐந்.ஐம்.)
[4] நெடிய மூங்கிலரிசியில் உண்டாகச் சமைத்திட்டு இனிமைக்கு இடமாகிய மதுவை (வேறுரை).
[5] "திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்து" (மதுரைக். 567) என்பதும், அதனுரையும், "அகைமத்தம்" (தக்க. 98) என்பதூ,

குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி - அதுதான் ஆழ்ந்த சுனையிற் பூத்த பூவாற் செய்த வண்டு வீழ்கின்ற கண்ணி,

இஃது ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படு பொருண்மேல் நின்றது.

'கார்க் குண்டுசுனை' என்று பாடமாயின், கரிய ஆழ்ந்த சுனை யென்க.

200. இணைத்த கோதை - இதழ் பறித்துக் கட்டின மாலை யினையும்,

அணைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையும்,

201. முடித்த குல்லை - இலையைத் தலையிலே யணிந்த [1] கஞ்சங் குல்லையினையும்,

இலை உடை நறு பூ - இலையையுடைய நறிய பூங்கொத்துக் களையும்,

202 – 3. செ கால் மராஅத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உண தொடுத்த பெரு தண் மா தழை - செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவே வைத்துச் சுரும்பு தேனை உண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினை யுடைய தழையை,

குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தழை யென்க.

204. [திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ:] [2]காழ் திருந்து அல் குல் திளைப்ப உடீஇ - வடங்கள் திருந்தும் அலகுலிடத்தே அசையும் படி உடுத்து,

அல் குற்றிளைப்பவென்னும் வல்லொற்று விகாரமாயிற்று.

205. [மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:]

மயில் கண்டன்ன மகளிரொடு- [3] சாயல் உடைமையான் மயிலைக் கண்டாற்போன்ற மகளிரொடு,

மடநடை மகளிர் - மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தினையு முடைய மகளிர்.

தழையை யுடுத்து மயில் கண்டன்ன மகளி ரென்க.

உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்ச மாகிய உவம உருபோடு முடிந்தது.

னுரையில் உள்ள, 'அகைத்தல் - வலிய மலர்த்தலுமாம்' என்ற பகுதியும் இங்கே கருதத் தக்கன.

[1] "கஞ்சங் குல்லை கஞ்சா வாகும்" (திவா.)

[2] காழ் – புடைவை (வேறுரை).

[3] "மயிலியன் மடவரல்" (சிலப். குன்றக்.); "அயில்வே லண்ணல் கூறிய, மயிலேர் சாயல் வண்ணமு மதுவே" (பொருளியல்); "விளங்கியலான் மயிலாம்" (திருச்சிற். 29.)

கண்ணியினையும் கோதையினையும் சேர்த்தின கூந்தலினையும் மட [1] நடையினையுமுடைய மகளி ரென்க.

இம்மகளிர் தன்னைச் சேவிக்கும் மகளிர்.

206. செய்யன் - சிவந்தவன்,

206 - 7. சிவந்த ஆடையன் செ அரை செயலை தண் தளிர் துயல் வரும் காதினன் - சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர் அசையும் காது பொருந்தி,

208. கச்சினன் கழலினன் செச்சை கண்ணியன் - கச்சைக் கட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச் சூடி,

209. குழலன் கோட்டன்[2] குறு பல்லியத்தன் - குழலை ஊதிக் கொம்பைக் குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,

210 - 11. தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவல் அம் கொடியன் - கிடாயைப் பின்னிட்டு மயிலை ஏறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து,

நெடியன் - தான் வேண்டிய வடிவு கோடலிற் பிள்ளையாயிராது [3] நெடுக வளர்ந்து,

தொடி அணி தோளன் - தோளிலே தொடியை அணிந்து,

212. நரம்பு ஆர்த்தன்ன இன் குரல் தொகுதியொடு - நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய பாடு மகளிரோடே,

இவர்கள் தன்னைச் சேவித்துப் பாடும் மகளிர்.

213 - 4. [குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல், மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன் :]

மருங்கில் கட்டிய குறும்பொறி கொண்ட - இடையிலே இறுகக் கட்டிய உதரபந்தத்தின்மேலே உடுப்பதாக உட்கொண்ட,

[4] நிலன் நேர்பு நறு தண் சாயல் துகிலினன் – நாலவிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலினை உடுத்து,

215 – 6. [முழவுறழ் தடக்கையி னியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து :]

---

[1] மகளிர் நடைக்கு மயிலின் நடையை உவமை கூறுதலும் பண்டையாசிரியர் வழக்கம்; முருகு. 205-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

[2] நெடும்பல்லியத்தனாரென்று ஒரு நல்லிசைப் புலவரின் பெயர் பழைய நூல்களிற் காணப்படுகிறது; இயங்கள் குறும்பல்லியம் நெடும்பல்லியமென இருவகைப்படுவனபோலும்.

[3] "வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி" (முருகு. 288)

[4] "நிலந்தோய் புடுத்த நெடு நுண் ணுடையர்" (பெருங். 1.32 : 64)

மெல் தோள் பல் பிணை இயல - மெல்லிய தோளிணையுடைய பலவாகிய மான்பிணைபோலும் மகளிர் குரவையாடி அசைய,

இவர்கள் மெய்தீண்டி விளையாடுதற்குரிய மகளிர்.

முழவு உறழ் தட கையின் தழீஇ ஏந்தி தலைத்தந்து - தன்னுடைய முழவையொத்த பெருமையையுடைய கையினாலே அவர்கள் கையினைத் தழீஇ எடுத்துக்கொண்டு முதற்கை கொடுத்து,

217. [குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே :] குன்றுதொறு ஆடலும் தன் நின்ற பண்பு - மலைதொறும் சென்று விளையாடுதலும் தனக்கு நிலைநின்ற குணம்;

ஆடையன் (206) கண்ணியன் (208) என்பன முதலியன வினையெச்ச வினைக்குறிப்புமுற்று; "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" (தொல். எச்சவியல், சூ. 63) என்னும் சூத்திர விதியால் செய்தெனெச்சப் பொருளை உணர்த்தின.

கானவர் (194) குரவை அயர (197) அதனைக் கண்டு மென்றோட் பல்பிணை (216) குரவை யாடி யசைய (215) அதனைப் பொருதே செய்யன் (206) வேலன் (190) தொடுத்த கண்ணியைச் சூடி (192) உடுத்துப் (206) பொருந்திக் (207) கட்டி அணிந்து சூடி (208) ஊதிக் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு ஏறி (210) உயர்த்து வளர்ந்து தொடியை யணிந்து (211) துகிலையுடுத்துத் (214) தொகுதியுடனே (212) மகளிரோடே (205) மலைதொறும் சென்று (217) தழீஇ (216) ஏந்தித் (215) தலைத்தந்து (216) ஆடலும் நின்ற தன் பண்பென வினை முடிக்க.

[1] "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் வென்றியு, மெய்தக் கூறு மியல்பிற் றாகும்" என வரும்.

அதாஅன்று - அதுவன்றி,

பழமுதிர் சோலை

218. சிறு தினை மலரொடு விரைஇ மறி அறுத்து - சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியை அறுத்து,

219. வாரணம் கொடியொடு வயின் பட நிறீஇ - கோழிக் கொடியோடே தான் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி,

220. [2] ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும் - ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட தலைமை பொருந்தின விழாவின் கண்ணும்,

---

[1] சிலப். பதிகம், 77, அடியார். மேற். "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக் கடகக் கைகோத், தந்நிலைக் கொட்ப நின்றாட லாகும்" (ஷை ஷை); "குரவைக் கூத்தே கைகோத் தாடல்" (திவா.)

[2] அடுக்கு, பன்மை (வேறுரை).

221. [1] ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் - தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன் மனம் பொருந்துதல் வருகின்ற இடத்தினும்,

222. வேலன் தைஇய வெறி அயர் களனும் - படிமத்தான் இழைத்த வெறியாடு களத்தினும்,

பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு திரிதலின், வேலனென்றார்; இது, "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" (தொல். புறத், சூ. 5) எனப் புறத்திற்கும் கூறியது.

223. காடும் காவும் கவின் பெறு துருத்தியும் - காட்டினும் பொழிலினும் அழகு பெறுகின்ற ஆற்றிடைக்குறையினும்,

224. யாறும் குளனும் - ஆறுகளினும் குளங்களினும்,

வேறு பல் வைப்பும் - முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும்,

225. சதுக்கமும் - நாற்சந்தியினும்,

சந்தியும் - முச்சந்தியினும்; [2] ஐஞ்சந்தியினும்,

புது பூ கடம்பும் - புதிய பூக்களையுடைய கடம்பினும்,

226. மன்றமும் - ஊர்க்கு நடுவாய் எல்லாரும் இருக்கும் மரத்தடியினும்,

[3] பொதியிலும் - அம்பலத்தினும்,

[4] கந்து உடை நிலையினும் - ஆதீண்டு குற்றியையுடைய இடத்தினும்,

227. [மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர :] மாண் தலை கொடியொடு உரு கெழு வியனகர் (244) அமைவர மண்ணி - மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கோழிக்கொடியோடே உரு கெழு வியனகரை அமைவரப் பண்ணி,

ஒடு : வேறுவினையொடு.

இனி, [5] 'ஆண்டலைக்கொடி' என்று பாடமாயின், பேய் முதலியன

---

[1] ஆர்வலர் - ஒன்றுற் குறையுடையார் (வேறுரை).

[2] "சந்தி யைந்துந் தம்முடன் கூடி, வந்துதலை மயங்கிய வான் பெரு மன்றத்து" (சிலப். 10 : 19 – 20); "காளத்தி, வருமைஞ் சந்தி மழைமத யானையே" (சீகாளத்தி. காப்பு.)

[3] பொதியமலை யென்பாருமுளர் (வேறுரை).

[4] யானைத் தறியிடத்தினும்; பசுமுதலானவை உரிஞ்சுதறி யெனினு மமையும் (வேறுரை).

[5] ஆண்டலைக் கொடி - மயிற்கொடி (வேறுரை).

பலியை நுகராமல் [1] தலை ஆண்மகன்றலையும், உடல் புள்ளின் வடிவுமாக எழுதின கொடியென்க.

228. நெய்யொடு ஐயவி அப்பி - நெய்யோடே வெண்சிறு கடுகையும் அப்பி,

[2] ஐது உரைத்து - தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றுமல் உச்சரித்து,

229. குடந்தம்பட்டு - வழிபட்டு.

வணக்கம்பட்டென்று உரைப்பர்; குடவென்பது தடவென்பது போல வளைவை உணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப் பிறந்த பெயருமாம். [3]

கொழு மலர் சிதறி - அழகிய மலர்களைத் தூவி,

230. முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - தம்மிற் பகைத்தல் கொண்ட வடிவினையுடைய இரண்டு அறுவையை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்து,

231. செ நூல் யாத்து-சிவந்த நூலைக் கையிலே காப்புக் கட்டி, நூலொழுக்கி எல்லைப்படுத்தென்றுமாம்.

வெள் பொரி சிதறி - வெள்ளிய பொரியைத் தூவி.

232. மத வலி நிலைஇய மா தாள் [4] கொழு விடை - மிகுதியையுடைய வலி நிலைபெற்ற பெருமையையுடைத்தாகிய காலையுடைய கொழுவிய கிடாயினது,

233. குருதியொடு விரைஇய தூ வெள் அரிசி - உதிரத்தோடே பிசைந்த தூய வெள்ளரிசியை,

234. சில் பலி செய்து - சிறு பலியாக இட்டு,

பல் பிரப்பு இரீஇ - பலபிரப்பும் வைத்து,

இனிப் பிரப்புக்கூடை யென்பாரும் உளர்.

235. [5] சிறு பசு மஞ்சளொடு நறு விரை தெளித்து - சிறிய பசு மஞ்சளோடே நறிய சந்தனம் முதலியவற்றையும் தெளித்து,

இனிச் சிறுபசுமஞ்சள், மஞ்சளில் ஒரு சாதி விசேடமுமாம்.

---

[1] ஆண்டலை ஆண்மகன்றலை போன்றதென்பதும் பிறவும், "வெறுந்தலையே தலையாகி.........ஆண்டலையா யற்றனமே" (தக்க, 234) என்பதனாலும் அதன் விசேடக்குறிப்பினாலும் விளங்கும்.

[2] சிறிது மந்திரங்களையும் ஓதி (வேறுரை).

[3] இதன்பின்னே உள்ள, "குடந்தமாவது: நால்விரன் முடக்கிப் பெருவிர னிறுத்தி, நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்" என்பது ஒரு பிரதியிலுள்ள பாடம்.

[4] யானைத்திரள் (வேறுரை).

[5] காட்டு மஞ்சள் (வேறுரை).

விரை : ஆகுபெயர்.

236-7. [பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையற வறுத்துத் தூங்க நாற்றி :]

பெரு தண் கணவீரம் மாலை-பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும்,

நறு தண் மாலை–ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்,

அறுத்து–தலையொக்க அறுத்து,

[1]துணை அற தூங்க நாற்றி-தமக்கு ஒப்பில்லாதபடி அசையத் தூக்கி.

இனித் தம்மில் இணையொத்த அறுப்பாக அறுத்தென்றுமாம்.

238. நளி மலை சிலம்பில் நல் நகர் வாழ்த்தி-செறிந்த மலைப் பக்கத்திலுள்ள நல்ல ஊர்களைப் [2]பசியும் பிணியும் பகையும் நீங்குக வென்று வாழ்த்தி,

நகர்-பிள்ளையார் கோயிலென்றுமாம்.

239. நறு புகை எடுத்து-நறிய தூபங் கொடுத்து,

குறிஞ்சி பாடி-அந்நிலத்திற்கு அடைத்த குறிஞ்சிப் பண்ணைப் பாடி,

240. இமிழ் இசை அருவியொடு இன்னியம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியா நிற்க,

241 - 2. உருவம் பல் பூ தூஉய் வெருவர [3] குருதி செந்தினை பரப்பி - சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி அச்சம் வரும்படி உதிரமளைந்த சிவந்த தினையினையும் பரப்பி,

242 - 4. குறமகள் [4] முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க [5] முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு வியன் நகர் – குறச்சாதியாகிய மகள் முருகன் உவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வம் இன்றென்பார் அஞ்சும்படியாகப் பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நகரின்கண்ணே,

''வேலன் வெறியாட்டயர்ந்த'' (தொல். புறத். சூ. 5) என்புழிச் சிறுபான்மை ஏனையோரும் ஆடுவாரென்றலின் குறமகள் வெறியாட்டுக் கூறினர்.

---

[1] துணை அற அறுத்து - இணையொக்க நறுக்கி, தூங்க நாற்றி - அசைதரப் பூங்கோயிலாகத் தூக்கி (வேறுரை).

[2] ''பசியும் பிணியும் பகையு நீங்கி, வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'' (சிலப். 5 : 72 - 3; மணி, 1 : 70 - 71)

[3] உதிரம் போன்ற செந்தினை (வேறுரை).

[4] முருகியம் - துடி ; தொண்டகப்பறையெனினும் அமையும் (வேறுரை) ; முருகியமும் தொண்டகப்பறையும் குறிஞ்சிக்குரிய பறையென்பர் ; தொல். அகத். சூ. 18, ந.

[5] பிள்ளையாரைத் தம்வழிப் படுத்தின (வேறுரை).

குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி (229) உடீஇ (230) யாத்துச் சிதறிச் (231) செய்து இரீஇத் (234) தெளித்து (235) நாற்றி (237) வாழ்த்தி (238) எடுத்துப் பாடிக் (239) கறங்காநிற்கத் (240) தூஉய்ப் (241) பரப்பி (242) நிறுத்து (243) ஆற்றுப் படுத்த நகர் (244) என வினை முடிக்க.

சாந்திசெய்ய ஆற்றுப்படுத்தாள்.

245. ஆடு களம் சிலம்ப பாடி - அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு ஏற்பனவற்றைப் பாடி,

245 - 6. [பலவுடன் கோடுவாய் வைத்து :] கோடு பல உடன் வாய் வைத்து - கொம்புகள் பலவற்றையும் சேர ஊதி,

கொடு மணி இயக்கி - கொடிய மணியையும் ஒலிப்பித்து,

247. ஓடா பூட்கை [1] பிணிமுகம் வாழ்த்தி - கெடாத வலியினையுடைய பிணிமுக மென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,

[2] பிணிமுகம் - மயிலுமாம்.

248. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட - காரியங்களை விரும்புவோர் தாங்கள் விரும்பின காரியங்களை விரும்பினாற் போலப் பெற்று நின்று வழிபட,

நகரிலே (244) பாடி (245) வைத்து (246) இயக்கி வாழ்த்தி (247) வழிபட (248) உறைதலு முரியன் (189) என்க.

விழவின் கண்ணும் (220) நிலையின் கண்ணும் (221) கந்துடை நிலையின் கண்ணும் (226) உறைதலு முரியன் (189) என்க.

249. ஆண்டு ஆண்டு உறைதலும் - களனும் (222) காடும் காவும் துருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலு முரியனென்க;

அறிந்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்;

250. ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக - யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலே யாயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக,

உம்மை : ஐயவும்மை.

250 - 51. [காண்டக, முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி :] முந்து நீ கண்டுழி காண் தக முகன் அமர்ந்து ஏத்தி - முற்பட நீ கண்டபொழுது அழகு தக்கிருக்கும்படி முகம் விரும்பித் துதித்து,

---

[1] பிணிமுகமென்பது பிள்ளையார் பவனிவரும் யானை (வேறுரை). யானையென்றும் சொல்லுப வென்றது, புறநானூற்று உரையாசிரியர் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் இவர்களைக் கருதிப் போலும்.

[2] "பிணிமுக வூர்தி" (புறநா. 56: 8), "பிணிமுக மேற்கொண்டு" (சிலப். குன்றக்.) என்பவற்றில் பிணிமுகமென்பதற்கு மயிலென்றே உரையாசிரியர்கள் பொருளெழுதியுள்ளார்கள்.

முகனமர்ந்தென்றார், [1] அவன் தெய்வத்தன்மையைக் கண்ட பொழுது அச்சம் பிறவாது நிற்க வேண்டுமென்றற்கு.

252. கை தொழூஉ பரவி - முன்னர்க் கையைத் தலைமேலே வைத்து வாழ்த்தி,

கால் உற வணங்கி - பின்னர்த் திருவடி தலையிலே உறும்படி தண்டனிட்டு,

253. நெடு பெரு சிமையத்து[2] நீலம் பைஞ்சுனை - நெடிய பெரிய இமவானுச்சியில் தருப்பை வளர்ந்த பசிய சுனையிடத்தே,

நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை; அஃது : ஆகுபெயர்; என்றது சரவணப் பொய்கையென்றவாறு.

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீ தன் அங்கையிலே ஏற்ப,

[3] சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும், அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவருளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய தீயை.

அவன் அங்கையேற்பவென்றது, இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன் கூறுகிய முத்தீக்குண்டடத் திட்டதனைக் கூறிற்று.

255. அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ - அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவு பொருந்திய செல்வ.

என்றது : [4] அங்ஙனம் அங்கியின்கணிட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம் மனைவியர்க்குக்கொடுப்ப அருந்ததியொழிந்தார் விழுங்கிச் சூன்முதிர்ந்து, சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமை கூறிற்று.

ஏற்கையினாலே (254) அறுவராற் பைஞ்சுனையிலே (253)பயக்கப் பட்ட செல்வ (255) வென்க; இது பரிபாடலில், "பாயிரும் பனிக் கடல்" (5) என்னும் பாட்டான் உணர்க.

---

[1] "அணங்குசா லுயர்நிலை தழீஇ" (முருகு 289) என்பது இக் கருத்தை வலியுறுத்தும்.

[2] நீலோற்பல முதலாகவுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையில் (வேறுரை).

[3] "ஐவகைப் பூதத்திற்கும் நாயகரானபிரமாவிட்டுணு ருத்திர ஈசுவர சதாசிவர்கள்" (தக்க. 138, உரை);"பாராதி யைந்துக்கும் பன்னு மதி தெய்வங்கள், ஆரா ரயனாதி தேவராம்" (உண்மை விளக்கம். 8)

[4] 58-ஆம் அடியின் விசேடவுரையாலும் இது விளங்குகின்றது.

256. ஆல் கெழு கடவுள் புதல்வ - கல்லாலின் கீழிருந்த கடவுளினுடைய புதல்வ,

கடவுளரென உயர்திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணை முடிபுகொள்ளும் உயர்திணையாய் நிற்றலின். அஃறிணைப் பாற்பட்டு, ''உணரக்கூறிய'' (தொல். புள்ளி. சூ. 110) என்னும் புறனடையான் முடிந்தது.

256 - 7. [1] மால் வரை மலை மகள் மகனே - பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே,

வரை - மூங்கிலுமாம்.

மாற்றோர் கூற்றே - பகைவர்க்குக் கூற்றுவனே,

258. [வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ :]

வெற்றி கொற்றவை சிறுவ - வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் [2] வனதுர்க்கையினுடைய புதல்வ,

வெல் போர் கொற்றவை—தான் வெல்லும் போரைச் செய்யும் கொற்றவை,

என்றது மகிடனைச் செற்றதனை.

259. இழை அணி சிறப்பின் பழையோள் குழவி - பூணணிந்த தலைமையினையுடைய காடுகாளுடைய குழவி,

காடுகிழாளென்பது இக்காலத்துக் [3] காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சத்தியாகலின், அவளுடைய குழவியென்றார்.

260. [வானோர் வணங்குவிற் றானைத் தலைவ :]

வானோர் தானை தலைவ – தேவர்கள் படைத்தலைவ,

என்றது, தேவசேனாபதி என்றதாம்.

வணங்கு வில் : வளையும் வில்லையும்,

வில்லையும் தேவராகிய தானையையுமுடைய தலைவவென்க.

261. மாலை மார்ப – [4] இன்பத்திற்குரிய மாலையணிந்த மார்ப.

[5] நூல் அறி புலவ - எல்லா நூல்களையும் அறியும் புலவ,

---

[1] மால்போலும் வரையினையுடைய மலையரையன் திருமகளார் மகனே (வேறுரை).

[2] ''கானநாடி - வனதுர்க்காதேவி'' (நக்க. 54, உரை)

[3] ''கையார் வளைக்கைக் காடுகாளோடு முடனாய்க், கொய்யார் பொழிற் கோடியே கோயில் கொண்டாயே'' (தே.)

[4] இன்பத்திற்குரிய மாலை - கடப்ப மாலை; முருகு. 11-ஆம் அடியின் உரையைப் பார்க்க.

[5] வேதாகமங்கள் முதலிய பல சாத்திரங்களையும் ஓதாதுணர்த்தும் பண்டிதனே (வேறுரை).

புலவன் - அறிவுடையவன்.

262. செருவில் ஒருவ - போர்த்தொழிலில் ஒருவனாகி நிற்பாய், [1] பொரு விறல் மள்ள - பொருகின்ற வெற்றியினையுடைய மள்ள, மள்ளன் - இளமைப்பருவத்தோன்.

263. [2] அந்தணர் வெறுக்கை - அந்தணருடைய செல்வமாயிருப்பாய்,

அறிந்தோர் [3] சொல் மலை - சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்பாய்,

264. மங்கையர் கணவ - தெய்வ யானையாரும் வள்ளிநாய்ச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவ,

மைந்தர் ஏறே - வீரர்க்கு இடபமே,

265. வேல் கெழு தட கை சால் பெரு செல்வ - வேல்பொருந்தின பெருமையையுடைய கையானமைந்த பெரிய செல்வ,

என்றது, மேல் வெற்றியாற் பெற்ற அச்செல்வத்தை.

266 - 7. [குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ :]

குன்றம் கொன்ற குன்றா கொற்றத்து, கிழவ - [4] குருகாற் பெயர் பெற்ற மலையைப் பிளந்த குறையாத வெற்றியையுடைய கிழவ,

விண் பொரு நெடு வரை குறிஞ்சி கிழவ - தேவருலகைத் தீண்டும் நெடிய வரைகளையுடைய குறிஞ்சி நிலத்துக்கு உரிமையுடையாய்,

அதற்கு உரியனாதல், "சேயோன் மேய மைவரை யுலகமும்" (தொல். அகத்திணை. சூ. 5) என்பதனா னுணர்க.

268. பலர் புகழ் நல் மொழி புலவர் ஏறே - பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களையுடைய பரசமயத்தினுள்ளார்க்கு ஏற்றின் தன்மையை உடையவனே,

என்றது : கல்வி மதத்தையுடைய யானைபோல்வார்க்குச் சிங்க வேறு போல்வாயென்றதாம்.

269. [அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக:] பெறல் அரு மரபின் பெரும் பெயர் முருக - பிறர்க்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும் பொருளையுடைய முருக,

---

[1] வீரராயிருப்பார்க்கு வீரராயிருப்பவனே (வேறுரை).

[2] "வேதியர் வெறுக்கையும்" (திருவகுப்பு, வேளைக்காரன்.)

[3] "சொன்மலை யல்லன தொடுகட லமிர்தம்" (கம்ப. நாட்டுப். 47)

[4] குருகு - கிரவுஞ்சமென்னும் பறவை; அதனாற் பெயர்பெற்ற மலை கிரவுஞ்சமலை.

பெயர் - பொருள்; "பெற்ற பெரும்பெயர்ப் பலர்கை யிரீஇய" (பதிற். 90: 23) எனவும், "சொற்பெயர் நாட்டம்" (பதிற். 21: 1) எனவும் வரும். பெரும்பொருளென்றது விட்டினை.

270. [நசையுநர்க் கார்த்து மிசைபே ராளா:] நசையுநர்க்கு ஆர்த்தும் பேர் இசை ஆள - அவ்வீட்டைப் பெறவேண்டுமென்று நச்சி வந்தார்க்கு அதனை நுகர்விக்கும் பெரிய புகழை ஆளுதலையுடையாய்,

பேரிசையென்று மாறுக.

271 - 2. [அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய் - மண்டமர் கடந்தநின் வென்ரு டகலத்து :]

அலந்தோர்க்கு அளிக்கும் சேஎய் - பிறரால் இடுக்கட்பட்டு வந்தோர்க்கு அருள்பண்ணும் சேய்,

மண்டு அமர் கடந்த வென்று ஆடு நின் அகலத்து பொலம்பூண் சேஎய் - மிக்குச் செல்கின்ற போர்களை முடித்த வென்றடுகின்ற நினது மார்பிடத்தே பொன்னுற் செய்த பேரணிகலங்களை அணிந்த சேயென்க;

273. பரிசிலர் தாங்கும் உரு கெழு நெடு வேள் - இரந்து வந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல் பொருந்திய நெடிய வேளே,

274. பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் - தேவரும் முனிவரும் ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே,

இயவுள் - கடவுளுமாம்.

275 - 6. [சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர்மிகு:]
[1] போர் மிகு மொய்ம்பின் சூர் மருங்கு அறுத்த மதவலி - போர்த் தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின் குலத்தை இல்லையாக்கின மதவலியென்னும் பெயரையுடையாய்,

பொருந - உவமிக்கப்படுவாய்,

பொருவப்படுமவன், பொருநனென நின்றது.

குரிசில் - தலைவனே,

276-7. [எனப் பல, யானறி யளவையி னேத்தி யாஞது:] என யான் அறி அளவையின் ஆறது பல ஏத்தி - என்று யானறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து,

278. நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின் தன்மை யெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கும் அரிதாகையினலே,

279. நின் அடி உள்ளி வந்தனென் - நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைந்து வந்தேன்;

---

[1] போர்மிகு பொருந-போரை மிகப்பொர வல்லவனே (வேறுரை).

279 - 80. நின்னொடு புரையுநர் இல்லா புலமையோய் - நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய்,

280 - 81. என குறித்தது மொழியா அளவையின் - என்று சொல்லி நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பம் செய்வதற்கு முன்னே,

முந்துநீ கண்டுழி முகனமர்ந்து (251) மகனே கூற்றே (257) குழவி (259) வெறுக்கை சொன்மலையாயிருப்பாய் (263) மைந்த ரேறே (264) புலவரேறே (268) சேஎய் (271) வேஎள் (273) இயவுளே (274) மதவலி (275) குரிசில் (276) புலமையோய் (280) என்று முன்னர் எதிர்முகமாக்கி ஏத்தி (251) யென அண்மை விளியல்லாதனவற்றை முன்னர்க் கூட்டி முடிக்க. அங்ஙனம் எதிர் முகமாக்கி யேத்திப் பின்னர்ப் பரவி வணங்கிச் (252) செல்வ (255) புதல்வ (256) சிறுவ (258) தலைவ (260) மார்ப புலவ (261) ஒருவ மள்ள (262) கணவ (264) செல்வ (265) கிழவ (267) முருக (269) இசைபேராள (270) பொருந (276) என்று அண்மையாக விளித்து, மன்னுயிர்க்கருளையின் (278) யானறி யளவையினேத்தி (277) நின்னடி யுள்ளி வந்தனென் (279) என்று நீ குறித்தது மொழியா அளவையினென முடிக்க.

281 - 2. [குறித்துடன், வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்:] வேறு பல் உருவில்[1] குறு பல் கூளியர் உடன் குறித்து-வேறு வேறாகிய பல வடிவினையுடைய சிறிய பலராகிய சேவித்து நிற்பார் சேரக் கருதி,

"நின், கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" (புறநா. 23: 4 - 5) என்றார் பிறரும்.

283. சாறு அயர் களத்து வீறுபெற தோன்றி - விழாவெடுத்த களத்தே தாங்கள் பொலிவுபெறத் தோன்றி,

284. [அளியன் றானே[2] முதுவா யிரவலன்:]முது வாய் இரவலன் தான் அளியன் - அறிவு முதிர்ந்த வாய்மையையுடைய புலவன்றான் அளிக்கத்தக்கான்;

285 - 6. [வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென, இனியவு நல்லவு நனிபல வேத்தி:] பெரும நின் வள் புகழ் நயந்து இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி வந்தோன் என - பெரும, நினது வளவிய புகழினைக் கூற விரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதி பயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்தோனென்று கூற,

கூளியர் (282) குறித்துத் (281) தோன்றி (283) அளியன் (284) பெரும நின் வண்புகழைக் கூற நயந்து (285) இனியவும் நல்லவுமாக ஏத்தி (286) வந்தோன் (285) என்று கூறவென முடிக்க.

---

[1] குறும்பல் கூளியர் – குறியவாயிருப்பன பல பூதங்கள்; கூளி களென்று பேய்க்கும் பெயராம் (வேறுரை).

[2] நிரம்பவோதிய புலவன் (வேறுரை).

287. தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத் தன்மை யமைந்த வலிவிளங்கும் வடிவினையும்,

288. வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி - வானைத் தீண்டும் வளர்ச்சியினையுமுடைய தான் அவையை வந்தணுகி,

289. அணங்குசால் உயர்நிலை தழீஇ - வருத்தம் அமைந்த தெய்வத் தன்மையை உள்ளடக்கிக்கொண்டு,

289 - 90. [பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி:] மணம் கமழ் தெய்வத்து பண்டை தன் இள நலம் காட்டி - மணம் நாறுகின்ற தெய்வத்தன்மையையுடைய முன்புண்டாகிய தன் இளைய வடிவைக் காட்டி,

291. [அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவெனா:] நின் வரவு அறிவல் அஞ்சல் ஓம்புமதி என - நீ வீடுபெற நினைத்து வந்த வரவை யான் முன்னே அறிவேன்; அது நினக்கு எய்தலரி தென்று அஞ்சுதலைப் பரிகரியென்று,

292. அன்புடை நன் மொழி அளைஇ - நின்மேல் அன்புடைய வாகிய நல்ல வார்த்தைகளைப் பலகாலும் அருளிச் செய்து,

292 - 4. [விளிவின்று, இருணிற முந்நீர் வளைஇய வுலகத், தொருநீ யாகித் தோன்ற:] இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒரு நீ ஆகி விளிவு இன்று தோன்ற - இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்திடத்தே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோற்றும்படி,

294 - 5. விழுமிய பெறல் அரு பரிசில் நல்குமதி - சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தருவன்;

[1]"இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடும், தகுநிலை யுடைய வென்மனார் புலவர்" (தொல். இடை. சூ. 27) என்றதனுதல், "அவ்வச் சொல்லிற்கு" (தொல். இடை. சூ. 47) என்னும் புற னடையதனுதல் மதி படர்க்கைக்கண் வருதல் கொள்க.

இனி, மதிபலவுடனெனக் கூட்டி, அறிவுகள் பலவுடனே பரிசில் நல்குமென்று கூறுவாருமுளர்.

295 - 6. [பலவுடன், வேறுபஃ றுகிலி னுடங்கி;] வேறு பல் துகிலின் பல உடன் நுடங்கி - வேறுபட்ட பலவாகிய துகிற்கொடி களைப்போலத் தாம் பலவும் கூட அசைந்து,

296 - 7. அகில் சுமந்து ஆரம் முழு முதல் உருட்டி - அகிலை மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி,

---

[1] இச்சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் இப்பகுதியை மேற் கோள் காட்டியதன்றி அங்கே பொருளும் இங்ஙனமே எழுதினர்.

297 - 8. வேரல் பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - சிறுமூங்கிலினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப் பிளந்து,

299 - 300. விண் பொரு நெடு வரை பரிதியின் தொடுத்த தண் கமழ் அலர் இறால் சிதைய - தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப்போல ஈ வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடு கெட,

300 - 301. நல் பல ஆசினி முது சுளை கலாவ - நன்றாகிய பல [1]ஆசினிகளினுடைய முற்றிய சுளை தன்னிடத்தே கலக்க,

301 - 2. மீ மிசை நாகம் நறு மலர் உதிர - மலையினுச்சியில் உண்டான சுரபுன்னையின் நறிய மலர்கள் உதிர,

302 - 3. யூகமொடு [2]மா முகம் முசு கலை பனிப்ப - கருங்குரங் கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க,

"கலையென் காட்சி யுழைக்கு முரித்தே", "நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்" (தொல். மரபு. சூ. 45, 46) என்றார்.

303 - 4. பூ நுதல் இரு பிடி குளிர்ப்ப வீசி - புகரையணிந்த மத்தகத்தையுடைய பெரிய பிடி குளிரும்படி வீசி,

304 - 5. பெரு களிறு முத்து உடை வான் கோடு தழீஇ - பெரிய யானையினுடைய முத்தையுடையவாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி,

305 - 6. [தத்துற்று, நன்பொன் மணிநிறங் கிளர:] நல் பொன் மணி நிறம் கிளர தத்துற்று – நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி மேலே கொண்டு குதித்து,

தத்துற்று - தத்துதலையுற்று.

பொன் கொழியா – பொடியான பொன்னைத் தெள்ளி,

307 - 8. வாழை முழு முதல் துமிய தாழை இளநீர் விழு குலை உதிர தாக்கி - வாழையினது பெரிய முதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய குலை உதிர அவ்விரண்டினையும் மோதி,

309. கறி கொடி கரு துணர் சாய - மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாய,

309 - 11. [பொறிப்புற, மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக், கோழி வயப்பெடை யிரிய :] பொறிபுற [3]மட நடை மஞ்ஞை கோழி

---

[1] ஆசினி - ஈரப்பலா.
[2] "மைபட் டன்ன மாமுக முசுக்கலை" (குறுந். 121 : 2)
[3] மடப்பத்தினையும் நடையினையும் உடைய மயில்கள்(வேறுரை).

வயபெடை வெரீஇ பலவுடன் இரிய - பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தை யுடைத்தாகிய ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலியையுடைய பெடை வெருவிப் பலவும் சேரக் கெட,

311 - 4. [கேழலொ, டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன, குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம், பெருங்கல் விடரளைச் செறிய:] கேழலொடு வெளிற்றின் இருபனை புல் சாய் அன்ன குரூஉ மயிர் யாக்கை [1] குடாஅடி உளியம், பெருங்கல் விடர் அளை செறிய- ஆண் பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பையொத்த கரிய நிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும், வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல்விண்ட முழைஞ்சிலே சேர,

314 - 5. கரு கோடு ஆமா நல் ஏறு சிலைப்ப - கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க,

315 - 6. சேண் நின்று இழும் என இழிதரும் அருவி - மலையின் உச்சியினின்றும் இழுமென்னும் ஓசைபடக் குதிக்கும் அருவியையுடைய,

317. பழம் முதிர் சோலை[2] மலை கிழவோனே - பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையை யுடையோனே.

நுடங்கிச் சுமந்து (296) உருட்டிக் (297) கீண்டு (298) சிதையக் (300) கலாவ (301) உதிரப் (302) பனிப்ப (303) வீசித் (304) தழீஇத் தத்துற்றுக் (305) கொழியாத் (306) துமிய (307) உதிரத் தாக்கிச் (308) சாய (309) இரியச் (311) செறியச் (314) சிலைப்ப (315) இழிதரும் அருவி (316) யென முடிக்க.

கிழவோனென்ற பெயர், [3]உடம்படுபுணர்த்தலாற் கொள்க.

கணவன் (6) மார்பினன் (11) சென்னியனாகிய (44) சேயுடைய (61) சேவடி படரும் உள்ளத்தோடே (62) செல்லுஞ் செலவை நீ நயந்தனையாயின் (64) நன்னர் நெஞ்சத்து இன்னசைவாய்ப்ப (65) இன்னே பெறுதி (66); அது பெறுதற்கு அவன் யாண்டுறையுமென்னிற் குன்றமர்ந்துறைதலுமுரியன்; அதுவன்றி (77) அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பு; அதுவன்றி (125) ஆவினன்குடி அசைதலுமுரியன்; அதுவன்றி (176) ஏரகத்துறைதலுமுரியன்; அதுவன்றிக் (189) குன்றுதொறாடலும் நின்றதன் பண்பு; அதுவன்றி (217) விழவின்கண்ணும் (220) நிலையின்கண்ணும் (221) கந்துடை நிலையின் கண்ணும் (226) உறைதலுமுரியன் (189); களனும் (222) காடும் (223) முதலியன ஆண்டாண்டுறைதலும்

---

[1]குடமுழவு போன்ற அடி (வேறுரை).

[2]நன். சூ. 164 மயிலை. மேற்.

[3](பி - ம்) உடம்பொடு புணர்த்தல்.

(249) உரியன் (189); நகரிலே (244) பாடி (245) வைத்து இயக்கி (246) வாழ்த்தி (247) வழிபட (248) உறைதலுமுரியன் (189); இஃது யானறிந்தபடியே கூறினேன் (249); இனி ஆண் டாண்டாயினுமாக, பிறவிடங்களிலே யாயினுமாக (250), முந்து நீ கண்டுழி முகனமர்ந்து முன்னர் எதிர்முகமாக்கி ஏத்திப் (251) பரவி வணங்கிப் (252) பின்னர் அண்மையாக விளித்து யானறியளவையி னேத்தி (277) நின்னடி யுள்ளி வந்தேனென்று (279) நீ குறித்தது மொழிவதற்கு முன்னே (281) கூளியர் (282) குறித்துத் (283) தோன்றிப் (288) பெரும (285) இரவலன் நீ அளிக்கத் தக்கான் (284) வந்தோனென்று கூற (285) மலைகிழவோனாகிய (317) குரிசிலும் (276) தான் வந்தெய்தித் (283) தழீஇக் (289) காட்டி (290) அஞ்ச லோம்புமதியென்று (291) அன்புடை நன்மொழி அளைஇ (292) ஒரு நீயாகித் தோன்றும்படி (294) பெறலரும் பரிசில் நல்குவன் (295) என வீடு பெறக் கருதிய இரவலனை நோக்கி வீடு பெற்றானொருவன் ஆற்றுப்படுத்ததாக வினைமுடிக்க.

இது புறத்திணையியலுள், ''தாவி னல்லிசை'' (தொல். புறத். சூ. 36) என்னும் சூத்திரத்துள், ''ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்'' என்பதனால் கந்தழியைப் பெற்றா னொருவன் அதனைப் பெறாதானொருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பதுபற்றிச் செய்யுள் செய்தா ராயிற்று.

கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள்; அது, [1]''சார்பினாற் றோன்றாது தானருவாய்......மைதீர் சுடர்'' என்பதாம்; இதனை, ''உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமலரெழுதரு நாற்றம்போற், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'' (திருவா. அதிசயப் பத்து,9) என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க.

முருகாற்றுப்படை யென்றதற்கு வீடு பெறுதற்குச் சமைந் தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப் படுத்ததென்று பொருள் கூறுக.

குமரவேளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க் கினியர் செய்தவுரை முற்றிற்று.

---

[1] ''சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்கும், சார் பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ, வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த, தூய்மையதா மைதீர் சுடர்'' (தொல். புறத்திணை. சூ. 36, ந. மேற்.)

அடியிலுள்ள பாடல்கள், பத்துப் பாட்டும் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப் பிரதிகளிலில்லாமல் திருமுருகாற்றுப்படை மட்டுமுள்ள புதிய ஏட்டுப்பிரதிகளிலும் அச்சுப்பிரதிகளிலும் இருந்தமையால் தனியே பதிப்பிக்கப்பெற்றன; திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள, "உயர்வுற வுலக முவப்பவென் றெடுத்தாங் கொண்டமிழ்த் தண்டல முவப்ப, வியனுற வுரைப்பக் கேட்டலு மடைந்து வெற்பகந் திறக்கவேல் விட்டு, நயனொடு மெடுத்து விளைகடர்த் தருளு நன்சுனை காட்டிநீ ராட்டி, அயிலுடை நம்மைக் கிழவனென் றனையென் றுலயத் தடைந்தனன் காண", "இனிதொர் கவி குன்றமெறிந் தாயெ னப்பி னென்றுமிளை யாயழகி யாயென் னுங்கான், மனமகிழ்ந்தீ தியார்பகர்வா ரவர்க்கு வேண்டும் வரங் கொடுப்போ மதுரையிற்போ கென்னப் போந்து, கனமலிசங் கத்துரைப்பக் கேட்டி யாருங் களிகூர்ந்தார் தமிழ்முருக னருளை வாழ்த்தி" (44 : 27-8) என்னும் வரலாற்றை நோக்குங்கால், "குன்ற மெறிந்தாய்" என்னும் வெண்பா அந் நூலாசிரியர் காலத்தே வழங்கி வந்ததாகத் தெரிகின்றது.

1. **குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்**
புன்றலைய பூதப் பொருபடையாய் – [1]என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை.

2. **குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்**
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங்[2] கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

3. **வீரவே ளுரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
தீரவேல் செவ்வே டிருக்கைவேல் - வாரி

---

[1] "என்றுமழி யாத விளமைக்கார" (திருப்புகழ்)

[2] பொதும்பு - முழை. கற்பொதும்பிற் காத்த வரலாற்றை, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 44 - ஆம் திருவிளையாடலாலும், சீகாளத்திப்புராணம் நக்கீரச் சருக்கத்தாலும் அறியலாகும்.

குளித்தவேல் கொற்றவேல் [1]சூர்மார்புங் குன்றும்
துளைத்தவே லுண்டே துணை.

4. இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற்சூர்தடிந்த கொற்றவா-முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

5. [2]உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

6. அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
[3]வெஞ்சமரி லஞ்சலென வேறேன்றும்-நெஞ்சில்
[4]ஒருகா லினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

7. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்.

8. காக்கக்[5] கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப்[6] பரமா மறுமுகவா - பூக்கும்
கடம்பா[7] முருகா கதிர்வேலா நல்ல
இடங்கா ணிரங்கா யினி.

---

[1] ''உழல்சூரு மலைமார்பு முடனூடுறப் பொருது'' (தக்க. 5) என்பதும், 'சூரபன்மாவுக்கு மறைவாய் ஓடிவரலான மலையினுடைய மார்பும் சூரபன்மாத்தானும் ஒக்க ஒரே காலத்திலே ஊடுருவும்படி வேலேறுபடப் பொருதருளி' என்ற அதனுரையும் இங்கே கருதத் தக்கன.

[2] ''உன்னையலா லொருதெய்வ முள்கே னென்றும்'' (தே. திருநா.); ''உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே'' (திருவா.)

[3] (பி - ம்.) 'வெஞ்ச மரந்தோன்றில் வேறேன்றும்'

[4] ஒருகால் - ஒரு முறை; இருகால் - இரண்டு திருவடிகள்.

[5] (பி - ம்.) 'கடன்காணீ' [6] (பி - ம்.) 'பயங்கா ணறுமுகமா'

[7] (பி - ம்.) 'குமரா கதிர்வேலா'

9. பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

10. நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.

———

பின்னர் உள்ள கட்டளைக் கலித்துறை, திருமுருகாற்றுப் படையை நியமமாகப் பாராயணஞ் செய்யுங்காலத்துப் பெரியோர்களால் தொன்று தொட்டு ஓதப்பெற்று வருகின்றது.

"ஒருமுரு காவென்ற னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே."

"வளவாய்மை சொற்ப்ரபந்த முளகீர னுக்குகந்து மலர்வாயிலக் கணங்க ளியல்போதி, அடிமோனை சொற்கிணங்க வுலகாமு வப்ப வென்று னருளா லளிக்குகந்த பெரியோனே", "மருகு மாமதுரைக்கூடன் மால்வரை வளைவுளாகிய நக்கீர ரோதிய வளமை சேர்தமி ழுக்காக நீடிய கரவோனே", "கீதவிசை கூட்டி வேத மொழி சூட்டு கீரரியல் கேட்ட க்ருபைவேளே" (திருப்புகழ்), "நக்கீரர் சொற்றித்தித்ததே" (கந்தரந்தாதி)

என அருணகிரிநாதராலும்,

"இன்னன நினைந்து கீர னிலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி யோதின்
உன்னிய வுன்னி யாங்கிங் குதவுவ தாகிப் பாவுள்
முன்னுற வந்து நிற்கு முருகாற்றுப் படைமொ ழிந்தான்"

(சீகாளத்திப். நக்கீரச் 115)

எனக் கவிஞர்களிற் பெரும்புகழ் வாய்ந்த துறைமங்கலம் ஸ்ரீசிவப் பிரகாச சுவாமிகளாலும் திருமுருகாற்றுப்படை பாராட்டப் பெற்றிருத்தல் காண்க.

———

இரண்டாவது

†பொருநராற்றுப்படை

அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்

---

† *பொருநராற்றுப்படைக்கு இந்நூலை மேற்கோளாகக் காட்டினர்;* தொல். *புறத்.* சூ. 36, ந.

2. *"சாறு - விழா; 'சாறு......உறாது'* - இது பொருநராற்றுப் படை" *(நக்க.* 394, *உரை).*

1 - 2. *"கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்,* புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு - கல்லென்னும் ஓசையுண்டாக அழகு பெற்ற திருநாளை வழிப்படுத்திவிட்ட பிற்றைநாள் பொலிவழிந்த இடம் போலத் தனிமை கொண்டு" (கலித். 5 : 10 - 11, *ந.)*

3. *வேறு புலம் - வேறிடம்,*

5. *"விளக்கழ லுறுத்த போலும் விசியுறு* போர்வை" (சீவக) 559, ந.) என்பதற்கு இவ்வடி மேற்கோள்.

'*வள் - தோல்; விளக்கழல்.........பச்சை*' (கல். "*வள்ளுறை*" மயிலேறும். மேற்.)

7. (பி - ம்.) 'ஒழுங்கிய'

8. *"பழையதோர் பொல்லம் பொத்திய"* (திருவிளை. விறகு. 13)

11. *"பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை"* (பெரும்பாண். 11)

10 - 11. *"கொளத்தகு திவவுத் திங்கட் கோணிரைத் தனைய வாணி"* (சீவக. 559)

12. *"சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்"* (பெரும்பாண். 10.

பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்
ஆய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பின்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்
மணங்கமழ் மாதரை மண்ணணி யன்ன
அணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி
அறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதின்
நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்

---

14 - 5. "நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக், குறுந் தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவு" (பெரும்பாண். 12 - 3); "தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவு" (மலைபடு. 21)

19 - 20. "மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப் பெய்தி.........குற்ற நீங்கிய யாழ்" (சிலப். 7 : 2 - 4)

21. (பி - ம்.) 'படையிட'

23. "வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்" (சிலப். 7 : கட்டுரை, 12)

16 - 24. "ஆய்தினை யவைய லனையவா நரம்பாங் கணிபெற வாரியும் வடித்தும், ஏயுற முறையே யுந்தியு முறழ்ந்து மியைந்தநீ ரோடுநன் மொழிக, டேய்வற வெடுத்துச் சிதறியும் பல்காற் றேனுற ழின்னிசை யெழுப்பி" (இலிங்க. நாரதர்கூகை. 24)

29 - 30. "மயிரெறி கத்தரிகை யனையவாய்" (சீவக. 168); "மயிரெறி கருவி வள்ளை" (கந்த. மாயைப். 46); "மயிரெறி கருவி தனதிழி தொழிலை மதித்துமஞ் சிகனுறை தூங்க" (ஆனைக்கா. அகி லாண்ட. 38)

ஆடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகிர்
அணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூழ்
உண்டெனா வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்குல்
இரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப

---

32. அரிமயிர் முன்கை : "அரிமயிர்த் திரண்முன்கை, வாலிழை மடமங்கையர்" (புறநா. 11 : 1 – 2)

33. காந்தள் மெல் விரல் : "முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்" (குறுந். 167 : 1)

34. உகிருக்குக் கிளிமூக்கு : "கிளிவா யன்ன வொளிவா யுகிரின்", "கிள்ளை வாயி னன்ன வள்ளுகிர்" (பெருங். 2. 15 : 76, 4. 7 : 42)

36. "இடையீர் போகா விளமுலை யாளை" (தே. திருவோத் தூர், 2); "ஈர்க்கிடை போகா விளமுலை மாதர்" (திருவா. போற்றி. 34); "ஈர்க்கிடை புகாம லடிபரந் தோங்கு மேரிள வனமுலை" (நைடதம், சுயம்வரப். 77)

35 - 6. சுணங்கணி யாகத்து... .....முலை : "சுணங்கணி வணமுலை" (கலித். 60 : 1)

37. "புனற்சுழி யலைத்துப் பொருந்திய கொப்பூழ்" (பெருங். 2. 15 : 68)

39. "வரியல்குல் வண்டிருப் பன்ன தகைத்து" (யா. வி. சூ. 84, மேற். 'கல்வின் மேல்')

"பாடுவண் டிருந்த வன்ன பல்கலை யகலல்குல்" (சீவக. 1996, ந.) என்பதற்கு இது மேற்கோள்.

40. யானைத்துதிக்கை மகளிர் துடைக்கு : "இரும்பிடித் தடக் கையிற் செறிந்த சேர்ந்துடன் றிரண்ட, குறங்கின்" (சிறுபாண். 19 – 20); "சிறுபிடித் தடக்கையிற் செறிவொடு புணர்ந்து, மென்மையி னியன்று செம்மைய வாகி, நண்புவீற் றிருந்த நலத்தகு குறங்கினள்" (பெருங். 3. 5 : 12 - 4); "கரிக்கைக் கவான்" (யா. கா. க - றை. 14); "மால் யானைக் கைபோலக், கொல்லத் திரண்ட குறங்கினாள்" (விக்கிரம. உலா)

வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
அரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
இலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கில்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாள்

42. "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுலறிய வடி" (சிறுபாண். 17 - 8); "மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங் கியன் மெலிந்த கல்பொரு சீறடி" (மலைபடு. 42 - 3); "முயல்வேட் டெழுந்த முடுகுவிசைக் கதநாய், நன்றுநப் புரையுஞ் சீறடி" (நற். 252 : 10 - 11); "நாய்நாச் சீறடி" (சீவக. 2694); "இளைப்புறு ஞமலி நலத்தகு நாவிற், செம்மையு மென்மையுஞ் சிறந்துவனப் பெய்தி......உறாஉஞ் சேவடி" (பெருங். 2, 19 : 176 – 85); "வருந்து நாய் நாவி னணிகொள் சீறடி", "வருந்துநாய் நாவி னன்ன மலரடி" (கூர்ம. இராமன் வனம் 15, இராமன் வைகுந்த. 28); "வருந்து நாயி னது நாவினை வாட்டித், திருந்து வெண்மையெழில் சேர்ந்த மலர்த் தாள்" (இலிங்க. அம்பரீடனை. 37)

43. "அரக்குவிரித் தன்ன செந்நிலம்" (மலைபடு. 507); "அரக் கத் தன்ன நுண்மணற் கோடுகொண்டு" (பரிற். 30 : 27); "அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழி" (அகநா. 14 : 1)

45. "அடுமரன் மொக்குளில்" (நற். 278 : 2); "மரற்பல் பழம்போன்று கொப்புள்" (சீவக. 2339)

44 - 5. இஃது இடத்திற்கு ஏற்ற உவமைக்கு மேற்கோள்; இ - வி. சூ. 639, உரை.

47. முருகு. 205-ஆம் அடி உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

செய்யுட்கண் பல தொகையும் விராய் வந்து ஒரு சொல் நடைய வாதற்கு இது மேற்கோள்; தொல். எச்ச. சூ. 24, ந,

50 - 51. "கனையெரி நிகழ்ந்த விலையி லங்காட், டுழைப்புறத் தன்ன புள்ளி நீழல், அசைஇய பொழுதில்" (அகநா. 379 : 19 - 21)

52. நற். 189 : 2 - 4.

முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
அரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந
அறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய பறவையின் யானுமவன்
இழுமென் சும்மை யிடனுடை வரைப்பின்

---

54. *"முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்"* (பெரும்பாண். 33; புறநா. 35 : 4); *"முரசுமுழங்கு தானை யரசொடு வேண்டினும்"* (பெருங். 4. 13 : 227)

தொல். களவி. சூ. 33, சே. ந. உரை, மேற.

54 - 5. *முரசடித்தற்கு மேற்கோள்;* தொல். புறத். சூ. 31, ந.

54 – 7. *இவை சிறப்புப்பற்றி வந்த உவமத்திற்கு மேற்கோள்;* தொல். உவம. சூ, 4, இளம். ந; இ - வி. சூ. 639.

59. *"பொழுதெதிர்ந்த, புள்ளினிர் மன்ற வெற்றுக் குறுதலின்"* (மலைபடு. 65-6)

61. *ஒருபொருட் பன்மொழிக்கு இவ்வடி மேற்கோள்;* நன். சூ. 397, மயிலை; நன் - வி. சூ. 398.

64. *"பழுமரந் தேரும் பறவை போல"* (பெரும்பாண். 20); *"பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல"* (மதுரைக். 576); *"தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல், பழுமரம் படரும்"* (குறுந். 172: 1 – 2); *"யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன"* (புறநா. 173 : 3); *"மாக்க ளாற், புட்பயில் பழுமரப் பொலிவிற்று", "பார்கெழு பழுமரப் பறவை"* (சீவக. 93, 828); *"மரஞ்சேர் பறவையும், தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ, பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்"* (மணி. 14 : 24 - 6); *"கனிவளங் கவர்ந்து பதிவயிற் பெயரும், பனியிறை வாவற் படர்ச்சி யேய்ப்ப"* (பெருங். 2. 8: 119 - 20); *"பாய தொன்மரப் பறவைபோல்"* (திருவிளை. திருநகரப். 67).

நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கென் னிடும்பை தீர
எய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ

---

66. பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அருமறை நாவி னந்தணர்க் காயினும்......அடையா வாயில்'' (சிறுபாண். 203 - 6); "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்'' (கூர்ம. சூரியன் மரபு. 13)

66 - 7. (பி - ம்.) 'நசையுநர்க் கடையா.........இசையெனப் புக்கு' நன். சூ. 457, மயிலை; நன். வி. சூ. 458, மேற்.

68. நன். சூ. 451, மயிலை. மேற்.

69. பைத்த - சோபித்த வென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தக்க. 466, உரை.

72. "விளக்குறு வெள்ளி முளைத்துமுன் றோன்ற" (பெருங். 1. 53 - 81): "வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று" (திருப் பாவை, 13)

73. "ஒன்றியான் பெட்டா வளவை யன்றே" (புறநா. 399. 29)

70 - 75. "வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை, அள்ளகட் டன்ன வரிக்கிணை - வள்ளியோன், முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னுமுன், என்கடை நீங்கிற் றிடர்'' (பு. வெ. 206)

76. "கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து'' (குறுந். 203 : 3)

77. "பருகு வன்ன காத லுள்ளமொடு'' (அகநா. 399 : 4); "பருகு காதலிற் பாடி யாடினார்'' (சீவக. 1765): "பருகு வன்ன நோக்க மொடு'' (பெருங். 3. 7 : 80); "பருகுவான் போல நோக்கும்", "பருகுவனள் போனோக்கி'' (பாகவதம், 4. துருவன்பதம். 35; 10. சகடமுதைத்த. 21); "மலர்த்தடங் கண்ணே வாயாப் பருகுவான் போல நோக்கி'' (கூர்ம. திருக்கல்யாண. 61); "பருகுவ னன்ன வார்வத்த னாகி'' (நன். சூ. 40)

"பருகுவார் போலினும்'' (குறள். 811) என்பதற்கு இவ்வடி மேற்கோள்; பரிமேல்.

டுருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ
ஈரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்

---

79. (பி - ம்.) 'இமிர்ந்திறை கூடி'

80. "தொன்றுபடு துளையொடு பருவிழை போகி" (புறநா. 376 : 10)

81. "துன்னற் சிதாஅர் நீக்கி" (பொருந. 154); "சிதாஅ ருடுக்கை முதாரிப் பாண", "தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கி" (புறநா. 138 : 5, 393 : 16)

80 - 81. "அரையது, வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅ, ரோம்பி" (புறநா. 69 : 2 - 4)

79 - 81. "யாழ்ப்பத்தர்ப் புறங்கடுப்ப, இழைவலந்த பஃறுன்னத், திடைப்புரைபற்றிப் பிணிவிடா, ஈர்க்குழாத்தோ டிரைகூர்ந்த, பேஎற் பகையென வொன்றென்கோ" (புறநா. 136 : 1 - 5)

82. (பி - ம்.) 'நோக்குநுழை வேலா'

83. ஆடைக்குப் பாம்புரி: "பாப்புரி யன்ன மீக்கொ டாணே" (பெருங். 1. 42 : 244); "அரவுரி.........துகிற்கொடி நிகர்ப்பன" (கம்ப. சித்திர. 4); "அரிவை துகிளெகி மூல்கு லரவி, னுரிவை விடுபட மொத்தாள்" (குலோத். உலா); "குரவ மெல்லரும் பன்னவெங் கூரெயிற் றரவின், உரிவை யன்னவா னுண்டுகில்" (பாகவதம், 10. கோவியர் துகில். 9); "பழிவா யரவி னுரிநிக ராடை" (இலிங்க. அம்பரீடனே. 56); "பையர வுரியி னன்ன நடைப்படாம்" (திருவிளை. திருமண. 147)

82 - 3. நோக்கு நுழைகல்லா நுண்மைய......அறுவை; "கண் ணுழை கல்லா நுண் ணூற் கைவினை, வண்ண வறுவையர்" (மணி. 28 : 53 - 4); "அணங்கு நுண்டுகில் - இழை தெரியாது வருந்தும் நுண்ணிய துகில்" (சீவக. 344, ந.); "கண்கொளாப் பட்டுடுத் தாள்" (சீவக. 2444. ந.); "நோக்குநுழை கல்லாச் செய்ய, அணங் கரவினுரியன்ன பட்டாடையொடு" (வாயுசங்கிதை, கிரியா. 13)

84. "மலையென மழையென மாட மோங்கி" (மலைபடு. 484); "சேறுசெய் மாரியி னளிக்குநின், சாறுபடு திருவி னனைமகி ழானே" (பதிற். 65 : 16 - 7); பெருங். 3. 16 : 27.

இழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றவன்
திருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
ஆறுசெல் வருத்த மகல நீக்கி
அனந்தர் நடுக்க மல்ல தியாவதும்
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்

---

85. ''இழையணி சிறப்பிற் பழையோள் குழவி'' (முருகு. 259) இன்னகை மகளிர்: ''இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி'' (சிறுபாண். 220); ''நகைத்துணை யாய மெதிர்கொள'' (பெருங். 1. 48 : 70)

86 - 8. பகரவுகரம் இறந்தகால வினையெச்சமாக வருமென் பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். வினை. சூ, 31, ந; இ - வி. சூ. 246.

85 - 8. ''இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங் கமழ் தேறன் மடுப்ப நாளு, மகிழ்ந்தினி துறைமதி பெரும'' (மதுரைக். 779 - 81); ''தண்கமழ் தேறல், பொன்செய் புனைகலத் தேந்தி நாளு, மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து'' (புறநா. 56 : 18 - 20); பெருங். 2. 14 : 60 - 61.

91 - 2. ''இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேண......, உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்'', ''இறைவன் சொல் லெனு மின்னற வருந்தினர் யாரும்......, உறையும் விண்ணக முட லொடு மெய்தின ரொத்தார்'', ''இம்மையே மறுமை தானு நல்வினை யிசையோ டென்றுள்'' (கம்ப. கடிமணப். 1, மந்திர. 75, உருக் காட்டு. 71)

94. ''துழந்தடு கள்ளின் றேப்பியுண் டயர்ந்து, பழஞ்செருக் குற்ற வனந்தர்ப் பாணியும்'' (மணி. 7 : 71 - 2); ''அரிய லார்ந்த வனந்தர்'' (தனிகைப். நாடு. 100)

96 - 7. காலைக்கண்டோர் மருளும்......நிலை: ''பண்டறி வாரா வுருவொடு'' (புறநா. 376 : 9); ''நின்னை வருத லறிந்தனர் யாரே''

கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்
அதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராஅரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழி னூழின் வாய்வெய் தொற்றி
அவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநாள்
அவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப
அயின்ற காலைப் பயின்றினி திருந்து

(புறநா. 138: 11) என்பதற்கு, 'நின்னை அறிவாரும் அறியாத தன்மையையாவை' என்றெழுதிய விசேடவுரை இங்கே அறிதற் பாலது.

98. "கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப, நனவி னல்கியோ னசைசா ரேன்றல்", "கனவென மருள வல்லே நனவி, னல்கி யோனே நசைசா ரேன்றல்" (புறநா. 377 : 19 - 20, 387 : 26 - 7)

101. "வம்மெனக் கூஉய்" (மணி. 19 : 98)

105. காழிற் சுட்ட கோழூன் : "காழ்க்கோத்த சூட்டெடன்கோ" (யா. வி. மேற்.)

107 - 8. "ஊனு மூணு முனையி னினிதெனப், பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவு, மளவுபு கலந்து மெல்லிது பருகி" (புறநா. 381 : 1 - 3)

115. 'பால்வறைக்கருனை' எனவும் படிப்பதுண்டு.

113. - 5. "முரவை போகிய முரியில்வான் மூரல்பால் வறையல், கருனை" (திருவிளை. குண்டோதரனுக்கு. 14.)

கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
எல்லையு மிரவு மூன் றின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்த்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
அகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானும்
என்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென் வென்வேல்
உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்

117 - 8. கொல்லை யுழுகொழு வேய்ப்ப......மழுங்கி : ''தேமுரம் புழுவார் நாஞ்சிற் கொழுவெனத் தேய்ந்து'' (திருக்குற். கவுற்சனச்.28)

121 - 2. ''செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கூறி விடுப்பின்'' (மலைபடு. 567 - 8)

125. (பி - ம்.) 'துடிபுரை யடிய'
''துடியடிக்கயந்தலை'' (கலித். 11 : 8); ''துடியடிக் குழவிய'' (புறநா. 69 : 26)

125 - 6. ''இருபெயர்ப் பேராயமொ, டிலங்குமருப்பிற் களிறு கொடுத்தும்'' (மதுரைக். 101 - 2)

126 - 7. யானை கொடுக்கப்படுதலைப் புறநானூறு, 129, 130, 131, 135, 151 - ஆம் பாட்டுக்கள் முதலியவற்றாலுணர்க; ''குன்று இயபொன்னும் வேழக் குழாமுங் கொடைபுகழ்ந்து, சென்றார் முகக்கும்'' (தஞ்சை. 149)

128. ''என்னறி யளவையி னெண்ணுதல் கொண்ட''(பெருங். 1. 36 : 364)

129. (பி - ம்.) 'வெல்வேல்'

119 - 29. பரிசிலன் யான் போகல் வேண்டுமெனக் கூறி, விடுத்த பின் தலைவன் தந்த வளனை உயர்த்துக் கூறியதற்கு இது மேற்கோள்; தொல். புறத். சூ. 36, ந.

130. 'உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன் மகனாகிய கரிகாற்பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும்' (தொல். அகத். சூ. 30, ந.)

முருகற் சீற்றத் துருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாய மெய்தி
எய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
ஆளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்

---

131. "முருகற் சீற்றத் துருகெழு குருசில்" (புறநா. 16: 12); "முருகி னன்ன சீற்றத்து" (அகநா. 158 : 16)

132. "உருகெழு தாய மூழி னெய்தி" (பட்டினப். 227)

134. உரிச்சொல் வகைக்கு மேற்கோள்; தொல். இளவி. சூ. 1, கல்.

137. தவழ் கற்றல் : "கரியவன் றவழ்கற்றனன்" (பாகவதம், 10. சகடமுதைத்த. 11)

(பி - ம்.) 'கற்றது தொட்டுஞ் சிறந்த'

140. "மீளி மொய்ம்பின்" (பெருங். 5 : 3 : 44)

139 - 42. "ஆளி நன்மா னணங்குடை யொருத்தல், மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப, வேந்தல் வெண்கோடு வாங்கிக் குருகருந்தும்" (அகநா. 381 : 1 - 3); "வேண்டார் பெரியர் விறல் வேலோன் றுனிளையன், பூண்டான் பொழில்காவ லென்றுரையா — மீண்டு, மருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக், குருளையுங் கொல்களிற்றின் கோடு" (பு. வெ. 245) என்பது இவ்வடிகளின் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது; கலிங்க. 237, பார்க்க.

சிங்கக்குருளை களிற்றையடல் : "சிங்கமொரு கன்றினும், பாவனைபோ லேயெழுதிப் பக்கத்தில் - ஓவியமாக், காரானையொன் றெழுதிக் காட்டவரிக் கன்றுதுள்ளிப், போராடிப் பாய்ந்த கதை பொய்யலவே" (விறலிவிடு. 203 - 4)

144. "அரவாய்க் கடிப்பகை" (மணி. 7 : 73); "அரசிக ரிலை நிம்பத்தார்" (திருவிளை. அன்னக்குழியும். 21); புறநா. 76 : 4; 79 : 2.

ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநும்
கையது கேளா வளவை யொய்யெனப்

---

145. "ஓங்கிருஞ் சென்னி மேம்பட மலைய" (சிலப் 26 : 220)
147. (பி-ம்.) 'வெண்ணிற் றாக்கிய'
146 - 7. வெண்ணிப் போர் : அகநா. 55 : 10-12, 125 : 16-22, 246 : 8 - 14.
148. "கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்" (சிறுபாண். 65)
137 - 48. "முலைமுத றுறந்த வன்றே மூரித்தா ளாளி யானைத், தலைநிலம் புரள வெண்கோ டுண்டதே போன்று தன்கைச், சிலை யிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி, நிலவுமிழ் குடையி னீழற் றுஞ்சுக வைய மென்பார்" (சீவக. 2554)
149. (பி - ம்.) 'மருங்கி னணுகுபு'
151. "ஆன்கணம், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (குறிஞ்சிப். 217 - 8); "கறவை கன்றுவயிற் படர" (குறுந். 108 : 2); "தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு, மாபோற் படர்தக நாம்", "கறவைதம் பதிவயிற், கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர" (கலித். 81 : 36 - 7, 119 : 9 - 10); "பதவுமேய லருந்து மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த தீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்", "மதவுநடைத், தாம்பசை குழவி வீங்குசுரை மடியக், கனையலங் குரல காற்பரி பயிற்றிப், படுமணி மிடற்ற பயநிரை யாயம்.........தூங்க" (அகநா. 14 : 9 - 11, 54 : 6 - 11); "குவளை மேய்ந்த குடக்கட் சேதா, முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக், கன்றுநினை குரல மன்றுவழிப் படர" (மணி. 5 :130-32); "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (திருவா.); "கன்றுகாண் கறவையிற் சென்றவட் பொருந்தி", "தனிக் கன் றுள்ளிய புனிற்றாப் போல, விரைவிற் செல்லும் விருப்பின னாகி" (பெருங். 2. 10 : 41, 18 : 10 - 11); "கன்றுகாண் கறவையிற் கசிந்து போற்றினாள்" (பாகவதம், 10. திருவவதார. 58)
(பி - ம்.) "போற்றுவனனோக்கி"
152. ஒய்யென : முல்லை. 83.
(பி - ம்.) 'கையது கொள்ளா'

பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி
எரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை

---

153. (பி-ம்.) 'மாசொடு மிடைந்த'

154. பொருந. 81, அடிக்குறிப்பைப் பார்க்க.

153 - 4. "பாசி யன்ன சிதர்வை" (பெரும்பாண். 468)

153 - 7. "என்னரை, முதுநீர்ப் பாசி யன்ன வுடைகளைந்து, திருமல ரன்ன புதுமடிக் கொளீஇ, மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியும், அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில், வெள்ளி வெண் கலத் தாட்டல்", "ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி, வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை, நுண்ணூற் கலிங்க முடீஇ யுண்மெனத், தேட்கடுப் பன்ன நாட்படு தேறல், கோண்மீ னன்ன பொலங்கலத் தளைஇ, ஊண்முறை யீத்த லன்றியுங் கோண்முறை, விருந்திறை நல்கி யோனே" (புறநா. 390 : 13-8, 392 : 13 - 9)

159. "எரியகைந் தன்ன தாமரை" (அகநா. 106 : 1, 116 : 1)

160. சுரியிரும்பித்தை : "சுரியிரும் பித்தை சூழ்ந்துபுறந் தாழ்ந்த, விரிபூ மாலை" (மணி. 12 : 149-50)

159 - 60. பாணன் பொற்பூச் சூடல்: "பாணர் தாமரை மலையவும்", "அழல்புரிந்த வடர்தாமரை, யைதடர்ந்த நூற் பெய்து, புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல், பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப், பாண்முற் றுகநின் னுண்மகி ழிருக்கை", "ஆடுவண் டிமிராத் தாமரை, சூடா யாத லதனினு மிலையே", "ஒன்னார் யானை யோடைப் பொன்கொண்டு, பாணர் சென்னி பொலியத் தைஇ, வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்" (புறநா. 12 : 1, 29 : 1-5, 69 : 20 - 21, 126 : 1 - 3); "பூப்புனையு நற்குலத்துட் டோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்", "இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண வெம்மைப்போற், கன்றுடை வேழத்த கான்கடந்து - சென்றடையீர், காமரு சாயலாள் கேள்வன் கயமலராத், தாமரை சென்னி தரும்" (பு. வெ. 31, 216); "பாடினர்க்கு, வற்றாத மானத வாவியில் வாடாத, பொற்றா மரையே புனைகென்றாள்" (இராச. உலா.)

வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்

---

159 – 62. பாணன் பொற்றாமரை பெறுதலும் பாடினி மாலை முதலியன பெறுதலும்: "ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை, நீடிரும் பித்தை பொலியச் சூட்டி.........புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின், தொடையமை மாலை விறலியர் மலைய" (பெரும்பாண். 481 - 6); "தலைவன் றாமரை மலைய விறலியர், சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய" (மலைபடு. 569 - 70); "பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி, யொண்ணுதல் விறலியர்க் காரம் பூட்டி" (பதிற். 48 : 1 - 2); "மறம்பாடிய பாடினியும்மே, யேருடைய விழுக்கழஞ்சிற், சீருடைய விழைபெற்றிசினே, யிழைபெற்ற பாடினிக்குக், குரல்புணர்சீர்க்கொளைவல் பாண்மகனும்மே, எனவாங், கொள்ளழல் புரிந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே", "பாடினி மாலை யணிய, வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே", "வாடா மாலை பாடினி யணியப், பாணன் சென்னிக் கேணி பூவா, வெரிமரு டாமரைப் பெருமலர் தயங்க" (புறநா. 11 : 11 - 7, 319 : 14-5, 364 : 1 - 3)

163. "மருப்பிய லூர்தி" (பெருங். 1. 38 : 11); "கோட்டினிற் புரி கொடுஞ்சியந்தேர்", "யானைக் கோட்டினி லியற்று திண்டேர்" (பாகவதம், 1. தன்மபுத்திரனரசு. 18; 10. திருவவதார. 18).

ஐந்தாம் வேற்றுமை ஆக்கப் பொருளில் வந்ததற்கு இவ்வடி மேற்கோள் (தொல். வேற்றுமையியல், சூ. 17, ந. சூ. இ. வி. 220, உரை); கருவிப் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; நன். 298, மயிலை.

165. "வளைகண் டன்ன வாலுளைப் புரவி, துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி" (பெரும்பாண். 488 - 9)

"நால்கு பண்ணினர் நால்வரு மேறினர்" என்ற அடியுரையில் நால்கென்பதற்கு மேற்கோள்; சீவக. 1774, ந.

167. (பி- ம்.) 'களைதந் தேறென் றேற்றி'

168. (பி - ம்.) 'முறையுளி கழிப்பி'

தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னொல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெல்
தாழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயிற்றைற்

---

169. மு. *"தண்பணை தழீஇய, தளரா விருக்கை"* (சிறுபாண். 78; பெரும்பாண். 242)

"தண்பணை தழீஇய, சயந்தியம் பெரும்பதி" (பெருங். 2 10:3-4)

172. (பி - ம்.) *'வெருவருஞ் செலவின்'*

171 - 2. *"நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறை யறைந் தல்லது செல்லற்க"* (கலித். 56 ; 32 - 3); *"தெண்கணை முன்னர்க் களிற்றி னியலி"* (புறநா. 79:3); *"பாகும் பறையும்...அலவுற்று விளிப்ப","பணை யெழுந்தார்ப்ப, மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு, நீல யானை மேலோ ரின்றிக், காமர் செங்கை நீட்டி"* (மணி. 4: 41 - 2, 19 : 18 - 21); *"பறைநிறை கொல்யானை"*, *"அறைபறை யானை"* (முத்.); *"முரசதிர்ந் தானைமுன் னோடை முன்பணிந் தன்பர்க ளேத்த"* (தே. ஆரூர்.); *"பறைவன் களிற்று"* (வி. பா. சூதுபோர். 225)

176. (பி - ம்.) *'நிலைமை தூக்கி'*

மு. *"நில்லா வுலகத்து நிலைமை தூக்கி"* (பெரும்பாண். 466)

180. (பி - ம்.) *'வயின் வயினின்'*

181. *வெண்பாவுரிச்சீரால் தூங்கலோசை பிறந்ததற்கு* இவ்வடி மேற்கோள்; தொல். செய். சூ. 22, பேர்.

182. (பி-ம்.) *'கூடு குழீஇய'*

செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்கண்
ஈற்றியாமைதன் பார்ப்போம்பவும்
இளையோர் வண்ட லயரவு முதியோர்
அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்
முடக்காஞ்சிச் செம்மருதில்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி
அறைக்கரும்பி னரிநெல்லின்
இனக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவின்
நனைஞாழலொடு மரங்குழீஇய
அவண்முனையி னகன்றுமாறி
அவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையிற்

---

183 - 4. காக்கை பலியை உண்ணல்: ''வெண்ணெல் வெஞ்சோ, றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி,.........விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'' (குறுந். 210 : 3 - 6); ''வரக்கரைந்தா, லுணங்கலஞ் சாதுண்ண லாமொண் ணிணப்பலி யோக்குவன்மாக், குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டைக் குலக்கொடியே'' (திருச்சிற். 235)

188. (பி - ம்.) 'பகைமுரண் சொலவும்'

190 - 92. மயில் பாகற்பழத்தை யுண்ணல் : ''பாக லார்கைப் பறைக்கட் பீலித், தோகை'', ''பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக், கான மஞ்ஞைக் கமஞ்சூன் மாப்பெடை, யயிரியாற் றடைகரை வயிரி னரலும்'' (அகநா. 15 : 4-5, 177 : 9-11)

''பாகல்-பலா;......'பைம்பாகற்......மாந்தி' எனவுஞ் சொன்னார் பாட்டினும்'' (சிலப். 16 : 22 - 8, அடியார்.)

201. மணிக்காயா. ''மணியெனத் தேம்படு காயா'' (ஐங். 420): ''மணிபுரை யுருவின காயாவும்'' (கலித். 101 : 5)

202. (பி - ம்.) 'முணையின்'

சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பின்
ஓங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவும்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
தியாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவும்
தீங்கரும்பொ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர

---

210. ''விரலூன்று படுகண் ணகுளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை'' (மலைபடு. 140 - 41); ''உருமிடி மகுளியிற் பொருபெடரிந் திசைக்கும், கடுங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்றம்'' (அகநா. 19: 4-5);''கடுந்துடி, புலி துஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டும், மலை'', ''அத்தக் குடிஞைத் துடிமரு டீங்குரல்'' (புறநா. 170 : 6 - 8, 370; 6)

213. மணலுக்கு நிலவு : ''நிலவுக் கானல்'' (மதுரைக். 114); ''நிலவடைந்த விருள்போல, வலையுணங்கு மணன்முன்றில்'' (பட்டினப். 82-3); ''நிலவுக்குவித் தன்ன மோட்டுமண லடைகரை'', ''நிலவுத்தவழ் மணற்கோடு'' (நற். 159 : 4, 163 : 5); ''நிலவுக் குவித் தன்ன வெண்மண லொருசிறை'', ''நிலவுநிற வெண்மணல்'' (குறுந். 123 : 2, 320 : 3); ''நிலாவி னிலங்கு மணன்மலி மறுகில்'' (அகநா. 200 ; 1); நிலவுமணல் வியன்கானல்'' (புறநா. 17 : 11); ''நிலாவெழுந்த வார்மண னீடி'' (திணைமாலை. 29)

வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா னாடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
ஒருகுடையா னொன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வென்வேற் குருசில்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மாண்
எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையும்
நறையு நரந்தமு மகிலு மாரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை

---

226. (பி - ம்.) 'நாடு கெழீஇ'

231. (பி - ம்.) 'வெல்வேற் குரிசில்'

234. "பரந்துபடு கூரெரி கான நைப்ப, மரந்தீ யுற்ற" (நற். 177 : 1-2)

236. கருவி வானம் : "கருவி வானங் கான்ற" (சீவக. 725)

238 - 41. "நறுவீ நாகமு மகிலு மாரமும், துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய, பொருபுன றருஉம் போக்கரு மரபின்" (சிறுபாண். 116 - 8)

"கொடுவாய்க்குயம்-கோடின வாயையுடைய அரிவாள்; 'கூனி ....அரிந்து' என்றார் பொருநராற்றுப்படையிலும்" (சிலப். 16 : 30, அடியார்.)

243. "வயங்கொள்வார் சாலிச் சூடும் வளர்ந்துபோய் வானைச் சூடும்" (திருவால. திருநகர. 9)

244. "குடகாற் றெறிந்த குப்பை வடபாற், செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்" (பெரும்பாண். 240 - 41)

6611

245 கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

246-7. "வேலி யாயிரம் விளைகநின் வயலே" (புறநா. 397:21); "வாவி தாமரை யொருபுறம் வளர்செறு வொருசார், பாவி னெல்லொரு சாரொரு சாரரிப் பறம்பு, சாலி வேலையோர் சாரிவை தலைமயக் குறலால், வேலி யாயிரம் விளையுளென் பதுமிதன் மேற்றே" (சீகாழித். திருநகரப். 9.)

தெரிநிலையுடன் கூடிய டகரவுகரம் தொழிலடியாக வந்ததற்கு மேற்கோள் (தொல். வினை. சூ. 24. ந.); "தாங்கா விளையுள் - நிலம் பொறுத விளைத்தல்; 'வேலி........ஆக' என்றாராகலின். விளைத்த லென்பது விளையுளென மருவிற்று; புலிப்பாய்த்துள், தேரைப் பாய்த்து ளென்பன போல" (சிலப். 6 : 30, அடியார்.)

248. "காவிரி புரக்கு நாடுகிழ வோற்கென்று" (சிலப். 27:171); "கங்கை புரக்கு நாடு கிழவோன்" (பாகவதம். 10. 20 : 7)

நன். சூ. 182. மயிலை. மேற்; நன் - வி. சூ. 183, மேற்., 246-8. இ - வி. சூ. 102, மேற்.

— —

இதன் பொருள்

1. அருஅ யாணர் அகல் தலை பேர் ஊர் - இடையறுத செல்வ வருவாயினையுடைய அகன்ற இடத்தையுடைய பெரிய ஊர்களிடத்து,

2. சாறு கழி வழி நாள் சோறு நசை உறுது - விழாக்கழிந்த பின்னுளில் ஆண்டுப் பெறுகின்ற சோற்றை விரும்புதல் செய்யாது,

3. வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந-விழாக் கொண்டாடும் வேற்றுப்புலத்தைக் கருதிய [1]விரகை அறிந்த பொருந,

இஃது அண்மை விளி.

4. குளம்பு வழி அன்ன கவடு படு பத்தல்-மான் குளம்பு அழுத்திய இடத்தையொத்த இரண்டருகும் தாழ்ந்து நடுவுயர்ந்த பத்தலினையும்,

5. விளக்கு அழல் உருவின் விசி உறு பச்சை - விளக்கினது எரிகின்ற நிறத்தையுடைய விசித்துப் போர்த்தலுற்ற தோல்,

6. எய்யா இள சூல் செய்யோள் அ வயிறு - மிக அறியப் படாத இளைய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோளது அழகினையுடைய வயிற்றின்,

---

[1]விரகு - உபாயம்; 'உபாயங்களாற் பண்ணுதலின் விரகென்றார்' (பொருந. 107 - 8, ந.)

செய்யோளென்றார், மயிரொழுங்கு விளங்கித் தோற்றுதற்கு.

7. ஐது மயிர் ஒழுகிய தோற்றம்போல - [1]ஐதாகிய மயிர் ஒழுங்குபடக் கிடந்த [2]தோற்றரவுபோல,

8. பொல்லம் பொத்திய பொதி உறு போர்வை-இரண்டு தலையும் கூட்டித் தைத்த மரத்தைப் பொதிதலுறும் போர்வையினையும்,

9 - 10. அளை வாழ் அலவன் கண் கண்டன்ன துளை வாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி - முழையிலே வாழ்கின்ற ஞெண்டின் கண்ணைக் கண்டாலொத்த பத்தலிரண்டும் சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக் காரணமாகிய முடுக்குதலமைந்த ஆணியினையும்,

தோல் ஞெகிழாமல் முடுக்கின ஆணியென்று முரைப்பர்.

அன்ன ஆணி என்க.

11-2. எண் ணாள் திங்கள் வடுவிற்று ஆகி அண்ணா இல்லா அமை வறு வறு வாய்-உவாவிற்கு எட்டாநாளில் திங்களின் வடிவை உடைத்தாய் உண்ணாக்கில்லாத பொருந்துதல் வந்த வறிய வாயினையும்.

13. பாம்பு அணந்தன்ன ஓங்கு இரு மருப்பின் - பாம்பு தலையெடுத்தாலொத்த ஓங்கின கரிய தண்டினையும்,

14. [3]மாயோள் முன்கை ஆய் தொடி கடுக்கும் திவவின் (15)-கரிய நிறத்தையுடையோளுடைய முன்கையில் அழகினையுடைய நேர்ந்த தொடியை யொக்கும் வார்க்கட்டினையும்,

15. கண் கூடு இருக்கை திண் பிணி திவவு - ஒன்றோடொன்று நெருங்கின இருப்பையுடைத்தாகிய திண்பிணிப்பினையுடைய திவவு,

இது நரம்பு துவக்கப்படுவது.

16 - 8. ஆய் தினை அரிசி அவையல் அன்ன வேய்வை போகிய விரல் உளர் நரம்பின் கேள்வி போகிய நீள்விசி தொடையல்- அழகினையுடைய தினையரிசியிற் குத்தலரிசியை ஒத்த குற்றம்போகிய விரலாலசைக்கும் நரம்பினையுடைய இசை முற்றுப்பெற்ற நீண்ட விசித்தலையுடைய தொடர்ச்சியினையும்,

19. மணம் கமழ் மாதரை மண்ணி அன்ன காட்சி (20) - கலியாணஞ் செய்தமை தோற்றுகின்ற மாதரை ஒப்பித்தாலொத்த அழகினையுமுடைய,

20. அணங்கு மெய் நின்ற அமை வரு காட்சி - [4]யாழிற்குரிய தெய்வம் தன்னிடத்தே நின்ற இலக்கணம் அமைதல் வரும் அழகு,

---

[1]ஐதாகிய–மெல்லிதாகிய; சிறுபாண். 13, உரை.
[2]தோற்றரவு-தோன்றுதல்; பொருந. 55, உரை.
[3]"மாயோள்-கருநிறத்தையுடையாள்" (நக்க. 104, உரை)
[4]யாழிற்குரிய தெய்வம் மாதங்கி; சீவக. 410, 550, ந.

ஆறு அலை கள்வர் படை விட - வழியை அலைக்கின்ற கள்வர் தம் கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி.

21 – 2. அருளின் மாறு தலை பெயர்க்கும் மருவு இன் பாலை - அருளினது மாறுகிய மறத்தினை அவர்களிடத்து நின்று பெயர்க்கும் மருவுதல் இனிய பாலையாழை,

பாலை : ஆகுபெயர்.

"கோடே பத்த ராணி நரம்பே, மாடக மெனவரும் வகையின தாகும்" என்றதனால் மாடகமொழிந்தன கூறினர்.

பத்தலினையும் (4), பொல்லம்பொத்திய (8) பச்சையாகிய (5) போர்வையினையும் (8), ஆணியினையும் (10), வறுவாயினையும் (12), மருப்பினையும் (13),வார்க்கட்டினையும் (15),நரம்பின்றொடர்ச்சியினை யும் (18), காட்சியினையும் (20) உடைய பாலையாழென முடிக்க.

"கொன்றை கருங்காலி குமிழ்முருக்குத் தணக்கே" என்பதனால் கோட்டிற்கு மரம் கொன்றையும் கருங்காலியுமாம்; பத்தற்கு மரம் குமிழும், முருக்கும், தணக்குமாம்.

23. [1]வாரியும் - நரம்புகளைக் கூடத் தழுவியும்,

[2]வடித்தும்-உருவியும்; வடித்தல்-நரம்பெறிதலென்று முரைப்பர்.

[3]உந்தியும் - தெறித்தும்,

[4]உறழ்ந்தும் - ஒன்றை விட்டு ஒன்றைத் தெறித்தும்,

24. சீர் உடை நல் மொழி நீரொடு சிதறி - சீரையுடைத்தாகிய [5]தேவபாணிகளை நீர்மையுடன் பரக்கப் பாடி,

---

[1]"வார்தலென்றது சுட்டுவிரற் செய்தொழில்" (சிலப். 7, கட்டுரை. 12. அரும்பத.)

[2]"வடித்தலென்றது சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்" (சிலப். 7. கட்டுரை, 12, அரும்பத.)

[3] "உந்தலென்றது நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டது மென்றறிதல்" (சிலப். 7. கட்டுரை, 12. அரும்பத)

[4] "உறழ்தலென்றது ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்" (சிலப். 7. கட்டுரை, 12, அரும்பத.)

[5]தேவபாணியென்பது தேவர்ப்பரவலென்றும், அது பெருந்தேவ பாணி சிறுதேவபாணியென இருவகைப்படுமென்றும், அவை முத்தமிழ்க்கும் பொதுவென்றும், இசைத்தமிழில் வருங்கால் செந்துறை முதலிய இசைப்பாக்கள் பத்தின்பாற்படுமென்றும் கூறுவர்; சிலப். 6 : 35, அடியார்.

[1] சீரெனவே பாணியும் தூக்கும் உளவாயின.

25. அறல் போல் கூந்தல் - ஆற்றறல்போலும் கூந்தலினையும்,

பிறை போல் திரு நுதல் - பிறைபோல அழகினையுடைய நுதலினையும்,

26. கொலை வில் புருவத்து - கொலைத்தொழிலையுடைய விற்போலும் புருவத்தினையும்,

கொழு கடை மழை கண் - அழகிய கடையினையுடைய குளிர்ச்சியையுடைய கண்ணினையும்,

27. இலவு இதழ் புரையும் இன்மொழி துவர் வாய் - இலவினது இதழையொக்கும் இனிய சொல்லையுடைய செம்மையுடைத்தாகிய வாயினையும்,

28. பல உறு முத்தின் பழி தீர் வெள் பல் - பலவுஞ் சேர்ந்த முத்துக்கள் போற் குற்றந் தீர்ந்த வெள்ளிய பல்லினையும்,

பலமுத்தென்றார், ஒரு கோவையாயிருத்தலின்; இனிப் பலவிலையுற்ற முத்தென்றுமாம்.

29 - 30. [மயிர்குறை கருவி மாண்கடை யன்ன, பூங்குழை யூசற் பொறைசால் காதின்:]

மயிர் குறை கருவி மாண் கடை அன்ன (29) காதின் (30) - மயிரை வெட்டுகின்ற கத்தரிகையினுடைய மாட்சிமைப்பட்ட குழைச்சையொத்த காதினையும்,

பூ குழை [2] ஊசல் பொறை சால் காது (30) - பொலிவினையுடைய மகரக்குழையினுடைய அசைவினைப் பொறுத்தலமைந்த காது.

31. நாண் அட சாய்ந்த நலம் கிளர் எருத்தின் - நாணம் வருத்தலால் பிறரை நோக்காது கவிழ்ந்த நன்மை விளங்குகின்ற கழுத்தினையும்,

32. ஆடு அமை பணை தோள் - அசைகின்ற மூங்கில் போலும் பெருத்தலையுடைய தோளினையும்,

அரி மயிர் முன்கை - [3]ஐம்மை மயிரினையுடைய முன்கையினையும்,

33. நெடுவரை மிசைய காந்தள் மெல் விரல் - நெடிய மலையின் உச்சியிடத்தனவாகிய காந்தள்போலும் மெல்லிதாகிய விரலினையும்,

34. கிளி வாய் ஒப்பின் ஒளி விடு வள் உகிர் - கிளியினது வாயோடு ஒப்பினையுடைய ஒளிவிடுகின்ற பெருமையை உடைத்தாகிய உகிரினையும்,

---

[1] சீர் முதலியவை தாள விசேடங்கள்; சீர், முடியுங்காலத்தைத் தன்னிடத்தே உடையது; பாணி, எடுக்குங் காலத்தைத் தன்னிடத்தே உடையது; தூக்கு, நிகழுங் காலத்தைத் தன்னிடத்தே உடையது; கலித். கடவுள். ந.

[2] ஊசல் - அசைவு; ''ஊசலாடும் - அசைகின்ற'' (சீவக. 68, ந.)

[3] ''ஐதுமயி ரொழுகிய'' (பொருந. 7)

35. அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து முலை (36) - பிறர்க்கு வருத்தமெனத் தோன்றின சுணங்கணிந்த மார்பிடத்து முலையினையும்,

36. ஈர்க்கு இடை போகா ஏர் இள வனம் முலை - ஈர்க்கும் நடுவே போகாத எழுச்சியையுடைய இளைய அழகினையுடைய முலை,

37. நீர் பெயர் சுழியின் நிறைந்த கொப்பூழ் - நீரிடத்துப் பெயர் தலையுடைய சுழிபோல உத்தம இலக்கணங்கள் நிறைந்த கொப்பூழினையும்,

38. உண்டு என உணரா உயவும் நடுவின் - உண்டென்று பிறர் உணரப்படாத வருந்துமிடையினையும்,

உயவினென்று பாடமாயின், வருந்துதலையுடையவென்க.

39. வண்டு இருப்பு அன்ன [1] பல் காழ் அல்குல் - பல வண்டினங்களின் இருப்பையொத்த பல மணி கோத்த வடங்களையுடைய மேகலை யணிந்த அல்குலையும்,

காழ்: ஆகுபெயர்.

40. இரு பிடி தட கையின் செறிந்து திரள் குறங்கின் - பெரிய பிடியினுடைய பெருமையையுடைய கைபோல ஒழுகவந்து மெல்லிதாகத் தம்மில் நெருங்கி ஒன்றித் திரண்ட குறங்கினையும்,

41. பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்கு ஒப்ப - கணைக் காற்கு இலக்கணமென்றற்குப் பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட ஏனையிலக்கணங்கள் திருந்தின கணைக்காலுக்குப் பொருந்த,

42. [வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி:]

வருந்து நாய் நாவின் சிறு அடி - ஓடி இளைத்த நாயினது நாப்போலச் சிறிய அடியினையும்.

41 - 2. தாட்கு ஒப்ப பெரு தகு அடி - தாளுக்குப் பொருந்தப் பெருமை தக்கிருக்கும் அடி யென்க.

[2] பெருவென்னு முதனிலை பெருமையை உணர்த்தி நின்றது.

43. அரக்கு உருக்கு அன்ன செ நிலன் ஒதுங்கலின் - சாதிலிங்கத்தை உருக்கின தன்மையையொத்த செய்ய நிலத்தே நடக்கையினாலே,

44. பரல் பகை உழந்த நோயொடு சிவணி - சுக்கான்கல்லாகிய பகையாலே வருந்தின நோயோடே பொருந்தி,

---

[1] முருகு. 16, உரையையும் அதன் குறிப்புரையையும் பார்க்க.

[2] "கருவார் பொழில்" (தே. பிரமபுரம்), "கருக்கொள் சோலை" (தே. ஆரூர்) என்பவற்றில், கருவென்னும் முதனிலை கருமையையுணர்த்தி நின்றமை காண்க.

45. மரல் பழுத்தன்ன மறுகு நீர் மொக்குள் - மரல் பழுத்தாற் போன்ற துளும்பு நீரையுடைய கொப்புளம்,

46. [1]நல் பகல் அந்தி நடை இடை விலங்கலின் - நன்றாகிய உச்சிக் காலமான சந்தியிலே நடத்தலை நடுவே தவிர்தலாலே,

47. பெடை மயில் உருவின் பெரு தகு பாடினி - பெடை மயிலருகு நின்ற மயில்போலும் சாயலினையுமுடைய கல்விப்பெருமை தக்கிருக்கின்ற பாடினி,

கூந்தலினையும் நுதலினையும் (25) புருவத்தினையும் கண்ணினையும் (26) வாயினையும் (27) பல்லினையும் (28) காதினையும் (30) எருத்தினையும் (31) தோளினையும் கையினையும் (32) விரலினையும் (33) உகிரினையும் (34) முலையினையும் (36) கொப்பூழினையும் (37) நடுவினையும் (38) அல்குலினையும் (39) குறங்கினையும் (40) சீறடியினையும் (42) உருவினையுமுடைய பாடினி யென்க.

இங்ஙனம் சீறடியுங் கூட்டி எண்ணுக்கால் தலைமுதல் அடியீறின்றாகக் கூறிற்றும்.

48. பாடின பாணிக்கு ஏற்ப - பாடின தாளத்திற்குப் பொருந்த,

48 - 9. நாள் தொறும் களிறு வழங்கு அதர் கானத்து அல்கி - நாடோறும் யானையுலாவரும் வழியையுடைய காட்டிடத்தே தங்கி,

50 - 51. [இலையின் மராத்த வெவ்வந் தாங்கி, வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கின்:]

இலை இல் மராத்த வலை வலந்தன்ன மெல் நிழல் மருங்கில் - இலையில்லாத [2]மராத்திடத்தனவாகிய வலையை மேலே கட்டினாலொத்த மெல்லிய நிழலினிடத்தே,

எவ்வம் தாங்கி - கொப்புளால் (45) வந்த வருத்தந் தாங்கி,

இனி, ஞாயிற்றின் வெம்மையால் தனக்கு வந்த எவ்வத்தைத் தாங்கி இலையில்லாத மராமரமென மராமரத்தின்மேல் ஏற்றுதலுமாம்.

52. காடு உறை கடவுள் கடன் கழிப்பிய பின்றை - காட்டின் கண்ணே தங்குகின்ற தெய்வத்திற்கு மனமகிழ்ச்சியாகச் செய்யும் முறைமைகளைச் செய்துவிட்ட பின்பு.

பொருந (3), பாடினி (47) செஞ்நிலனொதுங்கலின் (43) அவளடிகள் (42) பரற்பகை யுழந்த நோயொடு சிவணித் (44) தம்மிடத்தே கொண்ட மொக்குளால் (45) தனக்கு வந்த வருத்தத்தைத் தாங்கித் (50) தான் நடையைத் தவிர்தலாலே (46) கானத்தின் (49) மென்னிழன் மருங்கில் (51) தங்கிப் (49) பாலையாழை (22)

---

[1] நன்பகல் - உச்சிக்காலம்; கலித். 74: 10, ந; பு. வெ. 39, உரை.

[2] மரா - மராமரம்; மலைபடு. 395; இது சுள்ளியெனவும் வழங்கும்; குறிஞ்சிப். 66, ந.

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும் (23) வாசித்து, பாடினி பாணிக்கேற்பச் (48) சீருடை நன்மொழி நீரொடு சிதறிக் (24) காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றையென முடிக்க.

கடன்கழித்தல் - தடாரியை வாசித்தல்.

53 - 4. பீடு கெழு திருவின் பெரு பெயர் நோன் தாள் முரசு முழங்கு தானை [1]மூவரும் கூடி - பெருமை பொருந்தின செல்வத்தையும் பெரிய பெயர்களையும் வலியையுடைய முயற்சியையும் வெற்றிமுரசு முழங்கும் படையினையுமுடைய சேர சோழ பாண்டியர் தம்மிற் பகைமை நீங்கிச் சேர்ந்து,

55. அரசு அவை இருந்த தோற்றம் போல - செல்வக்குறைபாடின்றி அரசிருத்தற்குரிய அவையாக இருந்த தோற்றரவுபோல,

தோற்றம்போல இன்மை தீர வந்தனென் (129) என மேலே கூட்டுக.

இனி, அரசவையிருந்த தோற்றம்போல வலிவும் மெலிவும் சமனுமாகப் பாடுதலைப் பற்றியவென்று பாட்டின்மேல் ஏற்றிப் பொருள் கூறின், குலமும் செல்வமும் வீரமும் முதலியவற்றால் தம்மில் ஒத்தாரை உவமித்தலின், அவர்க்கும் வலிவும் மெலிவும் சமனுமென்னும் குணங்கள் எய்துமாதலின், அங்ஙனங் கூறல் பொருந்தாமை உணர்க; அன்றியும் பயனே ஈண்டு உவமை யென்று உணர்க.

இனிப் பாட்டு [2]நிருத்த கீத வாச்சியத்தை யுடைமையின், அரசரோடு உவமித்தாரென்பாரும் உளர்.

56 - 7. பாயல் பற்றிய பயன் உடை எழாஅல் கோடியர் தலைவ - மிடற்றுப்பாடலைத் தொடங்கி யெழுந்திருந்த பயன்களைத் தன்னிடத்தே யுடைத்தாகிய யாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே,

இவன் [3]போர்க்களம் பாடும் பொருநனுதலானும், கூத்தரில் இவனிற் சிறந்த கூத்தர் இன்மையானும் இங்ஙனம் கூறினர்.

57. கொண்டது அறிந - பிறர் மனத்துக் கொண்டதனைக் குறிப்பால் அறியவல்லாய்,

---

[1] மூவரென்பது சேர சோழ பாண்டியர்களைக் குறிக்கும் தொகைக் குறிப்புச் சொல்லாகத் தொன்று தொட்டு வழங்கப்படும்; "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (தொல். செய். சூ. 79)

[2] இவை மூன்றும் 'கொட்டாட்டுப்பாட்டு' எனத் தமிழில் வழங்கப் பெறும்; "கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானை", கொட்டாட்டுப் பாட்டொலியோவாத் துறையூர்"(தே); "கொட்டாட்டுப் பூசாந்தம்" (தக்க. 114, உரை)

[3] 'பொருநரும் ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம் பாடுநரும் பரணி பாடுநருமெனப் பலராம்' (தொல். புறத்திணை. சூ. 36, ந.)

58. அறியாமையின் நெறி திரிந்து ஒராஅது - வழியறியாமையினாலே இவ்வழியைத் தப்பி வேறொரு வழியிற் போகாதே,

59. ஆறு எதிர் படுதலும் நோற்றதன் பயனே - இவ்வழியிலே என்னைக் காண்டலும் நீ முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயன்;

60. [போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந:] புகழ் மேம்படுந போற்றி கேண்மதி - புறத்தார் புகழை அரசவைகளிலே மேம்படுத்த வல்லாய், யான் கூறுகின்றவற்றை விரும்பிக் கேட்பாயாக;

61–2. ஆடு பசி உழந்த நின் இரு பேர் ஒக்கலொடு நீடு பசி ஒராஅல் வேண்டின் - அடுகின்ற பசியாலே வருந்தின நின்னுடைய கரிய பெரிய [1]சுற்றத்தோடே தொன்றுதொட்டு வந்த பசி நின்னைக் கைவிடுதல் விரும்புவையாயின்,

62 - 3. நீடு இன்று எழுமதி - நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக; வாழி - நீ வாழ்வாயாக;

63. ஏழின் கிழவ - குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென்னும் நரம்பு ஏழின்கண்ணும் உரிமையுடையாய்,

64. [பழுமர முள்ளிய பறவையின் யானும்:]

யானும் பழுமரம் உள்ளிய பறவையின் - செல்வம் எய்திய யானும் முன்பு பழுத்த மரத்தை நினைத்துச் செல்கின்ற புட்போல.

64 - 5. அவன் இழுமென் சும்மை இடன் உடை வரைப்பின் - அவனுடைய இழுமென்றெழும் ஓசையினையுடைய அகலமுடைத்தாகிய மதிலில்,

66. நசையுநர் தடையா நல் பெரு வாயில் - நச்சிவந்தார்க்குத் தடையில்லாத நன்றாகிய பெரிய கோபுரவாயிலின் கண்ணே,

67. இசையேன் புக்கு – வாயிலோனுக்குக் கூறுமற் புகுந்து,

என் இடும்பை தீர - என்னுடைய மிடிதீர்தல் காரணமாக,

68. எய்த்த மெய்யேன் எய்யேனாகி - [2] முன்பு இளைத்த உடம்பையுடைய யான் அவ்வாயிற்குள்ளே சென்ற உவகையாலே பின்பு இளைப்புத் தீர்ந்து,

69 - 70. பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்ப கை கசடு இருந்த என் கண் அகல் தடாரி - படம் விரித்த பாம்பினது பொறியை யொப்பக் கையினது வடுப்பட்டுக் கிடந்த எனது கண்ணகன்ற உடுக்கையில் தோற்றுவித்த,

---

[1] "பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு" (பெரும்பாண். 25)

[2] "வென்வே லண்ணற் காணு வூங்கே, நின்னினும் புல்லியே மன்னே யினியே, இன்னே மாயினே மன்னே" (புறநா. 141 : 7 - 9)

71-3. [1][இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர், வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய, லொன்றியான் பெட்டா வளவையின்:]

இரு சீர் பாணிக்கு ஏற்ப ஒன்று யான் பெட்டா அளவையின்- இரட்டைத் தாளத்திற்குப் பொருந்த ஒரு பாட்டினை யான் பேணிப் பாடுவதற்கு முன்னே,

விரி கதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல் - விடிகின்ற கிரணங்களையுடைய வெள்ளி எழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தே,

73-4. ஒன்றிய கேளிர் போல கேள் கொளல் வேண்டி - முன்பே தன்னோடு பொருந்திய நட்டாரைப்போல என்னுடன் உறவு கொள்ளுதலை விரும்பி,

75. வேளாண் வாயில் வேட்ப கூறி - தான் உபகரித்தற்கு வழியாகிய [2]இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி,

76. கண்ணில் காண நண்ணு வழி இரீஇ - தன் கண்ணிலே காணும்படி தனக்கு அண்ணிதான இடத்திலே என்னை இருத்தி,

77. பருகு அன்ன அருகா நோக்கமோடு - தன்னைக் கண்ணுற் பருகுந் தன்மையை யொத்த கெடாத பார்வையாலே,

78. [உருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ:] என்பு உருகு பவைபோல் குளிர்கொளீஇ - என்பை உருகும் மெழுகு முதலியன போல் நெகிழும்படி குளிர்ச்சியைக் கொளுத்தி,

நோக்கத்தாலே (77) கொளுத்தி யென்க.

79. ஈரும் பேனும் இருந்து இறைகூடி - ஈரும் பேனும் கூடி யிருந்து அரசாண்டு,

80-81. [வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த, துன்னற் சிதாஅர் துவர நீக்கி:]

வேரொடு நனைந்து வேறு இழை நுழைந்த துன்னல் சிதாஅர் நீக்கி - வேர்ப்பாலே நனைந்து சரடுகள் உள்ளே ஓடுதற்குக் காரண மாகிய தைத்தற்றொழிலையுடையனவாகிய சீரையை என்னிடத்தி னின்றும் போக்கி,

---

[1]பொருநர் விடியற்காலத்தே சென்று தடாரி கொட்டிப் பாடுதலும் கேட்ட உபகாரிகள் அப்பொருநர்க்கு வேண்டியவற்றை அளித்தலும் பண்டைக்கால வழக்கம்; பு. வெ. 206.

[2]"இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பின், அவர்பழி தம்பழி யன்று", "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின், றிரப்புமோ ரேஎ ருடைத்து", "இரத்தலு மீதலே போலுங் கரத்தல், கனவிலுந் தேற்றுதார் மாட்டு" (குறள், 1051, 1053-4)

82 - 3. நோக்கு நுழைகல்லா நுண்மைய பூ கனிந்து அரவு உரி அன்ன அறுவை துவர (81) நல்கி – கண்ணிற் பார்வை இஃது இழை போன வழியென்று குறித்துப் பார்க்க வாராத நுண்மையையுடைய வாய்ப் [1]பூத்தொழில் முற்றுப்பெற்ற தன்மையாற் பாம்பினது தோலையொத்த துகிலை மிக நல்கி,

துவர வென்பதனை இதனோடு கூட்டுக.

84 – 5. [மழையென மருளும் மகிழ்செய் மாடத், திழையணி வனப்பி னின்னகை மகளிர்:]

இழை அணி வனப்பின் இன் நகை மகளிர்-இழைகளை அணிந்த அழகினையுடைய பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் அரசனுக்கு இனிய மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர்,

இதனை, "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (220) என்றார், சிறுபாணாற்றிலும்.

86 - 7. [போக்கில் பொலங்கல நிறையப் பல்கால், வாக்குபு தரத்தர:]

84 - 7. மருள் செய்யும் மகிழ் மழையென மாடத்து பல்கால் வாக்குபு - உண்டார் மயங்குதலைச் செய்யும் கள்ளை மழை என்னும்படி மாடத்திடத்தே பல்காலும் வார்த்து,

மகிழ்: ஆகுபெயர்.

86–7. போக்கு இல் பொலங்கலம் நிறைய தர தர - ஓட்டமற்ற பொன்னாற் செய்த வட்டில் நிறையத் தரத்தர,

87 - 8. வருத்தம் வீட ஆர உண்டு பெரு அஞர் போக்கி - வழி போன வருத்தம் போம்படி நிறைய உண்டு கள்ளுண்ணப் பெறுகிலேம் என்று நெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தையும் போக்கி,

89. செருக்கொடு நின்ற காலை-மகிழ்ச்சியுடனே நான் நின்ற அந்திக் காலத்தே,

89 - 90. மற்று அவன் திரு கிளர் கோயில் ஒரு சிறை தங்கி - இங்ஙனம் மிடிதீர்ந்த பின்பு அவனுடைய செல்வம் விளங்குகின்ற கோயிலில் ஒரு பக்கத்தே கிடந்து,

அவனைச் சேவித்து நிற்கின்ற நங்குலத்திலுள்ள மகளிர் (85) பொலங்கலம் நிறைய (86) மகிழை (84) வார்த்துத் தரத்தர (87) உண்டு போக்கிக் (88) கோயிலில் ஒருசிறைத் தங்கியென முடிக்க.

91 – 2. தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது அதன் பயம் எய்திய அளவை மான - மிக்க தவத்தைச் செய்கின்ற மாக்கள் தம்

---

[1]முருகு. 15-இன் குறிப்புரையைப் பார்க்க.

முடைய தவஞ்செய்த உடம்பைப் [1]போகடாதேயிருந்து அத் தவத்தாற் பெறும் பயனைப்பெற்ற தன்மையையொப்ப,

[2]மக்களென்னாது மாக்களென்றார், வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்,

93. ஆறு செல் வருத்தம் அகல நீக்கி - வழிபோன வருத்தத்தை என்னிடத்துச் சிறிதும் நில்லாமற் போக்கி,

94 - 5. [அனந்தர் நடுக்க மல்ல தியாவதும், மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து:]

அனந்தர் நடுக்கம் அல்லது மனம் கவல்பு யாவதும் இன்றி எழுந்து - கள்ளின் செருக்காலுண்டான மெய்ந்நடுக்கமல்லது வேறு மனக்கவற்சி சிறிதுமின்றித் துயிலுணர்ந்து,

கவல்பு, கவற்சியெனப் பெயராய் நின்றது.

96. மாலை அன்னதோர் புன்மையும் - யான் அவனைக் காண்பதற்கு முன்னுளின் மாலைக்காலத்தில் என்னிடத்தில் நின்ற சொல்லிற்கெட்டாத மிடியையும்,

[3]அன்னது : நெஞ்சறி சுட்டு.

---

[1]போகடலென்பது பண்டைக்கால வழக்கு; அஃது இப்போது போடலென வழங்கும்; "மத்த ளந்தான், விண்டுக வெறிந்து போகட் டோடினன் விரைந்து வீரன்" (பிரபு. மாயைகோலா. 39)

[2]"மாவு மாக்களு மையறி வினவே", "மக்க டாமே யாறறி வுயிரே" (தொல். மரபு. சூ. 32, 33) என்பவையும், "பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்" (முல்லை. 55) என்பதில் மாக்களென்பதற்கு அறிவில்லாதோரென்றும், "மடக்குறு மாக்களோடு" (கலித். 82 : 9) என்பதற்கு, 'மடப்பத்தையுடைய சிறிய அறிவில்லாத மகளிரோடே' என்றும், "மூவறு பாடை மாக்கள்" (சீவக. 93) என்பதன் விசேட வுரையில், 'மிலேச்சராதலின் ஐயறிவிற்குரிய மாக்களென்னும் பெயராற் கூறினர்' என்றும், "கோயின் மாக்கள்" (சீவக. 1278) என்பதில், 'மக்கட்குரிய மனனின்றி அறிவு கெட்டமையின், ஐயறி வுடையாரென்று மாக்களென்றார்' என்றும் நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளும், "மக்கட் பதடி யெனல்" (குறள். 196) என்புழி, 'அறிவென்னும் உள்ளீடின்மையின் மக்கட் பதடி யென்றார்' என்று பரிமேலழகர் எழுதிய விசேட உரையும் இங்கே கோடற்குரியன.

[3] "உண்டுவைத் தனைய நீயும்" (சீவக. 271) என்பதில், 'அனைய, நெஞ்சறி பொருண்மேற்று' என்பர் ந.; "ஆடரவக் கிண்கிணிக்கா லன்னானோர் சேடனை" (தே. திருநா. ஆரூர்) என்பதில் அன்னானென்பதும் இத்தகையதே.

96 - 7. காலை கண்டோர் மருளும் வண்டு சூழ் நிலையும் மாழாந்து (95) - அவனைக் கண்ட மற்றை நாட்காலத்தில் என்னைக் கண்டவர் நெருநல் வந்தவனல்ல னென்று மருளுதற்குக் காரணமான வண்டுகள் இடையறாது மொய்க்கின்ற தன்மையையும் யான் கண்டு மயங்கி,

மாழாந்தென்பதனை இதனொடு கூட்டுக.

பல நறுநாற்றங்களும் தானுடைமையின், வண்டுசூழ் நிலை யென்றான்.

98. கனவு என மருண்ட என் நெஞ்சு ஏமாப்ப - இது கனவா யிருக்குமென்று கலங்கிய என்னுடைய நெஞ்சு நனவென்று துணிய,

99. வல் அஞர் பொத்திய மனம் மகிழ் சிறப்ப - வலிய மிடியா னுண்டாகிய வருத்தம் பொதிந்த கூட்டத்தார் மனம் மகிழ்ச்சி மிக,

100. கல்லா இளைஞர் சொல்லி காட்ட - அவற்குரிய புகழ்களைத் தாங்கள் முற்றக் கற்று என் பின்னின்ற இளையவர் அவற்றைச் சொல்லிக் காட்ட,

கல்லாவென்பது செய்யாவென்னும் எச்சம்.

இனித் தத்தம் சிறுதொழிலன்றி வேறொன்றும் கல்லாத இளைஞர் நெருநல் வந்தவன் இவனென்பது அரசனுக்குச் சொல்லிக் காட்ட வென்றுமாம்; என்றது, இவன் வேறுபாடு [1] கூறிற்றாம்.

101. கதுமென கரைந்து வம்மென கூஉய் - அதுகேட்டு அவர் களைக் கடுக அழைத்துவாருமென்று வாயிலோர்க்குக் கூறி யாங்கள் சென்றபின் தான் அணுக வாருமென்று அழைக்கையினாலே,

"ஏனோருந் தம்மென" (மதுரைக். 747) என்புழித் தம்மென்பது தாருமென நின்றாற் போல வம்மென்பது வாருமென்னும் பொருட்டாய் நின்றது.

102. அதன் முறை கழிப்பிய பின்றை - அக்காட்சியிடத்துச் செய்யும் முறைமைகளை யாங்கள் செய்து முடித்த பின்பு,

பதன் அறிந்து - காலமறிந்து,

103 - 4. துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின் பராஅரை வேவை பருகு என தண்டி - அறுகம்புல்லால் திரித்த பழுதையைத் தின்ற செம்மறிக்கிடாயினது அழகினையுடைய புழுக்கினதிற் பரிய மேற் குறங்கு நெகிழ வெந்ததனை விழுங்கென்று [2] பலகாலலைத்து,

105 –6. [காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை, ஊழின் ஊழின் வாய்வெய் தொற்றி:] காழின் கொழு ஊன் சுட்ட கொழு குறை

---

[1] "காலைக் கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலை" (பொருந. 96 - 7) என்றதைக் காண்க.

[2] "உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையி, லுண்ணாமை கோடி பெறும்" (ஔவையார் பாடல்) என்பது இங்கே நினைவிற்கு வருகின்றது.

வெய்து வாய் ஊழின் ஊழின் ஒற்றி - இருப்பு நாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரிய தசைகளின் வெம்மையை வாயிடத்தே இடத்திலும் வலத்திலும் சேர்த்தி ஆற்றித் தின்று,

107. அவை அவை முனிகுவம் எனினே - புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைச்சியையும் யாங்கள் இனி வேண்டேமென்கையினாலே,

107 - 8. சுவைய வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ - இனிமையுடையவாய் வெவ்வேறாகிய பல வடிவினையுடைய [1]பண்ணியாரம் கொண்டுவந்து அவற்றைத் தின்னும்படி எங்களை இருத்தி,

உபாயங்களாற் பண்ணுதலின், விரகென்றார்; ஆகுபெயர்.

109 – 10. [மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ், ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க:] பண் அமை சிறு யாழ் ஒள் நுதல் விறலியர் மண் அமை முழவின் பாணி தூங்க – பண் குறைவற்ற சிறிய யாழையுடைய ஒள்ளிய நுதலினையுடைய [2]விறல்படப் பாடியாடுவார் மார்ச்சனை அமைந்த முழவினது தாளத்திற்கு ஆடும்படி,

111. மகிழ் பதம் பல் நாள் கழிப்பி - மகிழ்ச்சியையுடைய கள்ளுண்டலிலே பலநாள் போக்கி,

இனி, பதம் காலமுமாம்.

111 – 2. ஒருநாள் அவிழ் பதம் கொள்க என்று இரப்ப – ஒருநாள் சோறாகிய உணவையும் கொள்வாயாக வென்று வேண்டிக் கொள்கையினாலே,

112 – 4. முகிழ் தகை முரவை போகிய முரியா அரிசி விரல் என நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல் - முல்லை முகையின் தகைமையினையுடைய வரியற்ற இடைமுரியாத அரிசி விரலென்னும்படி நெடுகின ஒன்றோடொன்று சேராத சோற்றையும்,

பழுத்த அரிசியை ஆக்கினமை தோன்ற நிரலமை புழுக்கலென்றார்.

115 - 6. பரல் வறை கருனை [3]காடியின் மிதப்ப அயின்ற காலை- பரலைப் பொரித்து அதனோடே கூட்டிய பொரிக் கறிகளையும் கழுத்திடத்தே வந்து நிரம்பும்படி விழுங்கின காலத்தே,

இனி, காடியைப் புளிங்கறியாக்கிப் புளிங்கறியோடே நிரம்ப விழுங்கின காலையென்றும் உரைப்பர்.

116. பயின்று இனிது இருந்து - அவனை விடாதே இனிதாக இருந்து,

---

[1] (பி - ம்.) 'பண்ணிகாரம்'

[2] விறலை வடநூலார் சத்துவமென்பர்.

[3] காடி கழுத்தென்பதை, "காடி யிழந்து கவந்தமதாய்" (கந்த. சூரபன்மன்வதை. 136) என்பதனாலும் உணர்க.

117 - 8. [கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே, எல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி:] பல்லே கொல்லை உழு கொழு ஏய்ப்ப எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்கி - எம்முடைய பற்கள் கொல்லை நிலத்தே உழுத கொழுவை யொப்பப் பகலும் இரவும் இறைச்சியைத் தின்று முனை மழுங்கி,

119. உயிர்ப்ப இடம் பெருஅது ஊண் முனிந்து - இளைப்பாற இடம் பெருதே இவ்வுணவுகளை வெறுத்து,

முற்கூறியனவெல்லாம் உண்டற்ருெழிற்கு உரிமையுடைமை யின், ஊண் முனிந்தென்ருர்.

119 - 22. [ஒருநாட், செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய, செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கிளந்தன மாக:]

செயிர்த்து எழு தெவ்வர் திறை துறை போகிய செல்வ - குற்றத் தைச் செய்தெழுந்த பகைவரைத் திறைகொள்ளும் கூறுபாடு களெல்லாம் முடியப்போன செல்வா,

பெயர்ந்து எம் தொல் பதி சேறும் என மெல் என ஒரு நாள் கிளந்தனம் ஆக - இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வே மென்று மெத்தென ஒரு நாளிலே சொன்னேமாக,

தொல்பதி யென்ருர், இதுவும் தமக்குப் பதி என்பது தோன்ற.

122 - 4. [வல்லே, அகறி ரோவெம் மாயம் விட்டெனச், சிறறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு:] சிறறியவன்போல் செயிர்த்த நோக்கமொடு எம் ஆயம் விட்டு வல்லே அகறிரோ என - அது கேட்டுக் கோபித்தான்போல எமக்கு வருத்தத்தைச் செய்த பார்வை யுடனே எம் திரளைக் கைவிட்டு விரைந்து போகின்றிரோ எனச் சொல்லி,

125 - 6. [துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு, பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென:]

[1] பிடி புணர் வேழம் அடி துடி அன்ன தூங்கு நடை குழவியொடு கொள்க என - பிடியொடு புணர்ந்த களிறுகளைத் தம் அடிகள் துடியின் கண்ணை யொத்த அசைந்த நடையினையுடைய கன்று களுடனே கைக்கொள்வாயாக என்று சொல்லி,

127. [தன்னறி யளவையிற் றரத்தர:] பெட்டவை (126) தன் அறி அளவையின் தர தர - பின்னும் தான் விரும்பியிருந்த ஊர்திகள் ஆடைகள் அணிகலங்கள் முதலியவற்றைத் தான் அறிந்த அளவாலே மேன்மேலே தர,

---

[1] பரிசிலர்க்குக் களிற்ருேடு கன்றையும் பிடியையும் வழங்குதல் பண்டைக்கால வழக்கம்; "மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்ருெடு, கறைபடி யானை யிரியல் போக்கும், மலைகெழு நாடன் மாவே ளாஅய்" (புறநா. 135 :11 - 3)

127 - 8. யானும் என் அறி அளவையின் வேண்டுவ முகந்து கொண்டு - யானும் என்னுடைய குறைகளை யானறிந்த அளவாலே வேண்டுவனவற்றை வாரிக்கொண்டு,

129. இன்மை தீர வந்தனென் - மிடி எக்காலமும் இல்லையாம் படி வந்தேன்;

யானும் அவன் (64) வரைப்பின் (65) வாயிற்கண்ணே (66) புக்கு என் இடும்பை தீர்தல்காரணமாக (67) எய்யேனாகி (68) விடியற் காலத்தே (72) ஒன்று யான் பெட்டா அளவையிற் (73) கொளல் வேண்டிக் (74) கூறி (75) இருத்தி (76) நோக்கத்தாலே (77) குளிர் கொளுத்திச் (78) சிதார் நீக்கித் துவர (81) நல்கி (83) மகளிர் (85) மகிழை (84) வார்த்துத் தரத்தர (87) உண்டு போக்கி (88) நின்றகாலைத் (89) தங்கி (90) நீக்கி (93) எழுந்து (95) ஏமாப்பச் (98) சொல்லிக் காட்டக் (100) கூவுகையினாலே (101) கழிப்பிய பின்றைத் (102) தண்டி (104) ஒற்றி (106) வேண்டேமென்கை யினாலே (107) இரீஇத் (108) தூங்கக் (110) கழிப்பி (111) இரப்ப (112) அயின்ற காலத்திலே இருந்து (116) மழுங்கி (118) முனிந்து (119) சேறுமென (121) ஒருநாட் (119) கிளந்தனமாக (122) அகறிரோவெனச் சொல்லித் (123) தரத்தர யானும் (127) தவஞ் செய் மாக்கள் (91) அதன் பயமெய்திய அளவை மான (92) வேண்டுவ முகந்துகொண்டு (128) அரசவையிருந்த தோற்றம் போல (55) இன்மை தீர வந்தனெ னென வினைமுடிக்க.

129 - 30. வென் வேல் உருவம் பல் தேர் இளையோன் சிறுவன்– வென்ற வேலினையுடைய அழகினையுடைய பல தேரினையுடைய இளஞ்சேட் சென்னியுடைய புதல்வன்,

வென்ற வேற்புதல்வன்.

131. முருகன் சீற்றத்து உரு கெழு குருசில் - முருகனது சீற்றம் போலும் சீற்றத்தையுடைய உட்குதல் பொருந்திய தலைவன்,

132. தாய் வயிற்று இருந்து தாயம் எய்தி பிறந்து (137) - தாயு டைய வயிற்றிலேயிருந்து அரசவுரிமையைப் பெற்றுப் பிறந்து,

[1] தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையினாலே அரசவுரிமையைப் பெற்றுப் பிறந்தென்றார்.

133. எய்யா தெவ்வர் ஏவல் கேட்ப - முன்பு தன் வலி அறியாத பகைவர் பின்பு தன் வலியினை அறிந்து ஏவின தொழிலைச் செய்ய,

---

[1] கோச்செங்கட் சோழரும் பிறக்கின்ற காலத்துப் பிறவாது நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயினுடைய வயிற்றிலேயிருந்து பிறந்தாரென்றும், அக்காரணத்தால் அவர் சிவந்த கண்ணையுடைய ராயினரென்றும் கூறுவர்; இத்தகையோரை, "கருவிலே திருவுடையவர்" என்பர்.

134. செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப - ஏவல் செய்யாத பகைவர் தேசம் மனக்கவற்சி பெருக,

135 - 6. [1] [பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி, வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்கு :] வெ வெ செல்வன் பௌவம் மீமிசை பகல் கதிர் பரப்பி விசும்பு படர்ந்தாங்கு - வெம்மையை யுடைய [2] எல்லாரும் விரும்பப்படும் இளஞாயிறு கடலின்மீதே பகற்பொழுதைச் செய்யும் கிரணங்களைப் பரப்பிப் பின்னர் விசும்பிலே மெத்தெனச் சென்றாற்போல,

137. [பிறந்துதவழ் கற்றதற் றொட்டு :]

தவழ் கற்றதன் தொட்டு - தவழ்தலைக் கற்ற நாள் தொடங்கி.

பிறந்து, முன்னே கூட்டிற்று.

137 - 40. [சிறந்தநன், நாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப, ஆளி நன்மா னணங்குடைக் குருளை, மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி :]

மீளி மொய்ம்பின் மிகு வலி செருக்கி (140) - [3] கூற்றுவனுடைய வலியிற் காட்டில் மிகுகின்ற வலியாலே கலித்து.

செல்வன் விசும்பு படர்ந்தாங்குத் (136) தவழ் கற்றதற்றொட்டு (137) மிகுகின்ற வலி (140) யென்க.

இவன் பின்பு அரசாட்சி பெற்றானாதலின், தவழ் கற்றதற் றொட்டு நாடு செகிற் கொண்டானென்றல் பொருந்தாமை உணர்க.

சிறந்த நல் (137) நாடு செகில் கொண்டு நாள் தொறும் வளர்ப்ப (138) - [4] ஏனையோர் நாட்டிற் சிறந்த நன்னாட்டைத் தோளிலே வைத்துக்கொண்டு நாடோறும் வளர்த்தல் காரணமாக,

தோள்வலியாலே பகைவென்று நாடுகாத்தமைபற்றி, நாடு செகிற் கொண்டென்றார்.

141. [முலைக்கோள் விடாஅ மாத்திரை :] ஆளி நல் மான் அணங்கு உடை குருளை (139) முலை கோள் விடாஅ மாத்திரை - ஆளி

---

[1] "பொருகடற் பருதி போலப் பொன்னனான் பிறந்த போழ்தே, மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே" (சீவக. 304) என்பதும், 'ஞாயிறு தோற்றத்தில் இருளைப் போக்கிப் பின் மதியத்தைக் கெடுக்குமாறு போல, இவனும் பிறந்தபொழுதே தேவியிருளைப் போக்கிப் பின்பு பகைவெல்லுமென்பது கருத்து' (ந.) என்ற அதன் விசேடவுரைப் பகுதியும் இங்கே கோடற்குரியன.

[2] " வெம்புஞ் சுடரிற் சுடருந்திரு மூர்த்தி" (சீவக. 2)

[3] " தோற்ற நிகர்ப்போ ரின்றி யாற்றல், காலனோ டொக்கு ஞாலப் பெரும்புகழ், புகரின் றோங்கிய நிகரில் கேள்வியன்" (பெருங். 1. 36 : 100 - 102)

[4] புறநா. 35, 11.

யாகிய நல்ல மானினது வருத்துதலையுடைய குருளை முலையை யுண்டலைக் கைவிடாத இளைய பருவத்தே,

யாளியை ஆளியென்றார்,"கடிசொ லில்லை"(தொல். எச்ச. சூ.56) என்பதனன். "நாயே பன்றி" (தொல். மரபு. சூ. 8) என்னும் சூத்திரத்து, 'ஆயுங்காலை' என்பதனாற் குருளையென்பது முடித்தாம்.

141. ஞெரேரெனை – கடுக,

142. தலை கோள் வேட்டம் களிறு அட்டாங்கு - முற்பட இரையைக் கோடற்குக் காரணமான வேட்டையிலே களிற்றைக் கொன்றாற் போல,

143. [1] இரு பனம்போந்தை தோடும் - கரிய பனங்குருத்தில் அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும்,

"தோடே மடலே" (தொல். மரபு. சூ. 86) என்னும் சூத்திரத்து, 'பிறவும்' என்றதனாற் போந்தை முடித்தாம். அதனிடத்தினின்றும் போந்ததனாற் போந்தையென்றார்; "இரும் பனைக் கொண்டு கடைகழுமிய வடங்குசிறை வலனகலத்து" என்றார் பிறரும்.

143 – 4. [கருஞ்சினை, அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும் :]

கரு சினை வேம்பின் அரம் வாய் அம் குழை தெரியலும் - கரிய கொம்பினையுடைய வேம்பினுடைய [2] வாளரத்தின் வாய்போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற் செய்த மாலையும்,

145 - 6. ஓங்கு இரு சென்னி மேம்பட மிலைந்த இரு பெரு வேந்தரும் ஒரு களத்து அவிய - நறிய மாலைகளில் மேலாதற்குக் காரணமான பெரிய தலையிலே ஏனையோர் சூடும் அடையாளப் பூக்களிற் சிறப்ப அவற்றைச் சூடிய சேரனும் பாண்டியனும் ஒரு களத்தே படும்படி,

147 - 8. [3] வெண்ணி தாக்கிய வெருவரு நோன் தாள் கண் ஆர்

---

[1] "மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇ". "வட்கர் போகிய வளரிளம் போந்தை, உச்சிக் கொண்ட ஊசிவெண் டோடு...... விரைஇ" (புறநா. 22 : 21, 100 : 3 - 5); "வட்கர் போகிய வான் பனந் தோட்டுடன்......சூட்டி" (சிலப். 25 : 146 – 7.)

[2] வாளரம் - ஒருவகை அரம் ; "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த" (அகநா. 24 : 1); "வாளரந் துடைத்த வைவேல்" (சீவக. 461.)

[3] கரிகாற் பெருவளத்தான் வெண்ணிப் பறந்தலையிற் பொருதமை, "கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப், பொருதுபுண் ணாணிய சேர லாதன்", "காய்சின முன்பிற் பெரும்பெயர்க் கரிகால், ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற், சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின், இமிழிசை முரசம் பொருகளத் தொழியப், பதினொரு வேளிரொடு வேந்தர் சாய, மொய்வலி யறுத்த ஞான்றை" (அகநா. 55 : 10 - 11, 246 : 8 - 13) என்பவற்றால் அறியலாகும்.

கண்ணி கரிகால் வளவன் - [1] வெண்ணி என்கின்ற ஊரிடத்தே பொருத அச்சந் தோன்றுகின்ற வலியையுடைய முயற்சியையும் [2] கண்ணுக்கு அழகு நிறைந்த ஆத்தி மாலையினையும் உடைய கரிகாற் சோழன்,

[3] " முச்சக் கரமும் " என்னும் கவியானே கரிகாலாதல் உணர்க.

தாயமெய்திப் (132) பிறந்து (137) மிகுவலி செருக்கித் (140) தெவ்வர் ஏவல் கேட்பச் (133) செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப (134) நாடு செகிற்கொண்டு நாடொறும் வளர்த்தல் காரணமாகக் (138) குருளை (139) களிறட்டாங்கு (142) இருபெரு வேந்தரும் அவியத் (146) தாக்கிய (147) கரிகால் வளவனென முடிக்க.

149 - 50. [தாணிழன் மருங்கி லணுகுபு குறுகித், தொழுது :] [4] நிழல் மருங்கில் தாள் அணுகுபு குறுகி தொழுது - அருளைத் தன்னிடத்திலேயுடைய திருவடிகளை அண்ணிதாக நின்று சேர்ந்து வணங்கி,

150. முன் நிற்குவிராயின் - நும்முடைய வறுமை தோன்ற முன்னே நிற்பீராயின்,

150 - 51. [பழுதின், றீற்று விருப்பிற் போற்றுபு நோக்கி :] ஈற்று ஆ விருப்பின் பழுது இன்று போற்றுபு நோக்கி - ஈற்றுத் தொழிலையுடைய பசு தனது கன்றக்குப் பால்சுரந்து கொடுக்க வேண்டுமென்னும் விருப்பம்போல நும்மிடத்து நிற்கின்ற மிடி இன்றும்படி பேணிப் பார்த்து,

151 - 2. நும் கையது கேளா அளவை - நும்மிடத்துள்ள கலையைத் தான் கேட்பதற்கு முன்னே,

152. [5] ஒய்யென - கடுக,

153 - 4. பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னல் சிதாஅர் நீக்கி - கொட்டைப் பாசியினது வேர்போலே அழுக்கோடே குறைந்த தையலையுடைய துணிகளைப் போக்கி,

154 - 5. தூய [6] கொட்டை கரைய பட்டு உடை நல்கி - தூய வாகிய திரள முடிந்த முடிகளைக் கரையிலேயுடைய பட்டாகிய உடைகளைத் தந்து,

---

[1] (பி - ம்) 'வெண்ணில்'

[2] " கண்ணூர்ந்த நலத்தாரை - கண்ணுக்கு நிறைந்த நலத்தை யுடைய மகளிரை " (கலித். 60. 5, ந.)

[3] இக்கவியைப் பொருநராற்றுப்படை உரையின் இறுதியிற் காண்க.

[4] நிழல் - அருள் ; " புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை " (பட். 204) என்ற அடியின் உரையில் நிழலென்பதற்கு அருளென்றே பொருளெழுதுவர் ; ந.

[5] " ஒய்யென - விரைய " முல்லை. 83. ந ; கலித். 37 : 18, ந.

[6] " கொட்டையம் புரோசை - தலையில் மணிமுடியையுடைய புரோசைக் கயிற்றை " (சீவக. 1835, ந.)

கொட்டை - தும்புமாம்.

156. பெறல் அரு கலத்தின் பெட்டாங்கு உண்க என - பெறுதற்கரிய பொற்கலத்தே விரும்பினபடியே உண்பாயாக வென்று சொல்லி,

157 - 8. [பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர, வைகல் வைகல் கைகவி பருகி :] பூ கமழ் கை கவி தேறல் வாக்குபு தர தர வைகல் வைகல் பருகி - [1] திம் பூ நாறுகின்ற தன் கடுமையாற் சிறிதமையு மென்று [2] கைகவித்தற்குக் காரணமான கட்டெளிவை மேன்மேலே வார்த்துத் தரத்தர நாடோறும் நாடோறும் பருகி,

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" (புறநா. 392 : 16) என்றார் பிறரும்.

159. எரி அகைந்தன்ன ஏடு இல் தாமரை - நெருப்புத் தழைத்தாலொத்த ஒருவன் செய்ததன்றித் தனக்கென இதழில்லாத தாமரையை.

எனவே பொற்றாமரைக்கு வெளிப்படை கூறினார். "தோடே மடலே" (தொல். மரபு. சூ. 86) என்னும் சூத்திரத்தே கூறினும்.

160. சுரி இரு பித்தை பொலிய சூட்டி - கடைகுழன்ற கரிய மயிரிலே பொலிவுபெறச் சூட்டி,

161 - 2. நூலின் வலவா நுணங்கு அரில் மாலை வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய - நூலாற் கட்டாத நுண்மையையும் பிணக்கத்தையுமுடைய பொன்னரி மாலையை வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தத்தோடே பாடினி சூட,

163. கோட்டின் செய்த கொடுஞ்சி நெடு தேர் - யானைக் கொம்பாற் செய்த தாமரை முகையினையுடைய நெடிய தேரிலே,

164. ஊட்டு உளை துயல்வர ஓரி நுடங்க - சாதிலிங்கம் ஊட்டின தலையாட்டம் பொங்கக் கழுத்தின் மயிர் அசைய,

165. பால்புரை புரவி நால்கு உடன்பூட்டி - பாலையொத்த நிறத்தினையுடைய குதிரைகள் நான்கினைச் சேரப் பூட்டி,

நான்கு, நால்கெனப் பெயர்த்திரிசொல்.

166. காலின் ஏழடி பின் சென்று - தான் காலாலே ஏழடி பின்னே வந்து,

[3] ஏழடி வருதல் ஒரு மரபு, ஏழிசைக்கும் வழிபாடு செய்தானைக் கருதுதலின்.

---

[1] திம்பூ - பஞ்சவாசத்துள் ஒன்றான குங்குமப் பூ.

[2] 'கைகவி நறுநெய் - கைகவித்தற்குக் காரணமான நெய்' (சீவக. 400, ந.)

[3] "ஒன்பதின்சா ணடப்பினும்" (சீவக. 179) என்றதன் விசேட வுரையில், 'ஏழடியென்றல் மரபாயிருக்க, ஒரு காதமென்னுமெழுத்து நோக்கி, ஒன்பதின் சாணென்றாரேனும் அடியிடுமளவில் ஏழாம்' (ந.)

"செலவினும் வரவினும்" (தொல். களவி. சூ. 28) என்னும் சூத்திரத்துப் பொதுவிதியாற் சென்றென்பது வந்தென்னும் பொருட்டாய் நின்றது.

166 – 7. [கோலின், தாறுகளைந்து:] இன் தாறு கோல் களைந்து-செலுத்துதற்கு இனிதாகிய செலவு முடுக்கும் கோலைப் போக்கி,

என்றதனாற் கடுவிசைக்கு இவர் இருத்தலாற்றாரென்று கருதி இயற்கையிற் சேறல் அமையுமென்றான்.

167. ஏறு என்று ஏற்றி - இங்ஙனம் ஏறென்று ஏறவிட்டு,

167 – 8. வீறு பெறு பெரு யாழ் முறையுளி கழிப்பி-ஏனை யாழ் களின் வீறுபெற்ற யாழ்ப்பாணர்க்குக் கொடுக்கும் முறைமைகளை நினக்குத் தந்துவிட்டு,

168 - 70. நீர் வாய் தண் பணை தழீஇய தளரா இருக்கை நல் பல் ஊர நாட்டொடு - நீரை எப்பொழுதும் தன்னிடத்தே உடைத் தாகிய தண்ணிய மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்பினை யுடைய நன்றான பல ஊர்களையுடைய நாடுகளுடனே,

170 - 72. [நன்பல், வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை, வெருவரு செலவின் வெகுளி வேழம்:]

பறை வெரூஉ நுவலும் (171) வேழம் (172) - பறை எல்லார்க்கும் அச்சத்தைச் சாற்றுதற்குக் காரணமாகிய யானை,

பரூஉ பெரு தட கை (171) வெரு வரு செலவின் வெகுளி (172) நல் பல் (170) வேழம் (172) – பருத்த பெரிய வளைவினையுடைய கையினையும் அச்சந் தோன்றும் ஓட்டத்தினையும் கோபத்தினையு முடைய நன்றாகிய பல யானைகள்,

173. தரவு இடை தங்கல் ஓவிலன் - தருதற்றொழிலிடத்தே நிலை பெறுதலை ஒழிதலிலன்;

இனித் தரவிடத்துத் தாழ்த்தலில னென்றுமாம்.

173 - 4. வரவிடை பெற்றவை பிறர் பிறர்க்கு ஆர்த்தி - வருத விடத்துப் பெற்ற பொருள்களைப் பிறர்க்கு பிறர்க்குக் கொடுத்து,

174 - 5. தெற்றென செலவு கடைக்கூட்டுதிர் ஆயின் - கடுக அவனிடத்து நின்றும் போகின்ற போக்கை முடிவு போக்குவீராயின்,

175. பல புலந்து - அது பொறாமற் பலகாலும் வெறுத்து,

176. நில்லா உலகத்து நிலைமை தூக்கி - செல்வமும் யாக்கையும் முதலியன நிலைநில்லாத உலகத்துப் புகழைச் சீர்தூக்கிப் பார்த்து,

---

என்றெழுதியிருப்பதும், "ஏழுமேழடி யூக்கி நடந்து செலா" (சீவக. 1384), "ஏழடி யெழுத லாற்றா தாயினும்" (பெருங். 1. 53: 132) என்பவையும் இம்மரபைப் புலப்படுத்தும்.

[1] நிலைபெறுந் தகைமை யுடைத்தாகலிற் புகழை நிலைமை யென்றார்; ஆகுபெயர்.

177. செல்க என - இங்ஙனம் போகெனக் கூறி,

விடுக்குவன் அல்லன் - நும்மைக் கடுக விடுவானல்லன்;

தொழுது முன்னிற்குவிராயின் (150) நோக்கி (151) நல்கிப் (155) பாடினி அணியாசிறகச் (162) சூட்டி (160) வாக்குபு தரத்தரப் (157) பருகித் (158) தெற்றெனச் (174) செலவு கடைக்கூட்டுதிராயின் அதற்குப் பல புலந்து (175) தேரிலே (163) குதிரையைப் பூட்டி (165) ஏற்றி (167) முறையுளிக் கழிப்பி (168) விடுக்குவனல்லன் (177); பின்னர் நின்னை நோக்கி நில்லாத உலகத்து நிலைமையைச் சீர்தூக்கி (176) வரவிடைப் (173) பெற்றவை பிறர் பிறர்க்கு ஆர்த்தி (174) இங்ஙனஞ் செல்வாயாக வெனக் கூறி (177) அங்ஙனம் நீ போதற்கு நாட்டொடு (170) வேழம் (172) தரவிடைத் தங்கல் ஓவிலன் (173) என முடிக்க.

நில்லாவுலகத்து நிலைமை தூக்கிப் (176) பலபுலந்து (175) செல்கென விடுக்குவனல்லன் (177) என்பாருமுளர்.

177 - 9. ஒல்லெலன திரை பிறழிய இரு பௌவத்து கரை சூழ்ந்த அகல் கிடக்கை மண் மருங்கினுள் (227) நாடு (248) - ஒல்லென்னும் ஓசைபடத் திரைமறிந்த கரிய கடலினது கரைசூழ்ந்த அகன்ற பரப்பினையுடைய இவ்வுலகத்து ஒரு கூற்றின்கண் உளதாகிய சோழநாடு,

180 - 82. [மாமாவின் வயின்வயினெற், றாழ்தாழைத் தண் டண்டலைக், கூடுகெழீஇய குடிவயினான் :]

மா மாவின் வயின் வயின் நெல் கூடு கெழீஇய நாடு (248) - ஒரு மாநிலத்தில் ஒரு மாநிலத்தில் திடர்தோறும் திடர்தோறும் நெற் கூடுகள் பொருந்தின சோழநாடு,

[2] தாழ் தாழை தண் தண்டலை குடிவயினான் - தாழ்ந்த தெங்கினையுடைய குளிர்ந்த மரச்சோலைகளில் இருக்கின்ற குடிமக்களிடத்தில்,

183 - 4. செ சோற்ற பலி மாந்திய கரு காக்கை - உதிரத்தாற் சிவந்த சோற்றையுடையவாகிய பலியை விழுங்கின கரிய காக்கை,

184 - 6. [கவவுமுனையின், மனைநொச்சி நிழலாங்கண், ஈற்றி யாமை தன் பார்ப்போம்பவும்:] மனை நொச்சி நிழல் ஆங்கண் ஈற்று

---

[1] "மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே", "தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே" (புறநா. 165: 1 - 2, 366: 5); "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்" (குறள். 233), "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக" (நான்மணிக். 15) என்பவையும், புறநானூறு, 165: 2 - 3-ஆம் அடிகளின் அடிக்குறிப்பும் இங்கே கருதற்பாலன.

[2] இதுமுதல் திணைமயக்கம் கூறப்படுகிறது.

யாமை தன் பார்ப்பு கவவு முனையின் ஓம்பவும் - மனையைச் சூழ்ந்த நொச்சியின் நிழலிடத்துக் கிடந்த ஈற்றுத் தொழிலையுடைத்தாகிய யாமையினுடைய பார்ப்பைத் தான் தின்றலை வெறுத்ததாயின் அதனைப் பின்பு பசித்த காலத்துத் தின்பதாகப் பாதுகாத்து வைப்பவும்,

எனவே, மருத நிலத்தில் இருக்கும் காக்கை நெய்தல் நிலத்துப் பார்ப்பைத் தின்னும் என்றார்.

"தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" (தொல். மரபு. சூ 5) என்பதனாற் பார்ப்பென்றார்.

187. இளையோர் வண்டல் அயரவும் - அவ்வுழவர் மகளிர் நெய்தல் நிலத்தின் மணற்குன்றிலே வண்டலிழைத்து விளையாடவும்,

187-8. [முதியோர், அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்:] பகை முதியோர் அவை புகு பொழுதில் தம் முரண் செலவும் - பகைமை முதிர்ந்தோர் தனது அரசவையிற் சென்று புகுங் காலத்துத் தம் மாறுபாட்டைப் போக்கும்படியாகவும், பெரிதாண்ட (229) என மேலே கூட்டுக.

என்றது,[1] வழக்கு மாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறுப்ப னென்றவாறு; [2] "உரைமுடிவு காணான்" (21) என்னும் பழமொழி கூறினார்.

189 - 92. [முடக்காஞ்சிச் செம்மருதின், மடக்கண்ண மயி லாலப், பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனிமாந்தி:] பை பாகல் பழம் செ சுளைய துணரிய கனி மாந்தி முடம் காஞ்சி செ மருதின் மட கண்ண மயில் ஆல - பசிய பாகற்பழத்தையும் சிவந்த சுளையையுடையவாகிய குலை கொண்ட பலாப் பழத்தையும் தின்று வளைவையுடைய காஞ்சிமரத்திலும் செவ்விய மருதிலும் இருந்த

---

[1] "இளமை நாணி முதுமை யெய்தி, உரைமுடிவு காட்டிய வுரவோன்" (மணி 4: 107 - 8)

[2] "உரைமுடிவு காணா னிளமையோ னென்ற, நரைமுது மக்க ளுவப்ப - நரை முடித்துச், சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை, கல்லாமற் பாகம் படும்" என்பது பாட்டு; 'தம்முள் மறுதலை யாயினார் இருவர் தமக்கு முறைமை செயவேண்டி வந்து சில சொன்னால் அச்சொல் முடிவுகண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தானென்றிகழ்ந்த நரைமுது மக்கள் உவக்கும் வகை நரை முடித்துவந்து முறைவேண்டி வந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தான் என்னுஞ் சோழன்; ஆதலால், தத்தங்குலத்துக்குத் தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம்பாக முளவா மென்றவாறு' என்பது இதனுரை.

மடப்பத்தைத் தம்மிடத்தே உடையவாகிய பெடைமயில்கள் ஆரவாரித்து அழைக்கும்படி அங்குநின்றும் போந்து.

193 - 213. [அறைக்கரும்பி னரிநெல்லின், இனக்களம ரிசை பெருக, வறளடும்பி னிவர்பகன்றைத், தளிர்ப்புன்கின் றாழ்காவில், நனைஞாழலொடு மரங்குழீஇய, அவண்முனையி னகன்றுமாறி, அவிழ்தளவி னகன்றோன்றி, நகுமுல்லை யுகுதேறுவீப், பொற் கொன்றை மணிக்காயா, நற்புறவி னடைமுனையிற், சுறவழங்கு மிரும்பௌவத், திறவருந்திய வினநாரை, பூம்புன்னைச் சினைச் சேப்பின், ஓங்குதிரை யொலிவெரீஇத், தீம்பெண்ணை மடற் சேப்பவும், கோட்டெங்கின் குலைவாழைக், கொழுங்காந்தண் மலர் நாகத்துத், துடிக்குடினைக் குடிப்பாக்கத், தியாழ்வண்டின் கொளைக்கேற்பக், கலவம் விரித்த மடமஞ்ஞை, நிலவெக்கர்ப் பல பெயர:]

யாழ் வண்டின் கொள்ளைக்கு ஏற்ப (211) கலவம் விரித்த மடமஞ்ஞை (212) நிலவு எக்கர் பல பெயர (213) - [1] யாழோசை போலும் வண்டினது பாட்டினைக் கேட்டு அதற்குப் பொருந்தத் தோகையை விரித்த அறியாமையையுடைய மயில் நிலவுபோலும் இடுமணலிலே பல பகுதிப்பட ஆடவும்,

பெடை தங்குகின்ற மருதநிலத்தை விட்டுப் பாட்டைக் கேட்டு நெய்தல் நிலத்தே போந்தமைபற்றி மடமஞ்ஞை யென்றூர்.

அகவர் (220) அறை கரும்பின் அரி நெல்லின் (193) இனம் களமர் இசைபெருக (194) வறள் அடும்பின் இவர் பகன்றை (195) தளிர் புன்கின் தாழ் காவின் (196) நனை ஞாழலொடு மரம் குழீஇய (197) அவண் முனையின் அகன்று மாறி (198) நீல் நிறம் முல்லை பல் திணை நுவல (221) - நாட்டில் வாழ்வார் அறுத்தலைச் செய்யும் கரும்பின் கண்ணும் அரிகின்ற நெல்லின்கண்ணும் எழுப்பின திரண்ட களமருடைய ஓசை மிகுகையினாலே நீரற்ற இடத்திலெழுந்த அடும் பினையும் படர்கின்ற பகன்றையினையும் தளிரையுடைத்தாகிய புன்கினையும் தாழ்ந்த சோலைகளையுமுடையதாய் அரும்பின ஞாழ லோடே ஏனை மரங்களும் திரண்ட அந்நாட்டை வெறுத்தார்க ளாயின் அவ்விடத்தை நீங்கி நெஞ்சாலே கைவிட்டு நீல நிறத்தை யுடைய முல்லைக்கொடி படர்ந்த பல காட்டு நிலத்தே சென்று அந்நிலத்தைக் கொண்டாடவும்,

அகவர் (220) இசைபெருக (194) முனையின் அகன்று மாறிப் (198) பஃறிணை நுவல (221) என முடிக்க.

---

[1] "மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய", "பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய" (மணி. 4: 4, 19: 58); "வண்டொடு, திருந்தியாழ் முரல்வதோர் தெய்வப் பூம்பொழில்" (சீவக. 1936)

கானவர் (220) அவிழ் தளவின் அகல் தோன்றி (199) நகு முல்லை வீ உகு தேறு (220) பொன் கொன்றை மணி காயா (201) நல் புறவின் நடை முனையின் (202) மருதம் பாட (220) - முல்லை நிலத்து வாழ்வார் அவிழ்கின்ற தளவினையும் பரந்த தோன்றியினையும் அலர்கின்ற முல்லையினையும் பூ உகுகின்ற தேற்றுவினையும் பொன் போலும் பூவினையுடைய கொன்றையினையும் நீலமணிபோலும் பூவினையுடைய காயாவினையுமுடைய நல்ல காட்டில் உறைகின்ற ஒழுக்கத்தை வெறுக்கின் மருத நிலத்தே சென்று அவ்வொழுக்கத்தைப் புகழவும்,

[1]தளவு - முல்லை விசேடம்.

சுற வழங்கும் இரு பௌவத்து (203) இறவு அருந்திய இனம் நாரை (204) பூ புன்னை சினை சேப்பின் (205) ஓங்கு திரை ஒலி வெரீஇ (206) தீ பெண்ணை மடல் சேப்பவும் (207) - சுறாத் திரியும் கரிய கடலின்கண் இறவைத் தின்ற திரண்ட நாரைகள் பூக்களையுடைய புன்னைக்கோட்டிலே தங்கின் அதன்மேலே முரிகின்ற உயர்ந்த திரையினது ஆரவாரத்திற்கு வெருவி மருதநிலத்தில் இனிய பனையினது மடலிலே தங்கவும்,

கோள் தெங்கின் குலை வாழை (208) கொழு காந்தள் மலர் நாகத்து (209) துடி குடிஞை குடி பாக்கத்து (210) பரதவர் (218) அவண் முனையின் (198) குறிஞ்சி பாட (218) - குலைகொண்ட தெங்கினையும் குலையினையுடைய வாழையினையும் கொழுவிய காந்தளினையும் மலர்ந்த சுரபுன்னையினையும் துடியோசை போலும் ஓசையினையுடைய பேராந்தையினையுமுடைய குடியிருப்பையுடைத்தாகிய பாக்கத்தில் வாழும் பரதவர் அவ்விடத்தை வெறுப்பின் குறிஞ்சி நிலத்தே சென்று அவ்விடத்தைப் புகழவும்,

214 - 5. தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யொடு நறவு மறுகவும் - [2]தேனாகிய நெய்யோடே கிழங்கையும் விற்றவர்கள் மீனினது நெய்யோடே நறவையும் கொண்டு போகவும்,

216 - 7. தீ கரும்போடு அவல் வகுத்தோர் மான் குறையொடு மது மறுகவும் - இனிய கரும்போடே அவலைக் கூறுபடுத்தி விற்றவர்கள் மானினது தசையோடே கள்ளையும் கொண்டு போகவும்,

218 - 9. [குறிஞ்சி பரதவர் பாட நெய்தல், நறும்பூங் கண்ணி குறவர் சூட:]

குறவர் நெய்தல் நறு பூ கண்ணி சூட - குறவர் அந்நிலத்துப் பூக்களை வெறுக்கின் நெய்தலினது நறிய பூவாற்செய்த கண்ணியைச் சூடவும்,

---

[1]"தளவம் - செம்முல்லை" (குறிஞ்சிப். 80, ந)

[2]"தேனெய் தோய்ந்தன" (சீவக. 2747); தேன் நெய்யென்றும் வழங்கும். தேனை வடிகட்டுதற்குக் கருவியாயிருத்தலின் பன்னாடை நெய்யரியெனப் பெயர் பெற்றது.

220-22. [கானவர் மருதம் பாட வகவர், நீனிற முல்லைப் பஃறிணை நுவலக், கானக்கோழி கதிர்குத்த:]

கானம் கோழி கதிர் [1]குத்த - காட்டிடத்துக் கோழிகள் நெற் கதிரைத் தின்னவும்,

223. மனை கோழி தினை கவர - மருத நிலத்தின் மனையிற் கோழிகள் தினையைத் தின்னவும்,

224. வரை மந்தி கழி மூழ்க - மலையிடத்திற்குரிய மந்திகள் கழியிலே மூழ்கவும்,

225. கழி நாரை வரை யிறுப்ப - கழியில் திரியும் நாரைகள் மலையிலே கிடக்கவும்,

226. தண் வைப்பின் நால் நாடு குழீஇ - குளிர்ந்த வைப்புக்களை யுடைய நான்கு கூறுகிய நாடுகள் திரண்டு,

நால் நாடென்றார், "நடுவ ணைந்திணை நடுவண தொழிய" (தொல். அகத். சூ. 2) என்னும் சூத்திரத்தால்.

குழீஇயென்னும் செய்தெனெச்சம் பிறவினை கொண்டது, "அம் முக் கிளவியும்" (தொல். வினை. சூ. 34) என்னும் சூத்திரவிதியால்.

பார்ப்போம்பவும் (186) அயரவும் (187) மயிலால (190) மடமஞ்ஞை (212) பலபெயரவும் (213) நாரை (204) சேப்பவும் (207) அகவர் (220) அகன்று மாறிப் (198) பஃறிணை நுவலவும் (221) கானவர் (220) நடைமுனையின் (202) மருதம் பாடவும் (220) பாக்கத்துப் (210) பரதவர் குறிஞ்சி பாடவும் (218) கிழங்கு மாறியோர் (214) நறவு மறுகவும் (215) அவல் வகுத்தோர் (216) மது மறுகவும் (217) குறவர் கண்ணி சூடவும் (219) கோழி கதிர் குத்தவும் (222) மனைக்கோழி தினைக்கவரவும் (223) மந்தி மூழ்கவும் (224) நாரை வரையிறுப்பவும் (225) நாறுடு குழீஇ (226) மாமாவின் வயின்வயின் நெற் (180) கூடு கெழீஇய (182) நாடு (248) என வினைமுடிக்க.

227 - 31. [மண்மருங்கினுன் மறுவின்றி, ஒருகுடையா னென்று கூறப், பெரிதாண்ட பெருங்கேண்மை, அறனெடு புணர்ந்த திறனறி செங்கோல், அன்னேன் வாழி வென்வேற் குருசில்:]

மறு இன்றி (227) அறனெடு புணர்ந்த திறன் அறி செகோல் (230) ஒரு குடையான் ஒன்று கூற (228) முதியோர் (187) முரண் செல (188) பெரு கேண்மை பெரிது ஆண்ட (229) வென் வேல் குருசில் (231) - குற்றமின்றித் தருமத்தோடு கூடிய வழியை உலகம்

---

[1]குத்தல்: "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள், 490)

அறிதற்குக் காரணமாகிய செவ்விய கோலாலும் தண்ணளிசெய்தற் கெடுத்த ஒரு குடையாலும் தனது ஆணையையே உலகம் கூறும்படியாகவும் முதியோர் மூரண் செல்லும்படியாகவும் பெரிய நட்புடனே நெடுங்காலம் உலகையாண்ட வெல்கின்ற வேலையுடைய தலைவன்,

ஒரு குடை என்றதனாலும், ஒன்றுகூற என்றதனாலும் இவன் மண் முழுவதும் ஆண்டானென்றார்.

அன்னோன் - யான் கூறிய அத்தன்மைகளையுடையோன்;

வாழி - வாழ்வாயாக;

இறுதி யகரம் கெட்டு நின்றது.

232 - 3. [மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மாண், எல்லை தருநன் பல்கதிர் பரப்பி:]

மன்னர் நடுங்க தோன்றி - பகையரசர் நடுங்கும்படி விளங்கி,

பல் மாண் எல்லை தருநன் பல் கதிர் பரப்பி - பல்லுயிர்களும் மாட்சிமைப்படுதற்குக் காரணமாகிய பகற்பொழுதைத் தரும் கதிரோன் தன்னிலையை விட்டுப் பல கிரணங்களைப் பரப்புகையினாலே,

234. குல்லை கரியவும் - [1]கஞ்சங்குல்லை தீயவும்,

கோடு எரி நைப்பவும் - மரங்களினுடைய கொம்புகளை நெருப்புத் தின்னவும்,

235. [அருவி மா மலை நிழத்தவும்:] மா மலை அருவி[2] நிழத்தவும்- பெருமையையுடைய மலை தன்னிடத்து அருவிகளை இல்லையாக்கவும்,

235 - 6. மற்ற கருவி வானம் கடல் கோள் மறப்பவும் - இவையொழிந்த தொகுதியையுடைய மேகம் கடலிடத்து முகத்தலை மறப்பவும்,

237. பெரு வறன் ஆகிய பண்பு இல் காலையும் - பெரிய வற்கடமுண்டாகிய நற்குணமில்லாத காலத்தும்,

கரியவும் நைப்பவும் (234) நிழத்தவும் (235) மறப்பவும் (236) வறனுகிய காலையும் என முடிக்க.

238 - 9. [நறையு நரந்தமு மகிலு மாரமும், துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி:] நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும் பொறை துறைதுறை தோறும் உயிர்த்து ஒழுகி - நறைக் கொடியும் நரந்தப்புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையைத் துறைதோறும் துறைதோறும் இளைப்பாறத் தள்ளிப் போய்,

240. நுரை தலை குரை புனல் - நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர்,

வரைப்பு அகம் புகுதொறும் - குளத்திலும் [3]கோட்டகத்திலும் புகுந்தோறும்,

---

[1]கஞ்சா. [2]தொல், உயிரியல். சூ. 32. [3]ஒருவகை நீர் நிலை.

வரைக்கப்படுதலின், வரைப்பு; ஆகுபெயர்.

241. புனல் ஆடும் மகளிர் கதுமென குடைய - நீராடு மகளிர் கடுகக் குடைந்து விளையாட,

புனல் ஒழுகிப் புகுதொறும் மகளிர் குடைய வென்க.

242. கூனி குயத்தின் வாய் நெல் அரிந்து - வளைந்து நின்று அரிவாளின் வாயாலே நெல்லை அறுத்து.

நெல்லு மிகக் காய்த்துத் தரையிலே விழுதலின், வளைந்து நிற்க வேண்டும் என்றார்.

243. சூடு கோடு ஆக பிறக்கி – சூட்டை மலையாக அடுக்கி,

243 - 4. நாள்தொறும் குன்று என குவைஇய குன்ரு குப்பை. நாடோறும் கடாவிட்டு மேருவென்னும்படி திரட்டின தொலையாத நெற்பொலி,

245 - 8. [கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும், சாலி நெல்லின் சிறைகொள் வேலி, ஆயிரம் விளையுட் டாகக், காவிரி புரக்கு நாடுகிழ வோனே:]

கடு தெற்று மூடையின் இடம் கெட கிடக்கும் - நெருங்கத் தெற்றின குதிரின் கண்ணே வெற்றிடம் இல்லையாம்படி கிடத்தற்குக் காரணமான,

கடுந்தெற்று மூடை - கோட்டையுமாம்.

சிறை கொள் வேலி ஆயிரம் சாலி நெல்லின் விளையுட்டாக - வரம்பு கட்டின வேலிநிலம் ஆயிரக்கலமாகிய செந்நெல்லின் விளையுட்டாக,

காவிரி புரக்கும் நாடு கிழவோன் - காவிரி பாதுகாக்கும் நாடு தனக்கே உரித்தாம் தன்மையுடையோன்.

வறளுகிய காலையும் (237) புனல் (240) ஒழுகிப் (239) புகுதொறும் (240) மகளிர் குடைந்து விளையாடக் (241) கூனி அரிந்து (242) பிறக்கிக் (243) குவைஇய குப்பை (244) கிடத்தற்குக் காரணமான (245) விளையுட்டாகக் (247) காவிரி புரக்கு நாடு (248) என வினைமுடிக்க.

பொருந (3), கோடியர் தலைவ, கொண்டதறிந (57), புகழ் மேம்படுந (60), ஏழின்கிழவ (63), காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை (52) நெறிதிரிந்தொராஅது (58) ஆற்றெதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே (59); போற்றிக்கேண்மதி (60); நின்னிரும் பேரொக்கலொடு (61) பசி ஒராஅல் வேண்டின், நீடின்று (62) எழுமதி (63); யானும் (64) இன்மை தீர வந்தனென்(129); உருகெழு குருசிலாகிய (131) உருவப்பஃறே ரிளையோன் சிறுவன் (130), கரிகால்வளவன் (148), நாடுகிழவோன் (248), குருசில், அன்னோன் (231) தாணிழன்மருங்கிற் குறுகி (149) மன்னர் நடுங்கத் தோன்றி (232), வாழியெனத் (231) தொழுது முன்னிற்குவிராயின் (150), நாட்டொடு (170) வேழம் (172) தரவிடைத் தங்கலோவிலன் (173) எனக் கூட்டி வினை முடிவு செய்க.

"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி......வேண்டும்" (தொல். எச்ச. சூ. 66) என்பதனான், இங்ஙனம் முடிந்தது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (தொல். புறத். சூ. 108) என்பது இதற்கு விதி.

"ஆசிரிய நடைத்தே வஞ்சி" (தொல். செய். சூ. 108) என்பதனாற் பின்னர் வஞ்சி மிகவும் வந்தனவென்று உணர்க.

சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

———

வெண்பா

1 [1]ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம் – தேரின்
அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு.

2 அரிமா சுமந்த வமளிமே லானைத்
[2]திருமா வளவனெனத் தேறேன் - திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை.

3 [3]முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால் – செய்ச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
[4]கரிகாலன் கானெருப் புற்று.

———

[1] தொல். புறத்திணை. சூ. 31, ந. மேற்.

[2] "திருமா வளவன்" (பட்டினப். 299); "செருவெங் காதலிற் றிருமா வளவன்" (சிலப். 5 : 90)

[3] இச்செய்யுள் பட்டினப்பாலையின் இறுதியிலும் காணப் படுகிறது.

[4] கரிகாலன் கானெருப்புற்று : புதுக்கோட்டைக் குடுமியாமலைச் சாஸனம்.

மூன்றாவது

*சிறுபாணாற்றுப்படை

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்பு விரித் தன்ன காழக நுணங்கறல்
அயிலுருப் பனைய வாகி யைதுநடந்து

---

*இந் நூல் பாணாற்றுப்படைக்கு மேற்கோள்; தொல். புறத். சூ. 36, ந.

1. மணிமலை : ''மணிநெடுங் குன்று'' (குறுந். 240 : 7; ஐங். 207 : 4,209: 5); ''மணிவரை'' (ஐங். 250 : 2; பரி. 13 : 1; ப. 169 : 3.)

2. (பி - ம்) 'துயல்வரும்'

2 - 3. ஆற்றிற்கு ஆரம் : ''செய்யவ ளணியகலத் தாரமொ டணிகொள்பு......வையைவா ரவிரற லிடைபோழும்'' (கலித். 28 : 5 - 7); ''மாயோன் மார்பி லாரம் போல, மணிவரை யிழிதரு மணிகிள ரருவி'' (தொல். செய். சூ. 78. பேர். மேற்.); ''இலங்கு நீண்முடி யிந்திரன் மார்பின்மேல், விளங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவை'' (சீவக. 35); ''காவிரி, மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் றுழ்ந்ததோர், ஓதநீர் நித்திலத் தாம மொக்குமால்'' (பெரிய. திருநாட்டுச். 2); ''பேரார நிபுட மாலை மால்யாறு நிமிர வீழ்வ போல்வீழ'', ''நதிக்குப் போத வொழுகுமுத் தாரமும்'' (தக்க. 106, 280)

1 - 3. ''அலைநீ ராடை மலைமுலை யாகத், தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற், கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை'' (சிலப். 5 : 1 - 3)

6. கூந்தலுக்கு அறல் உவமை : ''அறலார் குழலை யறியே னெனல்'' (ஒரு பழைய இலக்கண நூல்)

3 - 6. பரி. 10 : 30; அகநா. 11 : 8 - 11 ; புறநா. 198 : 1 - 2.

5 - 6. ''பொன்னிதழிற் பைந்தாதும் போதும் புறம்புதைத்த, வின்னறல்போ லேழை யிருங்கூந்தல்'' (கண்டனலங்காரம்)

7. (பி - ம்.) 'அயிலுருக்கனையவாகி', 'அயிலுருத்தனையவாகி'

வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாள்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
ஐதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்

---

7 - 8. "*அயில்காய்ந் தன்ன கூர்ங்கல்*" (மலைபடு. 373); "*கொல்லடைந்த வேலன்ன கூர்ம்பரல்*" (யா. வி. மேற். 7); "*எரியுந், தீமே லயில்போற் செறிபரற் கானில்*" (திருச்சிற். 228)

9. வேனினின்ற : நற். 29 : 1.

10 - 11. "*பாலை யென்பது உட்டினத்துக்குப் பெயருமாம்; 'பாலை.........வழி' இது சிறுபாணாற்றுப்படை*" (நக்க. 68, உரை)

11 - 2. "*நெறியயன் மராஅத், தல்குறு வரிநிழ லசைஇ*" (அகநா. 121 : 8 - 9)

14. "*எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருடிருக்கிட்டு...... கடைகுழன்ற கருங்குழல்கள்*" (சீவக. 164); அகநா. 73 : 2.

15. (பி - ம்.) '*மணிமயிற் கலாபம்*'

14 - 5. மகளிர் கூந்தலுக்கு மயிற்கலாபம் : சிறுபாண். 263-4; "*கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ*" (மலைபடு. 44); "*அணிகிளர் கலாவ மைதுவிரித் தியலு, மணிபுரை யெருத்தின் மஞ்ஞை போலநின், வீபெய் கூந்தல் வீசுவளி யுளர*", "*கலிமயிற் கலாவத் தன்னவிவள், ஒலிமென் கூந்தல்*" (நற். 264 : 3 – 5, 265 : 8 – 9); "*கலிமயிற் கலாவத் தன்னவிவள், ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே*" (குறுந். 225 - 6 - 7); "*கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன, ஒலிமென் கூந்தல்*" (புறநா. 146 : 8 - 9); "*பூம்புகை. மாடமாலை மேனலார் மணிக்குழலின் மூழ்கலிற், கோடுயர்ந்த குன்றின் மேற் குழீஇய மஞ்ஞை தஞ்சிற, காடுமஞ்சி னுள்விரித் திருந்த வண்ண மன்னரே*", "*கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பி யிருப்பப், பீலி மஞ்ஞை நோக்கிப் பேடை மயிலென் றெண்ணி*" (சீவக. 71, 919)

16. (பி - ம்.) '*மயிற்கொளிக்கும்*'

"*மயிலன்ன சாயலாய்*" (ஏலாதி. 28); முருகு. 205, ந. குறிப்புரையைப் பார்க்க.

உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்

---

17 - 8. பொருநராற்றுப்படை, 42. குறிப்புரையைப் பார்க்க.

19. நிலந்தோயும் பிடித்தடக்கை : முருகு. 158, ந. குறிப்புரையைப் பார்க்க.

20. 'சேர்ந்துடன் செறிந்த குறங்கு', 'சேர்ந்து செறிகுறங்கின்' என்பது, சேர், திரட்சிப் பொருளில் வந்ததற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 676, சே. சூ, 65, ந; இ. வி. சூ. 290.

19 - 20. பொருந, 40, அடிக்குறிப்பைப் பார்க்க.

21. இஃது, ஒழுகல் நெடுமைப் பண்பு உணர்த்தியதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 21, சே; சூ. 19, ந.; இ - வி. சூ. 284.

21 - 2. மகளிர் கூந்தலுக்கு வாழைப் பூ: "வாழை யீன்ற வையேந்து கொழுமுகை, மெல்லியன் மகளி ரோதி யன்ன, பூவொடு துயல்வரு மால்வரை நாடனை" (நற். 225: 3 - 5); விநாயக. நகரப். 14.

19 - 22. அந்தாதி யுவமைக்கு இவ்வடிகள் மேற்கோள்; மாறன். சூ. 101.

19 - 23. " 'ஈர்ந்துநிலந் தோயும்......நச்சி' என்பதூஉம், அடுக்கிய தோற்றமெனப் படாதோவெனின், படாதன்றே; யானைக்கை போலுங்குறங்கு. குறங்குபோலும் வாழையென அடுக்கிச் சொல்லாது குறங்கினையுடையாளென்று துணித்துக் கூறிய பின்னர்க் குறங்கென மால்வரை யொழுகிய வாழை யென்றுஞதலி னென்பது". (தொல். உவம. சூ. 36, பேர்.)

23-4. "வேங்கை வென்ற சுணங்கின்" (ஐங். 324); "வேங்கைவீ, முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்" (கலித். 64: 26 - 7); "பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய, நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலை" (அகநா. 319: 8 - 9); "நாகிள வேங்கையிற், கதிர்த் தொளி திகழு நுண்பல் சுணங்கின், மாக்கண் மலர்ந்த முலையள்" (புறநா. 352: 12 - 4)

தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சே றிகுதரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ

---

25 - 6. "யாணர்க் கோங்கின் குவிமுகை யெள்ளிப், பூணகத் தொடுங்கு முலை" (ஞானமிர்தம்); "யாணர்க் கோங்கின் மென்முகிழ் முலை" (பாகவதம், 10. கோவியர், 13); முருகு. 34 - 5, அடிக்குறிப்பைப் பார்க்க.

27. இவ்வடி, நுங்கென்பது புல்லொடு வந்ததற்கு மேற்கோள்; தொல். மரபு. சூ. 86, பேர். உரை.

28. (பி - ம்.) 'செறி நீர்தரும்'

19 - 28. " 'ஈர்ந்துகிலந் தோயும்......எயிற்றின்' என்னும் இச் சந்தானவுவமை மாலையுவமையின்பாற் படும்" (இ - வி. சூ. 645); பாடபேதமுண்டு.

30. "முல்லை சான்ற கற்பின், மெல்லியற் குறுமகள்" (நற். 142: 10 - 11); அகநா. 274: 13 - 4.

"தேவி முல்லை வளர்த்தற்குக் காரணம் கற்புடைமை யென வுணர்க; 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' - இது சிறுபாணாற்றுப் படை" (தக்க. 75)

32. (பி - ம்.) 'நலமென் சீறடி'

33. "கல்லா மறவர் கணைமாரி" (பு. வெ. 66)

34. "பொன்றிரித் தன்ன நிறத்தன......நரம்பு" (பெருங். 3. 15: 53 - 4)

34 - 5. "பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின், மருடையமை கேள்வி யிடவயிற் றழீஇ" (பெரும்பாண். 15 - 6); "பொன் வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின், மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்" (புறநா. 308: 1 - 2); "நந்தாது பொன்வார்ந்தன யாழி னரம்புளர்ந்து" (பாகவதம், 10. கோவர்த்தன. 39)

நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணுறை மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத

---

36. (பி - ம்.) 'பழுனிய'

36 - 7. "நைவளம் பழுநிய பாலை வல்லோன்" (குறிஞ்சிப். 146)

38 - 9. கூர்ப்பு, முன்சிறவாதுள்ளதொன்று சிறத்தலாகிய குறிப்புணர்த்து மென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 18, சே. சூ. 16, ந.; இ - வி. சூ. 281, உரை.

40. "முதுவா யொக்கல்", "முதுவாய்க் கோடியர்" (பட்டினப். 214, 253); "நீயும் வம்மோ முதுவா யிரவல" (புறநா. 180: 9); முருகு. 284, அடிக்குறிப்பைப் பார்க்க.

42. நற். 260: 1.

45. "நெய்தல், விளையா விளங்க ணுற" (அகநா. 113: 6, 400: 21 - 2)

42 - 7. "தடமருப் பெருமை தாமரை முனையின், முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும், குடநாடு" (அகநா. 91; 15 - 7)

50. (பி - ம்.) 'புனல் வஞ்சி வாயிலும் வறிதே'

" 'வஞ்சியும் வறிதே, மதுரையும் வறிதே, உறந்தையும் வறிதே' என்றாராகலின், இதனைப் பேராச்சிறப்பினையுடைய புகாரென்றார்" (சிலப். பதிகம், 12 - 20, அடியார்.)

51. நாகு பெண்மையே யன்றி இளமையும் உணர்த்து மென்பதற்கு, 'நாகுமுதிர் நுணவம்' என்பது மேற்கோள்; சீவக. 74, ந.

நாகுமுதிர் நுணவம்: "நாகுமுதிர் நாகத்து" (சிறுபாண். 108)

கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று

---

53. (பி - ம்.) 'கைபுனை சேயங்கடைந்த'

55. உமணரொழுகை: "பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச், சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப், பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி" (பெரும்பாண். 63 - 5)

56. மகாரன்ன மந்தி: "கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன, நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்" (மலைபடு. 236 - 7); "உச்சிக் கிவருங் கட்கின் கடுவன், வீழ்ந்த திங்களை விசும்புகொண் டேறுந், தெய்வ மகாரி னையுறத் தோன்றி" (பெருங். 1. 40: 73 - 5); அகநா. 206: 3 - 6.

57. (பி - ம்.) 'நகாஅ வன்ன'

நகார்: "பறிமுறை நேர்ந்த நகாராகக் கண்டோர்க்கு" (கலித். 93: 18)

57 - 62. கொற்கை முத்து: "விளைந்து முதிர்ந்த விழுமுத்தி, னிலங்குவளை யிருஞ்சேரிக், கட்கொண்டிக் குடிப்பாக்கத்து, நற் கொற்கையோர் நசைப்பொருந" (மதுரைக். 135 - 8); "பல்லரண் கடந்த பசும்பூட் பாண்டியன், மல்குநீர் வரைப்பிற் கொற்கை முன்றுறை, பூதை யீட்டிய வுயர்மண லடைகரை, யோத வெண் டிரை யுதைத்த முத்தம்" (தொல். களவு. சூ. 11, ந. மேற். "கண்ணே")

65. "கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (பொருந. 148)

66. தாங்கரு மரபின்: சிறுபாண். 127.

67. மதுரையும் வறிதே: சிலப். பதிகம், 12 - 20, அடியார். மேற்.

நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்பும்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னார்
ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்

---

69. *கடம்பின் துணையார் கோதை :* "*திணிநிலைக் கடம்பின் றிர ளரை வளைஇய, துணையமை மாலை*" (குறிஞ்சிப். 176 - 7); "*கடம்பு சூடிய கன்னி மாலை*" (சீவக. 990); "*செந்தொடையுஞ் செய்யுட் பொலிவு செய்யுங்காற் கொன்றையுங் கடம்பும்போல நின்றவாறே நின்றுதொடைப் பொலிவு செய்யுமென்பதாம்*" (தொல். செய்யுளியல், சூ. 94, பேர்.)

துணையார் கோதை : "*துணைமலர்ப் பிணைய லன்னவிவர்*", "*துணைத்த கோதைப் பணைப்பெருந் தோளினர்*" (குறுந். 229 : 6, 326 : 1); "*தூநீர் பயந்த துணையமை பிணையல்*" (அகநா. 5 : 23)

70. (பி - ம்.) '*வண்டுறை*'

71. (பி - ம்.) '*கோபத்தன்ன*'

72 - 3. தொல். உவம. சூ. 9, பேர். உரை, மேற்.; இ - வி. சூ. 640, உரை, மேற்.

78. "*தண்பணை தழீஇய விருக்கை*" (யா. வி. மேற். "*சுறமறி வன*", "*குருகுநாரை*"); பொருந. 169, அடிக்குறிப்பைப் பார்க்க.

81 - 2. "*வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப, எயின்மூன் றெறிந்த விகல்வேற் கொற்றமும்*", "*தூங்கெயின் மூன் றெறிந்த சோழன்*" (சிலப் : 27 : 164 - 5, 29: "*வீங்குநீர்*"); "*தூங் கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்*" (மணி. 1 : 4); "*ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற், றூங்கெயி லெறிந்தநின்

ஓடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி

னூங்கணோர்'' (புறநா. 39 : 5 - 6); ''வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற், றூங்கு மெயிலுந் தொலைத்தலால்'' (பழமொழி, 49); ''திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்'' (தொல். களவு. சூ. 11, ந. ''கண்ணே''); ''தேங்கு தூங்கெயி லெறிந்த வவனும்'' (கலிங்க. இராச. 17); ''கூடார்தம், தூங்கு மெயிலெறிந்த சோழனும்'' (விக்கிரம. 8 - 9); ''தூங்கெயில் கொண்ட சுடர்வாளோன்'' (குலோத். உலா); ''வாங்குந் திருக்கொற்ற வாளொன்றின் வாய் வாய்ப்பத், தூங்கும் புரிசை துணித்தகோன்'' (இராசராச. 13)

83. ஓடாப்பூட்கை : ''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' (முருகு. 247) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

உறந்தையும் வறிதே : சிலப். பதி. 12 – 20, அடியார். மேற்.

84. மலைக்கவான் : ''குறங்கு – மலையடிவாரம்; 'வானம் வாய்த்த வளமலைக் கவாஅன் - இது சிறுபாணாறு'' (நக்க. 540. உரை)

86. ஆவியர் பெருமகன் : ''அதுமனெம் பரிசி லாவியர் கோவே'' (புறநா. 147 : 9)

84 - 7. ''உடாஅ போரா வாகுத லறிந்தும், படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ, கடாஅ யானைக் கலிமான் பேகன்'' (புறநா. 141 : 10 - 12)

86 - 7. ''அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப், பெருங்க னாடன் பேகனும்'' (புறநா. 158 : 11 - 12)

88. (பி - ம்.) 'நறவுவா யுறைக்கும்'

91. ''கொடுக்கிலா தானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப் பாரிலை'' (தே. சுந். புகலூர்)

90 - 91. ''நெடுவரைக், கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும், பறம்பிற் கோமான் பாரியும்'' (புறநா. 158 : 2 - 4)

89 - 91. ''பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக்

வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை யதிகனுங் காவாது

கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி", "தேருடன், முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப், படுமணி யானைப் பறம்பிற் கோமான், நெடுமாப் பாரி" (புறநா. 200 : 9 - 12, 201 : 2 - 5)

84 - 91. "முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு, மெல்லை நீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை, யிரவாம லீந்த விறைவர்" (பு. வெ. 194); பழமொழி, 361.

93. ஈர நன்மொழி : "ஆர்வ நன்மொழி" (சிறுபாண். 99); முருகு. 292-ஆம் அடியையும் அடிக்குறிப்பையும் பார்க்க.

94. "உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்" (சிறு பாண். 102)

95. கழறொடித் தடக்கை : "கழறொடி கவைஇய கலம்பொழி தடக்கை" (பெருங். 1. 35 : 102)

91 - 5. பாரி, காரி : "வண்புகழ் பாரி காரி" (திருப். "வஞ்சக")

97. ஆலமர் செல்வன் : முருகு. 256-ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

98. (பி - ம்.) 'சாபந் தாங்கிய'

99. ஆர்வ நன்மொழி : "ஈர நன்மொழி" (சிறுபாண். 93)

100 - 101. நெல்லியமிழ்துவிளை தீங்கனி : "நிறைசுவை யமுத நெல்லியின் கனியும்" (வி. பா. பழம்பொருந்து. 22)

100 - 103. "பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும், ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும் - ஈங்கே, மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றி னுவை, அறுப்பித்தா யாமலகந் தந்து" (ஔவையார் பாட்டு); 'இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை' (குறள். 100, பரி. உரை)

நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் ருங்கிய வுரனுடை நோன்ருள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய

---

106. (பி - ம்.) *'தளிமழை'*

105 - 7. *"தள்ளா தீயுந் தகைசால் வண்மைக், கொள்ளா ரோட்டிய நள்ளியும்"* (புறநா. 158 : 15 - 6)

110. *"காரி யூர்ந்து பேரமர்க் கடந்த, மாரி யீகை மறப்போர் மலையன்"* (புறநா. 158 : 6 - 7); *காரிக்குதிரை : 'காரியென்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்தி'* (புறநா. 158, *உரை*)

110 - 11. *காரியும் ஓரியும் பொருதமை, "செவ்வேல், முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில், லோரிக் கொன்று"* (அகநா. 209 : 11 - 14) *என்பதனாலும் விளங்கும்.*

84 - 111. *ஏழு வள்ளல்களின் சரிதைகள் இங்கே கூறியபடி* புறநானூறு, 158-ஆம் *செய்யுளிலும் ஒருங்கே காணப்படும்.*

112. *எழுவுறழ் திணிதோள் : "எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்"* (சிறுபாண். 49)

113. *ஈகைச் செந்நுகம் : "பழிபடா வகையிற் காக்கும் படுநுகம் பூண்ப லென்ருன்"* (சீவக. 203)

117. (பி - ம்.) *'புணையாக'*

தோட்புணை : "புணைகை விட்டுப் புனலோ டொழுகின் ஞண்டும் வருகுவள்" (குறுந். 222 : 3 - 4)

116-7. *"நறையு நரந்தமு மகிலு மாரமுந், துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி, நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும், புனலாடு மகளிர் கதுமெனக் குடைய"* (பொருந. 238 - 41)

பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த

---

124. (பி - ம்.) 'கணஞ்சிந்தும்'

"புன்றலை மடப்பிடி பரிசி லாக" (புறநா. 151 : 4)

பெயன்மழைத் தடக்கை: "பொழிபெயல் வண்மையான்" (கலித். 57 : 12)

125 - 6. பேரிசை நல்லியக் கோடன் : "செல்லிசை நிலைஇய பண்பி, னல்லியக் கோடனை" (சிறுபாண். 268 - 9)

119 - 26. "பெருமா விலங்கைத் தலைவன் சீறியா, ழில்லோர் சொன்மலை நல்லியக் கோடனை", "நெல்லமல் புறவி னிலங்கை கிழவோன்" (புறநா. 176 : 6 - 7, 379 :6)

127. தாங்கரு மரபின் : சிறுபாண். 66; "நலம்பொறுக் கலாத பிண்டி" (சீவக. 402)

127 - 8. மலையைப் பாடுதல் : "அவர், நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந். 23 : 5); "அணிநெடுங் குன்றம் பாடுதும்" (பரி. 17 : 51); "பயமலை யேத்தி யகவினம் பாடுவா நாம்" (கலித். 40: 6 – 7); "தேமுயர் சிமயக் குன்றம் பாடும்" (அகநா. 208 : 2); "நின்னூசின் மலையும் பாட" (புறநா. 143 : 12)

130. நாய்க்குட்டியைக் குருளை யென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். மரபு. சூ. 8, பேர்.

பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்
தறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரும்
இவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயின்
அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும்

---

134. ஆம்பி: "ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவா" (புறநா. 164 : 2)

138. "பெருமடமென்பது அஞ்ஞானம்; 'மடவோர்......... கடையடைத்து' என்பது சிறுபாணாற்றுப்படை" (தக்க. 173, உரை)

140. அழிபசி: "அற்று ரழிபசி தீர்த்தல்" (குறள். 226); "அழிபசிப் பேயைப் பாராய்" (தக்க. 787)

142-3. பரிசிலர்க்கு யானையொடு தேரை வழங்குதல் முதலியன: பொருந. 163 - 73; "வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்து கொண், டியாமவ ணின்றும் வருதும்" (பெரும்பாண். 27 – 8); "தேரோடு மாசிதறி" (மதுரைக். 224); "தூமலர் துவன்றிய கரை பொருநிவப்பின், மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங், கியாமவ ணின்றும் வருதும்" (மலைபடு. 51 – 3); "களிறுந் தேரும், வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசி" (பதிற். 20 : 15 - 6); "நீயே, வளியி னியன்மிகுந் தேருங் களிறுந், தளியிற் சிறந்தனை வந்த புலவர்க், களி யொடு கைதூவலை" (கலித். 50 : 15 - 7); "தேரோ, டொளிறுமருப் பேந்திய செம்மற், களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே", "இரவன் மாக்கள், களிறொடு நெடுந்தேர் வேண்டினுங் கடவ" (புறநா. 205 : 12 - 4, 313 : 3 - 4)

தும்மீற்றுத் தன்மைப்பன்மை வினைமுற்று நிகழ்காலமும் சிறுபான்மை காட்டுமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். வினை. சூ. 5, ந; இ - வி. சூ. 50, உரை.

145. முருகு. 62, அடிக்குறிப்பைப் பார்க்க.

தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்
ஓங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து
நுதிவே லேக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவும்

147. செருந்திமலர்க்குப் பொன் : "செருந்திபொன் சொரிதருந் திருநெல்வேலியுறை செல்வர்" (தே. திருஞா.)

148. கடுஞ்சூல் : "கடுஞ் சூலாநாகு" (கலித். 110 : 14); "கடுஞ் சூன் மகளிர்" (மணி. 7 : 82)

"மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானல்" (மதுரைக். 96); "மணிமருண் மலர முள்ளி" (அகநா. 236 : 1)

149. "மண்ணாப் பசுமுத் தேய்ப்பக் குவியிணர்ப், புன்னை யரும்பிய புலவுநீர்ச் சேர்ப்ப" (நற். 94 : 5 – 6); "மண்ணா முத்த மரும்பிய புன்னை" (அகநா. 30 : 13)

152. (பி - ம்.) 'வைப்பின்'

மணிநீர் : "மண் ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" (மதுரைக். 351); "மணிமரு டெண்ணீர்" (மலைபடு. 250); "மணிநீர்ச் சேர்ப்பன்" (ஐங். 117 : 4); "மணிநீரு மண் ணு மலையு மணிநிழற், காடு முடைய தரண்" (குறள், 742)

153. படு - மடு; "படுவெழுந் நடுவெழும்" (தக்க. 720)

155. "விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்" (மணி. 8 : 5)

158 - 9. பெரும்பாண். 339.

164. "பனிப்புத விவர்ந்த பைங்கொடி யவரைக், கிளிவாயொப்பி னொளிவிடு பன்மலர்" (குறுந். 240 : 1 - 2)

கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங்கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப மூரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ

---

165. *காயாவிற்கு மயிற்கழுத்து : ''புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை, மென்மயி லெருத்திற் றோன்றும், கானவைப்பு''* (குறுந். 183 : 5 - 7); *''மயிலெருத்துறழணி மணிநிலத்துப் பிறழ - மயிலினது கழுத்தை மாறுபடுகின்ற அணியப்பட்ட காயாம்பூவாற் செய்த கண்ணிகள் பவளம்போலும் நிறத்தையுடைய நிலத்தே மாறுபட்டு''* (கலித். 103 : 59, ந.); *''கலவ மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா''* (சீவக. 1558)

166. (பி - ம்.) *'கொட்டை கொள்ளவும்'*

முசுண்டை : ''அகலிரு விசும்பி னூஅல் போல, வாலிதின் விரிந்தன புன்கொடி முசுண்டை'' (மலைபடு. 100 - 101)

கொட்டம் : ''கொட்டங் கொண்டோர் கட்டமு லுயிரா'' (பெருங். 1 : 46 : 217)

167. *''காந்தண் முகைபுரை விரல்''* (புறநா. 144 : 8 - 9); பொருந. 33, *அடிக்குறிப்பைப் பார்க்க.*

169. *முல்லையென்ற சொற்குப் பொருள் இருத்தலென்பதற்கு இவ்வடி மேற்கோள்;* தொல். *அகத்.* சூ. 5, ந.

172. *ஐந்தாவதன் உருபு உவமப் பொருளில் வருவதற்கு இவ்வடி மேற்கோள்;* நன். மயிலை. சூ. 298; நன். வி. சூ. 299.

173. (பி - ம்.) *'வென்றியவன் வேலூர்'*

175. *இன்புளி வெஞ்சோறு : ''இன்புளிக் கலந்து.........குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி''* (மலைபடு. 179 - 83)

176. முருகு. 143 - 4 - *ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.*

டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத் தோன்றும்
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கினவ ளொமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப

---

176 - 7. (பி - ம்.) 'ஆயமொடி யாமான்'

180. நிலையருங்குட்டம் : ''நிலையருங் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து'' (புறநா. 243 : 9, பி - ம்.)

181. (பி - ம்.) 'கயலெறிந்த'

''செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங், கெறிந்தது பெருஅ திரையிழந்து வருந்தி, மறிந்துநீங்கு மணிச்சிரல்'' (மணி. 4. : 22 - 4)

183. ''முட்டாட் டாமரை'' (முருகு. 73); ''முட்டாள சுடர்த் தாமரை'' (மதுரைக். 249)

186. '''மருதஞ் சான்ற......பணை' என்புழி, மருதமென்றது ஊடியும் கூடியும் போகம் நுகர்தலை'' (தொல். அகத். சூ. 5, ந.)

187. (பி - ம்.) 'கடிவரைப்பின்'

190. மகளிரை இன்னாருடைய தங்கையெனக் கூறுதல் மரபு: ''வல்விற் கானவர் தங்கை'', ''சிறுதினைத், துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை'' (குறுந். 335 : 6, 392 : 4 - 5); ''கொலைவி லெயினர் தங்கை'' (ஐங். 363 : 2); ''கானவர் தங்கை'' (அகநா. 132 : 5)

190 - 91. (பி - ம்.) 'தங்கைப்பிடி'

192. மகமுறை : பெரும்பாண். 478; ''மகமுறை தடுப்ப'' (மலைபடு. 185)

191 - 2. ''சிறுகண், ணிரும்பிடித் தடக்கை மான நெய்யருந், தொருங்குபிணித் தியன்ற வெறிகொ ளைம்பால்'', ''பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித், தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று'' (அகநா.

இருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்
எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய ஞதலும்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த

---

177 : 3 - 5, 9 : 22 - 3); "மாரிப் பிடிக்கை நால்புறல் கடுப்ப, நீர் பொறை யாற்ருது நெகிழ்ந்துவீ ழிசைந்த, காரிருங் கூந்தல்" (பெருங். 1. 40 : 193 - 5); "பிடிக்கைக் கூந்தல்" (சீவக. 2663)

194. "அவைப்புமா ணரிசி" (அகநா. 394 : 3)

அமலைவெண்சோறு : "அமலைக் கொழுஞ்சோறு" (புறநா. 34 : 14)

196. (பி - ம்.) 'நாவிலங் கெயிற்று'

197. கவர்வு விருப்பாகு மென்னுஞ் சூத்திரத்தில், "கவைத்தற் சொற்புறநடையாற் கொள்க" என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 64, ந.

"கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்து" (மணி. 6 : 125)

199 - 200. "முடியுடைக் கருந்தலை புரட்டு முன்ரு, ஞுகிருடை ய்டிய வோங்கெழில் யானை" (பட்டினப். 230 - 31)

201. "களிறுகா லுதைத்த புஞ்சப் பூழியொடு, மான்றுக ஞவிய மதுப்பலி தூவவும்" (பெருங். 1 33 : 85 - 6)

206. "அடையாத வாயி லகம்" (நள. 65); "விளங்கிய வடையா நெடுங்கடை மருவி" (திருக்காளத்திப். பரத்துவாச. 35)

203 - 6. "நசையுநர்த் தடையா நன்பெரு வாயி, லிசையேன் புக்கென் னிடும்பை தீர" (பொருந. 66 - 7)

அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும்
அரியே ருண்க ணரிவைய ரேத்த
அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூரகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்

---

212. "ஒன்னு ரோட்டிய செருப்புகன் மறவர், வாள்வலம் புணர்ந்தநின் றாள்வலம் வாழ்த்த" (மதுரைக். 726 - 7); "வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த" (புறநா. 24 : 29); "வாய்வாண் மறவரும் வாள்வல னேத்த" (சிலப். 26 : 77)

214. (பி - ம்.) 'ஊடிய துணர்தலும்'
"சூட்டியன் றேசிற்ப தோடிய வாறிவ ளுள்ளம்" (திருச்சிற். 284)
'ஓடுதல் - கெடுதல்' என்பதற்கு இது மேற்கோள்; சீவக. 2381.

216. (பி - ம்.) 'அறிமடம்'

217. வரிசையறிதல் : "பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி", "பரிசின் மாக்கள், வரிசை யறிதலோ வரிதே பெரிது, மீத லெளிதே" (புறநா. 6 : 16, 121 : 2 - 4); "வேந்தன் வரிசையா நோக்கி, னதுநோக்கி வாழ்வார் பலர்" (குறள். 528)

207 - 18. தகுதியுள்ளவர்களால் ஏத்தப்படுதல்.

219. "பன்மீ னிடைப்பட் டிங்கள் போலவும்", "மாரி வானத்து மீனீப்பண், விரிகதிர வெண்டிங்களின்" (புறநா. 13 : 6, 396 : 26 - 7); "மன்ன ராதிபன் றாரகா கணத்திடை மதியெனப் புறப்பட்டான்" (வி. பா. சூதுபோர். 88)

220. இன்னகையாயம் : "நகையம ராய நடுங்க நடுங்கா" (பு. வெ. 75); பொருந. 85. அடிக்குறிப்பைப் பார்க்க.

218 - 20. "பன்மீ னடுவட் டிங்கள் போலவும், பூத்த சுற்றமொடு பொலிந்து" (மதுரைக். 769 - 70); "பன்மீ னிடைப்பட் டிங்கள் போலப், பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை" (பதிற். 90 : 17 - 8); "விசும்பிற் கோண்மீனு மீன்சூழ் குளிர் மாமதித் தோற்ற மொத்தே" (சீவக. 882, ந. மேற்.)

222. கோடு: "மகர யாழின் வான்கோடு தழீஇ" (மணி. 4 : 56)

மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்விளைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானுது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை யெனவும்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவும்
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்

227. ''ஆசில் பாட லமிழ்துறழ் நல்யாழ்'' (பெருங். 1. 37 : 150). இலிற்றும்; புறநா. 68 ; 8.

226 - 7. ''தீந்தே, னணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்'' (சீவக. 722)

228. ''பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே'' (புறநா. 21:11); ''பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்'' (சிலப். 27 : 46)

229. இயம் - யாழ் : ''இயம்வெளிப் படுத்தபி னிசைவெளிப் படீஇய'' (பெருங். 1. 37 : 118)

232. ''வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகல, மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே'' (பதிற். 63 : 4 - 5); ''மகளிர் மலைத்த லல்லது மன்னர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப'' (புறநா. 10 : 9 - 10); ''சோலைமயி லார்கடுணை வெம்முலைக டுஞ்சும், கோலவரை மார்பு'' (சீவக. 283)

233. 'நிழன்று - நிழல் செய்து' என்பதற்கு இவ்வடி மேற்கோள்; சீவக. 1270, ந.

231 - 4. துதியால் நீதியைப் புகட்டல் : புறநா. 10.

235. நீ சில மொழியாவளவை : ''குறித்தது மொழியா வளவையின்'' (முருகு. 281)

236. புறநா. 383 : 9 – 11.

237. ''பாப்புக்கடுப் பன்ன தோப்பி'' (அகநா. 348 : 7); ''அரவுவெகுண் டன்ன தேறலொடு'' (புறநா. 376 : 14); ''நச்சரா வெயிறு கதுவிய தனைய கடுநற'' (குலோத். பிள்ளைத்.)

காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனு விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி

---

238 - 9. "உரக்குரங் குயர்த்த வொண்சிலை யுரவோன், காவெரி யூட்டிய நாள்" (சிலப். 22 : 111 - 2); "தீவயி ருர்த்திய திறலோன் போல" (பெருங். 1. 46 : 91)

"'காவெரி......முன்' எனப் பீமசேனற்குப் பெயராயிற்றென் றுணர்க. இது சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை" (தக்க. 10, உரை)

240. "பொன்வரை யன்ன பொருவி லாகத்து" (பெருங். 2. 10 : 5)

238 - 41. "ஐவரு ளொருவ னன்ன வடிசினூன் மடையன்" (சீவக. 2735); "மடைநூற் செய்தியும்" (மணி. 2 : 22)

243. "இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து" (மணி. பதி. 1)

244. (பி - ம்) 'விரும்பினன் பேணி'

245. "ஆனு விருப்பிற் றானின் றூட்டி" (பெரும்பாண். 479)

248. குறுந். 342 : 6.

247 - 8. "ஒன்னுத் தெவ்வ ருலைவிடத் தொழித்த, விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ" (பெரும்பாண். 491 - 2); "செய் வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக், கடற்படை குளிப்ப மண்டி யடர்ப்புகர்ச், சிறுகண் யானை செவ்விதி னேவிப், பாசவற் படப்பை யாரெயில் பலதந், தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" (புறநா. 6 : 11 - 6); "குரிசி லடை யாரைக் கொண்டகூட் டெல்லாம், பரிசின் முகந்தன பாண்" (பு. வெ. 51)

250. பாற்கதிர் : "பான்முகந் தன்ன பசுவெண் ணிலவின்" (நற். 196: 2); "பாலெனப் பரத்தரு நிலவின் மாலை" (அகநா. 259: 9);

உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோள்
துகிலணி யல்கு றுளங்கியன் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

''பானிலா வெண்கதிர்'' (சிலப். 13 : 27); ''தீம்பால் கதிர்மணிக் குடத்தி னேந்தி, வீழ்தரச் சொரிவ தேபோல் விளங்கொளித் திங்கட் புத்தேள், சூழிருட் டொழுதி மூழ்கத் தீங்கதிர் சொரிந்து'' (சீவக. 1541); ''பானிலாவை'' (தக்க. 605)

254 – 5. ''சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்வீழ் பொடித்து'' (மணி. 3 : 106 - 7)

260. ''பொற்றூர் புனைந்த புள்ளியற் பாண்டில்'', ''பாண்டில் வையம்'' (பெருங். 1. 36 : 32, 3. 5 : 65)

263. ''அகிலுண விரிந்த வம்மென் கூந்தல்'' (சிலப். 28 : 17); ''அகிலுண விரிந்த கூந்த லாய்ச்சியர்'' (பாகவதம். 10. 19 : 18)

263 – 4. 14-5, அடிக்குறிப்பைப் பார்க்க.

267. கொய்தளிர்க் கண்ணி: ''கொய்தார மார்பினெங் கோ,'' ''கொய்தார மார்பிற் கொழுநன்'' (பு. வெ. 95, 278)

268. ''நல்லிசை தம்வயி னிறுமார் வல்வேல், வான வரம்ப னன்றுட் டும்பர்'' (அகநா. 389 : 15 - 6)

இதன் பொருள்

1 - 2. [மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை, அணி முலைத் துயல்வரூஉ மாரம் போல:] பணை தோள் மா நிலம் மடந்தை மணி மலை அணி முலை துயல்வரூஉம் ஆரம் போல - மூங்கிலாகிய தோளையுடைய பெருமையினையுடைய மண்மகளுடைய [1]மணிகள் தங்கின [2]மலையாகிய அழகினையுடைய முலையிற் கிடந்தசையும் முத்து வடம்போல,

3 – 4. [செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக், கொல்கரை நறும்பொழில்:] சேய் வரல் கரை கொல் கான் யாறு செல் புனல் உழந்த நறு பொழில் - [3]மலைத்தலையினின்றும் வருதலையுடைய கரையைக் குத்துகின்ற காட்டாற்றிடத்து ஓடுகின்ற புனலாலே வருந்தின நறிய பொழிலிடத்து,

இரண்டு மலையினின்றும் வீழ்ந்து இரண்டு ஆற்றிடைக் குறையைச் சூழ வந்து பின்னர்க் கூடுதலின், முத்துவடம் உவமையாயிற்று; இது மெய்யுவமம். பெருக்காற் கோடுகள் வருந்துதலின், உழந்த வென்றார். இதனாற் பயன் : '[4]ஆற்றிடைக் குறையில் நின்ற மரம் இளவேனிற் காலத்து மிகவும் பூத்ததாயிற்று.

4 - 8. [குயில்குடைந் துதிர்த்த, புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடை நெறித்துக், கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கல், அயிலுருப் பனைய வாகி யைதுநடந்து, வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப:] காழ் அகம் நுணங்கு அறல் (6) குயில் குடைந்து உதிர்த்த (4) புது பூ செம்மல் சூடி புடை நெறித்து (5) கதுப்பு விரித்தன்ன (6) வேனில் நின்ற (9) - கருமையை இடத்தேயுடைய நுண்மையையுடைய அறல் குயில்கள் அலகாலுளர்ந்து உதிர்த்த புதிய பூக்களாகிய வாடலைச் சூடித் தம்மிடமெல்லாம் அறல்பட்டு மயிரை விரித்தாலொத்த தன்மையவாக இளவேனில் நின்றவென்க.

பொழிலிடத்து (4) அறலென்க.

---

[1]"மாமலை பயந்த காமரு மணியும்", "மலைபயந்த மணியும்" (புறநா. 218 : 2,377 : 16)

[2]"சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய், மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே" (திருவேங்கட மாலை), "கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன் றும்" (திருவிளை. நகர. 2)

[3]"மலைத்தலைய கடற்காவிரி" (பட்டினப். 6); "கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்" (கம்ப. ஆற்றுப். 19)

[4]"வீமலி கான்யாற்றின் றுருத்தி" (பரி. 10 : 30); "நிலம்பூத்த மரம்" (கலித். 27 : 9)

வெயில் உருப்பு உற்ற வெம்பரல் (8) - வெயிலால் வெம்மையுற்ற வெவ்விய பருக்கை,

அயில் உருப்பு அனைய ஆகி (7) ஊழ்ப்ப (8) சுரன் மராத்த வரி நிழல் முதல் அசைஇ (12) ஐது நடந்து (7) - வேல் காய்ந்த தன்மையவாய் அடியைக் கிழிக்கையினாலே அருங்கானகத்து நின்ற கடம்பினுடைய செறியாத நிழலை உடைத்தாகிய அடியிலே இளைப்பாறிப் பின்பு போக வேண்டுதலின் மெத்தென நடந்து,

9 - 11. [வேனி னின்ற வெம்பத வழிநாட், காலுறா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப், பாலை நின்ற பாலை நெடுவழி:] வேனில் நின்ற காலை வழிநாள் ஞாயிறு கதிர் கடாஉறுப்ப வெம்பதம் பாலை நின்ற பாலை நெடுவழி - இளவேனில் நிலைபெற்ற காலத்திற்குப் பின்னாகிய நாளிலே ஞாயிற்றினுடைய கதிர் வெம்மையைச் செலுத்தலைச் செய்கையினாலே வெய்ய செவ்வியையுடைய [1]பாலைத்தன்மை நிலைபெற்றமையாற் பிறந்த பாலை நிலமாகிய தொலையாத வழியினையுடைய சுரனென்க (12).

''நடுவுநிலைத் திணையே'' (தொல். அகத். சூ. 9) என்னுஞ் சூத்திரத்து உரையாற் பாலைத் தன்மை கூறினும்; அதுகொண்டு உணர்க. பாலைநின்ற பாலைவழி ''ஆறுசென்ற வியர்'' (தொல். வினை, சூ. 37, ந.) போல நின்றது.

12. 'சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ' என்பதனை முன்னே கூட்டுக.

13 - 4. [ஐதுவீ ழிகுபெய லழுகுகொண் டருளி, நெய்கனிந் திருளிய கதுப்பின்:] அருளி ஐது வீழ் இகு பெயல் அழகு கொண்டு நெய்கனிந்து இருளிய கதுப்பின் - உலகிற்கு அருளுதலைச் செய்து மெல்லிதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு [2]எண்ணெயிலே முற்றுப்பெற்று இருண்ட மயிரினையும்,

14 - 6. [கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிக்குஞ் சாயல்:] மயில் பலவுடன் மணி வயின் கலாபம் கதுப்பு என பரப்பி மயில்[3] குளிக்கும் சாயல் - மயில்கள் பலவுங்கூடி [4]நீலமணிபோலுங் [5]கண்ணினையுடைய தோகைகளை

---

[1]பாலைத்தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலைதேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது; தொல். அகத். சூ. 9, ந.

[2]''எண்ணெயு நானமு மிவைமூழ்கி'' (சீவக. 164)

[3]குளிக்கும் – மறைதற்குக் காரணமான : ''குளித்தொழுகினை – மறைந்து நடந்தாய்'' (கலித். 98 : 22)

[4]''ஒள்ளொளி மணிப்பொறி யான்மஞ்ஞை'' (பரி. 18 : 7)

[5]கண் – பீலியிடத்தாகிய கண்.

மகளிர் மயிரை விரித்தாற்போல விரித்துப் பார்த்து இவர்கள் சாயற்கு ஒவ்வேமென்று பேட்டிற்குள்ளே சென்று மறைதற்குக் காரணமாகிய [1]கட்புலனாகிய மென்மையினையும்,

16 - 8. சாஅய் உயங்கு நாய் நவின் நல் எழில் அசைஇ வயங்கு இழை உலறிய அடியின் - ஓடியிளைத்து வருந்துகின்ற நாயினது நாக்கினுடைய நல்ல அழகை வருத்தி வறுமையாலே விளங்குகின்ற சிலம்பு முதலியனவின்றிப் பொலிவழிந்த அடியினையும்,

18 - 9. [அடிதொடர்ந், தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின் :] ஈர்ந்து நிலம் தோயும் இரு பிடி தடக்கையின் அடி தொடர்ந்து - இழுக்கப்பட்டு நிலத்தே செறியும் கரிய பிடியினது பெருமையையுடைய கைபோலத் தாழும் அடியோடே தொடர்புபட்டு முறையாற் பருத்து,

20 - 21. [சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கெனை. மால்வரை யொழுகிய வாழை :]

மால் வரை ஒழுகிய வாழை என சேர்ந்து - பெருமையையுடைய மலையிலே ஒழுங்குபட வளர்ந்த வாழையெனத் திரண்டு,

[2]சேரென்னும் உரிச்சொல் முதனிலையாகச் சேர்ந்தென்னும் வினையெச்சம் வந்தது.

குறங்குடன் செறிந்த குறங்கின் - ஒரு குறங்குடனே ஒரு குறங்கு நெருங்கியிருக்கின்ற குறங்கினையும்,

21 - 2. வாழை பூ என பொலிந்த ஓதி - வாழையினது பூ வென்னும்படி அழகு பெற்ற [3]பனிச்சையினையும்,

22 - 4. [ஓதி, நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக், களிச் சுரும்பரற்றுஞ் சுணங்கிற் சுணங்கு பிதிர்ந்து:] களி சுரும்பு நளி சினை வேங்கை நாள் மலர் நச்சி ஓதி அரற்றும் சுணங்கின் சுணங்கு பிதிர்ந்து – களிப்பினையுடைய சுரும்புகள் செறிவினையுடைத்தாகிய கொம்பினையுடைய வேங்கையினது நாட்காலத்து மலரென்று விரும்பிப் பாடி ஆரவாரிக்கும் ஓரிடத்தில் தோன்றிய சுணங்குடனே ஓரிடத்தில் தோன்றிய சுணங்கு பிதிர்பட்டு,

---

[1] "சாயலென்னுஞ் சொல், மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறியானும் நுகரும் மென்மையை உணர்த்தும்" (தொல். உரி. சூ. 27, ந.); "'சாயன் மென்மை' என்று பொதுப் படச் சூத்திரஞ் செய்தது ஐம்பொறியானும் நுகரும் மென்மை யெல்லாம் அடங்குதற்கு" (சீவக. 8, ந.)

[2] "சேரே திரட்சி" (தொல். உரி. சூ. 65)

[3] பனிச்சை - மகளிர் கூந்தலின் ஐம்பால்களுள் ஒன்று; முன்னுச்சிமயிர்; தக்க. 25, உரை.

25 - 6. யாணர் கோங்கின் அவிர் முகை எள்ளி பூண் அகத்து ஒடுங்கிய வெம் முலை - புதிதாகப் பூத்தலையுடைய கோங்கினது விளங்குகின்ற முகையை இகழ்ந்து மெல்லிய பணிகள் இடையிலே கிடக்கின்ற விருப்பத்தையுடைய முலையினையும்,

26 – 8. [முலையெனா, வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின், இன்சே றிகுதரு மெயிற்றின்:] வள் கோள் பெண்ணை முலை என வளர்த்த நுங்கின் இன் சேறு இகுதரும் எயிற்றின் - பெரிய குலையினையுடைய பனை முலையென்னும்படி வளர்த்த நுங்கினது இனிய செறிந்த நீர் தன் நீர்மையால் தாழும் எயிற்றினையும்,

28 - 30. [எயிறெனக், குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின் :] குல்லை அம் புறவில் குவிமுகை எயிறு என அவிழ்ந்த முல்லை சான்ற கற்பின் - கஞ்சங்குல்லையையுடைய அழகிய காட்டகத்தே குவிந்த அரும்பு எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லை சூடுதற்கு அமைந்த கற்பினையும்,

கற்பின் மிகுதி தோன்ற [1]முல்லை சூடுதல் இயல்பு.

கதுப்பிற் கதுப்பென்பது (14) முதல் இத்துணையும் இயைபுத் தொடை திரிந்து வந்ததென்றறிக; "இறுவா யொன்றல்" (தொல். செய். சூ. 96) என்னும் சூத்திரத்துட் கூறினும்.

30 - 31. மெல்லியல் மடம் மான் நோக்கின் வாள் நுதல் விறலியர் - மெல்லிய இயல்பினையும், மடப்பத்தினையுடைய மான் போலும் பார்வையினையும், ஒளியை உடைத்தாகிய நுதலினையு முடைய [2]விறல்பட ஆடும் மகளிர்,

---

[1] "பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார்" (சீவக. 624) என்பதற்கு, 'முல்லைச் சூட்டைக் கற்பிற்குத் தலையிலே சூடினாரென்க' என்றும், "முல்லைச்சூட்டு மிலைச்சி" (சீவக. 2438) என்பதற்கு, 'முல்லைச்சூட்டைக் கற்பிற்கு மிலைச்சி' என்றும் நச்சினார்க்கினியர் எழுதிய உரையும், "வாணுத லரிவை முல்லை மலைய" (ஐங். 408), "முடிச்சூட்டு முல்லையோ முதற்கற்பு முல்லையோ" (தக்க. 119) "முல்லை யந்தொடை யருந்ததி" (பிரபு. கைலாய. 27), "முல்லைசான் மனையுலோபா முத்திரை" (சீகாளத்தி. பொன்முகரி. 21) என்பவையும் இக் கருத்தை வலியுறுத்தும். "வண்முல்லை சூடுவதே நலங் காண்குல மாதருக்கே" (குலோத். கோவை. 168)

[2]விறல் - சத்துவம்; வேம்பு தின்றார்க்குத் தலை நடுங்குவதுபோல அஞ்சத்தக்கது முதலியவற்றைக் கேட்டவிடத்துப் பிறந்த உள்ள நிகழ்ச்சியால் தாமே தோன்றும் நடுக்கம் முதலாயின,

கதுப்பினையும் (14) ஓதியினையும் (22) நுதலினையும் நோக்கினையும் (31) எயிற்றினையும் (28) முலையினையும் (26) குறங்கினையும் (20) அடியினையும் (18) சாயலினையும் (16) மெல்லிய இயல்பினையும் கற்பினையும் (30) உடைய விறலியரென்க.

32 - 3. நடை மெலிந்து அசைஇய நல் மெல் சிறு அடி கல்லா இளையர் மெல்ல தைவர - நடையால் இளைத்து ஓய்ந்த நன்மையையுடைய மெல்லிய சிறிய அடியைத்[1] தம் தொழிலையொழிய வேறு கல்லாத இளையர் மெத்தென்று வருட,

34 - 5. பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின் இன் குரல் சிறு யாழ் இடம் வயின் தழீஇ - பொற்கம்பியினை யொத்த முறுக்கடங்கின நரம்பினது இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப் பக்கத்தே தழுவி,

36 - 7. நைவளம் பழுநிய நயம் தெரி பாலை கை வல் பாண் மகன் கடன் அறிந்து இயக்க - நட்டபாடையென்னும் பண் முற்றுப் பெற்ற இனிமை தெரிகின்ற பாலையாழை வாசித்தலை வல்ல பாணனாகிய மகன் வாசிக்கும் முறைமையை அறிந்து வாசிக்க,

38. இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ-வள்ளியோர் இன்மையின்பரிசிலர் செல்லாத உலகத்தே பரிசில் தருவாரை விரும்பி,

இனி இயங்கும் வையம் சகடமாகலின், உலகத்திற்கு இயங்கா வையமென வெளிப்படை கூறிற்றுமாம்.

39. துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப - தன்னை வெறுத்தல் மிக்க வருத்தத்தோடே கூடின வறுமை நின்னைக் கொண்டுபோகையினாலே,

40. முனிவு இகந்து இருந்த முது வாய் இரவல - வழிவருத்தந் தீர்ந்திருந்த பேரறிவு வாய்த்தற்றொழிலை உடையையாய இரவல,

துயர் ஆற்றுப்படுக்கையினாலே போந்து (39) விறலியர் தம்முடைய (31) சீறடியை (32) வெம்பரல் (8) அயிலுருப்பனையவாகிக் (7) கிழிக்கையினாலே (8) வரிநிழலசைஇப் (12) பின்னும் ஆற்றும் தகைபெற ஐது நடந்து (7) அந்நடையால் இளைத்து ஓய்ந்த அடியை (32) இளையர் தைவரப் (33) பாண்மகன் (37) பாலையை (36) இயக்க (37) வள்ளியோர் நசைஇச் (38) சீறியாழ் இடவயிற்றழீஇ (35) முனிவிகந்திருந்த இரவல வென முடிக்க.

41 – 2. கொழு மீன் குறைய ஒதுங்கி வள் இதழ் கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை – கொழுவிய மீன் துணிய நடந்து

---

[1] "கல்லா விளைஞர்" (பொருந. 100) என்பதன் உரையில், 'இனி, தத்தம் சிறுதொழிலன்றி வேறொன்றும் கல்லாத இளைஞர்··· என்றுமாம்' என்றெழுதிய பகுதியைக் காண்க.

வளவிய இதழையுடையதாகிய செங்கழுநீர்ப் பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமை,

43 - 4. பைங்கறி நிவந்த பலவின் நீழல் மஞ்சள் மெல் இலை மயிர் புறம் தைவர - பசிய மிளகுகொடி படர்ந்த பலாவின் நீழலிலே மஞ்சளினது மெல்லிய இலை தனது மயிரையுடைய முதுகைத் தடவ,

45. விளையா இள கள் நாற மெல்குபு பெயரா - முற்றாத இளைய தேன் நாற மென்று [1] அசையிட்டு,

46. குளவி பள்ளி பாயல் கொள்ளும் - காட்டு மல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளும்,

47. குட புலம் காவலர் மருமான் - மேற்றிசைக்கணுள்ள நிலத்தைக் காத்தற்றொழிலையுடைய சேரர் குடியிலுள்ளோன்,

எருமை (42) நீழலிலே (43) தைவரப் (44) பெயராக் (45) கொள்ளும் (46) குடபுலமென முடிக்க.

47 - 9. ஒன்னார் வடபுலம் இமயத்து வாங்கு வில் [2] பொறிந்த எழு உறழ் திணி தோள் இயல் தேர் குட்டுவன் - பகைவருடைய வடக்கின்கண் உள்ளதாகிய நிலத்திடத்தே நிற்கும் இமவானின் கண்ணே வளையும் வில்லை வைத்த கணையத்தை மாறுபடும் திணிந்த தோளினையும் நடக்கின்ற தேரினையுமுடைய குட்டநாட்டை உடையோன்,

50. வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது - பெருகுகின்ற நீரையும் கோபுரவாயிலையுமுடைய வஞ்சியென்னும் ஊரும் தரும் பரிசில் சிறியதாயிருக்கும்;

மருமான் (47) குட்டுவன் (49) அவனுடைய வஞ்சியும் வறிதென முடிக்க.

50. அதாஅன்று - அவ்வூரன்றி,

51 - 2. நறவு வாய் உறைக்கும் நாகு முதிர் நுணவத்து அறை வாய் குறு துணி - தேனைப் பூக்கள் தம்மிடத்தினின்று துளிக்கும் இளமை முதிர்ந்த நுணா மரத்தினது வெட்டின வாயையுடைய குறிய குறட்டை,

52 - 3. [அயிலுளி பொருத, கைபுனை செப்பங் கடைந்த மார்பின் :] அயில் உளி கடைந்த கைபுனை செப்பம் பொருத மார்பின் மந்தி (56) - கூர்மையையுடைய உளிகள் உள்ளே சென்று கடைந்த சாதிலிங்கந் தோய்ந்த [3] சேப்புச் சேர்ந்த மார்பின் மந்தி,

---

[1] அசை போடலெனவும் இத்தொடர் வழங்கும்.

[2] பொறித்தல் - வைத்தல் : "மாபொறித்த மால் - திருமார் பிடத்தே திருமகளை வைத்த மால்" (முல்லை. 2 - 3, ந.)

[3] சேப்பு - செம்மை நிறம்; "கழற்கால் சேக்கும், சேப்புடையார்" (திருவாப்பனூர்ப் புராணம், பாயிரம், 3)

54. செய் பூ கண்ணி செவி முதல் திருத்தி - இடைச்சையாற் செய்த பூவினையுடைய மாலையைச் செவியடியிலே நெற்றிமாலை யாகக் கட்டி,

55. நோன் பகடு உமணர் ஒழுகையொடு வந்த மந்தி (56) - வலி யினையுடைத்தாகிய எருத்தினையுடைய உப்பு வாணிகருடைய சகட வொழுங்கோடே கூட வந்த மந்தி,

56. மகாஅர் அன்ன மந்தி - அவர்கள் வளர்த்தலின் அவர்கள் பிள்ளைகளையொத்த மந்தி,

56 - 8. மடவோர் [1] நகாஅர் அன்ன நளி நீர் முத்தம் வாள் வாய் எருந்தின் வயிற்று அகத்து அடக்கி - அவ்விடத்து மடப்பத்தை யுடைய மகளிருடைய எயிற்றையொத்த செறிந்த நீர்மையை யுடைய முத்தை வாள் வாய்போலும் வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப் பொதிந்து,

59 - 60. [தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின், உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற :]

நுசுப்பின் நல்கூர் புறம் தோள் மறைக்கும் உமட்டியர் - நுசுப் பினது நல்கூர்ந்த புறத்தைத் தோள் மறைக்கும் உமட்டியர்,

என்றது : இடை தனது நுண்மையால் நெகிழ முயங்குங் காலத்து ஊற்றின்பம் பெருது மிடிப்பட்ட புறத்தினைத் தோள் இறுக முயங்கி அவ்வின்பத்தைக் கொடுத்தற்குக் காரணமான உமட்டியரென்றவாறு.

ஊற்றின்பம் பெற்றறியாதென்னும் புறங்கூற்றையென்றுமாம்.

உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற - அசைகின்ற இயல்பினை யுடைய ஐந்து பகுதியாகிய மயிரினையுடைய உப்பு வாணிகத்தியர் பெற்ற,

61. இளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும் - விளங்குகின்ற பூணையுடைய பிள்ளைகளுடனே தானும் கிலுகிலுப்பை கொண்டு விளையாடும்,

62. தத்து நீர் வரைப்பின் கொற்கை கோமான் - முரிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கையென்னும் ஊர்க்கு அரசன்,

மந்தி முத்தையடக்கி உமட்டியர் ஈன்ற புதல்வரோடே ஆடும் கொற்கையென முடிக்க.

63. தென் புலம் காவலர் மருமான் - தெற்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்றொழிலையுடையார் குடியிலுள்ளோன்,

63 - 5. [ஒன்னுர், மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக், கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன் :]

---

[1] "நகார் : ஆகுபெயர்" (கலித். 93 : 18, ந.)

ஒன்னுர் மண் மாறு கொண்ட செழியன் - பகைவர் நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட பாண்டியன்,

மாலை வெண்குடை கண் ஆர் கண்ணி கடு தேர் செழியன் - முத்து மாலையையுடைய கொற்றக்குடையினையும் [1] கண்ணிற்கு அழகு நிறைந்த கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய செழியன்,

66 - 7. [தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே:] நனை மகிழ் தாங்க அரு மரபின் தமிழ் நிலைபெற்ற மறுகின் மதுரையும் வறிது - தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பொறுத்தற்கரிய முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரையும் வறிது;

நனைமகிழ் : வினைத்தொகை.

கோமான் (62) மருமான் (63) செழியன் (65) அவனுடைய மதுரையும் தரும் பரிசில் சிறிதாயிருக்கும்.

67. அதாஅன்று - அவ்வூரன்றி,

68. [நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த :] பொய்கை நறு நீர் அடைகரை நிவந்த - பொய்கை யிடத்து நறிய நீரடை கரையிலே நின்று வளர்ந்த,

69. துறு நீர் கடம்பின் துணை ஆர் கோதை - நெருங்குகின்ற தன்மையையுடைய கடம்பினுடைய இணைதல் நிறைந்த மாலை,

கோதைபோலப் பூத்தலிற் கோதையென்ருர்.

70 - 71. [ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற், கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின் :] கோவத்து அன்ன கொங்கு உறைத்தலின் சேர்பு ஓவத்து அன்ன உண் துறை மருங்கின் - தன்னிடத்து இந்திர கோபத்தையொத்த தாதை உதிர்த்தலின் அத்தாது சேர்ந்து சித்திரத்தையொத்த உண்ணும் துறையிடத்தே நின்ற,

72 - 3. வரு முலை அன்ன வள் முகை உடைந்து திரு முகம் அவிழ்ந்த தெய்வம் தாமரை - எழுகின்ற பெரிய முலையையொத்த பெரிய முகை நெகிழ்ந்து அழகினையுடைய முகம்போல மலர்ந்த தெய்வத் தன்மையையுடைய தாமரையிடத்து,

"பொருளே யுவமஞ் செய்தனர்" (தொல்காப்பியம், உவமவியல், சூ. 9) என்னும் சூத்திரத்தாற் பொருளை உவமஞ் செய்தார்.

74 - 6. ஆசு இல் அகம் கை அரக்கு தோய்ந்தன்ன செ இதழ் பொதிந்த செ பொன் கொட்டை ஏமம் இன் துணை தழீஇ - குற்றம்

[1] பொருந. 148, உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

இல்லாத அங்கையைச் சாதிலிங்கம் தோய்ந்தாலொத்த சிவந்த இதழ் சூழ்ந்தசெம் பொன்னாற் செய்தாலொத்த [1]பீடத் திலே தன் உயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித் துயில் கொண்டு,

76 - 8. இறகு உளர்ந்து [2]காமரு தும்பி காமரம் செப்பும் தண் பணை தழீஇய தளரா இருக்கை-இத்துயிலெழுந்து விருப்பம் மருவின தும்பி சீகாமரமென்னும் பண்ணைப் பாடும் மருதநிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய,

79. குண புலம் காவலர் மருமான் - கிழக்கின்கண்ணதாகிய நிலத்தைக் காத்தற்றொழிலை யுடையார் குடியி லுள்ளோன்,

79 - 81. [ஒன்னார், ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை:] கதவம் ஓங்கு எயில் உருமு சுவல் சொறியும் ஒன்னார் தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தட கை - கதவத்தையுடைய உயர்ந்த மதிற்றலையிலே உருமேறு தன் கழுக்தைத் தினவால் தேய்க்கும் பகைவர் தூங்கெயிலை அழித்த தொடி விளங்கும் பெருமையையுடைய கையினையும்,

82. நாடா நல் இசை நல் தேர் செம்பியன் - ஐயுற்று ஆராயப் படாத உலகறிந்த நல்ல புகழினையும் நல்ல தேரினையுமுடைய சோழனது,

83. ஓடா பூட்கை உறந்தையும் வறிது - தன்னிடத்திருந்தோர் ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய உறந்தை யென்னும் ஊரும் தரும் பரிசில் சிறிதாயிருக்கும்;

அது, "முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய, புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்" (சிலப். 10 : 247 – 8) என்பதால் உணர்க.

அதாஅன்று - அவ்வூரன்றி,

84 - 5. வானம் வாய்த்த வளம் மலை கவாஅன் கானம் மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய - மழை பருவம் பொய்யாமற் பெய்கையினாலே உண்டான செல்வத்தையுடைய மலைப்பக்கத்தில் காட்டிடத்தே திரியும் மயில் கூவியதற்குக் குளிர்ந்து கூவிற்றென்று அருள் மிகுதியால் போர்வையைக் கொடுத்த,

86. அரு திறல் அணங்கின் ஆவியர் பெருமகன் - பெறுதற்கரிய வலியை யுடைத்தாகிய வடிவினையுடைய ஆவியர் குடியிற் பிறந்த பெரிய மகன்,

87. [3]பெரு கல் நாடன் பேகனும் - பெரிய மலை நாட்டையுடைய பேகனென்னும் வள்ளலும்,

---

[1] "பதுமபீடத் தன்னகர்" (கம்ப. கையடை. 7)

[2] முருகு. 75, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[3] சில பிரதிகளில், பெருங்கடனுடனென்ன மூலத்தும், பெரிய கடனுடனென்ன உரையிலும் வேறுபாடுண்டு.

நல்கிய பெருமகனாகிய பேகனுமென முடிக்க.

87 - 8. சுரும்பு உண நறு வீ உறைக்கும் நாகம் நெடு வழி – சுரும்பு உண்ணும்படி நறிய பூத்தேனைத் துளிக்கும் சுரபுன்னையை யுடைத்தாகிய நெடிய வழியில் நின்ற,

89. சிறு வீ முல்லைக்கு பெரு தேர் நல்கிய - சிறிய பூக்களை யுடைய முல்லைக்கொடி தடுத்ததற்கு அது வேண்டிற்றாகக் கருதிப் பெரிய தேரைக் கொடுத்த,

90 - 91. பிறங்கு வெள் அருவி வீழும் சாரல் பறம்பின் கோமான் பாரியும் - மிகுகின்ற வெள்ளிய அருவி குதிக்கும் பக்கத் தினையுடைய பறம்பென்னும் மலைக்கு அரசனாகிய பாரியென்னும் வள்ளலும்,

91 - 3. கறங்கும் மணி வால் உளை புரவியொடு வையகம் ஈரம் நல் மொழி மருள இரவலர்க்கு ஈந்த காரி (95) - ஒலிக்கும் மணி யினையும் வெள்ளிய தலையாட்டத்தினையுமுடைய குதிரையோடே தனது நாட்டினையும், அருளினையுடைய நன்றாகிய மொழியினையும் ஏனையோர் கேட்டு வியக்கும்படி இரவலர்க்குக் கொடுத்த காரி,

ஈர நன்மொழி மருள வென்று மாறுக.

94 - 5. அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சு வரு நெடு வேல் கழல் தொடி தட கை காரியும் - [1]தன்னிடத்துறையும் கொற்றவை யுடைய கோபத்தின் மிகுதியினாலே தான் விளங்கும் அச்சம் தோன்றும் நெடிய வேலினையும் உழலுந் தொடியினை அணிந்த பெருமையையும் உடைய கையினையும் உடைய காரியென்னும் வள்ளலும்,

95 - 7. [நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த:] நாகம் நல்கிய நிழல் திகழ் நீலம் கலிங்கம் ஆல் அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த ஆய் (99) - பாம்பு ஈன்று கொடுத்த ஒளிவிளங்கும் நீல நிறத்தையுடைய உடையினை ஆலின் கீழிருந்த இறைவனுக்கு நெஞ்சு பொருந்திக் கொடுத்த ஆய்,

98 - 9. சாவம் தாங்கிய சாந்து புலர் திணி தோள் ஆர்வம் நல் மொழி ஆயும் - வில்லை யெடுத்த சந்தனம் பூசிப் புலரும் திண்ணிய

---

[1] 'அழல்' என்பதற்கு ஈண்டு உரை எழுதப்பட்டிருத்தல் போல இந்நூல் 102 - ஆம் அடியிலுள்ள 'சினம்' என்பதற்கும் பொரு ளெழுதப் பெற்றுள்ளது. ஆயுதங்களிற் கொற்றவை யிருத்தல்: "வருங்கொற்ற மார்க்கு மணங்கினுடனே, மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்ப" (விக்கிரம. உலா, 49); "வென்றி மங்கை வேடர் வில்லின் மீதுமேவு பாதமுன், சென்று மீளு மாறு போல்வ" (பெரிய. கண்ணப்ப. 66); "போர்விசையமான்......வாளிடையும்......தழைத் தோங்க" (வனச விடுதூது, 2 - 4)

தோளினையும் [1]கேட்டோர்க்கு விருப்பத்தைச் செய்யும் நன்றாகிய சொல்லினையுமுடைய ஆயென்னும் வள்ளலும்,

99 – 101. மால் வரை கமழ் பூ சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை தீ கனி [2]ஔவைக்கு ஈந்த அதிகன் (103)-பெருமையையுடைய மலையிற் கமழும் பூக்களையுடைய பக்கமலையிலே நின்று அழகுபெற்ற கரு நெல்லியினது அமிழ்தின் தன்மை தன்னிடத்தே உண்டான இனிய பழத்தைத்தான் நுகர்ந்து உடம்பு பெறாதே ஔவைக்குக் கொடுத்த அதிகன்,

102 - 3. உரவு சினம் கனலும் ஒளி திகழ் நெடு வேல் அரவம் கடல்தானை அதிகனும் - [3]தன்னிடத்துறையும் கொற்றவையது வலியினையுடைய சினம் நின்றே எரியும் ஒளிவிளங்கும் நெடிய வேலினையும் ஆரவாரத்தையுடைய கடல்போலும் படையினையுமுடைய அதிகமானென்னும் வள்ளலும்,

103 - 5. கரவாது நட்டோர் உவப்ப நடை பரிகாரம் முட்டாது கொடுத்த நள்ளியும் (107) - தன் மனத்து நிகழ்கின்றனவற்றை மறையாது கூறி நட்புச் செய்தோர் மனமகிழும்படி அவர் இல்லறம் நடத்துதற்கு வேண்டும் பொருள்களை நாடோறும் கொடுத்த நள்ளியும்,

105 - 7. முனை விளங்கு தட கை துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடு கோடு நளி மலைநாடன் நள்ளியும் – பகைப்புலத்தே கொலைத்தொழிலான் விளங்கும் பெருமையையுடைய கையினையும் துளியையுடைய மழை பருவம் பொய்யாது பெய்யும் உயர்ச்சியாற் காற்றுத் தங்கும் நெடிய சிகரங்களையுடைய செறிந்த மலைநாட்டையுமுடையவனாகிய நள்ளியென்னும் வள்ளலும்,

107 - 9. நளி சினை நறு போது கஞலிய நாகு முதிர் நாகத்து குறுபொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த ஓரி (111) - செறிந்த கொம்புகளிடத்தே நறிய பூக்கள் நெருங்கின இளமையையுடைய

---

[1] "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" (குறள், 643)

[2] ஔவை அதிகமானிடத்து நெல்லிக்கனி பெற்றமையைப் பின் வருஞ் செய்யுளானு முணர்க:"வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார், களம்படக் கடந்த கழறொடித் தடக்கை, ஆர்கலி நறவி னதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி, பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவன் போல, மன்னுக பெரும நீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே" (புறநா. 91)

[3] 94 – 5 – ஆம் அடியின் உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

முதிர்ந்த சுர புன்னையையும் குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்த ஓரி,

110 - 11. காரி குதிரை காரியொடு மலைந்த ஓரி குதிரை ஓரியும்- காரியென்னும் பெயரை யுடைத்தாகிய குதிரையையுடைய காரி யென்னும் பெயரையுடையவனுடனே போர் செய்த ஓரியென்னும் பெயரையுடைத்தாகிய குதிரையையுடையஓரியென்னும் வள்ளலும்,

காரி கரிய குதிரையென்றும், ஓரி பிடரி மயிரென்றும் கூறுவாருமுளர்.

111 - 3. [எனவாங், கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள், எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்:]

என எழுவர் ஆங்கு பூண்ட ஈகை செ[1]நுகம் - என்று சொல்லப் பட்ட எழுவரும் அக்காலத்தே மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை,

எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள் எழுவர் - தம் மேலே வருகின்ற போர்களைக் கடந்த கணையத்தோடு மாறுபடுகின்ற திணிந்த தோளினையுடைய எழுவர்,

114 - 26. [விரிகடல் வேலி வியலகம் விளங்க, வொருதான் ருங்கியவுரனுடைய நோன்ரு, ணறுவீ நாகமு மகிலு மாரமும், துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய, பொருபுன றருஉம் போக்கரு மரபிற், றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்னருள்ளும், மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா, ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன், களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப், பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப், பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை, நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு:]

விரி கடல் வேலி வியலகம் விளங்க (114) ஒரு தான் தாங்கிய (115) நல்லியக் கோடனை நயந்தனிர் செலின் (269) - பரந்த கடலாகிய வேலியையுடைய உலகமெல்லாம் விளங்கும்படி ஒருவனாகிய தானே பொறுத்த நல்லியக் கோடனை விரும்பிச் செல்லின்,

மறு இன்றி விளங்கிய (121) உரன் உடை நோன்றாள் (115) வடு இல் வாய் வாள் (121) உறு புலி துப்பின் ஓவியர் பெருமகன் (122) - குற்றமின்றி விளங்கிய அறிவையுடைத்தாகிய வலியையுடைய முயற்சியினையும் பகைவர் முகத்தினும் மார்பினும் வெட்டின வாய்த்த வாளையும் மிக்க புலிபோலும் வலியினையுமுடைய ஓவியருடைய

---

[1] நுகம் - பாரம் : "படுநுகம் - பெரிய பாரத்தை" (சீவக. 203, ந.); "நோன்மை நுகம் பூண்டார்" (சீவக. 2794): "பொழில்கண் விளக்குந் தொழினுகம் பூண்டு" (பெருங். 1. 33 : 54)

நறு வீ நாகமும் அகிலும் ஆரமும் (116) துறை ஆடும் மகளிர்க்கு தோள் புணை ஆகிய (117) பொரு புனல் தரூஉம் (118) இலங்கை (119) - நறிய பூக்களையுடைய சுரபுன்னையையும் அகிலையும் சந்தனத்தையும் குளிக்குந் துறையிலே புனலாடும் மகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாகக் கரையைக் குத்துகின்ற நீர்தரும் இலங்கை,

கருவொடு (119) பெயரிய மரபின் (118) இலங்கை (119) - [1] கருப்பதித்த முகூர்த்தத்தாலே ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினையுடைய இலங்கை,

தொல் மா இலங்கை பெயரிய (119) நல் மா இலங்கை (120) - பழையதாகிய பெருமையினையுடைய இலங்கையினது பெயரைப் பெற்ற நன்றாகிய பெருமையையுடைய இலங்கை,

மன்னருள்ளும் (120) ஓவியர் பெருமகன் (122) - அவ்விலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர் குடியிற் பிறந்தோன்,

களிறு தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி (123) - யானையைச் செலுத்துதலாலுளதாகிய தழும்பு கிடந்த வீரக்கழல் கிடந்தசையும் பிறக்கிடாத அடியினையும்,

பிடி கணம் சிதறும் கை (124) - பிடித்திரளைப் பலர்க்கும் கொடுக்கும் கை,

பெயல் மழை தட கை (124) - பெய்தற்றொழிலையுடைய மழை போன்ற பயனையுடைய பெரிய கையினையுமுடைய,

பல் இயம் கோடியர் புரவலன் (125) - பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தலை வல்லவன்,

பெரு இசை (125) நல்லியக்கோடனை நயந்த கொள்கையொடு (126) - பெரிய புகழையுடைய நல்லியக்கோடனைக் காண்டற்கு விரும்பிய கோட்பாட்டுடனே,

பெருமகன் (122) புரவலனாகிய (125) நல்லியக்கோடனென முடிக்க.

127. தாங்கு அரு மரபின் தன்னும் - பிறரால் பொறுத்தற்கரிய குடிப் பிறந்தோர்க்குரிய முறைமைகளையுடைய தன்னையும்,

127 - 8. தந்தை வான் பொரு நெடு வரை வளனும் பாடி - அவன் தந்தையுடைய தேவருலகத்தைத் தீண்டும் நெடிய மலையிற் செல்வத்தையும் பாடி,

129. முன் நாள் சென்றனம் ஆக - நாலுபத்து நாளைக்கு முன்னே போனேமாக,

---

[1] கருப்பதித்த முகூர்த்தம் - இந்நகரை அமைக்கத் தொடங்கிய காலம்; "கருவைக்கு நெடுநகரை" (கம்ப. ஊர்தேடு. 232)

இந்நாள் - இற்றை நாள்,

130. திறவா கண்ண சாய் செவி குருளை - விழியாத கண்ணை யுடையவாகிய வளைந்த செவியினையுடைய குட்டி,

"நாயே பன்றி புலிமுய லென்கு, மாயுங் காலைக் குருளை யென்ப" (தொல். மரபு. சூ. 8)

131. கறவா பால் முலை கவர்தல் நோனாது - பிறரால் கறக்கப் படாத பாலினையுடைய முலையை உண்ணுதலைத் தன் பசி மிகுதியாற் பொறுத்தலாற்றாது,

132. புனிறு நாய் குரைக்கும் புல்லென் அட்டில் - ஈன்றணி மையையுடைய நாய் கூப்பிடும் பொலிவழிந்த அடுக்களையில்,

133. காழ் சோர் அட்டில் (132) - கழிகள் [1] ஆக்கையற்று விழு கின்ற அட்டில்,

முது சுவர் கணம் சிதல் அரித்த அட்டில் (132) - பழைய சுவரிடத்து எழுந்த திரண்ட கறையான் தின்ற அட்டில்,

134. [பூழி பூத்த புழற்கா ளாம்பி :] பூழி புழல் [2] காளாம்பி பூத்த அட்டில் (132) - நனைந்த புழுதி உட்பொய்யாகிய காளானைப் பூத்த அட்டில்,

135 - 6. [ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வளைக் கைக் கிணைமகள் :] ஒடுங்கு பசி உழந்த ஒல்கு நுண் மருங்குல் வளை கை கிணைமகள் - ஒடுங்குதற்குக் காரணமான பசியாலே வருந்தி நுடங்கும் நுண்ணிய இடையினையும் வளையலை யணிந்த கையினையு முடைய [3] கிணைவனுடைய மகள்,

136 - 7. வள் உகிர் குறைத்த குப்பை வேளை உப்பிலி வெந்ததை - பெரிய உகிராற் கிள்ளின குப்பையில் நின்ற வேளை உப்பின்றாய் அட்டிலிலே (132) வெந்ததனை,

138 - 9. மடவோர் காட்சி நாணி கடை அடைத்து இரு பெரு ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும் - வறுமையுறுதலும் இயல்பென் றறியாது புறங்கூறுவோர் காண்டற்கு நாணித் தலைவாசலை

---

[1] ஆக்கை - கழிகளைக் கட்டும் கயிறு முதலியன; "கால்கொடுத் தெலும்பு மூட்டிக் கவினரம் பாக்கை யாத்துத், தோலுடுத் துதிர மட்டித் தொகுமயிர் வேய்ந்த கூரை" (திருநா. திருக்கொண்டீச் சுரம்); "நரம்பாலாக்கையிட்டுத் தசைகொண்டு வேய்ந்த வகம்" (கந்தரலங்.)

[2] "ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி, னாம்பி பூப்ப" (புறநா. 164 : 1 - 2); "சாம்பல்கண் டறியா வாம்பி பூத்த, வெலிதுயி லடுப்பு" (காசிக். 57)

[3] கிணைவன் மகள் - கிணைப்பறை கொட்டுவோனுடைய மனைவி; மகள் - மனைவி; மணி. 21 : 30.

அடைத்து மிடியாற் கரிய பெரிய சுற்றத்தோடே கூட இருந்து அடையத் தின்னும்,

140. [1] அழி பசி வருத்தம் வீட - அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசியாலுளதாகிய வருத்தங்கள் விட்டுப் போம்படி,

140 - 43. பொழி கவுள் தறுகண் பூட்கை மணி தயங்கும் மருங்கின் சிறு கண் யானையொடு பெரு தேர் எய்தி யாம் அவண் நின்றும் வருதும் - மதம் வீழ்கின்ற கதுப்பினையும் கடுகக் கொல்லுத லாகிய மேற்கோளினையும் மணியசையும் பக்கத்தினையும் சிறிய கண்ணையுமுடைய யானையுடனே பெரிய தேரையும் பெற்று யாம் அவ்விடத்துநின்றும் வாராநின்றேம்;

தும் நிகழ்காலத்து வருதல், "உம்மொடு வரூஉங் கடதற" (தொல். வினை. சூ. 5) என்புழிக் கூறினும்.

143 - 5. நீயிரும் நயந்து இவண் இருந்த இரு பெரு ஒக்கல் செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின் - நீங்களும் மூவேந்தர் பாற்பெறும் பரிசிலை, விரும்பி இவ்விடத்திருந்த வறுமையாற் கரிய வாகிய பெரிய சுற்றத்தினது தலைமையை யுடைத்தாகிய நெஞ் சுடனே அவனிடத்தே போவீராயின்,

146 - 50. [அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும், தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும், கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும், நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும், கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தர:]

கடல் உலாய் நிமிர்தர (150) அலை நீர் (146) கானல் வெள் மணல் (150) - கடல் பரந்து எற்றிப் பொருதலாலே அலையும் நீரை யுடைய கரையில் வெள்ளிய மணலிடத்து நின்ற,

---

[1] "அற்றா ரழிபசி தீர்த்தல்" (குறள், 226) என்பதில், 'அழிபசி' என்பதற்கு உரையில் மிக்க பசி யென்றும், அதன் விசேடவுரையில், 'எல்லா நன்மைகளும் அழிய வருதலின் அழிபசி யென்றார்' என்றும் பரிமேலழகர் எழுதியிருத்தல் இங்கே அறிதற்குரியது. பசி, அறிவு முதலியவற்றை அழிக்குமென்பதை, "அறிவுகெட நின்ற நல்கூர் மையே" (புறநா. 266 : 13), "தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக, நல்குர வென்னு நசை" (குறள், 1043), "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம், நாணணி களையு மாணெழில் சிதைக்கும்...பசிப்பிணி யென்னும் பாவி" (மணி. 11 : 76 - 80), "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்போம் பறந்து" (நல்வழி) என்பவற்றால் உணர்க.

தாழை அன்னம் பூப்பவும் (146) - தாழை அன்னம்போலப் பூக்கையினாலும்,

தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும் (147) - இளவேனிற் காலந் தொடங்குகின்ற நாளிலே [1] செருந்தி தன்னைக் கண்டாரைப் பொன்னென்று மருளப் பண்ணுகையினாலும்,

கடு சூல் முண்டகம் கதிர் மணி கழாஅலவும் (148) - [2] முதற் சூலையுடைய கழிமுள்ளி ஒளியையுடைய நீலமணிபோலப் பூக்கையினாலும்,

[3] கன்னியாய் நின்று அரும்புதலிற் கடுஞ்சூல். கழாஅல - கழற்ற.

நெடு கால் புன்னை நித்திலம் வைப்பவும் (149) - நெடிய தாளினையுடைய புன்னை நித்திலம்போல அரும்புகையினாலும்,

151. பாடல் சான்ற நெய்தல் நெடு வழி பட்டினம் (153) - புகழ்தல் அமைந்த நெய்தனிலத்து நெடிய வழியிற் பட்டினம்,

152. மணி நீர் வைப்பு பட்டினம் (153) - நீலமணிபோலும் கழி சூழ்ந்த ஊர்களையுடைய பட்டினம்,

மதிலொடு பெயரிய பட்டினம் (153) - மதிலோடே பெயர் பெற்ற பட்டினம்,

என்றது [4] எயிற்பட்டின மென்றதாம்.

153. பனி நீர் படுவின் பட்டினம் படரின் - குளிர்ச்சியையுடைய நீரையுடைய குளங்களை யுடைத்தாகிய எயிற்பட்டினத்தே செல்வீராயின்,

படு, மடுவுமாம்.

154. ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன - உயர்ந்த தன்மையையுடைய ஒட்டகம் உறக்கத்தே கிடந்தாலொத்த,

---

[1] "பொன்னடர்ந் தன்ன வொள்ளிணர்ச் செருந்திப், பன்மலர் வேய்ந்த" (அகநா. 280: 1 - 2)

[2] "கடுஞ்சூல் மந்தி - முற்பட்ட சூலையுடைய மந்தி" (பெரும்பாண். 395, ந.), "கடுஞ்சூல் மகளிர் - முதற்சூல் கொண்ட மகளிர்" (மதுரைக். 609, ந.), "கடுஞ்சூலா நாகு - முதற்சூல் கொண்ட பசு" (கலித். 110: 14) என்று பிறவிடங்களிலும் நச்சினார்க்கினியர், 'கடுஞ்சூல்' என்பதற்கு இவ்வாறே பொருளெழுதுதல் அறியத் தக்கது; "பிணங் கடுங்கனலும்" (தக்க. 50) என்பதன் உரையில், 'கடுங்கனல் - புதுக்கனல்' என்று அதன் உரையாசிரியர் எழுதியிருத்தலால், கடுமையென்பது புதுமையென்னும் பொருடருவதென்று அறியப்படுதலின், அப்பொருளை உட்கொண்டு இவ்வாறு எழுதி வருகின்றாரென்று தோற்றுகின்றது. [3] (பி - ம்.) 'கண்ணியாய்'.

[4] "எயிற்பட்டினம் : "இம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்" (சிறுபாண். இறுதி வெண்பா).

155. வீங்கு திரை கொணர்ந்த விரை மரம் விறகின் - மிகு கின்ற திரை கொண்டுவந்த மணத்தையுடைய அகிலாகிய விறகாலே,

156. கரு புகை செ தீ மாட்டி - கரிய புகையையுடைய சிவந்த நெருப்பை எரித்து,

156 - 8. பெரு தோள் மதி [1] ஏக்கறூஉம் மாசு ஆறு திரு முகத்து நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த - பெரிய தோளினையும் மதி இத்தன்மை பெற்றிலேமேயென்று விரும்பு தற்குக் காரணமான மறுவறுகின்ற அமைதியினையுடைய முகத் தினையும் முனையினையுடைத்தாகிய வேல்போலும் பார்வையினையு முடைய நுளைச்சாதியிற் பிறந்த மகளாலே அரிக்கப்பட்ட,

159. பழ படு தேறல் பரதவர் மடுப்ப - பழையதாகிய களிப்பு மிகுகின்ற கட்டெளிவைப் பரதவர் எடுத்துவந்து வாயிடத்தே வைக்க,

160 - 61. கிளை மலர் படப்பை கிடங்கில் கோமான் தளை அவிழ் தெரியல் தகையோன் பாடி - கொத்திலெழுந்த பூக்களையுடைய வாகிய தோட்டங்களையுடைய கிடங்கிலென்னும் ஊர்க்கு அரச னாகிய அரும்பு நெகிழ்ந்த மாலையினையுடைய அழகையுடை யோனைப் பாடி,

162. அறல் குழல் பாணி தூங்கியவரொடு - தாளவறுதியை யுடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப ஆடின மகளிரோடே,

163. வறல் குழல் சூட்டின் - உலர்தலையுடைய குழல்மீனைச் சுட்டதனோடே,

வயின் வயின் பெறுகுவிர் - மனைதோறும் மனைதோறும் பெறுகுவிர்;

பட்டினம் படரிற் (153) கிடங்கிற்கோமானாகிய (160) தகை யோனைப் பாடி (161) ஆடின மகளிரோடே (162) நீங்களும் சூட்டோடே (163) தேறலைப் பரதவர் மடுப்ப (159) அவற்றை வயின்வயிற் பெறுகுவிரென முடிக்க.

164. பைநனை அவரை பவழம் கோப்பவும் - பசுத்த அரும்பு களை யுடைய அவரை பவழம்போலப் பூக்களை முறையே தொடாநிற்கவும்,

165. கரு நனை காயா கணம் மயில் அவிழவும் - கரிய அரும்பினையுடைய காயாக்கள் திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவாநிற்கவும்,

166. கொழு கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும் - கொழுவிய கொடியினையுடைய முசுட்டை கொட்டம் போலும் பூவைத் தன்னிடத்தே கொள்ள நிற்கவும்,

[2] கொட்டை : நூற்கின்ற கொட்டையுமாம்.

---

[1] "கடைக்கணேக்கற" (சீவக. 1622)

[2] கொட்டையென்று பாடங்கொண்டு அதற்கெழுதிய குறிப்பாக இதனைக் கொள்ளவேண்டுமென்று தோற்றுகிறது.

167. செழு குலை காந்தள் கைவிரல் பூப்பவும் - வளவிய குலையினையுடைய காந்தள் கைவிரல்போலப் பூவாநிற்கவும்,

168. கொல்லை நெடு வழி கோபம் ஊரவும் - கொல்லையிடத்து நெடிய வழிகளிலே இந்திர கோபம் ஊராநிற்கவும்,

இச் செயவெனெச்சமெல்லாம் ஈண்டு நிகழ்கால முணர்த்தியே நின்றன; ஞாயிறுபட வந்தானென்றாற்போல.

169. முல்லை சான்ற [1] முல்லை அம் புறவின் - இவை கால முணர்த்தி இங்ஙனம் நிகழ்த்தாநிற்கவும், கணவன் கூறிய சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்து ஆற்றியிருந்த தன்மை யமைந்த முல்லைக்கொடி படர்ந்த அழகினையுடைய காட்டிடத்து,

இது, "மாயோன் மேய" (தொல். அகத். சூ. 5) என்னும் சூத்திரத்தானுணர்க.

170 - 71. விடர் கால் அருவி வியல் மலை சுடர் மூழ்கி கால் மாறிய செவ்விநோக்கி - முழைஞ்சுகளிலே குதிக்கும் அருவி யினையுடைய பெரிய அத்தகிரியிலே ஞாயிறு மறைந்து அவன் கிரணங்கள் போன அந்திக் காலத்தைப் பார்த்து,

172 - 3. [திறல்வே னுதியிற் பூத்த கேணி, விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின் :] திறல் வேல் நுதியின் கேணி பூத்த விறல் வேல் வென்றி வேலூர் எய்தின் - முருகன் கையில் வலியினை யுடைத்தாகிய வேலின் நுதிபோலே கேணி பூக்கப்பட்ட வெற்றியை யுடைய வேலாலே வெற்றியையுடைய வேலூரைச் சேரின்,

என்றது : நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்ததொரு கதை கூறிற்று. இதனானே வேலூரென்று பெயராயிற்று.

174. உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை - மிகு கின்ற வெயிலுக்கு உள்ளுறைகின்றோர் வருந்தப்பட்ட வெப்பம் விளங்குகின்ற குடிலில் இருக்கின்ற,

---

[1] "முல்லை சான்ற புறவு - இருத்தலாகிய உரிப்பொருளமைந்த காடு" (மதுரைக். 285, ந.) என்றும், முல்லைப் பாட்டின் முதலில், "இல்லற நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாமென்று கருதி இருத்தலென்னும் பொருட்ர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறின மையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தாயிற்று" என்றும் நச்சினார்க்கினியர் எழுதி யிருத்தல் காண்க.

175. எயிற்றியர் அட்ட இன் புளி வெ சோறு - எயினக் குலத்தின் மகளிராலே அடப்பட்ட இனிய [1] புளிங்கறியிடப்பட்ட வெவ்விய சோற்றை,

புளி : தித்திப்புமாம்.

176. தேமா மேனி சில் வளை ஆயமொடு - தேமாவின் தளிர் போலும் மேனியையும் [2] சிலவாகிய வளையினையுமுடைய நும் மகளிருடைய திரளுடனே,

177. ஆமான் சூட்டின் - ஆமானினது சூட்டிறைச்சியை யுடைய,

அமைவர பெறுகுவிர் - பசிகெடப் பெறுகுவிர்;

வேலூரெய்திற் (173) சூட்டினையுடைய (177) சோற்றை (175) ஆயத்தோடே (176) அமைவரப் பெறுகுவிரென முடிக்க.

முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்திருத்தலிற் சேரக் கூறினர், [3]இரண்டுங் கூடி யல்லது பாலைத்தன்மை பிறவாமையின்.

178 - 9. [நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக், குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி :] நாள் கோதை தொடுத்த நறு பூ சினை குறு கால் காஞ்சி கொம்பர் ஏறி - நாட்காலத்தே மாலை கட்டினாற் போல இடையறுமல் தொடுத்த நறிய பூக்களையுடைய சிறிய கொம்பு களையும் குறிய தாளினையுமுடைய காஞ்சி மரத்தின் பெரிய கொம்பரிலே ஏறி,

180. நிலை அரு குட்டம் நோக்கி நெடிது இருந்து - ஒரு காலத்தும் நிலைப்படுதல் அரிதாகிய ஆழத்தில் திரிகின்ற மீன்களை எடுக்கும் காலத்தைக் கருதி நெடும்பொழுது இருந்து,

181 - 2. புலவு கயல் எடுத்த பொன் வாய் மணி சிரல் வள் உகிர் கிழித்த வடு ஆழ் பசு அடை - புலானாற்றத்தையுடைய கயலை முழுகி யெடுத்த பொன்னிறம்போலும் வாயையுடைய நீலமணி போன்ற சிச்சிலியினது பெரிய உகிர் கிழித்த வடுவழுந்தின பசிய இலையினையுடைய,

183. முள் அரை தாமரை முகிழ் விரி நாள் போது - முள்ளை யுடைத்தாகிய தண்டினையுடைய வெண்டாமரையினது அரும்பு விரிந்த நாட்காலத்திற் பூவை,

---

[1] புளி - புளிங்கறி : "புளியுஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ், தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே" (தமிழ்நா.)

[2] "சில்வளை விறலி யென்றது பல வளையிடுவது பெதும்பைப் பருவத்தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறிற்று" (பதிற். 57 : 6, உரை)

[3] "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப். காடுகாண். 64 - 6)

184. கொங்கு கவர் நீலம் செ கண் சேவல் - தேனை நுகர்கின்ற நீல நிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய வண்டொழுங்கு,

பூவைத் தேனையென்றது. [1]''தெள்ளிது'' என்றதனுன் முடிக்க.

185. மதி சேர் அரவின் மான தோன்றும் - திங்களைச் சேர்கின்ற கரும்பாம்பை யொப்பத் தோன்றும்,

186. மருதம் சான்ற மருதம் தண் பணை - ஊடியுங் கூடியும் போகம் நுகருந் தன்மை யமைந்த மருதநிலத்திற் குளிர்ந்த வயலிடத்து,

187 - 8. [அந்தண ரருகா வருங்கடி வியனகர், அந்தண் கிடங்கினவ னூழ் ரெய்தின்:] அம் தண் கிடங்கின் அரு கடி வியன் நகர் அந்தணர் அருகா அவன் ஆமூர் எய்தின் - அழகினையுடைய குளிர்ந்த கிடங்கினையும் அரிய காவலையும் அகற்சியையுடைய அகங்களையுமுடைய அந்தணர் சுருங்காத அவனுடைய ஆமூரைச் சேர்வீராயின்,

189 - 90. [வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின் உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை :] வலிபுணர் எருத்தின் வலம் பட நடக்கும் நோன் பகடு உரன் கெழுப் உழவர் தங்கை - இழுத்தற்குரிய வலிபொருந்தின கழுத்தினாலே வெற்றியுண்டாக நடக்கும் மெய் வலியினை யுடைத்தாகிய எருத்தினையுடைய அறிவு பொருந்தின உழவருடைய தங்கையாகிய,

உரன் - அறிவு; "உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்" (பதிற். 73 : 1) என்றாற்போல.

191 - 2. பிடி கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து தொடி கை மகடூஉ - பிடியினது கையை யொத்த பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகினையும் தொடியணிந்த கையினையுமுடைய மகள்.

192. மகமுறை தடுப்ப - உழவர் தங்கையாகிய (190) மகடூஉ (192) தான் உள்ளே யிருந்து தன் பிள்ளைகளைக்கொண்டு நும்மை அடையவே எல்லாரையும் போகாது விலக்குகையினாலே,

இனி, பிள்ளைகளை உபசரிக்குமாறுபோல உபசரித்து விலக்க வென்றுமாம்.

193 - 4. இரு காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த அவைப்பு மாண் அரிசி அமலை வெள் சோறு - கரிய வயிரத்தையுடைய உலக்கையினது பூணினையுடைய முகத்தைத் தேயப்பண்ணின குற்றுதல் மாட்சிமைப்பட்ட அரிசியாலாக்கின கட்டியாகிய வெள்ளிய சோற்றை,

195. கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர் - கவைத்த காலினையுடைய ஞெண்டும் பீர்க்கங் காயுங் கலந்த கலப்புடனே பெறுகுவிர்;

[1] "முதன்முனைவரிற் கண்ணென் வேற்றுமை, சினைமுன் வருதல் தெள்ளி தென்ப" (தொல். வேற்றுமைமயங்கு. சூ. 5)

தண்பணையின் (186) ஆமூரெய்தின் (188) உழவர் தங்கை யாகிய (190) மகடூஉத் தடுக்கையிலுலே (192) சோற்றைக் (194) கலவையொடு பெறுகுவிரென முடிக்க.

196 - 201. [எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக், கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள், நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள், அண்ணல் யானை யருவி துக ளவிப்ப, நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்:]

எரி மறிந்தன்ன நாவின் (196) - மேனோக்கியெரிகின்ற நெருப்புச் சாய்ந்தாலொத்த நாவினையும்,

கருமறி காதின் (197) - வெள்யாட்டு மறிகளை அணிந்த காதினையும்,

கவை அடி பேய் மகள் (197) - கவைத்த அடியினையுமுடைய பேய்மகள்,

நிணன் உண்டு சிரித்த (198) இலங்கு எயிறு (196) தோற்றம் போல (198) - நிணத்தைத் தின்று சிரித்த விளங்குகின்ற எயிற் றினது தோற்றரவு போல,

பிணன் உகைத்து சிவந்த பெரு உகிர் பணை தாள் (199) அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப (200) நீறு அடங்கு தெருவின் ஊர் (201) - தாம் கொன்ற பிணங்களின் தலைகளைக் காலாலே தள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும் பெருமையையுடைய கால்களையுமுடைய தலைமையை யுடையவாகிய யானைகளின் மதவருவி எழுந்த துகளை அவிக்கையினுலே புழுதி அடங்கின தெருவினையுடைய ஊர்,

அவன் சாறு அயர் மூதூர் (201) - அவனுடைய விழா நடக்கின்ற பழைய ஊர்,

202. சேய்த்தும் அன்று சிறிது நணியது வே - தூரிய இடத்தது மன்று; சிறிதாக அண்ணிய இடத்ததே;

மூதூர் நணியதென்க.

203 - 6. [பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அருமறை நாவினந்தணர்க் காயினும், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, அடையா வாயிலவ னருங்கடை குறுகி:]

பொருநர்க்கு அடையா ஆயினும் புலவர்க்கு அடையா ஆயினும் அருமறை நாவின் அந்தணர்க்கு அடையா ஆயினும் அரு கடை வாயில் குறுகி - இணைப் பொருநர்க்கு அடைக்கப்படாவாயினும், அறிவுடையோர்க்கு அடைக்கப்படாவாயினும், அரிய வேதத்தை யுடைத்தாகிய நாவினையுடைய அந்தணர்க்கு அடைக்கப்படா வாயினும் ஏனையோர்க்கு உள்ளே சேறற்கரிய தலைவாயிலையணுகி,

அடையாவென்ற பன்மை நான்கு வாயிலையும் கருதியது.

கடவுள் மால் வரை கண் விடுத்தன்ன அவன் வாயில் - அதுதான் [1] தெய்வங்களிருக்கின்ற பெருமையையுடைய மேரு ஒரு கண்ணை விழித்துப் பார்த்தாலொத்த அவனுடைய கோபுரவாசல்,

அன்றிப் பொருநர்க்காயினும் புலவர்க்காயினும் அருமறைநாவி னந்தணர்க்காயினும் அடையா வாயிலென்றுற் பொருளின்மை யுணர்க.

207. செய்நன்றி அறிதலும் - பிறர் தனக்குச் செய்த நன்றியை யறிந்து அவர்க்குத் தானும் நன்மை செய்தலையும்,

[2] சிற்றினம் இன்மையும் - அறிவும் ஒழுக்கமுமில்லாத மாக்கள் திரள் தனக்கு இல்லாமையும்,

208. இன்முகம் உடைமையும் - நோக்கினோர்க்கு இனிய முகத்தை எக்காலமும் உடையனாதலையும்,

இனியன் ஆதலும் - [3] முகத்தி னினிய நகாஅ அகத்து இன்னாதவ னாகாமல் நெஞ்சு முகத்திற்கேற்ப இனியனாதலையும்,

209. செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த - எக்காலமும் தன்னுடனே செறிந்து விளங்குகின்ற தலைமையினை யுடைய பல கலைகளை உணர்ந்தோர் புகழ,

210. அஞ்சினர்க்கு அளித்தலும் - தன் வீரத்தைக் கண்டு அஞ்சி வந்து [4] அடி வீழ்ந்தார்க்கு அருள் செய்தலையும்,

வெ சினம் இன்மையும் - கொடிய சினம் இல்லாமையையும்,

[5] கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்.

211. ஆண் அணி புகுதலும் - வீரர் நின்ற அணியிலே சென்று அவ்வணியைக் குலைத்தலையும்,

"ஆண்பா லெல்லா மாணெனற் குரிய," (தொல். மரபு. சூ. 50) என்று கூறி, "பெண்ணு மாணும் பிள்ளையு மவையே" (தொல்.

---

[1] மேருவிற் றேவர்கள் இருத்தலால் அதற்குச் சுராலயமென ஒரு பெயருண்டு.

[2] "சிறியவினமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும் விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழு; அறிவைத் திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்று" என்பர் பரிமேலழகர்; திருக்குறள், 46-ஆம் அதி. அவதாரிகை.

[3] "முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா, வஞ்சரை யஞ்சப் படும்" (குறள், 824)

[4] "வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற், றண்டமுந் தணிதிநீ பண் டையிற் பெரிதே", "மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி, யீயென விரக்குவ ராயிற் சீருடை, முரசுகெழு தாயத் தரசோ தஞ்ச, மின்னுயி ராயினுங் கொடுக்குவென்" (புறநா. 10: 5-6, 73: 1-4)

[5] முருகு. 134 - 5, உரையைப் பார்க்க.

மரபு. சூ. 69) என்றதனால், [1] ஆணென்றது ஆண்பாலையே உணர்த்து மேனும் அணிபுகுதலென்றதனால் ஈண்டு வீரரை உணர்த்திற்று.

[2] அழி படை தாங்கலும் - தனது கெட்ட படையிடத்தே தான் சென்று பகைவரைப் பொறுத்தலையும்,

212. வாள் மீ கூற்றத்து வயவர் ஏத்த - வாள் வலியாலே மேலாகிய சொல்லையுடைய வீரர் புகழ,

213. கருதியது முடித்தலும் - தன்னெஞ்சு கருதிய புணர்ச்சியைக் குறை கிடவாமல் முடிக்கவல்ல தன்மையையும்,

நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறுக்காற் பிறப் பறுமையிற் கருதியது முடிக்கவேண்டுமென்றார்.

காமுற படுதலும் - அங்ஙனம் தானே இன்பமுறாதே அம் மகளிரும் தம்மாலே மிக்க இன்பத்தைப் பெறும் தன்னை விரும்பப் பட்டிருத்தலையும்,

214. ஒரு வழி படாமையும் - அவர்கள் அங்ஙனம் விரும்பினா களென்று அவர்கள் வசத்தனாகாமையும்,

ஓடியது உணர்தலும் - தான் அவர் வசத்தனாகாமையின் அவர் வருந்திய தன்மையையுணர்ந்து அவரைப் பாதுகாத்தலையும்,

இனி, அவர்கள் நெஞ்சில் நிகழ்ந்ததனை உணர்ந்து அவர் குறை முடித்தலென்றுமாம்.

215. அரி ஏர் உண் கண் அரிவையர் ஏத்த - செவ்வரி பொருந் தின மையுண் கண்ணினையுடைய மகளிர் புகழ,

216. அறிவு மடம் படுதலும் - தான் கூறுகின்றவற்றை உணரும் அறிவில்லாதார்மாட்டுத் தான் அறியாமைப்பட்டிருத் தலையும்,

அறிவு நன்கு உடைமையும் - தன்னைப்போல் அறிவுடையார் மாட்டு நன்றாக அறிவுடையனாயிருத்தலையும்,

''ஒளியார்மு னொள்ளிய ராதல் வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்'' (குறள், 714) என்றார் பிறரும்.

217. வரிசை அறிதலும் - பரிசிலருடைய தரமறிந்து அவர் பெறுமுறைமையே கொடுத்தலையும்,

கொடுத்தல் இதற்கும் கூட்டுக.

---

[1] ''விந்தா சனிகொண்கன் வேந்தரி லாண்பிள்ளை'' (வங்கர் கோவை) என்றவிடத்தும் ஆணென்பது வீரரென்னும் பொருள் தருதல் காண்க.

[2] அழிபடை தாங்கலென்னும் பெயரிய புறத்துறை ஒன்றுண்டு: ''இழிபுடன் றிகல்பெருக, அழிபடை யரண்காத்தன்று'' (பு. வெ. 93) என்பது அதன் இலக்கணம்.

[1] வரையாது கொடுத்தலும் - அங்ஙனம் கல்வி மிகுதியில்லாத பரிசிலர்க்குக் கொடாதிருத்தலை மேற்கொள்ளாதே அவர்கள் அளவிற்குத் தக்கனவற்றைக் கொடுத்தலையும்,

இனித் தனக்கென ஒன்றும் வரைந்து வையாமற் கொடுத்த லென்றுமாம்.

218. பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த - பிறர் கையிலேற்ற பொருளால் இல்வாழ்க்கை நடத்துதலையுடைய பாணர் கூத்தர் முதலியோர் புகழ,

219. பல் மீன் நடுவண் பால் மதிபோல - பல மீன்களுக்கு நடு விருந்த பால்போலும் ஒளியையுடைய கலை நிறைந்த மதிபோல,

220. இன் நகை ஆயமோடு இருந்தோன் குறுகி - [2] இயலிசை நாடகத்தாலும் இனிய மொழிகளாலும் இனிய மகிழ்ச்சியைச் செய்யும் திரளோடே இருந்தவனை அணுகி,

[3] கலைகள் நிறைந்திருந்தமைபற்றித் தலைவற்கு ஈண்டு மதி உவமையாயிற்று.

221 - 2. பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன அம் கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின் - பசிய கண்களையுடைய கரிய குரங்கு பாம்பின்றலையைப் பிடித்த காலத்து அப்பாம்பு ஒரு காலிறுகவும் ஒருகால் நெகிழவும் அதன் கையைச் சுற்றுமாறு போன்ற அழகினையுடைய தண்டிடத்தே செறியச் சுற்றின நெகிழ வேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுக வேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டினையும்,

223. [மணிநிரைத் தன்ன வனப்பின்வா யமைத்து:]

மணி நிரைத்தன்ன வனப்பின் - இரண்டு விளிம்புஞ் சேரத் தைத்து முடுக்கின ஆணிகளாலே மணியை நிரைத்துவைத்தா லொத்த அழகினையும்,

வாயமைத்து – பொருந்தப் பண்ணி,

224. வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளத்து - வயிறு சேர்ந்து ஒழுங்குபட்ட தொழில்வகை யமைந்த பத்தரினையும்,

வயிறு - பத்தரின்நடு. தாழிபோலப் புடைபட்டிருத்தலின், அகள மென்றார்.

225 - 6. கானம் குமிழின் கனி நிறம் கடுப்ப புகழ் வினை பொலிந்த பச்சையொடு - காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது

---

[1] "வரையா வீகைக் குடவர் கோவே" (புறநா. 17: 40)

[2] "பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் அரசனுக்கு இனிய மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர்" (பொருந. 84–5, ந.) என்றார் முன்.

[3] முருகு. 96, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

நிறத்தை யொப்பப் புகழப்படும் துவருட்டின கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வையோடே,

226 - 7. [தேம்பெய், தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பின் :]

தேம் பெய்து புரி அடங்கு நரம்பின் - தேனொழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே பெய்துகொண்டு முறுக்கடங்கின நரம்பினையுமுடைய,

அமிழ்து பொதிந்து [1] இலிற்றும் நரம்பு - அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு,

இஃது ஓசையினிமைக்குக் கூறிற்று; "தீந்தே, னணிபெற வொழுகி யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" (சீவக. 722) என்றார் பிறரும்.

228. பாடு துறை முற்றிய - நீர் பாடுந் துறைகளெல்லாம் முடியப் பாடுதற்கு,

முற்றிய : செய்யியவென்னும் வினையெச்சம்.

228 - 9. பயன் தெரி கேள்வி கூடுகொள் இன் இயம்—தனது பயன் விளங்குகின்ற இசைகளைத் தான் கூடுதல் கொண்ட இனிய யாழை,

பச்சையோடே (226) வாயமைக்கப்பட்டு வனப்பினையும் (223) திவவினையும் (222) அகளத்தினையும் (224) நரம்பினையுமுடைய (227) இன்னியமெனமுடிக்க.

229 – 30. [குரல்குர லாக, நூனெறி மரபிற் பண்ணி :] நூல் நெறி மரபின் குரல் குரல் ஆக பண்ணி - இசைநூல் கூறுகின்ற முறைமையாலே [2] செம்பாலையாக வாசித்து,

பாடுதுறை முற்றுதற்கு இன்னியத்தைக் குரல் குரலாகப் பண்ணியென முடிக்க.

230 - 31. [ஆனது. முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்:] முதுவோர்க்கு ஆனது முகிழ்த்த கையினை எனவும் - [3] அரசன் உவாத்தியாயன் தாய் தந்தை தன்முன் முதலியோர்க்குப் பலகாலும் குவித்த கைகளையுடையை யென்றும்,

---

[1] இலிற்றும் : பிலிற்று மென்பதன் சிதைவுபோலும்; புறநா. 68 : 8.

[2] "குரல் குரலாகப் பண்ணி" (சீவக. 723) என்பதற்கு, 'செம் பாலையைப் பண்ணி' என்று பிற இடத்திலும் நச்சினார்க்கினியர் இவ் வாறே எழுதுதல் காண்க; "குரல் குரலாகிய அரும்பாலை" என்பர் சிலப்பதிகார உரையாசிரியர்கள்; சிலப். 3 : 91 – 2, உரைகள்.

[3] "அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்மு. னிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாவருங் கண்ட நெறி" (ஆசாரக்கோவை, 16)

232. இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும் - வீரரெறிதற்கு மனமகிழ்ந்து கொடுத்த மார்பினையுடையையென்றும்,

"விருந்தாயினை யெறிநீயென விரைமார்பங் கொடுத்தாற், கரும் பூணற வெறிந்தாங்கவ னினதூழினி யெனவே" (சீவக. 2265) என்றார் பிறரும்.

இளையோர், மகளிருமாம்.

"வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம், மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே" (பதிற். 63 : 4 - 5), "மகளிர் மலைத்த லல்லது மள்ளர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (புறநா. 10 : 9 - 10) என்றார்.

233. ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும் - ஏரினையுடைய குடி மக்களுக்கு நிழல் செய்த செங்கோலையுடையை யென்றும்,

234. தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும் – தேரினையுடைய அரசர்க்கு வெம்மை செய்த வேலையுடையை யென்றும்,

235. நீ சில மொழியா அளவை - நீ சில புகழினைக் கூறுதற்கு முன்னே,

235 - 6. [மாசில், காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇ :] காம்பு சொலித்தன்ன மாசு இல் அறுவை உடீஇ - மூங்கில் ஆடையை உரித்தா லொத்த மாசில்லாத உடையினை உடுக்கப் பண்ணி,

இனி, மூங்கின் முளையிற் பட்டையுமாம்.

237. பாம்பு வெகுண்டு அன்ன தேறல் நல்கி - பாம்பு ஏறி மயக்கிறாற் போல மயக்கின கட்டெளிவைத் தந்து,

238 - 40. [காவேரி யூட்டிய கவர்கணைத் தூணிப், பூவிரி கச்சைப் புகழோன் றன்முன், பனிவரை மார்பன் பயந்த:] கா எரி ஊட்டிய கணை கவர் தூணி பூ விரி கச்சை புகழோன் தன்முன் பனிவரை மார்பன் பயந்த - காண்டவ வனத்தை நெருப்புண்ணும் படி எய்த கணையை உள்ளடக்கின ஆவநாழிகையினையும் பூத்தொழில் பரந்த கச்சையினையுமுடைய அருச்சுனன் தமையனாகிய இமவான் போலும் மார்பனான வீமசேனன் கண்ட,

240 - 41. நுண் பொருள் பனுவலின் வழாஅ பல் வேறு அடிசில் - கூரிய பொருளையுடைய மடைநூனெறியிற் றப்பாத பல வேறுபாட்டை யுடைய அடிசிலை,

242 - 4. [வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த, இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து, விளங்குபொற் கலத்தில்:] விசும்பில் வாள் நிறம் கோள் மீன் சூழ்ந்த இள கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து விளங்கு பொன் கலத்தில் - ஆகாயத்தில் ஒளியை

யுடைத்தாகிய நிறத்தினையுடைய கோளாகிய மீன்கள் சூழ்ந்த இளைய கிரணங்களையுடைய ஞாயிற்றை இகழுந் தோற்றரவை யுடைய விளங்குகின்ற பொற்கலத்திடத்தே,

விரும்புவன பேணி - நீ விரும்புவனற்றை விரும்பியுட்கொண்டு,

245. ஆனு விருப்பின் தான் நின்று ஊட்டி - நும்மிடத்து மிகுகின்ற விருப்பத்தாலே தான் நின்று உண்ணப்பண்ணி,

ஆனு மரபினென்றும் பாடம்.

நீ கிலமொழியாவளவை (235) விரும்புவன பேணி (244) உடீஇ (236) நல்கி (237) அடிசிலைக் (241) கலத்தேயிட்டுத் (244) தான் நின்று ஊட்டி யென்க.

246. திறல் சால் வென்றியொடு தெவ்வு புலம் அகற்றி - வலி யமைந்த வெற்றியோடே பகையைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போகப்பண்ணி,

247. விறல் வேல் மன்னர் மன் எயில் முருக்கி - வெற்றியை யுடைத்தாகிய வேலினையுடைய முடிவேந்தர் மன்னும் அரண்களை அழித்து,

248. நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின் – அவ்விடங்களிற் பெற்ற பொருளாலே விரும்பி வந்தவர் புன்கண்மையையும் பாணர் புன்கண்மையையும் போக்கின பின்பு,

249. வயவர் தந்த வான் கேழ் நிதியமொடு - தன் படைத் தலைவர் மிக்கனவாய்க் கொண்டுவந்து தந்த நன்றாகிய நிறத்தினை யுடைய பொருட்டிரளுடனே,

தன் படைத்தலைவர், குறுநில மன்னரையும் அரசரையு மழித்து நயவர்க்கும் பாணர்க்குங் கொடுத்து மிக்குக்கொண்டு வந்த நிதியமென்க.

250 - 51. [பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி, உருவ வான்மதி யூர்கொண் டாங்கு:] பருவ வானத்து உருவ வான் மதி பால் கதிர் பரப்பி ஊர் கொண்டாங்கு - [1]கூதிர்க்காலத்தையுடைய வானிடத்தே வடிவு நிறைதலை யுடைய வெள்ளிய மதிபால்போலுங் கிரணங்களைப் பரப்பிப் பரத்தலைக் கொண்டாற்போல,

252 - 8. கூர் உளி பொருத வடு ஆழ் நோன் குறடு ஆரம் சூழ்ந்த அயில்வாய் நேமியொடு - கூரிய சிற்றுளிகள் சென்று செத்தின உருக்கள் அழுந்தின வலியினையுடைய குறட்டிடத்தில் தைத்த ஆர்களைச் சூழ்ந்த சூட்டினையுடைய உருளையோடே,

---

[1] கூதிர்க்காலத்து மதி சால விளங்குமென்பது, "இரவுநன் பகலு மாறி யிரவியு மதியு மாறி, வருவன வென்ன வெய்யோ னொளிமிக வழுங்கிச் செல்லப், பரவுபைங் கிரணக் கற்றைப் பானிலாச் சாலக் கான்று, விரவிய மாந்தர்க் கின்பம் விளைத்தது பனிவெண் டிங்கள்" (காஞ்சிப். கழுவாய். 180) என்பதனுல் விளங்கும்.

குறடு - அச்சுக்கோக்குமிடம். அயில்வாய் - கூரிய வாய்; என்றது சூட்டிற்கு ஆகுபெயர்.

254 – 5. [சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத், ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல:] முருக்கின் சேண் ஓங்கு நெடு சினை ததர் நனை சிதர் பிணி அவிழ்ந்த தோற்றம் போல - முருக்கினுடைய விசும்பிலே செல்ல வளர்ந்த நெடிய கொம்பிற் செறிந்த அரும்புகள் வண்டிற்குப் பிணியவிழ்ந்த தோற்றரவுபோல,

ததர், கொத்துமாம். சிதர், சிந்துதலுமாம்; சிச்சிலியுமாம்.

256 - 8. [உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக், கருந் தொழில் வினைஞர் கைவினை முற்றி, ஊர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு:]

கரு தொழில் வினைஞர் கைவினை முற்றி (257) உருக்குறு அரக்கு உள் எறிந்த போர்வை (256) பாகர் (258) - வலிய தொழிலைச் செய்யும் தச்சருடைய கையாற் செய்யும் உருக்கவெல்லாம் முற்றுப் பெற்று உருக்கப்படுஞ் சாதிலிங்கம் உள்ளே நிரம்ப வழித்த பலகையையுடைய பாகர்,

தேர்த்தட்டு வெளிமறையப் பாவின பலகையைப் போர்வை யென்றார். அதன் மேலே சுற்றுச்சுவராகப் பலகையாற் செய்த சுவரைப் பாகரென்றார். பாகரையுடைய தேரைப் பாகரென்றார்' ஆகுபெயரால்.

ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடை பாகரொடு (258) - ஏறிப் பார்த்து உண்மையாக ஓட்டமுண்டென்று பெயர்பெற்ற அழகினை யுடைத்தாகிய நடையினையுடைய தேரோடே,

நேமியோடே (253) போர்வையையுடைய (256) பாகரென முடிக்க.

259 - 60. மா செலவு ஒழிக்கும் மதன் உடை நோன்றாள் வாள் முகம் பாண்டில் - தன் கடுமையாற் குதிரையின் செலவைப் பின்னே நிறுத்தும் வனப்புடைத்தாகிய வலியினையுடைய தாளினையும் ஒளியினையுடைத்தாகிய முகத்தினையுமுடைய நாரையெருத்தையும்,

260. வலவனொடு - அதனைச் செலுத்தும் பாகனோடு,

260 - 61. [தரீஇ, அன்றே விடுக்குமன் பரிசில்:] பரிசில் தரீஇ அவன் அன்றே விடுக்கும் - யானை குதிரை அணிகலம் முதலிய பரிசில்களையும் தந்து அவன் அன்றே விடுக்கும்;

நிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனோடே பாண்டிலையும் (260) பரிசிலையுந் (261) தரீஇ (260) அவன் அன்றே விடுக்குமென முடிக்க.

261 – 3. மெல் தோள் துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர் அகில் உண விரித்த அம் மெல் கூந்தலின் - மெல்லிய தோளினையும், துகில் சூழ்ந்த அல்குலினையும், அசைந்த இயல்பினையு

முடைய மகளிர் அகிற்புகையை உண்ணும்படியாக விரித்த அழகை யுடைய மெல்லிய கூந்தல்போலே,

264 - 5. [மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித், துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்டு :]

துணி மழை மணி மயில் கலாபம் இடை மஞ்சு பரப்பி தவழும் கோடு - தெளிந்த மேகம் நீலமணிபோலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடுவே தனது மஞ்சைப் பரப்பித் தவழும் மலை,

சிறிது நீர் உட்கொண்டு பக்கம் வெள்ளிய மாசாயிருத்தலின், மேகம் மஞ்சைப் பரப்பி யென்றார்.

இனி, 'மணிமயில் கலாபம்' என்று பாடமாயின், மயிலைத் தன் கலாபத்தை மஞ்சிடையிலே பரப்புதலைச் செய்து துயல் கோடென்க: துயலல் - ஆடுதல்.

துயல் கழை நெடு கோடு - அசைகின்ற மூங்கிலையுடைய நெடிய மலையிடத்தையுடைய குறிஞ்சி (267).

266. [எறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னி:] ஏற்று அரு உரும் எறிந்து இறந்த சென்னி கோடு (265) - ஏறுதற்கெளிதல் அரிதாகிய உருமேறு தான் ஏறுதற்காக இடித்து வழியாக்கிப் போன சிகரத்தையுடைய மலை,

இக்குதிரையேற்று அரிதென்ப.

267. குறிஞ்சி கோமான் - குறிஞ்சியாகிய ஒழுக்கத்தையுடைய நிலத்திற்கு அரசன்,

267 - 9. [1]கொய் தளிர் கண்ணி செல் இசை நிலை இய பண்பின் நல்லியக்கோடனை - கொய்யப்பட்ட தளிர் விரவின மாலையினையும், பிறரிடத்து நில்லாமற் போகின்ற புகழ் தன்னிடத்தே நிற்றற்குக் காரணமான குணத்தினையுமுடைய நல்லியக்கோடனை,

269. நயந்தனிர் செலின் - விரும்பிச் செல்லின்,

முதுவாயிரவல (40) பெருமகன் (122) புரவலனாகிய (125) நல்லி யக்கோடனை நயந்த கொள்கையோடே (126) முன்னாட் சென்றன மாக, இந்நாள் (129) அழிபசி வருத்தம் வீட (140) யானையொடே தேரெய்தி (142) யாம் அவணின்றும் வருகின்றேம்; இனி நீயிரும் (143) மூவேந்தரிடத்துச் செல்குவிராயின் (145) வஞ்சியும் வறிது; அதுவன்றி (50) மதுரையும் வறிது; அதுவன்றி (67) உறந்தையும் வறிது; அதுவன்றி (83) எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் (113) ஒருதான் றாங்கிய (115) குறிஞ்சிக் கோமானாகிய (267) நல்லியக் கோடனை நயந்தனிர் செலின் (269) வழியிற் பெறுமவற்றை

---

[1] 'கொய்' என்பதற்கு, 'கத்தரிகையாலே மட்டஞ்செய்த' என்று உரை எழுதுவர் புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர்; பு. வெ. 38.

யாம் கூறக் கேண்மின்: பட்டினம் படரின் (153) வயின் வயிற் பெறுகுவிர் (163); அதன்பின்னர் வேலூரெய்தின் (173) அமைவரப் பெறுகுவிர் (177) அதன்பின்னர் அவன் ஆமூரெய்திற் (188) கலவையொடு பெறுகுவிர் (195); அவற்றைப் பெற்றபின், அவன் மூதூர் (201) சேய்த்துமன்று; சிறிது நணியதுவேயா யிருக்கும் (202); ஆண்டுச் சென்று முன்னர் அவன் கடைவாயிலைக் குறுகிப் (206) பின் அறிந்தோரேத்த (209) வயவரேத்த (212) அரிவையரேத்தப் (215) பரிசிலரேத்த (218) இருந்தோனை அணுகிப் (220) பாடுதுறை முற்றுதற்கு (228) இன்னியத்தைப் (229) பண்ணிக் (230) கையினை யென்றும் (231) மார்பினையென்றும் (232) கோலினையென்றும் (233) வேலினையென்றும் (234) நீ சில மொழியா அளவை (235) அவன் (261) நீ விரும்புவன பேணி (244) உடீஇ (236) நல்கி (237) அடிசிலைக் (241) கலத்தேயிட்டுத் (244) தான் நின்று ஊட்டி (245) நிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனோடே பாண்டிலையும் (260) பரிசிலையும் (261) தரீஇ (260) அன்றே விடுக்கும் (261) என வினைமுடிவு செய்க.

[1] ஒய்மானாட்டு (பி - ம். ஏறுமாநாட்டு) நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப் படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா

1. அணியிழையார்க் காரணங் காகிமற் றந்நோய்
தணிமருந்துந் தாமேயா மென்ப — மணிமிடைபூண்
இம்மென் முழவி னெயிற்பட் டினநாடன்
செம்மல் சிலைபொருத தோள்.

2. நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் [2]பாம்பேர் மருங்குல்— [3]இடுகொடி
[4]ஓடிய [5]மார்ப னுயர்நல் லியக்கோடன்
[6]சூடிய கண்ணி சுடும்.

---

[1] 'ஓய்மான் நல்லியக்கோடன்' என்றும் இவன் வழங்கப் பெறுவன் (புறநா. 176).

[2] (பி - ம்.) 'பாம்போர்', 'பாம்பேய்' [3] (பி - ம்.) 'இடுகிடையாய்'

[4] (பி - ம்.) 'ஓட்டிய' [5] (பி - ம்) 'மார்பின்'

[6] (பி - ம்.) 'சூட்டிய'

நா ன் கா வ து

*பெரும்பாணாற்றுப்படை

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி

---

*பெரும்பாணர் - குழலர் பாணர் முதலாகிய பெரிய இசைக்காரர் (சிலப். 5 : 37, அடியார்); ''பெரும்பா ணிருக்கையும்'' (மதுரைக். 342); ''பெரும்பாண் காவல் பூண்டென'' (நற். 40 : 3).

இந்நூலின் பெயர் பாணாறு எனவும் வழங்கும்; தக்க. 562, உரை.

1. நாற்சீரடி பதின்மூன்றெழுத்தால் வந்ததற்கும் (தொல். செய். சூ. 50, இளம்,). நேரும் நிரையுமொன்றி நேரொன்றாசிரி யத்தளை நிரையொன்றாசிரியத்தளை ஆயதற்கும் (தொல். செய். சூ. 56, பேர். ந.) இவ்வடி மேற்கோள்.

2. ''கல்சேர்கையினாலே இருள் வாராநிற்க அது பொருது மதி தோன்ற என ஒரு வினையாக முடிக்க; 'பகல் கான்......பருதி' என்றார் பிறரும்'' (கலித். 119, ந.); ''கதிர் காற்றியும் - கிரணங்களைக் கக்கியும்'' (கல். ''நண்ணிய பாதி'' மயிலேறு.) என்பதற்கும், ''கான்று என்னுமிடக்கர் அணிகுறித்துப் பிறிதொரு பொருண்மேல் நிற்றலின் மறைக்கப்படாது; தன் பொருண்மேல் நின்றுழி மறைக்கப் படும்'' (தொல். எச்ச. சூ, 47, சே. ந ; நன் - வி. சூ. 267; இ. வி. சூ. 168, உரை; நன். சூ. 267, இராமாநுச.) என்பதற்கும் இவ்வடி மேற்கோள்.

1 - 2. ''வெயில்கான் றிருள்சீத்தெழு வெங்கதிர்ச் செல்வன்'' (கூர்ம. இராவணவதை. 17); திணைமா. 94.

அடியெதுகைக்கும் வழக்கொடு பட்ட மரபு பிறழவும் செய்யு ளின்பம் படின் அவ்வாறு செய்க (தொல். செய். சூ. 93, ஷ்டி மரபு. சூ. 1, பேர்.) என்பதற்கும், செய்தென்னும் வாய்பாடு செய்யாநின் றெனச் சிறுபான்மை நிகழ்காலப் பொருளிலும் வரும் (தொல். வினை. சூ. 31, ந; இ - வி. 246, உரை; கல். ''பாய்திரை'', 'கண்ட காட்சி'' மயிலேறு.) என்பதற்கும், கட்டளையடிச் சீர்வகையடி தொடுத்த அடியெதுகைக்கும் (தொல். செய். சூ. 93, ந.), சமாதியென்னும் அலங்காரத்திற்கும் (தண்டி. பொது. 25; இ - வி. சூ. 635) இவ் வடிகள் மேற்கோள்; விட்டும் விடாத இலக்கணைக்கு இவ்வடிகள் உதாரணமாகக் காட்டப்படும்; நன். சூ. 269, இராமாநுச.

காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றுடை வகுத்ததன்
உள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ

"உயிருண்ணவும் பருகவும் படுவதன்றாயினும் அவ்வாறு கூறுதல், 'அகலிரு......பருதி' என்றாற்போல ஒரணி குறித்து நின்றது." (புறநா. 230, விசேடவுரை)

3. காய்சினந் திருகிய : "கடுஞ்சினந் திருகி" (மணி. 22 : 157)

4. (பி - ம்.) 'ஒழிந்த பராஅரை'

5. (பி - ம்.) 'வகிர்ந்ததன்'

5 - 6. (பி - ம்.) 'வைத்தத னுள்ளம்'

7. (பி - ம்.) 'பாளையின் பசும்பூ', 'பாளையின் பசுங்காய்'

8. (பி - ம்.) 'சிறதுளை'

7 - 8. அன்ன : மெய்யுவமவுருபு; தொல். உவம. சூ. 13, இளம். மேற்.

9. "விசியுறு போர்வை" என்பதற்குத் தெரியாமற் போர்த்த போர்வை யெனப் பொருள் கூறி இவ்வடியை மேற்கோள் காட்டினர்; சீவக. 559, ந.

10. வறுவாய் : பொருந. 12.

13. ஏய்க்குமென்பது உவமவுருபு (தொல். உவம. சூ. 17, இளம்.) என்பதற்கும், வினையுவமவுருபு (தொல். உவம. சூ. 12, பேர்.) என்பதற்கும் இவ்வடி மேற்கோள்.

12 - 3. பொருந. 14 - 5; மலைபடு. 21.

15 - 6. சிறுபாண். 34 - 5-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதரும்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெருது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்
பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்

---

17. (பி - ம்.) 'வெங்கதிர்க் கனலி', 'வெந்திறற் கனலி'
வெந்தெறற் கனலி: "தெறுகதிர்க் கனலி வெம்மை" (புறநா. 43 : 2)

18. (பி - ம்.) 'தண்கடல் வையத்து'
தாங்குநர்ப் பெருது : "புரவல ரின்மையின்" (புறநா. 69 : 2)

17 - 8. முக்காலத்தும் உள்ள இயல்பையுடைய பொருளை நிகழுங் காலத்து மெய்ந்நிலைப் பொதுச் சொல்லாற் சொல்ல வேண்டும் (தொல். வினை. சூ. 43, சே. ந; இ - வி. சூ. 303) என்பதற்கு மேற்கோள்.

20. பொருந. 64 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

21. கல்லென் சுற்றம் : "கல்லென் சுற்றக் கடுங்குரல்" (குறிஞ்சிப். 151), "வரிசை யறியாக் கல்லென் சுற்றம்", "கல்லென் சுற்றமொடு கையழிந்து" (புறநா. 184 : 8, 240 : 12)

22. புல்லென் யாக்கை: "நின்னினும் புல்லியேம் மன்னே" (புறநா. 141 : 8)

24. (பி - ம்.) 'தளிசொரிந் தாங்கு'
"கருவி மாமழை கணைபெயல் பொழிந்தென" (சீவக. 2752)

23 - 4. "கார்பெற்ற புலமேபோற் கவின்பெறும்" (கலித். 38 : 12); "நெடுவேனில் சுடச்சுட நின்றுலறிக், கார்வந்து தொடத்தொட வுய்ந்திளகுங் காடொத்தனன்" (நக்க. 200); "காரிற் குளிர்ந்து குழைந்தசெழுங் கானம் பூத்த தெனக்கவினி" (வி. பா. 12 - ஆம் போர். 82)

26. (பி - ம்.) 'என்னிரும்பேர்'
"ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு" (பொருந. 61); புறநா. 370 : 3 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

டியாமவ ணின்றும் வருது நீயிரும்
இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயின்
கேளவ னிலையே கெடுகநின் னவலம்
அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமு முரரு தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செய்யா வேட்டாம்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளம்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன

---

28. மு. சிறுபாண். 143; மலைபடு. 53.

27 - 8. சிறுபாண். 142 - 3 - ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

29. திருமறு மார்பு: "திருமறு மார்பநீ யருளல் வேண்டும்" (பரி. 1 : 36); "திருமகளாதலால், 'புனைமறு' என்றார்" (பரி. 4 : 59, பரிமேல்.)

30. (பி - ம்.) 'புறங்கடை'

33. பொருந. 54-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

36. (பி - ம்.) 'அல்லவை'

38. "கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்" (மதுரைக். 208)

40. "களவேர் வாழ்க்கையர்" (மணி. 23 : 126)

40 - 41. "தனிநீர் கழியினும் தகைக்குந ரில்லென" (சிலப். 13 : 134)

ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்கும்
துளையரைச் சீறுர றூங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
எல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்
அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்ஞாள்
அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்

50. (பி - ம்.) 'வார்வை வேய்ந்த'
மு. ''ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடத்து'' (அகநா. 301 : 7)

52. (பி - ம்.) 'கூட்டுடை'

53. இரும்பிடி முழந்தாள் : ''முழந்தா ளிரும்பிடி'' (குறுந். 394 : 1)

60. படலைக்கண்ணி : பெரும்பாண். 174; ''முறிமிடை படலை மாலை'' (சீவக. 1889; சூளா. துறவு. 23); ''இலைபுனைந்த கள்ளவிழ் கண்ணி'', ''இலைப்பொலிதார்'', ''முறி மலர்த்தார்'' (பு. வெ. 6, 74, 136)

60 - 61. மு. நெடுநல். 31 - 2.

63 - 5. ஒழுகையும் உமணரும் : சிறுபாண். 55.

69. படம் புகுதல் : ''படம்புகு மிலேச்சர்'' (முல்லை. 66)

70. ''பொருகணை தழிச்சிய புண்டீர் மார்பின்'' (தொல். புறத். சூ. 8. ந. மேற்.) என்று ஓரடி காணப்படுகிறது.

வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோள்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தட வுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவின்
நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்

---

73. "சுரிகையம் பூங்கச்சிடைக் கோத்து வாங்கி" (சீவக. 698, மேற்.)

75. கடம்பமர் நெடுவேள் : முருகு. 225 –ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

நெடுவேள் : "வென்றி நெடுவேள்" (குறுந். 111 : 2); "நெடு வேள் குன்ற மடிவைத் தேறி" (சிலப். 23 : 190); முருகு. 211-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

75 - 6. உவமையிற் பால் மயங்கியதற்கு இவை மேற்கோள்; தொல். உவம. சூ. 6, பேர்.

78. (பி - ம்.) 'கடுப்ப நெறியில்', 'கடுப்ப நெரியல்.'

80. அணர்ச்செவிக் கழுதை : "அணர்ச்செவிக் கழுதையா யாண்டுத் தோன்றிய" (பாகவதம், 10. அரவின் மேலாடிய. 6)

79 - 80. (பி – ம்.) 'நோன்புறக் கணர்ச்செவி'

உல்கு : "உறுபொருளும்" (குறள், 756)

81. பழ. 60.

83. (பி - ம்.) 'நீள்வரை'

83 - 5. இலவங்காய் அணிலுக்கு உவமை : "தோன்றுபூ விலவத் தங்கட் டொகையணி லனைய பைங்காய், கான்றமென் பஞ்சி" (சீவக. 1701)

87. "கருவி நுதிகொ ணெறியிலை யீந்து" (கல். "பொருப்பு")

ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிணா வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று

---

88. புல்லினுள் ஒரு சாரன இலையெனவும் பெறுமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். மரபு. சூ. 87, பேர்.

87 - 8. (பி - ம்.) 'நெடுந்தோட் டீந்திலை', 'நெடுந்திட ரீத்திலை'

85 - 8. "ஈந்து மேய்ந்திடைக், கருப்பையா டாக்குடில் கஞல்வ" (ஆனைக்காப். நாடு. 112); விநாயக. நாடு. 46.

83 - 8. தொல். உவம. சூ. 34, பேர். மேற்.

89. மான்றோற் பள்ளி : "வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழை" (அகநா. 58 : 4); "சீரூர் மரையத ளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே" (திருச்சிற். 398). தொல். மரபு. சூ. 23, பேர். மேற்.

88 - 9. ஈத்திலை வேய்ந்த குரம்பை, தோற்பள்ளி : "இலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி" (மதுரைக். 310)

90. பிணா உயர்திணைப் பெண்பால் மரபுப் பெயர்; தொல். மரபு. சூ. 61, பேர். மேற்.

93. (பி - ம்.) 'இடுநிலக் கரம்பை'

94. (பி - ம்.) 'நுண்பு லடுக்கிய'

95. (பி - ம்.) 'பறைத்தாள்'

விளவில் விலங்குகளைக் கட்டுதல் : "கொடுஞ்செவி ஞமலி யாத்த, வன்றிரள் விளவின்" (பெரிய. கண்ணப்ப. 3)

89 – 96. "அவை, 'மான்றோற்......பெய்து' என்றவழி உவமஞ் செய்யாது அந்நிலத்தியல்பு கூறப்பட்டதாயினும் உவமத்தாற் பொருட்பெற்றி தோன்றச் செய்தாற்போல அந்நிலத்திற்கும் பயம்பாடு வெளிப்படச் செய்யாமையின் உவம இலக்கணத்துள் இதனையும் இலேசினாற் கொண்டாமென்பது" (தொல். உவம. சூ. 34, பேர்.); தொழிற்றன்மையணி; தண்டி. பொருளணி. சூ. 3, மேற்.

97. ஓச்சி - குத்தி; பெரும்பாண். 118.

வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்ட மழுங்கிற் பகனுள்

---

100. (பி - ம்.) *'ஆரு தட்ட', 'வாரு தட்ட'*

102. (பி - ம்.) *'ஒண்பொறிக்'*

ஓடாத் தானை : "ஓடாத தானை யுருமுக்குர லோடை யானை" (சீவக. 7.); "ஓடாத தானை நளனென் றுளனொருவன்" (நள. *சுயம்வர.* 18)

104. (பி - ம்.) *'மடைவயிற்'*

இலை – மரத்துறுப்பினைச் சொல்லும் வாய்பாடு; தொல். *மரபு.* சூ. 87, பேர். மேற்.

தேக்கிலையில் உண்ணுதல். அகநா. 107 : 10, 311 : 11.

103 - 5. *"மான விறல்வேள் வயிரிய மெனினே, நும்மில் போல நில்லாது புக்குக், கிழவிர் போலக் கேளாது கெழீஇச், சேட்புலம் பகல வினிய கூறிப், பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவை யொடு, குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்"* (மலைபடு. 164 - 9)

107. (பி - ம்.) *'வானமடி' என்றும் கொள்ள இடமுண்டு.*

110. (பி - ம்.) *'வளையெயிற்றேன வரவு'*

109 - 10. *ஏனக் கொம்பிற்கு அகத்திப் பூ: "அப்பன்றியைக் கொன்றருளி அதன் கொம்பைச் செவ்வகத்திப் பூவாகச் சாத்தி யருளின கதை"* (தக்க. 630, *உரை*)

108 - 10. *பயம்பிலிருந்து ஏன வேட்டையாடுதல்: "சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின், வீழ்முகக் கேழ லட்ட பூசல்"* (மதுரைக். 294 - 5)

பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும்
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணும்
அருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்
ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்

---

112. பைம்புதல் எருக்கி : ''சேணுறு பிடவமொடு பைம்புத லெருக்கி'' (முல்லை. 25)

114. முள்ளரைத் தாமரை : சிறுபாண். 183-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

தாமரைப் புல்லிதழ்: ''புலிநா வன்ன புல்லிதழ்த் தாமரை'' (தண்டி. மேற்.)

117. (பி - ம்.) 'இறந்த வும்பர்'

119 - 20. எஃகம் பலகையொடு நிரைஇ: ''பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து'' (முல்லை. 41); ''கிடுகுநிரைத் தெஃகூன்றி'' (பட்டினப். 78)

121. (பி - ம்.) 'சாத்திய'

125. ''கடுங்குரற் கதநாய் நெடுந்தொடர் பிணித்துப், பாசந் தின்ற தேய்கா லும்பர், மரையதண் மேய்ந்த மயிர்ப்புன் குரம்பை'' (திருவாரூர் மும். 13 : 10 - 12)

126. வாழ்முள் வேலி......படப்பை : ''இடுமுள் வேலி யெருப் படு வரைப்பின்'' (பெரும்பாண். 154)

128. கழு நிரைத்த வாயில் : ''எறிவேற் பெருங்கடை'', ''பல் வேன் முற்றம்'', ''பொருவேன் முற்றம்'' (பெருங். 1, 34 : 39, 35: 66, 37 : 98)

கொடுவி லெயினக் குறும்பிற் சேப்பின்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி

129. (பி - ம்) 'எயினர் குறும்பிற்'

132. ''மறுவனைய மென்சூன் மடவுடும்பு'' (சீவக. 278)

ஞமலி : திசைச்சொல்; தொல். மொழி. சூ. 31, ந. இ - வி. சூ. 27, மேற்.

135. நீனிற விசும்பு : முருகு. 116-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

134 - 6. அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம் பிறத்தல் இயல்பென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். மெய். சூ. 8, பேர்.

138. (பி - ம்.) 'அணர்க்காளை'

வீரனுக்குப் புலிப்போத்து உவமை : ''உறுபுலித் துப்பி னேவியர் பெருமகன்'' (சிறுபாண். 122); ''புலிக்கணமும்......போல்வார்'', ''குயவரி வேங்கை யனைய வயவர்'', ''இனவேங்கை யன்ன விகல் வெய்யோர்'' (பு. வெ. 25, 58, 63); ''வயப்புலிப் போத்தன்னார்'' (பெரிய. ஏனாதி. 13)

புலிப்போத்து, ''பொறிவரி யிரும்புலிப் போத்துநனி வெரீஇ'' (பெருங். 1. 54 : 37); ''புலிப்போத்துக் கொடி'' (தக்க. 4, 8, உரை)

புல்லணற் காளை : ''மையணற் காளை'' (ஐங். 389; புறநா. 83 : 1; பு வெ. 12)

போத்தென்னும் பெயர் இளமைக்கும் ஆண்பாற்கும் முறையே உரித்து; தொல். மரபு. சூ. 24, 41, பேர். மேற்.

139. (பி - ம்.) 'செந்நாய்'

141. நாளா : ''தாளித் தண்பவர் நாளா மேயும்'' (குறுந். 104 : 3)

இல்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்
அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்

கள்விலைக்கு ஆவைத் தரல்: "முருந்தே ரிளநகை காணாய் நின் ஐயர், கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள், கள்விலை யாட்டி... முன்றி னிறைந்தன" (சிலப். வேட்டுவ. 16); "அருஅ நிலைச்சாடி யாடுறு தேறல், மருஅன் மழைத்தடங் கண்ணி-பொருஅன், கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை, நெடுங்கடைய நேரார் நிரை", "வெங்கட்கு வீசும் விலையாகும் – செங்கட், செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி, வரிச்சிலையாற் றந்த வளம்" (பு. வெ. 2, 16)

142. தோப்பி: "தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்", "பாப்புக்கடுப் பன்ன தோப்பி" (அகநா. 35 : 9, 348 : 7); "துழந்தடு கள்ளின் றோப்பியுண் டயர்ந்து" (மணி. 7 : 71)

143. மதவிடை: இ - வி. சூ. 282, மேற்.
(பி - ம்.) 'விடை தெண்டி'

142 - 3. "நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்" (புறநா. 262 : 1); "செங்கண் மழவிடை கெண்டிச் சிலைமறவர், வெங்கண் மகிழ்ந்து விழவயர" (பெரும்பொருள்.)

144. "மடிவாய்த் தண்ணுமை நடுவ ணார்ப்ப" (நற். 130 : 2)

146. (பி - ம்.) 'முனைதலை யிருக்கை'

134 - 46. மறங்கடைக் கூட்டிய துடிநிலை யென்னும் புறத்திணைத் துறைக்கு இவை மேற்கோள்; தொல். புறத். சூ. 4, இளம்.

151 - 2. (பி - ம்.) 'உதணெடுந் தாம்பு'
தொல். மரபு. சூ. 47, பேர். மேற்.

154. இடுமுள் வேலி: அகநா. 394 : 8; சிலப். 12 : 10; 13 : 42.

நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி

---

153. ''புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்'' (மலைபடு. 448)

156. தயிர் கடையும் ஓசைக்குப் புலிமுழக்கு : ''கடையலங் குரல வாள்வரி யுழுவை'' (அகநா. 277 : 5); ''இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு, நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉம்'' (தொல். அகத். சூ. 41, ந; நம்பி. சூ. 182, மேற்.); ''கடைதயிர்க் குரல வேங்கை'' (சீவக. 2717); ''தயிர் கடையு மோதை, கொல்புலி முழக்க மென்ன வயின்றொறுங் குழுமும்'' (நைடதம், நாட்டுப். 15.)

157. (பி - ம்.) 'வான்முகிழ்', 'கூம்புமுகை'

157 - 8. தயிர்க்கு ஆம்பி : ''புனிற்று. எழுந்த வாம்பிக ளிடறின செறிதயி ரேய்த்த'' (கம்ப. கார்காலப். 47); ''அளைசித றியபோற் கிடந்தன வாம்பி'' (கல். ''சலியாப் பராரை'')

159. பூஞ்சுமட்டிரீஇ; ''பூஞ்சுமட் டிரீஇப் போற்றுவனர் தந்த'' (பெருங். 2. 5 : 49). 160. பெரியாழ். 3 : 9

163. அளைவிலையுணவு : ''அளைவிலை யுணவி னாய்ச்சியர் தம்மொடும்'' (சிலப். 16 : 3)

164. ''நெய்விலைப் பசும்பொற் றோடும்'' (சீவக. 488)

165. நாகு : தொல். மரபு. சூ. 26, 62, பேர். மேற்.

166. மடிவாய்க் கோவலர் : ''மடிவிடு வீளையர்'' (குறிஞ்சிப். 161); ''இடையன், மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்ப'' (அகநா. 274 : 8 - 9) : ''நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயிறர'' (சீவக. 120); ''செந்நா மடிவிளி'' (கூர்ம. பிலக்குழுத. 40)

விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா ழூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்நு ணவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பின்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்

---

170. அகநா. 54 : 10.

171. "உறிக்கா வாளரொடு" (சிலப். 15 : 205); பெரியாழ். 3.1 : 5.

174. (பி.- ம்.) 'பன்மல ரடுக்கிய', 'பன்மலர் மிடைந்த' படலைக்கண்ணி : பெரும்பாண். 60-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க. 175. மலைபடு : 417; அகநா. 21 : 22.

176. "கன்றம ராயங் கானத் தல்கவும்" (புறநா. 230 : 1)

177. (பி - ம்.) 'புகை பிறப்ப'

178. ஞெலி யென்பது வினைச்சொல்லென்பதற்கு இவ்வடி மேற்கோள்; கலித். 101, ந.

179. 'தொட்ட' என்றும் கொள்ள இடமுண்டு.

183. பல்காற் பறவை : "மழலைப் பல்காற் பறவை" (பாகவதம், கோவியரை. 28)

188. (பி - ம்.) 'சாட்டுருளி', 'சாத்தி'

190. (பி - ம்.) 'பாய்மழை'

கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோல்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன

---

192. (பி - ம்.) 'நெடுங்காற்'

194 - 5. அவரைப் புழுக்கிற்கு வேங்கைப்பூ : "செவ்வீ வேங்கைப் பூவினன்ன......அவரை" (மலைபடு. 434 - 6)

195 - 6. (பி - ம்.) 'அட்டிப் பயற்றின் றீஞ்சுவை மூரல்'

199. "வேழம், வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ் சேர" (கலித். 8 : 4 - 5); "யானைத், தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள" (புறநா. 19 : 9 - 11); "வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோ, லெல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த" (களவழி. 40); "கையும் மத்தகமும் கொம்பும் கலப் பைக்கு ஒப்பென்பது" (தக்க. 259, உரை); "அலப்படை யனைய தூங்குவாய் நெடுங்கை யலைசெவி வாரணம்." (விநாயக. நகரப். 21)

200. "உடுப்பு முகத்த கூர்ங்கொழுவி னுழுநற்செயல்" (கூர்ம. வருணச். 15)

204. அகநா. 63 : 7.

205. "கட்சி - காடு; 'கறை......சேக்கும்' இது பெரும்பாணாறு" (தக்க. 102, உரை.)

206 - 7. மென்றோல் மிதியுலை: "உலைவாங்கு மிதிதோல் போல" (குறுந். 172 : 6)

கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்
காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில்
களைஞர் தந்த கணைக்கா னெய்தல்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
ஈருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்

---

207 - 8. அலவன் தாளுக்கு முறிந்த கொடிறு: "கொடிறு முறித்தன்ன கூன்குறு ளலவன்" (கபிலர் சிவ. திருவிரட்டை. 28)

209. (பி - ம்.) 'பஞ்சாய்' 210. தொல். செய். ந. மேற்.

211. (பி - ம்.) 'உழவு நுண்'

உழாஅ நுண்டொளி : "உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய" (சிலப். 10 : 120)

217 - 8. பல்லிற் சவட்டிய நாரினால் மாலை கட்டல் : "பல்லினாற் சுகிர்ந்த நாரிற் பனிமலர் பயிலப் பெய்த, முல்லையங் கண்ணி" (சீவக. 438); "பல்லினாற் சுகிர்ந்த நாரில்......போது கட்டிய குழங்கன் மாலை" (கூர்ம. பிலக்க. 43)

212 - 9. நற். 90

220. (பி - ம்.) 'சண்பின்'

பொன்காண் கட்டளை : "பொன்னின், உரைதிகழ் கட்டளை" (குறுந். 192 : 3 - 4); "வண்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத், தலங்குகுலை யலரி தீண்டித் தாதுகப், பொன்னுரை கட்டளை கடுப்ப" (அகநா. 178 : 9 - 11)

கண்பு : மதுரைக். 172; "கண்பகத்தின் வாரணமே" (திருஞா. தே. திருத்தோணிபுரம்)

220 - 21. இரட்டைக்கிளவி இரட்டை வழித்தானதற்கு இவ் வடிகளை மேற்கோள் காட்டி, "கண்பின் சுண்ணம் புடைத்த செஞ் சுவட்டினையும் மார்பினையும் பொன்னுரையோடும் கல்லோடும் உவமித்தமையின் இரட்டைக்கிளவி இரட்டை வழித்தாயிற்று"

இரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றில்
அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரடா டுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழல்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோல்
சிலம்பி வானூல் வலந்த மருங்கில்
குழுமுநிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப

என்றெழுதுவர்'' தொல். உவம. சூ. 22, பேர்.

226. விறந்து : தொல். உரி. சூ. 50, சே. ந. தெய்வச். இ - வி. சூ. 282, மேற்.

226 - 7. உலக்கையிடிக்குப் பறவைகள் அஞ்சல் : ''பாசவ லிடித்த பெருங்கா ழுலக்கைக், கடிதிடி வெரீஇய கமஞ்சூல் வெண் குருகு'' (அகநா. 141 : 18 - 9)

230. (பி - ம்.) 'செய்நெல்லின்'

229 - 30. ''மென்செந் நெல்லி, னம்பண வளவை யுறைகுவித் தாங்குக், கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்'' (பதிற். 71 : 4 – 6)

232. அகநா. 39 : 16

234. (பி - ம்.) 'கைபிணைந்து'

235. துணங்கை : முருகு. 56; தக்க. 53-ஆம் தாழிசையின் விசேடக் குறிப்பைப் பார்க்க.

235 - 6. சிலம்பி நூலுக்குத் துகில்: ''சிலம்பி கோலிய வலங்கற் போர்வையின்'' (பதிற். 39 : 13); ''சிலம்பிபொதி செங்காய், துகில்பொதி பவள மேய்க்கும்'' (யா. கா. மேற்.); ''முழுமெய்யுஞ் சிலம்பி வலந்ததுபோற் போர்வை போர்த்து'' (சீவக. 340); ''நுட் சிலம்பி வலந்தன நுண்டுகில்'' (கம்ப. எழுச்சி. 46); ''பாடி வீடுகொள்

வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபால்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்
ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி

படங்கென.........சிலம்பி நூல்கொடு கவிக்குமே" (தக்க. 54); "சிலம்பி, பொருவினூல் வலந்து தங்கிய வலையம்" (தணிகைப். நந்தியுபதேச. 29)

239. (பி - ம்.) 'துரும்பும் போக்கி'

240 - 41. நெற்குவியலுக்குப் பொன்மலை : பொருந. 244, ந.

237 - 41. "சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக், காவிரும் பகடு போக்குங் கரும்பெரும் பாண்டி லீட்டம்...... மிக்க தன்றே", "வைதெரிந் தகற்றி யாற்றி மழைபெயன் மானத் தூற்றிச், செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பு மென்னக் கைவினை மள்ளர் வானங் கரக்கவாக் கியநெற் குன்றால்" (பெரிய. திருநாட்டுச். 24 - 5)

242. மு. பொருந. 169-ஆம் அடியையும், அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

243. (பி - ம்.) 'தளர்நடைக் குழவி'

247. குமரி மூத்த : "குமரி மூத்தவென் பாத்திரம்" (மணி. 14 : 77)

246 - 7. பழம்பல்லுணவிற் குமரி......கூடு : "குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு" (சிலப். 10 : 123)

248 - 9. "தச்சன் செய்த சிறுமா வைய, மூர்ந்தின் புறாஅ ராயினுங் கையின், னீர்த்தின் புறூஉ மிளையோர்" (குறுந். 61 : 1 - 3.)

249 - 50. "தேரொடு, தளர்நடைப் புதல்வனை" (ஐங். 66 : 2 - 3)

மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறும்
கரும்பின் றீஞ்சாறு விருப்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்
இளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்

---

256. (பி - ம்.) 'மனையுறை'
மனை வாழளகு : "மனையளகு, வள்ளைக் குறங்கும் வளநாட" (திருவள்ளுவ. 5)
அளகு - கோழி : இவ்வடி, தொல். மரபு. சூ. 56, பேர். மேற்.
257. மழை விளையாடும் அடுக்கம் : "மழைவிளை யாடுங் குன்று (குறுந். 108 : 1)
260. எந்திரம் : "கழைக்கரும் பெறிந்துகண் ணுடைக்கு மெந்திரம்" (சீவக. 1614)
259 - 60. ''கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றும்'' (ஐங். 55); "இரும்பி னன்ன......ஆலையெந் திரங்கள்" (திருவிளை. திரு நகர. 11)
265. பறி : அகநா. 300 ; 3; நள. 3 : 39.
268. (பி - ம்.) 'கிளையுடன் குழீஇ' மு. அகநா. 30 : 4; நற். 207 : 7.
269. புலவுநுனைப் பகழி: "புலாஅ லம்பிற் போரருங் கடிமிளை" (புறநா. 181 : 5) ; "புலவுக்கணை" (பு. வெ. 10)
269 - 70. இருவுக்குச் சிலை : "இறவுக்கலித்துப், பூட்டறு வல் விலிற் கூட்டுமுதற் றெறிக்கும்" (அகநா. 96 ; 1 - 2); "முடங்கிறவு பூட்டுற்ற வில்லேய்க்கும்" (திணைமாலை. 131); "பூட்டுசிலை யிறவி னொடு" (சீவக. 1788)

தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்
அவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
எல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்கநாண் கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
உறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை

---

277. புற்றிற் குரும்பி : "புற்றத் தீர்ம்புறத் திறுத்த, குரும்பி" (அகநா. 8 : 1 - 2)

280 - 81. "வழைச்சறு சாடிமட் டயின்று" (சீவக. 1614); "பாளைவிண் டொழுகு வழைச்சறு தேறல்" (இலிங்க. சூரியன் வங்கிச. 11)

284. (பி - ம்.) 'கொலைவல் பாண்மகன்'

286. (பி - ம்.) 'வடிதலை'

284 - 7. ஐங். 111; அகநா. 216 : 1 - 2

290. "தாமரையை, 'கடவுள்......ஓம்பி' எனக் கூறுதலானும் அவர் பறியாராயிற்று" (சீவக. 51, ந.)

289 - 90. தாமரைக்கு நெருப்பு : "சுடர்த்தாமரை" (மதுரைக். 249); "விளக்கி னன்ன சுடர்விடு தாமரை" (நற். 310 : 1); "சுடர்ப் பூந் தாமரை", "எரியகைந் தன்ன தாமரை" (அகநா. 6 : 16, 106:1, 116 : 1); "செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை, அறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த, தீயொடு விளங்கு நாடன்" (புறநா. 397 : 19 - 21); "தாமரை யழற்போது" (பெருங். 1. 40 : 245); "விரை நெடுங்கய நீரிடை நெருப்பெழுந் தனைய, விரைநெகிழ்ந்தசெங் கமல மென் பொய்கையின் மேவி" (பெரிய. உருத்திர. 5); பதிற். 19 : 20.

அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த

---

292 - 4. *பலநிற மலர்களுக்கு இந்திர வில்; "சிலைத்தார் - இந்திர விற் போலும் மாலை"* (புறநா. 10 : 10, 36 : 12, 61 : 14, *உரைகள்*); *"பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போற், றிருவில் விலங் கூன்றித் தீம்பெய லுழ, வருதும்"* (கார். 1)

298. *பைஞ்சேறு : "பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபம்"* (மணி. 19 : 115)

300. *வளைவாய்க் கிள்ளை : "கிள்ளை, வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்", "வளைவாய்ச் சிறுகிளி"* (குறுந். 67: 1 - 2, 141: 1)

299 - 301. *அந்தணர் தெருவில் கோழியும் நாயும் துன்னாமை: "பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா"* (இன்னா. 3)

302 - 4. *கற்புக்கு அருந்ததி: "அருந்ததி யனைய கற்பின்"* (ஐங். 452); *"வடமீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினாள்"* (கலித். 2: 21); *"வடமீன் புரையுங் கற்பின் மடமொழி, யரிவை"* (புறநா. 122: 8 - 9); *"தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்று, மாத ரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக், காதலாள்", "வடமீன் கற்பின் மனையுறை மகளிர்"* (சிலப். 1: 28 - 95 : 229)

305. (பி-ம்.) *'பெயர்ப்படுபத்தம்'*

309. *கொக்கின் நறுவடி: "நறுவடிமா"* (மலைபடு. 512)

தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைபயத் தோன்றும்
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவில்
சிலதர் காங்குஞ் சேணுயர் வரைப்பின்
நெல்லுழு பகட்டொடு கறவை துன்னு
மேழகத் தகரோ டெகினங் கொட்கும்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால

312. "புனலாடு மகளி ரிட்ட வொள்ளிழை" (ஐங். 100: 1)
313. மணிச்சிரல்: சிறுபாண். 181; மணி. 4: 24.
315 - 6. "அந்தி யந்தண ரருங்கட னிறுக்கு, முத்தீ" (புறநா. 2: 22 - 3)
317. சீவக. 65
318. (பி - ம்.) 'பையத்தோன்றும்.' பைபய: பெரும்பாண். 334.
319. (பி - ம்.) 'நீர்ப்பெயர்த்தெல்லை போகிப் பொற்கேழ்'
319 - 20. பாற்கேழ்ப்புரவி: "பால்புரை புரவி" (பொருந. 165)
325 - 6. (பி - ம்.) 'துன்னு தேழகத் தகரோடு'
330 - 31. மகளிர் நடைக்கு மயில் நடை: "மணிவரைச் சாரல் மஞ்ஞை போல, அணிபெற வியலி யடிக்கல மார்ப்ப" (பெருங். 3. 13 : 50 - 51); முருகு. 205-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயில்
செம்பூத் தூய செதுக்குடை முன்றில்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சே றுடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்றுனர்

---

333. *வரிப்பந்து:* ''*வரிப்பந்து கொண்டோடி*'' (கலித். 51: 3); முருகு. 68-ஆம் *அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.*

331-3. ''*காதுடனே காதுங் கயலிரண்டுஞ் செங்கமலப், போதுடனே நின்று புடைபெயரத் - தாதுடனே, வண்டாடுஞ் சோலை மயில்போல் வரிப்பந்து, கொண்டாட நான்கண்டேன் கொம்பு*'' (கிளவித் தெளிவு.)

334. பி - ம். '*கைப்புனை*', '*பைப்பய*'

335. *முத்த வார்மணல்:* ''*முதிர்வா ரிப்பி மூத்த வார்மணல்*'' (புறநா. 53:1)

பொற்கழங்காடுதல்: ''*குறுந்தொடி மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்*'' (புறநா. 36: 3 - 4); ''*கைச்செம் பதுமரா கக்கழங்கும்* பொற்கழங்கும், *பச்சை மயிலியலின் பைங்கழங்கும் - மெச்சவெடுத்து*'' (திருக்காளத்திநாதருலா, 302)

337. *கள் விற்போர் கடையிற் கொடி கட்டுதல்:* ''*கள்ளின் களி நவில் கொடியொடு*'' (மதுரைக். 372); ''*கட்கொடி நுடங்கு மாவணம் புக்கு*'' (பதிற். 68: 10); ''*நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகில்*'' (அகநா. 126: 10)

337-8. *கள் விற்போர் கடைவாயிலில் கொடிகட்டிப் பூவைத் தூவுதல்:* ''*மணற் குவைஇ மலர்சிதறி, பலர்புகுமனைப் பலிப்புதவி, னறவுநொடைக் கொடியோடு, பிறபிறவு நனிவிரைஇப், பல்வே றுருவிற் பதாகை நீழற், செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பில்*'' (பட்டினப். 178 - 83)

339 - 40. அகநா. 96: 1 - 2; பெருங். 1. 40: 71 - 2.

343. ''*நுறுங்குபெய் தாக்கிய கூழார வுண்டு, பிறங்கிரு கோட்டொடு பன்றியும் வாழும்*'' (அறநெறிச். 78)

தொல் பொருள் ஆய்வு

குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழி லுழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பஃ றுழ முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த

---

348. ''விண்டோய் மாடத்து'' (பெரும்பாண். 369)

349-51. ''இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்'' (சிலப். 6: 141)

352. புறநா. 38: 1, 42: 2

357. குழவி ஓரறிவுயிரின் இளமைப்பெயர்: தொல். மரபு. சூ. 24, பேர். மேற்.

363. ''மேகமேய்க்கு மிளங்கமு கம்பொழில்'' (தே. பிரமபுரம், ''விளங்கயனூர்'')

வாடா வள்ளியின் வலம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்
நிழருழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்

---

370. “வாடா வள்ளியங் காடு” (குறுந். 216: 2); “வாடா வள்ளி வயவர்” (தொல். புறத். சூ. 5)

372-3. “பைங்நாகப் பள்ளி மணிவண்ணனிற் பாயல்கொண்டு, கைங்நாகந் துஞ்சுங் கமழ்காந்தளஞ் சாரல் போகி” (சீவக. 17)

பாம்பிற்குக் காந்தள்: “திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட், கொழுமடற் புதுப்பூ ஊதுந் தும்பி, நன்னிற மருளு மருவிடர்” (அகநா. 138: 17-9)

374. மு. மணி. 4: 5: “வெயிலொளி யறியாத விரிமலர்த் தண் காவிற், குயிலாலும்” (கலித். 30: 7.8); “கதிர்நுழை கல்லா மரம் பயில் கடிமிளை (புறநா. 21; 5); “வெயில்கண் போழாப் பயில்பூம் பொதும்பு” (பெருங். 1. 33: 27); “காய்கதிர் நுழையாக் கடி பொழில்” (பொருளியல்); “வெய்யோன், றுனுழை யாவிருளாய் ......காட்டுமொர் கார்பொழிலே” (திருச்சிற். 116)

377. (பி-ம்) ‘கூவியன்’

“கூவியர் - அப்பவாணிகர்; ‘காரகற்......பிடித்த’ என்றூர், பெரும்பாணாற்றிலும்” (சிலப். 5: 24, அடியார்.)

380. “புனல்கால் கழீஇய மணல்வார் புறவு” (மலைபடு. 48)

384-5. சுறவுவாயென்னும் தலையணிக்கு அரவு: “எரிகதிர் மகரவாய் பொறித்த, திலகமே லிடத்துக் செங்கதிர் தொடர்ந்த சேயொளி யரவென நாற்றி” (ஆனைக்காப். அகிலாண்ட. 29)

நறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயின்
அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவில்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்
திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்

---

390. (பி - ம்.) 'கொள்பவரொடும்'

392. இவ்வடி வினைமுற்று வினையெச்சமானதற்கு மேற்கோள்; நன். சூ. 350, மயிலை; நன். வி. சூ. 351.

394. (பி - ம்.) 'நெய்மிதி'

''நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறூஅ'' (புறநா. 44: 2); ''நெய்ம்மலி கவளங் கொள்ளா'' (சீவக. 1076); ''நெய்ம்மிதி கவளந் தெவிட்டியின் றடர்க்கு கிழல்சுளி தறுகண்மால் யானை'' ''கைம்முகந் தெடுத்த நெய்ம்மிதி கவளங் களித்தெதிர் மும்மதக் களிறு'' (கூர்ம. சூரியன் மரபு. 8, 22)

395. கடுஞ்சூல்: ஐங். 386; சிறுபாண். 148-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

393-5. மந்தி பிறர்சோர்வுற்றதை அறிந்து உணவுப்பொருளைக் கவர்தல்: ''மகளிர், இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச், சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து, பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்'' (குறுந். 335: 1 - 4)

397. ''கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்'' (அகநா. 326 : 4, புறநா. 15: 1)

402. ''நீனிற வுருவி னேமி யோனும்'' (புறநா. 58 : 15); ''நீல மேனி நெடியோன்'' (சிலப். 5: 172)

நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூர்
அவ்வாய் வளர்பிறைச் சூடிச் செவ்வாய்
அந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவி னைவர் போல
அடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்

402-4. முருகு. 164-5.

405. (பி : ம்.) 'நெடுமதில் வரைப்பு'

சுடும ணோங்கிய வரைப்பு: "சுடும ணோங்கிய நெடுநிலை மனை" (மணி. 3: 127); "சுடும ணெடுமதில்" (பு. வெ. 113)

சுடுமண்: சிலப். 14: 146; மணி. 18: 33.

402-5. "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப், பூவொடு புரையுஞ் சீரூர் பூவி, னிதழகத் தனைய தெருவ மிதழகத், தரும் பொகுட் டனையதே யண்ணல் கோயில்" (பரிபாடல், தி. 7); இராசகிரிய நகரத்தைத் தாமரை மலராகவும் அந்நகரின் உறுப்புக்களை அம்மலரின் உறுப்புக்களாகவும் பெருங்கதை (3. 3: 50-114)யிற் கூறியிருத்தல் இங்கே அறிந்து மகிழத்தக்கது.

407. (பி - ம்.) 'சினைஇய'

407-8. "கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்" (சிலப்: 16: 24)

415. "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய" (புறநா. 2: 15)

416. கொடுஞ்சி நெடுந்தேர்: பொருந. 163; மதுரைக். 752.

419. "ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த" பெரும்பாண். 416); "ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென" (மலைபடு. 386)

கச்சி யோனே கைவண் டோன்றல்
நச்சிச் சென்றோர்க் கேம மாகிய
அளியுந் தெறலு மெளிய வாகலின்
கலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்
இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்கள்
ஒருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்

---

398 - 420. *இவ்வடிகளிற் காஞ்சிநகரத்தின் சிறப்புக் கூறப் பட்டது.*

421. (பி - ம்.) *'ஏமமாக'*

422. (பி - ம்.) *'அளியுந் தெறலுந்தனக் கெளிய'*

அளியும் தெறலும்: "வலியுந் தெறலு மளியு முடையோய்" (புறநா. 2: 8); "குடையையும் வாளையு முடையோ னெனவே அளியுந் தெறலு முடைமை கூறினார்" (சிலப். 19: 19 - 20, அடியார்.)

423 - 4. *கருத்து:* "*நீ, உடன்று நோக்கும் வாயெரி தவழ, நீ நயந்து நோக்கும் வாய்பொன் பூப்ப*" (புறநா. 38: 5 - 6)

427. "*இருங்கடற் கூங்கிவரும் யாறென*" (பரி. 16: 27)

429. (பி - ம்) *'இமையோர்'*

மேரு மலையில் தேவருறைதல்: "தெய்வத வரையே மேலைத் தேவரா லயமே" (திருவிளை. மேருவைச். 24); "*சுராலயமே மேரு*" (சூடாமணி. 5: 13)

432. (பி - ம்.) *'நீர்ப்போகும்'*

ஒரு மரம்: "*ஒரு மரத்தோணியும் மேல் கொண்டு*" (பு. வெ. 111, உரை)

428 - 35. *மன்னர்......செவ்வி பார்க்கும் முற்றம்:* "கோக்கள் வைகும் முற்றத்தான்" (கம்ப. குகப். 65)

பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்கும்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவல்
இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
இடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ

---

441 - 2. பொருந. 135 – 6.

443 - 5. "முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் காண்டற் கெளியனாய்" (குறள், 386, பரிமேல்.); "முறைவேண்டு பொழுதிற் பதனெளியோர்" (புறநா. 35: 15)

445. (பி - ம்.) 'இடைதெரிந்து'

446. "கொடைக்கட னிறுத்த செம்மலோய்" (மலைபடு. 543); "கொடைக்கட னிறுக்கு மிக்குவா குப்பெயர்ப் பெரியோன்" (கூர்ம. சூரியன் மரபு. 8)

447. (பி - ம்.) 'உருப்பில்'

"உரும்பில் கூற்றத் தன்ன" (பதிற். 26: 13)

இவ்வடியின் பாடபேதம் போற்றூற்றும், "உருமில் சுற்றம்" என்னும் பகுதியை, உருமென்பது அச்சமென்னும் பொருள் தருதற்கு மேற்கோளாகக் காட்டினர்; தொல். உரி. 67, இளம். சே. ந.

448 - 9. பொருந. 140 - 42.

451. "தொல்விலங்கை குடுமி கொண்டு" (கூர்ம. சுவேத.5)

செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித்தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க

---

455 - 6. இடையின வெதுகைக்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். செய். சூ. 94, பேர். ந.

457 – 8. முருகக்கடவுள் கடலிற் சூர்கொன்றமை : முருகு. 45-6-ஆம் அடிகளின் அடிக்குறிப்பையும், ஷெ 45 - 61 - ஆம் அடிகளின் அடிக்குறிப்பையும் பார்க்க.

454 - 8. "'தொண்டையோர் மருக......சேய்' என்றாற்போல் வன ஏகாரத்தாற் பொருள் கூறுமாறு உணர்க" (தொல். விளி. சூ. 34, ந.)

459. (பி - ம்.) 'நொடிந்தாங்கு'

துணங்கை : பெரும்பாண். 235, பார்க்க.

"பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு" (கலித். 89 : 8), "காடுகெழு செல்விக்குப் பேய் கூறும் அல்லல்போல" (தொல். மெய்ப். சூ. 12, பேர்.) என்பவற்றாலும் பரணி நூல்களில் உள்ள, 'காளிக்குக் கூளி கூறியது' என்னும் பகுதியாலும் இங்கே கூறப்படும் செய்தி அறியப்படும்.

458 - 9. முருகு. 258.

460. தண்டா வீகை : "தண்டா வீகைத் தகைமாண் குடுமி" (புறநா. 6 : 26); "தண்டாம வீவது தாளாண்மை" (தமிழ்நா. 33)

பெரும்பெயர் : முருகு. 269 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

461. (பி - ம்.) 'வாழிய பெரிதென'

முருகு. 285–ஆம் அடியையும் அடிக்குறிப்பையும் பார்க்க.

463. கைதொழூஉப் பழிச்சி: "கைதொழூஉப் பரவி" (முருகு. 252)

465. நாவலந் தண்பொழில்: "நாவலந் தண்பொழில் வடபொழி லாயிடை" (பரி. 5 : 8); "நாவலந் தண்பொழின் மன்னர்", "நாவலந் தண்பொழி லண்ணலோரறும்" (சிலப். 17 : 3, 25 : 173); "நாவலந் தண்பொழி லண்ணுர் நடுக்குற" (மணி. 22 : 29); "நாவலந் தண்பொழி லண்ணலோரோட்டி", "நாவலந் தண்பொழி லலத்தொடு தோன்றி" (பெருங். 2. 18 : 76, 5. 3 : 183); "பூமலி

நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
இரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தாஅ விருப்பிற் றுனின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும்
ஆடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி

நாவற் பொழிற்கு'', ''பூமலி நாவற் பொழிலகத்து'' (பு. வெ. 208, 226)

466. (பி - ம்.) 'நிலைமை நோக்கி'

மு. பொருந. 176.

469. ''புகைமுகந் தன்ன மாசி றூவுடை'' (முருகு. 138) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

468 - 70. பொருந. 153 - 7 - ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.

475. (பி - ம்.) 'அயிரொடு பிறவும்'

477. ''கோண்மீ னன்ன பொலங்கலத் தளைஇ'' (புறநா. 392 : 17)

479. மு. சிறுபாண். 245.

478 - 9. முகனமர்ந்தூட்டி : ''முகனமர்ந்து நல்விருந் தோம்பு வான்'', ''முகத்தா னமர்ந்தினிது நோக்கி'' (குறள், 84, 93)

481. (பி - ம்.) 'அழலிவர்'

''ஆடும்வண் டிமிராத் தாமரை'' (புறநா. 69 : 20)

482. (பி - ம்.) 'பித்திகை', 'நிவப்பச் சூடி'

481 - 2. வண்டு இமிரா மாலை - கற்பக மாலை; 'ஆடு......சூடி பாணாறு'' (தக்க. 562, உரை)

பரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்றுத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பில்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவில்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்

---

483. (பி - ம்.) *'புலவுக் கடல்'*

486. (பி - ம்.) *'விறலியர் வேய'*

480 - 86. *பாணர் பொற்றாமரையையும் விறலியர் மாலையையும் உபகாரிகளாற் பெறுதல்* : பொருந. 159 - 62 -ஆம் *அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.*

489. *நால்கு - நான்கு; "நால்கு பண்ணினர்"* (சீவக. 1774)

488 - 9. பொருந. 165.

490. *பரிசிலர்க்குத் தேரைக் கொடுத்தல் :* சிறுபாண். 142–3-ஆம் *அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.*

491. (பி - ம்.) *'ஒழிந்த'*

"ஒன்றுத் தெவ்வ ருலைவிடத் தார்த்து" (பெரும்பாண். 419)

492. (பி – ம்.) *'விசும்புதோ யிவுளி'*

490 - 92. சிறுபாண். 247 - 8 -ஆம் *அடிகளையும், அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.*

494. *கின்னரங்கள் பாடுதல் : "பாடு கின்றன கின்னர மிதுனங்கள் பாராய்"* (கம்ப. சித்திரகூட. 12); *"பாடுவன பூவையோ கின்னரங்கள் பலவுமே"* (நக்க. 114)

496. (பி - ம்.) *'மலர்சூழ்'*

களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

---

498 - 9. *யானை தந்த விறகினால் முனிவர் தீவேட்டல்:* "கான யானை தந்த விறகிற், கடுந்தெறற் செந்தீ வேட்டு" (புறநா. 251 : 5 - 6)

500. *மலைகிழவோன் :* முருகு. 317-இன் அடிக்குறிப்பைப் பார்க்க.

மலைகிழவோன் : "இயல்பினும் விதியினும்" என்னும் சூத்திர உரையில் விதவாதவற்றுள்ளும் உயிர்முன் ககரம் மிகாததற்கு இது மேற்கோள்; நன். சூ. 164, மயிலை.

497 - 500. "யானை தந்த முளிமர விறகிற், கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து, மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி, மந்தி சீக்கு மணங்குடை முன்றில்" (புறநா. 247 : 1 - 4)

இதன் பொருள்

1. அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி - [1] தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே தோன்றிப் பரந்த இருளை விழுங்கா நின்று (பி - ம்: மறைத்து),

அகலிரு விசும்பென்பது, "நோய்தீரு மருந்து" (கலித். 60 : 18) போல் நின்றது. பருகியென்னுஞ் [2]செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்தி நின்றது.

2. பகல் கான்று எழுதரு பல் கதிர் பருதி - மறைந்த [3]பகற் பொழுதை உலகத்தே தோற்றுவித்து எழுதலைச் செய்யும் பல கிரணங்களையுடைய கனலி,

3. காய் சினம் திருகிய கடு திறல் வேனில் - கோபிக்கின்ற [4] சினம் முறுகிய கடிய வலியையுடைய முதுவேனிற் காலத்தே,

4. பசு இலை ஒழித்த பரு அரை பாதிரி - பின்பனிக் காலத்தே பசிய இலைகளை உதிர்த்த பரிய தாளினையுடைய பாதிரியினது,

5 - 6. வள் இதழ் மா மலர் வயிறு இடை வகுத்ததன் உள் அகம் புரையும் ஊட்டு உறு பச்சை - பெருமையையுடைய இதழை

---

[1] "தன்னை யொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயம்" (மதுரைக். 266 - 7, ந.); "அனைத்தும் வழிபோம் விண்ணுநீ" (தக்க. 717)

[2] "தொல். வினை. சூ. 42, பார்க்க.

[3] "பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறும்" (மதுரைக். 7)

[4] சினம் - வெயிலென்று கூறுவாருமுளர்.

உடைத்தாகிய வண்டையுடைய பூவினுடைய வயிற்றிடத்தைப் பிளந்த புலாலினுடைய (பி - ம்: பூவினுடைய) உள்ளிடத்தை யொக்கும் [1]நிறம் ஊட்டுதலுற்ற தோல்,

7 - 8. பரிய அரை கமுகின் பாளை அம் பசு பூ கரு இருந்தன்ன கண் கூடு செறி துளை - பரிய தாளினையுடைய கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசிய பூ விரியாமல் கருவாயிருந்தா லொத்த இரண்டு கண்ணும் கூடின செறிந்த துளை,

9. உருக்கி அன்ன பொருத்துறு போர்வை - உருக்கி ஒன்றாக வார்த்தாற்போன்ற தோல்களின் வேறுபாடு தெரியாமல் இசைத்த துறும் போர்வையினையும்,

பச்சைப் (6) போர்வை; பொருத்துறு போர்வை; துளையினை யுடைய (8) போர்வை.

10. சுனை வறந்தன்ன இருள் தூங்கு வறு வாய் - சுனை வற்றி உள் இருண்டாலொத்த இருள்செறிந்த [2]உண்ணுக்கினையில்லாத வாயினையும்,

11. பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவை கடை - முதற்பிறை பிறந்து ஏந்தியிருந்தாற்போன்ற, பின்பு ஏந்தியிருக்கின்ற கவைத்தலையுடைய கடையினையும்,

12 - 3. நெடு பணை திரள் தோள் மடந்தை முன் கை குறு தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு திவவின் - நெடிய மூங்கிலை யொத்த திரண்ட தோளினையுடைய மகளுடைய முன் கையில் குறிய தொடியை யொக்கும் [3]நெகிழ வேண்டிய வழி நெகிழ்ந்து இறுகவேண்டிய வழி இறுகும் வார்க்கட்டினையும்,

14. மணி வார்ந்தன்ன மா இரு மருப்பின் - நீலமணி ஒழுகினு லொத்த கருமை நிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய,

15 - 6. பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு நரம்பின் தொடை அமை கேள்வி - பொன் கம்பியாய் ஒழுகினுலொத்த முறுக்கடங்கின நரம்பின் கட்டமைந்த யாழை,

கேள்வி : ஆகுபெயர்.

போர்வையினையும் (9) வாயினையும் (10) கடையினையும் (11) திவவினையும் (13) மருப்பினையுமுடைய (14) யாழையென முடிக்க.

---

[1] "துவருட்டின கைத்தொழிலாற் பொலிவுபெற்ற போர்வை" (சிறுபாண். 225 - 6, ந.)

[2] "அண்ணா வில்லா வமைவரு வறுவாய்" (பொருந. 12)

[3] "நெகிழ வேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுக வேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டினையும்" (சிறுபாண். 221 - 2, ந.)

16. இடம் வயின் தழீஇ - இடத்தோட்பக்கத்தே அணைத்து,

17. வெ தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும் - வெய்ய தெறுதல் தொழிலையுடைய ஞாயிற்றோடே திங்களும் [1]மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்,

18. தண் கடல் வரைப்பில் தாங்குநர் பெருது - குளிர்ந்த கடல் சூழ்ந்த உலகில் தின்னைப் புரப்பாரைப் பெறாமல்,

19. பொழி மழை துறந்த புகை வேய் குன்றத்து - பெய்கின்ற மழை துறத்தலால் நிலத்தின்கண் எழுந்த ஆவிசூழ்ந்த மலையிடத்தே,

20. பழு மரம் தேரும் பறவை போல - [2]பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவைகளைப்போல,

21. கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும் - பசிமிகுதியால் அழுகின்ற சுற்றத்தாருடனே ஓரிடத்து இராமற் பயனின்று ஓடித் திரிதலைச் செய்யும்,

22. புல்லென் யாக்கை புலவு வாய் பாண - பொலிவழிந்த வடிவினையும் கற்ற [3]கல்வியை வெறுத்துக் கூறுகின்ற வாயினையுமுடைய பாண,

"சில்செவித் தாகிய கேள்வி நொந்து" (புறநா. 68 : 3) என்றார் பிறரும்; புலால் நாறுகின்ற வாயுமாம்.

கேள்வியைத் தழீஇத் (16) தாங்குநர்ப் பெறாது (18) குன்றத்தே (19) கடுந்திறல் வேனிற்காலத்தே (3) பறவைபோலத் (20) திரிதரும் (21) பாணவென முடிக்க.

23 - 4. பெரு வறம் கூர்ந்த கானம் கல்லென கருவி வானம் துளி சொரிந்தாங்கு - பெரிய வற்கடமிக்க (பி - ம்: 'வறட்காலமிக்க')

---

[1] "ஏர்பு வலன் திரிதரு - எழுந்து மகாமேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்" (முருகு. 1, ந.)

[2] பறவை — வௌவால்; "மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி, இரந்தழைப்பார் யாவருமங் கில்லை" (ஔவையார்)

[3] வறுமையினுற் கல்வியை வெறுத்துக் கூறுதலுக்கு, "அடகெடு வாய் பலதொழிலு மிருக்கக் கல்வி யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல், திடமுடன்மோ கனமாடக் கழைக்கூத் தாடச் செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை, தடநகில்வே சையராகப் பிறந்தோ மில்லை சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம், இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை யென்ன சென்ம மெடுத்துலகி லிரக்கின் றோமே" (தனிப்.) என்னும் பாடலும் இதுபோன்ற பிறவும் சான்றாகும்.

காடு உழவுத்தொழில் முதலியவற்றால் ஆரவாரம் மிகும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற் போல,

25 - 6. பழ பசி கூர்ந்த எம் இரு பெரு ஒக்கலொடு வழங்க தவாஅ பெரு வளன் எய்தி - தொன்றுதொட்ட பசிமிக்க எம்முடைய கரிய பெரிய சுற்றத்தோடே யாங்கள் பிறர்க்குக் கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப் பெற்று,

27 – 8. வால் உளை புரவியொடு வய களிறு முகந்து கொண்டு யாம் அவணின்றும் வருதும் - வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரையோடே வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அவனூரினின்றும் வாராநின்றேம்;

28. நீயிரும் - நீங்களும்,

29 - 37. [இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த், திரைதரு மரபி னுரவோ னும்பல், மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும் முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும், இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசை நீங்கு சிறப்பின், அல்லது கடிந்த வறம்புரி செங்கோற், பல்வேற் றிரையற் படர்குவி ராயின்:]

மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும் (32) முரசு முழங்கு தானை மூவருள்ளும் (33) - அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப் புரக்கும் முரசு முழங்குகின்ற நாற்படை யினையுமுடைய சேர சோழ பாண்டியரென்னும் மூவரினும்,

இலங்கு நீர் பரப்பின் வளை மீ கூறும் (34) வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின் (35) - விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப் பிறந்த சங்கில் மேலாக உலகம் கூறும் வலம்புரிச் சங்கையொத்த குற்றம் நீங்கும் தலைமையினையும்,

அல்லது கடிந்த அறம் புரி செ கோல் (36) - மறத்தைப் போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய,

இரு நிலம் கடந்த திரு மறு மார்பின் (29) முந்நீர் வண்ணன் பிறங்கடை (30) உரவோன் உம்பல் (31) - பெரிய நிலத்தை அளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலும் நிறத்தையுடையவன் பின்னிடத்தோனாகிய சோழன் குடியிற் பிறந்தோன்,

மூவருள்ளும் (33) சிறப்பினையும் (35) செங்கோலினையுமுடைய (36) உரவோ னென்க.

திருமால் குடியில் தோன்றிய உரவோன்.

அந்நீர் (30) திரை தரு மரபின் (31) பல்வேல் திரையன் (37) - அக்கடலின் திரை கொண்டுவந்த ஏறவிட்ட மரபாற் பல வேற்படையினையுடைய திரையனென்னும் பெயரை உடையவன்,

என்றதனால், நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வே னென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் [1]திரை தருதலின், திரையனென்று பெயர்பெற்ற கதை கூறினார்.

திரையன் படர்குவிராயின் (37) நின் உள்ளம் சிறக்க (45) - திரையனை நினைப்பீராயின் அவனை நினைத்தலின் நின் நெஞ்சு சிறப்புக்களைப் பெறுக;

சிறக்க நின்னுள்ளம் (45) என மேல் வருவதனை இதனோடும் கூட்டுக.

38. [கேளவ னிலையே கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக - நினது மிடி கெடுவதாக;

அவன் நிலை கேள் - அங்ஙனம் அவனை நினைத்துப் போகின்ற நீ [2]அவன் தன்மையைக் கேட்பாயாக;

39 - 41. [அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்:] அவன் கடி உடை வியல் புலம் அத்தம் செல்வோர் அலற தாக்கி கைபொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கை கொடியோர் இன்று - அவனுடைய காவலையுடைத்தாகிய அகலத்தை யுடைய நிலம், வழிப்போவாரைக் கூப்பிடும்படி வெட்டி அவர்கள் கையிலுள்ள பொருள்களைக் கைக்கொள்ளும் களவே உழவுபோலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடைய கொடுமையையுடையோர் இல்லை;

42 - 3. உருமும் உரறாது அரவும் [3]தப்பா காடு மாவும் உறுகண் செய்யா - உருமேறும் இடியாது; பாம்புகளும் கொல்லுதலைச் செய்யா; காட்டிடத்துப் புலி முதலியனவும் வருத்தம் செய்யா; ஆகலின்,

இஃது [4]அவனுணை கூறிற்று.

---

[1] திரைதந்தமை: "மாக்கட லார்ப்பதூஉம்.......திரையனை யான் பயந்தே னென்னுஞ் செருக்கு" (பெரும்பாண். இறுதி வெண்பா)

[2] (பி - ம்.) 'அவ்வழியை அவன் தன்மையை'

[3] தப்பல் - கொல்லுதல்; "ஆளன் றென்று வாளிற் றப்பார்" (புறநா. 74 : 2); "மைந்துடை வாளிற் றப்பிய வண்ணமும்", "வாளிற் றப்பிய வல்வினை யன்றே" (மணி. பதிகம், 76, 21 : 60)

[4] "கோள்வ லுளியமுங் கொடும்புற் றகழா,வாள்வரி வேங்கையு மான்கண மறலா, அரவுஞ் சூரு மிரைதேர் முதலையும், உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா, செங்கோற் றென்னவர் காக்கு நாடென" (சிலப். 13 : 5 - 9) என்பதும், 'இவற்றுள் இவனுணையும்

43 - 5. [வேட்டாங், கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச் சென்மோ :]

ஆங்கு அசைவுழி அசைஇ – அக்காட்டின்கண் இளைத்த விடத்தே இளைப்பாறி,

நசைவுழி வேட்டு தங்கி சென்மோ - எங்களிடத்தே நீ தங்கிப் போக வேண்டுமென்று நச்சினவிடத்தே நீயும் அதற்கு விரும்பித் தங்கிச் செல்வாயாக;

45. இரவல - இரத்தற்றொழிலை வல்லோய்,

45 - 7. [சிறக்கணின் னுள்ளம், கொழுஞ்சூட் டருந்திய திருந்து நிலை யாரத்து, முழவி னன்ன முழுமர வுருளி :]

முழவின் அன்ன முழுமரம் திருந்து நிலை ஆரத்து கொழு சூட்டு அருந்திய உருளி - மத்தளத்தையொத்த குறட்டிடத்தே தைத்த சிக்கென்ற தன்மையையுடைய ஆரிடத்தே நன்றாகி வளைந்த மரம் சூழ்ந்து கிடக்கப்பட்ட உருளையையும்,

[1] அச்சுக் கோக்கின்ற இடமுமாம். அக்குறட்டிலே தைத்துக் கிடக்கின்றது ஆர். சூட்டு - விளிம்பில் வைத்த வளைந்த மரம்.

48. எழூஉ புணர்ந்தன்ன பரூஉ கை நோன் பார் - கணைய மரம் இரண்டு சேர்ந்தாலொத்த பருத்த கைகளையுடைய வலிய பாரையு முடைய,

அச்சு மரத்தின் மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக் கிடக்கின்ற பருமரங்களைப் பரூஉக்கை யென்றார். அம்மரங்கள் இரண்டினையும் நெருங்கத் துளைத்துக் குறுக்கே ஏணிபோலக் கோத் ததனைப் பாரென்றார்.

49 - 50. [மாரிக் குன்ற மழைசுமந் தன்ன, ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம் :]

குன்றம் மாரி மழை சுமந்தன்ன ஆரை வேய்ந்த அறை வாய் சகடம் - மலை மாரிக்காலத்து மேகத்தைச் சுமந்து நின்றாற் போன்ற [2]தொத்துளிப்பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடைய சகடம்,

"ஆர்வை 'வேய்ந்த" என்று பாடமாயின் நிறைந்த வரகு வைக் கோலாலே வேய்ந்த வென்க.

ஐவகை நிலத்திற்குரிமையும் கூறினர்' (அடியார்.) என்ற விசேட உரையும் இங்கே கருதற்குரியன.

[1] "குறடு - அச்சுக் கோக்குமிடம்" (சிறுபாண். 252 - 3, ந.)

[2] (பி - ம்.) 'தொத்தளி', 'கொத்தளி'."ஆரை கொத்தளிப்பாய்" (திவா.)

அந்த இரண்டு மரத்திலும் கால்களை நட்டுக் குடிலாகக் கட்டி வசம்பு முதலியவற்றைக் கயிற்றாலே கோத்த பாய் எடுத்தலைக் கூறினார்.

உருளியையும் (47) பாரையுமுடைய (48) சகட மென்க.

51 - 2. வேழம் காவலர் குரம்பை ஏய்ப்ப கோழி சேக்கும் கூடு உடை புதவின் - யானையைப் புனத்தில் தின்னாமல் காக்கின்ற தொழிலை யுடையார் இதணமேலே கட்டின குடிலையொப்பச் சிறுகக் கட்டின கோழி கிடக்கும் கூட்டையுடைத்தாகிய குடிலின் வாசலிலே,

53 - 4. முளை எயிறு இரு பிடி முழந்தாள் ஏய்க்கும் தூளை அரை சிறு உரல் தூங்க தூக்கி - மூங்கில் முளை போலும் கொம்பினை யுடைய கரிய பிடியினது முழந்தாளை யொக்கும் துளையைத் தன்னிடத்தேயுடைய சிறிய உரலை அசையும்படி தூக்கி,

கோத்து நாற்றுதற்குத் துளையிடுதலின், 'துளையரைச் சிறுரல்' என்றார்.

55 - 6. நாடகம் மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீங்கு இன் இயம் கடுப்ப - நாடகமாடு மகளிர் ஆடும் களத்தே கொண்டு வந்த வாரால் பிணித்தலிறுகின இனிய முழவை ஒப்ப,

56 - 7. கயிறு பிணித்து காடி வைத்த கலன் உடை மூக்கின் - தகராதபடி கயிற்றாலே வரிந்து காடி வைத்த மிடாவையுடைய அப்பாரில் தலையிலே,

[1] புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்த தண்க் காடியென்றார்; இனிக் காடி நெய்யென்பாருமுளர்; இனிப் பாரிற் [2]கழுத்தானவிடத்தே வைத்த மிடாவென்றுமாம்.

58. மக உடை மகடூஉ பகடு புறம் துரப்ப - குழவியைக் கைக் கொண்ட மகள் இருந்து பூண்ட எருத்தை முதுகிலே அடிப்ப,

சகடப் (50) புதவின் (52) மூக்கின் கண்ணே (57) வேப்பிலை மிடைந்த (59) மகடூஉ இருந்து துரப்பவென முடிக்க.

59. கோடு இணர் வேம்பின் [3]ஏடு இலை மிடைந்த மகடூஉ (58)- கொம்பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையை யுடைய இலையைப் பிள்ளைக்குக் காவலாகக் கொண்டிருக்கின்ற மகடூஉ,

60. படலை கண்ணி - தழை விரவின மாலையையும்,

பரு ஏர் எறுழ் திணி தோள் - பரிய அழகினையும் வலியினையு முடைய இறுகின தோளினையும்,

---

[1] "காடி - ஊறுகறி" (பெரும்பாண். 308 - 10, ந.)

[2] காடி - கழுத்து; பொருந. 115 - 6-ஆம் அடிகளின் உரையையும் அடிக்குறிப்பையும் பார்க்க.

[3] 'ஏடு' என்பதற்கு மேன்மையென்னும் பொருள், "ஏடுமதிக் கண்ணியானை" (தே. திருநா. ஐயாறு) என்றவிடத்தும் பொருந்துதல் காண்க.

61. முடலை யாக்கை - முறுக்குண்ட உடம்பினையும்,

முழு வலி மாக்கள் - நிரம்பிய மெய்வலியினையுமுடைய மாக்கள்,

62 - 3. [சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த, பெருங் கயிற் றொழுகை:] சிறு துளை கொடு நுகம் பெரு கயிறு நெறிபட நிரைத்த ஒழுகை - சிறிய துளையினையுடைய கொடிய நுகத்தின் கண்ணே பெரிய கயிற்றாலே எருதுகளை ஒருவழிப்பட நிரைத்துக் கட்டின சகடவொழுங்கினை,

துளைகளிற் செருகின கழிகள் கழுத்தசையப்பட்டு நிற்றலின், கொடு நுகமென்றார். ஒரு சகடத்திற் பல பூட்டுதல் கூறினர்.

63. மருங்கில் காப்ப - எருதுகள் திருகாமல் அச்சு முறியாமல் பக்கத்தே காத்துச் செல்ல,

64. சில் பத உணவின் - இடப்படும் பொருளுக்குச் [1]சிறியவாக இடப்படும் உணவினது,

என்றது உப்பை. பதம் - பக்குவம்.

கொள்ளை சாற்றி - விலைசொல்லி,

65. பல் எருது உமணர் பதி போகு நெடு நெறி - இளைத்தாற் பூட்டுதற்குப் பல எருத்தையும் அடித்துக் கொண்டு போம் உப்பு வாணிகர் ஊர்கள்தோறும் செல்லும் நெடிய வழியினையும்,

பதிபோலப் போகுமென்றுமாம்.

மகடூஉத் துரப்ப (58) மாக்கள் (61) காப்பச் (63) சாற்றிப் (64) போகும் நெடு நெறியையு மென்க.

66. எல் இடை கழியுநர்க்கு ஏமம் ஆக - பகற்பொழுது போவார்க்கு இளைப்புத் தீர,

67 - 76. [மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம், அரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றாள், அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப், பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின், விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள், வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச், சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக், கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட், கடம்பமர் நெடுவே ளன்ன மீளி, உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்:]

மலையவும் கடலவும் மாண் பயம் தரூஉம் (67) அரு பொருள் அருத்தும் (68) ஓடா வம்பலர் (76) - மலையிலுள்ளனவும் கடலி லுள்ளனவுமாகிய மாட்சிமையையுடைய பயனைக் கொடுக்கும் பெறு

[1] "உப்பமைந்தற்றால்" (குறள், 1302) என்பதன் உரையில், 'உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவையின்றானாற்போல' (பரிமேல்.) எனவெழுதிய உரை இக்கருத்தைக் குறிப்பித்தல் காண்க.

தற்கரிய பொருள்களை உலகத்தோரெல்லாரையும் நுகரப்பண்ணும் பிறக்கிடாத புதியோர்,

என்றது, மாணிக்கமும், முத்தும், சந்தனமும் முதலியன கொண்டு போய் விற்றுத் திரிவாரைக் கூறிற்று.

பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின் (70) - பொருகின்ற அம்புகள் தசையைப் போக்கின புண்கள் தீர்ந்த மார்பினையும்,

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை (73) - பத்திரம் செருகப்பட்ட கட்டுதல் இறுகும் சேலையினையும்,

கரு வில் (74) திருந்து தொடை (68) ஓச்சிய கண் அகல் எறுழ் தோள் (74) - கொடிய வில்லைத் தப்பாத தொடையிலே நிரம்ப வாங்கின இடமகன்ற வலியினையுடைத்தாகிய தோளினையுமுடைய,

கடம்பு அமர் நெடு வேள் அன்ன (75) வம்பலர் (76) - கடம்பிடத்தேயிருந்த நெடிய முருகனையொத்த வம்பலர்,

மீளி (75) உடம்பிடி தட கை ஓடா வம்பலர் (76) - [1]கூற்றுவனை யொத்த வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய பிறக்கிடாத வம்பலர்,

மார்பினையும் (70), உடையினையும் (73), தோளினையுமுடைய (74) வம்பலர்,

வரை ஊர் பாம்பின் (72) வெள் கை ஒள் வாள் விரவு வரி கச்சில் (71) பூண்டு புடை தூங்க (72) - மலையிடத்தே யூர்கின்ற பாம்புபோலே யானைக்கொம்பாற் கடைந்திட்ட வெள்ளிய [2]ஆசினை யுடைய ஒள்ளிய வாள் தன்னிடத்தில் விரவின வரியையுடைய கச்சிலேலே தோளிலே கோக்கப்பட்டு ஒரு பக்கத்தே தூங்காநிற்க,

நோன் தாள் (68) [3]அடி புதை அரணம் எய்தி (69) - நடந்து வலியையுடையவாகிய காலில் அடியை மறைக்கின்ற செருப்பைக் கோத்து,

படம் புக்கு - சட்டையிட்டு,

வம்பலர் (76) தூங்க (72) எய்திப் புக்கு (69) வழங்கும் (80) பெரிய வழி (81) என்க.

77 – 8. தடவு நிலை பலவின் முழுமுதல் கொண்ட சிறு சுளை பெரு பழம் கடுப்ப - பெருமையையுடைய நிலையினையுடைய பலாவினடியிலே குலை கொண்ட சிலவாகிய (பி – ம்: சிறியவாகிய) சுளையினையுடைய பெரிய பழத்தையொப்ப,

---

[1] "கால வேலான்" (கம்ப. கையடைப். 11)

[2] ஆசு - கைப்பிடி.

[3] அடிபுதை அரணம் : இச்சொல் பாதரட்சை யென்பதன் மொழிபெயர்ப்பாதல் காண்க.

நல்ல பழம் சுளைமிக இராதென்றுர்.

78 - 80. [மிரியல், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன் புறத், தணர்ச்செவிக் கழுதை :]

மிரியல் புணர் பொறை தாங்கிய கழுதை - மிளகினது ஒத்த கனமாகச் சேர்த்த பாரத்தைத் தாங்கிய கழுதை,

வடு ஆழ் நோன் புறத்து அணர் செவி கழுதை - வடுவழுந்தின வலியினையுடைய முதுகினையும் எடுத்த செவியினையுமுடைய கழுதை,

80 - 81. கழுதை சாத்தொடு வழங்கும் உல்கு உடை பெரு வழி கவலை காக்கும் - கழுதையிலே மிளகெடுத்துக்கொண்டு போகின்ற திரளோடே வம்பலர் (76) வழங்கும் பெரிய வழியில் கவர்த்த வழிகளையும் காத்திருக்கும்,

உல்கு - சுங்கம்.

82. வில்லுடை வைப்பின் -- விற்படையிருக்கின்ற ஊர்களில்,

வியல் காடு இயவின் - அகன்ற காட்டு வழிகளில்,

83 - 5. நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த பூளை அம் பசு காய் புடை விரிந்தன்ன வரி புற அணிலொடு - நீண்ட தாளினை யுடைய இலவத்தினது அசைகின்ற கொம்பு காய்ந்த பஞ்சினை யுடைய அழகினையுடைத்தாகிய பசிய காயினது முதுகு விரிந்து பஞ்சு தோன்றினுலொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே,

85. கருப்பை ஆடாது - எலியும் திரியாதபடி,

86 - 8. [யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல், வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர், ஈத்திலை வேய்ந்த வெய்ப் புறக் குரம்பை:]

யாறு அறல் புரையும் வெரிந் கொழு மடல் உடை நெடு தகர் ஈந்து - யாற்றினது அறலையொக்கும் முதுகினையும் கொழுவிய மடலினையுமுடைய நெடிய மேட்டு நிலத்தில் நின்ற ஈந்து.

மடலின் அடி தன்னிடத்தே நிற்க மேல் அறுப்புண்ட ஈந்து அறல் போன்றிருக்குமாறு உணர்க.

வேல் தலை அன்ன வை நுதி ஈந்து இலை வேய்ந்த எய் புறம் குரம்பை - வேலின் முனையை யொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய ஈந்தினுடைய இலையாலே வேய்ந்த எய்ப்பன்றி முதுகு போலும் (பி - ம்: எய்ப்பன்றி போலும்) புறத்தினையுடைய குடிலில்,

89 - 90. [மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி, ஈன்பிண வொழியப் போகி :] ஈன் பிணவு மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி ஒழிய போகி - பிள்ளையைப் பெற்ற எயிற்றி மான்தோலாகிய படுக்கையிலே அப்பிள்ளையோடே முடங்கிக் கிடக்க ஒழிந்தோர் போய்,

''பெண்ணும் பிணவு மக்கட் குரிய'' (தொல். மரபு. சூ. 61) என்பதனால் வந்த பிணவென்னும் [1] ஆகாரவீறு அல்வழிக்கண் வன்கணமன்மையிற் குறியதன் இறுதிச்சினை கெட்டு உகரம் பெறாது நின்றது.

90 - 92. [நோன்காழ், இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல், உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி :] இரும்பு தலை யாத்த திருந்து கணை நோன்காழ் விழு கோல் உளி வாய் சுரையின் மிளிர மிண்டி - பூண் தலையிலே அழுத்தின நன்றாகிய திரட்சியையும் வலியையுமுடைத்தாகிய வயிரத்தினையுமுடைய சீரிய கோல் செருகின உளி போலும் வாயினையுமுடைய பாரைகளாலே கட்டிகள் கீழ்மேலாகக் குத்துகையினாலே,

கோல் செருகப்படுகின்ற சுரையையுடைமையிற் சுரையென்றார்; ஆகுபெயர்; சுரை - குழைச்சு.

93. இரு நிலம் கரம்பை படு நீறு ஆடி - கருநிலமாகிய கரம்பை நிலத்தில் உண்டாகிய புழுதியை அளைந்து,

94. நுண் புல் அடக்கிய வெள் பல் எயிற்றியர் - மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக் கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயின் குடியிற் பிறந்த மகளிர்,

போகி (90) மிண்டுகையினாலே (92) ஆடி (93) அடக்கிய எயிற் றிய ரென்க.

[2] மிகவிளைந்து உதிர்ந்த புல்லை எறும்பு இழுத்துச் சேரவிட்டு வைத்த இடம் அறிந்தெடுத்தல் அந்நிலப்பண்பு.

95 - 6. பார்வை யாத்த [3] பறை தாள் விளவின் நீழல் முன்றில் நிலம் உரல் பெய்து - பார்வைமான் கட்டிநின்ற தேய்ந்த தாளினை யுடைய விளவினது நிழலையுடைய முற்றத்திடத்துத் தோண்டின நிலவுரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து,

97. குறு காழ் உலக்கை ஓச்சி - குறிய வயிரமாகிய உலக்கை யாலே குத்தி (பி - ம்: குற்றி),

97 - 8. நெடு கிணறு வல் ஊற்று உவரி தோண்டி - ஆழ்ந்த கிணற்றிற் சில்லூற்றாகிய உவர் நீரை முகந்து கொண்டு,

98 - 9. தொல்லை முரவு வாய் குழிசி முரி அடுப்பு ஏற்றி - பழைய ஒறுவாய் (பி - ம்: வெறுவாய்) போன பானையிலே வார்த்த உலையை முரிந்த அடுப்பிலே வைத்து,

---

[1] தொல். உயிர் மயங்கியல், சூ. 32. [2] அகநா. 377 : 3 - 4.

[3] பறைதல் - தேய்தல் : ''சுவர் பறைந்த - சுவரிடத்தில் தேய்ந்த'' (பெரும்பாண். 189, ந.)

100. [வாரா தட்ட வாடூன் புழுக்கல்:]
வாராது அட்ட புழுக்கல் - அரியாது ஆக்கின சோற்றை, எயிற்றியர் (94) பெய்து (96) ஓச்சி (97) தோண்டி (98) ஏற்றி (99) அட்ட புழுக்கலென முடிக்க.
வாடு ஊன் - உப்புக்கண்டத்தோடே,

101 - 2. [வாடாத் தும்பை வயவர் பெருமகன், ஓடாத் தானை:] ஓடா தானை வாடா தும்பை வயவர் பெருமகன் - முதுகிடாத படையினையுடைய கெடாத தும்பை சூடின போரைவல்ல வீரருடைய தலைவனாகிய,

102 - 3. [1]ஒள் தொழில் கழல் கால் செ வரை நாடன் சென்னியம் எனின் - ஒள்ளிய தொழில்களையுடைத்தாகிய வீரக் கழலணிந்த காலினையுடைய செவ்விய மலைநாட்டையுடையவனுடைய பாணச்சாதியேம் (பி - ம்: பாண்சாதியேம்) என்று கூறுவிராயின்,

104. தெய்வம் மடையின் தேக்கு இலை குவைஇ - தெய்வங்களுக்குச் சேர இட்டுவைத்த பலிபோலே புழுக்கலையும் (100) தேக்கிலையிலே குவிக்கையினாலே,

104 - 5. [நும், பைதீர் கடும்பொடு பதமிகப் பெருகுவிர்:] பதம் நும் பைதீர் கடும்பொடு மிகப் பெறுகுவிர் - அவ்வுணவை நும்முடைய பசுமைதீர்ந்த சுற்றத்தோடே மிகப் பெறுகுவீர்;

வியன்காட்டியவுகளில் (82) உல்குடைத்தாகிய (81) நெடுநெறியையும் (65) வம்பலர் (76) கழுதைச்சாத்தொடு வழங்கும் (80) உல்குடைப் பெருவழிக் கவலையையும் காத்திருக்கும் (81) வில்லுடை வைப்பின் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடூனையும் (100) எல்லிடைக்கழியுநர்க்கு ஏமமாகத் (66) தேக்கிலையிலே குவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனின் (103) நும் (104) கடும்பொடு மிகப் பெறுகுவிர் (105) என முடிக்க.

உல்கு-இரண்டுவழிக்குங் கொள்க. குவைஇயென்னும் செய்தெனெச்சம் காரணகாரியப்பொருட்டு.

106. [மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்:] மயங்கு மான் அடி பொறித்த அதர் மருங்கின் - நீரின்மையின் மயங்கித் திரியும் மானடி அழுந்திக் கிடக்கின்ற வழியிடத்திலே.

---

1 "ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்கால்" (பதிற். 34:2) என்பதன் உரையில் 'ஒண்பொறிக் கழற்காலென்றது தாங்கள் செய்த அரிய போர்த்தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்காலென்றவாறு' என்றெழுதியுள்ள பகுதி இங்கே உணரற்பாலது.

107 – 8. வான் மடி பொழுதில் நீர் நசைஇ குழித்த அகழ் - மழை பெய்தலைத் தவிர்ந்த காலத்தே நீர் நிற்கவேண்டுமென்று நச்சுதலாலே குழித்த குளம்,

அகழப்படுதலின் அகழென்றது ஆகுபெயர்.

108. சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கி - அதனைச் சூழப் பறித்துக் கிடக்கின்ற மட்டுக் குழிகளினுள்ளே மறைந்து ஒதுங்கி,

தண்ணீர் குடிக்க வருமென்று குளத்தைச் சூழப் பறித்த குழி,

109 – 10. புகழா வாகை பூவின் அன்ன வளை மருப்பு ஏனம் வரவு பார்த்து இருக்கும் - அகத்திப்பூவினையொத்த வளைந்த கொம்பினை யுடைய பன்றியினது நீருண்ண வரும் வரவைப் பார்த்திருக்கும்,

111. அரை நாள் வேட்டம் அழுங்கின் - நடுவியாமத்து வேட்டை ஒழிந்தார்களாயின்,

பகல் நாள் - அதன் பிற்றை நாளிலே,

112 : 7. [பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகு வாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும், நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளை இ:]

முள் அரை தாமரை புல் இதழ் புரையும் நெடு செவி குறு முயல் போக்கு அற - முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழை யொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும் போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வளை இ - குவிந்த இடத்தையுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்று பிணைத்த வலைகளை மாட்டி (பி - ம்: மூட்டி) வளைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி - அங்காந்த வாயை யுடைய நாய்களுடனே சென்று பசிய தூறுகளை அடித்து அவற்றிற் கிடவாமல் ஓட்டி,

116-7. [கடுங்கட் கானவர் கடறுகூட்டுண்ணும், அருஞ்சுரம்:]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம் - காட்டிலுள்ள முயல்களைக் கொள்ளை கொண்டுண்ணும் அரிய பாலைநிலம்,

கடுங்கண் கானவர் - தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இராவேட்டம் அழுங்கிற் பகலிலே (111) முயலைப் போக்கற வளைத்து (115) எருக்கிக் (112) கூட்டுண்ணும் (116) அருஞ் சுரமென முடிக்க.

117. அரு சுரம் இறந்த அம்பர் (பி - ம்: உம்பர்) குறும்பில் சேப்பின் (129) - இவ்வரிய நிலத்தைக் கைவிட்ட மற்றை நிலத்திற் குறும்பில் தங்கின்,

குறும்பிற் சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக் கூட்டுக.

இதனால் [1]நண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலம் கூறி அதனைக் கலந்த நிலமும் கூறினார்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக் கடந்த பின்னரென்றும் உரைப்பர்.

117 - 8. [பருந்துபட, ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி:] ஒன்னா தெவ்வர் நடுங்க பருந்து பட ஓச்சி - பொருந்தாத பகைவர் அஞ்சப் பருந்துகள் படியக் குத்தி,

119 - 20. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலகையொடு நிரைஇ - கூர்மையையுடைய முனை மழுங்கின புலால் நாறும் வாயையுடைய வேலை வடித்த மணி கட்டின பலகைகளோடே நிரைத்து வைத்து,

120 - 21. முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர் - தலையிலே முடிந்த நாணையுடைய வில்லைச் சார்த்திவைத்த அம்பு தங்கும் அகற்சியையுடைய வீடுகளையும்,

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின் - ஊகம் புல்லாலே வேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

123 - 4. வரை தேன் புரையும் கவை கடை புதையொடு கடு துடி தூங்கும் கணை கால் பந்தர் - மலையில் தேனிறாலையொக்கும் குதையினையுடைத்தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஓசை கடிய துடியும் தூங்கும் திரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் நாய் யாத்த துன் அரு கடி நகர் - சங்கிலிகளாலே நாய்களைக் கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை:] முள் வாழ் வேலி சூழ் மிளை படப்பை - முள்ளையுடைய வாழ்வேலியினையும் அதனைச் சூழ்ந்த காவற்காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின் - கொடிய கணையமரம் ஏறட்ட உட்கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை நெடு நுதி வய கழு நிரைத்த வாயில் - செவ்விய நிலையினையும் நெடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர்வாசலினையுமுடைய,

பகைவரைக் குத்துதற்குக் கழு வைத்தார்.

129. கொடு வில் எயின் குறும்பில் சேப்பின் - கொடிய வில்லையுடைய எயினச்சாதியிலுள்ளாருடைய அரணிலே தங்கின்,

கணை துஞ்சு வியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பென்க.

130 - 131. களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் விளை நெல்லின் செ அவிழ் சொன்றி - களர்நிலத்தே வளர்ந்த

[1] "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு, முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" (தொல். அகத். சூ. 9)

ஈந்தினது விதையைக் கண்டாற்போன்ற மேட்டுநிலத்தே விளைந்த நெல்லினது சிவந்த அவிழாகிய சோற்றை,

132 – 3. ஞமலி தந்த மனவு சூல் உடும்பின் வறை கால்யாத்தது வயின் தொறும் பெறுகுவிர் - நாய் கடித்துக் கொண்டுவந்த அக்கு மணி போலும் முட்டைகளையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்ததனை மனைகடோறும் பெறுகுவிர்;

சேம்பிற் (129) பெறுகுவிரென்க.

134 – 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு சிலைப்பினும் சூல் மகள் மாறா மறம் பூண் வாழ்க்கை - யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன் மேலே செல்லினும் நீல நிறத்தையுடைய மேகத்திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற் கொண்ட மகள் அவையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப் பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த - தமது வலியாற் [1] கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலே செய்யும் குடியிற் பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை - புலியினது போத்தை யொத்த புல்லென்ற தாடியையுடைய அந்நிலத்துத் தலைவன்,

139 - 40. [2]செல் நாய் அன்ன கரு வில் சுற்றமொடு கேளா மன்னர் கடி புலம் புக்கு - தான் குறித்த விலங்கின் மேலே செல்கின்ற நாய் அதனைத் தப்பாமற் கொள்ளுமாறு போன்ற கொடிய வில்லையெடுத்த காவலாளருடனே தன் வார்த்தை கேளாத பகைவருடைய காவலையுடைய நிலத்தே சென்று,

141. நாள் ஆ தந்து [3] நறவு நொடை தொலைச்சி - விடியற் காலையிலே அவர்கள் பசுக்களை அடித்துக்கொண்டு போந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகப் போக்கி,

142. இல் அடு கள் இன் தோப்பி பருகி - அதற்குப் பின்பாகத் தமது இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய [3] நெல்லாற் செய்த கள்ளையுண்டு,

---

[1] "கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோர்" (பெரும்பாண். 40 - 41)

[2] "நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது, கூஉய்க் குழாஅமுடன் கொட்கு - மாய்படை, பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர், சென்றெவன் செய்வர் செரு" (தொல். உவம. சூ. 37. பேர். மேற்.) என்றவிடத்து வீரர்களுக்கு நாயை உவமித்திருத்தல் காண்க.

[3] "நறவுநொடை நெல்லி னாண்மகி ழயரும்" (அகநா. 61:10)

143. மல்லல் மன்றத்து மத [1]விடை கெண்டி - வளப்பத்தினை யுடைய மன்றிலே வலியையுடைய ஏற்றை அறுத்துத் தின்று.

144. மடிவாய் தண்ணுமை நடுவண் சிலைப்ப - தோலை மடித்துப் போர்த்த வாயையுடைய மத்தளம் தங்களுக்கு நடுவே முழங்காநிற்ப,

145 - 7. [சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளையூஉப், பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை, முரண்டலை கழிந்த பின்றை:] சிலை நவில் எறுழ் தோள் ஓச்சி வலன் வளையூஉ பகல் மகிழ் தூங்கும் தூங்கா முரண் தலை இருக்கை கழிந்த பின்றை - வில்லுப் பயின்ற வலியையுடைய இடத்தோளை எடுத்து வலப் பக்கத்திலே வளைந்து பகற்பொழுதிலே மகிழ்ச்சியுடனே ஆடும் அசையாப் பொருதலையுடைய குடியிருப்பினைக் கடந்தபின்பு,

இதனாற் குறிஞ்சிநிலம் முற்கூறி அதன் பகைப்புலமும் பிற்கூறினார்.

147 - 8. மறிய குளகு அரை யாத்த குறு கால் - ஆட்டுமறிகள் நின்று தின்னும் தன்மையை உடைய தழைகளைத் தம்மிடத்தே கட்டின குறிய கால்களையும்,

148 - 9. [குரம்பைச், செற்றை வாயிற் செறிகழிக் கதவின்:]
செற்றை வாயில் - சிறுதூற்றையுடைய வாயிலினையும்,
குரம்பை - குரம்பையினையும்,
கழி செறி கதவின் - கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும்,

150. [கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்:] கழித்தலை கற்றை வேய்ந்த சாம்பின் - வரிந்த கழிகளிடத்தே வரகு கற்றை களாலே வேய்ந்த சேக்கையையும்,

151. [அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள:] உதள அதளோன் துஞ்சும் காப்பின் - கிடாயினுடைய தோல்களைப் பாயலாக உடைய முதியோன் துயில்கொள்ளும் காவலையும் உடைய,

[2] "மோத்தையுந் தகரு முதளு மப்பரும், யாத்த வென்ப யாட்டின் கண்ணே" என்றார் மரபியலில்.

காலினையும் (148) வாயிலினையும் கதவினையும் (149) சாம்பினையும் (150) காப்பினையும் (151) உடைய குரம்பை (148) என்க.

152. நெடு தாம்பு தொடுத்த குறு தறி முன்றில் - [3] தாமணி தொடுத்த நெடிய தாம்புகள் கட்டின குறிய முளைகளையுடைய முற்றத்தினையும்,

---

[1] விடை - கிடாயென்று முன் எழுதினர்; முருகு. 282, ந.

[2] தொல். மரபியல், சூ. 47.

[3] தாமணி: (பெரும்பாண். 243 - 4, ந.); "வானவர் தேனுவெல்லாந் தந்தா மணியிற் செறிபசு வாக" (திருவாரூர்க்கோவை, 35.)

153 - 4. கொடு முகம் துருவையொடு [1]வெள்ளை சேக்கும் இடு முள் வேலி எரு படு வரைப்பின் - வளைந்த முகத்தினையுடைய செம்மறியாட்டுடனே வெள்ளாடும் கிடக்கும் கட்டுமுள்ளாகிய வேலியினையும் உடைய எரு மிகுகின்ற ஊரிடத்து,

குரம்பையினையும் (148) முன்றிலினையும் (152) வேலியினையும் உடைய வரைப்பென்க.

155. [நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி :]

நள் இருள் விடியல் புள் எழ - செறிந்த இருள்போகின்ற காலத்தே பறவைகள் துயிலெழாநிற்க,

போகியென்பதனை மேலே கூட்டுக.

156. புலி குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி - புலியினது முழக்கம் போலும் முழக்கத்தை உடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றை வலித்து,

157 - 8. ஆம்பி வால் முகை அன்ன கூம்பு முகிழ் உறை அமை தீ தயிர் கலக்கி - குடைக்காளானுடைய வெள்ளிய முகைகளை யொத்த குவிந்த முகிழ்களையுடைய உறையாலே இறுகத் தோய்ந்த இனிய தயிரைக் கடைந்து,

முகை - மொட்டு. முகிழ் - ஆடையின்மேல் புடைத்து நிற்பது.

158. [2] நுரை தெரிந்து - வெண்ணெயை எடுத்து,

159. புகர் வாய் குழிசி பூ சுமடு இரீஇ போகி (155) - தயிர் புள்ளியாகத் தெறித்த [3] வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற் செய்த சுமட்டைத் தலையிலே வைத்து முற்கூறிய குறிஞ்சி நிலத்து ஏறப் போய்,

160. நாள் மோர் மாறும் - காலையிலே மோரை விற்கும்,

நல் மா மேனி - நன்றாகிய மாமையாகிய நிறத்தினையும்,

161. சிறு குழை துயல்வரும் காதின் - தாளுருவி அசையும் காதினையும்,

பணை தோள் - மூங்கில்போலும் தோளினையும்,

162. குறு நெறி கொண்ட கூந்தல் - குறியதாகிய அறலைத் தன்னிடத்தே கொண்ட மயிரினையுமுடைய,

ஆய் மகள் - ஆய்ச்சாதியிற் பிறந்த மகள்,

மேனி முதலியவற்றை உடைய மகள்.

163. அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி - மோர் விற்ற தனால் உண்டாகிய முதலாயவற்றாலே சுற்றத்தாரெல்லாரையும் உண்ணப்பண்ணி,

---

[1] வெள்ளை - வெள்ளாடு: "சிறுதலை வெள்ளைத் தோடு." (குறுந். 163: 2)

[2] அகநா. 101: 8

[3] பி - ம். 'நிறத்தையுடைய'

164. நெய் விலை கட்டி பசு பொன் கொள்ளாள் - பின்பு தான் நெய்யை விற்கின்ற விலைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்,

[1] அட்டியென்று பாடமோதி வார்த்தென்று கூறுதலுமாம்.

165. எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம் குடி (166) - பாலெருமையையும், நல்ல பசுவையும், கரிய எருமை நாகினையும் நெய்க்கு ஒப்பாகச் சொல்லி வாங்கும் குடி,

குறிஞ்சிநிலத்தே நெய்யை விற்று அவர்கள் அடித்துக் கொண்ட எருமை முதலாயவற்றை விலையாக வாங்கினாளென்க.

166. மடி வாய் கோவலர் - சீழ்க்கை பிடித்தலாலே மடித்த வாயையுடைய இடையர்,

குடி வயின் சேப்பின் - குடியிருப்பிலே தங்குவிராயின்,

167 - 8. [இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன, பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்:] ஞெண்டின் இரு கிளை சிறு பார்ப்பு அன்ன பசு தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் - நண்டினது பெரிய சுற்றமாகிய சிறிய பார்ப்பையொத்த செவ்வித் தினையரிசியால் ஆக்கின சிலுத்த சோற்றைப் பாலுடனே பெறுகுவிர்;

புள்ளெழாவிற்க (155) வாங்கிக் (156) கலக்கித் தெரிந்து (158) இரீஇப் (159) போகி (155) மாறும் (160) ஆய்மகள் (162) என்க.

மடிவாய்க் கோவலர் (166) வரைப்பிடத்து (154) ஆய்மகள் (162) அருத்திக் (163) கொள்ளாளாய்ப் (164) பெறூஉம் (165) குடிவயிற் சேப்பின் (166) மூரல் பாலொடும் பெறுகுவிரென முடிக்க.

169. தொடுதோல் மரீஇய வடு ஆழ் நோன் அடி - செருப்பு விடாமற் கிடந்த வடு அழுந்தின வலியை உடைய அடியினையும்,

170. விழு தண்டு ஊன்றிய கை - பசுக்களுக்கு வருத்தம் செய்யும் தடியை ஊன்றின கை,

மழு தின் வல் கை - மரங்களை [2]ஒடியெறிந்து கொடுக்கும் கோடாரியால் தழும்பிருந்த வலிய கையினையும்,

171. உறி கா ஊர்ந்த மறு படு மயிர் சுவல் - இரண்டு தலைகளிலும் உறியினையுடைய காக்கள் மேலே இருந்ததனால் உண்டாகிய தழும்புமிக்க மயிர் எழுந்த தோட்கட்டினையும்,

172. மேம் பால் உரைத்த ஓரி - எல்லா மணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும்,

---

[1] 'நெய்விலைக்கட்டி' (164) என்பதை நெய்விலைக்கு அட்டியெனப் பிரிக்க.

[2] ஒடியெறிதல்: "ஒடியவெறிந்தென்பது ஒடியெறிந்தென விகாரமாயிற்று" (கலித். 68: 12-5, ந.); "ஒடியெறிந்து வாரொழுக்கி" (பெரிய. கண்ணப்ப. 75.)

172-4 [ஓங்குமிசைக், கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட, பல்பூ மிடைந்த படலைக் கண்ணி:] காட்ட ஓங்கு மிசை கோட்டவும் கொடியவும் பல் பூ விரைஇ மிடைந்த படலைக் கண்ணி - காட்டிடத் தனவாகிய உயர்கின்ற உச்சியினையுடைய கொம்புகளில் உள்ளவும் கொடிகளில் உள்ளவுமாகிய பல பூக்கள் கலந்து நெருங்கிய [1]கலம்பக மாகிய மாலையினையும்,

175. ஒன்று அமர் உடுக்கை - ஒன்ருய்ப் பொருந்திய உடையினையும் உடைய,

கூழ் ஆர் இடையன் - பாற்சோற்றை உண்கின்ற இடையன், அடி (169) முதலியவற்றை உடைய இடையன்.

176. கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி - கன்றுகள் பொருந்தின பசுந்திரளோடே காட்டிலே தங்கி,

177-9. [அந்நு ணவிர்புகை கமழக் கைம்முயன்று, ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்:]

ஞெலி கோல் அம் நுண் அவிர் புகை கமழ கை முயன்று கொண்ட செ தீ ஞெகிழி தோட்ட கரு துளை குழலின் - தீக்கடை கோலாலே அழகிய நுண்ணியதாய் விளங்கும் புகை முற்படப் பிறக்கும்படி கையாலே கடைந்துகொண்ட சிவந்த நெருப்பினையுடைய [2]கடைக்கொள்ளியால் துளையிட்ட கரிய துளையினையுடைய குழலால் எழுப்பின,

பெருவிறல் என்பதனை இடையன் என்பதனோடு முன்னே கூட்டி எண்ணுக.

இனி ஞெலி கோல் - படுத்த கோல், ஞெகிழி - கடைகின்ற கோல் என்றும் உரைப்பர்.

180. இன் தீ பாலை முனையின் - மிகவும் இனிய பாலை என்கின்ற பண்ணைத் தான் வெறுக்கின்,

180-82. [குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி:] குமிழின் புழல் கோடு தொடுத்த மரல் புரி விரல் எறி நரம்பின் வில் யாழ் இசைக்கும் குறிஞ்சி - குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக் கட்டின மரற் கயிருகிய விரலாலே தெறித்து வாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்கும் குறிஞ்சி என்கிற பண்ணை,

183. பல் கால் பறவை கிளை செத்து ஓர்க்கும் - பல காலினை உடைய வண்டுகள் தம் சுற்றத்தின் ஓசையாகக் கருதிச் செவி கொடுத்துக் கேட்கும்,

---

[1] "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்" (திவ். திருப்பள்ளி. 5.)

[2] "குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி" (புறநா. 108 : 1.)

"நண்டுந் தும்பியும்" (தொல். மரபியல். சூ. 31) என்னும் சூத்திரத்திற் [1]செவிப்பொறியான் இவை உணர்தல் கூறினும்.

184. புல் ஆர் வியல் புலம் போகி - புல்லு நிறைந்த அகற்சியையுடைய நிலத்தைக் கடந்து போய்,

முன்னர் இடையர் குடியிருப்புக் கூறிப் பின்னர் அவர் பசுக்கள் முதலியன நிற்கின்ற முல்லை நிலமும் கூறினார்.

184 - 5. முள் உடுத்து எழு காடு ஓங்கிய தொழு உடை வரைப்பின் - முள்ளுத் தன்னிடத்தே சூழ்ந்து எழுகின்ற [2]விடத்தேர் தொடரி முதலிய காடுகள் சூழ வளர்ந்த தொழுக்களை உடைய ஊர்களில்,

இது பசுக்கள் முதலியன மேயாமற் காக்கின்ற இளங்காட்டை உடைய படைத்தலைவர் இருப்புக் கூறிற்று.

186. பிடி கணத்து அன்ன குதிர் உடை முன்றில் - பிடித்திரள் நின்றாற் போன்ற வரகு முதலியன நிற்கும் குதிர்களையுடைய முன்றிலினையும்,

187. களிறு தாள் புரையும் திரி மரம் பந்தர் - யானையினது காலை யொக்கும் வரகு திரிகை நட்டு நிற்கும் பந்தரினையும்.

---

[1] இங்கே காட்டிய சூத்திரத்திற்குரிய நச்சினார்க்கினியருரை இப்பொழுது கிடைத்திலது: எனினும் சீவகசிந்தாமணி 892-3-ஆம் பாட்டுக்களின் விசேடவுரையில் அவர் எழுதியுள்ள கீழ்க்கண்ட பகுதி இங்கே பயன்படும்: " 'நண்டும்......பிறப்பே' என்று தும்பிக்குச் செவியின் றெனவே இவற்றிற்கும் செவியின்றாதலாலே வருத்த மிகுதியான் இவற்றை நோக்கி வாளா கூறியதன்றி வேறன்று; இவை ஈண்டு வந்து கரிபோதலில; 'கேள்வியில்லன வருதலென்னை?' என்பது கடா; அதற்கு விடை : ஆசிரியர், 'நண்டுந்தும்பியும்' என்று தும்பியைப் பின் வைத்தது, மேல் வருஞ் சூத்திரத்தின்,'மாவு மாக்களு மையறி வென்ப'(தொல். மரபு. சூ. 32) என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்தலென்னும் தந்திரவுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப் போந்தாம்; அதுவே ஆசிரியர் கருத்தென்பது சான்றோருணர்ந்தன்றே, 'பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த, தாதுண் பறவை பேதுற லஞ்சி, மணிநா யாத்த மாண்வினைத் தேரன்' (அகநா. 4 : 10 - 12) என்று அப்பொருள் தோன்றக் கூறியதென்றுணர்க. இக்கருத்தான் இவரும் செவியுணர்வுண்டென்று கூறினார்."

[2] விடத்தே தொடரி - ஒரு வகை முள் மரம்; விடத்தர், விடத்தேர், விடத்தேரையென இப்பெயர் வழங்கும்; "திரிகாய் விடத்தரொடு" (பதிற். 13 : 14); "தள்ளா விடத்தேர்" (தண்டி. மேற்.); "விடத்தேரை மன்னும்வனம்" (திருவரங்கத்தந். 93.)

188 - 9. குறு சாடு உருளையொடு கலப்பை சார்த்தி நெடு சுவர் பறைந்த புகை சூழ் கொட்டில் - குறிய சகடத்தில் உருளைகளோடே கலப்பையையும் சார்த்தி வைக்கையினாலே நெடிய சுவரிடத்தில் தேய்ந்த புகை சூழ்ந்த கொட்டிலினையும் உடைய,

நெடுகக் கட்டி ஒரு பக்கத்திலே அடுப்பெரித்து ஒரு பக்கத்திலே தொழிலொழிந்த நாளில் சகடையில் உருளையையும் கலப்பையையும் சார்த்தி எருதுகளும் கட்டி நிற்றலிற் கொட்டில் என்றார்.

190 - 91. பருவம் வானத்து பா மழை கடுப்ப கரு வை வேய்ந்த கவின் குடி சிறு ஊர்-மாரிக்காலத்தை உடைய விசும்பிடத்தே பரந்த மேகத்தை ஒப்ப வரகு வைக்கோலாலே வேய்ந்த அழகினை உடைய குடியிருப்பினை உடைய சிறிய ஊர்களிலே,

சீறூர் - அம்முல்லை நிலத்து உழுதுண்பார் இருப்பு.

192 - 3. நெடு குரல் பூளை பூவின் அன்ன குறு தாள் வரகின் குறள் அவிழ் சொன்றி-நெடிய கொத்தினையுடைய சிறு பூளையினது பூவை யொத்த குறிய தாளினையுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய சோற்றை,

194 - 5. புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன அவரை வால் புழுக்கு அட்டி - நிறத்தை உடைய கொத்தினை உடைய வேங்கைப் பூவைக் கண்டாலொத்த அவரை விதையினது நன்றாகிய பருப்பை மிக விட்டு,

வேங்கைப் பூ வரிகளை உடைய விதைக்கு உவமை. புழுக்கு - புழுங்க வெந்தது; [1] கும்மாயமுமாம்; பருப்புச்சோறுமென்ப.

195 - 6. [2] [பயில்வுற், றின்சுவை மூரற் பெறுகுவிர்:]

இடையன் (175) அல்கிப் (176) பாலையைத் தான்முனையின் (180) அதனைக் கைவிட்டு விரலாலே வாசிக்கும் குறிஞ்சியைப் (182) பறவை யோர்க்கும் (183) புலத்தைப் போகி (184) வரைப்புக்களின் (185) முன்றில் (186) முதலியவற்றை உடைய சீறூர்களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கை யட்டி (195) மூரலோடே பெறுகுவிரென முடிக்க.

---

[1] கும்மாயம் - புழுக்கிய பச்சைப்பயற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவதொரு சிற்றுண்டி; இஃது இப்பெயரோடு விஷ்ணு வாலயங்களில் இக்காலத்தும் வழங்கி வருகின்றது; "பயற்றுத் தன்மை கெடாது கும்மாய, மியற்றி" (மணி. 27:185 - 6); "கும்மா யத்தொடு வெண்ணெய் விழுங்கி" (திவ். பெரியாழ்வார். 3. 3 : 3) என்பதில் கும்மாயமென்பதற்கு ஸ்ரீமணவாள மாமுனிகள், 'குழையச் சமைத்த பருப்பு' என்று பொருள் செய்திருக்கின்றனர்; "பயற்றது கும்மாயம்' (நன். சூ. 299, மயிலை. மேற்.)

[2] இதற்கு ஒரு பிரதியிலும் உரை கிடைத்திலது; கலத்தலினாலே இனிய சுவையினையுடைத்தாகிய மூரலோடே பெறுகுவிர் என்க.

196. ஞாங்கர் - அங்கிலத்திற்கு மேல்.

197. குடி நிறை வல்சி செ சால் உழவர் - அக்குடியிருப்பு நிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாக உழுகின்ற உழவுத் தொழிலை உடையோர்,

ஒருசால் இருசால் என்றல் உழவுத் தொழிற்கு மரபு.

198. நடை நவில் பெரு பகடு புதவில் பூட்டி - உழவுத் தொழிலிலே பயின்ற பெரிய எருதுகளை வாயிலிலே நுகத்தைப் பூட்டிக்கொண்டு சென்று,

199 - 200. பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில் உடும்பு முகம் முழு கொழு மூழ்க ஊன்றி - பிடியினது வாயை ஒத்த வளைந்த வாயை உடைய கலப்பையினுடைய உடும்பினது முகத்தை ஒத்த பெருங்கொழு மறைய அமுக்கி,

201. தொடுப்பு எறிந்து உழுத துளர் படு துடவை - முற்பட வளைய உழுது விதைத்த பின்னர் இடையே உழுத களைகளைக் களைக் கொட்டுச் செத்திய தோட்டத்தை.

202. அரி புகு பொழுதின் - அறுக்கும் பருவம் வருங்காலத்தே,

202 - 5. [இரியல் போகி, வண்ணக் கடம்பி னறுமல ரன்ன, வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற், கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்:]

குறு கால்(204)கறை அணல் குறும்பூழ்(205)-அதன்கண் தங்கும் குறுங்காலினையும் கருமையை உடைய கழுத்தினையும் உடைய குறும்பூழ்,

வண்ணம் கடம்பின் நறு மலர் அன்ன (203) வளர் இள பிள்ளை தழீஇ (204) – வெள்ளிய நிறத்தை உடைய கடம்பினது நறுநாற்றத்தினை உடைய பூவை ஒத்த வளருகின்ற இளைய பிள்ளைகள் மிகவும் பறத்தலாற்றாதனவற்றையும் கூட்டிக்கொண்டு.

''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'' (தொல். மரபியல் சூ. 4) என்றார்.

இரியல் போகி (202) கட்சி சேக்கும் (205) - அவர்கள் ஆரவாரத்திற்கு அஞ்சிக் கெடுதற்றன்மையை உடையவாய் ஆண்டு நின்றும் போய்க் காட்டிலே தங்கும்,

206. வல் புலம் இறந்த பின்றை - முல்லை நிலத்தைப் போன பின்பு,

இதனால், முற்றும் குடிச்சீறூர் உழவரால் உழுதற்குரிய முல்லை நிலமும் கூறினார். இது மருத நிலத்தைச் சேர்ந்த முல்லை நிலம்.

உழவர் (197) பூட்டி (198) ஊன்றி (200) உழுத துடவை (201) அரி புகு பொழுதில் (202) குறும்பூழ் (205) பிள்ளை தழீஇப் (204) போகிச் (202) சேக்கும் (205) வன்புலம் என்க.

206 - 7. மெல் தோல் மிதி உலை கொல்லன் முறி கொடிறு அன்ன - மெத்தென்ற துருத்தியை அமுக்கி ஊதுகின்ற உலையில் கொற்றொழில் செய்கின்றவனுடைய முறிந்த கொடிற்றை ஒத்த,

208. கவை தாள் அலவன் அளறு அளை சிதைய - கப்பித்த காலை உடைய ஞெண்டினது சேற்றின்கண் உண்டாகிய முழை கெடும்படி,

209 - 10. பை சாய் கொன்ற மண் படு மருப்பின் கார் ஏறு பொருத கண் அகல் செறுவின் - பசிய கோரையை அடியிலே குத்தி எடுத்த மண் கிடக்கின்ற கொம்பையுடைய கரிய கடாக்கள் தம்மிற் பொருத இடம் அகன்ற செய்யின்கண்,

211. உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர் - தாம் உழப் படாத அந்த நுண்ணிய சேற்றை ஒக்க மிதித்த உழவர்,

212. முடி நாறு அழுத்திய நெடுநீர் செறுவில் - முடியாகக் கிடக்கின்ற நாற்றை நட்ட நெடிய நீரையுடைய செய்களில்,

சிதையக் (208) கொன்ற மருப்பின் (209) ஏறு பொருத செறுவில் (210) தொளியை நிரவிய வினைஞர் (211) நாற்றை அழுத்திய செறுவென்க.

213 - 4. களைஞர் தந்த கணை கால் நெய்தல் கள் கமழ் புது பூ முனையின் – அச்செய்யில் களைகளைப் பறிப்பார் பறித்து ஏறட்ட திரண்ட தாளினையுடைய நெய்தலினது தேன் நாறுகின்ற புதிய பூவை வெறுத்தாராயின்,

214 - 6. [முட்சினை, முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக், கொடுங்கான் மாமலர் கொய்து கொண்டு:] முகை சூழ் முள் சினை முள்ளி தகட்ட கொடு கால் பிறழ் வாய் மா மலர் கொய்து கொண்டு- அரும்புகள் சூழ்ந்த முள்ளை உடைய கொம்புகளை உடைய முள்ளி யின் இதழை உடையவாகிய வளைந்த காலையும் மறிந்த வாயையும் [1] கருமையையும் உடைய பூவைப் பறித்துக்கொண்டு,

216 - 8. அவண பஞ்சாய் கோரை [2] பல்லின் சவட்டி புணர் நார் பெய்த புனைவு இன் கண்ணி - அந்நிலத்திலுண்டாகிய தண்டாங்கிய கோரையைப் பல்லாலே மென்று மென்று கிழித்து முடிந்த நாராற் கட்டின புனைதற்கினிய மாலையை,

219. ஈர் உடை இரு தலை ஆர சூடி - ஈருடைத்தாகிய கரிய தலை நிறையும்படி சூடி,

220. பொன் காண் கட்டளை கடுப்ப [3] கண்பின் – பொன்னை உரைத்து மாற்றுக்காணும் உரைகல்லையொப்பக் கண்பினது,

---

[1] முள்ளிமலர் கரியதென்பதை, "கடுஞ்சூன் முண்டகங் கதிர் மணி கழாஅலவும்" (சிறுபாண். 148) என்பதனாலும் அறியலாகும்.

[2] பல்-நாரைக் கிழிக்கும் ஒரு கருவியென்றும் சொல்வது உண்டு.

[3] பி - ம். 'கணப்பின்', 'சணப்பின்'

221. புல் காய் சுண்ணம் புடைத்த மார்பின் - புல்லிய காயில் தோன்றின தாதை அக்கதிரை முறித்து அடித்துக்கொண்ட மார்பினையும்,

தாது நீளக் கிடந்தது உரைத்தாற்போன்றது.

222. இரும்பு வடித்தன்ன மடியா மெல் தோல் - இரும்பைத் தகடாக்கினால் ஒத்த திரையாத மெல்லிய தோலினையும் உடைய,

223. கரு கை வினைஞர் காதல் அம் சிறுஅர் - வலிய கையால் தொழில் செய்வாருடைய விருப்பத்தை உடைய அழகிய சிறு பிள்ளைகள்,

224. பழ சோறு அமலை முனைஇ - பழைய சோற்றினது கட்டியை வெறுத்து,

224 - 6. வரம்பில் புது வை வேய்ந்த கவி குடில் முன்றில் அவல் எறி உலக்கை பாடு விறந்து - வரம்பிடத்துப் புதிய வைக்கோலாலே வேய்ந்த கவிந்த குடிலினுடைய முற்றத்தே அவலை இடிக்கும் உலக்கையினது ஓசை செறிகையினாலே,

குடில்கள், பன்றி முதலியவற்றைக் காத்தற்குக் கட்டினவை.

226 - 7. அயல் கொடு வாய் கிள்ளை படு பகை வெரூஉம் - அதற்கு அயலிடத்தனவாகிய வளைந்த வாயையுடைய கிளிகள் தமக்கு உண்டாகின்ற பகையாக நினைத்து அஞ்சும்,

228. நீங்கா யாணர் வாங்கு கதிர் கழனி - இடையறுத புது வரு வாயினை உடைய வளையும் கதிரினை உடைத்தாகிய கழனியிடத்து,

229. கடுப்பு உடை பறவை சாதி அன்ன - எறியப்பட்டார்க்குக் கடுக்குந் தன்மையைக் கொடுத்தலை உடைய குளவித்திரளை ஒத்த,

230. பைது அற விளைந்த பெரு செ நெல்லின் - பசுமை யறும்படி முற்றின பெரிய செந்நெல்லினுடைய,

231. தூம்பு உடை திரள் தாள் துமித்த வினைஞர் - உள்ளுப் பொய்யை உடைத்தாகிய திரண்ட தாளை அறுத்த தொழில் செய்வார்,

232. பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல் - பாம்பு கிடக்கின்ற மருதினது உயர்ந்த கொம்பால் உண்டாகிய நிழலிலே,

பழைய மரமாதலிற் பாம்பு கிடக்கும் என்றுர்.

233. பலி பெறு வியல் களம் மலிய ஏற்றி - ஆண்டு உறையும் தெய்வங்கள் பலி பெறுகின்ற அகன்ற களங்களிலே மிகவும் நிறையப் போராக விட்டு,

234 - 5. [கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும், துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோல்:] கணம் கொள் சுற்றமொடு கை புணர்ந்து துணங்கை ஆடும் அம் பூதம் துகில் உடுத்தவை போல் - திரட்சி கொண்ட தம்முடைய சுற்றத்தோடே ஒழுங்காகச் செறிந்து நின்று துணங்கைக் கூத்தாடுகின்ற அழகினை உடைய பூதங்கள் வெள்ளிய துகிலை உடுத்து நின்றவைபோல,

என்றது, தம்மில் விளையாடுவதற்குத் திரண்ட பூதமென்றவாறு.

236 - 7. சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின் குழுமு நிலை [1] போரின் முழு முதல் தொலைச்சி - சிலந்தியினது வெள்ளிய நூல் சூழ்ந்த பக்கத்தினை உடைய பலவாகத் திரண்ட தன்மையினை உடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கி விரித்து,

238. பகடு ஊர்பு இழிந்த பின்றை - ஏர்கள் கடாவிட்டுப் போன பின்பு,

238 - 9. துகள் தப வையும் துரும்பும் நீக்கி - குற்றம் அறும்படி வைக்கோலையும் கூளத்தையும் அதனிடத்துநின்று நீக்கி,

239. பைது அற - [2] ஈரம் உலராநிற்க,

240. குடகாற்று எறிந்த குப்பை - மேல்காற்றாலே கையாலே தூவித் தூற்றின பொலி,

240 - 41. வடபால் செம்பொன் மலையின் சிறப்ப தோன்றும் - வடதிசைக்கண் உளதாகிய மேருவாகிய மலைபோல மிகும்படி தோன்றும்,

242. தண் பணை தழீஇய தளரா இருக்கை - மருதநிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்புகளில்,

மார்பினையும் (221) தோலினையு முடைய (222) வினைஞர் சிறார் (223) முனைஇ (224) அவலெறியுலக்கைப்பாடுவிறக்கையாலே (226) கிள்ளை வெரூஉம் (227) கழனிகளில் (228) விளைந்த நெல்லினைத் (230) துமித்த வினைஞர் (231) ஏற்றித் (233) தொலைச்சி (237) நீக்கி (239) எறிந்த குப்பை (240) தோன்றும் இருக்கை எனக் கூட்டுக.

243 - 4. பகடு ஆ ஈன்ற கொடு [3] நடை குழவி கவை தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்-பெருமையை உடைய பசுக்கள்ஈன்ற வளைந்த அடியை உடைய கன்றுகளைக் கட்டின [4] தாமணியை உடைய நெடிய தாம்புகள் கட்டிக்கிடக்கின்ற தறிகள் நட்ட பக்கத்தினையும்,

[5] "முழுவலி துஞ்சும் நோய்தபு நோன்றொடை, நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை" என்றார் பிறரும். கவை: ஆகுபெயர்.

245. [ஏணி யெய்தா நீணெடு மார்பின்;] நீள் ஏணி எய்தா நெடு மார்பின் - நீண்ட ஏணிக்கு எட்டாத நெடிய வடிவினையும்,

246. முகடு துமித்து அடுக்கிய பழ பல் உணவின் - தலையைத் திறந்து உள்ளே சொரியப்பட்ட பழையவாகிய பல நெல்லினையும் உடைய,

---

[1] பி - ம். 'போர்பின்'

[2] "பைதுஅற - பசுமையறும்படி" (பெரும்பாண். 230, ந.)

[3] நடை - அடி: "நடைநாலும்" (தக்க. 716.)

[4] பெரும்பாண். 152, உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[5] பதிற். 44: 9 - 10.

பல்லுணவென்றார், செந்நெல் முதலிய சாதிப்பன்மை கருதி.

247. குமரி மூத்த கூடு ஓங்கு நல் இல் - அழியாத்தன்மையவாய் முதிர்ந்த கூடுகள் வளர்ந்த நல்ல இல்லினையும்,

அல்குலினையும், மார்பினையும், உணவினையும் உடைய கூடென்க.

248 - 9. தச்சச் சிறாஅர் நச்ச புனைந்த ஊரா நல் தேர் உருட்டிய புதல்வர் - தச்சச் சாதியிற் பிறந்த தொழில் செய்தற்குரிய சிறியோர் பிறர் விரும்பும்படி பண்ணின பிறராலே ஏறப்படாத நல்ல சிறு தேரை உருட்டிக்கொண்டு திரிந்த பிள்ளைகள்,

250. தளர் நடை வருத்தம் வீட - தமது தளர் நடையால் உண்டான வருத்தம் தம்மை விட்டு நீங்கும்படி,

250 - 52. அலர் முலை செவிலி அம் பெண்டிர் தழீஇ பால் ஆர்ந்து அமளி துஞ்சும் அழகு உடை நல் இல் - பால்சுரந்த முலையினை உடைய செவிலித்தாயராகிய அழகினையுடைய மகளிரைத் தழுவிக்கொண்டு அம்முலையிற் பாலை நிறைய உண்டு தமது படுக்கையிலே துயில்கொள்ளும் அழகை உடைத்தாகிய நல்ல இல்லினையும்,

செவிலியம் பெண்டிர் என்பது ஒருமை பன்மை மயக்கம்.

253 - 4. தொல் பசி அறியா துளங்கா இருக்கை மல்லல் பெரு ஊர் மடியின் - ஏனை நாட்டிற்கு இயல்பாகிய பழைய மிடியை அறியாத அசையாத குடியிருப்பினையும் உடைய வளப்பத்தை உடைத்தாகிய பெரிய ஊரின்கண்ணே தங்கின்,

254 - 6. மடியா வினைஞர் தந்த வெள் நெல் வல்சி மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர் - தொழிலொழிந்திராத தொழில் செய்வார் கொண்டுவந்த வெள்ளிய நெற்சோற்றை மனையின் கண்ணே வாழும் கோழிப்பெடையினாற் சமைத்த பொரியலோடு பெறுகுவிர்;

"கோழி கூகை யாயிரண் டல்லவை, சூழுங் காலை யளகென லமையா" (தொல். மரபியல். சூ. 55) என்றார்.

செறுவிற் (212) புதுப்பூ முனையின் (214) மாமலர் கொய்து கொண்டு (216) சவட்டிப் (217) பெய்த கண்ணியைச் (218) சூடித் (219) தளரா இருக்கைகளிற் (242) கூடோங்கு நல்ல இல்லையும் (247) அழகினையுடைய நல்ல இல்லையும் (252) துளங்கா இருக்கையினையும் உடைய (253) பேரூரிலே தங்குவீராயின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் எனக் கூட்டுக.

257 - 9. [மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத், தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன், கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்கு:] மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து அணங்கு உடை யாளி தாக்கலின் கணம் சால் வேழம் பல உடன் கதழ்வு உற்றாங்கு -

மேகங்கள் விளையாடித் திரியும் மூங்கில் வளர்கின்ற பக்கமலையிலே தம்மை வருத்துதலை உடைய[1] யாளிபாய்கையினாலே திரட்சி அமைந்த யானை பலவும் கூடிக் கலங்கிக் கூப்பிட்டாற்போல,

260 - 61. எந்திரம் சிலைக்கும் துஞ்சா கம்பலை விசயம் அடு உம் புகை சூழ் ஆலைதொறும் – ஆலை ஆரவாரிக்கும் மாருத ஓசையை உடைய கருப்பஞ்சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகை சூழ்ந்த கொட்டில்கள்தொறும்,

ஆலை: ஆகுபெயர்.

262. கரும்பின் தீ சாறு விரும்பினிர் மிசைமின் - கரும்பினது இனிய சாற்றை முற்படக் குடித்துப் பின்னர் அக்கரும்பின் கட்டியைத் தின்பீராக;

[2] "மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி", [3] "வீழ்களிறு மிசை யாப் புலியினும்" என மிசைதல் தின்றற்றொழில்மேல் நின்றது.

263 - 5. [வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத், தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை:] வெள் கோடு விரைஇ வேழம் நிரைத்து தாழை முடித்து தருப்பை வேய்ந்த குறியிறை குரம்பை - வஞ்சிமரமும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்கு நடுவே கலந்து நாற்றி வேழக்கோலை வரிச் சாக நிரைத்துத் தாழைநாரால் கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப் பட்ட குறிய இறப்பை உடைய குடிலினையும்,

முடிதந்து முடித்தென விகாரம். குறியிறை பண்புத்தொகை யாதலின், [4] மருவின்பாத்தியதாய் நின்றது.

265. பறி உடை முன்றில் - மீனை வாரியெடுக்கும் பறிகளை உடைய முற்றத்தினையும் உடைய,

266 - 7. கொடு கால் புன்னை கோடு துமித்து இயற்றிய பைங்காய் தூங்கும் பாய் மணல் பந்தர் - வளைந்த காலை உடைய புன்னைகளுடைய கொம்புகளை வெட்டியிட்ட பசிய காய்கள் நாலும் பரந்த மணலை உடைய பந்தரிலே,

பைங்காய் - சுரைக்காய் முதலியன; புன்னங்காயுமாம்.

268. இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி - இளையவர் களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து பின்பு,

269 - 71. புலவு நுனை பகழியும் சிலையும் மான செ வரி கயலொடு பசு இரு பிறமும் மை இரு குட்டத்து மகவொடு வழங்கி-புலால்நாறும் முனையினை உடைய அம்பையும் வில்லையும் ஒப்பச் சிவந்த வரியினை

---

[1] யாளி – இங்கே அத்தியாளி. [2] கலித்தொகை, 50: 2.
[3] அகநானூறு, 29: 3. [4] தொல். குற்றியலுகரப். சூ. 77.

உடைய கயல்களோடே பசிய இருப் பிறழும் கருமையை உடைய பெரிய ஆழ்ந்த குளங்களைப் பிள்ளைகளோடே உலாவி மீனைப் பிடித்து,

272 - 3. கோடை நீடினும் குறைபடல் அறியா தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும் - கோடைக் காலம் நீட்டித்து நின்ற தாயினும் வற்றுதலை அறியாத கையை மேலே கூப்பி முழுகி நீர்நிலை காட்டுங்காலத்துக் கையமிழ்ந்தும் குளங்களினுடைய கரையைக் காத்திருக்கும்,

"வெளிற்றுடற் குருதி வெள்ள நிலையிது வென்ப வேபோற், களிற்றுகிர்ப் பிறழ்பற் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி, யளித்தவை பாடி யாட" (சீவக. 804) என்றார் பிறரும்.

274. கொடு முடி வலைஞர் குடி வயின் சேப்பின் - வளைந்த முடியினை உடைய வலையை வீசுவாருடைய குடியிருப்பிலே தங்கு வீராயின்,

பந்தரிலே (267) துவன்றி (268) வழங்கிக் (271) காத்திருக்கும் (273) வலைஞர் என முடிக்க.

குரம்பையினையும், முன்றிலினையும் (265) உடைய குடி (274) என்க.

275. அவையா அரிசி அம் களி துழவை - குற்றாத கொழிய லரிசியை அழகினை உடைய களியாகத் துழாவி அட்ட கூழை,

276. மலர் வாய் பிழாவில் புலர ஆற்றி - அகன்ற வாயை உடைய தட்டுப் பிழாவிலே உலர ஆற்றி,

277 - 8. பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும் பூ புறம் நல் அடை அளை இ - பாம்பு கிடக்கின்ற புற்றின்கண் கிடக்கும் புற்றாம் பழஞ்சோற்றை ஒக்கும் பொலிவு பெற்ற புறத்தினை உடைய நல்ல முளையை இடித்துச் சேர அதனை அதிலே கலந்து,

நெல்லடையும் பாடம்.

278 - 9. [தேம்பட, எல்லையு மிரவு மிருமுறை கழிப்பி:] தேம் பட இரு எல்லையும் இரு இரவும் முறை கழிப்பி – இனிமை பிறக்கும் படி இரண்டு பகலும் இரண்டு இரவும் அரியாமல் வைத்து,

280 – 81. [வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த, வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி:]

வல் வாய் சாடியின் வழைச்சு அற விளைந்த - வலிய வாயினை உடைய சாடியின் கண்ணே இளமை அறும்படி முற்றின.

விரல் அலை அரியல் வெ நீர் நறு பிழி - விரலாலே அலைத்து அரிக்கும் தன்மையை உடைத்தாகிய வெவ்விய நீர்மையை உடைய நறிய கள்ளை,

282. தண் மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர் - மிகவும் உலராத மீனைச் சுட்டதனோடே இளைத்த அளவிலே பெறுகுவிர்;

ஆற்றி (276) அளைஇக் (278) கழிப்பி (279) விளைந்த(280) பிழி (281) என்க.

குடிவயிற் சேப்பின் (274) பிழியைப் (281) பெறுகுவிர் என முடிக்க.

283. பசு ஊன் பெய்த சுவல் பிணி பைந்தோல் - செவ்வியான இறைச்சி இட்டுவைத்த தோளிடத்தே கோத்து நாற்றின பசிய தோலினை உடைய,

என்றது, தூண்டிலிற் கோக்கும் இரையிட்டு வைக்கும் தோற் பையை.

284. கோள் வல் பாண் மகன் – மீனைத் தப்பாமற் பிடிக்கவல்ல பாண்சாதியிற் பிறந்தவன்,

284 - 7. [தலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக், கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப், பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை :]

நெடு கழை தலை வலித்து யாத்த நாண் தூண்டில் கொளீஇ பொதி இரை - நெடிய மூங்கிற்கோலைத் தலையிலே வலித்துக் கட்டின கயிற்றிடத்தே தூண்டிலைக் கொளுத்தி அதனை மறையப் பொதிந்த இரையை,

கொடு வாய் இரும்பின் மடி தலை புலம்ப நடுங்க கதுவிய போழ் வாய் வாளை—வளைந்த வாயினை உடைய தூண்டிலினது மடித்த தலை இரையின்றித் தனிக்கும்படியாகக் கயிறு நடுங்க அவ்விரையைக் கௌவி அகப்படாது போன அங்காந்த வாயை உடைய வாளை மீன்,

288 - 9. நீர் நணி பிரம்பின் நடுங்கு நிழல் வெரூஉம் நீத்து உடை நெடு கயம் - நீர்க்கு அணித்தாய் நின்ற பிரம்பினது காற்றால் அசையும் நிழலை நீரிற் கண்டு அஞ்சும் பெருக்கினை உடைய நெடிய குளத்திலே,

289 - 90. தீ பட மலர்ந்த கடவுள் ஒள் பூ அடைதல் ஓம்பி – நெருப்பின்தன்மை நீரிலே உண்டாகப் பூத்த கடவுள் சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப் பூவைப் பறித்து முடித்தலைப் பரிகரித்து,

291 - 2. [உறைகான் மாறிய வோங்குயர் நனத்தலை, அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப :]

ஓங்கு உறை கால் மாறிய உயர் அகல் இரு வானத்து குறைவில் ஏய்ப்ப - ஓங்குகின்ற துளி கால்விழுதல் தவிர்ந்த உயர்ச்சியை உடைய அகன்ற பெரிய வானத்திடத்துக் குறைவில்லாகிய இந்திர வில்லை ஒப்ப,

293 - 4. [அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி, முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை:] அரக்கு இதழ் குவளையொடு நீலம் நீடி முரண் பூ மலிந்த முதுநீர் நன தலை (291) பொய்கை - சாதிலிங்கம் போன்ற இதழை உடைய குவளையோடே நீலப் பூவும் வளர்ந்து ஒன்றற் கொன்று நிறம் மாறுபடுதலை உடைய ஏனைப் பூக்களும் மிக்க முதிய நீரை உடைத்தாகிய அகன்ற இடத்தை உடைய பொய்கை களிடத்தே.

295 – 6. குறுநர் இட்ட கூம்பு விடு பல் மலர் பெருநாள் அமயத்து பிணையினிர்கழிமின்-பறிப்பார் நுங்களுக்கு இட்ட குவிதல் நெகிழ்ந்த பல பூக்களைப் பெரிதாகிய நாட்காலத்தே சூடிப்போமின்;

வாளை (287) வெரூஉம் (288) கயத்திலே மலர்ந்த (289) பூவை ஓம்பிக் (290) குறைவிலேய்ப்பப் (292) பூமலிந்த பொய்கை களிடத்தே (204) குறுநரிட்ட மலரைப் (295) பிணையினிர் கழிமின் என முடிக்க.

297. செழு கன்று யாத்த சிறு தாள் பந்தர் - வளவிய கன்றைக் கட்டின சிறிய கால்களை உடைய பந்தரினையும்,

298. [பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்:]

பைஞ்சேறு மெழுகிய நல் நகர் - ஆப்பியான் மெழுகிய நன்றாகிய அகங்களையும்,

படிவம் - தாம் வழிபடும் தெய்வங்களையும் உடைய உறைபதி (301) என்க.

299. மனை உறை கோழியொடு ஞமலி துன்னாது - மனைகளிலே தங்கும் கோழிகளுடனே நாயும் சேராமல்,

300. வளை வாய் கிள்ளை மறைவிளி பயிற்றும் - வளைந்த வாயினையுடைய கிளிக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும்,

301. மறை காப்பாளர் உறை பதி சேப்பின் – வேதத்தைக் காத்தற்றொழிலைச் செய்வார் இருக்கின்ற ஊரிடத்தே தங்கு வீராயின்,

துன்னமல் (299) உறையும் பதி என்க.

302. பெரு நல் வானத்து வடவயின் விளங்கும் - பெரிய நன்றாகிய விசும்பிடத்து வடதிசைக்கண்ணே நின்று விளங்கும்,

303. சிறுமீன் புரையும் கற்பின் - அருந்ததியை ஒக்கும் கற்பினையும்,

நறு நுதல் - நறிய நுதலினையும் உடைய,

304. வளை கை மகடூஉ வயின் அறிந்து அட்ட - வளையை உடையவாகிய கையை உடைய பார்ப்பனி பதம் அறிந்து அட்டன வற்றை,

என்றது பாற்சோறு, பருப்புச்சோறு முதலியவற்றை.

305. சுடர் கடை - ஞாயிறு பட்ட காலத்தே,

பறவை பெயர் படு வத்தம் - பறவையினது பெயரைப் பெறும் நெல்லு,

என்றது, இராசான்னமென்னும் பெயர்பெறுகின்ற நெல்லென்ற வாறு. ஆகுதி பண்ணுதற்கு இந்த நெல்லுச் சோறே சிறந்த தென்று இதனைக் கூறினர். இனி பின்மினி நெல் என்பாரும் உளர்; இப்பெயர் வழக்கின்மையும் ஆகுதிக்குச் சிறவாமையும் உணர்க.

306 - 8. [சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து, கஞ்சக நறுமுறி யளைஇ:] மாதுளத்து பசு காய் கறி கலந்து கஞ்சகம் நறு முறி அளைஇ சேதா நறுமோர் வெண்ணெயின் உருப்பு உறு போழொடு -

[1] கொம்மட்டி மாதுளையினுடைய பசிய காய் மிளகு பொடி கலக்கப் பட்டுக் கருவேம்பினது நறிய இலை அளாவப்பட்டுச் சிவந்த பசுவினது நறிய மோரின்கண் எடுத்த வெண்ணெயின்கண்ணே கிடந்து வேகலின் வெம்மையுறுகின்ற வகிரோடே,

308 - 10. [பைந்துணர், நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த, தகை மாண் காடியின்:] நெடு மரம் கொக்கின் பைந்துணர் நறு வடி விதிர்த்த தகை மாண் காடியின் - நெடிய மரமாகிய மாவினது பசிய கொத்திடத்து நறிய வடுவினைப் பலவாகப் போகட்ட அழகு மாட்சிமைப்பட்ட ஊறுகறியோடே,

310. வகைபட பெறுகுவிர் - சோற்றின் கூறுகள் உண்டாகப் பெறுகுவிர்;

சேப்பின் (301) மகடூஉ (304) வத்தத்தான் உண்டான அரிசியை (305) அட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிர் என்க.

311 - 2. வண்டல் ஆயமொடு உண் துறை தலைஇ புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை - விளையாட்டினை உடைய திரள்க ளோடே நீருண்ணுந் துறையிலே கூடி நீராடுகின்ற மகளிர் போகட்டுப் போன பொன்னாற் செய்த மகரக் குழையினை,

313. இரை தேர் மணி சிரல் இரை செத்து எறிந்தென - இரை யைத் தேடுகின்ற நீலமணிபோலும் சிச்சிலி தனக்கு இரையாகத் துணிந்தெடுத்ததாக,

314. புள் ஆர் பெண்ணை புலம்பு மடல் செல்லாது - பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்த மடலிற் போகாமல்,

315 - 6. கேள்வி அந்தணர் அரு கடன் இறுத்த வேள்வி தூணத்து அசைஇ - நூற்கேள்வியை உடைய அந்தணர் செய்தற்கு அரிய கடனைச் செய்து முடித்த யாகசாலையிடத்து நட்ட யூபத்தின் மேலே இருந்து,

316 - 7. [யவனர், ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட:] யவனர் உயர்மிசை கொண்ட ஓதிமம் விளக்கின்-சோனகர் கூம்பின் மேலிட்ட அன்ன விளக்குப்போல,

ஈண்டுக் [2] காரன்னம் என்று உணர்க.

---

[1] "மாதுளங்காய்-கொம்மட்டி மாதுளங்காய்; புளித்த கறி ஆக்குதற்குக் கொம்மட்டி மாதுளங்காய் சிறக்கும்" (சிலப். 16 : 52, அரும்பத.)

[2] "காரன்ன முண்மையின், வெள்ளையன்னம் இனஞ் சுட்டிய பண்பு" (சீவக. 930, ந.) என்பதனாலும், "பள்ள நீர்குடைந் தஞ்சிறைப் பாசிபோர்த் தெழுந்த, வெள்ளை யன்னத்தைக் காரன மெனப்பெடை வீழ்ந்த, உள்ள மீட்டலமர" (திருவிளை. நகரச். 12)

318. வைகுறும் மீனின் - இராக்காலம் விடிதற்குக் காரணமான வெள்ளியாகிய (பி - ம். வெள்ளியதாகிய) மீன் போல,

பை பைய தோன்றும் - ஒளி விட்டு விளங்காது தோன்றும்,

319. [1] நீர்ப்பெயற்று எல்லை போகி - நீர்ப்பெயற்று என்னும் ஊரின் எல்லையிலே போய்,

அசைஇ (316) விளக்கின் (317) மீனிற்றோன்றும் (318) நீர்ப் பெயற்றென்க.

319 - 21. பால் கேழ் வால் உளை புரவியொடு வடவளம் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளிநீர் படப்பை - பால்போலும் வெள்ளிய நிறத்தினையும் வெள்ளிதாகிய தலையாட்டத்தினையும் உடைய மேற்றிசைக்கண் உளவாகிய குதிரைகளுடனே வடதிசைக்கண் உளவாகிய நுகரப்படும் பொருள்களைக் கொண்டுவந்து தரும் மரக்கலங்கள் சூழ்ந்து கிடக்கப்பட்ட பெருமை உடைய கடற்பக்கத்தினையும்,

322 - 4. [மாட மோங்கிய மணன்மலி மறுகிற், பரதர் மலிந்த பல்வேறு தெருவிற், சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின் :]

மணல் மலி மறுகின் சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின் - மணல் மிக்க தெருவுகளில் தொழில்செய்வார் காக்கப்படும் மிகவும் உயர்ந்த பண்டசாலைகளையும்,

தொழில் செய்வார் - கம்மகாரர்.

பரதர் மலிந்த மாடம் ஓங்கிய பல்வேறு தெருவின் - [2] பரதவர் மிக்க மாடங்கள் உயர்ந்த பலவாய் வேறுபட்ட தெருக்களையும்,

325 – 7. நெல் உழு பகட்டொடு கறவை துன்னு மேழகம் தகரோடு எகினம் கொட்கும் கூழ் உடை நல் இல் - நெல்லினைப் பெறுதற்கு உழுகின்ற எருதுகளுடனே பசுக்கள் நெருங்காவாய் மேழகக்கிடாயோடே நாயும் சுழன்று திரியும் சோறுடைய நன்றான அகங்களையும் உடைய பட்டினம் (336),

இது [3] திமிலர் முதலியோர் இருப்புக் கூறிற்று.

327. [கொடும்பூண் மகளிர் :]

''காரனங் குலாய்ப்படிந்த காட்சியொப்ப'' (காஞ்சிப். கழுவாய்ப். 16) என்பதனாலும் காரன்னமுண்மை அறியப்படும்.

[1] மதுராந்தகம் தாலூகாவில் 'நீர்ப்பேர்' என வழங்கும் ஓர் ஊர் உண்டு; அஃது இதுவாக இருக்கலாமென்று தோற்றுகின்றது.

[2] ''விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்'' (சிலப். 6 : 142)

[3] திமிலர் : ''வன்கைத் திமிலர்'' (மதுரைக். 319); திமில் - மீன் படகு.

உயர் நிலை (332) வான் தோய் மாடத்து (333) கொடு பூண் மகளிர் - உயர்ந்த நிலைமையை உடைய தேவருலகத்தைத் தீண்டும் மாடத்துறையும் வளைந்த பேரணிகலங்களை உடைய மகளிர்,

328 - 9. கொன்றை மெல் சினை பனி தவழ்பவை போல் பைங் காழ் அல்குல் நுண் துகில் நுடங்க - கொன்றையிடத்து அரும்புகளை உடைய மெல்லிய கொம்புகளிலே பனிமாசு கிடந்து தவழ்கின்றவை போலப் பசிய மணிகள் கோத்த வடங்களையுடைய அல்குலிற் கிடக்கின்ற மெல்லிய துகில் அசைய,

330 - 31. மால் வரை சிலம்பின் மகிழ் சிறந்து ஆலும் பீலி மஞ்ஞையின் இயலி - பெருமையை உடைய பக்கமலையிலே மன வெழுச்சி மிக்கு ஆரவாரிக்கும் தோகையை உடைய மயில்போலே உலாவி,

331 - 3. [கால, தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை, வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ :]

தமனியம் கால பொன் சிலம்பு ஒலிப்ப வரி பந்து அசைஇ - பொற் பூண்களை உடைய கால்களிடத்தனவாகிய பொன்னாற்செய்த சிலம்புகள் ஆரவாரிப்ப நூலால் வரிதலை உடைய பந்தை அடித்து இளைத்து,

334 - 5. [கைபுனை குறுந்தொடி தத்தப் பைபைய, முத்த வார் மணற் பொற்கழங் காடும் :] முத்தம் வார் மணல் பைபய கை புனை குறு தொடி தத்த பொன் கழங்கு ஆடும் - முத்தை ஒத்த வார்ந்த மணலிலே மெத்தென மெத்தெனக் கையிற் புனைந்த குறுந்தொடி அசையப் பொன்னாற் செய்த கழலைக்கொண்டு விளையாடும்,

மாடத்து (333) மகளிர் (327) நுடங்க (329) இயலி (331) ஒலிப்ப (332) அசைஇப் (333) பின்னர்க் கழங்காடும் (335) பட்டினம் (336) என்க.

இது வணிகர் இருப்பைக் கூறிற்று.

படப்பையினையும் (321) வரைப்பினையும் (324) தெருவினையும் (332) இல்லினையு (327) முடைய பட்டின (336) மென்க.

336. பட்டினம் மருங்கின் அசையின் - பட்டினத்திடத்தே இளைப்பாறுவீராயின்,

முட்டு இல் - முட்டு இல்லையாக,

பெறுகுவி (345) ரென மேலே கூட்டுக.

337. பைங் கொடி நுடங்கும் பலர் புகு வாயில் - பசிய கொடிகள் அசையும் கள்ளுண்பார் பலரும் புகுகின்ற வாயிலிடத்து,

338. [செம்பூத் தூய செதுக்குடை முன்றில் :] தூய செ பூ செதுக்கு உடை முன்றில் - தெய்வத்திற்குத் தூவின செய்ய பூவாடலை உடைய முற்றத்தில்,

339 - 40. *கள் அடு மகளிர் வள்ளம் நுடங்கிய வார்ந்து உகு சில் நீர் வழிந்த குழம்பின்* - கள்ளைச் சமைக்கின்ற மகளிர் வட்டில் கழுவின வடிந்து சிந்தும் சிலநீர் பலகால் வடிதலின் நிறைந்து வழிந்த குழம்பிடத்து,

341 - 2. [1] *ஈர் சேறு ஆடிய இரு பல் குட்டி பல் மயிர் பிணவொடு* - ஈரத்தை உடைய சேற்றை அளைந்த கரிய பலவாகிய குட்டிகளை உடைய பலவாகிய மயிர்களை உடைய பெண் பன்றிகளுடனே,

வாயிலிடத்து (337) முற்றத்துக் (338) குழம்பிடத்துச் (340) சேறு (341) என்க.

342. [2] *பாயம் போகாது* - புணர்ச்சியைக் கருதும் கருத்தாற் போகாமல்,

என்றது புணரிற் கொழுப்பின்றும் என்றவாறு,

343. *நெல் மா வல்சி தீற்றி* - நெல்லையிடித்த மாவாகிய உணவைத் தின்னப்பண்ணி,

343 - 5. *பல் நாள் குழி நிறுத்து ஓம்பிய குறு தாள் ஏற்றை கொழு நிணம் தடியொடு* - பலநாள் குழியிலே நிறுத்திப் பாதுகாத்த குறிய காலை உடைய ஆண்பன்றியின் கொழுவிய நிணத்தை உடைய தசையோடே,

[3] "ஆற்றலொடு புணர்ந்தவாண்பால்" ஆதலின் ஏற்றையென்றார்.

345. *கூர் நறா பெறுகுவிர்* - களிப்புமிக்க கள்ளைப் பெறுகுவிர்;

போகாமற் (342) குழி நிறுத்து (344) என்க.

அசையிப் (336) பெறுகுவிர் என்க.

346 - 8. [*வான ஊன்றிய மதலை போல, ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி, விண்பொர நிவந்த வேயா மாடத்து:*]

வானம் ஊன்றிய மதலை போல (346) *விண் பொர நிவந்த மாடம்* (348)-ஆகாயத்தே திரிகின்ற தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றி வைத்த ஒரு பற்றுக்கோடு போல விண்ணைத் தீண்டும்படி ஓங்கின மாடம்,

சாத்திய ஏணி ஏற்று அரு சென்னி (347) *மாடம்* (348) - தன்னிடத்துச் சாத்திய ஏணியால் ஏறுதற்கரிய தலையினை உடைய மாடம்,

[4] *வேயா மாடத்து* (348) - கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடத்திடத்தே,

---

[1] "விழியாக் குருளை மென்முலை சுவைப்பக், குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி" (தொல். மரபு. சூ. 8, பேர். மேற்.)

[2] பாயம் - மனத்திற்கு விருப்பமானதென்று பொருள் எழுதுவர்; குறிஞ்சிப். 58, ந.

[3] "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப" (தொல். மரபு. சூ 49)

[4] "வேயா மாடம் - தட்டோடிட்டுச் சாந்து வாரப்பட்டன" (சிலப். 5 : 7, அரும்பத.)

349. இரவில் மாட்டிய இலங்கு சுடர் - இராக்காலத்தே கொளுத்தின விளங்குகின்ற விளக்கு.

349 - 51. [ஞெகிழி, உரவுநீ ரழுவத் தோடு[1] கலங் கரையும், துறை:] உரவு நீர் அழுவத்து ஞெகிழி ஓடும் கலம் கரையும் துறை - உலாவுகின்ற கடற்பரப்பிலே வந்து நாம் சேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேறொரு துறைக்கண் ஓடும் கலங்களை இது நம் துறை என்று அழைக்கும் துறை,

இனி, ஞெகிழியைக் கடைக்கொள்ளியாக்கி அதனை எரித்துக் கொளுத்தின இலங்கு சுடர் என்றும் உரைப்பர்.

351. பிறக்கு ஒழிய போகி - பின்னே கிடக்கப் போய்,

351 - 3. [கறையடிக், குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும், வண்டோட்டுத் தெங்கின்:]

குன்று உறழ் கறை அடி யானை மருங்குல் ஏய்க்கும் தெங்கின் - மலையோடு மாறுபடுகின்ற உரல் போன்ற அடியினை உடைய யானையின் உடம்பை ஒக்கும் சருச்சரையை உடைத்தாகிய தெங்கினுடைய,

353. [வாடுமடல் வேய்ந்த:]

வள் தோட்டு (353) வாடு மடல் வேய்ந்த - வளவிய[2] இலையினை உடைய உலர்த்த[3] பழுத்தலை முடைந்து வேய்ந்த தனி மனை (355) என்க.

354. மஞ்சள் முன்றில் - மஞ்சளை உடைய முற்றத்தினையும்,

மணம் நாறு படப்பை - மணம் நாறுகின்ற பூந்தோட்டங்களையும் உடைய,

355. தண்டலை உழவர் தனி மனை சேப்பின் - தோப்புக்குடிகளுடைய ஒப்பில்லாத மனைகளிலே தங்கின்,

356. [தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்:]

தாழ் கோள் பலவின் பழம் - தாழ்ந்த குலைகளையுடைய பலாவினது பழம்,

சூழ் சுளை பெரு பழம் - தின்பார் விரும்பிச் சூழும் சுளையை உடைய பெரிய பழத்தையும்,

357. [4] வீழ் இல் தாழை குழவி தீ நீர் - விழுதில்லாத தாழையாகிய தெங்கின் இளை தாய இனிய நீரையும்,

---

[1] கலங்கரைவிளக்கம் என்னும் பெயர் ஈண்டு அறியற்பாலது.

[2] தென்னையின் மட்டையையும் இலை என்று ஆன்றோர் வழங்குவர்; "இலையார் தெங்கிற் குலையார் வாழையின், பாளைக் கமுகின் பழம்வீழ் சோலைப் பழன நகராரே" (தே. திருஞா.)

[3] பழுத்தல் - பழுப்பு; கீறி இதனால் முடையப்பட்டது கீற்று.

[4] வீழில் தாழை என்பது தென்னைக்கு வெளிப்படை; மற்றொன்று "வீழ்த்தாட் டாழை" (நற். 78 : 4), "வீழ்தாழ் தாழை

"பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமைபு மோரறி வுயிர்க்கே" (தொல். மரபு. சூ. 24) என்றதனாற் குழவித் தீநீர் என்றார்.

358. கவை முலை இரு பிடி கவுள் மருப்பு ஏய்க்கும் - கவைத்த முலையை உடைய பெரிய பிடியினுடைய கவுளிடத்துக் கொம்புகளை ஒக்கும்,

359. [குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம் :] குலை கூனி முதிர் வாழை வெள் பழம் - குலைகள் தம் பெருமையாலே நிலத்தே தாழ வளைந்து முற்றின வாழையினது வெள்ளிய பழத்தையும்,

360 - 61. திரள் அரை பெண்ணை நுங்கொடு பிறவும் தீ பல் தாரம் முனையின் - திரண்ட அடியை உடைய பனையினது நுங்கோடே வேறும் இனிய பல பண்டங்களையும் வெறுக்கின்,

361 - 62. [சேம்பின், முளைப்புறம் :] முளை புறம் சேம்பின் - முளையை இடத்தே உடைய சேம்பினது இலையோடே,

362. முதிர் கிழங்கு ஆர்குவிர் - முற்றின வள்ளி முதலிய கிழங்குகளைத் தின்பீர்;

சேப்பின் (355) பழத்தையும் (356) நீரையும்(357) பழத்தையும் (359) நுங்கோடே (360) பல பண்டங்களையும் முனையின் (361) கிழங்கு ஆருவிர் என்க.

362 - 4. பகல் பெயல் மழை வீழ்ந்தன்ன மா தாள் கமுகின் புடைசூழ் தெங்கின் - பகற்பொழுதிலே பெய்தலையுடைய மழை கால்விழுந்தாலொத்த பெரிய தண்டினை உடைய கமுகுகளின் பக்கத்தே சூழ்ந்த தெங்கினுடைய,

364. முப்புடை திரள் காய் - மூன்று புடைப்பினை உடைய திரண்ட காய்,

பழுத்தால் அடி மூன்றாகப் புடைத்தல் அதற்கு இயல்பு. இனி மூப்புடைத் திரள் காயும் பாடம்.

365 - 6. ஆறு செல் வம்பலர் காய் பசி தீர சோறு அடு குழிசி இளக விழூஉம் - வழிச்செல்கின்ற புதியோர் தமது மிக்க பசி தீரும்படி சோற்றை ஆக்குகின்ற பானை அடுப்பினின்றும் அசைந்து விழும்படி நிலத்தே விழும்,

367. வீயா யாணர் வளம் கெழு பாக்கத்து - விடாத புது வருவாயினை உடைய செல்வம் பொருந்தின பாக்கத்திடத்து,

368. பல் மரம் நீள் இடை போகி - பல மரங்கள் வளர்ந்த இடத்திலே போய்,

---

யூழுறு கொழுமுகை" (குறுந். 228 : 1), "தாழை வீழ்கயிற் றூசல்" (அகநா. 20 : 6) எனக் கூறப்படுதல் காண்க.

368 - 9. [நன்னகர், விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த :] விளங்கு சுவர் உடுத்த விண் தோய் மாடத்து நல் நகர் - விளங்குகின்ற மதில் சூழ்ந்த விண்ணைத் தீண்டும் மாடங்களை உடைய நன்றாகிய ஊர்களிலே,

370 - 71. [1] வாடா வள்ளியின் வளம் பல தரூஉம் நாடு பல கழிந்த பின்றை - வாடும் கொடியினை உடைய வள்ளியல்லாத வள்ளிக் கூத்தின் வளப்பம் பலவற்றையும் தருதற்குக் காரணமாகிய புறநாடு பலவற்றையும் போனபின்பு,

வளம் பல என்றார், இக்கூத்து ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாய் வருதலின்,

என்றது, சிறப்புடை நாடுகளைப் பாடித் தாழ்ச்சி பெற்ற இழிகுலத் தோர் உறையும் புறநாடுகளைப் பாடாமல் தொகுக்கின்றார், அவை புற நாடு என்பது தோன்ற அவர்கள் காண்டற்குரிய வள்ளிக்கூத்தினைக் கூறி அதனை வெளிப்படுத்தினார். இது, புறத்திணையியலில், ''வெறியறி சிறப்பு'' (தொல். புறத். சூ. 5) என்னும் சூத்திரத்து, 'வாடா வள்ளி' என்பதனானும், [2] ''மண்டம ரட்ட மறவர் குழாத்திடை'' என்னும் உதாரணத்தானும் உணர்க.

371 - 2. நீடு குலை காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு - நீண்ட பூங்கொத்துக்களையுடைய காந்தளை உடைய அழகிய பக்க மலையிலே யானை கிடந்தாற்போல,

373. பாம்பு அணை பள்ளி அமர்ந்தோன் ஆங்கண் - பாம்பணை யாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுடைய [3] திருவெஃகா விடத்து,

---

[1] ''வாடா வள்ளி - வாடுங்கொடியல்லாத வள்ளிக்கூத்து; அஃது இழிந்தோர் காணும் கூத்து. உ - ம். 'மண்டம......பெரிது' இது பெண்பாற்குப் பெருவரவிற்று. இதனைப் பிற்கூறினார், வெறியறி சிறப்பன்மையானும் ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாவ தல்லது அகத்திணைக்கண் வந்து பொதுவாகாமையும்பற்றி'' (தொல். புறத். சூ. 5. ந.) என்பது இங்கே கூறிய செய்திகளை விளக்கும்.

[2] ''மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக், கண்ட முருகனுங் கண்களித்தான் - பண்டே, குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப், பிறமகள் நோற்றாள் பெரிது''(தொல். புறத். சூ. 5, ந. மேற்.)

[3] திருவெஃகாவென்பது திருமாலினுடைய நூற்றெட்டுத் திருப் பதிகளுள் ஒன்று. இது காஞ்சிப்பதியிலுள்ளது. இங்கே திருமால் சேஷசயனத் திருக்கோலம் உடையவராக எழுந்தருளியிருக்கின்றார். ''பாந்தட் பாழியிற் பள்ளி விரும்பிய, வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே'' (திவ். பெரியதிரு. 10. 1 : 7)

காந்தளென்றதற்கேற்பப் பாம்பணையென மெலித்தார்.

374. [1][வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர் :]

வெயில் நுழைபு அறியா பொதும்பர் - ஞாயிற்றின் கதிர் தோன்றிய காலத்தும் படுகின்ற காலத்தும் உட்படச் சிறிதும் செல்லுதல் அறியாத பொதும்பர்,

குயில் நுழை பொதும்பர் - இலைநெருக்கத்தாலே குயில்கள் நுழைந்து செல்லும் இளமரக்காவில்,

375 - 6. குறு கால் காஞ்சி சுற்றிய நெடு கொடி பசு இலை குருகின் புன்புறம் வரி பூ - குறிய காலினை உடைய காஞ்சிமரத்தைச் சூழ்ந்த நெடிய கொடியினையும் பசிய இலையினையும் உடைய குருக்கத்தியினுடைய புற்கென்ற புறத்தினையும் வரிகளையும் உடைய பூக்கள் உறைப்ப (379) என்க.

377 - 8. கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல் - கரிதாகிய சட்டியிலே அப்ப வாணிகர் பாகுடனே வேண்டுவன கூட்டிச் சேர்க்கப்பட்ட நூல் போலச் சூழ்ந்து கிடக்கின்ற [2]அப்பம் பாலிலே கிடந்தவைபோல,

சட்டியிலே கிடந்த அப்பம் பின்பு பாலிலே கிடந்தவை போல என்க.

பிடித்த வட்டம் என்க.

379. நிழல் தாழ் வார் மணல் நீர்முகத்து [3]உறைப்ப - நிறம் கிளர்கின்ற வார்ந்த மணலிடத்துக் குழிகளில் நின்ற நீரிடத்தே மிக விழும்படி,

உறைப்ப என்றதனைத் துளிப்ப என்றால் ஈண்டு ஒப்பன்மையான் உப்புறைப்ப என்றாற் போலக் கொள்க.

380. புனல் கால் கழீஇய பொழில் தொறும் - நீர் பெருகிய காலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப் போன பொழில்கள் தோறும்,

என்பதனால், முன்பு நீர் நின்று போகலிற் [4]பூத்தவென்றார்.

380 - 82. திரள் கால் சோலை கமுகின் சூல் வயிறு அன்ன நீலம் பைங்குடம் தொலைச்சி - திரண்ட தண்டினை உடைய சோலையிடத்து

---

[1] "விரிகதிர்ச் செஞ்ஞா யிற்றின் வெயில்புகாப் பொதும்பர் தோறும்" (சீகாளத்திப். கண்ணப்பச். 66)

[2] "அப்பம் - இப்பொழுது இடியப்பமென்று வழங்கும் ஒரு வகைச் சிற்றுண்டி.

[3] உறைப்பு மிகுதியைக் குறித்தல்; "ஓது காத லுறைப்பி னெறி நின்றார்" (பெரிய. திருக்கூட்டச். 7)

[4] "பூத்தவென்றது குருக்கத்தி பூத்தமையைக் குறித்தபடி.

நிற்கும் கமுகினுடைய சூற்கொண்ட வயிற்றை ஒத்த [1] பச்சைக் குப்பிகளை உண்டு போக்கி (பி - ம். நேராக்கி),

382 - 3. நாளும் பெரு மகிழ் இருக்கை மரீஇ - நாடோறும் பெரிய மகிழ்ச்சியை உடைய இருப்பை மருவி,

383 - 4. சிறு கோடு குழவி திங்கள் கோள் நேர்ந்தாங்கு - சிறிய கோட்டை உடைய [2] இளைதாகிய பிறையைச் செம்பாம்பு தீண்டினாற்போல,

இஃது [3] இல்பொருளுவமை.

385. சுறவுவாய் அமைத்த சுரும்பு சூழ் சுடர் நுதல் - மகர வாயாகிய தலைக்கோலத்தைச் சேர்த்தின சுரும்புகள் சூழும் ஒளியை யுடைய நுதலினையும்,

386. [4] நறவு பெயர்த்து அமைத்த நல் எழில் மழை கண் - கள்ளினை உண்டு பொருந்திய நன்றாகிய அழகினை உடைய குளிர்ச்சியை உடைத்தாகிய கண்ணையும் உடைய,

வள்ளத்தின் நறவைத் தம்முள்ளே ஆக்கினமையிற் பெயர்த் தென்றார்.

387. [5] மடவரல் மகளிரொடு பகல் விளையாடி - மடப்பம் தோற்றுதலையுடைய மகளிரோடே பகற்பொழுது விளையாடி,

---

[1] பச்சைக் குப்பிகளில் இருந்த கள்ளை உண்டார்கள் என்பது கருத்து. கள்ளைக் குப்பியிலே இட்டுவைத்தல், "கள்ளின் இரும்பைக் கலஞ்செல வுண்டு" (மதுரைக். 228) என்பதனாலும், 'கள்ளினை யுடையவாகிய பெருமையினையுடைய குப்பிகள் வற்றும்படியாகக் கள்ளினையுண்டு' என்னும் அதன் உரையாலும் உணரப்படும்.

[2] இளைதாகிய - இளையதாகிய; "இளைதாக முண்மரங் கொல்க" (குறள், 879)

[3] பிறையைப் பாம்பு தீண்டுதலின்மையின் இங்கே இல்பொருளுவமை யாயிற்று; "இளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா, தணங்கருந் துப்பி னரா" (நாலடி. 241) என்பது இதனை வலியுறுத்தும்.

[4] நறவம்பூவின் இதழை மகளிர் கண்ணுக்கு உவமை கூறுதலும் பண்டை வழக்கமாதலால், நறவுப்பெயர்த்தமைத்த வென்பதற்கு நறவம் பூவினிதழைப் பெயர்த்தமைத்தாற்போன்ற என்று பொருள் கொள்ளுதலுமாம்; "பேர்மகிழ் செய்யும் பெருநறாப் பேணியவே, கூர்நறா வார்ந்தவள் கண்", "நயவரு நறவிதழ் மதருண்கண்" (பரி. 7 : 63 - 4, 8 : 75), "நறவின், சேயித ழனைய வாகிக் குவளை, மாயிதழ் புரையு மலிர்கொ ளீரிமை" (அகநா. 19 : 9 - 11) என்பவையும் இதனை வலியுறுத்தும்.

[5] "மடவரல் வள்ளியொடு" (முருகு. 102); 'மடவரல் - மடப்பம்' (புறநா. 89 : 2, உரை)

388 - 9. *பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபின் பூ மலி பெரு துறை* - பெறுதற்கரிய பழமை உடைத்தாகிய புகழினை உடைய துறக்கத்தை ஒக்கும் தப்பாமல் நீர்வரும் முறைமையினை உடைய பூ மிகுகின்ற பெரிய துறையிடத்தே,

துறை, நுகர் பொருள் குறைவின்மையின், துறக்கமேய்க்கும் என்றார்.

390. *செவ்வி கொள்பவரோடு அசைஇ*-இளவேனிற்செவ்வியை நுகர்வாரோடு இளைப்பாறி,

390 - 91. *அவயின் அரு திறல் கடவுள் வாழ்த்தி* - அத்[1] திருவெஃகாவணையில் அரிய திறலினை உடைய திருமாலை வாழ்த்தி,

391 - 2. *[சிறிதுநும், கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்:] நும் கரு கோடு இன் இயம் சிறிது இயக்கினிர் கழிமின்* - நும்முடைய கரிய தண்டினை உடைய இனிய யாழைச் சிறிது வாசித்து அவ்விடத்துநின்றும் போமின்;

ஆங்கட் (373) பொதும்பர்க் (374) குருகின் பூ (376) உறைப்பக் (379) கழீஇய பொழிசெறுநும் (380) மகளிரோடே பகல் விளையாடிப் (387) பெருந்துறைச் (389) செவ்விகொள்பவரோடசைஇ (390) நீலப் பைங்குடந் தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள் வாழ்த்தி (391) இயக்கினிர் கழிமின் என முடிக்க.

393 - 6. *[காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ, நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம், கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற், களிறுகதனடக்கிய வெளிறில் கந்தின்:]*

[2] *வெளிறு இல் கந்தின் கதன் அடக்கிய களிறு கீழ நெடு கை யானை* -......களும் தின்கின்ற,

நெய் மிதி கவளம் - நெய்யை வார்த்து மிதித்த கவளங்களை,

[3] *கடு சூல் மந்தி காழோர் இகழ் பதம் நோக்கி கவரும் காவின்* –

---

[1] இது, பிரமதேவர் செய்த வேள்வியை அழிக்க வந்த வேகவதி நதியைத் தடுத்தற்பொருட்டுத் திருமால் பள்ளிகொண்டு அணை போன்று கிடந்த தலம்; இங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு வேகாஸேது என்பது திருநாமம். அது தமிழில் திருவெஃகாவணையென வந்ததென்பர்; இது திருவெஃகணை எனவும் வழங்கும்; "வெஃகணைக் கிடந்ததென்ன நீர்மையே" (திவ். திருச்சந்த. 63)

[2] இந்தப் பாகத்துக்கு எந்தப் பிரதிகளிலும் உரை கிடைத்திலது; வயிரமுள்ள கந்தினுற் கோபத்தை அடக்கிய ஆண் யானைகளும், கீழே தாழ்ந்த நெடிய கைகளை உடைய பெண் யானைகளும் தின்கின்ற என்க.

[3] **சிறுபாண். 158, உரையையும் அடிக்குறிப்பையும் பார்க்க.**

முற்பட்ட சூலையுடைய மந்தி [1] பரிக்கோலையுடையோர் நெகிழ்ந்த செவ்வியைப் பார்த்து எடுத்துக்கொண்டு போய்த் தின்னும் சோலையினையும்,

397. திண் தேர் குழித்த குண்டு நெடு தெருவின் - திண்ணிய தேர்கள் பலகால் ஓடிக் குழித்த தாழ்ச்சியை உடைய நெடிய தெருவினையும்,

398 - 400. [படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க், கடைகால் யாத்த பல்குடி கெழீஇக், கொடையுங் கோளும்:]

தொலைபு அறியா மைந்து மலி பெரு புகழ் படை (396)-கெடுதல் அறியாத வலிமிகுகின்ற பெரிய புகழினை உடைய படையினையும்,

[2] கொடையும் கோளும் (400) கெழீஇ கால் யாத்த பல் குடி கடை (399) - பண்டங்களை விற்றலும் கொள்ளலும் பொருந்தி அவ்விடத்து நெருங்கின பல குடிகளை உடைய கடையினையும் உடைய மூதூர் (411)

400 - 401. [3] வழங்குநர் தடுத்த அடையா வாயில் - உலகத்துக் கொடுப்பாரைக் கொடாமல் தடுத்த [4] பரிசிலர்க்கு அடையாத வாசலினையும்,

இவன் கொடைப் பெருமையாற் பிறர் தவிர்ந்தார் என்றார்.

401. மிளை சூழ் படப்பை - காவற்காடு சூழ்ந்த பக்கத்தினையும்,

402 - 4. [நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி:] நான்முக ஒருவன் பயந்த நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ் பல் இதழ் தாமரை பொகுட்டின் காண் வர தோன்றி - நான்கு முகத்தை உடைய ஒருவனைப் பெற்ற நீலநிறத்தை உடைத்தாகிய வடிவினை உடைய திருமாலுடைய திருவுந்தியாகிய பல இதழை உடைய தாமரையினது கொட்டைபோல அழகுவிளங்கத் தோன்றி,

இதனாற் பழமையும் (பி - ம்: பெருமையும்) சிறப்பும் தூய்மையும் கூறினர்,

---

[1] பரிக்கோற்காரர் - குத்துக்கோற்காரர் : "கோலோர் - பரிக்கோற்காரர்", "காழோர் - பரிக்காரர்" (மதுரைக். 381, 658, ந.); இவர்கள் யானை வலிசெய்யுமாயின் அதனைக் குத்துதற்கு அதன் முன் நடந்து செல்பவர்கள்; "எதிர்பரிக் கார ரோட" (பெரிய. எறிபத்த. 12)

[2] "கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது" (பட்டினப். 210)

[3] இதன் பொருள் நயம் பாராட்டத் தக்கது.

[4] "நசையுநர்க் கடையா நன்பெரு வாயில்" (பொருந. 66); "அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு, முடையான் சடையப்ப னூர்" (தனிப்.)

405. [1] சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின் - செங்கலாற் செய்யப்பட்டு உயர்ந்த புறப் படை வீட்டைச் சூழ்ந்த மதிலினையும்,

406 - 7. [இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக், கொழு மென் சினைய கோளி யுள்ளும்:] கொழு மெல் சினைய இழுமென் புள்ளின் ஈண்டு கிளை தொழுதி கோளி உள்ளும் - கொழுவிய மெல்லிய கொம்புகளிடத்தனவாகிய இழும் என்னும் ஓசையை உடைய புறவினுடைய திரளுகின்ற சுற்றத்திரட்சியை உடைய பூவாமற் காய்க்கும் மரங்களில் விசேடித்தும்,

408. பழம் மீ கூறும் பலா போல - பழத்தின் இனிமையால் மேலாகச் சொல்லும் பலாமரத்தை ஒக்க,

409 – 10. புலவு கடல் உடுத்து வானம் சூடிய மலர்தலை உலகத்துள்ளும் - புலால் நாற்றத்தை உடைய கடல் சூழ்ந்த [2] ஆகாயம் கவிந்த அகன்ற இடத்தை உடைய உலகத்து நகரில் விசேடித்தும்,

410 – 11. [3] பலர் தொழ விழவு மேம்பட்ட பழ விறல் மூதூர் - பல சமயத்தாரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே ஏனை நகர்களின் மேலான வெற்றியினை உடைய பழைய ஊராகிய,

412 - 13. [4]அ வாய் வளர் பிறை சூடி செ வானத்து அந்தி வாய் ஆடும் மழை கடுப்ப-அழகிய இடத்தை உடைய வளரும் பிறையைத் தன் மேலே சூடிச் செக்கர்வானமாகிய அந்திக் காலத்தே உலாவுகின்ற மேகத்தை ஒப்ப,

கொம்பும் யானையும் குருதியும் உவமிக்கப்படும் பொருள்.

414 - 7. [வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப, ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப், பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர், ஆராச் செருவி னைவர் போல:]

வெள் கோடு இரு பிணம் குருதி ஈர்ப்ப (414) பொருது (416) - வெள்ளிய கொம்பினையுடைய கரிய யானைப்பிணத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டு போம்படி பொருது,

ஈரைம்பதின்மரும் களத்து அவிய (415) பெரு அமர் கடந்த (416) ஐவர் போல (417) - துரியோதனன் முதலிய நூற்றுவரும் களத்திலே படும்படி பெரிய போரை வென்ற தருமன் முதலியோரைப் போல,

---

[1] "சுடுமண் - ஓடு" (சிலப். 14 : 146, அடியார்.)

[2] "வான் கவிந்த வையகமெல்லாம்" (நாலடி. பொறை. 10)

[3] "பலர் புகழ் - எல்லாச் சமயத்தாரும் புகழும்" (முருகு. 2, ந.) பல சமயதெய்வங்களுக்கும் காஞ்சி இடமாக இருத்தலின் பலர் என்பதற்குப் பல சமயத்தார் என்று பொருள் செய்தனர். "பரசிவன் சத்தி குமரன்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பதப் பதியே" (கந்த. நகர. 90)

[4] அ - அழகு : "அவ்விதழ் - அழகிய இதழ்" (நெடுநல். 41, ந.); "அச்சோலை - அழகிய சோலை" (தக்க. 65, உரை)

[1] கொடுஞ்சி நெடு தேர் (416) ஆரா செருவின் ஐவர் (417) - முன்னே தாமரை முகையினை உடைய நெடிய தேரினையும் தொலையாத போரினையும் உடைய ஐவர்,

418. அடங்கா தானையோடு உடன்று மேல்வந்த-ஓர் எண்ணின் கண் அடங்காத படையுடனே கோபித்துத் தன்மேல் வந்த,

419. ஒன்று தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து - தன் ஏவலைப் பொருந்தாத பகைவர் தோற்றவிடத்தே வெற்றிக்களிப்புத் தோன்ற ஆரவாரித்து,

420 - 21. [கச்சி யோனே கைவண் டோன்றல், நச்சிச் சென்றோர்க் கேம மாகிய :] கை வள் தோன்றல் நச்சி சென்றோர்க்கு ஏமம் ஆகிய கச்சியோனே - கைவளப்பத்தையுடைய தலைவன், தன் பரிசிலை விரும்பித் தன்பாற் சென்றோர்க்குப் பாதுகாவலாகிய காஞ்சிபுரத்தே இருக்கின்றோன்;

படப்பையினையும் (401) காவினையும் (395) வரைப்பினையும் (405) அடையா வாயிலினையும் (401) தெருவினையும் (397) கடையினையும் (399) படையினையும் (398) உடைய மூதூர் (411) என்க;

காண் வரத் தோன்றிப் (404) பலாஅப் போலக் (408) விழவு மேம். பட்ட மூதூர் (411) என்க.

கைவண்டோன்றல் (420) ஐவர்போலக் (417) குருதி யீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்து (419) ஏமமாகிய (421) மூதூராகிய (411) கச்சியிடத்தே இருக்கின்றோன் (420) என்க.

422 - 3. [அளியுந் தெறலு மெளிய வாகலின், மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட:]

மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட தெறலும் - [2] தன்னுடனே

---

[1] "கொடுஞ்சி - தாமரைப்பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது" (மதுரைக். 751 - 2, ந.); "நெடுந்தேர்க் கொடுஞ்சி பற்றி நின்றோன்" (அகநா. 110 : 24 - 5), "நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்" (புறநா. 77 : 5), "மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றி" (மணி. 4 : 48) எபன்வற்றாற் கொடுஞ்சி என்பது தேரூர்பவர்கள் கையாற் பற்றிக் கொள்ளப்படுவது என்று தெரிகிறது.

[2] "செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப" (பொருந. 134); "சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனிற், றமறி குவர்தமக் குறுதி யாமவ, னெழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர், வாழக் கண்டன்று மிலமே" (புறநா. 61 : 14 - 7);"செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக், கொற்றங் கொண் டெஃகுயர்த்தான் கோ" (பு. வெ. 42)

பொருதார் தேயத்திலூர்களின் மன்றுகள் மக்கள் இல்லையாய்ப் பாழாம்படி அழித்தலும்,

422. எளிய ஆகலின் – தனக்கு எளியவாய் நடக்கையினாலே,

424. [நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப :] நயந்தோர் தேஎம் நல் பொன் பூப்ப அளியும் (422) - [1] தன்னை விரும்பியிருந்தோர் தேயம் திருமடந்தை பொலிவுபெற்றிருப்ப அளித்தலும்,

425. நட்பு கொளல் வேண்டி நயந்திசினோரும் - மலையலாகா தென்று உறவு கொள்ளுதலை வேண்டி அவன் தானை விரும்பின வர்களும்,

426. துப்பு கொளல் வேண்டிய துணையிலோரும் - அவன் பகையைத் தெறும் வலியைத் தமக்குப் பெறவேண்டின வேறோர் உதவியில்லாதவர்களுமாய்,

427. கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு - [2] மலையினின்றும் விழுகின்ற அருவி அம்மலையிலுள்ள பண்டங்களை வாங்கிக்கொண்டு கடலுக்குக் கொடுப்பதாகச் சென்றாற்போல,

428. பல் வேறு வகையின் பணிந்த மன்னர் - பலவாகிய வேறு பட்ட திறைகளின் கூறுபாட்டோடே சென்று வணங்கின அரசர்,

429 - 31. [இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை, வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப், பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கை :]

இமையவர் உறையும் சிமையம் செ வரை (429) விளங்கு சுடர் நெடு கோடு (430) - தேவர்கள் இருக்கும் உச்சியை உடைய சிவந்த மேருவினது விளங்குகின்ற ஒளியை உடைய நெடிய சிகரத்தி னின்றும்,

பொன் கொழித்து இழிதரும் போக்கு அரு கங்கை (431) - பொன்னைக் கொழித்துக் குதிக்கும் மாக்கட்குக்[3] கடத்தல் அரிதாகிய கங்கையாகிய ஆற்றிலே,

வெள் திரை கிழித்த (430) கங்கை (431) – கடலிடத்து வெள்ளிய திரையைக் கிழித்துச் சென்ற கங்கை,

432. பெரு நீர் போகும் இரியல் மாக்கள் - பெரிய நீரைக் கடந்துபோம் கெடுதலை உடைய மாக்கள்,

---

[1] "திருந்தடி பொருந்த வல்லோர், வருந்தக் காண்ட லதனினு மிலமே" (புறநா. 61 : 18 - 9)

[2] "இனி மலையிற் பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலை நோக்கிப் போனாற்போல அவ்விடத்துள்ள பொருள்களை வாரிக் கொண்டு வருகின்றே மென்றுமாம்" (மலைபடு. 51 - 2, ந.) என்று பின்னும் இவ்வாறே உவமையை விளக்குதல் காண்க.

[3] "ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ" (கம்ப. குகப். 15) என்று கங்கையைப்பற்றிக் கூறியது இங்கே கருதற்குரியது.

கெடுபட்டுப் போவார் ஒருவர்க்கு முன்னே ஒருவர் விரைந்து போதலைக் கருதுவர்.

433. ஒரு மரம் பாணியில் தூங்கியாங்கு - விடுகின்ற தோணி யாகையினாலே அது வருங்காலம் பார்த்திருந்து தூங்கினாற்போல,

434 - 5. தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து - கெடாத யானை முதலிய செல்வங்களோடே நெருங்கா நின்று திரண்டு காலம் பார்த்திருக்கும் வளவிய நகரின் முற்றத்தினை உடைய வியனகர் (440),

எளியவாகலின் (422) நயந்திசினோரும் (425) துணையிலோரு மாய்ப் (426) பணிந்த மன்னர் (428) தூங்கியாங்குச் (433) செவ்வி பார்க்கும் முற்றம் என்க,

436 - 7. பெரு கை யானை கொடு தொடி படுக்கும் கரு கை கொல்லன் - பெரிய கையினை உடைய யானைக்கு வளைந்து கிடக்கும் பூணைச் சேர்க்கும் வலிய கையினை உடைய கொல்லன்,

437 - 8. இரும்பு விசைத்து எறிந்த கூடம் திண் இசை வெரீஇ - இரும்பைக் கையை உரத்துக் கொட்டின கூடத்து எழுந்த திண்ணிய ஓசையை வெருவி,

438 - 40. [மாடத், திறையுறை புறவின் செங்காற் சேவல், இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர் :]

மாடத்து புறவின் செ கால் சேவல் இன் துயில் இரியும் நகர் - மாடத்திடத்துப் புறவினுடைய சிவந்த காலையுடைய சேவல் இனிய துயிலை நீங்கும் நகர்,

இறை உறை நகர் — இறைவன் இருக்கும் நகர்,

பொன் துஞ்சு வியல் நகர் - திருத்தங்குகின்ற அகலத்தை உடைய கோயிற்கண்ணே இருந்தோன் (447),

441 - 2. குணகடல் வரைப்பில் [1] முந்நீர் நாப்பண் பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு - கீழ்க்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப்

---

[1] "முந்நீர்...........பௌவம் - மூன்று நீர்மையை உடைய......... கடல்" (மதுரைக். 75 – 6, ந.), "நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலும் உடைமையின், முந்நீர் ஆகு பெயர்" (சீவக. 5, ந.) என்று நச்சினார்க்கினியரும், "முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவை யென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்று நீரும் இன்றாமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்திய தன்று; முதிய நீரெனின், 'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்' என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோ வெனின், முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும்

படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலே உடைய நீர்க்கு நடுவே [1] பகற்பொழுதைச் செய்யும் ஞாயிறு தன் கிரணங் களைப் பரப்பித் தோன்றினாற் போல,

443 - 50. [முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி, இடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக், கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத், துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப், பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான், கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப், புலவர் பூண்கட னாற்றி:]

இடை தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி (445) - நடுவு நிலையை ஆராய்ந்தறியும் மயக்கம் தீர்ந்த அறிவாலே,

[2] முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் (443) வேண்டுப வேண்டுப அருளி (444) - முறைப்பாட்டை விரும்பு வார்க்கும் காரியங்களை விரும்புவார்க்கும் அவரவர் விரும்புவன வற்றை விரும்புவனவற்றை அருளிச்செய்து,

புலவர் பூண் கடன் ஆற்றி (450) - புலவர்க்குப் பேரணிகலங் களையும் கொடுத்தற்குரிய பிற கலங்களையும் கொடுத்து,

வேண்டினர்க்கு (444) கொடை கடன் இறுத்த கூம்பா உள்ளத்து (446) உரும்பு இல் சுற்றமொடு இருந்தோன் குறுகி (447) - வேண்டி வந்த பரிசிலர்க்குக் கொடையாகிய கடனை முடித்த குவியாத நெஞ்சத்தோடே கொடுமை இல்லாத [3] மந்திரச் சுற்றத் தோடே இருந்தோனை அணுகி,

---

மண்ணை அழித்தலும் மண்ணைக் காத்தலுமாம்" (சிலப். 17, உள்வரி : 3, அடியார்.) எனப் பிறரும் எழுதுதல் காண்க; "மும்முறை நீர்" (கம்ப. அதிகாயன். 21) என்பதும் இங்கே அறியத்தக்கது. "யாற்று நீரும் ஊற்றுநீரும் மழைநீரும் மஉடையையால், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று; அன்றி முன்னீரென்றோதி, நிலத்திற்கு முன்னாகிய நீரென்றுமுரைப்ப" (புறநா. 9, விசேட உரை) என்பது ஒரு சாரார் கொள்கை.

[1] "பகற்கதிர் - பகற்பொழுதைச் செய்யுங் கிரணங்கள்" (பொருந. 135, ந); "பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு" (மதுரைக். 7); "காலைசூழ் செங்கதிர் : சூழல் - செய்தல்" (தக்க. 279, உரை); சூரியனுக்குப் பகலைச் செய்வோன் என்னும் பொருள்படும் திவாகரன் என்னும் பெயருண்மையையும் அறிக.

[2] முறைவேண்டுநர் - வ லி ய ர ா ல் நலிவெய்தினர்; குறை வேண்டுநர் - வறுமையுற்று இரந்தார்; 386 - ஆம் திருக்குறள் உரையைப் பார்க்க.

[3] "மந்திரச் சுற்றத் தாரும்" (கம்ப. கும்ப. 5)

ஞாயிறுபோல இருளைக் கடிந்து முறைவேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக்கொடுத்தலின், அவனை உவமித்தார்.

கடலைச் சுற்றத்திரட்சிக்கு உவமையாக்கலும் ஒன்று.

[1] பொறி வரி புகர் முகம் தாக்கிய வய மான் (448) கொடுவரி குருளை கொள வேட்டாங்கு (449) - ஒளியினையும் வரியினையும் உடைய யானையைப் பாய்ந்த வலியை உடைய சிங்கத்தினுடைய வளைந்த வரியினையும் உடைய குருளை அவ்வியானையின் மத்தகத்தைக் கொள்ள விரும்பினாற்போல,

450 - 52. பகைவர் கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி அல்லது - பகைவரது காவலை உடைய மதில்களை அழித்து ஆண்டிருந்த அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு வீரமுடி புனையும் வெற்றியினை விரும்புதல் அல்லது,

இதனால், "இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணுமங்கலம்" (தொல். புறத். சூ. 13) என்னும் துறை கூறினர்; [2] குடுமி கொள்ளும் வென்றி எனவே மண்ணுமங்கலம் ஆயிற்று.

452 - 4. வினை உடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தட கை கொண்டி உண்டி தொண்டையோர் மருக - அம்மதில் அரசர் [3] சந்து செய்தற்கு உடம்பட்டாராயினும் அதற்கு மனம் பொருந்துதல் நிகழாமைக்குக் காரணமாகிய உலகெங்கும் பரக்கும் வாளையுடைத் தாகிய பெருமையை உடைய கையினையும் பகைப் புலத்துக் கொள்ளை யாகிய உணவினையும் உடைய [4] தொண்டையைச் சூடினோருடைய குடியிலுள்ளவனே,

455. மள்ளர் மள்ள - வீரர்க்கு வீரத்தைக் கொடுக்கின்றவனே,
மறவர் மறவ - கொடியோர்க்குக் கொடியனே,

456. செல்வர் செல்வ-செல்வம் உடையோர்க்கும் கொடுத்தலை விரும்புபவனே,

செரு மேம்படுந - போர்த்தொழிலிலே மிக்கவனே,

பெரும (461) - பெருமானே,

457 - 8. வெள் திரை பரப்பில் கடு சூர் கொன்ற பைம்பூண் சேஎய் பயந்த மா மோடு - வெள்ளிய திரையினையுடைய கடலிலே

---

[1] பொறி - ஒளி; "கண்பொறி போகிய - கண்ணொளி மழுங்கிய" (புறநா. 161 : 13, உரை)

[2] "குடுமிகொள்ளு மண்ணு மங்கலம்" (கூர்ம்.)

[3] சந்து செய்தல் - பொருந்துதல்.

[4] தொண்டையைச் சூடிய வரலாற்றை, பெரும்பாண், 30 - 31 - ஆம் அடிகளின் உரையிற் காணலாம்.

சென்று கடிய சூரனைக் கொன்ற பசிய பூணினை உடைய முருகனைப் பெற்ற பெருமையை உடைய வயிற்றினையும்,

459. துணங்கை அம் செல்விக்கு அணங்கு [1]நொடித்தாங்கு - பேய்களோடும் துணங்கைக்கூத்தினையும் அழகினையும் உடைய இறைவிக்குப் பேய்மகள் சில [2]நொடி சொன்னாற்போல,

460-61. [தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி, வந்தேன் பெரும வாழிய நெடிதென :]

தண்டா ஈகை நின் பெரு பெயர் ஏத்தி வந்தேன் நெடிது வாழிய என - அமையாக் கொடையினை உடைய நின் பெரிய பெயருட் சிலவற்றைச் சொல்லிப் புகழ்ந்து வந்தேன், நெடுங்காலம் வாழ்வாயாக எனச் சொல்லி;

462. இடன் உடை பெரு யாழ் முறையுளி கழிப்பி - தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத் தன்னிடத்தே உடைய பெரிய யாழை வாசிக்கும் முறைமையிலே வாசித்து,

முறையுளி : [3]உளி, பகுதிப்பொருள் விகுதி.

463. கடன் அறி மரபின் கைதொழூஉ பழிச்சி - முற்படக் கண்டக்காற் செய்யும் கடனை அறிந்த முறைமையோடே கையால் தொழுது வாழ்த்தி,

464. நின் நிலை தெரியா அளவை - நின்னுடைய கலைகளெல்லாம் தெரிவதற்கு முன்னே,

அ நிலை – நீ நின்ற அந்த நிலைதன்னிலே,

465. நாவல் அம் தண் பொழில் வீவு இன்று விளங்க - நாவலாற் பெயர்பெற்ற அழகினை உடைய குளிர்ந்த உலகமெல்லாம் கேடின்றாக விளங்கும்படி,

466. [4]நில்லா உலகத்து நிலைமை தூக்கி - யாக்கையும் செல்வமும் முதலிய நிலையில்லாத உலகத்திடத்து நிலைபேறுடைய புகழை நாம் பெறுதல் நன்றென்று ஆராய்ந்து,

467. அ நிலை அணுகல் வேண்டி - முற்பட நின்ற சேய்நிலத்து நின்று தன்னை அணுகுதற்கு விரும்பி அழைத்து,

---

1 "நொடித்தாங்கு - நொடி சொன்னாற்போல" (கலித். 89 : 8, ந.)

2 "புதல்வரை மருட்டும் பொய்ந்நொடி பகரவும்" (பெருங். 1. 33 : 72)

3 "பழுதுளி : உளி, பகுதிப்பொருள் விகுதி" (மலைபடு. 153, ந.)

4 "மன்னு வுலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்" (தஞ்சை. 21); "நிற்ப தேதுகொ னீடிசை யொன்றுமே நிற்கும்" (வி. பா. நச்சுப். 57); பொருந. 176, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

467 - 8. நின் அரை பாசி அன்ன சிதர்வை நீக்கி - நின்னுடைய் அரையிற் கிடந்த கொட்டைப்பாசியின் வேரையொத்த சிதரின சீரையைப் போக்கி,

469 - 70. [ஆவி யன்ன வவிர் நூற் கலிங்கம், இரும்பே ரொக் கலொ டொருங்கு டனுடீஇ:] ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம் உடன் இரு பெரு ஒக்கலொடு ஒருங்கு உடீஇ - [1] பாலாவியை யொத்த விளங்குகின்ற நூலாற் செய்த துகில்களைப் படிசேரக் கரிய பெரிய சுற்றத்தாரோடே சேர உடுக்கப்பண்ணி,

471 - 2. கொடு வாள் கதுவிய வடு ஆழ் நோன் கை வல்லோன் அட்ட பல் ஊன் கொழு குறை - வளைந்த அரிவாளைக் கொண்ட வடுவழுந்தின வலியை உடைத்தாகிய கையினை உடைய மடையன் ஆக்கின பல இறைச்சியிற் கொழுவிய தசைகளும்,

பலகாலும் அறுத்தலால், தழும்பிருந்த கையென்றார். கதுவுதல் - கைக்கொள்ளுதல்.

473 - 4. அரி செத்து உணங்கிய பெரு செ நெல்லின் தெரி கொள் அரிசி திரள் நெடு புழுக்கல் - நிறத்தால் ஞாயிற்றையொத்து உலர்ந்த பெரிய செந்நெல்லினுடைய பொறுக்கிக்கொண்ட அரிசியாலாக்கின திரண்ட [2] இடைமுரியாத சோறும்,

அரிசெத்தென்றதற்கு உவமையின்றாகவென்றுமாம்; இனி அரி செய்தென்று பாடமாயின் அரிதலைச் செய்தென்று கூறுக.

475. அரு கடி தீ சுவை அமுதொடு - பெறுதற்கரிய மிகுதியை உடைய இனிய சுவையினை உடைய கண்ட சருக்கரை முதலிய வற்றோடே,

பிறவும் - கூறுதொழிந்தனவும்,

476. விருப்பு உடை மரபின் கரப்பு உடை அடிசில் - விருப்பம் உடைத்தாகிய முறைமையினை உடைய தலையாப்புப் பரத்தலை உடைய அடிசிலை,

அமுதோடே (475) குறையும் (472) புழுக்கலும் (474) பிறவு மாகிய (475) அடிசிலைப் (476) பரப்பி (477) ஊட்டி (479) என்க.

477 - 80. [மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி, மகமுறை மக முறை நோக்கி முகனமர்ந், தாறு விருப்பிற் றனின், றூட்டி மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும் :]

மங்குல் வானத்து மீன் பூத்தன்ன வால் கலம் திங்கள் ஏய்க்கும் வால் கலம் மகமுறை பரப்பி - திசைகளை உடைய ஆகாயத்திடத்தே உடுக்கள் தோன்றினாற்போன்ற சிறிய [3] வெள்ளிக்கலங்களையும்;

---

[1] "பாலா ராவிப் பைந்துகில்" (சீவக. 1094)

[2] பொருந. 113-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[3] "மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியு, மமிழ்தன மரபி னூன் றுவை யடிசில், வெள்ளி வெண்கலத் தூட்டல்" (புறநா. 390 : 16-8)

திங்களை யொக்கும் பெரிய வெள்ளிக்கலங்களையும் நும்முடைய பிள்ளைகளுக்கு இடையே பரப்பி,

எனவே தலைவராயினோர்க்குப் பொற்கலம் பரப்புவர் என்றூர்.

தான் முகன் அமர்ந்து ஆறு விருப்பின் மகமுறை நோக்கி நின்று ஊட்டி - தான் முகம்பொருந்தி அமையாத ஆசையுடனே நும்முடைய பிள்ளைகளைப் பார்த்து நின்று உண்ணப்பண்ணுவித்து,

481 - 2. ஆடு வண்டு இமிரா அழல் அவிர் தாமரை நீடு இரு பித்தை பொலிய சூட்டி - உலாவும் வண்டுகள் ஒலியாத நெருப் பிடத்தே கிடந்து விளங்கின பொற்றாமரையை நீண்ட கரிய மயிரிடத்தே அழகு பெறச் சூட்டி,

பொற்றாமரை திங்களை யொக்கும் என்றல் பொருந்தாமை உணர்க.

483 - 4. உரவு கடல் முகந்த பருவம் வானத்து பகல் பெயல் துளியின் மின்னு நிமிர்ந்தாங்கு - பலவுஞ் சேர உலாவுகின்ற கட லிடத்தே முகந்த கூதிர்க்காலத்து மேகத்தினின்றும் பகற்காலத்தே பெய்தலை உடைத்தாகிய துளியின்கண்ணே மின் ஓடினாற்போல,

485 - 6. புனை இரு கதுப்பகம் பொலிய பொன்னின் தொடை அமை மாலை விறலியர் மலைய - கைசெய்த கரிய மயிரிடம் அழகு பெறும்படி பொன்னாற் செய்து சேரக் கட்டுதல் அமைந்த மாலையை விறல்பட ஆடும் மகளிர் சூடாநிற்க,

487-9. [நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல், வளைகண் டன்ன வாலுளைப் புரவி, துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி :] நூலோர் புகழ்ந்த மாட்சிய துணை புணர் தொழில மால் கடல் வளை கண்டன்ன வால் உளை புரவி நால்கு உடன் பூட்டி - [1] குதிரை நூல் கற்றோர் புகழ்ந்த அழகினை உடையவாய்த் தனித்துத் தொழில் செய்யாமல் இனங்களோடே கூடும் தொழிலை உடையவாய்க் கருமையை உடைய கடலிற் சங்கைக் கண்டாற்போன்ற வெள்ளிய கழுத்தின் மயிரை உடைய குதிரைகள் நான்கைச் சேரப்பூட்டி,

நான்கு நால்கெனப் பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் நல்கியும் அமையான் - பொன்னாற் செய்த தேரைத் தந்தும் கொடைமேல் விருப்பம் தவிரானாய்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஒழித்த விசும்பு செல் இவுளியொடு பசு படை தரீஇ – தம்முடன்

[1] குதிரையின் இலக்கணங்களைக் கூறும் சாலிகோத்திரம் என்று ஒரு நூல் உண்டென்பது தக்கயாகப்பரணி, 665-ஆம் தாழிசை யுரையால் அறியப்படுகின்றது; "உன்னய முதலாம் புரவிநூ லறிவோன்" (வி. பா. நாடுகரந்துறை. 21) என்பதனால் உன்னய மென்பதொரு நூலும் உண்மை பெறப்படும்.

வந்து பொருதோருடைய போர்களை மாளப்பண்ணித் தன் ஏவலைப் பொருந்தாத பகைவர் முதுகிட்டவிடத்து விட்டுப்போன ஆகாயத்தே செல்கின்ற குதிரைகளுடனே பசிய பொன்னாற் செய்த பக்கரைகளையும் தந்து,

493. [அன்றே விடுக்குமவன் பரிசில் :] அவன் அன்றே பரிசில் விடுக்கும் - அவன் நீ சென்ற அற்றைநாளே இவையொழிந்த பரிசில் களையும் தருவான்;

493 - 4. இன் சீர் கின்னரம் முரலும் அணங்கு உடை சாரல் - இனிய தாளத்திலே கின்னரமென்னும் பறவைகள் பாடும் தெய்வங் களை உடைய சாரலிடத்து,

495. மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின் - மயில்கள் ஆரவாரிக்கும் மரம் நெருங்கின இளமரக்காட்டினையும் உடைய,

496. கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீழ் புறவின் - முசுக்கலைகள் பாய்ந்து உதிர்த்த மலர்கள் சிந்தின காட்டினையும்,

497. மந்தி சீக்கும் மா துஞ்சும் முன்றில் - மந்திகள் அவ்விடத் துக் கிடந்த துராலை வாரும் மானும் புலியும் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (496) இறும்பினையும் (495) உடைய சாரலிடத்து (494) முன்றிலிலே (497) வேட்கு (499) மென்க.

498. செ தீ பேணிய முனிவர் - சிவந்த தீயைக் கைவிடாமற் காத்துப் போந்த இருடிகள்,

498 – 9. வெள் கோடு களிறு தரு விறகின் வேட்டும் – வெள்ளிய கொம்பினை உடைய களிறு முறித்துக் கொண்டுவந்த சமிதையாலே வேள்வியைச் செய்யும்,

மந்தி சீத்தலும், மாத் துஞ்சலும், களிறு விறகு தருதலும் இருடிகள் ஆணையால் நிகழ்ந்தனவென்று உணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே :]

ஒளிறு மலை - இவற்றால் விளங்கும் மலை,

இலங்கு அருவிய மலை - விளங்குகின்ற அருவிகளை உடைய மலை,

மலைகிழவோன் – இச்சிறந்த மலையை ஆளும் உரிமையை உடையோன்.

புலவுவாய்ப் பாண (22), பெருவளனெய்தி (26) முகந்துகொண்டு (27) யாம் அவனூரினின்றும் வருகின்றேம்; நீயிரும் (28) இரையற் படர்குவிராயின் (37) நின்னுள்ளஞ் சிறக்க (45); நின்னவலங் கெடுக (38); இரவல (45) அவன் நிலை கேள் (38); அவன் புலம் கொடியோ ரின்று (41); அதுவேயன்றி அப்புலத்தில் உருமுமுரறாது; அரவும் தப்பா(42); மாவும் உறுகண்செய்யா; ஆகலின், ஆங்கு(43) அசைவுழி

அசைஇத் தங்கிச் (44) சென்மோ (45); அங்ஙனம் செல்லுங்கால் வில்லுடை வைப்பிற் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடூனையும் (100) எல்லிடைக் கழிபு நர்க்கு ஏமமாகத் (66) தேக்கிலையிலே குவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னிய மெனின் (103) கடும்போடே மிகப்பெறுகுவிர் (105); பின்னர் அருஞ் சுரமிறந்த அம்பர்க் (117) குறும்பிற் சேப்பின் (129) சொன்றியை (131) வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர் (133); பின்னர்த் தூங்கா (146) முரண்டலை (147) இருக்கை (146) கழிந்தபின்றைக் (147) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும் பெறுகுவிர் (168); பின்னர்ப் பறவையோர்க்கும் (183) புலத்தைப் போய்ச் (184) சீறூர்களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடே பெறுகுவிர்; பின்னர் ஞாங்கர் (196) வன்புலம் இறந்தபின்றை (206), மல்லற்பேரூர் மடியின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் (256); பின்னர்க் கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் மிசைமின் (262); பின்னர் வலைஞர் குடிவயிற் சேப்பின் (274) பிழியைச் (281) சூட்டொடு பெறுகுவிர் (282); பின்னர்த் திப்பட மலர்ந்த (289) பூவையோம்பிக் (290) குறுநரிட்ட மலரைப் (295) பிணையினிர் கழிமின் (296); பின்னர் மறைகாப்பாளர் உறை பதிச் சேப்பின் (301) வத்தத்தாலுண்டான அரிசியை (305) வளைக்கை மகடூஉ வயினறிந்தட்டனவற்றைச் (304) சுடர்க்கடை யிலே (305) போமோடே (307) காடியோடே பெறுகுவிர் (310); பின்னர் நீர்ப்பெயற்றெல்லை போகிப் (319) பட்டினமருங்கினசையின் முட்டுப்பாடின்றாகக் (336) கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர் (345); பின்னர்த் துறை பிறக்கொழியப் போகித் (351) தனிமனைச் சேப்பின் (355) ஆண்டைத் தீம்பஃறூர முனையிற் சேம்பிலையோடே (361) முதிர்கிழங்கார்குவிர் (362); இவற்றை இவ்வழியின் கண்ணே பெற்றுப் பின்னர்ப் பன்மர நீளிடைப் போய் (368) நாடுபல கழிந்தபின்றைப் (371) பள்ளி அமர்ந்தோன் ஆங்கட் (373) பொழிறொறும் (380) ஆடி (387) அசைஇத் (390) தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள் வாழ்த்தி (391) இயக்கினிர் கழிமின் (392); இங்ஙனஞ் சென்று கைவண்டோன்றல் (420), இப்பொழுது ஐவர் போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்துப் (419) பகைமேற் செல்லுதலின்றி நச்சிச் சென்றோர்க்கு ஏமமாகிய (421) படப்பை முதலியவற்றை உடைய (401) விழவு மேம்பட்ட மூதூராகிய (411) கச்சியிடத்தே இருந்தோன் (420); அவ்வூரிற் பணிந்த மன்னர் (428) செவ்வி பார்க்கும் முற்றத்தினையுடைய (435) பொன்றுஞ்சு வியனகர்க்கண்ணே (440) பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (442) மிக்க காட்சியாலே (445) அருளிப் (444) பூண்கடனாற்றிக் (450) கடனிறுத்த உள்ளத்தோடே (446) சுற்றத்

தோடே இருந்தோனைக் குறுகித் (447) தொண்டையோர் மருகனே (454), மள்ளனே, மறவனே (455), செல்வனே, செருமேம்படுநனே (456), பெருமானே (461), செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு (459) நின் பெயருட் சிலவற்றைச் சொல்லிப் புகழ்ந்து (460) வந்தேன்; வாழியவெனச் சொல்லிக் (461) கழிப்பிப் (462) பழிச்சி (463) நின்னுடைய கலைகளெல்லாம் தனக்குத் தெரிவதற்கு முன்னே (464) மலைகிழவோன் (500), நில்லாவுலகத்து நிலைமை தூக்கி (466) அந்நிலையணுகல் வேண்டி அழைத்துச் (467) சிதர்வை நீக்கி (468) உடீஇ (470) அமுதோடே (475) குறையும் (472) புழுக்கலும் (474) பிறவுமாகிய (475) அடிசிலைக் (476) கலங்களைப் பரப்பித் (477) தான் (479) முகனமர்ந்து மகமுறை நோக்கி (478) முன்னின்றூட்டி (479) விறலியர் மாலை வேயாநிற்க (486) நுமக்குத் தாமரை (481) பொலியச் சூட்டி (482) அரித்தேர் நல்கியும் அமையானுய் (490) இவுளியொடு பசும்படை தரீஇ (492) அவன் அன்றே (493) அந்நிலையிலே (464) நாவலந் தண்பொழில் வீவின்று விளங்கும்படி (465) இவையொழிந்த பரிசில்களையும் தரும் (493) என வினைமுடிவு செய்க.

இப்பாட்டில் ஒருமைபன்மை மயக்கம், "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி......போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. சூ. 66) என்பதனாற் கொள்க.

தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடிய பெரும்பாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.

ஐந்தாவது

முல்லைப் பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது

---

1. "நனந்தலை யுலகம்" (பதிற். 63 : 18)
'நன' என்னும் அகரவீற்று உரிச்சொல், அகலமென்னும் குறிப்புப் பொருளை உணர்த்துதற்கும் உரிச்சொல் எழுத்துத் திரிந்திசைத்தற்கும் இவ்வடி மேற்கோள்; தொல். உரி. 78, ந; இ – வி. சூ. 282,289.

2 - 3. "கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும், பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர், வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான், உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே" (கம்ப. வேள்வி. 35); "நீர்விரி கமலச் செங்கை நீர்செல நிவந்த மாயோன்" (பாகவதம், 8. வாமனாவதார. 64)

4. "வலனேர்பு" (முல்லை. 91; முருகு. 1)

4 - 6. "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப், பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென" (நெடுநல். 1 - 2)

7. மு. "வாள்போழ்" (நாற். சூ. 147, உரை, மேற்.) என்னும் செய்யுளிலும் ஓரடி இப்படி வந்துள்ளது.

8. யாழிசை வண்டு : "யாழ்வண்டு" (பொருந. 211); "வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடு" (கலித். 32 : 9); "வண்டினம் யாழாக" (அகநா. 82 : 6); "உண்டிருந்த தேனை யறுபதங்க ளூதிப் போய்ப், பண்டிருந்த யாழ்முரல" (ஈங்கோய். எழு. 10); பொருந. 213, ந. அடிக்குறிப்பையும் பார்க்க.

8 - 10. "நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது" (நெடுநல். 43); "அரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்" (சிலப். 9 : 1 - 2)

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமர னோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்

---

11. *பெருமுது பெண்டிர் :* குறுந். 181 : 7.

8 - 11. *"நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும், செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா"* (புறநா. 280 : 6 - 7)

"முல்லை குறிஞ்சியென்பன இடுகுறியோ காரணக்குறியோ வெனின், ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி யென்றே கொள்ளப்படும். என்னை காரணமெனின், 'நெல்லொடு ....தூஉய்' என்றமையால் காடுறையுலகிற்கு முல்லைப்பூச் சிறந்த தாகலானும்......இவ்வாறு குறியிட்டாரென்று கொள்ளப்படும் என்க" (தொல். அகத். சூ. 5, இளம்.)

6 - 11. *மாலையில் விரிச்சி நிற்றல் ; "வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற், கீண்டிருண் மாலைச் சொல்லோர்த் தன்று"* (பு. வெ. 4)

12. *பசலைக்கன்று : "பறித்து மென்றுவா யசைப்பன பசலையான் கன்று"* (திருவிளை. திருநகரப். 33)

12 - 4. *இவ்வடிகளுடன், "எம்மனை மாரினி"* (சீவக. 425) *என்னும் செய்யுளை ஒப்பிடுக.*

15. *கொடுங்கோற் கோவலர் : "கொடுங்கோற், கல்லாக் கோவலர்"* (அகநா. 74 : 15 - 6)

16. *"இன்னே வருகுவர்"* (நெடுநல். 155)

15 - 6. *காதல்பற்றியும் உவப்புப்பற்றியும் அஃறிணை உயர் திணையாய் மயங்கியதற்கு இவ்வடிகள் மேற்கோள்;* தொல். கிளவி. சூ. 27, ந. இ - வி. சூ. 299.

20. *(பி-ம்.) 'வருவராதல் வாய்வது'* 21. (பி-ம்.) *'மாயோளென.*

20 - 21. *"பொய்ம்மை யுடன்புணரார் மேலவர் பொய்ம்மையும், மெய்ம்மைசூழ் மேலவரை மேவாவாம்-இம்முறையாற், பூவலருங்*

காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்

தாராய் பிரிந்தாற் பொலங்குழையார், காவலர்சொற் போற்றல் கடன்" (இ - வி. சூ. 658, மேற்.) என்பதன் கருத்து இவ்வடிகளின் கருத்தை ஒத்தது.

20 - 22. "இன்னே வருகுவ ரின்றுணை யோரென, உகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து" (நெடுநல். 155 - 6)

23. பூப்போலுண்கண் : நற். 20 : 6, 325 : 7; குறுந். 101 : 4; ஐங். 16 : 4, 101 : 4. புலம்புமுத்துறைப்ப : "விலங்கிரிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப" (சிலப். 4 : 71)

25. பைம்புதலெருக்கி : பெரும்பாண். 112.

28. (பி - ம்.) 'பரந்த பாசறை'

பாசறைக்குக் கடல்: "கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறை", "கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்" (புறநா. 294 : 2, 295 : 1)

24 - 8. வஞ்சி, முல்லையின் புறமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். புறத். சூ. 6, இளம். ந.

29. உவலை, தழையென்னும் பொருளை உணர்த்தும் என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தஞ்சை. 363, உரை.

29 – 30. "கவலை மறுகிற் கடுங்கண் மறவர், உவலைசெய் கூரை யொடுங்க" (பு. வெ. 169)

30 – 31. "எல்லை நின்ற வென்றி யானை யென்ன நின்ற .... வாயிலே" (கம்ப. நகர. 22)

31 - 3. "கரும்பொடு காய்நெற் றுற்றி...யானை" (சீவக. 2522)

31 - 4. "யானைதன், கோட்டிடை வைத்த கவளம் போல" (புறநா. 101 : 6 - 7)

தயினுணை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்

---

35. ''கவைமுட் கருவியு மாகிக் கடிகொள'' (மணி. 18 : 164)

வடமொழி பயிற்றி : ''பெருவெளில் பிணிமார் விரவுமொழி பயிற்றும், பாகர்'' (மலைபடு. 326 - 7)

36. ''காழோர் கடுங்களிறு கவளங் கைப்ப'' (மதுரைக். 658-9)

37 - 8. ''முக்கோலுங் கமண்டலமுஞ் செங்கற் றாசு முந்நூலுஞ் சிகையுமாய் முதிர்ந்து தோன்று, மக்கோலம்'' (வி. பா. அருச்சுனன் தீர்த்த. 55)

40. கூடம் : ''ஒல்லாக் கூடமு மொருங்குதலைப் பிணங்கி'' (பெருங். 2. 12 : 45)

41. பெரும்பாண். 119 - 20-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

41 – 2. ''வேலி யிட்ட தவர்க ளிட்ட வில்லும் வாளும் வேலுமே'' (திருவரங்கக்கலம். 53)

43. பட்டினப். 216.

44. ''நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த, கொடும்பட நெடு மதில்'' (சிலப். 27 : 151 - 2) ; ''காழொடு சேர்த்த, கண்டப் பூந்திரை மண்டபத் திழைத்த, நன்னகர்'', ''கண்டப் பூந்திரை காழ்முதற் கொளீஇ'', ''பல்காழ்த் திரையும்'' (பெருங். 1. 42 : 105 - 7, 2. 4 : 134, 12 : 44)

46 - 7. ''இரும்பறக் கழூவி யெஃகி னிருளற வடிக்கப். பட்ட, அரும்பெறற் சுரிகை யம்பூங் கச்சிடைக் கோத்து வாங்கி'' (சீவக. 698);

நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குதடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறிநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப

---

48. "சொரிசுரை கவரு நெய்வழி புராலில்" (பதிற். 47 : 5)

49. (பி - ம்.) 'மாட்டி'

50. (பி - ம்.) 'நெடுநா வெண்மணி', 'மிழற்றிய நடுநாள்', 'நிழத்தலி னடுநாள்', 'நிழற்றிய'

"நெடுநா வொண்மணி, கடிமனை யிரட்ட", "யாமங்கொள்பவர் நெடுநா வொண்மணி யொன்றெறி பாணியி னிரட்டும்" (நற். 40 : 1, 132: 9 – 10)

51. அதிரல்: குறிஞ்சிப். 75.

54. பெருமூதாளர் : "பெருமூ தாளரே மாகிய வெமக்கே" (புறநா. 243 : 14); "பெருமூ தாள, னேர்ந்ததை யெல்லா நெடுந்தகைக் குரைப்ப", "பெருமூ தாளரும் பெருங்கிளைச் சுற்றமும்" (பெருங். 1. 34 : 110 - 11, 57 : 17)

53 - 4. "பைந்துகின் முடியணிந் தவர்பின், உலவு காஞ்சுகியவர்" (சீவக. 1558)

55 - 8. "சூதர் வாழ்த்த மாகதர் நுவல, வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப" (மதுரைக். 670 - 71); "குறுநீர்க் கன்னலெண் ணுந ரல்லது, கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய்" (அகநா. 43 : 6 - 7); "நாழிகைக் கணக்கர்", "ஐந்து கேள்வியுமமைந்தோ னெழுந்து, வெந்திறல் வேந்தே வாழ்கநின் கொற்றம், மிருநில மருங்கின் மன்னரெல் லாநின், திருமலர்த் தாமரைச் சேவடி பணியு, முழுத்த மீங்கிது முன்னிய திசைமே, லெழுச்சிப் பாலை யாகென் றேத்த" (சிலப். 5 : 49, 26 : 26 - 31); "குறுநீர்க் கன்னலின் யாமங் கொள்பவர்" (மணி. 7 : 64 - 5); "கொலைமுகக் களிற னாற்கு நாழிகை சென்று கூற" (சீவக. 2733); "புனலுற்றருகு செப்பின், காலமறி வுற்றுணர்தல் கன்னலள வல்லான், மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ" (கம்ப. கார்காலப். 73);

**மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்
உடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்**

"பூமென் கணையும் பொருசிலையும் கைக்கொண்டு, காமன் றிரியுங் கருவூரா – யாமங்கள், ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையு, மொன்றுபோ யொன்றுபோ யொன்று" (சிலப். 5 : 49, அடியார். மேற்.)

60. மெய்ப்பை புக்கு : "படம்புகு மிலேச்சர்" (முல்லை, 66); "மெய்ப்பை புக்கு" (சிலப். 16 : 107)

66. (பி - ம்.) 'மிலைச்சர்'

படம் புகும் : (பெரும்பாண். 69); "செங்கட் புன்மயிர்த் தோறிரை செம்முக, வெங்க ணேக்கிற்குப் பாயமி லேச்சனைக், செங்கட் டைவிழி யாத்தெழித் தான்" (சீவக. 431)

67. "செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணுடவர்" (அகநா. 157: 4); "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்", "பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை, வளிபொரு தெண்கண் கேட்பி, னதுபோ ரென்னு மென்னையு முளனே", "வாள்வடு விளங்கிய சென்னிச், செருவெங் குருசில்" (புறநா. 31 : 9, 89 : 7 - 9, 321 : 9 - 10); "போரென்ன வீங்கும் பொருப்பன்ன திரள்கொ டிண்டோள்" (கம்ப. பூக்கொய். 18); "செருவென்ற மாற்றங் கேட்டுச் சிந்தையி னுவகை பொங்க, மருவொன்று மலங்கன் மார்பும் வாகுபூ தரமும் பூரித்து......ஒருப்பட்டான்" (வி. பா. நிவாதகவசர். 17)

69. (பி - ம்.) 'வேழமும்'

70. யானைத்துதிக்கைக்குப் பாம்பு : "யானைதன், வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை, குன்றுபுகு பாம்பிற் றோன்றும்" (அகநா. 391 : 11 - 3); "நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர், வரை புரை யானைக்கைந் நூற - வரைமே, லுருமெறி பாம்பிற் புரளுஞ்

தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறும்பு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
இன்றுயில் வதியுநற் காணா துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து

செருமொய்ப்பிற், சேய்பொரு தட்ட களத்து'' (களவழி. 13); ''பாந்த ளன்ன பரேரெறுழ்த் தடக்கையின்'' (பெருங். 1. 58 : 8); ''அனந்த னன்னகை யானை'' (சீவக. 2521)

73. ''வேனிறத் திங்க வயவரா லேறுண்டு, கானிலங் கொள் ளக் கலங்கிச் செவிசாய்த்து, மாநிலங் கூறு மறைகேட்ப''(களவழி. 41)

'வை' கூர்மை ஆகிய குறிப்புப்பொருளை உணர்த்தும் என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 91, சே : 89, ந.

74. (பி. - ம்.) 'மாவுஞ் சிந்தித்து'

75. ''பள்ளி - படுக்கை; 'ஒருகைப் பள்ளி யொற்றி' இது முல்லை.'' (தக்க. 54, உரை)

76. நெடிது நினைந்து : ''நீடு நினைந்து'' (முல்லை. 81)

75 - 6. தொல். கற்பியல், சூ. 34, ந. மேற்.

83. ஒரு பிரதியில் இவ்வடியின் பின், ''அஞ்சி லோதி யாய்கவி னசைஇ, யேவுறு'' என்னும் பகுதி காணப்படுகின்றது.

ஒய்யென : பொருந. 152.

84. (பி. - ம்.) 'இழை நெகிழா'

''ஏவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த'' (மணி. 7 : 127); ''இடருற் றிகல்வாளி, தன்னங்க மூழ்கத் தளர்ந்துவீழ் மஞ்ஞை யென, அன்னம் பொருவு நடையா ளயிராணி, மன்னன் றிருமுன் மயங்குற்று வீழ்ந்தனளே'' (கந்த. அயிராணி. 5)

பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்

---

85. "யவனர் இயற்றிய வினைமாண் பாவை, கையேந் தையகலி னிறையநெய் சொரிந்து, பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி", "பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல" (நெடுநல். 101 - 3, 175); "பாண்டில் விளக்குப் பரூஉச்சுட ரழல" (பதிற். 47 : 6)

பரூஉச்சுடர் : "பள்ளி மாடத்துப் பரூஉச்சுடர் கொளீஇ" (பெருங். 1, 54 : 8)

86. எழுநிலை மாடம் : "எழுநிலை மாடஞ் சேர்ந்தும்" (சீவக. 2840)

86 - 7. "நீர்பாய் மாடமொடு", "ஏரணி யமைந்த வெழுநிலை நல்வினை, நீரணி மாடத்து" (பெருங். 1. 38 : 77, 40 : 16 - 7)

87 - 8. "கார்வா னின்னுறை தமியன் கேளா" (புறநா. 157 : 3)

89. அல்வழிக்கண் ககரமும் அகரமும் கெடுதற்கு இது மேற்கோள்: தொல். குற். சூ. 78, ந.

90 - 91. "நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு, புலவுப் படக் கொன்று மிடைதோ லோட்டிப், புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி" (மதுரைக். 369 - 71)

92 வயிரும் வளையும் ஆர்த்தல் : முருகு. 120-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

93. செறியிலைக் காயா, "செறியிலைக் காயா சிறுபுறத் துறைப்ப" (பெருங். 1. 49 : 115)

"கண்ணிய லஞ்சனஞ் தோய்ந்தபோற் காயாவும், நுண்ணரும் பூழ்த்த புறவு" (கார். 8); "அஞ்சனங் காயா மலர" (திணைமொழி. 21.)

94. "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" (அகநா. கடவுள்.); "கொன்றைகள் பொன்சொரிய" (தேவாரம், திருப்புகலி.)

95. "செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்" (சிறுபாண்.

தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள

---

167); "கைபோற் பூத்த கமழ்குலைக் காந்தள்" (பரி. 19 : 76); "கைவிரிந்தன காந்தளும்" (நள. நாட்டு. 11)

96. "குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந். 1 - 4)

99. திரிமருப்பிரலை : "இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்... இரலை", "திரிமருப் பிரலைய காடிறந் தோரே", "புன்கண் கொண்ட திரிமருப் பிரலை" (அகநா. 4 : 3 - 4, 133 - 18, 371 : 5)

இரலையொடு மடமானுகளல் : "பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி, மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள" (மதுரைக். 275 - 6); "அறுகோட் டிரலையொடு மாண்பிணை யுகளவும்" (பட். 245); "வன்பரற் றெள்ளறல் பருகிய விரலைதன், இன்புறு துணையொடு மறுவந் துகளத், தான்வந் தன்றே தளிதரு தண்கார்", "துணையோ, டிரலை நன்மா னெறிமுத லுகளு, மாலை", "திரிமருப் பிரலை யண்ண னல்லேறு, றரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ, வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுதுசெலச், செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலை" (குறுந். 65 : 1 - 3, 250 : 1 - 3, 338 : 1 - 4)", "அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத், திரிமருப் பிரலை புல்லருந் துகள", "அண்ண விரலை யமர்பிணை தழீஇத், தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே", "இருதிரி மருப்பி னண்ண விரலை.........மடப்பிணை யருத்தி.........காக்கும்", "திரிமருப் பிரலை,......காமர் துணையோ டேமுற வதிய", "திரிமருப்பிரலை தெள்ளறல் பருகிக், காமர் துணையோ டேமுற வதிய","மடப்பிணை,வலந்திரி மருப்பி னண்ண விரலையொ, டலங்குசினைக் குருந்தி னல்குநிழல் வதிய", "மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்,றிரிமருப் பிரலை பைம்பயி ருகள"(அகநா. 14 : 5- 6, 23 : 8 - 9, 34 : 4 - 8, 139 : 10 - 12, 154 : 8 - 9, 304 : 8 - 10, 314 : 5 - 6); "கருவியல் கார்மழை கால்கலந் தேந்த, வுருகு மடமான் பிணையோ டுகளும்" (திணைமொழி. 2); "கானமரும் பிணைபுல்கிக் கலைபயிலுங் கடம்பூரில்" (தே. திருஞா.); "சிறுபிணை தழீஇய திரிமருப் பிரலை", "மறியுடன் றழீஇய மடமா னம்பிணை, துள்ளு நடை யிரலையொடு வெள்ளிடைக் குழும", "திரிமருப் பிரலை...... மடமா னம்பிணை கண்டு......புகன்றுவிளை யாடும்" (பெருங். 1. 49 : 114, 54 : 38 - 9; 3. 1 : 141 - 7)

98 - 9. "பழமழைக் கலித்த புதுப்புன வரகி, னிரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை" (குறுந். 220 : 1 - 2)

100 வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

100. வெண்மழை : நெடுநல். 19.

101. வள்ளியங்காடு : குறுந். 216 : 2.

பிறக்கொழிய : பெரும்பாண். 351; ஐங். 385 : 2; அகநா. 104 : 13; புறநா. 15 : 15; மணி. 11 : 65.

102. 'துனை' என்னுஞ் சொல் விரைவென்னும் பொருளை உணர்த்தும் என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 17, ந.

இதன் பொருள்

இப்பாட்டிற்கு [1] முல்லை என்று பெயர் கூறினார், [2] முல்லை சான்ற கற்புப் பொருந்திய தலைவி. [3] இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வரும் துணையும் ஆற்றியிரு வென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றி யிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாமென்று கருதி இருத்தல் என்னும் பொருட்ட முல்லை என்று இச் செய்யுட்கு நப்பூதனர் பெயர் கூறினமையிற் கணவன் வருந் துணையும் ஆற்றி யிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தாயிற்று. "தானே சேறல்" (தொல். அகத். சூ. 27) என்னும் விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு.

இது, தலைவன் வினைவயிற் பிரியக் கருதியதனை அவன் குறிப்பானுணர்ந்து ஆற்றருளாய தலைவியது நிலைமை கண்டு அவன் வற்புறுப்பவும் உடம்படாதவளைப் [4] பெருமுது பெண்டிர் [5] அவன் வினை முடித்து வருதல் வாய்வது, [6] நீ வருத்தம் நீங்குவது எனக் கூற, அதுகேட்டு அவள் நீடு நினைந்து ஆற்றியிருந்தவழித் தலைவன் அக் காலத்தே வந்ததனைக் கண்டு வாயில்கள் தம்முட் கூறியது. இது "வாயி லுசாவே தம்முளு முரிய", (தொல். செய். சூ. 199), "எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும், புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" (தொல். கற்பு. சூ. 37) என்பனவற்றுற் கூறினார்.

[1] இப்பாட்டு முல்லையென்று வழங்குதல், "இது முல்லை" (தக்க 54, உரை) என்பதனாலும் அறியப்படும்.

[2] "முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (சிறுபாண். 30)

[3] சிறுபாண். 169-ஆம் அடியின் உரையையும் அதன் அடிக் குறிப்பையும் பார்க்க.

[4] "பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்லை. 11)

[5] முல்லை. 20. [6] முல்லை. 20 - 21.

1. நன தலை உலகம் வளைஇ - அகலத்தை இடத்தே உடைய உலகத்தை வளைத்து,

1 – 2. [நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை:]

நேமியொடு வலம்புரி தாங்கு தட கை மாஅல் (3) – சக்கரத் தோடே வலம்புரியைத் தாங்கும் பெரிய கைகளை உடைய மால்,

மா [1] பொறித்த மாஅல் (3) – திருமார்பிடத்தே திருமகளை வைத்த மால்,

3. நீர் செல நிமிர்ந்த மாஅல் போல – மாவலி வார்த்த நீர் தன் கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல,

இனி, [2] நேமியோடே வலம்புரியுமாகிய உத்தம இலக்கணங் களைப் பெற்றிருக்கின்ற திருமகளை அணைத்த கையிலே நீர் செல்ல வென்றுமாம்.

இதனானே [3] முல்லைக்குரிய தெய்வம் கூறினார்.

4 – 5. [பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, [4]கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி :]

பாடு இமிழ் பனி கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு – ஒலி முழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடலைக் குடித்து வலமாக எழுந்து மலைகளை இருப்பிடமாகக் கொண்டு,

உலகம் வளைஇ (1) எழுந்த கொடு செலவு எழிலி – பெய்யுங் காலத்தே உலகத்தை வளைந்தெழுந்த கடிய செலவினை உடைய மேகம்,

மால் நீர் செல நிமிர்ந்தாற்போல மேகமும் நீர் செல நிமிர்ந்த தென்றார்.

இனி, உலகத்தைத் திருவடிகளிலே அணைத்துக்கொண்டு நிமிர்ந்த மாலென்றும் உரைப்பர்.

6. பெரு பெயல் பொழிந்த சிறு புல் மாலை – பெரிய மழையைப் பெய்த சிறுபொழுதாகிய வருத்தம் செய்கின்ற மாலைக்காலத்துப் பாவை விளக்கு (85) எனக் கூட்டுக.

---

[1] பொறித்தல் – வைத்தல்; சிறுபாணாற்றுப்படை, 48, உரையைப் பார்க்க.

[2] இங்கே, நேமி – சக்ர ரேகை, வலம்புரி – சங்க ரேகை எனக் கொள்க; இவை கைக்குரிய உத்தம இலக்கணங்கள்; "வலம்புரி பொறித்த வண்கை மதவலி" (சீவக. 204); "சங்க லேகையுஞ் சக்ர லேகையும், அங்கை யுள்ளன வையற்கு" (சூளா. குமார. 45); "சங்கு சக்கரக் குறியுள தடக்கையில்" (கம்ப. மராமரப். 117.)

[3] "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகத். சூ. 5).

[4] "ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ" (புறநா. 35 : 17) என்பதனுரையில் கோடென்பதற்குப் பக்கமென்று பொருள் எழுதுவர் அதன் உரையாசிரியர்.

இதனானே முல்லைக்குரிய [1] காரும் மாலையும் கூறினர்.

மால்போல (3) எழுந்த எழிலி (5) பொழிந்த மாலை யென்க.

7. [அருங்கடி மூதூர் மருங்கிற் போகி :] அரு கடி முது ஊர் மருங்கில் நல்லோர் (18) போகி - அரிய காவலை உடைய பழைய ஊர்ப் பக்கத்துப் பாக்கத்தே படைத்தலைவர் ஏவலால் நற்சொற் கோடற்குரியோர் போய்,

8 - 11. [யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது, [2] பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப:]

நறுவீ முல்லை (9) அரும்பு (10) யாழ் இசை இனம் வண்டு ஆர்ப்ப (8) அவிழ் அலரி (10) நாழி கொண்ட (9) நெல்லொடு (8) தூஉய் (10) - நறிய பூக்களை உடைய முல்லையின் அரும்புகள் யாழினது ஓசையினையுடைய இனமான வண்டுகள் ஆரவாரிக்கும்படி அவிழ்ந்த பூவை நாழியிடத்தே கொண்டுபோன நெல்லுடனே தூவி,

கைதொழுது (10) விரிச்சி நிற்ப (11) - தெய்வத்தை வணங்கி நற்சொற் கேட்டு நிற்க,

நல்லோர் (18) போகித் (7) தூஉய்த் தொழுது (10) நிற்ப வென்க.

என்றது : [3] ஒரு வேந்தன் ஒரு வேந்தனோடு இகல் கருதினால் போர் செய்ய வேண்டுதலின், அவனாட்டு அந்தணர் முதலியோரைத் தன்னாட்டின் கண்ணே அழைத்தற்கும், அதனை அறியாத ஆவைக் கொண்டுபோந்து தான் காத்தற்குமாகத் தன் படைத்தலைவரை நோக்கி அரசன் நிரையடித்தற்கு ஏவியவழி, அவர் அவனூரினின்றும்

---

[1] "காரு மாலையு முல்லை குறிஞ்சி, கூதிர் யாம மென்மனார் புலவர்" (தொல். அகத். சூ. 6)

[2] பெருமுது பெண்டிரென்பதற்கு ஒரு பிரதியிலும் உரையிலது; பெரிய முதிர்ந்த பெண்டிரென்க.

[3] "இரு பெருவேந்தர் பொருவது கருதியக்கால் ஒருவர், ஒருவர் நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்கு செய்யத் தகாத சாதிகளை ஆண்டுநின்றும் அகற்றல்வேண்டிப் போதருகவெனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினால் தாமே கொண்டு வந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமேயாமென்றதற்கு 'ஆதந்தோம்பல்' என்றான்; அஃது, 'ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்...எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென, அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்' (புறநா. 9 : 1 – 6) எனச் சான்றோர் கூறியவாற்றானுணர்க" (தொல். புறத். சூ. 2, ந.) என்று இவ்வுரையாசிரியர் எழுதியுள்ளவற்றால் இங்கே கூறப்படும் வழக்கு விளங்கும்.

போய் ஒரு பாக்கத்து [1] விட்டிருந்து அரசனுக்கு மேல்வரும் ஆக்கத்தை அறிதற்கு விரிச்சி ஓர்த்தல் வேண்டுமென்று புறத்திணை யியலுட் கூறினமையான், ஈண்டும் அவ்வாறே கூறினார். அது, "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி, னாதந் தோம்பன் மேவற் றாகும்", "படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி" (தொல். புறத். சூ. 2, 3) என்னும் சூத்திரங்களானும், "திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி, நரைமுதியோ னின்றுரைத்த நற்சொன் - னிரையன்றி, எல்லைநீர் வைய மிறையோற் களிக்கு மால், வல்லையே சென்மின் வழி" என்னும் உதாரணத்தானும் உணர்க. இவர் இதுகேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சி சூடி மண்ணசையால் மேற்செல்வ னென்பது. ஆண்டு, "எஞ்சா மண் ணசை" (தொல். புறத். சூ. 7) என்னும் சூத்திரத்திற் கூறியவாறே ஈண்டுக் கூறினார். அது மேல், "முனை கவர்ந்து" (19) என்பதனான் உணர்க.

12-8. [சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின், உறுதுய ரலமர னோக்கி யாய்மகள், நடுங்குசுவ லசைத்த கையள் கைய, கொடுங் கோற் கோவலர் பின்னின் றுய்த்தர, இன்னே வருகுவர் தாய ரென்போள், நன்னர் நன்மொழி கேட்டன மதனால், நல்ல நல்லோர் வாய்ப்புள் :]

நன்னர் (17) வாய்ப்புள் (18)-அவர் கேட்ட நன்றாகிய நற்சொல்,

ஆய் மகள் (13) நடுங்கு சுவல் அசைத்த கையள் (14) - இடைச் சாதியின் மகள் குளிரால் நடுங்குகின்ற தோளின்மேலே கட்டின கையளாய் நின்று,

சிறு தாம்பு தொடுத்த பசலை கன்றின் (12) உறு துயர் அலமரல் நோக்கி (13) - சிறிய தாம்பாலே காலிலே கட்டப்பட்ட வருத்தத்தை உடைத்தாகிய கன்றினுடைய முலையுண்ணாமல் உறுகின்ற துயராலே தாய் வருமென்று சுழலுகின்ற தன்மையைப் பார்த்து,

கைய (14) கொடு கோல் கோவலர் பின் நின்று உய்த்தர (15) - கையிடத்தனவாகிய [2] கொடிய கோலை உடைய இடையர் பின்னே நின்று செலுத்துதலைச் செய்கையினாலே,

தாயர் இன்னே வருகுவர் என்போள் (16) நல்மொழி கேட்டனம் (17) - நிரம்ப மேய்ந்து நும்முடைய தாய்மார் இப்பொழுதே வருவரென்று கூறுகின்றோளுடைய நன்றாகிய வார்த்தையாக யாங்கள் கேட்டோம்;

---

[1] விட்டிருந்து - தங்கியிருந்து; முல்லை. 42, உரை; மதுரைக். 125 - 7, உரையைப் பார்க்க.

[2] "விழுத்தண்டூன்றிய கை - பசுக்களுக்கு வருத்தம் செய்யும் தடியை ஊன்றின கை" (பெரும்பாண். 170, ந.) என்பதனால், 'கொடிய கோல்' என்பதன் பொருள் நன்கு விளங்கும்.

அதனால் (17) – அவள் கூறிய நற்சொல்லின் கருத்தால்,

18 - 20. [தெவ்வர், முனைகவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து, வருத றலைவர் வாய்வது :] தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து வருதல் வாய்வது - நம் தலைவர் வஞ்சி சூடிச் சென்று பகைவர் மண்ணைக் கொண்டு பின் அவரிடத்தே வாங்கிக்கொண்ட திறையினையுமுடையவராய் இங்ஙனம் தாம் எடுத்துக்கொண்ட வினையை முடித்து வருவாரென்று நாம் கருதிய தன்மையிலே அவர் நிற்றல் உண்மை;

நல்ல (18) - அவர் அங்ஙனம் வினைமுடித்து வருதல் நமக்கு இல்லறம் நிகழ்தற்குக் காரணமாகலின் நல்ல காரியம்;

20 – 21. [நீ நின், பருவர லெவ்வங் களைமா யோயென :] மாயோய் நீ நின் பருவரல் எவ்வம் களை என - [1] மாமை நிறத்தை உடையோளே நீ நின் மனத்தடுமாற்றத்தான் உளதான வருத்தத்தைப் போக்கென்று கூற, அதுகேட்டு,

செலவுக் குறிப்பறிந்து வேறுபட்டது உணர்ந்தமையின், மனத் தடுமாற்ற மென்றார்.

பெரு முது பெண்டிர் (11), நல்லோர் (18) போகித் (7) தூஉய்த் தொழுது (10) விரிச்சி நிற்ப (11) அவர்கேட்ட நன்னர்(17) வாய்ப்புள் (18) ஆய்மகள் (13) கையளாகிக் (14) கன்றின், (12) அலமர னோக்கித் (13) தாயர் இன்னே வருகுவரென்போளுடைய (16) நன்மொழியாக யாங்கள் கேட்டனம்; அதன் கருத்தால் (17) தலைவர் வருதல் வாய்வது (20); நல்ல காரியம் (18); மாயோய் (21), நீ நின் (20) பருவரலெவ்வம் களை யென்று கூற (21) அதுகேட்டு நீடு நினைந்து (82) என்க.

இங்ஙனம் பொருள் கூறாமல் தலைவியது இரக்க மிகுதி கண்டு பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு வந்து தலைவர் வருவராதல் வாய்வது; நின்னெவ்வங் களையென்று பல்காலும் ஆற்றுவிக்கவும், ஆற்றாளாய்த் துயருழந்து (80) புலம்பொடு (81) தேற்றியும் திருத்தியும்(82) மையல்கொண்டும் உயிர்த்தும் (83) நடுங்கி நெகிழ்ந்து (84) கிடந் தோள் (88) எனப் பொருள் கூறியக்கால் நெய்தற்குரிய இரங்கற் பொருட்டன்றி முல்லைக்குரிய இருத்தற்பொருட்டாகாமை உணர்க. அன்றியும் தலைவன் காலம் குறித்தல்லது பிரியானென்பதூஉம், அவன் குறித்த காலம் கடந்தால் தலைவிக்கு வருத்தம் மிகு மென்பதூஉம், பாலையா மென்பதூஉம், அவ்வாற்றாமைக்கு

---

[1] மாமை நிறம் : நாருரித்த ஆம்பற்றண்டுபோன்ற அழகிய நிறம்; "நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள்கால், நாருரித் தன்ன மதனின் மாமை" (நற். 6 : 1 - 2); "பொய்கை யாம்ப லணிநிற மென்கால், நிறத்தினு நிழற்றுதன் மன்னே, இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே" (ஐங். 35 : 2 - 4); இது மாமைக்கவினென்றும் வழங்கும்.

[1] இரங்கல் நிகழ்ந்தால் செய்தலாமென்பதூஉம் நூற்கருத்தாதல் உணர்க.

22. [காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து:] காட்டவும் காட்டவும் [2]கலுழ் சிறந்து காணாள் - தலைவன் [3] புகழும் மானமும் எடுத்துக்காட்டி வற்புறுத்தவும் தோன்றல் சான்ற மாற்ருர் பெருமை கூறிக்காட்டி வற்புறுத்தவும் அன்புமிகுதியாற் கலக்கமிக்கு இவை அரசற்கு வேண்டுமென்று மனத்திற் கருதாதவள்,

23. பூ போல் உண் கண் [4] புலம்பு முத்து உறைப்ப - பூப்போலும் மையுண்கண்கள் தாரையாகச் சொரியாது தனித்து வீழ்கின்ற முத்துப் போலும் துளியைத் துளிப்ப, அதுகண்டு,

24. கான் யாறு தழீஇய அகல் நெடு புறவின் - காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே,

25. சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி – தூரிய நிலத்தே நாறுகின்ற பிடவமோடே ஏனைப் பசிய தூறுகளையும் வெட்டி,

26. வேடு புழை அருப்பம் மாட்டி - பகைப்புலத்துக்குக் காவலாக இருக்கும் வேட்டுவச்சாதியினுடைய சிறு வாயில்களை உடைய அரண்களை அழித்து,

26 – 7. [காட்ட, இடுமுட் புரசை யேமுற வளைஇ:] காட்ட முள் இடு புரசை ஏமம் உற வளைஇ - காட்டின் கண்ணவாகிய முள்ளால் இடும் மதிலைக் காவலுறும்படி வளைத்து,

28. [படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி:] புணரி படும் நீரின் பரந்த பாடி - திரை ஒலிக்கின்ற [5] கடல்போற் பரந்த பாசறைக் கண்ணே கண்படை பெருது (67) என்க.

புறவிடத்தே (24) எருக்கி (25) மாட்டி (26) வளைஇப் (27) பரந்த பாடி யென்க.

29. உவலை கூரை ஒழுகிய தெருவில் - தழையாலே வேய்ந்த கூரை ஒழுங்குபட்ட தெருவிடத்து,

30 - 31. கவலை முற்றம் காவல் நின்ற தேம் படு கவுள சிறு கண் யானை - நாற்சந்தியான முற்றத்தே காவலாக நின்ற மதம் பாய் கின்ற கதுப்பினை உடையவாகிய சிறிய கண்ணை உடைய யானை,

---

[1] (பி - ம்.) 'இரங்கல் நிமித்தம்' [2] (பி - ம்.) 'கலிழ் சிறந்து'

[3] "புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலும்......தோன்றல் சான்ற மாற்ருேர் மேன்மையும்" (தொல். அகத்திணை. சூ. 41)

[4] "புலம்பே தனிமை" (தொல். உரி. சூ. 33)

[5] "கடன்மருள் பெரும்படை", "படைநிலா விலங்குங் கடன்மரு டானை" (அகநா. 116 : 16, 212 : 15); "கடலென, வானீர்க் கூக்குந் தானை" (புறநா. 17 : 36 - 7)

32 – 3. *[ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த, வயல் விளை யின்குள முண்ணாது:]* ஓங்கு நிலை கரும்பொடு வயல் விளை கதிர் மிடைந்து யாத்த இன் குளகு உண்ணாது - வளர்கின்ற தன்மையை உடைய கரும்புகளோடே வயலிலே விளைந்த நெற்கதிர் இடையே நெருங்கப்பட்டுக் கட்டிப்போகட்ட சாவியையும் இனிய [1] அதிமதுரத்தழையையும் தின்னாமல்,

33 - 4. *நுதல் துடைத்து அயில் நுனை மருப்பில் தம் கையிடை கொண்டென* - அவற்றாலே தம் நெற்றியைத் துடைத்துக் கூர்மையை உடைய முனைகளை உடைய கொம்பினிடத்தே ஏறட்ட தம் கையிடத்தே கொண்டு நின்றனவாக,

35 - 6. *[கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா விளைஞர் கவளங் கைப்ப:]* கல்லா இளைஞர் வடமொழி பயிற்றி கவை முள் கருவியின் [2]கவளம் கைப்ப:- வடமொழியை அடியிலே கல்லாத இளைஞர் [3] யானைப்பேச்சான வடமொழிகளைக் கற்றுப் பலகாற் சொல்லிக் கவைத்த முள்ளை உடைய [4] பரிக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்த,

[5]யானைக்குச் செய்யும் தொழில்களொழிய வேறொரு தொழிலைக் கல்லாத இளைஞரென்றுமாம்.

37 - 40. *[கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர், ஓடா வல்விற் றூணி நாற்றிக், கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை:]*

கூடம் குத்தி கயிறு வாங்கு இருக்கை (40) - கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டின இருப்பின்கண்ணே, என்றது [6] படங்குகளை.

---

[1] (பி - ம்.) 'அட்டி மதுரத்தழை'

அதிமதுரத்தழை யானைக்கு விருப்பமுடையது; மதத்தை உண்டுபண்ணுவது : "அதிங்கத்தின் கவளங் கொண்டால், வேறு நீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகாது" (சீவக. 750); "அதிங்கத்தின், மரங்கொலு மதவேழ·மதர்த்தெழு மயக்கத்தால்" (தணிகை. வீராட்ட. 63)

[2] (பி - ம்.) 'கவழமகைப்ப'

[3] யானைப் பேச்சான வடமொழிகளாவன, அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன; சீவக. 1834, ந. பார்க்க.

[4] பரிக்கோல் - குத்துக்கோல்; பெரும்பாண். 393-ஆம் அடி உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[5] சிறுபாண். 32 - 3, உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

[6] படங்குகள் - கூடாரங்கள்; "பாடி வீடுகொள் படங்கென" (தக்க. 54)

கல் தோய்த்து உடுத்த படிவம் பார்ப்பான் (37) முக்கோல் அசைநிலை கடுப்ப (38) - துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களை உடைய முக்கோலந்தணன் அம்முக்கோலிலே அந்த உடையினை இட்டு வைத்த தன்மையை ஒக்க,

நல் போர் (38) ஓடா வல் வில் தூணி நாற்றி (39) - அறத்தாற் பொருகின்ற போரில் ஓடாமைக்குக் காரணமான வலிய வில்லைச் சேர ஊன்றி அதிலே தூணிகளைத் தூக்கி,

41. பூ தலை குந்தம் குத்தி - பூத்தொழிலைத் தலையிலே உடைய எறிகோல்களையும் ஊன்றி,

பூந்தலை : விகாரம்.

கிடுகு நிரைத்து - கிடுகுகளையும் நிரையாகக் குத்தி,

42. வாங்கு வில் அரணம் அரணம் ஆக - இங்ஙனம் சூழும் விற்படையாகிய அரணே தங்களுக்கு அரணாக, இதற்குள்ளே [1] விட்ட,

கயிறு வாங்கிருக்கைக்கண்ணே (40) நாற்றிக் (39) குத்தி நிரைத்து (41) வாங்குவில்லரணம் என்க.

43. [2] வேறு பல் பெரு படை நாப்பண் - பாடை வேறுபட்ட பலவாகிய பெரிய படைக்கு நடுவே,

43 - 4. [வேரோர், நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு:]

வேறு ஓர் அகம் நேர்பு - வேரோரிடத்தை அரசனுக்கு எல்லாரும் உடம்பட்டு,

நெடு காழ் கண்டம் கோலி - நெடிய குத்துக் கோலுடனே பண்ணின பல நிறத்தாற் கூறுபட்ட [3] மதிட்டிரையை வளைத்து,

கண்டம் : ஆகுபெயர்.

45. குறு தொடி முன் கை கூந்தல் அம் சிறு புறத்து மங்கையர் (47) - குறிய தொடியை உடைய முன் கையினையும் கூந்தலசைந்து கிடக்கின்ற அழகினை உடைய சிறியமுதுகினையும் உடைய மங்கையர்,

46 - 7. இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள் விரவு வரி கச்சின் பூண்ட மங்கையர் - இராப்பொழுதைப் பகற்பொழுதாக்கும்

---

[1] விட்ட - தங்கிய : மதுரைக். 125 - 7, உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

[2] "பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம், இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறை" (புறநா. 62 : 10 - 11) என்ற பகுதியும், 'பல நூறாக அடுக்கப்பட்ட பதினெண்பாடைமாக்களாகிய படைத் தொகுதி இடமில்லையாம்படி தொக்க அகன்ற இடத்தையுடைய பாடிவீடு' என்ற அதனுரையும் இங்கே அறிதற்குரியன. "விரவு மொழிக் கட்டூர்" (அகநா. 212 : 14; பதிற். 90. 30)

[3] மதிட்டிரை கண்டத்திரையென்வும் பல்வண்ணத்திரை யெனவும் வழங்கும்; சீவக; 647, ந; 873.

திண்ணிய [1] ஆசினை உடைய ஒள்ளிய வாளை விரவின நிறத்தை உடைய கச்சினாலே பூண்ட மங்கையர்,

48 - 9. நெய் உமிழ் சுரையர் நெடு திரி கொளீஇ கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட - நெய்யைக் காலுகின்ற திரிக் குழாயை உடைய சிற்றுட்கள் நெடிய திரியை எங்கும் கொளுத்தி ஒழுங்காயமைந்த விளக்குகள் அவியுந்தோறும் தம் கையிற் பந்தத்தைக் கொளுத்த,

50. நெடு நா ஒள் மணி நிழத்திய நடு நாள் - நெடிய நாக்கினை உடைய ஒள்ளிய மணி எறிந்துவிட்ட நடுயாமத்தும்,

கோயில் பணி மடங்கினால் மணியெறிந்து விடுதல் இயல்பு.

இனி யானை குதிரை முதலியன துயில்கோடலின், அவற்றின் மணியோசை அடங்கிய நடுநாளென்றுமாம்.

51 – 2. [2] அதிரல் பூத்த ஆடு கொடி படாஅர் சிதர் வரல் அசை வளிக்கு அசைவந்தாங்கு - புனலி பூத்த அசைகின்ற கொடியினை உடைய சிறு தூறுகள் துவலையோடே வருதலை உடைய அசைந்த காற்றிற்கு அசைந்தாற்போல,

சிதர் – மெத்தெனவுமாம்.

53 – 4. துகில் முடித்து போர்த்த தூங்கல் ஓங்கு நடை பெரு மூதாளர் ஏமம் சூழ - மயிர்க் கட்டுக் கட்டிச் சட்டையிட்ட, அனந் தரினையும் பெரிய ஒழுக்கத்தினையுமுடைய மெய்காப்பாளர் காவலாகச் சூழ்ந்து திரிய,

55 - 6. [பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள், தொழுது காண் கையர் தோன்ற வாழ்த்தி:]

மாக்கள் பொழுது அளந்து அறியும் பொய்யா காண்கையர் – [3] அறிவில்லாதோருடைய வாழ்நாளை இத்துணையென்று அளந்தறியும் பொய்யாத காட்சியை உடையார்,

தொழுது தோன்ற வாழ்த்தி - அரசனை வணங்கி விளங்க வாழ்த்தி,

57. எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய் - திரையெறி கின்ற கடல் சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச் செல்கின்றவனே,

57-8. நின் குறுநீர் கன்னல் இனைத்து என்று இசைப்ப-[4]கிடாரத்து

---

[1] (பி - ம்.) 'கவிசினை உடைய', 'வாய்ச்சினையுடைய'

[2] "அதிரல் - காட்டு மல்லிகை" (சிலப். 13 : 156, அரும்பத.); "அதிரல் - மோசிமல்லிகை" (ஷை அடியார்.)

[3] பொருந. 91 ந, அடிக்குறிப்பைப் பார்க்க.

[4] கிடாரம் - நீர்பெய்து வைக்கும் ஒருவகைப் பாத்திரம்; இது கடாரம் எனவும் வழங்கும்; "காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ" (குலோத். உலா)

நீரிலே காண்கின்ற நினைது நாழிகை வட்டிலிற் சென்ற நாழிகை இத்துணையென்று சொல்லுகையினாலே,

59. [மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை :]

மத்திகை வளைஇய உடை - புரவியை அடிக்கின்ற சம்மட்டி வளைந்து கிடக்கின்ற உடை,

மறிந்து வீங்கு செறிவு உடை - அச்சம்மட்டி மறையும்படி வடிம்பு தாழ்ந்து பெருக்கும் செறிதலை உடைய [1]புடைவையுடையினையும்,

60. மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து - சட்டையிட்ட அச்சம் வரும் தோற்றரவினையும்,

61. வலி புணர் யாக்கை - இயல்பான வலிகூடின மெய்யினையும் உடைய,

வன்கண் யவனர் - தறுகண்மையினை உடைய சோனகர்,

62. புலி தொடர் விட்ட புனை மாண் நல் இல் - புலிச்சங்கிலி விடப்பட்ட கைசெய்த மாட்சிமைப்பட்ட நன்றாகிய இல்லிலே,

63 – 4. திரு மணி விளக்கம் காட்டி திண் ஞாண் எழினி வாங்கிய இருஅறை பள்ளியுள் - அழகினை உடைய மாணிக்கமாகிய விளக்கை எரிய வைத்துத் திண்ணிய கயிற்றில் திரையை வளைத்த புறவறைக்குள்ளறையிற் படுக்கைக்கண்ணே சென்று,

65 – 6. [உடம்பி னுரைக்கு முரையா நாவிற், படம்புகு மிலேச்ச ருழைய ராக:]உரையா நாவின் உடம்பின் உரைக்கும் படம் புகும் மிலேச்சர் உழையர் ஆக – வார்த்தை சொல்லாத நாவினை உடைய கையாலும் முகத்தாலும் வார்த்தைசொல்லும் சட்டையிடும் [2]சரவாசிகள் பள்ளி கொள்ளும் இடத்தைச் சூழ்ந்து திரிய,

உரையா நாவென்றார், ஊமைகளென்றற்கு.

67. மண்டு அமர் நசையொடு கண்படை பெறுஅது - பகைவர் மனம் அறியாமல் மிக்குச் செல்கின்ற போரை நச்சுதலாலே கண்ணுறக்கம் பெறாமல்,

68 - 9. எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண் கூர்ந்து பிடி கணம் மறந்த வேழம் உள்ளியும் (72) - ஓச்சி வெட்டுகின்ற வாள் அழுந்துகையினாலே புண்மிக்குப் பிடித்திரளை மறந்த வேழத்தை உள்ளியும்,

69 - 70. [வேழத்துப், பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமிய:] வேழத்து பருஉ கை பாம்பு பதைப்பன்ன துமிய - யானையினுடைய

---

[1] ஆணுடையையும் புடைவையென்பது பண்டைக்கால வழக்கு; "வெண்புடைவை மெய்சூழ்ந்து......சென்றடைந்தார்" (பெரிய. திருநா. 61); இவ்வழக்கு செட்டிநாட்டில் இக்காலத்து உள்ளது.

[2](பி - ம்.) 'அசாரவாசிகள்', சரவாசிகள் - சரித்துக்கொண்டே வசிப்போர்.

பரிய கைகள் பாம்பினது பதைக்கின்ற தன்மையை ஒத்த பதைப்பினை உடையவாக அற்று விழும்படி,

71 - 2. தேம் பாய் கண்ணி நல் வலம் திருத்தி சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் - தேன்பரக்கும் [1]வஞ்சிமாலைக்கு நன்றாகிய வெற்றியை உண்டாக்கிச் [2]செஞ்சோற்றுக் கடன் இறுத்துப் பட்ட வீரரை நினைத்தும்,

72 - 4. தோல் துமிபு வை நுனை பகழி மூழ்கலின் செவி சாய்த்து உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும் - பக்கரைகளை அறுத்துக் கூரிய முனையினை உடைய அம்புகள் வந்து அழுந்துகையினாலே செவிசாய்த்துப் புல்லுண்ணாதே வருந்தும் குதிரைகளை நினைத்தும்,

75 - 6. [ஒருகை பள்ளி யொற்றி யொருகை, முடியொடு கடகஞ் சேர்த்தி:] ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு கை கடகம் முடியொடு சேர்த்தி-ஒரு கையைப் படுக்கையின்மேலே வைத்து ஒரு கையிற் கடகத்தை முடியோடே சேர வைத்து,

என்றது கையிலே தலையை வைத்தென்றவாறு.

நெடிது நினைந்து - இப்படை நொந்தவளவுக்கு நாளை எவ்வாறு பொருமென்று நெடிதாக நினைந்து,

77. பகைவர் சுட்டிய படை கொள் நோன்[3] விரல்-[4] பகைவரைக் கருதி வைத்த வாளைப் பிடித்த வலியினை உடைய கையாலே வெட்டி வென்று (89) என்க.

---

[1]முல்லை. 78 - ஆம் அடி உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

[2]"புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா, டிரந்து கோட் டக்க துடைத்து" (குறள், 780); "குஞ்சரத் தலையடுத்துக் கூந்தன் மாக் காலணையாச், செஞ்சோற்றுக் கடலீங்கிச் சினவுவாள் பிடித் துடுத்த, பஞ்சிமேற் கிடந்துடைஞாண் பதைத்திலங்கக் கிடந் தாரை" (சீவக. 2240); "ஒருத்தரின் முன்னஞ் சாத லுண்டவர்க் குரிய தம்மா" (கம்ப. கும்ப. 156); "வல்விற், கைம்முனி வனுஞ் செஞ்சோற்றுக் கடன் கழித்திடுதல் வேண்டும்.........என்றான்", "செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனுகிற் றிண்டோள்கள் வளர்த் ததனாற் செயல்வே றுண்டோ" (வி. பா. நிரைமீட்சி, 90, 17 - ஆம் போர். 20)

[3]விரல் - கை; "மெல்விரல் - மெல்லிய விரலையுடைய கை...... விரல் : ஆகுபெயர்" (கலித். 54 : 9, ந.); "கணவனை நோக்கி யிணைவிரல் கூப்பி" (பெருங். 4. 7 : 36)

[4] "தெவ்வர்க்கோக்கிய வேல் - பகைவரைக் கொல்லுதற்கு அறுதியிட்டு வைத்த வேல்" (பட்டினப். 299 - 300, ந.) என்பது இங்கே அறியற்பாலது.

78. நகை தாழ் கண்ணி நல் வலம் திருத்தி - தனக்கு எக்காலமும் விளக்கம் தங்கும் [1]வஞ்சிக்கு நன்றாகிய வெற்றியை நிலைபெறுத்தி,

79. அரசு இருந்து பனிக்கும் பாசறை - பகையரசிருந்து நடுங்குதற்குக் காரணமான பாசறை,

பனிக்கும் பாசறை, "நோய்தீரு மருந்து" (கலித். 60 : 18) போல் நின்றது.

முரசு முழங்கு பாசறை - வெற்றிக் களிப்புத் தோன்ற முரசு முழங்கும் பாசறை,

80 - 84. [இன்றுயில் வதியுநற் காணா டயருழந்து, நெஞ் சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு, நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியும், மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும், ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து:]

வதியுநன் இன் துயில் காணாள் (80) - தன்னிடத்தே தங்குகின்றவனை இனிய துயில் கொள்ளுதலைக் காணாளாய்,

நெஞ்சு ஆற்றுப்படுத்த புலம்பொடு (81) - அவன் தன்னெஞ்சம் தான் போகின்ற வழியிற் செலுத்துதலால் தனக்குண்டான தனிமையாலே,

இது, "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்" (தொல். அகத். சூ. 43) என்பதாம்.

நிறை தபு புலம்பு (81) - தனது நிறை கெடுத்த தனிமை,

நீடு நினைந்து (82) - இங்ஙனம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நிகழாதென்று நினைத்து,

ஓடு வளை திருத்தியும் (82) - கழலுகின்ற வளையைக் கழலாமற் செறித்தும்,

மையல் கொண்டும் (83) - மயக்கம் கொண்டும்,

ஒய்யென உயிர்த்தும் (83) - விரைய நெட்டுயிர்ப்புக் கொண்டும்,

---

[1]வஞ்சி - பகைமேற் செல்வோர்க்குரிய அடையாள மாலை; மேற் சென்று பொருது பகைவரை அவர்க்கு உரிய இடத்தே வெல்ல நினைந்தா னென்பது இதன் கருத்து. பகைவர்களுக்குரிய இடத்தில் அவர்களை வெல்லுதல் அருமையாதலின் அவ்வெற்றி சிறந்தது; "சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா, னூக்க மழிந்து விடும்", "சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த, ருறைநிலத்தோ டொட்ட லரிது" (குறள், 498 - 9), "ஈண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர், மாணிழை மகளிர் நாணிலர் கழியத், தந்தை தம்மூ ராங்கட், டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே" (புறநா. 78 : 9 - 12) என்பவை இக் கருத்தை வலியுறுத்தும்.

ஏவு உறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து (84) - அம்பு தைத்த [1]மயில்போல நடுங்கி அணிகலங்கள் நெகிழ்ந்து கண் புலம்பு முத்துறைப்ப (23) எனக் கூட்டுக.

துயர் உழந்து (80) தேற்றியும் (82) - அதனைக் கண்டு தானும் வருத்தமுற்று இவள் ஆற்றியிராளென்று துணிந்தும்,

85. பாவை விளக்கில் பரூஉ சுடர் அழல - பொற்பாவை ஏந்தி நின்ற[2] தகளியிலே பரிய விளக்கு நின்று எரிய.

விளக்கு : ஆகுபெயர்.

86. இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து - தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும் மணியாலும் சிறப்புப் பெற்று உயர்ந்த [3]ஏழு நிலையினையுடைய மாடத்திடத்து,

87. முடங்கு இறை சொரிதரும் மா திரள் அருவி - மூட்டுவாய் (பி - ம். கூடுவாய்)களினின்றும் சொரிதலைச் செய்யும் பெருமையை உடைய திரண்ட அருவிகளினுடைய,

88. இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள் - இனிய பலவாகிய முழங்குகின்ற ஓசைக்கண்ணே தலைவன் தான் கூறிய பருவம் பொய்யாமல் வருவனென்னும் கருத்தினளாகலின் அவன் வரவினையே கருதிக் கிடந்தோளுடைய,

89. அஞ்செவி நிறைய ஆலின - அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன;

89 - 91. [வென்றுபிறர், வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு, விசயம்:]

வென்று - வெட்டி வென்று,

பிறர் வேண்டு புலம் கவர்ந்த விசயம் - பகையரசர் எக்காலமும் விரும்பும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியாலே,

ஈண்டு பெரு தானையொடு - திரளுகின்ற பெரிய படையோடே,

அரசன் வினைமுடித்த காலத்தே விரைந்து போந்தானாகலின், அதுகேட்டு வருகின்ற படையென்பது தோன்ற, ஈண்டு பெருந் தானை யென்றார்.

---

[1]மயில் முல்லைக்கும் உரியது; "முல்லைக்குப்.........புள் கானங் கோழியும் மயிலும் சிவலும்" (இறை. சூ. 1, உரை); "இயலு மன்னமுந் தோகையு மெதிரெதிர் பயில, வயலு முல்லையு மியைவன பலவுள மருங்கு" (பெரிய. திருக்குறிப்புத். 45)

[2]தகளி – அகல்; "வையந் தகளியா" (திவ். முதற்றிரு. 1); இப் பெயர் தாளி எனவும் வழங்கும்.

[3] "ஏழுயர் மாட மூதூர்" (வி. பா. நிரைமீட்சி. 118)

91. வெல் கொடி உயரி - எக்காலமும் [1] வென்று எடுக்கின்ற கொடியை எடுத்து,

91 - 2. வலன் ஏர்பு வயிரும் வளையும் ஆர்ப்ப - வெற்றி தோன்றிக் கொம்பும் சங்கும் முழங்க,

92 - 3. அயிர செறி இலை காயா அஞ்சனம் மலர - நுண்மணலிடத்தனவாகிய நெருங்கின இலையினை உடைய காயா அஞ்சனம் போல அவிழ,

94. முறி இணர் கொன்றை நல் பொன் கால - தளிரினையும் கொத்தினையும் உடைய கொன்றை நன்றாகிய பொன்னைச் சொரிய,

95. கோடல் குவி முகை அங்கை அவிழ - கோடலினது குவிந்த முகைகள் அங்கைபோல விரிய,

96. [2] தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப - திரட்சிநிறைந்த தோன்றி உதிரம்போலப் பூப்ப,

97. கானம் நந்திய செ நிலம் பெரு வழி - காடு தழைத்த சிவந்த நிலத்திற் பெருவழியிலே,

98 - 100. [வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலை யொடு மடமா னுகள, எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின் :]

வானம் வாய்த்த வரகு - மழை வேண்டப்பெய்த வரகு,

எதிர் செல் வெள் மழை பொழியும் திங்களில் வாங்கு கதிர் வரகின் - எதிர்காலத்துக்குப் பெய்யச் செல்கின்ற வெள்ளிய மழை சிறு துவலையைப் பொழியும் முன்பனி தொடங்கும் திங்களிலே வளைகின்ற கதிரை உடைய வரகிடத்தே,

திரி மருப்பு இரலையொடு மடம் மான் உகள - முறுக்குண்ட கொம்பினை உடைய [3] புல்வாய்க்கலையோடே மடப்பத்தை உடைய மான் துள்ள,

மழையால் தண்ணீரும் புல்லும் நிறையப்பெற்றுப் புணர்ந்து திரியும் என்ற கருப்பொருளால், அவற்றைக் கண்ட அரசனுக்கு வேட்கை மிகுதி கூறிற்று.

மலரக் (93) கால (94) அவிழப் (95) பூப்ப (96) உகளக் (99) கானம் நந்திய பெருவழி (97) என்க.

இவையெல்லாம் வேட்கை விளைதற்குக் காரணமாயின.

101. முதிர் காய் [4] வள்ளி அம் காடு பிறக்கு ஒழிய - தன் பருவம் வந்தால் முதிரும் காயை உடைய வள்ளியங்காடு பின்னாக,

---

[1] முருகு. 67 -ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] தோடு - தொகுதி; "தோடுகொள் முரசம் - தொகுதி கொண்ட முரசங்கள்" (புறநா. 238 : 8, உரை)

[3] "இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய" (தொல். மரபு. சூ. 44); "புல்வா யிரலை" (புறநா. 374 : 2)

[4] வள்ளி - ஒருவகைக் கொடி; பெரும்பாண். 370 - 71, ந.

102. துனை புரி துரக்கும் செலவினர் - விரைந்து செல்லும் பரியை அதனுன் அமையாமற் கடிதாகச் செலுத்தும் செலவினை உடையராய் வந்தவருடைய,

என்றது : "வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, இடைச் சுரமருங்கிற் றவிர்த லில்லை, உள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான" (தொல். கற்பியல், சூ. 53) என்பது தோன்றக் கூறிற்று.

103. வினை விளங்கு நெடு தேர் பூண்ட மாவே - தான் எடுத்துக் கொண்ட வினை எக்காலமும் விளங்கும் நெடிதாகிய தேரைப் பூண்ட குதிரை.

தலைவி தன்னிடத்தே வதிகின்றவனை இன்றுயிலைக் காணுளாய் (80) நெஞ்சாற்றுப்படுத்த புலம்பாலே (81) ஓடுவளை திருத்தியும் (82) மையல் கொண்டும் உயிர்த்தும் (83) நடுங்கி நெகிழ்ந்து (84) பூப்போலுண்கண் புலம்புமுத்துறைப்ப (23) அது கண்டு துயருழந்து (80) தேற்றியும் (82) வற்புறுத்திப் பிரிதல் வேண்டு மெனக் கருதிக் காட்டவும் காட்டவும் காணுதவள் (22) பெருமுது பெண்டிர் (11) எவ்வம் களையெனக் கூற (21) அதுகேட்டு நீடு நினைந்து (82) பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலையில் (6) இட்ட சுடர் அழலாநிற்க (85) இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோ ளுடைய (88) அஞ்செவி நிறையப் (89) பரந்த பாடியிலே (28) அர சிருந்து (79) ஒருகை பள்ளியொற்றி ஒரு கை (75) முடியொடு சேர்த்தி (76) வேழத்தை (69) உள்ளியும் (72) மாவைச் சிந்தித்தும் (74) ஒழிந்தோரை உள்ளியும் (72) நினைந்து (76) நடுங்குதற்குக் காரணமான பாசறையிற் (79) பெரும்படை நாப்பண் வேரூர் (43) அகம் நேர்பு கண்டங்கோலி (44) யவனர் (61) புலித்தொடர் விட்ட நல்லில்லிலே (62) பொழுதளந்தறியும் (55) காண்கையர் (56) கன்னல் இனைத்தென்று இசைக்கையினுலே (58) மங்கையர் (47) திருமணி விளக்கங்காட்டி (63) எழினி வாங்கிய பள்ளியிலே சென்று (64) இளையர் கவளங் கைப்பச் (36) சுரையர் (48) மாட்டப் (49) பெருமூதாளர் ஏமஞ் சூழ (54) மிலேச்சர் உழையராக (66) வெண்மணி நிழத்திய நடுநாளினும் (50) மண்டமர் நசையாற் கண்படை பெருதிருந்து (67) மற்றைநாட் படைகொண்ணேன் விரலாலே (77) வென்று (89) கண்ணி வலந்திருத்திப் (78) பிறர் வேண்டு புலம் கவர்ந்த (90) விசயத்தாலே வெல்கொடி உயரிக் (91) காடு பிறக்கொழியப் (101) பெரு வழியிலே (97) வயிரும் வளையுமார்ப்ப (92) ஈண்டுபெருந் தானையோடே (90) துனைபரி துரக்கும் செலவினை உடையராய் வந்தவருடைய (102) தேர்பூண்ட மா (103) ஆலின (89) என வினை முடிக்க.

"செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" (தொல். கற்பியல், சூ. 44) என்பதனால் வற்புறுத்திப் பிரிதல் வேண்டும் என்று உணர்க.

தொல்காப்பியனார் கருத்திற்கேற்ப நப்பூதனார் செய்யுள் செய்தா ரென்றுணர்க. இவ்வாறன்றி ஏனையோர் கூறும் பொருள்கள் இலக்கணத்தோடு பொருந்தாமை உணர்க.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

1. [1]வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ - தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் [2]கனிவிளவின் காயுகுத்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

2. [3]புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார் - முனையுள்
அடன்முகந்த தானை யவர்வாரா முன்னம்
கடன்முகந்து வந்தன்று கார்.

---

[1] (பி. - ம்.) 'வண்டடை கண்ணி'

[2] "மலர்க்குறிஞ்சி, முதற்கேற்றவடை; 'கனிவிளவின் காய்' போல" (சிலப். 14 : 86 - 97, அடியார்.)

[3] இச் செய்யுள், புறப்பொருள் வெண்பாமாலையில், கார்முல்லை (276) என்னும் துறைக்குக் காட்டிய வெண்பா.

ஆறுவது

* மதுரைக் காஞ்சி

ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியன்ஞண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறும்
இரவுச்செய்யும் வெண்டிங்களும்
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க

---

* வீடு பேறு நிமித்தமாகச் சான்றோர் பல்வேறு நிலையாமையை அறைந்த மதுரைக் காஞ்சி காஞ்சித்திணைக்கு உதாரணமென்பர். தொல். புறத். சூ, 23, ந.

1. நேர்புநிரையாகிய ஆசிரியவுரிச்சீர் வஞ்சியுள் வந்ததற்கும் (தொல். செய். சூ. 14, பேர்.), குறளடிக்கும் (தொல். செய். சூ. 40, ந.) இவ்வடி மேற்கோள்.

1 - 2. வழிமோனைக்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். செய். சூ. 94, பேர்.

3. (பி - ம்.) 'தூங்கியவுயர்'

தேன்தூங்கு முயர்சிமையம்: "பிரசந் தூங்கு மலைகிழ வோற்கே" (குறுந். 392 : 8); "பிரசந் தூங்கு சேட்சிமை, வரை" (அகநா. 242 : 21 - 2)

4. "மாமலை ஞாறிய ஞாலம்" (பரி. "வானுரெழிலி"). "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே" (பு. வெ. 35)

3 – 4. இவ்வடிகள் பதினெட்டெழுத்தான் வந்தனவென்பர்; தொல். செய். சூ. 50, இளம்.

1 - 4. யா. வி. செய். சூ. 2, மேற்.

5. "வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படும்" (மணி. 12 : 91) சிந்தடி என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல், செய். சூ. 38, ந.

7 - 8. பெரும்பாண். 442 - இன் உரையையும் அடிக்குறிப் பையும் பார்க்க.

முரணிரனிறைக்கு இவ்வடிகள் மேற்கோள்; யா. வி. சூ. 95, உரை

மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
ஓங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தான்
உயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாதரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
உலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பின்

---

6 - 10. "மீன்வயி னிற்ப வானம் வாய்ப்ப" (பதிற். 90 : 1)

11. தொடுப்பு : "தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்" (சிலப். 27 : 230)

ஆயிரம் : "வேலி யாயிரம் விளையுட் டாக" (பொருந. 246 - 7)

10 – 11. "வான மின்னுவசிவு பொழிய வானு, திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளைய" (மலைபடு. 97 - 8)

12. (பி - ம்.) 'எதிர்புந்த'

14. (பி - ம்.) 'மேதகப் பொலிந்த'

17. (பி - ம்.) 'தண்டாவிகு'

16 - 7. ஆறெழுத்து இருசீரடி வஞ்சிப்பாவிற்கு இவ்வடிகள் மேற்கோள்; யா. வி. சூ. 95, உரை.

18. (பி - ம்.) 'பூரிய விழுத்தெரு'

21. "நல்லூழி யாவர்க்கும் பிழையாது வருதனின்" (கலித். 99 : 5 - 6); "முத லூழியின்பம், வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்" (தஞ்சை. 286); "வேதமு மெய்ம்மையு மாதியுகம்போலத் தலைசிறப்ப வந்தருளி" (விக்ரம. மெய்க். "பூமாலை"); "ஆதியுகங் கொழுந்து விட்டுத் தழைத்தோங்க" (இரண்டாம் இராசஇராச. மெய்க். "பூமருவிய பொழில்")

22. "ஆயிர வெள்ளம் வாழிய பலவே" (பதிற். 21 : 38)

24. பிணக்கோட்ட களிறு : "வேலாண் முகத்த களிறு" (குறள். 500)

நிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
அஞ்சுவந்த போர்க்களத்தான்
ஆண்டலை யணங்கடுப்பின்
வயவேந்த ரொள்ளுருதி
சினத்தீயிற் பெயர்பு பொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுச்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
ஆடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவன்
அடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
அமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்

---

25. (பி – ம்.) 'பேஎய்'

26. துணங்கை : பெரும்பாண். 235-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

25 - 6. "நிணந்தின் வாய டுணங்கை தூங்க" (முருகு. 56) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

28. (பி - ம்.) 'வந்த'

34. "தோளுங் கொண்டு துடுப்பெனத் துழாவிக் கொள்ளீர்" (தக்க. 748)

34 - 5. "பிடித்தாடி யன்ன பிறழ்பற்பே யாரக், கொடித்தானை மன்னன் கொடுத்தான் - முடித்தலைத், தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக, மூளையஞ் சோற்றை முகந்து" (பு. வெ. 160)

34 - 6. தக்க. 748, உரை, மேற்.

29 - 35. "முடித்தலை யடுப்பாகப், புனற்குருதி யுலைக் கொளீஇத், தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி, னடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறநா. 26 : 8 - 11)

37. "பிறக்கடி யொதுங்காப் பூட்கை" (பதிற். 80 : 8)

38. (பி - ம்.) 'படையோர் முருகயர'

29 - 38. "முடித்தலை யடுப்பிற் பிடர்த்தலைத் தாழித், தொடித் தோட் டுடுப்பிற் றுழைஇய வூன்சோறு, மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்ட" (சிலப். 26 : 242 - 4)

தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா முருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவும்
மாவெடுத்த மலிகுரூஉத்துகள்
அகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னக் கடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவும்
இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்

---

40 - 42. "மறைமுது முதல்வன் பின்னர் மேய, பொறையுயர் பொதியிற் பொருப்பன்" (சிலப். 12 : இறுதிப் பகுதி)

44. யானைமதம் கமழ்தல் : "குதிபாய் கடாம், மதகோடி புல கேழு மணநாற" (தக்க. 3) என்பதன் விசேடக்குறிப்பைப் பார்க்க; "மாவ தத்தினை யிழைத்திடும் பூட்கையின் மதநீர், காவ தத்தினுங் கமழ்தரு கலிங்கநாடு" (கந்த. மார்க்கண்டேயப். 114)

45. (பி - ம்.) 'அயறுபட்டநறுஞ்'; புறநா. 22 : 7

46. பெரும்பாண். 352; புறநா. 38 : 1, 42 : 1.

47. "தொழினவில் யானை" (பதிற். 84 : 4)

44 - 7. கடுஞ்சினத்த யானை : "கடுஞ்சினத்த களிறு" (மதுரைக். 179); "கடுஞ்சினத்த களிற்றெருத்தின்" (யா. வி. சூ. 56, மேற். "தாழிரும்")

48. (பி - ம்.) 'உழக்க'

44 - 8. "செல்சமந் தொலைத்த வினைநவில் யானை, கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி, வண்டுபடு சென்னிய பிடிபுணர்ந் தியல" (பதிற். 82 : 4 - 6)

50. (பி - ம்.) 'வெயிற்கரப்ப'

51. (பி - ம்.) 'வாப்பரிய'

52. (பி - ம்.) 'காற்றெனக்'

51 - 2. "காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்" (மதுரைக் 88)

பொருதவரைச் செருவென்றும்
இலங்கருவிய வரைநீந்திச்
சுரம்போழ்ந்த விகலாற்றல்
உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பல்
மரந்தின்னூஉ வரையுதிர்க்கும்
நரையுருமி னேறனையை
அருங்குழுமிளைக் குண்டுகிடங்கின்
உயர்ந்தோங்கிய நிரைப்புதவின்
நெடுமதி னிரைஞாயில்
அம்புமிழ் முயிலருப்பம்

---

55 - 6. "கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய, ஆலங் கானந் தகன்றலை சிவப்பச், சேரல் செம்பியன் சினங்கெழு திதியன், போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி, நாரறி நறவி னெருமை யூரன், தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி, னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென், றெழுவர் நல்வல மடங்க வொருபகல், முரைசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக், கொன்று" (அகநா. 36 : 13 - 12); "எழுவர் நல்வலங் கடந்தோய்", "புணைகழ லெழுவர் நல்வல மடங்க, வொருதா னாகிப் பொருதுகளத் தடலே" (புறநா. 19 : 17, 76 : 22 - 3)

58. (பி - ம்.) 'மலைநீந்தி'

இலங்கருவிய வரை : "இலங்கு மருவித்தே யிலங்கு மருவித்தே, வானி னிலங்கு மருவித்தே தானுற்ற, சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலித். 41 : 18 - 20)

61. தார்மார்பு : "வண்ண மார்பிற்றார்" (புறநா. 1 : 2); நெடியோன் : "முந்நீர் விழவி னெடியோன்" (புறநா. 9 : 10); "உரைசால் சிறப்பி னெடியோன்" (சிலப். 22 : 60)

60 - 61. நிலந்தந்த பேருதவி நெடியோன் : "நிலந்தரு திருவி னெடியோன் போல" (மதுரைக். 763); "நிலந்தரு திருவிற் பாண்டியன்" (தொல். பாயிரம்)

63. "அருநரை யுருமிற் பொருநரைப் பொருஅச், செருமாண் பஞ்சவ ரேறே" (புறநா. 58 : 7 - 8)

67. "அம்புமிழ்வ வேலுமிழ்வ" (சீவக. 103)

64 -7. "கடிமிளைக் குண்டுகிடங்கி, னெடுமதி னிரைஞாயி, லம்புடை யாரெயில்" (பதிற். 20 : 17-9)

தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பின்
தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனுகுவை
வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்

---

70 - 71. மு. புறநா. 17 : 1-2.

72. மு. மதுரைக். 124; பதிற். 90 : 8.

70 - 72. "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும், தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும், குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும், குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்", "தென்குமரி வடபெருங்கற், குணகுடகட லாவெல்லை, குன்றுமலை காடுநா, டொன்றுபட்டு வழிமொழிய" (புறநா. 6 : 1 - 4, 17 : 1 - 4)

80. கப்பலில் முரசம் முழங்குதல் : "ஆடுகொடி யுச்சியணி கூம்பினுயர் பாய்மூன், றீடுபடச் செய்திளைய ரேத்தவிமிழ் முந்நீர்க், கோடுபறை யார்ப்ப...ஓடியதை யன்றே" (சீவக. 501)

82. (பி - ம்.) 'நாடாரக் கரைசேர நெடுங்கொடிமிசை நன்கிழி தரும்'

89. (பி - ம்.) 'நீர்தெவுநிரை'

தெவ்வு கொள்ளுதலாகிய குறிப்புப்பொருளை உணர்த்து மென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 49, சே; 47, ந; இ - வி. சூ. 290.

பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்
கயனகைய வயனிறைக்கும்
மென்றொடை வன்கிழாஅர்
அதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
இரும்பு ளோப்பு மிசையே யென்றும்
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பின்
இருபெயர்ப் பேராயமொ
டிலங்குமருப்பிற் களிறுகொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியும்
நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே

---

90. (பி – ம்.) *'ஏத்தத்'*

92. (பி – ம்.) *'கயமகைய'*

91 - 3. *ஆம்பி, கிழாஅர் : "ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமும்"* (சிலப். 10 : 110)

89 - 93. *கிழார் பூட்டைப்பொறி யென்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்;* சிலப். 10 : 110, அடியார்.

94. (பி - ம்.) *'அதரிகொள்பவரிசை'*

96. சிறுபாண். 148-*ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.*

98. *"விழவுநின்ற வியன்மறுகில்"* (மதுரைக். 328)

99 - 102. பொருந. 125 - 7-*ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க; "தெருவி னலமருந் தெண்கட் டடாரிப், பொருவில் பொருநரீ செல்விற் - செருவில், அடுந்தடக்கை நோன்ரு ளமர் வெய்யோ னீயும், நெடுந்தடக்கை யானை நிரை"* (பு. வெ. 218)

99 - 103. *பொருநருக்குப் பொற்றாமரைப்பூச் சூட்டல் :* பொருந. 159 - 60-*ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.*

105. *"பலராகிய சான்றீ ரென்பது, பல்சான்றீரெனத் தொக்கது பல்குட்டுவர் என்பதுபோல"* (புறநா. 195, உரை)

கல்காயுங் கடுவேனிலொ
டிருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகன் மீன்பிறழினும்
வெள்ளமாறாது விளையுள் பெருக
நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றும்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக்கானன் முழவுத்தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவல்
நிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொ
டொலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்
காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி

---

106. "மலைவெம்ப", "விறன்மலை வெம்ப", "இலங்குமலை வெம்பிய", "கல்காய்ந்த காட்டகம்" (கலித். 13 : 5, 20 : 5, 23 : 3, 150 : 11)

114. நிலவு மணலுக்கு உவமை : பொருந. 213-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

115. (பி - ம்.) 'குளிர்ப் பொதும்பு'

116. திமில் வேட்டுவர் : "வன்கைத் திமிலர்" (மதுரைக். 319); "பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே" (குறுந். 123 : 5)

124. மு. மதுரைக். 72.

126. "இழிபறியாப் பெருந்தண்பணை, குரூஉக்கொடிய வெரி மேய, நாடெனும்பேர் காடாக" (மதுரைக். 154 - 6); "முனையெரி பரப்பிய", "ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப், போர்சுடு கமழ் புகை மாதிர மறைப்ப" (பதிற். 15 : 2, 71 : 9 – 10); "வாடுக விறைவ நின் கண்ணி யொன்னார், நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே",

ஆலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்

"பகைவ, ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக், கொள்ளை மேவலை", "பெருந்தண்பணை பாழாக, ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை" (புறநா. 6: 21 - 2, 7 ; 7 - 9, 19 : 16 - 7); "அயிலன்ன கண்புதைத் தஞ்சியலறி, மயிலன்னா ர் மன்றம் படரக் - குயிலகவ, வாடிரிய வண் டிமிருஞ் செம்ம லடையார்நாட், டோடெரியுள் வைகின வூர்" (பு. வெ. 49)

129. முரசுகொள்ளல் : "முரசுகொண், டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு" (பதிற். 31 : 13 - 4); "முறைசொடு வெண் குடை யகப்படுத் துரைசெலக், கொன்றுகளம் வேட்ட ஞான்றை" (அகநா. 36 : 21 - 2); "பிணியுறு முரசங் கொண்ட காலை", "அருஞ் சமஞ் சிதையத் தாக்கி முரசமொ, டொருங்ககப் படேஎ னாயின்", "விசிபிணி முரசமொடு மண்பல தந்த, திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்" (புறநா. 25 : 7, 72 : 8 - 9, 179 : 4 - 5)

களம் வேட்டல் : முருகு. 99 - 100-ஆம் அடிகளின் அடிக் குறிப்பைப் பார்க்க.

127 - 9. மதுரைக். 55 - 6-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

128 - 30. "அரைசுபட வமருழக்கி, உரைசெல முரசுவெளவி, முடித்தலை யடுப்பாகப், புனற்குருதி யுலைக்கொளீஇத், தொடித் தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின், அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறநா. 26 : 6 - 11)

131 - 2. "மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட, நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப" (பெரும்பாண். 423 -4); "இகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க், கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு ...வீயாது சுரக்குமவ னண்மகி ழிருக்கையும்" (மலைபடு. 73 - 6); "செற்றோரை வழிதபுத்தன, னட்டோரை யுயர்புகூறினன்" (புறநா. 239 : 4 -5); "நட்டாரை யாக்கிப் பகைதணித்து" (பழமொழி, 398; சிறுபஞ்ச. 18); பெரும்பாண். 419 - அடிக்குறிப்பையும், 424 - அடிக் குறிப்பையும் பார்க்க.

சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்
றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோழூஉன்குறைக் கொழுவல்சிப்
புலவுவிற் பொலிகூவை
ஒன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
அரியவெல்லா மெளிதினிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி

---

135. "முதிர்வா ரிப்பி முத்தம்" (புறநா. 53 : 1)

137 - 8. பாக்கமென்பதற்கு அரசனிருப்பென்று பொருள் கூறி இவ்வடிகளை மேற்கோளாகக் காட்டினர்; பதிற். 13 : 12, உரை.

135 - 8. கொற்கை முத்தம் : "முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை" (நற். 23 : 6); "பொறையன் செழியன் பூந்தார் வளவன், கொல்லி கொற்கை நல்லிசைக் குடந்தை, பாவை முத்த மாயிதழ்க் குவளை" (யா. வி. சூ. 95, மேற்.); சிறுபாண். 57-62-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

140. (பி - ம்.) 'அஞ்சுவரக்கடக்கும்'

141. "புகழ்படப் பண்ணிய கோழூன் சோறும்" (மதுரைக். 533); "ஊன்சோற் றமலை", "பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை" (புறநா. 33 : 14, 177 : 14); "ஊன்களோ டவைபதஞ் செய்ய" (கந்த. மகேந்திர. நகர்புகு. 29)

143. ஒன்றுமொழி : "ஒன்றுமொழிக் கோசர்" (குறுந். 73 : 4)

146. ஓம்பாது வீசி : "ஓம்பா வள்ளல்" (மலைபடு. 400); "ஓம்பா வீகையின் வண்மகிழ் சிறந்து" (பதிற். 42 : 13); "ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக், கடந்தடு தானைச் சேர லாதனை", "ஓம்பா தீயு மாற்ற லெங்கோ" (புறநா. 8 : 4 - 5, 22 : 33); "ஓம்பா வீகையும்" (பு. வெ. 189)

145 - 6. "கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ, மறங்கலங்கத் தலைச்சென்று, வாளுழந்ததன் றாள்வாழ்த்தி, நாளீண்டிய நல்லக வர்க்குத் தேரோடு மாசிதறி" (மதுரைக். 220 - 24); "நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து, நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ"

நனிபுகன் றுறைது மென்ற தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
அகநாடு புக்கவ ரருப்பம் வெளவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்
உறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலைதொலைச்சி

யருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு, பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி", "பெரிய வாயினு மமர்கடந்து பெற்ற, வரிய வென்று தோம்பாது வீசி", "வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்து" (பதிற். 2-ஆம் பத்தின் பதிகம், 44 : 3 - 4, 53 : 1); "அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண், வெங்கட்கு வீசும் விலையாகும் - செங்கட், செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி, வரிச்சிலையாற் றந்த வளம்" (பு. வெ. 16); சிறுபாண். 247 - 8-ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.

146. "*அம்புமி முயிலருப்பம்............கொண்டு*", "*நாடழிய வெயில்வெளவி*", "*நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி*" (மதுரைக். 67 - 9, 187, 693)

அகமென்பதற்குப் பொருள் மருதமென்பதற்கும் (சீவக. 1613, ந.), *மதில் பெரும்பான்மையும் மருதநிலத்திடத்ததென்பதற்கும்* (தொல். புறத். சூ. 9, ந.) இவ்வடி மேற்கோள்.

150. மு. "*யாண்டுதலைப் பெயர வேண்டுபுலத் திறுத்து*" (பதிற். 15 : 1)

152 – 3. *பகைவர்களுடைய காவல்மரங்களை அழித்தல்:* "*பலர் மொசிந்தோம்பிய திரள்பூங் கடம்பின், வடியுடை முழுமுத றுமிய,*" "*வயவர் வீழ வாளரின் மயக்கி, இடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்பக், கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே*", "*பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாரை முழுமுத றுமியப் பண்ணி*" (பதிற். 11 : 12 - 3, 12 : 1 – 3, 5-ஆம் பத்தின் பதிகம்); "*வடிநவி னவியம் பாய்தலி னூர்தொறும், கடிமரந் துளங்கிய காவும்*", "*நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து, வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்; கடிமரந் தடியு மோசை*", "*கடிமரந் தடிதல்*" (புறநா. 23 : 8 - 9, 36 : 7 - 9, 57 : 10); "*பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு, வேம்பு முத றடிந்த.........பொறைய*" (சிலப். 27 : 124 - 6)

153. (பி – ம்.) '*கடிகாவு*'

இகரவீற்று உரிச்சொல்லின்முன் வல்லினம் இயல்பாக வந்த தற்கு, '*கடிகா*' *என்பது மேற்கோள்;* தொல். தொகை. சூ. 16. ந.

இழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
ஆசேந்தவழி மாசேப்ப
ஊரிருந்தவழி பாழாக
இலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
அவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
அணங்குவழங்கு மகலாங்கண்
நிலத்தாற்றுங் குழூஉப்புதவின்
அரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குரலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்

---

154 – 5. மதுரைக். 126-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

159 - 60. மகளிர் துணங்கையாடல் : "துணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி" (மதுரைக். 329); "விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல" (நற். 50 : 3); "மகளிர் தழீஇய துணங்கை யானும்" "வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர், துணங்கை நாளும் வந்தன" (குறுந். 31 : 2, 364 : 6); "கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்", "முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப்பிணை யாக" (பதிற். 13 : 5, 52 : 14); "தளரிய லவரொடு, துணங்கையாய்", "தமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே", "கிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ள" (கலித். 66 : 17 - 8, 70 : 14, 73 : 16); "முழவிமிழ் துணங்கை தூங்கிய விழவின்" (அகநா. 336 : 16)

துணங்கையும் குரவையும், "துணங்கையர் குரவையர்" (சிலப். 5 : 70)

162 – 3. கவையடிப்பேய்: சிறுபாண். 197-ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

170. "துய்த்தலைக் கூகை, கவலை கவற்றுங் குராலம் பறந்தலை" (பதிற். 44 : 8 - 9)

களிறுமாய் செருந்தியொடு கண்பமன் றூர்தர
நல்லேர் நடந்த நகைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள
வாழா மையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎம்
எழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத்தா ளுயர்மருப்பிற்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றுனையொடு
முருகுறழப் பகைத்தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்

---

172. (பி - ம்.) 'சண்பமன்று'
''களிறுமாய்க்குங் கதிர்க்கழனி'' (மதுரைக். 247)
கண்பு : பெரும்பாண். 220; மலைபடு. 454; பெருங். 2. 19 : 187.

174. பன்மயிர்ப் பிணவு : ''பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது'' (பெரும்பாண். 342)

175 - 6. ''செய்யார் தேஎங் தெருமரல் கலிப்ப'' (பொருந. 134)

179. கடுஞ்சினத்த களிறு : ''கடுஞ்சினத்த கொல்களிறு'' (புறநா. 55 : 7); மதுரைக். 44 - 7-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

180. தானைக்குக்கடல் : முல்லை. 28-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

180- 81, ''செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக், கடற் படை குளிப்ப மண்டி'' (புறநா. 6 : 11 - 2)

183. ''விடுங்கணை யொப்பிற் கதழுறை சிதறூஉ'' (பரி. 22 : 5); ''காலமாரியி னம்புதைப்பினும்'' (புறநா. 287 : 3); ''பாய மாரிபோற் பகழி சிந்தினர்'', ''மால்வரைத் தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக், காலிரைத் தெழுந்து பாறக் கல்லெனப் புடைத்த தேபோல், மேனிரைத் தெழுந்த வேடர் வெந்நுனை யப்பு மாரி, கோனிரைத் துமிழும் வில்லாற் கோமகன் விலக்கினானே'' (சீவக. 421, 451); ''நாற்றிசை மருங்கினுங் கார்த்துளி கடுப்பக், கடுங்கணை சிதறி'' (பெருங். 3. 27 : 98 – 9)

185, முருகு. 120 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

அரசு கீழ்த்திசை நூல் பொருள் எண் 6611 தேதி

பீடழியக் கடந்தட்டவர்
நாடழிய வெயில்வெளவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
அரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்

---

187. (பி – ம்.) 'நாடுகெட வெயில்'
மதுரைக். 149 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க; ''அருங்கடி வரைப்பி னூர்கவி னழிய'' (பட்டினப். 269)

189. ''பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்ப'' (மதுரைக். 229); ''எய்யாத் தெவ்வ ரேவல் கேட்ப'' (பொருந. 133)

192. ''முன்றிணை முதல்வர் போல நின்று'' (பதிற். 85 : 5); ''தொல்லோர் சென்ற நெறிய போலவும்'' (புறநா. 58 : 25)

193. பிறை தொழப்படுதல் : ''தொழுதுகாண் பிறையிற் றோன்றி'', ''பலர் தொழச், செவ்வாய் வானத் தையெனத் தோன்றி, இன்னம் பிறந்தன்று பிறையே'' (குறுந். 178 : 5, 307 : 1 - 3); ''ஒள்ளிழை மகளி ருயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை'' (அகநா. 239 : 9 - 10); ''அந்தி யாரண மந்திரத் தன்புட னிவனை, வந்தி யாதவர் மண்ணினும் வானினு மில்லை'' (வி. பா. குருகுலச். 6)

194. சிலப். 25: 92.

193-4. ''வளர்பிறைபோல வழிவழிப் பெருகி'' (குறுந். 289; 1) ''சுடர்ப்பிறை போலப், பெருக்கம் வேண்டி'' (பெருங். 2. 6: 35-6)

195 - 6. ''நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னில்லாது, நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ'' (கலித். 17: 7 – 8); ''குறைமதிக் கதிரென மாய்கவென் றவமென்றான்'' (கந்த. மார்க்கண்டேயம். 59)
இவ்வடிகள் சிலப். 10 : 1 - 3, அடியார். மேற்.

193 - 6. ''ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போ, ஞளிஞளின் ......நீர்நிலம் பரப்பி........வெண்மதி நிறையுவாப் போல, நாள்குறை படுதல் காணுதல் யாரே'' (பரி: 11 : 31 - 8); ''பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்,

உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
ஈத லுள்ளமொ டிசைவேட் குவையே
அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன் றுரைக்குவ லடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளக்கு நல்லிசை

வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு'' (நாலடி. 125); ''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு'' (குறள். 782)

197. ''அரும்பெற லமிழ்த மார்பத மாகப், பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை'' (குறுந். 83 : 1 – 2)

199. மலர்தலையுலகம்: மதுரைக். 237.

கடலேணி யுலகம் : ''நளியிரு முந்நீ ரேணி யாக,………வானஞ் சூடிய, மண்டிணி கிடக்கை'' (புறநா. 35 : 1 - 3)

201. (பி - ம்.) 'பகைவரஞ்சி'

''வலியரென வழிமொழியலன்'' (புறநா. 239: 6); ''உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர், பற்றலரைக் கண்டாற் பணிவரோ'' (மூதுரை, 6)

202. புலமென்பதற்கு நிலமென்று பொருள் கூறி இவ்வடியை மேற்கோள் காட்டினர்; சீவக. 28, ந.

204. (பி - ம்.) 'பழிநமக்கொழுக'

203 - 4. ''வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ, சங்கம்போல் வான்மையார் சால்பு'' (பு. வெ. 185)

205. ஈதலால் இசை உறுதல் : குறள், 231 - 2.

203 - 5. ''புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி, னுலகுடன் பெறினுங் கொள்ளலர்'' (புறநா. 182: 5 - 6)

208. ஒ. பெரும்பாண் 38.

209. சேண்விளங்கு நல்லிசை: ''சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ'' (பதிற். 88: 36)

தவாப்பெருக்கத் தருயாணர்
அழித்தானுக் கொழுந்திற்றி
இழித்தானுப் பலசொன்றி
உண்டானுக் கூர்நறவிற்
றின்றருஉ வினவைகல்
நிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்பக் களிறுபல தரீஇக்
கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் றுள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்

---

210. அருயாணர் : "அருஅ யாண ரகன்றலைப் பேரூர்" (பொருந. 1)

215. "நிலந்தினக் கிடந்த நிதியம்" (மலைபடு. 575); "நிலம் பொறுக்க லாத செம்பொ னிணிதி" (சீவக. 402); "நிலம் பொறுக்க லாச் செம்பொனு னிறைகுடி" (பிரமோத். உருத்திரா. 50)

216. "பயனற வறியா யவனரிருக்கையும்" (சிலப் 5: 10)

217 - 8. "யாழ்.........இன்குரல் விறலியர்" (மலைபடு. 534-6); "இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்தவள் பாடி னுளோ, நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்" (சீவக. 658); "அங்கையு மிடறுங் கூட்டி நரம்பளைங் தமுத மூறும், மங்கையர் பாடல்" (கம்ப. வரைக். 39); "யார்க்கும், நசைதரு நரம்பு கண்ட மொற்றுமை நயங்கொண் டார்ப்ப" (திருவிளை. விறகு, 28)

218. விறலியர் பேறு : பொருந. 159 - 62-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

219. பாணருக்கு யானையைத் தருதல் : பொருந. 126 – 7, சிறுபாண். 142 – 3-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

222. "அசைவி னோன்று ணசைவள னேத்தி" (புறநா. 148 : 2)

224. பரிசிலர்க்குத் தேர் தருதல்: சிறுபாண். 142-3-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க; "தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை, ஓம்பா வள்ளல்" (மலைபடு. 399 - 400); "நயந்தோர்க்குத், தேரீயும் வண்கை யவன்" (கலித். 42 : 20 - 21); "தேர்வீ சிருக்கை யார நோக்கி", "தேர்வீ சிருக்கை நெடியோன்" (புறநா. 69 : 18; 114 : 6)

தேரோடு மாசிதறிச்
சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்

---

223 - 4. *இரப்போர்க்கு மா சிதறல்:* "*இரப்போர்க், கீத றண்டா மாசித றிருக்கை*" (பதிற். 76 : 7 - 8)

தேரோடு குதிரைகளைக் கொடுத்தல் : பொருந. 163 - 5; பெரும்பாண். 487 - 90.

220 – 24. மதுரைக். 145 - 6-ஆம் *அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.*

228. பெரும்பாண். 380 - 82, *அடிக்குறிப்பைப் பார்க்க.*

229. மதுரைக். 189.

231. "*பருந்துயிர்த், திடைமதிற் சேக்கும் புரிசை*" (புறநா. 343: 15 - 6)

பார்வல் : "*பார்வற் பாசறை*" (பதிற். 84 : 5); "*பார்வ லிருக்கை*" (புறநா. 3 : 19)

232. "*தழங்குகுரன் முரசங் காலை யியம்ப*" (ஐங். 448 : 1); "*நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பில்*" (புறநா. 161 : 29); "*காலை முரசக் கனைகுர லோதையும்*", "*காலை முரசங் கடைமுகத் தெழுதலும்*" (சிலப். 13 : 140, 14: 14, 17 : 6, 26 : 53); "*காலை முரச மதிலியம்ப*", "*கடிமுரசங் காலைச் செய*" (பு. வெ. 117, 202)

233. *வேண்டுபுலத்திறுத்தல் :* "*யாண்டுதலைப் பெயர வேண்டு புலத் திறுத்து*" (பதிற். 15 : 1)

234. *பல்வேல் மன்னர் :* "*பல்வேற் கட்டி*" (குறுந். 11 : 6): "*பல்வேற் பூழியர் கோவே*", "*பல்வே லிரும்பொறை*" (பதிற். 84 : 5 - 6, 89 : 9)

கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகடன் முற்றி
இரவு மெல்லையும் விளிவிட னறியா
தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்பெயல் சிறத்தலிற் றுங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
ஒளிறிலஞ்சி யடைநிவந்த

---

235. ''கரைகொன் றிரங்குங் கடல்'' (சீவக. 1063); ''கரை கொன் றிரங்கு கடல்புகைய'' (கூர்ம. இராவணன்வதை. 5)

236. மணலைப் பன்மை சுட்டற்கு உவமித்தல்: ''வடுவா ழெக்கர், மணலினும் பலரே'' (மலைபடு, 556); (புறநா. 9 : 11, 43 : 23, 55 : 21, 136 : 26, 198 : 19, 363 : 4); ''எத்துணை யாற்று ளிடுமணல்........ அத்துணையும்பிற ரஞ்சொல்வி னுர்மனம், புக்கனம்'' (வளையாபதி); ''தொல்லைநம் பிறவி யெண்ணிற் றெருடுகடன் மண லு மாற்ரு'', ''தரு மண லலகை யாற்ரு'' (சீவக. 270, 3048); ''பரவைவெண் மண லினும்பல புரவியின் பந்தி'' (வி. பா. இருட்டினன். 65)

237. மலர்தலையுலகம் : மதுரைக். 199.

235 - 7. திருவாய்மொழி 4. 1 : 4.

244. (பி - ம்.) 'சிதரற் பெயல் கான்றழி தலிற்'

247. ''களிறுமாய் கழனி'', ''களிறுமாய் கதிர்ச்செநெற் கழனி'' (சீவக. 54, 1617); ''களிறு மாய்க்குஞ் செந்நெ லங்குலை'' (நைடதம், சுயம்வர. 138); ''யானை மறையக் கதிர்த்தலைச் சாலி நீடி'' (பிரபு. மாயையுற். 11); ''களிறு மாய்ப்ப கதழ்ந்தெழு பூம்பயிர்'' (தணிகை. நாட்டு. 114)

''களிறுமாய் செருந்தியொடு'' (மதுரைக். 172)

மாய்தல் – மறைதலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; சிலப். 9 : 2, அடியார்; சீவக. 453, ந.

முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீலம்
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்
கரும்பி னெந்திரங் கட்பி னோதை
அள்ளற் றங்கிய பகடுறு விழுமம்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
பொலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிபறை யின்குரற்

---

249. சிறுபாண். 183 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க

248 - 9. "அடையிறந் தவிழ்ந்த வள்ளிதழ்த் தாமரை" (பரி. 13 : 50)

249 - 53. முருகு. 73 - 6.

255 - 6. "இனமீன் முகந்து, துணைபுண ருவகையர் பரத மாக்கள்......கொள்ளை சாற்றி" (அகநா. 30 : 2 - 10)

255 - 7. நூழில், கொன்று குவித்தலென்னும் பொருளில் வருமென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். புறத். சூ. 17, ந.

259 - 60. "அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப, நலனெருது முயலு மளறுபோகு விழுமத்துச், சாகாட் டாளர் கம்பலை" (பதிற். 27 : 12 - 4), "ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கு, முரனுடை நோன் பகட் டன்ன வெங்கோன்", "அச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய, பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய, வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும், பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ" (புறநா. 60 : 8 - 9, 90 : 6 - 9), "மடுத்தவா யெல்லாம் பகடன்னான்" (குறள், 624), "நிரம்பாத நீரியாற் றிடுமணலு ளாழ்ந்து, பெரும்பார வாடவர் போல்...புல்லுண்ணா பொன்றும்" (சீவக. 2784), "குண்டுதுறை யிடுமணற் கோடுற வழுந்திய, பண்டி துறை யேற்றும் பகட்டிணை போல" (பெருங். 1. 53 : 53 – 4) என்பவற்றால், எருதுகள் விழுமமுறுதலும், அதனை ஏற்றுக்கொண்டே வருந்தி யுழைத்தலும் அறியலாகும்.

262. அரிபறை : "அரிச்சிறு பறையும்" (பெருங். 1. 37 : 9)

றளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடு மிசையே யனைத்தும்
அகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குருகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்ச்
சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர
எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றைத் தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்

---

263 - 4. கலி, செருக்கினை யுணர்த்துதற்கும் (தொல். உரி. சூ. 51, ந.), சும்மை அரவமாகிய இசைப்பொருண்மையை உணர்த்துதற்கும் (தொல். உரி. சூ. 51, ந ; இ - வி. சூ. 285 - 6) இவ்வடிகள் மேற்கோள்.

267. அகலிரு வானத்து : மணி. 19 : 91.

268. மனைமரம் : ''மனைமரத் தெல்லுறு மௌவ னாறும்'' (குறுந். 19 : 3 - 4); ''மனைமர மொசிய'' (அகநா. 58 : 13)

271. ''தினைகொய்யக் கவ்வைகறுப்ப'' (புறநா. 120 : 10.)

275. சிறுதலை நௌவி : புறநா. 2 : 21.

275 - 6. முல்லை. 99-ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

278. ''படுத்துவைத் தன்ன பாறை'' (மலைபடு. 15); ''பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்'' (அகநா. 5 : 13)

279. ''நீலத் தன்ன விதைப்புனம்'' (மலைபடு. 102)

281. (பி - ம்.) 'சுரிமுக'
''சுரிமுகிழ் முசுண்டை'' (அகநா. 235 : 9)
முசுண்டை : சிறுபாண். 166; நெடுநல். 13; மலைபடு. 101.

மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றெய்யிலொடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
ஐவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
இஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசல்
மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயும்
ஆமா கடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச லிருங்கேழ்

---

282. நெய்தற் பூவிற்கு மணி : ''மாக்கழி மணிப்பூ''(குறுந். 55 : 1); ''மணிநிற நெய்தல்'' (ஐங். 96 : 2); ''மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தல்'' (பதிற். 30 : 2)

279 - 84. பலமலர் வீழ்ந்த இடத்திற்கு வெறிக்களம் : ''பல்விதழ் தாஅய், வெறிக்களங் கடுக்கும் வியலறை'' (மலைபடு. 149 - 50); ''எறிசுறாக் கலித்த விலங்குநீர்ப் பரப்பி, னறுவீ ஞாழலொடு புன்னை தாஅய், வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்'' (குறுந். 318 : 1 - 3); ''வெறிக்களங் கடுப்ப வீதியு முற்றமு, நிறைப்போது பரப்பி'' (பெருங். 2. 2 : 104 - 5)

285. ''முல்லை சான்ற முல்லையம் புறவின்'' (சிறுபாண். 169)

288. வெண்ணெல் : மலைபடு. 471; நற். 7 : 7, 350 : 1; அகநா. 40 : 13, 201 : 13, 204 : 10, 211 : 6, 236 : 4, 340 : 14; புறநா. 348 : 1 399 ; 1.

289. இஞ்சி மஞ்சள் : ''மஞ்சளு மிஞ்சியுஞ் செஞ்சிறு கடுகும்'' (பெருங். 3. 17 : 142); ''வளரும் வாழையு மிஞ்சியு மஞ்சளு மிடைவிடாது நெருங்கிய மங்கல மகிமை மாநகர் செந்திலில்'' (திருப்புகழ்)

294 - 5. பெரும்பாண். 108 - 10-ஆம் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.

ஏறடு வயப்புலிப் பூசலொ டனைத்தும்
இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீஇ யொருசார்
இருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலி னொலிக்குஞ் சும்மை
இலைவேய் குரம்பை யுழையதட் பள்ளி
உவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப

296 - 7. வேங்கைப்பூக் கொய்யும் பூசல்: "தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை, மலைமா ரிடூஉ மேமப் பூசல்" (மலைபடு. 305 - 6); "மன்ற வேங்கை மலர்பத நோக்கி, ஏரு திட்ட வேமப் பூசல்" (குறுந். 241 : 4 - 5); "ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலிபுலி யென்னும் பூச றோன்ற", "கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய மகளி, ரின்னா விசைய பூசல் பயிற்றலின்" (அகநா. 48 : 6 - 7, 52 : 2 - 4)

299. "அருவி மாமலை" (பொருந. 235); மதுரைக். 42, 57-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைக் பார்க்க.

300. தொல். அகத். சூ. 5, ந. மேற்.

302. எரி நைப்ப: "கோடெரி நைப்பவும்" (பொருந. 234) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

303. நிழத்தலென்பது நுணுக்கமாகிய குறிப்பை உணர்த்து மென்றற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 34, சே; 32, ந; இ - வி. சூ. 281.

310. இலைவேய் குரம்பை: பெரும்பாண். 88; "கொன்னிலைக் குரம்பையின்" (குறுந். 284 : 7)

உழையதட் பள்ளி: பெரும்பாண். 89-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க; "அதளுண் டாயினும் பாயுண் டாயினும், யாதுண் டாயினுங் கொடுமின்" (புறநா. 317 : 3 - 4)

311. உவலைக்கண்ணி: பெரும்பாண். 60-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட றந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் ரிலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைந் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைக ரேறும் வழிவழிச் சிறப்ப
நெய்தல் சான்ற வளம்பல பயின்றுங்
கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழவிமிழ் மகலாங்கண்

---

313. "*நிழலான் றவிந்த நீரி லாரிடை*" (குறுந். 356 : 1); "*நிழறேய்ந் துலறிய மரத்த............காடு*", "*நிழலறு நனந்தலை*", "*மரநிழ லற்ற வியவிற் சுரன்*", "*நிழன்மா யியவு*" (அகநா. 1 : 11 - 9, 103 : 1, 353 : 15, 395 : 7); "*நிழலு மடியகத் தொளிக்கு மாரழற் கானத்து*" (பதினோராந். திருவாரூர். மும். 3); "*முருகு நாறுபொன் னிதழியார் முண்டகப் பதத்தி, னொருவு மாருயிர் பருவத்தின் மீளவுற் றிடல்போற், பருதி வானவ னுச்சமாம் பதத்துமென் மலர்ப்பூங், தருவி னீங்கிய நிழலெலாந் தருவடி யடைந்த*" (காஞ்சிப். பன்னிரு. 340)

314. "*பாலை நின்ற பாலை நெடுவழி*" (சிறுபாண். 11)

பாலைத்திணைக்கும் நிலமுண்டென்பதற்கு இவ்வடி மேற்கோள்: நம்பி. சூ. 6, *உரை;* இ - வி. சூ. 382.

316. "*கோடீ ரிலங்குவளை*" (குறுந். 11 : 1, 31 : 5, 365 : 1); "*அரம்போ ழவ்வளை*", "*கடற்கோ டறுத்த வரம்போ ழவ்வளை*", "*கோடீ ரெல்வளை*" (ஐங். 185 : 3, 194 : 1, 196 : 1); "*அரம்போ ழவ்வளைப் பொலிந்த முன்கை*", "*வாளரந் துமித்த வளை*", "*அரம்போ ழவ்வளை தோணிலை நெகிழ*", "*அரம்போ ழவ்வளை செறிந்த முன்கை*" (அகநா. 6 : 2, 24 : 1 - 2, 125 : 1, 349 : 1)

320. "*வராஅற், றுடிக்கட் கொழுங்குறை*" (அகநா. 196 : 2 - 3); *கொழுமீன் :* பெரிய, *திருக்குறிப்பு,* 35; *திருச்சிற்.* 188.

324. *வழி வழிச் சிறப்ப :* மதுரைக். 194.

326. பெருங். 4 . 2 : 70.

விழவுநின்ற வியன்மறுகில்
துணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
இன்கலி யாணர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவண்
கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருத மரம்பயில் காவின்
இயங்குபுனல்கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறும்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வரல்
அவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
அழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வேள்
அழும்பி லன்ன நாடிழந் தனரும்

---

328. விழவு நின்ற மறுகு : மதுரைக். 98; "விழவரு வியலா வணத்து" (பட்டினப். 158); "விழவ ருதவம் பொன்மணி வீதி களில்", "வீதி நாளு மொழியா விழாவணி", "விழவ ருதன விளங் கொளி மணிநெடு வீதி" (பெரிய. திருக்குறிப்புத். 98, 104; ஏயர் கோன். 3). 'விழவரு வீதிவள நாடு' என்ற நாட்டின் பெயர் இங்கே அறிதற்பாலது.

329. மதுரைக். 159-60-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

339 - 40. "கோதைபோற் கிடந்த கோதா விரி" (கம்ப. ஆறு செல். 27)

342. அழுந்துபட்டிருந்த : "அழுந்துபட் டலமரும்" (மலை படு. 219)

பெரும்பாணிருக்கை : "அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக் கையும்" (சிலப். 5 : 37)

344. (பி - ம்.) 'வானவிறல்வேள்'

மானவிறல்வேள் : மலைபடு. 164.

அழும்பில் : "பெரும்பூட் சென்னி, யழும்பி லன்ன வருஅ யாணர்" (அகநா. 44 : 14 - 5); "ஊழ்மாறு பெயரு மழும்பில்'

கொழும்பல் பதிய குடியிழந் தனரும்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
அண்ணல் யானை யடுபோர் வேந்தர்
இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப்
பன்மா ரேட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்

(புறநா. 283 : 4 - 5); "அறைபறை யென்றே யழும்பில்வே ளுரைப்ப", "அழும்பில் வேளோடு" (சிலப். 25 : 177, 28 : 205)

349. மதுரைக். 129.

"இரங்கிசை முரச மொழியப் பரந்தவர், ஓடுபுறங் கண்ட ஞான்றை" (அகநா. 116 : 17 - 8); "உரைசால் சிறப்பின் முரை சொழிந் தனவே", "முரசம், பொறுக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே" (புறநா. 62 : 9, 63 : 7 - 8); "அமர ரிட்ட முரசுள" (தக்க. 745); "இடப்புண்ட பேரிஞ்சி வஞ்சியி லிட்ட, கடப்ப முதுமுரசங் காணீர்" (இராச. உலா)

இடைப்புலத் தொழிய : "இடைப்புலத் தொழிந்த வேந்து கோட் டியானை" (மதுரைக். 688)

351. மணிநீர் : சிறுபாண். 152-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க; "மணிநீர் நிறைந்தன் று" (பரி. 12 : 93); "மணிமரு டீநீர்" (அகநா. 368 : 10); "மணிநிறத் தெண்ணீர்", "மணிதெளித் தன்ன வணிநிறத் தெண்ணீர்" (பெருங். 1. 55 : 2, 3. 4 : 39); "மணிநீர்ப் பொய்கை" (பொருளியல்)

352. பல்படைப் புரிசை : "படைமதில்" (பெருங். 3. 4 : ; 3) "படையார் புரிசைப் பட்டினம்" (தே. திருஞா. பல்லவனீச்சரம்)

354. போர்க்கதவு : பட்டினப். 40; கலிங். 90 : 12; பெருங். 3. 3 : 25, 6 : 145.

353 - 4. "புரைதீர்ந், தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடுநல். 85 - 6); "நெய்யோ டிமைக்கு மையவித் திரள்காழ், விளங்குநகர் விளங்க" (நற். 370 : 3 : 4)

355. "மலைபுரை மாடத்து" (மதுரைக். 406)

356. "வளிமறையு மின்றி வழக்கொழியா வாயில்" (பு. வெ. 278)

வகைபெற வெழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மாகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
ஓவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்

---

358. (பி - ம்.) 'சில்காற்றசைக்கும்'

359. மு. நெடுநல். 30; நற். 200 : 3; "யாறெனக் கிடந்ததெரு" (மலைபடு. 481); "யாறுகண் டன்ன வகன்கனை வீதியுள்", "நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி" (பெருங். 2. 7 : 7, 5. 7 : 23)

363. "குடைதொறும், தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை" (மலைபடு. 295 - 6); "தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவு மோசை, யெண்ணிய விரலோ டங்கை புறங்கையி னிசைய வாங்கித், திண்ணிதிற் றெறித்து மோவார் கொட்டியுங் குடைந்து மாடி" (சீவக. 965)

365. "ஓவத் தன்ன விடனுடை வரைப்பின்" (புறநா. 251 : 1) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

365 - 6. "விழவரு வியலா வணத்து, மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய, மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்" (பட்டினப். 158 - 60)

368 - 9. முருகு. 67-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

369 - 71. முல்லை. 90 - 91.

372. பெரும்பாண். 337-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

365 - 73. அங்காடியிற் பலவகைக் கொடிகளுளவாதல் : "கூல மறுகிற் கொடியெடுத்து நுவலு, மாலைச் சேரி" (சிலப். 6 : 132 - 3);

பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பணைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயி றரீஇ யிறைபுடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையும்

"கொடியணி கூலம்", "பகலங் காடியிற் பல்லவ ரெடுத்த, பல்வேறு கொடியும் படாகையும் நிரைஇ" (பெருங். 1. 35 : 152, 2. 6 : 20 - 21)

373 - 4. "வேறுபஃ றுகிலி னுடங்கி...இழிதரு மருவி" (முருகு. 296 - 316)

376. (பி – ம்.) 'வீக்குபிணி நோன்கயிறு'

380. "மறவோன் சேனை வேழச் சங்கமும்" (பெருங். 1. 33 : 78)

381. "கீழு மேலுங் காப்போர் நீத்த, வறுந்தலைப் பெருங் களிறு", (நற். 182 : 8 - 9); "நெடுவேயும் பாகுஞ் சுளிந்துவரு கடகளிறு", "வேயொடு பாகடர் கம்ப நிகள மதாசலம்" (வி. பா. வசந்த. 11, பதினேழாம். 66)

மேலோர் : மணி. 19 : 20.

375 - 83. களிற்றிற்கு நாவாய் : "நிறையப் பெய்த வம்பி காழோர், சிறையருங் களிற்றிற் பரதவ ரொய்யும்" (நற். 74 : 3– 4): "கூம்புமுதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து, கயிறுகால் பரிய... மயங்குகா லெடுத்த வங்கம் போலக், காழோர் கையற மேலோ ரின்றி,...ஒருவழித் தங்காது, பாகும் பறையும் பருந்தின் பந்தரும்... விளிப்ப...கால வேகங் களிமயக் குற்றென" (மணி. 4 : 30 - 44); "ஆடுகொடி யுச்சியணி கூம்பினுயர் பாய்மூன், றீடுபடச் செய்திளைய ரேத்தவிமிழ் முந்நீர்க், கோடுபறை யார்ப்பக்கொழுந் தாட்பவழங் கொல்லா, ஓடுகளி றொப்பவினி தோடியதை யன்றே", "மாக்கடற் பெருங்கலங் காவின் மாறுபட், டாக்கிய கயிறரிந் தோடி யெங்கணும், போக்கறப் பொருவன போன்று தீப்படத், தாக்கின வரசுவாத் தம்மு ளென்பவே", "பண்ணார் களிறேபோற் பாயோங் குயர்நாவாய்" (சீவக. 501, 2231, 2793); பரி. 10 : 42 - 55. "களிறுங் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்" (தொல். உவம. சூ. 37, மேற்.); "அங்கட் கடலி னெடுங்கூம் பகநிமிர்ந்த, வங்கத் தலையுய்க்கு மீகான் றனைமானத், திங்கட் குறைநிழற்றத்

அங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்
தொண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதரும்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின்
அடிபடு மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்
வேழத் தன்ன வெருவரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும்
அரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
றீப்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி ஞேன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்

தீந்தே மதங்கவிழ்க்கும், வெங்கட் களிற்றின் மிசைப்பவனி போந்தணைந்தான்" (திருவிளை. வெள்ளையானை. 7); "மதலை நிரையின் வரிசை யெனத்திண், மதமைக் களிறு மருவ" ("ஆனந்த. வண்டு. 212)

360 - 83. பொருந. 171 - 2 – ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

384. "அங்க ணிருவிசும்பு" (அகநா. 136 : 4); (அங்கண் விசும்பின்" (நாலடி. 151, 373)

385 - 7. (பி - ம்.) 'ஞாயிறுளவா'

385 - 7. குதிரைக்கு அன்னப்புள் உவமை : "விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப், பொலம்படைப் பொலிந்த வெண்டேர்" (குறுந். 205 : 2 – 3); "நிரைபறை யன்னத் தன்ன விரைபரிப், புல்லுளைக் கலிமா", "வயங்குசிறை யன்னத்து நிரைபறை கடுப்ப, நால்குடன் பூண்ட கானவில் புரவி" (அகநா. 234 : 3 - 4, 334 : 10 - 11); "பானிறப் புரவி யன்னப் புள்ளெனப் பாரிற் செல்ல" (கம்ப. எழுச்சி. 69)

388. தேருக்குக் காற்று : மதுரைக். 51 - 2; "காலுறழ் கடுந் திண்டேர்", "வளியி னியன்மிகுந் தேரும்" (கலித். 33 : 31, 50 : 15); "காலிய னெடுந்தேர்" (பொருளியல்)

397. "மடவரன் மகளிர் பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து" (நெடுநல். 39 - 40)

பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றினர்
இருதலை வந்த பகைமுனை கடுப்ப
இன்னுயி ரஞ்சி யின்னா வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
இருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வாலரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்கண்

---

399. "தாதுபல வமைத்துச், சுண்ணப் பெருங்குடம் பண்ணமைத் திரீஇ" (பெருங். 2. 2 : 73 - 4)

398 - 9. "சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்... இடித்த சுண்ணத்தர்" (சிலப். மங்கல. 56 – 7)

397 - 9. "வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்...பகர்வோர்" (சிலப். 6 : 134 - 5)

400. "பூமாண்ட தீந்தேன்றொடை - பொலிவு மாட்சிமைப் பட்ட தேன்போல இனிய நீரையுடைய தாறு; 'தகைசெய்...காய்' என்றார் பிறரும்" (சீவக. 31, ந.)

400 - 401. "பழுக்காய்க் குலையும் பழங்காய்த் துணரும், களிக்காய்ப் பறியுந் துவர்க்கா யும்பலும்,...தளிரிலை வட்டியொடு... எண்ணா தீயுந ரின்மொழிக் கம்பலும்'' (பெருங். 2. 2 : 70 - 75)

405. "பண்ணியப் பகுதியும் பகர்வோர்" (சிலப். 6 : 135)

406. மலைபுரை மாடம் : மதுரைக். 355.

407 - 8. முருகு. 127.

410. "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த" (புறநா. 9 : 9)

411. "பசந்தென்றார், மாலைக் காலத்துப் பரந்த பச்சை வெயிலை; 'செல்......யன்ன' என்றார் மதுரைக்காஞ்சியிலும். இக்காலத்து இதனைக் காடுகிழாள் வெயிலென்ப" (சிலப். 4 : 5 - 8, அடியார்.)

410 - 12. "பாவை, விரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்"

ஐஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்
சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்
மயிலிய லோரு மடமொழி யோரும்
கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றும்வேண்டு பண்ணியம்

(நற். 192; 8 - 10; "தாவினன்பொன் றைஇய பாவை, விண்டவ ழிளவெயில் கொண்டுறின் றன்ன, மிகுநலின்" (அகநா : 212 : 1 - 3)

413. ஐஇய.........மாமையர் : "அங்கலுழ் மாமை, நுண்பூண் மடந்தை" (குறுந். 147 : 2 - 3); "அங்கலுழ் மாமை, கிளைஇய, ...மாஅ யோளே", "அங்கலுழ் மாமை யஃதை" (அகநா. 41: 15-6, 96 : 12)

414. வணங்கிறைப் பணைத்தோள் : "வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்" (குறுந். 364: 5); "வணங்கிறையா ரணைமென்றோள்" (பரி. 17 : 33 - 4); "வணங்கிறைப் பணைத் தோள்.........விறலியர்" (புறநா. 32 : 3 - 4)

413 - 4. வையெயிற்று வார்ந்த வாயர் : "வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையை" (குறுந். 4 : 2)

416. குறுந். 276 : 3 - 4; கலித். 97 : 12, 117 : 4, 125 : 8; அகநா. 177 : 19 - 20.

417. "அஞ்சனம் புரைபைங்கூந்தல்" (பாகவதம். 10. 30 : 4); "ஓதி யவிழ்த்து வார்மைக் குழம்பின், மறைவுறு மணிப்பொற் பாவை போலுடன் மறைய விட்டாள்" (பிரபு. மாதேவி. 51)

418. மயிலியலோர் : ப. 64, 3-ஆம் அடிக்குறிப்பைப் பார்க்க; பொருந. 47; சிறுபாண். 16; "புனமயில்போன் - மன்னி......... இயங்குகின்ற தாயத் திடை" (கிளவி விளக்கம்); "ஊச றுெழி விழக்கு மொப்பு மயிலிழக்கும்.........பூங்குழலி நீங்க" (கண்ட னலங்.)

419. (பி - ம்.) 'தைஇ மெல்லிதின்'

420. நகுவனர் திளைப்ப: "விரிநீர்ச் சேர்ப்பனெடு நகாஅ வூங்கே", "துறைவனொ டொருநா, ணக்கதோர் பழியும்" (குறுந். 226 : 7, 320 : 4 - 5)

கழுழ்நறும் பூவொடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
ஆடுதுவன்று விழவி னுடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி

---

421 - 3. செப்பிற் பூ : "பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோ ரோடமொ டுடனெறிந் தடைச்சிய, செப்பு" (நற். 337 : 4 - 6); "மடைமாண் செப்பிற் றமிய வைகிய, பெய்யாப்பூ" (குறுந். 9 : 2-3); "வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்" (கலித். 68:15); "செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை, நறுமலர்" (சிலப். 22 : 121 - 2); வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல்" (மணி. 4 : 65); "பித்திகைக் கோதை செப்புவாய் மலரவும்", "பூத்தகைச் செப்பும்" (பெருங். 1. 33 : 76, 3. 5 : 78); "வேயாது செப்பி னடைத்துத் தமிவைகும் வீயினன்ன" (திருச்சிற். 374)

424 – 5. "மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது...... முழங்குதிரைப் பனிக்கடல்", "கொளக்குறை படாமையின் முந்நீ ரனையை" (பதிற். 45 : 19 - 22, 90 : 16)

426 - 7. கொளக்......நீர் : "கொளக்குறை படாஅக் கோடு வளர் குட்டத்து" (அகநா. 162 : 1), "தைஇத் திங்கட் டண்கயம் போலக், கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்" (புறநா. 70 : 6 - 7)

429. "நீண்மாடக் கூடலார்" (கலித். 35 : 17); முருகு. 71-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

430. நனந்தலை : முல்லை. 1.

433. பொருந. 82 - 3-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க; "இழையறி வாரா, வொண்பூங் கலிங்கம்" (புறநா. 383 : 10 - 11)

மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியல்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
அணிகிளர் மார்பி ன்ரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வலங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றுவற விளங்கிய வாய்பொ னவிரிழை
அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
ஒண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண்கா ழேற்ற வியலிரு விலோதம்
தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறும்
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக

440. குதிரையின் வேகத்திற்குக் காற்றின் வேகம் : "காற்கடுப் பன்ன கடுஞ்செல லிவுளி", "வளிபூட் டினையோ" (அகநா. 224 : 5, 384 : 9); "காலியற் புரவி", "வளிநடந் தன்ன வாச்செல லிவுளி யொடு", "வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி", "வெவ் விசைப் புரவி வீசுவளி யாக" (புறநா. 178 : 2, 197 : 1, 304 : 3, 369: 7) ; "காலியற் புரவியொடு", "காலியற் செலவிற், புரவி" (பெருங். 1. 38 : 349, 2. 18 : 95 - 6)

442. வானவண்கை : சிறுபாண். 124 - 6; "மழைசுரந் தன்ன வீகை" (மலைபடு. 580); "மழைதழீஇய கையாய்" (சீவக. 2779); "வருமால் புயல்வண்கை மான்றேர் வரோதயன்", "மழையும் புரை வண்கைவானவன்" (பாண்டிக் கோவை); "புயல்போற் கொடைக்கை" (தண்டி. மேற்.); "கார்நிகர் வண்கை" (நன். சிறப்.)

444. "தெள்ளரிச் சிலம்பார்ப்ப" (கலித். 69 : 8)

448. (பி - ம்.) 'குழையிருந்த வொளிகெழு'

450. பெருங். 2. 6 : 20 - 23.

454. மாகவிசும்பு : பரி. 1 : 47; அகநா. 141 : 6, 253 : 24; புறநா. 35 : 18.

மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியும்
சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்
அறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையும்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்

456. முருகு. 128.

457 - 8. ''வாடாப் பூவி னிமையா நாட்டத்து, நாற்ற வுணவி னோரும்'' (புறநா. 62 : 16 – 7)

461 - 3. குழந்தைகளுக்குத் தாமரைப்போது: ''போதவிழ் தாமரை யன்னநின், காதலம் புதல்வன்'' (ஐங். 424); ''நீரு, ளடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட, குடைநிழற் றோன்றுநின் செம்மலை'' (கலித். 84 : 10 – 11); ''பொய்கையுண் மலரென வளர்ந்து'' (சீவக. 2756)

466. ''பூவும் புகையும் சாவகர் பழிச்ச'' (மதுரைக். 476)

470. (பி - ம்.) 'ஒருதிரமாகி'

474. மதுரைக். 488, 501 - 2.

455 - 74. ''நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு, முவணச் சேவ லுயர்த்தோ னியமமு, மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமுங், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமு, மறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்'' (சிலப். 14 : 7 - 11); ''நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ ருக'' (மணி. 1 : 54 - 5)

வண்டுபடப் பழுநிய தேனூர் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வரூஉ மமயமும் [குணர்ந்து
இன்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்
வானமு நிலனுந் தாமுழு துணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
அச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்

481. (பி - ம்.) 'செறிநர் நோன்மார்'

477 - 81. முக்காலமுமறியும் அறிஞர்: "புகழ்நுவல முக்காலமும், நிகழ்பறிபவன்", "இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போ, லம்மூன்று முற்ற வறிதலால்" (பு. வெ. 167, அறிவன் வாகை)

482 - 3. கரண்டை, சிமிலி: "சிமிலிக் கரண்டையன்" (மணி. 3 : 86)

484. "நிழற்கயத் தன்ன நீணகர் வரைப்பின்" (அகநா. 105 : 7); "பனிக்கயத் தன்ன நீணகர்" (புறநா. 378 : 7)

485. "செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்" (நெடுநல். 112); "செம்புறழ் புரிசை" (அகநா. 375 : 13); "செம்புறழ் புரிசை", "செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை" (புறநா. 37 : 11, 201 : 9); "செம்பைச் சேரிஞ்சி", "செம்படுத்த செழும் புரிசை", "செம்புகொப் புளித்த மூன்று மதில்"; (தே.) "செம்பு கொண் டன்ன விஞ்சித் திருநகர்" (சீவக. 439); "செம்பிட்டுச் செய்த விஞ்சி" (கம்ப. கும்ப. 159)

488. மதுரைக். 474.

491. "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க் கணி" (குறள், 118)

சிறந்த கொள்கை யறங்கூ றவையமும்
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
அன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களும்
அறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமோ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு

---

492. அறங்கூறவையம் : "மறங்கெழு சோழ ருறந்தை யவையத், தறங்கெட வறியா தாங்கு" (நற். 400: 7 - 8); "அறங் கெழு நல்லவை" (அகநா. 93 : 5); "உறந்தை யவையத், தறநின்று நிலையிற்று" (புறநா. 39 : 8 - 9); "அறங்கூ றவையம்" (சிலப். 5 : 135); "அறநிலை பெற்ற வருள்கொ ளவையத்து" (பெருங். 1. 34 : 25)

491 - 2. "நவைநீங்க நடுவுகூறு, மவைமாந்தர்" (பு. வெ. 173)

489 - 92. "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க, ணாய்த லறிவுடையார் கண்ணதே - காய்வதன்க, ணுற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கட், குற்றமுந் தோன்றா கெடும்" (அறநெறிச். 22)

493. "நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பில்" (முருகு. 193) கெழுவென்னும் உரிச்சொல் நிறப்பண்பை உணர்த்துமென் பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 5, ந ; இ - வி. சூ. 283.

494. மண்ணுதலென்பதற்குப் பண்ணுதலெனப் பொருள்கூறி இவ்வடியை மேற்கோள் காட்டினர்; சீவக. 202, 735. 1808.

497. "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனு மது" (குறள், 45)

499. காவிதி மாக்கள்: "கடிநாட் செல்வத்துக் காவிதி மாக்கள்", "கணக்கருந் திணைகளுங் காவிதிக் கணமும்" (பெருங். 3. 22 : 282, 5, 6: 90)

500. "ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை" (குறள், 48)

501 - 2. குன்றுகண்டன்ன இல் ; மதுரைக். 474, 488.

சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினரும்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் புகையு மாயு மாக்களும்
எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
தண்கட னாட னொண்பூங் கோதை
பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்

---

504 - 6. ''மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉம்...ஓடா வம்பலர்'' (பெரும்பாண். 67 - 76)

508 - 9. ''பெரும்பெயர் மாறன் றலைவ னாகக், கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச, ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்ப'' (மதுரைக். 772 - 4)

516. (பி - ம்.) 'எண்வகைச் செய்தியும்'

518. கண்ணுள் வினைஞர் : சிலப். 5 : 30.

516 - 8. ''எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி, வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய, கண்கவ ரோவியம்'' (மணி. 3 : 129 - 31)

524. (பி - ம்.) 'தெண்கடனாடன்'

525. பெருநாளிருக்கை: ''திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை'' (சிலப். 23 : 56)

பல்வே றுருவிற் காயும் பழனும்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகும்
அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்
இன்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலின்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
அல்லங் காடி யழிதரு கம்பலை
ஒண்சுட ருருப்பொளி மழுங்கிச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுதல்

---

531. (பி - ம்.) 'குறிமுறி யடரும்'

533. ஊன்சோறு : மதுரைக். 141, அடிக்குறிப்பைப் பார்க்க.

534. வீழ்ந்த கிழங்கு: "விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை" (மலைபடு. 128); "கிழங்குகீழ் வீழ்ந்து" (நற். 328 : 1); "வள்ளிகீழ் வீழா" (கலித். 39 : 12); "கொழுங்கடி வள்ளிக் கிழங்கு வீழ்க் கும்மே" (புறநா. 109 : 6)

540. கடற்குட்டம்; "கடற்குட்டம் போழ்வர் கலவர்" (நான் மணிக். 16)

543 – 4. "பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉ, மிழுமென் சும்மை" (மணி. 14 : 26-7); "முட்டிலா மூவறு பாடை மாக்களாற், புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய, மட்டிலா வளநகர்", "சீர்கெழு வளமனை திளைத்து மாசனம்...பார்கெழு பழுமரப் பறவை யொத் தவே" (சீவக. 93,828) ; "களனவி லன்னமே முதல கண்ணகன், தளமலர்ப் புள்ளொடு தயங்கி யின்னதோர், கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாதலான், வளநகர்க் கூலமே போலு மாண்பது" (கம்ப. பம்பை. 7)

நாண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பக்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநகர்
எல்லை யெல்லா நோயொடு புகுந்து
கல்லென் மாலை நீங்க நாணுக்கொள
ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி

---

548 - 9. *நிலாவிரிபு பகலுருவுற்ற இரவு:* "*பகலுரு வுறழ்நிலாக் கான்று விசும்பி, னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே*" (அகநா. 122 : 10 - 11)

551. "*யான்போது துணைப்ப*" (அகநா. 117 : 11)

554. "*பூந்துகில் கழும வூட்டும் பூம்புகை*" (சீவக. 71)

555 - 6. *மகளிர் மாலையில் விளக்கேற்றுதல் :* "*பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி*" (குறிஞ்சிப். 224); "*பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப*" (மணி. 5 : 134); "*மாலை மணி விளக்கங் காட்டி......கொடியிடையார் தாங்கொள்ள*" (சிலப். 9 : 3 - 4)

558. (பி - ம்.) '*நாணுக் கொளீஇ*'

560. (பி - ம்.) '*தாழ்பெயல்*'

562. "*மார்விற்ருர் கோவி மழை*" (பு. வெ. 204)

563. "*செறிதொடி தெளிர்ப்ப வீசி*" (நற். 20 : 5)

மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில்
ஆய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளிர்
ஒண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி

570. (பி - ம்.) 'கவவுக் கவர்ந்து'. "கோதை மார்பினை, நல்லகம் வடுக்கொள முயங்கி" (அகநா. 100 : 2 - 3)

572 - 5. பரத்தையர்க்கு வண்டு : "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்", "பயன்பல வாங்கி, வண்டிற் றுறக்கும், கொண்டி மகளிரை" (மணி. 18 : 19 - 20, 108 - 9)

576. பொருந. 64-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க. பெருங். 3. 1 : 169 - 74.

581. நீனிற விசும்பு : முருகு. 116-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

582. (பி - ம்.) 'வானர மகளிர்'

583. (பி - ம்.) 'நடுக்குறா உங் கொண்டி' கொண்டி மகளிர்; மணி, 18 : 109.

584. யாம நல்யாழ் : "விரல்கவர்ந் துழந்த கவர்வி னல்யாழ், யாமமுய் யாமை" (நற். 335 : 9 - 10); "விளரிப்பாலையிற் றேன்றும் யாமயாழ்" (பரி. 11 : 128, பரிமேல்.); "யாமயாழ் மழலையாள்" (கம்ப. நாடவிட்ட. 34)

588. "குறுஞ்சுனைக் குவளையடைச்சி", "நீல மடைச்சி" (நற். 204 : 3, 357 : 8); "கூந்தலாம்பன் முழுநெறி யடைச்சி" (குறுந். 80 : 1)

மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாள்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறு துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிற் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுறுப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக்
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்

591. ''ஓணத் தானுல காளுமென் பார்களே'', ''நீ பிறந்த திருவோணம்'' (திவ். பெரியாழ். 1. 1 : 3, 2. 4 : 2); ''ஓணன் பொரக் கருணை யூக்கினர்'' (ஆனந்த. வெண்டு. 491)

600. நீதிநெறி. 100.

602 - 3. ''புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கம், தீர்வினை மகளிர் குளனா டரவமும்'' (மணி. 7 : 75 – 6) என்பதையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

604. ''சேக்கை நல்யாழ் செவ்வழி பண்ணி'' (பெருங். 1. 33 : 89). செவ்வழி மாலைக்குரிய பண் : புறநா. 149.

605 - 6. ''நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி'' (புறநா. 64 : 1); ''குழல்வழி நின்றதி யாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப், பின்வழி நின்றது முழவே முழவொடு, கூடிநின் றிசைத்த தாமந் திரிகை'' (சிலப். 3 : 139 - 42)

608. மயிலின் இயலி: முருகு. 205; பெரும்பாண். 330 - 31-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க. மென்மெலவியலி : ''மென்மெ

கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார்
அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமதர்
ஒள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிருஅல் புரையு மெல்லடை
அயிருருப் புற்ற வாடமை விசயம்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்

லம்மலர் மேன்மிதித் தேகினள்" (சீவக. 1336); "சொல்லு மாடு மென்மெல வியலும்" (தொல். களவு. சூ. 10, ந. மேற்.); "மென்மெல வியலி வீதி போந்து" (பெருங். 4. 17 : 99)

612. அரிக்கூடின்னியம் : "அரிக்கூடு மாக்கிணை" (புறநா. 378 : 8)

614. நெடுவேள் : முருகு. 211, பெரும்பாண். 75-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

614 - 5. தழூஉப் பிணையூஉ நின்ற குரவை: மதுரைக். 159–60-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

618. (பி - ம்.) 'பெரும்பெயர்'

624. அடைக்கு இருல் : "மெழுகு மெல்லடை" (புறநா. 103: 10); "தேனி ருலன தீஞ்சுவை யின்னடை" (சீவக. 2674)

628. புறநா. 29 : 22 - 3. 629 - 30. நற். 18 : 6 - 7.

பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
இரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்கும்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
ஊர்காப் பாள ரூக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமும்
அசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலும்
அச்ச மறியா தேம மாகிய

---

636. *தொடுதோலடியர் : "தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி"* (பெரும்பாண். 169)

635 - 6. *"குன்று துகளாக்குங் கூர்ங்கணையான்"* என்பது பாரதம் (தொல். புறத். சூ. 21, ந. மேற்.); *"வேறிரண் டனவும் வில்லு மிடைந்தவும் வெற்பென் றாலும், கூறிரண் டாக்கும் வாட்கைக் குழுவையுங் குணிக்க லாற்றேம்"* (கம்ப. பாச. 6)

642. *"அகன்றுகண் மாறி"* (மணி. 3 : 40)

639 - 42. *"நிலனக ழுளிய னீலத் தானையன், கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று"* (சிலப். 16 : 204 - 5)

சிலப். 16 : 204. 11, அடியார். மேற்.

643 - 4. கள்வர்க்குப் புலி: கலித். 4 : 1 - 2.

645. (பி - ம்.) *'ஆண்மையிற் சிறந்த'*

மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றுங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுளைத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
ஒண்பொ னவிரிழை தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
உண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுர லேன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல

---

653. *''பகுக்கப்படுதலிற் பகல்; 'மற்றை யாமம் பகலுறக் கழிப்பி' என்பதுமது''* (சிலப். 4 : 81, அரும்பத. அடியார்.)

655. சீவக. 893, ந. மேற்.

656. *விடியலில் வேதம் பாடல் : ''பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த, நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப, ஏம வின்றுயி லெழுத லல்லதை, வாழிய வஞ்சியுங் கோழியும் போலக், கோழியி னெழாதெம் பேரூர் துயிலே''* (பரி. தி. 27 : 7-11)

655 - 6. வில்லைப் புராணம், 257.

658. *மருதப்பண் காலைக்குரியது:* புறநா. 149; சீவக. 1991.

659. (பி - ம்.) *'கவழ மகைப்ப'*
''கல்லா விளைஞர் கவளங் கைப்ப'' (முல்லை. 36.)

660. (பி – ம்.) *'தெவிட்டிப்'*
''பணை நிலைப் புரவி'' (மணி. 7 : 117.)

662. (பி - ம்.) *'கள்கொடை நுவல நல்லோர்'*

665. (பி - ம்.) *'கண்பொரு பெறிக்கும்'*

666. (பி - ம்.) *'ஒன்ப லவிரிழை தெளிர்ப்ப வியலி'*

669. *பழஞ்செருக்கு :* மலைபடு. 173.

670. (பி - ம்.) *'சூதரேத்த'*

வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
இமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காமர்
அன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன
அம்மென் குரும்பைக் காய்படுபு பிறவும்
தருமணன் முற்றத் தரிஞிமி றூர்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப
இரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மழவ ரோட்டி

671. (பி - ம்.) 'வேதாளியர்'
நாழிகை யிசைத்தல் : முல்லை. 55 - 8, அடிக்குறிப்பைப் பார்க்க.
670 - 71. சூதர், மாகதர், வேதாளிகர் : சிலப், 5 : 48; மணி. 28 : 50.
சிலப். 5 : 49, அடியார். மேற்.
673. பொறிமயிர் வாரணம் : மணி. 7 : 116.
673 - 4. யானையங் குருகு : "யானையங் குருகின் கானலம் பெருந்தோடு" (குறுந். 34 : 4 - 5); "களிமயில், குஞ்சரக் குரல குருகொ டாலும்" (அகநா. 145 : 14 - 5); "கீசுகீ சென்றெங்கு மானைச்சாத் தன்கலந்து" (திருப்பாவை, 7)
678. நீனிற விசும்பு : முருகு. 116, அடிக்குறிப்பைப் பார்க்க.
682. (பி - ம்.) 'நிலம்படுபுக்க' 680 - 82. சீவக. 72.
683. (பி - ம்.) 'குருப்பைக்காயும்'
684. தருமணல் முற்றம் : நெடுநல். 90; நற். 143 : 2; அகநா. 187 : 9; பெருங். 1. 34 : 40.
686. ஏம வைகறை: "ஏம வைகல்" (குறுந். கடவுள்; பரி. 17: 53. சிலப். 4 : 80.)
687. மழவரோட்டி : "உருவக் குதிரை மழவ ரோட்டிய" (அகநா. 1 : 2)

இடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர்
ஊர்சுடு விளக்கிற் றந்த வாயமும்
நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடர வந்த விழுக்கல மனைத்தும்
கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
ஒண்பூம் பிண்டி யவிழ்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வனைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்

---

688. இடைப்புலத்தொழிந்த : மதுரைக். 349.

692. ஊர்சுடு விளக்கு : புறநா. 7 : 8.

691 - 2. "அரவூர் மதியிற் கரிதூர வீம, இரவூ ரெரிகொளீஇக் கொன்று - நிரைநின்ற, பல்லான் றொழுவும் பகற்காண்மார் போர் கண்டோர், கொல்வார்ப் பெருஅர் கொதித்து" (தொல். புறத். சூ. 3, ந. மேற்); மதுரைக். 126-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

694. கைதொழூஉப் பழிச்சி : பெரும்பாண். 463.

695 - 7. மலைபடு. 526 - 9.

693 - 7. மதுரைக். 149-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

698. "வானத் தன்ன வளநகர்" (மதுரைக். 741); "மாந்தரஞ் சேர லிரும்பொறை யோம்பிய நாடே, புத்தே ளுலகத் தற்று" (புறநா. 22 : 34 - 5)

699. "மலிபுகழ்க் கூடல்" (மதுரைக். 429)

706. (பி - ம்.) 'மயிலோடன்ன'

மயிலோரன்ன சாயல் : முருகு. 205-ஆம் அடியின் அடிக்குறிப்பையும், சிறுபாண். 16-ஆம் அடியின் அடிக்குறிப்பையும் பார்க்க.

தளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகத்
தாய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து
திண்கா ழார நீவிக் கதிர்விடும்
ஒண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
எருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச்
சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம்
உடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்
தொன்னு ரோட்டிய செருப்புகன் மறவர்

---

706 - 7. மகளிர் மேனிக்கு மாந்தளிர் : முருகு. 143 - 4-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

707 - 9. "ஈன்றவ டிதலைபோ லீர்ப்பெய்யுந் தளிரோடும்" (கலித். 32 : 7)

710. சுடரிதழ்த் தாமரை : மதுரைக். 249.

715 – 6. (பி – ம்.) 'கதிர்விடு பொண்காழ்'

"தன்கடற் பிறந்த முத்தி னாரமு, முனை திறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற் கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி னாரமு, மிருபே ராரமு மெழில்பெற வணியுந், திருவீழ் மார்பிற் றென்னவன்" (அகநா. 13 : 1 - 6); "கோவா மலையாரங் கோத்த கடலாரம்...........தென்னர்கோன் மார்பினவே" (சிலப். 17 : உள்வரி. 1)

718. விரவுப்பூந் தெரியல் : மதுரைக். 745.

720 - 21. (பி - ம்.) 'சுடர, உறையமைவுற்ற சோறுடைக் கலிங்கம்'

723. "வல்லோன் றைஇய பாவைகொல்" (கலித். 56 : 7)

வாள்வலம் புணர்ந்தநின் றுள்வலம் வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கின்
நல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க

---

727. (பி - ம்.) 'தாள்வலம் பழிச்ச'

726 - 7. சிறுபாண். 212-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

725 - 8. "அவர்படை வருஉங் காலை நும்படைக், கூழை தாங்கிய வகல்யாற்றுக் குன்று, விலங்கு சிறையி னின்றனை", "வேந்துடைத் தானை முனைகெட நெரிதர, ஏந்துவாள் வலத்த னொருவ னாகித், தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற், காழி யனையன்" (புறநா. 169 : 3 - 5, 330 : 1 - 4); "பொருபடையுட் கற்சிறைபோன், றொருவன் றாங்கிய நிலையுரைத் தன்று", "செல்கணை மாற்றிக் குருசில் சிறைநின் றான்" (பு. வெ. 54, 263)

730. "கல்லகழ் கிடங்கின்" (மலைபடு. 91); "கல்லறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்" (அகநா. 79 : 3); "பாறுடைத்த குண்டகழி" (புறநா. 14 : 5); "பாறெலாம் போழ்ந்தமா கிடங்கு" (கம்ப. நகரப். 17)

731. கலித். 92 : 62, ந. சீவக. 906, ந. மேற்.

733. (பி - ம்.) 'மயிர்க்கண் முரச மோவாது சிலைப்ப'

732 - 3. "ஓடா நல்லேற் றுரிவை தைஇய, பாடுகொண் முரசம்" (அகநா. 334 : 1 - 2); "விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்", "மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பி, னண்ண னல்லே றிரண்டுடன் மடுத்து, வென்றதன் பச்சை சீவாது போர்த்த, திண்பிணி முரசம்" (புறநா. 63 : 7, 288 : 1 - 4); "மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி", "மயிர்க்கண் முரசு" (சிலப். 5 : 88, 91) "ஏற்றுரி போர்த்த முரசு" (மணி. 1 : 29 - 31); "ஏற்றுரி முரசம்", "ஏற்றுரி போர்த்த வள்வா ரிடிமுரசு", "புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துனைகுரன் முரசத் தானை" (சீவக. 2142, 2152, 2899); "ஏற்றுரியி, னிமிழ்முரசம்" (யா. வி. செய், சூ. 40, மேற். "தாழிரும்"); "சாற்றிடக் கொண்ட வேற்றுரி முரசம்", "ஏற்றுரி முரசி னிறைவன்", "ஏற்றுரி போர்த்த...... முரசம்" (பெருங். 1. 38 : 100, 43 : 195, 2. 2 : 26 - 9); "மயிர்க்கண் முரச முழங்க" (பு. வெ. 171)

எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னாது முறைகருதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பின்
உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின்
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செ யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து

"மயிர்க்கண் முரசு" என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள் (சிலப். 5 : 88, அடியார்.)

734. (பி - ம்.) *'எரிபரந்தன்ன', 'எரிசிகழ்ந்தன்ன'*

படைக்கு நெருப்பு : "கான்படு தீயிற் கலவார்தன் மேல் வரினும்" (பு. வெ. 55)

737. பொலம்பூந் தும்பை: பதிற். 45 : 1; புறநா. 2 : 14, 22 : 20, 97 : 15.

739. *காழ்மண்டெஃகம் : "காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென"* (மலைபடு. 129): *"காழ்மண் டெஃகமொடு காற்படை பரப்பி"* (பெருங். 3. 19 : 212)

740. (பி - ம்.) 'வளங்கெழு நகர்நோன்'

வானத்தன்ன நகர் : மதுரைக். 698-ஆம் *அடியின் அடிக்* குறிப்பைப் பார்க்க.

742. *"எஃகா டூனங் கடுப்ப மெய்சிதைந்து"* (பதிற். 67 : 17); *"கார்சூழ் குறட்டின் வேனிறத் திங்க", "தச்ச னடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே"* (புறநா, 283 : 8, 290 : 4 - 5); *"வீரவே லுடம்பெலாஞ் சூழ வெம்புலால், சோருஞ்செங் குருதியுண் மைந்தர் தோன்றுவார், ஒருமே லொண்மணிச் சூட்டு வைக்கிய, வாரமே யமைந்ததேர்க் குழிசி யாயினர்"* (சீவக. 790)

747. பொருந. 101, ந. மேற்.

பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
இருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களந்தோறுங் கள்ளரிப்ப
மரந்தோறு மைவீழ்ப்ப
நிணவூன்சுட் டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குரூஉக்குய்ப்புகை மழைமங்குலிற்
பரந்துதோன்று வியனகராற்
பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி

---

752. கொடுஞ்சி நெடுந்தேர் : பெரும்பாண். 416-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

பரிசிலர்க்குத் தேர் கொடுத்தல் : மதுரைக். 223 - 4-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

தேரோடு களிறு தருதல் : சிறுபாண். 142 - 3-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

களிறுதருதல்: பொருந. 125 - 6-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

755. (பி – ம்.) 'ஊன் சூட்டு'

758. 'தோன்றிய வியன்சாரல்'

759 - 60. (பி - ம்.) 'முதுகுடுமிநல்'

760 - 61. "பல்கேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர்" (பட்டினப். 169 - 70)

763. மதுரைக். 60 - 61; "நிலந்தரு திருவி னெடியோய்" (பதிற். 82 : 16); "நிலந்தரு திருவின்............கௌரியர்", "நிலந்தரு திருவி னெடியோன் றனுது" (சிலப். 15 : 1 - 2, 28 : 3)

முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவ னாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

———

768. பொருந. 135 – 6; பெரும்பாண். 441 - 2.

769. சிறுபாண். 219-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

769 - 70. சிறுபாண். 219 - 20-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

773. கோசர் : புறநா. 169 : 9-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

775. (பி – ம்.) 'உளப்பட'

779 – 81. பொருந. 85 - 8-ஆம் அடிகளின் கீழ்க்குறிப்பைப் பார்க்க; "ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய, தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந், தாங்கினி தொழுகுமதி பெரும" (புறநா. 24 : 31 - 3) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

782. நல்லூழி : மதுரைக். 21.

இதன் பொருள்

இப்பாட்டிற்கு மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியென்று துறைப்பெயரானன்றித் திணைப் பெயராற் பெயர் கூறினார். இத்திணைப் பெயர் பன்னிரு படலம் முதலிய நூல்களாற் கூறிய திணைப்பெயர் அன்று, தொல்காப்பியனார் கூறிய திணைப்பெயர்ப் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின். வஞ்சி மேற் செல்லலானும், காஞ்சி எஞ்சா தெதிர் சென்றான்றலானும், "வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே" எனப் பன்னிரு படலத்திற் கூறிய திணைப்பெயர் இப்பாட்டிற்குப் பொருளன்மையுணர்க. அவர் முதுமொழிக்காஞ்சி முதலியவற்றைப் பொதுவியலென்று ஒரு படலமாக்கிக் கூறலின், அவை திணைப்பெயராகாமை உணர்க.

இனி, மதுரைக்காஞ்சியென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக் கூறிய காஞ்சியென விரிக்க. இஃது உருபும் பொருளும் உடன்றொக்கது. "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" (தொல். புறத். சூ. 22) என்பதனால் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று. அது, "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும், நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" (தொல். புறத். சூ. 23) என்பதாம். இதன் பொருள்: பாங்கு அரு சிறப்பின் - தனக்குத் துணையில்லாத வீடுபேறு நிமித்தமாக, பல் ஆற்றானும் - அறம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியானும், அவற்று உட்பகுதியாகிய உயிரும் யாக்கையும் செல்வமும் இளமையும் முதலியவற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்து - நிலைபேறில்லாத உலகியற்கையைப் பொருந்திய நன்னெறியினை உடைத்து அக்காஞ்சியென்றவாறு. எனவே, வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோர் அறையுங் குறிப்பினது காஞ்சித்திணையென்பது பொருளாயிற்று.

இச்செய்யுட்புலவர் இப்பொருளே கோடலின், யாம் இப்பொருளே தர உரை கூறுகின்றாம்.

1 - 2. [ஓங்குதிரை வியன்பரப்பின், ஒலிமுந்நீர் வரம்பாக:] வியல் பரப்பின் ஓங்கு திரை ஒலி முந்நீர் வரம்பு ஆக – அகலத்தை உடைத்தாகிய நீர்ப்பரப்பின்கண்ணே ஓங்குதிரை ஒலிக்கும் கடல் எல்லையாக,

3 - 4. தேன் தூங்கும் உயர் சிமையம் மலை நாறிய வியல் ஞாலத்து - தேனிறால் தூங்கும் உயர்ந்த உச்சியை உடைய மலைகள் தோன்றிய அகலத்தை உடைய ஞாலத்தின்கண்ணே,

5. வலம் மாதிரத்தான் வளி கொட்ப - வலமாக ஆகாயத்தின் கண்ணே காற்றுச் சுழல,

6. வியல் நாள்மீன் நெறி ஒழுக - அகலத்தை உடைய நாண் மீன்கள் தாம் நடக்கும் நெறியின்கண்ணே நடக்க,

7. பகல் செய்யும் செ ஞாயிறும் – பகற்பொழுதை உண்டாக்கும் சிவந்த பகலோனும்,

8. இரவு செய்யும் வெள் திங்களும் - இராப்பொழுதை உண்டாக்கும் வெள்ளிய மதியும்,

9. மை தீர்ந்து கிளர்ந்து விளங்க - குற்றமற்றுத் தோன்றி விளங்க,

10. மழை தொழில் உதவ - மேகம் தானே பெய்தற்றொழிலை வேண்டுங்காலத்தே தர,

[1] உழவுத்தொழிற்கு உதவவென்றுமாம்.

மாதிரம் கொழுக்க - திசைகளெல்லாம் தழைப்ப,

மலைகள் விளைந்து கொழுக்க வென்றுமாம்.

11. [தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய :] தொடுப்பின் வித்தியது ஆயிரம் விளைய - ஒரு விதைப்பின்கண்ணே விதைத்த விதை ஆயிரமாக விளைய,

12. நிலனும் - விளைநிலங்களும்,

மரனும் - மரங்களும்,

பயன் எதிர்பு நந்த - பல்லுயிர்க்கும் தம் பயன் கொடுத்தலை [2] ஏறட்டுக்கொண்டு தழைப்ப,

13. நோய் இகந்து [3] நோக்கு விளங்க - மக்கட்குப் [4] பசியும் பிணியும் நீங்கி அழகு விளங்க,

14 - 5. [மேதக மிகப்பொலிந்த, ஓங்குநிலை வயக்களிறு:] மிக பொலிந்த ஓங்கு நிலை வய களிறு மே தக - அறவும் பொலிவு பெற்ற [6] உலகத்தைத் தாங்குதல் வளரும் தன்மையையுடைய வலியையுடையவாகிய திக்கயங்கள் இவர் தாங்குதலின் வருத்தமற்று மேம்பாடு தக,

---

[1] "காலை மாரி பெய்துதொழி லாற்றி" (பதிற். 84 : 21); "ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும், வாரி வளங்குன்றிக் கால்" (குறள், 14)

[2] ஏறட்டுக்கொள்ளல் - மேற்கொள்ளல்; மதுரைக். 147, ந.

[3] நோக்கு - அழகு : "பெரிய நோக்கின - பெரிய அழகை யுடைய" (சீவக. 1461, ந.)

[4] "நோயொடு பசியிகந் தொரீஇப், பூத்தன்று பெருமநீ காத்த நாடே", "நீபுறந் தருதலி னோயிகந் தொரீஇய, யாணர்நன் னாடும்" (பதிற். 13 : 27 - 8, 15 : 33 - 4); "பசியும் பிணியும் பகையு நீங்கி" (சிலப். 5 : 72, மணி. 1 : 70); "பசிபகை யானதுந் தீங்கு நீங்க" (இரண்டாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி)

[5] "கூறுன்றத், தாங்கிப் பொறையாற்றுத் தத்தம் பிடர் நின்றும், வாங்கிப் பொதுநீக்கி மண்முழுதும் - ஓங்கிய, கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன், முற்றப் பரித்ததற்பின் முன்பு தாம் - உற்ற, வருத்த மறமறந்து மாதிரத்து வேழம், பருத்த கடாந்திறந்து பாய" (விக்கிரம. உலா); கம்ப. 2. மந்திரப். 16-ஆம் செய்யுளைப் பார்க்க.

[1] சுருளும் படியுமாகப் பண்ணினவிடத்துப் பண்ணி நிற்கும் யானை யென்று உரைப்பாருமுளர்.

16 - 7. [கண்டுதண்டாக் கட்கின்பத், துண்டுதண்டா மிகுவளத்தான்:]

[2] உண்டு தண்டா மிகு வளத்தான் - உண்டு அமையாத உணவு மிகுகின்ற செல்வத்தோடே,

கண்டு தண்டா கட்கு இன்பத்து - நோக்கி அமையாத கட்கு இனிமையினையும்,

18. உயர் பூரிமம் விழு தெருவில் - உயர்ந்த [3]சிறகுகளையு முடைய சீரிய தெருவில் இருக்கும் மாந்தர் (20),

பூரிமம் - சாந்திட்ட தொட்டிகளென்பாரு முளர்.

19 - 20. [பொய்யறியா வாய்மொழியால், புகழ் நிறைந்த நன்மாந்த ரொடு:] வாய் மொழியால் புகழ் நிறைந்த பொய் அறியா நல் மாந்தரொடு—[4]மெய்ம்மொழியே எக்காலமும் கூறுதலாற் பெற்ற புகழ் நிறைந்த [5]பொய்யைக் கேட்டறியாத நல்ல அமைச்சருடனே,

21. [6] நல் ஊழி அடி படர - நன்றாகிய ஊழிக்காலமெல்லாம் தமக்கு அடிப்பட்டு நடக்க,

22. பல் வெள்ளம் மீ கூற - பல [7] வெள்ளமென்னும் எண்ணைப் பெற்ற காலமெல்லாம் அரசாண்ட தன்மையை மேலாகச் சொல்லும்படி,

23. உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக - உலகத்தை ஆண்ட உயர்ச்சி பெற்றோர் குடியில் உள்ளவனே,

மாதிரம் கொழுக்க (10) வித்தியது விளைய (11) நிலனும் மரனும் நந்த (12) வளி கொட்கையினாலே (5) மழை தொழிலுதவ (10) என முடிக்க.

---

[1] இவ்வாறமைந்த படியினைக் களிற்றுப்படி யென்று வழங்குவர்.

[2] உண்டு - நுகர்ந்து எனலும் பொருந்தும்.

[3] சிறகு - தெருவின் இருபுறத்துமுள்ள வீடுகளின் வரிசை; 'தென்சிறகு வடசிறகு' எனவரும் வழக்கினை யுணர்க.

[4] "பொய்யாமை யன்ன புகழில்லை" (குறள், 296)

[5] "பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன்" (கம்ப. கைகேசி. 31)

[6] "நல்லூழியென்றது, கலியூழியல்லாத ஊழியை" (மதுரைக். 781 - 2, ந.) என்பர் பின்.

[7] வெள்ளம் - ஒரு பேரெண்; "வெள்ள வரம்பி னூழி" (ஐங். 281 : 1); "வெள்ளமு நுதலிய, செய்குறி யீட்டம்" (பரி. 2 : 14 - 5). தொல். புள்ளி. சூ. 98, உரையைப் பார்க்க.

வியன் ஞாலத்திடத்தே (4) மழை தொழிலுதவ (10) நாண்மீன் நெறி யொழுக (6) ஞாயிறும் (7) திங்களும் (8) விளங்க (9) நோக்கு விளங்கக் (13) களிறு (15) மேதக (14) நன்மாந்தரோடே (20) ஊழி அடிப்பட்டு நடக்கும்படி (21) மீக்கூற (22) முந்நீர் வரம் பாக (2) உலக மாண்ட உயர்ந்தோர் மருக (23) என முடிக்க.

[1] இவர்கள் தருமத்தில் தப்பாமல் நடத்தவே இக்கூறியவையும் நெறி தப்பாமல் நடக்குமென்றார்.

24 - 5. பிணம் கோட்ட களிறு [2]குழும்பின் நிணம் வாய் பெய்த பேய் மகளிர் – பிணங்களையுடைய கொம்புகளை உடையன வாய்ப் பட்ட ஆனையினுடைய திரளின் நிணத்தைத் தின்ற பேய் மகளிருடைய துணங்கை (26),

26. இணை ஒலி இமிழ் [3]துணங்கை சீர் - இணைத்த ஆரவாரம் முழங்குகின்ற துணங்கைக் கூத்தின் சீர்க்கு,

27. பிணை யூபம் எழுந்து ஆட - செறிந்த குறைத்தலைப் பிணம் எழுந்து நின்று ஆடுகையினாலே,

28. அஞ்சு வந்த போர்க்களத்தான் - [4] அஞ்சுதலுண்டான போர்க் களத்திடத்தே,

29. ஆண் [5] தலை அணங்கு அடுப்பின் - ஆண்மக்கள் தலையாகிய நோக்கினரை வருத்தும் அடுப்பின்கண்ணே,

---

[1] "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள், 545); "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும், கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்" (மணி. 7 : 8 - 9); "கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி, ஆணையிவ் வுலகு கேடா மரசு கோல் கோடி னென்றான்" (சீவக. 255)

[2] குழும்பு : இக்காலத்துக் கும்பு என மருவி வழங்கும்.

[3] துணங்கையின் இயல்பை, முருகு. 56-ஆம் அடியின் உரையினால் அறியலாகும்.

[4] பேய் ஆடியயரும் இடங்கள் அச்சம் தருவனவாதலை மணி மேகலையில், "கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத், தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக், கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி, விண்டோர் திசையின் விளித்தனன்...பேய்க்கென் னுயிர்கொடுத் தேனென" (6 : 125 – 30) என வரும் பகுதியிற் கூறப்படும் செய்தியால் அறியலாகும்.

[5] தலையைப் பேய்கள் அடுப்பாகக் கோடல்; "அரக்கர் முடிகளை யடுப்பு வகிர்வன", "முடித்தலை யொப்ப வடுப்பென வைத்து" (திரு வகுப்பு, பொருகளத். செருக்களத்.)

30 - 31. வய வேந்தர் ஒள் குருதி சினம் தீயின் பெயர்பு பொங்க - வலியினையுடைய வேந்தருடைய ஒள்ளிய [1]குருதியாகிய உலை சினமாகிய தீயின் மறுகிப் பொங்குகையினாலே,

32 - 8. [தெறலருங் கடுந்துப்பின், விறல்விளங்கிய விழுச்சூர்ப் பிற், றொடித்தோட்கை துடுப்பாக, ஆடுற்ற வூன்சோறு, நெறி யறிந்த கடிவாலுவன், அடியொதுங்கிப் பிற்பெயராப், படையோர்க்கு முருகயர :]

தொடி தோள் [2]கை துடுப்பு ஆக (34) ஆடு உற்ற ஊன் சோறு (35)-[3]வீர வளையை உடையவாகிய தோளையுடைய கைகள் துடுப் பாகக் கொண்டு துழாவி அடுதலுற்ற ஊனினுகிய சோற்றை,

நெறி அறிந்த கடி வாலுவன் - இடுமுறைமை அறிந்த பேய் [4]மடையன்.

தெறல் அரு கடு துப்பின் (32) விறல் விளங்கிய விழு சூர்ப்பின் (33) அடி ஒதுங்கி பின் பெயரா (37) படையோர்க்கு முருகு அயர (38)-பகைவராற் கோபித்தற்கு அரிய கடிய வலியினையும் வெற்றி விளங்கிய சீரிய கொடுந்தொழிலினையுமுடையராய் இட்ட அடி வாங்கிப் பின் போகாத வீரர்க்கு வேள்வி செய்யும்படி,

39. அமர் கடக்கும் வியல் தானை-போரை வெல்லும் அகலத்தை யுடைய படையினையுடைய,

போர்க்களத்தே (28) ஆடுற்ற சோற்றை (35) வாலுவன் (36) அடி பெயரா (37) வீரர்க்கு முருகயரக் (38) கடக்குந்தானை யென்க.

40 - 42. [தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந :]

வரை தாழ் அருவி பொருப்பின் கடவுள் - பக்க மலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையிலிருக்கும் கடவுள்,

தென்னவன் பெயரிய துன் அரு துப்பின் தொல் முது கடவுள் பின்னர் மேய பொருந - [5] இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி

---

[1] குருதியை உலையாகப் பெய்தல், "அவற்றி னுலையென விரத்தம் விடுவன" (பொருகளத்தலகை வகுப்பு)

[2] கைகளைத் துடுப்பாகக் கொள்ளல் : "அவர்கரவகப்பை யவை கொடு புகட்டி யடுவன" (பொருகளத்தலகை வகுப்பு)

[3] தொடி – வீரவளை; மதுரைக். 720, ந.

[4] மடையன் – சோருக்குவோன்.

[5] தென்னாட்டை ஆண்டு குடிகளைத் துன்புறுத்தி வந்த இராவணனை, அகத்தியர் பொதியின் மலை உருகும்படி இசை பாடி இலங்கைக்குப் போக்கினரென்பது பண்டை வரலாறு; அவர் இசை யிலே வல்லுநரென்பது, "மன்னு மகத்தியன்யாழ் வாசிப்ப" (திருக் கைலாய ஞானவுலா), "தமிழ்க்குன்றில் வாழுஞ் சடாதாரி பேர்யாழ் தழுங்குந் திருக்கை" (தக்க. 539) என்பவற்றாலும், பொதியில்

போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே,

"திசைநிலைக் கிளவியி னாஅ குநவும்" (தொல். எச்ச. சூ. 53) என்றதனால், இராவணன் தென்றிசை ஆண்டமைபற்றித் [1]தென்னவனென்றார், இப்பெயர் பாண்டியற்கும் [2]கூற்றுவற்கும் ஏற்றுநின்றாற்போல. அகத்தியனைத் தென்றிசை உயர்ந்தநொய்ம்மை போக இறைவனுக்குச் சீரொப்ப இருந்தா னென்பதுபற்றிக் கடவுளென்றார். இராவணனுழுதல் பாயிரச் சூத்திரத்து [3]உரையாசிரியர் கூறிய உரையானுமுணர்க.

இனி, "முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கா, லிப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய, வக்கடவுண் மற்றக் கடவுள்" (கலித். 93 : 11 - 3) என [4]இருடிகளையும் கடவுளென்று கூறிய வாற்றானும் காண்க.

இதனால், [5]அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்.

[6] கூற்றுவனை உதைத்த கடவுளென்று இறைவனாக்கி, அவன்பின் னரென்றது அகத்தியனையென்று பொருள்கூறின், இறைவனுக்குத்

உருகியது, "இனியபைந் தமிழின் பொதியமால் வரைபோ லிசைக் குருகாது" (சோணசைல. 26) என்பதனாலும், அகத்தியர் அதனை உருக்கியது, "மலை, முன்னாளுருக்கு முனிநிகர்வை" (வெங்கையுலா, 319) என்பதனாலும், இராவணனை இசைபாடி அடக்கியது, "பொதியிலின்கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி" (தொல். பாயிரம், ந.), "இசைக்குருகப் படுசிலை - இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியின் மலை" (தஞ்சை. 345, உரை) என்பவற்றாலும் உணரப்படும்.

1 "தென்னவன் மலையெ டுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு" (தே. திருநா. திருக்கச்சிமேற்றளி)

2 தென்னவனென்னும் பெயர் கூற்றுவனுக்காதல்: "சட்டத் தென்னவன் றன்கடா வேந்தனை, வெட்டி" (தக்க. 684); "காலத் தென்னவன் மகிட மேறான்" (அருணாசல. பாகம்பெற்ற. 4); பெரியாழ். 4. 5 : 7.

3 உரையாசிரியரென்னும் பெயர்க்குரியராக இப்பொழுது கருதப்படும் இளம்பூரணர் உரையில் இச்செய்தி காணப்படாமை ஆராய்ச்சிக்குரியது.

4 இருடிகளைக் கடவுளென்றல் : சிலப். 11 : 5; சீவக. 96, 1124; பெருங். 2. 11 : 150, 4. 10 : 153.

5 இச்செய்தியை இறையனாரகப்பொருள் முதற்சூத்திர உரையினால் அறியலாகும்.

6 "மறைமுது முதல்வன் பின்னர்" (சிலப். 12) என்பதற்கு, 'மறைமுது முதல்வன் - மாதேவன்; இவன் பின்னர் அகத்

தம்பியென்றல் சாலாமையானும், [1]அப்பொருள் தரும் காலத்து, முன்னவன் பின்னவன், முன்னேன் பின்னேனென்றல்லது அச் சொல் நில்லாமையானும் அது பொருந்தாது. "முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள, பின்னரும் பீடழிக்கு நோயுள" (நாலடி. 92) எனப் பிறண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்தியே நிற்குமென்றுணர்க.

[2]பொருநனென்றது தான் [3]பிறர்க்கு உவமிக்கப்படுவானென்னும் பொருட்டு.

43. விழு சூழிய - சீரிய முகபடாத்தை உடையவாய்,
விளங்கு ஓடைய — விளங்குகின்ற பட்டத்தை உடையவாய்,

44. கடு சினத்த - கடிய சினத்தை உடையவாய்,

44 - 5. கமழ் கடாத்து அளறு பட்ட நறு சென்னிய - கமழுகின்ற மதத்தாலே சேறுண்டான நறிய தலையினை உடையவாய்,

46. வரை மருளும் உயர் தோன்றல - வரையென்று மருளும் உயர்ந்த தோற்றத்தினை உடையவாய்,

47. வினை நவின்ற பேர் யானை - போர்த்தொழிலிலே பயின்ற பெரிய யானை,

இச்செய்தெனச்சக்குறிப்பாகிய வினையெச்ச முற்றுக்கள் அடுக்கி வந்தனவற்றை நவின்றவென்னும் பெயரெச்சத்தோடு முடிக்க.

48. சினம் சிறந்து களன் உழக்கவும் - சினம் மிக்குக் களத்து வீரரைக் கொன்று திரியவும்,

49 – 50. மா எடுத்த மலி குரூஉ துகள் அகல் வானத்து வெயில் கரப்பவும் - குதிரைத்திரள் பகைவர்மேற் செல்லுதலால் உண்டான மிக்க நிறத்தை உடையவாகிய தூளி அகலுதற்குக் காரணமான ஆகாயத்திடத்தே வெயிலை மறைக்கவும்,

51 - 2. வாம் பரிய கடு திண் தேர் காற்று என்ன கடிது கொட்பவும் - தாவும் குதிரைகளையுடைய செலவுகடிய திண்ணிய தேர் காற்றுச் சுற்றியடித்ததென்னக் கடிதாகச் சுழலவும்,

---

தியனுகிய கடவுள்' என்றெழுதிய அரும்பத உரையாசிரியரது உரை, இங்கே கூறப்படுவனவற்றோடு முரணுதல் காண்க.

[1] "பின்னர் - பின்னேன்" (சிலப். 12) என்னும் அடியார்க்கு நல்லாருரையை ஓர்க.

[2] "பொருந - உவமிக்கப்படுவாய்" (முருகு. 276, ந.); "பொரு நாகு - ஏனையவற்றிற்கு ஒப்புச் சொல்லப்படும் நாகு" (கலித். 109 : 4) எனப் பிறண்டும் இதனை யொத்தே இவ்வுரையாசிரியர் பொருளெழுதுதல் அறிதற்குரியது.

[3] "பிறர்க்குநீ வாயி னல்லது நினக்குப், பிறருவம மாகா வொரு பெரு வேந்தே" (பதிற். 73 : 2 – 3); "பிறர்க்குவமந் தானல்லது, தனக்குவமம் பிறரில்லென" (புறநா. 377 : 10 - 11)

53-4. [வாண்மிகு மறமைந்தர், தோண்முறையான் வீறுமுற்ற வும் :] வாள் மிகு மறம் மைந்தர் தோள் வீறு முறையான் முற்றவும் - வாட்போரான் மிகுகின்ற மறத்தையுடைய வீரருடைய தோள் வெற்றி முறையாக வெட்டுதலான் முற்றுப்பெறவும்,

"விருந்தாயினை யெறிகெனெ விரைமார்பகங் கொடுத்தாற், கரும்பூண றவெறிந்தாங்கவ னினதூழினி யெனவே" (சீவக. 2265) என்றார் பிறரும்,

55 - 6. இரு பெரு வேந்தரொடு வேளிர் சாய பொருது அவரை செரு வென்றும் - சேரன் சோழனுகிய இருவராகிய பெரிய அரச ருடனே [1]குறுநில மன்னரும் இளைக்கும்படி பொருது அவரைப் போரை வென்றும் அமையாமல்,

உம்மை : சிறப்பும்மை.

57 - 9. [இலங்கருவிய வரைநீந்திச், சுரம்போழ்ந்த விகலாற்றல், உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின் :]

உயர்ந்து இலங்கு அருவிய வரை நீந்தி ஓங்கிய விழு சிறப்பின் - உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையிற் குறிஞ்சிநில மன்னரையெல்லாம் வென்று உயர்ந்த சீரிய தலைமையினாலே,

இகல் ஆற்றல் சுரம் போழ்ந்த சிறப்பின் - மாறுபாட்டை நடத்து தலையுடைய பகைவர்காடுகளைப் பலவழியாகப் பிளந்த சிறப்பினாலே,

60. நிலம் தந்த பெரு உதவி - நாட்டிலிருக்கின்ற அரசர் நிலங் களையெல்லாங் கொண்ட பெரிய உதவியையும்,

[2] மலையும் காடும் அரணாக இருந்த அரசரை அழித்த வலியாலே நாட்டில் இருக்கின்ற அரசர் தத்தம் நாடுகளை விட்டாரென்றதாம்.

61. பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல் - பொன்னாற் செய்த தாரை அணிந்த மார்பினையுமுடைய [3]வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில் வந்தோனே,

---

[1]குறுநிலமன்னர் - திதியன் முதலாயினோர்; மதுரைக். 128 - 9-ஆம் அடிகளின் உரையைப் பார்க்க.

[2] "உண்டாகிய வுயர்மண்ணும், சென்றுபட்ட விழுக்கலனும், பெறல்கூடுமிவ னெஞ்சுறப்பெறின்" (புறநா. 17 : 24 - 6) என்பதன் கருத்து இவ்விசேடவுரையுடன் ஒப்புநோக்கற்பாலது.

[3] 'முந்நீர்க்கண் வடிம்பலம்பநின்றானென்ற வியப்பால், நெடியோ னென்றாரென்ப' (புறநா. 9 : 10, உரை), "அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி, வடிவே லெறிந்த வான்பகை பொறாது.........கடல் கொள்ள" (சிலப். 11 : 17 - 20), "ஆழி வடிம்பலம்ப நின்றானும்" (நள. சுயம். 137), "கடல்வடிம் பலம்ப நின்ற கைதவன்" (வி. பா. 15-ஆம் போர். 18) என்பனவும், "மன்னர்பிரான் வழுதியர்

யானை (47) களனுழக்கவும் (48) துகள் (49) வெயில்கரப்பவும் (50) தேர் (51) கொட்பவும் (52) மைந்தர் (53) மூற்றவும் (54) பொருது செருவென்றும் அமையாமல் (56) விழுச்சிறப்பின் (59) நிலந்தந்த உதவியினையும் (60) மார்பினையுமுடைய நெடியோன் (61) என்க.

62 - 3. மரம் தின்னூஉ வரை உதிர்க்கும் நரை உருமின் ஏறு அனையை - மரங்களைச் சுட்டு மலைகளை நீறுக்கும் பெருமையினை யுடைய உருமேற்றை ஒப்பை,

"கருநரை நல்லேறு" (குறுந். 317 : 1) என்றார் பிறரும். இன்: அசை.

64. அரு குழு மிளை - பகைவர் சேர்தற்கரிய திரட்சியை யுடைய காவற் காட்டினையும்,

குண்டு கிடங்கின் – ஆழத்தினையுடைய கிடங்கினையும்,

65. உயர்ந்து ஓங்கிய நிரை புதவின் - உயர்ந்து வளர்ந்த கோபுரங்களிடத்து வாயில்களையும்,

நிரை : ஆகுபெயர். உயர்ச்சி ஓங்குதலை விசேடித்து நின்றது.

66. நெடு மதில் – நெடிய மதிலினையும்,

நிரை ஞாயில் - நிறைந்த சூட்டினையுமுடைய,

அஃது எய்தால் மறைதற்கு உயரப் படுப்பது.

67. [அம்புமி ழயிலருப்பம்,] அயில் அம்பு உமிழ் அருப்பம் – கூர்மையையுடைய அம்புகளை உமிழும் அரண்களை.

மிளை (64) முதலியவற்றையுடைய அருப்பமென்க.

68 – 9. தண்டாது தலை சென்று கொண்டு நீங்கிய விழு சிறப்பின் - அமையாமல் அவ்விடங்களிலே சென்று கைக் கொண்டு அவ்விடங்களினின்றும் போன சீரிய தலைமையினையுடைய கொற்றவர் (74),

70 – 71. [தென்குமரி வடபெருங்கல் குணகுடகட லாவெல்லை:] தென்குமரி எல்லை ஆ வட பெரு கல் எல்லை ஆ குண குட கடல் எல்லை ஆ - தென்றிசைக்குக் குமரி எல்லையாக வடதிசைக்குப் பெரிய மேரு எல்லையாகக் கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல் எல்லையாக இடையில் வாழ்வோரெல்லாம்.

கோன் வடிம்பலம்ப நின்றருளி" (பராந்தக தேவர் மெய்க்.) என்பதும், இப் பெயராற் பெறப்படும் செய்தியைக் கூறுவது காண்க; "வென்றிபடச் சிவந்தெறியக் கருங்கடல்வெவ் வலிதொலைந்து, முன்றெறுமம் புடைந்துபங்கப் பட்டலறி மோதிவிழா, நின்றபடி வடிம்பலம்ப நின்றதுகண் டேனேரு, மின்றிதுகண் டனம்புதுமை யெனப்பயம்விட் டெழத்துதித்தார்", "மாலைமுடி யோன்வேலை வடிம்பலம்ப நின்றதனல், வேலை வடிம்பலம்ப நின்ற னென்றெங்கும் விளங்கியதால்" என்பனவற்றால், இச் சிறப்புப் பெயரை உடையார் உக்கிர குமார பாண்டியரென்று கூறுவர்; திருவால. 21 : 6, 7

72. தொன்று மொழிந்து தொழில் கேட்ப - தம்முடன் பழமையைச் சொல்லி ஏவல் கேட்கும்படி,

73. வெற்றமொடு வெறுத்து ஒழுகிய - வெற்றியோடே செறிந்து நடந்த,

74. கொற்றவர் தம் கோன் ஆகுவை - வெற்றியுடையோர் தம்முடைய தலைவனுன தன்மையை உடையை;

75 - 6. வான் இயைந்த இரு முந்நீர் பேஎம் நிலைஇய இரு பௌவத்து - மேகம் படிந்த பெரிதாகிய [1]மூன்று நீர்மையையுடைய அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்து,

77 - 9. [கொடும்புணரி விலங்குபோழக், கடுங்காலொடு கரை சேர, நெடுங்கொடிமிசை யிதையெடுத்து :]

கடு காலொடு கொடு புணரி விலங்கு போழ இதை எடுத்து – கடிய காற்றுலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய் விரிக்கப்பட்டு,

80. இன்னிசைய முரசம் முழங்க – இனிய ஓசையையுடைய முரசம் முழங்காநிற்க,

81 – 2. பொன் மலிந்த விழு பண்டம் நாடு ஆர - பொன்மிகுதற்குக் காரணமாகிய சீரிய சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும்படியாக,

[நன்கிழிதரும்:] கரை சேர (78) நன்கு இழிதரும் - கரையைச் சேர வாணிகம் வாய்த்து வந்து இழிதலைச் செய்யும்,

83. [ஆடியற் பெருநாவாய்:] நெடு கொடி மிசை (79) ஆடு இயல் பெரு நாவாய் - நெடிய கொடி பாய்மரத்தின் மேலே ஆடும் இயல்பினை யுடைய பெரிய மரக்கலம்,

இதையெடுத்து (79) முழங்க (80) ஆர இழிதரும் (81) நாவா யென்க.

84 - 5. மழை முற்றிய மலை புரைய துறை முற்றிய துளங்கு இருக்கை – கருமேகஞ் சூழ்ந்த மலைபோலக் கடல் சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும்,

துறை : ஆகுபெயர். சரக்குப் பறித்தற்குக் கடலில் நின்ற மரக் கலங்கள் அக்கடல் சூழ நின்றதற்கு மழை முற்றிய மலை உவமமாயிற்று.

நாவாய் துளங்கிருக்கை யென்க.

86. தெண் கடல் குண்டு அகழி - தெளிந்த கடலாகிய ஆழத்தையுடைய கிடங்கினையுமுடைய.

87 - 8. சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ - தலைமை யமைந்த உயர்ந்த நெல்லின் பெயரைப் பெற்ற சாலியூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியை உடையவனே,

[1] மூன்று நீர்மை - நிலத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்பன; பெரும்பாண். 441, அடிக்குறிப்பைப் பார்க்க.

இதனால், தனக்கு நடவாததோர் ஊர்கொண்டானென்றார்.

இன்னே அசையாக்கி நெல்லூரென்பாருமுளர்.

இருக்கையினையும் (85) இடங்கினையும் (86) உடைய ஊரென்க.

89 - 92. [நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர், பாடுசிலம்பு மிசை யேற்றத், தோடுவழங்கு மகலாம்பியிற், கயனகைய வய னிறைக்கும்:]

வயல் அகைய நிறைக்கும் கயன் நீர் (92) [1]தெவ்வும் நிரை [2]தொழுவர் (89) பாடு சிலம்பும் இசை (90) - வயல் தழைக்கும்படி நீரை நிறைத்தற்குக் காரணமான குளங்களில் நீரை [3]இடாவான் முகந்துகொள்ளும் நிரையாக நின்று தொழில் செய்வோரிடத்தே ஒலிக்கும் ஓசை,

ஏற்றத் (90) தோடு வழங்கும் அகல் ஆம்பியின் (91) இசை (90)- ஏற்றத்துடனே உலாவும் அகன்ற பன்றிப்பத்தரின் ஓசை,

93. மெல் தொடை வல் கிழாஅர் இசை (95) - மெத்தென்ற கட்டுக்களையுடைய வலிய [4]பூட்டைப் பொறியினோசை,

94. அதரி கொள்பவர் இசை (95) - கடாவிடுகின்றவர் ஓசை,

பகடு பூண் தெள் மணி இசை (95) - எருதுகள் பூண்ட தெள்ளிய மணியின் ஓசை,

95. இரு புள் ஒப்பும் இசையே - பயிர்களிற் பெரிய கிளி முதலியவற்றை ஓட்டும் ஓசை,

ஏகாரம் : ஈற்றசை.

என்றும் - எந்நாளும்,

96 - 7. மணி பூ முண்டகத்து மணல் மலி கானல் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப - நீலமணி போலும் பூக்களையுடைய வாகிய கழி முள்ளிகளையுடைய மணற்குன்றுகள் மிக்க கடற்கரை

---

[1]'தெவ்வு' என்ற பாடமே நேரானது: "எடுத்தல் படுத்தல்" (பிரயோக. 40) என்பதன் உரையைப் பார்க்க; "சோணுடு தெவ்வுத லும்" என்றார், ஸ்ரீ கச்சியப்ப முனிவரும்; காஞ்சி. நகரேற்று. 142.

[2]தொழில் செய்வாரென்னும் பொருளில் தொழுவரென்பது (மதுரைக். 122) என்புழியும், "நெல்லரியு மிருந்தொழுவர்", "நெல் லரி தொழுவர்" (புறநா. 24 : 1, 209 : 2) என்புழியும் வந்துள்ளது.

[3]இடா - இறைகூடை; "போரிடாக் கொள்ளமுன் கவித்து" (பெரிய. இளையான்குடி. 17)

[4]"காலை யங்கதிற் பூட்டையங் கடமதொன் றமிழ, மேலெழுந்து செல்கின்றதோர் கடமென மேலை, வேலை வெங்கதி ரமிழ்ந்துற முழுமதி விண்ணின், பாலெ ழுந்தது விரிகதி ருலகெலாம் பரப்பி" (சீகாளத்தி. கன்னியர். 119) என்பதனால், பூட்டைப் பொறியின் இயல்பை அறிந்துகொள்க. இது காஞ்சிபுரத்தின் பக்கத்திலுள்ள ஊர்களிற் பெரும்பாலும் காணப்படும்.

யில் இருக்கும் பரதவருடைய மகளிர் ஆடும் குரவைக் கூத்தின் ஓசை யோடே கூடி ஆரவாரியா நிற்ப,

98. ஒருசார் விழவு நின்ற வியல் ஆங்கண் - ஒரு பக்கம் விழாக் கொண்டாடுதலாற் பிறந்த ஓசைகள் மாறாமல் நின்ற அகலத்தை யுடைய ஊர்களிடத்தே இருந்து,

பாடுசிலம்புமிசை (90) முதலியன குரவையொடு (97) என்றும் (95) ஒலிப்ப (97) ஒரு சார் விழவுநின்ற ஊரென்க.

99. முழவு தோள் முரண் பொருநர்க்கு - முழவு போலும் தோளினை உடையராய்க் கல்வியால் மாறுபடுதலையுடைய [1]தடாரிப் பொருநர்க்கு,

100 – 102. உரு கெழு பெரு சிறப்பின் இரு பெயர் பெரு ஆய மொடு இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும் - அச்சம் பொருந்திய பெரிய தலைமையையுடைய [2]கன்றும் பிடியுமென்னும் இரண்டு பெயரையுடைய பெரிய திரளுடனே விளங்குகின்ற கொம்பினை யுடைய களிறுகளைக் கொடுத்தும்,

இரு பெயர்க்கு ஆடும் மாடுமென்பாருமுளர்.

103. பொலம் தாமரை பூ சூட்டியும் - பொன்னாற் செய்த தாமரைப் பூவைச் சூட்டியும்,

104 – 5. [நலஞ்சான்ற கலஞ்சிதறும், பல்குட்டுவர் வெல் கோவே:]

நலம் சான்ற கலம் சிதறும் கோவே - நன்மையமைந்த பேரணி கலங்களை எல்லார்க்கும் கொடுக்கும் கோவே,

ஊர்களிடத்தே இருந்து (98) பொருநர்க்குக் (99) கொடுத்தும் (102) சூட்டியும் (103) அமையாது கலம் சிதறும் கோவேயென்க.

பல் குட்டுவர் வெல் கோவே - பலவாகிய குட்ட நாட்டில் உள்ளாரை வெல்லும் கோவே,

என்பது [3]அடை.

இதனால், தன்னாட்டில் ஊர்களிலிருந்து கொடுக்கின்ற சிறப்புக் கூறினார்.

106. கல் காயும் கடு வேனிலொடு - மலைகள் காய்தற்குக் காரணமாகிய கடிய முதுவேனிலாலே,

107. இரு வானம் பெயல் ஒளிப்பினும் - பெரிய மேகம் மழையைத் தன்னிடத்தே மறைத்துக்கொள்ளினும்,

---

[1] தடாரி - கிணைப்பறை; பு. வெ. 218, உரை.

[2] ''கன்றொடு, கறையடி யானை யிரியல் போக்கும்,......ஆய்'' (புறநா. 135 : 11 - 3), ''கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம், வன்றொ டர்ப்படுக் கும்வன வாரி'' (கம்ப. நாட்டு. 32) என்பன இங்கே ஆராயத்தக்கவை. [3]'அடை' என்றது 'பல்குட்டுவர் வெல்' என்றதனை.

108. [வரும்வைகன் மீன்பிறழினும்:] வைகல் வரும் மீன் பிறழினும் - தான் தோன்றுதற்குரிய நாளிலே தோன்றும் [1]வெள்ளி தென்றிசையிலே எழினும்,

109. வெள்ளம் மாறுது விளையுள் பெருக - யாறுகள் வெள்ளம் மாறுமல் வந்து விளைதல் பெருகுகையினலே,

110. நெல்லின் ஓதை — முற்றின நெல்லுக் காற்றடித்து அசைதலாலே எழுந்த ஓசை,

அரிநர் கம்பலை - அதனை அறுப்பாருடைய ஓசை,

111. புள் இமிழ்ந்து ஒலிக்கும் இசை - பறவைகள் கத்துகையினலே ஆரவாரிக்கும் ஆரவாரம்,

என்றும் - எந்நாளும்,

112 - 3. சலம் புகன்று சுறவு கலித்த புலவு நீர் வியல் பௌவத்து - தம்முள் மாறுபாட்டை விரும்பிச் சுறுக்கள் செருக்கித் திரிகின்ற புலால் நாற்றத்தை உடையதாகிய நீரையுடைய அகற்சியை உடைய கடலிடத்துத் துவலை (115),

114 - 5. நிலவு கானல் முழவு தாழை குளிர் பொதும்பர் நளி தூவல் - நிலாப் போலும் மணலையுடைய கரையினில் குடமுழாப் போலும் காயை(பி - ம். தாளை)யுடைய தாழையை வேலியாக வுடைய குளிர்ச்சியையுடைய இளமரக்காவின்கண்ணே வந்து செறிதலையுடைய துவலையின் ஓசை,

116. திரை திமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை - திரைத்த மீன் படகாலே வேட்டையாடுவார் வந்து கரையைச் சேரும் ஆரவாரம்,

---

[1]வெள்ளிக்கோள் தென்றிசையில் எழுதல் தீய நிமித்தம்; இது, "வசையில்புகழ் வயங்குவெண் மீன், திசைதிரிந்து தெற்கேகினும், தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப் பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" (பட்டினப். 1 - 6), "வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி, பயங்கெழு பொழுதோ டாநிய நிற்ப", "நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப், பயங் கெழு வெள்ளி யாநிய நிற்ப" (பதிற். 24 : 24 - 5, 69 : 13 - 4), "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும், தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்,.........பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே", "வெள்ளி தென்புலத் துறைய விளைவயற், பள்ளம் வாடிய பயனில் காலை" (புறநா. 117 : 1 - 7, 388 : 1 - 2), "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும், விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்.......காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" (சிலப். 10 : 102-8) என்பனவற்றுல் அறியலாகும்.

117. இரு கரு செறுவின் வெள் உப்பு பகர்நரொடு-பெரிய கழியிடத்து உப்புப் பாத்தியிலே வெள்ளிய உப்பை விற்கும் [1] அளவர் ஒலியோடே,

118 - 24. [ஒலியோவாக் கலியாணர், முதுவெள்ளிலை மீக்கூறும், வியன்மேவல் விழுச்செல்வத், திருவகையா னிசைசான்ற, சிறுகுடிப் பெருந்தொழுவர், குடிகெழீஇய நானிலவரொடு, தொன்றுமொழிந்து தொழில் கேட்ப:]

சிறு குடி பெரு தொழுவர் (122) ஒலி ஓவா கலி யாணர் (118) முதுவெள்ளிலை (119) - சிறிய குடிகளாய்ப் பெரிய தொழில்களைச் செய்வாருடைய ஆரவாரமும் ஒழியாத பெருக்கினையுடைத்தாகிய புது வருவாயினையுடைய முதுவெள்ளிலை யென்னும் ஊர்,

இது குறுநில மன்னர் இருப்பு.

பகர்நரொலியோடே (117 - 8) நெல்லின்னுழைதை (110) முதலிய ஒலி என்றும் (111) ஓவாத முதுவெள்ளிலை யென்க.

மீ கூறும் (119) இருவகையான் (121) வியல் மேவல் விழு செல்வத்து (120) இசை சான்ற (121) குடி கெழீஇய நானிலவரொடு (123) - உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகமென்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ்நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே,

தொன்று மொழிந்து தொழில் கேட்ப (124) - பழமை கூறி நின்று ஏவலைக் கேட்கும்படியாக,

125 - 7. கால் என்ன கடிது உராஅய் நாடு கெட எரி பரப்பி ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து - காற்றென்னும்படி கடிதாகப் பரந்து சென்று பகைவர் நாடு கெடும்படி நெருப்பைப் பரப்பித் [2]தலையாலங்கானமென்கின்ற ஊரிலே பகைவர்க்கு அச்சம் தோன்றும்படி [3] விட்டு,

"எரிபரந்தெடுத்தல்" (தொல். புறத். சூ. 8) என்னுந் துறை கூறிற்று.

---

[1] அளவர் - நெய்தல் நிலமாக்களுள் ஒரு வகையார்; உப்பளத்திற்குரிய தொழில் செய்வோர்.

[2] இவ்வூர் தலையாலங்காடென்று வழங்கும்; இது தேவாரம் பெற்ற ஒரு சிவதலம்; சோழ நாட்டினுள்ளது; இவ்வூரிற் பகைவரெழுவரையும் வென்றதுபற்றியே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னென்று இப்பாண்டியன் கூறப்படுவான்; சிலப்பதிகாரத்திற் கூறப்படுபவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

[3] விட்டு – தங்கி; விடுதலென்பது பகைமேற் சென்றோர் தங்குவதற்கே பெரும்பாலும் வழங்கும்; பு. வெ. உரை.

128 - 9. அரசு பட அமர் உழக்கி முரசு கொண்டு களம்வேட்ட - நெடுநில மன்னர் இருவரும் குறுநில மன்னர் ஐவரும் படும்படி போரிலே வென்று அவர்முரசைக் கைக்கொண்டு களவேள்வி வேட்ட,

எழுவராவர்: [1] சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநனென்பார்.

130. அடு திறல் உயர் புகழ் வேந்தே - [2]கொல்லுகின்ற வலி உயர்ந்த புகழையுடைய வேந்தே யென்க.

நானிலவரோடே (123) முதுவெள்ளிலை (119) தொழில் கேட்பத் (124) திறலுயர்ந்த வேந்தனே.

இது [3]தலையாலங்கானத்து வென்றமை கூறிற்று.

131. நட்டவர் குடி உயர்க்குவை – நின்னுடனே நட்புக் கொண்டவருடைய குடியை உயர்த்தலைச் செய்வை;

132. செற்றவர் அரசு பெயர்க்குவை - நீ செறப்பட்டவர் அரசுரிமையை வாங்கிக்கோடலைச் செய்வை;

133 - 4. பெரு உலகத்து மேஎந்தோன்றி சீர் உடைய விழு சிறப்பின் - பெரிய நன்மக்களிடத்தே மேலாய்த் தோன்றுகையினாலே புகழையுடைய விழுமிய தலைமையினையும்,

135. விளைந்து முதிர்ந்த விழு முத்தின் - சூல்முற்றி ஒளி முதிர்ந்த சீரிய முத்தினையும்,

136. இலங்கு வளை இரு சேரி - விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்கு குளிப்பார் இருப்பினையும்,

முத்தினையும் சங்கினையுமுடைய சேரி யென்க.

137. கள் கொண்டி குடி பாக்கத்து - கள்ளாகிய உணவினையுடைய இழிந்த குடிக்களையுடைய சிறூர்களையுமுடைய,

கொண்டி - கொள்ளப்படுதலின் உணவாயிற்று; கொள்ளையுமென்ப.

---

[1] மதுரைக். 55, 56 - ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] "மறம்வீங்கு பல்புகழ்" (பதிற். 12: 8) என்பதும் அதனுரையும் ஈண்டு அறிதற்பாலன.

[3] நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றமை பின்னுள்ள செய்யுட்களாலும் விளங்கும்: "கலிய நெடுந்தேர்க் கைவண் செழிய, னாலங் கானத் தமர்கடந் துயர்த்த, வேலினும் பல்லூழ் மின்னி", "தென்னர் கோமா, னெழுவுறழ் திணிதோ ளியறேர்ச் செழிய, னேரா வெழுவ ரடிப்படக் கடந்த, வாலங் கானத் தார்ப் பினும் பெரிது" (அகநா. 175: 10 - 12, 209 : 3 - 6); "இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத், தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து, மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு, நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய" (புறநா. 19 : 1–4)

138. நல் கொற்கையோர் நசை பொருந - நன்முகிய கொற்கை யென்னும் ஊரிலுள்ளோர் நச்சுதலைச் செய்யும் பொருநனே,

இதனாற் கொற்கைக்குரியோனென்றார்.

சிறப்பினையும் (134) சேரியினையும் (136) பாக்கத்தினையும் (137) உடைய கொற்கை.

139 - 40. செற்ற தெவ்வர் கலங்க தலை சென்று அஞ்சு வர தட்கும் அணங்கு உடை துப்பின் - தாங்கள் செறப்பட்ட பகைவர் மனம் கலங்தும்படி அவரிடத்தே சென்று அவர்க்கு அச்சந்தோன்றத் தங்கும் வருத்தத்தையுடைத்தாகிய வலியினையும்,

141. கொழு ஊன் குறை கொழு வல்சி - கொழுத்த இறைச்சியையுடைய கொழுத்திருக்கின்ற சோற்றினையும்,

ஊனைக் கூட இட்டு ஆக்குதலிற் கொழு வல்சியென்றார். கொழு வல்சி - கொழுவினுலாகிய வல்சியென்றுமாம்; இஃது [1]ஆகுபெயர்,

142. புலவு வில்- [2]எய்த அம்பு தன்னை மீண்டும் தொடுத்தலின் புலால் நாற்றத்தையுடைய வில்லினையும்,

பொலி கூவை - பொலிந்த [3]கூவைக் கிழங்கினையும்,

கூவை - திரளுமாம்.

143. ஒன்றுமொழி - வஞ்சினம் கூறுதலையும்,

ஒலி இருப்பின் - ஆரவாரத்தையுடைய குடியிருப்பினையும் உடைய,

144. தென் பரதவர் போர் ஏறே - தென்றிசைக்கண் வாழும் பரதவர்க்குப் போர்த்தொழிலைச் செய்யும் ஏருயவனே,

இதனால் பரதவரைத் தனக்குப் படையாக அடிப்படுத்தினமை கூறினார்.

துப்பு (140) முதலியவற்றையுடைய பரதவ ரென்க.

பரதவர் - தென்றிசைக்கட் குறுநில மன்னர். அது, "தென் பரதவர் மிடல்சாய, வடவடுகர் வாளோட்டிய" (புறநா. 378 : 1 - 2) என்னும் புறப்பாட்டானும் உணர்க.

145. அரிய எல்லாம் எளிதினின் கொண்டு - பிறர்க்கு அரிய நுகர் பொருள்களெல்லாம் எளிதாக நின்னுாரிடத்தேயிருந்து [4]மனத்தால் கைக்கொண்டு,

---

[1] ஆகுபெயரென்றது கொழுவென்பதனை; அது கொழுவினுலாகிய வேளாண்மைக்காயிற்று. கொழுவல்சியென்பதனோடு, "பகடு நடந்த கூழ்" (நாலடி. 2) என்பதனை ஒப்பு நோக்குக.

[2] அம்பு புலால் நாறுதல் இதனாற் பெறப்படும்; "புலவுநுனைப் பகழி" (பெரும்பாண். 269) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

[3] மலைபடு. 137; புறநா. 29: 19.

[4] "ஒன்னார், ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளியோய்" (புறநா. 203 : 9 - 11); இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணற்குக் கொடுத்த துறையுமது; தொல். புறத். சூ. 12 ந.

146. உரிய எல்லாம் [1]ஓம்பாது வீசி - அப்பொருளையெல்லாம் [2]நினக்கென்று பாதுகாவாது ஊரிடத்தே இருந்து பிறர்க்குக் கொடுத்து,

என்றது, "கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" (தொல். புறத். சூ. 12) கூறிற்று.

147. நனி புகன்று உறைதும் என்னுது ஏற்று எழுந்து - மிக விரும்பி ஊரின்கண்ணே இருந்து உறையக் கடவேமென்று கருதாதே பகைவர்மேற் செல்லுதலை ஏறட்டுக்கொண்டு போக்கிலே ஒருப்பட்டு,

இது [3]வஞ்சி கூறிற்று.

148. பனி வார் சிமையம் கானம் போகி - பனி ஒழுகுகின்ற மலையிடத்தனவாகிய காடுகளைக் கடந்து,

சிமையம் : ஆகுபெயர்.

149. அகம் நாடு புக்கு - அவர்கள் உள் நாடுகளிலே புகுந்து,

இதனால், "தொல்லெயிற் கிவர்தல்" (தொல். புறத். சூ. 12) கூறினார்.

அவர் அருப்பம் வெளவி – அப்பகைவர் அரண்களைக் கைக்கொண்டு அதனாலும் அமையாமல்,

இது [4]குடுமிகொண்ட மண்ணுமங்கலம் கூறிற்று. இதனால் அரசர் அரண்களை அழித்தமை கூறினார்.

150. [யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து:] வேண்டு புலத்து பல யாண்டு கழிய இறுத்து-நீ அழித்த நாடுகளில் கொள்ள வேண்டும் நிலங்களிலே பல யாண்டுகளும் போம்படி தங்கி,

151. மேம்பட மரீஇய வெல் போர் [5]குருசில் – அந்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்பட இருந்த வெல்லும் போரினையுடைய தலைவனே,

[6]இது பகைவர் நாட்டைத் தன்னுடாக்கினமை கூறிற்று.

152. உறு செறுநர் புலம் புக்கு - தொன்றுதொட்டு வந்த பகைவர் நிலத்தே விட்டு,

152 – 3. அவர் கடி காவின் நிலை தொலைச்சி - அவர் காவலையுடைய பொழில்களின் நிற்கின்ற நிலைகளைக் கெடுத்து,

என்றது வெட்டி என்றவாறு.

---

[1] "ஓம்பாத வீகை - சீர்தூக்காது கொடுக்கும் கொடை" என்பர் புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர்; 164.

[2] புறநா. 122 - ஆம் செய்யுள் இக்கருத்தை விளக்குதல் காண்க.

[3] வஞ்சி - மண்ணசையாற் பகைமேற் சேறல்.

[4] பெரும்பாண். 450 - 52, ந.; மதுரைக். 349 - 50, ந.

[5] குருசில் - உபகாரியென்பர், பு. வெ. உரையாசிரியர்.

[6] மதுரைக். 60, ந. பார்க்க.

154 - 5. *இழிபு அறியா பெரு தண் பணை குரூஉ கொடிய எரி மேய* - வளப்பம் குன்றுதலை ஒருகாலத்தும் அறியாத பெரிய மருத நிலங்களை நிறத்தை உடைய ஒழுங்கினையுடைய நெருப்பு உண்ண,

156. *நாடு எனும் பேர் காடு ஆக* - நாடென்னும் பெயர் போய்க் காடென்னும் பெயரைப் பெற,

157. *ஆ சேர்ந்த வழி மா சேப்ப* - பசுத்திரள் தங்கின இடமெல்லாம் புலி முதலியன தங்க,

158. *ஊர் இருந்த வழி பாழ் ஆக* - ஊராயிருந்த இடங்களெல்லாம் பாழாய்க் கிடக்க,

ஊராரிருந்த இடமென்றுமாம்.

159 - 60. *இலங்கு வளை மடம் மங்கையர் துணங்கை அம் சீர் தழூஉ மறப்ப* - விளங்குகின்ற வளையினையும் மடப்பத்தினையும் உடைய மகளிர் துணங்கைக்கூத்தினையும் அழகினை உடைய தாள அறுதியை உடைய [1] குரவைக்கூத்தினையும் மறப்ப,

[2] தழூஉ : ஆகுபெயர்.

161 - 3. *அவை இருந்த பெரு* [3] *பொதியில் கவை அடி கடு நோக்கத்து பேய் மகளிர் பெயர்பு ஆட* —'சான்றோர் இருந்த பெரிய அம்பலங்களிலே இரட்டையான அடிகளையும் கடிய பார்வைகளையும் உடைய பேயாகிய மகளிர் உலாவி ஆட,

164. *அணங்கு வழங்கும் அகல் ஆங்கண்* - இல்லுறை தெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து,

---

[1] முருகு. 217, அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] *தழூஉ* வென்பதற்குக் குரவையென்று இங்கே பொருளெழுதியவாறே, "ஆங்க ணயர்வர் தழூஉ" (கலித். 104 : 62) என்றவிடத்தும் எழுதுவர்.

[3] முருகு. 226, ந.

[4] *சான்றோர்* - குடிப்பிறப்பு முதலிய எண்குணங்களமைந்தோர்; "எட்டுவகை நுதலிய அவையத் தானும்" (தொல். புறத்திணை, சூ. 21) என்பதன் உரையாலும், "குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி, விழுப்பே ரொழுக்கம் பூண்டு நாளும், வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையின், காதலின் பத்துத் தூங்கித் தீதறு, நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும், அழுக்கா றின்மை யவாஅ வின்மையென, இருபெரு நிதியமு மொருதா மீட்டும், தோலா நாவின் மேலோர் பேரவை" (ஆசிரிய மாலை) என்னும் அதன் மேற்கோளாலும், "குடிப்பிறப்புக் கல்வி" (பு. வெ. 173, மேற்.) என்பதனாலும், "அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை, ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை – இழுக்காத, நற்புலமை யோடு நடுவு நிலைமையே, கற்புடைய வெட்டுறுப்புக் காண்" (வீர. மேற்.) என்பதனாலும் அக் குணங்களை அறியலாகும்.

165. நிலத்து ஆற்றும் குழூஉ புதவின் - நிலத்திலுள்ளாரை யெல்லாம் போக்கும் வாசல்காப்பாரை உடைய வாசலின்கண்ணே இருந்து,

குழூஉ : ஆகுபெயர்.

இனிக் [1] குடுமி தேய்ந்துபோதலின் மண்ணைக் கொழித்து வருமென்பாருமுளர்.

166. அரந்தை பெண்டிர் இனைந்தனர் அகவ - மனக்கவற்சியை உடைய பெண்டிர் வருந்திக் கூப்பிட,

167 - 8. கொழு பதிய குடி தேம்பி செழு கேளிர் நிழல் சேர - வளவிய ஊர்களிடத்தனவாகிய குடிகளெல்லாம் பசியால் உலர்ந்து புற நாட்டிலிருக்கும் வளவிய சுற்றத்தார் தமக்குப் பாதுகாவலாகச் சென்று சேர,

169 - 70. நெடு நகர் வீழ்ந்த கரி குதிர் பள்ளி குடுமி கூகை குராலொடு முரல - பெரிய மாளிகைகளிலே வெந்து வீழ்ந்த கரிந்த குதிரிடங்களிலே சூட்டினை உடைய கூகைச்சேவல் பேட்டுடனே இருந்து கதற,

171 - 2. கழுநீர் பொலிந்த கண் அகல் பொய்கை களிறு மாய் செருந்தியொடு கண்பு அமன்று ஊர் தர - செங்கழுநீர் மிக்க இடம் அகன்ற பொய்கைகளிடத்தே யானை நின்றால் மறையும் வாட்கோரை யுடனே சண்பங்கோரையும் நெருங்கி வளர,

செருந்தி - நெட்டிக்கோரையுமாம்.

173 - 4. நல் ஏர் நடந்த நசை சால் விளை வயல் பல் மயிர் பிணவொடு கேழல் உகள - நன்றாகிய எருதுகளுழுத நச்சுதலமைந்த விளைகின்ற வயலிடத்தே பல மயிரினை உடைய பெண்பன்றியுடனே ஆண்பன்றி ஓடித் திரிய,

பிணவென்னும் அகரவீற்றுச் சொல் வகரவுடம்படுமெய் பெற்றது; "பன்றி புல்வாய் நாயென மூன்றும், மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை" (தொல். மரபு. சூ. 58) என்றார்.

175. [வாழா மையின் வழிதவக் கெட்டு :] தவ வழி வாழா மையின் கெட்டு - மிக [2] நின் ஏவல் செய்து வாழாமையினாலே கெட்டு,

இனித் தவக்கெட்டெனக் கூட்டி மிகக் கெட்டென்றலுமாம்.

176. பாழ் ஆயின - பாழாய் விட்டன,

நின் பகைவர் தேஎம் - நின்னொடு பகைத்தலைச் செய்தவருடைய நாடுகள்;

---

[1] குடுமி - கதவைத் தாங்கி நிற்பதாயுள்ள ஒருறுப்பு; "தாய ரடைப்ப மகளிர் திறந்திடத், தேயத் திரிந்த குடுமியவே......... கதவு" (முத்.); "திருகுங் குடுமி விடிவளவுந் தேயுங் கபாடம்" (கலிங்க. கடை. 49)

[2] "தொன்றுமொழிந்து தொழில்கேட்ப" (மதுரைக். 72) என்பது இங்கே கருதற்பாலது.

177 – 9. [எழாஅத்தோள், இமிழ்முழக்கின், மாஅத்தா ளுயர் மருப்பிற், கடுஞ்சினத்த களிறுபரப்பி :]

இமிழ் முழக்கின் மா தாள் உயர் மருப்பின் கடு சினத்த களிறு பரப்பி – முழுங்குகின்ற ஓசையையும் பெருமையையுடைய கால்களையும் தலைகளேந்தின கொம்புகளையுமுடைய கடிய சினத்தவாகிய யானைகளை எங்கும் பரப்பி,

180. [விரிகடல் வியன்றானையொடு :] [1] எழா தோள் (177) விரி கடல் வியல் தானையொடு - [2]முதுகிட்டார்மேற் செல்லாத தோளினை உடைய விரிகின்ற கடல்போலும் அகற்சியை உடைய படையோடே,

181. முருகு உறழ பகை தலை சென்று - முருகன் பகைவர்மேற் செல்லுமாறுபோலத் தடையறப் பகைவரிடத்தே சென்று,

முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய் நின்றது.

182. அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ - அகன்ற ஆகாயத்தின் கண்ணே படையெழுந்த ஆரவாரம் ஒலிப்ப,

விசும்பெனவே ஆகுபெயராய்த் தேவருலகை உணர்த்திற்று.

183. பெயல் உறழ கணை சிதறி - மழையோடே மாறுபடும்படி அம்புகளைத் தூவி,

184. பல புரவி நீறு உகைப்ப - [3] பல குதிரைத்திரள் ஓடுகின்ற விசையால் துகள்களை எழுப்ப,

185. வளை நரல - சங்கம் முழங்க,

வயிர் ஆர்ப்ப – கொம்பு ஒலிப்ப,

186. பீடு அழிய [4]கடந்து அட்டு - பெருமை கெடும்படி வென்று கொன்று,

---

[1] "எழாஅத் துணைத்தோள் - போரில் முதுகிட்டார்மேற் செல்லாத இணைமொய்ம்பு" (பதிற். 90 : 27, உரை) எனப் பிறரும் இவ்வாறே பொருள் கூறுதல் காண்க.

[2] "இகலேகருதிச், சேர்ந்தார் புறங்கண்டு செங்நிலத் தன்று திண் டேர்மறித்துப், பேர்ந்தான்", "செங்நிலந் தைச்செருவில், மறிந்தார் புறங்கண்டு நாணியகோன்" (பாண்டிக்கோவை); "அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக், கழிதறு கண்மை" (பு. வெ. 55)

[3] "மாவெடுத்த மலிகுரூஉத்துகள்" (மதுரைக். 49)

[4] "கடந்தடு முன்பு" (கலித். 2 : 4) என்பதற்கு, 'வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வலி' என நச்சினார்க்கினியரும், "கடந்தடு தானை" (புறநா. 8 : 5) என்பதற்கு, 'வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படை' என்று அந்நூலுரையாசிரியரும் எழுதிய உரைகள் இங்கே கோடற்குரியன.

186 - 7. அவர் நாடு அழிய எயில் வௌவி – அவருடைய நாடுகள் அழியும்படியாக அவர் இருக்கின்ற மதிலைக் கொண்டு,

188. சுற்றமொடு தூ அறுத்தலின் - அவர்களுக்கு உதவி செய்யும் சுற்றத்தாரோடே கூட அவர்கள் வலியைப் போக்குதலாலே,

189. செற்ற தெவ்வர் நின் வழி நடப்ப - நின்னாற் சிறிது செறப் பட்ட பகைவர் நின் ஏவல் கேட்டு நடக்கையினாலே,

190. வியல் கண் முது பொழில் மண்டிலம் முற்றி - அகலத்தை இடத்தே உடைய பழைய நாவலந்தீவின்கண் உளவாகிய சோழ மண்டலம் தொண்டைமண்டலம் என்கின்ற மண்டலங்களை நின்ன வாக வளைத்துக்கொண்டு,

மண்டலம் மண்டிலமென மருவிற்று.

191. அரசு இயல் பிழையாது - நூல்களிற் கூறிய அரசிலக் கணத்தில் தப்பாமல்,

191 - 2. [அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது :] பெரியோர் சென்ற அடிவழி பிழையாது அறம் நெறி காட்டி - நின் குலத்திற் பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழியைத் தப்பாமல் அறநெறி இருக்கும்படி இதுவென்று அவர்களுக்கு விளக்கி,

நனிபுகன்றுறைதுமென்னாது ஏற்றெழுந்து (147) களிறு பரப்பித் (179) தானையோடே (180) தலைச்சென்று (181) அரச மண்டிலமுற்றிச் (190) செற்ற தெவ்வர் நின்வழி நடக்கையினாலே (189) நீ நட்டவர் குடியை உயர்க்குவை(131)யாகையினாலே அவர் களுக்கு அறநெறி காட்டிப் (191) பின்னர் அம்மண்டலங்களைச் சூழ இருந்த குறுநிலமன்னர் அரண்களிலுள்ளனவற்றை எளிதிற் கொண்டு (145) வீசிப் (146) போகிப் (148) புக்கு அவரருப்பங்களை வௌவிப் (149) பின்னர் உறுசெறுநர் (152) நின்வழி வாழாமை யினாலே (175) அவர் புலம் புக்கு (152) நீ நரை உருமேறனையை (63) யாகையினாலே அரசியல் பிழையாமல் (191) ஆர்ப்பெழ (182) நீறுகைப்ப (184) நரல ஆர்ப்பக் (185) கணைசிதறித் (183) தொலைச்சி (153) அவரைக் கடந்து அட்டு (186) அவரெயிலை வௌவி(187) அவரைத் தூவறுத்தலின் (188) அப்பகைவர் தேஎம் (176) எரிமேயக் (155) காடாக (156) மா சேப்பப் (157) பாழாக (158) மறப்ப (160) ஆட (163) அகவச் (166) சேர (168) முரல (170) ஊர்தர (172) உகளக் (174) கெட்டுப் (175) பாழாயின (176); அங்ஙனம் பாழாயின பின்பு நீ செற்றவர் அரசு பெயர்க்குவை (132) யாகையி னாலே வேண்டுபுலத்திறுத்து (150) அந்நாடுகள் மேம்படுதற்கு மருவின குருசில் (151) என வினை முடிக்க.

193 - 4. [குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம் :] குடமுதல் தோன்றிய

தொன்று தொழு பிறையின் நின் வலம் படு கொற்றம் வழிவழி சிறக்க-மேற்றிசைக்கண் தோன்றிய [1]நின் குலத்திற்குப் பழைதாகிய எல்லாருந் தொழும் பிறை நாடோறும் சிறக்குமா போல நின்னுடைய வெற்றியாலே நின் பின்னுள்ளோர்க்கு உண்டாம் கொற்றம் அவர்கள் வழிவழியாக மிகுவதாக;

195 - 6. [குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்:] குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின் நின் தெவ்வர் ஆக்கம் தேய்வன கெடுக - கீழ்த்திசைக் கண் தோன்றிய நிறைந்த இருளைத் தரும் மதி நாடோறும் தேயுமாறு போல நின் பகைவருடைய ஆக்கம் நாடோறும் தேய்வனவாய்க் கெடுவனவாக;

197 - 8. உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும் பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே - ஒரு பொய்யாலே உயர்ந்த நிலையையுடைய தேவருலகை அவர் நுகரும் அமுதத்தோடே பெறுவையாயினும் அவற்றைத் தருகின்ற பொய் நின்னைக் கைவிட்டு நீங்க மெய்யுடனே நட்புச் செய்தலையுடையை;

இனி, 'பொய்சே ணீங்கிய வாய்நடப் பினையே' என்று பாடமாயின் மெய்யை நடத்தலைச் செய்தனை யென்க.

199 – 201. குழங்கு கடல் ஏணி மலர் தலை உலகமொடு உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும் பகைவர்க்கு அஞ்சி பணிந்து ஒழுகலையே - முழங்குகடலாகிய எல்லையையுடைய அகன்ற இடத்தை யுடைய உலகத்துள்ளாருடனே உயர்ந்த தேவருலகத்துத் தேவரும் பகைவராய் வரினும் பகைவர்க்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகலைச் செய்யாய்;

202 - 4. தென்புலம் மருங்கின் விண்டு நிறைய வாணன் வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கு எழுக என்னுய்-தென்றிசை நிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படி வாணனென்னும் சூரன் வைத்த சீரிய பொருட்டிரள்களினைப் பெறுவையாயினும் பிறர் கூறும் பழி நமக்கு வருவதாகவென்று கருதாய்;

204 - 5. விழு நிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே - சீரிதாகிய பொருளைக் கொடுத்தலையுடைத்தாகிய நெஞ்சுடனே புகழை விரும்புவை;

206. அன்னய் - அத்தன்மையை யுடையாய்,

[நின்னொடு முன்னிலை யெவனோ:] முன்னிலை நின்னொடு எவனோ - ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப் படுவனவாகிய இந்நுகர் பொருள்கட்கு நின்னோடு என்ன உறவுண்டு?

---

[1] "செருமாண் டென்னர் குலமுத லாகலின், அந்தி வானத்து வெண்பிறை தோன்றி" (சிலப். 4 : 22 - 3); "செங்நிலத் தன்று திண்டேர் மறித்துப், பேர்ந்தான் றனது குலமுத லாய பிறைக் கொழுந்தே" (பாண்டிக்.)

நின்னென்றது சீவான்மாவை. முன்னிலை : ஆகுபெயர்.

207 - 8. [கொன்னொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல், கேட்டிசின் வாழி கெடுகநின் னவலம்:]

நின் அவலம் கெடுக - நின்னிடத்து உண்டாகிய மாயை இனிக் கெடுவதாக;

அடு போர் அண்ணல் - அம்மாயையைக் கொல்கின்ற போர்த் தொழில் வல்ல தலைவனே,

கொன் ஒன்று கிளக்குவல் - பெரிதாயிருப்பதொரு பொருளை யான் கூறுவன்; அஃது என்னால் [1]காட்டுதற்கரிது;

என்றது [2]கந்தழியினை.

கேட்டிசின் - அதனைத் [3]தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக;

வாழியென்பதனைச் சுற்றமொடு விளங்கி (770) என்பதன் பின்னே கூட்டுக.

209. [கெடாது நிலைஇயர்நின் [4]சேண்விளங்கு நல்லிசை:] சேண் விளங்கு நின் நல் இசை கெடாது நிலை இயர் - சேட்புல மெல்லாம் சென்று விளங்கும் நின்னுடைய நல்ல புகழ் ஒரு காலமும் கெடாதே நிலைபெறுவதாக;

210 - 16. [தவாப்பெருக்கத் தறாயாணர், அழித்தானாக் கொழுந் திற்றி, இழித்தானாப் பலசொன்றி, உண்டானாக் கூர்நறவிற், றின்றாறு வினைவைகல், பிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப், பயனற வறியா வளங்கெழு திருநகர்:]

தவா பெருக்கத்து அறா யாணர் (210) வளம் கெழு திருநகர் (216) - கெடாத பெருக்கத்தினையுடைய நீங்காத புது வருவாயாலே செல்வம் பொருந்தின திருமகளையுடைய நகர்,

அழித்து ஆனா கொழு திற்றி (211) தின்று (214) - அழிக்கப் பட்டு விருப்பு அமையாத கொழுவிய தசையைத் தின்று,

"ஆடழிக்க" என்ப.

ஆனா பல சொன்றி இழித்து (212) ஆனா கூர் நறவின் உண்டு (213) - விருப்பமையாத பலவகைப்பட்ட சோற்றைத் தீதென்று கூறிக் களிப்பமையாத மிக்க கள்ளை உண்டு.

---

[1] கிளக்குவலென்றமையாற் காட்டுதற்கரிது என்றார்.

[2] கந்தழியைப்பற்றிய செய்தியைத் திருமுருகாற்றுப்படை உரையின் இறுதிப் பகுதியால் அறிந்துகொள்ளலாம்.

[3] மதுரைக். 761; பட்டினப். 170.

[4] "சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். 88 : 36); "விண்பொருபுகழ்" (புறநா. 11 : 6); "வானேற நீண்ட புகழான்" (சீவக. 6)

ஆறு இனம் (214) பாணர் (219) - அவ்விரண்டிலும் விருப்பமை யாத திரட்சியையுடைய பாணரென்க.

தின்று (214) உண்டு (213) ஆறு இனப் (214) பாணர் (219) என்க.

வைகல் (214) - நாடோறும்,

நிலன் எடுக்கல்லா ஒள் பல் வெறுக்கை (215) - நிலம் சுமக்க மாட்டாத ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும்,

என்றது பூண்களையும் பொன்னையும்.

பயன் அறவு அறியா நகர் (216) - எக்காலமும் பயன்கெடுதல் அறியாத நகர்,

217 - 8. நரம்பின் முரலும் நயம் வரும் முரற்சி விறலியர் வறு கை குறு தொடி செறிப்ப - யாழ் வாசித்தாற்போலப் பாடும் நயப் பாடு தோன்றும் [1]பாட்டினையுடைய விறல்பட ஆடுதலையுடையார் தம்முடைய பூணணியாத கைகளிலே குறிய தொடிகளை இட,

"நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்" (சீவக. 658) என்றார் பிறரும்.

219. பாணர் உவப்ப களிறு பல தரீஇ - பாணர் மகிழும்படி யானைகள் பலவற்றையும் கொடுத்து,

நகரிலே யிருந்து (216) நாடோறும் (214) விறலியர் தொடி செறியாநிற்பப் (218) பாணருவப்ப (219) வெறுக்கையையும் (215) யானையையுங் கொடுத்தென்க.

'தரீஇ' என்றதனை, "செலவினும் வரவினும்" (தொல். கிளவி. சூ. 28) என்னும் பொதுச் சூத்திரத்தால் கொள்க.

220. கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ - தம்முடன் நட்புக் கொண்டோர் மனம் மகிழும்படி, அழித்த அரண்களிற் கொண்ட பல பொருள்களையும் அவர்க்குச் செலுத்திக்கொடுத்து,

என்றது, அவர் [2]வேண்டாவென்று மறுக்கவும் தாம் வலியப் போக விட்டென்றவாறு.

221. மறம் கலங்க தலை சென்று - பகைவர் மறம் நிலை குலையும் படி அவர்களிடத்தே சென்று,

222. வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி - அவர்க்கு வாட் போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினூற் பின்பும் அதன்கட் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி,

என்றது, [3]வாட்போரின்கட் பெற்ற இனிமையைப் பின்னும் விரும்பி அதிலே முயல்கின்றாரென வீரச்சிறப்புக் கூறிற்றாம்.

---

[1] "பாடனல் விறலியர்" (பரி. 17 : 15)

[2] "கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று" (புறநா. 204 : 4)

[3] முல்லை 67-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

'விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள், வைக்குந்தன் னாளையெடுத்து'' (குறள், 776) என்றார் பிறரும்.

உழந்தென்னும் செய்தெனெச்சம் காரணப்பொருட்டு. உழந்த தன்னெனப் பெயரெச்சமாயின், தன்னென்னும் ஒருமை மேல் வருகின்ற மன்னர் (234) என்னும் பன்மைக்காகாமை உணர்க.

223 - 4. நாள் ஈண்டிய நல் அகவர்க்கு தேரோடு மா சிதறி - விடியற்காலத்தே வந்து திரண்ட அரசர் விரும்பப்பட்ட சூதர்க்குத் தேருடனே குதிரைகளையும் பலவாகக் கொடுத்து,

என்றது, ''தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச், சூத ரேத்திய துயிலெடை நிலையும்'' (தொல். புறத். சூ. 36) என்னும் விதியாற் சூதர் இருசுடர் தொடங்கி இன்றுகாறும் வருகின்ற தம் குலத்துள்ளோர் புகழை அரசர் கேட்டற்கு விரும்புவரென்று கருதி விடியற்காலத்தே பாசறைக்கண் வந்து துயிலெடை பாடுவரென்பது ஈண்டுக் கூறிற்றும்.

அகவரென்றார், குலத்தோரெல்லாரையும் அழைத்துப் புகழ்வ ரென்பதுபற்றி; ஆகுபெயர், [1] ''அகவல்'' போல.

இனி வைகறை பாடும் பாணர் என்பாரு முளர்.

வாழ்த்தித் திரண்ட அகவரென்க.

225 - 8. [சூடுற்ற சுடர்ப்பூவின், பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின், விழுமிய பெரியோர் சுற்ற மாகக், கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு :] கள்ளின் இரு பைக்கலம் செல உண்டு சூடு உற்ற சுடர் பூவின் பாடு புலர்ந்த நறு சாந்தின் விழுமிய பெரியோர் சுற்றம் ஆக- கள்ளினையுடையவாகிய பெருமையினையுடைய பச்சைக்குப்பிகள் வற்றும்படியாகக் [2]கள்ளினை உண்டு சூடுதலுற்ற விளக்கத்தை யுடைத்தாகிய வஞ்சியினையும் பூசினபடியே புலர்ந்த நறிய சந்தனத் தினையுமுடைய சீரிய படைத்தலைவரைத் தமக்குச் சுற்றத்தாராகக் கொண்டு,

உண்டென்னும் செய்தெனெச்சம் உடையவென்னும் வினைக் குறிப்போடு முடிந்தது.

229. பணிந்தோர் தேஎம் தம் வழி நடப்ப - தம்மை வழிபட் டோருடைய தேசங்கள் தம் ஏவலைக் கேட்டு நடக்கையினாலே,

230. பணியார் தேஎம் பணித்து திறை கொண்மார் - தம்மை வழிபடாதோருடைய தேசங்களைத் தம் ஏவல் கேட்கும்படி பண்ணி அவர்களைத் திறை வாங்குவதற்கு,

---

[1] ''அகவிக் கூறலின் அகவலாயிற்று.........அதனை வழக்கினுள் அழைத்தலென்ப'' (தொல். செய். சூ. 81, ந.)

[2] கள்ளுணல் இங்கே வீரபானம்; சீவக. 1874, ந. பார்க்க.

231. பருந்து பறக்கல்லா பார்வல் பாசறை - உயரப் பறக்கும் பருந்துகளும் பறத்தலாற்றாத உயர்ச்சியையுடைய அரண்களை யுடைய பாசறைக்கண்ணே,

[1] பார்வல் : ஆகுபெயர்.

232. படு கண் முரசம் காலை இயம்ப - ஒலிக்கின்ற கண்ணை யுடைய பள்ளியெழுச்சி முரசம் நாட்காலத்தே ஒலிப்ப இருந்து,

233. வெடி பட கடந்து - பகைவர் படைக்குக் கேடுண்டாக வென்று,

வெடி - ஓசையுமாம்.

வேண்டு புலத்து இறுத்த - பின்னும் அழிக்கவேண்டுமென்ற நிலங்களிலே சென்று விட்ட,

234. பணை கெழு பெரு திறல் பல் வேல் மன்னர் - வெற்றிமுரசு பொருந்தின பெரிய வலியினையும் பலவேற்படையினையுமுடைய அரசர்கள்,

235 - 6. [கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த், திரையிடு மணலினும் பலரே:] கனை இரு முந்நீர் கரை பொருது இரங்கும் திரை இடு மணலினும் பலரே - செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும் திரை குவிக்கின்ற மணலினும் பலரே,

ஏகாரம் : பிரிநிலை.

236 - 7. உரை செல மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே - புகழ் எங்கும் பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய உலகங்களைத் தம் ஏவல்களை நடத்தி மக்கட்குரிய மனனுணர்வின்மையிற் பிறப்பற முயலாது பயனின்றி மாண்டோர்;

ஏகாரம் : ஈற்றசை. "மக்க டாமே யாறறி வுயிரே" (தொல். மரபு. சூ. 33) என்றதனல், மனனுணர்வின்மையினென்றும்.

தரீஇக் (219) கடைஇச் (220) சிதறிப் (224) பணிந்தோர் தேஎம் தம்வழி நடக்கையினலே (229) பணியார் தேஎம் பணித்துத் திறை கொள்ளுதற்குப் (230) பெரியோர் சுற்றமாகக் கொண்டு (227) பாசறையிலே (231) முரசியம்ப இருந்து (232) கடந்து இறுத்த (233) மன்னர் (234) உலகமாண்டு கழிந்தோர் (237) திரையிடுமணலினும் பலர் (236) என முடிக்க.

இது, "மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை" (தொல். புறத். சூ. 24) அன்றிப் பிறவியற முயலாமையிற் கழிந்தமை கூறிற்று.

238. அதனல் - பயனின்மையாலே,

---

[1] பார்வல் - அரசர், தம் பகைவர் செய்மைக்கண் வருதலைப் பார்த்திருத்தற்குரிய உயர்ச்சியையுடைய அரண்.

238 - 44. [குணகடல் கொண்டு குடகடன் முற்றி, இரவு மெல் லையும் விளிவிட னறியா, தவலு மிசையு நீரத் திரள் பீண்டிக், கவலை யங் குழும்பி னருவி யொலிப்பச், களைவளர் சாரற் களிற்றின நடுங்க, வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து, சிதரற் பெரும் பெயல் சிறத்தலின்:]

வான் (243) குணகடல் கொண்டு [1]குடகடல் (238) வரைமுதல் (243) முற்றி (238)-மேகம் கீழ்த்திசைக் கடலிடத்தே நீரை முகந்து மேற்றிசைக் கடலருகின் மலையிடத்தே தங்கி,

இரவும் எல்லையும் விளிவு இடன் அறியாது (239) - இரவும் பகலும் ஒழிந்த இடத்தை அறியாது,

அவலும் மிசையும் நீர் திரள்பு ஈண்டி (240) கவலை அம்[2] குழும் பின் அருவி ஒலிப்ப (241) – பள்ளமும் மேடுமாகிய பலநிலத்துண்டா கிய நீரிலே திரண்டு சேரக் குவிந்து கவலைக் கிழங்கு கல்லின அழகிய குழியிலே வீழ்ந்து அருவி ஒலிக்கும்படி,

கழை வளர் சாரல் களிறு இனம் நடுங்க (242) இரங்கும் ஏறொடு ஞெமிர்ந்து (243) – மூங்கில் வளர்ந்த மலைப் பக்கத்திலே யானைத் திரள் நடுங்கும்படி ஒலிக்கும் உருமேற்றோடே பரந்து,

சிதரல் பெரு பெயல் (244) - சிதறுதலையுடைய பெருமழை,

சிறத்தலின் (244) - மிகுகையினாலே,

வான் (243) முற்றி (238) ஞெமிர்ந்து (243) அருவியொலிக்கும் படி (241) பெரும்பெயல் (244) விளிவிடனறியாது (239) சிறத்தலின் (244) என முடிக்க.

244 - 6. [தாங்காது, குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி, நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றி:] தாங்காது உந்தி நிவந்து செல் நீத்தம் குளம் கொள சாற்றி குணகடற்கு இவர்தரும் குரூஉ புனல் - யாறுகள் தாங்காமல் யாற்றிடைக் குறையிலே ஓங்கிச் செல் கின்ற பெருக்கைக் குளங்கள் கொள்ளும்படி நிறைத்துக் கீழ்த் திசைக் கடலுக்குப் பரந்து செல்லும் நிறத்தையுடைய நீராலே,

247. களிறு மாய்க்கும் கதிர் கழனி - யானைகள் நின்றால் அவற்றை மறைக்கும்படி விளைந்த கதிரையுடைய கழனியிலும்,

248. ஒளிறு இலஞ்சி - விளங்கும் மடுக்களிலும்,

248 - 9. அடை நிவந்த முள் தாள சுடர் தாமரை - இலைக்கு மேலான, முள்ளையுடைய தாள்களையுடையவாகிய ஒளியினையுடைய தாமரைப் பூவினையும்,

---

[1] "மேன்மலை முற்றி" (பரி. 12 : 2); "பெருமலை மீமிசை முற் றின" (அகநா. 278 : 6)

[2] குழும்பு - குழி; மதுரைக். 273, ந.

250. கள் கமழும் நறு நெய்தல் - தேன் நாறும் நறிய நெய்தற் பூவினையும்,

251. வள் இதழ் அவிழ் நீலம் - [1]பெருமையையுடைய இதழ் விரிந்த நீலப்பூவினையும்,

252. மெல் இலை அரி ஆம்பலொடு - மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவோடே,

அரி - மென்மையுமாம்.

253 வண்டு இறை கொண்ட கமழ் பூ பொய்கை - வண்டுகள் தங்குதல் கொண்ட மணநாறும் பிற பூக்களையுமுடைய பொய்கைகளிலும்,

254 - 5. கம்புள் சேவல் இன் துயில் இரிய வள்ளை நீக்கி [2]வய மீன் முகந்து - சம்புட்கோழி இனிய உறக்கம் கெடும்படி வள்ளைக் கொடிகளைத் தள்ளி வலிமையுடைய மீன்களை முகந்துகொண்டு,

256. கொள்ளை சாற்றிய கொடு முடி வலைஞர் - விலைகூறி விற்ற கொடிய முடிகளையுடைய வலையால் மீன் பிடிப்பார்,

கழனியிலும் (247) இலஞ்சியிலும் (248) பொய்கைகளிலும் (253) மீன் முகந்து (255) சாற்றிய வலைஞரென்க.

257. வேழம் பழனத்து நூழிலாட்டு ஓதை (258) - கொறுக்கைச்சியையுடைய மருதநிலத்து மீனைக் கொன்று குவித்தலாற் பிறந்த ஓசை,

258. கரும்பின் எந்திரம் ஓதை - கரும்பிற்கு இட்ட ஆலையிடத்து ஓசை,

கட்பின் ஓதை - களைபறிப்பிடத்து ஓசை,

259 - 60. அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம் கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே - மூத்தலான் அள்ளலிலே வலியற்றுத் தங்கிய எருதுற்ற வருத்தத்தைக் கள்ளை உண்ணும் களமர் பெயர்க்கும் ஆரவாரம்,

261 - 2. ஒலிந்த பகன்றை விளைந்த கழனி வல் கை வினைஞர் அரி பறை - தழைத்த பகன்றையினையுடைய நெல்லு முற்றிய கழனியில் அந்நெல்லை வலிய கையினாலே அறுப்பாருடைய அரித்தெழுகின்ற பறையோசை,

---

[1] பெருமையையுடைய நீலம் : நெய்தல் நீலம் என்னும் இருவகை மலர்களுள் நீலம் சிறப்புடையதாகலின் இவ்வாறு உரையெழுதினார்; "பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்கும்" (ஐங். 2 : 4) என்பதன் விசேட வுரையிலே அதன் உரையாசிரியர், 'சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கு மூரனென்றது......' என்றெழுதியிருத்தல் இதனை வலியுறுத்தும்.

[2] "வயவலி யாகும்" (தொல். உரி. சூ. 68).

262 - 4. இன் குரல் தளி மழை பொழியும் தண் பரங்குன்றில் கலி கொள் சும்மை - இனிய ஓசையினையுடைய துளிகளையுடைய மேகம் தங்கும் குளிர்ந்த திருப்பரங்குன்றில் விழாக் கொண்டாடும் ஆரவாரம்,

"வயிரியர், முழவதிர்ந் தன்ன முழக்கத் தேரேறு" (அகநா. 328 : 1 - 2) என்றார் பிறரும்.

264 - 6. ஒலி கொள் ஆயம் ததைந்த கோதை தாரொடு பொலிய புணர்ந்து உடன் ஆடும் இசையே -புதுநீர் விழவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட [1] மகளிர்திரள் தம்மிடத்து நெருங்கின கோதை தம் கணவர் மார்பின் மாலையுடனே அழகுபெறக் கூடி அவர் களுடனே நீராடும் ஓசை.

266 - 7. அனைத்தும் அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப - அவ்வோசை முழுவதூஉம் [2]தன்னையொழிந்த பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய பெருமையையுடைய ஆகாயத்தே சென்று முழங்கி ஆண்டு வாழ்வார்க்கு இனிதாக ஒலிப்ப,

268 - 9. குருகு நரல மனை மரத்தான் மீன் சீவும் பாண் சேரி யொடு - குருகென்னும் பறவைகள் கூப்பிடும்படி மனையிடத்து மரங்களேறும் மீனைத் திருத்தும் பாணர் குடியிருப்பிற் பாடலாட லால் எழுந்த ஓசையோடே,

270. மருதம் சான்ற - ஊடலாகிய உரிப்பொருளமைந்த,

தண்பணை சுற்றி - மருதநிலம் சூழப்பட்டு,

ஒரு சார் - ஒரு பக்கம்,

ஒரு சார் (270) சேரியிலோசையோடே (269) ஓதை (258) ஆர்ப்புப் (260) பறையோசை (262) சும்மை (264) இசையாகிய அவ் வோசை முழுவதும் (266) இசைக்கும்படி (267) தண்பணை சுற்றப் பட்டு (270) என்க.

271. சிறு தினை கொய்ய - சிறிய தினையை அறுக்க,

[3]கவ்வை கறுப்ப - எள்ளிளங்காய் முற்ற,

272. கரு கால் வரகின் இரு குரல் புலர - கரிய தாளினையுடைய வரகினது கரிதாகிய கதிர் முற்ற,

---

[1] "மைந்தர் கண்ணி மகளிர் சூடவும், மகளிர் கோதை மைந்தர் மலையவும்" (பட்டினப். 109 – 10); "மகளிர் கோதை மைந்தர் புனைய வும், மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்" (பரி. 20: 20: - 21)

[2] பெரும்பாண். 1, உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

[3]கவ்வை - எள்ளிளங்காய் ; மலைபடு. 105. ந.

273. ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர - ஆழ்ந்த குழியிலே திருவினையுடைய மணி கிடந்து விளங்க,

274 - 6. [எழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப், பெருங் கவின் பெற்ற சிறுதலை நௌவி, மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள :] பெரு கவின் பெற்ற சிறு தலை நௌவி எழுந்த கடற்றில் நல் பொன் கொழிப்ப மடம் கண் பிணையொடு மறுகுவன உகள - பெரிய அழகைப் பெற்ற சிறிய தலையினையுடைய நௌவிமான் வளர்ந்த காட்டில் மாற்றற்ற பொன் மேலேயாம்படி மடப்பத்தை யுடைத்தாகிய கண்ணினையுடைய பிணையோடே சுழல்வனவாய்த் துள்ள,

277. சுடர் பூ கொன்றை தாஅய நீழல் - ஒளியினையுடைய வாகிய பூக்களையுடைய கொன்றை பரந்த நிழலிடத்தே,

278. பாஅயன்ன பாறை அணிந்து - பரப்பினாலொத்த பாறை அழகுபெற்று,

279 – 81. [நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்:] நீலத்து அன்ன பைம்பயிர் மிசைதொறும் சுரி முகிழ் முசுண் டையொடு முல்லை வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து தாஅய் – நீல மணியையொத்த பசிய பயிர்களினிடங்கடோறும் முறுக்குண்ட அரும்புகளையுடைய முசுண்டையுடனே முல்லையினுடைய வெள்ளி யின் நிறத்தையொத்த ஒள்ளிய பூக்கள் உதிர்ந்து பரந்து,

282 – 4. [மணிமருளணைய்த லுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப:] வல் லோன் தைஇய வெறி களம் கடுப்ப காமர் துணி நீர் மெல் அவல் மணி மருள் நெய்தல் தொய்யிலொடு உறழ மலர-இழைத்தல் வல்லவன் இழைத்த வெறிக் கூத்தையுடைய களத்தையொப்ப விருப்பத்தை யுடைய தெளிந்த நீரையுடைத்தாகிய நெகிழ்ந்த பள்ளத்திலே நீல மணியென்று மருளும் நெய்தல் தொய்யிற்கோடியோடே மாறுபட மலர,

258. முல்லை சான்ற புறவு அணிந்து ஒரு சார் – [1] இருத்த லாகிய உரிப்பொருள் அமைந்த காடு சூழ்ந்து ஒரு பக்கம்,

ஒரு சார் (285) அணிந்து (268) தாஅய்க் (281) கொய்யக் கறுப்பப் (271) புலரக் (272) கிளர (273) உகள (276) மலரப் (283) புறவு சூழப்பட்டு (285) என முடிக்க.

''பன்முறை யானும்'' (தொல். வினை. சூ. 36) என்பதனாற் பல வினையெச்சம் விராஅய் அடுக்கி அணிந்தென்னும் வினைகொண்டன.

---

[1] சிறுபாண். 169 அடிக்குறிப்பைப் பார்க்க.

286 - 7. நறு காழ் கொன்று கோட்டின் வித்திய குறு கதிர் தோரை - [1] நறிய அகிலையும் சந்தனத்தையும் வெட்டி மேட்டு நிலத்தே விதைத்த குறிய கதிர்களையுடைய தோரைநெல்லும்,

287. நெடு கால் ஐயவி - நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகும்,

288. [2]ஐவனம் வெள் நெல்லோடு அரில் கொள்பு நீடி - ஐவன நெல்லென்னும் வெள்ளிய நெல்லோடே பிணக்கம் கொண்டு வளரப் பட்டு,

289-90. இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும் பல்வேறு தாரமொடு கல் அகத்து ஈண்டி - இஞ்சியும் மஞ்சளும் பசுத்த மிளகு கொடியும் ஒழிந்த பலவாய் வேறுபட்ட பண்டங்களும் கற்றரையிடத்தே குவியப்பட்டு,

291. தினை விளை (பி - ம்: தினைவளர்) சாரல் கிளி கடி பூசல் - தினையும் விளையப்படுகின்ற மலைப்பக்கத்திற் படியும் கிளியை ஓட்டும் ஆரவாரம்,

நீடி ஈண்டியென்னும் செய்தெனெச்சங்கள் விளையுமென்னும் பிறவினை கொண்டன, [3] "அம்முக் கிளவி" என்னும் சூத்திர விதியால்.

292 - 3. மணி பூ அவரை குரூஉ தளிர் (பி – ம்: குரூஉத் திரள்) மேயும் ஆமா கடியும் கானவர் பூசல் - பன்மணிபோலும் பூவினையுடைய அவரையினது நிறவிய தளிரைத் தின்னும் ஆமாவை ஓட்டும் கானவருடைய ஆரவாரம்,

294 - 5. சேணோன் அகழ்ந்த மடி வாய் பயம்பின் வீழ் முகம் (பி - ம்: விழுமுகக்) கேழல் அட்ட பூசல் - மலைமிசை உறையும் குறவன் கல்லப்பட்ட மூடின வாயையுடைய பொய்க்குழியிலே விழும் பக்குவத்தினையுடைய ஆண் பன்றியைக் கொன்றதனாலுண்டான ஆரவாரம்,

சேணோன் அகழ்ந்த பயம்பு - இழிகுலத்தோனாகியவன் அகழ்ந்த பயம்பென்பாருமுளர்.

---

[1] "நறைபடர் சாந்த மறவெறிந்து நாளால், உறைஎதிர்ந்து வித்தியவூ ழேனல்" (திணைமாலை. 1)

[2] ஐவனமும் வெண்ணெல்லும் ஒன்றென்பது தோன்ற, "ஐவன வெண்ணெல்" (கலித். 43 : 4) என்பதற்கு, 'ஐவனமாகிய வெண்ணெல்லை' என்று இங்கே கூறியவாறே நச்சினார்க்கினியர் உரையெழுதியுள்ளார்; ஆயினும், "ஐவனம் வெண்ணெல்" (மலைபடு. 115) என்ற அடியும் அதற்கு இவர், 'ஐவன நெல்லும் வெண்ணெல்லும்' என உரை கூறியிருப்பதும் அவ்விரண்டும் வேறென்று பொருள் கொள்ளச் செய்கின்றன; இவை ஆராய்ச்சிக்குரியன.

[3] "அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற், சினையொடு முடியா முதலொடு முடியினும், வினையோ ரனைய வென்மனார் புலவர்" (தொல். வினை. சூ. 34)

296 - 7. கரு கால் வேங்கை [1] இரு சினை பொங்கர் நறு பூ கொய்யும் கானவர் (293) பூசல் - கரிய தாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடுகளில் தோன்றிய சிறிய கொம்புகளில் பூத்த நறிய பூவைப் பறிக்கும் மகளிர் புலிபுலியென்று கூறும் ஆரவாரம்,

297 - 8. இரு கேழ் ஏறு அடு வய புலி பூசலொடு - கரிய நிறத்தையுடைய பன்றியைக் கொல்லுகின்ற வலியினையுடைய புலியினது ஆரவாரத்தோடே,

ஏறு - [2] ஆனேறுமாம்.

298. அனைத்தும் - முழுவதும்,

299 - 301. [இலங்குவெள் ளருவியொடு சிலம்பகத் திரட்டக், [3] கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந், தருங்கடி மாமலை தழீஇ:]

இலங்கு வெள் அருவியொடு கரு கால் வெற்பு அணிந்து-விளங்குகின்ற வெள்ளிய அருவி வீழ்கின்றவாற்றாலே கரிய நீரோடும் கால்களையுடைய பக்கமலைகள் சூழ்ந்து,

சிலம்பு அகத்து இரட்ட - மலையிடத்தே மாறிமாறி ஒலிப்ப,

[4] குறிஞ்சி சான்ற - புணர்ச்சியாகிய உரிப்பொருள் அமைந்த,

அரு கடி மா மலை தழீஇ - பெறுதற்கரிய சிறப்பினையுடைய பெரிய மலை தழுவப்பட்டு,

301. ஒரு சார் - ஒரு பக்கம்,

ஒரு சார் (301), அருவியாற் (299) கருங்காலையுடைய வெற்பணிதலாலே (300) நீடி (288) ஈண்டி (290) விளையும் சாரலிற் கிளிகடிபூசல் (291), கானவர் பூசல் (293), அட்ட பூசல் (295), கொய்யும் பூசலாகிய (297) அனைத்துப் பூசலும் புலிப் பூசலோடே (298) சிலம்பகத்து இரட்டக் (299) குறிஞ்சி சான்ற (300) அருங்கடியினையுடைய மலை தழுவப்பட்டு (301) என முடிக்க.

302. [இருவெதிர்ப் பைந்தூறு கூஉரெரி நைப்ப:] இரு வெதிர் கூர் எரி பைந்தூறு நைப்ப-[5]பெரிய மூங்கிலிற் பிறந்த மிக்க நெருப்பு பசிய தூறுகளைச் சுடுகையினாலே,

---

[1] (பி - ம்.) 'பெருஞ்சினைப்' [2] (பி - ம்.) 'ஆனையுமாம்'

[3] (பி - ம்.) 'கருங்கோற்குறிஞ்சி'

[4] "புணர்தலின்றி இல்லறம் நிகழாமையின் புணர்தற் பொருட்டாகிய குறிஞ்சியை அதன்பின் வைத்தார். இதற்கு உதாரணம் இறந்தது; 'கருங்காற் குறிஞ்சி சான்றவெற் பணிந்து' என்பது கரு" (தொல். அகத். சூ. 5, ந.) என்றவிடத்து இவ்வுரையாசிரியர் இவ்வடிக்குக் கொண்ட பொருளும், இங்கே அந்வயம் செய்துகொண்ட பொருளும் மாறுபடுதல் ஆராய்தற்குரியது.

[5] "வான்றெருடர் மூங்கி றந்த வயங்குவெந் தீயி தென்னத், தான்றொடர் குலத்தை யெல்லாந் தொலைக்குமா சமைந்து நின்றாள்",

303. நிழத்த யானை மேய் புலம் படர - ஒய்ந்த யானைகள் தமக்கு மேயலாம் இடங்களிலே போக,

304. கலித்த இயவர் இயம் [1]தொட்டன்ன - மகிழ்ந்த வாச்சியக்காரர் தம் வாச்சியத்தை வாசித்தாலொத்த,

305. கண் விடுபு உடையூ தட்டை கவின் அழிந்து - மூங்கிலின் கண் திறக்கப்பட்டு உடைந்து இயம் தொட்டன்ன (304) ஓசையை யுடைய தட்டை அழகு அழிகையினாலே,

தட்டப்படுதலின் தட்டையென்றார்.

நெருப்பு நைக்கையினாலே (302) பயிரின்றித் தட்டை கவினழி கையினாலே (305) ஒய்ந்த யானை மேய்புலம் படரும்படி (303) அருவி யான்ற மலை (306) என்க.

கவினழியவெனத் திரித்து முடித்தலுமாம்,

306. அருவி ஆன்ற அணி இல் மா மலை-அருவிகள் இல்லையான அழகில்லாத பெரிய மலையிடத்து விடரகம் (308),

307. வை கண்டன்ன புல் முளி அம் காட்டு – வைக்கோலைக் கண்டாற்போன்ற [2] ஊகம் புல் உலர்ந்த அழகிய காட்டிடத்தில்,

308. கம சூழ் [3]கோடை விடர் அகம் முகந்து - நிறைவினை யுடைய [4]'சூறுவளியை முழைஞ்சிடங்கள்' முகந்து கொள்கை யினாலே,

309. கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை - காற்று மிகுந்த கடல்போல் ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய வேணிற்குன்றம் (313),

310 - 11. இலை வேய் குரம்பை உழை அதள் பள்ளி உவலை கண்ணி வல் சொல்[5]இளைஞர் - குழையாலே வேய்ந்த குடிலில் இருக்கும் மான்றோலாகிய படுக்கையினையும் தழைவிரவின கண்ணியினை யும் கடிய சொல்லினையுமுடைய இளையோர்.

312. சிலை உடை கையர் கவலை காப்ப - வில்லையுடைய கையை யுடையராய்ப் பல வழிகளில் ஆறலை கள்வரைக் காக்கும்படி சுரஞ் சேர்ந்து (314) என்க.

"அமைத்தரு கனலென" (கம்ப. கரன்வதை. 66, திருவடி. 40); "மூங்கிலிற் பிறந்து முழங்குதி மூங்கின் முதலற முருக்குமா போல" (உத்தர. இலவணன். 29); "தீக்குப் பிறந்தவில் லென்னும், வேய்க் குச் சிறப்பென்கொல் வேறே" (தக்க. 304); "கிளை தம்மிலுற்ற செம்மைக் கனலான் முடிவுற்றிடுஞ் செய்கையேபோல்" (கந்த. மகாசாத்தாப். 17)

[1] (பி - ம்.) 'தொட்டென்ன'

[2] ஊகம்புல் : பெரும்பாண். 122. [3] (பி - ம்.) 'கொட்டை'

[4] சூறுவளி - சுழல் காற்று; "சூறுவளி வைகிய சூழலின்வாய்" (கந்த. காமதகனப். 24) [5] (பி - ம்.) 'இளையர்'

313. நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து - நிழல் தன் வடிவை இழத்தற்குக் காரணமான முதுவேனிற் காலத்தையுடைய மலையிடத்துச் சுரம் (314),

314. பாலை சான்ற - பிரிவாகிய உரிப்பொருள் அமைந்த,

சுரம் சேர்ந்து - அருநிலம் சேரப்பட்டு,

ஒரு சார் - ஒரு பக்கம்,

ஒரு சார் (314), மலை (306) விடரகம் கோடையை முகக்கையினாலே (308) கடலிறெலிக்குஞ் சும்மையையுடைய (309) வேனிற் குன்றத்துப் (313) பாலை சான்ற சுரஞ் சேரப்பட்டு (314) என்க.

பாலைக்கு [1]நடுவணதென்னும் பெயர் கூறியவதனால், அது தத்தம் பொருளானும், "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்ப தோர் படிவங் கொள்ளும்" (சிலப். 11 : 64 - 6) என [2]முதற் பொருள்பற்றிப் பாலை நிகழ்தலானும் பாலையையும் வேறோர் நிலமாக்கினர்.

315. முழங்கு கடல் தந்த [3]விளங்கு கதிர் முத்தம் - ஒலிக்குங் கடல் தந்த விளங்குகின்ற ஒளியினையுடைய முத்து,

316. அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை - [4]வாளரம் கீறி அறுத்த இடம் நேரிதாகிய விளங்கும்வளை.

நேர்ந்த வளையுமாம்.

317. பரதர் தந்த பல் வேறு கூலம் - செட்டிகள் கொண்டு வருதலால் மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்,

---

[1]நடுவணதென்னும் பெயர் பாலைக்குண்மையையும் அப்பெயர்க் காரணத்தையும், "அவற்றுள், நடுவ ணைந்திணை நடுவண தொழிய" (தொல். அகத். சூ. 2) என்பதன் உரையாலுணரலாகும்.

[2]முதற் பொருளென்றது ஈண்டு நிலமாகிய முதற் பொருளை.

[3]கடல் முத்துச் சிறந்ததாகலின், 'விளங்கு கதிர் முத்தம்' என இங்கே அதனைச் சிறப்பித்தார்; "தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள்... ..கடலினிடத்தே பிறந்தனவாயினும்" (கலித். 9 : 15 - 6, ந.), "உவரிமுத்தென்றது எட்டிடத்திலும் சிறப்புடைய இடம் கடலாகையாலெனவுணர்க" (நக்க. 181, உரை) என்பன இக் கருத்தை வலியுறுத்தும்.

[4]"விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை" (சீவக. 2441) என்பதனையும், "வளைந்த வாளரமறுத்த சங்கவளை' (ந.) என்ற அதன் உரையையும் காண்க; "வாளரந் துடைத்த வைவேல்" (சீவக. 461) என்றவிடத்து. 'வாளரம் - அரவிசேடம்' என்றெழுதி யுள்ள உரை இங்கே கோடற்குரியது.

தந்ததென்றும் பாடம்.

318. [இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்பு:]

இரு கழி செறுவின் வெள் உப்பு - கரிய கழியிடத்துப் பாத்தியில் விளைந்த வெள்ளிய உப்பு,

தீ புளி - கருப்புக் கட்டி (-கரும்பின் வெல்லக் கட்டி) கூட்டிப் பொரித்த புளி,

319. பரந்து ஓங்கு வரைப்பின் - மணற் குன்று பரந்து உயரும் கானலிடத்தே,

319 – 20. வல் கை திமிலர் [1]கொழு மீன் குறைஇய துடி கண் துணியல் - வலிய கையினையுடைய திமிலர் கொழுவிய மீன்களை அறுத்த துடியின் கண்போல் உருண்ட துணிகள்,

என்றது கருவாடுகளை.

தீம்புளியினையும், உப்பினையும், கருவாட்டினையும் ஏற்றின நாவாய் (321) என்க.

321. விழுமிய நாவாய் - சீரிய மரக்கலம்,

பெருநீர் ஓச்சுநர் - மரக்கல மீகாமர்,

322. நனை தலை தேஎத்து - அகன்ற இடத்தையுடைய யவனம் முதலிய தேயத்தினின்றும்,

நல் கலன் உய்ம்மார் - இவ்விடத்துண்டாகிய பேரணிகலங்களை ஆண்டுச் செலுத்துதற்கு,

323. புணர்ந்து - பலரும் கூடி,

உடன் கொணர்ந்த புரவியொடு - சேரக் கொண்டு வந்த குதிரைகளோடே,

அனைத்தும் - முழுவதும்,

324. வைகல் தோறும் வழி வழி சிறப்ப - நாடோறும் முறைமையே முறைமையே மிகுகையினாலே வளம் பல பயின்று (325) என்க.

325. நெய்தல் சான்ற - இரங்கலாகிய உரிப்பொருள் அமைந்த,

வளம் பல பயின்று – பல செல்வமும் நெருங்கப்பட்டு,

ஒரு சார் (314), பெருநீரோச்சுநர் (321) கலனுய்ம்மார் தேஎத்துக் (322) கொணர்ந்த் புரவியோடே (323) முத்தம் (315) வளை (316)

---

[1] "கொழுமீனுண்ட வன்னங்களே" (திருச்சிற். 188) என்பதன் உரையில், 'கொழுமீனென்பது ஒரு சாதி' (பேர்.) என எழுதியிருத்தலால் இப்பெயரமைந்த ஒருவகை மீன் உண்மை பெறப் படுகின்றது; "கொழுமீன் குறைய வொதுங்கி" (சிறுபாண். 41); "நெய்த்தலைக் கொழுமீன்", "கொழுமீன் சுடுபுகை" (நற். 291 : 2, 311 : 6); "நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்" (பெரிய. திருக் குறிப்புத். 35)

கூலமானவை (317) அனைத்தும் (323) வழிவழிச் சிறப்ப (324) வளம்பல பயிலப்பட்டு (325) என்க.

நெய்தல் சான்ற (335) பரந்தோங்கு வரைப்பின்கண்ணே (319) வளம் பல பயிலப்பட்டு (325) என முடிக்க.

325 - 6. ஆங்கு [1]ஐம் பால் திணையும் கவினி - அம்மண்டலத்தின் கண்ணே ஐந்து கூற்றினையுடைய நிலங்களும் அழகு பெற்று,

அமை வர - பொருந்துதல் தோன்ற,

327 - 8. [முழவிமிழு மகலாங்கண், விழவுநின்ற வியன் மறுகின்:]

முழவு இமிழும் விழவு நின்ற வியல் மறுகின் - முழவு முழங்கும் திருநாள் நிலைபெற்ற அகற்சியையுடைய தெருவினையும்,

329. துணங்கை - துணங்கைக் கூத்தினையும்,

அம் தழூஉவின் - அழகினையுடைய குரவைக் கூத்தினையும்,

மணம் கமழ் சேரி - மணம் நாறுகின்ற பரத்தையர் சேரியினையும்,

330. [2]இன் கலி யாணர் - இனிய செருக்கினையுடைத்தாகிய புது வருவாயினையுமுடைய,

அகல் [3]ஆங்கண் (327) - அகன்ற ஊரிடத்தே,

330. [குழூஉப்பல பயின்று:] பல குழூஉ பயின்று - பல குடித் திரள் நெருங்கி,

ஆங்கு - அந்நாட்டில்,

331. பாடல் சான்ற நல் நாட்டு நடுவண் - புலவராற் பாடுதல் முற்றுப்பெற்ற நல்ல நாட்டிற்கு நடுவணதாய்,

ஒருசார் தண்பணை சுற்றப்பட்டு (270) ஒருசார் மலை தழுவப் பட்டு (301) ஒருசார் காடு தழுவப்பட்டு (285) ஒருசார் சுரஞ் சேரப் பட்டு (314) ஒருசார் நெய்தல் சான்ற (325) வரைப்பின்கண்ணே (319) வளம்பல பயிலப்பட்டு ஆங்கு (325) ஐம்பாற்றிணையும் கவினி (326) அந் நாட்டிடத்து (330) அகலாங்கட் (327) குழூஉப்பல பயின்று (330) அமைவரப் (326) பாடல் சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) என்க.

332 - 7. [கலைதாய வுயர்சிமையத்து, மயிலகவு மலிபொங்கர், மந்தி யாட மாவிசும் புகந்து, முழங்குகால் பொருத மரம்பயில் காவின், இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற், கான் பொழில்:]

---

[1] பாண்டிநாடு ஐவகை நிலங்களும் அமையப்பெற்றதாதலின் பாண்டியனுக்குப் பஞ்சவனென்னும் பெயர் உண்டாயிற்று என்பர்.

[2] (பி - ம்.) 'இன்கண்'

[3] ஆங்கணென்பதற்கு ஊரிடமென்று இங்கு எழுதியவாறே, "அகலாங்க ணளைமாறி" (கலித். 108 : 5) என்னுமிடத்தும் இவ் வுரையாசிரியர் எழுதுதல் அறியத்தக்கது.

கலை தாய (332) மலி பொங்கர் (333) மந்தி ஆட (334) மரம் பயில் கா (335) - முசுக்கலைகள் தாவின மிக்க கொம்புகளிலே அவற்றின் மந்திகள் விளையாடும்படி நெருங்கின சோலை,

மா விசும்பு உகந்து (334) - பெரிய ஆகாயத்தே செல்ல உயர் கையினுலே,

முழங்கு கால் பொருத மரம் (335) - முழங்குகின்ற பெருங் காற்று அடித்த மரம்,

மயில் அகவும் (333) காவின் (335) - மயில் ஆரவாரிக்கும் காவோடே,

உயர் சிமையத்து (332) இயங்கு புனல் கொழித்த வெள் தலை குவவு மணல் (336) கான் பொழில் (337) - உயர்ந்த மலையுச்சி யிடத்துநின்றும் வீழ்ந்தோடுகின்ற நீர் கொழித்து ஏறட்ட வெள்ளிய தலையினையுடைத்தாகிய திரட்சியையுடைய மணற் குன்றிடத்து மணத்தையுடைய பொழில்,

337. தழீஇய அடை கரை தோறும் - காவோடே (335) பொழில் (336) சூழ்ந்த நீரடையும் கரைகள்தோறும்,

338 - 42. [தாதுசூழ் கோங்கின் பூமலர் தா அய்க், கோதையி னெழுகும் [1]விரிநீர் நல்வரல், அவிரறல் வையைத் துறைதுறை தோறும், பல்வேறு [2]பூத்திரட் டண்டலை சுற்றி, அழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையும்:]

தாது சூழ் கோங்கின் பூ மலர் தாஅய் (338) கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல் (339) வையை (340) - தாதுக்கள் சூழ்ந்த கோங்கினுடைய பூவும் ஏனை மலர்களும் பரந்து மாலை ஒழுகினாற் போல ஓடும் பெருநீர் நன்ருகி வருதலையுடைய வையையிடத்து,

அவிர் அறல் துறை துறை தோறும் (340) பல்வேறு பூ திரள் தண்டலை சுற்றி (341) அழுந்து பட்டு இருந்த [3]பெரும்பாண் இருக்கையும் (342) - விளங்குகின்ற அறலையுடைய துறைகடோறும் பலவாய் வேறுபட்ட பூத்திரளையுடைய பூந்தோட்டங்கள் சூழப்பட்டு நெடுங்காலம் அடிப்பட்டிருந்த பெரிய பாண்சாதியின் குடியிருப் பினையும்,

343 - 5. நிலனும் வளனும் கண்டு அமைகல்லா விளங்கு பெரு திருவின் மானவிறல்வேள் அழும்பில் அன்ன நாடு இழந்தனரும் - நிலத்தையும் அதிற் பயிர்களையும் [4]பார்த்த பார்வை மாறுதலமையாத

---

[1] (பி - ம்.) 'விரிநீ ரவிரற னல்வரல் வையை'

[2] (பி - ம்.) 'பூவின் றண்டலை'

[3] பெரும்பாணச் சாதியின் இலக்கணத்தை இப்புத்தகம் 179-ஆம் பக்கத்தின் தொடக்கத்திற் காண்க.

[4] ''கண்வாங் கிருஞ்சிலம்பின் - பார்த்தவர்கள் கண்ணைத் தன்

விளங்கும் பெரிய செல்வத்தினையுடைய மாஅவிறல் வேளென்னும் குறுநில மன்னனுடைய அழும்பிலென்னும் ஊரையொத்த நாடுகளை இழந்தவர்களும்,

346. கொழு பல் பதிய குடி இழந்தனரும் - செல்வத்தினை யுடைய பல ஊர்களிடத்தனவாகிய குடிகளை இழந்தவர்களும்,

347. தொன்று கறுத்து உறையும் துப்பு தர வந்த - பழைய தாய் [1]செற்றங்கொண்டு தங்கும் வலி தம்மைக் கொண்டு வருகையி னாலே எதிராய் வந்த,

348. அண்ணல் யானை அடு போர் வேந்தர் - தலைமையினை யுடைய யானையினையும் பகைவரைக் கொல்லும் போர்த்தொழிலையும் உடைய வேந்தரை,

பல் மாறு ஓட்டி (350) - பலவாய் நெஞ்சிற் கிடந்த மாறுபாடு களை முதற்போக்கிப் பின்னர்,

349 - 50. [இன்னிசை முரச மிடைப்புலத் தொழியப், பன்மா றோட்டிப் பெயர்புயம் பெற்று:]

இன் இசை முரசம் இடை புலத்து ஒழிய பெயர் புறம் பெற்று- இனிய ஓசையினையுடைய முரசம் [2]உழிஞைப்போர்க்கு இடையே கிடக்கும்படி மீளுகையினாலுண்டான முதுகைப் பெற்று,

என்றது, உழிஞைப் போர் செய்யவந்த அரசர் [3]குடுமிகொண்ட மண்ணுமங்கலம் எய்தாது இடையே மீளும்படி காத்த கிடங்கு (351) என்றவாறு.

351. [4]மண் உற ஆழ்ந்த மணி நீர் கிடங்கின் - [5]மண்ணுள்ள அளவும் ஆழ்ந்த நீலமணி போலும் நீரையுடைய கிடங்கினையும்,

352. விண் உற ஓங்கிய பல் படை புரிசை - தேவருலகிலே செல்லும்படி உயர்ந்த பல கற்படைகளையுடைய மதிலினையும்,

353. தொல் வலி நிலைஇய வாயில் (356) - பழையதாகிய வலி நிலை பெற்ற வாயில்,

அணங்கு உடை நெடு நிலை - தெய்வத்தையுடைத்தாகிய நெடிய நிலையினையும்,

---

னிடத்தே வாங்கிக்கொள்ளும் கரிய மலையிடத்து" (கலித். 39 : 15, ந.) என்னும் பகுதி இதனுடன் ஒப்புநோக்கற்பாலது.

[1] செற்றம் – பகைமை நெடுங்காலம் நிகழ்வது; முருகு. 132, உரை.

[2] உழிஞைப் போரென்றது இங்கே புறத்துழிஞைப்போரை; தொல். புறத்திணை. சூ. 10.

[3] தொல். புறத்திணை. சூ. 13, பார்க்க; மதுரைக். 149-ஆம் அடியின் உரையைப் பார்க்க. [4] (பி - ம்.) 'மண்ணுற வீழ்ந்த'

[5] "நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி" (புறநா. 21 : 2)

354. நெய் பட கரிந்த திண் போர் கதவின் - நெய் பலகாலும் இடுதலால் கருகின திண்ணிய செருவினையுடைய கதவினையும்,

[1] வாயிலில் தெய்வம் உறையுமாகலின், அதற்கு அணியும் நெய்யுமாம்; ''ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை'' (நெடுநல். 86) என்பதனுன் உணர்க.

355. மழை ஆடும் மலையின் நிவந்த மாடமொடு - மேகமுலாவும் மலைபோலே ஓங்கின மாடத்தோடே,

கோபுரமின்றி வாசலை மாடமாகவும் சமைத்தலின், மாட மென்றார்.

356. வையை அன்ன வழக்கு உடை வாயில் - [2]வையையாறு இடைவிடாது ஓடுமாறுபோன்ற மாந்தரும் மாவும் இடையறாமல் வழங்குதலையுடைய வாயில்,

மாடத்தோடே (355) நிலையினையும் (353) கதவினையும் (354) வழக்கினையுமுடைய வாயில் (356).

பெரும்பாண் இருக்கையினையும்(342)கிடங்கினையும்(351)புரிசை யினையும் (352) வாயிலினையு(356)முடைய மதுரை (699) என்க.

357 - 8. வகை பெற எழுந்து வானம் மூழ்கி சில் காற்று இசைக்கும் பல் புழை நல் இல் - கூறுபாடாகிய பெயர்களைத் தாம் பெறும்படி உயர்ந்து தேவருலகிலே சென்று தென்றற்காற்று ஒலிக்கும் பல சாளரங்களையுடைய நன்றாகிய அகங்களையும்,

மண்டபம் கூடம் தாய்க்கட்டு அடுக்களையென்றாற் போலும் பெயர்களைப் பெறுதலின், வகைபெற வெழுந்தென்றார்.

359. யாறு கிடந்தன்ன அகல் நெடு தெருவில்-யாறு கிடந்தாற் போன்ற அகன்ற நெடிய தெருக்களிலே,

இரு கரையும் யாறும்போன்றன, இரண்டு பக்கத்தின் மனைகளும் தெருவுகளும்.

360. பல் வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப - [3] நாளங் காடியிற் பண்டங்களைக்கொள்ளும் பல சாதியாகிய பாடை வேறு

---

[1] ''ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை'' (நெடுநல். 86) என்பதன் விசேடவுரையில், 'அதில் தெய்வத்திற்கு வெண்சிறு கடுகும் நெய்யும் அணிந்தது' என்று எழுதியிருப்பது இதனோடு ஒப்பிடற்பாலது.

[2] ''வையை யென்ற பொய்யாக் குலக்கொடி'' (சிலப். 13 : 170); ''வருபுனல் வையை - இடையறாது பெருகும் புனலையுடைய வையை யாற்றுத்துறை'', ''நீடுநீர் வையை - ஒழுக்கறாத நீரையுடைய வையையாறு'' (சிலப். 14 : 72, 18 : 4, அடியார்.)

[3] நாளங்காடி - காலைக்கடை : மதுரைக். 430; ''நடுக்கின்றி நிலைஇய நாளங்காடியில்'', ''நாண்மகி ழிருக்கை நாளங் காடி'' (சிலப். 5 : 63, 196)

பாட்டை யுடைய மாக்கள் திரளிடத்து ஓசை மிக்கொலிக்கும்படி இருத்தர (406) என்க.

361 - 2. மா கால் எடுத்த முந்நீர் போல முழங்கு இசை நல் பணை அறைவனர் நுவல - பெருமையையுடைய காற்றெறிந்த கடலொலிபோல முழங்கும் ஓசையையுடைய நன்றாகிய முரசைச் சாற்றினராய் விழவினை நாட்டில் உள்ளார்க்குச் சொல்லுகையினாலே நாடார்த்தன்றே (428) என்க.

'அறைவன நுவல' என்று பாடமாயின், அறையப்படுவனவாய் விழாவைச் சொல்ல வென்க.

363 - 4. கயம் குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை - கயத்தைக் கையாற் குடைந்து விளையாடும் தன்மையவாக வாச்சியங்களைச் சாற்றலான் முழங்கின ஓசையைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் ஆடும் செருக்கினைக் கொண்ட ஆரவாரத்தினையு முடைய தெரு (359) என்க.

365. [1] ஓவு கண்டன்ன இரு பெரு நியமத்து - சித்திரத்தைக் கண்டாற்போன்ற கட்கு இனிமையையுடைய இரண்டாகிய பெரிய அங்காடித்தெருவில்,

நாளங்காடி, [2] அல்லங்காடியாகிய இரண்டு கூற்றையுடைத் தென்றார்.

366. சாறு அயர்ந்து எடுத்த உருவம் பல் கொடி - கோயில் களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகினையுடைய பல கொடிகளும்,

இதனால் அறம் கூறினார்.

367 - 8. வேறு பல் பெயர ஆர் எயில் கொள கொள நாள் தோறு எடுத்த நலம் பெறு புனை கொடி - வேறுபட்ட பல பெயர்களையுடையவாகிய அழித்தற்கரிய அரண்களைத் தண்டத் தலைவர் அரசன் ஏவலாற் சென்று கைக்கொள்ளக் கைகொள்ள அவர்கள் அவ்வெற்றிக்கு நாடோறும் எடுத்த நன்மையைப் பெற்ற சயக்கொடியும்.

இதனால் [3]புறத்துழிஞைப் போர் கூறினார்.

369 - 71. நீர் ஒலித்தன்ன நிலவு வேல் தானையொடு புலவு படை கொன்று மிடை தோல் ஓட்டி புகழ் செய்து எடுத்த விறல் சால் நல் கொடி - கடலொலித்தாற்போன்ற நிலைபெறுதலையுடைய வேற்படை யோடே சென்று பகைவரைப் புலால் நாற்றம் உண்டாகக் கொன்று

---

[1] ஓவு - ஓவியம்; "ஓவுக்கண் டன்னவில்" (நற். 268 : 4); "ஓவுறழ் நெடுஞ்சுவர்" (பதிற். 68 : 17)

[2] அல்லங்காடி - மாலைக்கடை; மதுரைக். 544.

[3] புறத்துழிஞைப் போர் - வேற்று வேந்தருடைய மதிலின் புறத்தைச் சூழ்ந்து செய்யும் போர்.

பின்னர் அணியாய் நின்ற யானைத்திரளையும் கெடுத்துத் தமக்குப் புகழை உண்டாக்கி எடுத்த வெற்றியமைந்த நன்றாகிய கொடியும்,

இது தும்பைப் போர் கூறிற்று.

372. கள்ளின் களி [1]நவில் கொடியொடு - கள்ளினது களிப்பு மிகுதியைச் சாற்றுகின்ற கொடியும்,

372 - 3. நல் பல பல் வேறு குழூஉ கொடி - நன்றாகிய பலவற்றினாலே பலவாய் வேறுபட்ட திரட்சியையுடைய கொடிகளும்,

நன்பலவென்றார், [2] கல்வி [3] கொடை தவம் முதலியவற்றை.

373 - 4. பதாகை [4] நிலை இ பெரு வரை மருங்கின் அருவியின் நுடங்க - பெருங்கொடிகளும் நிலைபெற்றுப் பெரிய மலையிடத்து அருவி அசையுமாறு போல அசைய,

இக்கொடிகள் அருவியின் நுடங்கும்படி வகைபெற எழுந்து (357)என முன்னே கூட்டுக.

375. பனை மீன் வழங்கும் வளை மேய் [5]பரப்பின் - [6]பனை மீனென்னுஞ் சாதி உலாவும் சங்கு மேய்கின்ற கடலிடத்தே,

376 – 7. வீங்கு பிணி நோன் கயிறு அரி இ இதை புடையூ கூம்பு முதல் முருங்க எற்றி - இறுகும் பிணிப்பினையுடைய வலியினை யுடைய பாய் கட்டின கயிற்றை அறுத்துப் பாயையும் பீறிப் பாய்மரம் அடியிலே முறியும்படி அடித்து,

---

[1] (பி - ம்.) 'நுவல்', 'துவல்'

[2] கல்விக்குக் கொடி கட்டல் : பட்டினப். 169 - 71-ஆம் அடிகளை யும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.

[3] கொடைக்குக் கொடி கட்டல் : இக்கொடி தியாகக்கொடி யெனப்படும்; "தியாகக்கொடியொடு மேற்பவர், வருகென்று நிற்ப" (வீரராஜேந்திர தேவர் மெய்க்கீர்த்தி);"தியாகக் கொடியே தனிவளரச் செய்து" (திருவாரூருலா, 421)

[4] (பி - ம்.) 'நிலைஇய' [5] (பி - ம்.) 'பரம்பின்'

[6] "ஒள்ளிய பனைமீன் றுஞ்சுந் திவலைய", "பனைமீன் றிமிலோடு தொடர்ந்து துள்ள" (கம்ப. கடறாவு. 23, 50); "யானையை விழுங்கும் மீன்கள் இக்கடலிலுமுள; அவை பனைமீனென்றும் யானைமீ னென்றும் மோங்கிலென்றும் அனுவிஷமென்றும் பெயருடையன" (தக்க. 384, உரை); "உள்வளைந் துலாய சின்னை யொண்சுறுப் பனைமீ னூறை, தெள்விளித் திருக்கை தந்தி திமிங்கில மிரிந்து பாய்ந்த" (கந்த. கடல்பாய். 11); இம்மீன், பனையனென்றும் வழங்கும்; "பனையன் றேளி" (அருணைக் கலம்பகம், 45)

377 - 8. [காய்ந்துடன், கடுங்காற் றெடுப்ப :] கடு காற்று உடன் காய்ந்து எடுப்ப - கடிய காற்று நாற்றிசையினும் சேரக் கோபித்து எடுக்கையினாலே,

378. கல் பொருது உரைஇ - நங்குரக்கல் கயிற்றுடனே நின்று பொருது உலாவி,

379. நெடு சுழி பட்ட நாவாய் போல - நெடிய சுழியிலே அகப்பட்டுச் சுழலாநின்ற மரக்கலத்தையொக்க,

380. இரு தலை பணிலம் ஆர்ப்ப - முன்னும் பின்னும் சங்கு ஒலிப்ப,

யானை மீண்டாற் பின் நின்றவன் ஊதுதற்குப் பின்னும் சங்கு செல்லும்.

380 - 81. சினம் சிறந்து [1]கோலோர் கொன்று மேலோர் வீசி - சினம் மிக்குப் பரிக்கோற்காரரைக் கொன்று பாகரை வீசிப் போகட்டு,

382. மெல் பிணி வல் தொடர் பேணாது காழ் சாய்த்து - மெல்லிய பிணிப்பினையுடைய வலிய நீர்வாரியென்று காலில் கட்டும் சங்கிலியை நமக்குக் காவலென்று பேணாதே அது கட்டின தறியை முறித்து,

383. கந்து நீத்து உழிதரும் கடாம் யானையும் - கம்பத்தைக் கைவிட்டுச் சுழலும் கடாத்தையுடைய யானையும்,

சிறந்து (380) கொன்று வீசிச் (381) சாய்த்து (382) நீத்து (383) ஆர்ப்ப (380) உழிதரும் கடாமெனக் கடாத்தின் தொழிலாக உரைக்க.

காற்றிற்குக் கடாம் உவமிக்கப்படும் பொருள்.

384. அம் கண் மால் விசும்பு புதைய வளி போழ்ந்து - அழகிய இடங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய ஆகாயம் மறையக் காற்றைப் பிளந்து,

தேவருலகம் முதலியவற்றைத் தன்னிடத்தே உடைமையின் அங்கண்மால் விசும்பென்றார்.

385 - 6. ஒள் கதிர் ஞாயிறு ஊறு அளவா திரிதரும் செ கால் அன்னத்து சேவல் அன்ன - ஒள்ளிய கிரணங்களையுடைய ஞாயிற்றைத் தாம் சேர்தலை நெஞ்சாலே கருதிக்கொண்டு பறக்கும் சிவந்த காலையுடைய அன்னத்தினது சேவலையொத்த.

387 - 8. குரூஉ மயிர் புரவி உராலின் பரி நிமிர்ந்து கால் என கடுக்கும் கவின் பெறு தேரும் - நிறவிய பல மயிர்களையுடைய குதிரைகளோடுதலிற் செலவுமிக்குக் காற்றெனக் கடுக ஓடும் அழகினைப் பெறுகின்ற தேரும்,

---

[1] (பி - ம்.) 'காலோர்'

389. கொண்ட கோலன் கொள்கை நவிற்றலின் - கையிலே எடுத்த மத்திகையையுடைய [1]வாசிவாரியன் [2]ஐந்து கதியையும் பதினெட்டுச் சாரியையும் பயிற்றுகையினாலே,

390. அடி படு மண்டிலத்து ஆதி போகிய-குரங்கள் அழுந்தின வட்டமான இடத்திலும் [3]ஆதியென்னும் கதியிலும் ஓடின,

391. கொடி படு சுவல [4]இடு மயிர் புரவியும் - ஒழுங்குபடும் [5]கேசாரியை யுடையனவாக இட்டவாசங்களையுடைய குதிரைகளும்,

392 - 3. [வேழத் தன்ன வெருவரு செலவிற், கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும் :] வெருவரு வேழத்து அன்ன செலவின் கள்

---

[1]வாசிவாரியன் - குதிரையைத் தன்வயப்படுத்தி நடத்துவோன்; "வாய்ந்தமா வுகைத்த வாசி வாரியப் பெருமானெங்கே" (திருவால. 29 : 17): "தாமென்றது, இவற்றின் மேலேறின வாசிவாரியர்களை" (தக்க. 263, உரை)

[2] "ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியும்" (பு. வெ. 355 - 6); "இசைத்தவைங் கதியுஞ் சாரி யொன்பதிற் றிரட்டி யாதி, விசித்திர விகற்பும்" (திருவிளை. 59 : 77): "அரிதரி தெனவி யப்ப வைந்து தாரையினுந் தூண்டி" (திருவால. 39 : 35); "கதியைந்துமுடைத்திக் குதிரை" (தொல். களவி, சூ. 33, சே. ந.மேற்.); "சுற்று நீளமு மூய ரமு மிகர்ப்பன சழியின்மிக் கனதிமை, யற்று மேதகு நிறத்தன கவினுடை யவயவத் தனவாகி, யெற்று மாமணி முரசமுஞ் சங்கமு மெனுங்குரல் மிகுத்திப்பார், முற்று மாதிரத் தளவுமைங் கதியினுன் முடிப்பன விமைப்போதில்", "யாளி குஞ்சரம் வானர முதலிய வியக்கினுல் விசும்பெங்கும், தூளி கொண்டிட மிடைந்துவந்தன நெடுந் துரகதம் பலகோடி" (வி. பா. சூதுபோர். 81 - 2); விக்கிதம், வற்கிதம், உபகண்டம், ஜவம், மாஜவமென்னும் இப்பஞ்சதாரை யையுமென்பர், பு. வெ. உரையாசிரியர்.

[3]ஆதி - நெடுஞ்செலவு : ஆதிமாதி யென்பவற்றுள் ஆதி நெடுஞ் செலவென்பர் (கலித். 96 : 20) இவ்வுரையாசிரியர். "ஆதிவரு கதிப் பரியும்" (வி. பா. இராசசூயச். 131)

[4] "ஓங்கன் மதிலு ளொருதனிமா - ஞாங்கர், மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்ரு, ருயிருணிய வோடி வரும்" (பு. வெ. 90) என்பதும், 'மலைபோன்ற புரிசையிடத்து ஒப்பில்லாததொரு குதிரை பக்கத்தே கவரியிட எழுந்து மேகத்தை யொத்துப் பகைவ ருயிரை யுண்பான் வேண்டிக் கடுகி வரும்' என்னும் அதனுரையும், "முரசுடைச் செல்வர் புரவிச் சூட்டு, மூட்டுறு கவரி தூக்கி யன்ன" (அகநா. 156 : 1 - 2) என்பதும் இங்கே அறியற்பாலன.

[5] "பலவாகிய கேசாரியையுடைய குதிரைகள்" (நெடுநல். 93, ந.); இப்பெயர் கேதாரியெனவும் வழங்கும்; கலித். 96 : 8, ந.

ஆர் களமர் இரு செரு மயக்கமும்-அச்சம் தோன்றுகின்ற யானையை யொத்த போக்கினையுடைய கள்ளினை உண்ணும் வீரர் தம்மிற் பெரிய போரைச் செய்யும் கலக்கமும்,

களத்தே சேறலிற் களமரென்றார்.

394. அரியவும் பெரியவும் - ஈண்டுப் பெறுதற்கரியனவுமாய் அவை தாம் சிறிதின்றி மிகவுள்ளனவுமாய்ப் பலவாய் வேறுபட்ட பண்ணியம் (405) என மேலே கூட்டுக.

வருவன பெயர்தலின் – யானையும் (383) தேரும் (388) புரவியும் (391) களமர் செருமயக்கமும் (393) பல்காலும் வருவனவாய் மீளுகையினாலே,

395 - 6. [தீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர், பூந்தலை முழவி னோன்றலை கடுப்ப :] [1]தீ புழல் வல்சி பூ தலை கழல் கால் மழவர் முழவின் நோன் தலை கடுப்ப - இனிய பண்ணியாரங்களாகிய உணவினையும் பொற்பூக்களையுடைய தலையினையும் வீரக்கழலணிந்த காலினையுமுடைய மழவர் முன் கொட்டும் வீரமத்தளத்தினது வலிய கண்ணையொக்க உருண்ட,

[2] தீம்புழல் - இருப்பைப் பூவுமாம். பூக்தலை : விகாரம். [3] மழவர் - சில வீரர். ''உருவக் குதிரை மழவ ரோட்டிய'' (அகநா. 1 : 2) என்றார் பிறரும். கடுப்பவென்னும் செயவெனெச்ச உவமவுருபிற்கு உருண்டவென ஒரு சொல் வருவிக்க.

397. பிடகை பெய்த கமழ் நறு பூவினர் - பூந்தட்டிலே இட்டு வைத்த மிகவும் நாறுகின்ற நறிய பூவினை உடையாரும்,

398. பல வகை [4]விரித்த எதிர் பூ கோதையர் – பல வகையாக விரித்து வைத்த ஒன்றற்கொன்று மாறுபட்ட பூமாலைகளையுடையாரும்,

399. பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர் - இடிக்க வல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் [5]பரக்கும் சுண்ணத்தை யுடையாரும்,

தாது - நீறுமாம். நவமணிகளும், [6]பொன்னும், சந்தனமும், கருப்

---

[1] (பி - ம்.) 'தீம்புலவல்சி'

[2] ''இருப்பை...இழுதி னன்ன தீம்புழல்'', ''தீம்புழ லுணீஇய, கருங்கோட் டிருப்பை யூரும், பெருங்கை யெண்கு'' (அகநா. 9 :3-5, 171 : 13 - 5) [3]மதுரைக். 687, உரை.

[4] (பி - ம்.) 'விரிந்த வெதிர்ப்பூங் கோதையர்'

[5] ''சுண்ணம்போலச் சிதராய்ப் பரந்து கிடத்தலிற் சுண்ண மென்றார்'' (தொல். எச்ச, சூ. 10, சே.) என்பதனால் சுண்ணம் பரந் திருத்த லுணரப்படும்.

[6] ''செம்பொற் சுண்ணஞ் சிதர்ந்த திருநுதல்'', ''அனிச்சக் கோதையு மாய்பொற் சுண்ணமும்.........சுந்தரப் பொடியுஞ் சுட்டிச்

பூரம் முதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் நனைய வைத்து இடித்தலின், இடிக்க வல்லவர் [1]பலரும் வேண்டிற்று.

400 - 401. தகை செய் [2]தீ சேறு இன் நீர் பசு காய் நீடு கொடிஇலையினர் - உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய [3]கருங்காலி சீவிக் காய்ச்சின களிக்கலந்த இனிய நீரினையுடைய பசிய பாக்குடனே வளர்ந்த கொடியின்ற வெற்றிலையினை யுடையாரும்,

"அங்கருங் காலி சீவி யூறவைத் தமைக்கப் பட்ட, செங்களி விராய காயும்" (சீவக. 2473) என்றார். இளங்களி [4]யன்னம் நீரா யிருத்தலின் இன்னீரென்றார்.

401. கோடு சுடு நூற்றினர் - சங்கு சுடுதலால் உண்டான சுண்ணும்பையுடையாரும்,

402 - 4. [இருதலை [5]வந்த பகைமுனை கடுப்ப, இன்னுயி ரஞ்சி யின்னு வெய்துயிர்த், தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றை :]

இரு தலை வந்த பகை முனை கடுப்ப இன் உயிர் அஞ்சி ஏங்குவனர் இருந்து-இரண்டு பக்கத்தானும் படைவந்த பக்கபலத்தையொக்கத் தம்முடைய இனிய உயிருக்கு அஞ்சி ஏங்குவாராயிருந்து,

அவை நீங்கிய பின்றை இன்னு வெய்து உயிர்த்து - அந்நாற் படையும் போனபின்னர் அவற்றான் எய்திய பொல்லா வெப்பத்தைப் போக்கி,

எனவே, அச்சத்தால் நெஞ்சிற் பிறந்த வருத்தத்தைப் போக்கி யென்றார்.

405. பல்வேறு பண்ணியம் [6]தழீஇ திரி விலைஞர் - பலவாய் வேறுபட்ட பண்டங்களைத் தம்மிடத்தே சேர்த்துக்கொண்டு திரிகின்ற விற்பாரும்,

கொள்ளக் கொள்ளக் குறையாமல் தரத்தர மிகாமல் (426) அரியவும் பெரியவுமாய்ப் (394) பலவாய் வேறுபட்ட பண்ணிய மெனக் கூட்டுக.

406. மலை புரை மாடத்து கொழு நிழல் இருத்தர - மலையை ஒக்கும் மாடங்களிடத்துக் குளிர்ந்த நிழலிலே இருத்தலைச் செய்ய,

---

சுண்ணமும்", "பொற்குறு சுண்ணமும்" (பெருங். 1. 33 : 120, 42: 71 - 3, 92); "சுந்தரப்பொடி தெளித்த செம்பொற் சுண்ணம் வாணுதற், றந்து சுட்டியிட்ட சாந்தம்" (சீவக. 1956)

[1] திருவா. திருப்பொற்சுண்ணமென்னும் பகுதியைப் பார்க்க.

[2] (பி - ம்.) 'தீஞ்சோற்று'

[3] "பைங்கருங் காலிச் செங்களி யளைஇ, நன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்" (பெருங். 3. 14 : 81 - 2)

[4] அன்னம் - தேங்காய் முதலியவற்றிலுள்ள வழுக்கை.

[5] (பி - ம்.) 'வேந்தர்' [6] (பி - ம்.) 'தரீஇய திரிவினைஞர்'

பூவினரும் (397) கோதையரும் (398) சுண்ணத்தினரும் (399) இலையினரும் நூற்றினரும் (401) பண்ணியந் தழீஇத் திரிவிலைஞரும் (405) யானையும் (383) தேரும் (388) புரவியும் (391) களமர் மயக்கமும் (393) வருவன பெயர்தலிற் (394) பகைமுனை கடுப்ப (402) அஞ்சி (403) ஏங்குவனரிருந்து அவை நீங்கிய பின்றை (404) இன்று வெய்துயிர்த்து (403) மாட மிழலிலே (406) இசை யெழுந்தொலிப்ப (360) இருத்தர (406) எனக் கூட்டுக.

470. இரு கடல் வான் கோடு புரைய - கரிய கடலில் வெள்ளிய சங்கை யொக்க,

407 - 9. [வாருற்றுப், பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர், நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர் :]

வாருற்று பின் இட்ட வால் பெரு நரை கூந்தலர் தொல் முது பெண்டிர் - கோதிப் பின்னே முடித்துப் போகட்ட வெள்ளிய பெரிய நரைமயிரினை யுடையராகிய பழமை மூத்த பெண்டிர்,

நன்னர் நலத்தர் - நன்றாகிய வனப்பினையுடையராய்,

410 - 12. செ நீர் பசு பொன் புனைந்த பாவை செல் சுடர் பசு வெயில் தோன்றியன்ன செய்யர் - சிவந்த நீர்மையினையுடைய [1]கிளிச் சிறையென்னும் பொன்னாற் செய்த பாவை வீழ்கின்ற கிரணங்களிடத்துப் பசிய வெயிலிடத்தே தோன்றினாற் போன்ற சிவந்த நிறத்தினை யுடையராய்,

412. [செயிர்த்த நோக்கினர் மடக்கண் :] மடம் கண் செயிர்த்த நோக்கினர் - மடப்பத்தினையுடைய கண்கள் ஆடவர்க்கு வருத்தத்தைச் செய்த பார்வையினையுடையராய்,

413. ஐஇய கலுழும் மாமையர்-வியப்பினை யுடையவாய் நோக்கினோர் கலங்குதற்குக் காரணமான [2]மாமை நிறத்தினை யுடையராய்,

[3] கலுழ்தல் - ஒழுகுதலுமாம்.

413 - 4. [வையெயிற்று, [4]வார்ந்த வாயர் :] வார்ந்த வை எயிறு வாயர் - நேரிதாகிய கூரிய எயிற்றினையுடைய வாயினை யுடையராய்,

414 - 6. [வணங்கிறைப் பணைத்தோட், சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத், தொய்யில் பொறித்த [5]சுணங்கெதி ரிளமுலை:]

---

[1] கிளிச்சிறை - நால்வகைப் பொன்களுள் ஒன்று; "சாத ரூபங் கிளிச்சிறை யாடகஞ், சாம்பூ நதமென வோங்கிய கொள்கையிற், பொலந்தெரி மாக்கள்" (சிலப். 14 : 201 - 3); "வீறுயர் பசும்பொன்-மாற்றுள் உயர்ச்சி பெற்ற பசிய பொன்; ஆவது கிளிச்சிறை" (சிலப். 3 : 165. அடியார்.)

[2] முல்லை. 20 - 21, அடிக்குறிப்பைப் பார்க்க.

[3] "மயிரேர் பொழுகிய வங்கலுழ் மாமை" (குறுந். 147 : 2)

[4] (பி - ம்.) 'வாய்ந்த' [5](பி - ம்.) 'தொழிலெழுதிளமுலை.

வணங்கு இறை பணை தோள் வயக் குறு வந்திகை - வளைந்த சந்தினையுடைய மூங்கில் போலும் தோளினையும் விளக்கம் முற்றிய [1]கைவந்தியினையும்,

தொய்யில் பொறித்த சோர்ந்து உகுவன்ன சுணங்கு எதிர் இள முலை - தொய்யிலால் வல்லியாக எழுதின நெகிழ்ந்து சிந்துமாறு போன்ற சுணங்கு தோற்றிய இளைய முலையினையும்,

[2] தொய்யில் – எழுதும் குழம்பு.

417. மை உக்கன்ன [3]மொய் இரு கூந்தல் - மையொழுகினாற் போன்ற செறிந்த கரிய மயிரினையுமுடைய,

418. மயில் இயலோரும் மடம் மொழியோரும் - மயிலின் தன்மையை யுடையோரும் மடப்பத்தை யுடைய வார்த்தையினை யுடையோரும்,

419. [4]கைஇ மெல்லிதின் ஒதுங்கி கை எறிந்து - தம்மைக் கோலஞ் செய்து மெத்தென நடந்து கையைத் தட்டி,

420. கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்ப - [5]காம நுகர்ச்சியினையன்றி வேறொன்றையும் கல்லாத இளையோருடனே மகிழ்ந்தனராய்ப் புணரும்படி,

421. [புடையமை பொலிந்த [6]வகையமை செப்பில்:]

புடை அமை செப்பில் - புடைபடுதல் அமைந்த செப்பிடத்தில்,

பொலிந்த வகை அமை செப்பில் - பொலிவு பெற்ற கூறுபாடு அமைந்த செப்பிடத்திற் பண்ணியம் (422) என்க.

422. [7]காமரு உருவின் தாம் வேண்டும் பண்ணியம் - விருப்பம் மருவிய வடிவினையுடைய நுகர்வார் தாம் விரும்பும் நுகர் பொருள்களை,

423. கமழ் நறு பூவொடு மனை மனை மறுக - மிகவும் நாறும் நறிய பூவுடனே ஏந்தி [8]மனைகடோறும் உலாவி நிற்க,

நலத்தராய்ச் (409) செய்யராய் நோக்கினராய் (412) மாமையராய் (413) வாயராய்த் தோளினையும் (414) வந்திகையினையும் (415) முலையினையும் (416) கூந்தலினையுமுடைய (417) மயிலியலோரும்

---

[1] கைவந்தி – கையில் தோளின்கீழ் அணியப்படும் ஆபரணம்; இப் பெயர் வழக்கிலுமுள்ளது.

[2] "தொய்யில்-பத்திக்கீற்றென்பர்" (சிலப். 2: 69 - 70, அடியார்.)

[3] (பி. - ம்.) 'ஐம்பாற் கூந்தல்' [4](பி - ம்.) 'தைஇ'

[5] பொருந. 100, சிறுபாண். 33, முல்லை. 36 என்பனவற்றிலுள்ள, 'கல்லா' என்பதற்கு இங்கே கூறியது போலவே உரை கூறுதல் அறியற்பாலது. [6](பி - ம்.) 'மடையமை செப்பிற் காம வுருவிற்'

[7] முருகு. 75, அடிக்குறிப்பைப் பார்க்க.

[8] (பி - ம்.) 'மனைகடோறு மனைகடோறும்'

மடமொழியோரும் (418) கைஇ ஒதுங்கி எறிந்து (419) மாந்தரொடு திளைக்கும்படி (420) தொன்முது பெண்டிர் (409) பண்ணியத்தைப் (422) பூவோடே ஏந்தி மனைமனை மறுக (423) எனக் கூட்டுக.

424 - 5. மழைகொள குறையாது புனல் புக [1]மிகாது கரை பொருது இரங்கும் முந்நீர் போல - மேகம் முகக்கக் குறைவுபடாமல் யாறுகள் பாய்தலின் மிகுதலைச் செய்யாமல் கரையைப் பொருது ஒலிக்கும் கடல் போல,

426. கொள கொள குறையாது தர தர மிகாது - பலரும் வந்து கொள்ளக் கொள்ளக் குறையாமல் பலரும் மேன்மேலும் கொண்டு வரக் கொண்டுவர மிகாமல்,

427 - 8. [கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி, ஆடுதுவன்று விழவி னுடார்த் தன்றே:]

கழுநீர் கொண்ட அந்தி - தீவினையைக் கழுவுதற்குக் காரண மான தீர்த்த நீரைத் தன்னிடத்தே கொண்ட அந்திக் காலம்,

ஆடு துவன்று விழவின் எழுநாள் அந்தி - வேறோரிடத்தில்லாத வெற்றி நெருங்கும் திருநாளினைத் தன்னிடத்தே யுடைய ஏழாம் நாள் அந்தியில்,

[2] கால் கொள்ளத் தொடங்கிய [3]ஏழாம் நாள் அந்தியிலே தீர்த்த மாடுதல் மரபு.

நாடு - அவ்விழவிற்குத் திரண்ட நாட்டிலுள்ளார்,

ஆர்த்தன்றே - ஆர்த்த ஆரவாரம்,

அற்றேயென்பது அன்றேயென மெலிந்ததாக்கி உவமவுருபாக் கலும் ஒன்று.

429. [மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்:] பிறங்கிய மாடம் மலி புகழ் கூடல் - பெரிய [4] நான்மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலை யுடைய மதுரை (699) என மேலே கூட்டுக.

---

[1] (பி - ம்.) 'நிறையாது'

[2] "கால்கோள் விழவு" (சிலப். 5 : 144)

[3] ஏழு நாளிற் செய்யப்பெறும் திருவிழா, 'பவுகம்' எனப்படும்; திருப்பெருந்துறைப் புராணம், புரூரவன் திருவிழாச் செய்த படலம், 50–ஆம் பாடலைப் பார்க்க; "ஆத்தமா மயனு மாலு மன்றிமற் றொழிந்த தேவர், சோத்தமெம் பெருமா னென்று தொழுதுதோத் திரங்கள் சொல்லத், தீர்த்தமா மட்ட மீமுன் சீருடை யேழு நாளும், கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே" (திருக்குறுக்கை. திருநா. தே.) என்பதும் ஈண்டு ஆராயத்தக்கது.

[4] "நான்மாடக் கூடன் மகளிரு மைந்தரும்" (கலித். 92 : 65) என்பதும், 'நான்கு மாடம் கூடலின் நான்மாடக் கூடலென்றாயிற்று;

430. [நாளங் காடி நனந்தலை:] நன தலை நாள் அங்காடி – அகற்சியை உடைத்தாகிய இடத்தினையுடைய நாட்காலத்துக் கடையில்,

கம்பலை - ஆரவாரம்,

உருவப்பல் கொடியும் (366) புனைகொடியும் (368) நன்கொடியும் (371) களிநவில் கொடியும் (372) குழூஉக் கொடியும் பதாகையும் நிலைஇ (373) அருவியினுடங்கும்படி (374) வகைபெற எழுந்து மூழ்கி (357) இசைக்கும் பல் புகழை யுடைய நல்ல இல்லினையும் (358) சும்மையினையுமுடைய (364) தெருவுகளில் (359) பெருவியமத்து (365) நாளங்காடியிலே (430) பூவினர் (397) முதலியோர் இருத்தருகையினால் (406) மறுகுதலினால் (423) எழுந்த கம்பலை (430) நன்பணை அறைவனர் நுவலுகையினாலே (362) அதற்குத் திரண்ட நாடு (428) அந்தியில் (427) ஆர்த்ததே (428) யென வினைமுடிக்க.

'ஆர்த்தன்று' என்னும் முற்றுச் சொல் படுத்தலோசையாற் பெயர்த்தன்மையாய்த் தேற்றேகாரம் பெற்று நின்றது.

431 - 2. வெயில் கதிர் [1] மழுங்கிய படர் கூர் ஞாயிறு செக்கர் அன்ன - வெயிலையுடைய கிரணங்கள் ஒளி மழுங்கிய செலவு மிக்க ஞாயிற்றை யுடைய செக்கர் வானத்தை ஒத்த,

432 - 3. சிவந்து நுணங்கு உருவின் கண் பொருபு [2]உகூஉம் ஒள் பூ கலிங்கம் - சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களை [3]வெறியோடப் பண்ணிச் சிந்தி விழுமாறு போன்ற ஒள்ளிய [4]பூத் தொழிலை யுடைய சேலைகளை.

434. பொன் புனை வாளொடு பொலிய கட்டி – பொன்னிட்ட உடை வாளோடே அழகுபெறக் கட்டி,

435 - 40. [[5]திண்டேர்ப் பிரம்பிற் புரளுந் தானைக், கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி, மொய்ம்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியல்,

அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவா யென்றுமாம்' என்னும் அதன் விசேட வுரையும், "அம்புத நால்களா னீடுகூடல்" (திருநள் ளாறும் திருவால வாயும், திருஞான. தே.) என்னும் திருவாக்கும், "ஈசனார் மகிழ்ந்த தானம்" (திருவால. நகர. 12) என்பது முதலிய திருவிருத்தங்கள் நான்கும், "கன்னிதிரு மால்காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரை" (ஷை பயன் முதலியன, 5) என்பதும் நான்மாடங்கள் இன்னவென்பதைப் புலப்படுத்தும்.

[1] (பி - ம்.) 'மழுகிய' [2](பி - ம்.) 'கூடும்'

[3] வெறியோடப் பண்ணி - மயக்கி.

[4] முருகு. 15, அடிக்குறிப்பைப் பார்க்க.

[5] (பி - ம்.) 'திண்டேரப்பிற்'

மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை, அணிகிளர் மார்பி னாரமொ டளைஇக், காலியக் கன்ன கதழ்பரி கடைஇ :]

புரளும் தானை (435) - தோளிலே கிடந்து அசையும் [1]ஒலியலினையும்,

கச்சம் தின்ற கழல் தயங்கு [2] திருந்து அடி (436) - கோத்துக் கட்டிய கச்சுக் கிடந்து தழும்பிருந்த வீரக்கழல் அசையும் [3] பிறக் கிடாத அடியினையும்,

மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெரு தெரியல் (437) - உலகத்துள்ளார் வலிகளைக் கடந்து புகழ்ச்சியால் எங்கும் திரியும் ஒன்றாகிய பெரிய வேப்ப மாலையினையும்,

அணி கிளர் மார்பின் ஆரமொடு அளைஇ (439) மணி தொடர்ந் தன்ன ஒள் பூ கோதை (438) - அழகு விளங்கும் மார்பிற் கிடக்கின்ற ஆரத்தோடே கலந்து மாணிக்கம் ஒழுகினுலொத்த ஒள்ளிய செங் கழுநீர் மாலையினையும் உடையராய்,

பிரம்பின் திண் தேர் (435) கால் இயக்கன்ன கதழ் பரி கடைஇ (440) - விளிம்பிலே வைத்த பிரம்பினையுடைய திண்ணிய தேரில் பூண்ட காற்றினுடைய செலவினையொத்த விரைந்த குதிரைகளைச் செலுத்தி,

441. காலோர் காப்ப கால் என கழியும் - காலாட்கள் சூழ்ந்து காப்பக் காற்றென்னும்படி கடிதிற் செல்லும்,

442 - 3. [வான வண்கை வளங்கெழு செல்வர், நாண்மகி ழிருக்கை :] நாள் மகிழ் இருக்கை வானம் வள் கை வளம் கெழு செல்வர்- [4]நாட்காலத்து மகிழ்ந்திருக்கின்ற இருப்பிலே மேகம்போலே வரையாமல் கொடுக்கும் வளவிய கையினையுடையராகிய வளப்பம் பொருந்தின செல்வர்,

தானை (435) முதலியவற்றையுடையராய்க் கட்டிக் (434) கடைஇக் (440) கழியும் (441) செல்வரென்க.

443 - 4. காண்மார் பூணொடு தெள் அரி பொன் சிலம்பு ஒலிப்ப- விழாவைக் காண்டற்குப் பூண்களோடே தெள்ளிய உள்ளின்

---

[1] ஒலியல் - இங்கே மேலாடை; "உடையு மொலியலுஞ் செய்யை" (பரி. 19 : 97)

[2] "கழலூரீஇய திருந்தடி" (புறநா. 7 : 2) என்பதன் உரையில் 'வீரக்கழலுரிஞ்சிய இலக்கணத்தால் திருந்திய அடியினையும்' என்றும், 'திருந்தடி யென்பதற்குப் பிறக்கிடாத அடியெனினும் அமையும்' என்றும் அதன் உரையாசிரியர் எழுதியிருத்தல் இங்கே அறியற்பாலது.

[3] பிறக்கு - பின்; பிருதக்கென்னும் வடமொழிச் சிதைவென்பர்; சிலப். 5 : 95 - 8, அடியார்.

[4] "நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின், யார்க்கு மெளிதே தேரீ தல்லே" (புறநா. 123 : 1 - 2)

மணிகளையுடைய பொன்னாற் செய்த சிலம்புகள் ஒலிக்கும்படி மேனிலத்தினின்றும் இழிதலால்,

சிலம்பொலிப்ப வென்பதனால் இழிதல் பெற்றாம்.

444 - 6. [ஒள்ளழல், தாவற விளங்கிய வாய்பொ னவிரிழை, அணங்கு [1]வீழ் வன்ன பூந்தொடி மகளிர்:] அணங்கு வீழ்வு அன்ன ஒள் அழல் தா அற விளங்கிய ஆய் பொன் அவிர் இழை பூ தொடி மகளிர் - வானுறை தெய்வங்களின் வீழ்ச்சியை யொத்த ஒள்ளிய நெருப்பிலே வலியற விளங்கிய அழகிய பொன்னால் செய்த விளங் கும் பூண்களையும் பூத்தொழிலையுடைய தொடியினையுமுடைய மகளிர்,

இவர் [2] நாயன்மார் கோயில்களில் சேவிக்கும் மகளிர்.

447. மணம் கமழ் நாற்றம் தெரு உடன் கமழ - புழுகு முதலியன நாறுகின்ற நாற்றம் தெருவுகளெல்லாம் மணக்க,

மணம் : ஆகுபெயர்.

448. ஒள் [3]குழை திகழும் ஒளி கெழு திருமுகம் - ஒள்ளிய மகரக் குழையை உள்ளடக்கிக்கொண்ட ஒளி பொருந்திய அழகினை யுடைய முகம்,

449 - 50. [திண்கா ழேற்ற வியலிரு விலோதம், தெண்கடற் றிரையினி னசைவளி புடைப்ப :] திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம் அசைவளி தெள் கடல் திரையின் புடைப்ப - திண்ணிய கொடித்தண்டுகளில் ஏற்ற அகத்தினையுடைய பெருங்கொடிகளை அசைகின்ற காற்றுத் தெளிந்த கடற்றிரைபோல எழுந்துவிடும்படி அடிக்கையினாலே,

451. நிரை நிலை மாடத்து அரமியம் தோறும் - ஒழுங்குபட்ட நிலைமையினையுடைய மாடங்களின் நிலாமுற்றங்கடோறும்,

452. மழை மாய் மதியின் தோன்றுபு மறைய - மஞ்சிலே மறை யும் திங்களைப்போல் ஒருகால் தோன்றி ஒருகால் மறைய,

அரமியந்தோறும் இருந்து (451) விழாக் காணும் மகளிர் முகம் (448) விலோதத்தை (449) வளி புடைக்கையினாலே (450) தோன்றுபு மறைய வென்க.

நாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு.

---

[1] (பி - ம்.) 'வீழ்பன்ன'

[2] நாயன்மார் – தெய்வங்கள்; பண்டைக்காலத்தில் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளை நாயன்மாரென்றும் நாயனாரென் றும் வழங்குதல் மரபு. இது சிலாசாசனங்களால் அறியப்படும்; "இராஜராஜேச்வரமுடைய நாயனார்" என்பது போல் வருவன காண்க; "திருக்கோயில் திருவாயில் என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனாரென்றாதது போல" (திருச்சிற். 1, பேர்.) என்பதும் ஈண்டறியற்பாலது.

[3] (பி - ம்.) 'குழையிருந்த'

453 - 5. *[நீரு நிலனுந் தீயும் வளியும், மாக விசும்போ டைந்துட னியற்றிய, மழுவா ணெடியோன் றலைவ னாக:]* மாகம் [1]விசும்பொடு வளியும் தீயும் நீரும் நிலனும் ஐந்து உடன் இயற்றிய [2]மழு வாள் நெடியோன் தலைவன் ஆக - திக்குக்களையுடைய ஆகாயத்துடனே காற்றும் நெருப்பும் நீரும் நிலனுமாகிய ஐந்தினையும் சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வனாகக் கொண்டு,

456. மாசு அற விளங்கிய யாக்கையர் - [3]தீர்த்தமாடிய வடிவினையுடையராய்,

456 - 8. [4]சூழ் சுடர் வாடா பூவின் [5]இமையா நாட்டத்து [6]நாற்றம் உணவின் உரு கெழு பெரியோர்க்கு - தெய்வத் தன்மையாற் சூழ்ந்த ஒளியினையுடைய வாடாத பூக்களையும் இதழ் குவியாத கண்ணினையும் அவியாகிய உணவினையுமுடைய அச்சம் பொருந்திய மாயோன் முருகன் முதலாகிய தெய்வங்கட்கு,

459. மாற்றரு மரபின் உயர் பலி கொடுமார் - விலக்குதற்கரிய முறைமையினையுமுடைய உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு,

460. அந்தி விழவில் - [7]அந்திக் காலத்துக்கு முன்னாக எடுத்த விழாவிலே,

தூரியம் கறங்க - வாச்சியங்கள் ஒலிப்ப,

செல்வர் (442) மாசற விளங்கிய யாக்கையராய்க் (456) கமழ (447) மறைய (452) நெடியோன் தலைவனாகப் (455) பெரியோர்க்குப் (458) பலி கொடுக்கைக்கு (459) அந்தியிற் கொண்ட விழவிலே தூரியம் கறங்க வென்க.

461 - 5. *[திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை, ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணி தாமரைப் போது பிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு விளங்கக், காமர் கவினிய பேரிளம் பெண்டிர்:]*

---

[1] "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்" (தொல். மரபு. சூ. 89)

[2] மழுவாணெடியோனென்றது சிவபிரானை; இக்கருத்தை, "ஏற்றுவல னுயரிய" (புறநா. 56.) என்னும் செய்யுள் வலியுறுத்தும்.

[3] "மாசற விமைக்கு முருவினர்" (முருகு. 128) என்பதற்கு, 'எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடிவினையுடையர்' என்று உரையெழுதினார் முன். [4] (பி. ம்.) 'தூசுடை'

[5] "இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டினையும் குவித்தல்" என்றார் முன்; முருகு. 3, ந.

[6] (பி - ம்.) 'கொற்றவுணவின்'

[7] இதனை அந்திக்காப்பென்பர்.

திண் கதிர் மதாணி (461) காமர் கவினிய பெரு இள பெண்டிர் (465) - திண்ணிய ஒளியினையுடைய பேரணிகலங்களை உடையராய் விருப்பம் அழகு பெற்ற [1]பெரிய இளமையினையுடைய பெண்டிர்,

தாம் முயங்கி புணர்ந்து ஓம்பினர் தழீஇ (462) - தாம் முயங்கு தலைச் செய்து கூடிப் பாதுகாக்கும் கணவரையும் கூட்டிக்கொண்டு,

[2] தாது அணி தாமரை போது பிடித்தாங்கு (463) ஒள் குறு மாக்களை (461) தழீஇ (462) - தாது சேர்ந்த செவ்வித்தாமரைப் பூவைப் பிடித்தாற்போல் ஒள்ளிய சிறுபிள்ளைகளையும் எடுத்துக்கொண்டு,

தாமும் அவரும் ஓராங்கு விளங்க (464) - தாமும் கணவரும் பிள்ளைகளும் சேரச் சிலத்தாலே விளங்கும்படியாக,

466 - 7. [பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச், சிறந்து:] பூவினர் புகையினர் தொழுவனர் சிறந்து பழிச்சி - பூசைக்கு வேண்டும் பூவினையுடையராய்த் தூபங்களையுடையராய் வணங்கினராய் மிகுத்துத் துதித்து,

467. புறம்காக்கும் கடவுள் பள்ளியும் - பாதுகாத்து நடத்தும் பௌத்தப் பள்ளியும்,

468. சிறந்த வேதம் விளங்க பாடி - அதர்வவேதம் ஒழிந்த முதன்மைப்பட்ட [3]வேதங்களைத் தமக்குப் பொருள் தெரியும்படி ஓதி.

[4] 'அதர்வம் தலையாயவோத்தன்மை' பொருளிற் கூறினும்.

---

[1] பேரிளம் பெண்பருவமென்பது மகளிருடைய பேதைப் பருவம் முதலிய ஏழு பருவங்களுள் ஒன்று,

[2] (பி - ம்.) 'தாதவிழ்'

[3] வேதங்கள் மூன்றே யென்பதும், அதர்வவேதம் மந்திரசாகை யென்பதும் இங்கே அறியற்பாலன; "மும்முறை யாலும் வணங்கப் படுகின்ற முக்கணக்கன்" (பொன்வண்ணந். 87) என்பதும், "த்ரி வேத போத காரணன்" (தக்க. 380) என்பதும், அதன் உரையாசிரியர் அதற்கு, 'திரிவேதமென்றது: மூன்றே வேதம்; நாலாவது மந்திர சாகையான அதர்வவேதம்; திரைவேதா என்பது ஐதிஹ்யம்' என் றெழுதிய விசேட உரையும் இங்கே உணரத்தக்கவை.

[4] "இருக்கும் யசுரும் சாமமும்: இவை தலையாய ஓத்து. இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தாற் காரியப்படுதலின் இலக்கியமுமாயின, அதர்வம் ஆறங்கமும் தரும நூலும் இடையாய ஓத்து. அதர்வமும் ஒழுக்கம் கூறுது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடுசூழும் மந்திரங் களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று" (தொல். புறத். சூ. 20, ந.)

[5] (பி - ம்.) 'பொருளியலில்'

469. விழு சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து – விழுமிய தலைமையோடு பொருந்தின யாகங்கள் முதலிய தொழில்களோடே [1] சில காலம் பொருந்தி,

470. நிலம் அவர் வையத்து – நால்வகை நிலங்கள் அமர்ந்த உலகத்தே,

ஒரு தாம் ஆகி - ஒன்றுகிய பிரமம் தாங்களேயாய்,

471. உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும் – உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலே நின்று சேரும்,

472. அறம் நெறி பிழையா அன்பு உடை நெஞ்சின் – தருமத்தின் வழி ஒருகாலமும் தப்பாத பல்லுயிர்கட்கும் அன்புடைத்தாகிய நெஞ்சாலே,

473. பெரியோர் மேஎய் – சீவன்முத்தராயிருப்பாரிடத்தே சில காலம் பொருந்திநின்று,

[2] இனிதின் உறையும் - ஆண்டுப் பெற்ற வீட்டின்பத்தாலே இனிதாகத் தங்கும் பள்ளி (474),

474. [குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும் :]

குன்று குயின்றன்ன பள்ளியும் – மலையை உள்வெளியாக வாங்கி இருப்பிடமாக்கினாற்போன்ற பிரமவித்துக்கள் இருப்பிடமும்,

[3] அந்தணர் - வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார்,

அந்தணர் (474) பாடி (468) அன்புடை நெஞ்சாலே (472) தேவர் உலகத்தை யெய்தும் (471) ஒழுக்கத்தோடே சிலகாலம் நின்று (469) பின்னர் வேதாந்தத்தை உணர்ந்து பெரியோரை மேஎய (473)

---

[1] "ஒழுக்கத்து நீத்தார்" (குறள், 21) என்பதன் உரையிற் பரிமேலழகர், 'தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தார்' என்றும், விசேட உரையில், 'தமக்கு உரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது: தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவம் தேயும்; பாவம் தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமையின்பங்களினுவர்ப்பும், பிறவித்துன்பங்களும் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்து விடுதலெனக்கொள்க' என்றும் எழுதியவை இங்கே அறிதற்குரியன.

[2] (பி - ம்.) 'இனிதினிது'

[3] முருகு. 95, உரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

வையத்தே ஒருதாமாகி (470) உறையும் (473) பள்ளியும் (474) என முடிக்க.

475 – 6. வண்டு பட பழுநிய தேன் ஆர் தோற்றத்து பூவும் புகையும் [1]சாவகர் பழிச்ச – வண்டுகள் படியும்படி பருவம் முதிர்ந்த தேனிருந்த தோற்றத்தையுடைய பூக்களையும் புகை யினையும் ஏந்தி விரதம் கொண்டோர் துதிக்க,

477 – 83. [சென்ற காலமும் [2]வருஉ மமயமும், இன்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து, வானமு நிலனுந் தாமுழு துணரும், சான்ற கொள்கைச் சாயா யாக்கை, ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார், கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப், பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவர :]

சென்ற காலமும் வருஉம் அமயமும் (477) இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து (478) நல்குவர (483) - சென்ற காலத்தையும் வருகின்ற காலத்தையும் இன்று இவ்வுலகில் தோன்றி நடக்கின்ற ஒழுக்கத்தோடே மிகவுணர்ந்து உலகத் தார்க்குச் சொல்லுதல் வரும்படி,

வானமும் நிலனும் தாம் முழுது உணரும் (479) அறிஞர் (481)– தேவருலகையும் அதன் செய்கைகளையும் எல்லா நிலங்களின் செய்தி களையும் தாம் நெஞ்சால் அறிதற்குக் காரணமான அறிஞர்,

இஃது எதிர்காலம் கூறிற்று.

சான்ற கொள்கை (480) – தமக்கு அமைந்த விரதங்களையும்,

சாயா யாக்கை (480) – அவ்விரதங்களுக்கு இளையாத மெய்யினையும் உடைய அறிஞர் (481).

ஆன்று அடங்கு அறிஞர் (481) – கல்விகளெல்லாம் நிறைந்து களிப்பின்றி அடங்கின அறிவினையுடையார்,

[3]செறிந்தனர் (481) – நெருங்கினவருடைய சேக்கை (487) என்க.

நோன்மார் (481) – நோற்கைக்கு,

கல் பொளிந்தன்ன இட்டு வாய் கரண்டை (482) பல்புரி சிமிலி நாற்றி (483) – கல்லைப் பொளிந்தாற்போன்ற இட்டிய வாயை யுடைய [4] குண்டிகையைப் பல வடங்களையுடைய நூலுறியிலே தூக்கிச் செறிந்தன(481)ரென்க.

---

[1] சாவகர் – சைனரில் விரதம் காக்கும் இல்லறத்தார்; இவர் உலக நோன்பிகளெனவும் கூறப்படுவர்; சிலப். 15 : 153.

[2] (பி - ம்.) 'வருஉஞ்சமயமும்.'

[3] (பி – ம்.) 'செறிநர்'

[4] "உறித்தாழ்ந்த கரகமும்" (கலித். 9 : 2); "உறித்தாழ் கரகம்" (சிலப். 30 : 64, 90)

484. கயம் கண்டன்ன – [1]குளிர்ச்சியால் கயத்தைக் கண்டாற் போன்ற,

வயங்கு உடை நகரத்து - விளங்குதலையுடைய கோயிலிடத்துச் சேக்கை (487) என்க.

485. செம்பு இயன்றன்ன செ சுவர் புனைந்து – செம்பாற் செய்தாலொத்த செவ்விய சுவர்களைச் சித்திரம் எழுதி,

486. நோக்கு விசை தவிர்ப்ப மேக்கு உயர்ந்த–கண் பார்க்கும் விசையைத் தவிர்க்கும்படி மேல்நிலம் உயர்ந்து,

486 – 8. [ஓங்கி, இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும், குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற :]

குன்று பல குழீஇ பொலிவன தோன்ற ஓங்கி – மலைகள் பலவும் திரண்டு பொலிவனபோலத் தோன்ற உயர்ந்து வயங்குடை நகரம் (484) என்க.

இறும்பூது சான்ற நறு பூ சேக்கையும் - அதிசயம் அமைந்த நறிய பூக்களைச் சூழவுடைய அமணப்பள்ளியும்,

சேக்கப்படும் இடத்தைச் சேக்கை யென்றார். இவர்கள் வருத்த மறப் பறித்து வழிபடுவதற்குப் பல பூக்களைச் சூழ ஆக்குதலின் நறும்பூஞ் சேக்கை யென்றார்.

புனைந்து (485) உயர்ந்து (486) தோன்ற (488) ஓங்கிச் (486) சாவகர் பழிச்ச (476) வயங்குதலையுடைய நகரத்திடத்துக் (484) கொள்கையினையும் யாக்கையினையுமுடைய (480) அறிஞர் (481) உணர்ந்து (478) நல்குவர (483) நோன்மார் (481) சிமிலியிலே நாற்றிச் (483) செறிந்தனருடைய (481) சேக்கையுமெனக் கூட்டுக.

489. அச்சமும் – நடுவாகக் கூறுவரோ கூறுரோவென்று அஞ்சி வந்த அச்சத்தையும்,

அவலமும் – அவர்க்குத் தோல்வியால் நெஞ்சில் தோன்றும் வருத்தத்தையும்,

ஆர்வமும் நீக்கி – அவர்தம் நெஞ்சு கருதின பொருள்கள்மேற் றோன்றின பற்றுள்ளத்தினையும் போக்கி,

என்றது, அவர்கள் நெஞ்சுகொள்ள விளக்கியென்றவாறு.

490. செற்றமும் உவகையும் செய்யாது காத்து - ஒரு கூற்றிற் செற்றம் செய்யாமல் ஒரு கூற்றில் உவகை செய்யாமல் நெஞ்சினைப் பாதுகாத்து,

---

[1] "கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழல்" (மலைபடு. 47) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

491. ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி – துலாக்கோலை யொத்த [1] நடுவுநிலைமையை உடைத்தாய்,

492. சிறந்த கொள்கை [2] அறம் கூறு அவையமும் – இக்குணங் களாற் சிறந்த விரதங்களையுடைய தருமநூலைச் சொல்லும் திரளும்,

493. நறு சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து பெரியோர் (495)- நறிய சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பினையுடைய பெரியோர்,

யாகத்திற்குச் சந்தனம் பூசுதல் மரபு.

494 - 8. [ஆவுதி மண்ணி யவிர்துகின் முடித்து, மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல, நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி, அன்பு மறனு மொழியாது காத்துப், பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த :]

ஆவுதி மண்ணி (494) மா விசும்பு வழங்கும் பெரியோர் போல (495) – [3]யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்து ஏறப்போம் அந்தணர் அரசனை அடக்குமாறு போல,

நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி (496) – அரசனிடத் துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலே கண்டு அத்தீங்குகளை ஆராய்ந்து அவற்றிலே ஒழுகாமல் அடக்கி,

அன்பும் அறனும் ஒழியாது காத்து (497) – சுற்றத்திடத்துச் செல்லும் அன்பும் எவ்வுயிர்க்கண்ணும் நிகழும் தருமமும் ஒரு காலமும் போகாமல் தம்மிடத்தே பரிகரித்து,

பழி ஒரீஇ உயர்ந்து (498) - பழி தம்மிடத்து வாராமல் நீக்கி அதனானே ஏனையோரினும் உயர்ச்சி எய்தி,

பாய் புகழ் நிறைந்த (498) – பரந்த புகழ் நிறைந்த,

---

[1] "நடுவுநிலையென்பது ஒன்பது சுவையுள் ஒன்றெனநாடக நிலையுள் வேண்டப்படும் சமநிலை; அஃதாவது, 'செஞ்சாந் தெரியினுஞ் செத்தினும் போழினும், நெஞ்சோர்ந் தோடா நிலைமை'; அது காம வெகுளி மயக்கம் நீங்கினோர் கண்ணே நிகழ்வது" (தொல். மெய்ப். 12, பேர்.)

[2] "அறங்கூறவையம் - தருமநூன் முறைமையின் அறங்கூறும் தருமாசனத்தார்" (சிலப். 5 : 135, அடியார்.)

[3] யாகம்செய்து சுவர்க்கம்புகுதல், "பாடிப் பெற்ற பரிசில்: 'நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்" (பதிற். மூன்றாம் பத்தின் இறுதி வாக்கியம்) என்பதிற் குறிப்பிடப்பட்ட பாலைக் கௌதமனார் சரிதையாலும் உணரப்படும்.

அவிர் துகில் முடித்து (494) - விளங்குகின்ற [1]மயிர்க்கட்டுக் கட்டி,

499. செம்மை சான்ற காவிதி மாக்களும் - தலைமை அமைந்த [2]காவிதிப்பட்டம் கட்டின அமைச்சரும்,

500. அறன் நெறி பிழையாது ஆற்றின் ஒழுகி - இல்லறத்திற்குக் கூறிய வழியைத் தப்பாமல் இல்லறத்திலே நடந்து,

501. குறு பல் குழுவின் குன்று கண்டன்ன - அண்ணிய பல திரட்சியையுடைய மலைகளைக் கண்டாற் போன்ற,

502. பருந்து இருந்து உகக்கும் பல் மாண் நல் இல் - பருந்து இளைப்பாறியிருந்து பின்பு உயரப் பறக்கும் பல தொழிலின் மாட்சிமைப்பட்ட நல்ல இல்லில்,

503. பல் வேறு பண்டமொடு ஊண் மலிந்து கவினி – பலவாய் வேறுபட்ட பண்டங்களோடே பலவுணவுகளும் மிக்கு அழகு பெற்று,

504. மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும் - மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் நீரிடத்தனவும் பிற இடத்தனவுமாகிய பண்ணியம் (506),

505. பல் வேறு திரு மணி முத்தமொடு பொன் கொண்டு- பலவாய் வேறுபட்ட அழகினையுடைய மணிகளையும் முத்தினையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு,

506. சிறந்த தேஎத்து - மணிகளும் முத்தும் பொன்னும் பிறத்தற்குச் சிறந்த தேசத்தினின்றும் வந்த,

பண்ணியம் பகர்நரும் - பண்டங்களை விற்கும் வணிகரும்,

ஊண் மலிந்து கவினிக் (503) குன்று கண்டன்ன (501) நல்ல இல்லிலே இருந்து (502) ஆற்றினொழுகிச் (500) சிறந்த தேஎத்து வந்த (506) திருமணி முத்தமொடு பொன் கொண்டு (505) பிறவுமாகிய (506) பண்டங்களை விற்பாருமென்க.

507. [மழையொழுக் கறாஅப் பிழையா விளையுள் :] அறாஅ ஒழுக்கு மழை பிழையா விளையுள் – இடை விடாமல் பெய்கின்ற மழையால் தவறாத விளை தலையுடையதாகிய மோகூர் (508),

---

[1]மயிர்க்கட்டு - தலைப்பாகை; முல்லை. 53, ந; சீவக. 1558, ந.

[2] காவிதிப் பட்டம் : "பாண்டி நாட்டுக் காவிதிப்பட்டம் எய்தினோரும்.........முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராம்" (தொல். அகத். சூ. 30, ந.) என்பதனால் இப்பட்டம் உயர்ந்த வேளாளர் பெறுவதென்பதும், "காவிதிப்பூ" (தொல். தொகை. சூ. 12, ந. மேற்.) என்பதனால் இப்பட்டத்தினர் அணியும் பூவொன்று உண்டென்பதும், "எட்டி காவிதிப் பட்டந் தாங்கிய, மயிலியன் மாதர்" (பெருங். 2. 3 : 144- 5) என்பதனால் இப்பட்டம் மகளிரும் பெறுதற்குரிய தென்பதும் அறியப்படுகின்றன.

508. பழையன் மோகூர் - பழையனென்னும் குறுநிலமன்னனுடைய மோகூரிடத்து,

508 – 9. [அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றியன்ன :] அவை அகம் விளங்க நால்கோசர் மொழி தோன்றி அன்ன - நன்மக்கள் திரளிடத்தே விளங்கும்படி அறியக் கூறிய நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கிறைற் போன்ற,

510. தாம் மேஎந் தோன்றிய நால் பெரு குழுவும் - தமது மொழியால் தாம் மேலாய் விளங்கிய நால்வகைப்பட்ட பெரிய திரளும்,

ஐம்பெருங் குழுவில் அமைச்சரைப் பிரித்து முற்கூறினமையின், ஈண்டு ஏனை நாற்பெருங் குழுவையும் கூறினார். ஐம்பெருங் குழுவாவன : "அமைச்சர் புரோகிதர் சேனை பதியர், தூத ரொற்ற ரிவரென மொழிப"; இளங்கோவடிகளும், [1]"ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்" என்றார்.

511. [கோடுபோழ் கடைநரும் :] போழ் கோடு கடைநரும் - [2]அறுத்த சங்கை வளை முதலியனவாகக் கடைவாரும்,

திரு மணி குயினரும் - அழகிய மணிகளைத் துளையிடுவாரும்,

512. சூடு உறு நல் பொன் சுடர் இழை புனைநரும் - சுடுதலுற்ற நன்றாகிய பொன்னை விளங்கும் பணிகளாகப் பண்ணும் தட்டாரும்,

513. பொன் உரை காண்மரும்–[3]பொன்னை உரைத்த உரையை அறுதியிடும் பொன் வாணிகரும்,

கலிங்கம் பகர்நரும் - புடைவைகளை விற்பாரும்,

514. செம்பு நிறை கொண்மரும் - செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக் கொள்வோரும்,

வம்பு நிறை முடிதரும் - கச்சுக்களைத் தம் தொழில் முற்றுப்பட முடிவாரும்,

515. பூவும் புகையும் ஆயும் மாக்களும் - பூக்களையும் [4]சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பாரும்,

---

[1] சிலப்பதிகாரம், 5 : 157. [2]மதுரைக். 316, பார்க்க.

[3] "பொலங்தெரி மாக்கள்" (சிலப். 14 : 203) என்பதன் உரையில், 'பொற் பேதத்தைப் பகுத்தறியும் பொன் வாணிகர்' (அடியார்.) என்று எழுதியிருத்தல் பொன் வாணிகர் இயல்பை விளக்கும்.

[4] சாந்து - சந்தனக் கட்டை; புகை என்ற மூலத்திற்குப் புகைக்கப்படும் உறுப்பாகிய சாந்தென்று இவ்வுரையாசிரியர் பொருள் கொண்டவாறே, "பூவும் புகையும்" (சிலப். 5 : 14) என்றவிடத்துப் புகை யென்பதற்கு, "மயிருக்குப் புகைக்கும் அகில் முதலாயின' (அரும்பத.), "புகையுறுப்பு" (அடியார்.) என்று பிறரும் பொருள் கூறுதல் இங்கே அறியத்தக்கது.

516 - 7. [எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி, நுண்ணிதி னுணர்ந்த :] நுண்ணிதின் உணர்ந்த செய்தியும் உவமம் காட்டி - பலவகைப்பட்ட கூரிதாக உணர்ந்த தொழில்களையும் ஒப்புக் காட்டி,

சித்திரம் எழுதுவார்க்கு வடிவின் தொழில்கள் தோன்ற எழுதுதற்கரிதென்பதுபற்றிச் செய்தியுமென்றார்.

517 - 8. [1]நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞரும் - கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகளும்,

நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்தலிற் கண்ணுள் வினைஞரென்றார்.

பிறரும் கூடி - யான் கூறப்படாதோரும் திரண்டு,

519 - 20. தெள் திரை அவிர் அறல் கடுப்ப ஒள் பல் குறியவும் நெடியவும் மடி தரூஉ விரித்து - தெளிந்த திரையில் விளங்குகின்ற அறலையொப்ப ஒள்ளிய பலவாகிய சிறியனவும் நெடியனவுமாகிய மடிப்புடைவைகளைக் கொண்டு வந்து விரித்து,

மடித்தது அறலுக்கு உவமை.

521. சிறியரும் பெரியரும் [2]கம்மியர் குழீஇ - சிறியோரும் பெரியோருமாகிய நெய்தற்றொழிலைச் செய்வார் திரண்டு,

522. நால் வேறு தெருவினும் கால் உற நிற்றர - நான்காய் வேறுபட்ட தெருவுகடோறும் [3]ஒருவர் காலோடு ஒருவர் கால் நெருங்க நிற்றலைச் செய்ய,

கம்மியர் (521) விரித்துக் (520) குழீஇ (521) நிற்றலைச் செய்ய.

இஃது அந்திக் கடையில் தெருவிற் புடைவை விற்பாரைக் கூறிற்று.

கோயிலைச் சூழ்ந்த ஆடவர் தெரு நான்காதலின், [4]நால்வேறு தெருவென்றார். இனிப் பொன்னும் மணியும் புடைவைகளும் [5]கருஞ் சரக்கும் விற்கும் நால்வகைப்பட்ட வணிகர் தெருவென்றுமாம்.

---

[1] "நுழைபுலம் - பல நூல்களினும் சென்ற அறிவு" (குறள், 407, பரிமேல்.) என்பதை ஆராய்க.

[2] கம்மியர் : கர்மியர் என்பதன் சிதைவென்பர்; தொழில் செய்வோரென்பது அதன் பொருள்.

[3] "தாளொடு தாண்முட்ட......நீளொளி மணிவீதி நிரந்தரித் தனசனமே" (விநாயக. நகரப். 96)

[4] "நால் வேறு தெருவும் - அந்தணர் அரசர் வணிகர் வேளாள ரெனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக் களும்" (சிலப். 14 : 212, அடியார்.) என்பர்.

[5] கருஞ்சரக்கு - கூலங்கள்; சிலப். 5 : 23, அரும்பத.

523 - 5. கொடு பறை கோடியர் கடும்பு உடன் வாழ்த்தும் தண் கடல் நாடன் ஒள் பூ கோதை பெரு நாள் இருக்கை - கண்கள் வளைந்த பறையினையுடைய கூத்தருடைய சுற்றம் சேர வாழ்த்தும் குளிர்ந்த கடல் சேர்ந்த நாட்டை உடையவனாகிய ஒள்ளிய பனந் தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே,

525 - 6. விழுமியோர் குழீஇ விழைவு கொள் கம்பலை கடுப்ப கல்லென (538) - எல்லாக் கலைகளையும் உணர்ந்த சீரியோர் திரண்டு அவன் கேட்பத் [1]தருக்கங்களைக் கூறி விரும்புதல் கொண்ட ஆர வாரத்தையொப்பக் கல்லென்ற ஓசை நடக்க,

பல சமயத்தோரும் தம்மிற்றம் மாறுபட்டுக் கூறும் தருக் கத்தைச் சேரக் கூறக் கேட்டிருக்கின்ற [2]கம்பலை போலவென்றார்.

526. பலவுடன் - கூறுதன பலவற்றுடனே,

527. சேறும் நாற்றமும் பலவின் சுளையும் - தேனும் நாற்றமும் உடையவாகிய பலாப் பழத்தின் சுளையும்,

சேறென்றார், சுளையில் இருக்கின்ற தேனை.

528. வேறு பட கவினிய [3]தேம் மா கனியும் - வடிவு வேறுபட அழகு பெற்ற இனிய மாவிற் பழங்களையும்,

'சேறு நாற்றமும் வேறுபடக் கவினிய, பலவின் சுளையுந் தேமாங் கனியும்' என்றும் பாடம்.

529. பல் வேறு உருவிற் காயும் - பலவாய் வேறுபட்ட வடிவினை யுடைய பாகற்காய் வாழைக்காய் [4]வழுதுணங்காய் முதலிய காய்களையும்,

பழனும் - வாழைப் பழம் முந்திரிகைப் பழம் முதலிய பழங்களையும்,

530 - 31. கொண்டல் வளர்ப்ப கொடி விடுபு கவினி மெல் பிணி அவிழ்ந்த குறு முறி அடகும் - மழை பருவத்தே பெய்து வளர்க்கையினாலே கொடிகள் விட்டு அழகு பெற்று மெல்லிய சுருள் விரிந்த சிறிய இலைகளையுடைய இலைக் கறிகளையும்,

கொடி யென்றார், ஒழுங்குபட விடுகின்ற கிளைகளை.

532. [அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும் :] தீ சேறு அமிர்து இயன்றன்ன கடிகையும் - இனிய பாகினாற் கட்டின அமிர்தம் தேறுக நீண்டாற் போன்ற [5]கண்ட சருக்கரைத் தேற்றையும்,

533. புகழ் பட பண்ணிய பெரு ஊன் சோறும் - புகழ்ச்சிகள் உண்டாகச் சமைத்த பெரிய இறைச்சிகளையுடைய சோற்றையும்,

---

[1] சேரனவையுந் தருக்கமும் : மணி. 26 : 63 – 4.

[2] "கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலை" என்றார் கம்பரும்.

[3] தேமாவென்பது மாவில் ஒரு சாதியென்பர்.

[4] வழுதுணங்காய் - கத்தரிக்காய்; "வழுதுணங்காய் வாட்டும்" (தனிப்). [5] கண்ட சருக்கரை – கற்கண்டு.

534. கீழ் செல [1]வீழ்ந்த கிழங்கொடு - பார் அளவாக வீழ்ந்த கிழங்குடனே,

534 - 5. [பிறவும், இன்சோறு தருநர் பல்வயி னுகர:] பல்வயின் நுகர இன் சோறு பிறவும் தருநர் - பலவிடங்களிலும் அநுபவிக்க இனிய பாற்சோறு பால் முதலியவற்றையும் கொண்டுவந்து இடுவாரிடத்து எழுந்த ஓசையும்,

என்றது, சோறிடுஞ் சாலைகளை.

536 - 44. [வாலிதை யெடுத்த வளிதரு வங்கம், பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத், தொல்லெ னிமிழிசை மானக் கல்லென, நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப், பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம், இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந், துருகெழு பானாள் வருவன பெயர்தலிற், பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே, அல்லங் காடி யழிதரு கம்பலை:]

நன தலை வினைஞர் கலம் கொண்டு மறுக (539) - அகன்ற இடத்தையுடைய தேசங்களில் வாணிகர் ஈண்டுச் செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல் காரணமாக,

வால் இதை எடுத்த வளி தரு வங்கம் (536) - நன்றாகிய பாய் விரித்த காற்றுக்கொண்டு வருகின்ற மரக்கலம்,

பெரு கடல் குட்டத்து புலவு திரை ஓதம் (540) இரு கழி மருவி பாய பெரிது எழுந்து (541) உரு கெழு பால்நாள் வருவன (542) - பெரிய கடல்சூழ்ந்த இடத்தினின்றும் புலால் நாறும் திரையையுடைய ஓதம் கரிய கழியிற் புகார்முகத்தே ஏறிப் பரக்கின்ற அளவிலே மிக்கெழுந்து அச்சம் பொருந்திய நடுவியாமத்தே வருகின்றவற்றின் பண்டம் (537) என்க.

[2] பெரிதெழுந்தென்றார், பாயும் வாங்கிச் சரக்கும் பறியாமல் வருகின்றமை தோன்ற. ஓதம் மருவிப் பாயவென்றார், அவ்வோத வேற்றத்திலே கழியிலே வருமென்பதுணர்த்தற்கு.

பல் வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து (537) ஒல்லென் இமிழ் இசை மான (538) - வங்கம் வருகின்றவற்றிற் பலவாய் வேறு

---

[1] வீழ்ந்த - கீழே வளர்ந்த; "வீழ்ந்தன - கீழே வளர்ந்தன" (மலைபடு. 128, ந.); "வீழ்க்கும்மே - தாழவிருக்கும்" (109 : 6) என்பர் புறநானூற்றுரையாசிரியர்.

[2] "மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது, புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" (புறநா. 30 : 11 - 2) என்பதும், 'பாய் களை யாது பரந்தோண்டாதென்பதனால் துறை நன்மை கூறியவாறும்' என்ற அதன் விசேட உரையும் இங்கே அறிதற்குரியன.

பட்ட சரக்கு இறங்குதலைச் செய்யும் பட்டினத்து ஒல்லென முழங்கு கின்ற ஓசையை யொக்க,

மறுகுதற்கு வந்த வங்கம் குட்டத்தினின்றும் வருவனவற்றிற் பண்டம் இழியும் பட்டினத்து ஓசை மானவென்க.

பெயர்தலின் (542) பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்று (543) – [1] இரையை நிறைய மேய்ந்து பார்ப்பிற்கு இரைகொண்டு அந்திக் காலத்து மீளுதலிற் பல சாதியாய் வேறுபட்ட பறவைகளின் ஓசை எழுந்த தன்மைத்து,

அல் அங்காடி [2]அழி தரு கம்பலை (544) – அந்திக்காலத்துக் கடையில் மிகுதியைத் தருகின்ற ஓசை;

கடவுட்பள்ளியிடத்தும் (467) அந்தணர் பள்ளியிடத்தும் (474) சேக்கையிடத்தும் (487) அவையத்திடத்தும் (492) காவிதிமாக்க ளிடத்தும் எழுகின்ற ஓசை (499) கோதை (524) இருக்கையில் (525) விழைவுகொள் கம்பலை கடுப்பக் (526) கல்லென (538) என முடிக்க.

பண்ணியம் பகர்நரிடத்து ஓசையும் (506) நாற்பெருங்குழுவிடத்து ஓசையும் (510) பல்வயினுகர இன்சோறு (535) பிறவும் (534) தருநரிடத்து எழுந்த ஓசையும் (535) கோடுபோழ் கடைநர் (511) முதலாகக் கண்ணுள் வினைஞர் ரீருகவுள்ளாரும் பிறரும் கூடிக்(518) கம்மியருங் குழீஇ (521) நிற்றர (522) எழுந்த ஓசையும் பட்டி னத்து (537) ஒல்லெனிமிழிசை மானக் கல்லென (538) என முடிக்க.

இங்ஙனம் முடித்தபின், நியமித்து (365) அல்லங்காடியில் அழி தரு கம்பலை(544) தூரியங் கறங்குகையினாலும்(460) கம்பலை கடுப்பக் (526) கல்லென்கையினாலும் (538) ஒல்லெனிமிழிசை மானக் கல்லென் கையினாலும் (538) பல்வேறு புள்ளின் இசையெழுந் தற்றே (543) எனச் சேர வினைமுடிக்க.

கல்லென வென்பதனை இரண்டிடத்திற்கும் கூட்டுக.

[3]இவ்வோசைகளின் வேறுபாடுகளை நோக்கிப் பல்வேறு புள்ளோசைகளை உவமம் கூறினர்.

---

[1] "ஞாயிறு பட்ட வகல்வாய் வானத், தளிய தாமே கொடுஞ் சிறைப் பறவை, இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த பிள்ளை யுள்வாய்ச் செரீஇய, இரைகொண் டமையின் விரையு மாற் செலவே" (குறுந். 92),

[2] அழியென்பது மிகுதியைக் குறித்தல், "அழியும் - பெருகும்" (சீவக. 1193, ந.) "அழிபசி - மிக்க பசி" (குறள். 226. பரிமேல்.) என்பவற்றாலும் உணரப்படும்.

[3] "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண், தேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சி" (திருவிளை. திருநகரப். 67)

545 - 6. [ஒண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து, சென்ற ஞாயிறு :] ஒள் சுடர் உருப்பு ஒளி சினம் தணிந்து - மழுங்கிச் சென்ற ஞாயிறு - ஒள்ளிய கிரணங்களையுடைய வெப்பத்தை யுடைய ஒளி சினம் மாறிக் குறையும்படி ஒழுகப்போன ஞாயிறு,

547 - 7. நல் பகல் கொண்டு குடமுதல் குன்றம் சேர - பின்னர் நன்ருகிய பகற்பொழுதைச் சேரக்கொண்டு மேற்றிசையிடத்து அத்த கிரியைச் சேருகையினுலே,

547 - 9. குணமுதல் நாள் முதிர் மதியம் தோன்றி நிலா விரிபு பகல் உரு உற்ற இரவு வர - கீழ்த்திசையிடத்தே பதினுறு நாட் சென்று முதிர்ந்த நிறைமதி எழுந்து நிலாப் பரக்கையினுலே பகலின் வடிவையொத்த இராக்காலம் வரும்படி,

549. நயந்தோர் - கணவர் பிரிதலிற் கூட்டத்தை விரும்பியிருந் தார்க்கு,

550. காதல் இன் துணை புணர்மார் - தம்மேற் காதலையுடைய தமக்கு இனிய கணவரைக் கூடுதற்கு,

550 - 51. ஆய் இதழ் தண் நறு கழுநீர் துணைப்ப - ஆராய்ந்த இதழ்களையுடைய குளிர்ந்த நறிய செங்கழுநீர்களை மாலை கட்டும் படியாக,

551. இழை புனையூஉ - அணிகளை அணிந்து,

552. நல் நெடு கூந்தல் நறு விரை குடைய - நன்ருகிய நெடிய மயிரிற் பூசின நறிய மயிர்ச்சந்தனத்தை அலைத்து நீக்கும்படியாக,

553. நரந்தம் அரைப்ப - கத்தூரியை அரைக்கும்படியாக,

நறு சாந்து [1]மறுக - நறிய சந்தனம் அரைக்கும்படியாக,

554. மெல் நூல் கலிங்கம் கமழ் புகை மடுப்ப - மெல்லிய நூலாற் செய்த கலிங்கங்களுக்கு மணக்கின்ற அகிற்புகையை ஊட்டும்படியாக,

555 - 6. பெண் மகிழ்வு உற்ற பிணை நோக்கு மகளிர் நெடு சுடர் விளக்கம் கொளீஇ - குணச்சிறப்பால் [2]உலகத்துப் பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணைபோலும் நோக்கினையுடைய மகளிர் நெடிய ஒளியினையுடைய விளக்கினை ஏற்றி,

556 - 8. [நெடுநகர், எல்லை யெல்லா நோயொடு புகுந்து, கல்லென் மாலை நீங்க :]

நெடு நகர் எல்லை எல்லாம் - பெரிய ஊரின் எல்லையாகிய இட மெல்லாம்,

---

[1] மறுக - அரைக்க; நெடுநல். 50, ந.

[2] "பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுறு முலையி னுளை", "ஆண்விருப் புற்று நின்ரு ரவ்வளைத் தோளி னுரே" (சீவக. 587, 2447) என்பவற்றின் அடிக்குறிப்பைப் பார்க்க.

கல்லென் [1]மாலை நோயொடு புகுந்து நீங்க - கல்லென்னும் ஓசையையுடைய மாலை நயந்தோர்க்கு (549) நோயைச் செய்த லோடே புகுந்து போகையினாலே முந்தை யாமம் சென்றபின்றை (620) என்க.

நெடுநகர் (556) எல்லையெல்லாம் (557) மகளிர் (555) விளக்கங் கொளீஇக் (556) காதலின்றுணைபுணர்தற்குப் (550) புனைபூஉத் துணைப்பக் (551) குடைய (552) அரைப்ப மறுக (553) மடுப்ப (554) இரவு வரும்படி (549) ஞாயிறு (546) குன்றஞ் சேருகையினாலே(547) மாலை (558) நயந்தோர்க்கு (549) நோயொடு புகுந்து (557) பின்னர் நீங்க (558) முந்தை யாமஞ் சென்ற பின்றை (620) எனக் கூட்டுக.

558. நாணு கொள - புணர்ச்சி நீங்கிற்றாகத் தமக்கு [2]உயிரினும் சிறந்த நாணைத் தம்மிடத்தே தடுத்துக்கொள்ள,

559 - 61. [ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ், [3]தாழ் பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து, வீழ்துணை தழீஇ:]

ஏழ் புணர் சிறப்பின் இன் தொடை சிறு யாழ் பண்ணு பெயர்த்து - இசையேழும் தன்னிடத்தே கூடின தலைமையினை யுடைய இனிய நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்களை மாறி வாசித்து,

வீழ் துணை தழீஇ - தம்மை விரும்பின கணவரைப் புணர்ந்து நாணுக்கொள (558),

[4]பாட்டுக் காமத்தை விளைவித்தலின், யாழை வாசித்து வீழ்துணை தழீஇ யென்றார்.

561 - 2. [வியல்விசும்பு கமழ, நீர்திரண் டன்ன கோதை பிறக் கிட்டு :] நீர் திரண்டன்ன கோதை வியல் விசும்பு கமழ பிறக்கு

---

[1] மாலை நோயொடு புகுதல் : "மாலை.........நோயே மாகுதல்" (குறுந். 64 : 2 - 4); "மாலைநோய் செய்தல்", "மாலை மலருமிந் நோய்" (குறள், 1226 - 7) [2] தொல். களவு. சூ. 22

[3] தொல். புள்ளிமயங். சூ. 11, ந. மேற்.

[4] "இசையுங் கூத்துங் காமத்திற்கு உத்தீபனமாகலின்" (சீவக. 2597, ந.); "கிளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந் தீன்ற காம, விளைபயன்" (சீவக. 2598); "நஞ்சுகொப் புளிக்கும் பேழ்வாய் நாகணை துறந்த நம்பி, கஞ்சநாண் மலர்வாய் வைத்த கழையிசை யமிழ்த மாரி, அஞ்செவி தவழ்த லோடு மாய்ச்சியர் நிறத்து மாரன், செஞ்சிலை பழுத்துக் கான்ற செஞ்சரந் தவழ்ந்த மாதோ" (பாகவதம். 10. 12 : 6); "அவ்விய மதர்வேற் கண்ணா ரந்தளிர் விரன டாத்தும், திவ்விய நரம்புஞ் செவ்வாய்த் தித்திக்கு மெழாலுந் தம்மிற், கவ்விய நீர வாகிக் காளையர் செவிக்கா லோடி, வெவ்விய காமப் பைங்கூழ் விளைதர வளர்க்கு மன்றே" (திருவிளை. திரு நகரப். 52)

இட்டு - நீர் திரண்டாற் போன்ற வெள்ளிய பூக்களால் செய்த மாலைகளை அகற்சியையுடைய விசும்பிலே சென்று நாறும்படி கொண்டையிலே முடித்து,

563. ஆய்கோல் அவிர் தொடி விளங்க வீசி - அழகிய திரட்சியையுடைய விளங்குகின்ற தொடி மிக விளங்கும்படி கையை வீசி மனைதொறும் சென்று பொய்தல் அயர (589) என்க.

564. போது அவிழ் புது மலர் தெரு உடன் கமழ - அலரும் பருவமாக மலர்ந்த புதிய விடுபூக்கள் தெருவுகள் எங்கும் நாற,

565. மே தகு தகைய மிகு நலம் எய்தி - முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியாற் குலைந்த ஒப்பனைகளைப் பின்னும் பெருமை தருகின்ற அழகினையுடைய மிகுகின்ற நன்மையுண்டாக ஒப்பித்து,

566 - 7. [பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர், திறந்து மோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்து :]

திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து - அலர்கின்ற பருவத்தே [1]கையால் அலர்த்தி மோந்து பார்த்தாலொத்த மிக்கு நாறுகின்ற நாற்றத்தினையுடைய,

பெரு பல் குவளை சுரும்பு படு பல் மலர் - பெரிய பலவாகிய செங்கழுநீரிற் சுரும்புகளுக்கு அலர்கின்ற பல பூக்களையும்,

568. [கொண்டன் மலர்ப்புதன் மானப் பூவேய்ந்து :]

கொண்டல் மலர் புதல் மான வேய்த்து - மழைக்கு மலர்ந்த மலரையுடைய சிறு தூற்றையொக்கச் சூடி,

பூ - ஏனைப் பூக்களையும்,

பல நிறத்துப் பூக்களை நெருங்கப் புனைதல்பற்றிச் சிறு தூற்றை உவமை கூறினர்.

569 - 72. [நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி, மாயப் பொய் பல கூட்டிக் கவவுக் கரந்து, சேயரு நணியரு நலனயந்து வந்த, இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி :]

சேயரும் நணியரும் நலம் நயந்து வந்த (571) இள பல் செல்வர் (572) - புறமண்டலத்தாரும் உள்ளூரிலுள்ளாருமாய்த் தம்முடைய வடிவழகை விரும்பி வந்த இளையராகிய பல செல்வத்தையுடையாரை,

பல மாயம் பொய் கூட்டி (570) நுண் பூண் ஆகம் வடு கொள முயங்கி (569) - பல வஞ்சனைகளையுடைய பொய் வார்த்தைகளாலே முதற் கூட்டிக்கொண்டு அவருடைய நுண்ணிய பூண்களையுடைய மார்பைத் தம் மார்பிலே வடுப்படும்படியாக முயங்கிப் பின்னர்,

---

[1] முருகு. 198 - 9, அடிக்குறிப்பைப் பார்க்க.

கவவு கரந்து (570) வளம் தப வாங்கி (572) - அங்ஙனம் [1]அன்புடையார் போலே முயங்கின முயக்கத்தை அவர் பொருள் தருமளவும் மறைத்து அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாக வாங்கிக் கொண்டு,

573 - 4. நுண் தாது உண்டு வறு பூ துறக்கும் மெல் சிறை வண்டு இனம் மான - பூ அலரும் காலம் அறிந்து அதன் நுண்ணிய தாதை உண்டு தாதற்ற வறுவிய பூவைப் பின்னர் நினையாமல் துறந்து போம் மெல்லிய சிறகையுடைய வண்டின் திரளையொப்ப,

இது தொழிலுவமம்.

574 - 5. புணர்ந்தோர் நெஞ்சு ஏமாப்ப இன் துயில் துறந்து - தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனிய கூட்டத்தை நேராகக் கைவிட்டு,

576. பழம் தேர் வாழ்க்கை பறவை போல - பழுமரமுள்ள இடம் தேடிச் சென்று, அவற்றின் பழத்தையே ஆராய்ந்து வாங்கி நுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய புள்ளினம்போல,

தம் உயிரைப் பாதுகாக்கின்ற வாழ்க்கைத் தொழிலை வாழ்க்கையென்றார்.

577-8. [கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய, மணம் புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லில் :]

கொழு குடி செல்வரும் பிறரும் மேஎய அணங்கு உடை நல் இல் - வளவிய குடியிற் பிறந்த செல்வரும் அவர்களால் தோன்றிய பிற செல்வரும் மேவப்பட்ட இல்லுறை தெய்வங்களையுடைய, நன்றாகிய அகங்களில்,

[2] குடிச்செல்வரென்றார், நான்கு வருணத்தை; பிறரென்றார் அவர்களால் தோன்றிய ஏனைச் சாதிகளை.

578 - 9. மணம் புணர்ந்து ஓங்கிய ஆய் பொன் அவிர் தொடி பசு இழை மகளிர் - வரைந்து கொள்ளப்பட்டு உயர்ச்சிபெற்ற ஓடவைத்த பொன்னாற் செய்த விளங்குகின்ற தொடியினையும் பசிய பூணினையுமுடைய மகளிர்,

580. ஒள் சுடர் விளக்கத்து - ஒள்ளிய விளக்கினுடைய ஒளியிலே,

பலர் உடன் துவன்றி – பலரும் சேர நெருங்கி,

581 - 2. நீல் நிற விசும்பில் அமர்ந்தனர் ஆடும் வானவ மகளிர் மான - நீல நிறத்தையுடைய ஆகாயத்தே நெஞ்சமர்ந்து விளையாடும் தெய்வ மகளிர் வருத்துமாறுபோல,

---

[1] "மெய்படு மன்பி னோர்போல் விரும்பினார்க் கருத்துந் தங்கள், பொய்படு மின்பம்" (திருவிளை. திருநகரப். 47)

[2] பெரிய. திருக்குறிப்பு. 99 - 103; திருவிளை. திருநகரங்கண்ட, 45, பார்க்க.

582 - 3. கண்டோர் நெஞ்சு நடுக்கு உறூஉ கொண்டி மகளிர் - தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்தமுறுவித்துப் பொருள் வாங்குதலையுடைய பரத்தையர்,

584 - 5. [யாம நல்யாழ் நாப்ப ணின்ற, முழவின் மகிழ்ந்தன ராடி:] யாமம் நல் யாழ் நாப்பண் தாழ்பு அயல் கனை குரல் கடுப்ப (560) நின்ற முழவின் மகிழ்ந்தனர் ஆடி - முதற் சாமத்தில் வாசித் தற்குரிய நன்றாகிய யாழ்களுக்கு நடுவே அவற்றிற்கேற்பத் தாழ்ந்து தம்வயிற் செறிந்த ஓசையையொக்க நின்ற முழவாலே மனம் மகிழ்ந்தாடி,

தாழ்பயற் கனைகுரல் கடுப்ப (560) என்று முன்னர் வந்ததனை இவ்விடத்துக் கூட்டுக.

585 - 6. குண்டு நீர் பனி துறை குவவு மணல் - ஆழ்ந்த நீரினை யுடைய குளிர்ந்த துறையிடத்துக் குவிந்த மணலிலே,

முனைஇ - வெறுத்து,

586 - 7. [மென்றளிர்க், கொழுங்கொம்பு கொழுதி:] கொழு கொம்பு மெல் தளிர் கொழுதி - கொழுவிய கொம்புகளில் நின்ற மெல்லிய தளிர்களைப் பறித்து,

587 - 8. [நீர்நனை மேவர, நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி;] குவளை நீர் நனை மேவர நெடு தொடர் வடிம்பு உற [1] அடைச்சி - குவளையை [2] நீர்க்கீழரும்புகளோடே பொருந்துதல்வரக் கட்டின நெடிய தொடர்ச்சியை வடிம்பிலே விழும்படி உடுத்து,

589. மணம் கமழ் மனை தொறும் பொய்தல் அயர-மணம் நாறு கின்ற மனைதோறும் சென்று பொருள் தருதற்குரிய இளையரோடு விளையாடுதலைச் செய்ய,

அங்ஙனம் விளையாடி வசிகரித்து உறவுகொண்டு பொருள் வாங்குதல் அவர்க்கு இயல்பு.

வானவ மகளிர் மான (582) நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர் (583) பலருடன் துவன்றிக் (580) குவவுமணலிலே (586) முழவின் மகிழ்ந்தனராடி (585) அதனை முனைஇக் (586) குவளையை அடைச்சிக் (588) கோதையை (562) விசும்புகமழப் (561) பிறக்கிட்டு (562) இளம் பல்செல்வரைக் (572) கூட்டி (570) முயங்கிப் (569) பின்னர்க் கவவுக் கரந்து (570) வளந்தப வாங்கித் (572) தாதுண்டு துறக்கும் (573) வண்டினம் மான (574) இன்றுயில் துறந்து (575) பின்னரும் மிகுநல மெய்திச் (565) சுரும்பு படு பன்மலரையும் (566) ஏனைப் பூக்களையும் புதல் மான வேய்ந்து (568) புதுமலர் தெருவுடன் கமழத் (564) தொடியை வீசி (563) மணங்கமழ் மனைதொறும்

---

[1] அடைச்சி - செருகி; சிலப். 14 : 77, அடியார்.

[2] ''கீழ்நீர்ச் செவ்வரும்பு'' (முருகு. 29)

(589) பறவைபோலச் (576) சென்று பெயய்தலயர (589) எனக் கூட்டுக.

செல்வரும் பிறரும் மேவப்பட்ட (577) அணங்குடை நல்ல இல்லிலே மணம் புணர்ந்தோங்கிய (578) பாசிழை மகளிர் (579) ஒண்சுடர் விளக்கத்தே (580) சீறியாழை (559) பண்ணுப்பெயர்த்து (560) வீழ் துணை தழீஇ (561) நாணுக்கொள (558) எனக் கூட்டுக.

590 - 91. கணம் கொள் அவுணர் கடந்த பொலம் தார் மாயோன் மேய ஓணம் நல் நாள்-திரட்சியைக் கொண்ட அவுணரை வென்ற பொன்னாற் செய்த மாலையினையுடைய மாமையை யுடையோன் பிறந்த ஓணமாகிய நன்னாளில் ஊரில் உள்ளார் எடுத்த விழவிடத்தே,

592 - 5. [கோணந் தின்ற வடுவாழ் முகத்த, சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை, மறங்கொள் சேரி மாறுபொரு செருவின், மாறு துற்ற வடுப்படு நெற்றி :]

மறம் கொள் சேரி மாறு பொரு செருவில் (594) மாறுது உற்ற வடு படு நெற்றி (595) - இற்றைநாட் போர் செய்துமென்று கருதி மறத்தைக் கொண்டிருக்கின்ற தெருவுகளில் தம்மிற்றும் மாறுப் பொருகின்ற போரின்கண்ணே நின்ற அடி மாறுமையாற் பட்ட [1] வடு அழுந்தின நெற்றியினையும்,

596. சுரும்பு ஆர் கண்ணி பெரு புகல் மறவர் - சுரும்புகள் நிறைந்த[2] போர்ப்பூவினையும் பெரிய விருப்பத்தினையுமுடைய மறவர்,

அத்திருநாளிற்பொரும்[3] சேரிப்போர் கூறினர், அவ்வூர்க்கு இயல்பென்று.

597. [கடுங்களி றோட்டலின்:] [4] கோணம் தின்ற வடு ஆழ் முகத்த (592) சாணம் தின்ற சமம் தாங்கு தட கை (593) கடு களிறு ஓட்டலின் - தோட்டி வெட்டின வடு அழுந்தின முகத்தையுடைய வாய்க் கொலை பழக்கும் போர்யானை பலகாலும் எடுத்தலால் தழும்பிருந்த போரைத் தாங்கும் பெரிய கையினையுடைய கடிய களிற்றை ஓட்டுகையினாலே,

---

[1] "தள்ளிவரு செங்கையொடு முன்கைபிடர் நெற்றியொடு சூடமென வெண்ணு படையால்......மல்லமர் தொடங்கி யுறவே" (வி. பா. அருச்சுனன் தவநிலை. 110) என்பதனால் நெற்றி வடுப்படுதலின் காரணம் உணரப்படும்.

[2] போர்ப்பூ - தும்பை; "தும்பை - போர்ப்பூ" (பு. வெ. 241, உரை)

[3] சேரிப்போர் : "கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரி தனிற், கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தா, னார்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்" (தே. திருஞா.)

[4] கோணம் - தோட்டி; மணி. 18: 163.

597 - 8. [*காணுந ரிட்ட, நெடுங்கரைக்* [1]*காழக நிலம்பர லுறுப்ப :*] காணுநர் நெடு கரை காழகம் இட்ட பரல் நிலம் உறுப்ப - அவ்வியானைக்கு முன்னே ஓடி அதன் விசையைக் காணும் பரிக்காரர் அவ்வியானை பிடித்துக்கொள்ளும் காலத்து மேல் வாராமல் அஞ்சி மீளுதற்குச் சமைப்பித்து நெடிய கரையையுடைய நீல நிறத்தையுடைய புடைவைகளிலே வைத்துச் சிந்தின கப்பணம் நிலத்தே கிடந்து கால்களைப் [2]பொதுக்கும்படி.

நெருஞ்சி முள்ளுப் போல முனைபட இரும்பால் திரளச் சமைத்துத் தூவுதற்கு யானை அஞ்சுமென்று அவர் மடியிலே வைத்த கப்பணத்தைப் பரல் போறலிற் பரலென்றார்; "வேழங், காய்ந் தனன் கடுக வுந்திக் கப்பணஞ் சிதறி னானே" (சீவக. 285) என்றார் பிறரும்.

599. *கடு கள் தேறல் மகிழ் சிறந்து திரிதர* - கடிய கள்தெளிவை உண்டு மகிழ்ச்சி மிக்குத் திரிதலைச் செய்ய,

ஓண நாளிற் (591) பொருது வடுப்படும் நெற்றி (595) முதலியவற்றையுடைய மறவர் (596) மகிழ்சிறந்து (599) பரலுறுப்பத் (598) திரிதர (599) எனக் கூட்டுக.

600. *கணவர் உவப்ப புதல்வர் பயந்து* - தம் கணவர் [3]இம்மை மறுமையிற் பெரும்பயன் பெற்றேமென்று மகிழும்படி பிள்ளைகளைப் பெற்று,

---

[1] காழகம் - நீலநிற உடை; இது காளகமெனவும் வழங்கும்; "காளக வுடையினள் காளி கூறுவாள்" (பாகவதம், 10. 1 : 81)

[2] பொதுத்தல் – துளைத்தல், "அண்டத் தைப்பொதுத் தப்புறத் தப்பிறு லாடும்" (கம்ப. இரணியன். 4); இச்சொல் பொதிர்த்தலெனவும் வழங்கும்; "கழைபொதிர்ப்பத் தேன்சொரிந்து" (சீவக. 2778)

[3] "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமு மறுவின் றெய்துப, செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச், சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப், பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம், வாயே யாகுதல்" (அகநா. 66 : 1 - 6) என்பதும், "உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி, இருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை" (கம்ப. 2. மந்திரப். 63) என்பதும், "இவையிரண்டு பாட்டானும் நன்மக்களைப் பெற்றார் பெறும் மறுமைப்பயன் கூறப்பட்டது", "இவை மூன்று பாட்டானும் இம்மைப் பயன் கூறப்பட்டது" (குறள், 63, 66, பரிமேல்.) என்பனவும் இங்கே அறியத்தக்கன.

601. பணைத்து ஏந்து இள முலை அமுதம் ஊற - பாலால் இடங் கொண்டேந்திய இளைய முலை [1]பால் சுரக்கும்படி,

602 - 3. [புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீ ரயர :]

புலவு புனிறு தீர்ந்து குளம் நீர் அயர - புலால் நாற்றத்தை யுடைய ஈன்றணிமை நீங்கித் தெய்வத்தின் அருளால் ஓரிடுக்கணும் அற்றுக் குளத்து நீரிலே குளிக்கையினாலே,

[2] கடு சூல் மகளிர் பேணி (609) - முதற்சூல் கொண்ட மகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப் பரவிக் குறை தீர்ந்தபின்,

பொலிந்த சுற்றமொடு - மிக்க சுற்றத்தாருடனே,

வளம் மனை மகளிர் - செல்வத்தையுடைய மனைமகளிர்,

இல்லிருக்கும் குடிப்பிறந்த மகளிர்.

604. திவவு மெய் நிறுத்து செவ்வழி பண்ணி - வலிக்கட்டினை யாழிற்றண்டிலே கட்டிச் செவ்வழி யென்னும் பண்ணை வாசித்து,

திவவுக் கூறவே அதில் நரம்பும் கூறினர்.

605. குரல் புணர் நல் யாழ் முழவோடு ஒன்றி — குரலென்னும் நரம்பு கூடின வன்னம் நன்றாகிய யாழுடனே முழவும் பொருந்தி,

606. நுண் நீர் ஆகுளி இரட்ட - மெல்லிய நீர்மையினையுடைய சிறுபறை ஒலிப்ப,

பலவுடன் - பூசைக்கு வேண்டும் பொருள்கள் பலவற்றுடனே,

607. ஒள் சுடர் விளக்கம் முந்துற - ஒள்ளிய சுடர் விளக்கம் முற்பட,

மடையொடு - பாற்போனகம் முதலிய சோறுகளை,

608. நல் மா மயிலின் மெல் மெல இயலி - நன்றாகிய பெருமையை யுடைய மயில் போல மெத்தென மெத்தென நடந்து,

609. [கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது :]

கை தொழுது - கையால் தொழுது.

610. [பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசார் :]

---

[1] பால் சுரக்கும்படி நீரயர்ந்தாரென்றார், ஈன்றவுடன் மகளிர்க்குப் பால் சுரவாதாதலின்; இது, "பால் சொரியும் பருவத்தளவும் பொருளாய்ப் பாலை வலிய வாங்கியென்க; என்றது மகப் பயந் தோர்க்குப் பயந்தபொழுதே பால்சுரவாதாதலால்" (சீவக. 305. ந.) என்பதனால் உணரப்படும்.

[2] சிறுபாண். 148, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

பெரு தோள் சாலினி மடுப்ப - பெரிய தோளினையுடைய [1]தேவ ராட்டியோடே மடுப்ப.

வளமனை மகளிர் சிலர் (603) புதல்வர்ப் பயந்து (600) புனிறு தீர்ந்து (602) குளநீராடுதலாலே (603) அதுகண்டு கடுஞ்சூல் மகளிர் பேணிக் (609) குறை தீர்ந்தபின் பொலிந்த சுற்றத்தோடே (602) பலவுடன் (606) சாலினியோடே (610) பண்ணி (604) ஒன்றி (605) இரட்ட (606) இயலிச் சென்று (608) கைதொழுது (609) மடையை (607) மடுப்ப (610) எனக் கூட்டுக.

610. ஒரு சார் - ஒரு பக்கம்,

611. அரு கடி வேலன் முருகொடு வளைஇ - அரிய [2]அச்சத்தைச் செய்யும் வேலன் இவ்விடுக்கண் முருகனால் வந்ததெனத் தான் கூறிய சொல்லின்கண்ணே கேட்டோரை வளைத்துக்கொண்டு,

பிள்ளையார் வேலை யெடுத்தலின், [3]வேலனென்றார். என்றது, [4]கழங்கு வைத்துப் பிள்ளையாரால் வந்ததென முற்கூறிப் பின் வெறியாடுவனென்று ஆடும் முறைமை கூறிற்று.

612. [5]அரி கூடு இன் இயம் கறங்க - அரித்தெழும் ஓசையை யுடைய [6]சல்லி கரடி முதலியவற்றோடே கூடின இனிய ஏனை வாச்சியங்கள் ஒலியா நிற்க,

---

[1] தேவராட்டி - தெய்வமேறப் பெற்றவள்; "காடுபலி மகிழ வூட்டத், தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி தனையழைமின்" (பெரிய. கண்ணப்ப. 47)

[2] அச்சத்தைச் செய்யுமென்றது தலைவிக்கு அச்சத்தைச் செய்தலைக் குறிப்பித்தபடி; "தலைவி அஞ்ச வேண்டியது இருவரும் ஒட்டிக் கூறாமல் தெய்வந்தான் அருளுமென்று கோடலின்" (தொல், களவு. சூ. 24, ந.) என்பதை உணர்க.

[3] வேலனென்னும் பெயர்க் காரணம், முருகு. 222-ஆம் அடியின் உரையிலும் இவ்வாறே கூறப்பட்டது.

[4] கழங்கு - கழற் கொடிக்காய்; வேலன் கழங்கு வைத்துப் பார்த்தலும் பிறவும், "கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (தொல். களவு. சூ. 24) என்பதனாலும், அதன் உரையாலும், "பெய்ம் மணன் முற்றங் கவின்பெற வியற்றி, மலைவான் கொண்ட சினைஇய வேலன், கழங்கினா னறிகுவ தென்றால்" (ஐங். 248) என்பதனாலும் உணரப்படும்.

[5] அரி: "அரிக்குரற் றட்டை" (மலைபடு. 9)

[6] சல்லி - இது சல்லிகையெனவும் வழங்கும்; சல்லென்ற ஓசை யுடைத்தாதலால் இப்பெயர் பெற்றதென்பர். கரடி - இது கரடிகை யெனவும் வழங்கும்; கரடி கத்தினாற்போலும் ஓசையுடைமையின் இப்பெயர் பெற்றதென்பர். இவ்விரண்டும் உத்தமக் கருவிகளைச் சார்ந்தவை; சிலப். 3 : 27, அடியார். பார்க்க.

612 - 4. [நேர்நிறுத்துக், கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின், சீர்மிகு நெடுவேட் பேணி :]

கார் மலர் குறிஞ்சி சூடி - கார்காலத்தான் மலரையுடையவாகிய குறிஞ்சியைச் சூடி,

கடம்பின் சீர் மிகு நெடுவேள் நேர் நிறுத்து பேணி – கடம்பு சூடுதலால் அழகு மிகுகின்ற முருகனைச் செவ்விதாகத் தன் மெய்க் கண்ணே நிறுத்தி வழிபடுகையினாலே,

தழூஉ பிணையூஉ - மகளிர் தம்முள் தழுவிக் கைகோத்து,

615. மன்றுதொறும் நின்ற குரவை - மன்றுகடோறும் நின்ற குரவைக் கூத்தும்,

சேரிதொறும் - சேரிகடோறும் நின்ற,

616. உரையும் - புனைந்துரைகளும்,

பாட்டும் - பாட்டுக்களும்,

ஆட்டும் - பலவகைப்பட்ட கூத்துக்களும்,

விரைஇ – தம்மிற் கலக்கையினாலே,

617. வேறு வேறு கம்பலை – வேறு வேறாகிய ஆரவாரம்,

வெறி கொள்பு மயங்கி - ஒழுங்கு கொண்டு மயங்கப்பட்டு,

618. பேர் இசை [1]நன்னன் [2]பெறும் பெயர் நன்னாள் - பெரிய புகழையுடைய நன்னன் கொண்டாடுகின்ற பிறந்த நாளிடத்து,

அவன் பெயரை அந்நாள் பெறுதலின், பெயரைப் பெற்ற நன்னாளென்றார்.

619. சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு - சேரிகளில் உள்ளார் கொண்டாடுகின்ற விழாவாலே ஆரவாரம் எழுந்தாற் போல,

620. முந்தை யாமம் சென்ற பின்றை - முற்பட்ட சாமம் நடந்த பின்பு,

கொண்டி மகளிர் (583) பொய்தலயரப் (589) பாசிழை மகளிர் (579) வீழ்துணை தழீஇ (561) நாணுக்கொள (558) மறவர் (596) மகிழ் சிறந்து திரிதரக் (599) கடுஞ்சூல் மகளிர் கைதொழுது (609) மடுப்ப ஒருசார் (610) நெடுவேட் பேணுகையினாலே (614) மன்றுதொறும் நின்ற குரவையும் சேரிதொறும் நின்ற (615) உரையும் பாட்டும் ஆட்டும் விரவுகையினாலே (616) வேறு வேறுபட்ட கம்பலை (617) சேரிவிழவின் ஆர்ப்பெழுந்தாங்கு (619) வெறிகொள்பு மயங் கப்பட்டு (617) முந்தை யாமம் சென்ற பின்றை (620) எனக் கூட்டுக.

ஒரு சார் (610) விரைஇ (616) என்க.

---

[1] நன்னன் ஒரு குறுநில மன்னன்.

[2] சில பிரதிகளில், 'பெறும் பெயர் நன்னாள்' என்று இருந்தது.

621. பணிலம் கலி அவிந்து அடங்க - சங்குகள் ஆரவாரம் ஒழிந்து அடங்கிக் கிடக்க,

621 - 2. காழ் சாய்த்து நொடை நவில் நெடு கடை அடைத்து - சட்டக்காலை வாங்கிப் பண்டங்களுக்கு விலை கூறும் நெடிய கடையை அடைத்து,

622 - 3. மட மதர் ஒள் இழை மகளிர் பள்ளி அயர - மடப்பத்தினையும் செருக்கினையும் ஒள்ளிய அணிகலங்களையுமுடைய மகளிர் துயிலுதலைச் செய்ய,

624 - 6. [நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை, அயிருருப் புற்ற வாடமை விசயம், கவவொடு பிடித்த வகையமை மோதகம்:]

விசயம் ஆடு அமை நல் வரி இறாஅல் புரையும் மெல் அடை - பாகிலே சமைத்தலமைந்த நல்ல வரிகளையுடைய தேனிறாலை யொக்கும் மெல்லிய அடையினையும்,

கவவொடு அயிர் பிடித்த வகை அமை உருப்பு உற்ற மோதகம் - பருப்பும் தேங்காயுமாகிய உள்ளீடு - உள்ளே இடப்பெற்ற பொருள்கள்களோடே [1] கண்ட சருக்கரை கூட்டிப் பிடித்த வகுப்பமைந்த வெம்மை பொருந்தின அப்பங்களையும்,

627. தீ சேறு [2] கூவியர் தூங்குவனர் உறங்க - இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவினையுமுடைய அப்ப வாணிகரும் அவற்றோடே இருந்து தூங்குவனராய் உறங்க,

628. விழவின் ஆடும் வயிரியர் மடிய - திருநாளின்கண்ணே கூத்தாடும் கூத்தர் அதனை ஒழிந்து துயில்கொள்ள,

629. பாடு ஆன்று அவிந்த பனி கடல் புரைய - ஒலிநிறைந்து அடங்கின குளிர்ந்த கடலையொக்க,

630. பாயல் வளர்வோர் கண் இனிது மடுப்ப - படுக்கையிலே துயில்கொள்ளுவோர் கண் இனிதாகத் துயில்கொள்ள,

631. [பானாட் கொண்ட கங்கு லிடையது:]

பால் நாள் கொண்ட கங்குல் - பதினைந்தாம் நாழிகையை முடிவாகக் கொண்ட கங்குல்,

632 - 3. [பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற், கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப:]

பேயும் அணங்கும் உருவு கொண்டு கழுதொடு கொட்ப - பேய்களும் வருத்தும் தெய்வங்களும் வடிவுகொண்டு கழுதுடனேசுழன்று திரிய,

கழுது - பேயில் ஒரு சாதி.

---

[1] கண்ட சருக்கரை - கற்கண்டு; ஒருவகைச் சருக்கரையுமாம்.

[2] கூவியர் - அப்ப வாணிகர்; பெரும்பாண். 377, ந.

ஆய் கோல் கூற்றம் கொல் தேர் அச்சம் அறியாது ஏமம் ஆகிய (652) மதுரை (699) யெனக் கூட்டி, யாக்கை நிலையாதென்றறிந்து மறுமைக்கு வேண்டுவன செய்துகொண்டமையின், அழகிய கோலை யுடைய கூற்றத்தின் கொலைக்கு அஞ்சாமல் காவலுண்டாயிருக் கின்ற மதுரை யென்க.

''கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார், வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம், வருங்காற் பரிவ திலர்'' (நாலடி. 35) என்றார் பிறரும். கொஃறேர் - காலசக்கரம்.

634. இரு பிடி மேஎந்தோல் அன்ன இருள் சேர்பு - கரிய பிடியின்கண்ணே மேவின தோலையொத்த கருமை தமக்கு இயல்பாகச் சேரப்பட்டு,

இருள் - கருஞ்சட்டையுமாம்.

635. கல்லும் மரனும் துணிக்கும் கூர்மை நிலன் அகழ் உளியர் (641)-கல்லையும் மரத்தையும் அறுக்கும் கூர்மையையுடைய நிலத்தை அகழும் உளியை உடையராய்,

நிலத்தை அகழுங்காலத்து இடைப்பட்ட கற்களுக்கும் மரங் களுக்கும் வாய் மடியாதென்றார்.

636. தொடலை வாளர் - தூக்கிட்ட வாளினை உடையராய்,

தொடுதோல் அடியர் - செருப்புக் கோத்த அடியினையுடையராய்,

637 - 41. [குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச், சிறந்த கருமை நுண்வினை நுணங்கல், நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர், மென்னூா லேணிப் பன்மாண் சுற்றினர், நிலனக ழுளியர்;]

சிறந்த கருமை நுண் வினை நுணங்கு அறல் (638) - மிக்க கருமையினையுடைய நுண்ணிய தொழில்களையுடைய நுண்மை தன்னிடத்தே பற்றுதலையுடையது,

என்றது இறை முடிந்த சேலையென்றவாறு; ஆகுபெயர்.

குறங்கிடை பதித்த கூர் நுனை குறு பிடி (637) - அச்சேலை கட்டின மருங்கிற் குறங்கிடைத் தெரியாமல் கிடக்கும்படி அழுத் தின கூரிய முனையினையுடைய [1] சில சொட்டை,

நிறம் கவர்பு புனைந்த நீலம் கச்சினர் (639) - பல நிறங்களைத் தன்னிடத்தே கைக்கொண்டு கைசெய்யப்பட்ட நீல நிறத்தையுடைய கச்சினையுடையராய்,

---

[1] சில சொட்டை - ஒருவகை வளைவுக்கத்தி; உடைவாளுமாம்; ''சொட்டைவாள் பரிசை'', ''உகிரெ னும்பெரும் பெயர்பெற்ற சொட்டைகளும்'' (வி. பா. கிருட்டின. 101, பதினேழாம் போர். 156)

என்றது, கட்டின சேலையிடத்தே செருகித் துடையுடனே சேர்ந்து கிடக்கும் சொட்டையின்மேலே கட்டின நீலக்கச்சினை ரென்றவாறு. அது தெரியாமல் துடையுடனே சேர்ந்து கிடத்தலிற் குறங்கிடைப் பதித்தவென்றார்,

மெல் நூல் ஏணி பல் மாண் சுற்றினர் (640) - மெல்லிய நூலாற் செய்த ஏணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச் சுற்றிய சுற்றினையுடையராய்,

மதிற்றலையிலே உள்ளே விழவெறிந்தாற் கைபோல மதிலைப் பிடித்துக்கொள்ளும்படி இரும்பாற் சமைத்ததனைத் தலையிலே யுடைய நூற்கயிற்றை உள்ளே விழவெறிந்து அதனைப் புறம்பே நின்று பிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவாராகலின், ஏணி யென்றார்.

641. கலன் நசைஇ கொட்கும் - பேரணிகலங்களை நச்சுதலாலே அவற்றை எடுத்தற்கு இடம் பார்த்துச் சுழன்று திரியும்,

642. கண் மாறு ஆடவர் ஒடுக்கம் ஒற்றி - விழித்த கண் இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர் ஒதுங்கியிருக்கின்ற இடத்தை [1]வேய்த்து,

செருப்பைத் தொட்டுக் (636) கச்சைக் கட்டி (639) நூலேணி யைச் சுற்றி (640) உளியை எடுத்து (635) வாளைப் பிடித்துக் (636) கொட்கும் (641) கள்வரென வினையெச்ச வினைக்குறிப்புமுற்று வினையெச்சமாய் நிற்குமாறு, "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" (தொல். எச்சவியல், சூ. 63) என்னும் சூத்திரத் தான் உணர்க.

643. வய களிறு பார்க்கும் வய புலி போல ஒற்றி (642) - வலிய களிற்றை இரையாகப் பார்க்கும் வலிய புலியைப்போல வேய்க்கையி னாலே,

644. துஞ்சா கண்ணர் - துயில் கொள்ளாத கண்ணையுடைய ராய்,

அஞ்சா கொள்கையர் - பேய் முதலியவற்றிற்கு அஞ்சாத கோட் பாட்டையுடையராய்,

645. அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் - களவிற்றொழிலை அறிந்தவர்களாலே புகழப்பட்ட [2]களவிற்றொழிலை ஆளுந்தன்மை யுடையராய்,

645 - 7. [செறிந்த, நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி யூர்காப் பாளர் :] நுணங்கு செறிந்த நூல் வழி பிழையா நுண் தேர்ச்சி ஊர் காப்பாளர் - நுண்மை செறிந்த நூலின் வழியைத் தப்பாத நுண்ணிய ஆராய்ச்சியையுடைய ஊரைக் காத்தற்றொழிலை ஆளுதலையுடையவராய்,

---

[1] வேய்த்து - பிறர் தெரிந்துகொள்ளாதபடி அறிந்து.

[2] காவலர் களவினை அறிந்திருந்தனரென்பது இதனாற் புலப்படும்; "களவுங் கற்று மற" என்னும் பழமொழி இங்கே அறியத்தக்கது.

[1] களவுகாண்டற்கும் காத்தற்கும் கூறிய நூல்கள் போவா ரென்றுர்.

[2] நூல்வழிப் பிழையா ஊரெனக் கூட்டி நூலிற் சொன்னபடி சமைந்த ஊரென்றுமாம்.

ஊக்க அரு கணையினர் - தப்பக் கருதி முயல்வார்க்குத் தப்புதற் கரிய அம்பினையுடையராய்,

648-9. தேர் வழங்கு தெருவில் நீர் திரண்டு ஒழுக மழை அமைந் துற்ற அரை நாள் அமயமும் - தேரோடும் தெருவின்கண்ணே நீர் திரண்டொழுகும்படி மழை மிகப் பெய்த நடுநாளாகிய பொழுதிலும்,

650. அசைவிலர் எழுந்து நயம் வந்து வழங்கலின் - காவலில் தப்பிலராய்ப் போந்து விருப்பம் தோன்றி உலாவுகையினுலே,

651. [கடவுள் வழங்குங் கையறு கங்குலும் :] இடையது (631) கடவுள் வழங்கும் கை அறு கங்குல் - இரண்டாம் சாமத் திற்கும் நான்காம் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங் களுலாவும் செயலற்ற கங்குல்,

உம்மையை யாமமுமெனப் பின்னே கூட்டுக.

652 - 3. [அச்ச மறியா தேம மாகிய, மற்றை யாமம் பகலுறக் கழிப்பி :]

மற்றையென்பதனை முந்தை யாமம் சென்ற பின்றை (620) யென்பதன் பின்னும் மூன்ரும் சாமத்திஞேடும் கூட்டுக.

அச்சமறியாதேமமாகிய என்றும், மற்றையென்றும் யாமம் என்றும் பிரித்து முன்னே கூட்டுக.

பகல் உற கழிப்பி - இங்ஙனம் பகுத்தலுறும்படி போக்கி,

முந்தை யாமம் சென்ற பின்றை (620) மற்றைப் (653) பாஞட் கொண்ட கங்குல் (621) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள் வழங்கும் கங்குல் (651) யாமத்தையும் (653) கலிய விந்தடங்கப் (621) பள்ளி அயர (623) உறங்க (627) வயிரியர் மடியப் (682) பேயும் அணங்கும் உருவுகொண்டு (632) கழுதொடு கொட்ப

[1] களவு காண்டற் குரிய நூலைக் கரவட சாத்திரமென்பர் தக்க யாகப்பரணி உரையாசிரியர்; இந்நூல் தந்திர கரணமென்றும் ஸ்தேய சாஸ்திரமென்றும் வழங்கப்படும். இதனைச் செய்தவர் கர்ணீஸுதரென்பவர்.

[2] நூல் - சிற்ப நூல்; "நூலறி புலவோர் – சிற்பநூலை அறிந்த தச்சர்" (நெடுநல். 76, ந.); "நுண்ணிதி னுணர்ந்தோ ருணர் தருஞ் சிற்ப நூலறி புலவனை" (வி. பா. இந்திரப். 10); "நூலோர் சிறப்பின் மாடம்..." (சிலப். 14 : 97) என்பதன் உரையில் அரும்பதவுரை யாசிரியர், 'மயமதம் அறிவாராற் புகழ்ச்சியையுடைய மாடமென்று மாம்' என்றெழுதியதனுல் மயமதமென்னும் நூலொன்றுண்மை பெறப்படும்.

(633) ஊர் காப்பாளர் (647) புலிபோலக் (643) கண்மாறுடவர் ஒடுக்கம் ஒற்றுகையினுலே (642) கண்ணராய்க் கொள்கையராய் (644) ஆண்மையராய்க் (645) கணையராய் (647) அரைநாளமயமும் (649) எழுந்து நயம்வந்து வழங்கலிற் (650) பனிக்கடல் புரையப் (629) பாயலில் வளர்வோர் கண் இனிது மடுப்பப் (630) பகலுறக் கழிப்பி (653) என முடிக்க.

இங்ஙனம் கழிக்கின்றது, இராப்பொழுதென்றுணர்க.

654. [போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கை :] பிணி விட்ட போது கமழ் நறு பொய்கை - தளையவிழ்ந்த பூக்கள் நாறும் நறிய [1] பொய்கைகளிலே,

655. [தாதுண் டும்பி போதுமுரன் றுங்கு :] போது தாது உண் தும்பி முரன்றுங்கு-அப்பூக்களில் தாதை உண்ணும் தும்பிகள் பாடினாற் போல,

656. [ஓத லந்தணர் வேதம் பாட :] வேதம் ஓதல் அந்தணர் பாட - வேதத்தை முற்ற ஓதுதலையுடைய அந்தணர் வேதத்தில் தெய்வங்களைத் துதித்தவற்றைச் சொல்ல,

657 - 8. [சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி, யாழோர் மருதம் பண்ண :] யாழோர் சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி மருதம் பண்ண - யாழோர் தாளவறுதியை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத் தெறித்து [2]மருதத்தை வாசிக்க.

658 - 9. காழோர் கடு களிறு கவளம் கைப்ப - பரிக்காரர் கடிய களிற்றைக் கவளத்தைத் [3]தீற்ற,

659 - 60. நெடுதேர் பணை நிலை புரவி புல் உணா தெவிட்ட - நெடிய தேரிலே பூணும் பந்தியில் நிற்றலையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்ட,

661. பல் வேறு பண்ணியம் கடை மெழுக்கு உறுப்ப - பண்டம் விற்பார் பலவாய் வேறுபட்ட பண்டங்களையுடைய கடைகளை மெழுகுதலைச் செய்ய,

662. கள்ளோர் களி நொடை நுவல - கள்ளை விற்போர் களிப் பிணையுடைய கள்ளிற்கு விலை சொல்ல,

களி : ஆகுபெயர்.

---

[1] பொய்கை - மானிடராக்காத நீர்நிலை; சீவக. 337, ந.

[2] மருதம் காலைப்பண் என்பது, புறநானூறு, 149-ஆம் செய்யுளாலும், சீவக. 1991-ஆம் செய்யுளாலும் அறியப்படும்.

[3] தீற்ற - உண்பிக்க; "தீற்றுதோ நாய்நட்டா னல்ல முயல்" (பழ. 14); தீற்றென்பது காரிததாது வென்பர் (வீரசோ. தாதுப். சு. 6.)

662 - 3. இல்லோர் நயந்த காதலர் கவவு பிணி துஞ்சி - கற்புடை மகளிர் தாங்கள் விரும்பின கணவருடைய முயக்கத்திற் பிணிப்பாலே துயில்கொண்டு,

664. புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி - இருள் மாய்ந்து கதிர் விரிகின்ற விடியற்காலத்தைப் பெறுகையினாலே அக்காலத்து இல்லத்திற் செய்யத் தகுவனவற்றைச் செய்தற்கு விரும்பி,

665. கண் பொரா எறிக்கும் மின்னு கொடி புரைய - கண்ணை வெறியோடப்பண்ணி விளங்கும் மின்னொழுங்கை யொப்ப,

666. ஒள் பொன் அவிர் இழை தெழிப்ப இயலி - ஒள்ளிய பொன்னாற் செய்து விளங்கும் சிலம்பு முதலியன ஒலிப்பப் புறம் போதுகையினாலே,

667. திண் சுவர் நல் இல் கதவம் கரைய - திண்ணிய சுவர்களை யுடைய நல்ல அகங்களில் கதவுகள் ஒலிப்ப,

668 - 9. உண்டு மகிழ் தட்ட மழலை நாவில் பழ செருக்காளர் தழங்கு குரல் தோன்ற - கள்ளை உண்டு களிப்பினைத் தம்மிடத்தே தடுத்துக்கொண்ட மழலை வார்த்தையையுடைய நாவினையுடைய பழைய களிப்பினை உடையாருடைய முழங்குகின்ற குரல்கள் தோன்ற,

670. சூதர் வாழ்த்த மாகதர் நுவல - நின்றேத்துவார் வாழ்த்த இருந்தேத்துவார் புகழைச் சொல்ல,

671. வேதாளிகரொடு நாழிகை இசைப்ப - வைதாளிகர் தத்தம் துறைக்குரியனவற்றை இசைப்ப நாழிகை சொல்லுவார் நாழிகை சொல்ல,

நாழிகை : ஆகுபெயர்.

672. இமிழ் முரசு இரங்க - ஒலிக்கின்ற [1]பள்ளியெழுச்சி முரசு ஒலிப்ப,

ஏறு மாறு சிலைப்ப - ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்க,

673. பொறி மயிர் வாரணம் வைகறை இயம்ப - பொறியினை யுடைய மயிரினையுடைய கோழிச்சேவல் விடியற்காலத்தை அறிந்து கூவ,

674 - 5. யானையங்குருகின் சேவலொடு காமர் அன்னம் கரைய - வண்டாழ்ங்குருகினுடைய சேவல்களோடே விருப்பத்தையுடைய அன்னச் சேவல்களும் தமக்குரிய பேடைகளை அழைக்க,

அணி மயில் அகவ - அழகிய மயில்கள் பேடைகளை அழைக்க,

676. பிடி புணர் பெரு களிறு முழங்க - பிடியோடே கூடின பெரிய யானைகள் முழங்க,

676 - 7. [முழுவலிக், கூட்டுறை வயமாப் புலியொடு குழும :] வய மா கூடு உறை முழு வலி புலியொடு குழும - கரடி முதலிய

---

[1] மதுரைக். 232-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

வலிய விலங்குகள் கூட்டிலே உறைகின்ற மிக்க வலியையுடைய புலியுடனே முழங்க,

678. வானம் நீங்கிய நீல் நிறம் விசும்பின் - [1]ஆகாயம் தனக்கு வடிவின்றென்னும் தன்மை நீங்குதற்கு மேகபடலத்தால் நீல நிறத்தையுடைய ஆகாயத்தின்கண்ணே,

இனிச் செக்கர்வானம் போன விசும்பென்பாரு முளர்.

679. மின்னு நிமிர்ந்தனையர் ஆகி - மின்னு நுடங்கின தன்மையினை உடையராய்,

நறவு மகிழ்ந்து - மதுவை உண்டு,

680 - 81. மாண் இழை மகளிர் புலந்தனர் பரிந்த பரூஉ காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு - மாட்சிமைப்பட்ட பேரணிகலங்களையுடைய மகளிர் கணவரோடே புலந்தனராய் அறுத்த பருத்தலையுடைய வடமாகிய ஆரம் சொரிந்த முத்தத்தோடே,

மகளிர் மகிழ்ந்து புலர்ந்தனராய்ப் பரிந்த முத்த மென்க.

682. [பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன:] பொன் சுடு நெருப்பு உக்க நிலம் என்ன - பொன்னை உருக்குகின்ற நெருப்புச் சிந்தின நிலம்போல,

என்றது, கரியும் தழலும் பொன்னும் சிந்திக் கிடந்தாற்போல என்றதாம்.

683. [அம்மென் குரும்பைக் காய்படுபு பிறவும்:]

பிறவும் - முத்தொழிந்த மாணிக்கமும் மரகதமும் பொன்னும் மணிகளும்,

அம் மென் குரும்பை காய் - அழகிய மெத்தென்ற இளைதாகிய பச்சைப் பாக்கும்,

படுபு - விழுந்து,

684. தரு மணல் முற்றத்து - கொண்டுவந்து இட்ட மணலையுடைய முற்றத்தே,

அரி ஞிமிறு ஆர்ப்ப - வண்டுகளும் ஞிமிறுகளும் ஆரவாரிப்ப,

685. மெல் பூ செம்மலொடு நல் கலம் சீப்ப - மெல்லிய பூவாடல்களுடனே நல்ல பூண்களையும் பெருக்கிப் போகடும்படி,

முத்தத்தோடே (681) பிறவும் காயும் (683) முற்றத்தே விழுகையினாலே (684) அவற்றையும் செம்மலோடே கலங்களையும் (685) அரி ஞிமிறார்ப்பச் (684) சீப்ப (685) என்க.

---

1 "அருக்ககனப் பரப்பு (தக்க. 474) என்பதும், 'மகாதேவர்க்குப் பின்பு லோகத்தில் உயர்ந்த பொருளாயுள்ளது ஆகாசமொன்றுமே; அஃது அருபியாகும்; இஃது எல்லாச் சமயிகளுக்கும் ஒக்கும்' என்ற அதன் உரையும் இங்கே அறிதற்குரியன.

686. இரவு தலை பெயரும் ஏமம் வைகறை - இராக்காலம் தன்னிடத்தில் நின்றும் போகின்ற எல்லா உயிர்க்கும் பாதுகாவலாகிய விடியற்காலத்தே,

பாடப் (656) பண்ணக் (658) கைப்பத் (659) தெவிட்ட (660) உறுப்ப (661) நுவலக் (662) கரையத் (667) தோன்ற (669) வாழ்த்த நுவல (670) இசைப்ப (671) இரங்கச் சிலைப்ப (672) இயம்பக் (673) கரைய அகவ (675) முழங்கக் (676) குழுமச் (677) சீப்பத் (685) தலைப்பெயருமென முடிக்க.

687 – 8. மை படு பெரு தோள் மழவர் ஓட்டி இடை புலத்து ஒழிந்த ஏந்து கோடு யானை - பிறர் தோள் குற்றப்படுதற்குக் காரணமான பெரிய தோளையுடைய மழவரைக் கெடுத்து அவர் விட்டுப்போகையினாலே போர்க்களத்தே நின்ற ஏந்தின கொம்பினை யுடைய யானைகளும்,

[1] மழவர் - சில வீரர்.

690. பகை புலம் கவர்ந்த பாய் [2]பரி புரவி - பகைவர் நாட்டிலே கைக்கொண்டு வந்த பாய்ந்து செல்லும் செலவினையுடைய குதிரை களும்,

690 - 92. [வேல்கோ லாக வாள்செல நூறிக், காய்சின முன்பிற் கடுங்கட் கூளியர், ஊர்சுடு விளக்கிற் றந்த வாயமும்:] காய் சினம் முன்பின் கடு கண் கூளியர் ஊர் சுடு விளக்கின் ஆள் செல நூறி வேல்கோல் ஆக தந்த ஆயமும் - எரிகின்ற சினத்தையுடைத்தாகிய வலியினையும் தறுகண்மையினையுமுடைய ஆயக்கரையிலிருந்த வேட்டுவர் பகைவரூரைச் சுடுகின்ற விளக்கிலே நிரை காத்திருந்த வீரரை மாள வெட்டி வேல் கோலாக அடித்துக் கொண்டுவந்த பசுத்திரளும்,

693. நாடு உடை நல் எயில் அணங்கு உடை தோட்டி - அகநாட்டைச் சூழ உடைத்தாகிய [3]முழு அரண்களில் இட்ட வருத்தத்தையுடைய கதவுகளும்,

694 - 5. நாள் தொறும் விளங்க கை தொழூஉ பழிச்சி நாள் தர வந்த விழு கலம் - நாடொறும் தமக்குச் செல்வம் மிகும்படியாகக் கையால் தொழுது வாழ்த்தி நாட்காலத்தே திறையாகக் கொண்டுவர வந்த சீரிய கலங்களும்,

அனைத்தும் – அத்தன்மையன பிறவும்,

694 - 5. கங்கை அம் பெரு யாறு கடல் படர்ந்தாங்கு அளந்து கடை அறியா மதுரை (699) - [4]கங்கையாகிய அழகிய பெரிய யாறு

---

[1] மதுரைக். 395, ந.

[2] பரி - செலவு; "காலே பரிதப் பினவே" (குறுந். 44 : 1)

[3] முழு அரண் - முழுமுதலரணம்.

[4] "இறுவரை யிமயத் துயர்மிசை யிழிந்து, பன்முகம் பரப்பிப் பெளவம் புகூஉம், நன்முகக் கங்கையி னகரம்" (பெருங். 2. 17: 33-4)

[1]ஆயிரம் முகமாகக் கடலிலே சென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை,

வளம் கெழு தாரமொடு - வளப்பம் பொருந்தின அரும் பண்டங்களோடே,

698. [புத்தே ளுலகங் கவினிக் காண்வர :) புத்தேள் உலகம் காண்வர கவினி – தேவருலகம் வந்து காணுதலுண்டாகத் தான் அழகைப் பெற்று,

699. மிக்கு புகழ் எய்திய பெரு பெயர் மதுரை - மிகுத்துப் புகழைப் பெற்ற பெரும் பொருளையுடைய மதுரை,

பெரும் பொருளென்றது, வீட்டினை; "பெற்ற பெரும் பெயர் பலர்கை யிரீஇய" (பதிற். 90 : 23) என்றார் பிறரும்:

கூற்றக் கொல்லேறர் (633) அச்சமறியாதேமமாகிய (652) மிக்குப் புகழெய்திய மதுரை (699) என்க.

பாடல்சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) இருபெருநியமத்து (365) நாளங்காடிக் கம்பலை (430) நாடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதரு கம்பலை (544) புள்ளின் இசையெழுந் தற்றேயாய் (543) ஞாயிறு (546) குன்றம் சேருகையினாலே (547) மாலை (558) புகுந்து (557) பின்னர் நீங்க (558) முந்தையாமம் சென்றபின்றை (620) மற்றைப் (653) பானாட் கொண்ட கங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள் வழங்கும் கங்குல் (651) யாமத்தையும் பகலுறக் கழிப்பிச் (653) சீப்ப (685) இராக்காலம் தன்னிடத்தினின்றும் போகின்ற வைகறை யிலே (686) வளங்கெழு தாரத்தோடே (697) யானையும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமும் அனைத்தும் (695) கங்கையாறு கடற் படர்ந்தாற் போல (696) அளந்து முடிவறியாத (697) மதுரை (699) என்க.

கவினிப் (698) புகழெய்திய (699) பெரும்பாணிருக்கை (342) முதலியவற்றையுடைய மதுரை (699) என்க.

700 - 701. [சினை தலை மணந்த சுரும்புபடு செந்தீ, ஒண்பூம் பிண்டி யவிழ்ந்த காவில் :] சினை தலை மணந்த பிண்டி சுரும்பு படு செ தீ ஒள் பூ அவிழ்ந்த காவில் - கொம்புகள் தம்மிற்றலைக் கூடின அசோகினுடைய சுரும்புகளுண்டாம் செந்தீப்போலும் ஒள்ளிய பூ இருந்த பொழிலிடத்தே,

---

1 "கங்கை, துறைகொ ளாயிர முகமுஞ் சுழல" (கல்.); "ஐயமி லமர ரேத்த வாயிர முகம தாகி, வையக நெளியப் பாய்வான் வந்திழி கங்கை" (தே. திருநா.); "அந்தரத் தமர ரடியிணை வணங்க வாயிர முகத்தினி லருளி, மந்தரத் திழிந்த கங்கை" (பெரிய திருமொழி, 4 : 7)

702 - 3. சுடர் பொழிந்து ஏறிய விளங்கு கதிர் ஞாயிறு இலங்கு கதிர் இள வெயில் தோன்றி அன்ன – ஒளியைச் சொரிந்து அத்த கிரியிலே போக விளங்குகின்ற கிரணங்களையுடைய ஞாயிற்றினுடைய விளங்கும் கிரணங்களின் இளவெயில் தோன்றினால் ஒத்த மகளிர் (712).

என்றது, பூத்த அசோகம் பொழிலிடத்தே இளவெயில் எறித்தாற்போலப் [1]புணர்ச்சியால் பெற்ற நிறத்தையுடைய மகளிரென்க.

704. [தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை :] தாவு இல் தமனியம் வளை இய விளங்கு இழை - ஓட்டற்ற பொன் நடு அழுத்தின மணிகளைச் சூழ்ந்த விளங்குகின்ற பேரணிகலங்களையும்,

705. நிலம் விளக்கு உறுப்ப மேதக பொலிந்து - நிலத்தை யெல்லாம் விளக்கமுறுத்தும்படி கற்பு மேம்படப் பொலிவு பெற்று,

706. மயில் ஓர் அன்ன சாயல் - மயிலோடு ஒரு தன்மைத்தாகிய மென்மையினையும்,

706 - 7. மாவின் தளிர் ஏர் அன்ன மேனி – மாவின் தளிரினது அழகை யொத்த நிறத்தினையும்,

707 - 8. தளிர் புறத்து ஈர்க்கின் அரும்பிய திதலையர் - தளிரினது புறத்தில் ஈர்க்குப் போலத் தோன்றிய திதலையை யுடையராய்,

கூர் எயிறு - கூரிய எயிற்றினையும்,

709. ஒள் குழை புணரிய வள் தாழ் காதின் - ஒள்ளிய மகரக் குழை பொருந்திய வளவிய தாழ்ந்த காதினையும்,

710 - 11. [கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாதுபடு பெரும்போது புரையும் வாண் முகத்து :] கயத்து அமன்ற கடவுள் சுடர் இதழ் தாமரை தாது படு பெரு போது புரையும் வாள் முகத்து - குளத்திலே நெருங்கின [2]தெய்வங்கட்குரிய நெருப்புப் போலும் இதழ்களை யுடைய தாமரையினது தாதுண்டாம் பெரிய பூவை ஒக்கும் ஒளியினையுடைய முகத்தினையும்,

712. ஆய் தொடி மகளிர் - நன்றாக ஆராய்ந்த தொடியினையும் உடைய மகளிருடைய,

பொலிந்து (705) திதலையராய் (708) இழையினையும் (704) சாயலினையும் (706) மேனியினையும் (707) எயிற்றினையும் (708) காதினையும்(709) முகத்தினையும்(711)தொடியினையும் உடைய மகளிர் (712) என்க.

---

[1] "தேசு மொளியுந் திகழ நோக்கி" (பரி. 12 : 21) என்பதன் உரையைப் பார்க்க; "மதம் - காமக் களிப்பாலுண்டாகிய கதிர்ப்பு" (திருச்சிற். 69, பேர்.); "அந்தி யாரழ லெனப்பரி தியிறொளி யடைந்தபின்", "குந்தித் தெரிவை...... அந்தித் தெரிவை நிக ரென்ன வழகின் மிக்காள்" (வி. பா. சம்பவச் சருக்கம், 38, 66)

[2] பெரும்பாண். 289 - 90–ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

712. நறு தோள் புணர்ந்து - நறிய தோளை முயங்கி,

713. கோதையின் பொலிந்த சேக்கை துஞ்சி - [1]தூக்குமாலை களாற் பொலிவு பெற்ற படுக்கையிலே துயில் கொண்டு,

புணர்ந்து பின்னைத் துயிலும் காலத்துத் தனியே துயிலுதல் இயல்பென்பது தோன்றப் புணர்ந்து துஞ்சி யென்றார்.

"ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளியி னியற்றி" (சீவக. 838) என்றார் பிறரும்.

714. திருந்து துயில் எடுப்ப இனிதின் எழுந்து - செல்வத்தை நினைந்து இன்புறுகின்ற பற்றுள்ளம், உறக்கத்தை உணர்த்துகை யினாலே அது நினைத்து இனிதாகப் பின் எழுந்து.

என்றது, தன் செல்வம் இடையறாது ஒழுகுதற்கு வேண்டும் காரியங்களை விடியற் காலத்தே மனத்தான் ஆராயவேண்டுதலின், துயிலெடுப்புக்கு இது காரணமாயிற்று; "வைகறை யாமந் துயி லெழுந்து தான்செய்யும், நல்லறனு மொண்பொருளுஞ் சிந்தித்து" (4) என்றார் ஆசாரக் கோவையுள்.

இனி நன்றாகிய துயிலென்றுமாம்.

715 - 24. [திண்கா ழார நீவிக் கதிர்விடும், ஒண்காழ் ஆரங் கவைஇய மார்பின், வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப, எருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற், பொலஞ் செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம், வலிகெழு தடக்கைத் தொடியொடு சுடர்வரச், சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம், உடையணி பொலியக் குறை வின்று கவைஇ, வல்லோன் றைஇய வரிப்புனை பாவை முருகியன் றன்ன வுருவினை யாகி :]

[2] வல்லோன் தைஇய வரிபுனை பாவை (723) முருகு இயன்றன்ன உருவினை ஆகி (724)-சித்திரகாரி பண்ணப்பட்ட எழுதிக் கைசெய்த பாவையிடத்தே தெய்வத் தன்மை நிகழ்ந்தாற் போன்ற வடிவினை உடையையாய்,

---

[1] "தொங்கல் சுற்றுந் தாழுமின் பஞ்சணை" (அழகரந்தாதி, 44)

[2] எழுதப்பட்ட பாவையிடத்தே தெய்வத் தன்மை நிகழ்தல், "கேழ்கொள், காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப், பாவையும் பலியெனப் பெறூஉ" (அகநா. 369 : 6 - 8), "வழுவறு மரனு மண்ணுங் கல்லும், எழுதிய பாவை பேசா வென்ப, தறிதலு மறிதியோ", "கொடித்தேர் வீதியுந் தேவர் கோட்டமும், முதுமர விடங்களு முதுநீர்த் துறைகளும், பொதியிலு மன்றமும் பொருந்துபு நாடிக், காப்புடை மாநகர்க் காவலுங் கண்ணி, யாப்புடைத் தாக வறிந்தோர் வலித்து, மண்ணினுங் கல்லினு மரத்தினுஞ் சுவரினும், கண்ணிய தெய்வதங் காட்டுநர் வகுக்க, ஆங்கத் தெய்வத மவ்விட நீங்கா", "தொன்றுமுதிர் கந்தின், மயனெனக் கொப்பா வகுத்த பாவையி, னீங்கேன்யான்" (மணி. 21 : 115 - 7, 120 - 27, 131 - 3) என்பவற்றாலும் விளங்கும்.

என்றதனால், நாட்காலையில் அரசர்க்குரிய கடன்கள் கழித்துத் தெய்வ வழிபாட்டோடு இருந்தமை கூறினார்.

திண் காழ் ஆரம் நீவி கதிர் விடும் (715) ஒள் காழ் ஆரம் கவைஇய மார்பின் (716) - திண்ணிய வயிரத்தையுடைய சந்தனத் தைப்பூசி ஒளி விடும் ஒள்ளிய வடமாகிய முத்துச் சூழ்ந்த மார்பிலே,

நீவியென்னும் செய்தெனச்சம் பிறவினை கொண்டது.

வரி கடை பிரசம் மூசுவன மொய்ப்ப (717) - வரியையுடைத் தாகிய பின்னையுடைய தேனினமும் மற்றும் மொய்க்கப்படுவன வாகிய வண்டு முதலியனவும் மொய்ப்ப,

எருத்தம் தாழ்ந்த விரவு பூ தெரியல் (718) - கழுத்திடத்தி னின்றும் தாழ்ந்த விரவுதலையுடைய பூமாலையை உடைத்தாகிய மார்பென (716) முன்னே கூட்டுக.

பொலம் செய பொலிந்த நலம் பெறு விளக்கம் (719) வலி கெழு தட கை தொடியொடு சுடர்வர (720) - பொன்னாற் செய்கை யினாலே பொலிவு பெற்ற மணிகள் அழுத்தின மோதிரம் வலி பொருந்தின பெரிய கையில் [1]வீர வளையோடு விளக்கம் வர,

சோறு அமைவு உற்ற நீர் உடை கலிங்கம் (721) - சோறு தன்னிடத்தே பொருந்துதலுற்ற நீரையுடைய துகில்,

என்றது [2]கஞ்சியிட்ட துகிலை.

உடை அணி பொலிய குறைவு இன்று கவைஇ (722) - உடைக்கு மேல் அணியும் அணிகலங்களாலே அது பொலிவு பெறும்படி தாழ் வின்றாக உடுத்து,

புணர்ந்து (712) துஞ்சி (713) எழுந்து (714) உருவினையாகி (724) மார்பிலே (716) பிரசமும் மூசுவனவும் மொய்ப்ப (717) விளக்கம் (719) தொடியொடு சுடர்வரக் (720) கலிங்கத்தைக் (721) கவைஇ (722) என முடிக்க.

725 - 6. [3]வரு புனல் கல் சிறை கடுப்ப இடை மறுத்து ஒன்னார் ஓட்டிய செரு புகல் மறவர் - மிக்கு வருகின்ற யாற்றுநீரிடத்துக்

---

[1]மதுரைக். 34-ஆம் அடியின் உரையைப் பார்க்க.

[2] "காடி கொண்ட கழுவுறு கலிங்கம்" (நெடுநல். 134); "நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத், தலைப்புடை போக்கித் தண்கயத் திட்ட, நீரிற் பிரியாப் பருஉத்திரி" (குறுந். 330: 1 - 3); "பசைவிரற் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய, பூந்துகில்" (அகநா. 387 : 6 - 7); "காடி யுண்ட பூந்துகில்" (சீவக. 71); "காடி கலந்த கோடிக் கலிங்கம்" (பெருங். 1. 54 : 9)

[3] "தனிச் சேவகமாவது வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் றாங்கிய பெருமை" (வீர. பொருள். 16, உரை)

கல்லணை நின்று தாங்கினாற்போலத் தம் படையைக் கெடுத்து [1]மிக்கு வருகின்ற பகைவர் படையை நடுவே தவிர்த்து அவரைக் கெடுத்த போரை விரும்பும் படைத்தலைவர்,

"வருவிசைப் புனலைக் கற்சிறை போல, ஒருவன் ருங்கிய பெருமை யானும்" (தொல். புறத். சூ. 8) என்னும் வஞ்சித்துறை கூறினார். இது கூறவே முன்னர் [2]மாராயம் பெற்றவர்களே இப் போரைச் செய்வாரென்பது ஆண்டுப் பெற்றாமாகலின், இவர்கள் [3]ஏனாதிப்பட்டம் முதலிய சிறப்புப் பெற்ற படைத்தலைவரென்பது பெற்றாம்.

---

[1] "தன்மேற் கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்" (பு. வெ. 11)

[2] மாராயம்-வேந்தனாற் செய்யப்பெறுஞ் சிறப்பு; அவை யாவன, ஏனாதி காவிதி முதலிய பட்டங்களும் நாடும் ஊரும் முதலியனவும் பெறுதல்; "கால மாரியி னம்பு தைப்பினும்.........ஒடல் செல்லாப் பீடுடை யாளர்,.........தண்ணடை பெறுதல் யாவது" (புறநா. 287 : 3 – 10)

[3] ஏனாதிப் பட்டம் : இஃது அரசரால் வீரர்க்கு அளிக்கப்படும் ஒரு பட்டம்; இதனை, "மாராயம் பெற்ற நெடுமொழி யானும்" (தொல். புறத்திணை. சூ. 8) என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையாலும், "போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக், கார்க்கடல் பெற்ற கரையன்றோ – போர்க்கெல்லாந், தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர், ஏனாதிப் பட்டத் திவன்" என அவர் எடுத்துக் காட்டிய பழம்பாட்டாலும் உணர்க. இப்பட்டத்திற்குரிய மோதிரமொன்றும் அரசரால் அளிக்கப்படு மென்பது மேலேயுள்ள பாடலாலும், "என்னை? ஏனாதிமோதிரஞ் செறித்த திருவுடையா னொருவன் ஏனாதி மோதிரஞ் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற் றன்று" (இறை. சூ. 2, உரை) என்பதனாலும், "ஆழி தொட்டான்" (சீவக. 2167) என்பதற்கு, 'ஏனாதி மோதிரஞ் செறித்த சேனாபதி' என்று எழுதியிருப்பதனாலும் விளங்கும். இப்பாட்டின் 719-ஆம் அடியில் வரும் விளக்க மென்பதற்குப் பொருளாகக் கூறிய மோதிர மென்பது இவ்வேனாதி மோதிரமே. இச்சிறப்புப் பெற்றோர் மந்திரிகளாகவும் இருத்தல், மணி. 22-ஆங் காதைத் தலைப்பிலுள்ள, 'மந்திரியாகிய சோழிக வேனாதி' யென்பதனால் விளங்கும். "சேனாதிபதி ஏனாதி யாயின சாத்தன் சாத்தற்கு" (வேள்விக்குடிச் சாஸனம்); "ஏனாதி நல்லுதடன்" (தொல். களவி. சூ. 41, சே. ந.);"ஏனாதி திருக்கிள்ளி" (புறநா. 167);"ஏனாதி ஏறன்" (நன். சூ. 392, மயிலை. மேற்); "ஏனாதி நாத நாயனாரென்பன இக்காரணம்பற்றி வந்த பெயர்கள் போலும்.

727. [1] வாள் வலம் புணர்ந்த நின் தாள் வலம் வாழ்த்த - வாள் வெற்றியைப் பொருந்தின நினது முயற்சியின் வெற்றியை வாழ்த்த,

728 - 9. வில்லை கவைஇ கணை தாங்கும் மார்பின் மா தாங்கு எறுழ் தோள் மறவர் தம்மின் - வில்லை நிரம்ப வலிக்கையினாலே தன்னுள்ளே அடக்கிக்கொண்ட அம்பின் விசையைத் தாங்கும் மார்பினையும் [2]குதிரையைச் செலுத்தி வேண்டுமளவிலே பிடிக்கும் வலியையுடைய தோளினையுமுடைய வீரரைக் கொணர்மின்;

தம்மின் : முன்னிலை முற்றுவினைத் திரிசொல். இது தும்பையிற் [3]குதிரைநிலை கூறிற்று. கணைதாங்கு மார்பு கூறவே [4] கணை துணையுற மொய்த்தலும் கூறிற்று.

730 - 31. கல் இடித்து இயற்றிய இட்டு வாய் கிடங்கின் நல் எயில் உழந்த செல்வர் தம்மின்-கல் தரையைப் பொளிந்து பண்ணின இட்டிதாகிய நீர் வரும் வாயையுடைய கிடங்கினையுடைய முழு முதலரணத்தே நின்று வருந்தின வீரச்செல்வத்தையுடையாரைக் கொணர்மின்;

இஃது, "ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்" (தொல். புறத். சூ. 13) என்னும் புறத்துழிஞைத்துறை கூறிற்று.

732 - 3. கொல் ஏறு பைந்தோல் சீவாது போர்த்த மா கண் முரசம் ஓவு இல கறங்க - மாறுபாட்டை ஏற்றுக் கோறற்றொழிலை யுடைய [5]ஏற்றினது செவ்வித்தோலைமயிர் சீவாமற் போர்த்த பெரிய கண்ணையுடைய முரசம் மாறாமல் நின்று ஒலியாநிற்ப,

734 - 6. எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண் பெரு நல் யானை போர்க்களத்து ஒழிய விழுமிய வீழ்ந்த குரிசிலர் தம்மின் - நெருப்பு நடந்தாற்போன்ற பகைவர் படைக்கு நடுவே சென்று பெரிய நல்ல யானையைப் போர்க்களத்தே பட வெட்டிச் சீரிய புண்ணினால் வீழ்ந்த தலைவரைக் கொணர்மின்;

---

[1] வாள்வெற்றியை வாழ்த்துதற்கு வீரரே உரியரென்பது சிறுபாணாற்றுப்படை, 210 - 12-ஆம் அடிகளாலும் அறியப்படும்.

[2] "நிமிர் பரிய மாதாங்கவும் - மிகைத்த செலவினையுடைய குதிரையைக் குசைதாங்கி வேண்டுமளவிலே பிடிக்கவும்" (புறநா. 14 : 7, உரை)

[3] தொல். புறத்திணை. சூ. 17.

[4] ஷை ஷை சூ. 16.

[5] "மயிர்க்கண் முரசு - புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டு மண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவையை மயிர் சீவாமற் போர்த்த முரசு" (சிலப். 5 : 88, அடியார்.)

இது, "களிறெதிர்ந் தெறிந்தோர் பாடு" (தொல். புறத். சூ. 17) என்னும் தும்பைத் துறை கூறிற்று. பாடு, பெருமையாகலின் அது தோன்ற ஈண்டுக் குருசி லென்றார்.

முறை கருதுபு (738) - [1] முன்னுளோர் காத்த முறைமையை நாளும் உட்கொண்டு,

737. புரையோர்க்கு - நட்பிற் குற்றந் தீர்ந்தோர்பொருட்டு, நான்காமுருபு ஈண்டு அதற்பொருட்டு (தொல். வேற்றுமை. சூ. 15).

737 – 8. [தொடுத்த பொலம்பூந் தும்பை, நீர்யா ரென்னுது முறைகருதுபு சூட்டி :]

தொடுத்த பொலம் பூ தும்பை சூட்டி - கட்டப்பட்ட பொன்னாற் செய்த பூவினையுடைய தும்பையைச் சூட்டி ஏவுகையினாலே,

739. காழ் மண்டு எஃகமொடு கணை அலை கலங்கி - காம்பு குழைச்சினுள்ளே செருகின வேல்களுடனே அம்புகளும் சென்று நிலைகுலைத்தலின் நிலைகலங்கி,

740 - 43. [பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து, வானத் தன்ன வளநகர் பொற்ப, நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பின், உயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மின் :]

பிரிபு இணை அரிந்த நிறம் சிதை [2] கவயத்து (740) ஊன் சாய் (742) - பலவாய்ப் பிரிந்து இணைந்த சந்துவாய்கள் அற்ற பழைய நிறம் கெட்ட கவயத்தோடே ஊன் கெட்ட,

நோன் குறடு அன்ன மார்பின் (742) - வலிய சகடையிற் குறட்டை யொத்த மார்பினையுடையராகிய ஊக்கல (743) ரென்க.

வேலும் அம்பும் பட்டு எங்கும் உருவி நிற்றலிற் குறடும் அதில் தைத்த [3] ஆர்களும் போன்றன மார்புகள்; [4] குறடு பட்டை மரமுமாம்.

வானத்து அன்ன வளம் நகர் பொற்ப (741) உயர்ந்த உதவி ஊக்கலர் தம்மின் (743) - [5] தேவருலகையொத்த செல்வத்தை யுடைய ஊர்கள்முன்புபோலே நட்புக்கொண்ட அகத்துழிளையோர் ஆளும்படி உயர்ந்த உதவியைச் செய்த முயற்சியையுடையாரைக் கொணர்மின்;

---

[1] "அறநெறி காட்டிப், பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது" (மதுரைக். 191-2) [2] கவயம்-கவசம்; "வயக் கவயந் தண்டவனோர், மாமகனுக் காக மகிழ்சிறந்தார்" (ஆனந்த. வண்டு.)

[3] (பி – ம்.) 'உருளிகளும்'

[4] சீவக. 2281

[5] "மீக்கூறுதல், இவன் காக்கின்ற நாடு பசி பிணி பகை முதலியவின்றி யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்றென்றல்" (குறள். 386, பரிமேல்.) என்றதனோடு இக்கருத்து ஒத்துள்ளது.

என்றது, தமக்கு நட்பாய் முற்றகப்பட்டோரை முற்று விடுவித்தற்குத் தாமே உதவலின், [1]மைந்து பொருளாகச் சென்று அம்முற்று விடுவித்து அவ்வூரை அவர்க்கு மீட்டுக்கொடுத்தமை கூறிற்று. இதனானே [2] உழிஞைப்புறத்துத் தும்பை கூறினார்; என்னை? "கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற், சென்ற வுயிரி னின்ற யாக்கை" (தொல். புறத். சூ. 16) கூறுதலானும் வளநகர் பெறும்படி உயர்ந்த உதவிசெய்தமை கூறுதலானும்.

744 - 6. நிவந்த யானை கணம் நிரை கவர்ந்த புலர்ந்த சாந்தின் விரவு பூ தெரியல் பெரு செய் ஆடவர் தம்மின் - உயர்ந்த யானைத் திரளின் ஒழுங்குகளைக் கைக்கொண்ட பூசிப் புலர்ந்த சாந்தினையும் விரவுதலையுடைய வியன்பூ மாலையினையும், பெரிய செய்கைகளையும் உடைய மண்டலங்களை ஆள்கின்றவரைக் கொணர்மின்;

746 - 8. [பிறரும், யாவரும் வருக வேனோருந் தம்மென, வரையா வாயிற் செறுஅது :]

ஏனோரும் தம்மென வரையா - [3] மண்டபத்தாரையும், அறங்கூறவையத்தாரையுங் (மதுரைக். 492) கொணர்மினென வரைந்து கூறி,

வாயில் செருது பிறரும் யாவரும் வருக என - வாயிலிடத்துத் தகையாமல் இவர்களைப் போல்வாரும் படையாளர் முதலியோரும் வருவாராக எனக் கூறி,

748. இருந்து - இங்ஙனம் எளியையாயிருந்து,

749 - 50. [பாணர் வருக பாட்டியர் வருக, யாணர்ப் புலவ ரொடு வயிரியர் வருகென :] யாணர் புலவரொடு பாணர் வருக பாட்டியர் வருக வயிரியர் வருக என - கவியாகிய புதுவருவாயினை

---

[1] "மைந்துபொருளாக வந்த வேந்தனைச், சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப" (தொல். புறத். சூ. 15)

[2] "முற்றகப்பட்டோனை முற்று விடுத்தற்கு வேறோர் வேந்தன் வந்துழி, அவன் புறம்போந்து களங்குறித்துப் போர் செய்யக் கருதுதலும் அவன் களங்குறித்துழிப் புறத்தோனும் களங்குறித்துப் போர் செய்யக் கருதுதலும் உழிஞைப்புறத்துத் தும்பையாம்" (தொல். புறத். சூ. 16, ந.)

[3] இங்கே மண்டபத்தாரென்றது, பட்டி மண்டபத்தாரைப் போலும்; பட்டி மண்டபம் - கல்விக்கழகம்; "பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" (மணி. 1 : 61); "பட்டி மண்டப மேற்றினை யேற்றினை" (திருவா. சதகம். 49); "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" என்றார் கம்பரும். மதுரையில், இப்பொழுது புது மண்டபமென வழங்கும் இடத்தில் முன்பு பழைய மண்டபமொன்று இருந்திருத்தல் கூடுமென்றும், அஃது இப்பட்டிமண்டபம் போலு மென்றும் சிலர் கருதுவர்.

யுடைய புலவரோடே பாணர் வருவாராக, பாணிச்சியர் வருவாராக, கூத்தர் வருவாராகவென அழைத்து,

751 - 2. [இருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாம், கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி :]

இரு கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம் நீர் யார் என்னாது (738) கொடுஞ்சி நெடு தேர் களிற்றொடும் வீசி - அவர்கள் சுற்றத்தாராய் அவர்கள் பாதுகாக்கும் பெரிய இரவலர்க்கெல்லாம் நீர் யாவரென்று அவர்களைக் கேளாதே அவர்கள் காட்டின அளவைக் கொண்டு கொடுஞ்சியை யுடைய நெடிய தேர்களை யானைகளோடும் கொடுத்து,

கொடுஞ்சி - தாமரைப் பூவாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது.

753. களம் தோறும் கள் அரிப்ப - இடந்தோறும் கள்ளை அரிப்ப,

754. மரம் தோறும் மை வீழ்ப்ப - மரத்தடிகள்தோறும் செம்மறிக்கிடாயைப் படுப்ப,

755. நிணம் ஊன் சுட்டு உருக்கு அமைய - நிணத்தையுடைய தசைகள் சுடுதலாலே அந்நிணம் உருகுதல் பொருந்த,

756. நெய் கனிந்து வறை ஆர்ப்ப - நெய் நிறையப் பெற்றுப் பொரிக்கறிகள் ஆரவாரிப்ப,

757 – 8. குருஉ குய் புகை மழை மங்குலின் பரந்து தோன்றா - நிறத்தையுடைய தாளிப்பில் எழுந்த புகை மழையையுடைய திசைகள் போலப் பரந்து தோன்றப்பட்டு,

758. வியல் நகரால் – அகற்சியையுடைய வீடுகளாலே மிக்குப் புகழெய்திய மதுரை (699) என முன்னே கூட்டுக.

நகர் - வீடுகள்.

அரிப்ப (753) வீழ்ப்ப (754) அமைய (755) ஆர்ப்பத் (756) தோன்றப்பட்டு (758) அகற்சியையுடைய என் உடைமையொடு முடிக்க.

759 - 62. [பல்சாலை முதுகுடுமியின், நல்வேள்வித் துறை போகிய, தொல்லாணை நல்லாசிரியர், புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின் :]

நல் வேள்வி துறை போகிய–நல்ல யாகங்கட்குக் கூறிய துறைகளெல்லாம் முன்னர் முற்ற முடித்துவிட்ட,

தொல் ஆணை நல் ஆசிரியர் (761) புணர் கூட்டு உண்ட (762) - பழைய ஆணைகளையுடைய நல்ல ஆசிரியர் தாங்கள் பின்பு கூடின [1]கந்தழியாகிய கொள்ளையை அவரிடத்தே பெற்று அனுபவித்த,

புகழ் சால் சிறப்பின் (762) பல்சாலை முதுகுடுமியின் (759) – புகழ்ச்சி அமைந்த தலைமையினையுடைய [2]பல்யாக சாலை முதுகுடுமிப்

[1] திருமுருகாற்றுப்படை உரையின் இறுதிப் பகுதியைப் பார்க்க.

[2] பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி: இவ்வரசன் பல யாகங்

பெருவழுதியைப் போலே நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டிசின் (208) என முன்னே கூட்டுக.

என்றது, [1]அந்தணர்க்குக் கூறிய முறையே முன்னுள்ள கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங்களை ஆராய்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து வீட்டின்பம் எய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையே சென்று வீட்டின்பத்தைப் பெற்ற குடுமியென்றவாறு.

763. நிலம் தரு திருவின் நெடியோன் போல - எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப் போலத் தொல்லாணையை யுடைய நல்லாசிரியர் (761) என முன்னே கூட்டுக.

என்றது, கண்ணன் எப்பொருளும் தானாயிருக்கின்றபடியைக் காட்டி ஸ்ரீ கீதை அருளிச்செய்து எல்லாரையும் போதித்தாற்போல எல்லாரையும் போதிக்க வல்லராகிய ஆசிரியரென்றவாறு.

ஆணை : ஆக்கினை;

764 - 5. [வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர், பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி :]

வியப்பும் - நீ அவ்வாசிரியரிடத்துப் பெற்ற கந்தழியின் அதிசயமும்,

சால்பும் - பின்பு பெற்றமைந்த அமைதியும்,

களைச் செய்து சிறப்புற்றமையின் இப்பெயர் பெற்றான்; "நற்பனுவல் நால்வேதத், தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை, நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண், வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி, யூப நட்ட வியன்களம் பலகொல்" (புறநா. 15 : 17 - 21) என்பதனால் இவன் வேள்வி பல செய்தது அறியப்படும். "கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குலந்தவிர்த்த, பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பாண்டியாதிராஜ(னு)ன், நாகமா மலர்ச் சோலை நளிர் சினைமிசை வண்டலம்பும்பாகனூர்க் கூற்றமென்னும் பழனக் கிடக்கை நீர் நாட்டுச், சொற் கண்ணாளர் சொல்லப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத, கொற்கைக் கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக், கேள்வியந்தணாளர் முன்பு கேட்கவென்றெடுத் துரைத்து, வேள்விச்சாலை முன்பு நின்று வேள்விகுடி யென்றப் பதியைச் சீரோடு திருவளரச் செய்தார். வேந்தனப் பொழுதே நீரோடட்டிக் கொடுத்தமையான்" (வேள்விக்குடிச் சாஸனம், Epigraphia Indica Vol. 17, No. 16) என்ற சாஸனப் பகுதியினால் இவன் வேள்வி செய்தார்க்குத் தானம் பல செய்தானென்பது அறியப்படுகின்றது. இவனைப் பற்றிய பிற செய்திகள், புறநானூற்றுப் பதிப்பிலுள்ள பாடப்பட்டோர் வரலாற்றால் அறியலாகும்.

[1] மதுரைக். 469 குறிப்புரையைப் பார்க்க.

புகர் அறு சிறப்பின் செம்மை சான்றோர் பலர் வாய் தோன்றி - குற்றமற்ற சிறப்புக்களையுடைய தலைமைகளெல்லாம் அமைந்தோர் பலரும் தம்மிலிருந்து சொல்லப்பட்டு,

பலர் வாயென்பதனோடும் பின்வரும் புகரறு சிறப்பைக் கூட்டுக. புகரறு சிறப்பிற் செம்மையாவன: "[1]நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்" என்புழிக் கூறப்பட்டவை.

766. அரிய தந்து - இவ்விடத்திற்கு அரியவாய் வேற்றுப் புலத்திலுள்ள பொருள்களைக் கொணர்ந்து எல்லார்க்கும் கொடுத்து.

குடி அகற்றி - நின் நாட்டில் வாழும் குடிமக்களைப் பெருக்கி, என்றது, செல்வமுண்டாக்கி யென்றதாம்.

767. பெரிய கற்று - நற்பொருள்களை விளங்கக் கூறிய நூல்களைக் கற்று,

இசை விளக்கி - நின் புகழை எவ்வுலகத்தும் நிறுத்தி,

768. முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும் - கடல் நடுவே தோன்றுகின்ற ஞாயிற்றையொக்கவும்,

769. பல்மீன் நடுவண் திங்கள் போலவும் - பல மீன்களுக்கு நடுவே தோன்றுகின்ற நிறைமதியைப் போலவும்,

770. பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கி - நீ பொலிவு பெற்ற சுற்றத்தாருடனே பொலிவு பெற்று இனிதாக விளங்கி,

[2] மண்டில மாக்கள் தண்டத் தலைவர் முதலிய சுற்றத்தோர்க்கு நடுவே ஞாயிறு போல விளங்கி, பல கலைகளைக் கற்றோரிடத்தே [3]மதி போல விளங்கி யென்க.

---

[1] தொல். புறத். சூ. 20; இங்கே கூறப்பட்ட நாலிரு வழக்கினை, "நீஇ ராட லிலக்கிடை கோட, றோஒ லுடுத்த றெல்லெரி யோம்ப, லூரடை யாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட் பூசை, யேற்ற தவத்தி னியல்பென மொழிப" (தொல். புறத். சூ. 16, இளம். சூ. 20, ந. மேற்.) என்பதனாலும், "ஊணசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய் வாளாமை; இனி யோகம் செய்வார்க்குரியன இயமம்...சமாதியென வெட்டும்" (தொல். புறத். சூ. 20, ந.) என்பதனாலும் அறியலாகும்.

[2] சுற்றத்திடையே இருக்கும்பொழுது சூரியனை உவமை கூறுதலை, பெரும்பாண். 441 – 7 ஆம் அடிகளும், 'கடலைச் சுற்றத் திரட்சிக்கு உவமையாக்கலும் ஒன்று' (பெரும்பாண். 443 - 50, விசேடவுரை) என்ற நச்சினார்க்கினியர் உரையும் அறிவித்தல் காண்க.

[3] கலை நிறைந்தமைபற்றி மதியை உவகை கூறுதல் மரபென்பது இவ்வுரையாசிரியர் பிறஇடங்களில் எழுதிய உரையினால் அறியப்படுகின்றது; முருகு. 968-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

771 - 2. பொய்யா நல் இசை நிறுத்த புனை தார் பெரு பெயர் மாறன் தலைவனாக - உண்மையான நல்ல புகழை உலகிலே நிறுத்தின கைசெய்த மாலையினையும் பெரிய பெயரினையுமுடைய மாறன் முதலாக,

மாறன் - இவன் குடியிலுள்ள பாண்டியன்; அன்றி ஒரு குறுநில மன்னனென்றலும் ஒன்று.

773. கடந்து அடு வாய் வாள் இள பல் கோசர் – பகைவரை வென்று கொல்லும் தப்பாத வாளினையுடைய இளைய பலராகிய கோசரும்,

774 – 7. [இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப், பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த, மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர், அவரும் பிறரும்:]

புகழ்ந்த பொலம் பூண் ஐவர் உட்பட (775) – எல்லாராலும் புகழப்பட்ட பொன்னாற் செய்த பேரணிகலங்களையுடைய ஐம்பெருங்கேளிரும் உட்பட,

மறம் மிகு சிறப்பின் குறுநில மன்னர் (776) அவரும் (777) – மறமிக்க நிலைமையினையுடைய குறுநில மன்னராகிய அவரும்,

பிறரும் (777) - கூறுதொழிந்தோரும்,

இயல் நெறி மரபின் நின் வாய் மொழி கேட்ப (774) - நடக்கின்ற நெறிமுறைமையினாலே நின்னுடைய உண்மையான மொழியைக் கேட்டு அதன் வழியே நடக்க,

777 - 8. [துவன்றிப், பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த:]பொற்பு விளங்கு புகழ் அவை துவன்றி நின் புகழ்ந்து ஏத்த-பொலிவு விளங்குகின்ற புகழினையுடைய அறங்கூறவையத்தார் நெருங்கி நின்னுடைய அறத்தின் தன்மையைப் புகழ்ந்து வாழ்த்த,

779 - 81. [இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங் கமழ் தேறன் மடுப்ப நாளும், மகிழ்ந்து:]

இலங்கு இழை மகளிர் பொலம் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப மகிழ்ந்து - விளங்குகின்ற பூணினையுடைய மகளிர் பொன்னாற் செய்த வட்டில்களிலே எடுத்த மணம் நாறுகின்ற [1]காம பானத்தைத் தர அதனை உண்டு மகிழ்ச்சி எய்தி மகளிர் தோள் புணர்ந்து (712) என முன்னே கூட்டுக.

---

[1] பானம், காமபானம் வீரபானமென இருவகைத்து; "மட்டு - காமபானம்" (சீவக. 98, ந.), "நறவு நொண்மகளிர் - காம பானம் செய்யும் வாமமார்க்கப் பெண்கள்" (தக்க. 24, உரை) என உரையாசிரியர்கள் இதனைக் கூறலும், "காம வருத்திய பயிர்க்கு நீர்போ லருநற வருந்து வாரை" (கம்ப. ஊர்தேடு. 107) என்று கம்பர் குறிப்பித்தலும் இங்கே அறியற்பாலன

நாளுமென்பதனைப் பின்னே கூட்டுக.

மணங்கமழ் தேறலென்றதனாற் காமபானம் ஆயிற்று.

781 - 2. [இனிதுறைமதி பெரும, வரைந்துநீ பெற்ற நல்லூழி யையே :] பெரு நல் ஊழியை வரைந்து நீ பெற்ற நாளும் இனிது உறைமதி - பெருமானே, நன்றாகிய ஊழிக் காலத்தை இத்துணைக் காலம் இருத்தியெனப் [1]பால்வரை தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப் பெற்ற நாள் முழுதும் இனிதாக இருப்பாயென்க.

நல்லூழி யென்றார், கலியூழியல்லாத ஊழியை.

உம்மை : முற்றும்மை.

உயர்ந்தோர் மருகனே (23) நெடியோனும்பலே (61) பொருநனே (42) கொற்றவனே (88) .வெல்கோவே (105) புகழ் வேந்தே (130) நசைப் பொருநனே (138) போரேறே (144) குருசிலே (151) நீ கொற்றவர்தங் கோனாகுவை (74) வாய் நட்பினை (198) பணிந் தொழுகலை (201) பழி நமக்கெழுகவென்னாய் (204) இசைவேட் குவை (205) அன்னாய் (206) நின் கொற்றம் (194) பிறையிற் (193) சிறக்க (194) நின் தெவ்வராக்கம் (196) மதியிற் (195) கெடுக (196) நின் நல்லிசை கெடாது நிலைஇயர் (209) இனி நீ பாடல் சான்ற நன்னாட்டு நடுவணதாய் (331) இரு பெருநியமத்து (365) நாளங் காடிக் கம்பலை (430) நாடார்த்தன்றேயாய் (428) அல்லங்காடி அழிதரு கம்பலை (544) புள்ளினிசை எழுந்தற்றேயாய் (543) ஞாயிறு (546) குன்றஞ் சேருகையினாலே (547) மாலை (558) புகுந்து (557) பின்னர் நீங்க (558) முந்தையாமஞ் சென்ற பின்றை (620) மற்றைப் (653) பானாட் கொண்ட கங்குல் (631) யாமத்தையும் மற்றை (653) இடையதாகிய (631) கடவுள் வழங்கும் கங்குல் (651) யாமத்தையும் பகலுறக் கழிப்பிப் (653) பாடப் (656) பண்ணைக் (658) கைப்பத் (659) தெவிட்ட (660) உறுப்ப (661) நுவலக் (662) கரையத் (667) தோன்ற (669) வாழ்த்த நுவல (670) இசைப்ப (671) இரங்கச் சிலைப்ப (672) இயம்பக் (673) கரைய அகவ (675) முழங்கக் (676) குழுமச் (677) சீப்ப (686) இராக்காலம் தன்னிடத்தினின்றும் போகின்ற வைகறையிலே (686) வளங்கெழு தாரத்தோடே (697) யானையும் (688) புரவியும் (689) ஆயமும் (692) தோட்டியும் (693) கலமுமனைத்தும் (695) கங்கையாறு கடற்படர்ந் தாங்கு (696) அளந்து கடையறியாத (697) கவினிப் (698) புக ழெய்திய (699) பெரும்பாணிருக்கையினையும் (342) கிடங்கினையும் (351) புரிசையினையும் (352) வாயிலினையு(356)முடைய நான் மாடத்தான் மலிந்த புகழைக் கூடுதலையுடைய (429) மதுரை

[1] "பால்வரை தெய்வமென்றார் இன்ப துன்பத்திற்குக் காரண மாகிய இருவினையும் வகுத்தலின்" (தொல். களவி. சூ. 58, ந.)

யிலே (699) மகளிர் தேறல்மடுப்ப (780) மகிழ்ந்து (781) மகளிர்நறுந் தோளைப் புணர்ந்து (712) சேக்கைத் துஞ்சி (713) எழுந்து (714) உருவினையாகி (724) மார்பிலே (716) பிரசமும் மூசுவன மொய்ப்ப (717) விளக்கம் (719) தொடியொடு சுடர்வரக் (720) கலிங் கத்தைக் (721) கவைஇ (722) மறவர்(726)தாள்வலம் வாழ்த்த (727) மாறன் முதலாகக் (772) கோசரும் (773) ஐவருமுட்படக் (775) குறு நிலமன்னராகிய (776) அவரும் பிறரும் (777)நின் வாய்மொழி கேட்ப (774) நிற்புகழ்ந்தேத்த (778) மறவர்த் தம்மின் (729), செல்வர்த் தம்மின் (731), குரிசிலர்த் தம்மின் (736) ஊக்கலர்த் தம்மின் (743) பெருஞ்செயாடவர்த் தம்மின் (746), ஏனோருந் தம்மெனச் (747) சிலரை வரைந்து கூறி வாயிலிடத்துத் தகையாமற் (748) பிறரும் (746) யாவரும் வருகவெனப் பொதுப்படக் கூறி(747)நாளோலக்கம் இருக்கு மண்டலத்தேயிருந்து(748) புலவரோடு (750) பாணர் வருக, பாட்டியர் வருக (749) வயிரியர் வருக வெனவழைத்து (750) அவர் காட்டின இரவலர்க்கெல்லாம் (751)நீர் யாரென்னுதே(738) தேரைக் களிற்றோடும் வீசி (752) அரிய தந்து குடியகற்றிப் (766) பெரிய கற்று இசை விளக்கி (767) ஞாயிறு போலவும் (768) திங்கள் போலவும் (769) சுற்றமொடு பொலிந்து விளங்கி (770) வாழி (208); அங்ஙனம் வாழ்ந்து பிறப்பற முயலாது பயனின்றிக் கழிந்தோர் (237) திரையிடு மணலினும் பலரே காண் (236); அப் பயனின்மையாலே (238)அண்ணலே(207) நீயும் அவ்வாறு கழியலாகாதென்று இவ்வாழ் விற் பெரிதாயிருப்பதொரு பொருளை யான் கூறுவேன் (207); அஃது என்னுற் காட்டுதலரிது; அதனை நெடியோன் போலத் (763) தொல்லாணையினையுடைய நல்லாசிரியர் (761) புணர் கூட்டுண்ட சிறப்பினையுடைய(762) பல்யாகசாலை முதுகுடுமியைப் போல (759) நல்லாசிரியரிடத்தே கேட்டிசின் (208); கேட்டு அதனை நீ கண்ட வியப்பும் சால்பும் (764) புகரறு சிறப்பிற் (765) செம்மை சான்றோர் (764) பலர் தம்மிலிருந்து சொல்லப்பட்டுப்(765) பெருமானே, (781) நன்றாகிய ஊழிக் காலத்தை இத்துணைக் காலம் இருத்தி யெனப் பால்வரை தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப் பெற்ற (782) நாண் முழுதும் (780) இனிதாகப் பேரின்பத்தை நுகர்ந் திருப்பாய் (781); அதனை நுகராது ஐம்பொறிகட்கும் முன்னிற்கப் படுவனவாகிய இந் நுகர் பொருள்கட்கு நின்னொடு என்ன உறவுண்டு (206); இனி நின்னிடத்துண்டாகிய மாயை கெடுவதாக (208) என மாட்டுறுப்பானும் எச்சவுறுப்பானும் வினை முடிக்க.

"அகன்று பொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்று பொருள் முடியத் தந்தன ருணர்த்தல், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" (தொல். செய்யுளியல், சூ. 210), "சொல் லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்" (தொல். செய்யுளியல், சூ. 207) என்னும் சூத்திரங்களாற் கூறிய இலக்கணம், "நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பு" (தொல்.

செய், சூ. 1.) எனத் தொல்காப்பியனூர் கூறினமையின், இருவரும் நல்லிசைப் புலவராதலின், இங்ஙனம் செய்யுள் செய்தா ரென்றுணர்க.

[1] தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை மாங்குடி மருதனுர் பாடிய மதுரைக் காஞ்சிக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினூர்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

———

வெண்பா

1. பைங்க ணிளம்[2]பகட்டின் மேலானைப் பான்மதிபோல்
திங்க ணெடுங்குடையின் கீழானை - [3]அங்கிரந்து
[4]நாம்வேண்ட நன்னெஞ்சே நாடுதிபோய் நானிலத் [தோர்
தாம்வேண்டுங் கூடல் தமிழ்.

2. [5]சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென் [னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்-மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடல் தமிழ்.

---

[1] (பி - ம்.) 'பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.'

[2] (பி. - ம்.) 'பகட்டு மேலானை' [3] (பி - ம்.) 'தங்காது'

[4] (பி - ம்.) 'நாம் வேண்டு'

[5] "பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்து" (திருவிளை. பாயிரம், 12)

[6] மலையாத தண் தாரான் - ஏனையோர்களால் அணியப்படாத ஆரத்தைப் பூண்டவன்; என்றது இந்திரனுல் தரப்பட்ட ஆரம் அணிந் ததைக் குறிப்பித்தபடி; "செங்கணா யிரத்தோன் திறல்விளங் காரம், பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி", "தேவ ரார மார்பன்" (சிலப். 11 : 24 – 5, 29 : "கந்துகவரி")

ஏழாவது

† நெடுநல் வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்

---

1. வலனேர்பு : முல்லை. 4-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

3. கொடுங்கோற் கோவலர் : முல்லை. 15-ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

4. ஏறுடை யினநிரை : "வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த, வளையான்" (மலைபடு. 408 – 9); "ஏறுடை யினத்துப், புல்லூர் நல்லான்" (குறுந். 275 : 3 - 4); "ஏறுடை யினநிரை" (அகநா. 269 : 3); "ஏறு பொருந்திய பசுநிரை" (பு. வெ. 5, உரை); "பாலெ டுத்தபொற் குடநிகர் மடியின பருவச், சூலெ டுத்தநல் வயிற்றின மழவிடை தொடர்வ" (வி. பா. நிரைமீட்சி. 57)

5. (பி – ம்.) 'புலம்பிற் கலங்கி'

9. "விலங்குகள் மேயாமையின், வாழ்ந்தன; 'மாமேயன் மறப்ப' என்றார் பிறரும்" (சீவக. 1158. ந.) ; மந்திகூர : கைந்நிலை, 36; கம்ப. கார்கால 76.

12. முசுண்டை புதலில் மலர்தல் : அகநா. 163 : 9.

13. புன்கொடி முசுண்டை : மலைபடு. 101.

12 - 3. கூதிர்ப்பானாளில் முசுண்டை மலர்தல்; அகநா. 94 : 1 – 3, 264 ; 1 - 2.

14. பீரத்திற்குப் பொன் உவமை : "பொன்புனை பீரத் தலர்", "பொன்னென, இவர்கொடிப் பீர மிரும்புதன் மலரும்" (ஐங். 452 : 5, 464 : 1 - 2)

† இதனைப் பெருந்திணை யென்பர், பு. வெ. உரையாசிரியர்; பு. வெ. 284.

பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பிற் றுவலை கற்ப
அங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுறழ் னெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூர்
ஆறுகிடந் தன்ன வகனெடுந் தெருவில்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்

பிரென்னும் சொல் அம்மூச் சாரியை பெற்று வருதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். புள்ளிமயங். சூ. 70, ந.

18. சாயென்பது நுணுக்கமாகிய குறிப்பை உணர்த்துமென் பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 34, சே. ந; இ - வி. சூ. 281; இவ்வடி பெயரின்பின் உரிச்சொல் நின்றதற்கு உதாரணம்; இ. வி. சூ. 280.

19. (பி - ம்.) 'பெயலுழந்து'

பொங்கல் வெண்மழை : ''பொங்க லிளமழை'' (ஐங். 276 : 3), ''பெய்து புறந்தந்து பொங்க லாடி, விண்டுச் சேர்ந்த வெண்மழை'' (பதிற். 55 : 14 - 5); ''பெய்து புலந்துறந்த பொங்கல் வெண்மழை'' (அகநா. 217 : 1)

வெண்மழை : முல்லை. 100.

20. அகலிரு விசும்பு : பெரும்பாண். 1.

''மாரி கற்பான் றுவலைநாட் செய்வ தேபோல்'' (சீவக. 2070)

21 - 2. அகநா. 13 : 17 - 21.

26. ''தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்'' (மதுரைக். 400)

30. மதுரைக். 359-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

31. படலைக் கண்ணி : பெரும்பாண். 60-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

பரேரெறுழ்: பட்டினப். 294.

முடஙல யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணுர் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணு
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்

---

31 - 2. மு. பெரும்பாண். 60 - 61.

36. (பி - ம்.) *'வள்ளியின்'*

''வெள்ளி வள்ளியின் விளங்குதோள்'' (சீவக. 420)

36 - 7. *வழிமோனைக்கு இவ்வடிகள் மேற்கோள் ;* தொல். *செய்.* சூ. 94, பேர்.

39. *பிடகைப் பெய்த :* மதுரைக் 397.

39 - 40. *செந்தொடை யாவதன்றி மோனைத் தொடைப்பாடு இன்றென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்;* தொல். *செய்.* சூ. 94, *பேர்.*

39 - 41. பெருங். 1. 33 : 74 - 5,

43. *மலர் தூவுதல் :* முல்லை. 8 - 10-ஆம் *அடிகளின் அடிக் குறிப்பைப் பார்க்க.*

43 - 4. *''அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை, நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் - பகன்மாய்ந்த, மாலை''* (சிலப். 9 : 1 - 3)

சிலப். 9 : 1 - 4, *அடியார். மேற்.*

45 - 6. *மனையுறை புறவு மன்று தேர்ந் துண்ணல் : ''மனையுறை குரீஇ, முன்றி லுணங்கன் மாந்தி மன்றத், தெருவி னுண் டாது குடைவன வாடி''* (குறுந். 46 : 2 - 4)

49. *''கடியுடை வியனக ரவ்வே''* (புறநா .95 : 3)

கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய்க் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவின் செந்நெருப் பார
ஆடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்

---

51. மு. அகநா. 340: 16.
சிலப். 4 : 37 - 8, அடியார். மேற்.

51 - 2. ''வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத், தென்மலைப் பிறந்த சந்தன மறுக'' (சிலப். 4 : 37 - 8)

54. பல்லிருங் கூந்தல் : ஐங். 308 : 1, 429 : 1; அகநா. 43 - 11.

56. "குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு, குணதிசை மருங்கிற் காரகி றுறந்து'' (சிலப். 4 : 35 – 6)

''அகிலென்றது ஆகுபெயராற் புகையை; 'இருங்...புகைப்ப' என்றூர் நெடுநல்வாடையினும்'' (சிலப். 4 : 35-6, அடியார்).

57. கைவல் கம்மியன் : நெடுநல். 85.

66 தடவு : "வடபான் முனிவன் றடவினுட் டோன்றி" (புறநா. 201 : 8) ; ''தடவளர் முழங்குஞ் செந்தீ'' (சீவக. 2373)

68. (பி – ம்.) 'தன்மையிற் றிரிந்த'

69. "முலைவேதி னொற்றி முயங்கிப் பொதிவேம்'' (கலித். 106: 35);

கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்

"கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ" (சிலப். 28: 16) ;"தடமுலை வேதுகொண் டொற்றியும்" (கலிங்க. கடை. 13)

70. கருங்கோட்டுச் சீறியாழ் : மலைபடு. 534; புறநா. 127 : 1, 145 : 5.

72. கூதிர்நின் றன்றாற் போதே; அகநா. 264 : 10.

82. "நாளொடு பெயரிய நவையி லாமரம்" (வாயு. பார்ப்பதி திருமணம். 9)

85. கைவல் கம்மியன் : நெடுநல். 57.

86. முருகு. 228 - ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

"வாயிலில் தெய்வமுறையுமாகலின், அதற்கு அணியும் செய்யுமாம்; 'ஐயவி......நிலை' என்பதனானுணர்க" (மதுரைக். 354, ந.)

87. யானையின்மீது கொடி : "கொடிநுடங்கு நிலைய கொல் களிறு மிடைந்து", "மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி, வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க", "உரவுக்களிற்று வெல் கொடி நுடங்கும் பாசறை" (பதிற். 52 : 1, 69 : 1 - 2, 88 : 17); "கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்" (புறநா. 9:7); "இழந்தன நெடுங்கொடி......யானை" (கம்ப. சம்புமாலி. 26)

குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியல்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி

---

89. முருகு. 70-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க.

90. (பி - ம்.) 'ஞெமரிய' மு. பெருங். 1. 47 : 197.
''தருமணன் ஞெமிரிய திருநா றொருசிறை'' (மணி. 18 : 44)
ஞெமிர்தலென்பதற்குப் பொருள் பரத்தலெனக் கூறி இவ் வடியை மேற்கோளாகக் காட்டினர்; தொல். உரி. சூ. 65, சே. ந; இ - வி. சூ. 281, உரை 91. அகநா. 34 : 12-3.

93. ''பணை நிலை முனைஇய வினை நவில் புரவி'' (அகநா. 254:12)

95. ''வெண்ணிலவின் பயன்றுய்த்தும்'' (பட்டினப். 114); ''நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்து'' (சிலப். 4 : 31); ''சுடர்வெண் ணிலவின் றுருமிற்பயன் கொண்ட, மிசைநீண் முற்றத்து'' (பெருங். 1. 33 : 61 - 2): ''பொங்கிணர்க் காவு தோறும் புதுமணற் குன்று தோறும், பங்கயச் செங்க ணெம்மான் பானிலாப் பயன் கொண்டு'' (பாகவதம், 10. கோவியரை. 22)

97. ''அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல'' (பெரும்பாண். 226)

98. ''மஞ்ஞை, ஒலிநெடும் பீலி'' (புறநா. 50 : 2 - 3)

99. (பி - ம்.) 'களிமயில்.' ஒ. அகநா. 177: 10 - 11.

100. நளிமலைச் சிலம்பு : முருகு. 238.

101 - 3. முல்லை. 85-ஆம் அடியின் அடிக் குறிப்பைப் பார்க்க; ''வேண்டிடந் தோறுந் தூண்டுதிரிக் கொளீஇக், கைவயிற்

அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லில்
தசநான் கெய்திய பணைமரு ளெருத்தின்
இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதல்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிலை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்

கொண்ட நெய்யகற் சொரியும், யவனப் பாவை யணிவிளக் கழல'' (பெருங். 1. 47 : 173 - 5)

107. "அரச ருரிமையி லாடவ ரணுகார்'' (மணி. 23 : 55); "அரசன் கோயிலில் ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பி னுள்ளே'' என இவ்வடியை உரைநடையிலமைத்துக் கூறுவர்; சீவக. 1713, ந.

"குழைமுக மகளிர் காக்கும் புரிசையெனவே அந்தப்புரமா யிற்று; 'ஆடவர்......வரைப்பின்' என்றார் பிறரும்'' (சீவக. 275,ந.)

109. (பி - ம்.) 'விற்கிடந்தன்ன......பலவயின்'

112. மதுரைக். 485-ஆம் அடியின் அடிக்குறிப்பைப் பார்க்க.

115. சான்றோர் செய்யுட்கண் வடசொல் திரிந்து வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். எச்ச. சூ. 6, சே. ந; தண்டி. சூ. 25. உரை; இ - வி. சூ. 175, 635; "தசநூறு : இது கிரந்தமுந் தமிழுங் கூடியவாறு; 'தசநான் கெய்திய......தாள்' இது நெடுநல் வாடை'' (தக்க. 635, உரை)

மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுணை ரன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
ஆரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்குல்
அம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு

---

132 – 3. "இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட், டுணைபுணை ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇ" (கலித். 72 : 1 - 2); "துணைபுணை ரன்னத் தூவியிற் செறித்த, இணையணை", "இணைபுணரெகினத் திளமயிர் செறித்த, துணையணைப் பள்ளி" (சிலப். 4 :66-7, 27 : 208 – 9)

134. மதுரைக். 721, அடிக்குறிப்பைப் பார்க்க; கந்த. நாட்டுப். 50.

140. (பி - ம்.) 'வாயறை'

141. வார் மயிர் முன்கை: பொருந. 32-ஆம் அடியையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க.

142. கடிகைநூல் யாத்து : "கைந்நூல் யாவாம்" (குறுந். 218 : 2); "காப்புநூல் யாத்து" (தொல். புறத். சூ. 5, ந. மேற்.)

143 - 4. "வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்" (சிலப்.6:95)

புனையா வோவியங் கடுப்பப் புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்
அம்பணைத் தடைஇய மென்ருேண் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி
இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்
ஊரு வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னுடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய

---

147. "புனையா வோவியம் போல நிற்றலும்", "புனையா வோவியம் புறம்போந் தென்ன" (மணி. 16 : 131, 22 : 88)

149. அம்பணைத் தடைஇய மென்ருேள்: "வீங்கிறைத் தடைஇய வமைமருள் பணைத்தோள்" (பதிற். 54 : 3)

தடைஇய மென்ருேள் : கலித். 93 : 5.

152. (பி - ம்.) 'நரைவிரவுற்ற'

"நாறைங் கூந்தலு நரைவிரா வுற்றன" (மணி. 22 : 130); "நரையிடைப் படர்ந்த நறுமென் கூந்தலர்" (பெருங். 1. 41 : 99); கடம்பர் கோயிலுலா, 343; பரி. 10 , விசேடக்.

152 - 3. "நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற், செம்முது செவிலியர் பலபா ராட்ட" (அகநா. 254 : 1 - 2)

155. "இன்னே வருகுவர்" (முல்லைப். 16)

156. (பி - ம்.) 'முகைத்தவை'

155 – 6. முல்லை. 20 - 22.

153 - 6. "தலைவியை வற்புறுக்கும் செவிலியர் புனைந்துரைத்து நகுவித்துப் பொழுதுபோக்குதற்குரியர்; இக்கருத்தானே சான்ருேர், 'செம்முகச்......ஒல்லாள்' என்ருர் பாட்டினுள்" (தொல். செய். சூ. 175, ந.)

161. வீங்குசெலன் மண்டிலம் : "யாங்கன மொத்தியோ வீங்கு செலன் மண்டிலம்" (புறநா. 8 : 6)

உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயிதழ் புரைக்கு மலிந்துவீழ் அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வருபடர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிரு டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை

---

164 - 5. கண்ணீரை விரலால் வழித்துத் தெறித்தல்: "இரும்பல் கூந்தற் சேயிழை மடந்தை, கனையிரு ணடுநா ளணையொடு பொருந்தி, வெய்துற்றுப் புலக்கு நெஞ்சமொ டைதுயிரா, ஆயிதழ் மழைக்கண் மல்கநோய் கூர்ந்து, பெருந்தோ ணனைக்குங் கலுழ்ந்துவா ரரிப்பனி, மெல்விர லுகிரிற் றெறியினள்" (அகநா. 373: 10-15); புறநா. 144 : 9; பெருங். 1. 36 : 72.

169. வினைநவில் யானை : "தாரொடு பொலிந்த வினைநவில் யானை" (மலைபடு. 227); "செல்சமந் தொலைத்த வினைநவில் யானை" (பதிற். 82 : 4); "வினைநவில் யானை" (புறநா. 347 : 11)

169 - 71. "வேழத்துப்.......பருஉக்கை துமிய.....ஒழிந் தோர்" (முல்லை. 69 - 72); "அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத், தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள, எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்" (புறநா. 19 : 9 – 12)

175. "பாண்டில் விளக்குப் பருஉச்சுட ரழல", "சுடரும் பாண்டிற் றிருநாறு விளக்கத்து" (பதிற். 47 : 6, 52 : 13); "உள்ளிழு துறீஇய வெள்ளடர்ப் பாண்டில்" (பெருங். 1. 33 : 93)

சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

---

183. முகனமர்ந்து : குறள், 84, 92 – 3.

185 (பி - ம்.) 'பரம்புதுளி'

"ஊதையும், தாதுளர் கானற் றவ்வென் றன்றே" (நற். 319 : 1 - 2); "தவ்வெனக் குடித்தி" (குறுந். 356 : 4)

தவ்வென்பது குறிப்புமொழியென்று கூறி, இவ்வடிகளை மேற்கோளாகக் காட்டினர்; குறள், 1144, பரிமேல்.

186. (பி - ம்.) 'யாமத்துப் பள்ளி'

186 - 8. தொல். கற்பு. சூ. 34, ந. மேற்.

176 - 88. "அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ" என்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். புறத். சூ. 8, ந.

இதன் பொருள்

இப்பாட்டிற்கு நெடுநல்வாடை யென்று பெயர் கூறினர். இப்பெயர் நெடிதாகிய நல்ல வாடையென விரிதலிற் பண்புத் தொகையாயிற்று. [1] வாடையென, வாடைக்காற்றிற் றோன்றின கூதிர்ப் பாசறையை உணர்த்தலிற் பிறந்தவழிக் கூறலென்னும் (தொல். வேற்றுமை மயங்கு. சூ. 31) ஆகுபெயராய் நின்றது. இப்பாட்டினுள் "கூதிர்நின் றன்றாற் போதே" (72) எனவும், "கூதிர்ப் பாஹள்" (12) எனவுங்கூறுகின்றாராதலின், இது, "வாகைதானேபாலையதுபுறனே" (தொல். புறத். சூ. 18) எனப் பாலைக்குப் புறனாகக் கூறிய வாகைத் திணையாய் அதனுள், "கூதிர் வேனி லென்றிரு பாசறைக், காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்" (தொல். புறத். சூ. 21) எனக் கூறிய கூதிர்ப்பாசறையே ஆயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு [2]ஒருபொழுது ஊழிபோல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப் பொருள் உணர்த்திற்று. அகத் தொடுங்கிப்

---

[1] "வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கி' (நெடுநல். 173) என்று வாடை இந்நூலிற் குறிப்பிடப்பட்டது காண்க.

[2] "ஊழியிற் பெரிதா னாழிகை யென்னும்" (பெரிய திருமொழி)

போகம் நுவர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் [1]போகம் வேண்டிப் பொதுச் சொற் பொருஅய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடை ஆயிற்று. எனவே காமத்திடத்து வெற்றி எய்தலின், வாகைத் திணையாயிற்று; இப்பாட்டு, சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் (தொல். அகத். சூ 54) அகப் பொருளாமேனும், "வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்" (176) என [2]அடையாளப் பூக் கூறினமையின், அகமாகா தாயிற்று.

1 - 2. [வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப், பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென:] பொய்யா வானம் வையகம் பனிப்ப வலன் வளைஇ ஏர்பு புது பெயல் பொழிந்தென - பருவம் பொய்யாத மேகம் உலகெல்லாம் குளிரும்படியாகத் தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்திருந்து கார் காலத்து மழையைப் பெய்ததாக,

3. ஆர்கலி முனைஇய கொடு கோல் கோவலர் - வெள்ளத்தை வெறுத்த [3]கொடிய கோலினை யுடைய இடையர்,

4. ஏறு உடை இனம் நிரை வேறு புலம் பரப்பி - ஏற்றை யுடைய இனங்களையும், பசுக்களையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்தே மேயவிட்டு,

எருமையையும் ஆட்டையும் [4]இனமென்றார்.

5. புலம் பெயர் புலம்பொடு கலங்கி - தாம் பயின்ற நிலத்தைக் கைவிட்டுப் போம் தனிமையினாலே வருத்தம் எய்தி,

ஊர்க்கு அண்ணிய இடத்தே மேய்ந்து ஊரில் தங்காமையின் புலம்பெயர் புலம்பென்றார்.

5 - 6. கோடல் நீடு இதழ் கண்ணி நீர் அலை கலாவ - காந்த ளினது நீண்ட இதழ்களால் கட்டின கண்ணி நீர் அலைத்தலாலே கலக்கம் எய்த,

7 - 8. மெய் கொள் பெரு பனி நலிய பலருடன் கை கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க - தம் உடம்பிடத்தே கொண்ட

---

[1] "போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருஅது" (புறநா. 8 : 2); "பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல் வர்க்கு" (கலித். 68 : 1)

[2] அடையாளப் பூ : முருகு. 43 - 4. ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[3] முல்லைப். 15. ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[4] பசு எருமை ஆடு என்பன மூன்றும் மூவினமென்றும் முந்நிரை யென்றும் வழங்கப் பெறும்; "மூவின மேய்த்தல்" (நம்பி. சூ. 22 : 13); "இன மூன்றுந் துன்றப், போற்றிக் குடிமல்கிய பொற்பின பாடியெல்லாம்" (தணிகை. நாடு. 69); "சால நன்று முந்நிரையு முடையேன்" (பெரிய. சிறுத்தொண்ட. 49); "நிரை வாழி - முந்நிரை வாழ்க" (தக்க. 9, உரை)

பெரிய குளிர்ச்சி வருத்துகையினாலே பலரும் கூடிக் கையிடத்திலே கொண்ட நெருப்பினையுடையராய்ப் [1]பற்பறை கொட்டி நடுங்க,

கையை நெருப்பிலே காய்த்தி அதிற் கொண்ட வெம்மையைக் கவுளிலே அடுத்தலிற் கைக்கொள் கொள்ளியரென்றார்.

கோவலர் (3) பலருடன் (7) பரப்பிக் (4) கலங்கிக் (5) கலாவக் (6) கொள்ளியராய்க் கவுள் புடையூஉ நடுங்க (8) என்க.

9. மா மேயல் மறப்ப - விலங்குகள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்க,

மந்தி [2]கூர - குரங்கு குளிர்ச்சி மிக,

குன்றுக்க என்பாரு முளர்.

10. [பறவை படிவன வீழ :] படிவன பறவை வீழ — மரங்களிலே தங்குவனவாகிய புள்ளுக்கள் காற்று மிகுதியால் நிலத்தே வீழ,

10 - 11. [கறவை, கன்றுகோ ளொழியக் கடிய வீசி :] கறவை கடிய வீசி கன்று கோள் ஒழிய — பசுக்கள் குளிரின் மிகுதியால் கடியவாய் உதைத்துக் கன்றை ஏற்றுக்கோடலைத் தவிர,

12. குன்று குளிர்ப்பன்ன கூதிர் பால் நாள் - மலையைக் குளிர்ச்சி செய்யுமாறு போன்ற கூதிர்க் காலத்து நடுயாமத்தே புலம்பொடு வதியும் அரிவைக்கு (166) என மேலே கூட்டுக.

13 – 4. புல் கொடி முசுண்டை பொறி புறம் வால் பூ பொன் போல் பீரமொடு புதல் புதல் மலர - புல்லிய கொடியினை யுடைய முசுண்டையில் திரண்ட புறத்தையுடைய வெள்ளிய பூப் பொன் போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறு தூறுகடோறும் விரிய,

15 - 9. [பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி, இருங்களி பரந்த வீர வெண்மணற், செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக், கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப், பெயலுலந் தெழுந்த :]

கடு புனல் சாஅய் கயல் அறல் எதிர (18) - கடிதாய் ஓடின நீரினின்றும் ஒருகால் பற்றிக் கயல்கள் அற்ற நீர்க்கு எதிரே வருகையினாலே,

பெயல் உலந்து எழுந்த (19) பைங்கால் கொக்கின் மெல் பறை தொழுதி (15) - மழையாலே வருந்தி அது சிறிது விட்டவளவிலே எழுந்த பசிய காலையுடைய கொக்கினது மெல்லிய சிறகரையுடைய திரள்,

---

[1] "முகைவெண்ப னுதிபொர மூற்றிய கடும்பனி" (கலித். 31 : 20); "பன் னுனிபொரு காலம் வர" (வெங்கைக் கோவை, 413); "வாடைவந் துடற்ற......தருமிகு நிரைப்பலுந் தாளந் தகர்க்க" (வாட்போக்கிக். 85 : 30 - 33)

[2] "துவலையி னனைந்த புறத்த தயலது, கூர விருக்கை யருளி" (நற். 181 : 6 - 7)

செ வரி நாரையொடு (17) இரு கஊி பரந்த ஈரம் வெள் மணல் (16) எ வாயும் கவர (17) - சிவந்த வரியினையுடைய நாரைகளோடே கரிய வண்டலிட்ட சேறு பரந்த ஈரத்தினையுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக் கயலைத் தின்ன,

19 - 20. பொங்கல் வெள் மழை [1]அகல் இரு விசும்பில் துவலை கற்ப - பொங்குதலையுடைய வெள்ளிய மேகம் அகன்ற பெரிய ஆகாயத்தே சிறு துவலையாகத் தூவ மேற் கற்கும்படியாகக் கூதிர் ஈண்டு நின்றது (72) என மேலே கூட்டுக.

கற்பவென்னும் செயவெனெச்சம் ஈண்டு எதிர்காலம் உணர்த் திற்று.

துவலை கற்பவென்றார், மிகப் பெய்தலை தனக்கு இயல் பென்பது தோன்ற.

21 - 2. அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த வள் தோடு நெல்லின் வரு கதிர் வணங்க - அழகிய இடத்தை யுடைய அகன்ற வயனிறைந்த நீராலே மிக்கெழுந்த வளவிய இலையினை யுடைய நெல்லினின்றும் புறப்பட்ட கதிர் முற்றி வளைய,

[2]புல்லாதலின் தோடென்றார்.

23 - 4. முழு முதல் கமுகின் மணி உறழ் எருத்தின் கொழு மடல் அவிழ்ந்த குழூஉ கொள் பெரு குலை - பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியை யொத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பாளை விரிந்த திரட்சியைக் கொண்ட தாறுகளில்,

25 - 6. [நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு, தெண் ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற :] தெள் நீர் பசு காய் நுண் நீர் தெவிள வீங்கி புடை திரண்டு சேறு கொள முற்ற - தெளிந்த நீரை உள்ளே யுடைய பசிய காய் நுண்ணிய நீர்தான் திரளும்படியாக வீங்கிப் பக்கம்திரண்டு இனிமை கொள்ளும்படி முற்ற,

27. [நளிகொள் சிமைய விரவுமலர் வியன்கா :] விரவு மலர் நளி கொள் சிமையம் வியல் கா-முன்பு விரவின பூக்கள் செறிதலைத் தன்னிடத்தே கொண்ட உச்சியினை யுடையவாகிய அகன்ற பொழில்கள்,

28. குளிர் கொள் சினைய குரூஉ துளி தூங்க - குளிர்ச்சியைத் தம்மிடத்தே கொண்ட கொம்புகளை யுடையவாகி அவற்றில் ஏற்று நின்ற நிறத்தை யுடைய மழைத் துளி மாறாமல் வீழ,

---

[1] "அகலிரு விசும்பில் - தன்னை யொழிந்த நான்கு பூதமும் தன் னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத் திடத்தே" (பெரும்பாண். 1, ந.)

[2] "தோடே மடலே......புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" (தொல். மரபு. சூ. 86)

29 – 30. மாடம் ஓங்கிய மல்லல் மூது ஊர் ஆறு கிடந்தன்ன அகல்நெடு தெருவில் - மாடங்கள் உயர்ந்த வளப்பத்தையுடைய பழைய ஊரில் யாறு கிடந்தாற் போன்ற அகன்ற நெடிய தெருவிலே திரிதர(35) என்க.

31 - 2. படலை கண்ணி பரு ஏர் எறுழ் திணி தோள் முடலை யாக்கை முழு வலி மாக்கள் - தழை விரவின மாலையினையும் முறுக் குண்ட உடம்பினையும் சிரம்பின மெய் வலியினையுமுடைய மிலேச்சர்,

33. வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து - வண்டுகள் மொய்க்கும் கள்ளை உண்டு மகிழ்ச்சி மிக்கு,

34 - 5. [துவலைத் தண்டுளி பேணார் பகலிறந், திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர :]

துவலை தண் துளி பேணார் இரு கோடு அறுவையர் வேண்டு வயின் திரிதர - சிறு துவலையாகிய தண்ணிய துளியை அஞ்சாராய் முன்னும் பின்னும் தொங்கலாக நாலவிட்ட துகிலினை யுடையராய்த் தமக்கு வேண்டின இடத்தே திரிதலைச் செய்ய,

'பகலிறந்து' என்பதனை மேலே கூட்டுக.

36 - 7. [வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள், மெத் தென்:] வெள்ளி வள்ளி வீங்கு இறை மெத்தென் பணை தோள் - வெளுக்கப்பட்டதாகிய சங்குவளை இறுகின இறையினை யுடைய மெத்தென்ற பணை போலும் தோளினையும்,

37. மெத்தென் சாயல் - மெய்ம் முழுதும் [1]கட்புலனாய்த் தோன்றுகின்ற மெத்தென்ற சாயலினையும்,

முத்து உறழ் முறுவல் - முத்தை யொத்த பல்லினையும்,

38. பூ குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழை கண் - பொலி வினை யுடைய மகரக் குழையிட்ட அழகிற்குப் பொருந்தின உயர்ந்து தோன்றுகின்ற அழகினை யுடைய குளிர்ச்சியை யுடைய கண்ணினையும்,

இனி உருபு மயக்கமாக்கிக் குழையிடத்தே சென்றமர்ந்த கண்ணென்றும் உரைப்ப.

39. ஏந்து (38) மடவரல் மகளிர் - உயர்ந்து தோன்றுகின்ற மடப்பத்தினை யுடைய மகளிர்,

தோள் (36) முதலியவற்றை யுடைய மகளிரென்க.

39 - 41. [பிடகைப் பெய்த, செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத், தவ்வித ழவிழ்பதங் கமழ :] பிடகை பெய்த பைங்கால் பித்திகத்து செவ்வி அரும்பின்[2] அ இதழ் பகல் இறந்து (34) அவிழ் பதம் கமழ-பூந்தட்டிலே இட்டு வைத்த பசிய காலினை யுடைய பிச்சி

---

[1]சிறுபாண், 14 - 6, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[2]பெரும்பாண். 412 - 3, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

யினுடைய அலரும் செவ்வியையுடைய அரும்பினது அழகிய இதழ்கள் பகற் பொழுதைக் கடந்து விரியும் செவ்வி மணக்கை யிலே,

செவ்வரியரும்பு பாடமாயிற் சிறந்த வரியினையுடைய அரும் பென்க.

41. [1]பொழுது அறிந்து - அந்திக்காலம் என்றறிந்து,

என்றதனாற் கூறிரால் [2]இரவும் பகலும் தெரியாவென்றார்.

42. இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ - இரும்பாற் செய்த [3]தகளியிலே நெய் தோய்ந்த திரியைக் கொளுத்தி,

விளக்கு : ஆகுபெயர்.

43. நெல்லும் மலரும் தூஉய் கைதொழுது – [4]நெல்லையும் மலரையும் சிதறி [5]இல்லுறை தெய்வத்தை வணங்கி,

44. மல்லல் ஆவணம் மாலை அயர - வளப்பத்தையுடைய அங்காடித் தெருவெல்லாம் மாலைக் காலத்தைக் கொண்டாட,

மகளிர் (39) கமழுகையினுலெ பொழுதறிந்து (41) திரிக் கொளீஇத் (42) தூவித் தொழுது (43) அயர வென்க.

45 - 8. [மனையுறை புறவின் செங்காற் சேவல், இன்புறு பெடை யொடு மன்றுதேர்ந் துண்ணு, திரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப் பள்ளி மாறுவன விருப்ப :]

இரவும் பகலும் மயங்கி (47) - இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குகையினுலே,

மனை உறை புறவின் செ கால் சேவல் (45) இன்பு உறு பெடை யொடு மன்று தேர்ந்து உண்ணுது (46) – மனையின்கண்ணே இருக்கும் புறவினுடைய சிவந்த காலினையுடைய சேவல் தான் இன்பம் நுகரும் பெடையோடு மன்றிலே சென்று இரைதேடி உண்ணுமல்,

---

[1]மலர்கள் மலர்தலாற் பொழுதை அறிதல் பண்டை வழக்க மென்று தெரிகின்றது. பொழுதினை அறிவித்தல்பற்றியே மலரும் பருவத்துப் பூவரும்பு போதெனப்பட்டதென்று தோற்றுகிறது. தக்கயாகப் பரணி உரையாசிரியர் நாளென்பதற்கு மலரென்று பொருள்கூறியிருத்தல் இக்கருத்தைத் தழுவிப் போலும்.

[2] "இரவும் பகலு மயங்கி" (நெடுநல். 47)

[3] முல்லை. 85, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[4] "கொடியிடையார், அகன்ற மனையிடமெங்கும் கதிரோன் மறைந்த மாலைக் காலத்தே அரும்பு புரிநெகிழ்ந்த முல்லையினது ஒளி மலரை நெல்லோடே தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கி" (சிலப். 9 : 1 – 2, அடியார்.)

[5] இல்லுறை தெய்வம் : "அணங்குடை நல்லில்" (மதுரைக். 578)

கை அற்று (47) மதலை பள்ளி மாறுவன இருப்ப (48) – செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகைகளிலே புறவா திருந்து கடுத்த கால் ஆறும்படி மாறி மாறி இருக்க,

இனித் தலைமாறி யிருப்ப வென்பாரு முளர். மதலைப்பள்ளி - [1]கபோதகத் தலை.

இறையுறை புறவும் பாடம்.

49 – 50. கடி உடை வியல் நகர் சிறு குறு தொழுவர் கொள் உறழ் நறு கல் பல கூட்டு மறுக – காவலையுடைய அகன்ற மனைகளில் சிறியராகிய குற்றேவல் வினைஞர் [2]கருங்கொள்ளின் நிறத்தை யொத்த நறிய [3]சாத்தம்மியிலே கத்தூரி முதலிய [4]பசுங்கூட்டு அரைக்க,

51 - 2. வடவர் தந்த [5]வான் கேழ் வட்டம் தென்புலம் மருங்கில் சாந்தொடு துறப்ப – வடநாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளிய நிறத்தையுடைய [6]சிலா வட்டம் தென்றிசையிடத்தில் சந்தனத் தோடே பயன்படாமல் கிடப்ப,

53. [கூந்தன் மகளிர் கோதை புனையார் :] மகளிர் கூந்தல் கோதை புனையார் - மகளிர் குளிர்ச்சி மிகுதியால் தம் மயிரிடத்து மாலையிட்டு முடியாராய்,

54. பல் இரு கூந்தல் சில் மலர் பெய்மார் - தம் பலவாகிய கரிய மயிரிடத்தே [7]மங்கலமாகச் சில மலரிட்டு முடித்தலை வேண்டி,

55 – 6. தண் நறு தகரம் முளரி நெருப்பு அமைத்து இரு காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப - தண்ணிய நறிய மயிர்ச் சந்தன மாகிய விறகிலே நெருப்பை உண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத் தையுடைய அகிலோடே வெள்ளிய [8]கண்ட சருக்கரையையும் கூட்டிப் புகைப்ப,

57 - 8. கை வல் கம்மியன் கவின் பெற புனைந்த செ கேழ் வட்டம் சுருக்கி - கையால் புனைதல்வல்ல உருக் குத்துகின்றவனாலே அழகு பெறப் பண்ணின சிவந்த நிறத்தையுடைய ஆலவட்டம் உறை யிடப்பட்டு,

---

[1] கபோதகத்தலை - வீட்டின் ஒருறுப்பு.

[2] கருங்கொள் : நாலடி. 387. [3] சாத்தம்மி - சாந்து அம்மி.

[4] "தண்ணறுஞ் சாந்தமும் - குளிர்ந்த நறிய பசுங்கூட்டும்" (சிலப். 5 : 13, அடியார்.)

[5] "வான்கேழ் வட்டம் - அழகு கெழுமிய சிலா வட்டம்" (சிலப். 4 : 37, அரும்பத.); "வான்கேழ் வட்டம் - மிக்க ஒளியையுடைய சிலாவட்டம்" (சிலப். 4 : 37, அடியார்.)

[6] சிலாவட்டம் - இங்கே சந்தனக் கல்.

[7] "மங்கலமாகிய........பூவே" (நன். பொது. சூ. 30)

[8] (பி - ம்.) 'கண்டு சருக்கரை'

58 - 9. [கொடுந்தறிச், சிலம்பி வானூல் வலந்தன தூங்க:] சிலம்பி வால் நூல் வலந்தன கொடு தறி தூங்க - சிலந்தியினது வெள்ளிய நூலால் சூழப்பட்டனவாய் வளைந்த முளைக் கோலிலே தூங்க,

60. வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின் - தேவருரைத் தீண்டும்படி உயர்ந்த மேலாம் நிலத்திடத்து,

61 - 2. வேனில் பள்ளி தென் வளி தரூஉம் நேர் வாய் கட்டளை திரியாது - இளவேனிற் காலத்துத் துயிலும் படுக்கைக்குத் தென்றற் காற்றைத் தரும் சாலேகத்திலே நின்று உலாவாதே,

நேர்வாய்க் கட்டளையென்றது மாடத்தின்கண் சாலேகத்தை; கட்டளை தெரியாதென்று பாடமாயின், திறவாதென்க.

62 - 3. திண் நிலை போர் வாய் கதவம் தாழொடு துறப்ப - சிக்கென்ற நிலையினையுடைய இரண்டு கதவும் தம்முட் பொருதல் வாய்த்த கதவு தாழிட்டுக் கிடக்க,

64 - 6. கல்லென் துவலை தூவலின் யாவரும் தொகு வாய் கன்னல் தண்ணீர் உண்ணார் பகுவாய் தடவில் செ நெருப்பு ஆர - கல்லென்கின்ற ஓசையினையுடைய சிறு துவலையை வாடைக் காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் முதியோரும் குவிந்த வாயையுடைய [1]கரகத்தில் தண்ணீரைக் குடியாராய்ப் பகுத்தாற் போன்ற வாயையுடைய [2]இந்தளத்தில் இட்ட சிவந்த நெருப்பின் வெம்மையை நுகர,

67. ஆடல் மகளிர் பாடல் கொள புணர்மார் - ஆடற்றொழிலையுடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டினை யாழ் தன்னிடத்தே கொள்ளும்படி நரம்பைக் கூட்டுதற்கு,

68 - 9. தண்மையின் திரிந்த இன் குரல் தீ தொடை கொம்மை வரு முலை வெம்மையில் தடைஇ - குளிர்ச்சியாலே தன் நிலை குலைந்த இனிய குரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின் வெப்பத்தே தடவி,

தீந்தொடை : ஆகுபெயர்.

70. கரு கோடு சிறு யாழ் பண்ணு முறை நிறுப்ப - கரிய தண்டினையுடைய சிறிய யாழைப் பண் நிற்கும் முறையிலே நிறுத்த,

71. காதலர் பிரிந்தோர் புலம்ப - கணவரைப் பிரிந்த மகளிர் வருந்த,

71 - 2. பெயல் கனைந்து கூதிர் நின்றன்றால் - காலமழை செறிந்து கூதிர்க்காலமாய் நிலைபெற்றது; அவ்விடத்து,

---

1 "எரிசுடர் நெருப்பைநீ ரென்ன வேட்டனர், தருகுளிர் நீரினைத் தழலி னஞ்சினார்" (சீகாளத்திப். பொன்முகரி. 45)

2 இந்தளம் - தூபமுட்டி; "வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும், ஆதியிந்த ளூரான்" (தூற்றெட்டுக். 22)

72. போது - பின்னர் நிகழ்ந்தபொழுது,

வானம் கார் காலத்து மழையைப் பெய்ததாகப் (2) பின்னர் நிகழ்ந்தபொழுது (72) கோவலர் (3) நடுங்க (8) மறப்பக் கூர (9) வீழ (10) ஒழிய (11) மலரக் (14) கவரக் (17) கற்ப (20) வணங்க (22) முற்றத் (26) தூங்கத் (28) திரிதர (35) அயர (44) இருப்ப (48) மறுகத் (50) துறப்பப் (52) புகைப்பத் (56) தூங்கத் (59) துறப்ப (63) ஆர (66) நிறுப்பப் (70) புலம்பப் பெயல் செறிந்து (71) கூதிர்க்காலமாய் நிலை பெற்றது; அவ்விடத்து (72) என முடிக்க.

72 - 5. [மாதிரம், விரிகதிர் பரப்பியவியல்வாய் மண்டிலம், இரு கோற் குறிநிலை வழுக்காது குடக்கேர், பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து:]

மாதிரம் விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் குடக்கு ஏர்பு - திசைகளிலே விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிறு மேற்றிசைக்கட் சேறற்கு எழுந்து,

இரு கோல் குறிநிலை வழுக்காது ஒரு திறம் சாரா அமயத்து அரைநாள் - இரண்டிடத்து நாட்டின இரண்டு கோலிடத்தும் சாயா நிழலால் தாரை போக ஓடுகின்ற நிலையைக் குறித்துக் கொள்ளும் தன்மை தப்பாதபடி தான் ஒரு பக்கத்தைச் சாரப் போகாத சித்திரைத் திங்களின் நடுவில் பத்தில் நின்ற யாதோர் நாளில் பதினைந்தாம் நாழிகையிலே [1]அங்குரார்ப்பணம் பண்ணி,

76. நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு - [2]சிற்ப நூலை அறிந்த தச்சர் கூரிதாக நூலை நேரே பிடித்து,

77. தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி - திசைகளைக் குறித்துக்கொண்டு அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் குறை வறப் பார்த்து,

78 - 9. [பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து, ஒருங்கு:] பெரு பெயர் மன்னர்க்கு ஒப்ப ஒருங்கு மனை வகுத்து - பெரிய பெயரினையுடைய அரசர்க்கொப்ப மனைகளையும் வாயில் களையும் மண்டபங்கள் முதலியவற்றையும் கூறுபடுத்தி,

79. உறழ் வளைஇ ஓங்கு நிலை வரைப்பின் - இவ்விடங்களை யெல்லாம் சேரவளைத்து உயர்ந்த மதிலின் வாயி(88)லென்க.

80. பரு இரும்பு பிணித்து - ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலே கட்டி,

செ அரக்கு உரீஇ - சாதிலிங்கம் வழித்து,

81 - 5. [துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு, நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப்

[1]அங்குரார்ப்பணம் - திருமுளைச்சார்த்து.

[2]மதுரைக். 646, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

புதுப்பிடி காலமைத்துத், தாழொடு குயின்றபோரமை புணர்ப்பிற், கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து:]

தாழொடு குயின்ற (84) துணை மாண் கதவம் பொருத்தி (81) - தாழோடே சேரப் பண்ணின இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச் சேர்த்தி,

இணை மாண்டு (81) புது போது அவிழ் குவளை பிடி கால் அமைத்து (83) - இணைதல் மாட்சிமைப்பட்டுப் புதிய போதாய் அவிழ்ந்த குவளைப் பூவோடே பிடிகளையும் தன்னிடத்தே பண்ணி,

என்றது, [1]நடுவே திருவும் இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப் பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்தரக் [2]கற்கவி.

நாளொடு பெயரிய விழுமரத்து கோள் அமை (82) நெடுநிலை (86) -உத்தரமென்னும் நாளின் பெயர் பெற்ற உத்தரக் கற்கவியிலே செருகுதல் பொருந்தின நெடுநிலை யென்க.

அமைத்தென்னும் எச்சம் பெயரிய என்பதனோடு முடிந்தது.

கை வல் கம்மியன் முடுக்கலின் புரை தீர்ந்து (85) போர் அமை புணர்ப்பின் (84) நெடுநிலை (86) - கைத்தொழில் வல்ல தச்சன் கடாவுகையினாலே வெளியுற்றுப் பல மரங்களும் தம்மிற் கிட்டுத லமைந்த கூட்டத்தினை யுடைய நெடுநிலை யென்க.

86. ஐயவி அப்பிய நெய் அணி நெடு நிலை - வெண்சிறு கடுகு அப்பி வைத்த நெய்யணிந்த நெடிய நிலையினையுடைய,

[3]அதில் தெய்வத்திற்கு, 'வெண்சிறுகடுகும் நெய்யும் அணிந்தது.

87. வென்று எழு கொடியொடு வேழம் சென்று புக - வென்றி கொண்டெழும் கொடிகளோடே யானைகள் சென்று புகும்படி உயர்ந்த,

---

[1] இரண்டு யானைகளின் இடையே திருமகள் வீற்றிருத்தல். கோயில் முதலிய இடங்களிற் காணப்படும் சிற்பங்களாலும், "வரிநுத லெழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப், புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித், திருநயந் திருந்தன்ன" (கலித். 44: 5-7) என்பதனாலும், "இரண்டானை பக்கத்தே நின்று நீரைச் சொரிய நடுவே தாமரைப் பூவிலே யிருந்து திருமகள்" (சீவக. 2595, ந.) என்பதனாலும் அறியலாகும்.

[2] கற்கவி: சிலப். 15: 213, அடியார்.

[3] நிலையில் தெய்வம் உறைதல்: "அணங்குடை நெடுநிலை" (மதுரைக். 353)

'இவை யிரண்டும் தெய்வங்களால் விரும்பப்படுவன; முருகு. 228 - ஆம் அடியும், மதுரைக். 354-ஆம் அடியின் விசேடவுரையும், 'தெய்வங்கள் இனிதாகக் கொண்ட ஐயவி' (சீவக. 113, ந.) என்பதும் இதனை உணர்த்தும்.

88. [1] குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில் - மலையை நடுவே வெளியாகத் திறந்தாற் போன்ற கோபுர வாயில்களையும்,

ஓங்கின நிலையையுடைய கோபுரத்தை ஓங்குநிலை யென்றார்; ஆகுபெயர்.

வரைப்பின் (79) வாயிலென்க.

கதவு பொருத்திக் கோளமைத்த புணர்ப்பினையுடைய நெடுநிலையினையுடைய வாயிலென்க.

89 – 92. [திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற், றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து, நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை, குறுங்கா லன்னமோ டுகளு முன்கடை,]

[2] நெடு மயிர் எகினம் தூ நிறம் ஏற்றை குறு கால் அன்னமொடு உகளும் முன்கடை - நெடிய மயிரினையுடைய கவரிமாவில் தூய நிறத்தை யுடைய ஏற்றை, குறிய காலினையுடைய அன்னத்தோடே தாவித் திரியும் வாசல் முன்பினையும்,

கடைமுன் முன்கடையென மருஉ முடிபு. அன்னமும் தாவிப் பறத்தலின், உகளுமென்று கவரிமாவோடே ஒரு வினை கூறினர்.

[3] தரு மணல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து.

திரு நிலைபெற்ற தீது தீர் சிறப்பின் - திருமகள் நிலைபெற்ற குற்ற மற்ற தலைமையினையும்,

வாயிலினையும் (88) முன்கடையினையும் (92) முற்றத்தினையும் (90) சிறப்பினையுமுடைய (89) கோயில் (100) என முடிக்க.

93 – 4. பணி நிலை முனைஇய பல் உளை புரவி புல் உணா தெவிட்டும் புலம்பு விடு குரலொடு - பந்தியிலே நிற்றலை வெறுத்த பல வாகிய [4] கேசாரியையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டும் தனிமை தோற்றுவிக்கின்ற குரலோடே,

95 - 7. [5] நிலவு பயன்கொள்ளும் நெடு வெள் முற்றத்து கிம்புரி பகுவாய் அம்பணம் நிறைய கலிழ்ந்து வீழ் அருவி பாடு விறந்து - நிலாவின் பயனை அரசன் நுகரும் நெடிய வெள்ளிய நிலாமுற்றத்தில்

---

[1] "குன்று குயின்றன்ன - மலையை உள்வெளியாக வாங்கி இருப்பிட மாக்கினாற்போன்ற" (மதுரைக். 474, ந.)

[2] "ஏழகத் தகரு மெகினக் கவரியும், தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும் .....நீணெடு வாயி னெடுங்கடை" (சிலப். 10: - 58.

[3] இந்தப் பாகத்திற்கு உரை கிடைத்திலது; கொண்டு வந்திட்ட மணல் பரந்த அழகிய வீட்டின் முன்னிடத்தையும் என்க.

[4] மதுரைக். 392, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[5] "நிலவுப்பயன் கொள்ளுமென இடக்கரடக்கிக் கூறினர்" என்பர் அடியார்க்கு நல்லார்; சிலப். 4: 32, உரை.

உள்ள நீர் வந்து வீழும் [1]மகரவாயாகப் பகுத்த வாயினையுடைய [2]பந்தம்நிறைகையினாலே கலங்கிவிழுகின்றஅருவியின்ஓசை செறிந்து,

97 - 9. அயல் ஒலி நெடு பீலி ஒல்க மெல் இயல் கலி மயில் அகவும் [3]வயிர் மருள் இன் இசை - அதற்கு அயலிடத்தனவாகிய தழைத்த நெடிய பீலி ஒதுங்க மெல்லிய இயல்பினையுடைய செருக்கின மயில் ஆரவாரிக்கும் கொம்பென்று மருளும் இனிய ஓசை,

100. நளி மலை சிலம்பின் சிலம்பும் கோயில் - செறிந்த மலையின் ஆரவாரம் போல ஆரவாரிக்கும் கோயில்,

புலம்புவிடு குரலோடே (94) அருவி பாடும் (97) வயிர்மருளின்னிசையும் (99) விறந்து (97) மலைச் சிலம்பிற் சிலம்பும் கோயில் (100) என முடிக்க.

அருவியும் மயிலும் மலைக்கும் உள்ளனவாகலின், உவமை கொண்டார். புலம்புவிடு குரல் மழை மெத்தென முழங்கினாற் போன்றிருத்தலின், உவமை கொண்டார்.

இனி அவற்றின் எதிரொலி யெழுகின்ற கோயிலென்றுமாம்.

101 - 2. யவனர் இயற்றிய வினை மாண் பாவை கை ஏந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து - சோனகர் பண்ணின தொழில்மாட்சிமைப்பட்ட பாவை தன் கையிலே ஏந்தியிருக்கின்ற வியப்பையுடைய தகளி நிறையும்படி நெய் வார்க்கப்பட்டு,

103. பரூஉ திரி கொளீஇய குரூஉ தலை நிமிர் எரி - பருந்திரிகளைப் பந்தங்களிலே கொளுத்தி வைத்த நிறத்தை உடைத்தாகிய தலையினையுடைய மேனோக்கி எரிகின்ற விளக்கை,

104. அறு அறு காலை தோறு அமைவர பண்ணி - நெய் வற்றின காலந்தோறும் ஒளி மழுங்கின காலந்தோறும் நெய் வார்த்துத் தூண்டி,

105. பல் வேறு பள்ளி தொறும் பாய் இருள் நீங்க - பலவாய் வேறுபட்ட இடங்கடோறும் பரந்த இருள் நீங்கும்படி,

106 - 7. பீடு கெழு சிறப்பின் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அரு கடி வரைப்பின் - பெருமைபொருந்தின தலைமையினையுடைய பாண்டியனல்லது சிறுகுறுந்தொழில் செய்யும் ஆண் மக்களும் அணுகவாராத அரிய காவலையுடைய கட்டுக்களின்,

108. வரை கண்டன்ன தோன்றல - மலைகளைக் கண்டாற் போன்ற உயர்ச்சியை உடையவாய்,

108 - 9. வரை சேர்பு வில் கிடந்தன்ன கொடிய - மலைகளைச் சேர்ந்து இந்திரவில் கிடந்தாற் போன்ற பல நிறமாய் வீழ்ந்து கிடந்த கொடிகளை உடையவாய்,

[1] நற். 132: 2; ஏலாதி, 43

[2] (பி - ம்.) 'பந்தல் நிறைய'

[3] வயிரிசை அன்றிலின் ஓசைக்கும் உவமை கூறப்படும்; குறிஞ்சிப். 219.

இது மேலே கட்டின கொடி.

109. பல் வயின் – பல இடங்கடோறும்,

110. வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ - வெள்ளியை யொத்த விளங்குகின்ற சாந்தை வாரி,

111. மணி கண்டன்ன மா திரள் திண் காழ் - நீலமணியைக் கண்டாற் போன்ற கருமையினையும் திரட்சியினையுமுடைய திண்ணிய தூண்களை உடையவாய்,

112. செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடு சுவர் – செம்பினாலே பண்ணினாலொத்த தொழில்கள் செய்தலுற்ற நெடிய சுவரிலே,

113. உருவம் பல் பூ ஒரு கொடி வளைஇ – வடிவழகினையுடையவாகிய பல பூக்களை உடைய [1]வல்லிசாதியாகிய ஒப்பில்லாத கொடியை எழுதி,

114. கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல் - புதைத்த கருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்றாகிய இல்,

என்றது, கருப்பக்கிருகமென்றவாறு.

திண்காழையுடையவாய்ச் (111) செய்வுறு நெடுஞ்சுவரிலே (112) விளங்கும் சுதையுரீஇப் (110) பல்வயின் (109) ஒரு கொடி வளைஇ (113) வரைகண்டன்ன தோன்றலவாய்க் (108) கொடியவாய்ப் (109) பாயிருணீங்க (105) எரி (103) அமைவரப் பண்ணிக் (104) காட்சிக் கினியவாகிய நல்லில் (114) என முடிக்க.

கோயில் (100) வரைப்பின் (107) காண்பினல்லில் (114) என முடிக்க.

115. [தசநான் கெய்திய:] நான்கு தசம் எய்திய – நாற்பதிற்றியாண்டு சென்ற,

பணை மருள் நோன் தாள் – முரசென்று மருளும் வலிய கால்களையும்,

116. [இகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதல்:]

ஏந்து எழில் வரி நுதல் - உயர்ந்த அழகினையும் புகர் நிறைந்த மத்தகத்தினையுமுடைய நாகம் (117),

இகல் மீ கூறும் நாகம் (117) - போரில் மேலாகச் சொல்லும் நாகம்,

117. பொருது ஒழி நாகம் - பொருது பட்ட யானையினுடைய,

117-8. [ஒழியெயி றருகெறிந்து, சீருஞ் செம்மையு மொப்ப :] ஒழி எயிறு சீரும் செம்மையும் ஒப்ப அருகு எறிந்து - தானே வீழ்ந்த கொம்பைக் கனமும் செம்மையுமொப்ப இரண்டு புறத்தையும் செத்தி,

[1] இக் கொடிகளை வல்லிசாதியென்றே குறிப்பிடுவர் தக்கயாகப் பரணி உரையாசிரியர். துகிற்கொடியை விலக்குவதற்காக இவ்வாறு இவர்கள் கூறுகின்றார்கள் போலும்.

118 - 9. வல்லோன் கூர் உளி குயின்ற - தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணின,

119. ஈரிலை இடை இடுபு - பெரிய இலைத்தொழிலை இடையே இட்டு,

120 - 30. [தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப், புடை திரண் டிருந்த குடத்த விடைதிரண், டுள்ளி நோன்முதல் பொருந்தி யடியமைத்துப், பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில், மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு, முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப், புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத், தகடுகண் புதையக் கொளீஇத் துகடீர்ந், தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான், வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து, முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து :]

ஊட்டு உறு பல் மயிர் விரைஇ (128)-பல நிறம் பிடித்த மயிர்களை உள்ளே வைத்து அதன்மேலே,

வயமான் (128) வேட்டம் பொறித்து (129) - சிங்கம் முதலிய வற்றை வேட்டையாடுகின்ற தொழில்களைப் பொறித்த தகடுகளை வைத்து,

புலி முதலியவற்றின் வரிகள் தோன்ற உள்ளே மயிர் விரவின.

வியல் கண் கானத்து (129) முல்லை போது உறழ பல்பூ நிரைத்து (130) - அகற்சியை இடத்தே உடைய காட்டிடத்து முல்லைப் போதுடனே மாறுபடும்படி ஏனைப் பல பூக்களையும் நிரைத்து,

சாலேகம் தகடு குத்துறுத்து (125) - சாளரங்களாகத் திறந்த தகடுகளை ஆணிகளாலே தைத்து,

மடை மாண் (124) பாண்டில் (123) - மூட்டுவாய் மாட்சிமைப் பட்ட வட்டக்கட்டில்,

கொம்பைச் செத்தி (117) உளியாற் குயின்ற இலையை இடையிட்டுப் (119) பொறித்து (129) நிரைத்துச் (130) சாலேகத் தகடுகளைக் குத்துறுத்து (125) மடைமாண் (124) பாண்டில் (123) என முடிக்க.

முத்து உடை (124) நுண் இழை பொலிய (124) நாற்றி (125) தொடை மாண்டு (124) பெரு அளவு எய்திய பாண்டில் (123) - முத்தைத் தன்னிடத்தே உடைய மெல்லிய நூல் அழகு பெறும்படி கட்டிலின் கீழே வீழ நாலு புறமும் நாற்றி அதனைத் தன்னிடத்தே கட்டுதல் மாட்சிமைப்பட்டுப் பெரிய எல்லையைப் பெற்ற பாண்டிலெனக் கூட்டுக.

என்றதனல், தந்தத்தாற் சமைத்த கட்டிலைச் சூழ முத்துவடம் நாற்றி யென்றார்.

புலி பொறி கொண்ட பூ கேழ் தட்டத்து (126) கண் புதைய கொளீஇ துகள் தீர்ந்து (127) பெரு பெயர் பாண்டில் (123) - புலியினது வரியைத் தன்னிடத்தே கொண்ட பொலிவுபெற்ற

நிறத்தையுடைய கச்சாலே நடுவு வெளியான இடம் மறையும்படி கோக்கப்பட்டுக் குற்றமற்றுக் கச்சுக்கட்டிலென்னும் பெரிய பெயரை யுடைய பாண்டிலெனக் கூட்டுக.

தூங்கு இயல் மகளிர் வீங்கு முலை கடுப்ப (120) புடை திரண்டு இருந்த குடத்த (121) அடி(122) – சூல் முற்றி அசைந்த இயல்பினை உடையராகிய மகளிரது பால்கட்டி வீங்கின முலையை ஒப்பப் பக்கம் உருண்டிருந்த குடத்தை உடையவாய அடி,

இஃது உருட்சிக்கு உவமை கூறிற்று.

இடை திரண்டு (121) உள்ளி முதல் நோன் அடி பொருத்தி அமைத்து (122) - குடத்திற்கும் கட்டிற்கும் நடுவாகிய இடம் ஒழுக மெல்லிதாய்த் திரண்டு உள்ளிமுதல்போலும் வலியினை உடைய கால்களைத் தன்னிடத்தே தைத்துச் சமைத்துப் பேரளவெய்திய பாண்டி லென்க.

உள்ளிப்புட்டில் போல்வதனை உள்ளிமுதலென்றார்.

131 - 3. [மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணை புண ரன்னத் தூநிறத் தூவி, இணையணை மேம்படப் பாயணை யிட்டு :]

மெல்லிதின் விரிந்த இணை அணை சேக்கை - மெல்லியதாக விரிந்த இணைதல் அணைந்த படுக்கையென்க.

மேம்பட துணை புணர் அன்னம் தூ நிறம் தூவி பாய் - அச்சேக் கைக்கு மேலாகத் தம் பேட்டைப் புணர்ந்த அன்னச்சேவலின் தூய நிறத்தையுடைய சூட்டாகிய மயிர் பரக்கப்பட்டு,

"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி [1]சேக் கையோ ரைந்து" (கலித். 72 : 1 : 8, ந. மேற்.; சீவக. 838, ந. மேற்.) என்ற ஐந்தினையும் படுத்ததென்பது தோன்ற [2]இணையணை யென்றார். [3]என்புருகி மிக்க அன்போடு புணர்தலிற் சூட்டிற்கு மென்மை பிறக்கு மென்பது தோன்றத் துணைபுணரன்னத் தூநிறத் தூவி

---

[1] (பி - ம்.) 'தாமிவையோ ரைந்து', 'சேக்கையோடைந்து'

[2] "இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்" (கலித். 72 : 1) என்றவிடத்து, 'ஐந்துவகைப்படப் படுத்தலால் உயர்ந்த நீலப்பட்டாற் செய்த மெல்லிய படுக்கையிடத்து' என்று உரை எழுதுவர் நச்சினார்க்கினியர்.

[3] "துணையைப் புணர்ந்த காலத்து மெய்யுருகி உதிர்ந்த தூவி தானும் மிக மெல்லியதாயிருக்கும் என்பது உணர்த்தற்குத் துணை புணரன்னமென்றார்" (கலித். 72 : 1 - 8, ந.) எனவும், "புணர்ச்சி யால் தூவிக்கு மென்மை பிறக்குமென்றார்" (சீவக. 189, ந) எனவும் இவ்வுரையாசிரியரும், "தன் சேவலொடு புணர்ந்த அன்னப்பேடை அப்புணர்ச்சியான் உருகி உதிர்த்த வயிற்றின் மயிர் எஃகிப் பெய்த பல்வகையணைமீதே" (சிலப். 4 : 58 – 71, அடியார்.) எனப் பிறரும் எழுதியவை இங்கே உணர்தற்குரியன.

யென்றார். பிறரும், இக்கருத்தேபற்றி, "ஆதரம் பெருகு கின்ற வன்பிணை லன்ன மொத்தும்" (சீவக. 189) என்றார்.

134 - 5. [காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத், தோடமை தூமடி விரித்த சேக்கை :] மேம்பட அணை இட்டு (133) காடி கொண்ட கழுவுறு கலிங்கத்து தூ மடி விரித்த தோடு அமை சேக்கை - அத்தூவிக்கு மேலாக அணைகளும் இட்டு வைத்துக் கஞ்சியைத் தன்னிடத்தே கொண்ட கழுவுதலுற்ற துகிலின் தூய மடித்தது விரித்த செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்கள் பொருந்தின படுக்கை,

இணையணை சேக்கை மேம்படத் தூவி பாய், அத் தூவிக்கு மேம்பட [1]அணையிட்டுத் தூமடி விரித்த சேக்கையென்க.

136 - 7. ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து பின் அமை நெடு வீழ் தாழ - முன்பு முத்தாற்செய்த கச்சுச் சுமந்த பருத்த முலையினை உடைய மார்பிடத்தே இப்பொழுது குத்துதலமைந்த நெடிய தாலி நாணொன்றுமே தூங்க,

வீழ்ந்து கிடத்தலின் வீழென்றார். இனிப் பின்னுதல் அமைந்த நெடிய வீழ், மயிரென்பாரு முளர்.

137. துணை துறந்து - அரசன் பிரிகையினாலே,

138. நல் நுதல் [2]உலறிய சில்மெல் ஓதி-நன்றாகிய நுதலிடத்தே கைசெய்யாமல் உலறிக்கிடந்த சிலவாகிய மெத்தென்ற மயிரினையும்,

இனித் துணை துறந்து உலறிய ஓதியெனக் கூட்டிக் கூடிக் கிடந்த தன்மை நீங்கி உலறிய ஓதியென்றுரைப்பாரு முளர்.

139 - 40. [நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின் :]

நெடு நீர் வார் குழை களைந்தென வறிது வீழ் காதின் - பெரிய ஒளி ஒழுகின மகரக் குழையை வாங்கிற்றாகச் சிறிதே தாழ்ந்த காதினையும்,

நீர்மை - ஒளி.

குறு கண் வாய் உறை அழுத்திய காது-சிறிய இடத்தை உடைய தாளுருவி அழுத்திய காது,

வாயுறவென்று பாடமாயின், கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காதென்க.

141 - 2. பொலம் தொடி தின்ற மயிர் வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து-முன்பு பொன்னாற் செய்த தொடி

[1] "ஐவகை யமளி யணைமேற் பொங்கத், தண்மலர் கமழும் வெண்மடி விரித்து" (திருவிடை. மும். 19)

[2] உலறிய : சிறுபாண். 18.

கிடந்து தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக் கிடந்த முன்கையிலே [1]வலம்புரியை அறுத்துப் பண்ணின வளையை இட்டுக் காப்புநாணைக் கட்டி,

ஒடு : வேறு வினையொடு.

143 - 4. வாளை பகு வாய் கடுப்ப வணக்குறுத்து செ விரல் கொளீஇய செ கேழ் [2]விளக்கத்து - வாளையினது பகுத்த வாயை யொக்க முடக்கத்தை உண்டாக்கிச் சிவந்த விரலிடத்தே இட்ட சிவந்த நிறத்தையுடைய [3]முடக்கென்னும் மோதிரத்தையும்,

145 - 6. பூ துகில் மரீஇய ஏந்து கோடு அல்குல் அ மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு - முன்பு பூத்தொழிலையுடைய [4]துகில் கிடந்த உயர்ந்த வளைவினையுடைய அல்குலில் இக்காலத்து உடுத்த அழகிய மாசேறிய விளங்குகின்ற நூலால் செய்த புடைவையுடனே.

147. [புனையா வோவியங் கடுப்பப் புனைவில் :]

[5]புனையா ஓவியம் கடுப்ப - வண்ணங்களைக் கொண்டெழுதாத வடிவைக் கோட்டின சித்திரத்தை ஒப்ப,

புனைவில் நல்லடி (151) என மேல் வருவதனைக் கூட்டி, கழுவிச் செம்பஞ்சிட்டுப் பூண்கள் அணியாத நன்றாகிய அடியென்க.

148. தளிர் ஏர் மேனி - [6]மாந்தளிரை யொத்த நிறத்தினையும், தாய சுணங்கின் - பரந்த சுணங்கினையும்,

149. அம் பணை தடைஇய மெல் தோள் — அழகினையுடைய மூங்கில்போலத் திரண்ட மெல்லிய தோளினையும்,

149 - 50. [முகிழ்முலை, வம்புவிசித் தியாத்த :] வம்பு விசித்து யாத்த முகிழ் முலை - கச்சை வலித்துக் கட்டின தாமரை முகை போலும் முலையினையும்,

150. வாங்கு சாய் நுசுப்பின் - வளையும் நுடங்கும் இடையினையும்,

---

[1] "அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை" (மதுரைக். 316) என்பதன் அடிக் குறிப்பைப் பார்க்க.

[2] விளக்கம் - மோதிரம்; மதுரைக். 719,ந.

[3] "வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்" (சிலப். 6 : 95) என் பதற்கு, 'முடக்கு மோதிரம்' என்று அரும்பதவுரையாசிரியரும், நெளியென்று அடியார்க்கு நல்லாரும் எழுதுவர்.

[4] துகில் — ஆடை வகையுள் ஒன்று; "புடைவீ ழந்துகில்" (181) என்பர் பின்னும்; "வாழ்வரே, பட்டுந் துகிலு முடுத்து" (நாலடி. 264)

[5] "தேவு தெண்கட லமிழ்துகொண் டநங்கவேள் செய்த, ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்" (கம்ப. காட்சி. 11) என்பது இதிலிருந்து எழுந்து வளர்ந்த கருத்தென்று தோற்று கின்றது.

[6] "மாவின், அவிர்தளிர் புரைய மேனியர்" (முருகு. 143 - 4) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

151. மெல் இயல் மகளிர் - மெத்தென்ற தன்மையினையும் உடைய சேடியர்,

நல் அடி வருட - [1]துயில் உண்டாகுமோவென்று அடியைத் தடவ மேனி(148) முதலியவற்றை உடைய மகளிர்(151) புனைவில் (147) நல்லடி வருடவென்க.

152 - 3. நரை விராவுற்ற நறு மெல் கூந்தல் செ முக செவிலியர் கை மிக குழீஇ - நரை கலத்தலுற்ற நறிய மெல்லிய மயிரினை உடைய சிவந்த முகத்தை உடைய செவிலித்தாயர் இவள் ஆற்ற ஒழுக்கம் மிகுகையினாலே திரண்டு,

154. குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி - [2]பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லி,

''ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே'' (தொல். செய். சூ. 175) என்பது இலக்கணம்.

155 - 6. இன்னே வருகுவர் இன் துணையோர் என உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிக கலுழ்ந்து - இப்பொழுதே வருகுவர் நினக்கு இனிய துணையாம் தன்மையை உடையோர் என்று அவள் மனத்துக்கு இனிய வார்த்தைகளைக் கூறவும் அதற்குப் பொருந்தாளாய் மிகக் கலங்கி,

157 - 8. [நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால், ஊறு வறு முலை கொளீஇய :] ஊறு வறுமுலை கொளீஇய நுண் சேறு வழித்த நோன் நிலை திரள் கால் - குடங்களைக் கடைந்து தைத்த சாதிலிங்கம் பூசின வலிய நிலையினை உடைய மேற்கட்டியில் திரண்ட கால்களை,

---

[1] துயிலுதற்குக் காலை வருடல் மரபு; இது, ''மழையார் சாரற் செம்புனல் வந்தங் கடிவருடக், கழையார் கரும்பு கண்வளர் சோலைக் கலிக்காழி'', ''தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளருந் திருவை யாலே'' (திருஞா. தே.) என்ற திருவாக்குக்களிற் குறிப்பிக்கப் பெற்றிருத்தல் காண்க.

[2] ''பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும், பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்'' (தொல். செய். சூ. 173) என்பதும், 'பொருளொடு.......பொய்ம்மொழியானும் - பொருண்முறை யின்றிப் பொய்யாகத் தொடர்ந்து கூறுவன; அவை ஓர் யானையும் குதிரையும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக் கியையாப் பொருள் பட்டதோர் தொடர் நிலையாய் ஒருவனுழை யொருவன் கற்று வரலாற்று முறைமையான் வருகின்றன; பொருளொடு........நகைமொழியானும் - பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற் கேதுவாகும் தொடர்நிலையானும்' (ந.) என்ற அதனுரையும் இத்தொடர்களின் பொருளை விளக்கும்.

ஊருறு வறுமுலை : குடத்திற்கு வெளிப்படை; [1]முலைபோறலின் முலையென்றார்.

158. கால் திருத்தி - கட்டிற்கால்களுக்கு அருகாக நிற்கும்படி பண்ணி அதனிடத்தே கட்டி,

159. [புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசை :] மெழுகு செய் படம் மிசை புதுவது இயன்ற - மெழுகு வழித்த மேற்கட்டியின் மேலே புதிதாக எழுதின,

160 - 61. [திண்ணிலை மருப்பி னாடுதலை யாக, விண்ணூர்பு திரிதரும் :]

விண் - ஆகாயத்திடத்தே,

திண் நிலை மருப்பின் ஆடு தலையாக ஊர்பு திரிதரும் - திண்ணிய நிலையினை உடைய கொம்பினை உடைய மேடராசிமுதலாக ஏனை இராசிகளில் சென்று திரியும்,

161 - 2. வீங்கு செலல் மண்டிலத்து முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய - மிக்க செலவினை உடைய ஞாயிற்றோடே மாறுபாடு மிகுந்த தலைமையினை உடைய திங்களோடு [2]திரியாமல் நின்ற,

163. உரோகிணி நினைவனள் நோக்கி - [3]உரோகிணியைப் போல யாமும் பிரிவின்றி இருத்தலைப் பெற்றிலேமே யென்று நினைத்து அவற்றைப் பார்த்து,

ஞாயிறு, ஈண்டெழுதியதன்று; திங்களிற்கு அடை கூறிற்று.

நெடிது உயிரா - நெட்டுயிர்ப்புக்கொண்டு,

164 - 5. [மாயித ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி, செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியா :] மா இதழ் வீழ் கண் கடை மலிந்து ஏந்திய அரி பனி சில செ விரல் சேர்த்தி தெறியா - நீலப்பூ விரும்பினகண் தன் கடைக்கண்ணிடத்தே வர மிக்குச் சுமந்த ஐதாகிய நீரிற் சிலவற்றைச் சிவந்த விரலைச் சேர்த்தித் தெறித்து,

என்றது, மிகவும் அழாமல் மல்கின நீரைத் தெறித்தென்றார்.

166. புலம்பொடு வதியும் நலம் கிளர் அரிவைக்கு - தனிமை யோடு கிடக்கும் அன்பு மிகுகின்ற அரிவைக்கு,

அரசன் பிரிகையினாலே, நெடுவீழ்தாழ (137) நூல்யாத்து (142) மாசூர்ந்த கலிங்கத்தோடே (146) ஓதியினையும் (138) காதினையும் (140) விளக்கத்தினையும் உடையளாய் (144) மிகக் கலங்கி(156) உரோகிணி நினைவனளாக்கி நெடிதுயிர்த்துத் (163) தெறித்து (165) மகளிர் நல்

---

[1] நெடுநல். 120 - 21,

[2] (பி - ம்.) 'தெரியாமனின்ற'

[3] "உறுவுகொ ளுரோணியோ டுடனிலை புரிந்த, மறுவுடை மண்டிலக் கடவுளை" (பெருங். 2. 9 : 167 - 8)

அடி வருட (151) ஓவியம் கடுப்ப (147) வதியுமரிவைக்கு (166) என வினை முடிக்க.

166-7. அரிவைக்கு இன்னா அரு படர் தீர - அரிவைக்குத் தீதாயிருக்கின்ற ஆற்றுதற்கரிய நினைவு தீரும்படி,

பாசறை தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிக தில் (168) - வேந்தன் பாசறையிடத்திருந்து பொருகின்ற போர்த் தொழில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்பொழுதே முடிவ தாக; இஃது எனக்கு விருப்பம் என முடிக்க.

168. அம்ம – கேட்பாயாக;

இஃது, இவள் வருத்தம் மிகுதி தீரவேண்டிக் கொற்றவையை நோக்கிப் பரவுகின்றவள் கூற்றாயிற்று, கேட்பாயாக என்றது கொற்றவையை நோக்கி. முடிகவென்ற வியங்கோள், வேண்டு கோடற் பொருண்மைக்கண் வந்தது. தில் விழைவின்கண் வந்தது.

168-71. மின் அவிர் ஓடையொடு பொலிந்த வினை நவில் யானை நீள் திரள் தட கை நிலமிசை புரள களிறு களம் படுத்த பெரு செய் ஆடவர் - ஒளி விளங்குகின்ற பட்டத்தோடே பொலிவுபெற்ற போர்த்தொழிலைப் பயின்ற யானையினுடைய நீண்ட திரண்ட பெருமையினை உடைய கை அற்று நிலத்தே புரளும்படி யானையை முன்னர்க் கொன்ற பெரிய செயலை உடைய வீரருடைய,

செயலென்னும் வினைப்பெயர் செய்யென முதனிலையாய் நின்றது.

172. ஒளிறு வாள் [1]விழு புண் காணிய புறம் போந்து - விளங்கும் வாளிறாற் போழ்ந்த சீரிய புண்ணைக் கண்டு பரிகரித் தற்குத் தான் இருக்கின்ற இடத்திற்குப் புறம்பே போந்து திரிதரும் வேந்தன் (187) என்க.

173. [2]வடந்தை தண் வளி - வடதிசைக் கண்ணதாகிய குளிர்ந்த காற்று,

என்றது வாடையை.

173-5. [எறிதொறு நுடங்கித், தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல், பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ரழல:] நல் பல் பாண்டில் விளக்கில் பருஉ சுடர் எறிதொறும் நுடங்கி தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய அழல - நன்றாகிய பலகால் விளக்கில் எரிகின்ற பருத்த கொழுந்து வாடைக்காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்கு நோக்கி எழுந்து சாய்ந்த தலையினையுடையவாய் எரிய,

விளக்கு : ஆகுபெயர்.

---

[1] "விழுப்புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண்". (குறள், 776, பரிமேல்.)

[2] இப்பாட்டிற்கு, "வடந்தைத் தண்வளி" என்னும் இப்பகுதி உயிர் போன்றது.

176 - 7. வேம்பு தலை யாத்த நோன் காழ் எஃகமொடு முன்னோன் முறை முறை காட்ட - வேப்பந் தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன்செல்கின்ற சேனாபதி புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்ட,

177 - 80. பின்னர் மணிபுறத்து இட்ட மா தாள் பிடியொடு பருமம் களையா பாய் பரி கலி மா இரு சேறு தெருவின் எறி துளி விதிர்ப்ப - பின்னுகை மணிகளைத் தன்னிடத்தே இட்ட பெருமையை உடைய தாளினை உடைய குசையோடே பக்கரை வாங்காத பாய்ந்து செல்லும் செலவினை உடைய செருக்கின குதிரைகள் கரிய சேற்றை உடைய தெருவிலே தம் மேலே வீசும் துளிகளை உதற,

தாளென்றது வாய்க்கருவியிற் கோத்து முடியும் குசையிற் றலையை.

181. புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ - இடத்தோளி னின்றும் நழுவி வீழ்ந்த அழகினை உடைய ஒலியலை இடப்பக்கத்தே அணைத்துக்கொண்டு,

182-3. வாள் தோள் கோத்த வன்கண் காளை சுவல் மிசை அமைத்த கையன் - வாளைத் தோளிலே கோத்த தறு கண்மையை உடைய வாளெடுப்பான் தோளிலே வைத்த வலக்கையையுடையனாய்,

183. முகன் அமர்ந்து - [1]புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகம் பொருந்தி,

184. நூல் கால் யாத்த மாலை வெண்குடை – நூலாலே சட்டத்தே கட்டின முத்துமாலையினையுடைய கொற்றக்குடை,

185. தவ்வென்று அசைஇ தா துளி மறைப்ப – தவ்வென்னும் ஓசைபட்டு அசைந்து பரக்கின்ற துளியைக் கரக்க,

தாழ்துளியும் பாடம்.

186 – 7. [2]நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான் சிலரொடு

---

[1] அரசன் முகம் பொருந்துவதால் வீரர் அகமலர்வாரென்ற இச் செய்தியோடு, "தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும், பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன் - விழுச்சிறப்பிற், சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன, புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்" (தொல். புறத். சூ. 8, ந. மேற்.) என்ற வெண்பாவின் கருத்து ஒப்புநோக்கற்குரியது.

[2] "நள்ளென் மாலை" (புறநா. 149: 1 - 2) என்பதற்கு, 'நள் ளென்னும் ஓசையை உடைய மாலைப் பொழுது' என்று அதன் உரை யாசிரியரும், "நள்ளிருள் யாமத்து" (சிலப். 15 : 105) என்பதன் பதவுரையில், 'செறிந்த இருளை உடைய வைகறை யாமத்தே' எனவும் அதன் விசேடவுரையில், 'நள்: நளியென்னும் உரிச்சொல் ஈறுதிரிபு; செறிவின் கண் வந்தது' எனவும் அடியார்க்கு நல்லாரும் எழுதுவர்.

திரிதரும் வேந்தன் - நள்ளென்னும் ஓசையையுடைய நடு வியாமத்தும் பள்ளிகொள்ளானாய்ச் சில வீரரோடே புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச் செய்யும் அரசன்,

188. பலரொடு முரணிய பாசறை. தொழில் – சேரன் செம்பியன் முதலிய [1]எழுவரோடே மாறுபட்டுப் பொருகின்ற பாசறையிடத்துப் போர்த்தொழில்.

புண் காணிய புறம் போந்து (172) சுடரமுலக் (175) காட்ட (177) விதிர்ப்பத் (180) தழீஇக் (181) கையனாய் அமர்ந்து (183) மறைப்பப் (185) பள்ளி கொள்ளானாய்த் (186) திரியும் வேந்தன் (187) என்க.

அம்ம (168) வானம் கார்காலத்து மழையைப் பெய்ததாகப் (2) பின்னர் நிகழ்ந்தபொழுது கூதிர்க்காலமாய் நிலைபெற்றது (72); அக்கூதிர்க்காலத்து நடுவியாமத்தே (75) வாயிலினையும் (88) முன் கடையினையும் (92) முற்றத்தினையும் (90) சிறப்பினையுமுடைய (89) கோயில் (100) வரைப்புக்களில் (107) காண்பின் நல்லில்லிற் (114) பாண்டிலிற் (123) சேக்கையிலே (135) வதியும் அரிவைக்குப் (166) படர் தீரும்படி (167) வேந்தன் (187) பலரொடு முரணிய பாசறைத் தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிவதாக; இஃது எனக்கு விருப்பம் (168) எனக் கொற்றவையைப் பரவிற்றாக வினை முடிக்க.

இப்பாட்டுத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின், இப்போர் வஞ்சியாகலின், வஞ்சிக்குக் கொற்றவை நிலையுண்மையின் (பு. வெ. 40), கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவுதல் கூறினார். அது பாலைத் திணைக்கு ஏற்றலின்.

பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா

[2]வாடை நலிய வடிக்கண்ணு[3]டோணசைஇ
ஓடை மழகளிற்று னுள்ளான்கொல்—கோடல்
முகையோ டலமர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.

---

[1] எழுவர் பெயரையும் மதுரைக் காஞ்சி, 55 - 6-ஆம் அடிகளின் அடிக்குறிப்புகளால் உணரலாகும்.

[2] இவ்வெண்பா, புறப்பொருள் வெண்பா மாலையில் வாடைப் பாசறை என்னும் துறைக்கு (170) உதாரணமாகக் காட்டிய செய்யுள்.

[3] (பி - ம்.) 'தோணசை'

எட்டாவது

†குறிஞ்சிப் பாட்டு

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுதல்
ஒலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்
அகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்

---

† இது பெருங்குறிஞ்சியெனவும் வழங்கும். ''எருவை யென்பது, 'எருவை.........கருவிளை' எனக் கபிலர் பாடிய பெருங்குறிஞ்சியினும் வந்தது'' (பரி. 19 : 77, பரிமேல்.); ''கபிலர் பாடிய பெருங்குறிஞ்சி யில் வரையின்றிப் பூ மயங்கியவாறு காண்க'' (தொல். அகத். சூ. 19, ந.).

1. *அன்னாய் வாழிவேண் டன்னை* : ஐங். 201 - 10; அகநா. 48 : 1, 68 : 1; ''*அன்னை வாழிவேண் டன்னை*'' (ஐங். 101 – 10)

வாழிவேண் டன்னை : குறுந். 321 : 8.

3. *இழைநெகிழ்த்த நோய்*:''*புனையிழைநெகிழ்த்த புலம்புகொளவலமொடு*'' (நற். 348 : 7); ''*வீங்கிழை நெகிழ*'' (குறுந். 358 : 1); ''*இசைநெகிழ் செல்லல்*'', ''*இழைநிலை நெகிழ*'', ''*இழை நெகிழ் செல்ல லுறீஇ*'', ''*வில்லிழை நெகிழ*'' (ஐங். 25 : 4, 310 : 2, 315 : 3, 318 : 2); ''*பாசிழை நெகிழ*'' (பதிற். 68 : 15); ''*திருந் திழை நெகிழ்ந்தன தடமென் றோளே*'', ''*வீங்கிழை நெகிழச் சாஅய்ச் செல்லலொடு*'', ''*திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய*'', ''*திருந்திழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅய்*'' (அகநா. 206 : 16, 251 : 3, 255 : 17, 387 : 1)

5. ''*பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்*'' (சிலப். 24 : 20)

6. *வேறு பல்லுருவிற் கடவுள்* : ''*வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்*'' (முருகு. 282);''*மனக்கோ ளினக்கென வடிவுவே றிலையே*'' (பரி. 4 : 56)

றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவும்
உட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை
எளிய வென்னர் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
இருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுருலிற் பழியு முண்டோ
ஆற்றின் வாரா ராயினு மாற்ற
ஏனையுல கத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றுஞச் சிறுமைய ளிவளுந் தேம்பும்
இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
இருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்

---

8. எய்யாமை என்னும் உரிச்சொல் அறியாமை என்னும் குறிப்புணர்த்தும் என்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 44, இளம். சே. தெய்வச். ந; இ. வி. சூ. 290.

9. "தொல்கவின் றொலையத் தோணலஞ் சாஅய்" (நற். 14:1); "தொல்கவின் றொலைந்து தோணலஞ் சாஅய்" (குறுந். 381 : 1), "மென்றோ ணெகிழவும்.........பொன்போல் விறற்கவின் றொலைத்த" (ஐங். 230 : 3 - 4); "நெகிழ்ந்த தோளே... .....மேனி தொன்னலந் தொலைய" (அகநா. 270 : 4 - 10)

13 - 4. "பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும்" (மூதுரை; 18)

23. (பி - ம்.) 'வாராதாயினும்'

வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணு
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
எற்பட வருதிய ரெனநீ விடுத்தலின்
கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி

---

31. (பி - ம்.) 'வண்ணமுந் தொடையும்'

வண்ணமென்பது இயற்சொலென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். புறத். சூ. 27, ந.

35. "வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகல், மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி" (கலித். 50 : 1 - 2)

35 - 6. முத்தார் யானை மருப்பு : முருகு. 304 - 5; மலைபடு. 517 - 8.

37. "துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார் பிறைஞ்சித், தோடலைக் கொண்டன வேனல்" (நற். 206 : 1 - 2)

35 - 8. தினைக்கதிர்க்கு யானைக்கை உவமை : "பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குவவுக்குர லேனல்" (மலைபடு. 107 - 8); "பூம்பொறி யொருத்த லேந்துகை கடுப்பத், தோடுதலை வாங்கிய நீடுகுரற் பைந்தினை", "ஏனல், இரும்பிடித் தடக்கையிற் றடைஇய,பெரும்புனம்", "முறஞ்செவி யானைத் தடக்கையிற் றடைஇ, இறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை" (நற். 317 : 2 – 3, 344 : 2 – 3, 376 : 1 – 2); "பைந்தாட் செந்தினை மடப்பிடித் தடக்கை யன்ன.........குரல்", "பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்" (குறுந். 198 : 2 - 4, 360 : 5); "உறங்குபிடித் தடக்கை யொருங்குசிரைத் தவைபோல், இறங்குகுர லிறடி" (பெருங். 1. 49 : 103 - 4)

40. (பி - ம்.) 'மீமிசை'

"கலிகெழு மீமிசைச் சேணோன்" (சிலப். 25 : 30)

43 - 4. தழல் முதலிய மூன்றும் கிளி கடிதல் : "கட்டு வரிவிற் கருங்குறவர் கைத்தொழிலா, விட்ட விதணத் திருந்தெம் பெரு

உரவுக்கதிர் தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய்
ஒன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்

மாட்டி, தட்டை குளிர்தழலைத் தாங்கித் தினைப்புனத்தைக், கிட்ட லுரு வண்ணங் கிளிமுதற்புள் ளோட்டினளே'' ('கந்த. வள்ளி. 52)

தழலும் தட்டையும் :''தழலுந் தட்டையு முறியுந் தந்து'' (குறுந். 223 : 4); ''தழலை வாங்கியும் தட்டை யோப்பியும்,………குறமகள் காக்கு மேனல்'' (அகநா. 188 : 11 - 3)

தட்டை : ''கண்விடு புடையூத் தட்டை கவினழிந்து'' (மதுரைக். 305); ''ஒலிகழைத் தட்டை புடையுநர்'' (மலைபடு. 328); ''சிறுதினைப் பெருங்குரல், செவ்வாய்ப் பைங்கிளி கவர………வெதிர் புனை தட்டையேன்'', ''தட்டையும் புடைத்தனை கவணையுந் தொடுக் கென'' (நற். 147 : 2 - 8, 206 : 5); ''குறமகள்………… தட்டை யின், ஐவனச் சிறுகிளி கடியு நாட'' (ஐங். 285 : 1 - 3); ''சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண், குளிர்கொ டட்டை மதனில புடையா'', ''அமையறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டையின்,………சிறுதினை கவர்தலிற் கிளையமல், பெருவரை யடுக்கத்துக் குரீஇ யோப்பி'' (அகநா. 32 : 5 - 6, 388 : 2 - 5); ''தோகையுங் கிளியுந் தொக் கவை யகலத்……தடந்தோ ளசையத் தட்டை புடைத்து'' (பெருங். 2. 12 : 118 - 20)

குளிர் : ''சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ, குளிர்படு கையள்'' (நற். 306. 2 - 3); ''கலித்த வேனற், படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே'', ''ஏனல், உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே'' (குறுந். 291 : 1 - 2, 360 : 5 - 6)

குளிரும் குளிரியும் ஒக்குமெனக் கூறி இவற்றை மேற்கோள் காட்டுவர்; தஞ்சை. 73, உரை.

45. ''உரிமிமிர்ந் தன்ன வுருப்பவி ரமயத்து'' (குறுந். 154 : 2)

46. விசும்பாடு பறவை : ''விசும்பா டன்னம்'' (குறுந். 205 : 2)

47. ''கடல்குறை படுத்தநீர்'' (பரி. 20 : 1); ''நெடுங்கடலும்… ………தடிந்தெழிலி, தானல்கா தாகி விடின்'' (குறள், 17)

40 - 50. மேகமுழக்கத்திற்கு முரசின் ஒலி : முருகு. 121, அடிக். 51 - 3. ''செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி'' (ஐந். ஐம். 1); ''கண்ணொளி ரெஃகிற் கடிய மின்னி'' (பரி. 22 : 7)

மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
அண்ணா னெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
அவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
உள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளிதழ்
ஒண்செங் காந்த ளாம்ப லனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
உரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிளம்
எரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடசம்
எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்

---

55. அருவிக்குத் துகில் உவமை : முருகு. 296, அடிக்குறிப்.

57. சுனைக்குப் பளிங்கு உவமை : "மணிகண் டன்ன துணி கயம்" (அகநா. 56 : 2); "பளிங்குவகுத் தன்ன தீநீர்" (புறநா. 150 : 27); "சூழ்ந்த பேரொளி துளும்பிய நிலனைநீ ரென்னுத், தாழ்ந்த வந்துகி லிடவயிற் றழீஇயினன் பளிங்கு, போழ்ந்தி யற்றிய நில னெனப் பூம்புன லிடைப்போய், வீழ்ந்த னன்பெரு வேத்தவை முகிழ் நகை விளைப்ப" (பாகவதம், 10 : சிசுபாலனைக் கொன்ற. 118)

58. நளிபடு சிலம்பு : "நளிமலைச் சிலம்பு" (நெடுநல். 100) என் பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

60. துவரி : நற். 96 : 6. பரிபாடல் 10 : 80

61. "நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்" (குறுந். 354)

64. செங்கொடு வேரி : பெருங். 2. 12 : 25.

68. இவ்வடி, எருவை, மலர்விசேட மென்பதற்கு மேற்கோள்; பரி. 19 : 77, பரிமேல்.

போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகம்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
தாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்
ஈங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
அடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரம்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
ஆரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்
அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்

---

75. பெருந்தண் சண்பகம் : முருகு. 27.

77. கல்லிவர் முல்லை : "முல்லை தாய கல்லதர்ச் சிறுநெறி" (நற். 343 : 1); "முல்லை யூர்ந்த கல்லுயர் பேறி" (குறுந். 275 : 1); "கல்லிவர் முல்லைக் களிவண்டு" (யா - வி. சூ. 43, மேற்.)

80. முட்டாட்டாமரை:முருகு. 73; சிறுபாண். 183, அடிக்குறிப்.

82. சிறுசெங்குரலி : பெருங். 2. 12 : 29.

84. கட்கமழ் நெய்தல் :"கட்கமழ் நெய்த லூதி" (முருகு. 754); "கட்கமழு நறுநெய்தல்" (மதுரைக். 250)

87. (பி - ம்.) 'அடம்பமர்'

அடும்பு : "அடும்பிவ ரணியெக்க ராடிநீ தணந்தக்காற், கொடுங் குழை" (கலித். 132 : 16 - 7); "படும்புலால் பார்த்தும் பகர்தும் • அடும்பெலாம்" (திணைமாலை. 51)

96. (பி - ம்.) 'பாரம்புழகுடன்'

மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
எரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
ஈரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
அணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய

புழகு : *"அகன்றலைப் புழகும்"* (பெருங். 2. 12 : 27); *"அழகா வென்றிப் புழகா"* (திருவால. 36 : 12.)

62 - 97. *இவ்வடிகளில் குறிஞ்சி நிலத்திற்கும் கூதிர்க் காலத்திற்கும் யாமத்திற்குமுரிய பூக்கள் மயங்கி வந்தமை, "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்"* (தொல். அகத். சூ. 19) என்பதனால் அமையும்.

100. *வள்ளுயிர்த் தெள்விளி : "வள்ளுயிர்ப் பேர்யாழ்"* (மலைபடு. 37)

101. (பி - ம்.) *'பரியா'*

105 - 6. குறுந். 214.

109. *"முன்கை சூழ்ந்த, துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தி"* (பெரிய. தடுத்தாட். 16)

110 - 11. *வண்டின் ஓசைக்கு யாழோசை : "நரம்பி னிம்மென விமிரு மாதர் வண்டு"* (குறிஞ்சிப் : 147 - 8); பொருந. 211, அடிக் குறிப்பையும், முல்லைப் பாட்டு, 8-ஆம் அடியின் அடிக்குறிப்பையும் பார்க்க; *"அரவ வண்டின மார்த்துட னியாழ்செயும்", "இன வண் டியாழ்செய", "பல்வண் டியாழ்செய"* (சிலப். 12 : *"நாக நாறு"*, 26 : 112, 27 : 194)

113 - 4. *சினையவுஞ் சுனையவும்......மலர் : "சினையவுஞ் சுனையவு நாடினர் கொயல்வேண்டா"* (கலித். 28 : 1 - 2)

தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலேச்சிப்
பைங்காற் பித்திகத் தாயிதழ் மலரி
அந்தொடை யொருகாழ் வளை இச் செந்தீ
ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
அந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
இயலணிப் பொலிந்த வீகை வான்கழல்
துயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வேல் லிளைஞரின்
உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும்வெகுளும்
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியாம்
இடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெம்
அலமர லாயிடை வெரூஉத லஞ்சி

118. ஒரு காழ்: ''முல்லை யொருகாழும்... ..கூந்தலுட் பெய்து'' (கலித். 115 : 5 - 6); ''ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே'' (புறநா : 291 : 8)

118 - 9. அசோகம்பூவிற்கு நெருப்பு : ''செந்தீ, ஒண்பூம் பிண்டி'' (மதுரைக். 700 - 701)

அசோகந் தளிரைக் காதிற் செருகல் : முருகு. 31, அடிக்குறிப்.

128. மு. மலைபடு. 59.

முனைபாழ்படுக்கும் : ''முனையகன் பெரும்பா ழாக'' (பதிற். 25 : 9) ; ''முனை பாழ்பட்ட வாங்கண்'', ''முனைபா ழாக'' (அகநா. 247 : 8, 349 : 6)

129 - 31. நாய்க்கு வீரர் : பெரும்பாண். 138 - 40, ந. அடிக் குறிப்பைப் பார்க்க.

132. (பி - ம்.) 'இளையாக்'

135 - 6. குறுந். 74.

மெல்லிய வினிய மேவரக் கிளந்தெம்
ஐம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
அசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரும்
மாதர் வண்டொடு சுரும்புநயத் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெம்
சொல்லற் பாணி நின்றன னாக
இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோண் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனு

138. ''மெல்லிய வினிய மேவரு தகுந, விவைமொழி யாமெனச் சொல்லினும்'' (குறுந். 306 : 1 – 2)

139. ''நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன, ஐவகை பாராட்டி னுய்மற் றெங்கூந்தல்'' (கலித். 22 : 12 - 3)

140. அவ்வாங்குந்தி : அகநா. 390 : 10.

130 - 42. இவ்வடிகள், தலைவன் நாய் காத்தவாற்றிற்கு மேற்கோள் ; தொல். பொருளியல், சூ. 13, ந.

146. சிறுபாண். 36 ; ''நைவளம் பூத்த நரம்பியை சீர்ப் பொய் வளம், பூத்தன பாணரின் பாட்டு'' (பரி. 18 : 20 – 21)

147 – 8. வண்டி னோசைக்கு யாழ் நரம்பினொலி : குறிஞ்சிப். 110, அடிக்குறிப், 149. (பி. – ம்.) 'ததர்சினை'.

148 - 50. பெருங். 2. 12 : 141 - 7.

152. இவ்வடி, ஆகவென்பது பிரிவிலசை நிலையாய் நிற்றற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 32, ந.

155. தேம்பிழி தேறல் : பெருங். 2. 2 : 177.

154 - 7. அகநா. 348 : 7 – 10.

தரவுற ழுஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடற்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
உய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோல்
உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்

---

158. *வில்லிற்கு அரவு உவமை: ''விடுபொறி யரவென விளங்கு வெஞ்சிலை'', ''அரவின் றேற்றமே போலுஞ் சிலைகளும்'' (சீவக. 1850, 2158)*

160. *கானங் கல்லென : ''கானங். கல்லென் றிரட்ட''* (குறிஞ்சிப். 227 - 8)

161. பெரும்பாண். 166, *அடிக்குறிப்.*

165. *யானைக்குக் கூற்றுவன் உவமை : ''கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்........வேழம்''* (முருகு. 81 - 2) என்பதன் *அடிக்குறிப்பைப் பார்க்க.*

164 – 5. *''நெடுநல் யானை, மையலங் கடாஅஞ் செருக்கி மதஞ் சிறந்து'' (அகநா. 307 : 7 – 8)*

162 - 5. *யானை முழக்கிற்கு இடி உவமை :* பரி. 8 : 17 – 8 ; அகநா. 144 : 12 - 3 ; புறநா. 81 : 1 – 2; பு. வெ. 37, 289.

167. (பி - ம்.) *'வளை தெளிர்ப்ப'*

169. *''சூருறு மஞ்ஞையிற் சோர்ந்த கூந்தலர்,.........அதிர் வனர் நடுங்கி''* (பெருங். 1. 45 : 22 – 4)

170. *உடுவுறும் பகழி : ''உடுவுறு கணையிற் போகி''* (அகநா. 292 ; 12) ; உடு - சிறகு; சீவக. 2191, ந.

170 – 71. *''செங்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து, கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்''* (தொல். செய். சூ. 95, பேர். மேற்.)

புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள்
அணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
அடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
அஞ்சி லோதி யசையல் யாவதும்
அஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை

---

172. *புண்ணுமிழ் குருதி* : பதிற். 11 : 8.

பாய்தல், பரத்தலென்னும் குறிப்புப் பொருண்மையை **உணர்த்து***மென்பதற்கு இவ்வடி மேற்கோள்;* தொல். *உரி.* சூ. 63, ந; இ - வி. சூ. 281, உரை ; *'புண்ணுமிழ் குருதிப் புனல் பாய்ந்து' என்ற பாடத்துடன், மேற்கோள் காட்டுவர் ;* தொல். *உரி.* சூ. 64; இளம்.

175. முருகு. 245, *அடிக்குறிப்.*

176. (பி - ம்.) *'திண்ணிலை'*

177. (பி – ம்.) *'துணையமை மாலையிற்'*

176 - 7. சிறுபாண். 69, *அடிக்குறிப். "கடம்பு சூடிய கன்னி மாலைபோற், றொடர்ந்து கைவிடாத் தோழி மாரொடும்"* (சீவக. 990)

178 - 9. *"வாழை முழுமுத றுமிய......இழிதரு மருவி"* (முருகு. 307 - 16)

178 - 81. *"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலால், நீணக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினற், பூணக முறத்தழீஇப் போதந்தான்"* (கலித். 39 ; 1 - 4)

182. *நுதல் நீவுதல் :* நற். 28 : 2, 316 : 6 ; கலித். 21 : 6 , அகநா. 240 : 10 ; *"பெறுக நின்னை யானென, நறுநுத னீவிப் படர்தந் தோனே"* (தமிழ் நெறி. மேற்.)

160 - 83. *இவ்வடிகள். தலைவன் களிறு காத்தவாற்றிற்கும் புனலின் எடுத்தவாற்றிற்கும் மேற்கோள் ;* தொல். *பொருளியல்,* சூ. 13, ந.

நாணு முட்கு நண்ணுவழி யடைதர
ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
ஆக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
அரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்
தண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிறல்
உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை

---

184. *"அச்சமு நாணும்.....மிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"* (தொல். களவு. சூ. 8); *"உட்கு நாணு மொருங்குவந் தடைதர"*, *"உட்கு நாணு மொருங்குவந் தடைய"* (பெருங். 3. 6 : 87, 4. 13 : 100); *"உட்கும் நாணும் ஒருங்கு வருதலின்"* (சீவக. 731, ந.)

193 – 4. *ஆடுமகள் கயிறூர்தல் : "தனிக்கயிற்றிற் - போநீள், கழைக்கோதையர்"* (நள. சுயம். 148)

201 – 2. *"நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும், வரைகோ ளறியாச் சொன்றி"* (குறுந். 233 : 5 - 6)

202 – 3. பொருந. 66; சிறுபாண். 206, அடிக்குறிப்பு.

205. (பி - ம்.) *'வான்றுணை'*

நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணம்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றில்
ஓங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவலர்
ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
ஆம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி

---

206 - 7. "வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்" (குறள், 85)

212. களிறுதரு புணர்ச்சி; நம்பி. 177, உரை.

217 - 8. ஆன்கணம் மாலையில் கன்றையுள்ளிப் புகுதல் : குறுந். 108 : 2; கலித். 119 : 9 - 10; அகநா. 14 : 9 - 12 ; மணி. 5 : 132.

219. குறுந். 160 : 1 - 2.

221. "நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த, மேய்மணி விளக்கின்" (அகநா. 72 : 14 - 5)

222. ஆம்பலங் தீங்குழல் : ஐங். 215 : 4; சிலப். ஆய்ச்சியர்.

217 - 22. "அன்னாய் வாழிவேண் டன்னை யென்னுங் குறிஞ்சிப் பாட்டினுள், 'மான்கண மரமுதற் றெவிட்ட......தெள்விளி பயிற்ற' என்புழி முல்லைக்குரிய கருப் பொருளாகிய ஆன்கணமும் பாம்பும் கோவலரும் ஆம்பற் குழலும் அதற்குரிய முதற் பொருளாகிய மாலையும் நெய்தற்குரிய கருப்பொருளாகிய அன்றிலும் பனையும் வந்தவாறு கண்டுகொள்க" (நம்பி. ஒழிபு. சூ. 42, உரை)

223. ஆம்பலாயிதழ் கூம்புவிட : புறநா. 209 : 3, 383 : 7.

224. மதுரைக். 555 - 6, அடிக்குறிப்பு.

அந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானம்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னுள்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்றும்
இரவரன் மாலைய னேவரு தோறும்
காவலர் கடுகினுங் கதநாய் குரைப்பினும்

225. அந்தியந்தணர்அயர: "அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்" (புறநா. 2 : 22) ; "அந்தி யந்தணர் செந்தீப் பேண" (மணி. 5 : 133)

231. நேரிறை முன்கை : ஐங். 493 : 4.

232. நாடறி நன்மணம் : "பலரறி மணமவர் படுகுவர்" (சிலப். 24 : "வேலனுர்")

234. ஈர நன்மொழி : சிறுபாண். 93.

231 - 4. "எம்மூர் வியன்றுறை, நேரிறை முன்கை பற்றிச், சூரர மகளிரோ டுற்ற சூளே" (குறுந். 53 : 5 - 7)

235. "மடநா குடனுகச், செல்லு மழவிடைபோற் செம் மாந்து" (நள. சுயம். 156); கம்ப. பூக்கொய். 34.

238. "தலைநா ளன்ன பேணலன்" (நற். 332 : 8) ; "இன்றை யன்ன நட்பின்" (குறுந். 199 : 6, 385 : 6 - 7) ; "தண்டாக் காதலுந் தலைநாட் போன்மே" (அகநா. 332 : 15) ; "இன்றே போல்க நும் புணர்ச்சி" (புறநா. 58 : 28)

239. மாலை, இயல்பென்னும் குறிப்பை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள் ; தொல். உரி. சூ. 16, இளம். சே. ந; இ - வி. சூ. 290, உரை.

நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெருஅன் பெயரினு முனிய லுருஅன்
இளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅயிதழ் சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்
ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்குல்
அளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிரைதே ரரவமும்
ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்

---

240 - 41. நம்பி. சூ. 161.

242. தோளிற்றுயிலல் : "அரிவை தோளிணைத் துஞ்சி" (குறுந். 323 : 6) ; "வேயுறழ் மென்றோட் டுயில்பெறும்" (கலித். 104 : 24) ; "முருந்தேர் முறுவ லிளையோள், பெருந்தோ ளின்றுயில் கைவிடு கலனே" (அகநா. 193 : 13 - 4) ; "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின்" (குறள், 1103)

245. (பி - ம்.) 'திரிந்தன்றுமிலன்'

231 - 45. உண்மை செப்பற்கு இவ்வடிகள் மேற்கோள் ; தொல். பொருளியல், சூ. 13, ந.

247. "வண்டுபடு மலரிற் சாஅய்த், தமியேன் மன்ற வளியேன் யானே" (குறுந். 30 : 5 - 6)

250. "ஓரி முருங்கப் பீலி சாய, நன்மயில் வலைப்பட் டாங்கு" (குறுந். 244 : 5 - 6)

258. ஊழடி முட்டம் : பெருங். 1. 52 : 32.

259. பழு : குறுந். 180 : 1.

வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரக முடையவா லெனவே.

---

251 - 61. இவ்வடிகளுடன், "தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண், எம்பெருமான் வரும்வழி, எண்கும் வெண்கோட் டியானையும் அரவும் உருவமும் புலியும் வரையர மகளிரும் உடைத்து; மற்றும் தெய்வங்கள் வெளவும் வண்ணத்தன; ஏதம் நிகழ்வது கொல்லோவென வேறுபடும்" (இறை. சூ.29, உரை) என்பது ஒப்புநோக்கற்பாலது.

இதன் பொருள்

இதற்குக் குறிஞ்சி என்று பெயர் கூறினார், இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின்; அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவே கூறுதலானும் அப் பெயர் கூறினார். "அறத்தொடு நிற்குங் காலத் தன்றி, அறத்தியன் மரபில டோழி யென்ப" (தொல். பொருள். சூ. 12) என்பதனால், தோழி அறத்தொடு நிற்கும் காலம் வந்து செவிலிக்கு அறத்தொடு நின்றவழி அதற்கு இலக்கணம் கூறிய, "எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேதீடு தலைப்பா, டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ, அவ்வெழு வகைய தென்மனார் புலவர்"(தொல். பொருள். சூ, 13) என்னும் சூத்திரத்து ஏழனுள், கூறுதல் உசாதல் ஒழிந்த ஆறும் கூறி அறத்தொடு நிற்கின்றாள் என்றுணர்க,

1. அன்னாய் வாழி - தாயே வாழ்வாயாக;

[வேண்டன்னை :] அன்னை வேண்டு - தாயே யான் கூறுகின்ற வார்த்தையை விரும்புவாயாக;

1 – 12, [ஒண்ணுதல், ஒலிமென் கூந்தலென் றோழி மேனி, விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய், அகலு ளாங்க ணறியுநர் வினாயும், பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவுற, றெய்யா மையலை நீயும் வருந்துதி, நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும், புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவும், உட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்:]

ஒள் நுதல் (1) ஒலி மெல் கூந்தல் (2) விறல் (3) மேனி என் தோழி (2) உள் கரந்து உறையும் உய்யா அரு படர் (11) - ஒள்ளிய நுதலினையும் தழைக்கும் மெல்லிய மயிரினையும் பிறர் நிறத்தினை வென்ற வெற்றியினையுடைய நிறத்தினையும் உடைய என்னுடைய

தோழி தன் மனத்துள்ளே மறைந்திருக்கும் தன் உயிரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றுதற்கரிய நினைவு.

இழை நெகிழ்த்த வீவு அரு கடு நோய் (3) செப்பல் வன்மையின் யான் செறித்து (12) - தான் அணிந்த கலன்களை நெகிழப்பண்ணின, [1]மருந்துகளால் கெடுத்தற்கரிய கடிய நோய் நினக்குச் சொல்லுதற்கு எளிதன்றி வலிய தன்மையை உடைமையினாலே யான் அதனை என்னுள்ளே அடக்கி,

நல் கவின் தொலையவும் நறு தோள் நெகிழவும் (9) புள் பிறர் அறியவும் புலம்பு வந்து அலைப்பவும் (10) கடவலின் (12) - அவளுடைய நன்றாகிய அழகு கெடவும் நறிய தோள் மெலியவும் வளை கழலுதலைப் பிறர் அறியவும் தனிமை மேன்மேலே வந்து வருத்தவும் நினக்கு அறிவுறுமற் செலுத்துகையினாலே,

நீயும் (8) அலவுற்று (7) அகல் உள் ஆங்கண் அறியுநர் வினாய் (4) - நீயும் அலம்வந்து அகன்ற இடத்தையுடைய ஊரிடத்துக் [2]கட்டினாலும் [3]கழங்கினாலும் எண்ணியறிவாரை வினாவி அவர் தெய்வத்தான் வந்த வருத்தம் என்றலின்,

வினாயும் என்றவிடத்து உம்மையைப் பேணி (6) என்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவின் பல் கடவுள் (6) நறையும் விரையும் ஓச்சியும்(7) பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் (5) பேணியும் (6) - வேறுபட்ட வடிவினையுடைய பல தெய்வங்களைத் தூபங்களும் சந்தன முதலியனவும் கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்த பூக்களைச் சிதறியும் வழிபட்டும் அதனால் தீராமையின்,

---

[1] "மருந்துபிறி தின்மைநற் கறிந்தனை சென்மே" (நற். 247 : 9); "மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே" (குறுந். 68 : 4); "பிரிந்தோர் பெயர்வுக் கிரங்கி, மருந்துபிறி தின்மையி னிருந்து வினை யிலனே" (அகநா. 147 : 13 - 4); "மருந்திற் றீராது......நீதர வந்த நிறையழி துயரம்" (நம்பி. சூ. 127; மேற்.)

[2]கட்டு - சிறுமுறத்தில் பரப்பிய நெல்லில் பார்க்கும் ஒருவகைக் குறி; இங்ஙனம் குறிபார்ப்பவள், கட்டுவிச்சி யெனப்படுவாள்; இதனைத் திருக்கோவையார், 285 - ஆம் செய்யுளாலும் அதன் உரையாலும், "கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா, வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாப், பேரா யிரமுடையா னென்றாள்" (20 - 22) என்னும் சிறிய திருமடலாலும், பெருங். 1.37 : 232 - ஆம் அடி முதலியவற்றாலும் உணர்க.

[3] கழங்கு-கழற்கொடிக்காய்.கட்டினாலும் கழங்கினாலும்எண்ணியறிவார், கட்டுவிச்சியும் வேலனும்; தொல். களவு. சூ. 24, ந.

பேணியுமென்னும் உம்மை சிறப்பு; ஏனைய எண்ணும்மை.

எய்யா மையலை வருந்துதி (8) - இந்நோயை அறியாத மயக்கத்தை உடையையாய் வருந்தாநின்றாய்;

என் தோழி (2) படர் (11) இழை நெகிழ்த்த நோய் (3) நினக்குச் செப்பல் வன்மையின் யான் செறித்துத் (12) தொலையவும் நெகிழவும் (9) அறியவும் அலைப்பவும் (10) கடவலின் (12) நீயும் (8) அலவுற்று (7) விளைக் (4) கடவுளைப் பேணியும் (6) எய்யா மையலை உடையையாய் வருந்துதி (8) என முடிக்க.

13 - 4, [முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை, நேர் வருங் குறைய கலங்கெடிற் புணரும் :] அத்துணை முத்தினும் மணியினும் பொன்னினும் நேர் வரும் கலம் கெடின் புணரும் - அவ்வளவாகிய முத்தாலும் மாணிக்கத்தாலும் பொன்னாலும் பொருந்துதல் வரும் பூண் கெட்டவாயின் பின்னும் வந்து கூடும்; அதுபோலன்றி,

முத்து முதலியவற்றிற்குக் கூறிய இலக்கணங்களை அத்துணையென்றார்.

குறைய : அசை.

15 - 8. [சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல், ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை, எளியவென்னார் தொன்மருங் கறிஞர் :]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அற கழீஇ வயங்கு புகழ் அ நிலை நிறுத்தல் - தத்தங் குலத்திற்கேற்ற குணங்களின் அமைதியும் மேம்பாடும் [1]ஒழுக்கமும் பழைய தன்மை கெட்டால் பிறந்த அழுக்கைப் போம்படி கழுவி விளங்கும் புகழை முன்புபோல நிற்கும்படி நிறுத்தல்,

தொல் மருங்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னார் - பழையதாகிய நூலை அறிவார், குற்றமற்ற அறிவினையுடைய தெய்வ இருடிகளுக்கும் எளிய காரிய மென்னார்;

"ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" (தொல். கற்பு. சூ. 5) என்றாராகலின் ஐயர் தேவராகார்.

19 - 20. [மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தேரெந்தை யருங்கடி நீவி :]

நெடு தேர் எந்தை அரு கடி நீவி - நெடிய தேரையுடைய என் தந்தையது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப - இருமுது குரவரும் தமக்கு இயைந்தோர்க்குக் கொடுப்பேம் என்றிருக்கின்ற காதலும் எனது மடனும் சேரப் போக,

---

[1] "பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (குறள், 134)

21. [இருவே மாய்ந்த மன்ற லிதுவென :] இது இருவேம் ஆய்ந்த மன்றல் என-இந்த மணம் தலைவனும் யானும் [1]பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகிய நிலையால் பிறந்த கந்தருவ மணம் என்று,

22. நாம் அறிவுறுலின் பழியும் உண்டோ - நாம் யாய்க்கு அறிவுறுத்தலான் நமக்குப் புகழேயன்றி வருவதோர் பழியும் உண்டோ? அஃது இல்லை;

உம்மை : எச்சவும்மை. ஓகாரம் : எதிர்மறை, [2]இது மறைநூல் விதித்ததாகலின்.

23. ஆற்றின் வாரார் ஆயினும் - இங்ஙனம் அறத்தொடு நின்ற பின் தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்திலராயினும்,

ஆற்ற - நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

24. [ஏனை யுலகத்து மியைவதா னமக்கென :] நமக்கு ஏனை உலகத்தும் இயையவதால் என - நமக்கு [3]மறு பிறப்பினும் இக் கூட்டம் கூடுவதொன்றாயிருந்தது எனக் கூறி,

25 - 6. [மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றானச் சிறுமைய ளிவளுந் தேம்பும் ;] ஆனு சிறுமையள் மான் அமர் நோக்கம் கலங்கி கையற்று இவளும் தேம்பும் - ஆற்றும் தன்மைத்தல்லாத நோயினை உடையளாய் மான் நோக்கம் அமர்ந்த நோக்கமின்றி மையல் நோக்கம் கொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளும் மெலியும்;

இவளும்(26), கலங்கி (25), கெடிற் புணரும் (14); அதுபோலன்றிச் சால்பு முதலியன குன்றின் (15) நிறுத்தல் (16) எளியவென்னார் (18) ஆகலின், இஃது இருவேமாய்ந்த மன்றலெனை (21) அறிவுறுலிற்

---

[1] பெருமையும் உரனும் தலைவன் குணங்கள்; அச்சமும் நாணும் தலைவியின் குணங்கள்; தொல். களவு, சூ. 7, 8; "நாணு முட்கு நண்ணுவழி யடைதர" (குறிஞ்சிப். 184)

[2] இது வென்றது கந்தருவ மணத்தை; அது மறைநூல் விதி யென்பதை, "மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட், டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே" (தொல். களவு. சூ. 1), "அரு மறை மன்ற லெட்டனுட், கந்தருவ வழக்கம்" (இறை. சூ. 1), "காந்தர்ப்ப மென்ப துண்டாற் காதலிற் கலந்த சிந்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" (கம்ப. சூர்ப்பநகை. 54) என்பவற்றால் உணர்க.

[3] "இம்மை மாறி மறுமை யாயினும், நீயா கியரென் கணவனை, யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே" (குறுந். 49 : 3 – 5); "அவரை எதிர்ப்படாதிருத்தல் அன்பன் றென்னும் கருத்தால், பிறப்பானடுப் பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியரென்றாள்" (திருச்சிற். 215, பேர்.)

பழியுமில்லை (22) ; ஆற்றின் வாராராயினும் ஆற்ற (23) ஏனை உல கத்தும் இயைவதாலெனக் கூறி (24) மெலியும் (26) என முடிக்க.

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும், தானே கூறுங் காலமு முளவே" (தொல். களவு. சூ. 21) என் பதனுள், 'தானே கூறுங் காலமு முளவே, என்றதனால் [1]தலைவி கூற்றினைக் கொண்டு கூறினளென்று உணர்க. "செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பும், அருமையு மறிவும் பெண்பா லான" (தொல். பொருளியல், சூ, 15) என்பதனால் மறைபுலப்படுத்தலாகா தென்று ராயினும், "உற்றுழி யல்லது சொல்ல லின்மையின், அப்பொருள் வேட்கை கிழவியி னுணர்ப" (தொல். பொருளியல், சூ. 14) என்பதனால் மறை புலப்படுத்தலும் ஆமென வழுவமைத்தலின் இங்ஙனம் தலைவி கூறினள்.

இதனால் தோழி [2]தலைப்பாடு கூறினள்.

27 – 8. இகல் மீ கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை நின்ற சான்றோர் போல - [3]மாறுபாட்டின் மிகுதியைச் செலுத்தும் இருவ ராகிய பெரிய அரசரைச் [4]சந்து செய்விக்கும் தொழிலிடத்தே நின்ற அறிவுடையோரைப் போல,

29. இரு பெரு அச்சமோடு யானும் ஆற்றலேன் – நினக்கும் இவள் வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தாநின்றேன்;

30. கொடுப்பின் நன்கு உடைமையும் – கொடுத்த பின்பு எல்லாவற்றானும் நன்றாகி முடிதலையும்,

குடி நிரல் உடைமையும் – ஒரு குடியாகாமல் இரண்டு குடியும் ஒத்தலுடைமையையும்,

31. வண்ணமும் - குணத்தையும்,

துணையும் - சுற்றத்து உதவிகளையும்,

பொரீஇ எண்ணாது - ஒப்பித்துப் பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாதே,

"செந்துறை, வண்ணப் பகுதி வரைவின் றாங்கே" (தொல். புறத். சூ. 27) என்பதனால் வண்ணம் குணமென்று உணர்க.

---

[1] தலைவி கூற்றை 24 – ஆம் அடியிற் காண்க.

[2] தலைப்பாடு கூறல் - தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப் பட்டார், யான் அறிந்திலேனெனக் கூறல்.

[3] "வலிமிகு வெகுளியான் வாளுற்ற மன்னரை, நயனுடி நட் பாக்கும் வினைவர்போல்" (கலித். 46 : 7 - 8)

[4] சந்து செய்வித்தல் - சந்தி செய்வித்தல்.

32. எமியேம் துணிந்த ஏமம் சால் அரு வினை - நும்மையின்றித் தமியேமாய் யாங்களே துணிந்த உயிர்க்குப் பாதுகாவல் அமைந்த செய்தற்கரிய இக்கந்தருவ மணம்,

தானும் புணர்ச்சிக்குப் பின் உடம்படுதலின், எமியேம் துணிந்த என்றாள்.

33. நிகழ்ந்த வண்ணம் - முன்பு நடந்த படியை,

33 – 4. நீ நனி உணர செப்பல் ஆன்றிசின்-நீ மிகவும் அறியும்படி சொல்லுதலை அமைந்தேன்;

34. சினவாதிமோ - அது கேட்டுச் சினவாதிருப்பாயாக ;

35. நெல் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை – நெல்லைத் தன்னிடத்தே கொண்ட நெடிய மூங்கிலைத் தின்றற்கு மேனோக்கி நின்று வருந்தின யானை அவ்வருத்தம் தீரும்படி,

36. முத்து ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப - முத்து நிறைந்த கொம்பிலே ஏறட்டு நான்ற கையை ஒப்ப,

37 - 8. துய் தலை வாங்கிய புனிறு தீர் பெரு குரல் நல் கோள் சிறு தினை படு புள் ஓப்பி - துய்யை உடைய தலை வளைந்த ஈன்றணிமை தீர்ந்த பெரிய கதிர்களை நன்றாகத் தன்னிடத்தே கொள்ளுதலை உடைய சிறிய தினையிலே வீழ்கின்ற கிளிகளை ஓட்டி,

துய் - இளைதான பருவத்துப் பஞ்சு நுனை போன்றிருப்பது.

கடுப்ப வளைந்த என்க.

39. எல் பட வருதியர் என நீ விடுத்தலின் - பகற்பொழுது கழியாநிற்க நீர் வருவீராக என்று கூறி நீ போக விடுகையினாலே யாங்களும் போய்,

வருதியர் : வியங்கோள் முற்று.

40 - 41. கலி கெழு மரம் மிசை [1]சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம் - ஆரவாரம் பொருந்தின மரத்தின் உச்சியிலே இராக் காலம் ஆகாயத்திருப்போன் பண்ணின புலி அஞ்சுகைக்குக் காரணமான பரண்,

[1] "சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி" (குறுந். 150 : 1) என்றார் பிறரும்.

41 - 2. [ஏறி யவண, சாரற் சூரற் றகைபெற வலந்த இதணம் ஏறி :] அவண சாரல் சூரல் தகை பெற வலந்த இதணம் ஏறி - அவ் விடத்தனவாகிய மலைப் பக்கத்துப் பிரம்பாலே அழகு பெறத் தெற்றின இதணத்தே ஏறி,

இனிச் சூரலாலே பிணித்த தழலென்றுமாம். சூரல் - சூரற் கொடியுமாம்.

43. தழலும் – தழலும்,

---

[1] "சேணோன் - பரணின் மேலோன்" (சிலப். 25 : 30, அரும்பத.)

தழலாவது கையால் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும் ஓசையால் கிளி முதலியவற்றை ஓட்டும் கருவி; கவணென்பாரு முளர்.

தட்டையும் - தட்டையும்,

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும் – குளிரும்,

குளிராவது இவை போல்வதோர் கிளிகடி [1]கருவி.

பிறவும் - ஏனையவும்,

பிறவென்றது கவண் முதலியவற்றை.

44. கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி - தழலும் தட்டையும் குளிரும் பிறவுமாகிய கிளியோட்டும் முறைமையினை உடையவற்றை முறையே முறையே கையிலே வாங்கி ஓட்டி,

45. உரவு கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து - மிகுதலை உடைய ஞாயிற்றின் கிரணங்கள் சுடும் வெம்மை விளங்குகின்ற பொழுதிலே ஊழூழ் வாங்கி (44) என்க.

46. விசும்பு ஆடு பறவை வீழ் பதி படர - ஆகாயத்தே பறக்கும் பறவைகளெல்லாம் தாம் விரும்பும் [2]சேக்கைகளிலே செல்லும்படியாக,

47 - 53. [நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின், முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு, நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி, இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய், ஒன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின், மின்மயங்கு கருவிய :]

நிறை இரு பௌவம் குறைபட முகந்து கொண்டு (47) முரசு அதிர்ந்தன்ன இன் குரல் ஏற்றொடு (49) நிரை செலல் நிவப்பின் கொண்மூ (50) - நிறைந்த கரிய கடலைக் குறை உண்டாம்படி முகந்துகொண்டு முரசு சிறிது முழங்கினாற் போன்ற இனிய குரலை உடைய உருமேற்றோடே நிரைத்துச் செல்லுதலை உடைய ஒக்கத்தினை உடைய மேகம்,

இன் இசை முரசின் [3]சுடர் பூண் சேஎய் (51) ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின் (52) மின் மயங்கு கருவிய (53) - இனிய ஓசையை உடைத்தாகிய முரசினையும், ஒளியினை உடைய வாகிய அணிகலங்களையும் உடைய முருகன் அசுரரைக் கொல்லுதற் கெடுத்த விளங்குகின்ற இலைத் தொழிலை உடைய வேல் போல மின்னு மயங்குகின்ற தொகுதிகளை உடையவாய்,

---

[1] தினைப் புனத்தில் கிளி யோப்புவோர் மூங்கிலை வீணை போற் கட்டித் தெறிக்கும் கருவி யென்பர், தஞ்சைவாணன் கோவை யுரை யாசிரியர்.

[2] சேக்கை – கூடு; "சேக்கை மரனொழியச் சேணீங்கு புள்" (நாலடி. 30) [3] "பொலம்பூட் சேஎய்" (முருகு. 271)

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின் (48) மயங்கி (50) - [1] ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயத்திடத்தே வீசுகின்ற காற்றுத் தன்னிடத்தே கூடுகையினாலே நிரைத்த நிரை போய்க் கலங்கி,

53. கல் மிசை பொழிந்தென - மலை மேலே பெய்தவாக,

கொண்மூக் (50) கருவியவாய் (53) மயங்கிப் (50) பறவை பதிப் படரப் (46) பொழிந்தென (53) என்க.

54 - 6. அண்ணல் நெடு கோடு இழிதரு தெள் நீர் அவிர் துகில் புரையும் அவெள் அருவி தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி - தலைவனுடைய நெடிய மலைச் சிகரத்தினின்றும் [2] குதிக்கின்ற தெளிந்த நீரை உடைய விளங்குகின்ற வெள்ளிய துகிலை யொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதல் இல்லாத விருப்பை உடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணல் மலையில் அருவியெனவே நிலமொன்று என்றுள்.

57 - 8. [பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம்பில் :] நளி படு சிலம்பில் பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி - செறிவுண்டான மலையிடத்துப் பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற் போன்ற பரந்த சுனையைக் குடைந்து விளையாடுகின்ற இடத்தே,

58. [3] பாயம் பாடி - எங்கள் மனத்துக்கு விருப்பமானவற்றைப் பாடி,

59 - 60. பொன் எறி மணியின் சிறு புறம் தாழ்ந்த எம் பின் இரு கூந்தல் பிழிவனம் [4] துவரி - பொன்னிலே அழுத்தின நீலமணி போலச் சிறிய முதுகிடத்தே தாழ்ந்து கிடந்த எம்முடைய பின் னுதலை உடைய கரிய கூந்தலை நீரைப் பிழிந்து ஈரத்தைப் புலர்த்தி,

61. உள் அகம் சிவந்த கண்ணேம் - உள்ளாகிய இடமெல்லாம் சிவந்த கண்ணேமாய்,

61 - 2. வள் இதழ் ஒள் செ காந்தள் - பெரிய இதழை உடைய ஒள்ளிய சிவந்த கோடற் பூ,

62. ஆம்பல் அனிச்சம் - ஆம்பற் பூ அனிச்சப் பூ,

63. தண் கயம் குவளை - குளிர்ந்த குளத்தில் பூத்த செங்கழு நீர்ப் பூ,

குறிஞ்சி - குறிஞ்சிப் பூ,

---

[1] பெரும்பாண். 1, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] "குதிபாய் கடாம்" (தக்க. 3)

[3] பாயம் - மனவிருப்பம் ; பெரும்பாண். 342.

[4] துவர்தல் - உலர்த்தல் ; "துவராக் கூந்தல் - ஈரம் புலராத கூந்தல்" (பதிற். 89 : 16, உரை) ; "கண்ணும் வாயுந் துவர்ந்து" (திருவாய். 8. 5 : 2)

வெட்சி – வெட்சிப் பூ.

64. செங்கொடு வேரி - செங்கொடு வேரிப் பூ.

[1] தேமா – தேமாம் பூ.

மணிச்சிகை - செம்மணிப் பூ.

65. [2] உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ் - தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினை உடைய பெருமூங்கிற் பூ.

கூவிளம் - [3]வில்லப் பூ.

66. எரி புரை எறுழம் - நெருப்பையொத்த எறுழம் பூ.

சுள்ளி - மராமரப் பூ.

கூவிரம் – கூவிரப் பூ.

57. வடவனம் - வடவனப் பூ.

வாகை - வாகைப் பூ.

வால் பூ குடசம் : வெள்ளிய பூவினை உடைய வெட்பாலைப் பூ.

68. எருவை - பஞ்சாய்க்கோரை.

கொறுக்கைச்சியுமாம்.

செருவிளை - வெண்காக்கணம் பூ.

மணி பூ கருவிளை - நீலமணி போலும் பூக்களை உடைய கருவிளம் பூ.

69. பயினி - பயினிப் பூ.

வானி - வானிப் பூ.

பல் இணர் குரவம் - பல இதழ்களை உடைய குரவம் பூ.

70. [4] பசும்பிடி - பச்சிலைப் பூ.

வகுளம் - மகிழம் பூ.

பல் இணர் காயா – பல கொத்துக்களை உடைய காயாம் பூ.

71. விரி மலர் ஆவிரை - விரிந்த பூக்களை உடைய ஆவிரம் பூ.

வேரல் - சிறுமூங்கிற் பூ.

சூரல் – சூரைப் பூ.

72. குரீஇப் பூளை - சிறு பூளை.

குறுநறுங் கண்ணி - குன்றிப் பூ.

73. குருகிலை – முருக்கிலை.

மருதம் - மருதப் பூ.

---

[1] 'தேமா' என்பது முதல், 'பெருமூங்கிற் பூ' என்பது இறுதியாக உள்ளவைகள் தருமபுரவாதீனமடத்திலிருந்து கிடைத்த ஒரு பழைய ஏட்டுப் புத்தகத்தில் மட்டும் இருந்தன.

[2] உரிதென்பது உரித்தென்பதன் விகாரமென்பர்; கலித். 76: 17, ந.

[3] வில்லப் பூ - வில்வப் பூ.

[4] "பசும்பிடி : இளமுகிழ் - பச்சிலையது இளைய கொழுந்து" (பரி. 19 : 75, பரிமேல்.)

விரி பூ கோங்கம் - விரிந்த பூக்களைஉடைய கோங்கப் பூ.
74. போங்கம் - மஞ்சாடிப் பூ.
திலகம் - மஞ்சாடி மரத்தின் பூ.
தேன் கமழ் பாதிரி - தேன் நாறும் பாதிரிப் பூ.
75. செருந்தி - செருந்திப் பூ.
[1]அதிரல் – புனலிப் பூ.
பெரு தண் சண்பகம் - பெரிய குளிர்ந்த சண்பகப் பூ.
76. கரந்தை - நாறு கரந்தை.
குளவி - காட்டு மல்லிகைப் பூ.
கடி கமழ் கலி மா - விரை கமழும் தழைத்த மாம் பூ.
77. தில்லை - தில்லைப் பூ.
பாலை - பாலைப் பூ.
கல் இவர் முல்லை - கல்லிலே படர்ந்த முல்லைப் பூ.
78. குல்லை - கஞ்சங்குல்லைப் பூ.
பிடவம் - பிடவம் பூ.
சிறுமாரோடம் - செங்கருங்காலிப் பூ.
79. வாழை – வாழைப் பூ.
வள்ளி - வள்ளிப் பூ.
நீள் நறு நெய்தல் - நீண்ட நறிய நெய்தற்பூ.
80. தாழை - தெங்கிற் பாளை.
[2] தளவம் - செம்முல்லைப் பூ.
முள் தாள் தாமரை - முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப் பூ.
81. ஞாழல் - ஞாழற் பூ.
[3] மௌவல் - மௌவற் பூ.
நறு தண் [4]கொகுடி – நறிய குளிர்ந்த கொகுடிப் பூ.
82. சேடல் - [5] பவழக்கால் மல்லிகைப் பூ.
செம்மல் - சாதிப் பூ.
சிறு செங்குரலி - கருந்தாமக் கொடிப் பூ.

---

[1] முல்லை. 51 - 2, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] தளவம்: பொருந. 99, ந; "பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை" (ஐங். 447 ; 2); "தளவி னிதன்முட் செந்நனை" (அகநா. 23 : 3); "தளவமும் - செம்முல்லையும்" (சிலப். 13 : 155, அடியார்.)

[3] மௌவல் – மல்லிகை விசேடம்; சீவக. 485. ந.

[4] கொகுடி - ஒருவகை முல்லை; "கொகுடி முல்லை" (திருஞா. தே. வடகுரங்காடுதுறை. 1).

[5] இது பவழ மல்லிகை எனவும், பாரிசாதம் எனவும் வழங்கும்.

83. கோடல் – வெண்கோடற் பூ.
கைதை - தாழம் பூ.
கொங்கு முதிர் நறு வழை - தாது முதிர்ந்த நறிய சுரபுன்னைப் பூ.
84. காஞ்சி – காஞ்சிப் பூ.
மணி குலை கள் கமழ் நெய்தல் - நீலமணி போலும் கொத்துக்களை உடைய தேன் நாறும் கருங்குவளை.
85. பாங்கர் - [1] ஓமை.
மராஅம் - மரவம் பூ (வெண் கடம்பு).
பல் பூ தணக்கம் – பல பூக்களை உடைய தணக்கம் பூ.
86. ஈங்கை – இண்டம் பூ.
இலவம் - இலவம் பூ.
தூங்கு இணர் கொன்றை - தூங்குகின்ற பூங் கொத்தினை உடைய கொன்றைப் பூ.
87. [2] அடும்பு - அடும்பம் பூ.
அமர் ஆத்தி - பொருந்தின ஆத்திப் பூ.
நெடு கொடி அவரை - நெடிய கொடியினை உடைய அவரைப் பூ.
88. பகன்றை - பகன்றைப் பூ.
இது சிவதை ; [3] "பகன்றைப் பூ வுற நீண்ட பாசிலைத் தாமரை" என்புழி வெள்ளி வட்டில் உவமை கோடலின், இது கிலுகிலுப்பை அன்று.
பலாசம் - பலாசம் பூ.
பல் பூ பிண்டி - பல பூக்களை உடைய அசோகம் பூ.
89. வஞ்சி - வஞ்சிப் பூ.
பித்திகம் - பிச்சிப் பூ.
சிந்துவாரம் - கரு நொச்சிப் பூ.
90. தும்பை - தும்பைப் பூ.
துழாஅய் - திருத் துழாய்ப் பூ.
சுடர் பூ தோன்றி - [4] விளக்குப் போலும் பூவினை உடைய தோன்றிப் பூ.

---

[1] ஓமை - பாலை நிலத்திற் குரிய ஒருவகை மரம். பாங்க ரென்று ஒரு வகையான கொடியும் உண்டு ; "பாங்கரு முல்லையுந் தாய பாட்டங்கால் - பாங்கர்க் கொடியும் முல்லைக் கொடியும் பரந்த தோட்டத்திடத்தே" (கலித். 111 : 3 - 4, ந.)

[2] அடும்பு - நெய்தல் நிலத்திற் குரிய ஒரு வகைக் கொடி.

[3] கலித். 73 : 2. இதன் உரையில் நச்சினார்க்கினியர் பகன்றைப் பூவை, 'மணமில்லாத பகன்றைப் பூ' எனக் குறிப்பிடுவர் ; பகன்றை யென்பது பெருங்கையா லென்னுங் கொடி என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். 13 : 155 - 60, உரை) ; இது மருத நிலத்துக் குரிய தென்று தெரிகிறது.

[4] தோன்றி - செங்காந்தள் ; "ஒண் சுடர்த் தோன்றி"

91. நந்தி - நந்தியாவட்டப் பூ.
[1] நறவம் - நறைக் கொடி,
நறு புன்னாகம் : இது புன்னையின் விசேடம்,
92. பாரம் - பருத்திப் பூ.
பீரம் - பீர்க்கம் பூ,
பைங்குருக்கத்தி - பசிய குருக்கத்திப் பூ,
93. ஆரம் - சந்தனப் பூ,
காழ்வை - அகிற் பூ,
கடி இரு புன்னை - மணத்தை உடைய பெரிய புன்னைப் பூ,
94. நரந்தம் - நாரத்தம் பூ,
நாகம் - நாகப் பூ,
நள்ளிருள் நாறி - [2] இருவாட்சிப் பூ,
95. மா இரு குருந்தும் - கரிய பெரிய குருந்தம் பூவும்,
வேங்கையும் - வேங்கைப் பூவும்,

95 - 7. [பிறவும், அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன், மாலங் குடைய :] அங்கு மால் உடைய அரக்கு விரித்தன்ன பிறவும் பரு ஏர் அம் புழகுடன் - அச்சாரலிடத்துத் தம்மில் மயக்க முடைய வாய்ச் சாதி லிங்கத்தைப் பரப்பினாற் போன்ற பிற பூக்களையும் பருத்த அழகினை யுடைய மலை யெருக்கம் பூ வுடனே,

பரேரம் புழகு - [3] செம் பூவுமாம் ; புனமுருங்கையு மென்பர்.

97. மலிவனம் மறுகி - பூக்களிடத்தே மன வேட்கை மிக்குப் பலகாலும் திரிந்து பறித்து.

98. 'வான் கண் கழீஇய அகல் அறை குவைஇ - [4] மழை பெய்து தன்னிடத்தைக் கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து.

(ஐங். 440 : 3) ; "தாய தோன்றி தீயென மலரா" (பரி. 11 : 21) ; "வாடையொடு நிவந்த வாயிதழ்த் தோன்றி, சுடர்கொ ளகலிற் சுருங்குபிணி யவிழ", "சுடர்புரை தோன்றி" (அகநா. 235 : 7 - 8, 364 : 6) ; "தோன்றி யஞ்சுட ரேந்த" (சீவக. 1563) ; "தீவாய்த் தோன்றியும்" (பெருங். 2. 12 : 26)

[1] நறவம் - நறவம் பூ வெனக் கொள்ளுதலும் பொருந்தும்.

[2] இருள் வாசி யென்பது இருவாட்சி யென்று வழங்குகின்றது.

[3] "செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணியர்" (பரி. 22 : 21)

[4] "மாசறக் கழீஇய யானை போலப், பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்" (குறுந். 13 : 1 – 2)

[5] "புனல் கால் கழீஇய பொழில் - நீர் பெருகிய காலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப் போன பொழில்கள்" (பெரும் பாண். 380, ந.)

கண்ணேமாய் (61) மலிவனம் மறுகிப் (97) பரேரம்புழகுடனே (96)ஒண் செங்காந்தள் (62) முதலியவற்றையும் பிறவற்றையும் (95) பாறையிலே குவித்து (98) என முடிக்க.

செங்காந்தள் (62) முதலியவற்றிற்கெல்லாம் இரண்டாம் உருபும் உம்மையும் விரிக்க. குருந்தும் வேங்கையும் பிறவும் (95) என்ற மூன்றற்கும் உருபு விரிக்க.

99. புள் ஆர் இயத்த - பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வாச்சியங்களை உடையவாகிய,

விலங்கு மலை சிலம்பின் - ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக் கிடக்கின்ற மலைப்பக்கத்திற் புனத்தே,

100 - 101. வள் உயிர் தெள் விளி இடை இடை பயிற்றி கிள்ளை ஓப்பியும் – பெரிய ஓசையினை உடைய தெளிந்த சொற்களை நடுவே நடுவே சொல்லிக் கிளியை ஓட்டுதலைச் செய்தும் தழை தைஇ (102) என்க.

சொல் - [1]கிளியை ஓட்டும் சொல்.

கிளியையும் ஓப்பியெனச் சிறப்பும்மை.

101. கிளை இதழ் பறியா - புறவிதழ்களை வாங்கிப் போகட்டு,

102. பை விரி அல்குல் கொய் தழை தைஇ - பாம்பின் படத்தைப் போலே பரந்த அல்குலுக்குத் தழையைக் கட்டி உடுத்து,

[2]கொய் தழை - மிக்க இடங்களை நறுக்கின தழை.

103 - 4. பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை எம் மெல் இரு முச்சி கவின் பெற கட்டி - [3]பலவாய் வேறுபட்ட நிறத்தை உடைய அழகமைந்த மாலைகளை எம்முடைய மெல்லிய கரிய முடியிலே அழகு பெறச் சுற்றி,

---

[1] இஃது ஆயோ வென்பது; "ஆயோ வென்னு மண்ணுமலை யாரை" (திருஞா. தே.); "ஆயோ வெனப்போகா" (சுந்தர. தே.); "கிளியுமெள்கு மாயோவடுந்தொண்டையோ" (திருவிருத்தம், 10); "புனங் காவல்கொண் டாயோ வெனமொழியு மம்மழலை யின்னிசை யால்" (சூளா. சுயம். 104); "ஆயோ வெனுங்குர லாவயிற் கடிந்தே" (தமிழ்நெறி. மேற்.); "ஆயோ வெனுங்குர லந்தோ புனத்தை யழிக் கின்றதே" (திருவரங்கக் கோவை).

[2] கொய்யென வருமிடங்களில், கத்தரிகையாலே மட்டஞ்செய்த வென்று பொருளெழுதுவர் புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர்.

[3] பலவகைப்பட்ட மாலைகளின் இயல்பைப் பின்பு குறித்த இடங்களிலுள்ள செய்யுட்களால் உணர்க: பரிபாடல், 19 : 80 - 82, 20 : 29 - 30; சீவக. 1338, 2054, 2656, 2919; பெரிய. முருக. 9.

105 - 6. எரி அவிர் உருவின் அம் குழை செயலை தாது படு தண் நிழல் இருந்தனம் ஆக - நெருப்புப்போல விளங்கும் நிறத்தையுடைய அழகிய தளிரையுடைய அசோகினது தாது விழுகின்ற குளிர்ந்த நிழலிலே இருந்த அளவிலே,

107. [எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ் :]

சுரிவளர் நறுங்காழ் : பின்னே கூட்டுதும்.

எண்ணெய் நீவிய நலம் பெறு சென்னி (116) - பலகாலும் எண்ணெய் வார்த்த நன்மையைப்பெற்ற தலையிற் குஞ்சி (112) என்க.

108. தண் நறு தகரம் கமழ மண்ணி - குளிர்ந்த நறிய மயிர்ச் சந்தனத்தை நாறும்படியாகப் பூசி,

109. ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா - அந்த ஈரம் புலரும்படி விரலால் அலைத்துப் புலர்த்துதல் தொழிலாலே பிணிப்பை விடுத்து,

110. நறு காழ் (107) காழ் அகில் அம் புகை கொளீஇ – அதனை நறிய கரிய வயிரத்தினையுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினாலே,

இதில் நறுங்காழ் கூட்டிற்று.

110 - 11. யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்ப தேன் கலந்து - யாழோசையினது அழகு மிகுகின்ற பாட்டினையுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும்படி அகிலினது நெய் கலந்து,

112. [மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின் :]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (107) மா இரு குஞ்சியின் - [1]நீல மணியினது நிறத்தைத் தன்னிடத்தே கொண்ட கடைகுழன்று வளர்ந்த கரிய பெரிய மயிரின்கண்ணே,

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

மண்ணி (108) அவிழாப் (109) புகை கொளுவுகையினாலே (110) தேங்கலந்து (111) ஒருகாழ் வளைஇ (118) மணிநிறங்கொண்ட குஞ்சி (112) என்க.

113. மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும் - மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளில் பூத்தனவும் சுனைகளில் பூத்தனவுமாகிய,

114. வண்ணம் வண்ணத்த மலர் - பல நிறங்களையும் உடைய மலர், பல சாதிகளையும் உடைய மலர்,

என ஒன்று நிறமும், ஒன்று சாதி வேறுபாடும் கூறினர்.

114 - 5. ஆய்பு விரைஇய தண் நறு தொடையல் வெள் போழ் கண்ணி-அம்மலரை ஆராய்ந்து தொடுத்த தண்ணிய நறிய தொடையலினையும் வெள்ளிய தாழைமடலிலேயுடைத்தாகிய கண்ணியினையும்

---

[1] "நீலமாய்ச் சுரிந்த குஞ்சி" (சீவக. 1722); "இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்" (கம்ப. மிதிலை. 56)

116. [நலம்பெறு சென்னி நாமுற மிலேச்சி :]
நாம் உற மிலேச்சி - [1]முருகனென்று அச்சமுறும்படி சூடி.
குஞ்சியின்கண்ணே (112) மிலேச்சி யென்க.
நலம்பெறு சென்னி : முன்னே கூட்டிற்று.

117 - 8. பைங்கால் [2]பித்திகத்து அ இதழ் அவிழ் அலரி அம் தொடை ஒருகாழ் வளை இ – பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய அழகிய இதழ்களையுடைய பூவைத் தொடுத்த அழகினையுடைய தொடையாகிய ஒரு வடத்தைச் சுற்றி,

இஃது அந்திக்காலத்து மலரும் பூவாதலின், அதனைத் தேங்கலந்து (111) ஒருகாழ் வளை இ (118) மணிநிறங்கொண்ட குஞ்சி (112) எனக் குஞ்சிக்கு இயல்பாக்கி முன்னே கூட்டுக.

118 - 20. [செந்தீ, ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ, அந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்ப :] குவவு மொய்ம்பு அலைப்ப செ தீ ஒள் பூ பிண்டி அம் தளிர் ஒரு காது செரீஇ - திரளுதலையுடைய தோளிலே வீழ்ந்து அலைக்கும்படி சிவந்த நெருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தளிரை ஒரு காதிலே செருகி,

120 - 22. சாந்து அருந்தி மைந்து இறை கொண்ட மலர்ந்து ஏந்து அகலத்து தொன்றுபடு பூணொடு நறு தார் பொலிய - சந்தனத்தை உள்ளடக்கி வலி தங்குதல் கொண்ட அகன்று உயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டு வருகின்ற பேரணிகலங்களோடே நறிய மாலை பொலிவு பெற,

123. செ பொறிக்கு ஏற்ற - [3]மூன்று வரியாகிய உத்தம இலக்கணத்திற்குப் பொருந்தின மார்பு (121) என்க.

123 - 4. வீங்கு இறை தட கையின் வண்ணம் வரி வில் ஏந்தி அம்பு தெரிந்து - பூண் இறுகின முன் கையையுடைய பெரிய கையிலே வண்ணத்தையுடைய வரிந்த வில்லை எடுத்து அம்புகளைத் தெரிந்து பிடித்து,

125. நுண் வினை கச்சை தயக்கு அற கட்டி - நுண்ணிய தொழில்களையுடைய கச்சைக் கட்டின சேலை துளக்கமறக் கட்டி,

126 - 7. [இயலணிப் பொலிந்த வீகை வான்கழல், துயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ :] ஈகை இயல் அணி பொலிந்த வான் கழல் துயல்வரும்தோறும் திருந்து அடி கலாவ - பொன்னாற் செய்யப் பட்ட பூண்களிற் பொலிவு பெற்ற நன்றாகிய வீரக்கழல் பெயரும் பொழுதெல்லாம் பிறக்கிடாத அடியிலே ஏற்றிழிவு செய்ய,

---

[1] "முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணி" (அகநா. 28 :6)

[2] "பித்திகக் கோதை" (பெருங். 1. 33 : 76)

[3] முருகு. 104 - 5 - ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

128 - 9. முனை பாழ் படுக்கும் துன் அரு துப்பின் பகை புறம் கண்ட பல் வேல் இளைஞரின் - பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டு தற்கரிய வலியை உடைய பகைகளை முதுகுகண்ட பல வேலினை உடைய வீரரைப்போலே,

130 - 31. உரவு சினம் செருக்கி துன்னுதொறும் வெகுளும் முளை வாள் எயிற்ற வள் உகிர் ஞமலி - பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மேலொன்று நெருங்குந்தோறும் கோபிக்கும் மூங்கில் முளைபோலும் ஒளியையுடைத்தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

132. திளையா கண்ண வளைகுபு நெரிதர - இமையாக்கண்களை உடையவாய் எம்மை வளைத்துக்கொண்டு மேலே மேலே வருகையினாலே,

133-4. [நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியாம், இடும்பை கூர் மனத்தே மருண்டு புலம் படர:] யாம் நடுங்குவனம் எழுந்து நல் அடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர - யாங்கள் அஞ்சி அவ்விருப்புக் குலைந்து கடிதிற் செல்லுதலாற்றாது வருத்தம் மிக்க மனத்தை யுடையேமாய் மயங்கி வேற்றுப்புலத்து ஏறச் செல்லா நிற்க,

135 - 6. மாறுபொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து ஆகாண் விடையின் அணி பெற வந்து - தனக்கு மாறாகிய விடைகளை யெல்லாம் பொருது கெடுத்த மனச்செருக்கினையுடைய தான் அறியாத நிலத்தில் புதிய ஆவைக் காணும் [1]ஏறுபோல அழகுபெற வந்து,

வேட்கை மிகுதி கூறுதற்கு வேறுபுலத்து ஆவென்றார்.

இத்துணையும் ஏத்தல் கூறினார்.

136 - 8. [எம், அலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய வினிய மேவரக் கிளந்து :] அ இடை எம் அலமரல் வெரூஉதல் அஞ்சி மெல்லிய இனிய மேவர கிளந்து - யாங்கள் போகின்றபொழுது எம் மனத்தில் சுழற்சியாலே வெருவுதற்குத் தான் அஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்களை எமக்குப் பொருந்துதல் வரச் சொல்லி,

இதனால் [2]ஏதீடு கூறினாள்.

138 – 9. எம் ஐம்பால் ஆய் கவின் ஏத்தி - எம் [3]ஐவகைப்பட்ட மயிரினையுடைய பலரும் ஆராய்ந்த அழகைப் புகழ்ந்து அசைகின்ற (140) இளைபி (141) ரென்க.

139. ஒள் தொடி - ஒள்ளிய தொடியினையும்,

---

[1] "துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து" (குறிஞ்சிப். 235) என்று பின் வரும் அடியோடு இது கருத்துத் தொடர்புடையதாதல் காண்க; குறுந். 74 : 4.

[2] ஏதீடு - காரணமிட்டுரைத்தல்.

[3] ஐவகையாவன : குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன; சீவக. 2437, ந.

140. அசை : வேறு கூட்டிற்று.
மெல் சாயல் - மெல்லிய மென்மையினையும்,
அ வாங்கு உந்தி - அழகிய வளைந்த கொப்பூழினையும்,
141. மடம் மதர் மழை கண் இளையீர் - மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,
141 - 2. இறந்த கெடுதியும் உடையேன் என்றனன் - இவ்விடத்தே போந்த கெடுதிகள் பலவும் உடையேனென்று கூறினான்;
என்றது, [1]அவை [2]யானை [3]கலை [4]பன்றி [5]முதலியன கெடுத்தனனாக வினாயினான்.

குறிஞ்சியின்கண்ணே (112) மிலைச்சிச் (116) செரீஇப் (119) பொலியக் (122) கலாவக் (127) கட்டி (125) ஏந்தித் தெரிந்து (124) விடையின் அணிபெற வந்து (136) தான் கொண்டுவந்த ஞமலி (131) நெரி தருகையினாலே (132) எழுந்து தளர்ந்து (133) மருண்டு வேறு புலம் படராசிற்க (134) ஆயிடை (137) எம் (136) அலமரல்

---

[1]இங்ஙனம் வினாதலை, தோழியைக் குறையுறும் பகுதியிற் கெடுதி வினாதலென்னும் துறையுள் தொல்காப்பியனாரும் (களவு. சூ. 102; 11 - 3), மதியுடம்படுத்தலென்னும் பகுதியில் பிறவினாதலென்பதனுள் இறையனாரகப்பொருளுரையாசிரியரும் (சூ. 6), பகற்குறியுள் கவர்ந்து நின்ற தோழியை மதியுடம்படுப்பானுற்றுத் தோழியும் தலைமகளும் உடனாயவழித் தலைமகன் வினாயதென்பதனுள் தமிழ்நெறி விளக்க நூலாசிரியரும், மதியுடம்பாட்டிற்குரிய, "கயந்தங்கு வேழம் வினாதலினமான் கலைவினாதல்" என்பவற்றுள் ஒரு பழைய [இலக்கண நூலாசிரியரும், பாங்கி மதியுடம்பாட்டிற் குறையுற உணரும் பகுதியில் கெடுதியோ டொழிந்தவும் வினாதலுள் நாற்கவிராச நம்பியும் (சூ. 140) அடக்குவர்.

[2]யானை வினாதல் : "செம்முக மானதர் செங்குங்கு மப்புயர் சீர் சிறந்த, மைம்மலி வாசப் பொழில்வகு தையன்ன வாணுதலீர், மும்மத மாரி பொழியப் பொழிமுகில் போன்முழங்கிக், கைம்மலை தான் வரக் கண்டதுண் டோநுங் கடிபுனத்தே" (பல்சந்த மாலை) என வருவது.

[3]கலை வினாதல் : "அம்புமுகங் கிழித்த வெம்புண் வாய்க்கலை, மான்போந் தனவுள வோநும், மடமா னேக்க மரீஇயின படர்ந்தே" (பொருளியல்) என வரும்.

[4]பன்றி வினாதல் : "தங்குறிப்பி னேருந் தலைச்சென்று கண்டக்கால், எங்குறிப்பி னேமென் றிகழ்ந்திரார் - நுங்குறிப்பின், வென்றி படர்நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரோ, வன்றி படர்ந்த வழி" (தொல். களவு. சூ. 11, ந. மேற்.) என வரும்.

[5]முதலியனவென்றது புலி, உள்ளம், உணர்வு முதலியவற்றை; தொல். களவு. சூ. 11, ந.

வெரூஉதல் அஞ்சிக் (137) கிளந்து (138) ஏத்தி (139) இளையீர், இறந்த(141) கெடுதியு முடையேன் என்றனன் (142) எனக் கூட்டுக.

142 – 3. [அதனெதிர், சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி :] அல்லாந்து அதன் எதிர் சொல்லேம் ஆதலின் கலங்கி – அவன் கூற்றிற்கு யாங்கள் மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினாலே நெஞ்சழிந்து,

144 - 5. [கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு. சொல்லலும் பழியோ மெல்லிய லீரென :] மெல் இயலிர் கெடுதியும் விடீஇராயின் எம்மொடு சொல்லலும் பழியோ என - மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவும் காட்டித் தாரீராயின் எம்முடன் [1]ஒரு வார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோ எனச் சொல்லி,

146 – 8. [நைவளம் பழுநிய பாலை வல்லோன், கைகவர் நரம்பி னிம்மென விமிரும், மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த :] நை வளம் பழுநிய பாலை வல்லோன் கை கவர் நரம்பின் இம் என இமிரும் மாதர் வண்டொடு நயந்து இறுத்த சுரும்பு - [2]நட்டராகம் முற்றுப்பெற்ற பாலை யாழை வாசிக்க வல்லவன் தன் கையாலே வாசித்த நரம்புபோலே இம்மென்னும் ஓசைபட ஒலிக்கும் காதலையுடைய வண்டினத்தோடே தன்னிடத்து [3]மணத்தை விரும்பித் தங்கின சுரும்பினங்களை,

149. தாது அவிழ் அலரி தா சினை பிளந்து – தாது விரிந்த பூக்களையுடைய தழை பரந்ததோர் கொம்பை முறித்து,

150. தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி - தன்னைச் செலுத்துகின்ற பரிக்கோலைக் கைகடந்த மதக்களிறுபோலே வெற்றி உண்டாக ஓட்டி,

தனக்குக் காவலாகிய [4]பெருமையினையும் உரனையும் [5]கைகடந்து

---

[1]இதனை மொழியாமை விறுதலென்னும் துறையுள் அடக்குவர்; "விரத முடையர் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேற், சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே" (திருச்சிற். 57)

[2]நட்ட ராகம் - பகற்பண்களுள் ஒன்று.

[3] "பல நறுநாற்றங்களும் தான் உடைமையின் வண்டுசூழ் நிலையென்றாள்" (பொருந. 96 - 7, ந.) என்பதனுடன் இது ஒப்புநோக்கற்குரியது.

[4] 21 – ஆம் அடிஉரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

[5] "குத்துக்கோல் வரைத்தன்றி யானை களிவரைத் தாயினாற் போலக் கழறுவார் சொல்வயத்தனன்றி வேட்கை வயத்தனாயினானென்பது போதரக் கழைகாண்டலுஞ் சுளியுங் களியானை யன்னானென்றாள்" (திருச்சிற். 101, பேர்.)

வேட்கை மீதூர்ந்து நிற்றலால் தாறடு களிற்றை உவமம் கூறினர். [1]மதக்களிற்றுக்கு அங்ஙனம் ஒச்சி நிற்றல் இயல்பு.

151. கல் என் சுற்றம் கடு குரல் அவித்து-கல்லென்னும் ஓசை படக் கத்தும் வேட்டை நாய்களுடைய கடிய குரல்களை அடித்து மாற்றி,

151 – 2. எம் சொல்லல் [2]பாணி நின்றனன் ஆக - யாங்கள் வார்த்தை சொல்லுதலையுடையதோர் காலத்தைப் பார்த்து நின்றானாக,

கெடுதியுமுடையேயனென்றனன்; அதனெதிர் (142) யாங்கள் சொல்லேமாதலிற் கலங்கி (143) மெல்லியலீர், சொல்லலும் பழியோ வெனச் சொல்லி (145) ஒச்சி (150) அவித்துச் (151) சொல்லற்பாணி நின்றனனாக (152) எனக் கூட்டுக.

இத்துணையும் [3]எளித்தல் கூறினள்.

153 - 4. இருவி வேய்ந்த குறு கால் குரம்பை பிணை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப – தினை அரிந்த தாளாலே வேய்ந்த குறிய தாள்களையுடைய குடிலில் இருக்கும் மான்பிணையை ஒத்த பார்வையினையுடைய மனைவி எடுத்துக் கொடுப்ப,

155 - 6. தேன் பிழி தேறல் மாந்தி மகிழ் சிறந்து சேமம் மடிந்த பொழுதின் -தேனாற் சமைத்த கட்டெளிவை உண்டு மகிழ்ச்சி மிக்குக் காவற்றொழிலை மறந்த காலத்தே,

156 - 8. [வாய்மடுத், திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனாது, தரவுற முஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு :]

இரு புனம் வாய் மடுத்து நிழத்தலின் சிறுமை நோனாது நோய் மிக்கு - பெரிய புனத்தை வேழம் தின்று நொக்கிவிடுகையினாலே தப்பி நின்றது விளையும் சிறுமையைப் பொறாதே வருத்தம் மிக்கு,

159. [உரவுச் சினம் :]

உரவு சினம் அரவு உறழ் அம் சிலை கொளீஇ - பரக்கின்ற சினத்தையுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லை நாண் ஏற்றி,

உரவுச் சினம் (159) அரவுற முஞ்சிலை கொளீஇ (158) எனப் பின்னே கூட்டுக.

[4]பாம்பு, வடிவிற்கும் கொலைத்தொழிலுக்கும் உவமை.

---

[1]இங்கே கூறப்படும் மதக்களிற்றின் இயல்பு, "அயறசும் பிருந்த வந்த ணுற்றத்து, மதக்களி சுவைக்கு மணிநிறப் பறவைத்,தொகைத் தொழி லோப்புந் தகைச்செவி" (பெருங். 1. 58 : 12 - 4) என்பதனாலும் அறியப்படும்.

[2]பாணி-காலம்; பெரும்பாண். 433; "தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்" (புறநா. 209 : 17). [3] (பி - ம்) 'வேட்கை.'

[4] "அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த, உரவுவில்" (கலித். 50 : 6 - 7) என்பதில் இங்கே கூறிய உவமை வகைகளின் பொதுத் தன்மை கூறப்படுதல் காண்க.

159 - 60. முன்பால் உடல் சினம் செருக்கி கணை விடுபு - மெய் வலியோடே கோபித்தலால் பிறந்த சினத்தாலே மயங்கி அம்பை எய்து.

விடுபு : விகாரம்.

புடையூ - தட்டையைப் புடைத்து.

160 - 61. கானம் கல் என மடி விடு வீளையர் வெடி படுத்து எதிர - காடெல்லாம் கல்லென்னும் ஓசை பிறக்கும்படி வாயை மடித்து விடுகின்ற [1]சீழ்க்கையராய் மிக்க ஓசையை உண்டாக்கி அக் களிற்றைப் புனத்தினின்றும் ஓட்டுகையினாலே,

வெடிபடுத்தார்த்தெனவும் பாடம்.

162 - 5. [கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக, இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங் கொல்பு, மையல் வேழ மடங்கலி னெதிர்தர :]

சினம் திகழ் கடாஅம் செருக்கி மையல் வேழம் - சினம் விளங்கு தற்குக் காரணமாகிய மதத்தாலே மனம் செருக்கி மயக்கத்தை உடைத்தாகிய யானை,

மரம் கொல்பு - மரங்களை முறித்து,

கார் பெயல் உருமின் பிளிறி - கார்காலத்து மழையின் உருமேறு போல முழக்கத்தை உண்டாக்கி,

சீர் தக இரு பிணர் தட கை இரு நிலம் சேர்த்தி ஒய் என (166) மடங்கலின் எதிர்தர - தன் தலைமைக்குத் தக்கதாகக் கரிய சருச்சரையை உடைத்தாகிய பெரிய கையைச் சுருட்டி நிலத்தே எறிந்து கடுகக் கூற்றுவனைப் போலே எங்கள்மேலே வருகையினாலே,

166 - 8. [உய்விட மறியே மாகி யொய்யெனத், திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து, விதுப்புறு மனத்தேம் விரைந்த வற் பொருந்தி :]

ஒய்யென : முன்னே கூட்டிற்று.

உய்வு இடம் அறியேம் ஆகி [2]விதுப்பு உறு மனத்தேம் - உயிர் கொண்டு பிழைப்பதோர் இடத்தை ஆண்டு வேறு உணரேமாகி நடுக்க முற்ற மனத்தையுடைய யாங்கள்,

நாணு மறந்து திருந்து கோல் எல் வளை தெழிப்ப விரைந்து அவன் பொருந்தி - [3]உயிரினும் சிறந்த நாணைக் காத்தலை மறந்து திருந்திய திரட்சியை உடைத்தாகிய ஒளியினையுடைய வளை ஒலிப்ப விரைந்து சென்று அவனைச் சேர்ந்து,

---

[1] சீழ்க்கை - நாவினது நுனியை மடித்துச் செய்யும் ஒலி.

[2] விதுப்பு - விரைதலென்பர் பரிமேலழகர்.

[3] "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" (தொல். களவு. சூ. 22)

6611

169. சூர் உறு மஞ்ஞையின் நடுங்க - தெய்வம் ஏறின மயில் போலே நடுங்காநிற்க,

169 - 71. [வார்கோல், உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை, அண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின் :] வார் கோல் உடு உறும் கடு விசை பகழி வாங்கி அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின் - நெடிய கோலை யுடைய உடுச் சேர்ந்த கடிய விசையினை யுடைய அம்பை நிரம்ப வலித்துத் தலைமையினை யுடைய யானை யினது அழகிய முகத்தே எய்கையினாலே,

[1]உடு – நாணைக் கொள்ளும் இடம்.

172 - 5. [புண்ணுமிழ் குருதி முகம் பாய்ந் திழிதரப், புள்ளி வரிநுதல் சிதைய நில்லா, தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள், அணங்குறு மகளி ராடுகளங் கடுப்ப :]

புள்ளி வரி நுதல் சிதைய புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து நெடுவேள் அணங்கு உறு மகளிர் ஆடு களம் கடுப்ப இழிதர - புள்ளி யினையும் புகரினையு முடைய மத்தகம் அழகு அழியும்படி அம்பு பட்டு உருவின புண்களால் உமிழப்படும் குருதி முகத்தே பரந்து [2]முருகனால் வருத்தலுற்ற மகளிர்க்கு மறி அறுத்தாடும் களத்திற் குருதி குதிக்குமாறு போலக் குதிக்கையினாலே,

அயர்ந்து நில்லாது புறம் கொடுத்த பின்னர் – தன்னை மறந்து ஆண்டு நிற்றலாற்றாது முதுகிட்டுப் போன பின்பு,

இதனாலும் ஏதீடு கூறினாள்.

176 - 7. திணி நிலை கடம்பின் திரள் அரை வளைஇய துணை அறை மாலையின் கை பிணி விடேஎம் - திண்ணிய நிலையினை யுடைய கடம்பினது திரண்ட முதலை நெருங்கச் சூழ்ந்த மகளிர் ஒழுங்கிற்கு ஒப்புச் சாற்றுதலை யுடைய மாலை போலே கை கோத்தலை விடேமாய்,

மகளிராடும் களத்தைக் கடப்ப மாலை வளைத்தாற்போல மிகவும் கடப்ப மாலை வளைத்த வென்பாரு முளர்.

178. நுரை உடை கலுழி பாய்தலின் – யாற்றின் நுரையை யுடைய பெருக்கிலே குதிக்கையினாலே,

178 - 9. உரவு திரை அடும் கரை வாழையின் நடுங்க - அத னிடத்துப் பரக்கின்ற திரை மோதி இடிகரையில் நின்ற வாழை போலே கால் தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அது கண்டு,

179 - 81. [பெருந்தகை, அஞ்சிலோதி யசையல் யாவதும், அஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென :] பெரு தகை அம் சில் ஓதி அசை யல் நின் அணி நலம் நுகர்கு யாவதும் அஞ்சல் ஓம்பு என - பெரிய தகுதிப்பாடுடையவன், அழகிய சிலவான மயிரினை யுடையாய்,

---

[1] உடு - சிறகு ; சீவக. 2191, ந. [2]தஞ்சை. 132.

இங்ஙனம் கால் தளர்ந்து ஒழுகாதே என்றெடுத்து, யான் நின் அழகிய நலத்தை நுகர்வேன், நின்னை நீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப் பரிகரியெனச் சொல்லி,

182. மாசு அறு சுடர் நுதல் நீவி - குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத் துடைத்து,

182 - 3. நீடு நினைந்து என் முகம் நோக்கி நக்கனன் - நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழ வேண்டுமென்று நினைந்து என் முகத்தைப் பார்த்துச் சிரித்தான்;

183 - 5. [அந்நிலை, நாணு முட்கு நண்ணு வழி யடைதர, ஒய்யெனப் பிரியவும் விடாஅன் :]

அந் நிலை : பின்னே கூட்டிற்று.

நண்ணுவழி [1] நாணும் உட்கும் அடைதர ஒய்யென பிரியவும் விடாஅன் - அங்ஙனம் அவன் அணுகாநின்ற விடத்துத் தனக்கு இயல்பாகிய [2]நாணமும் அச்சமும் அவ்விடத்தே வந்து தோன்றுகையினாலே விரையத் தன்னிடத்து நின்றும் இவள் நீங்கவும் விடானாய்,

185 - 6. [கவைஇ, ஆக மடைய முயங்கலின் :] அ நிலை (183) கவைஇ ஆகம் அடைய முயங்கலின் - அங்ஙனம் நின்ற நிலையிலே கையாலே அணைத்து இவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்கும்படி தழுவுகையினாலே,

இதனால் ஏதீடும் வேட்கை யுரைத்தலும் கூறினாள்.

186 - 7. [அவ்வழிப், பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை :]

பழு மிளகு உக்க பாறை நெடு சுனை - பழுத்த மிளகு சிந்திக் கிடக்கின்ற கற்பாறையிடத்து நீண்ட சுனையிலே,

188. முழு முதல் கொக்கின் தீ கனி உதிர்ந்தென - பெரிய அடியினை யுடைய மாவினுடைய இனிய பழங்கள் உதிர்ந்தனவாக அப் பழத்தாலும்,

189 - 90. [புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவின், நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல் :]

பலவின் நெகிழ்ந்து உகு நறு பழம் - பலவினுடைய விரிந்து தேன் பரக்கின்ற நறிய பழத்தாலும்,

விளைந்த தேறல் - உண்டான கட்டெளிவு,

புள் எறி பிரசமொடு ஈண்டி - நிரம்புதலால் தன்னை நுகர்கின்ற ஈயினைத் தள்ளி உகுத்த தேனாலே வந்து திரளுகையினாலே,

191. நீர் செத்து அயின்ற தோகை - தனக்கு எளிய நீராகக் கருதி அத் தேறலை உண்ட மயில்,

---

[1] குறிஞ்சிப். 21, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] நாணம் - காமக் குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ளவொடுக்கம் ; அச்சம் - அன்பு காரணத்திற் றோன்றிய உட்கு ; தொல். களவு, சூ. 8. ந.

191 - 2. [*வியலூர்ச், சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி :*] *சாறுகொள் ஆங்கண் வியல் ஊர் விழவு களம் நந்தி* - விழாக் கொள்ளுதற்குரிய அவ் விடங்களை யுடைய அகற்சியை யுடைய ஊர்களில் விழாக் கொள்ளுதலை யுடைய களத்தே மிக்கு,

ஆங்கண் என்றது கோயில்களை.

193. [1] *அரி கூட்டு இன் இயம் கறங்க ஆடும் மகள்* - அரித் தெழுகின்ற ஓசையைக் கூட்டுதலை யுடைய இனிய வாச்சியங்கள் ஒலிப்ப ஆடுகின்ற மகள்,

194. *கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்* - கழாய்க் கயிற் றிலே ஏறி ஆடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளரும் சாரலை யுடைய குன்றென்க.

இதற்கு [2] உள்ளுறையுவமம் கொள்ளுமாறு : — மிளகு உக்க பாறை அந் நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும் பலாப் பழத்தாலும் விளைந்த தேறல் தந்தையாலும் தாயாலும் உளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக் கூட்டின பால்வரை தெய்வமாகவும், அதனை உண்ட மயில் உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு ஒருத்தனாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத் தேறலிற் பிறந்த களிப்புக் களவொழுக் கத்தாற் பிறந்த பேரின்பமாகவும் மயில் ஆட ஆற்றாத தன்மை வருந்திக் குறைந்த தன்மையாகவும் உள்ளுறை யுவமம் கொள்க.

195 - 7. [*வரையர மகளிரிற் சாஅய் விழைதக, விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட், டண்கம ழலரி தாஅய் :*] *விண் பொரும் சென்னி கிளைஇய காந்தள் தண் கமழ் அலரி வரை அரமகளிரின் சாஅய் விழைதக தாஅய்* - விண்ணைத் தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினுடைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள் கீழே வரையர மகளிர் பரந்து விளையாடுதலின் தந்நலம் சிறிது கெட்டு விரும்புதல் தகும்படி கீழே வந்து பரந்து,

---

[1] "அரிக்கூ டின்னியங் கறங்க" (மதுரைக். 612) என்ற அடிக்கும் இதற்கும் சிறிதே வேறுபாடுண்மையும், அதற்கு நச்சினார்க் கினியர் எழுதிய, 'அரித்தெழும் ஓசையை யுடைய சல்லி கரடி முதலியவற்றோடே கூடிய இனிய ஏனை வாச்சியங்கள் ஒலியாநிற்ப' என்ற உரையும் இங்கே கருதற் குரியன.

[2] உள்ளுறை யுவமத்தின் இயல்பை, "உள்ளுறை யுவமம்" (தொல் அகத். சூ. 46) என்னும் சூத்திரம் முதலியவற்றால் உணர்க.

197 - 9. நல் பல வம்பு விரி களத்தின் கவின் பெற பொலிந்த குன்று கெழு நாடன் – நன்றாகிய பலவாகிய கச்சுப் பரந்த களம் போலே அழகு பெறப் பொலிவு பெற்ற மலை பொருந்தின நாடன்,

உயர்ந்த நிலத்தே நின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிரால் கீழ் நிலத்தே பரந்து அவ் விடத்தைக் கச்சு விரித்தாற்போல அழகு பெறுத்து மென்றதனால், நம்மில் உயர்ச்சியை யுடைய தலைவன் நமது நல் வினையால் தனது பெருமைதானும் ஒழிந்து இவ்விடத்தே வந்து கூடி நமக்கும் உயர்ச்சி உளதாக்கி நம்மை அழகு பெறுத்துகின்றானென்று உள்ளுறை யுவமம் எய்திற்று.

199. எம் விழைதரு பெரு விறல் - எம்மை எப்பொழுதும் விரும்புதலைத் தருகின்ற பெரிய வெற்றியை உடையவன்,

200. [உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு :]

அவ் வழி (186) உள்ளம் தன்மை உள்ளினன் கொண்டு – தான் முயங்குகையினாலே அப்பொழுது இவள் உள்ளத்து நிகழுந் தன்மை மேல் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலாயிருக்கு மென்று நினைந்தனனாய் அதனை உட்கொண்டு.

அவ்வழி : இங்கே கூட்டிற்று.

201 - 3. [சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண :]

பலர் உண மலர திறந்த வாயில் வளம் நகர் - பலரும் வந்து உண்ணும்படி அகலக் கதவு திறந்து கிடக்கின்ற வாசலை யுடைய வளநகர்,

மிடாஅ சொன்றி வருநர்க்கு வரையா [1]சாறு அயர்ந்தன்ன வளம் நகர் பொற்ப – மிடாச் சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமல் இடுகின்ற விழாக் கொண்டாடினாற் போன்ற செல்வத்தை யுடைய அகம் பொலிவு பெறும்படி,

முன்புள்ள இயல்பு கூறிற்று.

204. பைந்நிணம் ஒழுகிய நெய் மலி அடிசில் - பசுத்த நிணம் ஒழுகின நெய் மிக்க அடிசிலை நீ இடுகையினாலே,

205 - 6. வசை இல் வான் திணை புரையோர் கடும்பொடு விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்–குற்றம் இல்லாத உயர்ந்த குலத்திற் பிறந்த உயர்ந்தோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை,

206. பெரு தகை - பெரிய தகைமைப்பாடுடையவன்,

207 - 8. நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு அறம் புணை ஆக தேற்றி – நீ இடுகையினாலே யான் உண்டலும் உயர்ந்ததென்று சொல்லி அப்பொழுது இல்லறம் தங்களைக் கரையேற்றுவதாகத் தெளிவித்து,

[1] "அருஅ யாண ரகன்றலைப் பேரூர்ச், சாறு" (பொருந. 1 – 2)

ஓடு ஆலாக்குக.

208 - 10. *பிறங்கு மலை மீமிசை கடவுள் வாழ்த்தி கைதொழுது ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி*-பெரிய மலையில் மிக உயர்ந்த இடத்தே உறைகின்ற முருகனையும் வாழ்த்தி வணங்கி அவன்முன்னே இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினத்தை உண்மையால் தெளிவித்து,

வஞ்சினம் - பிரியின் அறனல்லது செய்தேனேனென்னும் மொழி. முன் தேற்றுதலின், ஏமுறு வஞ்சினமென்றார்.

211. *அம் தீ தெள் நீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து* - அம்மலையில் அழகிய இனிய தெள்ளிய அருவிநீரை அவன் குடிக்கையினாலே இவள் நெஞ்சு சூளுறவிலே பொருந்தி,

நீர் குடித்தலும் ஒரு சூளுறவென்று கொள்க.

நெஞ்சமைந்தென்றும் பாடம்.

212 - 4. *[அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும், பூமலி சோலை யப்பகல் கழிப்பி :] வான் உரிய உறையுள் வயங்கியோர் அவாவும் அரு விடர் அமைந்த பூ மலி சோலை களிறு தரு புணர்ச்சி அ பகல் கழிப்பி* - ஆகாயத்திடத்தே தமக்குரிய இருப்பினையுடைய விளங்கிய தேவர் விரும்பும் அரிய முழைஞ்சுகளினிடத்தே அன்றைப் பகற்பொழுதெல்லாம் போக்கி,

உரிய உறையுள் : விகாரம்.

உண்மை செப்பும் கிளவி கூறினாள்.

215 - 6. *[எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப், பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய :] பல் கதிர் மண்டிலம் ஏழ் ஊர்பு எல்லை செல்ல இறைஞ்சி கல் சேர்பு மறைய*-பல கிரணங்களையுடைய ஞாயிறு ஏழு குதிரை பூண்ட தேரை ஏறிப் பகற்பொழுது போம்படி தாழ்ந்து அத்தகிரியைச் சேர்ந்து மறைகையினாலே,

217. *மான் கணம் மரம் முதல் தெவிட்ட* - மான்திரள் மரத்தடிகளிலே திரள,

தெவிட்டல் – அசையிடுதலுமாம்.

217 - 8. *ஆன் கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர* - பசுவினுடைய திரள் கன்றுகளை அழைக்கும் குரலையுடையவாய் மன்றுகள் நிறையப் புகுதலைச் செய்ய,

219 - 20. *ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில் ஓங்கு இரு பெண்ணை அகம் மடல் அகவ* - ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையை

யுடைய வளைந்த வாயையுடைய அன்றில் உயரும் பெரிய பனையில் உள் மடலிலே இருந்து பேட்டை அழைக்க,

221. பாம்பு மணி உமிழ - [1]பாம்பு தான் மேய்தல் காரணமாகத் தன்னிடத்து மாணிக்கத்தை ஈன,

221 - 2. [பல்வயிற் கோவலர், [2]ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற :] கோவலர் பல் வயின் ஆம்பல் அம் தீ குழல் தெள் விளி பயிற்ற - இடையர் பல இடங்களினும் நின்று [3]ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலும் எழுப்ப,

223. ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட - ஆம்பலினது அழகிய இதழ்கள் தளையவிழ,

223 - 5. [வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, அந்தி யந்தண ரயர :]

அந்தணர் அந்தி அயர - பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யும் தொழில்களை நிகழ்த்த,

வளம் மனை பூ தொடி மகளிர் சுடர் தலை கொளுவி அந்தி அயர - செல்வத்தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய, மகளிர் விளக்கை அவ்விடத்தே கொளுத்தி அந்திக்காலத்திற் றொழிலை நிகழ்த்த,

225 - 6. கானவர் விண் தோய் பணவை மிசை ஞெகிழி பொத்த- அக்காட்டில் வாழ்வார் விண்ணைத் தீண்டுகின்ற பரணின்மேலே தீக்கடை கோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரிப்ப,

---

[1] "அரா......உமிழ்ந்த, மேய்மணி விளக்கின்" (அகநா. 72 : 14-5) என்பதன் உரையில், 'மேய் மணி - மேய்தல் காரணமாக உமிழ்ந்த மணி; விளக்கின் - அதுவே விளக்காக' என்று அதன் உரையாசிரியர் எழுதியிருத்தலும் இச்செய்தியை உணர்த்தும்.

[2] ஆம்பலந் தீங்குழலென்பதற்கு இங்கே உரை கூறியவாறே, "ஆம்பற்குழல்" (கலித். 108 : 62) என்பதற்கு, 'ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே' என்றும், "பையுள்செ யாம்பலும்" (சீவக. 1314) என்றவிடத்து, 'ஆம்பல் - ஆம்பற் பண்ணையுடைய குழல்' என்றும் இவ்வுரையாசிரியர் எழுதுவர்; "ஆம்பலந் தீங்குழல் கேளாமோ" (சிலப். 17 "பாம்பு") என்றவிடத்து, அரும்பதவுரையாசிரியர், "ஆம்பன் முதலானவை சில கருவி; ஆம்பல்-பண்ணுமாம் : 'மொழியாம்பல் வாயாம்பல் முத்தாம்பல்' என்று சொல்லுவர் பண்ணுக்கு" என்றும், அடியார்க்கு நல்லார் ஆம்பற்பண்ணென்பாரை மறுத்து வெண்கலத்தால் குமுதவடிவாக அணைசுபண்ணிச் செறித்த குழலென்றும் எழுதுவர். [3]ஆம்பலென்னும் பண் : "ஆம்பல் - ஆம்பலென்னும் பண்" (சீவக. 1662, ந.)

227. வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப - மேகம் பெரிய மலையிடத்தைச் சூழ்ந்து கறுப்ப,

227 – 8. கானம் கல் என்று இரட்ட - காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக் கூப்பிட,

கானம் : ஆகுபெயர்.

228. புள் இனம் ஒலிப்ப - பறவைகள் குடம்பைக்கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே,

229 – 30. [[1]சினை இய வேந்தன் செல்சமங் கடுப்பத், துனை இய மாலை துன்னுதல் கானூஉ :]

தெவிட்டப் (217) புகுதர (218) அகவ (220) உமிழப் (221) பயிற்றக் (222) கூம்புவிட (223) அயரப் (225) பொத்தக் (226) கறுப்ப (227) இரட்ட ஒலிப்பச் (228) செல்சமங்கடுப்ப (229) மாலை துன்னுதல் கண்டு (230) என முடிக்க.

இவ்வெச்சங்கள் எதிர்காலம் உணர்த்தின. "நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப" (தொல். அகத்திணை. சூ. 12) எனவே காலம் இரண்டு மயங்குமென்றலின் குறிஞ்சியில் மாலைக்காலம் கூறினர்.

231 - 4. [நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட், கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென, ஈர நன் மொழி தீரக் கூறி :]

இலங்கிழையீர் - விளங்குகின்ற பூணினையுடையீர்,

நுமர் நேர் இறை முன்கை பற்றி தர நாடு அறி நல் மணம் அயர்கம் - நும்முடைய சுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய முன்கையைப் பிடித்து எமக்குத் தர நாட்டிலுள்ளாரெல்லாம் அறியும் நன்றாகிய கலியாணத்தினைப் பின்பு நிகழ்த்துவோம்;

சில் நாள் கலங்கல் ஓம்புமின் என ஈரம் நல் மொழி தீர கூறி - யாம் இக்களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பம் பெறுதற்குச் சிறிது நாள் இங்ஙனம் ஒழுகாநின்றேமென்று நெஞ்சு கலங்குதலைப் பாது காப்பீராக என்று அருளுடைத்தாகிய நல்ல வார்த்தையை இவள் நெஞ்சில் வருத்தம் தீரும்படி சொல்லி,

235. [2]துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து - ஆவைப் புணர்ந்த ஏறுபோலே விடாமல் எம்முடனே கூடவந்து.

---

[1] இதற்கு உரை கிடைத்திலது : சினை இய - கோபித்த. சமம் - போர். துனை இய - விரைந்த.

[2] 135 - 6-ஆம் அடிகளின் உரையைப் பார்க்க.

236 - 7. துஞ்சா முழவின் முது ஊர் வாயில் உண் துறை நிறுத்து பெயர்ந்தனன் - ஓசையை ஒருகாலும் அறுத முழவினை உடைய பழைய நம்மூர் வாசலில் பலரும் நீர் உண்ணும் துறையிலே எம்மை நிறுத்தி மீண்டு போனுன்;

இதனால் வேட்கையுரைத்தல் கூறினுள்.

237 - 9. அதன் கொண்டு அன்றை அன்ன விருப்போடு என்றும் இர வரல் மாலையன் - அப்புணர்ச்சி தொடங்கி அம்முதல் நாள்போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இரவுக்குறியிலே வருதலைத் தனக்கு இயல்பாக உடையவன்;

ஏகாரம் : ஈற்றசை.

239 - 41. வருதோறும் [1]காவலர் கடுகினும் கதம் நாய் குரைப் பினும் நீ துயில் எழினும் நிலவு வெளிப்படினும் - அங்ஙனம் வரும்போ தெல்லாம் ஊர்காவலர் கடுகிக் காத்தாராயினும் கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும் நீ துயிலுணர்ந்தாயாயினும் நிலவு வெளியாக எறித்ததாயினும்,

242. வேய்புரை மெல் தோள் இன் துயில் பெருஅன் (243) - மூங்கிலையொத்த மெல்லிய தோளிற் பெறும் இனிய துயிலைப் பெருது போவன்;

243. பெயரினும் முனியல் உருஅன் - யாங்கள் [2]குறியல்ல

---

[1] காவலர் கடுகுதல், கதநாய் குரைத்தல், தாய் துயிலாமை, நிலவு வெளிப்படல் முதலியவற்றை, "காணு வகையிற் பொழுதுநனி யிகப் பின்" நிகழும் தலைவிக்குரிய கிளவியுள் (களவு. சூ. 16) தொல்காப் பியனாரும், வரைதல் வேட்கைப் பொருளதாகிய, காப்புச்சிறை மிக்க கையறு கிளவியுள் (சூ. 30) களவியலாசிரியரும், வரைவு கடாதற் பகுதி யிற் காப்பிடையீட்டிற் கையறு கிளவியுள் தமிழ்நெறிவிளக்கவாசிரி யரும், காப்புமிகுதிசொல்லி வரவு விலக்குவித்தலாகிய கையறுகிளவி யுள் ஒருபழைய இலக்கணநூலுரையாசிரியரும், இரவுக்குறியிடையீட் டில் தலைவன் வருந்தொழிற் கருமைக்குப் பொருந்துவனவென (சூ. 161) நாற்கவிராச நம்பியும் அடக்குவர். இத்துறைகள் ஒருங்கே வந்த தற்கு அவருட் சிலர் காட்டும் உதாரணங்களுட் கீழ்வருவன இங்கே பயன்படுவன; "யாயே துயின்மறந் தனளே யாயினும், நாயு மூரு நனிதுஞ் சலவே, காவல ரதனினுந் துயிலார் துயிலினும், ஆய்கதிர் மதியமின் றலரும், யாவ தாங்கொ லேந்திழை நிலையே" (பொரு ளியல்), "ஊர்துயிலி னுய்துயிலா வொண்டொடி யூர்காக்கும், பேர் துயிலு மாறுருகாற் பெற்றாலும் - நேர்துயிலாள், அன்னை நெடு நிலாவல்லும் பகலாகும், என்னை வருவது நீ யிங்கு" (களவித்தெளிவு.)

[2] இதனைக் குறி பிழைத்தலென்றும், அல்ல குறிப்படுதலென்றும் கூறுவர்.

தனைக் குறியாகக் கருதிச் செல்லாநின்று மீண்டும் மனையிடத்தே புகி னும் அதற்கு வெறுத்தலைச் செய்யான்;

244. இளமையின் இகந்தன்றும் இலனே - அவன்முன் இள மைப் பருவத்தைக் கடந்ததும் இலன்:

244 - 5. [வளமையிற், றன்னிலை திரீந்தன்று மிலனே :]வளமை யின் என்றும் (242) தன் நிலை திரீந்தன்றும் இலனே - நற்குணங் களைத் திரித்தற்குரிய [1]செல்வச் செருக்கான் எந்நாளும் தன் குலத் திற்குரிய நற்குணங்களின் நீங்கியதூம் இலன்;

ஏகாரங்கள் : ஈற்றசை.

245 - 6. கொன் ஊர் மாயம் வரவின் இயல்பு நினைஇ தேற்றி - [2]அலர் முதலியவற்றுன் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே தனக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக் குறியிலே கூடுதற்கு வரு கின்ற வரவினது தன்மையை இஃது ஒழுக்கமன்றென்று நினைத்து அவன் வரைந்துகொள்ள இல்லறம் நிகழ்த்துதலே நல்லொழுக்க மென்று துணிகையினாலே,

247 - 8. [நீரெறி மலரிற் சாஅயிதழ் சோரா, ஈரிய கலுழு மிவள் பெருமதர் மழைக்கண் :] இவள் பெரு மதர் மழை கண் நீர் எரி மலரின் சாஅய் இதழ் சோரா ஈரிய கலுழும்-இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள் பெருந்துளி எறிந்து பெய்த மலர்போலே அழகு கெட்டு இமை சோர்ந்து ஈரத்தினை உடையவாய்க் கலங்கா நிற்கும்;

249-61. [ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும், வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய், நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்குல், அளைச்செறி யுழுவையு மாளியு முளியமும், புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும், வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத், துரு முஞ் சூரு மிரைதே ரரவமும், ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங் கும், கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும், நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும், பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும், வழுவின் வழாஅ விழுமமவர், குழுமலை விடரக முடையவா லெனவே :]

---

[1] "அறநி ரம்பிய வருளுடைய யருந்தவர்க் கேனும், பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்"(கம்ப. மந்தரை. 70);"செல் வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணுர், சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார், வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணுர், வல்வினை விளைவு மோரார் மண் ணின்மேல் வாழு மாந்தர்" (வி - பா. கிருட்டினன். 143)

[2] அலர் - பலரறிந்து கூறும் பழிமொழி; "அலரென்பது இன்னு னொடு இன்னுளிடையதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது" (இறை. சூ. 22, உரை.)

இவள் நினைத்தொறும் (251) வலை படு மஞ்ஞையின் நலம் செல சாஅய் (250) அரி பனி நாளும் ஆகத்து உறைப்ப (249) கலுழும் (251) - இவள் அங்ஙனம் கண் அழுகின்றதற்கு மேலே அவர் வருகின்ற மலை இடும்பை உடையவாயிருக்குமென்று நினைக்குந்தோறும் வலையில் அகப்பட்ட மயில்போலே நன்னலம் போம்படி நுணுகிக் கண்ணில் அரித்து வீழ்கின்ற நீர் நாள்தோறும் மார்பிலே துளிப்பக் கலங்காநிற்கும்;

கங்குல் (251) – இராக் காலத்து,

அளை செறி உழுவையும் (252) – முழைஞ்சிடத்திலே செறியும் புலிகளும்,

யாளியும் (252) - யாளிகளும்,

உளியமும் (252) - கரடியும்,

புழல் கோடு ஆமான் புகல்வியும் (253) - உள்ளுப் பொய்யான கொம்பையுடைய ஆமானில் ஏறும்,

களிறும் (253) – யானையும்,

வலியின் [1]தப்பும் வன்கண் வெ சினத்து (254) உருமும் (255) - வலியினால் கெடுக்கும் தறுகண்மையை உடைத்தாகிய வெவ்விய சினத்தையுடைய உருமேறும்,

சூரும் (255) – கொடுந் தெய்வமும்,

இரை தேர் அரவமும் (255) - இரை தேடித் திரியும் பாம்பும்,

ஒடுங்கு இரு குட்டத்து அரு சுழி வழங்கும் (256) கொடு தாள் முதலையும் இடங்கரும் கராமும் (257) - புடைபட்ட கரிய ஆழத்திடத்துப் போதற்கரிய சுழியிடத்தே திரியும் வளைந்த தாளையுடைய முதலையும் இடங்கரும் கராமும்,

இவை மூன்றும் சாதி விசேடம்.

நூழிலும் (258)-வழிபறிப்பார் கொன்று குவிக்கும் இடங்களும், [2]நூழில், கொடிப்பிணக்கென்பாருமுளர்,

இழுக்கும் (258) - வழுக்கு நிலமும்,

ஊழ் அடி முட்டமும் (258) - முறையடிப்பாடாய்ப் பின்பு வழி முட்டாயிருக்கும் இடங்களும்,

[3]பழுவும் (259) - பிசாசும்,

பாந்தளும் (249) - பெரும்பாம்பும்,

உளப்பட பிறவும் (259) வழுவின் வழாஅ விழுமம் (260) - உழுவை முதலாக எண்ணப்பட்ட இவையெல்லாம் உட்பட வேறும் தப்பும் செயலில் தப்பாத இடும்பை தருவனவற்றை,

---

[1] தப்பல் - கொல்லுதல் : பெரும்பாண். 42 - 5, ந. அடிக்குறிப்பைப் பார்க்க.

[2] நூழிற்கொடி : சீவக. 196, ந; பு. வெ. 321.

[3] குறுந். 180 : 1.

விழுமம் செய்வனவற்றை விழுமமென்றார்; இஃது ஆகுபெயர்.

அவர் (260) குழு மலை விடர் அகம் உடைய ஆல் என (261) - தலைவருடைய கிளையை உடைத்தாகிய மலையின் முழைஞ்சிடம் உடையவாயிருக்கு மென்று.

அன்னாய் வாழி; அன்னாய் யான் கூறுகின்றதனை விரும்புவாயாக (1); நீயும் எய்யா மையலையாகி வருந்துதி (8); இவளும் (26) ஏனை உலகத்தும் இயைவதாலெனக் கூறி(24)மெலியும் (26); யானும் (29) சான்றோர்போல (28) வருந்தாநின்றேன் (29); எண்ணாது (31) எமியேம் துணிந்த அருவினை (32) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (38) செப்புதலை அமைந்தேன்; அது கேட்கச் சினவாதீமோ (34); தினையிற் படுபுள்ளோப்பி (38) வருதியரென நீ போக விடுகையிலே (39) யாங்களும் போய் இதணமேறிக்(41)கிளிகடி மரபினவற்றை வாங்கி (44) ஒட்டிக்(101)கொண்டூப் (50) பொழிந்தெதன (53) நெடுங்கோட்டிழிதரும் தெண்ணீ (54) ரருவி (55) யாடிப் (56) பாய்சுனை குடைவுழிப் (57) பாயம் பாடிக் (58) கூந்தலைப் பிழிவனந் துவரிச் (60) சிவந்த கண்ணேமாய் (61) மலிவன மறுகிப் (97) பரேரம் புழகுடனே (96) காந்தள் முதலியவற்றையும் பிறவற்றையும் (62 - 95) பாறையிலே குவித்துத் (98) தெள்விளி பயிற்றி (100) ஒப்பியும் (101) தழை தைஇ உடுத்துக் (102) கோதையை (103) முச்சியிலே கட்டிச் (104) செயலைத் (105) தண்ணிழலிலே யிருந்தனமாக (106), குன்று கெழு நாடனாகிய எம் பெருவிறல் (199) அணி பெற வந்து (136) இளையீர், இறந்த (141) கெடுதியு முடையேனென்றனன்; அதனெதிர் (142) சொல்லே மாதலிற் கலங்கி (143) மெல்லியலீர், சொல்லலும் பழியோ வெனச் சொல்லி (145) ஓச்சி (150) அவித்துச் (151) சொல்லற் பாணி நின்றனனாக (152), வேழம் எதிர் தருகையினாலே (165) விரைந்தவற் பொருந்தி (168) நடுங்காநிற்கப் (169) பகழியை வாங்கி (170) அணிமுகத் தழுத்தலின் (171), அது புறங் கொடுத்த பின் (174) கலுழி பாய்தலின் (178) வாழைமயி னடுங்கினமாக, அது கண்டு பெருந்தகை (179) எடுத்து அஞ்ச லோம்பெனச் சொல்லி (181) நீவி நினைந்து (182) என்முகம் நோக்கி நக்கனன் (183); அவ்வழி நாணும் உட்கும் அடைதருகையினாலே (184) இவள் நீங்கவும் விடாளாய் (185) அந்நிலை (183) முயங்கலின், அவ் வழி (186) இவளுள்ளத் தன்மை உள்ளினனாய் அதனை யுட்கொண்டு (200) விருந்துண் டெஞ்சிய மிச்சிலை (206) நீ இடுகையினாலே யானுண்டலும் புரைவ தென்று சொல்லித் (207) தேற்றிப் (208) பெருந்தகை (206) கடவுளும் வாழ்த்திக் கை தொழுது (209) வஞ்சினம் வாய்மையிற் றேற்றித் (210) தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து (211) சோலையிலே (214) களிதரு புணர்ச்சியைக் (212) கழிப்பி (214) மண்டிலம் மறைகையினாலே (216) மாலை துன்னுதல் கண்டு (230) இலங்கிழையீர், கலங்கலோம்புமினென

(233) ஈர நன்மொழி கூறி (234) எம்மொடு வந்து (235) உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்; அதற் கொண்டு (237) என்றும் (238) இரவில் வருமாலையன் ; வருதோறும் (239) கடுகினும் குரைப்பினும் (240) துயிலெழினும் வெளிப்படினும் (241) இன்றுயில் (242) பெருமற் போவன் (243) ; அதுவே யன்றிப் பெயரினும் முனியலுறுன் (243) ; இகந் தன்றுமிலன் (244) ; என்றும் (242) தீர்ந்தன்று மிலாதவன் (245) மாயவரவி னியல்பு நினைந்து தேற்று கையினாலே (246) இவள் கலுழும் (248); அங்ஙனம் அழுகின்ற தற்கு மேலே அவர் வருகின்ற (260) குழுமலை விடரகம் (261) விழுமம் (260) உடைய வென (261) நினையுந்தோறும் (251) சாஅய் (250) உறைப்பக் (249) கலங்காசிற்கும் (251); இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ண மென்றுரெளன வினை முடிக்க.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

வெண்பா

1. நின்குற்ற மில்லை நிறைதொடியும் பண்புடையள்
என்குற்றம் யானு முணர்கலேன் – பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
தெரியுங்காற் றீய திலன்.

2. ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையாக் [1]குறிஞ்சிக் குணம்.

---

[1] குறிஞ்சி யென்றது இந்த நூலை.

ஒன்பதாவது

*பட்டினப் பாலை

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி

* இது வஞ்சி நெடும்பாட்டெனவும் வழங்கும்; "பட்டினப் பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டு ஆசிரியவடி விரவிவந்த ஏந்திசைத் தூங்கல் விரவியற் குறளடி வஞ்சிப்பா" (யா. வி. செய். சூ. 37); "பட்டினப் பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டினுள் ஆசிரியவடி பயின்று வந்தன; கலியடியும் வெள்ளடியும் அருகினவெனக் கொள்க" (யா. கா. ஒழிபு. 4; இ. வி. சூ. 745, உரை); "பாடிய வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு, கோடிபொன் கொண்டதுமின் கொற்றமே" (தமிழ்விடு கண்ணி, 193)

1. மூவசைச் சீருக்கும் (தொல். செய். சூ. 12, ந.), வஞ்சியுறுப் பாகிய செய்யுளுக்கும் (தொல். செய். சூ, 105, ந.) இவ்வடி மேற்கோள்.

1–2. மதுரைக். 108, ந. அடிக்குறிப்.; புறநா. 386:22, அடிக் குறிப்.

இவ்வடிகள் தூங்கல்வண்ணத்திற்கும் (தொல். செய். சூ. 220, இளம். மூவசைச் சீருக்கும் (தொல். செய். சூ. 12, பேர்.), வஞ்சி யுறுப்பாகி வந்த செய்யுட்கும் (தொல். செய். சூ. 105, பேர்.) மேற் கோள்.

4. தொல். புள்ளி. சூ. 102, ந. மேற்.

3 - 4. "துளிநசை வேட்கையான் மிசை பாடும் புள்" (கலித். 46: 20); "துளிநசைப்புள்" (புறநா. 198 : 25); "வானம்பாடி மேகத் துப் பிறந்த துளியையே நச்சிப் பாடுமாறு போல" (சீவக. 2397, ந.); தக்க. 606.

1 - 4. "அவையாமாறு : 'வசையில்......உணவின்' எனத் தன்சீர் வரத் தூங்கலோசை பிறந்தது;......'புட்......மாறி' என் பதும் வெண்பாவுரிச்சீரால் தூங்கலோசை பிறந்தது;'புட்......மாறி' என்புழி, 'வசையில்......மீன்' எனத் தனது சீரானே தூங்கலோசை பிறந்தாங்குப் பிறந்தது; 'திசை......ஏகினும்' என இயற்சீர் நிற்பத் தன் சீரானே தூங்கலோசை பிறந்தது" (தொல். செய்.சூ. 22,பேர்.); " 'வசையில்......மீன்' எனத் தன் முன்னர்த் தான் வந்தும், 'திசை...

வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவரு வியன்கழனித்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கண்
காய்ச்செந்நெற் கதிரருந்தும்
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்

ஏகினும்' என இயற்சீர் நிற்பத் தன் சீர் வந்தும் 'தற்......உணவின்' எனத் தன்முன்னர் வெண்சீர் வந்தும், 'புட்......மாறி' என இரண்டு வெண்சீர் வந்தும்... ..தூங்கலோசை பிறக்குமென்றுணர்க'' (தொல். செய், சூ. 22, ந.)

3 - 5. ''தற்பாடு பறவை பசிப்பப் பசையற, நீர்சூல் கொள்ளாது மாறிக் கால்பொரச், சீரை வெண்டலைச் சிறுபுன் கொண்மூ'' (ஆசிரிய மாலை)

6. ''மலைத்தலைத் தொடுத்த மல்லற் பேரியாற்று'' (பெருங். 3. 24 : 15); ''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்'' (கம்ப. ஆற்றுப். 19)

5 - 6. பொய்யாக் காவிரி : ''இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும், அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட'' (புறநா. 35 : 7 – 8); ''கரியவன்புகையினும் புகைக்கொடிதோன்றினும்,விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்......காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை'' (சிலப். 10 : 10 2- 8); ''கோணிலை திரிந்து கோடை நீடினும், தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'', ''தவாநீர்க் காவிரிப் பாவை'' (மணி. பதிகம், 24 - 5, 3 : 55); ''பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யா தளிக்கும் புனனாட்டு'' (பெரிய. சண்டேச. 1); ''பொய்யாத பொன்னி'' (விக்கிரம. உலா, 40 - 41); ''வற்றாத பொன்னிநதி'' (குலோத். பிள்ளைத்.); ''வாழிவற் றாத காவிரி'' (தக்க. 812); ''காவிரி யென்னத் தப்பாக் கருணையான்'' (வி - பா. அருச்சுனன் றவநிலை. 24.)

11. குறுந். 309 : 6 – 6.

13. (பி - ம்.) 'கதிரருந்தி'

14 - 5. குழவியென்னும் இளமைப்பெயர் எருமைக்கும் உரித்தென்பதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். மரபு. சூ. 20, பேர்.

கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்சள்
இனமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கின்
நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்

---

16. கோட்டெங்கு : பெருங். 2. 9 : 9.
கோள், கொத்தினை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கொள்; தஞ்சை. 85, உரை.

22. "வஞ்சியுள், நேரிழை......கவருமென்ற ஆசிரியவடியினை நாலசைச்சீர் காட்ட வேண்டுவார் இருசீரடியாக உரைப்பினும் அவற்றிற்குத் தூங்கலோசை யின்றாகலானும் சீர் தம்முட் புணர்ந்திடுதல் இன்மையானும் வஞ்சிச்சீர் அறுபது காட்டுகின்றவழி யாண்டும் நேர்பசை நிரைபசைகள் அலகு பெறுமையானும் தொல்காப்பியனார் கொள்ளார்" (தொல். செய். சூ. 12. ந.) "பட்டினப் பாலையென்னும் வஞ்சி நெடும் பாட்டினுள், 'நேரிழை......கவரும்' என்றித் தொடக்கத்தன ஆசிரியவடி" (யா - வி. அடியோத்து, சூ. 9); நேரிழை மகளிர் : யா. வி. செய். சூ- 5; மேற்.

23. "கோழி விட்டெறி குழையினை" (ஆனைக்காப். திருநாட்டுப். 122)
"குழைகொண்டு கோழி யெறியும் வாழ்க்கைய ரென்றவழி, கோழி யெறிவாரென்று உணரற்பாலதன்று; ஒன்றானும் முட்டில் செல்வத்தாரென்றவாறு" (நன். சூ. 407, மயிலை.)

22 - 3. வஞ்சிப்பாவில் ஆசிரியவடியும் வெண்பாவடியும் விரவி வந்ததற்கு முறையே இவ்வடிகள் மேற்கோள்; தொல். செய். சூ. 111, இளம்; தொல். செய். சூ. 71, பேர், ந.; யா. கா. ஒழிபு. 4, உரை; இ. வி. 745, உரை.

24 - 5. பெரும்பாண். 248 - 9, அடிக்குறிப்பு; "பூங்கட் புதல்வர் நடைத்தேர்" (பு. வெ. 43.)

22 - 6. "பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதகம், நற்சிறுரூர்தலி னங்கை மார்வீசீஇ, உற்றவர் கோழிமே லெறிந்த வொண்குழை, மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே" (சீவக. 89)

கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்கும்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
இருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவின்
திருத்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
அறநிலைஇய வகனட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி

---

26. "குறும்ப லூரயாஞ் செல்லு மாறே" (நற். 9 : 12)

29. "வெண்க லுப்பின் கொள்ளை சாற்றி" (நற். 4: 8; அகநா. 140: 3); "தெண்கழி விளைந்தவெண்க லுப்பின்,கொள்ளை சாற்றிய" (அகநா. 159 : 1 - 2)

29 - 30. உப்பிற்கு விலையாக நெல்லைக் கொள்ளுதல் : "உப்பை மாறி வெண்ணெற் றரீஇய" (குறுந். 269 :5); "நெல்லி னேரே வெண்க லுப்பென" (அகநா. 140 : 7)

39. "இருகாமத்திணையேரி போலும் குளங்களிலும்......விளையாடி" (தொல். கற்பு. சூ. 50, ந.)

"இக்குண்டம் இரண்டிற்கும் இவ்வுலகத் தின்புறலும், போக பூமியிற் பிறத்தலும் கிரனிறை யாக்கலும் ஒன்று; அவற்றை, 'இருகாமத் திணையேரி' என்றார் பட்டினப்பாலையிலும்" (சிலப். 9 : 54-64, அடியார்.)

40. புலிப்பொறி : பட்டினப். 135.

போர்க்கதவு : மதுரைக். 354, ந. அடிக்குறிப்; சிலப். 10 : 7, அரும்பத. அடியார்.

41. "திருசிலைஇய பெருமன்னெயில்" (பட்டினப். 291)

ஏறுபொரச் சேறுகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறுடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டும்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவின்
அவிர்சடை முனிவ ரங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்
தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
இருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்

---

46 - 7. " 'சோறு......ஒழுகி' என்பதோவெனின், யாறென்ற துணையானே பேரியாறெனக் கொண்டு உலகிறந்தன ஆகாமைக் கன்றே. 'ஏறுபொர......கெழுமி' என்பதாயிற்றென்பது" (தொல். உவம. சூ. 10, பேர்.)

48. *நீறுடிய களிறு* : கலித். 97 : 9 – 10.

64 - 5. இவ்வடிகள், வஞ்சிப்பாவிற் கலியடி வந்ததற்கு மேற்கோள்; தொல். செய். சூ, 111, இளம்; இ. வி. அடியோத்து சூ. 8; யா. கா. ஒழிபு. 4, உரை; இ. வி. சூ. 745, உரை.

தொல். செய். சூ. 108, பேர். மேற்.

67. *நீனிற விசும்பு*: முருகு. 116, அடிக்குறிப்.

வலனேர்பு திரிதரு : முருகு. 1.

கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போ
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்பண்
நிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன்முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினுல்

78. பெரும்பாண். 119 – 20, அடிக்குறிப்.

78 - 9. "பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல், வேலூன்று பலகை" (அகநா. 67 : 9 – 11, 131 : 10 - 12)

82 - 3. நிலவு மணலுக்கு: பொருந. 213, அடிக்குறிப்.

85. வெண்கூதாளம் : முருகு. 192.

கூதாளியென்பது அம்முப்பெற்று இகரம் கெட்டும், பின் அத்துப் பெற்று மகரம் கெட்டும் வருவதற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல்; உயிர். சூ. 44, ந.

86 - 7. "சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்" (பெரிய. திருக்குறிப்பு. 7); "விருப்பின் மீன்கவர் வினைஞர் கோட்சுறு, மருப்பி னுடலும் வருதன் மாண்புணர்ந், தொருப்பட் டேர்ம்புன லும்பற் போற்றித்தங், கருத்து வாய்ப்பது கருங்க டற்புறம்" (தணிகைப். திருநாட்டுப். 136); "புறவுக் கோட்டஞ் செயும்வனப்பிற் பூவை மொழியார் விழிதான்வாழ், இறவுக் கோட்டுக் கடல்பணிக்கு மெழிலா லவர்நாட் டினரிறைஞ்சும், சுறவுக் கோட்டுட் கடலரசன் றேன்றி வரங்க ளினிதருளும், நறவுக் கோட்டு மலர்ப்புன்னை ஞாழற் பொதும்ப ரெவ்விடனும்" (ஆனைக்காப். நாட்டு. 96)

மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானல்
மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்
மலியோதத் தொலிகூடல்
தீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்தும்
அலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்தும்
மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்

''இனி, நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலைவளந் தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படுமென்றார்; அவை, 'சினைச்...... வல்லணங்கினால்'......எனவும் வரும்'' (தொல். அகத்திணை.சூ. 5, ந.)

92. பாயிரும் பனிக்கடல் : பரி. 5 : 1.

கடல் வேட்டம் : ''எல்லிமிழ் பனிக்கடன் மல்குசுடர்க் கொளீஇ, எமரும் வேட்டம் புக்கனர்'' (நற். 67 : 8 - 9); ''பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்'' (அகநா. 140 : 1)

95 - 6. ''தாய்முலை தழுவிய குழவி போலவும், மாமலை தழுவியு மஞ்சு போலவும்'' (சீவக. 100)

101. அலவனாட்டுதல் : குறுந். 303 : 5 - 7, 316 : 5 - 6.

103 - 5. பெரும்பாண். 387 - 9.

மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுடரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்தும்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டும்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவில்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்

---

109 - 10. மதுரைக். 264 - 6, ந. அடிக்குறிப்; பரி. 6 : 16, உரை; கலித். 66 : 15 - 6; சீவக. 2119.

112. "பரதவர், திண்டிமில் விளக்க மெண்ணும்" (நற். 372 : 11 - 2)

113. "நாடகங் கண்டு பாடற்பான்மையிற், கேள்வி யின்னிசை கேட்டு" (மணி. 25 : 82 – 3); ஆடல் கண்டும் பாடல் கேட்டும்" (பெருங். 3. 23: 6); "பொன்னுர் கூத்து மன்னுர், நாவல ரமுத மன்ன பாடலு நாக நாட்டுக், காவலன் கண்டு கேட்டுக் களிமதுக் கடலி லாழ்ந்தான்" (திருவிளை. 1 : 3); "அன்புறு கீதங் கேட்டு நாடகங் கண்ட மர்ந்தும்" (வாயு. காலவியல்பு. 4)

114. நெடுநல். 95, அடிக்குறிப்.

119. வேலாழி : "வேலாழி சூழுலகில்" (திணைமாலை. 62)

125. "உல்குடைப் பெருவழி" (பெரும்பாண். 81)

129. (பி - ம்.) 'ஏறவும்'

அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
ஏழகத் தகரோ டுகளு முன்றில்
குறுந்தொடை நெடும்படிக்கால்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பின்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குல்
தூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
ஓங்குவரை மருங்கி னுண்டா துறைக்கும்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்

---

139. (பி – ம்) 'வரைபாய் வருடை'

144. புழைவாயில் : "வாயி லொடு புழையமைத்து" (பட்டினப். 287)

இடைகழி : சீவக. 399.

146. செறிகுறங்கு : "சேர்ந்துடன் செறிந்த குறங்கின்" (சிறுபாண். 20)

150. கிளிமழலை : "வாய்திறந்து, கிளிபுரை கிளவியாம் பெறுக" (பொருளியல்); "மாதர்ப் பைங்கிளி மழலை" (பெருங். 2. 12 : 138)

153 - 4. முல்லை. 95; "சிலம்புகமழ் காந்த ணறுங்குலை யன்ன, நலம்பெறு கையின்" (ஐங். 293 : 1 -2); "கொடிச்சியர் கூப்பி வரை தொழு கைபோ, லெடுத்த நறவின் குலையலங் காந்தள்", "அடுக்கநா

வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்

றலர்காந்த ளுண்ணேர்தண் ணேருருவிற், றுடுப்பெனப் புரையுநின் றிரண்டநே ரரிமுன்கை'' (கலித். 40 : 11 - 2, 59 : 3 - 4)

156 - 7. குழல், யாழ், முழவு; ''*குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித், தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப், பின்வழி நின்றது முழவே*'' (சிலப். 3 : 139 - 41)

158. மதுரைக். 328, அடிக்குறிப்.

158 - 60. மதுரைக். 365 - 6.

167. ''*பவழத் திண்காழ் கம்பலக் கிடுகி னூன்றி*'', ''*பவழக்கா றிகழும் பைம்பொற் பெருங்கிடுகு*'' (சீவக. 113, 2975); ''*காழுங் கிடுகும்போ னிற்கும்*'' (அறநெறி. 84)

167 - 8. அங்காடியில் இருக்கும் கொடிகள் : மதுரைக். 365 - 73, அடிக்குறிப். ''*கொடிநிழற் பட்ட பொன்னுடை நியமத்து*'' (பதிற். 15 : 19)

169. ''*பரந்த கேள்வித் துறைபோய பைந்தார் மார்பன்*'' (சீவக. 717)

169 - 70. மதுரைக். 760 - 61.

169 – 71. கல்வியில் வல்லோர் கொடியெடுத்தல், மதுரைக் காஞ்சி, 372-ஆம் அடியின் விசேடவுரையாலும், ''கூழைத்தண் டமிழுக்கேன் கொடியுங்கா ளமுமே'' (தமிழ்நா. 119) என்ற ஒட்டக் கூத்தர் வாக்காலும் உணரப்படும்.

வெளிலிளக்குங் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியும்
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றில்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவின்
நறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பின்
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்

---

172 - 4. நாவாய்க்குக் களிறு: மதுரைக். 375 - 83, அடிக்குறிப்; புறநா. 13 : 5; ''நாவாய்போற் றோன்றுமே.........களிறு'' (முத்.)

175. கூம்பின் கொடி : ''ஆடுகொடி யுச்சியணி கூம்பின்'' (சீவக. 501)

180. பெரும்பாண். 337, அடிக்குறிப்.

178 – 80. பெரும்பாண். 337 – 8, அடிக்குறிப்.

187. ''வடதிசை மாமலைச் சுடர்விடு பொன்னும்'' (பெருங். 1. 58 : 33)

188. ''அந்தண் பொதியிற் சந்தன மரமும்'' (பெருங். 1. 58 : 30)

189. ''தென்பவ்வத்து முத்துப்பூண்டு'' (புறநா. 380 : 1); ''தென்கடன் முத்தும்'' (சிலப். 8 : 19); ''வெண்டிரைத் தென்கடன் முத்தும்'' (தஞ்சை. 93). ''அகழ்கடற் பிறந்த வாசறு பேரொளிப், பவழக் கடிகை'' (பெருங். 2. 15 : 80 – 81) : அகழ்கடல் - கீழ்கடல்.

அரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்
நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்
ஏமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன் றின் மீன்பிறழவும்
விலைஞர் குரம்பை மாவீண்டவும்
கொலைகடிந்துங் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்

---

192. (பி - ம்.) 'நெளிய வீண்டி'

185 - 92. இவ்வடிகள், அரும்பொருளிவை யென்பதற்கு மேற்கோள்; சிலப். 2 : 5, அடியார்.

200. மு. புறநா. 99 : 1; ஞான. 17.

202. "துளங்கெரியவர் புகழ்துளக்கிலை" (யா. வி. சூ. 86, மேற்.)

206 - 7. "பால்கொள லின்றிப் பகல்போன் முறைக்கோடாக், கோல்செம்மை" (கலித். 86 : 17 - 8) ; "ஒத்துச் சகத்தனைய் நின் றொழுகுஞ் சால்பு தவமே, நுகத்துப் பகலாணி போன்று" (பழ. 95); "பகலென்ன வாய்மொழி - நுகத்திற் பகலாணி போன்ற நடுநிலைச் சொல்" (பு. வெ. 157); "நுகத்திற் பகலனையாய்" (தஞ்சை. 48)

210. (பி - ம்.) 'குறைபடாது'

206 - 10. இவை வணிகர் குலத்திற் குன்றுமைக்கு மேற்கோள்; சிலப். 2 : 8, அடியார்.

210 - 11. "வணிகர்க்கு உரிய விரதமாவன, கொள்வதூஉம் மிகை கொள்ளாது கொடுப்பதூஉங் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்தீதல் முதலியன" (தொல். அகத்திணை. சூ. 28, ந.); "கொடுப்பது குறையின்றிக் கொள்வது மிகையின்றி.........வணிகர் கண் மற்றறியார்" (விநாயக. நகர. 88)

தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள்வளர்ந் தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாய மூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்

---

209 - 12. ''பிறவுந் தமபோற் செய்தலாவது, கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நாடிச் செய்தல்'' (குறள். 120, பரிமேல்.)

206 - 13. பெருங். 5. 1 : 6.

214. முதுவாய் : பட். 253 : முருகு. 284; சிறுபாண். 40; பதிற். 66 : 3.

218. இவ்வடி வல்லிசை வண்ணத்திற்கு மேற்கோள்; தொல். செய். சூ. 217, பேர்.

220. ''வாரே னெஞ்சம் வாய்க்கநின் வினையே'' (அகநா. 131 : 15).

218 – 20. ''இருங்கண் ஞாலத் திண்டுபயப் பெருவளம், ஒருங்குட னியவை தாயினும்.........தோலமை குறுந்தொடிக் குறுமக ளொழிய, வாள்வினை மருங்கிற் பிரியார்'' (குறுந். 267 : 1 - 6)

223 - 4. ''மாப்பயம்பின் பொறைபோற்றாது, நீடுகுழி யகப் பட்ட, பீடுடைய வெறுழ்மூன்பிற், கோடுமுற்றிய கொல்களிறு, நிலை கலங்கக் குழிகொன்று, கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு'' (புறநா. 17 : 14 - 9)

கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்
உகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்

---

229 – 30. "கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர், முடியிடறித் தேய்ந்த நகமும்........பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே, கல்லார்தோட் கிள்ளி களிறு" (முத்.)

229 - 31. கதவு கொல் மருப்பின்.........யானை : "கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து, நுதிமுக மழுகிய மண்ணைவெண் கோட்டுச், சிறுகண் யானை", "பெருங்கதவு பொருத யானை மருப்பின்" (அகநா. 24 : 11 - 3, 26 : 6); "எயிறு படையாக வெயிற்கத விடாஅ........, பெருங்கை யானை" "களிறு, கதவெறி யாச் சிவந்துராஅய், நுதிமழுங்கிய வெண்கோட்டான், உயிருண் ணுங் கூற்றுப் போன்றன", "களிறே, எழூஉத் தாங்கிய கதவு மலைத்தவர், குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற், பரூஉப்பிணிய தொடிகழிந் தனவே" (புறநா. 3 : 9 – 11, 4 : 10 – 12, 97 : 8 - 10); "அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்னர், எயிற் கதவங் கோத்தெடுத்த கோட்டால்,........தோன்றுமே, காய்சினவேற் கிள்ளி களிறு" (முத்.) "களிறுங் கதவிறப் பாய்ந்த" (பு. வெ. 107)

230 - 31. சிறுபாண். 199 - 200.

236. முரசிற்குப் பேய்க்கண் உவமை : "பறைக்கட் பேய் மகள்" (சிலப். 26 : 208); "பறையன்ன விழித்த கண்ணுள்" (தகடூர்.); "பறைபோல் விழிகட்பேய்", "பறைக்கட் செறுபல் கணப்பேய்" (திருஞா. தே.); "பறைக்காட்டுங் குழிவிழிகட் பல்பேய்" (திருநா. தே.); "பறைக்கணெடும் பேய்க்கணம்" (சுந்தர. தே.); "பறைபோல் விழிகட்பேய்" (காரைக். கோயின் மூத்த. 1)

கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்
கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்
அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
அழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும்
அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக ளுவன்றவும்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டில்

---

242. "கராஅங் கலித்த குண்டுகண் ணகழி" (புறநா. 37 : 7)

245. முல்லை. 99, அடிக்குறிப்.

246 - 7. மாலையில் மகளிர்விளக்கேற்றுதல் : மதுரைக். 555 - 6-ஆம் அடிகளின் அடிக்குறிப்பைப் பார்க்க.

252. மலர் தூவுதல் : முல்லை. 8 - 10, அடிக்குறிப்.

253. முதுவாய்க் கோடியர் முழவு : குறுந். 78 : 2.

256. (பி – ம்.) 'நெரிஞ்சியோடு'; மணி. 12 : 60.

258. "கூகையோ டாண்டலை பாட" (காரைக். திருவாலங் காட்டு மூத்த. 3)

260. பிணந்தின் யாக்கைப் பேய்மகள் : "பேய்மகள்......பிணந் தின் வாயள்" (முருகு. 51 - 6) ; "பேய்மகள், பிணனுண்டு சிரித்த தோற்றம்" (சிறுபாண். 197 – 8)

259 - 60. "பிணஞ்சுமந் தொழுகிய நிணம்படு குருதியிற், கணங் கொள் பேய்மகள் கதுப்பிகுத் தாட" (சிலப். 26 : 209 - 10)

ஒண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்
அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலின்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்

---

265. தொடுதோலடியர் : பெரும்பாண். 169 ; மதுரைக். 636.

268. "பகலுங் கூவுங் கூகையொடு", "கூகையொடு கூடிப், பகலுங் கூவு மகலு ளாங்கண்" (புறநா. 356: 2, 362 : 17 - 8) ; "பேணா ரகநாட்டு, நன்பகலுங் கூகை நகும்" (பு. வெ. 39)

270. மதுரைக். 176.

269 - 70. மதுரைக். 186 – 7, அடிக்குறிப்.

271. "ஆலுங் கடறூர்த்தன் மலையகழ்த லிவைவல்லார்" (சீவக. 2165)

271 - 3. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்புரைத்ததற்கு இவை மேற்கோள்; தொல். புறத்திணை. சூ. 12, ந.

278. மதனுடை நோன்றாள் : முருகு. 4.

283. "சேய காடெறிந் தணிநகர் செய்தொழின் மாக்கள்" (திருவிளை. 3 : 26) ; "காடுகொள் றிருநகர்ப் படுப்ப" (காஞ்சிப். நகரேற்று. 185)

குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயில்
மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மாப்பி னொண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்

---

284. "*நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத், தட்டோ ரம்ம விவட்டட் டோரே*" (புறநா. 18 : 28 - 9) ; "*குளங்தொட்டு........ வளந் தொட்டு*" (சிறுபஞ்ச. 66)

283 – 4. "'*காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு' என்றாற் போல உழுவாரென்றது உழுவிப்பார் மேலும் செல்லும்*" (குறள், 1032, பரிமேல்.)

285. (பி - ம்.) '*பிறங்குநிலை வாயில்*'

"*பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே*" (புறநா. 69 : 12)

"*உறையூ ரென்பதனைப் பிறங்கு நிலைமாடத் துறந்தை போக்கி யெனவும் மேலையார் திரித்த வகையானே இக் காலத்தும் திரித்துக் கொள்ளப் படுவனவுள*" (தொல். செய். சூ. 80, பேர். ந.)

287. பட்டினப். 144.

291. பட்டினப். 41.

294. *பரேரெறுழ்* : பெரும்பாண். 60; நெடுநல். 31.

296 - 7. *மகளிர் திளைக்கும் மார்பு* : சிறுபாண். 232, அடிக் குறிப்.

298. *வீரருக்குச் சிங்கம் உவமை* : பெரும்பாண். 449 ; "*ஆளிய மொய்ம்பன்*" (சீவக. 517) ; "*அரிமா னன்ன, வெஞ்சின விடலை*" (பெருங். 3. 6 : 30 - 31) ; "*சீயமும்........போல்வார்*" (பு. வெ. 25)

உவமை உயர்ந்த பொருளாகல் வேண்டு மென்பதற்கும் வலி *காரணமாக உவமம் பிறக்கு மென்பதற்கும்* இவ்வடி மேற்கோள் ; தொல். உவம. சூ. 3, 4. இளம். பேர் ; இ - வி. சூ. 639.

திருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

---

299. *திருமாவளவன் :* பொருந. இறுதி வெண்பா, 2, அடிக் குறிப்.

298 - 9. *கரிகால் வளவனுக்குச் சிங்கம் உவமை :* பொருந. 139-40.

300, *"காடரில் வேந்தர் செலச்செற்ற மன்னன்கை வேலின் வெய்ய, வேடரில் வெஞ்சுரம்", "அங்கண் மலர்த்தா ரரிகேசரி தென்னர் கோனயில்போல், வெங்க ணெடுஞ்சுரம்"* (பாண்டிக் கோவை)

300 – 301. *"தென்னன் பறந்தலைக் கோடிவென்ற, வேல்புரை வெம்மைய கான மெனினுமவ் வேந்தன்செய்ய, கோல்புரை தண்மைய வாநும்மொ டேகினெங் கொம்பினுக்கே"* (பாண்டிக்.); *"மன்னெடு வேலினுய் மாமழை மடநோக்கி, நின்னொடு செல்ல நெடுங் கானம் - கொன்னுனைய, வேலன்ன வெம்மைய வாயினும் வேந்தர் செங், கோலென்ன லாகுங் குளிர்ந்து"* (கிளவி மாலை)

சினை முதற் பொருள்கள் உறழ்பொருளில் மயங்கி வந்ததற்கு இவ்வடிகள் மேற்கோள்; தொல். கிளவி. சூ. 16, சே.; இ. வி. சூ. 309, *உரை.*

218 - 301. *"முட்டாச் சிறப்பிற்........நெஞ்சேயென நின்றது. பின்னர் வேலினும் வெய்ய......தோளே யெனச் சேய்த்தாகச் சென்று பொருள் கோடலின் அஃது அகன்று பொருள் கிடப்பினும் இயன்று பொருள் முடிய உரைப்பதாம்"* (தொல். செய். சூ. 211, பேர்.): *"முட்டாச் சிறப்பின்......தோளே: அகன்று கிடந்து மாட்டின்றி வந்தது"* (தொல். செய். சூ. 211, ந.)

இதன் பொருள்

இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாகலின், இதற்குப் பட்டினப் பாலையென்று பெயர் கூறினார்.

பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் கூறுவது.

இப்பாட்டு, வேற்று நாட்டகல்வயின் விழுமத்துத் தலைவன் செலவழுங்கிக் கூறியது (தொல். கற்பு. சூ. 5). இது, [1]முதலும் கருவும் கூருது உரிப்பொருளே சிறப்பக் கூறியது.

---

[1] "முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே, நுவலுங் காலை முறைசிறந் தனவே, பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (தொல். அகத். சூ. 3) என்பதும், 'முதலிற் கருவும் கருவிலுரிப் பொருளும் சிறந்து வரும்' என்னும் அதன் உரையும் இங்கே அறியற்பாலன.

1. வசை இல் புகழ் - குற்றம் கூறுதலில்லாத புகழையுடைய காவிரி (6) என்க.

1 - 2. வயங்கு வெண் மீன் திசை திரிந்து தெற்கு ஏகினும் - விளங்குகின்ற [1]வெள்ளியாகிய மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்றிசைக்கண்ணே போகினும்,

இதனால் பெய்யும் பருவத்துப் பெய்யாமைக்குக் காரணம் கூறினார்.

3 - 5. [தற்பாடிய தளியுணவிற், புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினும்:] தளி உணவின் தன் பாடிய புள் தேம்ப புயல் மாறி வான் பொய்ப்பினும் - துளி உணவாகையினாலே தன்னைப் பாடிய வானம்பாடி புலரும்படி மழையைப் பெய்தலைத் தவிர்ந்து மேகம் பொய்த்து வற்கட காலமாயினும்,

5 - 6. தான் பொய்யா மலை தலைய கடல் காவிரி - தான் பொய்யாமல் காலந்தோறும் வருகின்ற [2]குடகமலையிடத்தே தலையினையுடைய கடலிடத்தே செல்கின்ற காவிரி.

கடல் [3] கணவன்.

7. புனல் பரந்து [4]பொன் கொழிக்கும் - நீர் பரந்து கரையிலே பொன்னைப் போகடும் சோழ நாடு (28),

8. விளைவு அறா வியல் கழனி-விளைதல் தொழில் மாறாத அகற்சியையுடைய கழனியிடத்தில்,

9 - 12. கார் கரும்பின் கமழ் ஆலை தீ தெறுவின் கவின் வாடி [5]நீர் செறுவின் நீள் நெய்தல் பூ சாம்பும் புலத்து ஆங்கண் - பசிய கரும்பின் கமழும் பாகை அடுகின்ற கொட்டிலில் நெருப்பிற் புகை சுடுகையினாலே அழகு கெட்டு நீரையுடைத்தாகிய செய்யின் கண் நின்ற நீண்ட நெய்தற்பூ வாடும் நிலத்தையுடைய வயலிடத்துக் குறும்பல்லூர் (28),

13 - 5. [6] காய் செநெல் கதிர் அருந்து [7]மோடு எருமை முழு

---

[1] "வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி" (பதிற். 24: 24)

[2] "கொண்டல்குமு றுங்குடகிழிந்துமத குந்தியகில் கொண்டு நுரைமண்டி வருநீர்" (திருவரங்கக். 6)

[3] கடலை நதிகளின் கணவனென்று கூறுதல் கவிமரபு; "பொருநையாங் கன்னி மூந்நீர்த், தன்மகிழ் கிழவ னாகந் தழீஇக்கொடு கலந்த தன்றே" (திருவிளை. நாட்டுச் சிறப்பு, 10)

[4] "பொன்னி பொன்கொழிக்கும், அலையார் திருவரங் கத்தெம் பிரான்" (திருவரங்கக். 16)

[5] "நீரார் செறுவி னெய்தல்" (கலித். 75 : 1)

[6] எருமை முதலியன நெல்லையருந்துதல்: "செழுஞ்செந் நெல்லின் சேயரிப் புனிற்றுக்கதிர், மூதா தின்ற லஞ்சி" (அகநா. 156: 3 -4)

[7] மோடு என்பதற்கு இங்கு எழுதியவாறே, "பிணர் மோட்டுரு

குழவி கூடு நிழல் துயில் வதியும் - காய்த்த செந்நெற் கதிரைத் தின்ற வயிற்றையுடைய [1]எருமை ஈன்ற முற்பட்ட கன்றுகள் [2]நெடுங் கூட்டினுடைய நிழலிலே உறக்கத்தைக் கொள்ளும் குறும்பல்லூர் (28),

16. கோள் தெங்கின் - குலைகளையுடைய தெங்கினையும்,
குலை வாழை - குலைகளையுடைய வாழையினையும்,
17. காய் கமுகின் - காயையுடைய கமுகினையும்,
கமழ் மஞ்சள் - மணம் நாறும் மஞ்சளினையும்,
18. இனம் மாவின் - இனமான மாமரங்களினையும்,
இணர் பெண்ணை - குலைகளையுடைய பனையினையும்,
19. முதல் சேம்பின் - அடி பரந்த சேம்பினையும்,

முளை இஞ்சி - முளையினையுடைய இஞ்சியினையுடைய விளைவரு வியன் கழனி (8) என முன்னே கூட்டுக.

20 - 25. [அகனகர் வியன்முற்றத்துச், சுடர்நுதன் மட நோக்கின், [3]நேரிழை மகளி ருணங்குணாக் கவரும், கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை, பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும், முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும் :]

சுடர் நுதல் [4]மடம் நோக்கின் (21) நேர் இழை மகளிர் உணங்கு உணு கவரும் (22) கோழி எறிந்த கொடு கால் கனம் குழை (23) – ஒளியையுடைய நுதலினையும் மடப்பம் பொருந்தின நோக்கினையும் பொருந்தின பூணினையுமுடைய மகளிர் உலருகின்ற நெல்லைத் தின்னும் கோழியை எறிந்த வளைந்த இடத்தையுடைய பொன்னால் செய்த மகரக் குழை,

பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் (24) முக்கால் சிறு தேர் முன் வழி விலக்கும் (25) அகல் நகர் வியன் முற்றத்து (20)-பூண்

கெழு செலவின்'' (முருகு. 50) என்பதற்கும், 'மோடு வயிறுமாம்' என்று எழுதினர்; ''மோடி கழல் சூடியே'' (தக்க. 241) என்பதற்கு அதன் உரையாசிரியர், 'எல்லாரையும் பெற்ற வயிற்றையுடையா ளென்றுமாம்' என்ற உரையும் இங்கே கருதத்தக்கது.

[1] ''கழாஅமயி ரியாக்கைச் செங்கட் கார்ான், சொரிபுற முரிஞ் சப் புரிஞெகிழ் புற்ற, குமரிக் கூட்டில்'' (சிலப். 10 : 121 - 3)

[2] ''கூடு கெழீஇய குடிவயினன்'' (பொருந. 182); ''குமரி மூத்த கூடோங்கு நல்லில்'' (பெரும்பாண். 247); ''பரந்துயர் நெற்கூடுகள்' பெரிய. திருநா. 10.

[3] ''நேர்தல் கொடைப்பொருளில் வருமென்பதற்கு இதனை மேற் கோள் காட்டினர்;' யா - வி. சூ. 58.

[4] மடம் – கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை; தொல். களவு. சூ. 8, நச்.

அணிந்த தாளினையுடைய சிருர் [1]குதிரை பூட்டாமல் [2]கையால் உருட்டும் மூன்று உருளையையுடைய சிறு தேரினது வழியின் முன்பை விலக்கும் செல்வம் அகன்ற மனையினது அகன்ற முற்றத்தையுடைய குறும்பல்லூர் (28) என்க.

26 – 7. [விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக், கொழும் பல்குடிச் செழும்பாக்கத்து :]

இஃது, இருஞ்செருவின் (72) விலங்குபகையல்லது கலங்கு பகையறியாப் பாக்கமென மேலே கூட்டிற்று.

28. குறு பல் ஊர் நெடு சோணாட்டு - ஒன்றற்கொன்று அண்ணிதாய்ப் பலவாகிய ஊர்களையுடைய பெரிய சோழநாட்டில்,

சோழன் நாடென்பது [3]சோணடென மரூஉ முடிபு.

சோழநாட்டுப் பட்டினம் (218) என்க.

29 – 30. [4]வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி நெல்லொடு வந்த வல்வாய் பஃறி-வெள்ளிதாகிய உப்பினது விலையைச் சொல்லி விற்ற நெல்லைக் கொண்டு வந்த வலிய இடத்தையுடைய படகை,

பஃறி - ஓடமுமாம்.

31 - 2. பணை நிலை புரவியின் அணை முதல் பிணிக்கும் கழி சூழ் படப்பை - பந்தியிலே நிற்றலையுடைய [5]குதிரைகளைப் பிணிக்குமாறு போலே சார்ந்த தறிகளிலே பிணிக்கும் கழிசூழ்ந்த பக்கத்தினையும்,

அணை முதல் – அணையிடத்துத் தறியுமாம். படப்பை - தோட்டமுமாம்.

32 - 3. கலி யாணர் பொழில் புறவின் பூ தண்டலை - மனச் செருக்கு எழுதற்குக் காரணமான புது வருவாயினையுடை தோப்புக் களுக்குப் புறம்பாகிய பூஞ்சோலைகளையும்,

34 - 8. [மழைநீங்கிய மாவிசும்பின், மதிசேர்ந்த மகவெண்மீன், உருகெழுதிற லுயர்கோட்டத்து, முருகமர்பூ முரண்கிடக்கை, வரியணிசுடர் வான்பொய்கை :]

---

[1] குதிரை பூட்டப்பட்ட சிறுதேரும் உண்டென்பது, "தச்சன் செய்த சிறுமா வையம்" (குறுந். 61 : 1) என்பதனுல் அறியப்படும்.

[2] "கால்வழேர் கையினியக்கி" (கலித். 81 : 8)

[3] "சோழனுடு சோணடென அன் கெட்டு முடிந்தது" (தொல். குற்றியலுகரப். சூ. 79, ந.)

[4] உப்பை நெல்லுக்கு விற்றல்: "உப்புநொடை நெல்லின்", "நெல்லு முப்பு நேரே யூரீர், கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலும்" (அகநா. 60 : 4, 390 : 8 - 9)

[5] குதிரை படகிற்கு உவமை: "செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர், நெறிதரு புரவியின் மறிதருந் திமில்" (யா. வி. சூ. 86, மேற். 'மணிகிளர் நெடுமுடி')

மழை நீங்கிய மா விசும்பில் (34) மதி சேர்ந்த மகம் வெள் மீன் (35) உருகெழு திறல் உயர் கோட்டத்து (36) வான் பொய்கை (38) - மழை மாசு நீங்கின பெரிய ஆகாயத்திடத்து மதியைச் சேர்ந்த [1]மகமாகிய வெள்ளிய மீனினது வடிவு பொருந்தின வலியை உடைய உயர்ந்த கரையையுடைய நன்ருகிய பொய்கைகளேயும்,

[2]மதியும் மீனும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும் பொருள்.

இனி உயர்கோட்டத்தை,எல்லாரும் மதியைச் சேர்ந்த மகவெண் மீனைப் பார்க்கைக்கு இடமாகிய கோயிலாக்கிக் [3]கோயிலும் பொய்கையுமென எண்ணுதலுமாம். இனிப் பொய்கைக் கரையிலே கோயிலாக்கிக் கோயிலும் பொய்கையும் மதிசேர்ந்த மகவெண்மீன் போன்ற என்றுமாம்.

முருகு அமர் [4]பூ முரண் கிடக்கை (37) வரி அணி சுடர் பொய்கை (38) - மணம் பொருந்தின பூக்கள் நிறத்தால் தம்முள் மாறுபட்ட பரப்பாலே பல நிறமணிந்த ஒளியினையுடைய பொய்கை,

39. இரு காமத்து இணை ஏரி - இம்மையிலும் மறுமையிலும் உண்டாகிய காம இன்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகளேயும்,

அது, "சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக், காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடும், தாமின் புறுவ ருலகத்துத் தையலார், போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்" (சிலப். 9: 59 - 62) என்றதனுலும் உணர்க.

(?) இனி [5]வளகாமரேரி வணிகாமரேரி யென்றும், சங்கிராம காமம் [6]வணிக்கிராம காமமென்றும் உரைப்ப.

40 - 41. [7]புலி பொறி போர் கதவின் திரு துஞ்சும் திண் காப்

---

[1] மகநாள் முடநுகம் போல்வதாகலின், கரைக்கு உவமையாயிற்று.

[2] "ஏரி வளாவிக் கிடந்தது போலு மிளம்பிறையே" (திருநா. தே.); "தேய்பிறை யுருவக் கேணி" (சீவக. 2998)

[3] "சிக்கந்தக் கோட்ட நிலாக்கோட்டம் புக்கு" (சிலப். 9 : 13) என்பதனுலும் காவிரிப்பூம் பட்டினத்தில் மதிக்குக் கோயிலுண்மை அறியலாகும்.

[4] "முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை" (பெரும்பாண். 294) என்பதற்கும் இவ்வாறே உரை எழுதினர்.

[5] (பி - ம்.) 'இனிக் கவளகாமரேரி இனி வணிகாமரேரி'

[6] மணிக்கிராமம் என்று திருவெண்காட்டின் பக்கத்தில் ஓர் ஊர் உண்டு.

[7] அரசர் கதவுகளில் தம் அடையாளத்தைப் பொறித்தல்:"ஏமெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின், பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை", "விடர்ப்புலி பொறித்த கோட்டை" (புறநா. 33 : 8 - 9, 174 : 17); "போற்றி மன்னநம் பொன்னங் கயற்குறி, மாற்றி யுத்தர வாயிற் கதவதில், ஏற்றி லச்சினை யிட்டனர் யாரையென், ருற்றல் வேந்த வறிகிலம் யாமென்ருர்" (திருவிளை. 34 : 22)

பின் - [1]புலியாகிய அடையாளத்தினையும் பலகைகள் தம்மிற் சேருதலையுடைய கதவினையும் உடைய திருமகள் தங்கும் திண்ணிய மதிலினையும்,

42 - 50 [புகழ் நிலைஇய மொழிவளர, அறநிலைஇய வகனட்டிற், சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகி, ஏறுபொரச் சேறுகித், தேரோடத் துகள்கெழுமி, நீறுடிய களிறு போல, வேறுபட்ட வினையோவத்து, வெண்கோயின் மாசூட்டும் :]

சோறு வாக்கிய கொழு கஞ்சி (44) யாறு போல பரந்து ஒழுகி (45) - சோற்றை வடித்தொழுக்கிய கொழுவிய கஞ்சி யாறுகள் போலே எங்கும் பரந்தொழுகி,

ஏறு பொர சேறுகி (46) - இடபங்கள் தம்மிற்பொருகையினாலே பின்பு சேறாய்,

தேர் ஓட துகள் கெழுமி (47) - பல தேர்களும் ஓடுகையினாலே தூளியாய்ப் பொருந்தி,

வேறுபட்ட வினை ஓவத்து (49) வெள் கோயில் (50) - வேறுபட்ட தொழில்களையுடைய [2]சித்திரங்களையுடைய வெள்ளிய கோயில்களை,

நீறு ஆடிய களிறு போல (48) மாசு ஊட்டும் (50) - புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப்போல அழுக்கேறப்பண்ணும்,

கஞ்சி ஒழுகிச் சேறுகிக் கெழுமிக் கோயிலை மாசூட்டுதற்குக் காரணமாகிய அட்டிலெனக் கூட்டுக.

புகழ் நிலைஇய மொழி வளர (42) அறம் நிலைஇய அகல் அட்டில் (43) - இம்மைக்குப் புகழ் நிலைபெற்ற சொல் எங்கும் பரவாநிற்க மறுமைக்கு அறம் நிலைபெற்ற அகன்ற அட்டில்,

இருமையினும் பெறும் பயனுண்டாகச் சோறிடும் சாலையென்றவாறு.

51 - 2. தண் கேணி தகை முற்றத்து பகடு எருத்தின் பல சாலை - குளிர்ந்த சிறிய குளங்களை உள்ளே அடக்கின முற்றத்தினை உடைய பெரிய எருத்திற்கு வைக்கோலிடும் பல சாலையினையும்,

53. தவம் பள்ளி - [3]தவம் செய்யும் அமண்பள்ளி பௌத்தப் பள்ளிகளையும்,

53 - 8. [தாழ்காவின், அவிர்சடை முனிவ ரங்கி வேட்கும், ஆவுதி நறும்புகை முனைஇக் குயிறம், மாயிரும் பெடையோ டிரியல் போகிப், பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த், தூதுணம் புறவொடு துச்சிறச் சேக்கும் :]

---

[1] புலி அடையாளம்: "கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு" (சிலப். 5 : 98); "நேரியன்பதாகையிற்புலி" (தக்க. 156)

[2] "மாடக்குச் சித்திரமும்" (நன். பொதுப். 55)

[3] காவிரிப்பூம்பட்டினத்தே இவ்விருவகைப் பள்ளிகளும் முற்காலத் திருந்தமை, மணிமேகலை, 5 - ஆங் காதையாலும் உணரப்படும்.

[1]அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும் (54) [2]ஆவுதி நறு புகை முனைஇ குயில் தம் (55) மா இரு பெடையோடு இரியல் போகி (56) - விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள் தீயின்கண்ணே வேட்டலைச் செய்யும் [3]நெய் முதலியவற்றின் நறிய புகையை வெறுத்துக் குயில்கள் தம்முடைய கருமையையும் பெருமையையும் உடைய பேடைகளுடனே கெடுதலையுடையவாய் நீங்கிப் போய்,

பூதம் காக்கும் புகல் அரு கடி நகர் (57) தூது உண் அம் புறவொடு [4]துச்சில் சேக்கும் (58) தாழ் காவின் (53) - பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கரிய அச்சத்தையுடைய காளி கோட்டத்திடத்தில் [5]கல்லைத் தின்னும் அழகிய புறவுகளுடனே குடியிருப்பாகத் தங்கும் இளமரக்காவினையும்,

முனிவரைத் தன்னிடத்தே கொண்டிருத்தலிற் காக் காரணமாயிற்று.

59 - 77. [முதுமரத்த முரண்களரி, வரிமணலகன்றிட்டை, யிருங்கிளை யினனொக்கற், கருந்தொழிற் கலிமாக்கள், கடலிறவின் சூடு தின்றும், வயலாமைப் புழுக்குண்டும், வறளடும்பின் மலர் மலைந்தும், புனலாம்பற் பூச்சூடியு, நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு, நாண்மீன் விராய கோண்மீன் போல, மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக், கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப், பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ, திருஞ்செருவி னிகன்மொய்ம் பினோர், கல்லெறியுங் கவண் வெரீஇப், புள்ளிரியும் புகர்ப் போந்தைப், பறம்ப்பன்றிப் பல்கோழி, யுறைக்கிணற்றுப் புறச்சேரி, மேழகத் தகரொடு சிவல்விளை யாட :]

---

[1] "அவிர்சடை முனிவரு மருள" (புறநா. 43 : 4)

[2] "புக்காவுதிகள் பலவேற்றும்", "வேள்வியாவுதி யுண்ணவோ" (தக்க. 46, 252)

[3] "நீர்நாண நெய்வழங்கியும்" (புறநா. 166 : 4)

[4] "புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட், டுச்சி லிருந்த வுயிர்க்கு" (குறள், 340); "துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே" (இனியது நாற்பது, 39)

[5] "தாதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்" (கலித். 56 : 16); "பொறிவரிப் புறவின் செங்காற் சேவல், சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி, யரிமண லியவிற் பரறேர்ந் துண்டு" (அகநா. 271 : 1 - 3); "கல்லுண்டு கடிய வெம்புங் கானுறை புறவ மெல்லாம்" (சீவக. 1430); "நுண்பொறிப் புறவின் செங்காற் சேவல், வெண்சிறைப் பெடையொடு விளையாட்டு விரும்பி, வன்பரலார்ந்த வயிற்ற வாகி" (பெருங். 1. 52 : 46 - 8); "தாதுணம் பறவைக ளேதுண் டோவறக், காதலந் துணையொடு கழுமிப் புல்லுவ", "கல்லிரை தேரினும் வீழ்துணை நீங்கினுங் கபோதகனோ, யல்லிரை யோத மனையது" (தணிகைப். நாட்டு. 52, களவுப். 609)

புகர் போந்தை புள் (74) வெரீஇ (73) இரியும் (74) கல் எறியும் கவண் (73) - நிறத்தை யுடைய [1]பனையில் இருக்கும் பறவைகள் அஞ்சிக் கெட்டுப் போதற்குக் காரணமான கல்லை எறியும் கவணை யுடைய கலிமாக்கள் (62) என முன்னே கூட்டுக.

இனன் ஒக்கல் (61) கரு தொழில் கலி மாக்கள் (62) - ஓரினச் சுற்றத்தினையும் வலிய தொழிலையுமுடைய செருக்கின [2]பரதவர் பிள்ளைகள்,

கடல் [3]இறவு இன் சூடு தின்றும் - (63) கடலிறுக்களின் இனிய சுடப்பட்டதனைத் தின்றும்,

வயல் ஆமை புழுக்கு உண்டும் (64) - வயலில் ஆமையைப் புழுக்கின இறைச்சியைத் தின்றும்,

வறள் [4]அடும்பின் மலர் மலைந்தும் (64) – மணலிலே படர்ந்த அடப்பம் பூவைத் தலையிலே கட்டியும்,

புனல் ஆம்பல் பூ சூடியும் (66) – நீரில் நின்ற ஆம்பற் பூவைப் பறித்துச் சூடியும்,

நீல் நிறம் விசும்பின் வலன் ஏர்பு திரிதரு (67) நாள் மீன் விராய கோள் மீன் போல (68) - நீல நிறத்தை யுடைய ஆகாயத்தே வலமாக எழுந்து திரியும் [5]நாள்களாகிய மீன்களோடே கலந்த கோள் களாகிய மீன்கள் போல,

மலர் தலை மன்றத்து (69) மேழகம் தகரொடு சிவல் விளையாட (77) பலர் உடன் குழீஇ (69) - அகன்ற இடத்தையுடைய மன்றிலே [6]மேழகக்கிடாயோடே சிவலையும் கொண்டு பொருவித்து விளை யாடும்படி பலரும் சேரத் திரண்டு,

---

[1]பனையிலிருக்கும் பறவைகள் அன்றில் தூக்கணங்குருவி முதலி யன; "முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக், கொழுமட விழைத்த சிறுகோற் குடம்பைக், கருங்கா லன்றில்" (குறுந். 301:1-3); "வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே, அவையினும் பலவே சிறு கருங் காக்கை, அவையினு மவையினும் பலவே குவிமட, லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த, தூக்கணங் குரீஇக் கூட்டுள சினையே" (தொல். களவு. சூ. 20, ந. மேற்.)

[2] பரதவர் - நெய்தல் நிலமாக்களுள் ஒரு வகையார்.

[3] இறவு - ஒருவகை மீன்; இறுலெனவும் வழங்கும்.

[4] அடும்பு அடம்பெனவும் வழங்கும்.

[5] நாள்களாகிய மீன்கள் – இருபத்தேழு நக்ஷத்திரங்கள்; கோள்க ளாகிய மீன்கள் - நவக்கிரகங்கள் முதலியவை.

[6] மேழகக்கிடாய் - ஆட்டுக்கிடாய்; சிவல் – ஒரு வகைப் பறவை; இவற்றின் போர்வென்றி, தகர்வென்றியெனவும் சிவல்வென்றி யெனவும் முறையே கூறப்படும்; பு. வெ. 349, 352-ஆம் பாடல்களைப் பார்க்க.

மாக்கள் தின்றும் உண்டும் மலைந்தும் சூடியும் விளையாடும்படி மீன்போற் குழீஇ என்க.

இகல் மொய்ம்பினோர் (72) பெரு சினத்தால் (71) வரி மணல் அகல் திட்டை (60) இரு கிளை (61) முது மரத்த முரண் களரி (59) புறக்கொடாது (71) கையினும் கலத்தினும் மெய் உற தீண்டி (70) இரு செருவின் (72) விலங்கு பகை அல்லது (26) கொழு பல் குடி (27) கலங்கு பகை அறியா (26) செழு பாக்கத்து (27) - அங்ஙனம் பொருவித்தலில் தோன்றும் மாறுபாடு செய்யும் வலியினை உடையவராய் ஆண்டுப் பிறந்த பெரிய சினத்தாலே அறலினை யுடைத்தாகிய மணலினையுடைய அகன்ற மேட்டில் பெரிய கிளைத்தலையுடைய பழைய மரத்தை உடையவாகிய பொருதற்குச் சமைந்த போர்க்களத்தே சென்று முதுகு கொடாமல் கையால் குத்தியும் படைக் கலங்களாலே வெட்டியும் ஒருவர் மெய்யோடு ஒருவர் மெய் உறும்படி கலந்து பொரும் பெரிய போரை [1]விலங்குகின்ற பகை யல்லது செருக்கினை யுடைய பல குடி கலங்கி எழுந்திருத்தற்குக் காரணமான [2]பகையை அறியாத பாக்கங்களையும், பாக்கம் - கடற்கரையிலூர்கள்.

பறழ் பன்றி பல் கோழி (75) உறை கிணறு புறம் சேரி (76) - குட்டிகளை யுடைய பன்றிகளையும் பல சாதியாகிய கோழிகளையும் [3]உறை வைத்த கிணறுகளையும் உடைய இழிகுலத்தோர் இருக்கும் தெருவுகளையும்,

78 – 9. [கிடுகுநிரைத் தெஃகூன்றி, நடுகல்லி னரண் போல:] நடு கல்லின் அரண் போல கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி - [4]நடு கல்லில் நிற்கின்ற தெய்வமாயவனும் அவனுக்கு வைத்த [5]கிடுகும் வேலும் போலக் கிடுகை நிரைத்து வேலை ஊன்றிப் புறக்கொடாது (71) என முன்னே கூட்டுக.

அரண்: ஆகுபெயர்.

---

[1] "விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்" (புறநா. 230:4).

[2] "முனைதரு பூசல் கனவினு மறியாது" (புறநா. 42: 9) என்பதும், "பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய" (சிலப். 1 : 15) என்பதும், 'பதியெழுவறியா - பதியினின்றும் பெயர்தலையறியாத; எனவே பகையின்மை கூறிற்று' என்னும் அதன் விசேடவுரையும் இங்கே ஒப்பு நோக்கற்பாலன.

[3] உறையைக் குடலை யென்பர்; தக்க. 127, உரை.

[4] "கைவண் குரிசில்கற் கைதொழூஉச் செல்பாண, தெய்வமாய் நின்ருன் றிசைக்கு" (பு. வெ. 252)

[5] வேலும் கிடுகும் சேர்த்துக் கூறப்படுதல்: "நெய்கனி நெடுவே லெஃகி னிமைக்கு, மழைமருள் பஃறோல்", "மணியணி பலகை மாக் காழ் நெடுவேல்" (அகநா. 123 : 9 – 10, 369 : 18).

80 - 93. [நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய, குறுங்கூரைக் குடிநாப்பண், நிலவடைந்த விருள்போல, வலையுணங்கு மணன் முன்றில், வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த, வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர், சினைச்சுறவின் கோடுநட்டு, மனைச்சேர்த்திய வல்லணங்கினால், மடற்றாழை மலர்மலைந்தும், பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும், புன்றலை யிரும்பரதவர், பைந்தழைமா மகளிரொடு, பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா, துவவுமடிந் துண்டாடியும்:]

[1]புன் தலை இரு பரதவர் (90)-சிவந்த தலையினையுடைய பெரிய பரதவர்,

உவவு (93) - உவாநாளாகையினாலே,

பாய் இரு பனி கடல் வேட்டம் செல்லாது (92) மடிந்து (93) - பரந்த கருமையையுடைய குளிர்ந்த கடலில் மீன் பிடித்தற்குப் போகாது மனவெழுச்சி தவிர்ந்து,

பைந்தழை மா மகளிரொடு (91) - பசிய [2]தழையினை யுடைய கரிய நிறத்தினை யுடைய தம் மகளிரோடே கூடி,

நெடு தூண்டிலில் காழ் சேர்த்திய (80) குறு கூரை குடி நாப்பண் (81) - நெடிய தூண்டிலிற் காம்புகள் சார்த்தி வைத்த குறிய இறப்பினை யுடைய குடியிருப்பு நடுவில்,

நிலவு அடைந்த இருள் போல (82) வலை உணங்கு மணல் முன்றில் (83) மனை (87) - நிலவு நடுவே சேர்ந்த இருளைப் போலே வலை கிடந்து உலரும் மணலை உடைத்தாகிய முன்றிலினை உடைய மனையிடத்தே,

சினை சுறவின் கோடு நட்டு (86) சேர்த்திய வல் அணங்கினால் (87) - சினையை உடைய சுறவின் கொம்பை நட்டு அதனிடத்தே ஏற்றிய வலிய தெய்வம் காரணமாக,

வீழ் தாழை தாள் தாழ்ந்த (84) வெண் கூதாளத்து தண் பூ கோதையர் (85) – [3]விழுதை யுடைய தாழையின் அடியிடத்தே நின்ற வெண்டாளியினது தண்ணிய பூவாற் செய்த மாலையினை யுடையராய்,

மடல் தாழை மலர் மலைந்தும் (88) - மடலை உடைய தாழையினது மலரைச் சூடியும்,

பிணர் பெண்ணை பிழி மாந்தியும் (89) – சருச்சரையை உடைய பனையிற் கள்ளை உண்டும்,

---

1 "புட்கை போகிய புன்றலை மகாரோடு" (மலைபடு. 253) என்ற விடத்தும் புன்றலை என்பதற்குச் சிவந்த தலையென்று உரை எழுதுவர்.

2 தழை - தளிர்கள், தழைகள், மலர்கள் இவற்றாலாகிய உடை விசேடம்; புறநா. 116, 248-ஆம் பாடல்களைப் பார்க்க.

3 இதனால் தென்னை விழுதில் தாழையென்று வழங்கப்படும்; "வீழ் முழைக் குழவித் தீநீர்" (பெரும்பாண். 57)

உண்டு ஆடியும் (93) - [1]நெற்கள்ளை உண்டு விளையாடியும்,

94. புலவு மணல் பூ கானல் - புலால் நாற்றத்தையுடைய மணலிடத்தே பூக்களையுடைய கடற்கரையிற் குடி (81) என்க.

95. [2]மா மலை அணைந்த கொண்மூ போலவும் - கரிய மலையைச் சேர்ந்த செக்கர் மேகம் போலவும்,

இது, கரிய உயர்ந்த திரையின்மீதே சிவந்த ஆற்று நீர் பரந்ததற்கு உவமை.

96. தாய் முலை தழுவிய குழவி போலவும் - தாயுடைய முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும்,

இஃது ஒன்றுபடுதற்கு உவமை.

97. தேறு நீர் புணரியொடு யாறு தலைமணக்கும் - தெளிந்த கடலில் திரையோடே காவிரி தலைகலக்கும்.

98. [மலியோதத் தொலிகூடல்:] ஓதத்து ஒலி மலி கூடல் - ஓதத்தினால் ஒலிமலிந்த புகார் முகத்தே,

99. தீது நீங்க கடல் ஆடியும் - தீவினைபோகக் கடலாடியும்,

100. மாசு போக புனல் படிந்தும் - உப்புப் போக நீரிலே குளித்தும்,

101. [3]அலவன் ஆட்டியும் - ஞெண்டுகளை ஆட்டியும்,

[4]உரவு திரை உழக்கியும் - பரக்கின்ற திரையிலே விளையாடியும்,

102. பாவை சூழ்ந்தும் - [5]பாவைகளைப் பண்ணியும்,

---

[1] இந்தக் கள் தோப்பி யென்று கூறப்படும்; "இல்லடு கள்ளின் றோப்பி பருகி – இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய நெல்லாற் செய்த கள்ளையுண்டு" (பெரும்பாண். 142, ந.); "தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்" (அகநா. 35 : 9) என்பதன் உரையில், 'தோப்பிக்கள் – நெல்லாற் செய்யும் கள்' என்று எழுதியிருப்பதும் இங்கே அறியற்பாலது,

[2] மலை திரைகளுக்கு உவமை: "மைவரை போற்றிரை யோடு கூடி", "குன்றுபோற் றிரைகள்" (தே. திருஞா.); "மலைக்கு நிகரொப்பன வன்றிரைகள்", "தடமால் வரைபோற் றிரைகள்" (தே. சுந்தர.)

[3] அலவனாட்டல்: "பொன்வரி யலவ னாட்டிய ஞான்றே", "ஓரை மகளி ரோராங் காட்ட, வாய்ந்த வலவன்" (குறுந். 303 : 7, 316: 5 - 6); "கோதைய, டிணிமண லடைகரை யலவ னாட்டி" (அகநா. 280 : 2 - 3)

[4] "திரையுழந் தசைஇய நிரைவளை யாயமொடு" (அகநா. 190 : 1.)

[5] "பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும், பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும்" (குறுந். 276 : 1 - 2); "பைஞ்சாய்ப் பாவை யீன்றனன்

பல் பொறி மருண்டும் - ஐம்பொறிகளால் நுகரும் பொருள்களை நுகர்ந்து மயங்கியும்,

103. அகலா காதலொடு பகல் விளையாடி - நீங்காத விருப்பத்துடனே பகற்பொழுதெல்லாம் விளையாடி,

பரதவர் (90) உவவுமடிந்து (93) மகளிரோடே கூடிக் (91) குடிநாப்பண் (81) மனையிடத்தே சேர்த்திய அணங்கிறைற் (87)கோதையராய் (85) மலைந்தும் (88) மாந்தியும் (89) ஆடியும் (93) பின்னர்க் கூடலிலே (98) தீது நீங்க ஆடியும் (99) படிந்தும் (100) ஆட்டியும் உழக்கியும் (101) சூழ்ந்தும் மருண்டும் (102) காதலொடு பகல்விளையாடி (103) என முடிக்க.

104 - 17. [பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும், பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத், துணைப்புணர்ந்த மடமங்கையர், பட்டு நீக்கித் துகிலுடுத்தும், மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும், மைந்தர் கண்ணிமகளிர் சூடவு, மகளிர் கோதை மைந்தர் மலையவும், நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக், கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும், பாடலோர்த்து நாடக நயந்தும், வெண்ணிலவின் பயன்றுய்த்தும், கண்ணடைஇய கடைக்கங்குலான், மாஅகாவிரி மணல்கூட்டும், தூஉவெக்கர்த் துயின்மடிந்து :]

பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் ஏய்க்கும் (104) நெடு கால் மாடத்து (111) - பெறுதற்கரிய பழைய தலைமையினையுடைய சுவர்க்கத்தையொக்கும் நெடிய கால்களையுடைய மாடத்திடத்தே இருந்து,

[1] பாடல் ஓர்த்து நாடகம் நயந்தும் (113) வெள் [2]நிலவின் பயன் துய்த்தும் (114) - பாட்டைக் கேட்டு நாடகங்களை விரும்பிக் கண்டும், வெள்ளிய நிலவிற் பெரும்பயனை நுகர்ந்தும்,

மட்டு நீக்கி மது மகிழ்ந்தும் (108) - கள்ளுண்டலைக் கைவிட்டுக் [3]காமபானத்தை உண்டு மகிழ்ந்தும்,

பட்டு நீக்கி துகில் உடுத்தும் (107)-பட்டு உடுத்தவற்றை நீக்கிப் புணர்ச்சிக்காலத்துக்கு நொய்யவாகிய வெள்ளியவற்றை உடுத்தும்,

---

யானே" (ஐங். 155 : 5); "பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ" (கலித். 76 : 9); "சாய்தாட் பிள்ளை தந்து கொடுத்தும்" (கல்லாடம்)

[1] "இளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந் தின்ற காம, விளைபய னினிதிற் றுய்த்து" (சீவக. 2598) என்றவிடத்து இங்கே கூறப்பட்ட மூவகைச் செயல்களும் ஒருங்கே கூறப்பட்டமை கருதற்குரியது.

[2]நெடுநல். 95, அடிக்குறிப்பு.

[3]மதுரைக். 779 - 81, ந. அடிக்குறிப்பு.

துணை புணர்ந்த மடம் மங்கையர் (106) கண் அடைஇய கடை கங்குலான் (115) - கணவரைக் கூடின மடப்பத்தையுடைய மகளிர் பின்பு கண் துயின்ற பிற்பட்ட சாமத்தையுடைய இராக்காலத்தே,

மாடத்தேயிருந்து (111) நயந்தும் (113) துய்த்தும் (114) மகிழ்ந்தும் (108) உடுத்தும் (107) துணைபுணர்ந்த மடமங்கையர் (106) கண் துயின்ற கங்குல் (115) என்று கங்குற்கு அடை கூறினர்.

மைந்தர் கண்ணி மகளிர் சூடவும் (109) மகளிர் கோதை மைந்தர் மலையவும் (110) - மாடத்தேயிருந்து நுகர்ந்து [1]அனந்தர் மிக்கமையால் கணவர் சூடிய கண்ணியைத் தமது கோதையாக நினைத்து மகளிர் சூடிக்கொள்ளும்படியாகவும் மகளிர் சூடிய கோதையைத் தமது கண்ணியாக நினைத்து மைந்தர் சூடிக்கொள்ளும்படியாகவும் கண் துயின்ற கங்குலென இதுவும் கங்குற்கு அடை கூறினர்.

[2]நெடுங்கால் மாடத்து (111) குரூஉ சுடர் (112) ஒள் எரி நோக்கி (111) கொடு திமில் பரதவர் எண்ணவும் (112) கண் அடைஇய கடை கங்குல் (115) - அம்மாடத்திட்ட நிறவிய விளக்குக்களில் விடியற்காலத்து அவியாமல் ஒள்ளியவாய் எரிகின்ற அவையிற்றைப் பார்த்து இராக்காலத்தே வளைந்த திமிலைக்கொண்டு கடலிலே போன பரதவர்எண்ணும்படியாகவும் கண் துயின்ற கடைக்கங்குல் என்றும் கங்குற்கு அடை கூறினர்.

விளக்குகளிலே எண்ணெயை வார்த்துத் தூண்டுவாரின்றி எல்லாரும் துயில்கோடலிற் சில எரிந்தவற்றை எண்ணினர்.

[3]பொய்யா மரபின் (105) மா காவிரி (116) பூ மலி பெரு துறை (105) மணம் கூட்டும் (116) தூ எக்கர் துயில் மடிந்து (117) - பொய்யாமல் நீர் வரும் முறைமையினையுடைய பெரிய காவிரி பூமிக்க பெரிய துறைகளில் பூமணங்களைக் கொண்டுவந்து திரட்டும் தூய இடுமணலிலே துயில்கொண்டு கிடந்து,

பரதவர்(90)பகல் விளையாடி(103)மாடத்தில் இருப்பரெல்லாரும் கண் அடைஇய கடைக்கங்குலிலே (115)தூவெக்கர்த் துயின்மடிந்து (117) மற்றைநாள் மகளிரொடு செறிய (155) எடுத்த விழவுரு வியலாவணம் (158) எனக் கூட்டுக.

---

[1]அனந்தர் – கள்ளின் மயக்கம்; ''அனந்தர் நடுக்கம் – கள்ளின் செருக்கினாலுண்டான மெய்ந்நடுக்கம்'' (பொருந. 94, ந.)

[2] ''உலகுகிளர்ந் தன்ன வுருகெழு வங்கம்......நீகான், மாடவொள்ளெரி மருங்கறிந் தொய்ய'' (அகநா. 255 : 1 - 6)

[3] ''வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற் காவிரி'' (பட்டினப். 5 - 6)

118-41. [வாலிணர் மடற்றாழை, வேலாழி வியன்றெருவில், நல்லிறைவன் பொருள்காக்கும், தொல்லிசைத் தொழின்மாக்கள், காய்சினத்த கதிர்ச்செல்வன், தேர்பூண்ட மாஅபோல, வைகறொறு மசைவின்றி, உல்குசெயக் குறைபடாது, வான்முகந்தநீர் மலைப்பொழியவும், மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும், மாரி பெய்யும் பருவம் போல, நீரினின்று நிலத்தேற்றவும், நிலத்தினின்று நீர்ப் பரப்பவும், அளந்தறியாப் பலபண்டம், வரம்பறியாமை வந்தீண்டி, அருங்கடிப் பெருங்காப்பின், வலியுடை வல்லணங்கினோன், புலிபொறித்துப் புறம்போக்கி, மதிநிறைந்த மலிபண்டம், பொதிமூடைப் போரேறி, மழையொடு சிமைய மால்வரைக் கவாஅன், வரையாடு வருடைத் தோற்றம் போலக், கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை, ஏழகத் தகரோ டுகளு முன்றில்:]

வான் முகந்த நீர் மலை பொழியவும் (126) மலை பொழிந்த நீர் கடல் பரப்பவும் (127) மாரி பெய்யும் பருவம் போல (128) - மேகம் தான் முகந்த நீரை மலையிடத்தே சொரிதற்காகவும் மலையிற் சொரிந்த நீரை மீண்டு கடலிலே பரப்புதற்காகவும் மாரிக் காலத்தே பெய்கின்ற செவ்வி போல,

வான் எழுவாயாய்ப் பெய்யும் என்னும் பயனிலை கொண்டது.

வால் இணர் மடல் தாழை (118) வேலாழி வியல் தெருவில் (119) அரு கடி பெரு காப்பின் (133)-வெள்ளிய பூங்கொத்துக்களையும் மடலினையுமுடைய தாழையையுடைய கரையினை உடையதாகிய கடலருகின்கண் இருக்கும் பரதவருடைய அகன்ற தெருவிடத்து அரிய (பி - ம். அகன்ற) [1]காவலை யுடைய பண்டசாலையின் கண்ணே.

வரம்பு அறியாமை வந்து ஈண்டி (132) நிலத்தினின்றும் நீர் பரப்பவும் (130) - எல்லை அறியாதபடி வந்து திரண்டு பின்னர் அப் பண்டசாலையிலே நின்றும் கடலிலே ஏற்றுதற்காகவும்,

வல் அணங்கின் னோன் வலி உடை (134) புலி பொறித்து புறம் போக்கி (135) உல்கு செய (125) மதி நிறைந்த மலி பண்டம் (136)- வலிய வருத்தும் தன்மையையுடைய [2]அச்சடையாளமாகிய வலியையுடைய புலியை அடையாளமாக இட்டுப் பண்ட சாலைக்குப் புறம்பே

---

1 "வம்ப மாக்க டம்பெயர் பொறித்த, கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதி, கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும், உடையோர் காவலு மொரீஇய வாகிக், கடப்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக், கொட்பி னல்லது கொடுத்த லீயா, துள்ளு நர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்" (சிலப். 5: 111 - 7)

2 அச்சு அடையாளம்.

புறப்படவிட்டுச் [1]சுங்கம் கொள்ளுதற்கு மதித்தற்கொழிலிற் குறையற்ற மிக்க பண்டங்களையும்,

நீரினின்றும் நிலத்து ஏற்றவும் (129) புலி பொறித்து புறம் போக்கி (135) உல்கு செய (125) அளந்து அறியா (131) மதி நிறைந்த (136) பல பண்டம் (131) - கடலினின்றும் பண்ட சாலையிலே இறக்குதற்காகவும் புலி பொறித்து மரக்கலத்திற்குப் புறம்பே புறப்படவிட்டுச் சுங்கம் கொள்ளுதற்கு நெஞ்சாலே அளந்தறிந்து மதித்தல் நிறைந்த பல பண்டங்களையும்,

பரப்பவும் (130) ஏற்றவும் (129) என்னும் எச்சங்கள் புலி பொறித்து (135) என்னும் வினையொடு முடிந்தன.

பொதி [2]மூடை போர் ஏறி (137) - பொதிந்த பொதிகள் அடுக்கின போரிலே ஏறி,

நீர் கடற் பரப்பவுமென்ற உவமைக்கு நிலத்தினின்று நீர்ப் பரப்பவும், நீர் மலைப் பொழியவு மென்ற உவமைக்கு நீரினின்று நிலத்தேற்றவும் பொருளாகக் கொள்க.

நல் இறைவன் பொருள் காக்கும் (120) தொல் இசை தொழில் மாக்கள் (121) காய் சினத்த கதிர் செல்வன் (122) தேர் பூண்ட மா போல (123) வைகல் தொறும் அசைவு இன்றி (124) குறை படாது உல்கு செய (125) - நல்ல அரசனுடைய பொருளைப் பிறர் கொள்ளாமற் காக்கும் பழைய புகழினையுடைய சுங்கங்கொள்வோர் எரிகின்ற சினத்தையுடைய கிரணங்களையுடைய பகலவன் தேர்பூண்ட குதிரைகளைப் போல ஒரு பொழுதும் மடிந்திராது நாடோறும் இளைப் பின்றித் தாழ்வின்றாகச் சுங்கம் கொள்ள,

இதனை [3]இருவகைப் பண்டங்களுக்கும் கூட்டி உரைக்க.

மழை ஆடு சிமையம் மால் வரை கவாஅன் (138) வரை ஆடு [4]வருடை தோற்றம் போல (139) - மழையுலாவும் சிகரத்தையுடைய

---

[1] சுங்கம் : "மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி" (விக்கிரம. உலா, 26): "தவிராத சுங்கந் தவிர்த்தகோன்" (குலோத். உலா, 26); "கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி, உலகைமுன் காத்த வுரவோன்" (இராசராச. உலா, 26)

[2] மூடை - மூட்டை; "கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்" (பொருந. 245)

[3] இரு வகைப் பண்டங்கள் - பண்டசாலையிலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவும் கப்பலிலிருந்து பண்டசாலையில் இறக்கப்படுவனவும்.

[4] வருடை - மலையில் வாழும் ஒரு விலங்கு; "கருங்கலை, கடும்பாட்டு வருடையொடு தாவன வுகளும், பெருவரை", "அவன்மலைப் போருடை வருடையும் பாயாச், சூருடை யடுக்கத்த" (நற். 119 : 6-8,

வாகிய பெரிய மூங்கிலையும் பக்க மலையினையும் உடைய மலையிடத்தே உலாவும் வருடை மானின் தோற்றரவுபோல,

கூர் உகிர் ஞமலி கொடு தாள் ஏற்றை (140) ஏழகம் தகரோடு உகளும் முன்றில் (141) - கூரிய உகிரை யுடைய நாயில் வளைந்த காலை யுடைய ஏருனவை மேழகக் கிடாயோடே குதிக்கும் பண்ட சாலையின் முற்றத்தினையும்,

[1] ஏற்றை தகரோடே இருவகைப் பண்டங்களையும் பொதிந்த மூடைப் போரேறி உகளும் முற்றமென்க.

142 - 3. குறு தொடை நெடு [2]படிக்கால் கொடு திண்ணை - அணுகின படிகளை யுடைய நெடிய ஏணிகள் சார்த்தின சுற்றுத் திண்ணையினையும்,

143. பல் [3]தகைப்பின் - பல கட்டுக்களையும்,

144. புழை - சிறுவாசலையும்,

வாயில் - பெரிய வாசலையும்,

359:7-9); "நெடுவரை மிசையது குறுங்கால் வருடை" (ஐங். 287:1); "வரைவாழ் வருடைக், கோடுமுற் றிளந்தகர்" (அகநா. 378:6-7); "வரைபாய் வருடை" (தொல். தொகை மரபு, சூ. 15, ந. மேற்.); "மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள், வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர் - முதுகிடத்தே கொண்ட நிலத்தைக் கைக்கொள் ளுஞ் செலவினை யுடைய வளைந்த காலையுடைய வரையிடத்தே வாழும் எண்கால் வருடையில் வலிய தலையினை யுடைய பெரிய கிடாய்" (மலைபடு. 502 - 3, ந.); "வரையாடு வருடையும்" (சிலப். 25 : 51) "குன்றின்மேல் வருடை பாய்ந்துழக்கலின்" (சீவக. 1899) ; "இளை யென்பன எண்கால் வருடையும் குரங்கும் போல் வன ; எண் காலவாயினும் மாவெனப்படுதலின் வருடை இளையா யிற்று" (தொல். மரபு. சூ. 32, பேர்.); "எட்டுக் காலுடையன வருடை ; ஆறு காலுடையன கழிப் பாம்பு" (நீல. தரும. செய். 54, உரை)

[1] "மலையின்மிக் குயர்ந்த மரக்கலஞ் சரக்கு மாற்றுமற் றிடை யிடை யெங்கும், கலைகளித் தேறிக் கானலில் வாழுங் கழுமல நக ரென லாமே" (திருஞா. தே.)

[2] "விண்ணுேு, ரூர்புக வமைத்த படிகால்" (கம்ப. ஊர்தேடு. 66) ; இது படுகாலெனவும் வழங்கும்; "ஏணிப் படுகால் (பரி. 10: 11) ; "இருளில் படுகால் - மயக்கமற்ற ஏணி" (சீவக. 2872, ந.)

[3] "தாரருந் தகைப்பு - ஒழுங்குபாட்டை யுடைய ஆண்டு வாழ் வார்க்கல்லது பிறர் புகுதற்கரிய மாளிகைக் கட்டணம்" (பதிற். 64 : 7, உரை)

போகு இடைகழி - பெரிய இடைகழிகளையு முடைய,

145 - 51. [மழைதோயு முயர்மாடத்துச், சேவடிச் செறி குறங்கிற், பாசிழைப் பகட்டல்குற், றூசுடைத் துகிர்மேனி, மயிலி யன் மானோக்கிற், கிளிமழலை மென்சாயலோர், வளிநுழையும் வாய் பொருந்தி :]

மழை தோயும் உயர் மாடத்து (145) வளி நுழையும் வாய் பொருந்தி (151) - மேகம் செறியும் உயர்ந்த மாடத்தில் [1]தென் காற்று வரும் சாளரங்களைச் சேர்ந்து,

சேவடி (146) - சிவந்த அடியினையும்,

செறி குறங்கின் (146) - செறிந்த குறங்கினையும்,

பசு இழை (147) - பசிய பூணினையும்,

பகடு அல்குல் (147) - பெரிய அல்குலினையும்,

தூசு உடை (148) - தூசாகிய உடையினையும்,

துகிர் மேனி (148) - [2]பவளம் போலும் நிறத்தினையும்,

மான் நோக்கின் (149) - மான் போலும் பார்வையினையும்,

கிளி மெல் மழலை (150) - கிளிபோலும் மெல்லிய மழலை வார்த்தையினையும்,

மயில் இயல் (149) சாயலோர் (150) - [3]மயிலினது இயல் போலும் மென்மையினையும் உடைய மகளிர்,

152 - 4. ஓங்கு வரை மருங்கின் நுண் தாது உறைக்கும் காந்தள் அம் துடுப்பின் கவி குலை அன்ன செறி தொடி முன்கை கூப்பி - உயராநின்ற மலைப் பக்கத்தே மெல்லிய தேன் துளிக்கும் செங்காந்தளினது அழகிய கண்ணிடத்து இணைந்த குலையையொத்த செறிந்த தொடியினை யுடைய முன்கை குவிக்க,

கூப்ப வெனத் திரிக்க. இரண்டு காந்தள் முகை சேர்ந்தா லொத்த கையென்க. கவிதல் - ஒன்றோடொன்று சேர்தல்.

154 - 5. [செவ்வேள், வெறியாடு :] வெறி ஆடு செவ்வேள் - வெறியாடுதற்குரிய முருகனுக்கும்,

---

[1] "வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம், நேர்வாய்க் கட்டளை" (நெடுநல். 61 - 2); "மான்கட் காலதர்" (சிலப். 5 : 8)

[2] "பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையி, னிளங்கொடி" "பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவை" (மணி. 4 : 124 - 5, 18,; 78); "பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழு மேனி" (சீவக. 192)

[3]சிறுபாண். 16, அடிக்குறிப்பு, மதுரைக். 418, அடிக்குறிப்பு.

155 - 60. [மகளிரொடு செறியத் தாஅய்க், குழலகவ யாழ் முரல, முழவதிர முரசியம்ப, விழவரு வியலாவணத்து, மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய, மலரணி வாயிற் பலர்தொழு கொடியும் :]

மை அறு சிறப்பின் சேர்த்திய (159) பலர் தொழு (160) தெய்வம் (159) - பிறப்பறுப்பதற்குக் காரணமான தலைமையை உடைமையால் கோயில்களிடத்தே உண்டாக்கின பலரும் தொழும் தெய்வங்களுக்கும்,

மகளிரொடு செறிய தாஅய் (155) குழல் அகவ யாழ் முரல (156) முழவு அதிர முரசு இயம்ப (157) விழவு அரு வியல் ஆவணத்து (158)-பாடும் மகளிரோடே பொருந்தப் பரந்து [1]வங்கியம் இசையை உண்டாக்க யாழ் வாசிக்க முழவு முழங்க முரசு ஒலிப்ப எடுத்த திருநாள் நீங்காத அகன்ற அங்காடித் தெருவினையும்,

மகளிரொடு செறிய எடுத்த விழவென்க.

சேவடி முதலியவற்றை உடைய சாயலோர் மாடங்களில் சாளரங்களிற் பொருந்தி முன் கை கூப்பப் பலரும் தொழும் முருகவேளுக்கும் ஏனைத் தெய்வங்களுக்கும் எடுத்த விழவரு வியலாவணமெனக் கூட்டுக.

மலர் அணி வாயில் கொடியும் (160) - [2]இல்லுறை தெய்வம் மகிழ மலரணிந்த மனை வாசலிற் கட்டின கொடிகளும்,

161 - 2. [வருபுன றந்த வெண்மணற் கான்யாற், றுருகெழு கரும்பி னொண்பூப் போல :] வரு புனல் தந்த வெள் மணல் கான் யாறு உரு கெழு கரும்பின் ஒள் பூ போல மேல் ஊன்றிய துகில் கொடியும் (168) - வருகின்ற நீர் கொண்டு வந்த வெள்ளிய மணலையுடைய காட்டாற்றங் கரையில் நின்ற அழகு பொருந்தின கரும்பினது ஒள்ளிய பூவை யொக்க மேலூன்றின துகிற்கொடியும்,

கான் - மணமுமாம். [3]கடைத்தெருவின் இரண்டு புறத்திற்கும் எடுத்த கொடிக்கும் யாற்றங் கரையும் கருப்பம் பூவும் உவமை கூறினார்.

163 - 8. [கூழுடைக் கொழுமஞ்சிகைத், தாழுடைத் தண்பணியத்து, வாலரிசிப் பலிசிதறிப், பாகுகுத்த பசுமெழுக்கிற், காழூன்றிய கவிகுடுகின், மேலூன்றிய துகிற்கொடியும் :]

கூழ் உடை கொழு மஞ்சிகை (163) - நெல்லையும் அரிசியையுமுடைய அழகிய மஞ்சிகை,

மஞ்சிகை - [4]கொட்டகாரமுமாம்.

---

[1] வங்கியம் - புல்லாங் குழல்; இது வம்சமென்பதன் திரிபென்பர்.

[2] இல்லுறை தெய்வம் - மதுரைக். 164, 578, உரை; நெடுநல். 43, உரை.

[3] "கூல மறுகிற் கொடியெடுத்து நுவலு, மாலைச் சேரி" (சிலப். 6 : 131 - 3)

[4] கொட்டகாரம் - ஒருவகைக் கட்டிட விசேடம்; "அட்டில்.

தாழ் உடை தண் பணியத்து (164) [1] மஞ்சிகை (163) - தாழ் இடுதலை யுடைய தண்ணிய பண்டங்களை யுடைய மஞ்சிகை,

நெல்லுப் போல ஏனைப் பண்டங்கள் சிறந்தன அன்மையின் [2]தண்ணிய பண்ட மென்றார். பண்டமெனவே உலகில் விற்கும் பண்டங்களெல்லாம் அடங்கின.

பாகு உருத்த (166) மஞ்சிகை (163) - பாக்கு வெற்றிலை சொரிந்த மஞ்சிகை,

இனி உருத்த பாகென மாறிச் சிந்தின பாகினை யுடைய மஞ்சிகை யென்றலுமாம்.

என்றது, கண்டு சர்க்கரைக் கட்டுப் பாகினை.

இதனைப் பசுமெழுக் கென்பதனோடு கூட்டி ஆப்பி யென்பாரும் உளர்.

பசு மெழுக்கின் (166) மஞ்சிகை (163) - புது மெழுக்கினை யுடைய மஞ்சிகையிடத்தே,

வால் அரிசி பலி சிதறி (165) - வெள்ளிய அரிசியாகிய பலிகளைத் தூவி,

காழ் ஊன்றிய கவி கிடுகின் (167) மேல் ஊன்றிய துகில் கொடியும் (168) - கால்கள் நட்டு வைத்த கவிந்த சட்டங்களின் மேலே நட்டு வைத்த வெள்ளிய துகிற் கொடிகளும்,

கால்கள், சட்டங்களைத் தாங்குவன.

சிதறி ஊன்றிய மஞ்சிகையிற் கவிந்த கிடுகென்க.

169 - 71. பல் கேள்வி துறை போகிய தொல் ஆணை நல் ஆசிரியர் உறழ் குறித்து எடுத்த உரு கெழு கொடியும் - பலவாகிய கேட்டற்றுறையிலை யுடைய நூற்றிரளை முற்றக் கற்ற பெரிய ஆக்கினையை யுடைய நல்ல ஆசிரியர் வாது செய்யக் கருதிக் கட்டின அச்சம் பொருந்தின கொடிகளும்,

172. வெளில் இளக்கும் களிறு போல - அசையாத கம்பத்தினை அசைக்கும் யானை போல நின்று தூங்கும் நாவாய் (174),

---

கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப் பள்ளியென இவற்றுள் நீங்கி" (இறை. சூ. 21, உரை)

[1] மஞ்சிகை - தொம்பை; "ஆரியச் செப்பும் யவனமஞ் சிகையும், பொன்செய் பேழையொடு பொறித்தாழ் நீக்கி" (பெருங். 1. 32 : 76-7); இதனை மஞ்சூஷா என்னும் வடமொழித் திரிபென்பர்.

[2] தண்ணிய - இழிந்த; "தண் கான் – இழிந்த காடு" (சிலப். 2, 54. அடியார்.); "எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன், தண்பதத்தாற் றானே கெடும்" (குறள், 548)

173 - 5. [தீம்புகார்த் திரைமுன் றுறைத், தூங்குநாவாய் துவன் றிருக்கை, மிசைக்கூம்பி னசைக்கொடியும் :]

தீ புகார் திரை முன் துறை – கட்கு இனிதாகிய புகாரிடத்துத் திரையினையுடைய துறையின் முன்னே,

துவன்று இருக்கை தூங்கு நாவாய் மிசை கூம்பின் நசை கொடியும் – நிறைந்த இருப்பினையுடைய அசைகின்ற நாவாயின் மேல் நட்ட பாய் மரத்தின் மேலெடுத்த விரும்புதலையுடைய கொடிகளும்,

176 - 8. [மீன்றடிந்து விடக்கறுத், தூன்பொரிக்கு மொலி முன்றில், மணற்குவைஇ மலர்சிதறி :]

மணல் குவைஇ மலர் சிதறி - மணலை மிகப்பரப்பிச் செம்பூக்களை யும் சிதறி,

மீன் தடிந்து விடக்கு அறுத்து ஊன் பொரிக்கும் ஒலி முன்றில் - மீனை அறுத்துப் பின் இறைச்சியையும் அறுத்து அவ்விரண்டு தசையினையும் பொரிக்கும் ஆரவாரத்தினையுடைய முற்றத்தினையும்,

179 - 81. [பலர்புகுமனைப் பலிப்புதவின், நறவுநொடைக் கொடி யோடு, பிறபிறவு நனிவிரைஇ :]

பலி புதவின் – தெய்வத்திற்குக் கொடுக்கும் பலியினையுடைய வாசலினையுமுடைய,

பலர் புகும் மனை நறவு நொடை கொடியோடு பிற பிறவும் நனி விரைஇ – கள்ளுண்பார் பலரும் செல்லும் மனைகளிற் சிறப்புடைக் கள்ளின் விலைக்குக் கட்டின கொடியோடே [1]ஏனையவற்றிற்குக் கட்டின கொடிகளும் மிகக் கலக்கையினாலே செல்கதிர் நுழையா (183) என்க.

182. பல் வேறு உருவின் பதாகை - பலவாய் வேறுபட்ட வடிவினையுடைய பெருங்கொடிகளும்,

நீழல் - நறவுநொடைக் கொடியோடே முற்கூறிய கொடிகளும் பிறகொடிகளும் பதாகைகளும் விரவுகையினாலே இவற்றின் நிழலில்,

183. செல் கதிர் நுழையா செழு நகர் வரைப்பின் – [2]செல் கின்ற ஞாயிற்றின் கிரணங்கள் நுழையப்படாத வளவிய ஊரெல்லை யிடத்து மறுகு (193) எனக் கூட்டுக.

184. செல்லா நல் இசை அமரர் காப்பின் - கெடாத நல்ல புகழினையுடைய தேவர்கள் பாதுகாவலினாலே,

185 - 6. [நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், காலின் வந்த கருங் கறி மூடையும் :]

நீரின் காலின் வந்த நிமிர் பரி புரவியும் - கடலிலே காற்றான் வந்த நிமிர்ந்த செலவினையுடைய குதிரைகளும்,

---

[1] மதுரைக். 366 - 73.

[2] பெரும்பாண். 374, அடிக்.

நீரின் காலின் வந்த கரு கறி மூடையும் - கடலிலே காற்றான் வந்த கரிய மிளகு பொதிகளும்,

187. வட மலை பிறந்த மணியும் பொன்னும்-மேருவிலே பிறந்த மாணிக்கமும் [1]சாம்பூநத மென்னும் பொன்னும்,

188. குடமலை பிறந்த ஆரமும் அகிலும் - பொதியில் மலையிலே பிறந்த சந்தனமும் அகிலும்,

புகார்க்குத் தென்மேற்காதலிற் குடமலையென்றார் பொதியில் மலையை; அன்றி மேற்குள்ள மலையென்றுமாம்.

189. தென்கடல் முத்தும் - [2]தென்றிசைக் கடலிற் பிறந்த முத்தும்,

குணகடல் துகிரும் - கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பவளமும்,

190. கங்கை வாரியும்-கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், அவை யானையும் மாணிக்கமும் முத்தும் பொன்னும் முதலியன வும் பிறவுமாம்.

190 - 91. [3][காவிரிப் பயனும், ஈழத் துணவும்;]

191. காழகத்து ஆக்கமும் - கடாரத்தில் உண்டான நுகரும் பொருள்களும்,

ஆக்கம் : ஆகுபெயர்.

192. அரியவும் – சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும்,

பெரியவும் - இவை யொழியப் பெரியவையாகிய பல பொருள் களும்,

நெரிய ஈண்டி - நிலத்தின் முதுகு நெளியும்படி திரண்டு,

193 - 5. [வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின், நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும், ஏமாப்ப இனிது துஞ்சி :]

ஏமாப்ப நீர் நாப்பண்ணும் நிலத்தின் மேலும் இனிது துஞ்சி - ஏமாப்பினாலே புகாரின் நடுவிடத்தும் கரையினிடத்தும் அழிவின்றி இனிதாகத் தங்குகையினாலே,

வளம் தலை மயங்கிய நன தலை மறுகின் - செல்வம் தலை தெரியாத அகன்ற இடங்களையுடைய தெருவுகளையும்,

---

[1] சாம்பூநதம் - மேருமலையின் தென்பாலுள்ள நாவல் மரத்தின் கனிச்சாற்றிலிருந்து உண்டாய பொன்.

[2] தென்றிசைக் கடலென்றது, தாம்பிரபன்னி நதி கலக்கப்பெற்ற கடலை; அந்தப் பாகம் கொற்கைத் துறையென்று வழங்கும்.

[3] இதற்கு உரை கிடைத்திலது; காவிரியால் உண்டாகிய பொருள்களும் சிங்கள தேசத்திலிருந்து உண்டாகிய நுகர் பொருள்களும் என்க.

செழுநகர் வரைப்பிற் (183) புரவி முதலியன ஈண்டித் (192) துஞ்சி (195) மயங்கிய மறுகு (193) என்க.

இனி, இனிது துஞ்சி (195) மீன் பிறழவும் (197) மா ஈண்டவும் (198) என மேலே கூட்டுவாரும் உளர்.

196 - 217. [கிளைகலித்துப் பகைபேணாது, வலைஞர்முன்றின் மீன்பிறழவும், விலைஞர்குரம்பை மாவீண்டவும், கொலைகடிந்துங் களவுநீக்கியும், அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும், நல்லானொடு பக டோம்பியும், நான்மறையோர் புகழ்பரப்பியும், பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும், புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக், கொடுமேழி நசையுழவர், நெடுநுகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப் பதூஉங் குறைகொடாது, பல்பண்டம் பகர்ந்துவீசும், தொல் கொண்டித் துவன்றிருக்கைப், பல்லாயமொடு பதிபழகி, வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற், சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு, மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப், புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும் :]

பழி தீர் தேஎத்து (216) முது வாய் ஒக்கல் (214) சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு (215) - குற்றமற்ற பிற தேசங்களிலே அறிவு வாய்ந்த சுற்றத்தினையுடைய விழாக்களை நிகழ்த்தின பழைய ஊரிலுள்ளார் ஈண்டு வந்து குடியேறினாற் போல,

"செலவினும் வரவினும்" (தொல். கிளவி. சூ. 28) என்னும் சூத்திரத்தால் சென்றென்பது வந்தென்னும் பொருள் தந்தது.

[1]வேறு வேறு உயர்ந்த (214) புலம் பெயர் மாக்கள் (217) - பல பல சாதிகளா யுயர்ந்த தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போந்த மாக்கள்,

பல மொழி பெருகிய (216) மாக்கள் (217) - பல பாடை மிக்க மாக்கள்,

மாக்களென்றார், [2]ஐயறிவே யுடையராதலின்; என்றது சோனகர் சீனர் முதலியோரை.

---

[1] "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள், கலந்திருந் துறையு மிலங்குநீர்ப் பரப்பும்", "மொழிபெயர் தேத்தோ ரொழியா விளக்கமும்" (சிலப். 5 : 11 - 2, 6 : 143)

[2] ஐயறிவு - ஐம்பொறி யுணர்வு; மாக்கள் மனனுணர்வின்றி ஐம்பொறியுணர்வையே உடைய விலங்குபோல்வார்; இதனை, "மாவு மாக்களு மையறி வினவே", "மக்க டாமே யாறறி வுயிரே" (32, 33) என்னும் தொல்காப்பிய மரபியற் சூத்திரங்களால் உணர்க

மாக்கள் (217) பல் ஆயமொடு பதி பழகி (213) கலந்து இனிது உறையும் (217) மறுகின் (193) - இம்மாக்கள் பல திரளோடே இவ் வூரிடத்தே பழகி ஈண்டை நன்மக்களோடே கூடி நன்முக இருக்கும் மறுகென முன்னே கூட்டுக.

இவர்கள் இருத்தலின், வளந்தலை மயங்கிய மறுகுகளாயின.

கிளை கலித்து பகை பேணுது (196) வலைஞர் முன்றில் மீன் பிறழவும் (197) விலைஞர் குரம்பை மா ஈண்டவும் (198) கொலை கடிந்தும் களவு நீக்கியும் (199) - மீன் திரளும் விலங்கின் திரளும் செருக்கி வலையாற் பிடிப்பாரையும் கொன்று இறைச்சி விற்பாரையும் தமக்குப் பகையாகக் கருதி அஞ்சாதே வலைஞர் முற்றத்தே அம்மீன் பிறழ்ந்து திரியும்படியாகவும் விலைஞர் குடிலிலே அவ்விலங்குகள் கிடக்கும்படியாகவும் முற்படக் கொலைத் தொழிலை அவர்களிடத்தி னின்றும் போக்கியும் பின்னர்க் களவு காண்பாரிடத்துக் களவுத் தொழிலைப் போக்கியும்,

அமரர் பேணியும் (200) - தேவர்களை வழிபட்டும்,

ஆவுதி அருத்தியும் (200) - யாகங்களைப் பண்ணி அவற்ருன் ஆவுதிகளை அவர் நுகரப்பண்ணியும்,

நல் ஆனெடு பகடு ஓம்பியும் (201) – நல்ல பசுக்களோடு எருது களைப் பரிகரித்தும்,

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" (தொல்.மரபு. சூ. 77), "மெய்தெரி வகையி னெண்வகை யுணவின், செய்தியும் வரையா ரப்பா லான" (தொல். மரபு. சூ. 78) என்பவற்ருல் (பி - ம். என்பதனுல்) வாணிகர்க்கு [1]உழவுத் தொழில் உரித்தாகலிற் பகடோம்பியு மென்ருர். [2]யாகத்திற்குப் பசுவை ஓம்பியு மென்ருர்.

---

[1] "அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்த செய்தி யனவாகிய உழவுத்தொழிலும் நிரைகாத்தலும் வாணிகமு மென்பன, அவற்றின் ஒத்த சிறப்பினவன்றி அவற்றுள்ளும் ஒரோவொன்று ஒரோ வருணத்தாருக்கு உரியதாகலானும் ஈண்டு அவை விதந்து கூறினனென்பது. நிரைகாவலும் உழவுத் தொழிலும் வணிகர்க்கும் வேளாளர்க்கும் தடுமாறுதல் போலாது......இச்சூத்திரங்களா னென்பது" (தொல். மரபு. சூ. 80, பேர்.)

[2] "தீம்பா லொழுகப் பொழுதுதொறு மோம தேனுச் செல்வன வும்", "பூணுந் தொழில்வேள் விச்சடங்கு புரிய வோம தேனுக்கள், காணும் பொலிவின் முன்னையினு மநேக மடங்கு கறப்பனவா" (பெரிய. சண்டேசுர. 5, 29); "சுரபி வேருய்விடின் பால் அக்கினி

நான்மறையோர் புகழ் பரப்பியும் (202) - அந்தணர்க்குண்டாம் புகழ்களைத் தாங்கள் அவர்க்கு நிலைபெறுத்தியும்,

புண்ணியம் (204) பண்ணி அட்டியும் (203) - பெரிதாகிய புண்ணியங்களைத் தாங்கள் பண்ணி அவற்றைச் செய்யமாட்டா தார்க்குத் தானம் பண்ணியும்,

அம் : அசை.

பண்ணியம் அட்டியும் என்றதற்குச் சோற்றை ஆக்கியிட்டு என்பாரும் உளர்.

[1]பசு பதம் கொடுத்தும் (203) – விளைந்த நெல்லையும் பறிக்கும் கழுகையும் உணவாகக் கொடுத்தும்,

இதற்கு அரிசியும் கறியும் கொடுத்து மென்பாருமுளர்.

முட்டா தண் [2]நிழல் வாழ்க்கை (204) - இங்ஙனம் செய்யும் அறத்தொழில்கள் முட்டுப்படாத குளிர்ந்த அருளுடனே வாழும் இல்வாழ்க்கையையுடைய நன்னெஞ்சினோர் (207) என்க.

கொடு மேழி நசை உழவர் (205) நெடு நுகத்து பகல் போல (206) நடுவுநின்ற நல் நெஞ்சினோர் (207) - வளைந்த மேழியால் உழவுத் தொழிலை நச்சுதலையுடைய உழவரது நெடிய [3]நுகத்தில் தைத்த பக லாணி போல நடுவுநிலையென்னும் குணம் நிலைபெற்ற நன்றாகிய நெஞ்சினையுடையோர்,

என்றது, ஆண்டுறையும் [4]வேத வாணிகரை.

[5]தம (209) பல் பண்டமும் (211) பிற (209) பல் பண்டமும் (211) ஒப்ப நாடி (209) – தம்முடையவாகிய பல சரக்குகளையும் பிற வாகிய பல சரக்குகளையும் பொருளொப்ப ஆராய்ந்து,

---

கோத்திரப் பரப்புக்குப் போதாது; அஃது இன்றி யொழியின் அவன் உண்ணுனென்பது, அவன் வழியொழுகும் சுரபியைப் பறித்ததனுல் பயன் இது" (தக்க. 488, உரை.)

1 "உண்டாயிற் பதங்கொடுத், தில்லாயி னுடனுண்ணும்" (புறநா. 95 : 6 – 7.)

2 நிழலென்பதற்கு அருளென்று ஈண்டுப் பொருள் எழுதிய வாறே முன்னும் (பொருந. 149) எழுதினர்.

3 நுகம் - நுகத்தடி; பகலாணி - அதன் நடுவே தைத்த ஆணி.

4 "மெய்ந்நிக ரிலாதவன் வேத வாணிகன்" (சீவக. 1449); "வேதவணிகரல்லாதார் கலத்திற் பிரிவு வேதநெறியன்மையின் ஆராய்ச்சியின்று" (தொல். அகத்திணை. சூ. 11, ந.)

5 "பொற்போர் புரிவர் பிறர்பொருளுந் தமபோற் பேணிப் புரி வணிகர்" (பிரபு. மாயையுற்பத்தி. 15.)

வடு அஞ்சி வாய் மொழிந்து (208) - தம் குடிக்கு வடுவாமென் றஞ்சி மெய்யே சொல்லி,

கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது (210) - தாம் கொள்ளும் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்கு மிகையாகக் கொள்ளாது தாம் கொடுக்கும் சரக்கையும் தாம் வாங்கும் பொருட்குக் குறையாகக் கொடாமல்,

பகர்ந்து வீசும் (211) - இலாபத்தை வெளியாகச் சொல்லிக் கொடுக்கும்,

தொல் கொண்டி (212) – பழைதாகிய கொள்ளையினையும்,

கொள்ளை யென்றார், இந்நெறியை நடத்தினாரிடத்தல்லது பொருட்டிரள் உண்டாகாதென்றற்கு.

தண்ணிழல் வாழ்க்கையினையும் (204) தொல் கொண்டியினையும் (212) உடைய நன்னெஞ்சினோ (207) ரென்க.

துவன்று இருக்கை (212) - நெருங்கின குடியிருப்பினையும்,

காவிரி (6) புனல் பரந்து பொன் கொழிக்கும்(7) பல்லூர் நெடுஞ் சோணாட்டிற் (28) கழிசூழ் படப்பையினையும் (32) தண்டலை யினையும் (33) பொய்கைகளையும் (38) ஏரிகளையும் (39) திண் காப்பினையும் (41) கோயிலை மாசூட்டுதற்குக் காரணமான (50) அட்டிலினையும் (43) சாலையினையும் (52) பள்ளியினையும் (53) குயில் (55) துச்சிற் சேக்கைக்குக் காரணமான (58) தாழ்காவினையும் (53) பாக்கங்களையும் (27) புறச்சேரியினையும் (76) முன்றிலினையும் (141) விழவறு ஆவணத்தையும் (158) மாக்கள் கலந்து இனி துறையும் (217) வளந்தலை மயங்கிய மறுகுகளையும் (193) நன்னெஞ்சினோர் (207) துவன்றிருக்கையினையு (212) முடைய பட்டின (218) மென வினை முடிக்க.

218. முட்டா சிறப்பின் பட்டினம் பெறினும் - குறைவு படாத தலைமையினை யுடைய பட்டினத்தை எனக்கு உரித்தாகப் பெறுவே னாயினும்,

219. வார் இரு கூந்தல் வயங்கு இழை ஒழிய - நீண்ட கரிய கூந்தலை யுடைய விளங்குகின்ற பூணினை யுடையாள் ஈண்டுப் பிரிந்திருப்ப,

220. வாரேன் வாழிய நெஞ்சே - யான் நின்னோடு கூட வாரேன்; நெஞ்சே, போய் வாழ்வாயாக;

"அளிதோ பொறு அது" (5) என்னும் அசைப்பாட்டால் போக்கிற்கு ஒருப்படாமல் நிற்கும் குறிப்புணர்க.

220 – 21. கூர் உகிர் கொடுவரி குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு - கூரிய உகிரினையும் வளைந்த வரிகளையுமுடைய புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண்டிருந்து வளர்ந்தாற் போல,

222. பிறர் பிணி அகத்து இருந்து பீடு காழ் முற்றி - பகைவர் காவலிடத்தே இருந்து தனக்குப் பெருமை வயிரமாக முற்றி,

223 - 5. [அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று, பெருங்கை யானை பிடிபுக் காங்கு, நுண்ணிதி னுணர நாடி:]

நுண்ணிதின் உணர நாடி - தன்னுணர்வு கூரிதாக உணரும்படி இதுவே காரியமென்று ஆராய்ந்து,

பெரு கை யானை அரு கரை கவிய குத்தி குழி கொன்று பிடி புக்காங்கு - பெரிய கையினை யுடைய யானை தான் அகப்படப் பண்ணின குழியில் ஏறுதற்கு அரிய கரைகளை இடியும்படி கோட்டாலே குத்திக் குழியைத் தூர்த்துப் பிடியிடத்தே சென்றாற்போல,

225 - 6 [நண்ணார், செறிவுடைத் திண்காப் பேறி வாள் கழித்து:] நண்ணார் செறிவு உடை திண் காப்பு வாள் கழித்து ஏறி - அப் பகைவருடைய நெருங்கின திண்ணிய காவலாகிய வாட்படையை ஒட்டி அவ்விடத்தினின்றும் போந்து.

இனித் திண்காப்பிடத்தே வாளை உறைகழித்து வெட்டிப் போந்தென்றுமாம்.

227. உருகெழு [1]தாயம் ஊழின் எய்தி - அச்சம் பொருந்தின தன் அரச உரிமையை முறையாலே பெற்று,

228. பெற்றவை மகிழ்தல் செய்யான் - தான் இறையாகப் பெற்ற அரசுரிமையால் மகிழ்ச்சி பொருந்துதல் செய்யானாய் மேலும் ஆசை மிக்கு,

228 - 38. [செற்றோர், கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின், முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள், உகிருடையடிய வோங்கெழில் யானை, வடிமணிப் புரவியொடு வயவர் வீழப், பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத், தூறிவர் துறுகற் போலப் போர் வேட்டு, வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப், பேய்க்க ணன்ன பிளிறுகடி முரசம், மாக்க ணகலறை யதிர்வன முழங்க,முனைகெடச் சென்று முன்சம முருக்கி:]

முடி உடை கரு தலை புரட்டும் முன் தாள் (230) உகிர் உடை அடிய (231) - முடியை யுடைய கரிய தலைகளை உருட்டும் முன் காலின் உகிருடைய அடிகளையுடையவாய்,

தூறு இவர் [2]துறு கல் போல (234) உழிஞை சூடி (235)

---

[1] "தாய்வயிற் றிருந்து தாய மெய்தி" (பொருந. 132)

[2] துறுகல் யானைக்கு உவமை: "மாசறக் கழீஇய யானை போலப், பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்", "கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன, கேழிருந் துறுகல்", "மாயிருந் துறுக, றுகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்", "பொருத யானைப் புகர் முகங்

செற்றோர் (228) கடி அரண் தொலைத்த (229) யானையொடு (231) - தூறு படர்ந்த நெருங்கின மலைகள் போல உழிஞையைச் சூடித் தம் அரசரால் போர் பெற்றாருடைய காவலை உடைய அரண்களை இடித்த யானைகளோடும்,

கதவு கொல் மருப்பின் (229) ஓங்கு எழில் யானை (231) - கதவை முறிக்கும் கொம்பினையும் உயர்ந்த அழகினையும் உடைய யானை என்க.

வடி மண் புரவியொடு (232) - வடித்த மணி கட்டின குதிரைகளோடும்,

போர் வேட்டு (234) - போரை விரும்பி,

பேய் கண் அன்ன பிளிறு கடி முரசம் (236) மா கண் அகல் அறை அதிர்வன முழங்க (237) - பேயின் கண்ணையொத்து முழங்குகின்ற காவலையுடைய முரசம் பெருமையை உடைத்தாகிய இடத்தையுடைய பாசறையிலே நடுங்குவனவாய் முழங்க,

அகலறை - மலைப்பக்கமுமாம்.

முனை கெட சென்று (238) - பகைப்புலம் கெடும்படி சென்று,

பெரு நல் வானத்து பருந்து உலாய் நடப்ப (233) வயவர் வீழ (232) முன்சமம் முருக்கி (238) - பெரிய நல்ல வானிடத்தே பருந்து உலாவித் திரியும்படியாக வீரர் படும்படி முற்பட்ட தூசியைக் கெடுத்து,

யானைகளோடும் (231) புரவிகளோடும் (232) போர் வேட்டு (234) முரசம் (236) முழங்கச் (237) சென்று (238) பருந்துலாய் நடப்ப (233) வயவர் வீழ (232) முருக்கி (238) என்க.

239. தலை தவ சென்று-அப்பகைவர் அரணிடத்தே மிக நடந்து,

239 - 42. [தண்பணை யெடுப்பி, வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி, மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக், கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை:][1] வெண் பூ கரும்பொடு செந்நெல் நீடி [2]குவளையொடு மா இதழ் நெய்தலும் மயங்கி கராம் கலித்த கண் அகன் பொய்கை தண் பணை எடுப்பி - வெள்ளிய பூக்களை உடைய கரும்புகளுடனே செந்நெல்லும் வளர்ந்து குவளையோடே பெருமையை உடைய இதழ்களை உடைய நெய்தலும் மயக்கப்பட்டு முதலைகள் செருக்கித் திரிந்த இடம் அகன்ற பொய்கைகளை உடைய மருத நிலத்துள்ள குடிகளை ஓட்டி,

243 – 4. [கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச், செறுவும்

கடுப்ப மன்றத் துறுகன் மீமிசைப் பலவுட, ஞெண்செங் காந்த ளவிழு நாடன்'' (குறுந். 13 : 1 - 2, 111 : 4 - 5, 279 : 5 - 6, 284 : 1 - 3)

[1] ''நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்'' (நான்மணி. 9); ''கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டி'' (பு. வெ. 56)

[2] ''மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய, கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி'' (மணி. 11 : 38 - 9)

வாவியு மயங்கி நீரற்று:][1]செறுவும் வாவியும் நீர் அற்று மயங்கி வேறு பல் பூளையொடு (246) கொழு கால் புதவமொடு செருந்தி நீடி - செய்களும் வாவிகளும் நீரற்றுத் தம்மில் ஒன்றாய் இருவகைப்பட்ட பலவாகிய பூளைகளோடே [2]கொழுவிய தண்டுகளையுடைய அறு கோடே கோரைகளும் வளரப்பட்டு,

வேறுபல் பூளை இங்கே கூட்டிற்று; சிறு பூளையும் பெரும் பூளையு முண்மையின் வேறுபல் பூளை யென்றார்.

245. அறு கோடு இரலையொடு மான்பிணை உகளவும் - அறல் பட்ட கொம்பினையுடைய புல்வாய்க்கலையோடு மாண்பிணை துள்ளி விளையாடும்படியாகவும்,

தலைதவச்சென்று தண்பணை யெடுப்பி (239) நீடி (240) உகளவும் (245) என்க.

246 - 9. [கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி, அந்தி மாட்டிய நந்தா விளக்கின், மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ, வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில் :]

கொண்டி மகளிர் உண் துறை மூழ்கி, மெழுக்கம் அந்தி மாட்டிய நந்தா விளக்கின் மலர் அணி கந்து உடை பொதியில் - [3]பகைவர் மனையோராய்ப் பிடித்து வந்த மகளிர் பலரும் நீருண்ணும் துறையிலே சென்று முழுகி மெழுகும் மெழுக்கத்தினையும் அவர்கள் அந்திக்காலத்தே கொளுத்தின அவியாத விளக்கினை யுடைய பூக் களைச் சூட்டின தறியினையுடைய அம்பலம்.

கந்து - [4]தெய்வம் உறையுந் தறி.

---

[1]பகைவர் நாட்டு நீர் நிலைகளில் யானையைப் படிவித்தலும் அவை களை உடைத்தலும் வழக்கமாதலின், 'நீரற்று' என்றார்; "ஒளிறு மருப்பிற் களிறமர, காப்புடைய கயம்படியினை", "கடிதுறைநீர்க் களிறுபடீஇ", "வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇக், களிறு படிந் துண்டெனக் கலங்கிய துறையும்", "துறைநீர்க், கைமான் கொள்ளு மோவென, வுறையுண் முனியுமவன் செல்லு மூரே" (புறநா. 15 : 9 - 10, 16 ; 23 : 1 - 2, 96 : 7 - 9); "கரும்பொடு காய் நெற் கனையெரி யூட்டிப், பெரும்புனல் வாய்திறந்த பின்னும்" (பு. வெ. 56); "எண்ணுட் டிங்க ளனைய கொடுங்கரைத், தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ" (புறநா. 118 : 2 – 3)

[2] "வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத், தூரறிய லாகா கிடந்தனவே - போரின், முகையவிழ்தார்க் கோதை முசிறியர் கோமான், நகையனல்வேல் காய்த்தினார் நாடு" (முத்.)

[3] "கொற்ற மன்னன் மங்கைய, ரேத்தல் சான்ற கோயிலும்" (சீவக. 154)

[4] "கந்துடை நிலையினும்" (முருகு. 226); "அருந்திறற் கடவு

வம்பலர் பலர் ஏறி தொழ சேக்கும் பொதியில் - புதியவர்கள் பலரும் ஏறித் தொழுதற்குத் தங்கும் [1]பொதியில்,

பொதியிலை மெழுகி விளக்கும் இட்டிருக்க வம்பமகளிரை வைத்தார், அதனால் தமக்குப் புகழுளதாமென்று கருதி,

250 - 51. பரு நிலை நெடு தூண் ஒல்க தீண்டி பெரு நல் யானையொடு பிடி புணர்ந்து உறையவும் - அத்தெய்வம் உறையும் அம்பலத்தில் நின்ற பருத்த நிலைமையினையுடைய நெடிய தூண் சாயும்படி தம்முடம்பு உரிஞ்சிப் பெரிய நல்ல களிறுகளுடனே பிடிகள் கூடித் தங்கும்படியாகவும,

252 - 5. [அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின், முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த, திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும், பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்து :] தெருவில் அரு விலை நறு பூ தூஉய் முதுவாய் கோடியர் முழவொடு புணர்ந்த திரி புரி நரம்பின் தீ தொடை ஓர்க்கும் பெரு விழா கழிந்த பேஎ முதிர் மன்றத்து - ஆண்டுள்ள தெருவின்கண்ணே விலைகூறுதற்கரிய நறிய பூக்களைச் சிதறி அறிவு வாய்த்தலையுடைய கூத்தருடைய மத்தளத்தில் தாளத்தோடே கூடின முறுக்குதல் புரிந்த நரம்பின் இனிதாகிய கட்டினையுடைய யாழைக் கேட்கும் பெரிய திருநாள் இன்றாகிய அச்சம் முதிர்ந்த மன்றத்திடத்தே,

தூவி ஓர்க்குமென்க. தொடை : ஆகுபெயர்.

256 - 7. [[2]சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி, அழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவும் :]

258. அழு குரல் கூகையோடு [3]ஆண்டலை விளிப்பவும்- இசைக்கு வருந்திக் கூப்பிடுகின்ற குரலையுடைய கூகைகளுடனே கூடி ஆண்டலைப் புள்ளுக் கூப்பிடும்படியாகவும்,

---

டிருந்துபலிக் கந்தமும்'',''இலகொளிக் கந்தமும்'' (மணி. 6 : 60,25 : 162); ''மரஞ்சேர் மாடத், தெழுதணி கடவுள் போகலிற் புல்லென், றொழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை'', ''மாத்தாட் கந்தின், சுரையிலர் பொதியி லங்குடிச் சீறூர், நாட்பலி மறந்த'', ''புதலிவர் பொதியிற், கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து'' (அகநா. 164: 14-6, 287: 4 - 6, 307 ; 11 - 2); ''கலிகெழு கடவுள் கந்தங் கைவிட'' (புறநா. 52 : 12)

[1]பொதியில் - அம்பலம்; முருகு. 226, ந.

[2]இதற்குப் பழையவுரை கிடைக்கவில்லை; சிறிய பூக்களையுடைய நெருஞ்சியோடு அறுகம்புல் பரவப்பெற்றுக் கொடிய வாயையுடைய நரிகள் பிறர்க்கு அச்சம் தோன்ற மிக்கு முழங்கவுமென்க.

[3]முருகு - 227, ந. அடிக்குறிப்புப் பார்க்க.

259 - 60. கணம் கொள் கூளியொடு கதுப்பு இருத்து அசைஇ பிணம் தின் யாக்கை பேய்மகள் துவன்றவும் - திரட்சிகொண்ட ஆண் பேய்களுடனே மயிரைத் தாழ்த்து இளைத்துப் பிணத்தைத் தின்னும் வடிவையுடைய பேய்மகள் நெருங்கும்படியாகவும்,

261. கொடு கால் - வளைந்த கால்களையுடைய பேய்மகளென முன்னே கூட்டுக.

261 - 2. விருந்து மாடத்து நெடு கடை துவன்றி உண்டு ஆறு பெரு சோறு அட்டில் - விருந்தினர் மாடத்திடத்து நெடிய தலைவாசலிலே முற்பட நெருங்கியிருந்து பின்பு உள்ளே சென்று உண்டு மிக்குக் கிடக்கின்ற பெரிய சோற்றையுடைய அடுக்களை,

263 - 4. ஒள் சுவர் நல் இல் உயர் திணை இருந்து பைங்கிளி [1]மிழற்றும் பால் ஆர் செழுநகர் - சாந்திட்ட சுவர்களையுடைய நன்றாகிய அகங்களின் உயர்ந்த திண்ணைகளிலேயிருந்து பசிய கிளி வார்த்தை சொல்லுதற்குக் காரணமாகிய பால் நிறைந்தவளவிய ஊர்,

திண்ணை : விகாரம். இனி, உயர் திணை - உயர்ந்த மேனிலம் என்றுமாம்.

265 - 7. [தொடுதோ லடியர் துடிபடக் குழீஇக், கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட, உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து:] கொடு வில் எயினர் தொடுதோல் அடியர் துடி பட குழீஇ கொள்ளை உண்ட உணவு இல் வறு கூடு உள் அகத்து இருந்து - கொடிய வில்லினையுடைய வேடர் செருப்புத் தொட்ட அடியினையுடையராய்த் துடி ஒலிப்பத் திரண்டு கொள்ளையாகக் கொண்டுண்ட நெல் உள் இல்லையான வறுவிய கூட்டினுடைய உள்ளாகிய இடத்தேயிருந்து,

268. [2]வளை வாய் கூகை நல் பகல் குழறவும் - வளைந்த வாயினையுடைய கூகை [3]அடியொத்த காலத்தே கூப்பிடும்படியாகவும்,

செழுநகர் (264) அட்டிலிடத்துக் (262) கூட்டினுள்ளே இருந்து (267) கூகை குழறவும் (268) என்க.

269 - 70. [அருங்கடி வரைப்பி னூர்கவி னழியப், பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற :] அரு கடி வரைப்பின் ஊர் கவின் அழிய [4]மருங்கு அற பெரும் பாழ் செய்தும் அமையான் - அரிய

---

[1]மிழற்ற லென்பதற்கு மெல்லக் கூறுதலென்றும் சில சொல்லுதலென்றும் உரை யெழுதுவர்; சீவக. 1626, 2239, ந.

[2]"நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக், குடுமிக் கூகை குராலொடு முரல" (மதுரைக். 169 - 70), [3]அடியொத்த காலம் - நிழல் அடியோடு பொருந்திய காலம்; என்றது உச்சிக்காலத்தை; "நிழலு. மடியகத் தொளிக்கு மாரழற் கானத்து" (திருவாரூர். மும். 13)

[4]மருங்கு - குலம் ; "சூர் மருங்கு - சூரபன்மாவின் குலத்தை"

காவலையுடைய மதிலையுடைய பகைவர் படைவீடுகள் அழகழிய அவர்கள் குலமின்றாகப் பெரிய பாழாகப் பண்ணியதனாலும் செற்றம் ஆறாய்,

பெற்றவை மகிழ்தல் செய்யானாய் (223) மேலும் ஆசைமிக்கு யானைகளோடும் (231) புரவிகளோடும் (232) போர்வேட்டு (234) முரசம் (226) முழங்கச் (237) சென்று முன்சமமுருக்கித் (238) தலை தவச் சென்று எடுப்பி (239) உகளவும் (245) உறையவும் (251) கதிர்ப்பவும் (257) விளிப்பவும் (558) குழறவும் (268) துவன்றவும் (220) பாழ் செய்தும் (279) ஊர் கவினழியப் (266) பாழ்செய்தும் அமையானாய் (270) என வினை முடிக்க.

பாழ் செய்தலை இரண்டிடத்தும் கூட்டுக.

271 - 2. மலை அகழ்க்குவனே கடல் தூர்க்குவனே வான் வீழ்க்குவனே வளி மாற்றுவன் என – இவன் தெய்வத்தன்மையுடையனாதலின் இம்மலைகளையெல்லாம் அகழ்தலைச் செய்வன்; தேவருலகைக் கீழ்வீழ்த்தலைச் செய்வன்; காற்றை இயங்காமல் விலக்குவனென்று உலகத்தார் மேற்கூறும்படியாகத் துறைபோகலினென்க.

பெரும்பாழ் செய்தும் அமையானாய், இங்ஙனம் பாழ்செய்தவன் மேல் இவையும் செய்வனென்று கூறும்படியாகத் துறைபோனானென்றவாறு.

273. தான் முன்னிய துறைபோகலின் - தான் கருதிய போர்த் துறைகளெல்லாம் பொருது முடித்தானாகலின்,

274. பல் ஒளியர் பணிபு ஒடுங்க – பலராகிய [1]ஒளிநாட்டார் தாழ்ந்து தம் வீரம் குறைய,

ஒளியராவர் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்.

275. தொல் அருவாளர் தொழில் கேட்ப - பழைய [2]அருவாள நாட்டில் அரசரும் தாங்கள் செய்யும் தொழிலை வந்து கேட்ப,

276. வடவர் வாட – அதற்கு வடக்கு நாட்டிலுள்ள அரசர் குறைய, குடவர் கூம்ப–குடநாட்டிலுள்ளார் மனவெழுச்சி குறைய,

277 - 91. [தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்,மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள், மாத்தானை மறமொய்ம்பிற், செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப், புன்பொதுவர் வழிபொன்ற, இருங்கோவேண் மருங்குசாயக்,காடுகொன்று நாடாக்கிக், குளங்தொட்டு வளம்

(முருகு. 275; பட்டினப். 282, ந.).

[1] ஒளி நாடென்பது செந்தமிழ்சேர்ந்த பன்னிரு நிலத்தில் ஒன்று; தொல், எச்ச. சூ. 4, சே. ந.

[2] இது அருவா நாடெனவும் வழங்கும்; இதுவும் மேற்கூறிய பன்னிரு நிலத்துள் ஒன்று.

பெருக்கிப், பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக், கோயிலொடு குடிநிறீஇ, வாயிலொடு புழையமைத்து, ஞாயிறொறும் புதை நிறீஇப், பொருவேமெனப் பெயர்கொடுத், தொருவேமெனப் புறக் கொடாது, திருநிலைஇய பெருமன்னெயில்:]

புல் பொதுவர் வழி பொன்ற (281) - புல்லிய இடையராய் அரசாள்வோர் கிளை முழுதும் கெட்டுப்போக,

[1]இருங்கோவேள் மருங்கு சாய (282) - ஐம்பெரு வேளிர் குலம் முழுதும் குறைய,

காடு கொன்று (283) - சோழ மண்டலத்தில் காடாகிய இடங்களை வெட்டிப் போகட்டு,

நாடு ஆக்கி (283) - பண்டு போலக் குடியிருந்து விளையப் பண்ணி,

குளம் தொட்டு (284) – தூர்ந்த குளங்களைக் கல்லி,

வளம் பெருக்கி (284) - நாட்டிற்குச் செல்வத்தை மிகுத்து,

பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி (285) - பெரிய நிலை களை உடைய மாடங்களை உடைய உறந்தை என்னும் தன்னூரைப் போக்கி,[2]

கோயிலொடு குடி நிறீஇ (286) - கோயில்களோடே பழைய குடிகளையும் பண்டு போல நிலை நிறுத்தி,

திரு நிலைஇய பெரு மன் எயில் (291) - திருமகள் நிலைபெற்ற பெரிய ஆக்கத்தை உடைய உறந்தையின் மதிலிடத்தே,

வாயிலொடு புழை அமைத்து (287) - பெரிய வாசல்களோடே சிறிய வாசல்களையும் உண்டாக்கி,

ஞாயில் தொறும் புதை நிறீஇ (288) - அதன் தலையில் எய்து மறையும் சூட்டுத் தோறும் அம்புக் கட்டுக்களையும் கட்டி வைத்து,

ஒருவேம் என புறம் கொடாது (290) பொருவேம் என பெயர் கொடுத்து (289) மன்னர் (277) மன் எயில் கதுவும் மதன் உடை நோன்தாள் (278) மா தானை மறம் மொய்ம்பின் (279) தென்னவன் திறல் கெட (277) செ கண்ணால் செயிர்த்து நோக்கி (280) சீறி (277) - யாம் தமியேம் என்று கருதிப் பல அரசர்கள் வந்தால் முதுகிடாது அவர்களுடனும் பொரக்கடவேமென வஞ்சினத்தைச் சொல்லி அரச ருடைய பெரிய அரண்களைக் கோபித்தழிக்கும் செருக்கினை உடைய வலிய முயற்சியினையும் பெருமையினையும் உடைய நாற்படை யினையும் மறத்தை யுடைத்தாகிய வலியினையும் உடைய பாண்டி யனது வலி கெடும்படி தன் செய்ய கண்ணாலே குற்றத்தைச் செய்து பார்த்துக் கோபித்துப் பெற்றவை மகிழ்தல் செய்யான் (228) என முன்னே கூட்டுக.

---

[1] இருங்கோவேளென்பான் திதியன் முதலிய ஐம்பெரு வேளிர் களுள் ஒருவன்; மதுரைக். 128 – 9, ந. [2] போக்கி - பெரிதாக்கி.

"கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக், குடிபழி தூற்றுங் கோலே னாகுக" (புறநா. 72 : 11 - 2) என்று கூறும் வஞ்சினத்தால் தனக்கு ஓர் பெயர் பெறுதலின் வஞ்சினத்தைப் பெயர் என்றார்.

292 - 4. [மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி, விசிபிணி முழவின் வேந்தர் சூடிய, பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்கால்:]

விசி பிணி முழவின் வேந்தர் தம் ஒளி மழுங்கி மின் ஒளி எறிப்ப சூடிய கழல் கால் – இறுக வலித்த வார்க்கட்டினை உடைய முரசுகளை உடைய வழிபாடில்லாத வேந்தர் தம் அரசு இழத்தலின் தமக்கு முன்புள்ள விளக்கம் கெட்டுப் பின்பு அவ் விளங்குகின்ற விளக்கம் தோன்றும்படியாகத் தம் முடிமேலே சூடின வீரக்கழலை யுடைய காலினையும்,

பசு மணி பொருத பரு ஏர் எறும் கழல் – பசிய மணிகளோடே மாறுபட்ட பெரிய அழகிய வலியினையுடைய கழலென்க.

295 - 7. பொன் தொடி புதல்வர் ஓடி ஆடவும் முற்று இழை மகளிர் முகிழ் முலை திளைப்பவும் செ சாந்து சிதைந்த மார்பின் – பொன்னால் செய்த தொடியினை உடைய பிள்ளைகள் ஓடி வந்து ஏறி விளையாடுகையினாலும் மெய்ம்முழுதும் அணிந்த அணிகலங்களை உடைய மகளிருடைய தாமரை முகை போலும் முலைகள் புணர்தலாலும் சிவந்த சந்தனம் அழிந்த மார்பினையும்,

297. ஒள் பூண் - ஒள்ளிய பேரணிகலங்களையும்,

298. அரிமா அன்ன அணங்கு உடை துப்பின் - சிங்கவேற்றை யொத்த வருத்தத்தை உடைய வலியினையும் உடைய,

299. திரு மா வளவன் – திருவின் பெருமையை உடைய கரிகாற் பெருவளத்தான்,

திண் காப்பு வாள் கழித்தேறிக் (226) காடுகொன்று நாடாக்கிக் (283) குளந்தொட்டு வளம் பெருக்கி (284) உறந்தை போக்கிக்(285) குடி நிறீஇப் (286) பெருமன்னெயிலிலே (291) வாயிலொடு புழையமைத்து (287) ஞாயிற்றும் புதைநிறீஇ(288) இங்ஙனம் உருகெழு தாயம் ஊழினெய்தித் (227) தென்னவன் திறல்கெடச் சீறி (277) அவன் திறையாகத் தந்த அரசவுரிமைகளாற் பெற்றவையில் தான் மகிழ்தல் செய்யானாய் (228) மேலும் ஆசைமிக்கு இவன் மலையகழ்க்குவன் தூர்க்குவன் (271) வீழ்க்குவன் மாற்றுவனென்று உலகம் கூறும்படியாக (272) உழிஞை சூடி (235) யானையோடும் (231) புரவியோடும் (232) சென்று முருக்கி (238) எடுப்பிப் (239) பெரும் பாழ் செய்தும் அமையானாய்ப் (270) பணிபொடுங்கக் (274) கேட்ப (275) வாடக் கூம்பப் (276) பொன்றச் (281) சாயத் (282) தான் முன்னிய துறை போகையினாலே (273) வழிபடா ஏனை வேந்தர் (293) தம்மொளி மழுங்கி மின்னொளியெறிப்பச் (292) சூடிய (293)

காலினையும் (294) மார்பினையும் பூணினையும் (297) துப்பினையும் (298) உடைய கரிகாற் பெருவளத்தான் (299) என வினை முடிக்க.

299 – 300. தெவ்வர்க்கு ஒக்கிய வேலினும் வெய்ய கானம் - [1]பகைவரைக் கொல்லுதற்கு அறுதியிட்டு வைத்த வேலினும் கடியவாய் இருந்தன காடு;

300 - 301. அவன் கோலினும் தண்ணிய தட மெல் தோளே - அவன் செங்கோலினும் குளிர்ந்திருந்தன பெரிய மெல்லிய தோள்கள்.

நெஞ்சே (220), இவளை நேசமுடன் கொண்டு செல்வோ மென்னின் (300), ஒக்கிய (299) வேலினும் வெய்யவா யிரா நின்றன (300); இவள்தோள் (301) அவன் (300) கோலினும் தண்ணிய (301); இவளைப் பிரியாதுறைதலில் யான் போதற்கு ஆற்ருவா யிராநின்ற; ஆதலால் பட்டினம் பெறினும் (218) வயங் கிழை ஈண்டுப் பிரிந்திருப்ப (219) யான் நின்னுடன் வாரேன்; இனி ஆண்டுப் போய் வாழ்வாயாக (220) என வினை முடிக்க.

வாரேனென்ருன், அவளை ஆற்றுவித்துப் பின்பு பிரிதல் கருதி. அது, "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" (தொல். கற்பு. சூ. 44) என்பதனுல் உணர்க.

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடிய பட்டினப் பாலைக்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினுர்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

[2]முச்சக்கரமும்..........கானெருப் புற்று.

---

[1]முல்லை. 77, ந.

[2]இது பொருநராற்றுப்படை இறுதியிலுள்ள மூன்றும் வெண்பா.

பத்தாவது

*மலைபடு கடாம்

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்

---

* இந்நூல் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கும்; தொல். எச்ச. சூ. 66, சே. ந. தெய்வச்; ஷை புறத். சூ. 36. ந. ஷை. செய். சூ. 157, ந; ஷை. ஷை. சூ 228, இளம்; இ. வி. சூ. 300.

பரந்த மொழியான் அடி நிமிர்ந்து வந்த தோலென்னும் வனப் பிற்கு இது மேற்கோள்; தொல். செய். சூ. 228, இளம்.

1. திருமழை தலைஇய: "தலைப்பெய றலைஇய" (முருகு. 9)

இருணிற விசும்பு: "இருணிற விருவிசும்பு" (சீகாளத்தி. தென் கயிலை. 62); முருகு. 116, அடிக்குறிப்.

இவ்வடி கூத்தராற்றுப்படைக்கும் (தொல். புறத். சூ. 36. ந.), ஆசிரியம் அளவடியான் வந்ததற்கும், முடுகுதற்கும் மேற்கோள்; தொல். செய். சூ. 32, பேர். ந; 67, பேர்.

2. 'கடுப்ப' என்பது மெய்யுவமத்திற்குரிய சொல்லென்ப தற்கும் (தொல். உவம. சூ. 15, இளம்.), சிறுபான்மை பயனுவமத் திற்கும் வருமென்பதற்கும் (தொல். உவம. சூ. 14, பேர்.) மேற் கோள்.

1 – 2. மதுரைக். 560.

3. 'முழ' உகரம் பெறுமல் வந்ததற்கு மேற்கோள்; தொல். குற்றியலுகர. 78, ந.

2 – 3. "பண்ணமை முழவு" (பதிற். 41 : 3)

1 - 3. மலைபடு. 532; முருகு. 121, அடிக்குறிப்.

5. (பி - ம்.) 'அணிதழை'

"தாழ்பீலிப் பல்லியம்" (பு. வெ. 24)

6. மலைபடு. 533; "கண்ணறுத் தியற்றிய தூம்பு" (பதிற். 41 : 4); "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்" (புறநா. 152 : 15)

இளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யா தியங்குந ரியக்கும்
அடுக்கன் மீமிசை யருப்பம் பேணு

7. இவ்வடியின் பாடபேதம்போல் தோன்றும், "விளிப்பது பயிலுஞ் குறும்பர்துங் துமியொடு" என்ற அடியை வினைமுற்று வினையெச்சமாதற்கு மேற்கோள் காட்டுவர்; நன். சூ. 350, மயிலை.

11. பாணிய பதலை : "பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்" (குறுந். 59 : 1)

2 - 11. புறநா. 152 : 14 - 8.

11 - 2. மலைபடு. 142 - 4.

13. மலைபடு. 365; "காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை" (புறநா. 206 : 10)

3 – 13. "புணர்புரி நரம்பின் றீந்தொடை பழுனிய, வணரமை நல்யா ழினையர் பொறுப்பப், பண்ணமை முழவும் பதலையும் பிறவும், கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக், காவிற் றகைத்த துறை கூடு கலப்பையர்" (பதிற். 41 : 1 - 5); "ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத், தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கி", "சுவலழுந்தப் பலகாய, சில்லோதிப் பல்லிளைஞர்" (புறநா. 103 : 1 – 2, 139 : 1 - 2)

15. மதுரைக். 278, அடிக்குறிப்.

16. "விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி" (திருச்சிற். 149)

"செல்வர் மனத்தினேங்கி......அஃகுநெறி" (சீவக. 1416) என்பதற்கு இவ்வடி மேற்கோள்.

15 - 6. தொல். களவி. சூ. 59, சே; இ. வி. சூ. 321, மேற்.

17 – 8. பெரும்பாண். 39 - 41.

19. மீமிசை, ஒருபொருட் பன்மொழி என்பதற்கு மேற்கோள்; யா. வி. சிறப்பு.

திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகித்
தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவிற்
கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலை தீர வுரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய வாணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகம ழைம்பால்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்
தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது

---

21. பொருந. 14 - 5, அடிக்குறிப்.

தொண்டுபடு திவவு: "தொண்டுபடு திவவின்முண்டக நல்யாழ்" (ஆசிரிய மாலை)

22. (பி - ம்.) 'கேள்வி போகாது'. பொருந. 16 - 8.

23. சுகிர்புரி நரம்பு : "சுகிர்புரி நரம்பின் சீறியாழ்" (புறநா. 109 : 15); "வீணைச் சுகிர்புரி நரம்பு" (சீவக. 728). முருகு. 140 - 41.

21 - 3. சீவக. 559, ந. மேற்.

24. இயைபு வண்ணத்திற்கு இவ்வடி மேற்கோள்; தொல். செய். சூ. 219, பேர்.

24 - 5. பெரும்பாண். 7 - 8.

27. பொருந. 10.

28. இவ்வடி, வினையெச்சம் அகரவீறன்றிப் பிற ஈற்றால் முடிக்குஞ் சொல்லை விசேடித்து வருதற்கு மேற்கோள்; தொல். வினை. சூ. 31, கல். ந.

30. பொருந. 19 – 20, அடிக்குறிப்; "விழவொலி கூந்தல்" (ஐங். குறு. 306 : 4); "கடிமகள் கதுப்பி னறி", "வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள" (அகநா. 244 : 5, 378 : 2)

33. (பி – ம்.) 'பொருந்திய வளவினில்'

இன்னுருபு வருமிடத்து இன்சாரியை வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். புணரியல், சூ. 29, ந.

31 - 3. பொருந. 6 - 8.

கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்
அமைவரப் பண்ணி யருணெறி திரியா
திசைபெறு திருவின் வேத்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொ
டுயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்

---

35. (பி - ம்.) 'நுணங்கற னுவறிய'

37. "வணரமை நல்யாழ்" (பதிற். 41 : 2); "வணர்கோட்டுச் சீறியாழ்" (புறநா. 155 : 1)

வள்ளுயிர்ப் பேரியாழ் : குறிஞ்சிப். 100.

36 - 7. "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்" (புறநா. 127 : 1, 145 : 5)

42 - 3. பொருந. 42, அடிக்குறிப்.

44. சிறுபாண். 14 - 5, அடிக்குறிப்.

கதுப்பிகுத் தசைஇ : பட்டினப். 259.

45 - 6. சிறுபாண். 31.

44 – 6. இவ்வடிகளைப் பொருளானந்த மென்பர்; யா. வி. ஒழிபு.

41 - 6. புறநா. 135 : 1 - 10.

47. "கயங்கண் டன்ன......பெருமரக் குழாம்" (மலைபடு. 259-65); "பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே" (தே. திருநா.); "கொய்ம்மலர்க் காவகம்......தெண்கயம் புக்கது போன்றதே" (சீவக. 872); "அசோகந் தண்பொழில், மணிக்கயத் தியன்ற மறுவி றண்ணிழல்", "அழல்கண் ணகற்றி நிழன்மீக் கூரி, நீர்புக் கன்ன நீர்மைத் தாகி" (பெருங். 1. 40 : 121 - 2, 2. 13 : 17 - 8); "வெவ்வா றெனக்குளிர்ந்து வெயிலியங்கா வகையியங்கும் விரிபூஞ் சோலை" (கம்ப. நாடவிட்ட. 22)

புனல்கால் கழீஇய மணல்வார் புறவிற்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ
தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்
கியாமவ ணின்றும் வருதும் நீயிரும்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழின்முலை வாங்கமைத் திரடோண்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தி னசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயல்

---

48. பெரும்பாண். 380,
"*நீர்கால் கழீஇய வார்மண லெக்கர்*" (பெருங். 1. 42 : 91)
50. மலைபடு. 569, *அடிக்குறிப்*.
தொல். *புள்ளிமயங்*. சூ. 17, ந. *மேற்*.
53. *சிறுபாண்*. 143; பெரும்பாண். 28.
51 - 3. பெரும்பாண். 427, *அடிக்குறிப்*. "*மலையி னிழிந்து மாக்கட னோக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவ ரெல்லா நின்னோக் கினரே*" (புறநா. 42 : 19 - 21); "*கடுவரை நீரிற் கடுத்துவர*" (பு. வெ. 11); "*பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய், மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்*" (கம்ப. கையடை. 15)
54 - 5. பொருந. 64, *அடிக்குறிப்*; "*வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி*" (புறநா. 47 : 1)
57. "*வாங்கமை மென்றோள்*" (பதிற். 12 : 22)
58. மலைபடு. 424; "*கொடுங்குழை கணவ*", "*திருந்திழை கணவ*", "*வாணுதல் கணவ*", "*நன்னுதல் கணவ*" "*ஆன்றோள் கணவ*", "*நல்லோள் கணவன்*", "*சேயிழை கணவ*", "*புரையோள் கணவ*", "*சேயிழை கணவ*", "*ஒண்டொடி கணவ*" (பதிற். 14 : 15, 24 : 11, 38 : 10, 42 : 7, 55 : 1, 61 : 4, 65 : 10, 70 : 16, 88 : 36, 90 : 50); "*செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ*" (புறநா. 3 : 6)
59. மு. குறிஞ்சிப். 128.
60. "*வித்திய பனுவல்*" (புறநா. 237 : 5)
61. "*வானி நீரினுந், தீந்தண் சாயலன்*" (பதிற். 86 : 12 - 3);

மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவி றடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொ
டுள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற வெற்றுக் குறுதலின்
ஆற்றி னளவு மசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குமவ ணுடுபடு வல்சியும்
மலையுஞ் சோலையு மாபுகல் கானமும்
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்

"நீரினுஞ் சாய லுடையன்", "வேனிற் புனலன்ன நுந்தை" (கலித். 42 : 20, 84 : 38); "நீரினு மினிய சாயற், பாரி" (புறநா. 105 : 7 - 8)

50 - 65. "கூத்தராற்றுப்படையுள், 'கலம்பெறு...தலைவ' என அண்மைவிளியேற்று முன்னிலை குறித்து நின்ற ஒருமைப்பெயர், 'நீயிரும்.....சேறிராயின்' எனப் பன்மையோடு முடிந்தது. இவ்வாறு வருங்காற் கூத்தரும் பாணரும் விறலியருமாகி ஆண்டுச் செல்வார் பலராயுழியே வரப் பெறுவதென்றும் தனியொருவனுயின் மயங்கப் பெறுதென்றும் கொள்க'. (தொல். எச்ச. சூ. 60, தெய்வச்.)

65 - 6. புள் : மலைபடு. 448; பெரும்பாண். 155; புறநா. 124 : 2. ஒப்பு : பொருந. 59; "நல்ல சகுன மென்னவெதிர் கண்டு வந் தாய் நம்பிநீ...புல்ல நின்றாய்" (பிரபு. பிரபுதேவர் வந்த. 47); "ஒரு நெறி யெதிர்ப்பா டுற்றது முன்னைப், பழுதறு பெருந்தவப் பயனது போலும்" (தணிகையாறு. 169 - 70)

68. மலைபடு. 462; "நாடென்ப நாடா வளத்தன" (குறள், 739); "நிலஞ்சு ரக்கு நிறைவளம்" (கம்ப. நாடு. 38)

70. தொலையா நல்லிசை : "செல்லா நல்லிசை" (மலைபடு. 388), "கெடாஅ நல்லிசை நிலைஇ", "நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து" (பதிற். 14 : 21, 86 : 5); "மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்...சாவா வுடம்பெய்தி னார்" (திரி. 16); "ஒருவன திரண்டி யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த, உருவமும் புகழு மென்றாங் கவற்றினூழ் காத்து வந்து, மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்றை யாக்கை, திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே", "பொன்று மிவ்வுட லின்பொருட், டென்று நிற்கு மிரும்புக, ழின்று நீர்கழிந் தீர்களாற், குன்றின் மேற்குடை வேந்திர்காள்" (சூளா. சீயவதை. 204, அரசியல், 226); பொருந. 176, ந. அடிக்; பெரும்பாண். 466, ந. அடிக்.

புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ ளுண்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்
நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையும்

---

72. *ஈகை மாரி* : மலைபடு. 75 - 6, 580.

71 - 2. சிறுபாண். 247 - 8, *அடிக்;* மதுரைக். 145 - 6, *அடிக்.* "*ஆண்டுநீர்ப் பெற்ற தார மீண்டிவர், கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும்*" (பதிற். 48 : 5 – 6); "*ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி, வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே*", "*வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை*" (புறநா. 122 : 6 – 7, 320 : 16 – 7)

73. மதுரைக். 139 – 40.

73 - 4. மதுரைக். 131 – 2, *அடிக்.*

75 – 6. "*ஈகை மாரி*", "*மழைசுரந் தன்ன வீகை நல்கி*" (மலைபடு. 75, 580); சிறுபாண். 124, *அடிக்;* மதுரைக். 442, *அடிக்.* "*ஆர்கலி வானந் தளிசொரிந் தாஅங், குறுவ ரார வோம்பா துண்டு, நகைவ ரார நன்கலஞ் சிதறி*" (பதிற். 43 : 18 - 20); "*நின், சுரத்தலும் வண்மையு மாரியுள*", "*அவன் வண்மை போல் வானம் பொழிந்தநீர்*" (பரி. 4 : 27, 22 : 7 - 8); "*மழைசுரந் தன்ன வீகை*" (அகநா. 238 : 13); "*வானத் தன்ன வண்மையும்*", "*மாரி யன்ன வண்மை*", "*வரையா மரபின் மாரி போல......கொடை மடம் படுதல்*", "*மாரி யீகை மறப்போர் மலையன்*", "*மாரி யன்ன வண்மையிற் சொரிந்து*" (புறநா. 55 : 15, 133 : 6, 142 : 3 - 5, 158 : 7, 397 : 16); "*மாரியி னேற்பார்க் கவைநல்கி*", "*மாரிமழை வள்ளல்*", "*மழைவள்ளல்*" (சீவக. 365, 500, 899)

77 - 80. முருகு. 282 – 6.

82. மேவென்பது நசையென்னும் குறிப்பை உணர்த்துமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 32, இளம். சே. தெய்வச். ந; இ. வி. சூ. 281.

காரி யுண்டிக் கடவுள தியற்கையும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பும்
இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் றெல்லோர் வரவும்
இரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
உரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையும்
கேளினி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வானமின்னு வசிவு பொழிய வானு

---

83. காரியுண்டிக் கடவுள் : சீவக. 670.

84 - 5. பாயிருள்......ஞாயிறு : "பாயிருள் பருகிப், பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி" (பெரும்பாண். 1 - 2)

"பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி, ஞாயிறு குணமுதற் றோன்றி யாஅங்கு." "மாயிரு விசும்பிற் பன்மீ னொளிகெட, ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றா, ருறுமுரண் சிதைத்தநின் னோன்றாள்" (பதிற். 59 : 5-6, 64 : 12 - 4)

பகல் செய்யா வெழுதரு ஞாயிறு : பெரும்பாண். 441 – 2, ந. அடிக்குறிப்.

87. நுகம்படக் கடந்து : "நுகம்படக் கடக்கும் பல்வேலெழினி" (குறுந். 80 : 5)

89. கொடைக் கடனிறுத்தல்: மலைமடு. 543; பெரும்பாண். 446, அடிக்குறிப்பு.

90. கொடுந்தாண் முதலை : குறிஞ்சிப். 257.

இரைதேர்ந்திவரும்.........முதலை : "இரைதேர் முதலையும்" (சிலப். 13 : 7)

91. கல்லகழ் கிடங்கு : மதுரைக். 730, அடிக்குறிப்பு.

92. "கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி" (பதிற். 16 : 1)

வான்றோ யிஞ்சி : "விண்ணுற நிவந்த பண்ணமை படை மதில்" (பெருங். 3. 4 : 3)

திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிரும்புனத்
தகலிரு விசும்பி னூஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குவுவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி

---

97 - 8. மதுரைக். 10 - 11.

100. *அகலிரு விசும்பு* : பெரும்பாண். 1; மதுரைக். 267.

101. *புன்கொடி முசுண்டை* : நெடுநல். 13.

100 - 101. மதுரைக். 280 - 81.

'ஆரல்' ஆலென்று வந்த இடைக்குறைக்கு இவ்வடிகள் மேற்கோள்; யா. வி. *ஒழிபு*. சூ. 2; யா. கா. *ஒழிபு*. 8, உரை.

99 - 101. *ஊனந்தோன்றிய ஆனந்தவுவமை யென்பர்*; யா. வி. *ஒழிபு*. சூ. 3.

102. மதுரைக். 279.

105. *கௌவை* : மதுரைக். 271.

105 - 6. *ஐகார ஔகாரக் குறுக்கமும் நேரசையென்பதற்கு மேற்கோள்*; யா. வி. *அசை*. சூ. 2.

108. (பி – ம்.) *'குவவுக்குர லேனல்'*

107 - 8. *தினைக் கதிர்க்கு யானைக்கை உவமை* : குறிஞ்சிப். 35-8, *அடிக்குறிப்பு*.

107 - 10. *தினையரி தாளில் அவரை விளைதல்* : *"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற், கொழுங்கொடி யவரை பூக்கும்"* (குறுந். 82 : 4 - 5); *"சிறுதினை கொய்த விருவி வெண்காற், காய்த்த வவரை"* (ஐங். 286 : 1 - 2)

111. *"எருமை யன்ன கருங்கல்"* (புறநா. 5 : 1)

112. *வடசொல் சிதைந்து வந்ததற்கு இவ்வடி மேற்கோள்*; தொல். எச்ச. சூ. 6, ந; இ. வி. சூ. 175.

இரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்
றுலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவின்
அவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை

---

113. ''இரும்புகவர் கொண்ட வேனற் பெருங்குரல்'; (நற். 194 : 9)

112 – 3. கவைக்கதிர்......வரகு : ''கவைக் கதிர் வரகின் சீறூர்'' (அகநா. 384 : 6); ''கவைக்கதிர் வரகும்'' (பெருங். 1. 49 : 105)

115. (பி – ம்.) 'ஐவன வெண்ணெல்'

118 - 9. அறையுற்று......அலமருங் கரும்பு: ''அறைக் கரும்பு'' (பொருந. 193); ''அறையுறு கரும்பு'' (பதிற். 75: 6; பெருங். 1. 48 : 146)

116 - 9. கரும்புக்கு வேல் உவமை: ''கரும்பின், வேல்போல் வெண்முகை'' (நற். 366 : 7 - 8); ''தோடுகொள் வேலின் றோற்றம் போல, வாடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்'' (புறநா. 35 : 9 –10)

122. ''ஏறு பொருதசெறு வுழாது வித் துநவும்'' (பதிற். 13 : 2)

துளர்படு துடவை: ''தொடுப் பெறிந் துழுத துளர்படு துடவை'' (பெரும்பாண். 201); ''துடவையஞ் சிறுதினைத், துளரெறி நுண்டு கட் களைஞர் தங்கை'' (குறுந். 392 : 4 - 5)

124. ''மைவிரிந்தன நீலமும்'' (சூளா. நாடு. 11)

125 - 6. ''பாவை யிஞ்சி'' (பெருங். 1. 51 : 23)

127. பிடி முழந்தாள் : பெரும்பாண். 53, அடிக்குறிப்பு; கலித். 50 : 2.

128. மதுரைக். 534, அடிக்குறிப்பு.

காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை
இறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு முந்தூ ழகலறைக்
கால மன்றியு மரம்பயன் கொடுத்தலின்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல்
மாறுகொள வொழுகின வூறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்
துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந்
தரலை யுக்கன நெடுந்தா ளாசினி
விரலூன்று படுக ணுகுளி கடுப்பக்

---

129. "எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து, பிடிக்கண மறந்த வேழம்" (முல்லை. 68 - 9)

காழ் மண்டெஃகம் : மதுரைக். 736, அடிக்குறிப்; "மடையமை திண்சுரை மாக்காழ் வேலொடு", "மாக்காழ் நெடுவேல்" (அகநா. 119 : 13, 369 : 18); "வேலே......இருங்காழொடு......சிலைதிரிந் தனவே" (புறநா. 97 : 4 - 7)

131. சோலை வாழை : "சோலை வாழைச் சுரிநுகும்பு" (குறுந். 308 : 1)

134. "கால மன்றியு மரம்பயம் பகரும், யாண ரறாஅ வியன் மலை" (புறநா. 116 : 13-4); "பருவ மன்றியும் பயன்கொடுப் பறாஅப், பலவு மாவுங் குலைவளர் வாழையு, மிருங்கனி நாவலு மிளமா துளமும்" (பெருங். 2. 20 : 61 - 3); "கால மன்றியுங் கனிந்தன கனி" "தீங்கனி, கால மின்றிக் கனிவது காண்டிரால்" (கம்ப. வனம்புகு. 44, நாடவிட்ட. 18)

135. கருங்கனி நாவல் : புறநா. 177 : 11.

137. "கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்" (சிலப். 25: 42); "பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்" (பெருங். 1. 51:23)

138. "உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை" (மலைபடு. 445); "உண்ணுநர்த் தடுத்த, சாரற் பலவின் சுளை" (அகநா. 2 : 2 - 3)

138 - 9. புண்ணரிந் துக்கன ஆசினி : "கலைதொடு பெரும் பழம் புண்கூர்ந் தூறலின்" (மலைபடு. 292); "பலாஅம் பழுத்த பசும் புண் ணரியல்" (பதிற். 61 : 1); "அள்ளிலைப் பலவி னளிந்துவீழ் சுளையும்" (சீவக. 2109)

குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே
தீயி னன்ன வொண்செங் காந்தள்
தூவற் கலித்த புதுமுகை யூன்செத்
தறியா தெடுத்த புன்புறச் சேவல்
ஊஉ னன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறும்
மணவில் கமழு மாமலைச் சாரல்
தேனினர் கிழங்கின ரூனார் வட்டியர்

---

141. "குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை" (நன். சூ. 458, மயிலை. மேற்.); "குடிஞை யிரட்டுங் குளிர்வரை" (பழ. 246)

140 - 41. பொருந. 210, அடிக்.

143. மலைபடு. 511.

143 - 4. மலைபடு. 11 - 2.

145. மலைபடு. 149; முருகு. 43, குறிஞ்சிப். 90, அடிக். "கார்த்திகை......விளக்கிற் பூத்தன தோன்றி" (கார். 26); "வழ இதழ்க் காந்தண்மேல் வண்டிருப்ப வொண்டீ, முழுகியதென் றஞ்சி முதுமந்தி - பழகி, எழுந்தெழுந்து கைநெரிக்கு மீங்கோயே திங்கட், கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று" (ஈங்கோய். 70); "தண்காந்த ளம்பூத், தழல்போல் விரியும்" (பாண்டிக்.); 'தோன்றி வில்விளக்கே பூக்கும்" (நள. கலிதொடர். 28); "குழ விசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய, வழலெரியின் மூழ்கினவால்" (யா. வி. சூ. 67, மேற்.)

ஈகாரவீறு வேற்றுமைக்கண் இன் பெற்று வந்ததற்கும், இரண்டாம் வேற்றுமை யுருபு அன்னவென்பதையும் கொண்டு முடியுமென்பதற்கும் இவ்வடி மேற்கோள்; தொல். குற்றியலுகர. சூ. 78, ஷை. எச்ச. 18, ந.

145 - 6. தொல். உவம. சூ. 16, பேர். மேற்.

149 - 50. மதுரைக். 279 - 84, அடிக்; "பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த, ராடுகளங் கடுக்கும்" (புறநா. 28: 13-4)

145 - 50, பரிசிற் பொருளானந்தத்திற்கு இவ்வடிகளை மேற்கோள் காட்டுவர்; யா. வி. ஒழிபு. சூ. 3.

151. அகநா. 107 : 21.

152. ஊனார் வட்டி: "வேட்டுவன் மான்றசை சொரிந்த வட்டியும்" (புறநா. 33: 1 - 2)

சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்
அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
அலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல வினிய கூறிப்
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்
ஏறித் தருஉ மிலங்குமலைத் தாரமொடு

---

50 – 157. ஆற்றுப் படையுள் ஒருமைச் சொல் பன்மையோடு முடிவதற்கு, 'கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ......இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்' என்னும் பகுதி மேற்கோள்; தொல். எச்ச. சூ. 66, இளம், சே. ந; இ. வி. சூ. 300.

158. மலைபடு. 256.

159 - 60. "செந்தீ யொண்பூம் பிண்டி" (மதுரைக். 700 - 701); "எரியவி ருருவி னங்குழைச் செயலை", "செந்தீ யொண்பூம் பிண்டி" (குறிஞ்சிப். 105, 118 - 9); "அணிமல ரசோகம் பூத்தன...... அழற்கணை தரித்த போன்றவே" (நைடதம், அன்னத்தைக் கண்ணுற்ற. 36)

162 - 3. (பி - ம்.) 'எய்தி னோனாச் செருவின்'

164. மான விறல்வேள்: மதுரைக். 344.

165. மலைபடு. 491; "எங்கோ னிருந்த கம்பலை மூதூர், குடையோர் போல விடையின்று குறுகி" (புறநா. 54 : 1 -2)

169. 'குரு' என்னும் பண்புரிச் சொல் நிறத்தை உணர்த்தி நீண்டு வருவதற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 5, ந.

164 - 9. பெரும்பாண். 103 - 5.

வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் மனந்த நீர
அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்படைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி

---

171. மலைபடு. 522 ; முருகு. 195, அடிக்குறிப்பு.
தேக்கட்டேறல் : "தேம்பிழி தேறல்" (குறிஞ்சிப். 155)
172. (பி - ம்.) 'குழைவின்று பருகி'
173. பொருந. 94, அடிக்குறிப்பையும், மதுரைக். 669, அடிக்குறிப்பையும் பார்க்க.
174. அருவிதந்த பழம் : "ஆசினி முதுசுளை கலாவ.........இழிதரு மருவி" (முருகு. 301 - 16) ; "பூநாறு பலவுக்கனி, வரையிழி யருவி யுண்டுறைத் தரூஉம்" (குறுந். 90 : 4 - 5)
176. "முளவுமா வல்சி" (ஐங். 364 : 1, பி - ம்.)
முளவுமாத் தொலைச்சிய : "முளவுமாத் தொலைச்சுங் குன்ற நாட" (அகநா. 182 : 8) ; "முளவுமாத் தொலைச்சிய முழுச்சொலாடவர்" (புறநா. 325 : 6)
177. "முடுவ றந்த பைந்நிணத் தடியொடு" (மலைபடு. 563)
176 – 7. தொல். குற்றியலுகர. சூ. 78, இளம். ந.; இ. வி. சூ. 90, மேற்.
179. இன்புளி : "தீம்புளி" (மதுரைக். 318)
181. (பி - ம்.) 'வழையமல்'
வழையமை சாரல் : "நாக நெடுவழி" (சிறுபாண். 88) ; வழை யமல் வியன்காடு" (பதிற். 41 : 13) ; "வழையமை நறுஞ்சாரல்" (கலித். 53 : 1) ; "வழையம லடுக்கத்து" (அகநா. 328 : 1)
176 - 83. நற். 85 : 8 - 11.
179 - 83. இன்புளிக் கலந்து.........குறமகளாக்கிய வல்சி : "எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு" (சிறுபாண். 175)

அகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலு முரியிர்
அனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரையர மகளி ரிருக்கை காணினும்
உயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநா ணில்லாது நிலநாடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி
உடைய வாறே நள்ளிரு ளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமின்
நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங்கொட்டி நோக்கிச்
செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி யொரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர்
உயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்
பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல்
இருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்

---

185. சிறுபாண். 192.

179 – 85. சிறுபாண். 189 – 92.

192. (பி - ம்.) *'நிலநெடு படர்மின்', 'சில நாள் படர்மின்'*

193. *"இரும்புன நிழத்தலின்"* (குறிஞ்சிப். 157)

194. *கற்பொறி : "சிறுபொறி மாட்டிய பெருங்க லடாஅர்"* (நற். 119 : 2); *"பொறியறிந்து மாட்டிய, பெருங்க லடாரும்"* (புறநா. 19 : 5 - 6); *"கொல்புலி படுக்கும் பெருங்க னீளடார்"* (கூர்ம. சம்புத் தீவின். 29)

201. *கைதொழூஉப் பழிச்ச* : பெரும்பாண். 463, அடிக் குறிப்பு.

206. (பி - ம்.) *'நிலை தவிர்க்கும்'*

கருவிர லூகம் பார்ப்போ டிரிய
உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமின்
உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
இரவி னன்ன விருடுங்கு வரைப்பில்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்கர்
அகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉமருங் குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோ

---

208. *''கருவிர லூகம் விளையாடும்''* (தே. திருஞா. *சிராப்பள்ளி*)

203 - 9. *குறவர் கவணெறிதலும் அதற்கு யானை முதலியன அஞ்சுதலும் : ''இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர், புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும், விலங்குமலை'', 'பிடியொடு மேயுஞ் செய்புன் யானை, அடியொதுங் கியக்கம்கேட்ட கானவன், நெடுவரை யாசினிப் பணவை யேறிக், கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலி, னிறுவரை வேங்கையி னொள்வீ சிதறி, யாசினி மென்பழ மளிந்தவை யுதிராத், தேன்செ யிறாஅ றுளைபடப் போகி, நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக், குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப், பலவின் பழத்துட் டங்குமலை''* (கலித். 23 : 1 - 3, 41 : 7 - 16); *''இரவின் மேய மரூஉம் யானைக், கால்வ லியக்க மொற்றி நடுநாள், வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன், கடுவிசைக் கவணி னெறிந்த சிறுக, லுடுவுறு கணையிற் போகிச் சாரல், வேங்கை விரியிணர் சிதறித் தேன்சிதையூஉப், பலவின் பழத்துட் டங்கு, மலைகெழு நாடன்'', ''காம்பின், வனைகழை யடைந்த கவண்விசைக் கடியிடிக், கனைசுட ரமையத்து வழங்கல் செல்லா, திரவுப்புன மேய்ந்த வுரவுச்சின வேழம்'', ''தினைமே யானை யினனிரிந் தோடக், கல்லுயர் கழுதிற் சேணோ னெறிந்த, வல்வாய்க் கவணின் கடுவெடி யொல்லென, மறப்புலி யுரற வாரணங் கதற, நனவுறு கட்சி நன்மயி லால, மலையுடன் வெரூஉ மாக்கல் வெற்பின்''* (அகநா. 292 : 8 - 15, 309 : 12 - 5, 392 : 11 - 8); *''இடுதினை தின்வேழங் கடியக் குறவர், வெடிபடு வெங்கவண்க லூன்ற - நெடுநெடென, நீண்டகழை முத்துதிர்க்கு மீங்கோயே''* (ஈங்கோய். 7)

211. *முதலை யானையை விழுங்கல் : ''களிறட்டு வீழ்க்கு, மீர்ப் புடைக் கராஅத் தன்ன''* (புறநா. 104 : 3 - 4)

213. மலைபடு. 474 - 6.

217. *புன்றலை மகார் :* மலைபடு. 253.

டொருவி ரொருவி ரோம்பினர் கழிமின்
அழுந்துபட் டலமரும் புழுகமல் சாரல்
விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா
வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோ
டெருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்
உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
ஓரியாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணின்
தொழாநிர் கழியி னல்லது வறிது
நும்மியந் தொடுத லோம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே
அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்
கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்

---

218. (பி – ம்.) 'ஓப்பினர் கழிமின்'

நன். வி. சூ. 380, மேற்.

50 - 218. உயர்திணை யொருமையிற் பன்மை மயங்கியதற்கு இவ்வடிகள் மேற்கோள் ; நன், சூ. 379, மயிலை.

219. புழுகு : குறிஞ்சிப். 96, அடிக்குறிப்.

226. மதுரைக். 183, அடிக்குறிப்பு.

வில்லுமிழ் கடுங்கணை : "விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந் நுனைப் பகழி" (சீவக. 435) ; "விற்பழுத் துமிழும் வெய்யகணை" (கூர்ம. இராமன் வனம்புகு. 56)

227. மதுரைக். 47, அடிக். ; நெடுநல். 169, அடிக்.

229. (பி – ம்.) 'இயவிற் புரசை மூத்த'

231. (பி - ம்.) 'தொழாநீர் கழிமின்'

236 - 7. சிறுபாண். 56, அடிக் ; "குரங்கன்னபுன் குறுங் கூளியர்" (புறநா. 136 : 13) ; அகநா. 206 : 3 - 6.

நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினும்
ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று
நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோ னேவொடு போகி
இழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பின்
நெறிக்கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தின்
இருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழா திருயினர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப்பதங் கொண்ட பருஉக்கட் பொதியினிர்

---

239. சூர்புகலடுக்கம் : "சூருடை யடுக்கத்த" (நற். 359 : 9); "சூருறை குன்றிற் றடவரை" (பரி. 19 : 23)

238 - 9. மலைபடு. 524 - 5 ; முருகு. 299 - 300.

240. (பி - ம்.) 'ஞெரோவென'
ஞெரேரென : மலைபடு. 579.

242. (பி - ம்.) 'வகுந்தின் கானத்து'
வகுந்து வழி யென்பதற்கு இவ்வடி மேற்கோள் ; சிலப். 15 : 14 - 9, அடியார்.

243. கழுதிற் சேணோன் : குறிஞ்சிப், 40 - 41.

247. வழக்கொடு பட்ட மரபு பிறழவும், செய்யுளின்பம் படின் அவ்வாறு செய்க வென்பதற்கு இவ்வடி மேற்கோள் ; தொல். மரபு. சூ. 1, பேர்.)

248. (பி - ம்.) 'முளிகழை யிசைந்த'
மதுரைக். 302, உரை, அடிக்.

249. மிசைதல் வேறு வினைப் பொதுச் சொல் அன்றென்று கூறி இதனை மேற்கோள் காட்டினர் ; தொல். கிளவி. சூ. 46, ந.

250. மணிமருடெண்ணீர் : சிறுபாண். 152, அடிக். மதுரைக். 351, அடிக்குறிப்பு.

251. "குவளைப் பைஞ்சுனை பருகி" (புறநா. 132 : 5)

புட்கை போகிய புன்றலை மகாரோ
டற்கிடை கழித லோம்பி யாற்றநும்
இல்புக் கன்ன கல்லளை வதிமின்
அல்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடியலேற் றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
இகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னர்
இருங்கால் வீயும் பெருமரக் குழாஅம்

253. *புன்றலை மகார்* : மலைபடு. 217.

இவ்வடி, புள் வலையென்னும் பொருளில் வருமென்பதற்கு மேற்கோள் ; சீவக. 2591, ந.

256. மலைபடு. 158.

260 - 61. *யானையை விழுங்கும் பாம்பு* : "*களிறு பாந்தட் பட்டென*", "*களிறகப் படுத்த பெருஞ்சின மாசுணம்*" (நற். 14 : 8, 261 : 6) ; "*வெண்கோட் டியானை விளிபடத் துழவு, மகல்வாய்ப் பாந்தள்*" (அகநா. 68 : 19 - 20) ; "*பரிய களிற்றை யரவு விழுங்கி மழுங்க*" (திருஞா. தே.) ; "*குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை*" (திருச்சிற். 21) : "*களிறென்று பெரிய மாசுணம்......பெயர்தரு பிருதியெம் பெருமானை*" (பெரியதிரு. 1. 2 : 10) ; "*புழுங்கு வெம் பசியொடு புரளும் பேரரா, விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின் வாய், முழுங்குதிண் கரிபுகும்*", "*மதக்கதமா, வடங்குபேழ் வயிற் றரவு*", "*இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும், கடிய மாசுணம்*", "*பெரிய பாந்தள், மறங்கிளர் மான யானை வயிற்றின வாக வாய்சோர்ந், துறங்கின*" (கம்ப. தாடகை. 11, சித்திரகூட. 4, 35, சேதுபந்தன. 20) ; "*கைந்நாக மேமேயு மாநாகம்*" (தக்க. 543)

262. சேட் கமழும் பூ : "சேணுறு பிடவம்" (முல்லை. 25)

262 – 3. மலைபடு. 282 - 3.

265. (பி – ம்.) 'இருங்கோல்'

259 - 65. *கயங்கண்டன்ன......பெருமரக் குழாம்* : மலைபடு. 47, அடிக்குறிப்பு.

இடனும் வலனு நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்
நாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்
மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெருஅ மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினும்
இருஅவன் சிலையர் மாதேர்பு கொட்கும்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே
அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்க லோம்பிநும் மியங்க லொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
ஊறு நிரம்பிய வாறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
இம்மென் கடும்போ டினியி ராகுவிர்
அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு

---

267. கோளியாலம்; "கோளியா லத்துக் கொழுநிழல்" (புறநா. 58 : 2)

முரஞ்சல் முதிர்வாகிய குறிப்புணர்த்தற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 35, இளம்.தெய்வச். ந.

270. நாடுகா ணனந்தலை: "நாடுகா ணெடுவரை" (பதிற். 85 :7)

275. "புளிஞரு மருளும் போக்கருஞ் சுரம்" (தணிகையாறு. 167) : "குறவரு மருளுங் குன்றமொன்று" (குசேலோ. குசேலர் மேல். 39)

இவ்வடி, உம்மை உயர்வு சிறப்புப்பொருளில் வந்ததற்கு மேற்கோள்; தொல். இடை. சூ 7, இளம். சே. ந; நன். சூ. 271, 424, மயிலை; நன். வி. சூ. 425, இ. வி. சூ. 256.

278. "பாடின் னருவிப் பயங்கெழு மாமலை" (சீவக. 2112)

286. இம்மென் கடும்பு: "இம்மென விமிரும்" (குறிஞ்சிப். 147)

குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்
நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்
தலர்தாய வரிநிழ லசையினி திருப்பின்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறும்
அருவி நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்
தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை
இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளின்
எய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்

---

288. - 9. ''குறியவு நெடியவுங் குன்று'' (சிலப். 27 : 153; மணி. 6 : 58)

290. வரிநிழல் : பொருந. 61: சிறுபாண். 11 - 2, அடிக்.

292. மலைபடு. 138 – 9, அடிக்.

கலைதொடு பெரும்பழம்: ''கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும் பழம்'' (குறுந். 342 ; 1)

294. (பி – ம்.) 'அருவி நுகக்கும்'

''ஆழருவி யரமகளி ராடுபவே'' (கலித். 40 : 23); ''அமர நாடியர் துன்னியா டிடங்களும்'' (கம்ப. பிலநீங்கு. 8)

295 – 6. மதுரைக். 353, அடிக்.

300 - 301. ''மொய்த்த முட்டன துடற்றலை துளைப்ப முடுகிக், கைத்தலத்தினிமி ரக்கடிது கன்றிவிசிறும், மெய்த்த மெய்ப்பெரிய கேழலென'' (கம்ப. விராதன். 33); ''மெய்யுருவிய வையுறு முனை முள்ளை, யெய்யு தறின'' (சீகாளத்தி. கண்ணப்ப. 86)

303 - 4. ''காஞ்சி பாடி.........காக்கம் வம்மோ காதலந் தோழி, ...நெடுந்தகை புண்ணே'' (புறநா. 281 : 5 - 9) : ''கொய்யாக் குறிஞ்சி பலபாடி - மொய்யிணர்ப், பூப்பெய் தெரிய னெடுந்தகை புண் யாங்காப்ப'' (பு. வெ. 79)

தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉ மேமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்

---

305. *தலைநாட் பூத்த வேங்கை :* "*தலைநாட் செருந்தி*" (சிறுபாண். 147)

305 - 6. மதுரைக். 296 - 7, *அடிக்.*

307. *கயந்தலை மடப்பிடி :* நற். 137 : 6.

கயந்தலை மடப்பிடி: இது, கயவென்பது மென்மையையுணர்த்து மென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 24, இளம். சே. ந.

311. *கருவிரல் மந்தி :* "*கருவிரன் மந்திச் செம்முகப் பெருங் கிளை*" (நற். 334 : 1); "*கருவிரற் கடுவன்*" (புறநா. 200 : 2); "*கருவிரற் செம்முக வெண்பற்சூன் மந்தி*" (திணைமாலை. 10)

311 – 2. "*காமர் மந்தி, கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி*" (குறுந். 69 : 2 – 3); "*கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்*", "*கருவிரன் மந்திக் கல்லா வன்பார்ப்பு*" (ஐங். 272 : 1, 280 : 1)

313. *முறிமேய் யாக்கைக்கிளை :* "*முறிமேய் கடுவன்*" (ஐங். 276 : 1)

முறி : தொல். *மரபு.* சூ. 87 பேர். *மேற்.*

312 - 4. *பொருளானந்தத்திற்கு* இவ்வடிகளை மேற்கோள் காட்டினர்; யா. வி. ஒழிபு. சூ. 3.

311 – 4. "*மந்திகண் மறலி யெதிரெதி ருகள மருங்கிருந் துலாவிய கல்லாப், பைந்தலைப் பார்ப்பு மெழுந்துதாய்ப் பிழைத்துப் படரரு விடரினுக் கழுங்குஞ், சந்தனங் கமழுஞ் சாரல்*" (காஞ்சிப். இருபத்தெண். 26)

315. முருகு. 42 - 3, *அடிக்.*

316. (பி - ம்.) '*நிலைபுணர்ந்திட்ட*'

315 - 6. "*மால்புடை நெடுவரைக் கோடு*" (புறநா. 105 : 6)

பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை
அருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்
இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை

---

316 - 7. *மால்பிலேறித் தேன் கொள்ளுதல் :* "*பெருந்தேன் கண்படு வரையின் முதுமால், பறியா தேறிய மடவோன் போல*" (குறுந். 273: 5 - 6); "*வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத், தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங், கானக நாடன் மகன்*" (கலித். 39 : 8 - 10); "*ஈவிளை யாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்றும், வேய்விளை யாடும்வெற்பா*" (திருச்சிற். 133)

319. மலைபடு. 467.

318 - 22. முருகு. 194 - 7, *அடிக்குறிப்.*

324. குறுந். 42 : 2 – 3.

323 - 4. *அருவி ஒலிக்குத் தேர் ஒலி :* "*குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக*" (குறுந். 189 : 2); "*கற்பா லருவியி னொலிக்கு நற்றேர்*" (அகநா. 184 : 17)

326. (பி - ம்.) '*பருஉவெளில்*'

325 - 7. முல்லை. 35 - 6; *சீவக.* 1834.

328 – 9. *தட்டை :* குறிஞ்சி. 43 - 4, *அடிக்குறிப்;* "*கடுங்கழைத் தட்டைக் குன்றவர் மகளிர் காவலும்*" (*திருக்காளத்தி.* 2 : 4)

331. மலைபடு. 406.

காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார்
கன்றுகடா அ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையும்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பும்
என்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
அவ்லவு மிசையவுந் துவன்றிப் பலவுடன்
அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்
முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்
விழவி னற்றவன் வியன்கண் வெற்பே
கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்

---

336. காந்தட்டுடுப்பு ; பட். 153; கலித். 59 : 3 - 4, 101 : 3 - 4; அகநா. 78 : 8 - 9, 108 : 15; பெருங். 2. 15 : 73 - 4.

337. கோள் கொத்தினை உணர்த்துமென்பதற்கு இவ்வடி மேற்கோள்; தஞ்சை. 85, உரை.

340. (பி - ம்.) 'ஞெரோவென', 'ஞேயென'

"பூங்கரும் புடைந்த தீஞ்சா றடுபுகை புயலென் றெண்ணி" (நைடதம், நாடு. 16): "சுற்று பாகடு புகையவை சூழ்கரு முகிற்குல மொப்பன" (சீகாளத்தி நக்கீர. 14)

340 - 41. பெரும்பாண். 259 - 60, அடிக்.

342. "பாவடி யுரல பகுவாய் வள்ளை" (குறுந். 89 : 1); "வெதிர்நெற் குறுவாநாம், வள்ளை யகவுவம்வா" (கலித். 42 : 7 - 8)

350. மதுரைக். 327; "முழவங் கண்டுயி லாத முதுநகர்" (சீவக. 856)

352. இவ்வடி, ஒற்று அளபெடுத்துச் சீர்நிலை யெய்தியதற்கும் (தொல். மொழி. சூ. 7, ந; ஷை. செய். சூ. 17, இளம்; ஷை. ஷை. சூ. 18, பேர்.); அளபெடை வண்ணத்திற்கும் (தொல். செய். சூ. 220, பேர். ந.; யா. கா. ஒழிபு. 8, உரை), ஒற்று அளபெழுந்து நேரசையானதற்கும் (யா. வி. எழுத்து. சூ. 3), ஒற்று அளபெழுந்து ஓரலகு

உண்டற் கினிய பலபா ராட்டியும்
இன்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்பன்
உருமுரறு கருவிய பெருமலை பிற்பட
இறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலின்
தேஎந் தேருக் கடும்பரிக் கடும்பொடு

பெற்றதற்கும் (யா. கா. ஒழிபு. 1, உரை), ஒற்றளபெடைக்கும் (நன். சூ. 91, மயிலை; இ. வி. சூ. 20) *மேற்கோள்.*

" 'கண்ண்......கேட்டும்' என்புழிக் கண்ண் என்பது சீர்நிலை யெய்தித் தேமாவாயிற்று. 'தண்ண்ணென' என்றவழித் தட்பத்திற் சிறப்புக் கூறுதற்காக இயற்சீர்க்கண் ணகரவொற்றினை மிகக் கொடுத்து அளபெடுத்துச் செய்யுள் செய்தான். அது, மாசெல்சுர மென்னும் வஞ்சியுரிச்சீராவதனை யாகற்க; பாதிரியென முன்னின்ற இயற்சீரேயாகவென வழுவமைத்தவாறு"(தொல். செய். சூ. 18, ந.)

354. பரி. 11 : 139, 13 : 64, 14 : 31, 21 : 69.

356. (பி - ம்.) *'திருவார் மார்பின்'* 357. (பி - ம்.) *'பின்பட'* *"உருமுரறு கருவிய பெருமழை தலைஇ"* (அகநா. 158 : 1)

358. *இன்குரல் விறலியர் :* மலைபடு. 536

359. முருகு. 239

358 - 60. *"செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச, வறிது நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின்"* (மலைபடு. 201 – 2)

361 - 2. *"எழிலி, எஃகுறு பஞ்சிற் றாகி........நெடுவரை ஆடும்", "பனுவல் போலக் கணங்கொள, வாடுமழை தவழுங் கோடுயர் நெடுவரை"* (நற். 247 : 3 - 5, 353 : 2 - 3); *"பொங்கலாடி, விண்டுச் சேர்ந்த வெண்மழை: பொங்கலாடி யென்றது எஃகின பஞ்சுபோலப் பொங்கியெழுதலைச் செய்தென்றவாறு"* (பதிற். 55 : 14 - 5, உரை); *"வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்", "பொங்கல் வெண்மழை, யெஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன. துவலை"* (அகநா. 133 : 6. 217 : 1 - 3)

362 - 4. *"தாழ்நீர் நனந்தலை யழுந்துபடப் பாஅய்......செறிந்*

காஅய்க் கொண்டநும் மியந்தொய் படாமல்
கூவ லன்ன விடரகம் புகுமின்
இருங்க லிகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வௌவும்
மண்கனை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டுகா லாகத் தளர்த லோம்பி
ஊன்றினிர் கழிமி னூறுதவப் பலவே
அயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தருஉ மின்ன லியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமயத்துக் கழிமின்
உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறேல்

தவிம் மழைக்கே'', ''முழங்குகடன் முகந்த கமஞ்சூன் மாமழை, மாதிர நனந்தலை புதையப் பாஅய்'' (நற். 112 : 7 - 9, 347 : 1 - 2); ''பெயல்கான் மறைத்தலின் விசும்புகா ணலரே, நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே'', ''விசும்புகண் புதையப் பாஅய்......பெயலா னாதே வானம்'' (குறுந். 355 : 1 - 2, 380 : 1 – 3); ''மாஙிலந் தோன் றாமை மலிபெய றலைஇ'' (பரி. திரட்டு. 2)

365. மலைபடு. 13.

373. (பி – ம்.) 'கூன்கட் பாறை'

சிறுபாண். 7 - 8, அடிக். ''வேலைக் காய்ச்சிமுன் னட்டுவைத் தன்ன வெம்பரல்'' (திருவையாற்றுப் புராணம், 9 : 14)

374. இன்னலென்பது இன்னாமையென்னும் குறிப்புணர்த்து தற்கு இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. 6, இளம். சே. தெய்வச். ந.

375. கதிர் சினந் தணிந்த வமயம்: ''சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேர'' (நற். 369 : 1, குறுந். 195 : 1); ''கதிர்சினந் தணிந்த கையறு மாலை'' (குறுந். 387 : 2)

376. ''உரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையும்'' (மலை படு. 93)

377. மழைமருள் பஃறேல்: ''மன்ன, ரெயிலூர் பஃறேல் போலச், சென்மழை'' (நற். 197 : 10 - 12), ''மழையென மருளு மாயிரும் பஃறேல்'' (பதிற். 62 : 2); ''மழைத்தோற் பழையன்'' (அகநா. 186 : 15); ''மழையுருவின தோல்'', ''மழையென மருளும் பஃறேல்'' (புறநா. 16 : 2, 17 : 34)

அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறும்
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்
இன்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண் ணு மோம்பிக்
கைபிணி விடாஅது பைபயக் கழிமின்
களிறுமலைத் தன்ன கண்கூடு துறுகல்
தளிபொழி கானந் தலைதவப் பலவே
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே

---

382. (பி - ம்.) 'முழவுங் கண் ணு மோம்பி'

384. துறுகல்விற்கு யானை உவமை: பட்டினப். 234, அடிக். "வேழ, மிரும்பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழூஉம்" (ஐங். 239 : 1 - 2)

386. ஒன்னாத் தெவ்வர்: மலைபடு. 397; பெரும்பாண். 491

பகைவர் தோல்வி கண்டு ஆர்த்தல்-பெரும்பாண். 419; "வினைவ லதிகன், களிறொடு பட்ட ஞான்றை, யொளிறுவாட் கொங்க ரார்ப் பினும் பெரிதே" (குறுந். 393 : 4 - 6); "கொன்றுகளம் வேட்ட ஞான்றை, வென்றிகொள் வீர ரார்ப்பினும் பெரிதே", "எழூவுறழ் திணிதோ ளியறோர்ச் செழிய, னேரா வெழுவ ரடிப்படக் கடந்த, வாலங் கானத் தார்ப்பினும் பெரிதென", "மொய்வலி யறுத்த ஞான்றைத், தொய்யா வழுந்தூ ரார்ப் பினும் பெரிதே" (அகநா. 36 : 22 - 3, 209:4 - 6, 246 : 13 – 4); "உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை.........அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக், கவிழ்ந்து நிலஞ் சேர வட்டதை" (புறநா. 77 : 9 - 12)

388. செல்லா நல்லிசை : மலைபடு. 70, அடிக்; புறநா. 395: 19.

387 - 9. நடுகல்: "விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோ, ரெழுத்துடை நடுகல்" (ஐங். 352 : 1 - 2); "விழுத் தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோ, ரெழுத்துடை நடுக லின்னிழல் வதியும், அருஞ்சுரக் கவலை", "நல்லமர்க் கடந்த நாணுடை மறவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்", "ஆடவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்", "விடுவாய்ச் செங்கணைக் கொடுவி லாடவர், நன்னிலை குறித்த கன்னிலை யதர", "நல்லிசை நிறுத்த

இன்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை
ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
ஓம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே

நாணுடை மறவர், நிரைநிலை நடுகல்'' (அகநா. 53 : 10 - 12, 67 : 8 - 10, 131 : 9 - 11, 179 : 7 – 8, 387 : 14 - 5); ''கெடுவி னல்லிசை சூடி, நடுகல் லாயினன் புரவல னெனவே'', ''அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித், தினிநட் டனரே கல்லும்'' (புறநா. 221: 12 - 3, 264 : 3 - 4); ''சீர்த்த துகளிற்ருய்த் தெய்வச் சிறப் பெய்த, நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப் - போர்க்களத்து, மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறித்துக், கன்னட்டார் கல்சூழ் கடத்து'', ''கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து, வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலோய் - நாள்வாய்த், திடைகொள லின்றி யெழுத்துடைக் கல்வாய், மடைகொளல் வேண்டு மகிழ்ந்து'' (தொல். புறத். சூ. 5, ந. மேற்.); ''மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப், பீலி யணிந்து பெயர்பொறித்து - வேலமரு, ளாண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று, காண்டக நாட்டினார் கல்'' (பு. வெ. 251); ''பட்டோர் பெயரு மாற்றலு மெழுதி, நட்ட கல்லும்'' (திருவாரூர் மும். 16: 1 - 2)

390. முரற்கை: ''பாணர் நரம்புளர் முரற்கை போல'', ''பாணர் நரம்புளர் முரற்கையின் யாத்தபயன்'' (ஐங். 402 : 2 - 3, 407 : 1 - 2)

395 - 6. மராஅத்த கடவுள்: ''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்'' (குறுந். 87 : 1); ''தொல்வலி மராஅமு, முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர்'' (கலித். 101 : 13 - 4)

397. ஒன்னாத்தெவ்வர்: மலைபடு. 386, அடிக்குறிப்.

398. ''எரிசுடர்க் கடவுளுங் கருதின்வே முள்ளமும்'', ''நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுஞ்சுரம்'' (கம்ப. தாடகை. 5, வனம்புகு. 38)

399. தேர்வீசு கவிகை: மதுரைக். 224, அடிக்குறிப்.

400. ''கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே'' (மலைபடு. 424) ஓம்பா வள்ளல்: மதுரைக். 146, அடிக்குறிப்.

மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதூர்
ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே
அசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கானமு ழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலின்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணுது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தினிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணின்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்

---

403. அசைவுழி யசைஇ: பெரும்பாண். 44.

406. மரைவிடை: "மரையான் கதழ்விடை" (மலைபடு. 331)

408 - 9. ஏறுடையினத்த ஆன்: "கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை" (மலைபடு. 573); நெடுநல். 4, அடிக்குறிப்.

414. துருவையும் வெள்ளையும்: "கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்" (பெரும்பாண். 153)

417. (பி - ம்.) 'விதவையும்'

421 - 2. "கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" (புறநா. 23 : 5)

423. "படியோர்த் தேய்த்த வாண்மை" (பதிற். 79 : 6); "படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை" (அகநா. 22 : 5)

கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
ஓம்புந ரல்ல துடற்றுந ரில்லை
ஆங்குவியங் கொண்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅமெல் லிணரும்
உம்ப லகைத்த வொண்முறி யாவும்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி
திரங்குமர ஞரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
உண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூழ்
அற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்

---

424. மலைபடு. 400.

கொடியோள் கணவன்: மலைபடு. 58, அடிக்.

425. "பராஅரை வேவை பருகெனத் தண்டி" (பொருந. 104)

429. யானை யாவை முறித்தல்: "பெருங்கை வேழ, மென்சினை யாஅம் பிளக்கும்", "உரற்கா லியானை யொடித்துண் டெஞ்சிய, யாஅ வரிநிழல்", "அத்த யாஅத்துப், பொரியரை முழுமுத லுருவக் குத்தி.........தடமருப்பி யானை", "களிறு.........நிலையுயர் யாஅத் துலையக் குத்தி" (குறுந். 37 : 2 - 3, 232 : 4 - 5, 255 : 1 - 5, 307 : 4 - 6); "நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட், படிஞிமிறு கடியுங் களிறே" "யானை தன், கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந், தின்னுவேனி லின்றுணை யார, முளிசினை யாஅத்துப் பொளிபிளந், தூட்ட" (அகநா. 59 : 8 - 9, 335 : 4 - 7)

430 - 31. "மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணி" (புறநா. 264 : 2)

திரங்குமரல்: அகநா. 49 : 12, 199 : 7, 327 : 10; சிலப். 11 : 77.

435. (பி - ம்.) 'விதவை'

435 - 6. "ஆய்மக ளட்ட வம்புளி மிதவை" (புறநா. 215 - 4)

434 - 6. பெரும்பாண். 194 - 5.

பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
அசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினும்
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅல்
துடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்

---

441. (பி - ம்.) 'எள்ளெறிந்து', 'எண்ணெறிந்து'

442. நுண்ணிழுது: "நீரினு நுண்ணிது நெய்யென்பர்" (நாலடி. 282)

445. (பி - ம்.) 'இடிநுண்ணுவணை'

உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை: மலைபடு. 138, அடிக்குறிப்.

448. மலைபடு. 65 - 6, அடிக்.

451. "பண்ணுப் பெயர்த்தாங்கு" (பதிற். 65 : 15)

452. (பி - ம்.) 'சேர்ந்தனிர்'

"பலநாட் பயின்று பலரொடு செல்லினும்" (புறநா. 101 - 2)

454. (பி - ம்.) 'சண்புமலிபழனம்', 'காண்புமலி', 'கண்பமல்'

கண்பு: மதுரைக். 172, அடிக்.

கண்புமலி பழனம்: "கழனிக் கண்பு" (பெருங். 2. 19 : 187)

457 - 8. வரால் துடிக்கணன்ன குறை: "கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்" (மதுரைக். 320) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

459. பகன்றைக் கண்ணி: ஐங். 87 : 1; பதிற். 76 : 12.

ஞெண்டாடு செறுவிற் றராய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
எருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை யினம்பிரி யொருத்தல்
கனைசெலன் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
துணைசெலற் றலைவா யோவிறந்து வரிக்கும்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாண ரொருகரைக் கொண்டனிர் கழிமின்

---

461. நெற்போருக்கு மலை : பெருங். 244; பெரும்பாண். 240-41, அடிக். "போரொடு நிகர்வன புணர்மலை" (கம்ப. நாடு. 46, "தெரிந்திடும் போர்கள்.........மேரு வாயவே" (கந்த. நாடு. 22). "நெடுங்களத் தம்பொற் குன்ற நிரையெனப் பெரும்போர் செய்தார்" (திருவிளை. நாடு. 27); "வரைக ளொப்பன போர்" (சீகாளத்தி. நக்கீர. 14)

463. துளங்கு தசும்பு : "தசும்பு துளங் கிருக்கைத், தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்" (பதிற். 42 : 11 - 2)

464. இளங்கதிர் ஞாயிறு : மணி. பதிகம், 1

467. மலைபடு. 319.

468. பொருந. 97.

469 - 70. நல்யாழ் மருதம் பண்ணி : மலைபடு. 534; மதுரைக். 658.

471. "வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇ" (நற். 350 : 1- புறநா. 348 : 1); "வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்புந், தண்ணுமை வெரீஇய தடந்தா ணாரை", "வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை......படுபு ளோப்பும்" (அகநா.40 : 13 -4, 204 : 10 - 11)

475. (பி - ம்.) 'இறந்து பனிக்கும்'

476. கட்கின் சேயாறு : மலைபடு. 555

நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெருஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் புல்வண் டிமிரும்
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவின்
அருங்கடி வாயி லயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி

---

478. மு. அகநா. 378 : 1.

மலைபடு. 575; "துஞ்சுநீ ணிதியது சுரமை" (சூளா. நாடு. 1)

வடசொல் சிதைந்து வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். எச்ச. சூ. 6, இளம்; இ. வி. சூ. 635.

479. (பி - ம்.) 'பதியெழவறியா', 'பதியெழுவறியா'.

"பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய", "பதியெழு வறியாப் பண்புமேம் பட்ட, மதுரை மூதூர்" (சிலப். 1 : 15, 15 : 5 - 6)

481. (பி - ம்.) 'யாறு கிடந்த'

தெருவுக்கு யாறு : மதுரைக். 359, அடிக்.

483. "கவ்வையுங் கடும்புன லொலியுங் காப்பவர், செவ்வனூ ருயிரஞ் சிலைக்கும் பம்பையு, மெவ்வெலாத் திசைகளு மீண்டிக் காரொடு, பவ்வலின் றியம்புவ தொத்த வென்பவே" (சீவக. 42)

மலை மாடத்திற்கு : மதுரைக். 474, 488, 501 - 2.

மழை மாடத்திற்கு : பொருந. 84

491. மலைபடு. 165, அடிக்; "தடைஇய வாயி றடையாது நுழைந்து" (தணிகையாறு. 231)

492. "வயிரிய மாக்கள்.........மன்ற நண்ணி" (பதிற். 29:8-9); "மன்றுபடு பரிசிலர்" (புறநா. 135 : 11)

493. (பி - ம்.) 'சேஎய் பெருவிறல்'

வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி னோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
ஊமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்
அரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
அளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கில்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்
இடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி

---

493. முருகு. 284 - 5.

492 – 4. "தன்றெறல் வாழ்க்கை" என்பதன் விசேடவுரைக்கு இவ்வடிகள் மேற்கோள்: சிலப். 15 : 195, அடியார்.

497. "பரிபுலம் பினரென" சிலப். 10 : 226. "பரிபுலம் பினனிவன்" (மணி. 16 : 57)

498. (பி - ம்.) 'மராஅத்த'

498 – 500. குறுந். 322 : 1 - 5.

502 - 3. வருடை : பட்டினப். 132, அடிக்குறிப்புரை.

505 - 6. குறுந். 321 - 6.

507. பொருந. 43, அடிக்.

510. மு. குறுந். 242 : 1.

500 - 510. இங்கே கூறப்பட்ட விலங்கினங்களிற் சில சிலப்பதிகாரம், 25 : 48-ஆம் அடி முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளன.

511. மலைபடு. 143 - 4.

512. நறுவடி மா : பெரும்பாண். 309 ; நற். 243 : 3; குறுந். 331 : 5 - 6; ஐங். 61 : 1, 213 : 1; கலித். 41 : 14, 84 : 1 - 2.

காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பருஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்
நாகந் திலக நறுங்கா ழாரம்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்

---

517. புலி பொருத யானை : "பூம்பொறி யுழுவைப் பேழ்வா யேற்றை, தேங்கமழ் சிலம்பிற் களிற்றொடு பொரினே", "கொன்முர ணிரும்புலி யரும்புழைத் தாக்கிச், செம்மறுக் கொண்ட வெண் கோட் டியானை", "புலிபொரச் சிவந்த புலாவஞ் செங்கோட்டு.......... வேழம்", "வயக்களிறு பொருத வாள்வரி வேங்கை" (நற். 104: 1-2, 151: 2 - 3, 202 : 1 - 4, 255 : 4); "சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கி" (குறுந். 88 : 2); "மறங்கொ ளிரும்புலித் தொன்முரண் டொலைத்த, முறஞ்செவி வாரணம்", "புகர்முகக் களிறொடு புலி பொரு துழக்கும்", "வாயிழி கடாத்த வான்மருப் பொருத்தலோ, டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்", "பெருங்களிற் றினத் தொடு வீங்கெருத் தெறும்முன்பி, னிரும்புலி மயக்குற்ற விகன்மலை" (கலித். 42 : 1 – 2, 45 : 12, 46 : 3 - 4, 48 : 6 – 7); "புலியொடு பொருது சினஞ்சிறந்து வலியோ, டுரவுக்களி றொதுங்கிய மருங்கில்", "குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந், துயங்குபிடி தழீஇய மதனழி யானை" (அகநா. 291 : 6 - 7, 398 : 22 - 3); "வரிவயம் பொருத வயக்களிறு" (புறநா. 100 : 7)

517 – 8. யானை முத்துடை மருப்பு : முருகு. 304 - 5; குறிஞ்சி. 35 - 6; "முத்துடை மருப்பின் மழகளிறு" (பதிற். 32 : 3); "முத் தார் மருப்பின்" (கலித். 40 : 4); "வைந்நுதி வான்மருப் பொடிய வுக்க, தெண்ணீ ராலி கடுக்கு முத்தமொடு" (அகநா. 282 : 6 –7); "துடியடி யளக்கர்ஙிரையே துணிபடுபிறக்கநடு வொடிமடிமருப் பிணைகள் சொரிகுருதி முத்த ஙிணையோம்" (குலோத். பிள்ளை. முத்தப். 8)

519. "கோடல் வீயுகு பவைபோ, விலங்கே ரெல்வளை" "ஊழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்","ஊழுற்ற கோடல்வீ, யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு" (கலித். 7 : 15-6, 48 : 11, 121 : 13 - 4); "உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்" (புறநா. 90 : 1); "துணைமலர்க் காந்த ளூழ்த்துச் சொரிவபோற் றேன்றி முன்கை, யணிவளை நலத்தோ டேங்க" (சீவக. 1742)

522. மலைபடு. 171, அடிக்.

கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிருஅல்
உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்தும்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனுச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்

---

525. மலைபடு. 238-9, அடிக்.

524 - 5. நெடுவரை......இருல்: முருகு. 299 - 300 "அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து, திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே" (புறநா. 109 : 7 - 8)

527. "குடாஅது, பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பப், பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்" (புறநா. 166 : 26 - 8)

527 - 8. "மலைத்தலைய கடற்காவிரி" (பட். 6); "குடமலைப் பிறந்த கொழும்பஃ றாரமொடு, கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங், காவிரி" (சிலப். 10 : 106 - 8)

525 - 9. மதுரைக். 695 – 7.

530. மலைபடு. 377; "காள மேகமு நாகமுந் தெரிகில" (கம்ப. சித்திரகூட. 2)

531. தாதெருத் ததைந்த முற்றம்: "மன்றத், தெருவினுண் டாது குடைவன வாடி" (குறுந். 46 : 3 - 4); "தாதெரு மன்றம்" (கலித். 103 : 62, 108 : 60; சிலப். 16 : 102, 17 : "மாயமன்றம்". 27 : 74); "தாதெரு மறுகு" (நற். 343 : 3, அகநா. 165 : 4; புறநா. 33 : 11, 216:2, 311 : 3)

532. மலைபடு. 2–3, அடிக்.

533. மலைபடு. 6, அடிக்.

534. மருதம் பண்ணிய: மலைபடு. 469 - 70, அடிக்.
கருங்கோட்டுச் சீறியாழ்: நெடுநல். 70, அடிக்.

கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றெமுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்று நல்லிசைச் சென்றோ ரும்பல்
இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
இடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅ னசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
உயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்

---

536. *இன்குரல் விறலியர்:* மலைபடு. 358

534 – 6. முருகு. 212, *அடிக்.*; மதுரை. 217 – 8, *அடிக்.*

538. *அருந்திறற் கடவுள்:* மணி. 6 : 60

"கடவுட் பழிச்ச" (பதிற். 41 : 6)

541. பொருந. 176; பெரும்பாண். 466, ந. *அடிக்*; புறநா. 165 : 1 - 2, *அடிக்.*

642. பெரும்பாண். 445.

543. மலைபடு. 89; பெரும்பாண். 446, *அடிக்.* *"மெய்ம்முகி லென்னக் கொடைக்கட னிறுக்கு மிக்குவாகு"* கூர்ம. சூரியன் *மரபு.* 8

544. *"மறம்வீங்கு பல்புகழ்"* (பதிற். 12 : 8); திருவாசகம், பொற்சுண்ணம், 18, பெரிய. *திருநீலகண்டயாழ்ப்,* 5; திருவால. 56:9 ; *"காந்திருளை வென்று களிவென்றி பாடுவபோல்"*, *"மின்னைப் புறங்கண்ட வீரப் புகழ்பாட, லென்ன"* (சொக்கநாதருலா)

549. *கல்லெனொக்கல்:* பெரும்பாண். 21, *அடிக்.*

550. *உரும்பில் சுற்றம்:* *"உரும்பில் சுற்றமொ டிருந்தோற் குறுகி"* (பெரும்பாண். 447)

553. *"மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே"* (புறநா. 27:6)

நெடுவரை யிழிதரு நீந்தஞ்சீர் லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசிமுட் டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முள்
தலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய

555. *கட்கின் சேயாறு*: மலைபடு. 476

556. மதுரைக். 236, *அடிக்குறிப்*.; சிலப். 28:125 - 6.

559 - 60. "*யாந்தன் னறியுந மாகத் தான்பெரி, தன்புடைமையி னெம்பிரி வஞ்சி*" (புறநா. 381:6 – 7)

561. பொருந. 82 – 3, *அடிக்குறிப்*.

563. மலைபடு. 177.

566. குறிஞ்சிப். 238, *அடிக்குறிப்*; "*தலைநாள் விழைவொடு*" (வி. பா. குருகுல. 79)

565 - 6. "*பலநாள் பயின்று பலரொடு செல்லினுந், தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ*" (புறநா. 101 : 2 - 3); "*பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை, யென்னானும் வேண்டுப வென்றிகழ்ப - வென்னானும், வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர், காண்டொறுஞ் செய்வர் சிறப்பு*" நாலடி. 159.

567 - 8. பொருந. 121 - 2

569. *பாணன் பொற்றாமரை சூடுதல்*: பொருந. 159 - 60, *அடிக்குறிப்*.

569 - 70. *விறலியர் இழை பெறுதல்*: "*வசையின் மகளிர் வயங்கிழை யணிய*" (பதிற். 12 : 23)

பாணன் பொற்றாமரை பெறுதலும் விறலி இழை பெறுதலும்: பொருந. 159 – 92, *அடிக்குறிப்*.

நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்தும்
இலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்

---

571. *செலவுக்கு நீரியக்கம்:* மலைபடு. 51 – 3, *அடிக்குறிப்.*

572. வரைமருள் வேழம்: *"வரைமருளு முயர்தோன்றல........ யானை"* (மதுரைக். 46 - 7); *"மலையெனத், தேனிறை கொள்ளு மிரும்பல் யானை"* (புறநா. 17 : 34 - 5); *"மஞ்சிவர் குன்றென மலைந்த வேழமே"* (சீவக. 2230); *"மலையே மலையோடு மலைந்தன போற், கொலைவேழமொ டேற்றன குஞ்சரமே"* (சூளா. அரசியல். 104); *"யானை மலையென மலைவ"* (கம்ப. மிதிலை. 3)

573. *ஏறுடைப் பெருநிரை:* மலைபடு. 408 - 9; நெடுநல். 4 அடிக்குறிப்.

574. *"பொலம்படைக் கலிமா", "பொலம்படையமா"* (புறநா. 116 : 19, 359 : 14): *"புனையும் பொலம்படைப் பொங்குளைமான்"* (பு. வெ. 276)

பொன்னென்பது பொலமெனத் திரிந்து வந்ததற்கு இவ்வடி மேற்கோள்; தொல். புள்ளி. சூ. 61, இளம். ந.

575. மலைபடு. 478: மதுரைக். 215, *அடிக்குறிப். "நிலந்தினக் கிடந்த நெடுநிதிச் செல்வம்"* (தணிகையாறு. 25)

576. *ஏற்றகை:* நாலடி. 98.

"இலம்படு..........நிறையவென வரும்; உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருளுணர நிற்றலின் வேற்றுமை முடிபாயிற்று" (தொல். புள்ளி. சூ. 21, இளம்.); *"இலம்..........நிறைய : இதற்கு இல்லாமையுண் டாகின்ற புலவரெனப் பொருள் கூறுக"* (ஷ. ஷ. ஷ. ந.); இலம் பாடு வறுமையை உணர்த்துமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. 62, இளம். சே. தெய்வச். ந.

576 - 7. *"இலம்படு புலவ ரேற்றகை நெமரப், பொலஞ்சொரி வழுதி"* (பரி. 10 : 126 - 7)

571 - 7. *பரிசிலர்க்குத் தேர் தருதல்:* மலைபடு. 399 - 400; *சிறு* பாண். 142 - 3, *அடிக்குறிப்.;* மதுரைக். 224, *அடிக்குறிப்.*

வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றும்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

———

பரிசிலர்க்குத் தேரும் குதிரையும் கொடுத்தல்: மதுரைக். 223 - 4, அடிக்குறிப்.

பரிசிலர்க்கு யானை கொடுத்தல்: பொருந. 126 – 7, அடிக்குறிப். சிறுபாண். 142 – 3, அடிக்குறிப். மதுரைக். 99 - 102, அடிக்குறிப்.

579. *ஞெரேரென;* மலைபடு. 240.

580. *மழை சுரந்தன்ன ஈகை:* மலைபடு; 71 : 75 - 6, அடிக் குறிப்.; "எழிலி வான மெள்ளினன் றரூஉங், கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்" (தொல். எச்ச. சூ. 18. ந. உவம. 14, பேர். மேற்.); "மழைவிழை தடக்கை வாய்வா ளெழினி", "கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி" (தொல். உவம. சூ. 14, பேர். மேற்.)

581. *வென்றெழு கொடி:* முருகு. 67, அடிக்குறிப். முல்லை. 90 - 91, அடிக்.; "உரவுக்களிற்று வெல்கொடி" (பதிற். 88 : 17)

581-2. "பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப், பெருவரை மருங்கி னருவியி னுடங்க", (மதுரைக். 373 - 4); "வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்க", "வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்து, வளிமுனை யவிர்வருங் கொடிநுடங்கு தெரு", "வான் றோய் வெல்கொடி, வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க" (பதிற். 25 : 11, 47 : 3 – 4, 69 : 1-2); "களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர, வொளிறுவன விழிதரு முயர்ந்துதோன் றருவி, நேர்கோ ணெடுவரை", "பெருவரை யிழிதரு நெடுவெள் ளருவி, யோடை யானை யுயர்மிசை யெடுத்த, வாடுகொடி கடுப்பத் தோன்றுங், கோடுயர் வெற்பன்" (அகநா. 162 : 22 - 4, 358 : 12 - 5); "மனையிற்பொலி மாக நெடுங்கொடி மாலை யேய்ப்ப, வினையிற்றிரள் வெள்ளரு வித்திர டூங்கி வீழ" (கம்ப. கடருவு. 50); "அமையநிற்கு மலங்கலேறு பிறங்க வெண்கொடி யாடுமா, லிமைய வெற்பு மதன் கணின்று மெடுத்த கங்கையு மென்னவே" (தக்க. 634)

583. *நாடுகிழவோன்:* "மலைகிழவோனே" (முருகு. 327) என் பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

இதன் பொருள்

1 - 2. *திரு மழை தலைஇய இருள் நிறம் விசும்பின் விண் அதிர் இமிழ் இசை கடுப்ப* - [1]செல்வத்தை உண்டாக்கும் மழையைப் பெய்த இருண்ட நிறத்தை உடைய மேகத்தினது ஆகாயத்திடத்திலே நின்று முழங்கும் ஓசையை யொப்ப,

நடுக்கம் கூறவே மிக்க ஒலி யென்றுயிற்று.

2 - 3. *பண் அமைத்து திண் வார் விசித்த முழவொடு* - பண்கள் தன் [2]கண்களிலே உண்டாக்கப்பட்டுத் திண்ணிய வாராலே இறுக வலித்த மத்தளத்தோடே,

[3] "இடக்க ணிளியா வலக்கண் குரலா, நடப்பது தோலியற் கருவி யாகும்" என்பதனுற் பண்ணமைத்தென்றார்.

3. *ஆகுளி* - சிறு பறையும்,

4. *நுண் உருக்கு உற்ற விளங்கு அடர் பாண்டில்* - கரைய உருக்குதலுற்ற விளங்கின தகடாகத் தட்டின [4]கஞ்சதாளமும்,

5. *மின் இரு பீலி அணி தழை கோட்டொடு* - விளங்குகின்ற கரிய [5]பீலியாகிய அழகினையுடைய தழையைக் கட்டின கொம்போடே,

6. *கண் இடை விடுத்த களிறு உயிர் தூம்பின்* - [6]கண்களின் நடுவே வெளியாகத் திறந்த [7]யானையின் கைபோலும் நெடுவங்கியத்தோடே,

[8]*உயிர்*: ஆகு பெயர். இனி, [9]யானை நெட்டுயிர்ப்புக் கொண்டாற் போலும் ஓசையை யுடைய வென்றுமாம்.

---

[1] "எடுப்பதூஉ மெல்லா மழை" (குறள், 15)

[2] கண் - அடிக்கும் பக்கம். [3] சீவக. 675, 2596, ந. மேற்.

[4] கஞ்சம் - வெண்கலம்.

[5] பீலி - மயிலிறகு; ஒருவகை வாச்சியமுமாம்; "விழிக்குந் தழைப்பீலி" (சுந்தர. தே.) [6] கண் - கணு.

[7] "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின் - கண் திறக்கப் பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெரு வங்கியத்தை இசையுங்கோள்" (புறநா. 152 : 15, உரை)

[8] உயிர்த்தலையுடைய மூக்காதலின், துதிக்கை இங்கே உயி ரெனப் பட்டது; "நெடுமூக்கிற் கரியினுரி மூடிக்கொண்டார்" (தே.திருநா. பொது);"மாதிரக் களிற்றின் வரிக்கைவாண் மூக்கிடை மடுப்ப" (கம்ப. நிந்தனை. 2); "முழவிற் பூரித்த கும்ப குடந்தொறு மூரி யேழ்கட லுந்தரு மூக்கின" (தக்க. 273); "உயிர்க்குறு நாசிகை யாக வுள்ளவும்" (பிரபு. முனிவரர். 13), "கமழ்கந்தங் கையான் மோக்கு மண்ணு" (திருவானைக்காப். கடவுள்.)

[9] "நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை, யியம்புணர் தூம்பி

7. இளி பயிர் இமிரும் குறு பரம் தூம்பொடு - இளியென்னும் நரம்பினுடைய ஓசையைத் தான் ஒலிக்கும் குறிய மேலாகிய தூம் போடே,

இது குறுந்தூம்பு. பயிர் - தழைத்தலுமாம்.

8. [1] விளிப்பது கவரும் தீ குழல் துதைஇ - பாட்டைச் சுருதி குன்றாமல் கைக்கொண்டு நிற்கும் இனிய குழலும் நெருங்கப்பட்டு,

9. நடுவு நின்று இசைக்கும் [2] அரி குரல் தட்டை - கண்களுக்கு நடுவே நின்றொலிக்கும் ஓசையையுடைய [3]கரடிகையும்,

இனித் தாளமானத்திடையே நின்றொலிக்கும் [4]அரித்தெழுகின்ற ஓசையையுடைய என்றுமாம்.

10. கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி - விளக்கத்தை உடைத்தாகிய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலிய வாயை உடைய [5]சல்லியும்,

11. நொடி தரு பாணிய பதலையும் - மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடைய [6] ஒரு கண் மாக்கிணையும்,

பிறவும் - கூறாத வாச்சியங்களும்,

12. கார் கோள் பலவின் காய் துணர் கடுப்ப-கார் காலத்தாலே பழுத்தலையுடைய பலாவினது காயை மிகவுடைய தொத்தை யொப்ப,

13. நேர் சீர் சுருக்கி காய [7]கலம் பையிர் – தம்மிலொத்த கனத்தையுடையவாகக் கட்டிக் காவின வாச்சிய முட்டுக்களையுடைய பையை யுடையிராய்,

---

னுயிர்க்கு மத்தம்'' (ஐங். 377: 1 - 2); ''ஒய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை, தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கும்'', ''செறி நடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக், குறுநெடுந் தூம்பொடு முழவுபுணர்ந் திசைப்ப'' (அகநா. 111 : 8 - 9, 301 : 16 - 7)

[1] விளிப்பது – பாடுவது; திரி. 10; மணி. 4 : 13.

[2] அரிக்குரற்றட்டை யென்பதற்குத் தவளையினது குரலை யுடைய தட்டைப் பறையென்று பொருள் கோடலுமாம்; ''இட்டு வாய்ச் சுனைய பகுவாய்த் தேரை, தட்டைப் பறையிற் கறங்கு நாடன்'' (குறுந். 193: 2 - 3,) [3] மதுரைக். 612, அடிக்குறிப்பு.

[4] ''அரிக்கூ டின்னியம்'' (மதுரைக். 612) என்பதற்கு, 'அரித் தெழும் ஓசையையுடைய சல்லி கரடி முதலியவற்றோடே கூடிய இனிய ஏனைய வாச்சியங்கள்' என்றார் முன்.

[5] மதுரைக். 612, அடிக்குறிப்பு.

[6] ''பதலை யொருகண் பையென வியக்குமின்'' (புறநா. 152 : 17)

[7] ''கலப்பை – யாழ் முதலியவற்றையுமிட்ட பெட்டிகள்'' (சீவக. 864, ந.)

முழவொடே ஆகுளியும் (3) பாண்டிலும் (4) கோட்டொடும் (5) தூம்பொடும் (6) குறுந்தூம் பொடும் (7) தட்டையும் (9) எல்லரியும் (10) பதலையும் பிறவும் (11) தீங்குழலும் நெருங்கப்பட்டு (8) அவற்றைச் சுருக்கிக் காய கலப்பையிர் (13) என்க.

14. கடு கலித்து எழுந்த கண் அகல் சிலம்பில் – கடுமரம் மிக்கு வளர்ந்த இடம் அகன்ற பக்க மலையில்,

15. படுத்து வைத்தன்ன பாறை மருங்கில் - படுத்துவைத்தாற் போன்ற, ஒத்த நிலமாகிய கற்பாறையின் பக்கத்தில்,

16. எடுத்து நிறுத்தன்ன இட்டு அரு சிறு நெறி - நிலத்தே கிடக்கின்ற வழியை எடுத்து நிறுத்தினாற்போன்ற இட்டிய அரிய சிறிய வழியை,

17. தொடுத்த வாளியர் துணை புணர் கானவர் - தொடுத்த அம்பினையுடையராய்த் தம் மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர்,

18. [இடுக்கண் செய்யா தியங்குந ரியக்கும்:] இயங்குநர் இடுக்கண் செய்யாது இயக்கும் - வழிப் போவாரை வருத்துதலைச் செய்யாமல் வழி போக்கும்,

19 - 20. [அடுக்கன் மீமிசை யருப்பம் பேணு, திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகி:] அடுக்கல் மீமிசை இடி சுரம் நிவப்பின் இயவு [1]அருப்பம் பேணாது கொண்டு ஒழுகி - மலையிடத்து மிக்க உயர்ச்சியிற் கல்லை இடித்த அருநிலத்தில் உயர்ந்த வழியைப் போதற்கு அரிதாகக் கருதாதே போதக் கடவேமென்று நெஞ்சாலே கொண்டு நடந்து,

கல்லை இடித்து ஆக்கிய வழி.

சிலம்பிற் (14) பாறை மருங்கிற் (15) சிறு நெறியைக் (16) கானவர் (17) போக்கும் (18) சிரத்தில் இயவுக் கொண்கடாழுகி (20) யென்க.

21. தொடி திரிவு அன்ன தொண்டு படு திவவின் - தொடியினது உறழ்ச்சியையொத்த உறழ்ச்சியையுடைய ஒன்பதென்னும் எண் உண்டான வார்க்கட்டினையும்,

[2]வலித்தல் மெலித்தல் செய்யவேண்டுதலின், உறழ்ச்சி கூறினார்.

22 - 4. [கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாள், குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின், அரலை தீர வுரீஇ:]

கேள்வி அனைத்தும் போகா - நூற்கேள்வி அடைய முற்றுப் பெற்று,

[3] கடிப்பகை அனைத்தும் அரலை தீர உரீஇ- வெண்சிறு கடுகளவும்

---

[1] அருப்பம் - அருமை.

[2] "நெகிழ வேண்டுமிடத்து நெகிழ்ந்தும் இறுக வேண்டுமிடத்து இறுகியும் நரம்பு துவக்கும் வார்க்கட்டு" (சிறுபாண். 221 - 2, ந., பெரும்பாண். 12 - 3, ந.)

[3] பேய்க்குப் பகையாதலின் வெண்சிறு கடுகைக் கடிப்பகை யென்றார்; "ஐயவிக் கடிப்பகை" (மணி. 7 : 73)

[1] கொடும்பு இல்லையாம்படி [2] தீற்றி,

முடங்கிப் பரற்றன்மையாய் இருத்தலிற் கொடும்பை [3] அரலை யென்றார்.

அரலை — குற்றமுமாம். இனி, வெண் சிறுகடுகளவும் கேள்வி தப்பா தென்பாரும் உளர்; அது வடிவிற்கு உவமையாதலின் பொருந்தாது.

குரல் ஓர்த்து தொடுத்த சுகிர் புரி நரம்பின் - ஓசையை ஓர்ந்து பார்த்துக் கட்டின வடித்து முறுக்கின நரம்பினையும்,

கேள்வி போகா, உரீஇத் தொடுத்த நரம்பென்க.

24 - 5. வரகின் குரல் வார்ந்தன்ன நுண் துளை இரீஇ - வரகின் கதிர் ஒழுகின தன்மைத்தாக நெருங்கின நுண்ணிய துளைகளை இருத்தி,

இது, [4] 'பொல்லம் பொத்துமிடத்தில் துளை. [5] "பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக், கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை" என்றார் பிறரும்.

26 - 9. [சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி, இலங்குதுளை செறிய வாணி முடுக்கிப், புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத் துப், புதுவது போர்த்த பொன்போற் பச்சை :]

இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி - விளங்குகின்ற துளைகள் நிரம்பும்படி சுள்ளாணிகளை இறுகத் தைத்து,

புதுவது வெண்கை புனைந்த யாப்பு அமைத்து - புதிதாக யானைக் கொம்பாற் செய்த யாப்பை அமையப் பண்ணி,

யாப்பு - பத்தலிற் குறுக்கே வலி பெற ஒட்டுவது.

சிலம்பு அமை பத்தல் பசையொடு சேர்த்தி புதுவது போர்த்த பொன்போல் பச்சை - ஒலித்தல் அமைந்த பத்தலிலே [6] பற்றோடே கூட்டிப் புதிதாகப் போர்த்த பொன்னிறம்போலும் நிறத்தையுடைய தோலினையும்,

இரீஇ முடுக்கி அமைத்துச் சிலம்புதல் அமைந்த பத்தலிலே போர்த்த பச்சையென்க.

30 - 31. [வதுவை நாறும் வண்டுகம ழைம்பால், மடந்தை:]

வண்டு வதுவை நாறும் ஐம்பால் மடந்தை - தன்னிடத்திருந்த வண்டு கலியாணம் செய்த மகளுடைய நாற்றத்தை நாறுதற்குக் காரணமான மயிரினையுடைய மடந்தை,

வதுவைக்கு எல்லா மணமும் உளவாதல்பற்றி வதுவை நாறும் என்றார்.

---

[1] கொடும்பு - கொடுமுறுக்கு (கொடி முறுக்கு)

[2] தீற்றி - உருவி. [3] அரலை - சிறு கல்.

[4] பொல்லம் பொத்தல் - இரண்டு தலைப்பையுங் கூட்டித் தைத்தல்; "பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை" (பொருந. 8)

[5] பெரும்பாண். 7 – 8. [6] பற்று - பிசின்.

கமழ் ஐம்பால் - [1] இயல்பான மணத்தையுடைய ஐம்பால்.

31 - 2. [மாண்ட நுடங்கெழி லாகத், தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப:] எழில் நுடங்கு மடந்தை மாண்ட ஆகத்து அடங்கு மயிர் ஒழுகிய அ வாய் கடுப்ப - [2]அழகு கட்புலனுகி நின்றசையும் மடந்தையது மாட்சிமைப்பட்ட மார்பிடத்தே சென்று பின்பு இல்லையான மயிர் ஒழுங்குபட்டுக் கிடக்கின்ற அழகிய வயிற்றிடத்தை யொக்க,

33 - 4. அகடு சேர்பு பொருந்தி அளவினில் திரியாது கவடுபட கவைஇய சென்று வாங்கு உந்தி - பொல்லம் பொத்துதல் நடுவே சேரப்பட்டுக் கட்கு இனிதாய்த் தனக்குக் கூறுகின்ற அளவிலே வேறுபடாமற் பகுத்தலுண்டாக அகத்திட்ட உயர்ந்து வளைந்த உந்தியினையும்,

[3] உந்தி - யாழகத்து ஒருறுப்பு.

35 - 7. நுணங்கு அரம் நுவறிய நுண் நீர் மாமை களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின் வணர்ந்து ஏந்து மருப்பின் வள் [4]உயிர் [5]பேர் யாழ் - நுண்ணிய அரத்தாலே அராவின நுண்ணிய நீர்மையினையுடைய கரிய நிறத்தாலே களம்பழத்தின் நிறத்தை ஒத்தனவாய்க் கடுகித் தோன்றுகின்ற நிறத்தையுடைய வளைந்தேந்தின கோட்டினையுமுடைய பெரிய ஓசையினையுடைய பேரியாழ்,

திவவினையும் (21) நரம்பினையும் (23) பச்சையினையும் (29)உந்தியினையும் (34) மருப்பினையும் உடைய பேரியாழ் (37) என்க.

38. [அமைவரப் பண்ணி யருணெறி திரியாது:] பேரியாழ்(37) அருள் நெறி திரியாது அமைவர பண்ணி - பேரியாழைத் தனக்கு நூலினுல் கூறிய வழிகளைத் தப்பாதபடி பொருந்துதல் வரச் சமைத்து,

39 – 40. இசைபெறு திருவின் வேந்து அவை ஏற்ப துறை பல முற்றிய – இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினையுடைய

---

[1] இயல்பான மணம் - இயற்கை மணம்; "செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" (குறுந். 2 : 4 – 5)

[2] இவ்வழகு இலாவணியம் எனப்படும்.

[3] "உந்தி யென்பது, கொப்பூழினையும், ஆற்றிடைக் குறையினையும், தேர்த்தட்டினையும் யாழ்ப்பத்தற்றுளையினையும் உணர்த்தும்" (நன். சூ. 271, மயிலை.)

[4] உயிர் - ஒலி; குறிஞ்சி. 100,ந; "உயிரி லெழுத்து மெண்ணப் படாஅ" (தொல். செய். சூ. 44)

[5] பேரியாழ் - இருபத்தொரு நரம்புகளையுடையது; பெருங்கல மெனவும் படும். இதனுடைய இலக்கணம், சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லாருரைப் பாயிரத்தால் அறியலாகும்.

அரசர்களுடைய அவைக்களத்தே அவர்கள் செவிக்கொள்ளும்படி தாம் வாசிக்கும் [1]துறைகள் பலவற்றையும் வாசித்து முடித்த,

40. பை தீர் பாணரொடு - [2]பசுமையற்ற பாணரோடே,

என்றது, கல்வி முதிர்ந்தமையின் இளமையற்ற பாணரென்ற வாறு.

41. உயர்ந்து ஓங்கு பெரு மலை ஊறு இன்று ஏறலின் - உயர்ந்து கற்கள் தம்மில் தொடரும் பெரிய மலைகள் வேறோர் இடையூறின்றாக ஏறி வருகையினாலே,

42 – 3. [மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி :] துளங்கு இயல் மெலிந்த மதம் தபு ஞமலி நாவின் அன்ன கல் பொரு சிறு அடி - அசைகின்ற இயல்பினால் இளைத்த வலி கெட்ட நாயினது நாவினை ஒத்த கல்லுப் பொருகின்ற சிறிய அடியினையும்,

ஏறலின் மெலிந்த அடி யென்க,

44 - 6. [கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ, விலங்கு மலைத் தமர்ந்த சேயரி நாட்டத், திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற :]

விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து - மானோடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரியை உடைய கண்ணினையும்,

இலங்கு வளை விறலியர் - விளங்குகின்ற வளையினையும் உடைய விறல் படப் பாடி ஆடுவார்,

கணம் கொள் தோகையின் கதுப்பு இகுத்து அசைஇ நின் புறம் சுற்ற - திரட்சியைக் கொண்ட மயில் போலே மயிரைத் தாழ்த்து இளைத்து நின்னைப் புறத்தே சூழ,

அடியினையும் (43) நாட்டத்தினையும் (45) வளையினையும் உடைய விறலியர் (46) கதுப்பு இகுத்து அசைஇச் (44) சுற்ற (46) என்க.

47 - 8. [கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற், புனல்கால் கழீஇய மணல்வார் புறவில் :]

[3]புனல் கால் கழீஇய மணல் வார் புறவில் - பெருகும் நீர் துராலே வாரிக்கொண்டு போன மணல் ஒழுங்குபட்ட சிறு காட்டிடத்தில்,

---

[1] துறை பல என்றது, வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்துப் பாடும் இருபத்தொரு பாடல் துறைகளை ; ''மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பி'' (புறநா. 152 : 20) ; ''ஏழே யேழே நாலே மூன் றியலிசை யிசை யியல்பா வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்'' (தே. தாளச்சதி.)

[2] பசுமை - இளமை ; ''பசுங்கதிர் - பச்சைக் கதிர் ; பசுமை நிறத்திற் சென்றதன்று : இளமையிற் சென்றது'' (தக்க. 605, உரை)

[3] ''புனல்கால் கழீஇய - நீர் பெருகிய காலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப் போன'' (பெரும்பாண். 380, ந.)

கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல் - குளத்திலே புகுந்தாலொத்த பயனைத் தருகின்ற குளிர்ந்த நிழலிலே,

49 - 50. [புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக், கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ :]

புலம்பு விட்டு இருந்த காட்சி கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ - வழி வந்த வருத்தத்தைக் கைவிட்டிருந்த அறிவினை யுடைய பேரணிகலங்களைப் பெறும் கூத்தருடைய சுற்றத்திற்குத் தலைவனே,

புனிறு இல் ஒக்கல் - ஈன்றணிமை இல்லாத சுற்றம்,

என்றது, பிள்ளையைப் பெற்றவர்கள் பிள்ளையைக் கொண்டு கூட வந்திலர்கள் என்றவாறு.

கலப்பையிராய் (13) இயவுக் கொண்டொழுகி (20) யாழைப் (37) பண்ணித் (38) துறைபல முற்றிய பாணரோடு (40) விறலியர் புறஞ்சுற்றத் (46) தண்ணிழலிலே (47) இருந்த (49) கண்ணுள ரொக்கற்றலைவனே (50) என வினை முடிக்க.

கலப்பையி ரென்னும் பன்மை தலைவனென்னும் ஒருமையொடு முடிந்தது, "ஒருமை சுட்டிய" (தொல். எச்ச. சூ. 65) என்னும் சூத்திரத்தால்.

51 - 3. தூ மலர் துவன்றிய கரை பொரு நிவப்பின் மீமிசை நல் யாறு கடல் படர்ந்தாஅங்கு யாம் அவண் நின்றும் வருதும் – தூய பூக்கள் நெருங்கின கரையைப் பொருகின்ற ஒக்கத்தினை உடைய மலை யுச்சியினின்றும் இழிந்த நல்ல யாறு கடலை நோக்கிப் போனாற் போல யாம் அவனை நோக்கிச் சென்று சில பெற்று வருகின்றேம் ;

இனி, [1]மலையிற் பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலை நோக்கிப் போனாற்போல அவ்விடத்துள்ள பொருள்களை வாரிக் கொண்டு வருகின்றேம் என்றுமாம்.

53 – 5. [நீயிரும், கனிபொழி கானங் கிளையொ டுணீஇய, துனைபறை நிவக்கும் புள்ளின மான :]

கனி பொழி கானம் கிளையொடு உணீஇய துனை பறை நிவக்கும் புள் இனம் மான - பழங்களைச் சொரிகின்ற காட்டில் பழங்களைச் சுற்றத்தோடே சென்று தின்றற்கு விரைந்த பறத்தல் தொழிலிலே ஓங்கும் பறவைத்திரளை ஒக்க,

நீயிரும் என்பது [2]மேலே கூட்டுதும்.

56. புனை [3]தார் பொலிந்த வண்டு படு மார்பின் – கை செய்த

---

[1]பெரும்பாண். 427, உரையைப் பார்க்க.

[2]மேலே என்றது 65-ஆம் அடியின் உரையை.

[3]தார் - மார்பின் மாலை ; "பொலந்தார் மார்பி னெடியோன்" (மதுரைக். 61); "தாரொடு பொலிய - தங்கணவர் மார்பின் மாலையோடே அழகு பெற" (மதுரைக். 264 - 6, ந.)

மாலையாற் பொலிவு பெற்ற வண்டுகளை உண்டாக்குகின்ற மார்பினை உடைய கணவன் (58) என்க.

57. வனை புனை எழில் முலை - ஓவியங்களிலே முலையாகப் பண்ணின கைசெய்த அழகைத் தன்னிடத்தே உடைய முலையினையும்,

வாங்கு அமை திரள் தோள் - வளைந்த மூங்கிலை யொத்த திரண்ட தோளினையும்,

58. மலர் போல் மழை கண் [1]மங்கையர் கணவன் - பூப்போலும் குளிர்ச்சியை யுடைய கண்ணினையும் உடைய கற்புடை மகளிர்க்குக் கணவன்,

59. முனை பாழ் படுக்கும் துன் அரு துப்பின் - பகைப் புலத்தைப் பாழுண்டாக்கும் கிட்டுதற்கரிய வலியினையும்,

60. [இசைநுவல் வித்தி னசையே ருழவர்க்கு:] நுவல் இசை வித்தின் நசை ஏர் உழவர்க்கு - தாம் பிறரைக் கூறும் புகழாகிய விதையாலே பிறர் பொருள்களை நச்சுதலாகிய ஏருழவினை உடைய பரிசிலர்க்கு,

என்றது, புகழை வித்திப் பொருளை எடுப்ப ரென்றவாறு.

61. புது நிறை வந்த புனல் அம் சாயல் - புதுப் பெருக்காய் வந்த நீர் போலும் அழகை உடைய மென்மையினையும்,

என்றது, தண்ணீர் அரிய காலத்தே வந்து பயன் தருமாறு போல இவனும் பயன் தருவன் என்றவாறு.

62. மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி - தனது அறிவின் ஆக்கத்திற்கு மாறுகிய கேட்டை நினையாது ஆக்கத்தினையே உணரும் நினைவினையும்,

63. வில் நவில் தட கை - விற்றொழிலிலே பயின்ற பெரிய கையினையும்,

மேவரும் பெரும்பூண் - பொருந்துதல் வரும் பேரணிகலங் களையும் உடைய,

64. நன்னன் சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு - நன்னன் மகனாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே,

துப்பினையும் (59) சாயலினையும் (61) சூழ்ச்சியினையும் (62) கை யினையும் பூணினையும் (63) உடைய நன்னன் என்க.

65. உள்ளினிர் சேறிராயின் - அவன் தரும் பரிசில்கள் இவை யென்று அப் பரிசில்களை உள்ளினிராய் நீயிரும் (53) செல்வீராயின்,

65 - 6. [பொழுதெதிர்ந்த, புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுத லின் :] என் தாக்குறுதலின் எதிர்ந்த பொழுது புள்ளினிர் மன்ற -

---

[1]மக்களுட் பெண்பாலாரைப் பாடுதல் சிறப்பின்மையின் இவ் வாறு கணவரோடு சேர்த்துப் பாடுதல் மரபென்பர்; தொல். புறத்திணை. சூ. 26, ந.

என்னை எதிர்ப்படுகையினாலே நீர் புறப்படுகின்றபொழுது நுமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்ற நன்முகூர்த்தத்தோடே நன்னிமித்தத்தையும் உடையிராய் இருந்தீர், அறுதியாக ;

67. ஆற்றின் அளவும் - வழியினது நன்மையினது அளவும் தீமையினது அளவும்,

அசையும் நல் புலமும் - நீர் தங்கும் நன்றாகிய இடங்களும்,

68. வீறு வளம் சுரக்கும் அவன் நாடு படு வல்சியும் - பிறர் நாட்டுக்கு இல்லாத செல்வத்தை மாறாமல் கொடுக்கும் அவன் நாடு விளைகின்ற உணவுகளும்,

நாடெனவே [1]மலை நாடும் காட்டு நாடும் தண்பணை நாடும் கூறினார் ; அது மேற்காண்க.

69. மலையும் - அவன் நாட்டின் மலைகளின் தன்மையும்,

சோலையும் - அவன் நாட்டின் சோலைகளின் தன்மையும்,

மா புகல் கானமும் - விலங்குகள் விரும்பித் திரியும் காட்டின் தன்மையும்,

ஆற்றினது அளவு முதலிய ஐந்தினையும் இக் கூறிய முறையே கூறாமல் மயங்கக் கூறுவர், கூறும் வழிக்கண் ஆண்டுள்ளனவே கூற வேண்டுதலின்.

70 - 72. தொலையா நல் இசை உலகமொடு நிற்ப பலர் புலம் கண்டு அவர் அரு கலம் புலவோர்க்கு தரீஇ சுரக்கும் அவன் ஈகை மாரியும் - கெடாத நல்ல புகழ் உலகமுள்ளளவும் நிற்கும்படியாகப் பகைவர் பலரையும் முதுகு கண்டு அவர் திறையாகத் தந்த பெறுதற் கரிய பேரணிகலங்களை முற்பட அறிவுடையோர்க்குக் கொடுத்துப் பின் அவர்க்குச் சொரியும் அவன் பொன்மழையும்,

73. இகழுநர் பிணிக்கும் ஆற்றலும் - தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரை அரசு கொடாமல் சுருக்கும் அறிவின் வலியும்,

73 - 6. புகழுநர்க்கு அரசு முழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு தூ துளி பொழிந்த பொய்யா வானின் வீயாது சுரக்கும் அவன் நாள்மகிழ் இருக்கையும் - [2]சூதர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர்க்குத் தான் புறங்கண்ட பகைவர் அரசை முற்றும் கொடுப்பினும் அமைதி பிறவாத அறிவுடனே தூய துளியைப் பெருகச் சொரிந்த பருவம் பொய்யாத மேகம் பின்னரும் பெய்யுமாறு போலப் பின்னரும் மாறாமற் சொரியும் அவனுடைய நாளோலக்கமும்,

---

[1]மலைநாடு - குறிஞ்சி; காட்டு நாடு - முல்லை; தண்பணை நாடு - மருதம்.

[2]சூதர்-நின்றேத்துவார் ; மாகதர் - இருந்தேத்துவார் ; மதுரைக். 670, ந.

நோக்கு - [1]நோக்கல் நோக்கம். "வீயா வீண்டும்" என வீயாமை அகற்சிமேற்று.

77 - 80. [நல்லோர் குழீஇய நாநவி லவையத்து, வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச், சொல்லிக் காட்டிச் சோர் வின்றி விளக்கி, நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்:] நா நவில் [2]நல்லோர் குழீஇய அவையத்து சென்றோரை வல்லாராயினும் புறம் மறைத்து சொல்லி காட்டி சோர்வு இன்றி விளக்கி நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும் - தாம் கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினை உடையோர் திரண்ட தன் அவைக்களத் திடத்தே சென்ற அறிவுடையோரைத் தாம் கற்றவற்றை மனம் கொள்ளக் கூறமாட்டாராயினும் மாட்டாமையை மறைத்துத் தாம் பொருளைச் சொல்லிக்காட்டி அதனைத் தப்பின்றாக எல்லார் மனமும் கொள்ளும்படி அறிவித்து நன்றாக நடத்தும் அவனுடைய சுற்றத் தாருடைய பேரொழுக்கமும்,

---

[1]நோக்கு அல் நோக்கம் - கண்ணால் நோக்கும் நோக்கமன்றி மனத்தால் நோக்கும் நோக்கம்; அஃதாவது கருதுதல்; தொல். வேற் றுமை மயங்கு. சூ. 10. ந.

[2]நல்லோர் குழீஇய அவை - நல்லவையும் நிறையவையும்; "அவற்றுள், நல்லவை யென்பது நாடுங் காலை, எத்துறை யானு மிருவரு மியம்பும், அத்துறை வல்லோ ரறனொடு புணர்ந்தோர், மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர், கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர், செற்றமுஞ் சினமுஞ் சேரா மனத்தோர், முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர், இனிய முகத்தோ ரிருந்துரை கேட்போர், வேந்த னொருவர்க்குப் பாங்கு படினும், தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர், அன்னோர் முன்னரக் கூறிய பொழுதில், தொலையு மாயினுந் தொலைவெனப் படாது, வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே", "நிறையவை யென்பது நினையுங் காலை, எல்லாப் பொருளுந் தன்னகத் தடக்கி, எதிர்வரு மொழிகளை யெடுத்துரைப் பதுவே" (யா - வி. ஒழிபு. சூ. 3, மேற்.); "புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காமம், இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் - நிகழ்கலைகள், எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ, நல்லா யவைக்கு நலம்", "நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை ஞானம், குலனென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்டோர் செறிந்தவிடம், அன்றோ நிறைந்த வவை" (வெண்பாப் பாட்டியல், பொது. 9, 10); "ஆறுட் பகைசெற் றருங்கலை யோர்ந்து, பாரிற் சீர்த்தி படைத்தோர் வைகுதல், நல்லவை யடக்கம் வாய்மை நடுநிலை, சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ, வல்லார் மொழியினும் வல்லுந ராக்கிக், கேட்போ ருறையவை நிறையவை யாகும்" (இ. வி. சூ. 936, உரை, மேற்.)

நவிலுதல் - கூறி அடிப்படுதல். சுற்றம் - கல்வியுடையோர்.

81 - 3. நீர் அகம் பனிக்கும் அஞ்சுவரு கடு திறல் பெரு இசை நவிரம் மேஎய் உறையும் காரி உண்டி கடவுளது இயற்கையும் - கடல் சூழ்ந்த உலகு நடுங்கும் அஞ்சுதல் தோன்றும் கடிய வலியையுடைய பெரிய புகழினை உடைய [1]நவிரம் என்னும் மலையைப் பொருந்தியிருக்கும் நஞ்சை ஊணாக வுடைய இறைவனது இயல்பும்,

பனிக்கும் காரி, திறலினை உடைய காரி.

84 - 5. பாய் இருள் நீங்க பகல் செய்யா எழுதரும் ஞாயிறு அன்ன அவன் வசை இல் சிறப்பும் - பரந்த இருள் நீங்கும்படி பகற் பொழுதைச் செய்து தோன்றும் [2]ஞாயிற்றை ஒத்த அவனுடைய [3]பகையாகிய இருளைக் கடிந்த குற்றம் இல்லாத தலைமையும்,

86-9. [[4]இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎம், நுகம்படக் கடந்து நூழி லாட்டிப், புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக், கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவும்:] தெவ்வர் தேஎம் இகந்தன ஆயினும் நூழில் ஆட்டி நுகம் பட கடந்து புரை தோல் வரைப்பின் வேல் நிழல் புலவோர்க்கு கொடை கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்-பகைவர்தேயம் சேண் இகந்தனவாயினும் ஆண்டுச் சென்று [5]தூசிப் படையைக் கொன்று குவித்து வலியுண்டாக வென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானை அணிந்து நிற்கின்ற அணியிலே சென்று பொருத [6]வேற்போரின் விளக்கத்தை உடைய அறிவுடையோர்க்குக் கொடுத்தற்குரிய நாடும் ஊரும் முதலியவற்றைக் கொடுத்த அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றரவும்,

---

[1]நவிரம் என்னும் மலை இக்காலத்துத் திரிசூல கிரி யென்றும் பருவத மலை என்றும் வழங்கப்படுகின்றது; இதில் காரியுண்டிக் கடவுளுடைய திருக்கோயில் இருக்கின்றது; இக்காலத்து வழங்கும் அவரது திருநாமம் ஸ்ரீ காளகண்டேசுவரர் என்பது; இம்மலை திருவண்ணாமலைக்கு வடமேற்கில் உள்ளது.

[2]பகையைக் கடிதலுக்கு ஞாயிறு இருளைக் கெடுத்தல் உவமை; "ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சீக்குஞ் சுடரேபோல், வேண்டார் தார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையும்" (கலித். 100: 1 - 2); "ஞாயி றனையைநின் பகைவர்க்கு" (புறநா. 59: 6)

[3]"உறைநிறுத்திய வாளினுறற் பகையிருளொதுக்கி" (திருவிளை. நாடு. 1). [4]புறநா. 31: 9 - 11.

[5]தூசிப்படை - முற்படை.

[6]வேற்போர்: யானையைக் குத்துதற்கு வேல் உரியதாகலின் யானையணியிலே வேற்போரைக் கூறினர்; மலைபடு. 129, அடிக்குறிப்.

[1]காஞ்சி சான்ற வயவர் ஆதலின், அவரைப் புலவர் என்றார்.

90 - 91. இரை தேர்ந்து இவரும் கொடு தாள் முதலையொடு திரை பட குழிந்த கல் அகழ் கிடங்கின் - இரையைத் தேடி உலாவும் வளைந்த காலினை உடைய முதலைகளோடே திரை உண்டாக ஆழ்ந்த கல்லை அகழ்ந்த கிடங்கினையும்,

92. வரை புரை நிவப்பின் வான் தோய் இஞ்சி - மலையை ஒத்த உயர்ச்சியை உடைய வானைத் தீண்டும் மதிலினையும் உடைய,

93 - 4. உரை செல வெறுத்த அவன் மூதூர் மாலையும் கேள் - புகழ் எங்கும் பரக்கும்படி செறிந்த அவனுடைய பழைய ஊரினது இயல்பும் இருக்கும்படி கேட்பாயாக;

ஆற்றினது அளவு முதலியவற்றை எண்ணி இன்னதும் இன்னதும் இருக்கும்படி கேட்பாயாக என முடிக்க.

94. [இனி வேளைநீ முன்னிய திசையே:] இனி நீ [2]வேளை முன்னிய திசையே கேள் - அவற்றில் இப்பொழுது நீ நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேள்;

திசை, ஆற்றின் அளவை உணர்த்தி நிற்றலின் ஆகுபெயர் ஆயிற்று; ஏகாரம்: பிரிநிலை.

95 - 6. மிகு வளம் பழுநிய யாணர் வைப்பின் புதுவது வந்தன்று - மிகுகின்ற செல்வம் முற்றுப்பெற்ற புது வருவாயை உடைய ஊர்களாலே புதிதாகிய தன்மை வந்தது;

96. [இதுவதன் பண்பே:] அதன் பண்பு இது - அவ்வழியின் செய்தி இத்தன்மைத்து;

97 - 8. [வானமின்னு வசிவு பொழிய வானு, திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளைய:] ஆனது இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய வானம் மின்னு வசிவு பொழிய - அமையாதே நிலத்தே இட்ட விதைகளெல்லாம் இன்னவாறே விளையவேண்டும் என்று ஆண்டு உள்ளார் விரும்பினாற்போலே விளையும்படியாக மேகம் மின்னுகிய பிளந்து வடுப்படுதலோடே பெய்கையினாலே,

99. பெயலொடு வைகிய வியல் கண் இரு புனத்து - அம்மழையோடே தங்கின அகன்ற இடங்களை உடைய பெரிய கொல்லை நிலத்தே,

100 - 101. [அகலிரு விசும்பி னாஅல் போல, வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை:] புல் கொடி முசுண்டை அகல் இரு விசும்பின் ஆ அல்போல வாலிதின் விரிந்த - புல்லிய கொடியினை

---

[1]காஞ்சி சான்ற வயவர் - நிலையாமையை எப்பொழுதும் உள்ளத்துக் கொண்டிருத்தல் அமைந்த வீரர்; "காஞ்சி சான்ற வயவர் பெரும" (பதிற். 65: 4, 90: 39)

[2]வேள் - நன்னன்; மலைபடு. 163 - 4, ந.

உடைய முசுண்டை [1]ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயத்தில் [2]கார்த்திகையாகிய மீன்போல வெள்ளிதாக மலர்ந்தன;

[3]ஆரல், ஆலென விகாரம்.

102 - 6. [நீலத் தன்ன விதைப்புன மருங்கில், மகுளி பாயாது மலிதுளி தழாலின், அகளத் தன்ன நிறைசுனைப் புறவில், கௌவை போகிய கருங்காய் பிடியேழ், நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்:] பல்கவர் ஈர் எண் நீலத்து அன்ன விதை புனம் மருங்கின் அகளத்து அன்ன நிறை சுனை புறவின் மகுளி பாயாது மலிதுளி தழாலின் [4]கௌவை போகிய கரு காய் பிடி ஏழ் நெய் கொள ஒழுகின - பலவாகக் கிளைத்த பசிய எள்ளுத் தோடுகளெல்லாம் நீலமணியை ஒத்த நிறத்தை உடையவாய் எழும்படி அவற்றை விதைத்த கொல்லையின் பக்கத்தில் நீர்ச்சாலை ஒத்த நிறைந்த சுனைகளை உடைய காட்டிடத்தே அரக்குப் பாயாமல் மிக்க துளி தழுவுகையினாலே இளங்காயாகிய தன்மை போன கரிய காய் ஒரு பிடியிலே ஏழ்காயாக நெய் உள்ளே கொள்ளும்படியாக வளர்ந்தன;

107 - 8. [பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குலவுக்குர லேனல்:] [5]பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப குலவு குரல் ஏனல் கொய் பதம் உற்றன - தம்மில் விளையாடிப் பொருகின்ற யானைக்கன்றுகளின் ஒன்றோடு ஒன்று சேர்ந்த கைகளை யொப்பத் தம்மில் பிணையும் கதிர்களை உடைய தினை அறுக்கும் செவ்வியாக முற்றின;

109 – 10. [விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும், குளிர் புரை கொடுங்காய் கொண்டன வவரை:] அவரை இருவிதொறும் விளை தயிர் பிதிர்வின் வீ உக்கு குளிர் புரை கொடு காய் கொண்டன - அவரைகள் தினையரி தாள்தோறும் முற்றின தயிரினது பிதிர்ச்சிபோலும் பூக்கள் உதிர்ந்து அடியிலே அரிவாளை ஒக்கும் வளைந்த காயைக் கொண்டன;

---

[1]பெரும்பாண். 1, உரை, அடிக்குறிப்.

[2]"மழையில் வான மீனணிந் தன்ன, குழையமன் முசுண்டை வாலிய மலர" (அகநா. 264: 1 - 2)

[3]"வடவயின் விளங்கா லுறையெழு மகளிருட், கடவு ளொருமீன் சாலினி" (பரி. 5: 43 - 4) என்பதும், 'ஆரலென்னும் பெயர் ஆலெனக் குறைந்து நின்றது' என்னும் உரையும் இங்கே அறியற்பாலன.

[4]மதுரைக். 271, உரை, அடிக்குறிப்.

[5]"பொய்பொரு முடங்குகை" (சிலப். 15: 50) என்றவிடத்து, புரைபொருந்திய வளைந்த கை' என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதியிருத்தலின் பொய்பொரு என்பதைக் கைக்கு அடையாக்கிப் பொருள் கொள்ளலுமாம்.

குளிர் - கிளிகடி கருவியும் என்ப.

111 - 3. [மேதி யன்ன கல்பிறங் கியவின், வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி, இரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே :] பெரு புனம் வரகு மேதி அன்ன கல் பிறங்கு இயவின் வாதி கை அன்ன கவை கதிர் இறைஞ்சி இரும்பு கவர்வு உற்றன - பெரிய புனத்தில் வரகுகள் எருமை கிடந்தாற்போன்ற கற்பெருத்த வழியிடத்திலே தருக்கம் கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களை ஒத்த இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன;

114 - 44. [பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு, வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல், வேழீண்டு தொழுதி யிரிவுற் றென்னக், காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக், குறையறை வாரா நிவப்பி னறையுற், ருலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே, புயற்புனிறு போகிய பூமலி புறவின், அவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை, தொய்யாது வித்திய துளர்படு துடவை, ஐயவி யமன்ற வெண்காற் செறுவின், மையென விரிந்தன நீணறு நெய்தல், செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக், காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து, வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங் கொடிக் கவலை, காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென, ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத், துறுகல் சுற்றிய சோலை வாழை, இறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக், கூழற் றலமரு முந்தூ முகலறைக், கால மன்றியு மரம்பயன் கொடுத்தலின், காலி னுதிர்ந்தன கருங்கனி நாவல், மாறுகொள வொழுகின வூறுநீ ருயவை, நூறெருடு குழீஇயின கூவை சேறுசிறங், தண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிங், தரலை யுக்கன நெடுந்தா ளாசினி, விரலூன்று படுக ணுகுளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக், கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல்கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சினவலங்குசினைப் பலவே:]

பூ மலி புறவில் புயல் புனிறு போகிய (120) அம் [1]பொதி [2]தோரை அவல் பதம் கொண்டன (121) - பூ மிக்க காட்டிடத்தே மழையால் ஈன்றணிமை தீர்ந்து முற்றிய அழகிய குலையினை உடைய [3]மூங்கில் நெல் அவலிடிக்கும் செவ்வியைக் கொண்டன;

இது மூங்கில்.

---

[1] பொதி - பொதிந்த குலை.

[2] தோரை - ஒருவகை நெல்லும் மூங்கில் நெல்லும்; மதுரைக். 287, ந.

[3] இதனை, "அவலவ லென்கின் றன நெல்" (தொல். எச்ச. சூ. 26, சே. ந. மேற்.) என்பது விளங்கச் செய்கின்றது.

ஐயவி (123) தொய்யாது துளர் படு துடவை வித்திய (122) அமன்ற (123) - வெண் சிறு கடுகு உழாதே களைக்கொட்டால் அடி வரைந்து கொத்தும் தோட்டங்களிலே விதைக்கப்பட்டனவாய் நெருங்கி விளைந்தன;

இஞ்சி (126) செய்யா பாவை வளர்ந்து கவின் முற்றி (125) [1]காயம் கொண்டன (126) - இஞ்சிமுதல் ஒருவரால் பண்ணப்படாத பாவைகள் வளரப்பட்டு அழகு முதிர்ந்து [2]காழ்ப்பைக் கொண்டன;

இஞ்சிக் கிழங்கைப் பாவையென்றல் மரபு.

கொழு கொடி கவலை (128) குழிதொறும் வயவு பிடி முழந்தாள் கடுப்ப (127) விழுமிதின் [3]வீழ்ந்தன (128) - கொழுவிய கொடியினை உடைய கவலை குழிகள்தோறும் வலிய பிடியின் மடித்த முழந்தாளை ஒக்கும்படி சீரிதாகக் கீழே வளர்ந்தன;

மா இருந்து (126) வீழ்ந்தன (128) - முற்றி மாவாம் தன்மை தம்மிடத்தே உளவாய் வீழ்ந்தன;

காழ் மண்டு எஃகம் களிறுமுகம் பாய்ந்தென (129) - காம்பிலே தைத்த வேல் யானையைக் குத்திற்று என்னும்படியாக,

ஊழ் மலர் ஒழி முகை உயர் முகம் தோய (130) துறுகல் சுற்றிய சோலை வாழை (131) - முறைப்பட மலர்தலை ஒழிந்த முகைகளினுடைய உயர்ந்த முகங்கள் சென்று தீண்டும்படியாக நெருங்கின மலைகளைச் சூழ்ந்துநின்ற சோலையாகிய வாழை,

வேல் யானையைக் குத்திறுற்போல வாழைப்பூ மலையைத் தீண்டி நின்றது என்றுணர்க; வாழைப் பூ உதிர்ந்து பின்பு உலராது நிற்றல் இயல்பு.

இறுகு குலை முறுக பழுத்த (132) - காய் நெருங்கின குலை மிகவும் நெகிழும்படி பழுத்தன;

உந்தூழ் ஊழுற்று (133) பயம் புக்கு (132) அலமரும் (133) - பெரு மூங்கில் நெல்லு முற்றுதலுற்றுப் பயன்படும் தன்மையிலே புகுந்து அசையாநிற்கும்;

மரம் காலம் அன்றியும் பயன் கொடுத்தலின் (134) - ஆண்டுள்ள மரங்கள்தாம் காலமன்றியும் நிலவிசேடத்தால் பயனைக் கொடுத்தலின்,

நாவல் காலின் கரு கனி (135) அகல் அறை (133) உதிர்ந்தன (135) - நாவல் காற்றுலே கரிய பழம் அகன்ற பாறையிலே உதிர்ந்தன;

இது சினைவினை முதலொடு முடிந்தது.

---

[1] காயம் - உறைப்பு; "உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்" (நாலடி. 116)

[2] காழ்ப்பு - உறைப்பு.

[3] மதுரைக். 534, அடிக்குறிப்பு.

நீர் ஊறு உயவை மாறு கொள ஒழுகின (136) – விடாய்த்த காலத்தில் வாய் நீர் ஊறுதற்குக் காரணமான உயவைக்கொடி நீரோடே மாறுபாடு கொள்ளும்படி படர்ந்தன;

என்றது, தண்ணீர் தேடவேண்டா என்றவாறு.

கூவை [1]நூறெருடு குழீஇயின (137) - கூவைக் கிழங்கு நீறும் தன்மையோடே முற்றித் திரண்டன;

தேமா (138) சேறு சிறந்து (137) உண்ணுநர் தடுத்தன (138) – பழமாக்கள் சாறு மிக்கு [2]உண்பாரை வேறொன்றில் செல்ல வொட்டாமல் தடுத்துக்கொண்டன;

நெடு தாள் ஆசினி (139) [3]புண் அரிந்து (138) அரலை உக்கன (139) - நெடிய அடியையுடைய ஆசினிப்பலாப் புண்ணும்படி வெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின;

விரல் ஊன்று படு கண் ஆகுளி கடுப்ப (140) குடிஞை இரட்டும் நெடு மலை அடுக்கத்து (141) - விரல் தீண்டுகின்ற முழங்கும் கண்ணை உடைய சிறுபறையை ஒக்கப் பேராந்தை பேடும் சேவலும் மாறிக் கூப்பிடும் நெடிய மலைப்பக்கத்தே,

அலங்கு சினை பலவு (144) கார் வாய்த்து எதிரி (142) சுரம் செல் கோடியர் முழவின் (143) [4]கீழும் மேலும் (142) தூங்கி (143) [5]முரஞ்சு கொண்டு இறைஞ்சின (144) - அசைகின்ற கொம்பினை உடைய பலாக்கள் மழை மிகப் பெய்யப்பட்டு அதனைத் தாம் ஏற்றுக்கொண்டு வழிபோகின்ற கூத்தருடைய மத்தளங்கள் போலே கீழும் மேலும் தூங்கி முற்றுதல் கொண்டு தாழ்ந்தன;

வெள் கால் செறுவில் (123) - வெள்ளிய அரிதாள்களை உடைய செய்யிலே,

---

[1] நூறு - நீறு.

[2] "உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை - தன்னை நுகர் வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த...பிண்டி" (மலைபடு. 445, உரை); "நெய்த லெருமையி னிரைதடுக் குநவுமென்றது நெய்த லானது அக்கரும்பு முதலாய மற்றேரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போத உண்ட எருமை நிரையைத் தடுக்கும் இடங்களு மென்றவாறு" (பதிற். 13 : 3 - 4, உரை); "செலல் விலங்குதேன் - தன்னை விட்டுப் போகையை விலக்குந் தேன்" (தக்க. 360, உரை)

[3] "பசும்புணென்றது புண்பட்ட வாய்போலப் பழுத்து விழுந்த பழத்தினை" (பதிற். 61 : 1) என்பது இங்கே பயன்படும்.

[4] "வேரு முதலுங் கோடு மொராங்குத், தொடுத்த போலத் தூங்குபு தொடரிக், கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்" (குறுந். 257 : 1 - 3)

[5] "முரஞ்சன் முதிர்வே" (தொல். உரி. சூ. 35)

[1] ஐவனம் வெண்ணெல் (115) பால் வார்பு கெழீஇ பல் கவர் வளிபோழ்பு (114) வாலிதின் விளைந்தன (115) – ஐவன நெல்லும் வெண்ணெல்லும் பால் கட்டிச் சிறிது முற்றிப் பலவாய்க் கவர்த்த காற்று ஊடறுக்கப்பட்டு நன்றாக விளைந்தன;

வார்தல் ஒழுகுதலாதலின் கட்டுதலை உணர்த்திற்று. கெழுமுதல் ஈண்டு முற்றுதலை உணர்த்திற்று. பல்கவர் வளியெனவே நாலு காற்றும் அடித்து முற்றுதல் கூறினார்.

தீ [2]கழை கரும்பு (119) கவிழ் கணைத்து (117) – இனிய கோலாகிய கரும்பு தோடு கவிழ்தலோடே தண்டு திரண்டு,

அறை குறை வாரா நிவப்பின் (118) - [3]பாத்தி குறைபடுதல் உண்டாகாத வளர்ச்சியோடே,

வேல் ஈண்டு தொழுதி இரிவு உற்றென்ன (116) கால் உறு துவைப்பின் இறைஞ்சி (117) - வேற்படை திரண்ட தானை கெட்டுப் போதலை உற்றதென்னும்படி காற்று மிகப் படுகின்ற ஆரவாரத் தாலே சாய்ந்து,

அறை உற்று (118) ஆலைக்கு அலமரும் (119) - வெட்டுதலுற்று ஆலையிலே சென்று பயன்படுதற்கு அசையாநிற்கும்;

கரும்பு திரண்டு நிவப்போடே இறைஞ்சி அலமரும் என்க.

நீள் நறு நெய்தல் மை என விரிந்தன (124) - நீண்ட நறிய நெய்தல் கருமைதான் வடிவுகொண்டது என்னும்படியாக அலர்ந்தன;

நீ முன்னிய திசையைக் கேள் (94); வானம் பொழிகையினாலே (97), பெயலொடு வைகிய புனத்து (99), முசுண்டை மலர்ந்தன (101); எண் ஒழுகின (106); ஏனல் கொய்பத முற்றன (108); அவரை கொண்டன (110); வரகு கவர்வுற்றன (113); புறவிலே (120), தோரை கொண்டன (121); ஐயவி அமன்றன (123); இஞ்சி காயங் கொண்டன (126); கவலை வீழ்ந்தன (128); வாழை (131) பழுத்தன (132); உந்தூழ் அலமரும் (133); நாவல் உதிர்ந்தன (135); உயவை ஒழுகின (136); கூவை குழீஇயின (137); தேமாத் தடுத்தன (138); ஆசினி உக்கன (139) பலவு இறைஞ்சின (144); வெண்காற் செறுவிலே (123), ஐவனநெல்லும் வெண்ணெல்லும் விளைந்தன (115); கரும்பு அலமரும் (119); நெய்தல் விரிந்தன (124); இவ்வாறே மிக்க வளம் முற்றுப்பெற்ற புது வருவாயை உடைய ஊர்களாலே (95)புதிதாகிய தன்மை வந்தது; அவ்வழியின் பண்பு இத்தன்மைத்து (96) என வினை முடிக்க.

இஃது [4]ஆற்றினது தன்மையின் அளவு கூறிற்று.

---

[1] மதுரைக். 288, உரை, அடிக்குறிப்பு.

[2] கழைக்கரும்பு, ஒருவகைக் கரும்பு என்பாருமுளர்.

[3] "கரும்புநடு பாத்தி" (குறுந். 262 : 7; ஐங். 65 : 1)

[4] மலைபடு. 67.

145. *தீயின் அன்ன ஒள் செ காந்தள்* - நெருப்பினை ஒத்த ஒள்ளிய செங்காந்தளினது.

இதற்கு நன்னனென்னும் பெயர் தீயோடு அடுத்த தன்மையின் [1]ஆனந்தமாய், பாடினாரும் பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்த பிள்ளையாசிரியர் குற்றம் கூறினாராலெனின், அவர் அறியாது கூறினார்; செய்யுள் செய்த கௌசிகனார் ஆனந்தக்குற்றமென்னும் குற்றம் அறியாமற் செய்யுள் செய்தாரேல், இவர் நல்லிசைப் புலவராகார்; இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காது கோத்தற்குக் காரணம் ஆனந்தக் குற்றம் என்பதொரு குற்றம் இச்செய்யுட்கு உறுமையான் என்றுணர்க.

இச்சொன்னிலை நோக்குமிடத்து ஒருகுற்றமும் இன்று; என்னை? அன்னவென்னும் அகரவீற்றுப் பெயரெச்ச உவமவுருபு தீயென்னும் பெயரைச் சேர்ந்துநின்று இன் சாரியை இடையே அடுத்துநிற்றலின். நன்னனென நகரமுதலும் னகரவொற்றீறுமாய் நிற்கும் சொல்லாயினன்றே அக்குற்றம் உளதாவதென மறுக்க. நன்ன என அண்மை விளியாய் நின்ற முன்னிலைப் பெயரென்று குற்றம் கூறுவார்க்கு இப்பாட்டுப் படர்க்கையேயாய் நிற்றலின் குற்றம் இன்றென்க.

நூற்குற்றம் கூறுகின்ற [2]பத்துவகைக் குற்றத்தே, [3]"தன்னானொருபொருள் கருதிக் கூறல்" என்னும் குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றமென்று நூல்செய்ததன்றி [4]அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இக் குற்றம்

---

[1] ஆனந்தமாய் - ஆனந்தக் குற்றமாகி; ஆனந்தக்குற்றம் என்பது எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என அறுவகைப்படும்; அவற்றுள் இங்கே சொல்லியது சொல்லானந்தத்தில் அடங்கும் என்பர்; "இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத், தொழிற்சொல் புணர்ப்பினது சொல்லானந்தம்" (யா. வி. ஒழிபு; யா. கா; ஒழிபு. 9, உரை; யா. வி. சூ. 887.)

[2] பத்துவகைக் குற்றங்களாவன : "சிதைவெனப் படுபவை வசையற நாடிற், கூறியது கூறன் மாறுகொளக் கூறல், குன்றக் கூறன் மிகைபடக் கூறல், பொருளில மொழிதல் மயங்கக் கூறல், கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல், பழித்த மொழியா னிழுக்கங் கூறல், தன்னா னொருபொருள் கருதிக் கூறல், என்ன வகையினு மனங்கோ ளின்மை, அன்ன பிறவு மவற்றுவிரி யாகும்" (தொல். மரபு. சூ. 108)

[3] "தன்னானொருபொருள் கருதிக்கூறலென்பது மலைபடு கடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தான் ஒருவன் ஒரு சூத்திரம் காட்டுதலும் பதமுடிப்பென்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும் போல்வன" (தொல். மரபு. சூ. 108, பேர்.)

[4] "இனி ஆனந்தவுவமை யென்பன சில குற்றம் அகத்தியனார்

கூறுமையின் சான்றோர் செய்யுட்கு இக்குற்றம் உண்டாயினும் கொள்ளார் என மறுக்க.

146 - 7. தூவல் கலித்த புது முகை ஊன் செத்து அறியாது எடுத்த புல் புறம் சேவல் - மழையாலே செருக்கி வளர்ந்த புதிய முகையைத் தசையாகக் கருதி முகையென்று அறியாதே எடுத்த புற்கென்ற முதுகினை உடைய பருந்து,

148. ஊன் அன்மையின் உண்ணாது உகுத்தென - தசை அல்லாதபடியாலே தின்னாமல் எவற்றையும் சிந்திப் போகட்டதாக,

149 - 50. நெருப்பின் அன்ன பல் இதழ் தா அய் வெறி களம் கடுக்கும் வியல் அறை தோறும் - நெருப்பினை ஒத்த பல இதழ்கள் பரந்து வெறியாடுகின்ற களத்தை ஒக்கும் அகன்ற பாறைகள் தோறும்,

151. மணம் இல் கமழும் மா மலை சாரல் - மணம் செய்த மனை போல மணக்கும் பெரிய மலைப்பக்கத்தில் சிறுகுடி (156) என்க.

152. தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் [1]வட்டியர் - தேனினை உடையராய்க் கிழங்கினை உடையராய்த் தசை நிறைந்த கடகத்தை உடையராய்,

153. சிறு கண் பன்றி பழுதுளி போக்கி - சிறிய கண்ணை உடைய பன்றியிற் பழுதானவற்றைப் போக்கி அதன் தசையையும்,
[2] பழுதுளி: உளி, பகுதிப் பொருள் விகுதி.

154 - 5. [பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத், தூவொடு மலிந்த காய கானவர்;] தூவொடு மலிந்த பொருது தொலை யானை கோடு சீர் ஆக காய கானவர் – மற்றுள்ள தசைகளோடே நிறைந்த வட்டிகளையும் தம்மில் பொருது பட்ட யானையினுடைய கொம்புகள் காவுமரமாகக் காவிக் கொண்டுவந்த கானவருடைய,

156 - 7. செழு பல் யாணர் சிறுகுடி படினே இரு பெரு ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர் - வளவிய பல புதுவருவாயினை உடைய

செய்தாரெனக் கூறுபவாகலின் அவையிற்றை எவ்வாறு கோடுமெனின், அவைகள்தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் வருதலின் குற்றம்ஆகா; அகத்தியனாரால் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை வேறு ஆனந்தவோத்தென்பது ஒன்று செய்தாராயின் அகத்தியமும் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யும் குற்றம் வேறுபடாவென்பது"(தொல். உவம. சூ.37, பேர்.)

[1] வட்டி, கடகம் - பனையகணியால் செய்த பெரிய பெட்டி; "முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த, வகன்பெரு வட்டி" (ஐங். 47 : 1 - 2)

[2] 'முறையுளி: உளி, பகுதிப்பொருள் விகுதி' (பெரும்பாண். 462, ந.)

சிறிய ஊரிலே தங்கின் கரிய பெரிய சுற்றத்தோடே அவ்வுணவுகளை மிகவும் பெறுகுவிர்;

158. [அன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கி :] அசைஇ அன்று அல் சேர்ந்து அவண் அல்கி - அவற்றைப் பெற்று இளைப்பாறி அற்றை நாள் இராப்பொழுதும் அவர்களுடனே பொருந்தி அவ்விடத்தே தங்கி,

159 – 60. கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து சேந்த செயலை செப்பம் போகி - கன்றின நெருப்புப் போன்ற ஒள்ளிய பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடே சூடிச் சிவந்த அசோக மரத்தை உடைய செவ்விய வழியைப் போய்,

161 - 2. அலங்கு கழை நரலும் [1]ஆரி படுகர் சிலம்பு அடைந்திருந்த [2]பாக்கம் எய்தி - அசைகின்ற மூங்கில் ஒலிக்கும் அரிதாய் இழியும் வழிகளை உடைய சிலம்பைச் சேர்ந்திருந்த சீறூர்களைச் சேர்ந்து,

163 - 4. நோனா செருவின் வலம் படு நோன் தாள் மானம் விறல் [3]வேள் வயிரியம் எனினே - பகைவரைப் பொறுமல் பொரும் போரினையும் வெற்றி உண்டாகும் வலிய முயற்சியினையும் மானத்தையும் வெற்றியையும் உடைய நன்னனுடைய கூத்தரேம் என்று கூறுவீராயின்,

165. நும் இல் போல நில்லாது புக்கு – நும்முடைய மனை போல வாசலில் நில்லாதே உள்ளே சென்று,

166. கிழவிர் போல கேளாது கெழீஇ – முன்பே கிழமையுடையீர்போலே அவரைக் கேளாதே உறவு கொள்ளுகையினாலே,

167. சேண் புலம்பு அகல இனிய கூறி - சேணிடை வந்த நுமது வருத்தம் திரும்படி இனிய மொழிகள் அவர் கூறி,

168. [பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு :] பொழிந்த நெய்க்கண் பருஉ [4]குறை வேவையொடு - மிகச் சொரிந்த நெய்யிடத்தே பருத்த தசை கிடந்து வெந்த பொரியலோடே,

169. குரூஉ கண் இறடி பொம்மல் பெறுகுவிர் - நிறவிய வடிவினை உடைய தினைச்சோற்றைப் பெறுகுவிர்;

170 - 88. [ஏறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு, வேய்ப் பெயல் விளையுட் டேக்கட் டேறல், குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப், பழஞ்செருக் குற்றநும் மனந்த றீர, அருவி தந்த பழஞ் சிதை வெண்காழ், வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை, முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை, பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ, வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின், இன்புளிக் கலந்து மாமோ ராகக், கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து, வழையமை சாரல் கமழத் துழைஇ, நறுமல ரணிந்த நாறிரு முச்சிக், குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி, அகமலி

[1] ஆரி - அருமையை உடையது. [2]பாக்கம் - பக்கத்தில் உள்ளது.
[3] வேள் ; மலைபடு. 94, ந. [4]குறை - குறைக்கப்பட்டது.

புவகை யார்வமொ டளைஇ, மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர், செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய, பரிசின் மறப்ப நீடலு முரியிர், அனைய தன்றவன் மலைமிசை நாடே :]

அவன் மலை மிசை நாடு அனையது அன்று (188) - அந்நன்னனுடைய மலையினது உச்சியில் நாடு யான் முற்கூறிய தன்மைத் தன்று; மிகவும் சிறப்புடைத்து; ஆண்டுப் பெறுவனவற்றைக் கேட்பீராக;

பிணவு நாய் முடுக்கிய தடியொடு (177) வரு விசை தவிர்த்த கடமான் கொழு குறை (175) முளவுமா தொலைச்சிய பைந்நிணம் பிளவை (176) விரைஇ (177) - பெண்ணாகிய நாய் ஓடிக் கடித்த உடும்பின் தடிகளோடே ஓடி வருகின்ற விசையைக் கெடுத்துக் கொன்ற கடமானின் கொழுவிய தசையையும் எய்ப்பன்றியைக் கொன்ற பசுத்த நிணத்தை உடைய பிளக்கப்பட்ட தசைகளையும் கலந்து,

வேய் பெயல் விளையுள் தே கள் தேறல் (171) குறைவு இன்று பருகி (172) - மூங்கிற் குழாய்க்குள்ளே பெய்தலை உடைய முற்றிய தேனால் செய்த கட்டெளிவைக் குறைவின்றாக நிரம்ப உண்டு,

நறவு மகிழ்ந்து (172) - பின்னர் [1]நெல்லால் சமைத்த கள்ளை உண்டு மகிழ்ந்து,

முற்படக் கூறிய தசைகளைத் தின்று இடையே தேறலைப் பருகிப் பின் நறவு மகிழ்ந்தென்க.

வைகறை (172) பழ செருக்கு உற்ற நும் அனந்தல் தீர (173)- விடியற்காலத்துக் கள் உண்டு மகிழ்ச்சியுற்ற நும்முடைய மதம் திரும்படி,

வைகறை அனந்தல் என்க.

அருவி தந்த பழம் (174) ஊழ்த்து (180) சிதை வெள் காழ் (174) மா (179) - நீர் கொண்டு வந்த பலாப் பழம் செவ்வியழிந்து உதிர்ந்த வெள்ளிய விதையின் மாவையும்,

வெள் புடை கொண்ட துய் தலை பழனின் (178) இன் புளி (179) உலை (180) மோர் ஆக கலந்து (179) - வெள்ளிய புறத்தைக் கொண்ட ஆரத்தை இடத்தே உடைய புளியம் பழத்தின் இனிய புளிப்பையும் உலையாக வார்த்த மோருக்கு அளவாகக் கலந்து,

கழை வளர் நெல்லின் அரி (180) வழை அமை சாரல் கமழ துழைஇ (181) ஆக்கிய (183)-மூங்கிலிலே நின்று முற்றிய நெல்லின் அரிசியைச் சுரபுன்னை நெருங்கிய மலைச்சாரலெல்லாம் நாறும்படியாகத் துழாவி ஆக்கிய,

வால் அவிழ் வல்சி (183) - வெள்ளிய சோறாகிய உணவை,

நறு மலர் அணிந்த நாறு இரு முச்சி (182) குறமகள் (183) - நறிய மலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர் முடியினை உடைய குறச்சாதியின் மகள் ஆக்கியவென்க.

---

[1] நெல்லால் சமைத்த கள் : பட்டினப். 93, உரை, அடிக்.

கள் உண்ட பின்பு அனந்தல் தீரச் சோற்றைப் பெறுகுவிர் என்க.

அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ (184) - நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியை உடையராய் விருந்தினரைப் பெற்றேம் என்னும் ஆசை யோடே நெஞ்சு கலந்து,

[1]மக முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர் (184) - தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுக்கையினாலே மனைகள் தோறும் பெறுகுவிர்;

அண்ணன், அம்மான் என்றாற் போல்வன முறை.

ஏறி தரூஉம் இலங்கும் மலை தாரமொடு (170) - தாங்கள் உச்சி மலையிலே ஏறிக் கொண்டு வரும் விளங்குகின்ற மலையிற் பண்டங் களோடே,

அவை சந்தனம், அகில், பொன், மணி முதலியன.

தடுப்ப மனைதொறும் தாரத்தோடே வல்சியைப் பெறுகுவிர் என்க.

செரு செய் முன்பின் குருசில் முன்னிய (186) பரிசில் மறப்ப நீடலும் உரியிர் (187) - ஆண்டுப் பெற்றவற்றாலே போரைச் செய் கின்ற வலிமையை உடைய நன்னனிடத்துப் பெறக் கருதிய பரிசிலை மறக்கும்படி நீட்டித்திருத்தலும் உரியிர்;

189 - 91. நிரை இதழ் குவளை கடி வீ தொடினும் வரை அர மகளிர் இருக்கை காணினும் உயிர் செல வெம்பி பனித்தலும் உரியிர் - நிரைத்த இதழை உடைய குவளையில், [2]தெய்வம் விரும்பு தலின் கடியவாகிய பூக்களைக் கிட்டினும் ஆண்டை வரையர மகளி ருடைய இருப்பைக் காணினும் உயிர் போம்படி வெதும்பி நடுங்கு தலும் உரியிர்; ஆகையினாலே பலநாள் நில்லாது நிலநாடு படர்மின் (192) என வினை முடிக்க.

இத்துணையும் [3]அசையுநற் புலமும் வல்சியும் சேரக் கூறினார்.

192. ['பலநா ணில்லாது நிலநாடு படர்மின்:]

193 - 5. [[5]வினைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப், புழைதொறு

---

[1] "மகமுறை தடுப்ப.........தான் உள்ளேயிருந்து தன் பிள்ளை களைக்கொண்டு நும்மை அடைவே எல்லாரையும் போகாது விலக்கு கையினாலே; இனி, பிள்ளைகளை உபசரிக்குமாறு போல உபசரித்து விலக்க என்றுமாம்" (சிறுபாண். 192, ந.)

[2] "தான் விரும்புதலின் சுரும்பினமும் மொய்யாத......செங்காந் தள்" (முருகு. 43 – 4, ந.) [3]மலைபடு. 67 - 8.

[4] இதற்கு உரை கிடைக்கவில்லை; பலவாகிய நாட்கள் தாழ்த்து நில்லாமல் நிலத்திலுள்ள நாட்டு வழியே சென்மினென்க. நிலனெடு என்ற பாடத்திற்குப் பூமி வழியே என்க.

[5] "சிறுகட் பன்றி, ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்கு பொறி, நூழை நுழையும் பொழுதில்" (நற். 98 : 2 - 4)

மாட்டிய விருங்க லரும்பொறி, உடைய வாறே:] ஆறே கேழல் விளை புனம் கிழத்தலின் அஞ்சி புழைதொறும் மாட்டிய இரு கல் அரு பொறி உடைய - வழிகள், பன்றி முற்றின திணைப்புனத்தை [1]நொக்குகையினாலே இதற்கு அஞ்சிச் சில்வழிகடோறும் [2]கொளுத்தி வைத்த பெரிய கற்பொறிகளை உடைய; ஆகையினாலே,

195 - 6. [நள்ளிரு ளலரி, விரிந்த விடியல் வைகினிர் கழிமின்:] [3]நள் இருள் வைகினிர் அலரி விரிந்த விடியல் கழிமின் – செறிந்த இருட்காலத்தே தங்கினிராய் ஞாயிற்றின் கதிர் விரிந்த விடியற் பொழுதிலே போவீர்;

197. நளிந்து பலர் வழங்கா செப்பம் துணியின் – செறிந்து பலரும் போகாத வழியைப் போகத் துணிவீராயின், அவ்விடம்,

198 - 9. [முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற், கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே:] [4]முரம்பு கண் உடைந்த பரல் அவல் போழ்வில் பாம்பு கரந்து ஒடுங்கும் பயம்பும் உளவே - மேட்டு நிலம் தன்னிடத்திலே விண்ட பரலையுடைய பள்ள நிலத்திற் பிளப்பிலே பாம்பு மறைந்து கிடக்கும் குழிகளும் உள;

உம்மையால் புலி முதலியன உள்ள குழிகளும் கொள்க. மார் : அசை.

200. குறிக்கொண்டு மரம் கொட்டி நோக்கி-அப்பயம்பை மனத்தாலே குறித்தல் கொண்டு விலங்கிற்கு மரங்களிலே ஏறிக் கொட்டிப் பார்த்து,

201. செறி தொடி விறலியர் கைதொழூஉ பழிச்ச - செறிந்த வளையினையுடைய விறலியர் அப்பாம்பு மனம் மகிழும்படி கையால் தொழுது வாழ்த்த,

202. [வறிதுநெறி யொரீஇ வலஞ்செயாக் கழிமின்:] நெறி வறிது ஒரீஇ வலம் செயா கழிமின் - விலங்கு கிடக்கும் வழியைச் சிறிது அகலப் போய் வலப்பக்கத்து வழியை நுமக்கு வழியாகச் செய்துகொண்டு போவீராக;

வலம்: ஆகு பெயர்.

203. [புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர்:] புனிறு போகிய புனம் சூழ் குறவர் புலந்து - ஈன்றணிமை தீர்ந்து முற்றின திணைப் புனத்தைக் காத்தற்குச் சூழ்ந்த குறவர் திணை அழிகின்றதற்கு வெறுத்து,

புலர்ந்தென்பது பாடமாயின், முற்றி யென்க.

---

[1] நொக்குகை - உண்டு குறையச் செய்கை.

[2] கொளுத்தி - பொருத்தி.

[3] நெடுநல். 186, உரை, அடிக்குறிப்.

[4] முரம்பு - பருக்கைக் கல்லால் ஆகிய மேட்டு நிலம்.

204. உயர் நிலை இதணம் ஏறி கை புடையூஉ - உயர்ந்த நிலையினையுடைய பரணிலே ஏறிக் கையைக் கொட்டி,

205. அகல் மலை இறும்பில் துவன்றிய யானை - அகன்ற மலையிற் குறுங்காட்டிடத்தே நிறைந்த யானைகளினுடைய,

206. பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடு கல் - பகற் பொழுதே நிற்கின்ற நிலையைக் கெடுக்கும் [1]கவண் காலுகின்ற கடிய கற்கள்,

பகைநிலை தளர்க்குமென்று பாடமாயின், பகைத்த நிலையென்க.

207 - 10. [இருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக், கருவிர லூகம் பார்ப்போ டிரிய, உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன, வரும் விசை தவிராது:]

உயிர் செகு மரபின் கூற்றத்து அன்ன-உயிர்களைப் போக்கும் முறைமையாலே கூற்றத்தை ஒக்கும்; அவைதாம்,

கரு விரல் ஊகம் பார்ப்போடு கல்லென இரிய - கரிய விரலை உடைய குரங்குகள் பார்ப்போடே கல்லென்னும் ஓசைபடக் கெடும் படியாக,

இரு வெதிர் ஈர்ங்கழை தத்தி விசை தவிராது வரும் - பெரிய மூங்கிலினது பசிய கோலைக் கடந்து வருகின்ற விசை மாறாது வரும்;

மரம் மறையா கழிமின் - அதற்கு மரங்களிலே ஒதுங்கி நின்று போவீராக;

குறவர் (203) ஏறிக் கைபுடையூஉத் (204) தளர்க்கும் கல் (206) கூற்றத்தன்ன (209); அவை இரியத் (208) தத்தி (207) விசை தவி ராது வரும்; அதற்கு மரமறையாக் கழிமின் (210) என்க.

211 - 2. உரவு களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின் - வலிய யானையை விழுங்கும் முதலைகள் தங்கப்பட்டு இராக்காலத்தை ஒத்த இருள் செறியும் [2]பிளைகளையும்,

213. குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர் - குமிழிகள் சுழன்று வரும் ஆழ்ந்த நீர் அறுத மடுக்களை உடைய முடுக்கரையும் உடைய,

முடுக்கர் - நீர் குத்தின இடங்கள். முடுக்கரையும் உடைய யாறு (214).

214. அகழ் இழிந்தன்ன கான் யாறு நடவை - ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியவாகையினாலே அகழிலே இழிந்தாற்போன்ற காட்டாற்று வழி,

215. வழூஉம் மருங்கு உடைய-காலோடும் இடங்களை உடைய; அவ்விடத்திற்கு.

---

[1] "கல்கால் கவணையென்றது கற்களைக் கான்றாற்போல இடை யறுமல் விடும் கவணென்றவாறு" (பதிற். 88 : 18, உரை)

[2] பிளை - காவற்காடு; இஃது இளையெனவும் வழங்கும்.

215 - 8. [வழாஅ லோம்பிப், பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித், துருவி னன்ன புன்றலை மகாரோ, டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்:]

துருவின் அன்ன [1]புன்தலை மகாரோடு - செம்மறி யாட்டினை யொத்த புற்கென்ற தலையினை உடைய பிள்ளைகளோடே,

வலந்த பரூஉ கொடி மதலை பற்றி வழாஅல் ஓம்பி - மரங்களில் சுற்றிக் கிடக்கின்ற பரிய கொடியாகிய பெரிய பற்றுக்கோட்டைப் பிடித்துக் காலோடுதலைப் பரிகரித்து,

ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின் - ஒருவிரை ஒருவிர் பாது காத்துப் போவீராக;

219. அழுந்துபட்டு அலமரும் புழகு அமல் சாரல் - கிழங்கு தாழ வீழ்ந்து அசையும் மலையெருக்கு நெருங்கின பக்க மலையில்,

220 – 21. [விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா, வழும்பு கண் புதைத்த நுண்ணீர்ப் பாசி:] விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா கண் புதைத்த நுண் நீர் பாசி வழும்பு - வீழ்ந் தோரை மறைக்கும் ஆழத்தை உடைய குளங்களுக்கு அருகாக இடம் மறைதற்குக் காரணமாகிய நுண்ணிய நீர்மையை உடைய பாசி யினது குற்றம்,

[2] "வழும்பறுக்க கில்லாவாந் தேரை - வழும்பில்சீர்" என்றார் பிறரும்.

222. அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய - அடி ஊன்றி யிட்ட நிலையை ஒடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கு அருமையையும் உடைய; அதற்குப் பரிகாரமாக,

223 - 4. முழு நெறி அணங்கிய நுண் கோல் வேரலோடு எருவை மெல் கோல் கொண்டனிர் கழிமின் - வழி முழுதும் பின்னி வளர்ந்த நுண்ணிய கோல்களை உடைய சிறு மூங்கிலோடே வேழத் தினது மெல்லிய கோல்களையும் பற்றுக் கோடாகப் பிடித்துப் போவீர்;

இத்துணையும் ஆற்றினது திமையின் அளவு (67) கூறினர்.

225 - 8. [உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய, மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத், தாரொடு பொலிந்த வினைநவில் யானைச், சூழியிற் பொலிந்த:]

புகர் முகம் புதைய சூழியின் பொலிந்த உயர் நிலை மா கல் வினை நவில் யானை - புகரை உடைய முகம் மறையும்படி முகபடாத்தாற் பொலிவு பெற்ற உயர்ந்த நிலையினை உடைய பெருமையை உடைய மலைபோலும் போர்த் தொழிலிலே பயின்ற யானையினையும்,

---

[1] 'புன்புறம் - புற்கென்ற புறம்' (பெரும்பாண், 376, ந.); 'புல் லென் சடை - புற்கென்ற சடை' (புறநா. 252 : 2, உரை)

[2] நாலடி. 352.

மாரியின்[1] இகுதரு வில் [2]உமிழ் கடு கணை - மழைபோலத் தாழ்ந்து விழும் வில்லுக்கான்ற கடிய அம்பினையும் உடைய,

தாரொடு பொலிந்த மூத்த புரிசை (229) - தூசிப் படையோடே பொலிவுபெற்ற பழைய மதில்,

மதில், ஆகுபெயராய்த் திருப்பதியை உணர்த்திற்று. என்றது காரியுண்டிக் கடவுளுடைய படைமிகுதி கூறிற்று; அன்றிப் பகைப் புலத்தை அழித்தற்கும் அந்நிலத்தைக் காத்தற்கும் நன்னன் வைத்த படையுமாம்.

228 - 9. [சுடர்ப்பூ விலஞ்சி, ஓரியாற் றியவின் மூத்த புரிசை :] சுடர் பூ இலஞ்சி யாறு ஓர் இயவின் மூத்த புரிசை-ஒளியை உடைய பூக்களை உடைய மடுவினை உடைய யாற்றுக் கரையில் ஒரு வழியினையுடைய ஊர்,

'ஓராற்றியவு' பாடமாயின் ஒருப்பட்ட வழியென்க.

இனி அம்பையுடைய தூசிப் படையோடு பொலிந்த யானை யென்று யானைக்கு அடையாக்கி, அவ்வியானையினுடைய பூக்களெழு தின முகபடாம் போலே உயர்நிலை மாக்கற் புகர் முகம் புதையப் பொலிந்த சுடர்ப் பூவை உடைய புரிசை என்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம் போலே பொலிந்த சுடர்ப்பூவை உடைய புரிசை என்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம் போலே பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சியை உடைய உயர்நிலை மாக்கல்லை உடைய புரிசை என்பாரும் உளர். அவர் கனையிடத்து மேலெழுந்த குவளை முதலிய வற்றின் அரும்புகள் தலை சாய்ந்து கற்புதையக் கிடந்ததற்கு யானை யின் மத்தகத்துப் புகரை உவமை என்று கொள்வர்.

230. [பராவரு மரபிற் கடவுட் காணின்:] புரிசை (229) பராவு அரு மரபின் கடவுள் காணின் - கோயிலிற் பராவுதற்கரிய முறை மையினையுடைய கடவுளைக் கண்டீராயின்,

231. [தொழாநிர் கழியி னல்லது:] நீர் தொழா கழியின் அல்லது - நீர் வணங்கிப்போம் அத்தனையல்லது,

நீரென்பது குறுகி நின்றது. இனித் தொழா நிர் என்பது [3]மறை யன்றித் தொழுதென்று பொருள் தருமேனும் உணர்க.

231 - 2. வறிது நும் இயம் தொடுதல் ஓம்புமின் - சிறிது நும் முடைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக; அதற்குக் காரணம் என்னையெனின்,

---

[1] இகுத்தல் - சொரிதல்; "இகுத்த கண்ணீர் - சொரியப்பட்ட கண்ணீர்" (புறநா. 143 : 13, உரை)

[2] "உமிழ்தல் - புறப்பட விடுதல்" என்பர் தக்கயாகப் பரணி உரையாசிரியர்; 110, 602.

[3] மறை - எதிர்மறை.

232 – 3. [மயங்குதுளி, மாரி தலையுமவன் மல்லல் வெற்பே:] அவன் மல்லல் வெற்பு மயங்கு துளி மாரி தலையும் – அவனது வளவிய நவிரம் என்னும் மலை மயங்கின துளியை உடைய மழையை இடைவிடாமல் பெய்யாநிற்கும்;

என்றதனால் பயன் : வாச்சியங்களும் நனைந்து நுமக்கும் போதல் அரிதென்பதாம்.

234 - 5. [அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக், கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்:]

[1]அலகை அன்ன வெள் வேர் பீலி மஞ்ஞை – பலகறையை ஒத்த வெள்ளிய [2] வேரினை உடைய பீலியை உடைய மயில்,

கட்சியில் கலவம் தளரினும் – அக்காட்டிடத்தே ஆடுதற்கு விரித்த கலாபத்தினது பாரத்தாலே ஆடி இளைத்து நிற்பினும்,

236 - 7. [கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன, நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும் :]

நெடு கழை கொம்பர் – நெடிய மூங்கிலின் கவடுகளிலே,

கடு பறை கோடியர் மகாஅர் அன்ன கடுவன் உகளினும் - கடிய பறையினை உடைய கூத்தருடைய பிள்ளைகளை ஒத்த கடுவன் பாயினும்,

238 - 9. [நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த, சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினும்;]

[3] நேர் கொள் நெடு வரை சூர் புகல் அடுக்கத்து - செவ்வையைத் தன்னிடத்தே கொண்ட நெடிய மலையில் தெய்வம் விரும்பின பக்க மலையிலே,

நேமியின் தொடுத்த பிரசம் காணினும் - தேருருள்போல் வைத்த தேன் இறாலைக் காணினும்,

240 - 41. [ஞெரேரெனெ நோக்க லோம்புமி னுரித்தன்று, நிரை செலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர் :]

ஞெரேரென நோக்கல் உரித்தன்று - கடுகப் பார்த்தல் நுமக்குரிய தொழிலன்று; அதற்குக் காரணம் என்னையெனின்,

மெல் அடி நிரை செலல் நெறி மாறுபடுகுவிர் - மெல்லிய அடியாலே நிரைத்துச் செல்லுதலை உடைய வழி தப்புவிர்;

ஓம்புமின் - ஆதலால் அங்ஙனம் நோக்குதலைப் பாதுகாப்பீர்;

இதுவும் ஆற்றினது அருமை (67) கூறிற்று.

---

[1] அலகு, பலகறை - சோழி; பறையலகென்பது பலகறையென மருவிற்றென்பர்; சீவக. 2773, ந.; "பறையலகே, யைதாம் பலகறையென் றுனவே" (ஆனந்த. வண்டு. 415)

[2]வேர் - அடிக் குருத்து; இது முருந்தென வழங்கும்.

[3]நேர்கோள் நெடுவரை - செங்குத்தான மலை.

242. வரை சேர் வகுந்தின் கானத்து படினே - மலையைச் சேர்ந்த வழியினை உடைய காட்டிடத்தே செல்லின்,

243 - 9. [கழுதிற் சேணோ னேவொடு போகி, இழுதி னன்ன வானிணஞ் செருக்கி, சிறப்புண் கூர்ந்த சிலந்தின் மருப்பின், நெறிக் கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தின், இருடுணிந் தன்ன வேனங் காணின், முளிகழை யிழைந்த காடுபடு தீயின், நளிபுகை கமழா திரு யினிர் மிசைந்து:]

கழுதில் சேணோன் (243) சிறம் புண் கூர்ந்த (245) ஏவொடு போகி (243) நெறி கெட கிடந்த (246) ஏனம் (247) - பரணின் மேல் இருந்த யானை முதலியவற்றிற்கு எட்டாதவன் எய்த மருமத்திற் புண் மிகுதற்குக் காரணமான அம்போடே போகி நெறிகெடக் கிடந்த பன்றி,

சிலம் தின் மருப்பின் (245) இழுதின் அன்ன வால் சிணம் செருக்கி (244) இரு பிணர் எருத்தின் (246) இருள் துணிந்தன்ன ஏனம் (247) - கிழங்குகளை அகழ்ந்து தின்கையினாலே மண் தின்று தேய்ந்த கொம்பினையும் நெய்விழுதை ஒத்த வெள்ளிய சிணம் செருக்கும்படி கரிய சருச்சரையை உடைத்தாகிய கழுத்தினையும் உடைய இருள் அற்றுக் கிடந்தாற்போன்ற ஏனம்,

செருக்க எனத் திரிக்க.

ஏனம் காணின் (247) முளி கழை இழைந்த காடு படு தீயின் (248) நளி புகை கமழாது [1]இருயினிர் மிசைந்து (249) - பன்றியைக் கண்டீராயின் உலர்ந்த மூங்கில் தம்மில் இழைந்ததனாற் பிறந்த காடெங்கும் உண்டாகிய தீயினாலே செறிந்த புகை நாறுமல் [2]வக்கி மயிர் போகச் சீவித் தின்று,

250 - 51. [துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க், குவளை யம் பைஞ்சுனை யசைவிடப் பருகி:] குவளை அம் பைஞ்சுனை துகள் அற துணிந்த மணிமருள் தெள் நீர் அசைவு விட பருகி - குவளையால் அழகிய பசிய நிறத்தவாகிய சுனையில் கலக்கமறத் தெளிந்த [3]பளிங் கென்று மருளும் [4]தெளிந்த நீரை வழியின் இளைப்புத் தீரும்படி குடித்து,

அசைவு : விகாரம்.

252. [மிகுத்துப் பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர்:] பரூஉ கண் பதம் மிகுத்து கொண்ட பொதியினிர் - பருத்த இடத்தை உடைய தசையாகிய உணவை முழுதும் தின்னுமல்

---

[1] இருவுதல் - நெருப்பில் வாட்டி மயிர் போகச் சீவுதல்.

[2] வக்குதல் - வாட்டுதல்; "வன்பெரும் பன்றி தன்னை யெரி யினில் வக்கி", "கொழுப்பரிந்து, வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து" (பெரிய. கண்ணப்ப. 117, 145)

[3] குறிஞ்சிப். 57, அடிக்குறிப்பு.

[4] துணிந்த - தெளிந்த; "துணிநீர் - தெளிந்த நீர்" (மதுரைக். 283, ந.)

மிகுத்து வைத்துக் கட்டிக்கொண்ட பொதியின் சுமையினை உடையிராய்,

253. புள் கை போகிய [1]புன்தலை மகாரோடு – வளை கையினின்றும் போதற்குக் காரணமான சிவந்த தலையினை உடைய பிள்ளைகளோடே,

[2] பிள்ளையைப் பெற்றால் வளையிடாராகலின், வளை போதற்குப் பிள்ளைகள் காரணமாயினர்.

254 - 5. [அற்கிடை கழிதலோம்பி யாற்றநும், இல்புக் கன்ன கல்லளை வதிமின் :] இடை கழிதல் ஓம்பி ஆற்ற நும் இல் புக்கன்ன கல் அளை அற்கு வதிமின் – அவ்விடத்துப் போதலைப் பரிகரித்து வழியிடத்தனவாகிய நும் இல்லிலே புக்கால் ஒத்த கல் முழைஞ்சுகளிலே இராக்காலத்துத் தங்குவீர்;

இஃது அசையுநற் புலமும் (67) வல்சியும் (68) சேரக் கூறிற்று.

கானத்துப்படின் (242) மிசைந்து (249) பருகிப் (251) பொதியினிராய் (252) மகாரோடே (253) கழிதலோம்பி அற்கு (254) வதிமின் (255) என்க.

256. அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி - இராக் காலத்திற்கு எல்லாரும் கூடித் தங்கி இளைப்பாறி,

257. வான் [3]கண் விரிந்த விடியல் ஏற்றெழுந்து - வானிடத்தே ஞாயிற்றின் கதிர் விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்து எழுந்து,

258. கான் அகப்பட்ட செ நெறி கொண்மின் - காட்டிடத்தே கிடந்த செவ்விய நெறியைப் போவீராக;

259 - 65. [கயங்கண் டன்ன வகன்பை யங்கண், மைந்துமலி சினத்த களிறுமத னழிக்கும், துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி, இகந்துசேட் கமழும் பூவு முண்டோர், மறந்தமை கல்லாப் பழனுமூழிறந்து, பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னர், இருங்கால் வீயும் பெருமரக் குழாமும் :]

அகல் பை அம் கண் (259) மைந்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும் (260) [4] துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலங்கி (261) -

---

[1]பட்டினப். 90, ந. [2] (பி - ம்) 'பிள்ளைப் பேற்றால்'

[3] உலகிற்குக் கண்ணாதலின் சூரியனைக் கண்ணென்றார்; "வான் கண் விழியா" (சிலப். 10 : 1) என்றவிடத்து வான்கணென்பதற்கு ஆதித்தனென்று அரும்பதவுரையாசிரியரும், உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தனென்று அடியார்க்கு நல்லாரும் எழுதியிருப்பனவும், "எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்குங் கண்ணுவா னிவனே யன்றோ" (வி. பா. அருச்சுனன் றவநிலை. 43) என்பதும் இங்கே அறிதற்குரியன.

[4] துஞ்சுதல் தூங்குதலாதலின் அஃது இங்கே விழுந்து கிடத்தலாயிற்று.

அகன்ற படத்தினையும் அழகிய கண்ணினையும் உடைய வலிமிகுகின்ற சினத்தவாகிய யானைவலியைக் கெடுத்து விழுங்கும் விழுந்து கிடக்கின்ற பெரு மரங்களை ஒக்கும் பெரும் பாம்பு கிடக்கின்ற வழியை விலங்கி,

பெரும் பயம் கழியினும் (264) ஊழ் இறந்து (263) இகந்து சேண் கமழும் பூவும் உண்டோர் (262) மறந்து அமைகல்லா பழனும் (263) மாந்தர் துன்னார் (264) - அவற்றால் கொள்ளும் பெரிய பயன் கொள்ளாமல் போகிலும் முற்காலம் அடிப்பட்டுப் போந்த முறைமையைக் கடந்து தாம் நிற்கின்ற இடத்தைக் கடந்து தூரிய நிலத்தே சென்று நாறும் பூவையும் நுகர்ந்தவர் மறந்து உயிர் வாழ்தலாற்றாத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் அணுகாராகையினாலே,

ஊழிறந்து துன்னாரென்க.

இரு கால் வீயும் (265) பழனும் (263) கயம் கண்டன்ன (259) பெரு மரம் குழாமும் (265) - நீளும் காம்பை உடைய அப் பூக்களையும் பழத்தையும் குளத்தைக் கண்டாற் போலும் குளிர்ச்சியை உடைய பெரிய மரக் குழாத்தினையும்,

266 - 7. [இடனும் வலனு நினையினிர் நோக்கிக், குறியறிந் தவையவை குறுகாது கழிமின் :] நினையினிர் குறி அறிந்து இடனும் வலனும் நோக்கி அவை அவை குறுகாது கழிமின் - யான் கூறியதனை நினைத்து அவற்றின் குறிகளை அறிந்து இடத்தினும் வலத்தினும் பார்த்து அவையிற்றை அவையிற்றை அணுகாமல் போவீர் ;

விலங்கி நோக்கிக் குறுகாது கழிமின் என்க.

இது சோலை (69) கூறிற்று.

268 - 9. கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து கூடு இயத்து அன்ன குரல் புணர் புள்ளின் - கொம்புகள் பலவும் முற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டதாகிய [1]ஆலமரத்திடத்தே கூடின பல வாச்சியங்களை ஒத்த பல ஓசையும் கூடின பறவைத் திரளை உடைய,

பறவைத் திரளை உடைய நாடுகாண் நனந்தலை என்க.

270. [2]நாடு காண் நன தலை மென் மெல அகன்மின் - நாடுகளை யெல்லாம் காணலா யிருக்கின்ற அகன்ற இடத்தை உடைய மலையை மெல்ல மெல்லப் போவீர் ;

---

[1]மதுரைக். 543 – 4, அடிக்குறிப்பு. "இவ்வோசைகளின் வேறுபாடுகளை நோக்கிப் பல்வேறு புள்ளோசைகளை உவமம் கூறினார்" (மதுரைக். 536 - 44, ந.)

[2]"நாடுகா ணெடுவரை யென்றது தன்மேல் ஏறி நாட்டைக் கண்டு இன்புறுதற்கு ஏதுவாகிய ஒக்கமுடைய மலை யென்றவாறு" (பதிற். 85 : 7); திருக்குறுங்குடியின் பக்கத்துள்ள ஒரு மலையின் உச்சி மிகவும் உயர்ந்து நாடுகாணி என இன்றும் வழங்குகின்றது.

நனந்தலை : ஆகுபெயர்.

271. மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின் - பெரிய நிழல் உண்டான மரம் நெருங்கின குறுங்காட்டாலே,

272. [ஞாயிறு தெரூஅ மாக நனந்தலை :] மாகம் ஞாயிறு தெரூஅ நன தலை - ஆகாயத்தில் திரியும் ஞாயிற்றால் சுடப்படாத அகன்ற இடத்தை உடைய குன்றம் (275),

273 - 5. தேஎம் மருளும் அமையம் ஆயினும் [1]இரு வன் சிலையர் மா தேர்பு கொட்கும் குறவரும் மருளும் குன்றத்து படினே - திசை தெரியாமல் மயங்கும் இராக் காலமாகினும் முறியாத வலிய வில்லை உடையராய் விலங்கு தேர்ந்து நின்று சுழன்று திரியும் குற வரும் உட்பட மயங்கும் குன்றத்தே நீங்கள் செல்லின்,

276 - 7. [அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென, இயங்க லோம்பிநும் மியங்க டொடுமின் :] இயங்கல் ஓம்பி அகல் கண் பாறை துவன்றி கல்லென நும் இயங்கள் தொடுமின் - அவ் வழியைப் போதலைப் பரிகரித்து அகன்ற இடத்தை யுடைய பாறையிலே குவிந்து கல்லென்னும் ஓசைபட நும் முடைய வாச்சியங்களை வாசிப் பீராக;

278 - 9. பாடு இன் அருவி பயம் கெழு மீமிசை காடு காத்து உறையும் கானவர் உளரே - ஓசை இனிதாகிய அருவியின் பயன் பொருந்திய உச்சி மலையிலே காட்டைக் காத்திருக்கும் கானவர் பலரும் உளர்;

ஏகாரம் : ஈற்றசை.

280 - 81. நிலை துறை வழீஇய மதன் அழி மாக்கள் புனல் படு பூசலின் - நிலையாய்ப் போம் துறையைத் தப்பி ஆழத்திலே புக்க வலி யழிந்த மாக்கள் புனலிலே அழுந்துகின்ற வருத்தம் கண்டு விரைந்து எடுப்பாரைப் போல,

281 - 6. [விரைந்துவல் லெய்தி, உண்டற் கினிய பழனுங் கண்டோர், மலைதற் கினிய பூவுங் காட்டி, ஊறு நிரம்பிய வாறவர் முந்துற, நும்மி னெஞ்சத் தவலம் வீட, இம்மென் கடும்போ டினியி ராகுவிர் :]

நெஞ்சத்து அவலம் வீட விரைந்து வல் எய்தி - திசை மயக் கத்தால் கலங்கி அறிவழிந்த நெஞ்சில் கேடு போம்படி ஓடிக் கடுக வந்து சேர்ந்து,

உண்டற்கு இனிய பழனும் கண்டோர் மலைதற்கு இனிய பூவும் காட்டி - எல்லாரும் உண்டற்கு இனியவாகிய பழங்களையும் கண்டவர்கள் சூடுதற்கு இனியவாகிய பூக்களையும் நுமக்குக் காட்டி, நீர் அவற்றை நுகர்ந்த பின்பு.

---

[1]இரு வன் சிலையர் என்பதற்கு இருமீனைப் போன்று வளைந்த வலிய வில்லை உடையவர் எனப் பொருள் கோடலுமாம்; "சிலையு மான.........பச்சிறுப் பிறழும்" (பெரும்பாண். 269 - 70) என்னும் அடிகளையும் அவற்றின் அடிக்குறிப்பையும் பார்க்க.

அவர் ஊறு நிரம்பிய ஆறு முந்து உற - அக்கானவர் இடையூறு மிக்க வழியை நுமக்கு முற்படப் போகையினாலே,

நும்மின் [1]இம்மென் கடும்போடு இனியிர் ஆகுவிர் - நும் முடைய இம் மென்னும் ஓசையை உடைய சுற்றத்தோடே மனம் மகிழ்வீர்;

287. அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு - திசை மயக்கம் நாடி அறிவார் கூறிய திசையை உட்கொண்டு,

288 - 9. [குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர், நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்து :]

புதுவோர் நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து - புதிய மாந்தர் கண்ணால் நோக்கினும் தலை நடுக்கும் நோய் மிக்க பக்கமலை யிடத்து,

குறியவும் நெடியவும் ஊழ் இழிபு - குறியனவும் நெடியனவு மாகிய குவடுகளை முறைமைப்பட இழிந்து,

290. அலர் தாய்[2] வரி நிழல் அசையினிர் இருப்பின் - பூப் பரந்த பல வரிகளை உடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின்,

291. பல திறம் பெயர்பவை கேட்குவிர் - பல கூறு பாடுகளை உடையவாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர் ;

292. கலை தொடு பெரு பழம் புண் கூர்ந்து ஊறலின் - [3]முசுக் கலை தோண்டின பெரிய பலாப் பழம் புண்மிக்குத் தேன் ஊறுகை யினாலே,

293. மலை முழுதும் கமழும் மாதிரம் தோறும் - மலை முழுதும் அத்தேன் நாறும் திசைகள்தோறும்,

294 - 6. [அருவி நுகரும் வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும், தெரிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை :] வாங்குபு வருவிசை தவிராது இமிழ் கொண்ட அருவி நுகரும் வான் அர மகளிர் குடைதொறும் நும் இயம் போல் தெரி இன் இசை - உள்ள பண்டங்களை வாங்கிக் கொண்டு வருகின்ற விசை தவிராது ஒலித்தலைக் கொண்ட அருவியை ஆடும் தெய்வ மகளிர் அதனைக் கையால் குடையுந்தோறும் நும்முடைய வாச்சியங் களைப் போல் தாளந் தெரிகின்ற இனிய ஓசையும்,

297 – 9. [இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல், விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர், புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல் :]

---

[1]சுற்றத்தார் இசைப் புலவராதலால், இம்மென் கடும்பென்றார்.

[2]இடை யிடையே வெயிலும் கலந்திருத்தலின் தாய வரி நிழ லென்றார் ; வரி நிழலென்பதற்கு, செறியாத நிழலெனப் பொருள் கூறினர் முன்; சிறுபாண். 12, ந.

[3]முசு - குரங்கின் சாதியில் ஒன்று; கலை - அதன் ஆண்.

விலங்கல் மீமிசை பணவை கானவர் புலம் புக்கு உண்ணும் - மலையின்மேலிட்ட பரணிற் கானவர் தினைப்புனத்தைப் புகுந்து தின்னும்,

இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி [1]ஒருத்தல் புரி வளை பூசல் - விளங்குகின்ற ஏந்தின கொம்பை உடைய தன் இனத்தைப் பிரிந்த [2]யானைத் தலைவனைப் பிடித்தற்கு விரும்பின வளைத்தலை உடைய ஆரவாரமும்,

300 - 301. [சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளின், எய்தெற விழுக்கிய கானவ ரழுகை :] சேய் அளை பள்ளி எய் எஃகு உறு முள்ளின் தெற இழுக்கிய கானவர் அழுகை - நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன்றி தனது கூர்மை உறுகின்ற முள்ளால் எய்து கொல்லுகையினாலே பட்ட கானவர் அழுகின்ற அழுகையும்,

302 – 4. [கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின், நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென, அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல் :] கொழுநர் மார்பில் கொடுவரி பாய்ந்தென நெடு வசி [3]விழு புண் தணிமார் காப்பென அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல் - தம் கணவர் மார்பிலே புலி பாய்ந்ததாகப் பட்ட நெடிய பிளத்தலை உடைய சீரிய புண்ணை ஆற்றுதற்குக் காவலென்று கருதி அறல் வீற்றிருந்த மயிரினை உடைய கொடிச்சியர் பாடும் பாட்டால் எழுந்த ஓசையும்,

305 - 6. தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை மலைமார் இடூஉம் ஏமம் பூசல் - முதல் நாளிலே பூத்த பொன் போலும் கொத்தினை உடைய வேங்கைப் பூவைச் சூடுதற்கு மகளிர் புலி புலியென்று கூப்பிடும் ஏமத்தை உடைய ஆரவாரமும்,

வேங்கை வளைந்து பூவைக் கொடுத்தலின், அச்சம் தீர்த்த பூசல் என்றார்.

307. கன்று அரை பட்ட [4]கய தலை மட பிடி – கன்று வயிற்றிலே உண்டான மெல்லிய தலையினை உடைய மடப்பத்தை யுடைய பிடியை,

308. வலிக்கு வரம்பாகிய [5]கணவன் ஓம்பலின் - வலிக்கு

---

[1]ஒருத்தல் - யானைத் தலைவன் ; கலித். 46 : 3, ந.; அகநா. 78:4, உரை.

[2]தலைமை வாய்ந்த ஆண் யானையை யானைத் தலைவன் எனக் கூறுதல் மரபு ; "ஊதத், தலைவனே யொத்துப் பொலிந்தது சந்திர சைலம்" (கம்ப. வரைக் காட்சி. 7) ; ஏந்தலெனவும் கூறப்படும் ; "இருங்களிற் றினநிரை யேந்தல்" (குறுந். 180 : 2).

[3]நெடுநல். 172, உரை, அடிக்குறிப்பு.

[4]கய : மென்மையை உணர்த்தும் உரிச் சொல்; தொல். உரி. சூ. 24.

[5]கணவன் என்பது அஃறிணை ஆண்பாற் பொருளிலும் வழங்கும்; "மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவுப்பசி களைஇய" ... (நற். 103 : 7 - 8) ; "வங்காக் கடந்த செங்காற் பேடை, யெழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது" (குறுந். 151 : 1 - 2).

ஓர் எல்லையாகிய [1]களிறு [2]கவழம் தேடிக் கொடுத்துப் பாதுகாத்துப் போகையினாலே,

309. ஒள் கேழ் வய புலி பாய்ந்தென - அப்போக்கினைக் குறித்து ஒளித்திருந்து ஒள்ளிய நிறத்தை உடைய வலிய புலி பாய்ந்ததாக,

309 - 10. கிளையொடு நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல் - அப்பிடி தன் சுற்றத்தோடே நெடிய மலையிடத்தே கூப்பிடும் இடியோசை போலும் முழங்கும் குரலும்,

இடி உமிழ்ந்த ஓசையை ஆகுபெயரான் உமிழ் என்றார்.

311. கை கோள் மறந்த கரு விரல் மந்தி - பார்ப்பைத் தன் கையால் தழுவிக்கோடலை மறந்த கரிய விரலை உடைய மந்தி,

312. அரு விடர் வீழ்ந்த தன் கல்லா பார்ப்பிற்கு - எடுத்தற்கு அரிய ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திருந்த தன் குட்டிக்கு,

கல்லாமை – [3]தனக்குரிய தொழிலைக் கல்லாமை.

313 - 4. முறி மேய் யாக்கை கிளையொடு துவன்றி சிறுமை உற்ற களையா பூசல் - தளிரை மேய்ந்து வளர்ந்த வடிவினை உடைய சுற்றத்தோடே நெருங்கி நோய்மிக்க விலக்கப்படாத ஆரவாரமும்,

மந்தி பார்ப்பிற்குத் துவன்றிச் சிறுமையுற்ற பூசல் என்க.

315 - 6. கலை கை அற்ற காண்பு இன் நெடு வரை நிலை பெய்து இட்ட மால்பு நெறியாக - முசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சியினிய உயர்ந்த வரையிலே நிலைபேறு உண்டாகக் கூட்டி நட்ட [4]கண்ணேணியே வழியாகச் சென்று,

---

[1]களிறு பிடிக்குக் கவளம் தேடிக் கொடுத்தல்: ''கயந்தலை மடப் பிடி யுயங்குபசி களைஇயர், பெருங்களிறு தொலைத்த முடத்தா ளோமை'' (நற். 137: 6 - 7); ''பிடிபசி களைஇய பெருங்கை வேழம், மென்சினை யாஅம் பிளக்கும்'' (குறுந். 37: 2 - 3); ''யானை தன், கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந், தின்று வேனி னின்றுணை யார. முளிசினை யாஅத்துப் பொளிபிளந் தூட்ட'' (அகநா. 335: 4 - 7); ''கறுத்தமுலைச் சூற்பிடிக்குக் கார்யானை சந்தம், இறுத் துக்கை நீட்டுமீங் கோயே'', ''சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனிற் றோய்த்தியானை, மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப'' (ஈங்கோய். 23, 38); ''வரைசெய் மாக்களி றிளவெதிர் வளர்முளை யளை மிகு தேன்றோய்த்துப், பிரச வாரிதன் னிளம்பிடிக் கருள்செயும் பிருதி'' (பெரிய திருமொழி 1. 2. 5:)

[2]கவழம்: ''கவழக் களிப்பியன்மால் யானை'' (திணைமாலை. 42)

[3]தனக்குரிய தொழிலாவது தாயின் மார்பை இறுகப் பற்றுதல்.

[4]கண்ணேணியாவது கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச் செல் லும்படி அமைத்துள்ள மூங்கில்; உச்சியில் உள்ள தேனிறாலை

317. பெரு பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை - பெரிய பயன் உண்டாகத் [1]தேனித் திரட்டி வைத்த தேனை அழித்துக் கொண்ட கொள்ளையால் உண்டான ஆரவாரமும்,

318 - 9. [அருங்குறும் பெறிந்த கானவ ருவகை, திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென:]

திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென - திருந்தும் வேலினை உடைய நன்னனுக்குப் புதிதாகக் கொடுத்தற்கு [2]இவற்றில் கைக்கொண்ட பொருள்கள் அமையும் எனக் கருதிச் சென்று,

அரு குறும்பு எறிந்த கானவர் உவகை - அழித்தற்கு அரிய [3]குறும்புகளை அழித்த கானவர் மகிழ்ச்சியில் உண்டான ஆரவாரமும்,

320 - 22. நறவு நாள்செய்த குறவர் தம் பெண்டிரொடு மான் தோல் சிறுபறை கல்லென கறங்க வான் தோய் மீமிசை அயரும் [4]குரவை -[5]நறவை நாட்காலத்தே குடித்த குறவர் தம் பெண்டிரோடே கூடி மான்தோல் போர்த்த சிறுபறை கல்லென்னும் ஓசைபட ஒலிப்ப வானைத் தீண்டும் உச்சிமலையிலே ஆடும் குரவைக்கூத்தின் ஆரவாரமும்,

323 - 4. [நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா றொலிக் கும் விடர்முழங் கிரங்கிசை:] நல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன ஒலிக்கும் கல் யாறு விடர் முழங்கு இரங்கு இசை - நல்ல அழகினை உடைய நெடிய தேர்கள் வழியிலே ஓடிவந்த தன்மையவாக ஒலிக்கும் கல்லின்மேல் வரும் யாறுகள் முழைஞ்சுகளிலே வீழ்ந்து மாறாது ஒலிக்கும் ஓசையும்,

325 - 7. நெடு சுழி பட்ட கடு கண் வேழத்து உரவு சினம் தணித்து பெரு வெளில் பிணிமார் விரவு மொழி பயிற்றும் பாகர்

அழிக்கும் பொருட்டுச் செங்குத்தான மலையில் ஏறிச் செல்வதற்கு அதன் அயலில் இவ்விரண்டு மூங்கில்களைக் கூட்டி நிறுத்தி அமைப்பது வழக்கம்.

[1] "உய்த்தீட்டுந் தேனீ" (நாலடி. 10)

[2] இவற்றில் - இச்சிற்றரண்களில்.

[3] குறும்பு - பகைவர் தங்கும் சிற்றரண்.

[4] குரவை இரு பாலாரும் விரவி ஆடுவதாதலின், குறவர் தம் பெண்டிரொடு அயரும் குரவை என்றார்; "பெண்டிரொடு விரைஇ, மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்து", "வியலறை வரிக்கு முன்றிற் குறவர், மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்" (அகநா. 118: 3 - 4, 232: 9 - 10); "மாயவன்றன் முன்னிநெடும் வரிவளைக்கைப் பின்னையொடும்..........தாநெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே" (சிலப். 17); "மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு, மாடிய குரவை யிஃது" (மணி. 19: 65 - 6)

[5] "நாட்கள் ளுண்டு" (புறநா. 123: 1)

ஓதை - காட்டாற்றின் நெடிய சுழியிலே வீழ்ந்து அகப்பட்ட தறுகண்மையை உடைய யானையினது வலிய சினத்தைத் தணியப் பண்ணிப் பெரிய கம்பத்திலே சேர்த்தற்குத் தமது ஏவல் தொழிலைச் செய்தற்குக் காரணமான [1]பேச்சுக்களைப் பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும்,

328 - 9. ஒலி கழை தட்டை புடையுநர் புனந்தொறும் கிளி கடி மகளிர் விளி படு பூசல் - ஒலிக்கும் மூங்கிலால் செய்த [2]தட்டையைப் புடைத்துப் புனங்கள்தோறும் கிளியை ஓட்டுகின்ற மகளிர் கூப்பிடுதலால் பிறந்த ஆரவாரமும்,

330. இனத்தின் தீர்ந்த துளங்கு [3]இமில் நல் ஏறு - நிரையினின்றும் பெயர்ந்த அசையும் [3]குட்டேற்றினை உடைய இடபமும்,

331. மலை தலைவந்த மரை ஆன் கதழ் விடை - எக்காலமும் போர் செய்து போர்த்தொழில் தன்னிடத்திலே கைவந்த மரையானினது விரைந்த ஏறும்,

332 – 5. [மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக், கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப, வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியும் குழைய, நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை:]

கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப - முல்லை நிலத்தில் கோவலரும் குறிஞ்சி நிலத்தில் குறவரும் சேரக் கூடி வென்றதன் வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி,

மாறு மைந்தின் ஊறு பட தாக்கி பொருஉம் கல்லென் கம்பலை - முதுகிடாத வலியுடனே புண் உண்டாம்படி முட்டிப் பொரும் கல்லென்கின்ற ஓசையை உடைய ஆரவாரமும்,

ஏறும் விடையும் ஆர்ப்பப் பொருஉம் கம்பலை என்க.

நல் ஏறு வள் இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய பொருஉம் கம்பலை - எருமையேறுகள் வளவிய இதழை உடைய குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மில் பொருகின்ற ஆரவாரமும்,

336 - 9. [காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி, வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழம், உண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார், கன்றுகடாஅ வுறுக்கு மகாஅ ரோதை:]

வள் கோள் பலவின் விளை தீ பழம் சுளை உண்டு படு மிச்சில் காழ் பயன் கொண்மார் - வளவிய குலைகளை உடைய பலாவினது

---

[1]இப்பேச்சுக்களை, முல்லைப். 35, உரை, அடிக்குறிப்பால் அறியலாம்.

[2]தட்டையாவது மூங்கிலைக் குறுக்கே நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாகும்படி ஒன்றிலே தட்டும் கருவி; குறிஞ்சிப். 43 - 4, ந.

[3]இமில், குட்டேறு - இடபத்தினுடைய முன் முதுகின்மேல் உருண்டு பருத்துத் தோன்றும் ஓர் உறுப்பு.

முற்றின இனிய பழத்தின் சுளையை விரும்பினோரெல்லாரும் தின்று கீழ்வீழ்ந்து கிடக்கும் மிகையான பழத்தின் விதையைப் பயன் கோடற்கு,

கன்று காந்தள் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி கடாவுறுக்கும் மகார் ஓதை - கன்றுகளைப் பிணைத்துக் காந்தளினது துடுப்புப் போலும் கமழுகின்ற மடலாலே அடித்துக் கடாவிடும் பிள்ளைகளுடைய ஆரவாரமும்,

340. [1][மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனா:]

341. [கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்:] கரும்பின் கழை கண் உடைக்கும் ஏத்தமும் - கரும்பின் கோலைச் சாறு கொள்ளும் ஆலையின் ஓசையும்,

342. தினை குறு மகளிர் இசை படு வள்ளையும் - தினையைக் [2]குறுகின்ற மகளிருடைய இசை மிகுகின்ற [3]வள்ளைப்பாட்டும்,

343-4. சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர் [4]பன்றி பறையும் - சேம்பையும் மஞ்சளையும் விதைத்து வளர்ந்த பின்பு பன்றி கிழங்கு அகழாமல் காப்போருடைய பன்றிக்குக் கொட்டும் பறை ஓசையும்,

குன்று அகம் சிலம்பும் - இவ்வோசைகளால் மலையிடத்து எழும் எதிரொலியும்,

345. என்ற இவ்வனைத்தும் - என்று யான் கூறிய இவ்வெல்லா ஓசைகளும்,

[இயைந்தொருங் கீண்டி:] ஒருங்கு இயைந்து ஈண்டி - சேரப் பொருந்தித் திரளப்பட்டு,

346. [அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன் :] அவலவும் மிசையவும் பல உடன் துவன்றி - தாழ்வரையில் உள்ளனவும் உச்சி மலையில் உள்ளனவுமாகிய ஒழிந்த பல ஓசைகளும் சேர நெருங்குகையினாலே,

347-8. [அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த, மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப:] எண் அரு திறத்த அலகை தவிர்த்த மலை படு கடாஅம் மாதிரத்து இயம்ப - எண்ணுதற்கு அரிதாகிய கூறுபாட்டை உடையவாகையினாலே எண்ணை ஒழிந்த [5]மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி திசைகளெல்லாம் ஒலிப்ப,

கடாம், ஆகுபெயராய் அதனால் பிறந்த ஓசையை உணர்த்திற்று.

வரிவிழவிருப்பின் (290) இன்னிசையும் (296) பூசலும் (299) அழுகையும் (301) பாடலும் (304) பூசலும் (306) குரலும் (310) பூச

---

[1]இதற்கு உரை கிடைத்திலது; மேகத்தைக் கண்டாலொத்த கொட்டில்கள்தோறும் விரைவாக என்க; ஆலை: ஆகுபெயர்; பெரும்பாண். 260-61, ந. [2]குறுகின்ற - குத்துகின்ற.

[3]வள்ளைப்பாட்டு - உலக்கைப் பாட்டு.

[4]இது குடப்பறை எனவும் வழங்கும்; "பன்றிப் பறையே குடப்பறை யாகும்" (பிங்கல. 1518) [5]மலைபடு. 572, அடிக்குறிப்.

லும் (314) கொள்ளையும் (317) உவகையும் (318) குரவையும் (322) இசையும் (324) ஓதையும் (327) பூசலும் (329) கம்பலையும் (335) ஓதையும் (339) ஏத்தமும் (341) வள்ளையும் (342) பறையும் (344) என்றிவ்வனைத்தும் (345) குன்றகச் சிலம்பும் (344) ஒருங்கியைந் தீண்டப்பட்டு (345) ஒழிந்த ஓசைகளும் துவன்றுகையினாலே (346) மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி (348) பலதிறம் பெயர்பவை (291) மாதிரத்தியம்ப (348) அவற்றைக் கேட்குவிர் (291) என முடிக்க.

இருப்பிற் (290) கேட்குவிர் (291) என்க.

மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்தவதனால், இப்பாட்டிற்கு மலைபடுகடாம் என்று பெயர் கூறினார்.

349 - 51. [குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர், முழவுத் துயிலறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே :]

அவன் வியன் கண் வெற்பு - அந்நன்னனுடைய அகன்ற இடத்தை உடைய மலை,

குரூஉ கண் பிணையல் கோதை மகளிர் - பல நிறம் பொருந்தின இடத்தை உடையதாகிய பிணைத்தலையுடைய மாலையினை உடைய மகளிர் ஆடற்கு ஏற்ற,

முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று - முழவு கண்ணுறக்கம் அறியாத அகன்ற ஊரிடத்துக் கொண்ட திருநாளை யொத்துச் சிறந்திருக்கும்;

352 - 3. கண் தண்ணென கண்டும் கேட்டும் உண்டற்கு இனிய பல பாராட்டியும் - காண்டற்கு இனியவற்றைக் [1]கண் குளிரக் கண்டும் கேட்கப்படுவனவற்றைச் செவி குளிரக் கேட்டும் உண்டதற்கு இனிய பல உணவுகளைக் கொண்டாடி உண்டும்,

354 - 5. [இன்னும் வருவ தாக நமக்கெனத், தொன்முறை மரபினி ராகி :] நமக்கு இன்னும் வருவதாக என தொல் முறை மரபினிர் ஆகி - நமக்கு மேலும் இந் நுகர்ச்சி உண்டாவதாக என்று விரும்பிப் பழைய உறவான மக்களைப் போலும் முறைமையினை உடையிராய்ச் சில நாள் தங்கி,

355 - 6. பல் மாண் செரு மிக்கு புகலும் திரு ஆர் மார்பின் - பலவாய் மாட்சிமைப்பட்ட [2]வஞ்சி முதலிய போர்த் தொழில் மிக்கு நடத்தலாலே உலகம் புகழும் திருமகள் நிறைந்திருந்த மார்பினை உடைய நன்னனுடைய,

---

[1] "கரங்கூப்பிக், கண்குளிரக் கண்டு" (முருகு. இறுதி வெண்பா, 9)

[2] வஞ்சி - போர் செய்தற்குப் பகைவர்மேற் செல்லுதல்.

357. உரும் உரறு கருவிய பெரு மலை பின் பட-உருமேறு முழங்கும் தொகுதியையுடைய பெரிய மலை நுமக்குப் பின்னும்படி,

358 - 9. இறும்பூது கஞலிய இன் குரல் விறலியர் நறு கார் அடுக்கத்து குறிஞ்சி பாடி - அதிசயம் நெருங்கின இனிய யாழை உடைய விறல்பட ஆடும் மகளிர் நறிய கரிய பக்க மலையிலே குறிஞ்சி என்னும் பண்ணைப் பாட,

குரல் : ஆகுபெயர். பாடி, பாட என்க.

360. கை தொழூஉ பரவி பழிச்சினிர் கழிமின் - நீரும் ஆண்டு உறையும் தெய்வங்களைக் கையாலே தொழுது, எம் குறை முடித்தால் நுமக்கு இவை தருதுமென்று பரவுக்கடன் பூண்டு வாழ்த்திப் போவீர்;

மரபினிராகிப் (355) பாடிப் (359) பழிச்சி (360) மலை பிற்படக் (357) கழிமின் (360) என்க.

361. [மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கி :] பனுவலின் பொங்கி மை படு மா மலை - சூல் முதிர்வதற்கு முன்பு [1]எஃகுறு பஞ்சி போலப் பொங்கிச் சென்று கார்காலம் வருமளவும் மேகம் கிடக்கும் பெரிய மலையிடத்தில்,

362. கை தோய்வு அன்ன கார் மழை தொகுதி - கை சென்று பிடிக்கும் தன்மையை ஒத்த அணுகுதலை உடைய கரிய மேகத் திரள்,

363. தூஉய் அன்ன துவலை துவற்றலின் - வலியத் தூவினாலொத்த துவலைகளைத் தூவுகையினாலே,

364. தேஎம் தேரு கடு பரி கடும்பொடு - திசைகளைத் துணிந்து கொள்ள மாட்டாத கடிய செலவினை உடைய சுற்றத்தோடே,

365. காஅய் கொண்ட நும் இயம் தொய்படாமல் - காவிக் கொண்ட நும்முடைய வாச்சியங்கள் நனையாதபடி,

366. கூவல் அன்ன விடரகம் புகுமின் - கிணறுகள்போன்ற [2]முழைஞ்சுகளிடத்தே புகுவீர்;

367. இரு கல் இகுப்பத்து இறு வரை சேராது - பெரிய கல்லினது திரட்சியினிடத்து முறிந்து நின்ற மலைகளைச் சேராதே,

368 – 72. [குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து, நின்று நோக்கினுங் கண்வாள் வெளவும், மண்கனை முழவின் தலைக்கோல் கொண்டு, தண்டுகா லாகத் தளர்த லோம்பி, ஊன்றினிர் கழிமி னூறுதவப் பலவே :]

நின்று கண் நோக்கினும் வாள் வெளவும் (369) இடம் பட்ட குன்று (368) - நின்று கண்ணால் பார்க்கினும் [3]கண்ணின் ஒளியைத் தன் அழகாலே வாங்கிக்கொள்ளும் இடம் உண்டாகிய மலையில்,

---

[1] எஃகுறு பஞ்சி - பன்னிய பஞ்சு; நற். 247 : 4

[2] முழைஞ்சு - குகை.

[3] மதுரைக். 343 - 5; அகநா. 217 : 2, குறிப்புரை.

உம்மை : அவற்றை நுகர மனத்தால் கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

அரு இடர் அழுவத்து (368) ஊறு தவ பல (372) – பொறுத்தற்கு அரிய வருத்தத்தைச் செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும் இடையூறுகள் மிகப் பல; அவற்றை,

மண் கனை முழவின் தலை (370) தண்டு காலாக (371) கொண்டு (370) - மார்ச்சனை செறிந்த முழவிடத்தில் காமரத்தை நுமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

371. தளர்தல் ஓம்பி (371) கோல் (370) ஊன்றினிர் கழிமின் (372) - அடி உள்ளே விழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றிப் போவீர்;

373. அயில் காய்ந்தன்ன கூர் கல் பாறை - வேல் காய்ந்தாற் போலும் [1]குடுமிக் கூர்ங்கற்களை உடைய பாறையில்,

374. வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து - குளிர்ச்சி வாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னுமை செய்யும் வழியிடத்தில் போம்பொழுது,

375. கதிர் சினம் தணிந்த அமயத்து கழிமின் - ஞாயிறு [2]சினம் மாறின அந்திப் பொழுதிலே போவீர்;

376 - 8. [உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு, புரைதவ வுயரிய மழைமருள் பஃறோல், அரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய :]

உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ உயரிய மழை மருள் பல் [3]தோல் அருப்பமும் உடைய - புகழ் பரக்கும்படி செறிந்த நன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சி மிக உயர்ந்த 'மேகமென்று மருளும் பல யானைத் திரளையுடைய அரண்களையும் அவ்வழி உடைய;

அரசு நிலை தளர்க்கும் அருப்பம் - பொர வந்த அரசர் நிலையுடைமையைக் கெடுக்கும் அரண்.

379. பின்னி அன்ன பிணங்கு அரில் நுழைதொறும் - அவ்வரண்களில் பின்னிவைத்தாலொத்த கொடி பிணங்கின சிறுகாட்டை உடைய சிறிய வழிகள்தோறும்.

---

1 "பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்" (அகநா. 5 : 13)

2 சினம் : "காய்சினந் தவிராது கடலூர் பெழுதரு ஞாயிறு" (புறநா. 59: 5 - 6) என்ற இடத்துச் சினம் என்பதற்கு வெம்மையெனப் பொருள் கூறுவர் அதன் உரையாசிரியர்.

3 "மழையென மருளும்பஃறோல்" (புறநா. 17 : 34) என்னும் இடத்துத் தோலென்பதற்குப் பரிசையெனப் பொருள் கூறுவர் அதன் உரையாசிரியர். மலைபடு. 530, அடிக்குறிப்பு.

380 - 83. முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் இன் இசை நல் யாழ் பத்தரும் விசி பிணி மண் ஆர் முழவின் கண்ணும் ஓம்பி கை பிணி விடாது பைபய கழிமின் - முன் போகின்றவன் முகத்தில் அடியாமல் வாங்கிவிட்ட கடிய விசையை உடைய திரண்ட கோல் இனிய இசையைத் தன்னிடத்தே கொண்ட நல்ல யாழின் பத்தரையும் வலித்துக் கட்டின மார்ச்சனை செறிந்த முழவின் கண்ணையும் கெடாதபடி காத்து அவனைக் கரம் பிடித்துக் கோடலை விடாதே மெல்ல மெல்லப் போவீர்;

நாடுகாணனந்தலை (270) முதல் இத்துணையும் மலை (69) கூறிற்று. இவ்விடத்து யாற்றின் தன்மையும் (67) சேரக் கூறினர்.

384. களிறு மலைந்தன்ன கண் கூடு துறுகல்-யானைகள் தம்மில் சேர்ந்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடி நெருங்கின கல்லிடத்தே,

385. தளி பொழி கானம் தலை தவ பலவே - மழை பெய்கின்ற காடுகள் அவ்விடத்து மிகப் பல;

386 - 7. ஒன்னா தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென நல் வழி கொடுத்த நாண் உடை மறவர் - ஏவல் பொருந்தாத பகைவர் முதுகிட்ட அளவிலே தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, அது பொறாமல் இவ்விடம் உயிர் கொடுத்தற்கு நல்ல காலம் என்று மீண்டு உயிரைக் கொடுத்த நாணத்தையும் உடைய மறவருடைய,

388 - 9. செல்லா நல் இசை பெயரொடு நட்ட கல் ஏசு கவலை எண்ணு மிக பலவே - கெடாத நல்ல புகழினை உடைய பெயர்களை எழுதி நட்ட கற்கள் முதுகிட்டுப் போனவரை இகழும் பல வழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாய் இருக்கும்;

390-91. இன்பு உறு முரற்கை நும் பாட்டு விருப்பாக தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு[1] இகுத்து துனைமின் - இன்பம் மிகுகின்ற தாளத்தினை உடைய நும்முடைய பாட்டு அந் நடுகல்லில் தெய்வத்திற்கு விருப்பமாகப் பழமை நடக்கின்ற முறைமையினை உடைய நும்முடைய யாழை வாசித்து விரையப் போவீர்;

மருப்பு : ஆகுபெயர்.

392 - 3. பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர் சந்து நீவி புல் முடிந்து இடுமின் - முற்காலம் நன்மை அறியாத தீய நிலத்தை வழி அறியாமல் போய் மீண்டு வந்த புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பல வழிகளும் கூடின சந்தியைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பீர்;

நற்கு; நன்கின் விகாரம்,

---

[1] இகுத்தல் - ஒலித்தல்: மலைபடு. 532, ந,

கானம் பல (385); ஆண்டுக் கல் (389) நட்ட (388) கவலை பல (389); அக் கல்லிற்கு மருப்பிகுத்துத் துனைமின் (391); அப்பொழுது புதுவிர் (392) புல் முடிந்திடுமின் (393) எனக் கூட்டுக.

394. செல்லும் தேஎத்து - நீங்கள் போம் தேசத்திலே,

394 - 6. [பெயர்மருங் கறிமார், கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த, கடவு ளோங்கிய காடேசு கவலை:]

கல் எறிந்து மருங்கு பெயர் அறிமார் எழுதிய கடவுள் - கல்லை [1]இடந்துகொண்டு அதனிடத்தே இவ்வாறே பொருதுபட்ட இன்னு னென்று அவன் பெயரை உலகம் அறிவதற்கு எழுதிய கடவுள்,

நல் அரை மராத்த கடவுள் - நல்ல அரையினை உடைய மராத் திடத்தனவாகிய கடவுள்,

என்றது, மராமரத்தின் நிழலிலே நட்ட கல் என்றவாறு.

கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை - அக்கடவுளின் தெய்வத் தன்மை மிக்க தன் கொடுமையால் பிற காடுகளை இகழும் பல வழிகளில்,

397 - 8. [ஒட்டா தகன்ற வொன்னுத் தெவ்வர், சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே:]

ஒட்டாது அகன்ற ஒன்னு தெவ்வர் சுரம் தவ பலவே - நன்னனைப் பொருந்தாதே நீங்கின அவன் ஏவற்குப் பொருந்தாத பகைவர் இருக்கும் அருநிலங்கள் மிகப் பல.

இதனால் இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றல் (73) கூறினர்.

சுட்டினும் பனிக்கும் சுரம் - தத்தம் ஊர்களிலே இருந்து நினைப் பினும் தலை நடுங்குவிக்கும் சுரம்.

399 - 400. தேம் பாய் கண்ணி தேர் வீசு [2]கவி கை ஓம்பா வள்ளல் படர்ந்திகும் எனினே - தேன் சொரிகின்ற கண்ணியினையும் தேரைச் சிதறும் கொடுத்துக் கவிந்த கையினையும் உடைய [3]தனக் கென்று ஒரு பொருளும் பேணுத நன்னனை நினைத்துச் செல்கின்றேம் என்று கூறுவீராயின்,

401-2. [மேம்பட [4]வெறுத்தவன் றொஃறிணை மூதூர், ஆங்கன

---

[1] இடந்து - பெயர்த்து.

[2] "ஆறுதியுங் கவிகை", "இசை விளங்கு கவிகை" (புறநா. 54: 7, 102 : 6) என்ற இடங்களில் கவிகை யென்பதற்கு இடக் கவிந்த கை என உரை எழுதுவர் அதன் உரையாசிரியர்; "கலம்பெயக் கவிந்த கழறொடித் தடக்கையின்" (மலைபடு. 577)

[3] மதுரைக். 146-ஆம் அடியின் உரையையும் அதன் அடிக்குறிப் பையும் பார்க்க.

[4] செல்வத்தைக் குறிக்கும் வெறுக்கை என்னும் பெயருக்கும், இங்கே செல்வம் உண்டான என்று பொருள் செய்யப்பட்டிருக்கும்

மற்றே நம்ம ரோர்க்கே:] நம்மனோர்க்கு ஆங்கனம் மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் அற்று - நம்மை ஒக்கும் பரிசிலர்க்கு அப்பகைப்புலம் எல்லா ஊர்களினும் மேலாம்படி செல்வம் உண்டான நன்னனுடைய பழையதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினை உடைய பழைய ஊர்களை ஒக்கும்;

403. அசைவுழி அசைஇ அஞ்சாது கழிமின் - இளைத்த விடத்தே இளைப்பாறி அஞ்சாமல் போவீர்;

404 - 5. [புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக், கலைநின்று விளிக்குங் கான மூழிறந்து:] புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து - புலி பாய்கையினாலே பட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலை நின்று கூப்பிடும் அக்காட்டை முறைமைப்படப் போய்,

406. சிலை ஒலி வெரீஇய செ கண் மரைவிடை - வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்த கண்ணை உடைய மரையேறு,

407. தலை இறும்பு கதழும் நாறு கொடி புறவின் – முற்பட்ட குறுங்காட்டிலே விரைந்தோடும் நாறுகின்ற கொடிகளை உடைய காட்டிடத்து,

408 – 9. வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த வளை ஆன் தீ பால் - வேற்றுப் புலங்களிலே சென்று மேய்ந்த ஏற்றை உடைய நிரையிடத்தனவாகிய சங்குபோல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை,

409 - 10. [1]மிளை சூழ் கோவலர் வளையோர் உவப்ப தருவனர் சொரிதலின் - நிரையைக் காவல் சூழ்கின்ற இடையர் வளையினை உடைய மகளிர் மனம் மகிழும்படி கொண்டு வந்து சொரிகையினாலே,

411 – 2. [பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும், புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்:] பலம் பெறு நசையொடு நும் பதிவயின் தீர்ந்த புலம்பு சேண் அகல புதுவிர் ஆகுவிர் - பலத்தைப் பெறவேண்டும் என்னும் ஆசையுடனே நும்முடைய ஊரினின்றும் போந்த வருத்தம் விட்டு நீங்குகையினாலே விருந்தாம் தன்மையை உடையிராகுவீர்;

413 - 6. [பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன, தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக், கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும், பல்யாட் டினநிரை:] பகர் பல விரவு நெல்லின் அரி அன்ன தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇ கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும் பல்யாடு இனம் நிரை - பண்டம் விற்ற பலவும் கூடும் நெல்லின் அரிசியை ஒத்தனவாகக் கிடாய் விரவுகின்ற செம்மறித் திரள் வெள்யாட்டுடனே கலந்து கல்லென்

வெறுத்தவென்னுஞ் சொல்லிற்கும் இயைபு ஏதேனும் உண்டோ என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

[1] "மிளைசூழ் கோவல ரிருக்கை" (சிலப். 16 : 4)

கின்ற ஓசையை உடைய காட்டிடத்தே கடல் போலே ஒலிக்கும் பல யாட்டினங்களை உடைய திரள்களிலே,

பகர்நெல்: வினைத்தொகை,

416. எல்லினிர் புகினே - இராக் காலத்தை உடையிராய்ச் செல்லின்,

மனத்தே அக்காலத்தைக் கருதுதலின், உடைமை யாயிற்று.

417. பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர் - பாலும் பாற் சோறும் நுமக்கென்று சமையாமல் தமக்குச் சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்;

418. துய் மயிர் அடகிய சேக்கை அன்ன - மெல்லிய தலை மயிரினை உடைய சேணம் இட்ட படுக்கையை ஒத்த,

419. மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி - [1]ஆடுகளின் மெய்யை உரித்து ஒன்றாகத் தைத்த வார் மிதித்த தோற் படுக்கையிலே,

420. தீ துணையாக சேந்தனிர் கழிமின் - கொடிய விலங்குகள் வாராதபடி [2]இடையர் ஒளித்த நெருப்புத் துணையாகத் தங்கிப் போவீர்;

421 - 2. [3]கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின் கொடு வில் கூளியர் கூவை காணின் - கூப்பிடாத அவ்வெல்லையைக் [4]கூவாநிற்கும் கூரிய நல்ல அம்பினையும் கொடிய வில்லினையும் உடைய நாடு காக்கும் வேடருடைய திரளைக் கண்டீராயின், அவர்களுக்கு,

423 - 4. படியோர் தேய்த்த பணிவு இல் ஆண்மை கொடியோள் கணவன் படர்ந்திசும் எனினே - தன்னை வணங்காதாரை அழித்த தாழ்ச்சியில்லாத பகைவரை ஆளும் தன்மையினை உடைய நன்னனை நினைத்துப் போகின்றேம் என்று கூறின்,

கொடியோள் கணவன் - கொடியினை உடையோள் கணவன்; இதனால் அவன் தேவி கற்பு மிகுதி கூறினார்.

[5] இது நன்னன் என்னும் பொருட்டாய் நின்றது.

425 - 6. தடியும் கிழங்கும் [6]தண்டினர் தரீஇ ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை - தசைகளையும் கிழங்குகளையும் நும்மை நலிந்து

---

[1] 'கிடாயினுடைய தோல்களைப் பாயலாகவுடைய முதியோன்' (பெரும்பாண். 151, ந.)

[2] "கடைகோற் சிறுதீ யடைய மாட்டித், திண்கா லுறியன் பானைய னகல, னுண்பஃ றுவலை யொருதிற நனைப்பத், தண்டுகா லூன்றிய தனிநிலை யிடையன்" (அகநா. 274 : 5 – 8)

[3] கூப்பிடு – ஓரெல்லை; "நாக்குமுக் கூப்பிடு வளர்ந்து", "முக் கூப்பிடு வளர்ந்தநெடு நாக்கடிது கொண்டாய்" (சிதம்பர. சோம நாத. 21, 34). '(பி-ம்.) 'கடாவாநிற்கும்'

[4] முருகு, 6, உரை, அடிக்குறிப்.

[5] "தண்டி - பலகால் அலைத்து" (பொருந. 104, ந.)

தின்னப் பண்ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்கள் இல்லை; அவற்றை நுகர்ந்து,

427. ஆங்கு [1]வியம் கொண்மின் – அவ்விடத்து அவர் போகச் சொன்ன வழியை நுமக்கு வழியாகக் கொண்டு போவீர்;

அது அதன் பண்பே - அக் காட்டின் தன்மை அத்தன்மைத்தாயிருக்கும்;

428. தேன் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்-தேன் உண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூங்கொத்தும்,

429. உம்பல் அகைத்த ஒள் முறி யாவும் - யானை முறித்த ஒள்ளிய தளிர்களை உடைய [2]யாம் பூவும்,

430 - 31. [தளிரொடு மிடைந்த காமரு கண்ணி, திரங்குமர னாரிற் பொலியச் சூடி:] திரங்கு மரல் நாரில் தளிரொடு மிடைந்த [3]காமரு கண்ணி பொலிய சூடி - உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருங்கக் கட்டின விருப்பம் மருவின கண்ணியை அழகு பெறச் சூடி,

432. முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென - பருக்கையை உடைய மேட்டு நிலத்திடம் விண்ட சிறுவழி மழை பெய்து குளிருகையினாலே,

433. உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின் - அந்நீரைக் குடித்துக் குளித்து வழிக்கு முகந்துகொண்டு போமின்;

434 - 6. [செவ்வீ வேங்கைப் பூவி னன்ன, வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த, சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூழ்:]

செ வீ வேங்கை பூவின் அன்ன அவரை - சிவந்த பூக்களை உடைய வேங்கைப் பூவினையொத்த நிறத்தை உடைய அவரை விதை,

வேய் கொள் அரிசி - மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி,

சுவல் விளை நெல்லின் அரிசி – மேட்டு நிலத்தே விளைந்த நெல்லின் அரிசி,

சொரிந்த மிதவை புளியங்கூழ் – இவற்றைப் புளிக் கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழை,

437. அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட - இராக் காலத்து, காட்டிடத்துப் பகற்பொழுது வந்த நும் வருத்தம் போம்படி,

438 - 9. [அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய, புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்:] ஆங்கண் அகலுள் கழி மிடைந்து இயற்றிய புல் வேய் குரம்பை குடிதொறும் பெருகுவிர் - அவ்விடத்து அகன்ற ஊரிடத்துக் கழிகளால் தெற்றிப் பண்ணின புல்லான் வேய்ந்த குடில்களில் இருக்கும் குடிகளிடந்தோறும் பெறுகுவீர்;

---

[1] வியம் - ஏவல். [2] (பி - ம்.) 'ஆச்சாவிற் பூவும்,

[3] காமரு: முருகு. 75, உரை, அடிக்குறிப்.

கூழை அற்குப் பெறுகுவிர் என்க.

440-43. [பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி, வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை, தண்ணெ ணுண்ணிழு துள்ளீடாக, அசையினிர் சேர்ப்பி னல்கலும் பெறுகுவிர்:]

அசையினிர் சேப்பின் - இளைப்பாறி அவ்விடத்தே சில நாள் தங்குவீராயின்,

பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி வெண் எறிந்து இயற்றிய மா கண் அமலை - பொன்னை நறுக்கினுலொத்த நுண்ணிய ஒத்த அரிசியை வெள்ளை எறிந்து ஆக்கின கரிய இடத்தை உடைய சோற்றுத் தடியை,

தண் ணென் நுண் இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிர் - தண்ணென்ற நுண்ணிய நெய்விழுதை உள்ளே இட்டு உண்ணும்படி நாடோறும் பெறுகுவீர்;

444. விசயம் கொழித்த பூழி அன்ன - கருப்புக் கட்டியைக் கொழித்த பொடியை ஒத்த,

445. உண்ணுநர் தடுத்த இடி நுண் நுவணை - [1]தன்னை நுகர்வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய தினைப் [2]பிண்டியொடு,

சேப்பின் நுவணையோடே அமலையை இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிர் என்க.

நுவணையோடென ஓடு விரிக்க.

446-7. நொய் மரம் விறகின் ஞெகிழி மாட்டி பனி [3]சேண் நீங்க இனிது உடன் துஞ்சி - நொய்ய மரமாகிய விறகால் ஆக்கின [4]கடைக்கொள்ளியை எரித்துப் பனி விட்டு நீங்கும்படி இனிதாகச் சேரத் துஞ்சி,

448. புலரி விடியல் புள் ஓர்த்து கழிமின் - இராக்காலம் நீங்குதலை உடைய விடியற் காலத்தே நிமித்தம் பார்த்துப் போவிர்;

புள்ளோர்த்தென்றதற்குப் புட்களின் குரல் கேட்டுப் போவீர் என்றுமாம்.

இத்துணையும் கானமும் (69) கானத்து ஆற்றினது நன்மையும் அசையுநற் புலமும் (67) வல்சியும் (68) சேரக்கூறினர்.

449. புல் அரை காஞ்சி - புற்கென்ற அரையினை உடைய காஞ்சி மரத்தினையும்,

---

[1]மலைபடு. 138-ஆம் அடியின் உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க. [2]பிண்டி - மா.

[3]"சேணீங்கிய - கைவிட்டு நீங்க" (மதுரைக். 198, ந.)

[4]கடைக்கொள்ளி; பெரும்பாண். 177 - 9, உரை, அடிக்குறிப்பு.

புனல் பொரு [1]புதவின் – நீர் வந்து பொருகின்ற அறுகுகளையும்,

450. மெல் அவல் - மெல்லிய விளைநிலங்களையும்,

450 - 53. [இருந்த வூர்தொறு நல்லியாழ்ப், பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும், பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினும், நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே:]

காவும் - பொழில்களையும்,

பள்ளியும் - இடைச்சேரிகளையும் உடைய,

அவன் தண் பணை நாடே - நன்னனுடைய குளிர்ந்த மருத நிலத்தை உடைய நாடு,

பல் நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும் இருந்த ஊர்தொறும் - பலநாள் நிற்பினும் ஒரு நாள் தங்கிப்போகினும் நீர் நுகர்தற்குக் குடி நீங்காதிருந்த ஊர்கள்தோறும்,

நல் யாழ் பண்ணு பெயர்த்தன்ன நல் பல உடைத்து - நல்ல யாழின் பண்ணை மாறி வாசித்த தன்மையவாக நன்றாகிய பல பொருள்களை உடைத்து;

காஞ்சி முதலியவற்றை உடைய நாடு ஊர்தோறும் நன்பல உடைத்தென்க.

[2]பண் ஒன்றையொன்று ஒவ்வாது இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்று ஒவ்வா இனிமை உடைய வென்றார்.

454 - 5. கண்பு மலி பழனம் கமழ துழைஇ வலையோர் தந்த இரு சுவல் வாளை - கண்பு நெருங்கின மருத நிலத்தைப் பூக்கள் நாற வளைத்து ஆராய்ந்து வலையை வீசுவார் கொண்டுவந்த பெரிய கழுத்தினை உடைய வாளைத் தடியை,

456 - 8. நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில் பிடி கை அன்ன செ கண் வரால் துடி கண் அன்ன குறையொடு விரைஇ - ஓர் இடத்தில் நிலைபெற நிற்றலை உடையோரிட்ட நெடிய கயிற்றை உடைய தூண்டிலில் பட்ட பிடியின் கையை ஒத்த சிவந்த கண்ணை உடைய வராலினது துடியின் கண்ணை ஒத்த தடியோடே கலந்து,

459. [3]பகன்றை கண்ணி பழையர் மகளிர் - பகன்றைப் பூவால் செய்த கண்ணியை உடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்,

---

[1] "புதவொரு விகற்பப் புல்லா கும்மே" (பிங்கல. 3001)

[2] "பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்கு அளிக்கும் நனை யெனக் கூட்டி, எல்லாப் பண்களிலும் வருத்தத்தைச் செய்யும் உறுப் பினையுடைய பாலைப் பண்கள் பலவற்றையும் ஒரோவொன்றாகப் பெயர்த்து வாசிக்குமாறு போலே ஒன்றையொன்று ஒவ்வாத இன் பத்தை உண்டவர்க்குக் கொடுக்கும் பலதிறத்து மதுவெனவுரைக்க" (பதிற். 65: 15, உரை). [3]பகன்றை: குறிஞ்சிப். 88, உரை, அடிக்.

460 – 62. ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ வளம் செய் வினைஞர் வல்சி நல்க-ஞெண்டுகள் ஆடித் திரியும் செய்க்கு அருகில் மேட்டு நிலத்தே இட்ட மலையை ஒத்த போர்களை அடியிலே விழ அழித்துக் கடாவிட்டு வளப்பத்தை உண்டாக்கும் உழவர் நெல்லை முகந்து தராநிற்க,

463. [1]துளங்கு தசும்பு வாக்கிய பசு பொதி தேறல் - களிப்பு மிகுதியால் அசையும் மிடாவினின்றும் வார்த்த பசிய முளையால் ஆக்கின கள்தெளிவை,

464. [இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறகுவிர்:] ஞாயிறு இள கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர் - ஞாயிற்றினது இளைய கதிர்கள் எறிக்கும் காலத்திலே களங்கள்தோறும் பெறுகுவீர்;

வினைஞர் வல்சி நல்காநிற்கப் பழையர் மகளிர் விரைஇத் தேறல் நல்கா நிற்கப் பெறுகுவிர் என்க.

465 - 8. [முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு, வண்டு படக் கமழுந் தேம்பாய் கண்ணித், திண்டேர் நன்னற்கு மயினி சான் மெனக், கண்டோர் மருள:]

வண்டு பட கமழும் தேம் பாய் கண்ணி திண் தேர் நன்னற்கும் அயினி சான்மென கண்டோர் மருள - வண்டு படியும்படி நாறும் தேன் சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையும் உடைய நன்னனுக்கும் உணவாதற்கு அமையும் என்று கண்டோர்கள் மருளும் படி,

முள் அரித்து இயற்றிய வெள் அரி வெள் சோறு – முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தை உடைய தடிகளை இட்ட வெள்ளிய சோற்றை,

வெள்ளிய நிறத்தை உடைய தடிகளை வெள்ளரி என்றார், ஆகு பெயராக்கி.

மருள இயற்றிய என்க.

468. கடும்புடன் அருந்தி - நின் சுற்றத்துடனே உண்டு,

469 - 70. எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின் – எருத்தை அடிக்கின்ற உழவரோசை யோடே கூடும்படி நல்ல யாழை மருதத்தை வாசித்து இளைப்பாறிப் போவீர்;

இத்துணையும் நாடுபடு வல்சியும் (68) அசையுநற் புலமும் (67) சேரக் கூறினர்.

---

[1] "தசும்புதுளங் கிருக்கை" (பதிற். 42 : 11) என்பதும், 'தன் களிப்பு மிகுதியால் தன்னை உண்டார் உடல்போல அத்தசும்பு இருந்து ஆடும்படியான இருப்பு' என்னும் அதன் உரையும் இங்கே அறியற் பாலன.

471 - 3. வெள் நெல் அரிநர் தண்ணுமை வெரீஇ செ கண் எருமை இனம் பிரி ஒருத்தல் கணை செலல் முன்பொடு கதழ்ந்து வரல் போற்றி-வெள்ளிய நெல்லை அறுப்பார் கொட்டின பறையோசைக்கு வெருவிச் சிவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிந்த கடா ஆரவாரிக்கும் செலவினை உடைய வலியோடே நும்மேல் விரைந்து வருதலைப் பேணி,

474 - 5. வனை கலம் திகிரியின் குமிழி சுழலும் துனை செலல் [1]தலைவாய் ஓவு இறந்து வரிக்கும் – குயவன் வனைகின்ற மட்கலத்திற் சக்கரம்போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த செலவினை உடைய வாய்த்தலையில் ஒழிவின்றி ஓடும் யாறு (476),

476 - 7. காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின் யாணர் ஒரு கரை கொண்டனிர் கழிமின் – காண்பார் விரும்பும் கட்கு இனிய சேயாற்றினது புது வருவாயை உடைய ஒரு கரையை வழியாகக் கொண்டு போவீர்;

வயாம் : ஈற்றுமிசையுகரம் மெய்யொடும் கெட்டது (தொல். வினை. சூ. 41.) சேயாறு : அவ்வியாற்றின் பெயர்.

478 - 87. [நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற், பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ, வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத், தியாறெனக் கிடந்த தெருவிற் சாறெனை, இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற், கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு, மலையென மழையென மாட மோங்கித், துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும், பனிவார் காவிற் பல்வண் டிமிரும், நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்:]

பல் வண்டு இமிரும் பனி வார் காவின் (486) - பல வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும்,

இகழுநர் வெரூஉம் (482) நிவந்து ஓங்கு வரைப்பின் (478) - நன்னனை இகழ்ந்திருப்பார் அஞ்சும் மிக ஓங்கு மதிலையும்,

சாறு என (481) கெழீஇ (479) கடல் என கார் என ஒலிக்கும் சும்மையொடு (483) வியல் இடம் பெறா விழு பெரு நியமத்து (480)- திருநாள் என்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே திரிதரற்கு அகன்ற இடம் பெறாத சீரிய பெரிய அங்காடித் தெருவினையும்,

---

[1] "காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை, ஓவிறந் தொலிக்கு மொலியே யல்லது" (சிலப். 10 : 108 - 9) என்றவிடத்து ஓவிறந்தென் பதற்கு ஓவுதல் தவிர்ந்தென்று அரும்பதவுரையாசிரியரும், 'வாய்த் தலைக்கிட்ட கதவின் மீதெழுந்து குதிக்கின்ற புதுப்புனலொலி' என்று அடியார்க்கு நல்லாரும் எழுதிய உரைகள் இங்கே அறியற்பாலன.

கவலை மறுகின் (482) - பல கவர்த்த தன்மையை உடைய குறுந் தெருக்களையும்.

[1]பதி எழல் அறியா பழ குடி (479) துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறையும் (485) மாடம் மலை என ஓங்கி (484) - ஊரி னின்றும் பேர்தலை அறியாத பழைய குடி வெறுப்பில்லாத விருப்பத் தோடே நன்றாதல் பொருந்தியிருக்கும் மாடங்கள் மலையென மழை யென ஓங்குகையினாலே,

யாறு என கிடந்த தெருவின் (481) - யாறென்னும்படி கிடந்த பெருந்தெருவினையும்.

[2] இரண்டு மருங்கின் மாடமும் தெருவும் யாறும் கரையும் போன்ற என்றார்.

நியம் துஞ்சும் (478) அவன் பழவிறல் மூது ஊர் நனி சேய்த்து அன்று (487) - காவினையும் மதிலினையும் நியமத்தினையும் மறுகினை யும் தெருவினையும் உடைய, பொருட்டிரள் தங்கும் அவன் பழைய வெற்றியை உடைய மூதூர் மிகவும் தூரிதன்று என்க.

இது மூதூர் மாலை (93) கூறிற்று.

488 - 9. பொருந்தா தெவ்வர் இரு தலை துமிய பருந்து படகடக்கும் ஒள் வாள் மறவர் - நன்னனைப் பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் துணியப் பருந்துகள் படியப் போரை வெல்லும் ஒள்ளிய வாளை உடைய மறவர்,

490 - 91. கரு கடை எஃகம் சாத்திய புதவின் அரு கடி வாயில் அயிராது புகுமின் - தம்முடைய கரிய காம்பினை உடைய வேலைச் சாத்தி வைத்துக் காத்திருக்கின்ற பல தெற்று வாசல்களையுமுடைய அரிய கோபுரவாயிலை ஐயுறுமல் புகுவீர்;

492 - 5. [மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமெனக், கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி ருக்கி :]

மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் கண்டோர் எல்லாம் - அம்பலங்களிலே தங்குவாராகிய தூரிய நிலங்களின்றும் வந்த கூத்தர் முதலியோராய நும்மைக் கண்டோரெல்லாம்,

---

[1] "பதியெழு வறியா - பதியினின்றும் பெயர்தலை அறியாத; எனவே பகையின்மை கூறிற்று. பழங்குடி - தொன்மரபு; ஆதி காலத்தேறிய குடியுமாம்" (சிலப். 1 : 13, அடியார்.)

[2] "இரு கரையும் யாறும் போன்றன, இரண்டு பக்கத்தின் மனை களும் தெருவுகளும்" (மதுரைக். 359, ந.)

அளியர் தாம் வெல் போர் சேஎய் பெருவிறல் மன்ற உள்ளி வந்தோர் என அமர்ந்து இனிதின் நோக்கி - இவ்வளிக்கத் தக்கவர் தாம் வெல்லும் போரை வல்ல முருகனைப் போலும் நன்னனைப் பரிசிலர்க்குக் கொற்றமாக நினைத்து வந்தோர் என்று கருதி முகம் பொருந்தி இனிதாகப் பார்த்து,

496 - 7. [விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப், பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட :] [1]பரி புலம்பு அலைத்த வருத்தம் வீட அவர் விருந்து நும் இறை எதிர்கொள அவர் குறுகி - தரித்தலான் உண்டான தனிமை வருந்தின வருத்தம் போம்படி அவ்விடத்தோர் விருந்தாய் நீங்கள் தங்குதலை எதிரேற்றுக் கொள்கையாலே அவர் களைச் சேர்ந்திருந்து,

498 – 500. [எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத், தொழுதி போக வலிந்தகப் பட்ட, மடநடை யாமான் கயமுனிக் குழவி:]

எரி கான்றன்ன பூ சினை மராஅத்து தொழுதி போக வலிந்து அகப்பட்ட மடம் நடை ஆமான் குழவி - நெருப்பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளை உடைய மராமரத்திடத்தே கிடந்த இனமெல்லாம் கெட்டுப் போகப் போகமாட்டாது அகப்பட்ட மடப்பத்தை உடைய நடையை உடைய ஆமானினது குழவி,

கயம் முனி குழவி - யானைக் கன்றினையது,

501. [ஊமை யெண்கின் குடாவடிக் குருளை:] எண்கின் குடா வடி ஊமை குருளை - கரடியின் வளைந்த அடியினை உடைய வாய் திறவாக் குட்டி,

502 - 3. மீமிசை கொண்ட கவர் பரி கொடு தாள் வரை வாழ் வருடை வல் தலை மா தகர் - முதுகிடத்தே கொண்ட நிலத்தைக் கைக்கொள்ளும் செலவினையுடைய வளைந்த காலையுடைய வரையிடத்தே வாழும் எண்கால் வருடையில் வலிய தலையினை உடைய பெரிய கிடாய்,

இனி வருடையும் தகரும் என வேறாகக் கூறலுமாம்.

504. அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை - பாம்பினது வலிகளை அழித்த சிறிய கண்ணினை உடைய கீரி,

505 - 6. அளை செறி உழுவை கோள் உற வெறுத்த மடம் கண் மரையான் பெரு செவி குழவி - முழையிலே செறிந்திருந்த புலி பாய்தலுறுகையினாலே தன் உடலை வெறுத்த மடப்பத்தை உடைய கண்ணினை உடைய மரையானினது பெரிய செவியினை உடைய குழவி,

---

[1] "பரிபுலம்பினர்" (சிலப். 10 : 226) என்றவிடத்துச் செலவால் வருந்தினரென அரும்பதவுரையாசிரியரும், "வழிவரும் வருத்தத்தால் மிகவும் வருந்தினர்......பரி - மிகுதி; பரிபுலம்பினர் ஒரு சொல்லுமாம்' என அடியாருக்கு நல்லாரும் எழுதிய உரைகள் இங்கே கருதற்குரியன.

507 - 8. அரக்கு விரித்தன்ன செ நிலம் மருங்கின் பரல் தவழ் உடும்பின் கொடு தாள் ஏற்றை - அரக்கைப் பரப்பினு லொத்த சிவந்த நிலத்திடத்தில் சுக்கான் கல்லிலே தவழும் உடும்பினது வளைந்த காலை உடைய ஏறு,

509. வரை பொலிந்து இயலும் மடம் கண் மஞ்ஞை - மலையிடத்தே அழகு பெற்று ஆடும் மடப்பத்தை உடைய கண்ணினை உடைய மயில்,

510. கானம் கோழி கவர் குரல் சேவல் - கானத்திடத்துக் கோழியினது பெடையை அழைக்கின்ற குரலை உடைய சேவல்,

511. கானம் பலவின் முழவு மருள் பெரு பழம் - காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்று மருளும் பெரிய பழம்,

512 - 3. [இடிக்கலப் பன்ன நறுவடி மாவின், வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம் :] நறு வடி மாவின் இடி கலப்பன்ன வடி சேறு விளைந்த தீ பழம் தாரம் நறிய வடுக்களை உடைய மாவினது பொடிச் செய்த [1]கண்டின் கலப்பை ஒத்த பிழியப்படும் சாறு முற்றின இனிய பழமாகிய பண்டம்,

514. தூவல் கலித்த இவர் நனை வளர் கொடி - மழையால் செருக்கின பரக்கின்ற அரும்புகளை உடைய மணம் வளருகின்ற [2]நறைக் கொடி,

515. [3]காஅய் கொண்ட நுகம் மருள் நூறை - காவிக் கொண்டு வந்த நுகமென்று மருளும் [4]நூறைக் கிழங்கு,

நூறை - [5]மலங்கென்பாரும் உளர்.

516. [பருஉப்பளிங் குதிர்த்த :] உதிர்த்த பருஉ பளிங்கு - மரத்தினின்றும் சிதறி உதிர்த்த பருத்த [6]நிகரமாகிய [7]கருப்பூரம்,

பல உறு திரு மணி - பல விலை பெற்ற அழகிய மாணிக்கம்,

517 - 8. [குரூஉப்புலி பொருத புண்கூர் யானை, முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள் :] குரூஉ புலி பொருத புண் கூர் முழு வலி யானை முத்துடை மருப்பின் மிகு திரள் - நிறத்தை உடைய புலி பொரப்பட்ட புண் மிக்க குறைவில்லா வலியை உடைய யானைகளினுடைய முத்துடைக் கொம்புகளினுடைய மிக்க திரள்,

519. வளை உடைந்தன்ன வள் இதழ் காந்தள் - வளை உடைந்தாற் போன்ற வளவிய இதழை உடைய காந்தட் பூ,

---

[1]கண்டு - கற்கண்டு.

[2]நறைக் கொடி - ஒரு வகைக் கொடி ; "தண்கமழ் நறைக் கொடி கொண்டு" (ஐங்குறு. 276 ; 2).

[3]காஅய், காவி - தோளிற் சுமந்து.

[4]பி - ம். 'நூற்றைக் கிழங்கு' [5]மலங்கு - ஒரு வகை மீன்.

[6]நிகரம் - திரள ; "நிகர வேறு வேறுய.........ஆரம்" (தக்க. 106)

[7]கருப்பூரம்-ஒரு வகை மரம் ; "இமயச்சாரற் கருப்புரக் கன்று" (சீவக. 1267)

520. நாகம் - புன்னைப் பூ.
திலகம் - திலகப் பூ.
நறு காழ் ஆரம் - நறிய வயிரத்தை உடைய சந்தனம்,
521. [கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி :] மிளகின் கரு கொடி காய் துணர் பசு கறி - மிளகினது கரிய கொடிகள் காய்த்த கொத்திற் பசிய மிளகு,
முன்னர் மிளகென்றது முதலை ; கறி, சினை.
522. திருந்து அமை விளைந்த தேன் கள் தேறல் - நன்றாகிய மூங்கிற் குழாயிலே முற்றிய தேனாற் செய்த கள்தெளிவு,
523. கான் நிலை எருமை கழை பெய் தீ தயிர் - காட்டிடத்து நிலைமையினை உடைய எருமையினது, மூங்கிற் குழாயிலே தோய்த்த இனிய தயிர்,
524. நீல் நிறம் [1]ஓரி பாய்ந்தென - முற்றுகையினாலே [2]நீல நிறத்தை உடைய ஓரிநிறம் பரந்ததாக,
524 - 5. நெடு வரை நேமியின் செல்லும் நெய் கண் இறால் - நெடிய வரையில் இறாலிடத்தை விட்டுப் பாயும் தேனைத் தன்னிடத்தே உடைய இறால்கள்,
526 - 9. [உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்தும், குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப, நோனாச் செருவி னெடுங் கடைத் துவன்றி :]
தழீஇய ஆசினி - நன்றென்று கூட்டிக் கொண்ட ஆசினிப் பலா,
குடமலை பிறந்த தண் பெரு காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடுப்ப - குடக மலையிற் பிறந்த குளிர்ந்த பெரிய காவிரி கடலிலே மிக்குச் செல்கின்ற ஆழத்தை உடைய புகார் முகத்தை ஒப்ப,
நோனா செருவின் நெடு கடை - பகைவர் பொறுத்தல் ஆற்றாத போரினை உடைய தலைவாசலிலே,
[3]அனைத்தும் உடம்புணர்பு துவன்றி,
530 - 31. [4][வானத் தன்ன வளமலி யானைத், தாதெருத் ததைந்த முற்ற முன்னி :]

